கம்யூனிஸ்டு அகிலம்

சுருக்கமான வரலாறு

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்களைப் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சி ஆகும் இந்த நூல். கம்யூனிஸ்டு அகிலத்தை நிறுவுவதிலும் அதன் மிக முக்கியமான தீர்மானங்களை முறைப்படுத்துவதிலும் லெனின் ஆற்றிய பங்கு இதில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைப் படைப்புத் தன்மையுடன் விரிவாக்குவதிலும் உலகப் புரட்சிப் போராட்ட அனுபவத்தைப் பொதுமைப்படுத்துவதிலும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கை, போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றை வரையறுப்பதிலும் கம்யூனிஸ்டு அகிலம் செய்த முக்கியத்துவம் உள்ள தொண்டை இந்த நூல் எடுத்துக்காட்டுகிறது.

சோவியத் வரலாற்றாளர்களின் ஒரு குழுவால் இயற்றப் பெற்றது இந்த நூல். இதற்கு முன் வெளியிடப்படாத பல புதிய தஸ்தாவேஜுகளைப் பயன்படுத்தி, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்களது முதன்மையான அம்சங்களை நூலாசிரியர்கள் பகுத்து ஆராய்கிறார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் மரபுகள் தற்கால மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளவை என்பதை இந்த நூல் வலியுறுத்துகிறது.

மேலுறையில் உள்ள படம்:

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசை ஒட்டி உரீத்ஸ்கி சதுக்கத்தில் நடந்த பொதுக் கூட்டம். பெத்ரோகிராத், *1920*

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!





சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக்
கமிட்டியின் மார்க்சிய-லெனினிய ஆராய்ச்சிக் கழகம்

கம்யூனிஸ்டு அகிலம்

சுருக்கமான வரலாறு

முன்னேற்றப் பதிப்பகம் • மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

КОММУНИСТИЧЕСКИЙ ИНТЕРНАЦИОНАЛ

Краткий исторический очерк

На тамильском языке

ஆசிரியர் குழு

அ. ஸோபலெவ் (தலைவர்),
க. ஷிரீனியா,
ஃப. ஃபீர்ஸவ்,
ந. கரலியோவ்,
அ. ரேஸ்னிக்கொவ்,
க. ஸஸ்தாவென்கோ,
ல. சுர்பானவ்,
ய. ஸகலோவ்.

© Издательство «Прогресс», 1976, с изменениями

© உரிமைப் பதிவு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1976

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

К $\frac{10303-1007}{014(01)-76}$ 636—76

கம்யூனிஸ்டு அகிலத்தின் இந்தச் சுருக்கமான வரலாறு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினிய ஆராய்ச்சிக்கழுகத்தால் தயாரிக்கப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஊழியர்களும் அதன் அலுவலகங்களிலும் பதிப்பகங்களிலும் பணி ஆற்றியவர்களும் ஆன பின் குறிக்கப்பட்டுள்ள தோழர்கள் இதைத் தயாரிப்பதில் பங்கு கொண்டு உதவினார்கள்: வால்டர் ஊல்பிரிஹ்றத், தாலரேஸ் இபரூரி, மூாக் தியூக்ளோ, தீம் பாக், ஹலேத் பக்தாஷ், விக்தோரியோ கொதொவீல், ழோர்ழ் கனியோ, இன்கேரி லேஹ்றினென், பரீஸ் பொனமரியோவ், பாம் தத், தேழே நெமேஷ், ஃபிரீடில் ஃபியூர்ன்பெர்க், எமீலியோ ஸெரேனி, ருபேன் அப்ராமவ், எந்திரியூ ரோத்ஷ்தைன்.

பொருளடக்கம்

முன்னுரை 9

அத்தியாயம் ஒன்று

கம்யூனிஸ்டு அகிலத்தின் தோற்றம். கம்யூனிஸ்டு அகிலம்—உலகப் புரட்சிச் சக்திகளின் முன்னணி (1919-1920)

கம்யூனிஸ்டு அகிலம் தோன்றுவதற்கான வரலாற்றுத் தேவைகளும் நிலைமைகளும் 29
கம்யூனிஸ்டு அகிலம் நிறுவப்படுதல் 55
கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் . . 91

அத்தியாயம் இரண்டு

வெகுஜனங்களுக்காகவும் ஒன்றித்த தொழிலாளர் முன்னணிக்காகவும் சோவியத் குடியரசை வலுப்படுத்துவதற்காகவும் கம்யூனிஸ்டு அகிலத்தின் போராட்டம் (1921-1923)

புதிய நிலைமைகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள். 147
கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ் 179
ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக்கான போராட்டம். 219
கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரஸ் . . . 249
1923ம் ஆண்டுப் புரட்சி நிகழ்ச்சிகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் . . 276

அத்தியாயம் மூன்று

முதலாளித்துவத்தின் அம்ச ரீதியான நிலைப்பாடும் சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமான

வளர்ச்சியும் நிகழ்ந்த ஆண்டுகளில் கம்யூனிஸ்டு அகிலம். கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத -ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்தும் திசையில் முன்னேற்றம் *(1924-1928)*

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ். கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத, ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்த முடிவு 326
மூலதனத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளை ஒன்றுதிரட்டுவதற்கும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக்குமான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலம் 348
கம்யூனிஸ்டு அகிலமும் புதிய நிலைமைகளில் உலகப் புரட்சி இயக்க வளர்ச்சியின் பிரச்சினைகளும். திரோத்ஸ்கிவாதத்தின் படு தோல்வி 372
கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் 420

அத்தியாயம் நான்கு

முதலாளித்துவ உலகில் பொருளாதார நெருக்கடியும் சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் அடிப்படைகளினது கட்டுமானமும் நிகழ்ந்த ஆண்டுகளில் கம்யூனிஸ்டு அகிலம் *(1929-1933)*

முதலாளித்துவ உலகில் பொருளாதார நெருக்கடி முற்றிய நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் 455
பாசிஸத்தின் தாக்குதலுக்கு எதிராகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் போராட்டம் 486
தேசிய-விடுதலை இயக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்தந்திரம் 528

அத்தியாயம் ஐந்து

கம்யூனிஸ்டு அகிலம் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக்கான போராட்டத்தில் *(1934-1939)*

கம்யூனிஸ்டு அகிலத்தினதும் அதன் பிரிவுகளதும் போர்த்தந்திரத்திலும் செயல்தந்திரத்திலும் திருப்பத்தின் தொடக்கம் 541
கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் 575
புதிய போர்த்தந்திரம் நடப்பில் 621

அத்தியாயம் ஆறு

கம்யூனிஸ்டுக் கட்சிகள் மக்களின் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமையில். கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்படுதல்

கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் இரண்டாவது உலக யுத்தக் காலப் பகுதியில் (செப்டெம்பர் 1939-ஜூன் 1941) 702

சோவியத் யூனியன் மீது ஜெர்மனியின் தாக்குதலுக்குப் பிறகு கம்யூனிஸ்டு அகிலம், கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் 736

அத்தியாயம் ஏழு

கம்யூனிஸ்டு அகிலத்தின் மரபும் தற்காலக் கம்யூனிஸ்டு இயக்கமும்

கம்யூனிஸ்டு அகிலத்தின் மரபு வழிச் செல்வமும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சியும் 801

கம்யூனிஸ்டு அகிலத்தின் புரட்சி மரபும் தற்காலக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கும் 824

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மரபுகளும் கம்யூனிஸ்டு அணிகளின் ஒற்றுமைக்கான போராட்டமும் . 851

முன்னுரை

அக்டோபர் சோஷலிஸப் புரட்சி, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மனிதகுலம் பரிணமிக்கும் சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது. இந்தச் சகாப்தத்தில் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்குப் புதிய, பிரமாண்டமான புரட்சிப் பணிகள் எதிர்ப்பட்டன. இவற்றை நிறைவேற்றுவதற்கான போராட்டம், மூன்ருவது, கம்யூனிஸ்டு அகிலத்தின் பல்துறைப் புரட்சி நடவடிக்கைகளுடன் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளது.

கம்யூனிஸ்டு அகிலம், வி.இ. லெனினது முன்முயற்சியால் அமைக்கப்பட்டது. இதை அமைப்பதில் அவர் நேரடியாகப் பங்கு கொண்டார். கார்ல் மார்க்ஸ், ஃபிரிட்ரிஹ் எங்கெல்ஸ் ஆகியோரின் தலைமையில் இயங்கிய கம்யூனிஸ்டுகள் கழகத்திற்கும் முதல் அகிலத்துக்கும் வரலாற்று முக்கியத்துவம் உள்ள வாரிசாக விளங்கிய கம்யூனிஸ்டு அகிலம், இரண்டாவது அகிலத்தின் சிறந்த மரபுகளை உரிமையாகப் பெற்றிருந்தது.

கம்யூனிஸ்டு அகிலம் தற்கால சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தைத் தொடங்கி வைத்து, கிட்டத்தட்டக் கால் நூற்ருண்டுக் காலம் அதற்குத் தலைமை தாங்கி நடத்தியது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அது வழி வகுத்தது. மார்க்சிய-லெனினியக் கொள்கைப் பற்றையும் சர்வதேசிய ஒருமைப்பாட்டையும் உயர்ந்த கோட்பாட்டு உறுதியையும் அவற்றுக்குப் புகட்டியது. கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் தங்கள் காலத்து முக்கியமான சமூக நிகழ்ச்சிகள் அனைத்தினதும் நடு நாயகமாகத் திகழ்ந்தன, அவற்றில் மிகுந்த ஊக்கத்துடன் பங்காற்றின. பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து, பாட்டாளிகளின் ஆட்சியை நிலை நாட்டும் பொருட்டு, சோஷலிஸத்தின் வெற்றிக்காகப் போராடுவதற்குத் தொழிலாளி வர்க்கத்தை ஒற்றுமைப்படுத்த முயன்றன.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி, சோஷலிஸ அமைப்பு, முதலாளித்துவ அமைப்பு என்னும் இரு அமைப்புக்களாக உலகம் பிளவுபட்டது, இவற்றுக்கிடையே மோதல் ஆகிய நிலைமைகளில் பாட்டாளிகளின் சர்வதேச வர்க்கப் போராட்டம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. இந்தப் புதிய சூழ்நிலையில் பாட்டாளிகளுடைய வெவ்வேறு தேசியப் படைப் பிரிவுகளின் புரட்சிகர முன்னணிகளுக்கிடையே பரஸ்பர உறவுகளுக்கும் பரஸ்பர உதவிக்கும் ஏற்ற செயற்பாங்கான வடிவங்களைத் தேடிப் பெறுவது வரலாற்றுத் தேவை ஆகிவிட்டது. இவற்றின் வெளியீடாகத் தோன்றியது கம்யூனிஸ்டு அகிலம். "...வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இடையே சோதர ஐக்கியம் நிலவ வேண்டும். அது அவர்களை விடுதலைக்கான தங்கள் போராட்டத்துக்கும் ஒருவரை ஒருவர் உறுதியாக ஆதரித்து நிற்பதற்கும் தூண்டி ஊக்க வேண்டும். இந்த ஐக்கியத்தின்பால் அசட்டையான போக்கு, தொழிலாளர்களுடைய தொடர்பற்ற முயற்சிகளின் தோல்விக்கு வித்தாகும்"[1] என்று கார்ல் மார்க்ஸ் அறிவுறுத்தியதைக் கம்யூனிஸ்டுகள் நன்கு நினைவில் வைத்திருந்தார்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள உதயமும், பாட்டாளி ஆட்சியை நிறுவுவதற்காகவும் சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பதற்காகவும் முதலாளித்துவத்துக்கு எதிரான அதன் வீரப் போராட்டமும் அடிப்படையில் சர்வதேசியத் தன்மை கொண்டிருக்கின்றன. பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள குறிக்கோள் பணியும் அது நிறைவேற்றப் படுவதற்கு உரிய நிலைமைகளும் முதலாளித்துவ அமைப்பின் இடத்தில் சோஷலிஸ அமைப்பு நிலைபெறுவதற்கான நிலைமைகளின் சிறப்புத் தன்மைகளும் தொழிலாளர் இயக்கத்தினது சர்வதேசியத்தின் காரணங்கள் ஆகும். மூலதனம் தேசிய எல்லைகளைத் தாண்டி விட்டது. தேசியப் பொருளாதாரங்களை உலக முதலாளித்துவப் பொருளாதாரம் என்ற ஒரே தொகுப்பில் அது ஒன்றிணைத்து விட்டது. உலகில் உள்ள எல்லா உழைப்பாளிகளும் சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்தால் சுரண்டப்படுவதற்கான அமைப்பாக விளங்கத் தொடங்கி விட்டது இந்தத் தொகுப்பு. மூலதனம்,

---

[1] கா. மார்க்சும் ஃபி. எங்கெல்சும். நூல் திரட்டு, தொகுதி II, பக்கம் 17.

தான் புகுந்த எல்லா இடங்களிலும், இரக்கமின்றிச் சுரண்டவும் ஒடுக்கவும் படும் கூலித் தொழிலாளர்களின் வர்க்கத்தை உருவாக்கியது. தங்களுடைய ஒரே பகைவன் உலக பூர்ஷ்வா வர்க்கம், ஒரே குறிக்கோள் சுரண்டுவோரை ஆட்சியிலிருந்து அகற்றி சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பது, இந்தக் குறிக்கோளை அடைவதற்கான ஒரே சாதனம் ஆளும் வர்க்கத்தினரை எதிர்த்து ஒத்திசைந்த வீரப் புரட்சிப் போராட்டம் நடத்துவது, ஆற்றலின் ஒரே ஊற்று ஸ்தாபன அமைப்பு, ஒரே கொள்கைவாதம் மார்க்சிய-லெனினியம், வெற்றிக்கான கட்டாய நிபந்தனை சர்வதேச ஒருமைப்பாடு என்பதை வெவ்வேறு நாடுகளின் பாட்டாளி மக்கள் வர்க்கப் போராட்டத்தின் அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்துகொண்டார்கள். மூலதனம் சர்வதேச சக்தி. அதை வெல்வதற்கு, எந்த நாட்டிலும் சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பு நிகழ்த்துவதற்கு, உழைப்பாளிகளின் சர்வதேச சோதரத்துவமும் பரஸ்பர உதவியும் உலகப் பாட்டாளிகள் அனைவரும் சர்வதேசக் கடமைக்கு விசுவாசம் கடைப்பிடிப்பதும் இன்றியமையாதவை.

பாட்டாளிகளின் சர்வதேச ஒருமைப்பாடு, சமூக நிலைமைகள் சிக்கலாவதற்கும் வர்க்கப் போராட்ட முனைமுகம் விரிவடைவதற்கும் ஏற்ப வளர்ச்சியும் வளமும் பெறுகிறது. பல் வகையான பிரிவுப் போக்குக்களுக்கும் தேசியவாதப் போக்குக்களுக்கும் இது எதிராய் இருக்கிறது. பல்வேறு ஸ்தாபன வடிவங்களில் இது செயல்படுகிறது.

பாட்டாளிகளின் சர்வதேச ஒருமைப்பாட்டினுடைய ஸ்தாபன வடிவங்களின் வெவ்வேறு விதங்களும், குறித்த ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ப அவற்றின் தேர்வும் புரட்சி இயக்கத்தின் தரத்தாலும், தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும் உழைப்பாளிகளுக்கும் சுரண்டுவோருக்கும் இடையே உள்ள ஒப்பு வலிமையாலும், பாட்டாளிகளுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் இடையே நிகழும் வர்க்கப் போராட்டத்தின் வீச்சினாலும் தன்மையினாலும், தொழிலாளி வர்க்கத்தினுடைய தேசிய முன்னணிகளினது முதிர்ச்சியின் அளவாலும், பிற சூழ்நிலைகளாலும் நிர்ணயிக்கப் படுகின்றன.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது சர்வதேச ஸ்தாபனமாக இருந்தது கம்யூனிஸ்டுகள் கழகம். இந்தக் கழகத்தின் செயல்திட்டமான ''கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை''யில், பூர்ஷ்வா வர்க்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றி, கம்யூனிஸ

சமூகத்தை நிறுவுவது என்ற தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் குறிக்கோள் முதன்முதலில் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறுக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகள் கழகத்தின் உத்வேகம் நிறைந்த அறைகூவலான ''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' என்பது சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டக் கோஷம் ஆகி விட்டது. வர்க்கப் போராட்டம் மேலும் ஆழமாகி, உலகப் புரட்சியை இயக்கும் சக்திகள் விரிவடைந்ததன் விளைவாக, இந்தக் கோஷம் அதிக வளர்ச்சியும் வளமும் பெற்றது. மாபெரும் அக்டோபர்ப் புரட்சிக்குப் பிறகு, ''உலகத் தொழிலாளி களே, ஒடுக்கப்பட்ட மக்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற கோஷத் துடன் உலகப் புரட்சிச் சக்திகள் போராட்டத்தில் ஈடுபட்டன.

முக்கிய நாடுகளில் முதலாளித்துவம் நிலைபெற்ற காலப்பகுதி யில், தொழிலாளர் இயக்கமும் ஜனநாயக இயக்கமும் ஊக்கம் அடைந்ததன் விளைவாக, பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டின் அதிகச் செப்பமான ஸ்தாபன வடிவங்கள் தேவைப்பட்டன. முதலாவது அகிலம், 1864ம் ஆண்டு, மார்க்ஸ், எங்கெல்ஸ், இரு வரதும் தலைமையில் அமைக்கப்பட்டது. விஞ்ஞானக் கம்யூனிஸத் தின் ஸ்தாபகர்கள், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் சோதரக் கழகத்தை அமைத்து வலுப்படுத்துவதற்கு ஊக்கத்துடன் பாடுபட்டார்கள். ''...வெவ்வேறு நாடுகளின் தொழிலாளர்கள், தாங்கள் தங்களது விடுதலைக்காக ஒரே சேனை யில் சேர்ந்து போராடும் சோதரர்களும் தோழர்களும் என்று உணர்வது மட்டும் இன்றி, செயல்படவும்''[1] புரிவது அகிலத்தின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்று என அவர்கள் கருதினார்கள். முதலாவது அகிலத்தின் மாபெரும் சந்ததியாகத் திகழ்ந்தது பாரிஸ் கம்யூன். தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளிகள் அனைவருக்கும் உரிய அரசை நிறுவுவதற்கு வரலாற்றில் முதன் முறையாகச் செய்யப்பட்ட முயற்சி இது.

முதலாவது அகிலம், தான் நிலவிய காலத்தில் ஐரோப்பிய, அமெரிக்கப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒருமைப்பாட்டைக் கணிசமாக வலுப்படுத்தியது. லெனின் சுட்டிக்காட்டியது போல அது, ''...மூலதனத்தின் மீது தொழிலாளர்களுடைய புரட்சித் தாக்குதலுக்கு முன்னேற்பாடு செய்யும் பொருட்டு,

---

[1] கா. மார்க்சும் ஃபி. எங்கெல்சும். நூல் திரட்டு, தொகுதி II.

தொழிலாளர்களின் சர்வதேச நிறுவனத்துக்கு அடிக்கல் நாட்டியது'',[1] ''...சோஷலிஸத்தின் பொருட்டுப் பாட்டாளிகளின் சர்வதேசப் போராட்டத்துக்கு அடிப்படை அமைத்தது''.[2]

19ம் நூற்றூண்டின் இறுதியில், மார்க்சிஸம் தீவிரமாகப் பரவலாயிற்று. தொழிலாளர் இயக்கத்தின் புதிய ஏற்றம் தொடங்கியது. அப்போது அனேக நாடுகளில் தொழிலாளர் கட்சிகள் அமைந்தன. எங்கெல்சின் துணையுடன் இரண்டாவது அகிலம் உருவாயிற்று. பாட்டாளிகளை ஒன்று சேர்த்து ஒற்றுமைப்படுத்துவதிலும் மார்க்சியத்தை மேற்கொண்டு பரப்புவதிலும் இது பெரும் பணி ஆற்றியது. ஆனுல் இரண்டாவது அகிலத்தின் அரசியல் நடவடிக்கையிலும் சித்தாந்தச் செயல்களிலும் சந்தர்ப்பவாதம் படிப்படியாக மேலோங்கலாயிற்று. அந்தக் காலப் பகுதியில் முதலாளித்துவம் ஒப்புநோக்கில் அமைதியான வளர்ச்சி அடைந்து வந்தது. தொழிலாளர் இயக்கம் விரிவாயிற்று. பாட்டாளிகள் அல்லாத சமூக வகுப்பினர் அதில் கலந்து கொண்டார்கள். தொழிலாளர் உயர்குடியினரும் தொழிலாளர் சடங்குவாதிகளும் தோன்றினுர்கள். இவர்கள் தொழிலாளர் இயக்கத்தில் சமரசவாதத்தைப் புகுத்தினுர்கள். இவை எல்லாவற்றினதும் விளைவாக, ''...புரட்சித் தரத்தின் உயர்வு தாற்காலிகமாகக் குறையாமல் இருக்க முடியவில்லை, சந்தர்ப்பவாதம் தாற்காலிகமாகத் தீவிரம் அடையாமல் தவிர்க்க முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பவாதம் முடிவில் இந்த அகிலத்தின் வெட்கக்கேடான வீழ்ச்சிக்குக் காரணம் ஆயிற்று''.[3] இவ்வாறு, பத்தொன்பதாம் நூற்றூண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றூண்டின் தொடக்கத்திலும் நடந்த வரலாற்று நிகழ்முறைகள் எல்லாவற்றினுடையவும் தொகுப்பின் விளைவாக இரண்டாவது அகிலம் வீழ்ச்சி அடைந்தது. ஆனுல் தொழிலாளர் இயக்கத்தில் உண்மையான புரட்சித் தன்மை கொண்ட வேருெரு போக்கு நிலவிச் செயல்பட்டு வந்தது. லெனினது தலைமையில் ருஷ்யாவில் தோன்றிய போல்ஷிவிஸம், இந்தப் போக்கை யாவற்றிலும் ஒத்திசைந்த முறையில் வெளியிட்டது. போல்ஷிவிஸம், சீர்திருத்தவாதத்துக்கு எதிராக ஊக்கத்துடன் போராட்டம்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 29, பக்கம் 306.

[2] அதே நூல், பக்கம் 307.

[3] அதே நூல், பக்கம் 306.

நடத்தியது. உலகத் தொழிலாளர் இயக்கத்தில் புரட்சிகரமான சர்வதேசியப் போக்கைத் தீவிரப்படுத்தவும் ஒன்றிணைக்கவும் உதவியது.

சர்வதேசிய ஒருமைப்பாடு பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தன்மையிலேயே அடங்கி உள்ளது. இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த பெரும்பாலான கட்சிகள் சோஷல்-ஷோவினிஸத்துக்கு[1] இழிந்ததனுல், இந்தப் போக்கு எதார்த்தத்தில் நிலவுவதை அழிக்க முடியவில்லை. உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் கடினமான ஆண்டுகளில் கூட, இடதுசாரிப் புரட்சிக் குழுக்கள் சர்வதேசத் தொடர்புகளைக் கடைப்பிடித்தன, சர்வதேச உறவுகளை விரிவுபடுத்தின. சமூக-ஜனநாயகத்தில் இடதுசாரியினரின் சர்வதேச ஒருமைப்பாட்டின் மையமாக இருந்தது லெனினைத் தலைவராகக் கொண்ட போல்ஷிவிக் கட்சி. இது பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தது. மூன்ருவது அகிலத்தை அமைப்பதற்கான போராட்டத்தை விரிவாக நடத்தியது.

உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தொடங்கிவைத்த மாபெரும் அக்டோபர் புரட்சி, முதலாளித்துவத்தின் உலகு பரவிய நெருக்கடி முற்றியது, உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலும், ஏகாதிபத்திய நாடுகளுக்கும் காலனிகள், அரைக் காலனிகள் ஆகியவற்றின் மக்களுக்கும் இடையிலும் முரண்பாடுகள் வளர்ந்தது, இவை எல்லாவற்றின் விளைவாகவும் உலகப் புரட்சி நெருக்கடி மேலும் ஆழமாயிற்று. பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் காலப்பகுதி, தேசிய விடுதலை இயக்கத்தின் பெருத்த ஏற்றக் காலப்பகுதி, முதலாளித்துவத்தின் மீது நேரடித் தாக்கு நடத்தி, மனிதகுலம் சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலப் பகுதி தொடங்கியது. இந்த நிலைமைகளில், தொழிலாளி வர்க்கத்தின் தேசியப் பிரிவுகளது சர்வதேசிய ஒருமைப்பாடும், அவற்றின் முன்னணிகளுடைய பரஸ்பரத் தொடர்பும் பரஸ்பர உதவியும், பொதுப் பகைவனுகிய சர்வதேச மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் முயற்சிகள் ஒருங்கிணைக்கப்படுவதும் முன்னிலும் அதிக முக்கியத்துவம் பெற்றுவிட்டன.

பண்பு வகையில் புதியதும் உண்மைப் புரட்சித் தன்மை உள்ளதுமான தொழிலாளி வர்க்க நிறுவனம் ஒன்றை தேசிய

---

[1] சோஷல்-ஷோவினிஸம் என்பது, பெயரளவில் சோஷலிஸமும் உண்மையில் நாட்டு வெறியும் கொண்ட போக்கு—(மொ-ர்.)

வரம்புகளுக்கு உள்ளும் சர்வதேச அளவிலும் அமைப்பதன் இன்றி யமையாமையை இந்த வரலாற்றுச் சூழ்நிலைமைகள் யாவும் மேலும் வலுப்படுத்தின.

இத்தகைய புது வகை நிறுவனமாகத் திகழ்ந்தது கம்யூனிஸ்டு அகிலம். உலகப் புரட்சி இயக்கத்தின் சிறந்த மரபுகளை இது மேற் கொண்டது. அவற்றின் உள்ளடக்கத்தை விரிவாக்கி வளப்படுத்தி யது. அவற்றுக்குப் புதிய ஸ்தாபன வடிவம் அளித்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒழுங்கமைப்பாளராகவும், தொடக்க ஆண்டுகளில் அதன் தலைவராகவும் இருந்தார் லெனின். உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மதிக்கப்பட்ட தலைவர் என்ற முறையில் வரலாற்றில் அழியா இடம் பெற்றுவிட்டார் அவர்.

கம்யூனிஸ்டு அகிலத்தை அமைப்பதன் இன்றியமையாமை யைச் சித்தாந்த நோக்கிலும் அரசியல் நோக்கிலும் சர்வாம்ச ரீதியாக ஆதாரங்களுடன் நிலைநாட்டினர் லெனின். இந்த இன்றிய மையாமை புதிய வரலாற்று நிலைமைகளால் ஏற்பட்டிருக்கிறது என்று அவர் காட்டினர். ஏகாதிபத்தியத்தியமும், முதலாளித்து வத்தின் மீது நேரடித் தாக்கு நடத்தும் காலப்பகுதி தொடங்கி இருப்பதும், தேசிய, சர்வதேசியப் புரட்சிக் குறிக்கோள்களை அடைவதில் தொழிலாளர்களின் சர்வதேச சோதரத்துவத்தின் பங்கு அதிகரித்திருப்பதும், சீர்திருத்தவாதத்தின் சித்தாந்தத்துக் கும் நடைமுறைக்கும் எதிராக உண்மையான புரட்சிச் சித்தாந்தத் தையும் நடைமுறையையும் வைப்பதன் ஜீவாதாரத் தேவையும் இந்த வரலாற்று நிலைமைகளை உருவாக்கி இருந்தன.

கம்யூனிஸ்டு அகிலத்தை நிறுவும் மாபெரும் பணியை, சர்வ தேசத் தொழிலாளர் இயக்கத்தில் புரட்சிகரமான பகுதியை வலு வாக ஒருங்கிணைப்பதிலிருந்து தொடங்கினர் லெனின். முதல் உலக யுத்த ஆண்டுகளில், இரண்டாவது அகிலத்தின் தலைவர்களுடைய துரோகத்தின் விளைவாகத் தொழிலாளி வர்க்கம் சித்தாந்த நோக்கிலும் ஸ்தாபன நோக்கிலும் அரசியல் நோக்கிலும் தலைமை அற்றதாக இருந்த போது, இந்த வேலை சிறப்பாக ஆழ்ந்த தீவிரம் அடைந்தது.

சர்வதேசத் தொழிலாளர் சோதர உறவுகளை மீண்டும் ஒன்று படுத்தும் மாபெரும் வரலாற்றுப் பணியை நிறைவேற்றுவதில், வி.இ. லெனின் தமக்கு இயல்பான ஆற்றலுடனும் செயல்முனைப் புடனும் ஈடுபட்டார். சோஷலிஸ்டு துரோகிகளால் கைவிடப் பட்ட, தொழிலாளர் இயக்கத்தின் மார்க்சியக் கொள்கைவாத-

சித்தாந்த அடிப்படையை மீண்டும் அமைக்க விடாப்பிடியாக முயன்று அவர் வெற்றி அடைந்தார். இடதுசாரிக் குழுக்கள் லெனினை மையமாகக் கொண்டு ஒன்றுசேர்ந்தன. இவை லெனினுடைய கருத்துக்களைப் படிப்படியாக ஏற்றுக்கொண்டன. போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து இவை சர்வதேசிய மையமாக அமைந்து, கம்யூனிஸ்டு அகிலத்தின் முளைக்கரு ஆயின.

வி.இ. லெனின், தற்காலக் கம்யூனிஸ இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைச் செவ்வைப்படுத்தினார். இவை இயக்கத்துக்கு மிகப் பெருத்த உயிராற்றல் அளித்தன. இவற்றின் முக்கியத்துவம் தற்போதும் குறைந்துவிடவில்லை.

வி.இ. லெனின் **கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைவாத-சித்தாந்த அடிப்படைகளை நிறுவினார்.** புதிய வரலாற்றுக் காலப் பகுதியில்—ஏகாதிபத்தியக் காலப்பகுதியில், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்குப் பரிணமிக்கும் காலப்பகுதியில்—சமூக வளர்ச்சியின் சிறப்புத் தன்மைகள் பற்றிய அறிவால் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு வலிவூட்டினார். இந்தக் காலப் பகுதியில் புரட்சிப் போராட்டத்தின் புற, அக நிலைமைகளின் தனித்தன்மையை விளக்கினார்.

லெனின் புதிய வரலாற்று அனுபவத்தைப் பொதுமைப்படுத்தினார். சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தையும் மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கத்தையும் ஆராய்ந்தார். இவற்றின் அடிப்படையில் மார்க்சியத்தைப் படைப்புத் தன்மையுடன் விரிவாக்கி வளப்படுத்தி, அதைப் புதிய தரத்துக்கு உயர்த்தினார். மார்க்சிய விஞ்ஞானத்தின் புதிய கட்டம்—லெனினியம்—உதயம் ஆயிற்று.

உலகப் பாட்டாளி மக்களின் மாபெரும் ஆசானும் தலைவரும் ஆகிய லெனின், ருஷ்யாவிலும் உலகு அனைத்திலும் நடந்த புரட்சிப் போராட்டங்களின் அனுபவத்தால் கட்சி பற்றிய மார்க்சிய போதனையை வளப்படுத்தினார். இந்த போதனையைக் காலத்துக்குப் பொருந்தும் விதத்தில் திண்மைப்படுத்தினார். **கம்யூனிஸ்டு அகிலத்தின் ஸ்தாபனக் கோட்பாடுகளை உருவாக்கினார்.** இந்தக் கோட்பாடுகளின் மிக முக்கிய அம்சங்களாவன: ஜனநாயக மத்தியத்துவம்; கம்யூனிஸ்டுக் கட்சிகளின் விருப்பங்களிலும் செயல்களிலும் இது ஒற்றுமை ஏற்படுத்தியது, அவற்றின் செயலூக்கத்தையும் முன்முயற்சிப் பண்பையும் சுதந்திரத்தையும் எல்லா வகையிலும் வளர்த்தது; கம்யூனிஸ்டு அணிகளின் உணர்வையும்,

வெகுஜனங்களின் நலன்களை வெளியிடவும் லெனின் கூறியது போன்று, மிக மிக விரிவான உழைப்பாளி வெகுஜனங்களுடன், முதன்மையாகப் பாட்டாளி வெகுஜனங்களுடனும், அதே போலப் பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளி வெகுஜனங்களுடனும் நெருங்கி ஒன்று கலக்கவும் முன்னணிகளுக்கு உள்ள திறமையையும் ஆதாரமாகக் கொண்ட, மிகக் கண்டிப்பான கட்சிக் கட்டுப்பாடு; சர்வதேசியம்; புரட்சிப் போராட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாடும் சுயகட்டுப்பாடும்; தேசிய வரம்புகளில் தன் செயல்களின் வெற்றிக்கும் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்தின் விதிக்கும் தனக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை ஒவ்வொரு கட்சியும் புரிந்து கொள்வது; குறித்த நிலைமைகளில் மிக மிகப் பயன் விளைப்பவையும் நோக்கப் பொருத்தம் உள்ளவையுமான வடிவங்களில் புரட்சிகரப் பரஸ்பர உதவியை நடைமுறையில் அளிப்பது ஆகியவை இதில் அடங்கும்.

வி.இ. லெனினால் உருவாக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்தின் அரசியல், ஸ்தாபனக் கோட்பாடுகள், சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தில் முன்னணிப் பாத்திரத்தை வெற்றிகரமாக வகிக்கும் திறமையையும் புரட்சிகரப் போராட்டத் திறனையும் அரசியலில் சமயோசித சாமர்த்தியத்தையும் அதற்கு அளித்தன. இந்தக் கோட்பாடுகள் விரிவாகப் பரவின. எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் அடிப்படை முக்கியத்துவம் உள்ளவை ஆயின.

வி.இ. லெனின், உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திர, செயல்தந்திர அடிப்படைகளைச் சித்தாந்த ரீதியில் தயாரித்து, நடைமுறையில் நிறுவினார். போர்த்தந்திரத்தை வரையறுப்பதற்கும் செயல்தந்திரத்தை உருவாக்குவதற்கும் உரிய முறை இயலை அவர் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அளித்தார். வெவ்வேறு நாடுகளில் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் வேறுபடுவதைக் கணக்கில் எடுத்துக் கொள்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். போராட்டக் கட்டங்கள் மாறுவதற்கும் புதிய வரலாற்று நிலைமைகள் தோன்றுவதற்கும் ஏற்ப அரசியல் போக்கில் மாற்றங்கள் செய்வது இன்றியமையாதது என அவர் காட்டினார். கம்யூனிஸ்டு அகிலத்தின் மிக முக்கிய முடிவுகளைத் தயாரிப்பதில் வி.இ. லெனின் மிகுந்த ஊக்கத்துடன் பங்காற்றினார்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் நடவடிக்கைக்கும், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கை, போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றை உருவாக்குவதற்கும் லெனினது போதனையின் பின்வரும்

பகுதிகள் முதன்மையான முக்கியத்துவம் கொண்டிருந்தன:

—முதலாளித்துவத்தின் உச்ச, இறுதிக் கட்டம், சோஷலிஸப் புரட்சியின் முன்வேளை என்ற முறையில் ஏகாதிபத்தியத்தின் ஆழ்ந்த, சர்வாம்ச ரீதியான பகுப்பாய்வு;

—முதலாளித்துவம், சோஷலிஸம் என்ற, ஒன்றுக்கு ஒன்று எதிரான இரு அமைப்புக்களின் போராட்டமும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பும் புதிய காலப் பகுதியின் முக்கிய உள்ளடக்கம் என்ற முறையில் அவற்றின் தன்மைச் சித்திரிப்பு;

—ஏகாதிபத்தியக் காலப் பகுதியில் உலக சோஷலிஸப் புரட்சியின் விதிமுறைகளுக்கும் இயல்பான தன்மைகளுக்கும் விஞ்ஞான ஆதாரம் உள்ள விளக்கம், ஒரு நாட்டில் சோஷலிஸம் வெற்றி பெறுவது சாத்தியம் என்ற முடிவு, பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி சோஷலிஸப் புரட்சியாக வளர்வது பற்றியும் புரட்சியின் வெவ்வேறு கட்டங்களில் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகள் பற்றியும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வளர்ச்சிக்குத் தேசிய விடுதலை இயக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் வரையறுப்புக்கள்;

—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பது குறித்த விதிகளைத் தெளிவாக்கி ஸ்தூலப்படுத்தல், பரிணமிப்புக் காலத்தில் பாட்டாளி வர்க்க அரசின் பங்கையும் அதன் வடிவங்களது பல்வகைப்பாட்டையும் குறித்த ஆதாரபூர்வமான விளக்கம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தன்மையையும் அதன் இயக்க அமைப்பையும், சோஷலிஸ ஜனநாயகத்தின் உள்ளடக்கத்தையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் பற்றிய பகுப்பாய்வு.

லெனினது தலைமையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் நடவடிக்கை, கம்யூனிஸ்டு இயக்க வரலாற்றின் தலைசிறந்த அத்தியாயமாகத் திகழ்கிறது. லெனினியச் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் செயல்படுத்தும் சர்வதேச நிறுவனமாக விளங்குவதைக் கம்யூனிஸ்டு அகிலம் தனது பணியாக வைத்துக் கொண்டது. கம்யூனிஸ்டு அகிலம், கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு லெனினியத்தைப் போதித்தது, லெனினியத்தைப் பரப்புவதற்கு எல்லாச் சாதனங்களையும் வழிகளையும் பயன்படுத்தியது, கூட்டு முயற்சியால் அதை விரிவாக்கி வளப்படுத்தியது, வாழ்க்கையால் முன்வைக்கப்பட்ட உடனடிப் பணிகளின் நிறைவேற்றத்துக்கு அதைப் படைப்பாற்றலுடன் கையாண்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் வரலாறு, தற்காலக் கம்யூனிஸ்டு இயக்கம் உருவாகி விரைவாக வளர்ந்ததன் வரலாறு ஆகும். கம்யூனிஸ்டுக் கட்சிகள் அரசியல் முதிர்ச்சி பெற்றதன் வரலாறு ஆகும். எல்லா வகையான சந்தர்ப்பவாதிகளுடனும் நடத்திய கடும் போராட்டத்தின் போது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மார்க்சிய-லெனினியச் சித்தாந்த நடைமுறைத் தரம் உயர்ந்ததன் வரலாறு ஆகும். கம்யூனிஸ்டு இயக்கம் தற்காலத்தின் மிக முக்கிய அரசியல் சக்தியாக மாறியதன் வரலாறு ஆகும்.

மார்க்சிய-லெனினியப் பதாகையின் கீழ் புரட்சிச் சக்திகளைத் திரட்டி ஒற்றுமைப்படுத்துவதிலும் எல்லாக் கண்டங்களிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளை அமைப்பதிலும் கம்யூனிஸ்டு அகிலம் மிகப் பெரிய பங்கு ஆற்றியது. தொழிலாளர் இயக்க வரலாற்றில் முதலாவது உண்மையான உலகக் கம்யூனிஸ்டு நிறுவனமாக விளங்கியது கம்யூனிஸ்டு அகிலமே ஆகும். கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமையில் கம்யூனிஸ்டு இயக்கம் ஐரோப்பாவினதும் அமெரிக்காவினதும் எல்லைகளைக் கடந்து ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் விரைவாகப் பரவத் தொடங்கி, வரலாற்று நிகழ்முறையைத் துரிதப்படுத்தும் பேராற்றலின் வடிவில் உலக அரங்கில் பிரவேசித்து, மனிதகுலத்தின் சமூக-அரசியல் வாழ்வில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் செல்வாக்கு செலுத்தலாயிற்று.

புரட்சிப் போக்கைத் திட்டப்படுத்துவதில் எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் கம்யூனிஸ்டு அகிலம் பேருதவி புரிந்தது. அவற்றைக் கொள்கைவாத-அரசியல் நோக்கில் வலுப்படுத்தி, சமூக-ஜனநாயகவாதத்தின் மரபுகளையும் சீர்திருத்தவாத மருட்சிகளையும் காழ்ப்புக்களையும் ஒழித்து, தொழிலாளி வர்க்கக் குறிக்கோளுக்கும் சோஷலிஸத்தின் வெற்றிக்கான போராட்டத்துக்கும் விசுவாசத்துடன் தொண்டாற்றும் அகன்ற வரலாற்றுச் சாலையில் நடை போட அவற்றுக்கு உதவியது.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைந்து வலுப்படும் நிகழ்முறை ஒரு வரலாற்றுக் காலப் பகுதி முழுவதிலும் நீடித்தது. இந்தக் காலப் பகுதியில் பல ஆழ்ந்த இடர்களைக் கடப்பது அவசியமாயிற்று. இவை பெரும்பாலும் சர்வதேசத் தன்மை கொண்டிருந்தன. மிக முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சினைகள் பலவற்றுக்குச் சரியான தீர்வு காண்பதற்குக் கூட்டு முயற்சி தேவைப்பட்டது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் இந்தப் பொதுப் பணிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் வரம்புகளுக்குள், அதன் தலைமையில் நிறைவேற்றப் பட்டன.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாவதையும் வளர்வதையும் வெற்றிகரமாகச் செயலாற்றுவதையும் சமூக-ஜனநாயகக் கட்சிகளின் வலதுசாரித் தலைவர்கள் மூர்க்கமாக எதிர்த்தார்கள். இவர்கள் கம்யூனிஸ்டுகளை எதிர்த்துப் போராடும் நிலையை மேற்கொண்டார்கள். தொழிலாளர் இயக்கத்தில் கம்யூனிஸத்தின் செல்வாக்கு பலப்படுவதை இடைநிலைவாதிகளும் அராஜக-சிண்டிகலிஸ்டுகளும் எதிர்த்தார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்றித்துச் செயலாற்றியதால் தான் தொழிலாளர் இயக்கத்தில் புரட்சிப் போக்கை வெற்றிகரமாகப் பாதுகாப்பது இயன்றது.

பிற்காலத்தில் கம்யூனிஸ்டு இயக்கத்திலேயே உட்குழுக்கள் தோன்றும் ஆபத்து எதிர்ப்பட்டது. வலதுசாரி சந்தர்ப்பவாதிகளும் ''அதிதீவிர இடது சாரியினரும்,'' திரோத்ஸ்கிவாதிகளும் குறுகிய பிரிவுவாதிகளும் கம்யூனிஸ்டுக் கட்சிகள்மீது லெனினிய விரோத அரசியல் கொள்கைப் போக்கைச் சுமத்தி, கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையைக் குலைக்கவும் அதன் போராட்டத் திறன் மிகுவதற்கு இடையூறு செய்யவும் முயன்றார்கள். சந்தர்ப்பவாதிகளின் உட்குழுப் போராட்டம் சர்வதேசத் தன்மை கொண்டிருந்தது. எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் லட்சியப் பற்று உள்ள ஒன்றித்த போராட்டத்தின் வாயிலாக மட்டுமே அவர்களை முறியடிப்பது சாத்தியமாய் இருந்தது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் திரிபுவாதத்துக்கும் குட்டி பூர்ஷ்வாப் புரட்சி ஆவேசத்துக்கும் எதிரான போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியது கம்யூனிஸ்டு அகிலம். அந்தக் காலத்தில் செயல்பட்டு வந்த எல்லா சந்தர்ப்பவாத உட்குழுக்களும் அதன் தலைமையில் நடந்த போராட்டத்தின் விளைவாகக் கொள்கைவாத-அரசியல் நோக்கிலும் ஸ்தாபன நோக்கிலும் முறியடிக்கப்பட்டன. இவை யாவற்றினதும் விளைவாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெகுவாக வலுவடைந்தன. உலக அரங்கில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மதிப்பு உயர்ந்தது. கட்சிகளின் அரசியல் முதிர்ச்சியும் சுதந்திரமும் அதிகரித்தன. புரட்சிப் போராட்டத்தில் அவற்றின் முன்னணிப் பாத்திரம் பலப்பட்டது.

மார்க்சிய-லெனினியச் சித்தாந்தத்தைப் பரப்புவதிலும் அதை மேற்கொண்டு விரிவுபடுத்துவதிலும் கம்யூனிஸ்டு அகிலம் மிகப் பெரும் பணி ஆற்றியது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தை மார்க்சிய-லெனினியத்துடன் அது ஒன்று சேர்த்தது. கம்யூனிஸ்டு

இயக்கத்துக்கு எதிர்ப்பட்ட பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு, வடிவத்தில் கூட்டுப் பண்பும் மார்க்சிய உள்ளடக்கமும் படைப்புத் தன்மையும் கொண்ட விடைகளை அது அளித்தது. பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய அரசியல் போர்த்தந்திரத்தை வகுப்பதிலும் செயல்தந்திரத்தை வரையறுப்பதிலும் ஆழ்ந்த பங்கு ஆற்றியது.

பெரும்பாலான உழைப்பாளி வெகுஜனங்களைப் புரட்சியின் தரப்புக்கு இட்டு வருவதற்குக் கம்யூனிஸ்டு அகிலத்தினால் வகுக்கப்பட்டு ஆதாரத்துடன் நிலைநாட்டப்பட்ட கொள்கை, சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான போராட்டத்தை சோஷலிஸத்துக்கான போராட்டத்துடன் இணைக்கும் கொள்கை, பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்குரிய முக்கியக் காரணி என்ற முறையில் ஒன்றித்த தொழிலாளர் முன்னணி அமைக்கும் கொள்கை, சோஷலிஸப் புரட்சிக்குப் பரிணமிப்பதற்கான படியாகத் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவும் கருத்து, தொழிலாளர்களும் விரிவான வெகுஜனங்களும் சேர்ந்த ஒன்றித்த பாசிஸ எதிர்ப்பு முன்னணி அமைக்கும் பயனுள்ள, செயல்திறன் மிக்க எண்ணம், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் புரட்சி இயக்கத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி அமைக்கும் கொள்கை, பாட்டாளி வர்க்கப் புரட்சியுடன் இந்த முன்னணி கூட்டுச் சேருவது—இவை உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் லெனினது கொள்கை, போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றின் முக்கியமான மைல்கல்களாகும். கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு ஒளி வீசும் வெற்றிகளையும் மக்கள் இனங்களின் மதிப்பையும் உலகு பரவிய செல்வாக்கையும் தேடித் தந்தன இவை.

வெகுஜனங்களுக்கும் புரட்சி இயக்கத்துக்கும் அரசியல் தலைமை ஏற்று நடத்தும் உயர்ந்த, சிக்கலான கலையைக் கம்யூனிஸ்டு அகிலம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடைவிடாது போதித்தது; வெகுஜனங்களைத் தன் பின் இட்டுச் செல்லவும் வர்க்கப் போராட்டத்தின் ஸ்தூல நிலைமைகளுக்கு ஏற்ப மார்க்சிய-லெனினியத்தைப் படைப்புத் தன்மையுடன் கையாளவும் திறமையை அது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குப் புகட்டியது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்டத் திறன் உயர்வதன் முதன்மையான விளைவு என்னவென்றால், கம்யூனிஸ்டுக் கட்சிகள் தாங்கள் பாட்டாளிகளின் வர்க்க ஒன்றிப்பினது உயர்ந்த வடிவம்

என உணர்ந்து, மற்றப் பாட்டாளி வர்க்க நிறுவனங்கள் விஷயத்தில் தங்கள் தலைமைப் பாத்திரத்தைச் செயல் தந்திரத்துடன் வகிக்கின்றன. அதோடு, கம்யூனிஸ்டுக் கட்சிகள் மார்க்சிய-லெனினியத்தைச் சோர்வின்றிப் பயின்று தங்கள் எல்லாக் காரியங்களிலும் சித்தாந்தம், நடைமுறை ஆகியவற்றின் ஒற்றுமையைச் செயல்படுத்துகின்றன. அரசியல் கோஷங்கள் தயாரித்து, வெகு ஜனங்களைப் போராட்டத்துக்குத் தூண்டும்போது, கம்யூனிஸ்டுக் கட்சிகள் புரட்சி இயக்கத்தின் ஸ்தூல நிலைமைகளையும், உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலையையும் கணக்கில் எடுத்துக் கொள்வதும், எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் திரட்டி வைத்துள்ள அனுபவத்தைப் பயன்படுத்துவதும் கோட்பாட்டு நோக்கில் முக்கியமாகும். கோட்பாட்டில் பற்றுறுதி, புரட்சித் தன்மை ஆகியவற்றுடன் அதிகப் பட்ச சமயோசித சாமர்த்தியமும், போர்த்தந்திர, செயல்தந்திர இலாகவமும், சட்டபூர்வமான நிலைமைகளிலும் சட்ட விரோதமான நிலைமைகளிலும் வர்க்கப் போராட்டத்தின் எல்லா வடிவங்களையும் மேற்கொள்ளும் திறமையும் பாட்டாளி மக்களின் அன்றாடக் கோரிக்கைகளுடன் சோஷலிஸப் புரட்சியின் அடிப்படைப் பணிகளை இணைக்கும் திறனும் சேர்ந்திருப்பது, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைமைப் பாத்திரம் உயர்வதற்கு இன்றியமையாதது ஆகும். கம்யூனிஸ்டு அகிலம், லெனினுடைய கட்டளைகளைப் பின்பற்றி, தங்கள் செய்கையை விமர்சன நோக்குடன் பகுத்தாயவும், கம்யூனிஸ்டுகள் தங்கள் சொந்தத் தவறுகளை வெளிப்படுத்தி அவற்றை நீக்கிக்கொள்ளும்படி பயிற்றவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குப் போதித்தது.

கம்யூனிஸ்டு அகிலம் தனது தீர்மானங்களாலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அளித்த யோசனைகள் மூலமும் மார்க்சிய-லெனினியத்தில் கம்யூனிஸ்டுகளின் முதிர்ச்சியை மேம்படுத்தியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் விதிகளிலிருந்து தோன்றிய ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் கண்டிப்பான கட்டுப்பாடு நிலவ அது உதவிற்று. வர்க்கப் போராட்டத்தின் விதிக்குப் பொறுப்பு உணர்ச்சியையும், பூர்ஷ்வா வர்க்கத்துடன் தாக்குப் போர் நடத்திய காலத்திலும் தற்காப்புப் போர் நடத்திய காலத்திலும் புரட்சி உணர்வையும் கம்யூனிஸ்டுகளுக்கு அது புகட்டியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள தொண்டுகளில் ஒன்று, சிறந்த தலைவர்களின் நட்சத்திர மண்டலத்தை உருவாக்கியது ஆகும். இவர்கள் போராட்ட ஊக்கமும், துணிவும்

வாய்ந்த தொழிலாளி வர்க்கத் தலைவர்கள். அரசியல் முதிர்ச்சியும் கொள்கைவாத உரமும் பெற்றவர்கள். கூட்டான புரட்சி நடவடிக்கைகளின் போதும், போராட்டத்தின் அரசியல் கொள்கைப் போக்கையும் செயல்தந்திரத்தையும் கூட்டு முயற்சியால் வகுத்த போதும், அனுபவசாலிகளும் நல்ல சித்தாந்தத் தேர்ச்சி பெற்றவர்களும் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் இணைக்க வல்லவர்களும் புரட்சி இயக்கத்தின் தேசியப் பணிகளையும் சர்வதேசியப் பணிகளையும் மார்க்சிய-லெனினிய நிலைகளிலிருந்து நிறைவேற்றத் திறன் கொண்டவர்களுமான கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் உருவானார்கள்.

மார்க்சிய-லெனினிய ஊழியர்கள் பயிற்றி உருவாக்கப்பட்டது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பருவ முதிர்ச்சிக்கு முதற்படி முக்கியத்துவம் கொண்டிருந்தது. அவை வளர்ச்சியின் புதிய கட்டத்துக்கு, முழுச் சுதந்திரத்துக்கு மாற இது தேவைப்பட்டது. அப்போது சர்வதேச அளவில் மையப்படுத்தப்பட்ட தலைமை இருக்கவில்லை. ஒவ்வொரு கட்சியும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்குக்குப் பொருந்தும் விதத்தில் சுயமாகச் சிந்தித்து அரசியல் கொள்கைப் போக்கை வரையறுக்கவும் நாட்டில் புரட்சிப் போராட்டத்தை வழிகாட்டி நடத்தவும் வேண்டி இருந்தது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சாதாரண உறுப்பினர்களைப் போதித்துப் பயிற்றுவதில் கம்யூனிஸ்டு அகிலம் சிறந்த தொண்டு ஆற்றியது. வரலாற்று அரங்கில் புது வகையான வெகுஜன அரசியல் ஊழியன் தோன்றுவதற்கு அது கணிசமாக உதவிற்று. இந்த ஊழியனின் பெயர் கம்யூனிஸ்டு. லெனினுடைய அறிவுரைகளுக்கு இணங்க, கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமையில், கம்யூனிஸ்டுகளின் அரசியல், கொள்கைவாத, ஒழுக்க நெறிப் பண்புகள் உருவாயின. இவர்கள் திரளான வெகுஜனங்களின் பெரு மதிப்பைப் பெற்றிருந்தார்கள். மனிதகுலத்தின் வரலாற்று வாழ்வில் முக்கியப் பங்கு ஆற்றினார்கள். தொழிலாளி வர்க்கக் குறிக்கோளுக்குத் தன்னலமற்ற விசுவாசம், கொள்கைவாதப் பற்றுறுதி, கட்சியிடமும் மக்களிடமும் பளிங்கு போன்ற நேர்மை, வளையாத சித்த உறுதி, சோஷலிஸத்தின் வெற்றிக்கான போராட்டத்தில் துணிவும் வீரமும், கட்சியின் நலன்களைத் தங்கள் சொந்த நலன்களாகக் கருதும் திறன் ஆகிய பண்புகள், கம்யூனிஸ்டு அகிலத்தின் செல்வாக்கினால்தான் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்டன. கம்யூனிஸ்டின்

கொள்கைவாத, அரசியல், ஒழுக்க நெறிப் பண்பு, முந்திய எல்லாக் காலங்களேயும் சேர்ந்த புரட்சிக்காரர்களின் சிறந்த இயல்புகளேத் தன்னகத்தே கொண்டிருந்தது. கம்யூனிஸ சமூகத்தைச் சேர்ந்த மனிதனின் முன்மாதிரியாக அது திகழ்கிறது.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சியால் திகில் அடைந்த முதலாளித்துவ சமூகத்தின் ஆளும் வர்க்கத்தினர், தங்கள் அரசியல், நிர்வாக-அடக்குமுறை, கொள்கைவாத இயந்திரத்தின் சக்தி அனைத்தையும் அதன்மீது பிரயோகித்தார்கள். கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான அவதூறுகள், மிகக் கொடுமையான அடக்குமுறை, தண்டனை முகாம்கள், குரூரமான சித்திரவதைகள், படு கொலைத் தண்டனைகள் முதலிய எல்லா முறைகளும் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் கையாளப்பட்டன. ஆனால் கம்யூனிஸ்டுகள் இவற்றைத் தாங்கிக்கொண்டு உறுதியாய் நின்றார்கள். பிற்போக்கின் ஒவ்வொரு தாக்குதலேயும் எதிர்த்து முறியடித்து ஆண்டுக்கு ஆண்டு தங்கள் நிலைகளை மேலும் வலுவாக்கி விரிவு படுத்தி வருகிறார்கள் அவர்கள்.

கம்யூனிஸ்டு அகிலம், முதலாவது சோஷலிஸ்டு நாடான சோவியத் யூனியனை ஆதாரமாகக் கொண்டு கம்யூனிஸ்டுகளுக்கு மிகப் பெருத்த அளவில் உள, அரசியல், பொருள் உதவி அளித்தது. பல்லாயிரம் ஊக்கமுள்ள ஊழியர்களேயும் தலைவர்களேயும் அது அழிவிலிருந்து காப்பாற்றியது. 1919ல் ஹங்கேரியில் புரட்சியின் தோல்விக்குப் பின்பும், இத்தாலி, பல்கேரியா, போலந்து, யூகோஸ்லாவியா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் பாசிஸ்டுப் பிற்போக்காளர்களின் பயங்கர அடக்குமுறை தாண்டவமாடிய காலத்திலும், 1934 பிப்ரவரியில் வியன்னு பாட்டாளி வர்க்கத்தின் தோல்விக்குப் பின்னரும் 1939ல் ஸ்பானியக் குடியரசு நசுக்கப்பட்ட பிறகும் இவ்வாறு நடந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தால் போதித்துப் பயிற்றப்பட்ட கம்யூனிஸ்டு இயக்கத்தின் தலைவர்களும் ஊக்கமுள்ள ஊழியர்களும், புரட்சிப் போராட்டத்திலும் மக்களினங்களின் தேசிய விடுதலை இயக்கத்திலும் சோஷலிஸக் கட்டுமானத்திலும் தற்கால முற்போக்கு இயக்கங்கள் அனைத்திலும் முக்கியப் பங்கு ஆற்றி வந்தார்கள், தற்போதும் ஆற்றி வருகிறார்கள்.

உலகப் புரட்சி இயக்கத்தின் தலைமை மையம், தொழிலாளி வர்க்கத்தினதும் உழைப்பாளி மக்கள் அனைவரதும் குறிக்கோளுக்கான போராட்டத்தின் நிலையுறுதியும் ஒத்திசைவும் கொண்ட

ஒழுங்கமைப்பாளி என்ற முறையில் கம்யூனிஸ்டு அகிலம் மனிதகுல வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது. தற்காலத்தின் மிகக் கடும் மோதல்களின் மையத்தில், உலக முற்போக்குச் சக்திகளின் முன் வரிசைகளில் நின்றது கம்யூனிஸ்டு அகிலம். உலகப் புரட்சி நிகழ் முறையை அது ஒரே முழுமையாகக் கருதியது. கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஒன்றுக்கொன்று உதவும்படியும் ஒன்றுக்கொன்று ஆதர வாகச் செயல்படும்படியும் அது ஏவியது.

சோவியத் யூனியனின் தற்காப்பிலும், பாசிஸத்துக்கு எதிராக வும் யுத்த அபாயத்துக்கு எதிராகவும் நடந்த போராட்டத்திலும், சர்வதேசப் புரட்சிச் சக்திகளை ஒற்றுமைப்படுத்துவதிலும் கம்யூ னிஸ்டு அகிலம் சிறந்த பங்கு ஆற்றியது. வி.இ. லெனினது மறை வுக்குப் பின், சில சில காலப் பகுதிகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்களில் ஆழ்ந்த தவறுகள் நேர்ந்தன, சில சந்தர்ப்பங்களில் இந்தத் தவறுகள் குறுகிய பிரிவுத் தன்மை கொண்டிருந்தன. ஆயினும், கம்யூனிஸ்டுக் கட்சிகளை அமைப்பதிலும் வலுப்படுத்து வதிலும், சர்வதேசப் புரட்சிச் சக்திகளை ஒற்றுமைப்படுத்துவதி லும், பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகவும் சமாதானத் துக்கும் தேசிய விடுதலைக்கும் சோஷலிஸத்துக்கும் ஆதரவாகவும் போராடுவதற்கு அவற்றைத் திரட்டுவதிலும் கம்யூனிஸ்டு அகிலம் ஆற்றிய வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் பணிகளை இந்தப் பலவீனங்களும் தவறுகளும் அழித்துவிட முடியாது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் வரலாறு கடுமையான கொள்கைவா தப் போராட்டத்துக்கு இலக்காகி இருக்கிறது. பூர்ஷ்வா, சீர்திருத்த வாத வரலாற்று ஆசிரியர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் நடவடிக் கைகளைத் தீங்கானவையாகக் காட்ட முயல்கிறார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் சிறந்த தொண்டுகளை மறக்க அடிக்கவும் அதன் தவறுகள் மீதும் சரியற்ற முடிவுகள் மீதும் கவனத்தை ஒருமுனைப் படுத்தவும் முயல்பவர்கள் தொழிலாளர் இயக்கத்திலும், கம்யூ னிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர் இடையேயும்கூடக் காணப்படுகிறார் கள். ஆனால், கம்யூனிஸ்டு அகிலத்தினது வரலாற்றின்பால் இத் தகைய போக்கைக் கடைப்பிடிப்பது வரலாற்று உண்மையைத் திரிப்பதற்கே காரணம் ஆகும். தற்கால வர்க்கப் போராட்டத்தில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அனுபவத்தையும் மரபுகளையும் பயன் படுத்துவதற்கு இது உதவாது, தடையே விளைக்கும். அது மட்டும் அல்ல. கம்யூனிஸ்டு அகிலத்தின் தவறுகளையும் ஒரு சில சரியற்ற முடிவுகளையும் விமர்சிக்கும் வியாஜத்தில் அனேக சந்தர்ப்பங்களில்

கம்யூனிஸ்டு இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் தாக்கப்படுகின்றன. தற்காலப் புரட்சிச் சக்திகளை ஒன்றிணைத்து ஒற்றுமைப் படுத்தும் சர்வதேசியக் கோட்பாடு, முதன்மையாக இத்தகைய தாக்குதலுக்கு உள்ளாகிறது. கம்யூனிஸ்டு அகிலத்தின் வரலாறு இவ்வாறு திரிக்கப்படுவதற்கு மார்க்சிய-லெனினியவாதி ஒருவனும், சர்வதேசியவாதி ஒருவனும் இசைய முடியாது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் நடவடிக்கைகள் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசப் புரட்சி இயக்க வரலாற்றில் பெருத்த முக்கியத்துவம் உள்ளவை ஆகும். கம்யூனிஸ்டு அகிலம், அதன் செயற்கமிட்டி ஆகியவற்றின் காங்கிரசுகளின் தீர்மானங்களில் கொள்கைவாதச் செல்வம் பேரளவில் குவிந்திருக்கிறது. அடிப்படைப் பண்புகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்கள், உழைப்பாளி மக்களின் குறிக்கோளுக்குத் தொண்டு ஆற்றுவதற்கும் மார்க்சிய-லெனினியக் கருத்துக்களைச் செயல்படுத்துவதற்கும் ஆதர்சமாகத் திகழ்கின்றன.

கசடுகளும் தவறுகளும் நீக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்தின் அனுபவமும் அதன் புரட்சி மரபுகளும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தினதும் எல்லாப் புரட்சிச் சக்திகளுடையவும் செல்வமாக விளங்குகின்றன. இந்த அனுபவமும் இந்த மரபுகளும் இப்போதும் கூட, சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் தேசிய விடுதலைக்கும் சோஷலிஸத்துக்குமான போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஆயுதங்களாக இருக்கின்றன.

அத்தியாயம் ஒன்று

கம்யூனிஸ்டு அகிலத்தின் தோற்றம்.
கம்யூனிஸ்டு அகிலம்—
உலகப் புரட்சிச் சக்திகளின் முன்னணி

(1919-1920)

கம்யூனிஸ்டு அகிலம் தோன்றுவதற்கான வரலாற்றுத் தேவைகளும் நிலைமைகளும்

யுத்தக் காலத்தில் தொழிலாளர் இயக்கத்தில் மாறுதல்கள்

புதிய வகையான புரட்சிக் கட்சிகளை அமைப்பதும் அவற்றைக் கம்யூனிஸ்டு அகிலமாக ஒன்றிணைப்பதும் ஏகாதிபத்திய, பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் காலப்பகுதியில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் தேவைகள் காரணமாக வரலாற்று நோக்கில் இன்றியமையாதவை ஆயின. முதல் உலகப் போரின் தொடக்கத்திலேயே, இரண்டாவது அகிலம் வீழ்ச்சி அடைந்ததுமே, உண்மையில் புரட்சித்தன்மை கொண்ட புதிய அகிலத்தை அமைக்கும் யோசனை முதன் முதலில் லெனினாலும் போல்ஷிவிக்குகளாலும் முன்வைக்கப்பட்டது.

1914ம் ஆண்டுக் கோடையில் மூண்ட யுத்தம், இரு தரப்புக்களிலும் கொள்ளைத்தன்மை கொண்ட ஏகாதிபத்திய யுத்தமாக இருந்தது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் அப்போது நிலவிய எல்லாப் போக்குகளையும் வரலாற்று ரீதியில் சரிபார்க்கும் கண்டிப்பான உரைகல்லாக இந்த யுத்தம் பயன்பட்டது. இரண்டாவது அகிலத்தின் கொள்கைவாத-அரசியல் வறுமையை அது தயா தாட்சிணியம் இன்றி அம்பலப்படுத்தியது. பெரும்பாலான சமூக-ஜனநாயகக் கட்சிகள் சந்தர்ப்பவாதத்துக்கு இழிந்துவிட்டதை அது ஆழ்ந்த முறையில் வெளிக்காட்டியது. இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த மிக வலியதும் செல்வாக்கு உள்ளதுமான கட்சி ஆகிய ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், 1914, ஆகஸ்டு 4ந் தேதி, யுத்தக் கடன்களுக்கு ஆதரவாக ஜெர்மன் நாடாளுமன்றத்தில் பூர்ஷ்வா, நிலப்பிரபுப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து வாக்களித்தார்கள். ஆஸ்திரியா-ஹங்கேரி, பிரான்சு, பிரிட்டன், பெல்ஜியம், வேறு பல நாடுகள் ஆகியவற்றின் சோஷலிஸ்டுக் கட்சிகளும் நியாயமற்ற ஏகாதிபத்திய யுத்தத்தில் ''தங்கள்'' அரசாங்கங்களை ஆதரித்

தன. சந்தர்ப்பவாதத் தலைவர்கள் ''தங்கள்'' தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் தரப்புக்குப் பகிரங்கமாக மாறிச் சென்றதையும் தொழிலாளி வர்க்க நலன்களுக்குப் படு மோசமான துரோகம் செய்ததையும் இது குறித்தது. இரண்டாவது அகிலத்தின் யுத்த விரோதத் தீர்மானங்களைக் காலடியில் போட்டுத் துவைத்ததன் மூலம் சந்தர்ப்பவாதிகள் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமைக்குப் பலத்த அடி கொடுத்தார்கள். ஏனெனில், ''தங்கள்'' பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒற்றுமை, தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும் தொழிலாளி வர்க்கத்தின் ஒழுங்கைக் குலைத்து அதைப் பிளவுபடுத்துவதாகவே அர்த்தப்பட்டது.

ஏகாதிபத்திய யுத்தம் தொழிலாளர் இயக்கத்தில் இருந்த நெருக்கடியை வெளிப்படுத்திற்று. நெடு நாள் முன்பே, முதலாளித்துவம் ஒப்புநோக்கில் அமைதியான வளர்ச்சி அடைந்து வந்த காலப் பகுதியிலேயே, பழுத்திருந்த சீழ்க்கட்டியை அது அறுத்து விட்டது. இந்தக் காலப்பகுதியின் எதார்த்த நிலைமைகள் சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு ஊட்டம் அளித்தன. ஏகபோக பூர்ஷ்வா வர்க்கம் உபரி லாபங்களின் துணையால் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரையும் அவர்களுடைய தலைவர்களையும் கைக்கூலி கொடுத்து வசப்படுத்திக் கொண்டது. தொழிலாளர் உயர்குடியினரும் தொழிலாளர் சடங்குவாதிகளும் அடங்கிய ஒரு முழு வகுப்பை அது உருவாக்கி விட்டது. வாழ்க்கை முறையிலும் சம்பளத்திலும் உலகக் கண்ணோட்டம் அனைத்திலும் பிலிஸ்டைன் தன்மை கொண்டிருந்தது பூர்ஷ்வாக்கள் ஆகிவிட்ட தொழிலாளர்களின் இந்த வகுப்பு. பாட்டாளி வர்க்கத்தின் குட்டி பூர்ஷ்வா வழித்துணைவர்களோடு சேர்ந்து இந்த வகுப்பு தொழிலாளி வர்க்கத்தில் பூர்ஷ்வாக்களின் சமுதாய ஆதாரத் தூணாகவும் சந்தர்ப்பவாதத்தின் தலையூற்றாகவும் விளங்கிற்று. சந்தர்ப்பவாதம் இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளை மேலும் மேலும் உருக் குலைத்தது. இடதுசாரிச் சக்திகளின் செல்வாக்கினால் இரண்டாவது அகிலம் யுத்தத்துக்கு முன்வரை சரியான தீர்மானங்களை ஏற்றுக் கொண்டது. ஆனால் அதன் வலதுசாரித் தலைவர்களின் நடைமுறைச் செயல்கள் பூர்ஷ்வாக் கொள்கையின் நலன்களுக்கே மேலும் மேலும் பொருத்தமாக இசைந்தன.

தொழிலாளர் இயக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடி, சந்தர்ப்பவாதம் உண்மையில் பூர்ஷ்வா வர்க்கத்தின் கூட்டாளியே என்று தெளிவாகக் காட்டியது. சந்தர்ப்பவாதம் என்பது, ''அதீத நிலைகள்''

அற்ற, ஒன்றித்த கட்சியின் ''சட்டபூர்வமான வண்ணச் சாயல்'' என்ற காவுத்ஸ்கியின் பழைய சித்தாந்தம், தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றுவதாக மாறியது. ''சோஷலிஸப் புரட்சிக்கான பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒற்றுமைக்கு, இப்போது, 1914ம்ஆண்டுக்குப் பின், சந்தர்ப்பவாதிகளின் கட்சிகளிலிருந்து தொழிலாளர் கட்சிகளை நிபந்தனை இன்றிப் பிரித்துவிடுவது தேவைப்படுகிறது''[1] என்று எழுதினார் லெனின்.

யுத்த காலத்தில் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திலும் சோஷலிஸ்டு இயக்கத்திலும் மூன்று போக்குக்கள் உருவாயின. இவையாவன: சோஷல்-ஷோவினிஸ, இடைநிலைவாத, புரட்சிகர-சர்வதேசியப் போக்குக்கள்.

சோஷல்-ஷோவினிஸ்டுகள் அல்லது வெளிப்படையான சந்தர்ப்பவாதிகள், வர்க்கங்களுக்கு இடையே ''பிரஜா சமாதானமும்'' கொள்ளைக்கார யுத்தத்தில் ''தாய்நாட்டின் தற்காப்பும்'' இன்றியமையாதவை என்று பிரகடனம் செய்தார்கள். பூர்ஷ்வாக்களின் லாபங்களுக்காகத் தொழிலாளர்களை ஏகாதிபத்தியப் படுகொலைக் களத்துக்கு அனுப்ப ஆளும் வர்க்கத்தாருக்கு ஒளிவு மறைவு இன்றி உதவினார்கள். சமூக-ஜனநாயகக் கட்சிகளின் பெரும்பாலான பிரபல தலைவர்கள் சோஷல்-ஷோவினிஸ நிலையை மேற்கொண்டார்கள். ஏபெர்த், ஷெய்டமான் (ஜெர்மனி), ஆட்லர் (ஆஸ்திரியா), ரெனோதெல், கேத், ஸாம்பா (பிரான்சு), ஹாண்ட்மன் (பிரிட்டன்), பிளெகானவ் (ருஷ்யா), பிஸ்ஸொலாத்தி (இத்தாலி), வாந்தர்வெல்தே (பெல்ஜியம்), பிராந்திங்க் (ஸ்வீடன்) முதலியோர் இவர்களில் சிலர். பிரான்சிலும் பெல்ஜியத்திலும் பிரிட்டனிலும் சோஷல்-ஷோவினிஸ்டுகள் பூர்ஷ்வா அரசாங்கங்களில் உறுப்பினர் ஆனார்கள். எல்லா நாடுகளிலும் அவர்கள் தங்கள் தேசிய பூர்ஷ்வாக்களின் தரப்புக்கு மாறி, பாட்டாளி மக்களின் வர்க்கப் பகைவர்கள் ஆகிவிட்டார்கள்.

அரசியல் நிகழ்ச்சி என்ற முறையில் இடைநிலைவாதம், தொழிலாளர் இயக்கத்தில் சோஷல்-ஷோவினிஸத்தின் உளவாளியாக எதார்த்தத்தில் செயல்பட்டது. இடைநிலைவாதிகள், அதாவது மறைமுக சந்தர்ப்பவாதிகள், சொல்லளவில் யுத்தத்துக்கு எதிராய் இருந்தார்கள். செயலிலோ, சோஷல்-ஷோவினிஸ்டுகளுடன் ஒற்றுமை கொள்வதை ஆதரித்தார்கள். வெகுஜனங்கள் மீது அவர்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 111.

களுடைய செல்வாக்குக்கு உறுதுணையாய் இருந்தார்கள். வலது சாரித் தலைவர்களின் ஒழுக்கநெறி-அரசியல் வறுமை உழைப்பாளிகளின் பார்வையில் படாதவாறு காத்தார்கள். சோஷல்-ஷோவினிஸ்டுகள் தொழிலாளர் இயக்கம் அனைத்தையும் வலப்புறம் இழுத்த சந்தர்ப்பத்தில், நடுநிலைவாதம் சோஷல்-ஷோவினிஸத்தை அம்பலப்படுத்துவதற்கும் பாட்டாளி வெகுஜனங்கள் புரட்சி நிலைமை மேற்கொள்வதற்கும் யுத்தகாலத்தில் பிரதானத் தடையாக விளங்கியது. இரண்டாவது அகிலத்தின் பிரபல சித்தாந்த கர்த்தரான கார்ல் காவுத்ஸ்கி, இடைநிலைவாதத்தின் கொள்கை வாதப் பிரசாரகராக இருந்தார். ''பகிரங்கமான சந்தர்ப்பவாதம் அவ்வளவு பயங்கரமானதோ தீங்கானதோ அல்ல, ஏனெனில் தொழிலாளி வெகுஜனங்களை அது எடுத்த எடுப்பிலேயே தன்னிடமிருந்து விலக்கித் தள்ளிவிடுகிறது. அதைக் காட்டிலும் பயங்கரமானதும் தீங்கானதும் இந்த இனிய இடைநிலைவாதம், ஏனென்றால், இது சந்தர்ப்பவாத நடைமுறையை மார்க்சியச் சொற்றொடர்களால் நியாயப்படுத்துகிறது, புரட்சி நடவடிக்கைகள் தருணத்துக்கு ஏற்றவை அல்ல என்றும் இன்னும் பலவாறாகவும் பல போலிவாதங்களால் மெய்ப்பிக்கிறது'' என்று எழுதினார் லெனின்.[1] ஜெர்மனியில்—கா. காவுத்ஸ்கி, ஹ. ஹாஸே, ஹ. லேதெபூர்க், ஆஸ்திரியாவில்—ஃபி. ஆட்லர், பிரான்சில்—ழ. லோங்கே, அ. பிரெஸ்மான், பிரிட்டனில்—ரா. மாக்டொனால்டு, ஃப. ஸ்னோடென், ருஷ்யாவில்—ல. மார்த்தவ், ல. திரோத்ஸ்கி, இத்தாலியில்—ஃப. துராத்தி, வ. மோதிலியானி, அமெரிக்க ஐக்கிய நாடுகளில்—ம. ஹில்குவிட், சுவிட்ஸர்லாந்தில்—ர. கிரிம் முதலியோர் இடைநிலைவாதத்தின் எடுத்துக்காட்டான பிரதிநிதிகளாக இருந்தார்கள்.

புரட்சிகர சர்வதேசியவாதிகளின் போக்கு பாட்டாளி வெகுஜனங்களின் அடிப்படை நலன்களை வெளியிட்டது. அவர்கள் தாம் சோஷலிஸத்துக்கு விசுவாசத்துடன் நடந்துகொண்டார்கள்; ''தங்கள்'' ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்களுக்கு எதிராகப் புரட்சிப் போராட்டம் நடத்தினார்கள். சோஷல்-ஷோவினிஸத்தையும் இடைநிலைவாதத்தையும் எதிர்த்து நின்றார்கள்.

கொள்ளைக்காரப் போரையும் ஷோவினிஸத்தையும் அம்பலப்படுத்துவதற்கு செர்பிய சோஷலிஸ்டுகள் நாடாளுமன்ற மேடையைப் பயன்படுத்தினார்கள். 1914, ஜூலை 31ந் தேதி, ஸ்குப்ஷினா

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 257.

எனப்படும் நாடாளுமன்றத்தில் அவர்கள் யுத்தக் கடன்களுக்கு எதிராக வாக்களித்தார்கள். செர்பிய சோஷலிஸ்டுகளின் நிலையை லெனின் உயர்வாக மதித்தார். சர்வதேசப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு விசுவாசம் கடைப்பிடிப்பதற்கு இது உதாரணம் என்று அவர் பாராட்டினார். 1914, ஆகஸ்டு 8ந் தேதி, ருஷ்யாவின் நான்காவது அரசாங்க தூமாவின் மன்றத்தில், ஏகாதிபத்திய யுத்தத்துக்குத் தீர்மானமான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தூமாவின் போல்ஷிவிக் உறுப்பினர்கள் யுத்தக் கடன்களை எதிர்த்து ஆர்ப்பாட்ட முறையில் வாக்களித்தார்கள். அதோடு நிற்காமல் அவர்கள் வெகுஜனங்களிடையே ஊக்கத்துடன் புரட்சிப் பிரசாரம் நடத்தினார்கள். புரட்சிகரப் பாட்டாளிக் கட்சிப் பிரதிநிதிகள் நிர்ணயகரமான கணத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர்கள எல்லோருக்கும் காட்டினார்கள். போல்ஷிவிக்குகளின் இந்த உதாரணத்தை 1914, டிசெம்பர் 2ந் தேதி ஜெர்மன் நாடாளுமன்றத்தில் பின்பற்றினார் கார்ல் லீப்னெஹ்த். துணிவு மிக்க பாட்டாளிவர்க்கப் புரட்சியாளரான லீப்னெஹ்த் ஒருவர் மட்டுமே ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராக ஜெர்மன் நாடாளுமன்றத்தில் வாக்களித்தார்.

இரண்டாவது அகிலத்தின் கட்சிகளது தலைமை சோஷல்-ஷோவினிஸ நிலைக்கு மாறியதும், தங்கள் ஏகாதிபத்திய அரசாங்கங்களுடன் சேர்ந்து கொண்டு தங்களுக்குள் பகைமை பாராட்டிய கட்சிகளாக இரண்டாவது அகிலம் பிளவுபட்டதும், இரண்டாவது அகிலம் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியிலும் முழுமையான வீழ்ச்சி அடைந்ததையும் சர்வதேசப் பாட்டாளி வர்க்க நிறுவனம் என்ற முறையில் அதன் அழிவையும் குறித்தன. இரண்டாவது அகிலத்தைப் பிளவுபடுத்தியவர்கள், கம்யூனிஸ்டு விரோதிகள் மீண்டும் மீண்டும் சொல்வது போல, போல்ஷிவிக்குகளும் லெனினும் அல்ல. சந்தர்ப்பவாதிகளும் சோஷல்-ஷோவினிஸ்டுகளுமே தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகம் செய்ததன் வாயிலாக சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமையைக் குலைத்தார்கள்.

உலகப் பாட்டாளி வர்க்க இயக்கம் பின்வரும் இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வது அவசியம் ஆயிற்று: ஒன்று வரலாற்று நோக்கில் இன்றியமையாத தன்னுடைய புரட்சிக் குறிக்கோள்களைக் கைவிட்டுவிட்டு, பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமரசம் செய்துகொள்ளும் போக்குக்கு மாற வேண்டும், இல்லாவிட்

டால் சோஷல்-ஷோவினிஸத்துடன் தொடர்பை அறவே துணித்துக் கொண்டு, பாட்டாளிகளின் வர்க்க நலன்களைக் காத்துப் போராடவும், தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் ஆசான்களான கார்ல் மார்க்சும் பிரிட்ரிஹ் எங்கெல்சும் தொடங்கி வைத்த சர்வதேசிய மரபுகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும் வல்ல புதிய சர்வதேசப் புரட்சி ஸ்தாபனத்தை நிறுவ வேண்டும்.

இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியும் அது மார்க்சியத்துக்கும் பாட்டாளி வர்க்க விடுதலைக்கும் சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டுக்கும் இழைத்த துரோகமும் காரணமாக, புரட்சிகரமான புதிய அகிலத்தை நிறுவுவது புரட்சிகர மார்க்சியவாதிகளின் உடனடிக் கடமை ஆகிவிட்டது.

புது வகையான சர்வதேசப் பாட்டாளி வர்க்க நிறுவனத்தை அமைப்பதற்கு உரிய ஆழ்ந்த புறநிலை, அகநிலைத் தேவைகள் அந்த சமயத்தில் ஏற்பட்டிருந்தன. ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் கூர்மை அடைந்ததும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் வளர்ச்சி பெற்றதும் இந்தத் தேவைகள் உருவாகக் காரணமாயிருந்தன. முதலாளித்துவத்தின் உலகு பரவிய நெருக்கடியும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளும் நிகழும் காலப்பகுதி தொடங்கி விட்டது இவற்றுக்குரிய நிர்ணயகரமான முதனிலையாக விளங்கியது. ஏகாதிபத்தியம் சோஷலிஸப் புரட்சிகளின் முன்வேளை என்றும், ஏகாதிபத்திய நாடுகளின் சமமற்ற, ஏற்ற இறக்கம் உள்ள பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் விளைவாக முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகள் ஒரேயடியாகக் கூர்மை அடையும் என்றும் மறுக்க முடியாதபடி நிரூபித்தார் லெனின். இந்தக் காரணங்களால் வெகுஜனங்களின் ஆழ்ந்த புரட்சி இயக்கங்கள் நிகழ்வதும் ஏகாதிபத்தியத்தின் உலகச் சங்கிலியில் பலவீனமான வளையங்கள் தோன்றுவதும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளால் அவை துணிக்கப்படுவதும் தவிர்க்க இயலாதவை என லெனின் நிரூபித்தார். பிரமாண்டமான வர்க்கப் போராட்டங்களையும் புரட்சிகரமான ஆட்சி மாற்றங்களையும் உலகம் மிக மிக நெருங்கி விட்டது என்று அவர் முடிவு செய்தார்.

சோஷலிஸப் புரட்சிகள் நெருங்கியதும் புரட்சிப் போராட்டங்களைத் தலைமை ஏற்று நடத்தும் அவசியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களைத் தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும் போராட்ட ஸ்தாபனத்தில் ஒன்றுபடுத்துவதன் உடனடியான தேவையை வலியுறுத்தின. பல்வேறு நாடுகளில் மார்க்சியப்

புரட்சிக் குழுக்கள் இருந்தன என்றாலும், வெகுஜனங்களைப் புரட்சிப் போராட்டங்களுக்கு இட்டுச் செல்லத் திறன் கொண்ட புரட்சிகர மார்க்சியக் கட்சி எந்த நர்ட்டிலும் இல்லை. ருஷ்யாவில் இருந்த போல்ஷிவிக் கட்சி மட்டுமே இந்த விதிக்கு விலக்காக இருந்தது. இந்தக் காரணத்தால், புதிய காலப் பகுதியின் வர்க்கப் போராட்டத்தினால் முன்வைக்கப்பட்ட இந்தப் பணி, இன்னும் அதிக முக்கியத்துவம் உள்ளது ஆயிற்று.

''முதலாளித்துவ அரசாங்கங்கள் மீது புரட்சித் தாக்குதல் தொடுக்கவும் அரசியல் ஆட்சி அதிகாரத்திற்காகவும் சோஷலிஸத்தின் வெற்றிக்காகவும், எல்லா நாடுகளையும் சேர்ந்த பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராக உள்நாட்டுப் போர் நடத்தவும் பாட்டாளி வர்க்கச் சக்திகளை ஒழுங்கமைக்கும் பணி மூன்றாவது அகிலத்திற்கு எதிர்ப்பட்டிருக்கிறது'' என்று எழுதினார் லெனின்.[1]

லெனினும் போல்ஷிவிக்குகளும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கைவாத, செயல்தந்திர, ஸ்தாபன அடிப்படைகளைச் செப்பமாக நிறுவி இருந்தார்கள். இந்த அடிப்படைகள் நிலவியது புதிய சர்வதேசப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க நிறுவனத்தை அமைப்பதற்குரிய மிக முக்கியமான முதனிலையாக விளங்கியது. பல்வேறு திசைப் போக்குகள் கொண்ட சந்தர்ப்பவாதத்துடன் போராடுகையில் லெனின் மார்க்சியப் போதனையை விரிவுபடுத்தி, ருஷ்யாவினதும் உலகு அனைத்தினதும் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் புதிய முடிவுகளாலும் நடைமுறையாலும் அதை வளப்படுத்தினார். ''ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'', ''ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் பற்றிய கோஷம்'', ''பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இராணுவச் செயல் திட்டம்'' ஆகிய நூல்களிலும் நாட்டினப் பிரச்சினைகளையும் நிலப் பிரச்சினைகளையும் பற்றிய கட்டுரைகளிலும் வேறு பல நூல்களிலும், வர்க்கப் போராட்டத்தையும் சோஷலிஸப் புரட்சியையும் குறித்த மார்க்சிய சித்தாந்தத்தை ஏகாதிபத்தியக் காலப் பகுதிக்கு ஏற்ற வகையில் லெனின் விரிவுபடுத்தினார். ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளை ஆழ்ந்து ஆராய்ந்து, சோஷலிஸப் புரட்சி தொடக்கத்தில் ஒரு சில நாடுகளில் அல்லது தன்னந் தனியான ஒரு நாட்டில் கூட வெற்றி பெறுவது சாத்தியமே என்ற முடிவுக்கு வந்தார் லெனின். முதன் முதலாக 1915ல் பெறப்பட்ட இந்த முடிவு,

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு. தொகுதி 21, பக்கங்கள் 40-42.

மார்க்சிய விஞ்ஞானத்தில் மேதை வாய்ந்த கண்டுபிடிப்பாகத் திகழ்ந்தது. அது சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்குப் புதிய வருங்கால வாய்ப்புக்களைக் காட்டியது. தனி நாடுகளின் தொழி லாளி வர்க்கத்தின் முன் முயற்சியை வளர்ச்சி பெறச் செய்தது.

விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கம் நிலையான கூட்டு ஏற் படுத்திக் கொள்வதன் இன்றியமையாமை, புரட்சிப் போராட் டத்தில் ஜனநாயகக் கோரிக்கைகளின் முக்கியத்துவம், ஜனநாயகப் புரட்சி சோஷலிஸப் புரட்சியாக வளர்வது, சோஷலிஸத்துக்கான போராட்டத்துக்கும் காலனிகளின் தேசிய விடுதலை இயக்கத்துக் கும் உள்ள தொடர்பு ஆகியவை பற்றி வி.இ. லெனின் முக்கிய மான முடிவுகள் செய்தார். முன்னணி நாடுகளில் பூர்ஷ்வா வர்க் கத்துடன் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டம், ஒடுக் கப்பட்ட நாடுகளில் நடக்கும் ஜனநாயக, புரட்சிகர தேசிய விடுதலை இயக்கங்களின் தொகுப்புடன் சேர்கிறது என்பதை லெனின் சுட்டிக் காட்டினர். யுத்தம், அரசு, பாட்டாளி வர்க்கக் கட்சி, அதன் பாத்திரம் ஆகியவை பற்றிய மார்க்சியப் போதனைகளையும் லெனின் விரிவுபடுத்தினர்.

லெனினும் போல்ஷிவிக் கட்சியும் பெற்ற இந்தச் சித்தாந்த முடிவுகள், மிக மிகச் சிக்கலானவையும் பல்வகைப் பட்டவையு மான நிலைமைகளில் நடந்த வர்க்கப் போராட்டத்தின்போது சரி பார்க்கப்பட்டு வளம் பெற்றன. கம்யூனிஸ்டு அகிலத்தின் சித் தாந்த-அரசியல், ஸ்தாபனக் கொள்கைத் திட்டத்தை வகுப்பதில் இவை நிர்ணயகரமான பங்கு ஆற்றின. அதன் போர்த் தந்திரத்துக் கும் செயல் தந்திரத்துக்கும் ஆதாரமாய் விளங்கின.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த முன்னணிப் பாட்டாளி கள், சோஷல்-ஷோவினிஸ்டுகளதும் இடைநிலைவாதிகளுடைய வும் கொள்கை நாசகரமானது என்பதைப் புரிந்து கொண்டிருந் தார்கள். மேற்குறித்த புதிய புரட்சி, கொள்கைவாத-அரசியல் வரையறுப்புக்களின் ஜீவாதாரத் தேவையை அவர்கள் தீவிரமாக உணர்ந்தார்கள். இந்தப் பாட்டாளிகளின் சித்தத்தையும் விருப் பத்தையும் புரட்சிகர சர்வதேசியக் கட்சிகளும் குழுக்களும் வெளியிட்டன.

லெனினது தலைமையில் இயங்கிய ருஷ்யாவின் போல்ஷிவிக்கு கள், பிளகோயிவ், கீர்க்கவ், கொலாரவ் ஆகியோரைத் தலைவர்

களாகக் கொண்ட பல்கேரியத் தெஸ்னியாக்குகள்,[1] ஜெர்மன் இடதுசாரியினர் (கா. லீப்னெஹ்த், ரோ. லுக்ஸம்பர்க், ஃபி. மேரிங்), செர்பிய சோஷலிஸ்டுகள் (ஃபிலிப்போவிச், பப்போவிச், காத்ஸ்லிரோவிச்), போலந்து இடது சாரி சமூக-ஜனநாயகக் கட்சியினர் (கனேத்ஸ்கி, வார்ஸ்கி), லாட்விய சமூக-ஜனநாயக வாதிகள் (பேர்ஸின்), ஹாலந்து நாட்டு டிரிபியூனிஸ்டுகள்[2] (பான்னெக்கூக், வாயின்கோப்), சுவீடன், நார்வே, இத்தாலி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பிரான்சு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆர்ஜெண்டீனு, டென்மார்க், சுவிட்ஸர்லாந்து, பிற நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த இடதுசாரி சோஷலிஸ்டுகள் முதலானேர் புரட்சிகர சர்வதேசியவாதிகளின் போக்கைச் சேர்ந்திருந்தார்கள். மேற்கு நாடுகளின் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் நிலைகள், லெனினிய நோக்கில், போதிய உறுதியும் ஒத்திசைவும் அற்றவையாக இருந்தன. ஆயினும், முதன்மையாகச் சொந்த நாட்டில் நாட்டுவெறியை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற முக்கியப் பணியை அவர்கள் புரிந்து கொண்டு தன்னலம் இன்றி நிறைவேற்றினார்கள்.

தங்கள் நாட்டு பூர்ஷ்வாக்களுக்கும் சோஷல்-ஷோவினிஸ்டுக்களுக்கும் எதிராகப் போராடும் புரட்சிகரமான சர்வதேசியக் கட்சிகளும் குழுக்களும் தொழிலாளர் இயக்கத்தில் தோன்றியதும் கம்யூனிஸ்டு அகிலம் உரு ஆவதற்குரிய முக்கியமான முதனிலைகளில் ஒன்ருக இருந்தது.

வி.இ. லெனினும் போல்ஷிவிக்குகளும் புரட்சிகரமான புதிய அகிலத்தை நிறுவுவதற்கு ஏற்ற இன்றியமையாத நிலைமைகள் முற்றுவதைக் கூர்ந்து கவனித்துவந்தார்கள். சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் இருந்த உண்மையான சர்வதேசியப் போக்கு கொண்ட இடதுசாரியினரைத் திரட்டி ஒன்றுபடுத்துவதற்கு அவர்கள் ஊக்கத்துடன் முயன்று வந்தார்கள். யுத்தம் மூண்டதுமே

---

[1] பல்கேரிய சமூக-ஜனநாயகத்தின் மார்க்சியவாதிகள் இவ்வாறு அழைக்கப்பட்டார்கள். 1919ம் ஆண்டு பல்கேரிய சமூக-ஜனநாயகக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி என்று தன் பெயரை மாற்றிக்கொண்டது.

[2] ஹாலந்து சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இடதுசாரிக் குழுப் பிரதிநிதிகள். இவர்களது முயற்சியால் 1919ம் ஆண்டு கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்பட்டது.

''ஏகாதிபத்தியப் படுகொலைக்களத்துக்கு எதிராகப் போராட்டம்'' என்ற கோஷத்துடன் இந்தத் திசையில் நடைமுறைச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏகாதிபத்திய உலகப் போருக்கு எதிராக ஒழுங்கமைந்த முறையில் ஒற்றுமையாகச் செயல்பட்டதன் மூலம் போல்ஷிவிக் கட்சி துணிவுக்கும் நிலையுறுதிக்கும் சோஷலிஸ, பாட்டாளி வர்க்க சர்வதேசியக் குறிக்கோளின்பால் விசுவாசத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது. சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துக் கோட்பாட்டு அடிப்படையில் பல ஆண்டுகளாக நடத்திய போராட்டம், கடினமான சோதனைக் காலத்தில் வரலாற்றுப் பணிகளை நிறைவேற்றும் தகுதி பெற்றிருக்க போல்ஷிவிக்குகளுக்கு உதவியது. லெனின் எழுதிய ''யுத்தமும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகக் கட்சியும்'' என்னும் ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கை, 1914ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ந் தேதி சுவிட்ஸர்லாந்தில் வெளியிடப்பட்டது. ஏகாதிபத்தியத்துக்கும் யுத்தத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் எதிரான புரட்சிப் பேராட்டத்தின் விரிவான செயல்திட்டம் இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தது. ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றுவது என்பதை போல்ஷிவிக்குகள் முக்கிய கோஷமாக முன்வைத்தார்கள். இந்த கோஷம் பாரிஸ் கம்யூனின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது. 1912ல் இரண்டாவது அகிலத்தின் காங்கிரசால் ஏற்கப்பட்ட பஸேல் அறிக்கையின் கருத்துக்கள் இதில் விரிவாக்கப்பட்டிருந்தன. சொந்த நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்துடன் ''உள்நாட்டுச் சமாதானம்'' கடைப்பிடிப்பது என்ற சோஷல்-ஷோவினிஸ்டுகளின் கோஷத்துக்கு இது நேர் எதிராய் இருந்தது.

ருஷ்யாவின் சந்தர்ப்பவாதிகளும் அயல் நாடுகளின் சந்தர்ப்பவாதிகளும் லெனினது கோஷத்தைக் கொடிய பகைமையுடன் தாக்கினார்கள். ஜெர்மன் சோஷல்-ஷோவினிஸ்டு எ. தவீது என்பவர் போல்ஷிவிக்குகளுடன் வாதப் போர் நிகழ்த்தினார். ''உலகப் போரை உள்நாட்டுப் போராக மாற்றுவது பைத்தியக்காரத்தனம் ஆகும்'' என்று அவர் எழுதினார்.[1] ''நடைமுறைப் பிரச்சினை சொந்த நாட்டின் வெற்றி அல்லது தோல்வி என்ற ஒன்றுதான்'' என்று சோஷல்-ஷோவினிஸ்டுக்களுக்கு ஒத்துப் பாடினார் காவுத்ஸ்கி.

---

[1] *E. David.* Die Sozialdemokratie im Weltkrieg, Berlin, 1915, S. 172.

''ஆம், சோஷலிஸத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் மறந்துவிட்டால் இது உண்மையாய் இருக்கும். ஆனால், சோஷலிஸத்தை மறக்காவிடில் இது உண்மை ஆகாது: இன்னொரு நடைமுறைப் பிரச்சினை இருக்கிறது. அடிமைச் சொந்தக்காரர்களுக்கிடையே நடக்கும் யுத்தத்தில், கண்ணற்ற, நிர்க்கதியான அடிமைகளாய் இருந்து கொண்டே மடிவதா, அல்லது அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காக அடிமைகளுக்கிடையே 'சோதரத்துவம் ஏற்படுத்தும் முயற்சிக்காக' உயிர் துறப்பதா?

''எதார்த்தத்தில் இதுதான் 'நடைமுறைப்' பிரச்சினை'' என்று அவருக்கு விடை அளித்தார் லெனின்.[1]

''யுத்தக் காலத்தில் சமாதானப் போராட்டம், சமாதானக் காலத்தில் வர்க்கப் போராட்டம்!''[2] என்று அறிவித்தார் காவுத்ஸ்கி. போல்ஷிவிக்குகள் மட்டும் இன்றி ஜெர்மன் இடதுசாரியினரும் இந்தப் போக்கை வன்மையாகக் கண்டித்தார்கள். ரோஸா லுக்ஸம்பர்க் காவுத்ஸ்கியின் நிலையை எள்ளி நகையாடினார். ''கம்யூனிஸ்டு அறிக்கையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அறைகூவல் காவுத்ஸ்கியின் தயவால் சாராம்சத்தில் நிறைவுபடுத்தப்பட்டுப் பின்வரும் வடிவைப் பெற்றுவிட்டது: 'உலகத் தொழிலாளர்களே, சமாதானக் காலத்தில் ஒன்று சேருங்கள், யுத்தக் காலத்தில் ஒருவர் குரல்வளையை மற்றவர் கடித்துக் குதறுங்கள்'''[3] என்று அவர் பரிகசித்தார்.

ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றும் கோஷத்திலிருந்து நேரடியாகப் பிறந்தது இன்னொரு அரசியல் கோஷம். ஏகாதிபத்திய யுத்தத்தில் ''சொந்த'' அரசாங்கங்களின் தோல்வி என்பது அது. ''தாய்நாட்டின் தற்காப்பு'' என்ற சோஷல்-ஷோவினிஸ்டு கோஷத்துக்கு இது எதிராய் இருந்தது, போரில் ஈடுபட்டிருந்த எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தியது.

இடைநிலைவாதிகள், ''வெற்றியும் வேண்டாம், தோல்வியும் வேண்டாம்'' என்ற கோஷத்தைக் கிளப்பினார்கள். வெளிப் பார்வைக்கு இது ''தாய்நாட்டின் தற்காப்பு'' என்ற ஷோவினிஸ்டுக்களின் நிலையிலிருந்து வேறுபட்டதாகத் தோன்றினாலும் உண்மை

---

[1] வி·இ. லெனின். முழு நூல் திரட்டு. தொகுதி 21, பக்கம் 182.

[2] பார்க்க: *K. Kautsky.* Die Internationalität und der Krieg, Berlin, 1915. S. 40.

[3] «Die Internationale», N. 1, 15.IV. 1915, S. 8.

யில் அதன் மறு வடிவாகவே இருந்தது. ''வெற்றியும் வேண்டாம், தோல்வியும் வேண்டாம்'' என்ற கோஷத்தின் ஆதரவாளர்கள் எதார்த்தத்தில் பூர்ஷ்வாக்கள் தரப்பிலும் சோஷல்-ஷோவினிஸ்டுக்களின் தரப்பிலுமே இருந்தார்கள். தங்கள் அரசாங்கங்களுக்கு எதிராக சர்வதேசப் புரட்சிச் செயல்கள் நிகழ்த்தத் தொழிலாளி வர்க்கத்துக்கு உள்ள வாய்ப்புக்களை அவர்கள் நம்பவில்லை. இத்தகைய செயல்கள் நிகழ உதவவும் அவர்கள் விரும்பவில்லை. '' 'தோல்வியும் வேண்டாம், வெற்றியும் வேண்டாம்' என்னும் கோஷத்தை ஆதரிப்பவன் தெரிந்தோ தெரியாமலோ ஷோவினிஸ்டாக இருக்கிறன். நல்லபடியாக இருந்தால் அவன் சமரசப் போக்கு உள்ள குட்டி பூர்ஷ்வா. என்ன ஆனுலும் அவன் பாட்டாளி வர்க்கக் கொள்கையின் **பகைவன்,** தற்போதைய அரசாங்கங்களுடையவும் தற்போதைய ஆளும் வர்க்கங்களுடையவும் ஆதரவாளன்'' என்று எழுதினர் லெனின்.[1]

எல்லா நாடுகளையும் சேர்ந்த இடைநிலைவாதிகளால் பிரகடனம் செய்யப்பட்ட சமாதானத்துக்கான சாத்துவிகவாத வேண்டுகோளை அம்பலப்படுத்துவதிலும் லெனின் மிகுந்த கவனம் செலுத்தினர்.

சமாதானத்திலிருந்து வெகுஜனங்கள் எதிர்பார்க்கும் நலங்கள் சோஷலிஸப் புரட்சி இன்றிக் கைகூட மாட்டா என்பதை போல்ஷிவிக்குகள் அவர்களுக்கு விளக்கினர்கள். ''போர்கள் முடிவதும் மக்களினங்களுக்கு இடையே சமாதானமும் கொள்ளைகளும் பலாத்காரங்களும் நிறுத்தப்படுவதுமே எங்கள் ஆதர்சம். ஆனல் பூர்ஷ்வாக் குதர்க்கவாதிகள் புரட்சி நடவடிக்கைகள் பற்றிய உடனடியான, நேர்முகப் பிரசாரத்திலிருந்து இந்த ஆதர்சத்தைத் துணித்து, அதனல் வெகுஜனங்களுக்கு ஆசைகாட்டி மோசம் செய்யக் கூடும்'' என்று எழுதினர் லெனின்.[2]

புதிய, மூன்றுவது அகிலம் அமைக்கும் கோஷம் லெனினுடைய அறிக்கையில் முதன் முதலாக முன்வைக்கப்பட்டது. ''பாட்டாளி வர்க்க அகிலம் அழிந்து விடவில்லை, அது அழிந்து விடாது. தொழிலாளி வெகுஜனங்கள் எல்லாத் தடைகளையும் கடந்து புதிய அகிலத்தை நிறுவுவார்கள்... சந்தர்ப்பவாதத்தி

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 279.

[2] அதே நூல், பக்கம் 293.

லிருந்து விடுபட்ட பாட்டாளி வர்க்க அகிலம் நீடூழி வாழ்க!'' என்று எழுதினர் லெனின்.[1]

ஸிம்மர்வால்டு இயக்கம்

யுத்தத்தினுல் விளைந்த நெருக்கடி தொடக்கத்தில் தொழிலாளர்களிடையே பெருங் குழப்பம் ஏற்படுத்தியது. பெரும்பாலான நாடுகளில் பாட்டாளிகள் சோஷல்-ஷோவினிஸ்டுக்களுக்கு வசப்பட்டிருந்தார்கள். ஏனெனில், ஒரு கட்சியின் உறுப்பினர்களான சந்தர்ப்பவாதிகளுக்கும் புரட்சிக்காரர்களுக்கும் இடையே நிலவிய போலி ஒற்றுமையைக் கண்டு அவர்கள் ஏமாந்தார்கள், அல்லது பூர்ஷ்வாக்களால் தூண்டி விடப்பட்ட நாட்டுவெறி மனப்பான்மைக்கு ஓரளவு உள்ளானுர்கள். பழைய சமூக-ஜனநாயகக் கட்சிகளுக்குள் பிரிவு எல்லைகள் வரையறுக்கப்படும் நிகழ்முறை, பாட்டாளி வர்க்க வெகுஜனங்கள் சோஷல்-ஷோவினிஸ்டுத் தலைவர்களிடமிருந்து விலகி இடப் புறம், புரட்சிக் கருத்துக்களின் பக்கமும் புரட்சி மனப்பான்மைக்கும் புரட்சித் தலைவர்களின் தரப்புக்கும் செல்லும் நிகழ்முறை, 1915ம் ஆண்டிலிருந்து படிப்படியாகத் தான் வெளிப்பட்டது.

போரின் பயங்கரங்களும் மக்களின் நாசமும் பஞ்சமும் சீரழிவும் வெகுஜனங்களைத் துன்பத்தில் ஆழ்த்தின. அதே சமயம், இவற்றின் காரணமாக வெகுஜனங்கள் தங்கள் சக்தியைத் திரட்டவும் சித்தத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் யுத்தத்தின் உண்மைக் காரணங்கள் பற்றிச் சிந்திக்கவும் நிகழ்ச்சிகளை மேலும் மேலும் அதிகத் தெளிவாக, புரட்சி நோக்கில் புரிந்து கொள்ளவும் தொடங்கினுர்கள். அரசாங்கங்களுக்கு எதிரான யுத்தவிரோதப் பாட்டாளி இயக்கம் வெகுஜனங்கள் இடதுசாரிக்குச் சென்ற ஆழ்ந்த நிகழ்முறையின் துலக்கமான வெளிப்பாடாக இருந்தது. 1915ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஸிம்மர்வால்டு (சுவிட்ஸர்லாந்து) என்னும் இடத்தில் நடந்த சர்வதேச சோஷலிஸ்டு மகாநாட்டில் இந்த இயக்கம் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் முறைப்படுத்தப்பட்டது. இதனுல் ஸிம்மர்வால்டு இயக்கம் என்று பெயர் பெற்றது.

ஸிம்மர்வால்டு மகாநாடு, 1915ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5முதல் 8ந் தேதி வரை நடந்தது. பன்னிரண்டு ஐரோப்பிய நாடு

[1] அதே நூல், பக்கங்கள் 33-34.

களின் (ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, ருஷ்யா, போலந்து, லாட்வியா, பல்கேரியா, ருமேனியா, சுவிட்ஸர்லாந்து, ஹாலந்து, நார்வே, சுவீடன்) முப்பத்தேழு பிரதிநிதிகளும் ஒரு பார்வையாளரும் மகாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.

அரசியல் நோக்கில் மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஒருமித்த கொள்கை கொண்டிருக்கவில்லை. ஏழு நாடுகளைச் சேர்ந்த எட்டு பிரதிநிதிகள் மட்டுமே புரட்சிகர சர்வதேசிய நிலையை ஒத்திசைந்த முறையில் கடைப்பிடித்தார்கள். மகாநாட்டில் இந்தப் பிரதிநிதிகள் ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழுவாக ஒன்று சேர்ந்தார்கள். அது கொள்கைவாத அடிப்படையில் உருவாயிற்று. நகல் தீர்மானங்களையும் அறிக்கைகளையும் சுதந்திரமாகப் பிரேரித்தது. பின்பு அது ஸ்தாபன வடிவமும் பெற்றது. லெனினது தலைமையில் தனது கமிட்டியைத் தேர்ந்தெடுத்தது. இந்தக் கமிட்டியில் ஸினோவியெவ் (ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மத்தியக் கமிட்டியின் சார்பில்), ராதெக் (போலந்து, லித்துவேனிய முடியரசின் சமூக-ஜனநாயகக் கட்சியினது பிரதேச நிர்வாகக் கமிட்டியிலிருந்து) இருவரும் உறுப்பினர் ஆனார்கள். போல்ஷிவிக்குகள், போலந்து ரஸ்லாமவியர்கள்,[1] லாட்விய சமூக-ஜனநாயகக் கட்சியினர், சுவீடன், நார்வே, சுவிட்ஸர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சமூக-ஜனநாயகக் கட்சிகளின் இடதுசாரியினர் ஆகியோரின் பிரதிநிதிகள் ஸிம்மர்வால்டு இடதுசாரியில் ஒன்று சேர்ந்தார்கள். ஹாலந்து, செர்பியா, பிரான்சு, பல்கேரியா, ஆஸ்திரியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் இடதுசாரி சோஷலிஸ்டுகள் பின்னர் அதில் சேர்ந்து கொண்டார்கள். புரட்சிகர சர்வதேசியவாதிகள் ஸிம்மர்வால்டு இடதுசாரிக் குழுவாக ஒன்றிணைந்தது ஸிம்மர்வால்டு மகாநாட்டின் முக்கியச் சாதனை என்று லெனின் கருதினர்.

எஞ்சிய 29 பிரதிநிதிகள், மகாநாட்டின் வலதுசாரி, அல்லது ஸிம்மர்வால்டு பெரும்பான்மையாக அமைந்தார்கள். இடைநிலைப் போக்கைக் கடைப்பிடித்த காவுத்ஸ்கியர்கள் இந்தப் பெரும்பான்மையில் ஆதிக்கம் வகித்தார்கள். புரட்சிச் செயல்தந்திரத்துக்கும் சீர்திருத்தவாதச் செயல்தந்திரத்துக்கும் இடையே ஊசலாடிய சாத்துவிகவாதிகளும் ஒத்திசைவு அற்ற சில சர்வதேசியவாதிகளும் ஸிம்மர்வால்டு வலதுசாரியில் சேர்ந்தார்கள்.

---

[1] போலந்து சமூக-ஜனநாயகக் கட்சியினர்.—(மொ-ர்.)

ஏகாதிபத்தியத்தையும் யுத்தத்தையும் எதிர்த்து வெற்றிகரமாகப் போராடுவதற்கு சோஷல்-ஷோவினிஸத்துடன் தொடர்பை முற்றாக அறுத்துக் கொள்வது அவசியம் என்பதைப் புரிந்து கொள்ளாமை அல்லது அவ்வாறு அறுத்துக் கொள்ள விரும்பாமை அவர்களுடைய பொதுப் பண்பாக இருந்தது.

பாட்டாளி வர்க்கம் சமாதானத்திற்கு ஆதரவாகச் செயல்படுவது பற்றிய பிரச்சினை ஸிம்மர்வால்டு மகாநாட்டின் ஆலோசனைக்குரிய முக்கிய விஷயமாக இருந்தது. சமூகத்தை சோஷலிஸ முறையில் ஒழுங்கமைக்கும் நோக்கத்துடன் அரசியல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக முதலாளித்துவ அரசாங்கங்களை எதிர்த்துப் புரட்சிப் போராட்டம் நடத்துமாறு தொழிலாளி வெகுஜனங்களை வெளிப்படையாக அறைகூவி அழைத்துப் போராட்டத்துக்கு இட்டுச் சென்றால் மட்டுமே ஏகாதிபத்திய யுத்தத்துக்கு முடிவு கட்டுவது சாத்தியம் ஆகும் என்று ஸிம்மர்வால்டு இடதுசாரியினர் தம் தஸ்தாவேஜுகளில் காட்டினார்கள். காவுத்ஸ்கியர்களும் அவர்களுடைய ஆதரவாளர்களும் இதற்கு எதிரான கருத்தை வலியுறுத்தினார்கள். புரட்சிக்கு ஏற்ற நேரம் இன்னும் வரவில்லை என்றும், எனவே புரட்சிக் கோஷங்களைப் பிரகடனம் செய்வதும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் திண்ணமான செயல்தந்திரத்தைத் திட்டப்படுத்துவதும் தருணத்துக்கு முந்திய நடவடிக்கைகள் ஆகும் என்றும் அவர்கள் சொன்னார்கள். மகாநாடு பொதுவான சமாதான வேண்டுகோள் விடுப்பதுடன் நின்று கொள்ள வேண்டும் என்றும் பழைய அகிலத்துக்கு எதிரான புதிய ஸ்தாபனத்தை உருவாக்குவதில் அது ஈடுபடவே கூடாது என்றும் அவர்கள் கருதினார்கள்.

லெனின் விவாதங்களில் உரைகள் ஆற்றினார். தற்காலத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்வதிலிருந்து தொழிலாளர்களின் கவனத்தை சாத்துவிகவாதச் சொற்களின் உதவியால் வேறு புறம் திருப்பக் காவுத்ஸ்கியர்கள் செய்த முயற்சிகளை அவர் தொடர்ந்து கடுமையாக விளாசினார். உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் நிலைமைகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் புறம்பாக நியாயமான சமாதானம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்று அவர் காட்டினார். உலக யுத்தம் ஐரோப்பாவில் புரட்சி நிலைமையை எற்படுத்தி இருக்கிறது. எனவே, ''வெகுஜனங்களுக்குப் புரட்சியின் இன்றியமையாமையை விளக்கி விவரிப்பதும் அதற்கு அவர்களை அறை

கூவி அழைப்பதும், ஏற்ற ஸ்தாபனங்களை நிறுவுவதும் வன்முறைப் போராட்டத்தின் பல்வேறு முறைகள் பற்றியும் அதன் 'உத்தியைப்' பற்றியும் மிக மிகத் திட்டவட்டமாகப் பேசுவதற்கு அஞ்சாதிருப்பதும்'' மகாநாட்டின் கட்டாயமான கடமை ஆகும் என்று அவர் வலியுறுத்தினார்.[1]

இடதுசாரியினர் பிரேரித்த கோட்பாட்டு ரீதியான நகல் தீர்மானத்தை ஸிம்மர்வால்டு மகாநாடு பெரும்பான்மை வாக்குக்களால் (12க்கு எதிராக 19) நிராகரித்தது. போராட்டத்தின் பணிகளையும் முறைகளையும் திட்டவட்டமாக வரையறுக்காத அறிக்கையை அது ஆதரித்தது. யுத்தத்துக்குப் பலியானவர்களுடன் ஒருமைப்பாடு தெரிவிக்கும் அறிக்கையையும் மகாநாடு அங்கீகரித்தது. அரசாங்க தூமாவின் போல்ஷிவிக் பிரதிநிதிகளின் உதாரணத்தையும் லீப்னெஹ்த், சமாதானத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராடும் பிற புரட்சியாளர்கள் ஆகியோரின் உதாரணத்தையும் பின்பற்றும்படி அறிக்கையில் அது சோஷலிஸ்டுகளுக்கு வேண்டுகோள் விடுத்தது. மகாநாடு தலைமை உறுப்பை—சர்வதேச சோஷலிஸ்டுக் கமிஷனை—தேர்ந்தெடுத்தது. ர. கிரிம், ஷ. நேன், ஓ. மார்கரி, அ. பலபானவா ஆகியோர் இதன் உறுப்பினர் ஆயினர்.

சர்வதேச சமூக-ஜனநாயகக் கட்சிகளின் இடதுசாரியினருக்கு ஸிம்மர்வால்டு மகாநாட்டின் முடிவுகள் எந்த வகையில் முக்கியமானவை என்பதை மதிப்பிட்டு லெனின் பின்வருமாறு எழுதினார்: மகாநாடு, ''மூன்றாவது அகிலத்துக்கு முதல் அடிவைப்பு; சந்தர்ப்பவாதத்தை விட்டுப் பிரிவதற்குத் தயக்கமுள்ள, ஒத்திசைவற்ற அடிவைப்பு. 'நோய் மீண்டும் தோன்றுவது' சாத்தியமே.''[2]

ஸிம்மர்வால்டு மகாநாட்டினால் ஏற்கப்பட்ட அறிக்கை உலக யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தம் என்று தெளிவாகக் குறிப்பிட்டது. இந்த யுத்தத்தில் ''தாய்நாட்டின் தற்காப்பு'' என்பது பூர்ஷ்வாப் பொய் என்று அது பறைசாற்றியது. புரட்சிப் போராட்டம் இல்லாத சமாதானம் பொருளற்ற பொய்யான சொற்றொடர் என்றும் போரின் பயங்கரங்களிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி சோஷலிஸத்துக்கான புரட்சிப் போராட்டத்திலேயே அடங்கி

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 390.

[2] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 43, பக்கம் 489.

இருக்கிறது என்றும் பொருள்படும் கருத்து, ஸிம்மர்வால்டு இடது சாரியினரின் முயற்சியால் அறிக்கையில் சேர்க்கப்பட்டது.

இரண்டாவது அகிலத்தின் ஷ்துத்கார்த், கோப்பன்ஹேகன், பாஸேல் ஆகிய காங்கிரஸ்களின் முடிவுகளிலிருந்து பெறப்பட்ட பொறுப்புக்களைப் பெரும்பாலான சோஷலிஸ்டுக் கட்சிகள் மிதித்துத் துவைத்துவிட்டன என்றும் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவும் தன் கடமையை நிறைவேற்றவில்லை என்றும் அறிக்கை கூறியது. ஆனால் இந்த நிகழ்ச்சியின் காரணங்களை அறிக்கை விளக்கவில்லை. இது தற்செயல் நிகழ்ச்சி என்றும் தனி நபர்களின் வீழ்ச்சி என்றும் எண்ண அது இடம் கொடுத்தது. இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் ''தாய்நாட்டின் தற்காப்பு'' விஷயத்தில் பூர்ஷ்வாக்கள் கூறும் பொய்யையே திருப்பிச் சொல்லுகிறார்கள் என்பதை அறிக்கை குறிப்பிடவில்லை.

ஸிம்மர்வால்டு அறிக்கையின் தயக்கத்தையும் ஒத்திசைவின்மையையும் லெனின் தாக்கி விமர்சித்தார். ஆயினும் சந்தர்ப்பவாதத்திலிருந்து கொள்கைவாத நோக்கிலும் நடைமுறையிலும் தொடர்பைத் துணித்துக் கொள்வதற்கான முன் அடிவைப்பாக விளங்கும் தஸ்தாவேஜு என்ற முறையில் அதில் கையெழுத்து இடுவது அவசியம் என்று அவர் கருதினார்.

ஸிம்மர்வால்டு மகாநாடு, ஸிம்மர்வால்டு சங்கத்துக்கு அடிகோலியது. சோஷல்-ஷோவினிஸ்டுக்களுக்கு எதிராகப் புரட்சிகர சர்வதேசியவாதிகளும் ஊசலாடுபவர்களும் ஒரு சில காவுத்ஸ்கிய நபர்களும் சேர்ந்த அரசியல் கூட்டணி இந்தச் சங்கம். ஏகாதிபத்திய யுத்தத்தின் எல்லா எதிராளிகளையும் ஒற்றுமைப்படுத்த இந்தச் சமரசம் உதவியது. அதோடு, சர்வதேசியவாதிகளின் சக்திகளை மேற்கொண்டு திரட்டவும் இது உதவியாய் இருந்தது. சோஷல்-ஷோவினிஸ்டுக்களுடன் தொடர்பை முறித்துக்கொள்வது என்ற மிக முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சினையை ஸிம்மர்வால்டு மகாநாடு தன் தஸ்தாவேஜுகளில் எழுப்பக்கூட இல்லை. ஆயினும், சமூக-ஜனநாயகக் கட்சிகளின் அதிகாரபூர்வமான தலைமையின் தீர்மானங்களைப் பொருட்படுத்தாமல் யுத்தத்துக்கு எதிராக சர்வதேச சோஷலிஸ்டு மகாநாடு கூட்டப்பட்டதே எல்லா நாடுகளையும் சேர்ந்த சோஷல்-ஷோவினிஸ்டுக்களுக்குக் கொடுக்கப்பட்ட பெருத்த அடியாக விளங்கியது. ஸிம்மர்வால்டு உணர்வில் செய்யப்பட்ட வேலையின் விளைவாகப் புரட்சிகரத் தொழிலாளர்கள் சந்தர்ப்பவாதத் தலைவர்களிடமிருந்து பிரிந்தார்கள். பாட்டாளி

வர்க்கம் தனது நாட்டு தேசிய பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து பிரிந்ததையும் புரட்சியின் மூலம் முதலாளித்துவத்தை அகற்றுவதற்காகத் தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசிய ஒற்றுமை மீண்டும் ஏற்படுத்தப்பட்டதையும் இது குறித்தது.

ஏகாதிபத்திய யுத்தத்துக்கு உழைப்பாளி வெகுஜனங்களின் எதிர்ப்பு அதுவரை கணிசமான அளவு புரிந்து கொள்ளப்படாமல் இருந்தது. ஸிம்மர்வால்டு மகாநாடு இந்த எதிர்ப்பை முதன்முதலில் முறையான வடிவில் வெளியிட்டது. அதோடு கூட யுத்தத்தையும் சமாதானத்தையும் பற்றிய மிக உடனடியான முக்கியப் பிரச்சினைகளை ஆராய்ந்ததன் வாயிலாக அது சிந்தனைக்கு நிறைய விஷயங்களை அளித்தது. இராணுவ அரசாங்கங்களால் நசுக்கப்பட்டு, நாட்டுவெறிப் பிரசாரத்தால் காதுகள் செவிடாக்கப்பட்டிருந்த தொழிலாளர்களின் வர்க்க உணர்வை அது தட்டி எழுப்பியது.

ஸிம்மர்வால்டு மகாநாட்டின் வேண்டுகோள், ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் தென் ஆப்பிரிக்காவையும் சேர்ந்த புரட்சி மனப்பான்மை கொண்ட தொழிலாளரால் ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டது. ஃபஸ்ஸானோ நகரின் சோஷலிஸ்டுப் பிரிவுச் செயலாளராக இருந்தவரும் பிற்காலத்தில் பிரபல இத்தாலியக் கம்யூனிஸ்டாக விளங்கியவருமான த. ஜெர்மானெத்தோ, ஸிம்மர்வால்டு அறிக்கையைப் படித்தபோது தமக்கு ஏற்பட்ட மட்டிலா மகிழ்ச்சியைப் பின்வருமாறு விவரித்தார்: ''ஆக, வேலை நடக்கிறது என்று தெரிகிறது! தொடர்புகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. தலைவர்களின் துரோகம் ஒருமைப்பாட்டு உணர்வை மாய்க்க முடியவில்லை! நான் பெரு மகிழ்வு அடைந்தேன்!''[1] கொதொவீலியா, கியோல்தி ஆகியோரின் தலைமையில் இயங்கிய புரட்சிகர மார்க்சியக் குழுவின் உதவியால் ஸிம்மர்வால்டு அறிக்கை ஆர்ஜெண்டீனாவின் பாட்டாளிகளுக்குத் தெரியவந்தது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஸிம்மர்வால்டு அறிக்கையைச் செயல் புரிவதற்கான அறைகூவலாகப் புரிந்து கொண்டார்கள். ''ஸிம்மர்வால்டு'' என்ற சொல்லே அவர்களுக்குப் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் மீண்டும் உயிர்ப்பு அடைந்ததன் சின்னம் ஆகி விட்டது.

---

[1] ஜி.ஜெர்மானெத்தோ, Le Memorie di un Barbiere, Roma, 1949, பக்கங்கள் 84-85.

போல்ஷிவிக்குகளுடையவும் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளுடையவும் முயற்சியால், ஸிம்மர்வால்டு இடதுசாரியினரின் தஸ்தாவேஜுகளும் ஸிம்மர்வால்டு அறிக்கையோடு கூடவே பல்வேறு நாடுகளில் பரவின. இந்த தஸ்தாவேஜுகள் ருஷ்ய, ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கில, இத்தாலிய, போலிஷ், லாட்விய மொழிகளில் அச்சிடப்பட்டிருந்தன. ஸிம்மர்வால்டு இடதுசாரியினரின் நகல் தீர்மானங்களும் அறிக்கையும் அடங்கிய „Internationale Flugblätter" என்னும் பிரசுரம் 1915 நவம்பரில் வெளியாயிற்று. ''என்ன செய்வது, எந்தத் திக்கில் செல்வது என்ற கேள்விக்குத் தெளிவான, சரியான, முழுமையான பதிலை வைத்திருக்கும் எல்லா நாடுகளையும் சேர்ந்த இடதுசாரி சமூகஜனநாயகவாதிகளின் மையக் குழுவினுடைய முதல் அறிக்கை'' என்று இதை மதிப்பிட்டார் லெனின்.[1]

காவுத்ஸ்கியின் „Die Neue Zeit" பத்திரிகைக்கு எதிர்நிறையாக „Vorbote" என்னும் தங்கள் சர்வதேச சித்தாந்தப் பத்திரிகையை வெளியிடத் தொடங்கியதன் மூலம் ஸிம்மர்வால்டு இடதுசாரியினர் இன்னும் பெருத்த வெற்றி அடைந்தார்கள். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த சர்வதேசியவாதிகள், பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போராட்டத்தின் சித்தாந்தத்தையும் செயல்தந்திரத்தையும் பற்றிய மிக மிக உடனடியான பிரச்சினைகளை இந்தப் பத்திரிகையில் சுதந்திரமாக விவாதித்தார்கள். ஸிம்மர்வால்டு இடதுசாரியினரின் கொள்கைவாத-அரசியல் செயல்திட்டத்தைப் பிரசாரம் செய்வதிலும் சோஷல்-ஷோவினிஸ்டுகள், அவர்களுக்குக் காப்பு அளித்த இடைநிலைவாதிகள் ஆகியோரின் சித்தாந்தக் கொள்கைமாறித்தனத்தையும் துரோகச் செயல்தந்திரத்தையும் அம்பலப்படுத்துவதிலும் இந்தப் பத்திரிகை பெரும் பங்கு ஆற்றியது.

1916ம் ஆண்டு இளவேனில் காலம் தொடங்கும் தறுவாயில் ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளில் வர்க்க முரண்பாடுகள் பெரிதும் கூர்மை அடைந்தன. வெகுஜனப் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சியில் திருப்பம் ஏற்பட்டது. போர்முனைகளில் பெருவாரியான உயிர்ச் சேதம், பஞ்சம், வறுமை, விலைவாசி உயர்வு முதலியவற்றால் தொழிலாளர்களிடையே மட்டுமின்றிக் குட்டி பூர்ஷ்வாக்களிடையேயும் யுத்தத்தின்பால் வெகுஜன அதிருப்தி தோன்றியது.

---

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 211.

ஆத்திரம் சேனையிலும் புகுந்துவிட்டது. பகை வல்லரசுகளின் படை வீரர்களுக்கிடையே சோதர உறவாடல் நிகழ்ச்சிகள் எண்ணிக்கையில் அதிகமாயின. இத்தகைய சூழ்நிலையில், கிந்தால் (சுவிட்ஸர்லாந்து) என்னும் இடத்தில் இரண்டாவது ஸிம்மர்வால்டு மகாநாடு, 1916ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 முதல் 30ந் தேதிவரை நடந்தது. ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி, ருஷ்யா, போலந்து, செர்பியா, சுவிட்ஸர்லாந்து, போர்ச்சுகல் ஆகிய எட்டு நாடுகளின் நாற்பத்தொரு பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

கிந்தாலில் ஸிம்மர்வால்டு இடதுசாரி ஸிம்மர்வால்டில் இருந்ததைக் காட்டிலும் அதிக எண்ணிக்கை கொண்டிருந்தது. பத்து பிரதிநிதிகள் அதில் இருந்தார்கள். சில பிரச்சினைகளில் இன்னும் பன்னிரண்டு பிரதிநிதிகள் அதை ஆதரித்தார்கள். ஸிம்மர்வால்டு இடதுசாரியினர் இப்போதும் சிறுபான்மையினராகவே இருந்தாலும் அவர்களுடைய கொள்கைவாதச் செல்வாக்கு அதிகரித்தது. லெனினது தலைமையில் அவர்கள் ஒழுங்கமைந்த முறையில் ஒற்றுமையாகச் செயல்பட்டார்கள். ஸிம்மர்வால்டு வலதுசாரியில் (8 நாடுகளைச் சேர்ந்த) 31 பிரதிநிதிகள் இருந்தார்கள். ஸிம்மர்வால்டில் போலவே இங்கும் வெளிப்படையான இடைநிலைவாதிகளிலிருந்து ஒத்திசைவு அற்ற சர்வதேசியவாதிகள் வரை மிகப் பல தரப்பட்ட ஆட்கள் இதில் இருந்தார்கள். எனினும் இந்தத் தடவை, லெனின் குறிப்பிட்டது போல, ''...ஸிம்மர்வால்டு வலதுசாரி தனது கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் அளவுக்குப் பெரும்பான்மை கொண்டிருக்கவில்லை.''[1]

சமாதானத்துக்கான பல்வேறு செயல்திட்டங்கள்பால் பாட்டாளி வர்க்கம் கடைப்பிடிக்கவேண்டிய போக்கு பற்றிய பிரச்சினை விவாதிக்கப்பட்ட போது, சோஷலிஸ-சாத்துவிகவாதம், வெகுஜனங்களின் கவனத்தைப் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்திலிருந்து வேறு புறம் திருப்புவதற்காக பூர்ஷ்வாக்கள் மேற்கொள்ளும் ஏமாற்று வித்தையின் ஒரு வடிவமே என்று கூறி அதை நிந்திக்கும் அனேக வரையறுப்புக்களைத் தீர்மானங்களில் புகுத்துவது, பெரும்பான்மையினரான இடைநிலைவாதிகள் எதிர்த்த போதிலும் ஸிம்மர்வால்டு இடதுசாரியினருக்குச் சாத்தியம் ஆயிற்று.

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 23, பக்கங்கள் 230-31.

சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவைக் கூட்டுவது பற்றி ஸிம்மர்வால்டினரின் போக்கு விவாதிக்கப்பட்ட போது கொள்கை வாதப் போராட்டம் மிக மிகக் கூர்மை அடைந்தது. அடிப்படையான கோட்பாட்டுப் பிரச்சினே எழுந்தது. தொழிலாளர்களே எதற்கு அழைப்பது, கொள்கைநோக்கில் திவாலாகிவிட்ட பழைய அகிலத்தை மீண்டும் பிழைக்க வைப்பதற்கா, அல்லது, புதிய மூன்ருவது அகிலத்தை அமைப்பதற்கா என்பது அந்தப் பிரச்சினே. காவுத்ஸ்கியர்களின் பெரும்பான்மை சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவுடன் தொடர்பைத் துணித்துக்கொள்வதை இறுதி எச்சரிக்கை விடுக்கும் தோரணேயில் எதிர்த்தது. முடிவாக, சமரசத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது, சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் சோஷல்-ஷோவினிஸக் கொள்கையைச் சடங்கு முறையில் நிந்தித்தது. ஆனுல், இரண்டாவது அகிலத்தின் தலேவர்கள் பாட்டாளி வர்க்கக் குறிக்கோளுக்கு இழைத்த துரோகத்திலிருந்து பெறப்பட்ட நடைமுறை முடிவுகளே அது குறிக்கவில்லே. ''சீரழிவுக்கும் படுகொலேக்கும் உள்ளாக்கப்படும் மக்களுக்கு'' என்ற தலேப்பில் ஓர் அறிக்கையையும் மகாநாடு ஏற்றுக்கொண்டது. இதில் சோஷல்-ஷோவினிஸம் கடுமையாக நிந்திக்கப்பட்டது.

கிந்தால் மகாநாட்டின் விளேவுகளே மதிப்பிட்டு லெனின் பின்வருமாறு எழுதினுர்:

''விளேவு {முன்னே சிறு அடிவைப்பு மொத்தத்தில் இருந்த இடத்திலேயே அடிவைப்பு ஊசலாட்டம்.''[1]

வெகுஜனங்களின் வளர்ந்துவந்த புரட்சிகரமான யுத்த எதிர்ப்பு இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாக ஸிம்மர்வால்டு வலது சாரியினர் கிந்தாலில் இடதுசாரியினருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. ஆனுல், சோஷல்-ஷோவினிஸத்தையும் சாத்துவிகவாதத்தையும் நிந்திக்கும் தீர்மானங்களில் கையெழுத்து இட்ட பின்பும் ஸிம்மர்வால்டு இடதுசாரியினர் தங்கள் சோஷலிஸ-சாத்துவிகவாதக் கருத்துக்களே உண்மையில் கைவிடவில்லே.

[1] மை. ஆ.கூ., 2/1/4050.

சோஷல்-ஷோவினிஸ்டுகளுடன் சமரசம் செய்து கொள்ளும் வழிகளேயோ, அவர்கள் அடைக்கவே இல்லே. ஸிம்மர்வால்டு வலது சாரியினர் மூன்ருவது அகிலம் அமைக்கும் கருத்தைத் திட்டவட்டமாக நிராகரித்தார்கள். சர்வதேச சோஷலிஸ்டு பியூரோ கூடியதுமே சர்வதேச சோஷலிஸ்டுக் கமிட்டி கலேக்கப்பட வேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து பல்லவி பாடினுர்கள். சோஷல்-ஷோவினிஸ்டுக்களுடன் கூட்டு சேர்வதற்காக, புரட்சிகர சர்வதேசியவாதிகளுடன் தங்கள் கூட்டணியை விட்டுவிடத் தயாராய் இருப்பதாக அவர்கள் கூறினுர்கள். இடைநிலேவாதிகள் தங்கள் விருப்பத்தை வலுக்கட்டாயமாகச் சுமத்தும் நோக்கத்துடன் மேலும் மேலும் அடிக்கடி, பண்பற்ற முறையில் அடாபிடித்தனம் செய்யலானுர்கள். மகாநாடு இரண்டாவது அகிலத்துடன் தொடர்பைத் துணித்துக் கொள்வதை ஆதரித்தால் ஸிம்மர்வால்டு சங்கத்தைத் தகர்த்துவிடுவதாக அவர்கள் அச்சுறுத்திஞர்கள்.

ஸிம்மர்வால்டு சங்கத்தில் மேற்கொண்டு இருப்பது அவசியந்தாஞ என்ற கேள்வி கிந்தாலிலேயே ஸிம்மர்வால்டு இடது சாரியினர் முன் எழுந்தது. காவுத்ஸ்கியர்களுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் பொருட்டும், இடைநிலேவாதப் புதை சேற்றிலிருந்து வெளியேறிப் பாட்டாளி வர்க்கக் கொள்கையை மேற்கொள்ள ஊசலாட்டக்காரர்களுக்கு உதவும் பொருட்டும் தற்போதைக்கு இந்தச் சங்கத்தில் இருப்பது என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

காவுத்ஸ்கியர்களின் காரணமாக ஸிம்மர்வால்டு சங்கம் மேலும் மேலும் முட்டுச்சந்தின் உள்ளே சென்றதன் காரணங்களேப் பகுத்தாய்ந்து லெனின் 1916, செப்டம்பரில் பின்வருமாறு எழுதினுர்: ''சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி இணேயாத ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் வெற்றுச் சொல், அல்லது ஏமாற்றுதான். ஸிம்மர்வால்டு, கிந்தால் மகாநாடுகளின் முக்கியமான குறைபாடுகளில் ஒன்று, மூன்ருவது அகிலத்தின் இந்த முளேக்கருக்கள் தோல்வி அடைவதற்கான சாத்தியக் கூற்றின் அடிப்படைக் காரணங்களில் ஒன்று, சந்தர்ப்பவாதத்துடன் போராடும் பிரச்சினே வெளிப்படையாக எழுப்பக்கூடப் படாததுதான். சந்தர்ப்பவாதிகளுடன் தொடர்பைத் துணித்துக் கொள்வது இன்றியமையாதது என்ற

அர்த்தத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் பற்றியோ, பேசவே வேண்டாம்.''[1]

ஏகாதிபத்தியப் போரிலிருந்து ஏகாதிபத்திய சமாதானத்துக்குத் திருப்பம் உலக அரசியலில் 1916ம் ஆண்டு முடிவில் ஏற்பட்டது. எதார்த்த நிலைமைகளும் புரட்சி மூளுமோ என்ற அச்சமும் நீடித்த யுத்தத்தை நிறுத்துவதற்கான வழிகளைத் தேடும்படி ஏகாதிபத்தியவாதிகளை நிர்ப்பந்தித்தன. இவ்வாறு, சாத்துவிகவாதப் பிரசாரத்துக்கு ஒரு வகையான புறநிலை ஆதாரம் கிடைத்துவிட்டது. இதன் அடிப்படையில் சோஷல்-ஷோவினிஸ்டுக்களுக்கும் ஸிம்மர்வால்டு வலதுசாரியினருக்கும் இடையே அரசியல் சமரசம் ஏற்பட்டது.

சோஷல்-ஷோவினிஸ்டுக்களுடன் சோஷலிஸ-சாத்துவிகவாதம் என்ற பொதுச் செயல்திட்ட அடிப்படையில் சேர்ந்துகொண்ட ஸிம்மர்வால்டு வலதுசாரியினர், ஸிம்மர்வால்டிலும் கிந்தாலிலும் மிகுந்த ஆடம்பரமாகப் பிரகடனம் செய்யப்பட்ட கருத்துக்கு, ஏகாதிபத்திய யுத்தத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்துப் புரட்சிகரப் போராட்டம் நடத்தும் கருத்துக்குத் துரோகம் செய்தார்கள். ஸிம்மர்வால்டுப் பெரும்பான்மையினர் ஸிம்மர்வால்டு சங்கத்தை அரசியல் வீழ்ச்சிக்கு உள்ளாக்கினார்கள். அவர்கள் சோஷல்-ஷோவினிஸத்தையும் பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதத்தையும் மறைப்பதற்கான திரையாக ஸிம்மர்வால்டுக் கொடியை மாற்றிவிட்டார்கள்.

ருஷ்யாவில் நடந்த பிப்ரவரிமாத பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி, ஸிம்மர்வால்டு இடதுசாரியினருக்கும் வலதுசாரியினருக்கும் இடையே உருவான அகழை மேலும் ஆழமாக்கி விட்டது. ஏகாதிபத்தியப் போர் உள்நாட்டுப் போராக மாறத் தொடங்கி விட்டதை ருஷ்யாவில் நடந்த நிகழ்ச்சிகள் காட்டின. ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் மிகப் பெரிய புரட்சி ஆற்றலை வளர்த்தது. சட்டபூர்வமான நிலைமைகளில் வேலை செய்யும் வாய்ப்பு பெற்ற அதன் கட்சி, யுத்தத்தையும் சமாதானத்தையும் புரட்சியையும் பற்றிய பிரச்சினைகளில் தெளிவான, திட்டவட்டமான செயல் திட்டம் கொண்டிருந்த உலகின் ஒரே கட்சியாக விளங்கியது. எனவே, அது உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிச் சக்திகளின் ஈர்ப்பு மையம் ஆனது இயற்கையே. கம்யூனிஸ்டு அகிலத்திற்கு

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 23, பக்கம் 83.

நடைமுறை முன்னேற்பாடுகள் செய்யும் முயற்சியை அதுவே மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

புரட்சிகர சர்வதேசியவாதிகள் ஸிம்மர்வால்டு சங்கத்தில் மேலும் உறுப்பினராய் இருப்பது அனுமதிக்கத் தக்கதல்ல என்று லெனின் கருதினர். ''ஸிம்மர்வால்டுப் புதைசேற்றை மேலும் பொறுத்துக்கொண்டிருப்பது கூடாது. ஸிம்மர்வால்டுக் காவுத்ஸ்கியர்களின் காரணமாக பிளெகானவியர்களதும் ஷெய்டெமானியர்களதும் ஷோவினிஸ்டு அகிலத்துடன் அரைகுறைத் தொடர்பை இன்னும் வைத்துக் கொண்டிருப்பது கூடாது. இந்த அகிலத்துடன் தொடர்பைத் தாமதமின்றித் துணித்துக் கொள்ள வேண்டும். தகவல்கள் அறிவதற்காக மட்டுமே ஸிம்மர்வால்டில் இருக்க வேண்டும்'' என்று அவர் எழுதினர்.[1] **புதிய**, புரட்சிகரமான, பாட்டாளி வர்க்க அகிலத்தைத் தாமதம் இன்றி நிறுவும்படி அவர் அறைகூவி அழைத்தார்.

அனேகக் கட்சி உறுப்பினர்கள் ஸிம்மர்வால்டு மருட்சிகளில் சிக்குண்டு இருந்தார்கள். லெனினுடைய அறைகூவலை இவர்கள் உடனே புரிந்துகொள்ளவில்லை. ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் (போல்ஷிவிக்) கட்சியின் ஏப்ரல் (1917) மகாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர், ஸிம்மர்வால்டு சங்கத்தில் காவுத்ஸ்கியர்கள் பெரும்பான்மை பெற்றுவிட்டார்கள் என்பதை இன்னும் அறியாமல் இருந்தார்கள். ஸிம்மர்வால்டு இடதுசாரியினரின் செயல்தந்திரத்தை ஆதரித்துப் போராடும் நோக்கத்துடன் ஸிம்மர்வால்டு கூட்டணியில் தொடர்ந்து இருந்துவருவது என்று மகாநாடு தீர்மானித்தது. சர்வதேச சோஷலிஸ்டுக் கமிட்டியால் ஸ்டாக்ஹோம் நகரில் கூட்டப்பட்டிருந்த மூன்ருவது ஸிம்மர்வால்டு மகாநாட்டில் போல்ஷிவிக்குகள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யும் பொறுப்பு கட்சி மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. தகவல் அறியும் நோக்கத்துக்காக மட்டுமே ஸிம்மர்வால்டு கூட்டணியில் இருப்பது என்ற லெனினது யோசனை நிராகரிக்கப் பட்டது.[2]

---

[1] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 24, பக்கம் 82.

[2] ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் (போல்ஷிவிக்) கட்சியின் ஏழாவது (ஏப்ரல்) அகில ருஷ்ய மகாநாட்டின் நிகழ்ச்சி விவரங்கள். மாஸ்கோ, 1958, பக்கங்கள் 228-233, 253-255.

ஸிம்மர்வால்டு மருட்சிகளைக் கட்சியில் பரப்பினர் ஸினேவியெவ். இடைநிலைவாதிகளிடமிருந்து பிரிவது பற்றிய பிரச்சினையில் தயக்கம் காட்டிய இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளை மேற்கோள் காட்டி, ஸிம்மர்வால்டுடன் தொடர்பை அறுத்துக்கொள்ள வேண்டாம் என்றும் அதன் பெரும்பான்மையை மூன்ருவது அகிலத்தின் தரப்புக்குக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும் என்றும் அவர் யோசனை கூறினர். இந்தக் கருத்தை ஏப்ரல் மகாநாட்டிலும் அதற்குப் பின்னும் அவர் ஆதரித்துப் பரப்பினர். ''இப்போது ஸிம்மர்வால்டு அகிலத்தைக் கைப்பற்றினல் நன்ருய் இருக்குமே'' என்று 1917, ஜூனிலும் அவர் தொடர்ந்து வலியுறுத்தினர். இதற்கு லெனின் பின்வருமாறு பதில் அளித்தார்: ''என் கருத்துப்படி இது படு மோசமான சந்தர்ப்பவாதமும் தீமையும் நிறைந்த செயல்தந்திரம்.... நம்முடைய எல்லாக் கோட்பாடுகளையும் கைவிட்டு விடுவது, இடைநிலைக்கு எதிராக நாம் எழுதியவை, பேசியவை அனைத்தையும் மறந்துவிடுவது, நம்மையே குழப்பத்திற்கும் வெட்கக் கேட்டுக்கும் உள்ளாக்கிக் கொள்வது என்று இது அர்த்தப்படும்.''[1]

ஸிம்மர்வால்டு சங்கம் அறவே பயன் அற்றுப் போய்விட்டது என்றும், அதனுடன் தொடர்பைத் துணித்துக் கொள்ளாமையால் போல்ஷிவிக்குகள் மூன்ருவது அகிலத்தை விரைவில் அமைப்பதற்கான நடைமுறைச் செயல்கள் மேற்கொள்வதில் தங்களுக்கே சிக்கல்கள்தாம் ஏற்படுத்திக் கொள்கிருர்கள் என்றும் வி.இ. லெனின் மீண்டும் மீண்டும் அழுத்திக் கூறினர். ஏப்ரல் மகாநாட்டுக்குப் பின் லெனின் இந்தத் தவற்றைத் திருத்துவதற்கு விடாப்பிடியாக முயன்ருர். ''இடதுசாரியினர் **மட்டுமே** கொண்ட, **காவுத்ஸ்கியர்களுக்கு எதிராக மட்டுமே**''[2] புரட்சிகர அகிலத்தை நிறுவும் பொருட்டு சர்வதேசியவாதிகளின் அனைத்து நாட்டு மகாநாட்டை விரைவில் கூட்டும்படி மத்தியக் கமிட்டியிடமும் அதன் அயல்நாட்டுப் பிரதிநிதிக் குழுவிடமும் 1917 கோடையிலும் இலையுதிர் காலத்திலும் அவர் பல முறை கோரினர்.

ஆனல் மத்தியக் கமிட்டியில் ஸினேவியெவும் மத்தியக் கமிட்டியின் அயல்நாட்டுக் குழுவில் ராதெக்கும் லெனினது கோரிக்கை

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 43, பக்கம் 635.

[2] அதே நூல், பக்கம் 635.

நிறைவேற விடாமல் சூழ்ச்சி செய்தார்கள். இத்தகைய மகா நாடு தனது எண்ணிக்கைக் குறைவு காரணமாகப் படு தோல்வி அடையும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

இத்தகைய வாதங்களை மறுத்து லெனின் பின்வருமாறு எழுதினார்: ''பிரதிநிதிகளின் 'பெருத்த' எண்ணிக்கைக்காகக் 'காத்திருப்பதும்' இப்போது எண்ணிக்கை 'குறைவு' என்பதால் 'கூச்சப்படுவதும்' அளவிட முடியாத அசட்டுத்தனம் ஆகும். ஏனென்றால் இப்போது இத்தகைய மகாநாடு, பிரதிநிதிகளின் எண்ணிக்கை எவ்வளவாய் இருந்தாலும், கொள்கைவாதச் சக்தியாக விளங்கும். பின்போ, அதற்கு இருட்டடிப்பு செய்யப் படலாம்.''[1] கட்சியின் ஏழாவது (ஏப்ரல்) மகாநாடு, ஆறாவது காங்கிரஸ் ஆகியவற்றின் தீர்மானங்களும் போல்ஷிவிக்குகளின் புதிய செயல்திட்டநகலும் ''('Vorbote', 'Tribune', 'Arbeiterpolitik' முதலியவற்றுடன் சேர்ந்து) ஏகாதிபத்தியத்தின் பிரச்சினைகளுக்குத் தெளிவான பதில்களையும் சோஷல்-ஷோவினிஸ்டுக்களுக்கும் காவுத்ஸ்கியர்களுக்கும் எதிரான குற்றச்சாட்டையும் அகில உலகத்தின் முன்பும் வைப்பதற்குத் தேவையான போதிய கொள்கைவாத அடிப்படை ஆகும்''[2] என்று லெனின் அழுத்திக் கூறினார்.

லெனினுடைய அறிவுரைகள் அப்போது செயல்படுத்தப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. 1917, செப்டம்பர் 5 முதல் 12ந் தேதிவரை ஸ்டாக்ஹோமில் நடந்த மூன்றாவது ஸிம்மர்வால்டு மகாநாட்டில் போல்ஷிவிக் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். மகாநாட்டில் இடைநிலைவாதிகள் நிர்ணயகரமான பங்கு ஆற்றினார்கள். எனவே, லெனின் முன்கண்டது போலவே இந்த மகாநாடு உலகப் புரட்சி இயக்கத்துக்கு முற்றிலும் பயன் அற்றதாக முடிந்தது.

---

[1] **வி.இ லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 321.
[2] அதே நூல், பக்கம் 322.

கம்யூனிஸ்டு அகிலம் நிறுவப்படுதல்

உலகப் புரட்சி நெருக்கடி

1917ம் ஆண்டு நவம்பர் 7ந் தேதி (பழைய காலண்டாபடி அக்டோபர் 25ந் தேதி) ருஷ்யாவில் வெற்றிகரமான சோஷலிஸப் புரட்சி நடந்தேறியது. ஆயுதமேந்திய கிளர்ச்சியின் பயனாக பூர்ஷ்வா ஆட்சி கவிழ்க்கப்பட்டது. உலகின் ஆறில் ஒரு பாகத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைபெற்று விட்டது.

ஏகாதிபத்திய யுத்தம் நடக்கையில் முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளும் ஒரேயடியாகத் தீவிரம் அடைந்ததன் விளைவாக அக்டோபர்ப் புரட்சி நிகழ்ந்தது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிக்கு இது வித்திட்டது. மனிதகுல வரலாற்றில் புதிய சகாப்தத்தை—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மக்கள் இனங்கள் பரிணமிக்கும் சகாப்தத்தை —தோற்றுவித்தது. உலக சோஷலிஸப் புரட்சியின் முதல் செயலாக இது விளங்கியது: ''முதலாளித்துவமும் அதன் சுவடுகளும் அழிக்கப்பட்டதும் கம்யூனிஸ அமைப்பின் அடிப்படைகள் நிறுவப்பட்டதுமே தற்போது தொடங்கியுள்ள உலக வரலாற்றின் புதிய சகாப்தத்தின் உள்ளடக்கமாகும்'' என்று எழுதினார் லெனின்.[1]

சமூக உறவுகள் அசாதாரணமாகப் பல்வகைப்பட்டிருந்த நாட்டில் சோஷலிஸப் புரட்சி நடந்தேறியது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியாலும் நிலப்பிரபுத்துவத்தின் மீதமிச்சங்களாலும் தோற்றுவிக்கப்பட்ட முரண்பாடுகளின் குவிமுனையாக விளங்கியது ஜார் கால ருஷ்யா. முதலாளித்துவ உலக அமைப்பு அனைத்திலும் உடனடி முக்கியத்துவம் பெற்றிருந்த விவசாயிகள் பிரச்சினையும் நாட்டினங்களின் பிரச்சினையும் ஜார் கால ருஷ்யாவில் அசாதாரணத் தீவிரம் அடைந்திருந்தன.

---

[1] வி.இ. லெனின். *முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 392.*

மாபெரும் அக்டோபர்ப் புரட்சி உலகை சோஷலிஸ அமைப்பு, முதலாளித்துவ அமைப்பு என்னும் இரு அமைப்புக்களாகப் பிளந்தது. ஏகாதிபத்தியத்தின் எல்லா முரண்பாடுகளேயும் அது கூர்மைப் படுத்திற்று. பலாத்காரத்தையும் ஒடுக்குமுறையையும் ஆதாரமாகக் கொண்ட அமைப்புக்கு எதிராகப் போராடுவதற்கு உலகு அனைத்தின் உழைப்பாளிகளுக்கும் அது உத்வேகம் ஊட்டியது. முதலாளித்துவ முறையில் வளர்ச்சி பெற்றவை, பின்தங்கியவை ஆகிய இரு வகை நாடுகளிலும் புரட்சிப் போராட்டம் ஏற்றம் பெறுவதில் அக்டோபர்ப் புரட்சியின் வெற்றி மிகப் பெரிய செல்வாக்கு செலுத்தியது.

முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் புரட்சி இயக்கத்தின் முன்னணியில் சென்றது. ஒடுக்கப்பட்டவர்களும் சுரண்டப்பட்டவர்களுமான அனைவருடைய நலன்களேயும் அது வெளியிட்டது, சமாதானத்துக்காகவும் விடுதலைக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராடியது. கொள்ளேக்கார யுத்தம் முடிய வேண்டும் என்பது மட்டும் அல்ல, முதலாளித்துவ அமைப்பு முழுவதுமே ஒழிய வேண்டும் என்பதே விரிவான தொழிலாளி வெகுஜனங்கள் தம்மிச்சையாக அடைய விரும்பிய எதார்த்தமான குறிக்கோளாக இருந்தது.

மைய வல்லரசுகளால் பிரெஸ்த்-லித்தோவ்ஸ்கில் சோவியத் ருஷ்யாவுக்கு விதிக்கப்பட்ட கொள்ளேத்தன்மை கொண்ட சமாதான நிபந்தனைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு ஆஸ்திரிய-ஹங்கேரி, ஜெர்மனி ஆகியவற்றின் சுமார் இருபது லட்சம் தொழிலாளர்கள் 1918, ஜனவரியில் வேலே நிறுத்த அறிவிப்பு செய்தார்கள். சோவியத் அரசாங்கம் முன்வைத்துள்ள நிபந்தனைகளின்படி உடனே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட வேண்டும், முற்றுகை நிலே நீக்கப்பட வேண்டும், உணவுப்பண்டங்களின் சப்ளே சீர்படுத்தப்பட வேண்டும் என்று உழைப்பாளிகள் கோரினர்கள். இந்த நாடுகளின் அனேக தொழில் மையங்களில் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் அமைக்கப்பட்டன. ஆஸ்திரிய-ஹங்கேரியிலும் ஜெர்மனியிலும் ஜனவரி மாதம் நிகழ்ந்த நடவடிக்கைகள், வெகுஜனங்களின் புரட்சிப் பேராற்றலேக் காட்டின. ஆனல் இந்த ஆற்றல் சந்தர்ப்பவாதிகளால் முடக்கப்பட்டது. அவர்கள் வேலேநிறுத்தத்தைக் குலேத்துவிட்டார்கள்.

1918, ஜனவரி இறுதியில் ஃபின்லாந்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடித்துக் கிளம்பியது. சோவியத் ருஷ்யாவுக்குப் பிறகு

தொழிலாளர், விவசாயிகளின் சோஷலிஸக் குடியரசு தோன்றிய முதல் நாடாக விளங்கியது ஃபின்லாந்து. லெனின் கூறியது போல அந்த அரசில் "...சோவியத்துக்கள் இல்லே, ஆனுலும் ஆட்சி மீண்டும் புதிய, பாட்டாளி வர்க்க வகையானது."[1] ஃபின்லாந்தின் பூர்ஷ்வா அரசாங்கம் மக்களின் சீற்றத்துக்குத் தப்பி நாட்டின் வட பகுதிக்கு ஓடிவிட்டது. தொழில் வளம் மிக்க தென் பிரதேசங்களில் ஆட்சி அதிகாரம் தொழிலாளர்களின் கைகளுக்கு வந்துவிட்டது. ஜனவரி மாதம் 28ந் தேதி புரட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டது. இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளான மான்னர், ஸிரோலா, கூஸினென் ஆகியோரும் பிற சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர்களும் இதில் இடம் பெற்றனர். சமூக-ஜனநாயகக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் இவர்களைப் பின்பற்றினுர்கள். ஆங்காங்கு தொழிலாளர் நிறுவனங்களின் ஆட்சி மன்றங்களும் தொழிலாளர் கமிட்டிகளும் தொழிற்கூடத் தொழிலாளர் நிர்வாகங்களும் அமைக்கப்பட்டன. நடைமுறையில் இவை தொழிலாளர் ஆட்சியின் புரட்சிப் பணிகளை நிறைவேற்றின.

தொழிலாளர்கள், தர்ப்பாரிகள் (சொந்த நிலம் இல்லாத குத்தகை விவசாயிகள்) ஆகியோரின் விருப்பத்துக்கு இணங்கப் புரட்சி அரசாங்கம் அனேக ஆழ்ந்த ஜனநாயக மாற்றங்கள் செய்தது. தொழில் அதிபர்கள் எட்டு மணி நேர வேலைநாளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அது கட்டாயப்படுத்தியது. தர்ப்பாரிகள் பண்படுத்தி வந்த நிலங்களை ஈடு பெருமல் அவர்களுக்கு வழங்கியது. ஓடிப்போன முதலாளிகளின் தொழிலகங்களைத் தேசிய உடைமை ஆக்கிற்று. தொழில் நிலையங்களில் தொழிலாளர் கண்காணிப்பு முறையை ஏற்படுத்தியது. நீதிமன்ற உறுப்புக்களைச் சீர்திருத்தியது. ஃபின்லாந்து நிதிமனைகளைத் தன் கண்காணிப்பில் வைத்துக் கொண்டது. ஃபின்லாந்திய சோஷலிஸத் தொழிலாளர் குடியரசுக்கும் ருஷ்ய சோவியத் கூட்டு சோஷலிஸக் குடியரசுக்கும் இடையே நட்பையும் சகோதரத்துவத்தையும் பற்றிய உடன்படிக்கையில் அரசாங்கம் 1918, மார்ச்சு 1ந் தேதி கையெழுத்திட்டது. இவ்விரு சோஷலிஸக் குடியரசுகளுக்கும் இடையே நட்பு உறவுகள் இதில் முதன் முதலாக வரையறுக்கப்பட்டன. ஃபின்லாந்தில் தொழிலாளர் ஆட்சி 1918, மே மாதம் வரை நீடித்தது. ஏப்ரல் மாதம், கெய்ஸர் ஜெர்மனியின் படைகள்

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 27, பக்கம் 133.

ஃபின்லாந்தின் புரட்சி எதிரிகளுக்குத் துணையாக வந்தன. ஒன்றித்த முயற்சியால் அவை ஃபின்லாந்தில் உள்நாட்டுப் போரை மூட்டி, சோஷலிஸக் குடியரசை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தன.

தொழிலாளர்களின் ஒரு சில தனிப்பட்ட தோல்விகளால் மேற்கே புரட்சி இயக்கத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. புரட்சி ஆத்திரத்தைத் தோற்றுவித்த காரணங்கள் அகற்றப்படவில்லை. கொள்ளைக்கார யுத்தம் நீண்டுகொண்டு போயிற்று. ஏகாதிபத்தியத்தின் மிருகத்தனமான செயல்கள் மேலும் மேலும் வெளிப்பட்டன. எல்லோரிலும் அதிப்பயங்கொள்ளிகளும் ஒடுக்கப்பட்டவர்களுமான மக்கள் வகுப்பினரின் விழிகளை இவை திறந்து விட்டன. விளைவாக உழைப்பாளிகளின் மேலும் மேலும் புதிய திரள்கள் அரசியல் விழிப்படைந்தன, புரட்சிப் போராட்டத்துக்குத் தூண்டி எழுப்பப்பட்டன. "நமது பாதையில் எதிர்ப்படும் இடர்கள் எவ்வளவுதான் பெரியவை ஆனாலும் உலகு அனைத்தினதும் தொழிலாளி வர்க்கம் ருஷ்யப் புரட்சி தனது சொந்தக் காரியம் என்று உணர்கிறது. ஏகாதிபத்தியவாதிகளின் ஒரு குழுவுக்கு எதிராக மற்றொரு குழு நடத்தும் போருடன் கூடவே, ருஷ்யப் புரட்சியின் உதாரணத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளி வர்க்கம் தனது சொந்த பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகப் பிரகடனம் செய்யும் போரும் எங்கும் நடக்கிறது" என்று 1918, ஆகஸ்டில் கூறினார் லெனின்.[1]

1918, செப்டம்பர் மாதம், பல்கேரியச் சேனையில் ஆயுதந் தாங்கிய கிளர்ச்சி (விளாதாய் கிளர்ச்சி) மூண்டது. படையினர், முடியரசு வீழ்ந்து விட்டது என்று அறிவித்து, குடியரசைப் பிரகடனம் செய்தார்கள். ஆனால் படையினர் திரளின் தன்னிச்சையான கிளர்ச்சி வெற்றி வாகை சூடவில்லை. அயல் நாட்டுப் படைகளின் உதவியால் அரசாங்கம் கிளர்ச்சியைக் கொடுமையாக நசுக்கி விட்டது.

போர்முனைகளில் ஏற்பட்ட தோல்விகள், தரைப்படையிலும் கடற்படையிலும் கலகங்கள், உழைப்பாளி மக்களின் புரட்சி-ஜனநாயக இயக்கம், செக், ஸ்லோவாக், தெற்கு ஸ்லாவிய, போலந்து, மேற்கு உக்ரேனிய, ருமேனியப் பிரதேசங்களில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஏற்றம் ஆகியவற்றின் விளைவாக 1918ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஆஸ்திரிய-ஹங்கேரி முடியரசு தகர்ந்து சிதறலாயிற்று. அக்டோபர்—நவம்பரில் ஆஸ்திரிய-

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 85.

ஹங்கேரியில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி பிற்போக்கு ஹாப்ஸ்பர்க் வமிச ஆட்சியை ஒழித்தது. பாட்டாளி வர்க்கம் இந்தப் புரட்சியின் இயக்கு சக்தியாக இருந்தது. போராட்டத்தின் போது புரட்சிகர ஆட்சி அதிகாரத்தின் தொடக்க உறுப்புக் களாகத் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் பல நகரங்களில் உருவாயின. ஆயினும் சோஷலிஸ்டு சீர்திருத்தவாதி களின் தலைமையில் இயங்கிய பாட்டாளி வர்க்கத்தால் புரட்சியின் தலைமைப் பீடத்தைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற முடிய வில்லை. முடிவாக ஐரோப்பாவின் இந்தப் பகுதியில் அனேகப் புதிய பூர்ஷ்வா அரசுகள் உதயமாயின. அவையாவன: ஆஸ்திரியா, ஹங் கேரி, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, செர்பிய, ஹர்வாத், ஸ்லவேந்த்ஸ் முடியரசு (1929 முதல் யூகோஸ்லாவியா).

1918, நவம்பர் 3ந் தேதி, கீல் துறைமுகத்தில் கடற்படை மாலுமிகளின் கலகத்திலிருந்து ஜெர்மனியில் புரட்சி தொடங் கியது. தொழிலாளர், படையினர் பிரதிநிதிகளின் சோவியத்துக் கள் எல்லா இடங்களிலும் உருவாயின. நவம்பர் 9ந் தேதியன்று ஸ்பர்த்தாக் சங்கத்தினரும்[1] புரட்சிகரத் தலைவர்களும் விடுத்த அழைப்பிற்கு இணங்க, ஆயுதந் தாங்கிய தொழிலாளர்களும் படையினரும் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் மையமான பெர்லினை வசப்படுத்திக் கெய்ஸர் அரசாங்கத்தை வீழ்த்தி விட்டார்கள்.

ஒரளவு பாட்டாளி வர்க்கச் சாதனங்களாலும் முறைகளாலும் நடத்தப்பட்ட ஜெர்மானியப் புரட்சி, பூர்ஷ்வா-ஜனநாயக அரசாங்க மாற்றத்தின் வரம்புகளுக்கு வெளியே போகவில்லை. இரண்டாவது வில்ஹெல்மின் ஆட்சியைத் தான் அது அழித்ததே தவிர, பூர்ஷ்வா வர்க்க ஆட்சியை அல்ல. சோஷலிஸக் குடியரசின் பெயரால் கபடமாகச் செயலாற்றிய புதிய அரசாங்கம், வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளையும் இடைநிலைவாதிகளையும் கொண்டு அமைக்கப்பட்டது. வெகுஜனங்களின் அரசியல் உணர்வற்ற நம்பிக் கையை ஆதாரமாகக் கொண்டு பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுக் காக ஆட்சி நடத்துவதற்கு ''சோஷலிஸ'' என்ற பெயர்ப்பலகை அவர்களுக்குத் தடையாகவே இருக்கவில்லை.

யுத்தத்தின் முடிவும் (போர் நிறுத்த ஒப்பந்தம் நவம்பர் 11ந் தேதி கையெழுத்தாயிற்று) முடியரசு அகற்றப்பட்டதும் சோவி

---

[1] ''ஸ்பர்த்தாக் சங்கம்'' என்பது, ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் புரட்சிகர நிறுவனம்.

யத்துக்கள் உருவானதும் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டதும் சர்வஜன வாக்குரிமை ஏற்படுத்தப்பட்டதும், அரசியல் ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கைக்கு வந்து விட்டதாகவும் சோஷலிஸக் கட்டுமானத்துக்குத் தேவையான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு விட்டதாகவும் அர்த்தப்படுவதாக ஜெர்மனியின் பெரும்பாலான தொழிலாளர்களும் படையினரும் நம்பினுர்கள். ஆனுல் இது புரட்சி அனுபவம் போதாமையாலும் பூர்ஷ்வா-நாடாளு மன்ற மூட நம்பிக்கைகளாலும் நேர்ந்த ஆழ்ந்த மதி மயக்கம். சமூக-ஜனநாயகக் கட்சி, தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் சீர் திருத்தவாதித் தலைவர்கள் ஜெர்மன் தொழிலாளர்களிடம் இந்த மூட நம்பிக்கைகளைப் பல ஆண்டுகளாக வளர்த்துவந்தார்கள்.

புரட்சி இயக்கத்தில் பிளவு ஏற்படுத்தவும் புரட்சிக்கு முட்டுக் கட்டை போடவும் அதன் வளர்ச்சியை பூர்ஷ்வா-ஜனநாயக வரம்புகளுக்குள் குறுக்கவும் ஜெர்மன் சந்தர்ப்பவாதிகளுக்கு வாய்த்து விட்டது. சாராம்சத்தில் பூர்ஷ்வாத் தன்மை கொண்ட தேசிய அசெம்பிளியை விரைவில் கூட்டும் வியாஜத்தில் வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்கள் எல்லாப் பிற்போக்குச் சக்திகளையும் ஒன்று சேர்த்து இராணுவத் தலைவர்களுடன் கூட்டு சேர்ந்து தொழிலாளி வர்க்கத்தை வன்மையாகத் தாக்கினுர்கள். தொழி லாளிவர்க்கத்தின் புரட்சிகர முன்னணியை நசுக்கும் கொலைகாரப் பணியைத் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்ட வலதுசாரி ஜனநாயக வாதி நோஸ்கே என்பவன் பின்வருமாறு கூறினுன்: ''அப்படியே இருக்கட்டும். எவனுவது ஒருவன் கொலைகார வெறி நாய் ஆகத் தானே வேண்டும். நான் பொறுப்பு ஏற்க அஞ்சவில்லை!''[1] சமூக-ஜனநாயகத் தலைவர்களின் துரோகம், புரட்சியின் தொடக்கத்தில் புது வகைப் பாட்டாளி வர்க்கக் கட்சி இல்லாமை—இவையே ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் தோல்விக்கு மூல காரணங் கள்.

வெற்றி பெற்ற நாடுகளிலும் வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைந்தது. பிரான்சிலும் பிரிட்டனிலும் இத்தாலியிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் விறல் மிக்க வேலைநிறுத்த இயக் கம் விரிவாகத் தொடங்கியது. ஜப்பானில் ''அரிசிக் கலகங்கள்'' மூண்டன. ஒரு கோடிப் பெயருக்கு மேல் இவற்றில் கலந்து கொண்டார்கள். எட்டு மணி நேர வேலை நாள் அமுல்படுத்தப்

---

[1] **கு. நோஸ்கே,** Von Kiel bis Kapp. Berlin, 1920, S, 68.

பட வேண்டும், சம்பளங்களை உயர்த்த வேண்டும், தொழிற்சங்கங்களின் உரிமைகள் ஏற்கப்பட வேண்டும், ஜனநாயக சுதந்திரங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று தொழிலாளர்கள் எங்கும் கோரினர்கள். தங்கள் பொருளாதார, அரசியல் உரிமைகளுக்காகத் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டம் பல சந்தர்ப்பங்களில் யுத்தத்தால் சீரழிந்த விவசாயிகள் நிலத்துக்காக நடத்திய போராட்டத்துடன் சேர்ந்து கொண்டது. உழைப்பாளி மக்களின் ஒன்றித்த முயற்சிகளின் விளைவாக அனேக நாடுகளில் வாக்குரிமையை விரிவுபடுத்தவும் வேலைநாள் நேரத்தைக் குறைக்கவும் சம்பளங்களை உயர்த்தவும் இயன்றது.

''சோவியத் ருஷ்யாவைத் தொடாதே!'' என்ற கோஷத்துடன் **1919**ம் ஆண்டு பிரிட்டனில் தொழிலாளர்களின் விரிவான இயக்கம் தொடங்கியது. இந்த இயக்கம் உழைப்பாளிகளின் சர்வதேச ஒருமைப்பாட்டைத் துலக்கமாகப் பிரதிபலித்தது. ருஷ்யாவின் புரட்சி எதிரிகளுக்கு உதவுவதற்காகக் கருங்கடலுக்கு அனுப்பப்பட்ட பிரெஞ்சுக் கடற்படையின் மாலுமிகள் சோவியத் ருஷ்யாவின் தொழிலாளர்களுடன் சோதர ஒருமைப்பாட்டுக்குச் சிறந்த உதாரணத்தைக் காட்டினர்கள். பிரெஞ்சுக் கடற்படையினர் உழைப்பாளி மக்களுக்கு எதிரான ஆபாசப் போரில் கலந்து கொள்ள மறுத்து, ருஷ்யத் தொழிலாளர்களோடு சோதர உறவுடன் அளவளாவத் தொடங்கினர்கள். 1919 ஏப்ரலில் அவர்கள் போர்க்கப்பல்கள் மீது செங்கொடிகளைப் பறக்க விட்டார்கள், ஸெவாஸ்தோப்பல் நகரத் தொழிலாளர்களுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டு சோவியத் ஆட்சிக்கு ஆதரவாக கோஷங்களை முழக்கினர்கள். பிரெஞ்சு மாலுமிகளின் வீரச் செயல் பல்வேறு நாடுகளின் உழைப்பாளிகளால் விரிவாக வரவேற்கப்பட்டது. அதைப் பற்றி ஆழ்ந்த உணர்ச்சியுடன் பின்வருமாறு கூறினர் லெனின்: ''நமது கருங்கடலில் இருந்த மாலுமிகளின் பெயர்கள் பிரான்சு அனைத்திலும் ருஷ்யப் புரட்சியின் நினைவுடன் தொடர்பு கொண்டுள்ளன. இப்போது பிரான்சில் கடுங்காவல் தண்டனை அனுபவிப்பவர்கள், ருஷ்யத் தொழிலாளர்கள், விவசாயிகளின் கொலையாளிகளாக இருக்க விரும்பாமல் கருங்கடலில் கிளர்ச்சி நடத்தினர்கள் என்பதை பிரெஞ்சுத் தொழிலாளிகள் அறிவார்கள்.''[1]

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *31*, பக்கம் *400*.

காலனிகள், ஆதீன நாடுகள் ஆகியவற்றின் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கு தீவிரம் அடைந்தது விரிவாக நடந்த உலகப் புரட்சி இயக்கத்தின் முக்கியமான சிறப்பியல்பாக விளங்கியது. அக்டோபர்ப் புரட்சி ஏகாதிபத்தியத்தின் பின்புலங்களை மிகக் கடுமையாகத் தாக்கி, காலனி ஆட்சி அமைப்பின் நெருக்கடியைத் தொடங்கி வைத்தது.

லத்தீன் அமெரிக்காவில் இருந்த ஆதீன நாடுகளில் அன்னிய ஒடுக்குமுறைக்கும் உரிமை இன்மைக்கும் வறுமைக்கும் விலைவாசி உயர்வுக்கும் எதிரான போராட்டத்தில் தொழிலாளர்கள் மட்டும் இன்றி விவசாயிகளும் நகரக் குட்டி பூர்ஷ்வாக்களும் அறிவுஜீவிகளும் மாணவர்களும் கிளர்ந்து எழுந்தார்கள். ஆர்ஜெண்டீனா, பிரேசில், மெக்சிக்கோ, பெரு, உருகுவாய், சிலி ஆகிய நாடுகளின் உழைப்பாளிகள், நிலச் சீர்திருத்தங்கள், எட்டு மணி நேர வேலை நாள், சம்பள உயர்வு, முதுமைக்கால உபகாரச் சம்பளம், மாதர்கள், குழந்தைகளின் உழைப்புப் பாதுகாப்பு, தொழிற்சங்கங்களாகச் சேரும் சுதந்திரம், பல்கலைக் கழகச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றைக் கோரினார்கள்.

சீனாவிலும் (''மே, 4ந் தேதி இயக்கம்'') இந்தியாவிலும் (அமிர்தசரஸ் நிகழ்ச்சிகள்) கொரியாவிலும் (1919ம் ஆண்டுக் கிளர்ச்சி) இந்தோனீசியாவிலும் பெருந் திரளான வெகுஜனங்கள், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் நிலப் பிரபுத்துவத்துக்கு எதிராகவும் மிகப் பெருத்த இயக்கத்தில் கலந்து கொண்டார்கள். சிரியா, லெபனான், ஈராக், எகிப்து, லிபியா, சூடான், சோமாலி ஆகியவற்றின் விவசாயிகள் அயல்நாட்டார் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளம்பினார்கள். அயனமண்டல ஆப்பிரிக்காவின் (நைஜீரியா, ஸியெரா-லியோன், பெல்ஜியக் காங்கோ, செனெகால்) அடிமைப்பட்ட மக்கள், காலனி ஆட்சி முறைக்கு எதிரான போராட்டத்தில் முதல் அடிகளை எடுத்து வைத்தார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஒடுக்கப்பட்ட மக்களின் கிளர்ச்சிகள் ஏகாதிபத்திய வல்லரசுகளால் கொடுமையாக நசுக்கப்பட்டன. ஆயினும், துருக்கி, ஈரான், ஆப்கனிஸ்தான், மங்கோலியா ஆகியவற்றின் மக்கள், சோவியத் ருஷ்யாவின் உதவியால் தேசிய விடுதலை பெற்று விட்டார்கள்.

இவ்வாறு, உலகப் புரட்சி நிகழ்முறை, ஏகாதிபத்தியத்தின் ஆட்சித் தலைமை நாடுகளில் மட்டும் இன்றிக் காலனிப் பின்புலங்களிலும் பரவி விட்டது. எல்லாக் கண்டங்களிலும் பல் கோடி மக்கள் போராட்டத்துக்குக் கிளர்ந்து எழுந்தார்கள். ருஷ்யாவில்

சோவியத் ஆட்சி வலுவடைந்ததும் முதலாளித்துவ உலகில் வர்க்கப் போராட்டம் பெருத்த ஏற்றம் பெற்றதும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் விரைந்த வளர்ச்சியைக் குறித்தன. இதனுல் கலவரம் அடைந்த ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கம், தங்கள் நாடுகளுக்கு உள்ளேயும் சோவியத் ருஷ்யாவிலும் பாட்டாளி வர்க்க இயக்கத்தை நசுக்குவதற்கு வெறியுடன் முயற்சிகள் செய்தது. சோவியத் ருஷ்யாவில் அது உள்நாட்டுப் போரைத் தூண்டி விட்டது, படைகளின் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்தது. முதலாளித்துவத்தின் தாக்குதல் காலப்பகுதி தொடங்கியது, வர்க்கப் போராட்டங்கள் முன் ஒரு போதும் இல்லாத அளவு தீவிரம் அடைந்தது, சோஷலிஸத்துக்கான போராட்டத்தின் பிரமாண்டமான பணிகள் ஆகியவற்றின் காரணமாகப் புரட்சி சக்திகள் விரைவிலும் விரைவாக ஒன்றுபடுவதும் சர்வதேச ஒருமைப்பாடு மேலும் வலுவடைவதும் தேவைப்பட்டன.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கைவாத அடிப்படைகளை வலுப்படுத்துவதற்கு லெனின் நடத்திய போராட்டம்

சோவியத் ருஷ்யா தான் நிலவிய காரணத்தாலேயே சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் மீது புரட்சி உற்சாகம் ஊட்டும் பாதிப்பு விளைத்தது. எனினும், பாட்டாளிகளின் புரட்சிகர வர்க்க உணர்வு ருஷ்யாவில் வளர்ச்சி அடைந்ததைவிட மெதுவாகவே மற்ற நாடுகளில் வளர்ச்சி அடைந்தது, அதிகச் சிக்கல்களும் துன்பங்களும் நிறைந்த வழியில் முன்னேறியது.

அப்போது உருவாகியிருந்த நிலைமையில், மாபெரும் அக்டோபர்ப் புரட்சியின் அனுபவத்தை மார்க்சிய நோக்கில் தொகுத்து உரிய முடிவுகள் பெறுவதும், புரட்சிகரத் தொழிலாளர்கள் அதைப் பயின்று தேர்வதும் சர்வதேசப் புரட்சி இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதற்கு மிகப் பெரிய முக்கியத்துவம் உள்ளவை ஆயின. ஆளும் வர்க்கத்தினரும் அவர்களுடைய சமூக-ஜனநாயகவாதிக் கையாட்களும் தங்கள் நாடுகளில் நிகழ்ச்சிகளின் போக்கு ருஷ்ய மாதிரியைப் பின்பற்ருதவாறு தவிர்க்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டதனுல் இந்தப் பணி இன்னும் முதன்மையான இடம் பெற்றுவிட்டது. வெகுஜனங்களிடையே வளர்ந்து

வந்த அதிருப்தியை அடக்கும் பொருட்டு வன்முறையும் ஏமாற்றும், அச்சுறுத்தல்களும் வாக்குறுதிகளும், எல்லாம் கையாளப் பட்டன. ருஷ்யப் புரட்சி பற்றிய பொய்த் தகவல்கள், அவதூருன கட்டுக்கதைகள் ஆகியவற்றின் வெள்ளப் பெருக்கில் உழைப்பாளி வெகுஜனங்களை மூழ்கடித்து அறிவு தடுமாறச் செய்வதற்காக எல்லாப் பிரசார சாதனங்களும் பயன்படுத்தப்பட்டன.

சோஷல்-ஷோவினிஸ்டுக்களும் இடைநிலைவாதிகளும் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்கு நல்வரவு கூறுவது போலத் தொடக்கத்தில் பாசாங்கு செய்தார்கள். விரிவான உழைப்பாளி வெகுஜனங்களும் சாதாரண சமூக-ஜனநாயகவாதிகளும் சோவியத் ருஷ்யாவின் மீது கொண்டிருந்த பற்றுதலுக்கு விட்டுக்கொடுக்கும் பொருட்டு சமூக-ஜனநாயகத் தலைவர்கள் இவ்வாறு செய்ய வேண்டியதாயிற்று. ஆனல் இதைத் தொடர்ந்து அவர்கள் போல்ஷிவிஸத்தை எப்போதும் பண்பற்ற முறையில் நிந்தித்து வந்தார்கள். நாட்டின் பொருள் வளத்தைச் சீரழித்த நான்காண்டுப் போர், வெளி நாட்டார் தலையீடு, புரட்சி எதிரி வெண்படையினரின் கலகங்கள் ஆகியவற்ருல் சோவியத் குடியரசுக்கு நேர்ந்த இன்னல்களைச் சாதகமாக எடுத்துக் கொண்டு, எல்லா வகைச் சீர்திருத்தவாதிகளும் பற்பல வஞ்சகச் சூழ்ச்சிகள் செய்து, மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி மீது அக்டோபர்ப் புரட்சிக் கருத்துக்களின் செல்வாக்கு ஏற்படாமல் தடுக்கப் பூதாகாரமான அளவில் போராட்டம் நடத்திஞர்கள்.

வெட்கக்கேடான இந்த சோவியத் விரோத, கம்யூனிஸ விரோதக் கிளர்ச்சிக்குக் கொள்கைவாத உத்வேகம் ஊட்டுபவராக இடைநிலைவாதிகளின் பிரதான சித்தாந்தகர்த்தர் கார்ல் காவுத்ஸ்கி செயல்பட்டார். 1918, ஆகஸ்டில் அவர் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் போதனையை இந்த நூலில் அவர் திரித்துக் கூறிஞர். ருஷ்யாவில் நடந்தேறிய சோஷலிஸப் புரட்சியை அவதூறு செய்தார். முதலாளித்துவத்தாலும் உலக யுத்தத்தாலும் விளைந்தவற்றைக் காட்டிலும் பெரிய விபத்துக்களின் ஊற்று என்று சோவியத் ஆட்சியைச் சித்திரித்தார். காவுத்ஸ்கியின் சித்தாந்தத் தர்க்கத்தின் உண்மையான உட்கருத்து, தொழிலாளர்கள் புரட்சியைக் கண்டு அஞ்சி விலகச் செய்வதும் அவர்களுடைய போராட்டச் சித்த உறுதியைச் செயலறப் புரிவதும் அவர்களுடைய உணர்வை மங்கச் செய்வதும் முதலாளித்துவம் அமைதியான முறையில் சோஷலிஸமாக

வளர்ச்சி பெறுவது சாத்தியம் என்ற சீர்திருத்தவாத மயக்கை அவர்களுடைய உள்ளங்களில் பதிய வைப்பதும் தான்.

காவுத்ஸ்கி, மார்க்சியம் சரியானது என்று சொல்லளவில் ஒப்புக்கொண்டதன் மூலம் பாட்டாளி வர்க்கப் புரட்சியிலிருந்து தமது பிறழ்வை மூடி மறைத்தார். மூல மார்க்சியத்தை போல்ஷி விக்குகள் ஆதர்ச நோக்கில் திரிபுபடுத்தி விட்டதாகவும் மூல மார்க்சியத்தைக் காப்பதே தமது நோக்கம் என்றும் பசப்பி, ருஷ்யாவில் ஏற்கனவே தொடங்கிவிட்ட உலகப் புரட்சியைத் தாம் தாக்குவதற்குக் காரணம் கற்பித்தார். குதர்க்கங்களின் உதவியால் காவுத்ஸ்கி மார்க்சியத்தின் புரட்சிகரமான உயிர்த்துடிப்புள்ள இதயத்தை அகற்றி அதை ஆண்மை இழக்கச் செய்தார். போராட்டத்தின் புரட்சிச் சாதனங்களையும், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குக் கொள்கைவாத, அரசியல் முன்னேற்பாடுகளின் அவசியத்தையும் வெகுஜனங்களை இந்த நோக்கிலேயே போதித்துப் பயிற்றுவதன் இன்றியமையாமையையும் அவர் மறுத்தார்.

இடைநிலைவாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்துக்களும் அவர்களுடைய தலைவரான காவுத்ஸ்கியின் கண்ணோட்டங்களும் உலகப் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பேராபத்து விளைத்தன. காவுத்ஸ்கியத்தைக் கொள்கைவாத-சித்தாந்த நோக்கில் முறியடிப்பது பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் விதிக்கு மிக மிக முக்கியமானது என்று லெனின் எண்ணினர். 1918, அக்டோபர் தொடக்கத்தில், கடுங் காயத்திலிருந்து முற்றிலும் குணமடைவதற்கு முன்பே, சர்வதேச இடைநிலைவாதத்துடன் நிர்ணயகரமான போர் தொடுக்கப் பேனாவைக் கையில் எடுத்தார் லெனின். ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் கொள்கைமாறி காவுத்ஸ்கியும்'' என்ற தலைப்பில் முதலில் ஒரு கட்டுரையும் பிறகு ஒரு நூலும் அவரால் எழுதப் பட்டன.

காவுத்ஸ்கிக்கு எதிரான வாதப் போரில் லெனின் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிக முக்கியப் பிரச்சினைகளை ஆராய்ந்தார். இந்தப் பிரச்சினைகள் ருஷ்யாவுக்கும் போல்ஷிவிக்குகளுக்கும் மட்டும் இன்றி, சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கங்கள் அனைத்திற்கும் உடனடி முக்கியத்துவம் கொண்டிருந்தன. இவற்றை ஆராய்ந்ததன் வாயிலாக லெனின் ஏகாதிபத்தியத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் எதிரான போராட்டத்தில் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்குக் கொள்கைவாத ஆயுதங்கள் அளித்தார்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினையில் லெனின் முக்கியமாகக் கவனம் செலுத்தினர். மார்க்சியத்தில் பித்தலாட்டம் செய்கையில் காவுத்ஸ்கி இந்தப் பிரச்சினையில்தான் தமது சாமர்த்தியத்தைச் சிறப்பாகக் காட்டியிருந்தார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலகட்டத்தில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இன்றியமையாதது என்னும் மார்க்சின் புகழ்பெற்ற முடிவு, அஜாக்கிரதை காரணமாகத் தற்செயலாக எழுதப்பட்ட வெற்றுச் சொல் என்றும் போல்ஷிவிக்குகள் தங்கள் நோக்கங்களுக்காக அதைச் சரியான சமயத்தில் பயன்படுத்திக்கொண்டார்கள் என்றும் காவுத்ஸ்கி தமது நூலில் கதை அளந்தார்.[1] ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்ற சொற்ருெடர் தப்பு அபிப்பிராயத்தையே எப்போதும் ஏற்படுத்தியதால் அதை அறவே கைவிட்டு விடும்படி பிற்காலத்தில் அவர் யோசனை கூறினர்.

காவுத்ஸ்கியின் இந்தத் தந்திரத்தை லெனின் அம்பலப்படுத்தினர். 1848ம் ஆண்டுப் புரட்சி, சிறப்பாக 1871ம் ஆண்டு உருவான பாரிஸ் கம்யூன் ஆகியவற்றின் அனுபவத்தைக் கருத்தில் கொண்டு மார்க்சும் எங்கெல்சும் பாட்டாளி வர்க்கத்துக்கு விதித்த (பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை உடைத்து எறிய வேண்டும் என்ற) பணியின் வரலாற்று நோக்கில் அதிக ஸ்தூலமானதும் விஞ்ஞான நோக்கில் சரியானதும் ஆகிய விளக்கமே ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்று அவர் எழுதினர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது, பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்கத்தின் வன்முறையால் கைப்பற்றவும் நிலை நிறுத்தவும் படும் ஆட்சி அதிகாரமாகும். தங்கள் பகைவர்கள் மீது ஆயுதந் தாங்கிய மக்களின் மேலாண்மையை நிலைநாட்டவும் பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்பை அடக்கவும் இன்றியமையாத ஆட்சி அதிகாரமாகும் இது. எந்த நாட்டிலும், புரட்சியின் வளர்ச்சி எந்த—அமைதியான அல்லது அமைதியற்ற—வகையில் நிகழ்ந்தாலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இன்றியமையாத அடையாளமாக விளங்குவது, லெனின் அழுத்திக் கூறியது போல, ''வர்க்கம் என்ற முறையில் சுரண்டுவோர் பலவந்தமாக ஒடுக்கப்படுவதும், எனவே, 'தூய

---

[1] *பார்க்க: K. Kautsky*, Die Diktatur des Proletariats. Wien. 1819. S. 20, 60.

ஜனநாயகம்', அதாவது, சமத்துவமும் சுதந்திரமும், இந்த **வர்க்கத்தின் விஷயத்தில் மீறப்படுவதும்** தான்.''[1]

''ஜனநாயக சோஷலிஸம்'' பற்றியும் ''தூய ஜனநாயகம்'' பற்றியும் காவுத்ஸ்கியின் தர்க்கங்களுடைய உண்மையான அர்த்தத்தை லெனின் வெளிப்படுத்தினர். பூர்ஷ்வா ஜனநாயகத்தின் வரலாற்று நோக்கில் அளவறுத்த தன்மையையும் அதன் இடத்திற்குப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வருவதன் இன்றியமையாமையையும் மூடி மறைப்பதற்கு இந்தத் தர்க்கங்கள் எல்லாம் தேவைப்படுகின்றன என்று அவர் எழுதினர். ''பூர்ஷ்வா ஜனநாயகம், இடைக்காலத்துடன் ஒப்பிடும்போது மாபெரும் வரலாற்று முன்னேற்றமாக விளங்குகிறது. ஆனல் அது குறுகிய, அளவறுத்த, போலியான, பாசாங்குள்ள ஜனநாயகமாகவும் பணக்காரர்களுக்கு சுவர்க்கமாகவும் சுரண்டப்படுவோருக்கு, ஏழைகளுக்குக் கண்ணியாகவும் ஏமாற்ருகவும் எப்போதும் இருந்து வரும்—முதலாளித்துவம் நிலவுகையில் அது அத்தகையதாய் இல்லாதிருக்க முடியாது'' என்று குறித்தார் லெனின்.[2]

பூர்ஷ்வா ஜனநாயகத்துடன் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை ஒப்பிட்டுக் காட்டினர் லெனின். வர்க்கங்கள் நிலவும் சமூகத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆக உயர்ந்த வகையான ஜனநாயகம் என்பதை அவர் விளங்கச் செய்தார். சோவியத் ஆட்சி எல்லாவற்றிலும் ஜனநாயகத் தன்மை உள்ள பூர்ஷ்வாக் குடியரசைக் காட்டிலும் பத்துலட்சம் மடங்கு ஜனநாயகத் தன்மை உள்ளது, ஏனென்ருல், அரசு நிர்வாகத்தில் நிரந்தரமாக நிர்ணயகரமான பங்கு ஆற்றுவதற்கு அது மிக விரிவான வெகுஜனங்களை ஈர்க்கிறது, அவர்களை விலக்கித் தள்ளவில்லை என்று எழுதினர் லெனின். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற சொற்ருடரின் அர்த்தம், எல்லா உழைப்பாளிகளுக்கும் தலைமையில் செல்லும் தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சி என்று காட்டி இந்தக் கருத்தை உலகம் முழுவதற்கும் புரிய வைத்தது போல்ஷிவிஸத்தின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள தொண்டு ஆகும்.

புரட்சிச் சித்தாந்தம், செயல்தந்திரம், சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டுக் கோட்பாடுகள் ஆகியவற்றைப்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *28*, பக்கம் *256*.

[2] அதே நூல், பக்கம் *243*.

படைப்புத் தன்மையுடன் விரிவுபடுத்தியதில் போல்ஷிவிக் கட்சி செய்த சிறந்த தொண்டை லெனின் தமது நூலில் விரித்துரைத்தார். போல்ஷிவிக்குகளின் செயல்தந்திரம் சரியான ஒரே செயல் தந்திரமாக இருந்தது, ஏனெனில் உலகப் புரட்சி பற்றிய பேடிமை நிறைந்த அச்சத்தை அல்ல, ஐரோப்பாவின் புரட்சி நிலைமை பற்றிய சரியான கணக்கீட்டை அது ஆதாரமாகக் கொண்டிருந்தது என்று காட்டினார் லெனின். ''இந்தச் செயல்தந்திரம்தான் சர்வதேசியத் தன்மை கொண்ட ஒரே செயல்தந்திரம், ஏனெனில், எல்லா நாடுகளிலும் புரட்சியின் வளர்ச்சி, அதற்கு ஆதரவு, விழிப்பூட்டுவது ஆகியவற்றின் பொருட்டு ஒரு நாட்டில் சாத்தியமான அதிகப்பட்ச நடவடிக்கைகளை அது மேற்கொண்டது'' என்று எழுதினார் அவர்.[1]

போல்ஷிவிக்குகள் தங்கள் உதாரணத்தால் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகளைப் புரட்சியின் மூலம் ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு அறைகூவி அழைத்தார்கள். சோஷல்-ஷோவினிஸ்டுக்கள் இந்த பூர்ஷ்வா வர்க்கத்தைக் காத்து நின்றார்கள். இடைநிலைவாதிகளோ, ஏகாதிபத்தியத்தைச் ''சீர்திருத்துவதையும்'' அதற்குத் தங்களை இசைவித்துக் கொள்வதையும் அதற்குக் கீழ்ப்படிவதையும் பிரசாரம் செய்தார்கள். ஷெய்டமான்கள், காவுத்ஸ்கிகள் ஆகியோரின் கொள்கை உழைப்பாளிகளை ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்தும் கூலி அடிமைத்தனத்திலிருந்தும் விடுவிக்கவில்லை என்பதைத் தொழிலாளி வெகுஜனங்கள் மேலும் மேலும் அதிகமாகப் புரிந்து கொண்டார்கள். அதோடு, யுத்த பயங்கரங்களிலும் ஏகாதிபத்தியத்திலுமிருந்து தப்புவதற்கு ஏற்ற சரியான வழியை போல்ஷிவிக்குகள் காட்டினார்கள் என்பதும் ''போல்ஷிவிஸம் எல்லோருக்கும் செயல்தந்திர மாதிரியாகப் பயன்படத் தக்கது'' என்பதும் பாட்டாளி மக்களுக்குத் மேலும் மேலும் தெளிவாகப் புலப்பட்டது.[2]

போல்ஷிவிஸம் மிகப் பெருத்த வெற்றிகள் பெற்று சர்வதேச சக்தி ஆனதற்குக் காரணம், உலகு அனைத்திலும் உள்ள உழைப்பாளி வெகுஜனங்களின் ஆதரவு அதன் கொள்கைக்குக் கிடைத்ததுதான். இந்தக் காரணத்தினாலேயே போல்ஷிவிஸம், ஷெய்ட

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 292.

[2] அதே நூல். பக்கம் 293.

மான்கள், காவுத்ஸ்கிகள், ரெனேதெலிகள், லோங்கேக்கள், ஹெண்டெர்ஸன்கள், மாக்டொனல்டுகள் ஆகியோரின் அகிலத்திற்கு மரண அடி கொடுத்தது. ''போல்ஷிவிஸம், மூன்ருவது அகிலத்தின் கொள்கைவாத, செயல்தந்திர அடிப்படைகளை நிறுவிவிட்டது. இது உண்மையில் பாட்டாளி வர்க்கத்துக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் உரிய அகிலம். அமைதிக் காலப் பகுதியில் பெற்ற வெற்றிகளையும் தொடங்கியிருக்கும் புரட்சிக் காலப் பகுதியின் அனுபவத்தையும் அது கணக்கில் எடுத்துக் கொள்ளும்'' என்று அழுத்திக் கூறினர் லெனின்.[1]

முதலாளித்துவ நாடுகளில் புரட்சி ஏற்றத்தோடு கூடவே வெகுஜனத் தொழிலாளர் நிறுவனங்களும் தீவிர வளர்ச்சி பெற்றன. சமூக-ஜனநாயகக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள் ஆகியவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த திரளான வெகுஜனங்களும் குட்டி பூர்ஷ்வாக்களும் அரசியல் வாழ்வில் செயலூக்கத்துடன் பங்கு கொள்ள உற்சாகமாக முன் வந்ததை இந்த அதிகரிப்பு பிரதிபலித்தது. புரட்சி மேற்கொண்டு ஆழ்ந்து பரவுவதற்கு இன்றியமையாத முதனிலையாக இருந்தது இந்த உற்சாகம். ஆனல் போராட எழுந்த வெகுஜனங்களில் பெரும்பான்மையோர் சீர்திருத்தவாதக் கட்சிகளையே இன்னும் பின்பற்றி வந்தார்கள். சோஷல்-ஷோவினிஸ்டுக்களும் இடைநிலைவாதிகளும் கடைப்பிடித்த, சந்தர்ப்பத்துக்கு ஏற்ப இசைவித்துக்கொள்ளும் சீர்திருத்தவாதச் செயல்திட்டம், பழைய சமூகத்தை அடிப்படையில் மாற்றி அமைப்பதைக் கோரிய கம்யூனிஸ்டுச் செயல்திட்டத்தைக் காட்டிலும் அரசியல் உணர்வற்ற வெகுஜனங்களுக்குப் புரியக் கூடியதாய் இருந்தது. வெகுஜனங்கள் தங்கள் சொந்த அனுபவத்தால் சீர்திருத்தவாத மதிமயக்கத்திலிருந்து விடுபட்டு, சந்தர்ப்பவாதத்துடன் தொடர்பை அறுத்துக் கொண்டு, புரட்சிப் போராட்டப் பாதையில் அடிவைப்பதற்கு நேரம் இன்றியமையாது தேவைப்பட்டது. தங்கள் அடிப்படை நலன்களைப் புரிந்து கொள்ள வெகுஜனங்களுக்கு உதவவும், முதலாளித்துவத்தை வீழ்த்துவதற்கு அவர்களது ஆற்றலைச் செலுத்தவும் வல்லதாய் இருந்தது புது வகையான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றுதான்.

---

[1] அதே நூல், பக்கங்கள் 292-93.

ஒவ்வொரு நாட்டிலும் இத்தகைய கட்சியை நிறுவுவது உடனடியான, மிக இன்றியமையாத தேவையாக இருந்தது. சோஷலிஸப் புரட்சி வெற்றி பெறுவதற்கு இது கட்டாயமான நிபந்தனையாக இருந்தது. ஆனால், ஸிம்மர்வால்டு இடதுசாரியின் பல ஆதரவாளர்கள் கூட இத்தகைய இன்றியமையாமையை இன்னும் உறுதியாக நம்பாதிருந்தார்கள். வெவ்வேறு நாடுகளில் இருந்த சர்வதேசியவாதிகளின் குழுக்கள் வழக்கமாகப் பழைய சமூக-ஜனநாயகக் கட்சிகளின் வரம்புகளுக்கு உள்ளேயே செயலாற்றி வந்தன. ஸ்தாபன ரீதியில் இந்தக் கட்சிகளிலிருந்து பிரிய இவை தயங்கின. இதைப் பற்றி லெனின் 1918 அக்டோபரில் பின்வருமாறு எழுதினார்: ''ஐரோப்பாவில் மிகப் பெரிய விபத்தும் அபாயமும் என்னவென்றால், அங்கே புரட்சிகரமான கட்சி இல்லாதது தான்...

''வெகுஜனங்களின் பிரமாண்டமான புரட்சி இயக்கம் இந்தக் குறையைத் தீர்க்கக் கூடும் தான், ஆனால் இது மிகப் பெரிய விபத்தாகவும் மிகப் பெரிய அபாயமாகவும் இருந்து வருகிறது.

''எனவே, காவுத்ஸ்கி போன்ற கொள்கைமாறிகளை எல்லா விதத்திலும் அம்பலப்படுத்த வேண்டும். எல்லா நாடுகளிலும் இருக்கும் உண்மையான சர்வதேசிய உணர்வுள்ள பாட்டாளிகளின் புரட்சிக் குழுக்களுக்கு இதன் வாயிலாக ஆதரவு அளிக்க வேண்டும்.''[1]

உலகப் புரட்சி நெருக்கடி, சர்வதேசியக் குழுக்களும் போக்குக்களும் சுதந்திரமான கம்யூனிஸ்டுக் கட்சிகளாகவும் குழுக்களாகவும் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியிலும் அமையும் நிகழ்முறையை அளவுகடந்து விரைவுபடுத்தியது. 1918, ஜனவரியில் ஆர்ஜெண்டீனாவின் சர்வதேசிய சோஷலிஸ்டுக் கட்சி உருவாயிற்று. 1920ன் முடிவில் இது ஆர்ஜெண்டீனாவின் கம்யூனிஸ்டுக் கட்சி என்று அழைக்கப்படத் தொடங்கிற்று. 1918ன் இரண்டாவது பாதியில் ஃபின்லாந்து, ஆஸ்திரியா, ஹாலந்து, ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைக்கப்பட்டன. போலந்தில் இரு புரட்சிகரத் தொழிலாளர் கட்சிகள்—போலந்து-லாட்விய அரசு சமூக-ஜனநாயகக் கட்சியும் போலந்து சோஷலிஸ்டுக் கட்சியும் இடதுசாரியும்—இணைந்து கம்யூனிஸ்டுக்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 113.

கட்சியாக உருவாயின. பல்கேரியத் தொழிலாளர் சமூக-ஜனநாயக (தெஸ்னியாக் சோஷலிஸ்டுகளின்) கட்சி, சுவீடனின் இடதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சி, செர்பிய, ஹர்வாத், ஸ்லோவேனிய முடியரசின் சமூக-ஜனநாயகக் கட்சி, நார்வே தொழிலாளர் கட்சி, கிரீஸின் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி, மெக்சிக்கோ சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி ஆகியவை இந்தச் சமயத்தில் புரட்சிகர சர்வதேசிய நிலையை மேற்கொண்டன. செக்கோஸ்லோவாக்கியா, ருமேனியா, இத்தாலி, பிரான்சு, பிரிட்டன், டென்மார்க், சுவிட்ஸர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, பிரேசில், சீனு, கொரியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்க யூனியன் ஆகியவற்றிலும் பிற நாடுகளிலும் கம்யூனிஸ்டுக் குழுக்களும் வட்டங்களும் 1918, 1919ல் ஏற்பட்டன.

மேற்கு ஐரோப்பாவில் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி யாவற்றிலும் பெரியதாய் இருந்தது. ''ஸ்பர்த்தாக் சங்கம்'', பிற இடதுசாரிப் போக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தது இது. 1918, டிசம்பர் 30 முதல் 1919, ஜனவரி 1வரை நடந்த சட்ட அமைப்புக் காங்கிரசில் அது உருவாக்கப்பட்டது. கார்ல் லீப்னெஹ்தும் ரோஸா லுக்ஸம்பர்கும் இந்தக் காங்கிரசில் பங்கு கொண்டார்கள். நவம்பர் புரட்சியின் போது வெகுஜனங்களைத் தலைமை வகித்து நடத்தியிருக்க வல்ல, போராட்ட ஊக்கம் உள்ள பாட்டாளி வர்க்கக் கட்சியை உரிய நேரத்தில் அமைப்பது ஸ்பர்த்தாக் சங்கத்தாருக்கு இயலவில்லை. கொள்கைவாத-சித்தாந்த நோக்கிலும் ஸ்தாபன ரீதியிலும் சங்கத்தின் பலவீனம் இவ்வாறு செய்யத் தடையாய் இருந்தது. லெனின் இந்த விவரத்தைக் குறித்துப் பின்வருமாறு எழுதினர்: ''...நெருக்கடித் தறுவாயில் ஜெர்மன் தொழிலாளர்களிடம் உண்மையான புரட்சிக் கட்சி இருக்கவில்லை. மூலதனத்தின் அடிவருடிகளான கைக்கூலிக்காரர்கள்(ஷெய்டமான்கள், லேகின்கள், தவீதுகள் முதலியோர்), சுபாவ உறுதி இல்லாதவர்கள் (காவுத்ஸ்கியர்கள், கில்ஃபெர்டிங்குகள் முதலியோர்) ஆகியோருடன் தொடர்பைத் துணித்துக் கொள்ளத் தாமதித்ததன் விளைவாகவும், அவர்களுடன் 'ஒற்றுமை' கடைப்பிடிப்பது என்ற பாழாய்ப் போன மரபின் விலங்குப் பிடியின் விளைவாகவும் இவ்வாறு நேர்ந்தது.''[1]

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 513.

ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல் திட்டம் ரோஸா லுக்ஸம்பர்கால் எழுதப்பட்டுக் கட்சியின் சட்ட அமைப்புக் காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கூலி அடிமைத்தனம் உள்ள முதலாளித்துவ அமைப்பை ஒழிப்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினுல் மட்டுமே முடியும் என்னும் அடிப்படையில் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்தச் செயல் திட்டம், ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டப் பணிகளை அடிப்படையில் சரியாக வரையறுத்தது. முதலாவது சோஷலிஸ அரசான சோவியத் ருஷ்யாவிற்கு ஆதரவு அளிக்கும் கோரிக்கை அதில் அடங்கி இருந்தது. ஆயினும், சில சித்தாந்தப் பிரச்சினைகளிலும் (நிலப் பிரச்சினை, தேசிய-காலனியாதிக்கப் பிரச்சினை, வேறு சில பிரச்சினைகள் ஆகியவை) ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பொதுப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் ஈடுபடுத்துவதற்குரிய வழிகள் பற்றிய பிரச்சினையிலும் செயல் திட்டத்தில் ஆழ்ந்த தெளிவின்மை காணப்பட்டது.

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் செயலாற்றுவதற்கான நிலைமைகளில் இருந்த வேறுபாடுகள் அவர்களுடைய அபிப்பிராயங்களிலும் கருத்தோட்டங்களிலும் வேறுபாடுகளைத் தவிர்க்க இயலாதவாறு தோற்றுவித்தன. ஆனுல் இந்தக் கருத்து வேறுபாடுகள் பிரதானக் கொள்கைவாத அடிப்படையைப் பாதிக்கவில்லை. இந்த அடிப்படைதான் எல்லாக் கம்யூனிஸ்டுகளையும் நடைமுறையில் ஒன்று சேர்த்தது. சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கு சோஷலிஸப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இன்றியமையாதவை என்பதை ஏற்றுக்கொள்வதே இந்த அடிப்படை.

கம்யூனிஸ்டு அகிலத்தின்
முதலாவது (சட்ட அமைப்புக்)
காங்கிரஸ்

அக்டோபர் புரட்சி சர்வதேச நிலைமை முழுவதையும் அடிப்படையில் மாற்றிவிட்டது. கம்யூனிஸ்டு அகிலம் அமைக்கப்படுவதற்கு அதிகச் சாதகமான புதிய நிலைமைகளை அது ஏற்படுத்தியது.

மாபெரும் அக்டோபர் புரட்சி, சமூகத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைக்கும் மார்க்சிய-லெனினியக் கருத்துக்களை மனிதகுல வரலாற்றில் முதன் முதலாகச் செயல்படுத்தியது.

மார்க்சிய-லெனினியத்தின் உண்மையையும் மாற்றி அமைக்கும் பேராற்றலையும் மறுக்க முடியாத விதத்தில் அது நிரூபித்தது. சீர்திருத்தவாதத்தின்மீது புரட்சிக் கொள்கையின் வெற்றியாகவும் சமூக-ஜனநாயகவாதத்தின்மீது லெனினியத்தின் வெற்றியாகவும் விளங்கியது இது. அக்டோபர் புரட்சி, கம்யூனிஸ்டுகளை உலக வரலாற்று அரங்கின் முன் வரிசைக்குக் கொண்டு வந்தது. அவர்கள் உலகப் புரட்சி நிகழ்முறையின் தலைமையை ஏற்றூர்கள். அக்டோபர் புரட்சியின் செல்வாக்கினுல் தொழிலாளர் இயக்கத்தின் புதிய முன்னணி அரசியல் குழுக்கள் புரட்சிப் பெருக்கில் கலக்கலாயின. லெனினிய அடிப்படையில் அவை கொள்கைவாத, அரசியல் நோக்கில் ஒற்றுமைப்படுவது தொடங்கியது. தொழிலாளர் இயக்கத்திலும் மக்கள் இனங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் லெனினியத்தின் கொள்கைவாத மேலாண்மை நிலைபெறலாயிற்று.

ருஷ்யாவில் அக்டோபர் புரட்சியும் போல்ஷிவிக் கட்சியின் சித்தாந்தமும் நடைமுறையும், சமாதானத்துக்கும் உண்மையான விடுதலைக்கும் சோஷலிஸத்துக்கும் இட்டுச் செல்லும் சரியான ஒரே வழியை மக்கள் இனங்களுக்குக் காட்டின. ''ருஷ்ய சோவியத் குடியரசு, போராட்டப் பதாகை ஆகிவிட்டது, அகிலத்தின் பதாகை ஆகிவிட்டது. அது மற்றவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிறது. தயங்குபவர்களின் உள்ளங்களில் ஆண்மையை நிறைக்கிறது, போராட்ட வீரர்களின் வீரத்தையும் உறுதியையும் பன்மடங்காகப் பெருக்குகிறது'' என்று எழுதினுர் கார்ல் லீப்னெஹ்த்.[1] அக்டோபர் புரட்சியின் வெற்றி, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு முன்னர் ஒரு போதும் இல்லாத வெகுஜன அடிப்படையை அளித்தது. ஏகாதிபத்தியத்தையும் கூலி அடிமைத்தனத்தையும் காலனி ஆதிக்க ஒடுக்குமுறையையும் எதிர்த்துத் தாக்குவதற்குக் கிளர்ந்து எழுந்த, முதலாளித்துவ நாடுகளின் லட்சோபலட்சம் உழைப்பாளிகளுக்கு, மூன்ருவது அகிலம் அமைக்கப்படும் கருத்தைத் தெளிவாகப் புரியவைத்தது சோவியத் குடியரசு. பாட்டாளிகளுடையவும் உழைப்பாளிகள் அனைவருடையவும் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு, விடுதலை இயக்கத்தின் எல்லாப் படைப்பிரிவுகளதும் சக்திகளை ஏகாதிபத்தியத்தின் மீது பெருந்திரளாகப் பாய்ந்து

---

[1] **ஃப. ஃபிஷர்.** கார்ல் லீப்னெஹ்தின் வாழ்க்கையும் போராட்டமும். மாஸ்கோ-லெனின்கிராத், 1931, பக்கம் 56ல் உள்ளபடி.

மரண அடி கொடுக்கும் பொருட்டு அதிகத்திலும் அதிகமாக ஒரு முனைப்படுத்தி ஒருங்கிணைப்பது தேவைப்பட்டது. அகில உலக அளவில் ஒழுங்கமைக்கப்பட்ட புது வகையான பாட்டாளி வர்க்கக் கட்சிதான் இந்தப் பணியை நிறைவேற்ற வல்லதாய் இருந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்துக்கு ஏற்பாடுகள் செய்வதற்கான முதலாவது சர்வதேச ஆலோசனைக் கூட்டம் 1918, ஜனவரி மாதம் பெத்ரோகிராதில் நடந்தது. போல்ஷிவிக்குகள், இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சிவாதிகள், சுவீடன், நார்வே, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள், போலந்து, ருமேனிய, செக், ஹர்வாத் சர்வதேசியவாதிகள் ஆகியோரின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டார்கள். இடதுசாரியினர் மகாநாட்டைப் பின்வரும் நிபந்தனைகளின் பேரில் கூட்டுவது என்று ஆலோசனைக் கூட்டம் தீர்மானித்தது: ''1) உடனடியான சமாதானத்தின் பொருட்டுத் தங்கள் அரசாங்கங்களை எதிர்த்துப் புரட்சிப் போராட்டம் நடத்துவதற்குக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் இசைய வேண்டும். 2) ருஷ்யாவின் அக்டோபர் புரட்சிக்கும் சோவியத் ஆட்சிக்கும் ஆதரவு.''[1] இந்தத் தீர்மானம் இடதுசாரிக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் அனுப்பப்பட்டது. பல்வேறு நாடுகளின் சர்வதேசியச் சக்திகளை மூன்றாவது அகிலமாக ஒன்று சேர்க்கும் மும்முரமான வேலை இதன் அடிப்படையில் தொடர்ந்தது.

ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் கீழிருந்த அயல்நாட்டுக் குழுக்களின் சம்மேளனமும் ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் முஸல்மான் நிறுவனங்களின் மைய அலுவலகமும் கம்யூனிஸ்டு அகிலம் பற்றிய கருத்துக்களைப் பரப்புவதில் கணிசமான பங்கு ஆற்றின. அயல்நாட்டுக் குழுக்களின் செயலை லெனின் உயர்வாக மதித்தார். அவற்றினது தொண்டின் விளைவாக, ஆயிரக்கணக்கான போர்க் கைதிகளும் அரசியல் காரணங்களுக்காகத் தம் நாடுகளிலிருந்து வெளியேறியிருந்தவர்களும் முன்னாள் தலையீட்டுப் படையினரும் ருஷ்யாவில் போல்ஷிவிஸப் பயிற்சி பெற்று, பற்றுறுதி கொண்ட சர்வதேசியவாதிகள் ஆனார்கள். தாய்நாடுகளுக்குத் திரும்பியதும், தாங்கள் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையும் எடுத்து உரைத்ததன் வாயிலாக, அக்டோபர் புரட்சி பற்றிய உண்மையைத் தங்கள்

---

[1] ''பிராவ்தா'', 12. 11.(30.1) 1918.

நாட்டினரிடையே பரப்புவதற்கும் தொழிலாளர்களை மூன்றுவது அகிலத்தின் கொடியின்கீழ் ஒருங்கு திரட்டுவதற்கும் இவர்கள் பெரும் பணி ஆற்றினார்கள்.

அனேக நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் குழுக்களும் உருவானது, மூன்றுவது அகிலம் எதார்த்தத்தில் ஏற்கனவே தோன்றிச் செயல்பட்டு வந்ததைக் குறித்தது. கம்யூனிஸ்டு இயக்கத்தில் நிலவிய படைப்பிரிவுகளை ஸ்தாபனரீதியில் ஒன்றிணைப்பதும் அதன் மூலம் அவற்றின் சக்தியையும் வெகுஜனங்கள் மீது அவற்றின் செல்வாக்கையும் பெருக்குவதும் இப்போது அவசியமாய் இருந்தது. இது உடனடியான பணி ஆகிவிட்டது, ஏனெனில், இந்த சமயத்தில், சோஷல்-ஷோவினிஸ்டுக்களும் இடைநிலைவாதிகளும் கம்யூனிஸ இயக்கத்தை எதிர்த்துப் போராடும் நோக்கத்துடன், இரண்டாவது அகிலத்தை மீண்டும் அமைக்கும் வியாஜத்தில் சீர்திருத்தவாத சர்வதேச சங்கத்தை உருவாக்கத் தொடங்கினார்கள். இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, மூன்றுவது, கம்யூனிஸ்டு அகிலமாக ஒன்று சேரும்படிப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளுக்கு ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி, 1918, டிசம்பர் 24ந் தேதி வேண்டுகோள் விடுத்தது.

1919, ஜனவரி மாதம், புதிய சர்வதேச ஆலோசனைக் கூட்டம் மாஸ்கோவில் நடைபெற்றது. மூன்றுவது அகிலத்தின் சட்ட அமைப்புக் காங்கிரசைக் கூடிய விரைவில் கூட்டுவது என்ற லெனினது யோசனைக்கு அது ஒருமனதாக ஒப்புதல் அளித்தது. சோவியத் ருஷ்யா, போலந்து, ஹங்கேரி, ஆஸ்திரியா, லாட்வியா, ஃபின்லாந்து ஆகியவற்றின் கம்யூனிஸ்டுகளும் பால்கன் புரட்சிகர சமூக-ஜனநாயக சம்மேளனம், அமெரிக்க சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இது குறித்த வேண்டுகோளில் கையெழுத்திட்டார்கள். அமைக்கப்படவிருந்த மூன்றுவது அகிலத்தின் கொள்கைவாத-அரசியல் அடிப்படைக் கருத்துக்களும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் நோக்கங்களும் செயல்தந்திரமும் ஸ்தாபனக் கோட்பாடுகளும் ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி, ''ஸ்பர்த்தாக் சங்கம்'' ஆகியவற்றின் செயல்திட்ட தஸ்தாவேஜுகளின் அடிப்படையில், வரையறுக்கப்பட்டன. கம்யூனிஸ்டு அகிலம் அமைக்கும் பிரச்சினையை விவாதிக்கும்படியும் அதன் சட்ட அமைப்புக் காங்கிரசில் கலந்து கொள்ளும்படியும் 39 சோதரக் கட்சிகளையும் குழுக்களையும் ஸ்தாபனங்களையும் ஆலோசனைக் கூட்டம் கேட்டுக் கொண்டது.

லெனின் வலியுறுத்தியது போல, முதலாவது, "...எந்தக் கட்சிகளும் குழுக்களும் மூன்றுவது அகிலத்தின் அடிப்படையில் ஏற்கனவே இயங்குகின்றன, மூன்றுவது அகிலம் சடங்கு முறையில் அமைக்கப்படுவதற்குப் போதிய அளவு ஒருமைப்பாடு கொண்டிருக்கின்றன என்று எண்ணுவதற்கு முழுமையான ஆதாரம் நம்மிடம் இருக்கிறதோ அவையும்..."; இரண்டாவது, "...எந்தக் கட்சிகள் இதற்கு நெருக்கமாக இருக்கின்றனவோ, எவை நெருங்கிவரும், கலக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறேமோ அவையும்..."; மூன்றுவது, "...சோஷல்-தேசபக்தக் கட்சிகளுக்கு உள்ளே எந்தக் குழுக்களும் போக்குகளும் போல்ஷிவிஸத்துக்கு ஓரளவு நெருங்கியவையோ அவையும்"[1] மாஸ்கோ காங்கிரசுக்கு அழைக்கப்பட்டன.

சோஷலிஸப் புரட்சிக் கொடியின் கீழ் பாட்டாளி வெகுஜனங்கள் ஒன்று சேர்வதற்கு இடையூறு செய்யும் நோக்கத்துடன் சோஷல்-ஷோவினிஸ்டுக்களும்இடைநிலைவாதிகளும், 1919, பிப்ரவரியில் பெர்ன் நகரில் மகாநாடு கூட்டி, இரண்டாவது அகிலத்தின் பிணத்துக்குச் செயற்கையாக உயிர் ஊட்டினார்கள். இந்த அகிலம், லெனினுடைய சொற்களின்படி, "...தொழிலாளர் இயக்கத்தின் உள்ளே வேலை செய்பவர்களும், பூர்ஷ்வாச் செல்வாக்கையும் பூர்ஷ்வாக் கருத்துக்களையும் பூர்ஷ்வாப் பொய்யையும் பூர்ஷ்வாச் சீர்கேட்டையும் அதில் புகுத்துபவர்களுமான, சர்வதேச ஏகாதிபத்திய ஒற்றர்களின் ஸ்தாபனமாக"[2] உடனே தன்னைக் காட்டிக் கொண்டது. பெர்ன் அகிலத்தின் உண்மை நோக்கத்தை அதன் ஸ்தாபகர்களும் மறைக்கவில்லை. பிரிட்டிஷ் சந்தர்ப்பவாதி மாக்டொனல்டு வெளிப்படையாக எழுதினார். "இரண்டாவது அகிலம் முழுவதும் போல்ஷிவிஸ எதிரிதான். படைபலத்தால் ஒடுக்குவது தவிர, போல்ஷிவிஸத்துக்கு எதிரான ஒரே எதார்த்த அரணாக அது உண்மையில் விளங்குகிறது."[3]

1919, பிப்ரவரி மாதக் கடைசியில், மிகப் பெரிய தடைகளையும் முற்றுகையையும் உள்நாட்டுப் போர் முனைகளின் சங்கிலித் தொடரையும் கடந்து மாஸ்கோவுக்கு வரத் தொடங்கினார்கள் கம்யூனிஸ்டுப் பிரதிநிதிகள். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி,

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 120.
[2] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 29, பக்கம் 502.
[3] „The Labour Leader", 14, VIII, 1919, p. 5.

பிரான்சு, பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றின் இடதுசாரி சோஷலிஸ்டுக் குழுக்கள், இவற்றின் பிரதிநிதிகளால் தடைகளைக் கடந்து வர முடியவில்லை. ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகளும் ஒரு ஜெர்மன் பிரதிநிதியும் சோவியத் ருஷ்யாவுக்கு வரும் வழியில் கைது செய்யப்பட்டார்கள். சில பிரதிநிதிகள் தாமதமாக வந்து சேர்ந்தார்கள்.

மார்ச்சு மாதம் 1ந் தேதி, அனேகப் பிரதிநிதிகளின் பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் லெனினது தலைமையில் நடந்தது. நிகழவிருந்த சர்வதேசக் கம்யூனிஸ்டுகள் காங்கிரசின் திறப்பு, அமைப்பு, நிகழ்ச்சி நிரல் ஆகியவைபற்றி இதில் ஆலோசனை நடந்தது. விவாதத்தின் போது, ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதியான க. எபர்லேன், ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியால் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தை ஆதாரமாகக் காட்டி, கம்யூனிஸ்டு அகிலம் உடனே நிறுவப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலையையும் பிற நாடுகளின் அனேகப் பிரதிநிதிகள் வராததையும் கருத்தில் கொண்டு, மூன்றாவது அகிலம் அமைக்கும் பிரச்சினையை முன்கூட்டி முடிவு செய்யாமல் விடுவது என்றும், காங்கிரசின் கூட்டத்தை, கொள்கைத் திட்டம் வகுப்பதற்கும் செயற் குழுவை (பியூரோ) தேர்ந்தெடுப்பதற்கும் ஒன்று சேரும்படி சோதரக் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுப்பதற்குமான சர்வதேசக் கம்யூனிஸ்டு மகாநாடாகத் தொடங்குவது என்றும் ஆலோசனைக் கூட்டம் தீர்மானித்தது.

1919, மார்ச்சு மாதம் 2ந் தேதி மாலை, சர்வதேசக் கம்யூனிஸ்டு மகாநாடு கிரெம்ளினில் வேலை தொடங்கியது. வி.இ. லெனின் (சோவியத் ருஷ்யா), க. எபர்லேன் (ஜெர்மனி), ஃப. பிளாட்டன் (சுவிட்ஸர்லாந்து), மூவரும் தலைமைக் குழுவின் நிரந்தர உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் ஆசியாவையும் சேர்ந்த இருபத்தொரு நாடுகளின் முப்பத்தைந்து ஸ்தாபனங்களுடைய ஐம்பத்திரண்டு பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். பத்தொன்பது ஸ்தாபனங்கள் முடிவு செய்யும் வாக்கும் பதினாறு ஸ்தாபனங்கள் ஆலோசனை கூறும் வாக்கும் பெற்றிருந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரியா, சுவிட்ஸர்லாந்து, சுவீடன், செக்கோஸ்லோவாக்கியா, செர்பிய, ஹர்வாத், ஸ்லவேனெத்ஸ் முடியரசுகள், சோவியத் ருஷ்யா, நார்வே, பல்கேரியா, பிரிட்டன், ஃபின்லாந்து, போலந்து, ருமேனியா, ஜெர்மனி, ஹாலந்து, ஆகியவற்றின் கம்

யூனிஸ்டு, இடதுசாரி சோஷலிஸ்டுக் கட்சிகளும் குழுக்களும் மகா நாட்டில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. உக்ரேன், லாட்வியா, லித்துவேனியா, பெலோருஷ்யா, எஸ்தோனியா, ஆர்மீனியா, துர்க்கேஸ்தான், ஜார்ஜியா, ஆஸர்பைஜான் ஆகியவற்றினுடைய வும் வோல்காப் பிரதேச ஜெர்மானியர்களுடையவும் கம்யூனிஸ்டு நிறுவனங்கள் சுதந்திரமான பிரதிநிதிக் குழுக்களை அனுப்பியிருந் தன. ஈரான், சீனு, கொரியா, துருக்கி ஆகியவற்றின் ஒடுக்கப் பட்ட மக்களின் பிரதிநிதிகள் முதன் முறையாக இத்தகைய மகா நாட்டில் கலந்து கொண்டார்கள்.

மகாநாட்டில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த உண்மையான வெகுஜனக் கட்சியாக அப்போது விளங்கியது ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி ஒன்றுதான். ஃபின்லாந்து, ஆஸ்திரியா, ஹாலந்து, ஹங்கேரி, போலந்து, ஜெர்மனி ஆகியவற்றின் கம் யூனிஸ்டுக் கட்சிகள் அண்மையில்தான் உருவாகி இருந்தன. அவை இன்னும் வலுப்பெறவில்லை. ஆனால் தொழிலாளர் இயக்கம் ஏற்றம் பெற்றிருந்த நிலைமைகளில் அவை புரட்சிப் போராட்டத்தில் விரைவாக அனுபவம் அடைந்து விட்டன. பெரும்பாலான பிரதி நிதிகள் கம்யூனிஸ்டுக் குழுக்களையும் இடதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள். இவை வருங்காலக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முளைக்கருக்களாகத் தாம் இருந்தன. இடதுசாரி சோஷ லிஸ்டுகளுக்கும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முதல் வெளி நாட்டுப் படைப்பிரிவுகளுக்கும் கொள்கைவாத, ஸ்தாபன நோக் கில் அமையவும் வலுப் பெறவும் லெனினிய சித்தாந்தம், நடை முறை ஆகியவற்றின் உறுதியான அடிப்படையில் செயல் புரியவும் உதவுவதே அந்தக் காலத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் முக்கியப் பணிகளில் ஒன்ருக இருந்தது.

லெனின் மகாநாட்டைத் திறந்துவைத்தார். புரட்சி இயக்கம் எல்லாநாடுகளிலும் தீவிரம் அடைந்துவிட்டது என்றும் தொடங்கி யுள்ள போராட்டத்தின் முக்கியத்துவத்தைத் தொழிலாளர்கள் மேலும் மேலும் உணர்ந்து வருகிருர்கள் என்றும் அவர் குறிப் பிட்டார். ருஷ்யாவில் சோவியத் ஆட்சியின் பயனுக, தொழிலாளி வெகுஜனங்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நடைமுறை வடிவத்தைக் கண்டுகொண்டிருக்கிருர்கள் என்ருர் அவர்.

அனேக நாடுகளில் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சி பற்றித் தகவல்கள் அறிவிக்கப்பட்டன. அதன் பின், மார்ச்சு 3ந் தேதி மாலை, நிகழ்ச்சி நிரலின் ஒரு முக்கிய விஷயம் பற்றி மகாநாட்டில்

விவாதம் தொடங்கியது. இந்த விஷயமாவது, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கைத் திட்டம் (சொற்பொழிவாளர்கள் க. எபர்லேனும் நி. புஹாரினும்). ஏகாதிபத்தியத்தையும் சோஷலிஸப் புரட்சியையும் பற்றிய லெனினது போதனையின் முக்கிய வரையறுப்புக்களைக் கொள்கைத் திட்டம் சுருக்கமான, சாராம்சமான வடிவில் தொகுத்துரைத்தது. ''புதிய சகாப்தம் பிறந்துவிட்டது. முதலாளித்துவம் சீர்குலைந்து உள்ளுக்குள் சிதறும் சகாப்தம் இது. **பாட்டாளி வர்க்கத்தின் கம்யூனிஸப் புரட்சி சகாப்தம்** இது'' என்று கொள்கைத் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது.[1] அடுத்து வரும் காலக் கட்டம் பற்றிய லெனினது இந்தத் தன்மைச் சித்திரிப்பு, பாட்டாளி வர்க்கத்தின் அண்மைக்காலப் பணிகளையும் அதன் போராட்டத்தின் முறைகளையும் பற்றிய மற்ற எல்லா முடிவுகளுக்கும் அடிப்படையாகப் பணி ஆற்றியது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்படுவது, பல முதலாளித்துவ நாடுகளில் நேர்முகப் பணி ஆகிவிட்டது என்று கொள்கைத் திட்டம் குறிப்பிட்டது. பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சி அதிகாரத்தைப் போராடிப் பெறுவது அரசாங்கத்தில் நபர்கள் மாறுவதுடன் நிற்க முடியாது. பழைய அரசு இயந்திரம் அதன் இராணுவம், போலீஸ், அதிகார வர்க்கம் ஆகியவற்றோடு சேர்த்து அழிக்கப்படுவதையும் பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து ஆயுதங்கள் பறித்துக் கொள்ளப்படுவதையும் பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணி ஆக்கப்படுவதையும், புதிய பாட்டாளி வர்க்க நிர்வாக உறுப்புக்கள் அமைக்கப்படுவதையும் அது குறிக்கும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தானே குறிக்கோள் அல்ல. தொழிலாளிகளுடையவும் எல்லா உழைப்பாளிகளுடையவும் நலன்களின் பொருட்டு சமுதாய-பொருளாதார மாற்றங்கள் செய்வதற்கேற்ற கருவிதான் அது. பறிமுதலாளர்களின் உடைமைகள் பறிக்கப்படுவது, தனியார் சொத்துரிமை ரத்து செய்யப்படுவது, பெரிய தொழிற்சாலைகளும் நிலப்பிரபுக்களின் பண்ணைகளும் பாட்டாளி வர்க்க அரசின் உடைமை ஆக்கப்படுவது ஆகியவை அண்மைக்காலப் பொருளாதாரப் பணிகளாக கொள்கைத் திட்டத்தில் குறிக்கப்பட்டன. ''சிறு அளவான உடைமைகள் பறிமுதலே செய்யப்படலாகாது என்றும் பிறருடைய உழைப்பைச்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரஸ். மார்ச், 1919, மாஸ்கோ, 1933, பக்கம் 173.

சுரண்டாத உடைமையாளர்கள் எவ்விதக் கட்டாய நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப்படக் கூடாது'' என்றும் கொள்கைத் திட்டம் வலியுறுத்தியது.[1]

வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளுடனும் இடைநிலைவாதிகளுடனும் தொடர்பை அறவே துணித்துக் கொள்வது, பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிகரமான போராட்டத்திற்கு இன்றியமையாத முன் நிபந்தனை என்று கொள்கைத் திட்டம் குறிப்பிட்டது. சிண்டிகலிஸ்டுகளுடனும்[2] முன்பு சோஷலிஸ்டுகள் அல்லாதவர்களாய் இருந்து, இப்போது சோவியத்துக்களின் வடிவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கருத்தை ஏற்றுக்கொண்டு விட்ட, தொழிலாளி வர்க்கத்தில் உள்ள மற்றவர்களுடனும் கூட்டணி அமைத்துக் கொள்வதன் இன்றியமையாமையும் அதே சமயம் கொள்கைத் திட்டத்தில் குறிக்கப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைத் திட்டம் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாட்டை உறுதிப்படுத்தியது. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் தன் செயல்களை சர்வதேச அளவில் ஒருங்கிசைப்பதும் தேசிய வரம்புகளுக்குள் நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் நலன்களை உலகப் புரட்சிப் பணிகளுடன் இணைப்பதும் முற்றிலும் இன்றியமையாதவை என அது வலியுறுத்தியது. ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கப் போராட்டத்துக்கும் காலனிகளையும் அரைக் காலனிகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் இடையே நெருங்கிய, இடையறாத தொடர்பு ஏற்படுத்துவதாகவும் ''உலக ஏகாதிபத்திய அமைப்பின் இறுதித் தோல்வியை சாத்தியமாக்கும் பொருட்டு'', ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாகவும் கம்யூனிஸ்டு அகிலம் பொறுப்பு ஏற்றுக் கொண்டது.[3]

பாட்டாளி வர்க்க ஆட்சி வெற்றி பெற்றுவிட்ட அரசுகளுக்கு இடையே, தங்கள் வெற்றிகளைக் கூட்டாகத் தற்காக்கும் பொருட்டும் சோஷலிஸக் கட்டுமானத்தின் பொருட்டும் மிக நெருக்கமான ஐக்கியமும் சோதரப் பரஸ்பர உதவியும் ஏற்படுத்துவதாகக் கம்யூனிஸ்டு அகிலம் அதே சமயம் பிரகடனம் செய்தது.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரஸ், பக்கம் 177.

[2] சிண்டிகலிஸம்—தொழிற்சங்க இயக்கத்திலுள்ள குட்டி பூர்ஷ்வா, சந்தர்ப்பவாதப் போக்கு.—(மொ-ர்.)

[3] கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரஸ், பக்கம் 179.

கொள்கைத் திட்ட நகல்மீது நடந்த விவாதத்தில் பல பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். அவர்கள் சில அதிகப்படி ஷரத்துக்களையும் திருத்தங்களையும் பிரேரித்தார்கள். முடிவான வாசகத்தின் மீது பெயர்வாரி வாக்கெடுக்கப்பட்ட போது, நார்வே தொழிலாளர் கட்சிப் பிரதிநிதி ஒருவர் தவிர எல்லோராலும் அது ஏற்கப்பட்டது. நார்வே பிரதிநிதி வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

மறு நாள், பூர்ஷ்வா ஜனநாயகத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பற்றிய லெனினது ஆய்வுரையையும் சொற்பொழிவையும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் கேட்டார்கள். ''அரசும் புரட்சியும்,'' ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் கொள்கைமாறி காவுத்ஸ்கியும்'' என்னும் தம்முடைய பேரிலக்கிய நூல்களிலும் வேறு பலவற்றிலும் லெனின் ஆதாரங்களுடன் விவரித்திருந்த சித்தாந்த, அரசியல் முடிவுகள் இவற்றில் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. பூர்ஷ்வா ஜனநாயகம் எவ்வாறு வர்க்க வரம்புகளுக்கு உட்பட்டது என்பதை லெனின் ஆழ்ந்த முறையில் காட்டினார். அதன் இடத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைபெறுவதன் வரலாற்று முக்கியத்துவம் உள்ள இன்றியமையாமையை அவர் உளத்தில் பதியும் வண்ணம் நிரூபித்தார். கம்யூனிஸத்துக்கும் சீர்திருத்தவாதத்துக்கும் இடையில் உள்ள வரம்பை அவர் அழுத்தமாகக் கோடிட்டுக் காட்டினார். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர்களையும் சந்தர்ப்பவாதிகளையும் நடைமுறையில் பிரிக்கும் ஆழ்ந்த அகாதத்தை அவர் புலப்படுத்தினார்.

விரிவாகப் பரவிவரும் புரட்சி நெருக்கடியின் நிலைமைகளில், பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்த்துப் போராடுவதற்குத் ''தூய ஜனநாயகம்'' என்ற கோஷத்தை சமூக-ஜனநாயகம் பயன்படுத்தி வருகிறது. ''தூய ஜனநாயகம்'' எனப்படுவதற்கு ஆதரவாக பூர்ஷ்வாக்களும் சமூக-ஜனநாயகவாதிகளும் கூறும் போலிவாதங்களின் பொய்மையை லெனின் அம்பலப்படுத்தினார். உலகு பரவிய புரட்சி நெருக்கடி, பூர்ஷ்வா அமைப்பு முறைகள் மீது நேரடித் தாக்குதல் ஆகியவற்றின் நிலைமைகளில் ''பூர்ஷ்வா வர்க்க சர்வாதிகாரம், அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இரண்டையும் தவிர இடைப்பட்டது எதுவும் இருக்க முடியாது'' என்று அவர் அழுத்திக் கூறினார்.[1]

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 463.

''பொதுவான ஜனநாயகம்'' அல்லது ''தூய ஜனநாயகம்'' என்பது பற்றிய எல்லா விதமான தர்க்கங்களும் எதார்த்தத்தில் பூர்ஷ்வா வர்க்கத்தையும் அதன் சுரண்டும் தனி உரிமைகளையும் ஆதரிப்பவையே ஆகும் என்று காட்டினார் லெனின். கூட்டம் கூடும் சுதந்திரம், அச்சு வெளியீட்டுச் சுதந்திரம், சமத்துவம் என்னும் இந்த எல்லாக் கோஷங்களையும் பூர்ஷ்வாக்களும் அவர்களுடைய சமூக-ஜனநாயகவாதிக் கையாட்களும் பாட்டாளி வர்க்கத்தை ஏமாற்றுவதற்காகவும் மூலதனத்தின் ஆதிக்கத்தை மறைப்பதற்காகவும் பூர்ஷ்வா வர்க்க சர்வாதிகாரத்தை நியாயப்படுத்துவதற்காகவுமே பயன்படுத்துகிறார்கள் என்றார் அவர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்ற வர்க்கங்களுடைய சர்வாதிகாரத்திலிருந்து, நிலப்பிரபுக்களதும் முதலாளிகளதும் சர்வாதிகாரத்திலிருந்து அடிப்படையில் வேறானது என்று காட்டினார் லெனின். ''நிலப்பிரபுக்களுடையவும் பூர்ஷ்வாக்களுடையவும் சர்வாதிகாரம், மிகப் பெரும்பான்மையான மக்களின், அதாவது உழைப்பாளிகளின் எதிர்ப்பை வன்முறையால் ஒடுக்குவதாகும். மாறாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், சுரண்டுவோரின், அதாவது, அற்பச் சிறுபான்மையினரான நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரின் எதிர்ப்பை வன்முறையால் ஒடுக்குவதாகும்.''[1] இதுவே இவ்விரு சர்வாதிகாரங்களுக்கும் உள்ள வேறுபாடு. எனவே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், உழைப்பாளிகளுக்கு, சுரண்டப்படும் வெகு ஜனங்களுக்கு, ஜனநாயகம் முன் ஒரு போதும் இல்லாத அளவு விரிவு அடைந்ததாக அர்த்தப்படும்.

சோவியத் ஆட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் திண்ணமான வரலாற்றுத் தன்மை உள்ள, வெகுஜனங்களால் தாமாகவே கண்டு அறியப்பட்ட அரசு வடிவம் ஆகும். சிறுபான்மையினரான சுரண்டுவோரிடமிருந்து பெரும்பான்மையினரான சுரண்டப்படுவோருக்கு ஆட்சி மாறுவது, பூர்ஷ்வா-நாடாளுமன்ற ஜனநாயகத்தின் பழைய வரம்புகளுக்குள் நிகழ முடியாது. பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் புதிய வடிவங்களைத் தோற்றுவிக்காதிருக்க அதனால் முடியாது.

சோவியத் அரசு அமைப்பின் சிறப்பு இயல்பு என்னவென்றால், முதலாளித்துவத்தால் மிக அதிகமாக ஓரிடத்தில் குவிக்கப்பட்டதும் அரசியல் அறிவு பெற்றதுமான வர்க்கம் என்ற முறையில்

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 464.

பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்துக்கு ஏற்ப அது அமைந்திருந்ததாகும். ''...உழைப்பாளிகள், சுரண்டப்படும் மக்கள் ஆகியோரின் சிதறிய, பின்தங்கிய வட்டாரங்களைத் தன் பின்னே நடத்திச் செல்ல வல்லது பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான்'' என்பதை வரலாற்று அனுபவம் காட்டியிருக்கிறது என்றார் லெனின்.[1] பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செயல்படுத்துவதன் வாயிலாக, சோவியத் ஆட்சி மட்டுமே பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை உடைத்து எறியவும் உழைப்பாளிகள் உண்மையான விடுதலையும் ஜனநாயகமும் பெற வகை செய்யவும் வல்லது என்று ருஷ்யாவின் புரட்சி அனுபவம் உறுதிப்படுத்தி விட்டது.

தமது சொற்பொழிவின் முடிவில் லெனின் ஒரு தீர்மானத்தைப் பிரேரித்தார். முதலாளித்துவ அமைப்பின் மீது நேரான தாக்கு நடத்தப் பாட்டாளி வர்க்கத்தை ஆயத்தப்படுத்த முற்படும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியப் பணி பின்வருவது என்று இந்தத் தீர்மானம் கூறியது:

''1) பூர்ஷ்வா ஜனநாயகம், நாடாளுமன்றமுறை ஆகியவற்றின் இடத்தில் நிலைநிறுத்தப்பட வேண்டிய புதிய, பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும், அரசியல் நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் அது இன்றியமையாதது என்பதையும் தொழிலாளி வர்க்கத்தின் விரிவான வெகுஜனங்களுக்கு விளக்குவது.

2) இயந்திரத் தொழிலின் எல்லாக் கிளைகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் இடையிலும், தரைப்படை, கடற்படை வீரர்கள் இடையிலும் பண்ணைக் கூலிகள், ஏழை விவசாயிகள் ஆகியோர் இடையிலும் சோவியத்துக்களைப் பரப்புவதும் ஒழுங்கமைப்பதும்.

3) சோவியத்துக்களுக்குள் கம்யூனிஸ்டுகளின் நிலையான பெரும்பான்மையை ஏற்படுத்துவது.''[2]

முதலாளித்துவ நாடுகளில் புரட்சி இயக்கம் வளர்ச்சி பெறுவதில் உள்ள சிக்கல்களை லெனின் பகுத்து ஆராய்ந்தார். பூர்ஷ்வா நாடாளுமன்ற, சீர்திருத்தவாத மூட நம்பிக்கைகளின் உணர்வில் போதனை பெற்றுள்ள காரணத்தால், ஜெர்மனியில்கூட, அரசியல் அறிவு வாய்ந்த தொழிலாளர்களின் விரிவான திரள்களுக்கு

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 466.

[2] அதே நூல், பக்கம் 475.

சோவியத் அமைப்பின் முக்கியத்துவம் இன்னும் தெளிவுபடவில்லை என்றுஅவர் குறித்தார். சோவியத் அமைப்பை எல்லாவிடங்களிலும் பரப்புவதில் கம்யூனிஸ்டுகள் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளாததையும் லெனின் சுட்டிக்காட்டினார். ''நகரத் தொழிலாளர்கள் மட்டும் இன்றி, நாட்டுப்புறப் பாட்டாளிகளும் ஒழுங்கமைக்கப்படும் போது தான் வெற்றி உறுதிப்பட்டதாகக் கருத முடியும். அதிலும் அவர்கள் முன்போலத் தொழிற்சங்கங்களிலும் கூட்டுறவுக் கழகங்களிலும் அல்ல, சோவியத்துக்களாக ஒழுங்கமைக்கப்பட வேண்டும்'' என்றார் அவர்.[1] முடிவாக, சோவியத்துக்களில் கம்யூனிஸ்டுகளின் நிலையான பெரும்பான்மையைப் பெறுவதன் அவசியத்தை லெனின் சிறப்பாக வலியுறுத்தினார். ''அப்போது நமது வெற்றி உறுதிப்பட்டு விடும். கம்யூனிஸ்டுப் புரட்சிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள எந்தச் சக்தியாலும் முடியாது. இவ்வாறு செய்யாவிட்டால் வெற்றி அவ்வளவு எளிதாகக் கிடைக்காது, நீடித்ததாகவும் இருக்காது'' என்று அவர் கூறினார்.[2]

பூர்ஷ்வா ஜனநாயகத்தையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பற்றிய லெனினது சொற்பொழிவும் ஆய்வுரையும் மகாநாட்டுப் பிரதிநிதிகளால் மிக ஆழ்ந்த கவனத்துடன் கேட்கப்பட்டன. இந்த ஆய்வுரையும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள் பற்றிய தீர்மானமும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அடிப்படைச் செயல்திட்ட தஸ்தாவேஜாக ஒருமனதுடன் ஏற்கப்பட்டன.

போராட்டத்தின் பொதுக் கோட்பாடுகளையும் பணிகளையும் செயல்திட்ட தஸ்தாவேஜுகளில் வரையறுக்கும் அளவுக்கு சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் அனுபவம் திரட்டி விட்டது, போதிய முதிர்ச்சி பெற்று விட்டது என்பதை, செயல்திட்டமும் லெனினுடைய ஆய்வுரையும் ஒருமனதாக ஏற்கப்பட்டது காட்டியது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளின் கருத்துக்களிலும் செயல்களிலும் இருந்த ஒற்றுமையை இந்த தஸ்தாவேஜுகள் நிலைப்படுத்தின. உலகக் கம்யூனிஸத்தின் பொதுச் சித்தாந்தம் என்ற முறையில் லெனினியத்தின் சர்வதேசத் தன்மையை அவை உறுதிப்படுத்தின.

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 473.
[2] அதே நூல், பக்கம் 474.

செயல்திட்ட தஸ்தாவேஜுகள் அங்கீகரிக்கப்பட்டது, கம்யூனிஸ்டு அகிலத்தை முறையாக அமைப்பதில் மேற்கொண்டு தாமதம் செய்வதற்கு ஒரு காரணமும் இல்லை என்ற உண்மையைத் துலக்கமாகக் காட்டியது. மார்ச்சு மாதம் 4ந் தேதி மாலையில், புதிய பிரதிநிதிகள் வந்து சேர்ந்த பிறகு, மூன்ருவது அகிலத்தை அமைக்கும் பிரச்சினை மறுபடி எழுப்பப்பட்டது. ஆஸ்திரிய, ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சிகள், சுவீடனின் இடதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சி, பால்கன் புரட்சிகர சமூக-ஜனநாயக சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டார்கள். மூன்ருவது அகிலம் அமைக்கப்படுவது "கட்டாயமான வரலாற்றுத் தேவை. மாஸ்கோவில் கூடியுள்ள சர்வதேசக் கம்யூனிஸ்டு மகாநாடு இதை நிறைவேற்ற வேண்டும்" என்று அறிக்கையில் கூறப்பட்டது.[1] மூன்ருவது அகிலம் நிறுவப்படுவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான போராட்டத்துக்கும் கம்யூனிஸப் பதாகையின் கீழ் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டுவதற்கும் சந்தர்ப்பவாத பெர்ன் அகிலத்தைத் தாக்கி முறியடிப்பதற்கும் இன்றியமையாதது என்று அறிக்கையாளர்கள் சுட்டிக் காட்டினர்கள்.

இந்த அறிக்கையின் தொடர்பாக, மூன்ருவது அகிலம் அமைக்கும் பிரச்சினையை மகாநாடு மீண்டும் ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டது. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி க. எபர்லேன், கம்யூனிஸ்டு அகிலம் உடனே நிறுவப்படுவதற்கு முன்போலவே எதிர்ப்பு தெரிவித்தார். இவ்வாறு முடிவு செய்வது செயல்தந்திர நோக்கில் தருணத்துக்கு முந்திய நடவடிக்கை ஆகும் என்று அவர் கருதினர். ஆனல் மற்ற பிரதிநிதிகள், கம்யூனிஸ்டு அகிலம் அமைப்பதற்கு உரிய தருணம் வந்துவிட்டது என்று எண்ணினர்கள். மகாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவாய் இருந்தது, மார்க்சுக்கும் அவருடைய போராட்டத் தோழர்களுக்கும் முதல் அகிலத்தை அமைக்கத் தடையாய் இருக்கவில்லை என்பதை ஃபின்லாந்துப் பிரதிநிதி ஒ. கூஸினென் நினைவுபடுத்தினர். "...புதிய அகிலத்தின் சக்தி, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சக்திக்கு ஈடாய் இருக்குமே தவிர, இந்தச் சிறு கூட்டத்தின் சக்திக்கு அல்ல" என்ருர் அவர்.[2]

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரஸ், பக்கங்கள் 118-119.

[2] அதே நூல், பக்கம் 88.

ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி க. ஷ்தெயின் கார்த் கூறினார்: "இங்கே எல்லா நாடுகளும் பிரதிநிதித்துவம் பெறுதது நமது குற்றம் அல்ல. எந்த நாடுகளில் கம்யூனிஸ அடிப்படையில் எவ்வித ஸ்தாபனங்களும் இன்னும் நிலவவில்லையோ, அவற்றில் அத்தகைய ஸ்தாபனங்கள் அமைவதற்கு மூன்றாவது அகிலம் முதலில் உதவ வேண்டும்."[1] மூன்றாவது அகிலம் அமைக்கப்படுவது நிலைமையைத் தெளிவாக்கும். ஊசலாடுபவர்கள் எல்லோரையும் உறுதியான முடிவு எடுக்கும்படி கட்டாயப்படுத்தும். இதன் மூலம் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு வலிமைமிக்க உந்தல் அளிக்கும். இவ்வாறு கருத்து தெரிவித்தார் இ. ராஹியா (ஃபின்லாந்து கம்யூனிஸ்டுக் கட்சி). மூன்றாவது அகிலம் அமைப்பதில் காலதாமதம் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்துக்கு உளவியல், அரசியல் நோக்குகளில் தீமை விளைக்கக் கூடும் என்றார் ஹ. ராக்கோவ்ஸ்கி (பால்கன் புரட்சிகர சமூக-ஜனநாயக சம்மேளனம்). கிரிம்லுந்த் (சுவீடனின் இடதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சி), ஸதூல் (பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் குழு), ஃபாயின்பெர்க் (பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் குழு), கார்ஷேர் (சுவிட்ஸர்லாந்து கம்யூனிஸ்டுக் குழு) ஆகியோரும் பிறரும் மூன்றாவது அகிலம் தாமதமின்றி நிறுவப்பட வேண்டும் என்று கோரினார்கள்.

விவாதத்துக்குப் பிறகு பெயர்வாரி வாக்கெடுப்பு நடந்தது. முடிவெடுக்கும் வாக்கு உள்ளவர்களும் ஆலோசனை கூறும் வாக்கு உள்ளவர்களுமான எல்லாப் பிரதிநிதிகளும் வாக்களித்தார்கள். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. மற்றவர்கள் எல்லோரும் மூன்றாவது அகிலம் உடனே நிறுவப்படுவதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். "எல்லாக் கட்சிகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் குழுக்களுக்கும் எட்டு மாதக் காலத்துக்குள் மூன்றாவது அகிலத்தில் சேர்வது பற்றி முடிவாக அறிவிக்கும் உரிமை அளிக்கப்படுகிறது" என்று ஏற்கப்பட்ட தீர்மானத்தில் குறிக்கப்பட்டது.[2] ஜெர்மனி திரும்பியதும், தமது கட்சியைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் உறுப்பினராக்க முழுமூச்சாகப் பாடுபடுவதாக க. எபர்லேன் வாக்கெடுப்புக்குப் பின்னர் அறிவித்தார்.[3] மெய்யாகவே ஜெர்மன் கம்யூனிஸ்டுக்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரஸ், பக்கம் 130.
[2] அதே நூல், பக்கம் 218.
[3] பார்க்க: அதே நூல், பக்கம் 132

கட்சி, கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்ந்த முதல் கட்சிகளில் ஒன்று ஆயிற்று.

"சர்வதேசக் கம்யூனிஸ்டு மகாநாடு 1919, மார்ச் 4ந் தேதி முதல், கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது (சட்ட அமைப்புக்) காங்கிரஸாகத் தன் நடவடிக்கையைத் தொடர்ந்தது. ஸிம்மர்வால்டு சங்கத்தின் பயன்பாடு அறவே தீர்ந்துவிட்டபடியால் அதைச் சட்டபூர்வமாகக் கலைத்துவிடுவது என்று தீர்மானம், ஸிம்மர்வால்டு இயக்கத்தின் சில பிரபலத் தலைவர்களின் யோசனைப்படி அன்று நிறைவேற்றப்பட்டது. அடுத்த கூட்டங்களில் முக்கியமான அனேகப் புதிய தீர்மானங்கள் செய்யப்பட்டன. "'சோஷலிஸ்டுப்' போக்குகள்பாலும் பெர்ன் மகாநாட்டின்பாலும் கடைப்பிடிக்க வேண்டிய உறவுகள்", "சர்வதேச நிலைமையும் நேசநாடுகளின்[1] கொள்கையும்", "சோஷலிஸத்துக்கான போராட்டத்தில் தொழிலாளி மாதரை ஈடுபடுத்துவது" ஆகியவை பற்றிய சொற்பொழிவுகளிலும் தீர்மானங்களிலும், கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைத்திட்டம், லெனினுடைய ஆய்வுரைகள் ஆகியவை சித்தாந்த நோக்கில் ஆதாரம் காட்டியிருந்த எல்லா வரையறுப்புக்களும் ஸ்திரமாக்கவும் தெளிவுபடுத்தவும் பட்டன. ஃபின்லாந்துக் கம்யூனிஸ்டு யூ. ஸிரோலாவின் அறிக்கையின்படி "வெள்ளைப் பயங்கரம் பற்றிய" தீர்மானம் ஏற்கப்பட்டது. முதலாளித்துவம் தோற்றுவித்துள்ள கொலைகளும் கொள்ளைகளும் நிறைந்த முன்ற

[1] நேசநாடுகள் (ஆன்டான்ட்)—இச்சொல் 1907ல் உருவான ஏகாதிபத்திய அரசுகளது (பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா ஆகியவை) கூட்டைக் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. இக்கூட்டு மற்றொரு ஏகாதிபத்தியக் கூட்டான முக்கூட்டுக்கு (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி) எதிராக அமைக்கப்பட்டது. 'ஆன்டான்ட்' என்னும் பெயர் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே 1904ல் ஏற்பட்ட „Entente cordiale" (நேசக் கூட்டு) என்றழைக்கப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து வந்ததாகும். முதலாவது உலக யுத்தத்தின் போது (1914-18) இந்த ஆன்டான்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஜப்பானும் வேறு பல நாடுகளும் சேர்ந்து கொண்டன. அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து இக்கூட்டின் பிரதான உறுப்பினர்களான பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் சோவியத் குடியரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆயுதமேந்திய தலையீட்டின் மூலவர்களாகவும் சூத்திரதாரிகளாகவும் செயல்பட்டன.—(பதிப்.)

யை ஒழித்துக் கட்டும்படி எல்லா நாடுகளின் தொழிலாளர்களுக்கும் அறைகூவல் விடுத்தது இந்தத் தீர்மானம். ''அனைத்து உலகப் பாட்டாளி வர்க்கத்துக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் அறிக்கை'', ''எல்லா நாடுகளின் தொழிலாளர்களுக்கும்'' வேண்டுகோள் ஆகியவையும் முதல் காங்கிரசால் உறுதிப்படுத்தப்பட்டன.

கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரசால் ஏற்கப்பட்ட தஸ்தாவேஜுகள், ஆட்சியைக் கைப்பற்றும் போராட்டத்துக்குரிய நடைமுறைச் செயல்திட்டத்தை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்கு அளித்தன. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகளையும் செயல்தந்திரத்தின் முக்கியத் திசைகளையும் அவை துல்லியமாக வரையறுத்தன.

கம்யூனிஸ்டு அகிலத்தை வழிகாட்டி நடத்துவதற்குச் செயற்குழு அமைப்பது என்று காங்கிரஸ் தீர்மானித்தது. சோவியத் ருஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள், பால்கன் புரட்சிகர சமூக-ஜனநாயக சம்மேளனம், சுவிட்ஸர்லாந்து, ஸ்காண்டிநேவியா ஆகியவற்றின் பிரதிநிதிகள் செயற்குழுவில் உறுப்பினராய் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் முடிவான அமைப்பு அடுத்து வரும் காங்கிரசில் நிலைப்படுத்தப்பட வேண்டும் என்று தீர்மானத்தின்படி முடிவு செய்யப்பட்டது. அதுவரை ஸ்தாபன வேலை ஐந்து பெயர் அடங்கிய தலைமைக் குழுவிடம் (பியூரோ) ஒப்படைக்கப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைவராக ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதி கி. ஸினோவியெவும் செயலாளர்களாக அ. பலபானவும் யா. பேர்ஸினும் பின்னர் நியமிக்கப்பட்டார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரஸ் தனது வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றியதை லெனின் தமது முடிவுரையில் குறிப்பிட்டார். ''போலீசின் தொல்லைகளும் பல இடர்ப்பாடுகளும் இருப்பினும் நம்மால் கூட முடிந்தது என்றால், தற்காலப் புரட்சிச் சகாப்தத்தின் எல்லா ஜீவாதாரப் பிரச்சினைகள் குறித்தும் முக்கியமான முடிவுகளை, சாராம்சத்தில் கருத்து வேற்றுமை இன்றி, குறைந்த நேரத்தில் நம்மால் செய்ய முடிந்தது என்றால், அதற்குக் காரணம், உலகு அனைத்தினதும் பாட்டாளி வெகுஜனங்கள் தங்கள் செயல்களால் இந்தப் பிரச்சினைகள் மீது கவனம்

சலுத்தி இவற்றை நடைமுறையில் தீர்க்கத் தொடங்கி விட்டதுதான்'' என்ருர் அவர்.[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது (சட்ட அமைப்புக்) காங்கிரஸ் அசாதாரணமாகப் பெருத்த சர்வதேச முக்கியத்துவம் உள்ளது. கம்யூனிஸ்டு அகிலம் அமைக்கப்பட்டுவிட்டதை அது அதிகாரபூர்வமாக அறிவித்தது. தொடங்கியிருந்த உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முதல் அடிவைப்புக்களேச் சித்தாந்த ரீதியில் பொதுமைப்படுத்தியது. எல்லா நாடுகளேயும் சேர்ந்த பாட்டாளிகள் லெனினியக் கொடியின் கீழ் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன வடிவிலும் ஒன்றுசேர்வதை அது தொடங்கி வைத்தது. காங்கிரஸ் சோஷல்-ஷோவினிஸ்டுக்களின் துரோகக் கொள்கையை எதிர்த்து உறுதியுடன் போராடுமாறு உழைப்பாளிகளே அறைகூவி அழைத்தது. பெர்ன் அகிலத்திற்குக் கருங்காலிகளின் மஞ்சள் ஸ்தாபனம் என்ற அவப்பெயர் சூட்டியது. இடைநிலே வாதத் தலேவர்களே ஈவிரக்கமின்றித் தாக்கி விமர்சித்து அம்பலப் படுத்துவது அவசியம் என்பதையும் அவர்களுடன் ஸ்தாபன ரீதியில் உறவை முறித்துக் கொள்வது தவிர்க்க இயலாதது என்பதையும் அது ஆதாரத்துடன் நிலேநாட்டியது. ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த பாட்டாளிகள், காலனிகளேயும் ஆதீன நாடுகளேயும் சேர்ந்த உழைப்பாளிகளுடன் வரலாற்றிலேயே முதன் முதலாக இந்தக் காங்கிரஸில்தான் ஒன்றுசேர்ந்தார்கள்.

கம்யூனிஸ்டு அகிலம் உருவானதன் உலக வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பிட்டு லெனின் பின்வருமாறு எழுதிஞர்: ''மூன்ருவது, கம்யூனிஸ்டு அகிலம் நிறுவப்பட்டது... ருஷ்யப் பாட்டாளி வெகுஜனங்களும் ருஷ்யாவின் பாட்டாளி வெகுஜனங்களும் மட்டும் இன்றி ஜெர்மன், ஆஸ்திரிய, ஹங்கேரிய, ஃபின்லாந்திய, சுவிஸ் பாட்டாளி வெகுஜனங்கள்—சுருங்கக் கூறின், சர்வதேசப் பாட்டாளி வெகுஜனங்கள் பெற்ற வெற்றிகளின் பதிவுப்பத்திரமாக விளங்கியது. இதஞலேயே மூன்ருவது, கம்யூனிஸ்டு அகிலம் நிறுவப்பட்டது நிலேயான செயலாகத் திகழ்கிறது.''[2] சர்வதேசப் புரட்சி இயக்கத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 28, பக்கம் 476.

[2] அதே நூல், பக்கம் 478.

மூலதனாளித்துவத்தின்மீது அதன் வெற்றியையும் பிரதிநிதித்துவப் படுத்திய சோவியத் ருஷ்யாவைத் திண்மையுள்ள அடித்தளமாகப் பெற்றிருந்தது புதிய அகிலத்தின் சிறப்பு இயல்பாக விளங்கிற்று.

வரலாற்றில் மூன்றாவது அகிலத்தின் இடத்தை லெனின் பின் வருமாறு வரையறுத்தார்:

''முதலாவது அகிலம், சோஷலிஸத்துக்கான பாட்டாளி வர்க்க, சர்வதேசப் போராட்டத்துக்கு அடிக்கல் நாட்டியது.

''இரண்டாவது அகிலம், அனேக நாடுகளில் இயக்கத்தின் விரிவான வெகுஜன விஸ்தரிப்புக்கு முன்னேற்பாடுகள் நடந்த காலப்பகுதியாக இருந்தது.

''மூன்றாவது அகிலம், இரண்டாவது அகிலம் செய்த வேலை களின் பயன்களை ஏற்றுக்கொண்டு, அதன் சந்தர்ப்பவாத, சோஷல்-ஷோவினிஸ, பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வா அழுகலைத் துண்டித்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது.''[1]

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 29, பக்கம் 307.

1919-1920ல் உலகப் புரட்சி இயக்கம்

முதலாளித்துவ அமைப்பு மொத்தத்தில் சோஷலிஸ்ப் புரட்சிக்கு ஏற்ற பக்குவம் அடைந்து விட்டது என்று கம்யூனிஸ்டு அகிலம் செய்த சித்தாந்த வரையறுப்பு சரியானது என்பதை மேற்கு ஐரோப்பாவில் நடந்த புரட்சி நிகழ்ச்சிகள் விரைவில் உறுதிப் படுத்தின. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், சீர்திருத்தவாதிகள் கூறியது போல், ருஷ்யாவுக்கு மட்டும் தனிப்பட உரிய நிகழ்ச்சி அல்ல; முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப் பதற்கு இன்றியமையாத கட்டாய நிபந்தனை என்பதை ஹங்கேரியிலும் பவேரியாவிலும் ஸ்லோவாக்கியாவிலும் சோவியத் குடியரசுகள் ஏற்பட்டது காட்டியது. ஹங்கேரியில் நடந்த சோஷலிஸப் புரட்சியின் முக்கியமான சிறப்பு, அங்கே பாட்டாளி வர்க்கம் ஆயுதமேந்திய கிளர்ச்சி இல்லாமல் அமைதியான வழியில் ஆட்சிக்கு வந்ததுதான். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட் டப்படுவது இரத்தப் பெருக்குடனும் பயங்கரச் செயல்களுடனும் எப்போதும் தொடர்பு கொண்டது என்று சந்தர்ப்பவாதிகள் பரப்பிவந்த பொய்க் கூற்றை இது நிராகரித்துவிட்டது.

கடுமையான தேசிய நெருக்கடியின்போது மக்கள் அனைவரை யும் தன்னைச் சுற்றி ஒன்று திரட்டி, நாட்டைக் குழப்பத்திலிருந்து மீட்டு, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிலிருந்து தாயகத்தைத் தற்காக்க ஏற்பாடு செய்ய வல்ல ஒரே சக்தி தானே என்பதை ஹங்கேரியத் தொழிலாளி வர்க்கம் காட்டியது. தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத் திறனை உயர்த்தவும் அதில் ஏற்பட்டிருந்த பிளவை அகற்றவும் ஹங்கேரியக் கம்யூனிஸ்டுகள் முயன்றார்கள். இதன் பொருட்டு அவர்கள் சமூக-ஜனநாயகவாதிகளுடன் தாமதமின்றி ஒன்று சேர்ந்து (ஒன்றித்த ஹங்கேரிய சோஷலிஸ்டுக் கட்சியாக அமைந்தார்கள். இந்தச் செயல், 1919, மார்ச்சு மாதம் 21ந் தேதி

சோவியத் குடியரசை நிலைநாட்டுவதில் முக்கியப் பங்கு ஆற்றியது. புரட்சியின்போது அமைக்கப்பட்ட மக்கள் கமிஸாரவை ஹங்கேரியை சோவியத் குடியரசாகப் பிரகடனம் செய்தது. சோவியத் ஆட்சிக்காக நடந்த போராட்டத்தில் உருவான தொழிலாளி வர்க்க ஒற்றுமை, பாட்டாளி வர்க்கம் இரத்தப் பெருக்கு இன்றி விரைவாக வெற்றி பெற வகை செய்தது.

ஒன்று சேரும் நிகழ்முறையில் உள்ள சிக்கலையும் அதன் வெவ்வேறு விளைவுகளையும் பற்றிக் கூறினார் வி.இ. லெனின். உண்மையான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கொள்கைத் திட்ட அடிப்படையில் சோஷலிஸ்டுகளுடன் ஒன்று சேர்வதில் வெற்றி பெற்ற ஹங்கேரியக் கம்யூனிஸ்டுகளின் முன்னேற்றத்தை அவர் மதித்துப் பாராட்டினார். அதே சமயம், ஒரு நொடியில் கம்யூனிஸ்டுகளாக வண்ணம் பூசிக் கொண்டுவிட்ட நேற்றைய சமூக-ஜனநாயகவாதிகளிடையே, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அழிக்க வல்ல துரோகச் செயல்களும் ஊசலாட்டங்களும் நிகழக் கூடும் என்று அவர் எச்சரித்தார். 1919மே மாதம், ஹங்கேரியத் தொழிலாளர்களுக்கு விடுத்த செய்தியில் அவர் பின்வருமாறு எழுதினார்: ''கடும் போரில் நேச நாடுகளை எதிர்த்து வெல்லும் மாண்பு மிக்க, கடினமான பணி இப்போது உங்கள்மீது சார்ந்திருக்கிறது. உறுதியாக இருங்கள். உங்களோடு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தோடு நேற்று சேர்ந்துகொண்ட சோஷலிஸ்டுகளின் இடையிலோ குட்டி பூர்ஷ்வாக்களின் இடையிலோ ஊசலாட்டம் தோன்றுமானால், அந்த ஊசலாட்டத்தை ஈவிரக்கம் இன்றி நசுக்கி விடுங்கள்.''[1]

கம்யூனிஸ்டுச் செயல்திட்டத்தை ஏற்றுக்கொண்ட ஒன்றிணைந்த கட்சியில் புரட்சிகரத் தொழிலாளர்களோடு இடைநிலைவாதிகளும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளும்கூடப் புகுந்துவிட்டார்கள் என்பதும் அவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் சொல்லளவில் மட்டுமே ஒப்புக் கொண்டார்கள் என்பதும் அடுத்து வந்த நிகழ்ச்சிப் போக்கில் தெரிந்தன. ஹங்கேரியில் சோவியத் ஆட்சியை வலுப்படுத்தும்பொருட்டு வீரத்துடன் போராடிய கம்யூனிஸ்டுகளும் இடதுசாரி சோஷலிஸ்டுகளும் துர்ப்பாக்கியவசமாக, ஒன்றித்த கட்சியின் அணிகளையும் அரசாங்க உறுப்புக்களையும் சோவியத் குடியரசின் பிற அலுவலகங்களையும் துரோகி

---

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 29, பக்கம் 391.

களும் ஊசலாடும் நபர்களும் இல்லாதவாறு துப்புரவு செய்யத் திறன் கொண்டிருக்கவில்லை. மிகக் கடினமான கணத்தில் இந்தத் துரோகிகள் புரட்சியின் முதுகில் அடி கொடுத்தார்கள். வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் துரோகமும் இடைநிலைவாதிகளின் நெஞ்சு உரமின்மையும் ஊசலாட்டமும் ஹங்கேரியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கவிழ்க்கும் பணியை சர்வதேசப் புரட்சி எதிரிகளுக்கு எளிதாக்கி விட்டன. ஹங்கேரிய சோவியத் குடியரசின் பாடங்களைக் கம்யூனிஸ்டுகள் மறந்துவிடக் கூடாது என்று சுட்டிக் காட்டினார் லெனின். பிற்காலத்தில் சோவியத் குடியரசுக்குத் துரோகம் செய்த சீர்திருத்தவாதிகளுடன் ஹங்கேரியக் கம்யூனிஸ்டுகள் ஒன்று சேர்ந்தது ஹங்கேரியப் பாட்டாளி வர்க்கத்துக்குப் பெருத்த தீங்கு விளைத்தது[1]

எல்லாப் புறங்களிலும் பகைவர்களால் சூழப்பட்டிருந்த ஹங்கேரிய சோஷலிஸக் கூட்டு சோவியத் குடியரசு, 1919, மார்ச்சு 21 முதல் ஆகஸ்டு 1ந் தேதி வரை, 133 நாட்கள் வாழ்ந்து போராட்டம் நடத்தியது. ஆனால் இந்தக் குறுகிய காலத்திலேயே ஹங்கேரியப் பாட்டாளிகள் நிறையச் செயல் புரிந்தார்கள். தொழிலாளர்-விவசாயிகளின் செஞ்சேனை நிறுவப்பட்டது. ருமேனிய, செக்கோஸ்லோவாக்கியப் புரட்சி எதிர்ப்புப் படைகளின் தாக்குதலைச் செஞ்சேனை நீண்ட காலம் வெற்றிகரமாக எதிர்த்து முறியடித்தது. இந்தப் படைகளுக்குத் துணையாய் இருந்தன நேச நாடுகள். சோவியத் ஆட்சி தொழிற்சாலைகளையும் நிதிமனைகளையும் தேசிய உடைமை ஆக்கிற்று. எட்டு மணி நேர வேலை நாள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. சர்ச்சு, அரசிலிருந்து தனிப்படுத்தப்பட்டது. பள்ளிப்படிப்பு இலவசம் ஆக்கப்பட்டது. அரண்மனைகளும் மாளிகைகளும் உடல்நல விடுதிகளும் உழைப்பாளிகளின் பயன்பாட்டுக்கு அளிக்கப்பட்டன.

அதே சமயம், சோவியத் ஹங்கேரிய அரசாங்கம், நில-விவசாயிகள் பிரச்சினையைத் தீர்ப்பதில் தவறு செய்தது. ஹங்கேரியக் குடியரசின் அரசாங்கம் நாட்டுப்புறத்தில் எல்லாப் பெரிய பண்ணைகளையும் தேசிய உடைமை ஆக்கி, அவற்றை அரசாங்கப் பண்ணைகளாகவும் விவசாயக் கூட்டுறவுப் பண்ணைகளாகவும் மாற்றி விட்டது. ஏழைக் குடியானவர்களுக்கு நிலம் தேவையாயிருந்தது.

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 207.

ஆளும் வர்க்கமான ஹங்கேரியத் தொழிலாளர்கள் அவர்களுடைய இந்த ஜீவாதாரத் தேவையை நிறைவேற்றவில்லை. பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தங்கள் இயற்கைக் கூட்டாளியான ஏழை விவசாயிகள் சமூகத்தை ஈடுபடுத்தத் தொழிலாளர்களால் முடியவில்லை. இந்தக் காரணங்களால் அவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வெகுஜன அடித்தளத்தைப் பலவீனப்படுத்திவிட்டார்கள். லெனின் இந்தத் தவற்றை எடுத்துக் காட்டி, சோவியத் ஆட்சி, பெரிய நில உடைமைகளைப் பகிர்ந்து கொடுத்து ஏழைக் குடியானவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். "இல்லாவிட்டால், முன்பு இருந்ததற்கும் சோவியத் சர்வாதிகாரத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைச் சிறு விவசாயி கண்டுகொள்ள மாட்டான். பாட்டாளி வர்க்க அரசாட்சி இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்காவிட்டால் அதனால் நிலைத்து இருக்க முடியாது."[1] 1919, ஏப்ரல் மாதம் ஹங்கேரியின் வரலாற்றில் முதன்முதலாகப் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. 18 வயது நிறைந்த எல்லாக் குடிகளும் இவற்றில் கலந்து கொண்டார்கள்.

சோவியத் ருஷ்யாவையும் சோவியத் ஹங்கேரியையும் சேர்ந்த உழைப்பாளிகள், இவ்விரு சோஷலிஸக் குடியரசுகளையும் அரசியல் கூட்டணியிலும் இராணுவக் கூட்டணியிலும் கூட இணைக்க முடிந்த வகையில் எல்லாம் முயன்றார்கள். ஆனால் ஒன்றோடொன்று கூட்டுசேர அப்போது அவற்றுக்கு இயலவில்லை. ஹங்கேரியத் தொழிலாளர்களும் அவர்களுடைய தலைமை முன்னணியினரும் சோவியத் குடியரசைக் காப்பதற்கு வீரத்துடன் அரும்பாடு பட்டார்கள். ஆயினும், அதிக வலிமை கொண்ட அன்னியத் தலையீட்டாளர்களுடையவும் உள்நாட்டுப் புரட்சிவிரோதிகளுடையவும் தாக்குதல்களுக்கு எதிர்நிற்க முடியாமல் அது வீழ்ந்துவிட்டது. கிளெமன்சோவின் இறுதி எச்சரிக்கையில் கூறப்பட்டிருந்தது போல, நேச நாடுகளின் ருமேனியப் படைகள் ஹங்கேரியிலிருந்து வெளியேறிவிடும் என்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கும் என்றும் நம்பி, ஹங்கேரியச் செஞ்சேனை, தான் பகைவரிடமிருந்து விடுவித்திருந்த பிரதேசங்களிலிருந்து பின்வாங்கி விட்டது. இந்தச் செயல் ஹங்கேரிய சோவியத் குடியரசின் நிலையைப் பலவீனப்படுத்தியது. கிளேமன்சோவின் வாக்குறுதி நேசநாடுகளால் வஞ்சகமாக மீறப்பட்டது தெரிந்ததே.

[2] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 250.

சோவியத் ஆட்சி பவேரியாவிலும் (1919, ஏப்ரல் 13 முதல் மே 1ந் தேதி வரை) ஸ்லோவாக்கியாவிலும் (1919, ஜூன் 16 முதல் ஜூலை 5ந் தேதி வரை) இன்னும் குறுகிய காலமே தாக்குப் பிடித்தது. ஹங்கேரியில் போன்றே உள்நாட்டு, வெளிநாட்டுப் புரட்சி விரோதிகளின் அதிக பலம் கொண்ட படைகளால் இந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டது. எனினும் மேற்கே நிறுவப்பட்ட முதல் சோவியத் குடியரசுகளின் அனுபவமும் படிப்பினையும் கம்யூனிஸ்டு அகிலத்துக்குப் பெரிதும் பயன் உள்ளவையாக இருந்தன. அனுபவமும் கட்டுப்பாடும், வெகுஜனங்களுடன் நெருங்கிய தொடர்பும் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சி இல்லாவிட்டால், விவசாயிகள் விஷயத்திலும் நகரக் குட்டி பூர்ஷ்வாக்கள் விஷயத்திலும் அதன் கொள்கை சரியானதாக இல்லாவிட்டால் தொழிலாளி வர்க்கம் தனது வெற்றியை நிலைப்படுத்த முடியாது என்று இவை காட்டின.

அநேக நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தினுடைய நடவடிக்கைகள் தோல்வி அடைந்ததற்கு இன்னொரு நிலைமையும் காரணமாய் இருந்தது. யுத்தம் முடிந்துவிட்டதால் ஏகாதிபத்திய வல்லரசுகள் புரட்சி மையங்களை ஒடுக்குவதற்குப் பெரும் படைகளைப் பயன்படுத்த முடிந்தது என்பதே அந்த நிலைமை. நேச நாடுகள் அனேக நாடுகளைச் சேர்ந்த படைகளை சோவியத் ஹங்கேரிக்கு எதிராக அனுப்பின. வெற்றி பெற்ற வல்லரசுகளின் ஒப்புதலுடன் ஜெர்மன் ஏகாதிபத்தியம் உக்ரேனிலும் பெலோருஷ்யாவிலும் பால்டிக் பிரதேசத்திலும் தான் கைப்பற்றியிருந்த பகுதிகளில் சோவியத் ஆட்சியை இரத்தப் பெருக்கில் மூழ்கடித்து மாய்ப்பதில் பங்கு கொண்டது. வெற்றிபெற்ற வல்லரசுகளின் தேவைகளுக்கு இணங்க உலக வரைபடத்தை மாற்றி அமைத்துப் புதிய யுத்தத்துக்கு வித்திட்ட ஏகாதிபத்திய வெர்சேல்ஸ் உடன்படிக்கை தெளிவாக வெளியிடப்பட்ட சோவியத் விரோதப் போக்கும் கொண்டிருந்தது. ஐரோப்பிய நாடுகளில் புரட்சி இயக்கத்துக்கு எதிராகப் போராடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளுக்கு அது வகை செய்திருந்தது. ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஜெர்மனியில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தை ஒடுக்குவதற்கும் சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான தாக்குச் சக்தியாகச் செயல்படுவதற்கும் தேவையான அளவு அதிகாரத்தை வெர்சேல்ஸ் உடன்படிக்கை அதற்கு அளித்திருந்தது.

ஹங்கேரியிலும் பவேரியாவிலும் சோவியத் ஆட்சி இரத்த வெறியுடன் ஒடுக்கப்பட்ட பின்னர் மேற்கு ஐரோப்பியாவி

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிச் செயலூக்கம் ஓரளவு குறைந்து விட்டது. ஆயினும் அதன் போராட்டச் சித்த உறுதி முறிந்துவிட வில்லை. 1920ல் நடந்த நிகழ்ச்சிகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இவற்றில் சில பின்வருமாறு: ஜெர்மனியில் முடியரசை மீண்டும் கொண்டுவரும் நோக்கத்துடன் காப் என்னும் நிலப்பிரபுவின் தலைமையில் ஒரு சில இராணுவ அதிகாரிகள் வன்முறையால் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றதை எதிர்த்து நடந்த பொது வேலை நிறுத்தம்; இதில் ஒரு கோடி இருபது லட்சம் பெயர் பங்குகொண் டார்கள்; இத்தாலியில் தொழிலாளர்களால் ஆலைகளும் தொழிற் சாலைகளும் கைப்பற்றப்பட்ட நிகழ்ச்சி; பிரான்சு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் ஆகியவற்றில் வலிமை மிக்க வேலைநிறுத்த இயக்கம். வழக்கமாக வேலைநிறுத்தங்கள் விடாப்பிடியாக நடந்தன. அனேக சந்தர்ப்பங்களில் போலீசுட னும் இராணுவத்துடனும் கடுமையான மோதல்கள் நேர்ந்தன. அவை பகிரங்கமான ஆயுதந்தாங்கிய போராட்டமாக ஒன்று கலந்தன.

தீவிர வர்க்கப் போராட்டங்களால் தொழிலாளர்களின் உணர்வு பெருத்த முற்போக்கு அடைந்தது. ஸ்தாபனமாக அமைந்து ஒன்று சேரும் அவர்களுடைய ஆர்வம் வலுப்பட்டது. எல்லா நாடுகளிலும் போருக்குப் பிந்திய முதல் ஆண்டுகளில் சமூக-ஜனநாயகக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வழக்கமான பிற வெகுஜன ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர் தொகை மளமளவென்று அதிகரித்தது. இவற்றோடு கூடவே வெகுஜனங்கள் இடதுசாரிக்கு நகரும் நிகழ்முறையும் தீவிரமாயிற்று. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பிரசண்டமான வளர்ச்சி இதைக் காட்டியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரசுக்குப் பிறகு உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் கணிசமான முன்னேற்றம் அடைந்தது. 1919, மே மாதத்தில் பல்கேரியத் தெஸ்னியாக்குகள் கட்சி கம்யூ னிஸ்டுக் கட்சியாக மாற்றி அமைக்கப்பட்டது. 1919 மார்ச்சு மா தத்திலிருந்து 1920 ஜனவரி மாதத்துக்குள் யூகோஸ்லாவியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிக்கோ, டென்மார்க், ஸ்பெயின் இந்தோனீசியா, ஈரான், பிரிட்டன், துருக்கி, உருகுவாய், ஆஸ்தி ரேலியா ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைக்கப்பட் டன. ஆர்ஜெண்டீனாவின் சர்வதேசிய-சோஷலிஸ்டுக் கட்சி, கிரீசின் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி, ருமேனிய சோஷலிஸ்டுக்

கட்சி, சுவீடனின் இடதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சி, நார்வே தொழிலாளர் கட்சி, இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி, பிரிட்டிஷ் சோஷலிஸ்டுக் கட்சி, இங்கிலாந்தின் சுதந்திரத் தொழிலாளர் கட்சியின் ஸ்காட்லாந்துப் பிரிவு, லக்ஸம்பர்க் சோஷலிஸ்டுக் கட்சி ஆகியவையும் அநேக நாடுகளின் புரட்சிக் குழுக்களும் தொழிற் சங்கங்களும் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்வதாக அறிவித்தன.

ஜெர்மன் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சி, பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி, அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சி, இங்கிலாந்தின் சுதந்திரத் தொழிலாளர் கட்சி, சுவிட்ஸர்லாந்தின் சமூக-ஜனநாயகக் கட்சி ஆகியவையும் வேறு சிலவும், புரட்சிகரத் தொழிலாளர்களின் வற்புறுத்தலின் விளைவாக இரண்டாவது அகிலத்துடன் தொடர்பை அறுத்துக்கொண்டு விட்டதாக அறிவித்தன. கம்யூனிஸ்டு அகிலம், இடதுசாரியில் சென்ற சமூக-ஜனநாயக வெகுஜனங்களைத் தன் அணிகளில் ஏற்றுக் கொண்டது. ஆனால், சீர்திருத்தவாதச் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் கைவிடாத நபர்கள் தன்னுடைய ஸ்தாபனங்களில் புகுவதற்கு இடந்தர அதனால் முடியவில்லை. இத்தகைய நபர்கள் புகுவது, மூன்றாவது அகிலத்தின் புரட்சி அடிப்படைகளைத் தகர்த்துவிடும் என்ற அபாயம் இருந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்குப் பெருத்த உதவி செய்தது. ஆரம்பம் முதலே இது உலகப் புரட்சி இயக்கத்தின் போராட்டத் தலைமை அலுவலகமாகச் செயல்பட்டு வந்தது. கம்யூனிஸ்டுகள் தொந்தரவு செய்யப்பட்டது, அனுபவம் உள்ள ஊழியர்கள் போதாமை, சோவியத் ருஷ்யா சூழடைப்புக்கு உள்ளாகி இருந்தது, உள்நாட்டுப் போர் ஆகியவற்றின் காரணமாக, கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் காங்கிரசுக்குப் பிறகு நீண்ட காலம் வரை முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த பெரும்பலான கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் பிரதிநிதிகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கு அனுப்ப முடியாதிருந்தது. எனவே, தொடக்கக் காலத்தில் செயற்குழுவின் பெரும்பாலான நடப்பு வேலைகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தில் ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் பிரதிநிதிகள் செய்ய நேர்ந்தது.

பின்னர் செயற்குழுவின் உறுப்பினர் தீர்மானிக்கப்பட்டு விட்டார்கள். சோவியத் ருஷ்யா, ஹங்கேரி, ஃபின்லாந்து, யூகோஸ்லாவியா, சுவிட்ஸர்லாந்து ஆகியவற்றின் கம்யூனிஸ்டுகள் அதன் வேலையில் பங்காற்றத் தொடங்கினார்கள். வேறு நாடுகளின்

தோழர்களும் செயற்குழுவின் வேலையில் முடிந்த அளவு ஈடுபடுத்தப் பட்டார்கள். ஹாலந்து, சுவீடன், நார்வே, பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இத்தாலி, பிரிட்டன், ஆஸ்திரியா, கொரியா, சீனு ஆகியவற்றின் கம்யூனிஸ்டு, இடதுசாரி சோஷலிஸ்டுக் கட்சி களின் பிரதிநிதிகள் இவர்களிடையே இருந்தார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்பினது செயல் அனைத்தையும் நடத்தி ஞர் லெனின். செயற்குழுவின் முக்கியக் கூட்டங்களில் அவர் பங்கெடுத்துக் கொண்டார்.

வெவ்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடன் தொடர்பு களை ஒழுங்குபடுத்துவதில் மிகப் பெருத்த கஷ்டங்கள் இருந்த போதிலும், முதலாவது காங்கிரசுக்குப் பிறகு சர்வதேசத் தொழி லாளர் இயக்கத்தில் கம்யூனிஸக் கருத்துக்களைப் பரப்புவதில் செயற் குழு மிகப் பெரிய வேலை செய்தது. ''கம்யூனிஸ்டு அகிலம்'' என்னும் சஞ்சிகையின் முதல் இதழ் 1919, மே மாதம் வெளியாயிற்று. ருஷ்ய, ஜெர்மன், ஆங்கில, பிரெஞ்சு மொழிகளிலும் பிறகு ஸ்பானிய, சீன மொழிகளிலும் இது பிரசுரிக்கப்பட்டது. இந்தச் சஞ்சிகை எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் கொள்கை வாத ஆயுதமாக விளங்கிற்று.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் பரப்புவதிலும் பல்வேறு நாடுகளின் உழைப் பாளிகளது புரட்சிச் செயல்களுக்குப் பயனுள்ள உதவி அளிக்க ஏற்பாடு செய்வதிலும் தொடக்கத்திலிருந்தே பெருத்த கவனம் செலுத்தி வந்தது.

ஹங்கேரியிலும் ருஷ்யாவிலும் சோவியத் குடியரசுகளின் தற்காப்புக்காக சர்வதேசப் பொது வேலை நிறுத்தம் நடத்தும்படி 1919, வசந்தத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஐரோப் பியப் பாட்டாளிகளுக்கு வேண்டுகோள் விடுத்தது. இந்த வேலை நிறுத்தம் இத்தாலியிலும் ஆஸ்திரியாவிலும் நார்வேயிலும் ஜெர் மனியிலும் 1919, ஜூலை 21ந் தேதி நடந்தது. ஆனல் பிரிட்டனி லும் பிரான்சிலும் சீர்திருத்தவாதிகள் அதை முறித்து விட்டார் கள். கடைக்கோடி வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்களின் வன்மை மிக்க எதிர்ச் செயல்களைப் பொருட்படுத்தாமல் ஒருமைப் பாட்டு இயக்கம் முதலாளித்துவ நாடுகளில் வளர்ந்து விரிவடைந் தது. 1920ம் ஆண்டுக் கோடையில், சோவியத் ருஷ்யா மீது போலந் தின் தாக்குதலுக்குப் பிறகு, அது உச்ச கட்டத்தை எட்டியது. ''சோவியத் ருஷ்யாவைத் தொடாதே!'' என்ற கோஷத்துடன்

லட்சோபலட்சம் உழைப்பாளிகள் எல்லாக் கண்டங்களிலும் ஆர்ப் பாட்டம் நடத்தினர்கள். ஜெர்மனி முதல் ஆர்ஜெண்டீனுவரை பல நாடுகளில் சோவியத் ருஷ்யாவுக்கு உதவும் கமிட்டிகள் தோன் றின. வெளிநாட்டுப் பாட்டாளி வர்க்கம் சோவியத் குடியரசுக்கு அளித்த உதவியை லெனின் வெகுவாக மதித்தார். ''சர்வதேச பூர்ஷ்வா வர்க்கம் நம் மேல் கையை ஓங்கியதுமே அதன் சொந்தத் தொழிலாளர்கள் அதன் கையைப் பிடித்துக் கொள்வார்கள்'' என்றார் லெனின்.[1]

சர்வதேச இளைஞர்கள், மாதர், தொழிற்சங்க இயக்கங்களைக் கம்யூனிஸப் பதாகையின் கீழ் ஒன்று சேர்ப்பதில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பெருத்த பங்கு ஆற்றியது. இளைஞர்கள் அகிலத்தை ஏற்படுத்தும்படி புரட்சி மனப்பான்மை கொண்ட யுவ-யுவதியருக்குச் செயற்குழு 1919, மே மாதம் அறைகூவல் விடுத்தது. இளங் கம்யூனிஸ்டுகள் ஸ்தாபனங்களின் முதலாவது சர்வதேசக் காங்கிரஸ், அதே ஆண்டு நவம்பர் மாதம் பெர்லின் நகரில் சட்டவிரோதமாகக் கூடியது. பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த சுமார் இருபது பிரதிநிதிகள் வந்தார்கள். காங்கிரஸ், இளைஞர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தை நிறுவியது. அது கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒரு பிரிவாக அதில் இணைந்தது.

செயற்குழுவின் முயற்சியால் தொழிலாளி மாதரின் சர்வதேச மகாநாடு மாஸ்கோவில் 1920, ஜூலையில் நடந்தது. பதினறு நாடுகளைச் சேர்ந்த இருபத்தொரு பிரதிநிதி மாதர்கள் மகாநாட்டில் பிரசன்னமாய் இருந்தார்கள். உழைப்பாளி மாதருக்கு அறிக்கையும் ஆய்வுரையும் மகாநாட்டில் ஏற்கப்பட்டன. பாட்டாளி மாதரிடையே கம்யூனிஸ வேலையின் முக்கியத் திசைகள் இவற்றில் வரையறுக்கப்பட்டிருந்தன. மகாநாட்டின் தீர்மானப்படி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1920, நவம்பர் மாதம் சர்வதேச மாதர் அலுவலகத்தை நிறுவியது. கிளர்ச்சி, பிரசார நூல்களை இந்த அலுவலகம் பல மொழிகளில் வெளியிட்டது.

பல்வேறு நாடுகளின் தொழிற்சங்கங்களை ஒன்று சேர்ப்பதில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பெருந் தொண்டு ஆற்றியது. அதனுடைய முயற்சியால் சோவியத் ருஷ்யா, பல்கேரியா, யூகோஸ்லாவியா, இத்தாலி, பிரான்சு, ஸ்பெயின் ஆகியவற்றின் புரட்சி

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 309.

கரத் தொழிற்சங்கங்கள், 1920ம் ஆண்டுக் கோடையில் சர்வதேசத் தொழிற்சங்கக் கவுன்சிலே அமைத்தன. தொண்ணூறு லட்சம் தொழிலாளர்கள் இதில் சேர்ந்தார்கள்.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தைக் கொள்கைவாத, ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்த எல்லா வகையிலும் உதவுவது தனது முக்கியப் பணி என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கருதியது. இந்த நோக்கத்துடன் முக்கியமான வழிகாட்டும் கடிதங்கள் தயாரிக்கப்பட்டன. பாட்டாளி வர்க்கப் புரட்சியில் அரசியல் கட்சியின் பாத்திரம், சட்டபூர்வமான வேலையையும் சட்டத்துக்குப் புறம்பான வேலையையும் இணைப்பது, நாடாளுமன்ற முறை, தொழிற்சங்கங்கள், பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் தனித் தன்மைகள் ஆகியவை பற்றியவை இந்தக் கடிதங்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாகி வளர்ந்த நிகழ்முறை சிக்கலானதாக இருந்தது. இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு ஆரம்பம் முதலே வழியில் பல கடுமையான இடர்கள் எதிர்ப்பட்டன. அனுபவம் மிகுந்த சீர்திருத்தவாத ஸ்தாபனங்கள் தொழிலாளர் இயக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எதிர் நின்றன. முதலாளித்துவ நாடுகளில் பெரும்பாலான பாட்டாளிகள் இந்த ஸ்தாபனங்களேயே பின்பற்றினுர்கள். முன்னணித் தொழிலாளர்களேத் தங்கள் தரப்புக்கு ஈர்ப்பதில் கம்யூனிஸ்டுகள் வெற்றி அடைந்தார்கள். ஆனுல் பாட்டாளி வர்க்கத்தின் விரிவான வட்டாரங்களிடையே அவர்களுடைய செல்வாக்கு மெதுவாகவே வளர்ந்தது, ஒப்புநோக்கில் பலவீனமாய் இருந்தது. முதலாளித்துவ நாடுகளேச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் முன்னணித் தொழிலாளர்களேக் கொள்கைவாத நோக்கில் தங்கள் தரப்பில் சேர்ப்பதிலிருந்து விரிவான உழைப்பாளி வெகுஜனங்களேத் தங்கள் கொடியின் கீழ் ஒன்று திரட்டுவதற்குப் பரிணமிப்பது, தீவிர இடதுசாரி, பிரிவுவாதத் தவறுகளால் மேலும் சிக்கலாயிற்று. உதாரணமாக, பிரிட்டனில் பல புரட்சிக்காரர்கள் பூர்ஷ்வா நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதை எதிர்த்தார்கள். தொழிற்கட்சியில் கூட்டு அடிப்படையில் உறுப்பினராக மறுத்தார்கள். இவ்வாறு செய்ததன் மூலம் அவர்கள் வெகுஜனங்கள் மீது செல்வாக்கு செலுத்தி, அவர்களேத் தம் பின் இட்டுச் செல்லும் வாய்ப்பைக் குறுக்கி விட்டார்கள்.

ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்சு, இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஹாலந்து ஆகியவற்றிலும் பிற நாடுகளிலும் கூட இடதுசாரிப் பிரிவுவாதக் கருத்தோட்டங்களும் மனப்பான்

மையும் விரிவாகப் பரவியிருந்தன. ஜெர்மனியில் அதிதீவிர இடது சாரியினர் 1920, ஏப்ரல் மாதம் தனி ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியை அமைத்தார்கள். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களை அணுக முயன்றதற்காக அதைக் கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கிற்று இந்தக் கட்சி. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி சந்தர்ப்பவாதி என்றும் சுயேச்சையாளர்களுடன் சமரசம் செய்துகொள்ள முயல்கிறது என்றும் புதிய கட்சியின் ''இடதுசாரிச்'' சொல் விற்பன்னர்களான வோல்ஃப்ஹைறம், லாவுஃபென்பெர்க் போன்றோர் குற்றம் சாட்டினார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்தந்திரத்தை ஆதரித்தது. ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்களுக்கு அது ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியது. ஜெர்மனியின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் இடைநிலைவாதித் தலைவர்கள் வேறு, கம்யூனிஸ்டு அகிலத்தை நேர்மையுடனும் உளமாரவும் ஆதரிக்கும் இந்தக் கட்சியின் பெரும்பாலான சாதாரண உறுப்பினர்கள் வேறு என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று இந்தக் கடிதம் கூறியது. ''கிட்டத்தட்டப் பத்து லட்சம் பெயரான இந்தத் தொழிலாளர்கள், சுயேச்சைக் கட்சியின் அணிகளில் ஒழுங்கமைந்தார்கள். ஆயினும், வாழ்க்கையின் படிப்பினைகள் இவர்களை ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் அதிகமாக நம்மிடம் தள்ளும். இத்தகைய தொழிலாளர்களுடன் சமரசம் செய்து கொள்ள முயல்வது சந்தர்ப்பவாதம் அல்ல. மாறாக, ஜெர்மனியின் ஒவ்வொரு ஆழ்ந்த கம்யூனிஸ்டினதும் கடமை ஆகும் இது'' என்று கடிதம் வலியுறுத்தியது.[1]

இடதுசாரிப் பிரிவுவாதத் தவறுகள், லெனினது சொற்களின் படி, ''...கம்யூனிஸத்துக்குப் பெருத்த தீங்கு'' விளைத்தன.[2] இந்தத் தவறுகளை நீக்கிக் கொள்ளாமல் கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வெகுஜனங்கள் இடையிலும் பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளி வட்டாரங்களிலும் வெற்றிகரமாக வேலை செய்வது பற்றி எண்ணவே இடமில்லாதிருந்தது. எனவே கம்யூனிஸ்டு இயக்கத்தில் ''இடதுசாரிப் போக்கை'' எதிர்த்துப் போராடுவது மிக மிக முக்கியமான, உடனடிப் பணி ஆகிவிட்டது. ''முதலாவது

---

1 ''கம்யூனிஸ்டு அகிலம்,'' 1920, இதழ் 11, பக்கம் 1877.

2 வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 93.

வரலாற்றுப் பணியை (பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வுள்ள முன்னணியை சோவியத் ஆட்சியின் தரப்புக்கும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தரப்புக்கும் இட்டு வருவது), சந்தர்ப்பவாதத்தின் மீதும் சோஷல்-ஷோவினிஸத்தின் மீதும் முழுமையான, சித்தாந்த, அரசியல் வெற்றி இல்லாமல் நிறைவேற்றப்பட இயலாதிருந்தது. இப்போது அடுத்த பணி எதிர்ப்பட்டிருக்கிறது. புரட்சியில் முன்னணியின் வெற்றிக்கு வகை செய்யக்கூடிய புதிய நிலைக்கு **வெகுஜனங்களை** இட்டுவரும் திறன் இந்தப் பணியில் அடங்கி இருக்கிறது. இடதுசாரி வரட்டுச் சூத்திரவாதத்தை ஒழிக்காமல், அதன் தவறுகளை அறவே நீக்காமல், அவற்றிலிருந்து விடுபடாமல் இந்த அடுத்த பணியை நிறைவேற்றுவது முடியாது'' என்று 1920, ஏப்ரலில் எழுதினார் லெனின்.[1]

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் உடனடியான முக்கியப் பிரச்சினைகள் பற்றி லெனின்

1920ம் ஆண்டு வசந்தம் தொடங்கிய தறுவாயில் உலகில் உருவாகியிருந்த சூழ்நிலை சிக்கலாகவும் முரண்பாடுகள் உள்ளதாகவும் இருந்தது. சோவியத் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைப்பட்டதும், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை இயக்கம் மேற்கொண்டு ஏற்றம் பெற்றதும், அதே சமயம் முதலாளித்துவ நாடுகளில் புரட்சியின் வளர்ச்சி வேகம் குறைந்ததும் ஆகிய இவை எல்லாம் உலகப் புரட்சி நிகழ்முறையின் வளர்ச்சியில் ஏற்பட்ட சமமின்மையைப் புலப்படுத்தின.

மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெறாததன் காரணங்களை விளக்கி, லெனின் பின்வருமாறு எழுதினார்: ''ஏகாதிபத்திய யுத்தம் முடிந்ததுடன் நேரடித் தொடர்புள்ள கணத்திலிருந்தே மேற்கு ஐரோப்பாவில் சோஷலிஸப் புரட்சி தொடங்கிவிடும் என்று புரட்சியின் ஆரம்பக் காலத்தில் பலர் நம்பினார்கள். ஏனென்றால், வெகுஜனங்கள் ஆயுதபாணிகளாய் இருந்த கணத்தில் சில மேற்கு நாடுகளிலும் புரட்சி மிக அதிக வெற்றியுடன் நடந்திருக்க முடியும். மேற்கு ஐரோப்பாவில் பாட்டாளிகளுக்கு இடையே அதிக ஆழ்ந்த பிளவும் முன்னாள் சோஷலிஸ்டுத் தலைவர்களின் அதிக

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 93.

அளவான துரோகமும் நேர்ந்திராவிட்டால் இவ்வாறு நடந்திருக்க முடியும்.''[1] மேற்கே பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது புரட்சித் தாக்குதலை சமூக-ஜனநாயகம், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் சீர்திருத்தவாதத் தலைவர்களின் உதவியால் முறியடிப்பது பூர்ஷ்வாக்களுக்கு முடிந்தது. ஆயினும் தொழிலாளி வர்க்கத்தின் சக்தி முறிந்துவிடவில்லை. தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ அடிமைத்தனத்துக்கு எதிராகப் புதிய போராட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்தது.

மாறிய சூழ்நிலை, 1919-1920ல் நடந்த வர்க்கப் போராட்டங்களின் படிப்பினைகள் ஆகியவை காரணமாகக் கம்யூனிஸ்டு அகிலம் அதிகச் சமயோசிதமான போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு உருவாக்கித் தருவது அவசியம் ஆயிற்று. தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரைக் கம்யூனிஸத்தின் தரப்புக்குக் கட்டாயமாகக் கொண்டு வருவதும் திரளான கூட்டாளிகளை ஈர்ப்பதும் வெகுஜனங்களைப் புரட்சிக்கு நடத்திச் செல்வதற்கேற்ற புதிய வழிகளையும் சாதனங்களையும் தேடிக் காண்பதும் இன்றியமையாதவை ஆயின. ''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'' என்ற லெனினது நூல் இந்த உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்த நூல், 1920ம் ஆண்டு வசந்தத்தில், கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கூடும் தறுவாயில் எழுதப்பட்டது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியிலும் வலுப்படுத்துவது, வெகுஜனங்களின் புரட்சிப் போராட்டத்தின் உண்மைத் தலைவர்களாகவும் ஒழுங்கமைப்பாளர்களாகவும் அவற்றை மாற்றுவது என்ற பணிகளுக்கு இடதுசாரிப் போலிச் சித்தாந்தப் பேச்சு, வரட்டுச் சூத்திரவாதம், பிரிவுவாதம் ஆகியவற்றைக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அணிகளில் தலைதூக்க விடாமல் களைவது அவசியமாய் இருந்தது. பூர்ஷ்வா நாடாளுமன்றங்களிலும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களிலும் வேலை நடத்த மறுப்பது, சக்திகளின் ஒப்புநிலையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் திறன் இன்மை அல்லது விருப்பம் இன்மை, கட்சி உணர்வின்பாலும் பொதுவாகவே கட்டுப்பாட்டின்பாலும் மறுப்புப் போக்கு,

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 417.

அரசியல் சமரசங்களுக்கு இணங்காமை, இவை எல்லாம் ''இடது சாரிப் போக்கின்'' வெளிப்பாடுகள். இவை வளர்ந்து வந்த கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஆபத்தான பலவீனமாக இருந்தன. இந்த பலவீனம் கம்யூனிஸ்டுகளை வெகுஜனங்களிடமிருந்து பிரிக்கவும் தொழிலாளி வர்க்கக் கட்சியைப் பிரிவாக மாற்றவும் காரணமாயிற்று.

சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதித் தலைவர்களின் மீது புரட்சிகரத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நியாயமான வெறுப்பே கம்யூனிஸத்தில் ''இடதுசாரிப் போக்குக்கு'' அடிக்கடி காரணம் ஆயிற்று. இந்த வெறுப்பு மனிதர்களைக் குருடாக்கியது, முன் யோசனை அற்ற, உரிய நேரத்துக்கு முந்திய செயல்களில் அவர்களை ஈடுபடுத்தியது, நிதான புத்தியுடன் சிந்தனை செய்யவிடாமல் தடுத்தது, அறிவார்ந்த, சமயோசிதமான செயல்தந்திரத்தையும் போர்த்தந்திரத்தையும் வகுப்பதற்குத் தடையாய் இருந்தது. புரட்சி நடத்துவதில் கம்யூனிஸ்டுகளுக்கு இருந்த பொறுமை இன்மையும் அவர்களுடைய அரசியல் முதிர்ச்சி இன்மையும் ருஷ்யாவில் நடந்ததை, அதற்குத் தேவையான எல்லா நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், கூடிய விரைவில் நடத்திவிட வேண்டும் என்ற அவர்களுடைய ஆர்வமும் பல சந்தர்ப்பங்களில் இடதுசாரித் தவறுகளுக்குக் காரணம் ஆயின.

அதே சமயம், ''இடதுசாரிப் போக்கின்'' ஆழ்ந்த, வர்க்க வகைப்பட்ட வேர்கள் குட்டி பூர்ஷ்வாப் புரட்சித் தன்மையில் அடங்கியுள்ளன என்பதையும் லெனின் சுட்டிக்காட்டினார். குட்டி பூர்ஷ்வாக்களின் வெறிகொண்ட பாய்ச்சல்களையும் தொழிலாளி வர்க்கத்தின் மீது அவர்களுடைய நிர்ப்பந்தத்தையும் இது பிரதிபலிக்கிறது என்றார் அவர். லெனின் எழுதினார்: ''...சிறு உடைமையாளன், சிறு தொழிலதிபன் (பல ஐரோப்பிய நாடுகளில் மிக விரிவாக, பெருந்திரளாகப் பரவியிருக்கும் சமுதாய மாதிரி இவன்), முதலாளித்துவத்தில் நிரந்தரமான ஒடுக்குமுறையையும், நம்பமுடியாத அளவு திடீரெனவும் மிக அடிக்கடி விரைவாகவும் ஏற்படும் வாழ்க்கைச் சீர்கேட்டையும் அழிவையும் அனுபவித்து, அதிதீவிரப் புரட்சித் தன்மைக்கு எளிதாக மாறிவிடுகிறான். ஆனால் தாங்குதிறனும் ஒழுங்கமைப்பும் கட்டுப்பாடும் நிலையுறுதியும் கடைப்பிடிக்க அவன் வல்லமை அற்றவனாய் இருக்கிறான்.''[1]

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 32.

யுத்தக் காலத்தில் வறுமை அடைந்த திரளான குட்டி பூர்ஷ்வாக்கள் பாட்டாளி வர்க்க அணிகளுக்கு வந்தபோது, குட்டி பூர்ஷ்வாப் புரட்சித்தன்மை, அராஜகம், பொறுமையின்மை, தொழிலாளி வர்க்கத்தால் திரட்டப்பட்டுள்ள அனுபவத்தைப் புறக்கணித்தல் என்ற உணர்வையும் கொண்டு வந்தார்கள். இந்தக் காரணத்தால், புரட்சி இயக்கத்தில் ஈர்க்கப்பட்ட குட்டி பூர்ஷ்வாக்கள் மட்டும் இன்றி, அண்மையில் குட்டி பூர்ஷ்வா மையத்திலிருந்து வெளிவந்த தொழிலாளி வர்க்கப் பகுதியினரும் குட்டி பூர்ஷ்வாப் புரட்சித் தன்மையைப் பரப்புபவர்களாகச் செயல்பட்டார்கள். இந்த வட்டாரத்தினரின் கோரிக்கைகள், தாங்குதிறனுடனும் கட்டுப்பாட்டுடனும் போராடும் பயிற்சி இன்னும் பெறாத கம்யூனிஸ்டுகள் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கு விளைத்தன.

''இடதுசாரிக்'' கம்யூனிஸம், போலிப் புரட்சித்தன்மை கொண்ட போக்கு என்பதை லெனின் அம்பலப்படுத்தினார். இதற்கு போல்ஷிவிக்குகளின் அனுபவத்தை அவர் முதன்மையான ஆதாரமாகக் கொண்டார். போல்ஷிவிக்குகள், வலதுசாரி சந்தர்ப்பவாதத்துடன் மட்டும் இன்றி, குட்டி பூர்ஷ்வாக்களின் அரை அராஜகப் போக்குள்ள புரட்சித்தன்மையுடனும் கடும் போராட்டம் நிகழ்த்திப் பயிற்சி பெற்றுத் தேறியவர்கள் என்பதை அவர் குறிப்பிட்டார். இந்த அனுபவத்திலிருந்து பொதுவான முடிவுகள் பெறுவதும், உலகம் அனைத்தின் கம்யூனிஸ்டுகளுக்கும் இந்த அனுபவத்தை உடைமை ஆக்குவதுமே ''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'' என்ற நூலின் ஆசிரியரது முக்கிய நோக்கமாய் இருந்தது.

கம்யூனிஸ்டுப் போர்த்தந்திரம், செயல் தந்திரம் ஆகியவற்றின் விஞ்ஞான அடிப்படைகள் குறித்த பிரச்சினையை லெனின் முதன்மையாக எடுத்துக் கொண்டார். கொள்கையில் எல்லா வித அகநிலைப் போக்கையும் லெனின் கண்டனம் செய்தார். குறித்த அரசின் எல்லா வர்க்கச் சக்திகளையும் நிதானமாக, கண்டிப்பான எதார்த்த நோக்கில் கருத்தில் கொண்டு, உலக அளவில் இந்தச் சக்திகளின் வரிசைக் கிரமத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்த அடிப்படையில் கொள்கை வகுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ''...ஒரே ஒரு குழு அல்லது கட்சியின் விருப்பத்தையும் கண்ணோட்டங்களையும் அரசியல் உணர்வுத் தரத்தையும் போராட்டத்துக்கு ஆயத்தமாய் இருக்கும் அளவையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு'' கம்யூனிஸ்டுக்

கொள்கையை நிர்ணயிப்பது அனுமதிக்கத் தகாதது என்றார் அவர்.[1] கம்யூனிஸ்டுக் கொள்கையின் அடிப்படைகள் பற்றிய பிரச்சினையை ஆராய்ந்து, புரட்சி நிலைமையைப் பற்றியும் விஞ்ஞானம், கலை என்ற முறையில் கொள்கையைப் பற்றியும் போதனையை லெனின் தமது நூலில் விரிவுபடுத்தினார்.

கம்யூனிஸ்டுகளின் கொள்கையில் பொதுவானதற்கும் சிறப்பானதற்கும் சர்வதேசியத்திற்கும் தேசியத்திற்கும் உள்ள பரஸ்பர சம்பந்தம் பற்றிய லெனினுடைய வரையறுப்புக்கள் மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தன. வட்டார நிலைமைகளின் தனித்தன்மையைக் கருத்தில் கொள்ளாமல் வெவ்வேறு நாடுகளில் போல்ஷிவிக் செயல்தந்திரத்தைக் கண்மூடித்தனமாகக் காப்பி அடிப்பது, உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் குறிக்கோளுக்குப் பெரும் தீங்கு விளைக்கக் கூடும். எனவே, கம்யூனிஸ்டுத் தொழிலாளர் இயக்கத்தின் சர்வதேசச் செயல் தந்திரத்தின் ஒருமைக்குத் தேவைப்படுவது வேறுபாடுகளைக் களைந்தெறிவது அல்ல, தேசிய வேற்றுமைகளை ஒழிப்பது அல்ல என்றும், கம்யூனிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை **"தனிப்பட்டவையாகச் சரியான விதத்தில் உருமாற்றி,** தேசிய, தேசிய-அரசு வேறுபாடுகளுக்கு ஏற்ப அவற்றை இசைவித்துக் கையாளும்" முறையே என்றும் லெனின் அழுத்திக் கூறினார்.[2] 1916ம் ஆண்டிலேயே லெனின் வெளியிட்டிருந்த கருத்து இந்த முடிவில் மேற்கொண்டு விரிவுபடுத்தப்பட்டிருந்தது. "எல்லா நாட்டினங்களும் சோஷலிஸத்துக்கு வரும் என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் எல்லாம் முற்றிலும் ஒரே மாதிரியாக வர மாட்டா. ஜனநாயகத்தின் ஏதேனும் ஒரு வடிவிலோ, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஏதேனும் ஒரு விதத்திலோ, சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களில் சோஷலிஸ மாற்றங்களின் வேக வித்தியாசத்திலோ, ஒவ்வொரு நாட்டினமும் தனக்கே உரிய தன்மையைக் கொண்டு வரும்" என்று அப்போது அவர் எழுதியிருந்தார்.[3]

அக்டோபர் புரட்சியின் சர்வதேச மகத்துவத்தைப் பகுத்தாய்ந்து, போல்ஷிவிஸத்தின் வரலாற்றிலும் செயல்தந்திரத்திலும் எல்லோரும் கையாளத் தக்கதும் எல்லோருக்கும் முக்கியத்துவம்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 81.

[2] அதே நூல், பக்கம் 92.

[3] வி.இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 23, பக்கங்கள் 69-70.

உள்ளதும் எல்லோருக்கும் கட்டாயமானதும் ஆகிய அம்சத்தைச் சிறப்பாக எடுத்துக்காட்ட முதன்மையாக முயன்றார் லெனின். ருஷ்யப் புரட்சியில், தனிப்பட்ட, தேசியத் தனித்தன்மை இன்றி, சர்வப்பொதுவான தன்மை கொண்டிருந்த இத்தகைய அம்சங்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், ஒற்றுமையும் கட்டுப்பாடும் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சி நிலவியதும் என்று லெனின் கருதினார்.

ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பூர்ஷ்வாவர்க்கத்தின் எதிர்ப்பை ஒடுக்குவதும், தொழிலாளி வர்க்கத்துக்கும் சிறு சரக்கு உற்பத்தியாளர்களுக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தம் பற்றிய சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதும், பாட்டாளிகளையே குட்டி பூர்ஷ்வாக் காழ்ப்புக்களிலிருந்தும் வழக்கங்களிலிருந்தும் விடுவிப்பதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் முடியாது என்று சோவியத் ருஷ்யாவின் அனுபவம் காட்டியது. ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது, பழைய சமூகத்தின் சக்திகளுக்கும் மரபுகளுக்கும் எதிராக விடாப்பிடியான போராட்டம்—குருதிப்பெருக்கு உள்ளதும் இல்லாததும், வன்முறை உள்ளதும் அமைதியானதும், இராணுவத் தன்மை கொண்டதும் பொருளாதார வகைப்பட்டதும், போதனைத் துறையைச் சேர்ந்ததும் நிர்வாகத் துறையைச் சேர்ந்ததும் ஆன போராட்டம்'' என்று எழுதினார் லெனின்.[1]

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வர்க்க உள்ளடக்கத்தைக் குறுகிய, ஒருதலைச் சார்பான முறையில் புரிந்து கொள்ளாதிருக்கும்படி வெளிநாட்டுக் கம்யூனிஸ்டுகளை லெனின் எச்சரித்தார். இது பாட்டாளிகளுக்கும் பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளிகளின் பெருந்தொகையான வட்டாரங்களுக்கும் (குட்டி பூர்ஷ்வாக்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள்) இடையே வர்க்க ஐக்கியத்தின் தனிப்பட்ட வடிவம். இந்த ஐக்கியம் மூலதனத்துக்கு எதிரானது. பூர்ஷ்வா வர்க்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றுவதையும் அதன் எதிர்ப்பை ஒடுக்குவதையும் நோக்கமாகக் கொண்ட ஐக்கியம் இது. சோஷலிஸத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட ஐக்கியம் இது. வர்க்க ஐக்கியத்தினது இந்த வடிவத்தின் தனிச் சிறப்பு, பாட்டாளி வர்க்கம் இதில் தலைமை வகிக்கும் சக்தியாக விளங்குவதுதான் என்று லெனின் சுட்டிக் காட்டினார்.

கம்யூனிஸ்டுக் கட்சி இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கம் தன் பகைவர்கள் மீது வெற்றி பெற முடியாது என்பதை லெனின்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 44.

பின்னர் காட்டினர். சில இடதுசாரியினர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒப்புக் கொண்டார்கள், ஆனால் எஃகுக் கட்டுப்பாடும் கண்டிப்பான மத்தியத்துவமும் வெகுஜனங்களுடன் நெருக்கமான தொடர்பும் கொண்ட தொழிலாளர் கட்சியின் இன்றியமையாமையை மறுத்தார்கள். இவர்களுடைய கருத்துக்கள் முற்றிலும் ஆதாரமற்றவை என்பதை அக்டோபர் புரட்சியின் அனுபவத்தின் அடிப்படையில் லெனின் காட்டினர். கம்யூனிஸ்டுக் கட்சி என்பது பாட்டாளிகளுடைய வர்க்க ஒன்றிப்பின் ஆக உயர்ந்த வடிவம் என்று அவர் அழுத்திக் கூறினர். இத்தகைய கட்சி இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஏற்பட முடியாது என்றும் உழைப்பாளி வெகுஜனங்கள் தோல்வி அடைவது திண்ணம் என்றும் அவர் கூறினர். ''நமது கட்சியில் மிகக் கண்டிப்பான, உண்மையிலேயே எஃகு உறுதி வாய்ந்த கட்டுப்பாடும் தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனங்கள் அனைவரதும், அதாவது, அதில் சிந்திக்கும் திறனும் நேர்மையும் தன்னலமறுப்பும் செல்வாக்கும் மற்ற வட்டாரங்களைத் தம் பின் நடத்திச் செல்லவோ தம்பால் ஈர்க்கவோ திறமையும் கொண்ட எல்லோருடையவும் முழுமையான, தன்னலமற்ற ஆதரவும் இருந்திராவிட்டால், போல்ஷிவிக்குகள் இரண்டரை ஆண்டுகள் அல்ல, இரண்டரை மாதங்கள் கூட ஆட்சியில் நிலைத்திருக்க முடிந்திராது என்பதை இப்போது அனேகமாக எல்லாரும் நிச்சயமாகக் காண்கிறார்கள்'' என்று அவர் எழுதினர்.[1]

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இயக்க அமைப்பில் கட்சியின் பாத்திரம் என்ன என்பதை லெனின் தெளிவுபடுத்தினர். தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சி, உழைப்பாளிகளின் வெகுஜன ஸ்தாபனங்களின் வாயிலாக—தொழிற்சங்கங்கள், சோவியத்துக்கள், கூட்டுறவுக் கழகங்கள், இளைஞர் நிறுவனங்கள், பண்பாட்டு, கல்வி ஸ்தாபனங்கள் முதலியவற்றின் வாயிலாக—கட்சியின் உதவியால் செயல்படுத்தப்படுகிறது என்று அவர் எழுதினர். விளைவாக ஏற்படுவது சடங்குமுறையில் கம்யூனிஸ்டு அல்லாத, சமயோசிதமான, ஒப்புநோக்கில் விரிவான, சக்தியுள்ள பாட்டாளி வர்க்க அரசு இயந்திரம். இதன் வாயிலாக, கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் செயல்படுத்தப்படுகிறது.

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *31*, பக்கம் ***23*.**

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தில் தலைவர்களின் மிகப் பெரிய பாத்திரத்தையும் லெனின் வலியுறுத்தினர். இவ்வாறு செய்வது அவசியமாய் இருந்தது. ஏனெனில், சில நாடுகளில் ''இடதுசாரியினர்'' தலைவர்களின் பாத்திரத்தை மறுத்தார்கள். தலைவர்களுடன் ஒப்பிட்டால் கட்சியும் கட்சியுடன் ஒப்பிட்டால் வர்க்கமும் வர்க்கத்துடன் ஒப்பிட்டால் வெகுஜனங்களும் மேல் என்ருர்கள் இவர்கள். தலைவர்களின்பால் வெகுஜனங்களின் நட்பற்ற, சில வேளைகளில் பகைமைகூட நிறைந்த போக்கின் காரணம் வழக்கமாகப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களின் நடத்தைதான், அவர்கள் சந்தர்ப்பவாதத் தன்மையுடன் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அடி வருடுவதுதான் என்ருர் லெனின். ஆனல், பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைவர்கள் தேவை இல்லை என்று இது அர்த்தப்படாது. பாட்டாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தை வெல்ல விரும்பினல், தனக்கு உரிய பாட்டாளி வர்க்க அரசியல்வாதிகளை அது உருவாக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசியல் வாதிகளுக்குச் சளைக்காதவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு எழுதினர் லெனின்.

வெகுஜனங்களைப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் பிரச்சினை மீது லெனின் பெருத்த கவனம் செலுத்தினர். ஒடுக்குபவர்களுக்கு எதிராக உழைப்பாளிகளின் நிர்ணயகரமான போராட்டத்துக்கு ஏற்ற தருணத்தை நுட்பமாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளக் கம்யூனிஸ்டுகள் கற்க வேண்டும். முன்னணி ஒன்றை மட்டும் கொண்டு வெற்றி பெறுவது இயலாது என்று அவர் வலியுறுத்தினர். வர்க்கம் அனைத்தும் வெகுஜனங்களும் முன்னணிக்கு நேர்முக ஆதரவு அளிக்கும் நிலையையோ, அல்லது குறைந்தபட்சம் அதன்பால் நல்லெண்ணமுள்ள நடுநிலையையோ மேற்கொள்ளாதபோது, அவர்கள் முன்னணியின் எதிரிகளுக்கு ஆதரவளிக்க முற்றிலும் வல்லமை அற்றவர்களாய் இல்லாதபோது முன்னணியைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவது வெறும் அசட்டுத்தனம் மட்டும் அல்ல, கடும் குற்றமும் ஆகும் என்ருர் அவர்.

ஒடுக்குவோரை வீழ்த்துவதற்குத் தொழிலாளி வர்க்கத்தையும் எல்லா உழைப்பாளிகளையும் அறைகூவி அழைத்தால் போதும், வெகுஜனங்கள் இந்த அறைகூவலை உடனே ஏற்றுப் போராட்டத்தில் குதித்துவிடுவார்கள் என்று பல ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் வெகுளித்தனமாக எண்ணினர்கள். வெகுஜனங்கள் புரட்சிப் போராட்டத்தின் இன்றியமையாமையைப் புரிந்து கொள்

ளும்படி இந்த முறையால் செய்ய இயலாது என்று லெனின் உளத்தில் பதியும் விதத்தில் காட்டினர். "...இதற்குப் பிரசாரம் மட்டும், கிளர்ச்சி மட்டும் போதாது. இதற்கு, இந்த வெகுஜனங்களின் சொந்த அரசியல் அனுபவம் தேவை. எல்லா மாபெரும் புரட்சிகளுடையவும் அடிப்படை விதி இது" என்று அவர் கூறினர்.[1] தக்க நிலையை மேற்கொள்ளவும் அனுபவம் பெறவும் அதன் உதவியால் பின்னர் சோஷலிஸப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் முடிவாகத் திரும்பவும் வெகுஜனங்களுக்கு உதவுவது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முதன்மையான பணி என்று லெனின் கருதினர்.

இந்தப் பணியின் நிறைவேற்றத்துக்கு முக்கியத் தடையாய் இருந்தது இடதுசாரிப் போலிச் சித்தாந்தவாதம். பூர்ஷ்வா நாடாளுமன்றங்களிலும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களிலும் வேலை செய்ய "இடதுசாரிக்" கம்யூனிஸ்டுகளின் விருப்பமின்மை, எந்த வகையான சமரசத்துக்கும் மறுப்பு ஆகியவற்றில் இது வெளிப்பட்டது. "இடதுசாரியினர்" தாங்கள் கம்யூனிஸ போதனையின் தூய்மையைக் காக்கப் போரிடுபவர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். எவ்வித அரசியல் சமரசங்களும் கோட்பாட்டு நோக்கில் அனுமதிக்கத் தகாதவை என்றார்கள் அவர்கள். "தொழிற்சங்கங்களிலிருந்து வெளியேறுவோம்!" என்ற அபத்தமான கோஷத்தைக் கிளப்பினர்கள். நாடாளுமன்ற முறை "வரலாற்று நோக்கிலும் அரசியல் நோக்கிலும் பயன்பாட்டை இழந்துவிட்டது" என்று அறிவித்தார்கள். பிரிவுவாதக் குறுகிய நோக்கும் ஒதுக்கமும், அவை சீர்திருத்தவாத அரசியலாளர்கள் மீது தொழிலாளர்களுக்கு நியாயமாக ஏற்படும் வெறுப்பினுலும் அருவருப்பினுலும் விளைந்தவை ஆயினும், லெனினல் மிகக் கடுமையாக நிந்திக்கப்பட்டன. பாட்டாளி, அல்லது அரைப் பாட்டாளி வெகுஜனங்கள் இருக்கும் இடங்கள் எல்லாவற்றிலும், எல்லாவித நிலையங்களிலும் சமுதாயங்களிலும் சங்கங்களிலும், அவை மிக மிகப் பிற்போக்கானவையாக இருந்தாலும், முறையாக, விடாப்பிடியாக, பிடிவாதத்துடனும் பொறுமையுடனும் பிரசாரமும் கிளர்ச்சியும் செய்யும் பொருட்டு எல்லா விதமான தியாகங்களும் செய்யவும் பெரியவற்றிலும் பெரிய தடைகளைக் கடக்கவும் திறன் பெற்றிருக்க வேண்டும் என்று அவர் கற்பித்தார்.

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 93.

''போல்ஷிவிக்குகளான நாங்கள் மிக மிகப் புரட்சி விரோதமான நாடாளுமன்றங்களில் பங்கு கொண்டோம்'' என்று எழுதினார் லெனின். ''இவ்வாறு பங்கு கொண்டது, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சிக்குப் பயனுள்ளதாக மட்டும் அல்ல, இன்றியமையாததாகவும் இருந்தது...''[1] மேற்கு ஐரோப்பாவில் பூர்ஷ்வா-ஜனநாயக, நாடாளுமன்ற மரபுகள் விரிவான வெகுஜனங்களின் உணர்வில் ஆழமாக வேரூன்றிவிட்டன. எனவே, நாடாளுமன்ற நடவடிக்கைகள் மேற்கு ஐரோப்பியக் கம்யூனிஸ்டுகளுக்கு இன்னும் அதிக அவசியமாய் இருந்தன. நாடாளுமன்றம் என்பது போராட்ட அரங்கு. அந்தப் போராட்டத்தில் எல்லா வர்க்கங்களும் கலந்து கொள்கின்றன. அங்கே எல்லா வர்க்க நலன்களும் மோதல்களும் வெளிப்படுகின்றன. இவ்வாறு விளக்கினார் லெனின் நாடாளுமன்றப் பேச்சு மேடை மிக விரிவான குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களின் உணர்வை உருவாக்குவதற்குப் பெருத்த முக்கியத்துவம் உள்ளது. எனவே நாடாளுமன்றத் தேர்தல்களிலும் நாடாளுமன்றப் பேச்சு மேடைப் போராட்டத்திலும் கலந்து கொள்வது, தனது வர்க்கத்தின் பின்தங்கிய பகுதிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு, வளர்ச்சி அடையாத, அடக்கி ஒடுக்கப்பட்ட, அரசியல் அறிவு அற்ற நாட்டுப்புற வெகுஜனங்களுக்கு விழிப்பூட்டுவதற்குப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சிக்குக் கட்டாயமானது.

நாடாளுமன்ற முறையை எதிர்ப்பது, வழக்கத்துக்கு மாறான, சந்தர்ப்பவாதப் போக்கு அற்ற, பதவி மோகம் இல்லாத நாடாளுமன்ற முறையை ஏற்படுத்தும் சிக்கலான காரியத்திலிருந்து நழுவி விலகும் முயற்சி என்று லெனின் மதித்தார். அதே சமயம், போராட்டத்தின் நாடாளுமன்ற வடிவத்தை மிகையாக மதிப்பிடலாகாது என்று அவர் கம்யூனிஸ்டுகளை எச்சரித்தார். முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் அல்ல, தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனப் புரட்சிப் போராட்டத்தினாலேயே தீர்க்கப்படும் என்று அவர் அழுத்திக் கூறினார்.

சிறிதளவும் விதி விலக்கின்றிப் போராட்டத்தின் எல்லா வடிவங்களிலும் — சட்டபூர்வமானவை, சட்டப் புறம்பானவை, அமைதியானவை, அமைதிஅற்றவை, நாடாளுமன்றவகையானவை, நாடாளுமன்றத்துக்குப் புறம்பானவை முதலிய எல்லா வடி

---

[1] அதே நூல், பக்கம் 61.

வங்களிலும்—தேர்ச்சி பெறும்படியும், ஒரு வடிவத்திலிருந்து மறு வடிவத்திற்கு மிக மிக விரைவான திடீர் மாற்றத்துக்கு ஆயத்தமாய் இருக்கும் படியும் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு லெனின் கற்பித்தார். கம்யூனிஸ்டுகள் சமயோசிதமான செயல் தந்திரத்தையும் அரசியல் சமரசத்தையும் கையாளும் கலையில் முழுமையான தேர்ச்சி பெற்றிருந்தால்தான் இந்தத் தேவைகளை நிறைவேற்றுவது அவர்களுக்கு இயலும். அதிக வலிமை உள்ள எதிரியை வெல்வது, சக்திகளை எல்லாம் மிக ஒருமுனைப்பாட்டுடன் ஈடுபடுத்தினுல் தான் முடியும். அதே சமயத்தில் பகைவர்களுக்கு இடையில் ஏற்படும் எல்லா வகையான, மிக மிகச் சிறிய ''பிளவையும்'' அதேபோல மிக மிகத் தாற்காலிகமான, நிலையில்லாத, உறுதியற்ற, நம்பகமற்ற, வெகுஜனக் கூட்டாளியைக் கூடப் பெறும் எல்லா விதமான, மிக மிக அற்ப வாய்ப்பையும் கட்டாயமாக, மிகக் கவனமாக, அக்கறையுடன், எச்சரிக்கையுடன், திறமையாகப் பயன்படுத்திக் கொண்டால்தான் இத்தகைய பகைவனை வெல்ல முடியும் என்ருர் லெனின்.

எந்த வகையான சமரசத்துக்கும் மறுப்பது சிறப்பான புரட்சித் தன்மையின் அறிகுறி என்று பல ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் நினைத்தார்கள். அவர்களுடைய நடத்தை பிளாங்கிஸ்டுகளின்[1] நிலையைப் போல இருந்தது. இடை நிலையங்களில் நிற்காமலும் சமரசங்களுக்கு இணங்காமலும் கம்யூனிஸ்டுகள் தங்கள் குறிக்கோளை அடைய முடியும் என்று பிளாங்கிஸ்டுகள் கூறினுர்கள். சமரசங்கள் வெற்றி நாளைத் தள்ளிப் போடவும் அடிமைத்தனத்தை நீடிக்கவும் மட்டுமே செய்கின்றன என்ருர்கள் அவர்கள். எங்கெல்ஸ், பத்தொன்பதாம் நூற்ருண்டின் எழுபதுக்களிலேயே இத்தகைய கருத்துக்களைத் தாக்கி விமர்சித்திருந்தார்.[2] ஆயினும்

---

[1] **பிளாங்கிஸ்டுகள்**—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் தோன்றிய ஒரு போக்கின் ஆதரவாளர்கள்; தலைசிறந்த புரட்சியாளரும் பிரெஞ்சுக் கற்பனுவாதக் கம்யூனிசத்தின் பெயர்பெற்ற பிரதிநிதியுமான லுயீ ஒகூஸ்ட் பிளான்கீ [Blanqui] *(1805-1881)* இந்தப் போக்கிற்குத் தலைமை தாங்கினுர். ''கூலி அடிமை நிலையிலிருந்து மனிதகுலம் விடுதலை பெற பாட்டாளி வர்க்கப் போராட்டம் தேவையில்லை, சிறுபான்மை அறிவுத்துறையினரின் சிறு கோஷ்டியின் சதிகள் மூலம் இதைச் செய்துவிடலாம்'' (வி.இ. லெனின்) என்று பிளாங்கியர்கள் நம்பினர்.—(மொ-ர்.)

[2] பார்க்க: **கார்ல் மார்க்சும் ஃபிரிட்ரிஹ் எங்கெல்சும். நூல்** திரட்டு, தொகுதி *18*, பக்கங்கள் *510-517*.

சமரசங்களுக்கு எதிரான போக்கைப் பல புரட்சிக்காரர்கள் கைவிடவில்லை. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் துரோகத் தன்மை கொண்ட சமரசங்கள் மட்டுமீறி அதிகமாக இருந்ததே இந்தப் போக்குக்குப் பெருமளவு காரணம்.

ஆனால் சமரசங்கள் எல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல என்றும் அவற்றை ஒரு மொத்தமாக, ''கோட்பாட்டு நோக்கில்'' நிராகரிப்பது கூடாது என்றும் லெனின் கற்பித்தார். போல்ஷிவிக் கட்சி இன்றியமையாத சந்தர்ப்பங்களில் வளைந்து கொடுக்கவும் சமரசம் செய்து கொள்ளவும் தயங்கவில்லை என்றார் அவர்.

நிர்ப்பந்தம் காரணமாகச் செய்துகொள்ளப்பட்ட சமரசங்களில் ஒன்று பிரேஸ்த் உடன்படிக்கை.[1] இது இளம் சோவியத் குடியரசின் மீது வலுக்கட்டாயமாகச் சுமத்தப்பட்டது. ''இடது சாரிக்'' கம்யூனிஸ்டுகளின் நோக்கில், ஏகாதிபத்தியவாதிகளுடன் செய்துகொள்ளப்படும் எந்த சமரசத்தையும் போலவே இது அனுமதிக்கத் தகாததாக இருந்தது. உண்மையிலோ, அப்போது நிலவிய ஸ்தூல நிலைமைகளில் இந்த சமரசம் கட்டாயமாக இருந்தது. ஏனென்றால் ருஷ்யாவில் சோவியத் ஆட்சியை நிலையாக வைத்திருப்பதற்கும், ஜெர்மனியிலும் பிற நாடுகளிலும் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கும் இது நிர்ணயகரமான முக்கியத்துவம் கொண்டிருந்தது.

எந்த விதமான சமரசங்கள் செய்துகொள்வதற்கும் வழிகாட்டியாகப் பயன்படக் கூடிய பொது விதியை, எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற விதியை உருவாக்குவது இயலாது என்று லெனின் பல முறை அழுத்திக் கூறினார். ஒவ்வொரு தனி சந்தர்ப்பத்திலும் நிலைமையைப் புரிந்துகொள்ளச் சொந்த மூளை இருக்க வேண்டும் என்றார் அவர். ''சமரசங்கள் பற்றி'' என்னும் கட்டுரையில் (1920ம் ஆண்டு வசந்தம்) லெனின் சொன்னார்: ''சமரசங்களி

---

[1] பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் உடன்படிக்கை—சோவியத் ருஷ்யாவுக்கும் நாலவர் கூட்டணிக்கும் (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகியவற்றாலானது) இடையே பிரேஸ்த்-லித்தோவ்ஸ்கில் 1918 மார்ச் 3ல் கையெழுத்தானது. இதன் ஷரத்துகள் சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் பாதகமாயிருந்தன. ஜெர்மனியில் 1918 நவம்பரில் புரட்சி நடைபெற்று முடியாட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து நவம்பர் 13ல் அனைத்து-ருஷ்ய மத்தியச் செயற் குழு கொள்ளைக்கார பிரேஸ்த்-லித்தோவ்ஸ்க் ஒப்பந்தத்தை நிராகரித்தது.—(மொ-ர்.)

லிருந்து விலகி ஒதுங்குவது கூடாது. மிகப் புரட்சித்தன்மை உள்ள கட்சி மீதும் மிகப் புரட்சித் தன்மை கொண்ட வர்க்கத்தின் மீதும் சில வேளைகளில் சூழ்நிலை காரணமாகத் தவிர்க்க இயலாதவாறு சுமத்தப்படும் எல்லா சமரசங்களுக்கும் பிறகும் தொழிலாளி வர்க்கத்தினுடையவும் அதன் ஸ்தாபன முன்னணியான கம்யூனிஸ்டுக் கட்சியினுடையவும் புரட்சிச் செயல்தந்திரத்தையும் ஒழுங்கமைப்பையும் புரட்சி உணர்வையும் உறுதியையும் ஆயத்தத் தன்மையையும் காப்பாற்றிக் கொள்ளவும் வலுவாக்கவும் உரப்படுத்தவும் வளர்க்கவும் திறன் பெற்றிருப்பதே முக்கியமானது.''[1]

பூர்ஷ்வாக்கள் பக்கம் திரும்பும் நபர்களை எதிர்த்துப் போராடுவதோடு கூடவே பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் திரும்பும் நபர்களுக்கு, அவர்கள் அவ்வாறு செய்யும் சந்தர்ப்பங்களில், விட்டுக்கொடுப்பதில்தான் கம்யூனிஸ்டுகளின் சரியான செயல்தந்திரம் அடங்கி இருக்க வேண்டும் என்று லெனின் கற்பித்தார். ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது கோட்பாடுகளைக் கைவிடாமல் இருக்க வேண்டும் என்பது சமரசங்கள் பற்றி லெனினது மிக முக்கியக் கோரிக்கையாக விளங்கியது.

இவ்வாறு, லெனினுடைய நூல், கம்யூனிஸ்டுப் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் பற்றிய உண்மையான கலைக்களஞ்சியமாகத் திகழ்ந்தது. போல்ஷிவிக்குகளின் அனுபவச் செல்வம் அனைத்தையும் மேற்கு நாடுகளின் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அது வழங்கியது.

''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'' என்ற லெனினது நூல், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் விரிவாகப் பரவியது. 1920ம் ஆண்டுக் கோடையில், கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கூடவிருந்தபோது, இது ருஷ்ய, ஆங்கில, பிரெஞ்சு மொழிகளில் மாஸ்கோவில் வெளியிடப்பட்டது. அதே ஆண்டு இது ஜெர்மனி, பிரிட்டன், பிரான்சு, பல்கேரியா, ஆர்ஜெண்டீனா, ஹாலந்து, சுவீடன் ஆகிய நாடுகளில் பிரசுரிக்கப்பட்டது. 1921ல் இத்தாலியிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஃபின்லாந்திலும் இதன் பதிப்புக்கள் வெளிவந்தன. பலவேறு நாடுகளைச் சேர்ந்த அரசியல் உணர்வுள்ள பெரும்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 492.

பாலான தொழிலாளர்களும் கம்யூனிஸ்டுகளும் இந்த நூலே உயர் வாக மதித்து உற்சாகத்துடன் ஆதரித்தார்கள்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைத்தவர்களில் ஒரு வரான வி. காலாஹர், லெனினது நூலே முதன்முறை படித்த போது தமக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைப் பின்னர் விவரித்தார். அவர் எழுதிஞர்: ''ஜெர்மனியைப் பற்றிய பகுதியை நோட்டமிட்டு விட்டு, பிரிட்டனைப் பற்றிக் கூறும் பகுதியைப் படிக்கத் தொடங் கினேன். நானே அதில் கெட்ட உதாரணமாக வருணிக்கப்பட்டிருந் ததைக் கண்டு பதைத்தேன்!... லெனினது நூலில் நான் இப்போது படித்த விவரங்கள், எனக்கு அதிர்ச்சி ஏற்படுத்தின''.[1] லெனினது நூலே ஆழ்ந்த கவனத்துடன் படித்ததும், உலகப் பாட்டாளி வர்க் கத்தின் அந்த மாபெரும் தலேவரை நேரில் கண்டு உரையாடியதும், தங்கள் தவறுகளைப் போக்கிக் கொள்ளவும் கடினமான புரட்சிப் போராட்டத்தில் சரியான வழியைக் காணவும் காலாஹருக்கும் வேறு பல கம்யூனிஸ்டுகளுக்கும் உதவின.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரத்தையும் செயல்தந் திரத்தையும் ஸ்தாபனக் கோட்பாடுகளேயும் குறித்த மிக முக்கியப் பிரச்சினைகள் பற்றிய லெனினது நூல், மார்க்சிய-லெனினியக் களஞ்சியத்தில் அழியாத செல்வத்தைச் சேர்த்தது. இன்றும் அது மிகப் பெருத்த உடனடி முக்கியத்துவம் கொண்டிருக்கிறது. அரசியல் போராட்டக் கலேயை, வெற்றி பெறும் கலேயை அது இன்றும் கம்யூனிஸ்டுகளுக்குக் கற்பிக்கிறது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த் தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் தயாரிக்கிறது

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கூடிய சமயத்தில், உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் கணிசமாக வளர்ந்து வலுப்பெற்றிருந்தது, எல்லாக் கண்டங்களிலும் வெற்றிகள்

[1] மாபெரும் அக்டோபர் புரட்சியும் உலக விடுதலே இயக்க மும். தொகுதி 2, மாஸ்கோ, 1958, பக்கம் 106.

8*

பெற்றிருந்தது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் தேசியப் படைப் பிரிவுகள், தங்கள் வெற்றிகளுக்கு, உலகத் தொழிலாளர் இயக்கத்தின் திசையை மாற்றி அமைப்பதில் கம்யூனிஸ்டு அகிலமும் தனிப்பட்ட முறையில் லெனினும் ஆற்றிய பெருந் தொண்டுகளுக்குக் கணிசமான அளவில் கடமைப்பட்டிருந்தன. ''உண்மையில் சீர்திருத்தவாத வகையான, புரட்சி வண்ணத்தில் மேலாக மட்டுமே நிறம் பூசப்பட்ட, ஐரோப்பிய நாடாளுமன்றமுறையைச் சேர்ந்த பழையவகையான கட்சியை, புது வகையான கட்சியாக, உண்மையில் புரட்சித்தன்மை கொண்ட, உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சியாக மாற்றி அமைப்பது, அளவுமீறிக் கடினமான விஷயம்''[1] என்று பின்னர் எழுதினார் லெனின். ஆயினும் இந்தச் செயல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

கம்யூனிஸத்தின் விரைந்த வளர்ச்சியோடு கூடவே இரண்டு தவறுகள் அல்லது பலவீனங்களும் வெளிப்பட்டன. இவை இயக்கம் மேற்கொண்டு வளர்வதற்குத் தடையாய் இருந்தன. இடைநிலைக் கொள்கைவாதத்தையும் நடைமுறையையும் உண்மையில் இன்னும் கைவிடாத பல சோஷலிஸ்டுக் கட்சிகள் மூன்றாவது அகிலத்தில் சேர மனுச் செய்துகொண்டது இவற்றில் ஒன்று. இந்த நிலைமை வலுவான கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைந்து வளர்ச்சி பெறுவதற்குத் தடையாய் இருந்தது. கம்யூனிஸ்டு இயக்கத்தில் சோஷலிஸ-சந்தர்ப்பவாதம் நுழைந்துவிடும் அபாயமும் புரட்சித் தன்மை குலைந்துவிடும் அபாயமும் இதனால் ஏற்பட்டன. இடதுசாரிப் போக்கில் நாட்டமும் வழக்கமான வெகுஜன ஸ்தாபனங்களில் வேலை செய்யவும், முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட உழைப்பாளி வெகுஜனங்களைக் கொண்டு புரட்சியின் அரசியல் சைனியத்தைத் தயாரிக்கவும் சில கம்யூனிஸ்டுகளுக்கு விருப்பம் இல்லாமையும் இரண்டாவது தவறாக இருந்தன.

1919, 1920ம் ஆண்டுகளில் நடந்த வர்க்கப் போராட்டங்களின் படிப்பினைகள் இந்தத் தவறுகளால் நேரக் கூடிய மிகப் பெருத்த அபாயத்தை வலியுறுத்தின. உலகப் புரட்சி இயக்கத்தின் மிகச் சிக்கலான பிரச்சினைகளை இவை கம்யூனிஸ்டு அகிலத்தின் முன் வைத்தன. சோஷலிஸப் புரட்சியில் புது வகைப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் பாத்திரத்தையும், வெகுஜனங்களுக்காகக்

---

[1] வி.இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 209.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்டத்தையும், ஆட்சிக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகளையும் பற்றியவை இந்தப் பிரச்சினைகள். முக்கியமான இந்தப் பிரச்சினைகளை ஆராயும் பொருட்டே கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கூடியது.

முப்பத்தேழு நாடுகளைச் சேர்ந்த அறுபத்தேழு ஸ்தாபனங்களின் இருநூற்றுப் பதினேழு பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்துகொண்டார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகளும் குழுக்களும் சில சிண்டிகலிஸ்டு ஸ்தாபனங்களும் காங்கிரசில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. ஜெர்மன் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சி, பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி என்னும் இரண்டு இடைநிலைவாதிக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆலோசனை வாக்கு பெற்றுக் காங்கிரசில் கலந்துகொண்டார்கள். காங்கிரசின் ஆரம்பக் கூட்டம், 1920, ஜூலை 19ந் தேதி பெத்ரோகிராதில் நடந்தது. மற்றக் கூட்டங்கள் ஜூலை 23ந் தேதி முதல் ஆகஸ்டு 7ந் தேதி வரை மாஸ்கோவில் நடைபெற்றன. செஞ்சேனை பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவப் போலந்தின் தாக்குதலை முறியடித்து, வார்சா நகரை நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருந்ததால் எல்லோருக்கும் உற்சாகம் பொங்கிய சூழ்நிலையில் காங்கிரஸ் வேலை செய்தது. எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகள் சோவியத் ருஷ்யாவின் உழைப்பாளிகளுடன் தங்கள் ஒருமைப்பாட்டை உளப்பூர்வமாக வெளியிட்டார்கள். விரிவான வெகுஜனங்களை ஆட்கொண்டிருந்த உற்சாகம் காங்கிரஸ் பிரதிநிதிகளிடையிலும் பரவியது.

காங்கிரசின் எல்லா நடவடிக்கைகளும் லெனினுடைய தலைமையில் நடந்தன. காங்கிரசுக்கு நுட்பமான முன்னேற்பாடுகளைச் செய்வதில் லெனின் பெருத்த கவனம் செலுத்தியிருந்தார். ''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'' என்ற நூல் மூன்று மொழிகளில் முன்னதாக அச்சடிக்கப்பட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. அப்போது எதிர்ப்பட்டிருந்த அனேகமாக எல்லாப் பிரச்சினைகளையும் பற்றி முக்கிய அறிக்கையும் ஆய்வுரைகளும் லெனின் தயாரித்திருந்தார். காங்கிரசின் பத்து கமிஷன்களில் மூன்றின் நடவடிக்கைகளில் அவர் பங்கு கொண்டார்.

காங்கிரசின் முதல் கூட்டத்தில் சர்வதேச நிலைமையையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் முக்கியக் கடமைகளையும் பற்றி லெனின் உரை ஆற்றினர். கம்யூனிஸ்டுகளின் புரட்சி நடவடிக்கைகளது

அடிப்படை என்ற முறையில் உலகப் புரட்சி நெருக்கடியை அவர் ஆழ்ந்து பகுத்தாராய்ந்தார். இந்த நெருக்கடி பற்றி அந்தக் காலத்தில் பரவியிருந்த இரண்டு தவறான மதிப்பீடுகளை அவர் விமர்சித்தார். இந்த நெருக்கடி வெறும் ''அமைதியின்மை'' என்றும் இது விரைவில் சீர்பட்டுவிடும் என்றும் ஒரு புறம் சீர்திருத்தவாதிகள் கூறினார்கள். தொழிலாளி உயர்குடியினரின் சுயநலங்களும் பூர்ஷ்வா ஆட்சியை வீழ்த்துவதற்குப் புரட்சி நெருக்கடியைப் பயன்படுத்த அவர்களுக்கு விருப்பம் இல்லாமையும் இந்த மதிப்பீட்டுக்கு அடிப்படையாக இருந்தன. ''சந்தர்ப்பவாதம் நம்முடைய முக்கிய எதிரி'' என்றார் லெனின். ''தொழிலாளர் இயக்கத்தின் மேல் மட்டங்களில் சந்தர்ப்பவாதம் என்பது பாட்டாளி வர்க்க சோஷலிஸம் அல்ல, பூர்ஷ்வா வர்க்க சோஷலிஸமே ஆகும். தொழிலாளர் இயக்கத்தின் உள்ளே இருக்கும் சந்தர்ப்பவாதப் போக்கைச் சேர்ந்த தலைவர்கள் பூர்ஷ்வாக்களைக் காட்டிலும் மேலாக பூர்ஷ்வா வர்க்கத்தைக் காப்பவர்கள் என்பது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தொழிலாளர்களுக்குத் தலைமை வகிக்காவிட்டால் பூர்ஷ்வா வர்க்கத்தால் நிலைத்திருக்க முடிந்திராது.''[1]

இந்த நெருக்கடியிலிருந்து தப்ப பூர்ஷ்வா வர்க்கத்துக்கு வழியே கிடையாது என்று மறு புறம் சில ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் எண்ணினார்கள். முதலாளித்துவம் தானாகவே தகர்ந்து விழுந்து விடும் என்ற தவறான சித்தாந்தமும் குறைந்த அனுபவமுள்ள கம்யூனிஸ்டுகளின் பொறுமையற்ற புரட்சித் துடிப்பும் இந்தக் கருத்துக்கு அடிப்படையாக இருந்தன. ''தப்ப வழியே இல்லாத நிலைமைகள் எவையும் கிடையா'' என்று எழுதினார் லெனின். ''பூர்ஷ்வா வர்க்கம், அறிவிழந்து முரட்டுத் துணிச்சல் கொண்ட காட்டு விலங்கு போல நடந்து கொள்கிறது. அது ஒன்றன்பின் ஒன்றாக முட்டாள்தனம் செய்து, நிலைமையைத் தீவிரமாக்கி, தனது அழிவை விரைவுபடுத்துகிறது. இதெல்லாம் உண்மைதான். ஆயினும், சுரண்டப்படும் யாரேனும் சிறுபான்மையினருக்கு எவையேனும் விஷயங்களில் விட்டுக் கொடுப்பதும், ஒடுக்கவும் சுரண்டவும் படுவோரின் ஒரு பகுதியினருடைய ஏதேனும் இயக்கத்

---

[1] **வி.இ.லெனின்.** *முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 231.*

தையோ கலகக் கிளர்ச்சியையோ நசுக்குவதும் அதற்கு அறவே இயலாது என்று 'நிரூபிக்க' முடியாது.''[1]

முதிர்ந்து வரும் புரட்சி நிலைமையில் அகநிலைக் காரணி நிர்ணயகரமான முக்கியத்துவம் உள்ளது என்று லெனின் வலியுறுத்தினுர். அவர் சொன்னுர்: ''உலகம் முழுவதிலும் பூர்ஷ்வா அமைப்பு மிகப் பெரிய புரட்சி நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. இந்த நெருக்கடியை இடையருது முன்னேறும் வெற்றிகரமான புரட்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான அளவு அரசியல் உணர்வும் ஒழுங்கமைப்பும் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களுடன் தொடர்பும் சித்த உறுதியும் திறமையும் தங்களிடம் உள்ளன என்பதைப் புரட்சிக் கட்சிகள் தங்கள் நடைமுறையால் இப்போது 'நிரூபிக்க' வேண்டும்''[2]

உலகப் பொருளாதார, அரசியல் சூழ்நிலையின் தன்மையை லெனின் சித்திரித்தார். அது அசாதாரணமான அளவு எரிபொருள்களால் நிறைந்திருக்கிறது என்றும் அவை திடீரென்று மூண்டெரிவதற்கு வேண்டிய காரணங்களும் நிறைய இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். ஆளும் வர்க்கங்களின் பொதுவான நெருக்கடி நிலைமை வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனுல் சங்கடம் என்னவென்ருல், பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கம் தனது சர்வாதிகாரத்தை நிலைநாட்ட இன்னும் ஆயத்தமாகவில்லை என்பதே. பாட்டாளி வர்க்கத்தைச் செயல்களின் மூலம் புரட்சிக்குத் தயார் செய்வதைத் தீவிரப்படுத்துவதே இப்போது எதிர்ப்பட்டுள்ள பணி. இதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றுவது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கடமை ஆகும்.

எல்லா நாடுகளிலும் புது வகையான பாட்டாளி வர்க்கக் கட்சிகளை அமைத்து வலுப்படுத்துவது கம்யூனிஸ்டு அகிலத்தினது இரண்டாவது காங்கிரசின் மையப் பிரச்சினையாக இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் முக்கியப் பணிகள் பற்றி லெனின் எழுதிய ஆய்வுரை காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிதறி இருக்கும் கம்யூனிஸ்டுச் சக்திகளை ஒன்றுசேர்ப்பதும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரே கம்யூனிஸ்டுக் கட்சியை அமைப்பதும் (அல்லது ஏற்கனவே நிலவும் கட்சியை வலுவாக்கிப் புதுக்குவதும்), இவற்றின் மூலம், அரசு அதிகாரத்தைப் போராடிப் பெறவும், அதிலும்

---

[1] அதே நூல், பக்கம் 227.
[2] அதே நூல், அதே பக்கம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவில் ஆட்சியை நிலை நாட்டவும் பாட்டாளி வர்க்கத்தை ஆயத்தப்படுத்தும் வேலையைப் பதின் மடங்காகப் பெருக்குவதுமே முக்கியப் பணி என்று இந்த ஆய்வுரையில் கூறப்பட்டது.

சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்தி வெளியேற்றாமல், ''இடது சாரித்'' தவறுகளை நீக்காமல், வெகுஜனங்களைக் கம்யூனிஸ்டுகளின் தரப்புக்கு ஈர்க்காமல், பூர்ஷ்வா வர்க்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றி ஒழிப்பதற்குத் தொழிலாளி வர்க்கத்தை ஆயத்தப்படுத்துவது முடியாது. ''மூன்றாவது அகிலத்தில் சேர்ந்த கட்சிகள் எல்லாம் பின்வரும் கோஷத்தை எப்பாடுபட்டாவது செயல்படுத்த வேண்டும்: 'வெகுஜனங்களிடையே இன்னும் ஆழமாகப் புகுவோம்', 'வெகுஜனங்களுடன் இன்னும் நெருக்கமாகத் தொடர்பு கொள்வோம்'. இங்கே வெகுஜனங்கள் எனப்படுபவர்கள் உழைப்பாளிகளும் மூலதனத்தால் சுரண்டப்படுபவர்களுமான யாவருமே—சிறப்பாக, ஆகக் குறைந்த ஒழுங்கமைப்பு உள்ளவர்களும் ஆகக் குறைந்த அரசியல் அறிவு பெற்றவர்களும், ஆக அதிகமாக ஒடுக்கப்பட்டிருப்பவர்களும் ஒழுங்கமைக்கக் கடினமானவர்களுமான மக்கள்'' என்று ஆய்வுரையில் கூறப்பட்டது.[1]

தொழிலாளி வர்க்கத்துடனும் உழைப்பாளி வெகுஜனங்களுடனும் புது வகைக் கட்சியின் பரஸ்பர உறவுகள் காங்கிரசின் இன்னொரு தீர்மானத்தில் விளக்கப்பட்டன. ''பாட்டாளி வர்க்கப் புரட்சியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் பாத்திரம்'' என்பது தீர்மானத்தின் தலைப்பு. கட்சி என்ற சொல்லையும் வர்க்கம் என்ற சொல்லையும் கண்டிப்பாக வேறுபடுத்திப் புரிந்து கொள்வது அவசியம் என்று இந்தத் தீர்மானம் கூறியது. கம்யூனிஸ்டுக் கட்சி, தொழிலாளி வர்க்கத்தின் பகுதி, அதாவது, அதன் மிக முன்னணியில் உள்ள, யாவற்றிலும் அதிக அரசியல் உணர்வு பெற்ற, யாவற்றிலும் புரட்சித்தன்மை மிக்க பகுதி. கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாதை முழுவதையும் பார்வையிடுகிறது. இந்தப் பாதையின் எல்லாத் திருப்பங்களிலும், தனிக் குழுக்களின் நலன்களையோ தனித் தொழில்களின் நலன்களையோ அல்ல, தொழிலாளி வர்க்கம் அனைத்தின் நலன்களையும் காப்பதற்கு அது முயல்கிறது. தொழிலாளி வெகுஜனங்கள் அனைவருக்கும்

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ். 1920 ஜூலை—ஆகஸ்டு, மாஸ்கோ, 1934, பக்கங்கள் 474-475.

கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. கம்யூனிஸ்டுக் கட்சி, ஸ்தாபன-அரசியல் விசை, அதன் உதவியாலேயே தொழிலாளி வர்க்கத்தின் அதிக முற்போக்குள்ள பகுதி, பாட்டாளி, அரைப்பாட்டாளி வெகுஜனங்கள் அனைவரையும் சரியான வழியில் செலுத்துகிறது.

பழைய சமூக-ஜனநாயகக் கட்சிகளின் வீழ்ச்சியை, பாட்டாளி வர்க்கக் கட்சியுணர்வின் பொது வீழ்ச்சி என்று சித்திரிப்பது கூடவே கூடாது என்று தீர்மானம் அழுத்திக் கூறியது. தொழிலாளி வர்க்க விடுதலையின் முதன்மையான முக்கிய ஆயுதமாக இருப்பது கம்யூனிஸ்டுக் கட்சியே. பாட்டாளி வர்க்கம் ஆட்சியை வென்று பெற்றபின் கம்யூனிஸ்டுக் கட்சியின் பாத்திரம் குறைவதில்லை, மாறாக, மேலும் அதிகம் ஆகிறது. தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல், பண்பாட்டு-கல்வி முயற்சிகளைக் கட்சியே வழி காட்டி நடத்த வேண்டும். சோவியத்துக்களிலும் தொழிற் சங்கங்களிலும் கூட்டுறவுக் கழகங்களிலும் பிற வெகுஜன ஸ்தாபனங்களிலும் நிர்ணயகரமான செல்வாக்கு பெற்றிருந்தால்தான் கட்சியால் இந்தப் பணியை நிறைவேற்ற முடியும்.

ஜனநாயக மத்தியத்துவம் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கட்டமைப்புக்கு உரிய அடிப்படை ஸ்தாபனக் கோட்பாடாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் குறித்தது. நடைமுறையில் இதன் அர்த்தமாவது: உயர்நிலைக் குழுக்கள் தாழ்நிலைக் குழுக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; உயர்நிலைக் குழுவின் எல்லாக் கட்டளைகளையும் அதற்கு அடிப்பட்ட தாழ்நிலைக் குழு கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும்; அதிகாரம் பெற்ற கட்சி மையம் நிலவ வேண்டும்; அதன் முடிவுகள், கட்சியின் ஒரு காங்கிரசிலிருந்து மறு காங்கிரஸ்வரை எல்லாக் கம்யூனிஸ்டுகளாலும் விவாதம் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு காலத்தால் வரலாற்றுப் போக்கில் சோதித்துச் சரிபார்க்கப் பட்டது. கண்டிப்பாக மையப்படுத்தப்பட்ட கட்சித் தலைமைதான் எல்லாச் சக்திகளையும் ஒன்றிணைக்கவும் ஒரே குறிக்கோளை நோக்கி அவற்றைச் செலுத்தவும் தொழிலாளர் குழுக்களின் சிதறிய நடவடிக்கைகளை ஒற்றுமைப்படுத்தவும் வல்லது என்று வாழ்க்கை அனுபவம் நிரூபித்திருக்கிறது. அதே சமயம், வெவ்வேறு கருத்துக்களையும் யோசனைகளையும் ஜனநாயக முறையில் கூட்டாக விவாதிப்பதே கட்சியின் பொதுச் சித்தத்தைத் தீர்மானிப்பதற்குரிய சிறந்த முறை என்று நடைமுறை காட்டியுள்ளது. இத்தகைய

விவாதத்தின் பின் எடுக்கப்படும் முடிவு எல்லாருக்கும் கட்டாய மானதாகும்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் உறுப்பினர் ஆவதற்கு வேண்டிய ''இருபத்தொரு நிபந்தனைகள்'' என்ற பெயரால் பிரபலமான தஸ்தாவேஜில் புது வகையான பாட்டாளி வர்க்கக் கட்சியின் கொள்கைவாத, செயல் தந்திர, ஸ்தாபனக் கோட்பாடுகளின் முழுத் தொகுப்பு சுருக்கமாகத் திரட்டித் தரப்பட்டுள்ளது. கொள்கைவாத ஒருமைப்பாடு கொண்ட ஸ்தாபனம் என்ற முறையில் கம்யூனிஸ்டு அகிலத்தை வலுப்படுத்துவது இத்தகைய தஸ்தாவேஜு இல்லாமல் முடியவில்லை. சீர்திருத்தவாதத்துடனும் அராஜக-சிண்டிகலிஸ மரபுடனும் தொடர்புகளை இன்னும் துணித்துக் கொள்ளாத, ஊசலாட்டமும் அரைவேக்காடும் கொண்ட நபர்களால் கம்யூனிஸ்டு அகிலம் அழுக்கடையும் அபாயம் எதிர்ப்பட்டது. வலதுசாரி, ''இடதுசாரி'' அபாயம் காரணமாக, கம்யூனிஸ்டு அகிலத்தின் நிலைகளை உறுதியாகக் கடைப்பிடிக்காத கட்சிகள் அகிலத்தில் புகும் வழியை அடைக்கக் கூடிய திட்டவட்டமான உறுப்பினர் நிபந்தனைகளை வரையறுப்பது இன்றியமையாதது ஆயிற்று.

கம்யூனிஸ்டு அகிலத்தில் சேருவதற்கான முக்கிய நிபந்தனைகளாவன: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒப்புக்கொண்டு அதற்காக இடைவிடாது, முறையாகப் போராடுவது; சீர்திருத்தவாதிகளுடனும் இடைநிலைவாதிகளுடனும் தொடர்பை அறவே துணித்துக் கொண்டு அவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவது; போராட்டத்தின் சட்டபூர்வமான முறைகளையும் சட்டபூர்வம் அற்ற முறைகளையும் பொருத்தமாக இணைப்பது; நாட்டுப்புறத்திலும் சைனியத்திலும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களிலும் பூர்ஷ்வா நாடாளுமன்றங்களிலும் முறையான வேலை. கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்த கட்சிகள் கம்யூனிஸ்டுக் கட்சிகள் என்று அழைக்கப்படவும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின்படி அமைக்கப்படவும் வேண்டும். கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசுகளுடையவும் அதன் செயற்குழுவினுடையவும் எல்லாத் தீர்மானங்களும் கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்த எல்லாக் கட்சிகளாலும் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டும். கம்யூனிஸ்டு அகிலமும் அதன் செயற்குழுவும் ''வெவ்வேறு கட்சிகள் எந்தப் பல்வகை நிபந்தனைகளின் பேரில் போராடவும் செயல் புரியவும் வேண்டியிருக்கும் என்பதைக் கருத்தில் கொள்ளவும் எந்தப் பிரச்

சினைகளில் எல்லோருக்கும் கட்டாயமான முடிவுகள் சாத்தியமோ அந்தப் பிரச்சினைகளில் மட்டுமே அத்தகைய முடிவுகள் செய்யவும் கடமைப்பட்டவை'' என்று காங்கிரஸ் வலியுறுத்தியது.[1]

சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட ஊக்கமும் ஒற்றுமையும் உள்ள ஸ்தாபனத்தை நிறுவுவதற்கு ''இருபத்தொரு நிபந்தனைகள்'' முக்கியமானவை என்பதைக் காங்கிரசின் மிகப் பெரும்பாலான பிரதிநிதிகள் சரியாகப் புரிந்து கொண்டு, கோட்பாட்டு முக்கியத்துவம் உள்ள இந்த தஸ்தாவேஜுக்கு ஒப்புதல் அளித்தார்கள். ஆயினும் அதன் சில அம்சங்களைச் சில பிரதிநிதிகள் எதிர்த்தார்கள். உதாரணமாக, மூன்ருவது அகிலத்தின் கதவுகள் அதில் சேர விரும்பும் எல்லாக் கட்சிகளுக்கும் திறந்துவிடப்பட வேண்டும் என்று இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிக் குழுத் தலைவர் ஸெர்ராத்தி கருதிஞர். அவப்பெயர் பெற்ற சீர்திருத்தவாதிகளைத் தமது கட்சியிலிருந்து உடனே வெளியேற்றுவதையும் அவர் எதிர்த்தார். ஜெர்மன் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதிகள் தீத்மானும் கிரிஸ்பினும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை எதிர்த்தார்கள். அதே சமயம், இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி, ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி, இளைஞர் கம்யூனிஸ்டு அகிலம் ஆகியவற்றின் சில பிரதிநிதிகளும் பிற ''இடது சாரியினரும்,'' இரண்டாவது அகிலத்துடன் தொடர்பைத் துணித்துக் கொண்டு விட்ட பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி, ஜெர்மன் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சி, நார்வே தொழிலாளர் கட்சி ஆகியவற்றுடனும் வேறு பல கட்சிகளுடனும் எந்த விதமான பேச்சு வார்த்தைகளும் நடத்துவதற்குக் கண்டிப்பாக எதிர்ப்பு தெரிவித்தார்கள். இந்தக் கட்சிகளின் பெரும்பான்மையான சாதாரண உறுப்பினர்கள் புரட்சி நிலையை மேற்கொண்டிருந்தார்கள். ''இடது சாரியினரோ'', இந்தக் கட்சிகளின் சந்தர்ப்பவாதித் தலைவர்களையும் இத்தகைய சாதாரண உறுப்பினர்களையும் தங்கள் உரைகளில் அநியாயமாக ஒன்றுபடுத்தித் தாக்கிஞர்கள்.

கிரிஸ்பின், தீத்மான் ஆகியவர்களின் உரைகள் பூர்ஷ்வா உணர்வால் முழுக்க முழுக்க நிறைந்திருந்தன. லெனின் இவர்களுக்கு எதிராக வாதப் போர் நிகழ்த்தி ''இருபத்தொரு நிபந்தனை

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 504.

களைத்'' தீர்மானமாக ஆதரித்துப் பேசினர். அதே சமயம், ஜெர்மன் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சியின் அழைப்பிலும் அதன் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலும் அதிருப்தி தெரிவித்த ''இடதுசாரியினரையும்'' அவர் தாக்கி விமர்சித்தார். ''காவுத்ஸ்கி நமக்கு எதிராகப் பேசும் போதும் நூல்கள் எழுதும் போதும் நாம் வர்க்க எதிரி என்ற முறையில் அவருடன் வாதப் போர் நடத்துகிறோம். ஆனல், புரட்சிகரத் தொழிலாளர்களின் பெருக்கினல் வளர்ந்துள்ள சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சி பேச்சுவார்த்தை நடத்த இங்கு வரும்போது அதன் பிரதிநிதிகளுடன் நாம் பேச வேண்டும், ஏனென்றால் அவர்கள் புரட்சிகரத் தொழிலாளர் பகுதியின் பிரதிநிதிகளாக விளங்குகிறார்கள்'' என்றார் லெனின்.[1]

விவாதத்துக்குப் பிறகு காங்கிரஸ் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்வதற்கான ''இருபத்தொரு நிபந்தனைகளை'' இரு வாக்குகளுக்கு எதிராக மிகப் பெரும்பான்மை வாக்குக்களால் உறுதிப்படுத்தியது. இவ்வாறு நிறுவப்பட்ட திண்ணிய அணைக்கட்டு, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கைவாத-அரசியல், ஸ்தாபன முழுமையை நம்பகமாகக் காத்தது.

வேற்று நபர்களின் பெருக்கு உள்ளே வராதபடிக் கம்யூனிஸ்டு அகிலத்தைக் காக்க அணை கோலிய பின் இரண்டாவது காங்கிரஸ் இன்னொரு விஷயத்தை வலியுறுத்தியது. பிரிவுவாதக் குறுகிய மனப்பான்மையை அகற்றுவதும் வெகுஜனங்களுக்காகப் போராடுவதும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியப் பணிகளில் ஒன்று என அது அழுத்திக் கூறியது. கம்யூனிஸ்டுகள் பூர்ஷ்வா நாடாளுமன்றத்திலும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களிலும் வேலை செய்வது பற்றியும், பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் தொழிற்கட்சியில் சேர்வதுபற்றியும் இந்த நோக்கில் காங்கிரஸ் ஆலோசனை செய்தது.

சில பிரதிநிதிகள்—அ. போர்டிகா (இத்தாலி), வி. காலாஹர் (பிரிட்டன்), யா. கேர்த்ஸக் (சுவிட்ஸர்லாந்து) ஆகியோரும் பிறரும்—பூர்ஷ்வா நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்வதையே எதிர்த்தார்கள். எல்லா சந்தர்ப்பங்களிலும் பூர்ஷ்வா நாடாளுமன்றம் பகிஷ்கரிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் பிடிவாதமாகக் கூறினர்கள்.

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கங்கள் 250-51.

நாடாளுமன்றமுறை பற்றிய தமது சொற்பொழிவில் லெனின் பகிஷ்காரச் செயல்தந்திரத்தின் மிகப் பெரிய அபாயத்தை விளக்கினார். தொழிலாளி வர்க்கம், குட்டி பூர்ஷ்வாக்கள், விவசாயிகள் ஆகியோரின் பெரும்பாலான பின்தங்கிய நபர்கள் நாடாளுமன்றம் தங்கள் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இன்னும் நம்புகிறார்கள். எனவே, கம்யூனிஸ்டுகள் பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் பங்கு கொள்வதும் இந்த அரசு நிலையம் பூர்ஷ்வா வர்க்க சர்வாதிகாரத்தின் கருவியே என்பதை நடைமுறையில் காட்டுவதும் இன்றியமையாதது என்று அவர் சுட்டிக்காட்டினார். சந்தர்ப்பவாதிகள் முதலாளித்துவ அமைப்பை நியாயப்படுத்துவதற்கும் காப்பதற்கும் வெகுஜனங்களைப் புரட்சிப் போராட்டத்திலிருந்து திசை திருப்புவதற்கும் நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற கோஷத்தைப் பயன்படுத்தினார்கள். எனவே, பூர்ஷ்வா நாடாளுமன்ற முறையின் வண்டவாளத்தை வெளிப்படுத்தும் பொருட்டு நாடாளுமன்றத்தில் பங்கு கொள்வதும், பின்னர், பாட்டாளி வர்க்க ஜனநாயக முறைக்குப் பரிணமிக்கும் பொருட்டு அதைத் தகர்ப்பதும் இன்றியமையாதவை என்று அந்தக் காலப்பகுதியில் லெனின் கூறியது ஒன்றுதான் சரியாய் இருந்தது.

பெரும்பாலான பிரதிநிதிகள் ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகளின் பிரிவுவாத யோசனையை நிராகரித்துவிட்டார்கள். ''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'' என்ற நூலில் லெனின் விவரித்திருந்த முக்கியக் கருத்துக்களின் உணர்வில் தயாரிக்கப்பட்ட தீர்மானங்களை அவர்கள் ஆதரித்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகள் சட்டபூர்வமான வேலையையும் சட்டபூர்வம் அற்ற வேலையையும் பொருந்த இணைக்கும்படி காங்கிரஸ் கோரியது. வெகுஜனங்களைக் கம்யூனிஸத்தின் தரப்புக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களில் வேலை செய்யுமாறு கம்யூனிஸ்டுகளை அது கட்டாயப்படுத்தியது. பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்வதை ஆதரித்தது. தொழிற்கட்சியின் கட்டமைப்பு, கம்யூனிஸ்டுக் கருத்துக்களைப் பிரசாரம் செய்வதற்கு இடம் அளித்தபடியால் அந்தக் கட்சியில் சேரும்படி பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்குக் காங்கிரஸ் யோசனை கூறியது.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டாளிகள் பற்றிய பிரச்சினைமீது காங்கிரஸ் பெருத்த கவனம் செலுத்தியது. நிலப் பிரச்சினையும் தேசிய-காலனிப்

பிரச்சினையும் இதன் தொடர்பாக ஆராயப்பட்டன. இந்த இரண்டு பிரச்சினைகள் குறித்தும் லெனின் பூர்வாங்க ஆய்வுரைகள் தயாரித்தார். இவைபற்றிய தீர்மானங்களைத் தயாரித்த குழுக்களில் அவர் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்.

விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம் லெனினியத்தின் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். 1848ல் நடந்த புரட்சிப் போராட்டங்களில் மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தினது தோல்வியின் விளைவுகளையும் 1871ம் ஆண்டில் பாரிஸ் கம்யூன் அளித்த படிப்பினைகளையும் கருத்தில் கொண்டு மார்க்சும் எங்கெல்சும் இத்தகைய ஐக்கியத்தின் இன்றியமையாமையை ஏற்கனவே அறிவுறுத்தி இருந்தார்கள். விவசாயிகள் பிரச்சினை குறித்து விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் ஸ்தாபகர்கள் வெளியிட்டிருந்த ஆழ்ந்த கருத்துக்களை இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதிகள் மறக்க அடித்துவிட்டார்கள். ஆனால், போல்ஷிவிக் கட்சியினதும் கம்யூனிஸ்டு அகிலத்தினதும் நிலச் செயல்திட்டத்தைத் தயாரிக்கையில் லெனின் இந்த எண்ணங்களையே ஆதாரமாகக் கொண்டார்.

நிலப் பிரச்சினை பற்றிய லெனினது ஆய்வுரையின் முதல் குறிப்பைப் பிரதிநிதிகள் விவாதித்தார்கள். தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் பொதுவான ஒரே எதிரி மூலதனம். இவ்விரு வர்க்கங்களதும் நெருங்கிய ஐக்கியம் இவற்றின் ஜீவாதார நலன்கள் காரணமாகவே தேவைப்படுகிறது என்று லெனின் இதில் முதலில் காட்டினார். பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டு சேர்ந்து, நிலப்பிரபுக்களதும் பூர்ஷ்வாக்களதும் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தை முழு மனத்துடன் ஆதரிப்பது தவிர வேறு எந்த வழியாலும் நாட்டுப்புற உழைப்பாளிகள் சுரண்டலிலிருந்து தப்பி வெளியேற முடியாது. அதே சமயம், தொழிற்சாலைத் தொழிலாளிகள் தங்கள் குறுகிய தொழிற்கூட, குறுகிய தொழில்துறை நலன்களின் வரம்புக்குள் அடைபட்டுக் கிடந்தால் மனித குலத்தை மூலதனத்தின் சுரண்டலிலிருந்தும் நாடுபிடிக்கும் போர்களிலிருந்தும் விடுவிக்கும் தங்கள் பணியை அவர்கள் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது. ''உண்மையில் புரட்சித்தன்மை கொண்ட, உண்மையில் சோஷலிஸ முறையில் செயலாற்றும் வர்க்கமாகப் பாட்டாளி வர்க்கம் விளங்குவது, எல்லா உழைப்பாளிகளதும் சுரண்டப்படுவோருடையவும் முன்னணியாகவும் சுரண்டுவோரை ஆட்சியிலிருந்து அகற்று

வதற்கான போராட்டத்தில் அவர்களது தலைவனாகவும் அது செயலாற்றுகிறது, நடந்துகொள்கிறது என்ற நிபந்தனையின்பேரில் தான். வர்க்கப் போராட்டத்தை நாட்டுப் புறத்துக்குக் கொண்டு செல்லாமல், நாட்டுப்புற உழைப்பாளி வெகுஜனங்களை நகரப் பாட்டாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்டுக் கட்சியை மையமாகக் கொண்டு ஒன்று திரட்டாமல், முன்னவர்களைப் பின்னது போதித்துப் பயிற்றுமல் இந்த நிபந்தனையை நிறைவேற்றுவது நடவாது'' என்று வலியுறுத்தினர் லெனின்.[1]

விவசாயிகளுக்குள் நிலவிய பல்வேறு சமுதாயக் குழுக்களின் நிலைமையைச் சர்வாம்ச ரீதியாகப் பகுத்தாராய்ந்து அதன் அடிப்படையில் கம்யூனிஸ்டு நிலக் கொள்கையை ஆழ்ந்த ஆதாரத்துடன் நிலைநாட்டினர் லெனின். மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளர்களின் கூட்டாளிகளாக இருக்கக் கூடியவை விவசாயிகளின் எந்தக் குழுக்கள்? இந்தக் கேள்விக்கு லெனின் திட்டமான, தரவாரியான விடை அளித்தார்: முதலாவதாக, முதலாளித்துவ விவசாய நிலையங்களில் கூலி வேலை செய்து பிழைப்புக்கு வகை தேடும் விவசாயத் தொழிலாளர்கள்; இரண்டாவதாக, ஒரு பகுதி முதலாளிகளிடம் கூலி வேலை செய்தும் மறு பகுதி தங்களுக்குச் சொந்தமான, அல்லது குத்தகைக்கு எடுத்த துண்டு நிலத்தில் உழைத்தும் பிழைப்புக்கு வகை தேடும் அரைப் பாட்டாளி அல்லது சிறு நில விவசாயிகள்; மூன்ருவதாக, சிறுநில விவசாயிகள், அதாவது, சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்த சிறு நிலப் பகுதியை வைத்துக்கொண்டு அதன் மூலம் தங்கள் குடும்பத்தின் தேவைகளையும் பண்ணையின் தேவைகளையும் பிறருடைய உழைப்புச் சக்தியைப் பயன்படுத்தாமல் தாங்களே நிறைவேற்றிக் கொள்பவர்கள்.

இந்த மூன்று குழுக்களும் மொத்தமாகச் சேர்ந்து முதலாளித்துவ நாடுகளில் நாட்டுப்புற மக்களில் பெரும்பான்மையாக விளங்குகின்றன. முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் வீழ்த்தப்படுவதால் இந்தக் குழுவினர் உடனடியாகப் பெருத்த நன்மை பெறுவார்கள். எனவே நாட்டுப்புறத்தில் சோஷலிஸப் புரட்சியின் இறுதி வெற்றி திண்ணம். ஆயினும் இந்த விவசாயிகளின் ஆதரவு எடுத்த எடுப்பிலேயே கிடைத்துவிடும் என எதிர்பார்க்கக் கூடாது என்று லெனின்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *31*, பக்கம் *153*.

அழுத்திக் கூறினர். இவர்கள் மிகமிகக் கொடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள். சிதறிக் கிடப்பவர்கள். நசுக்கப்பட்டவர்கள். அரைக் காட்டுமிராண்டி வாழ்க்கை நடத்துமாறு விதிக்கப்பட்டிருப்பவர்கள். இந்த நாட்டுப்புற மக்கள் குழுவினர் பொருளாதார, சமுதாய, பண்பாட்டு நோக்கில் சோஷலிஸத்தின் வெற்றியில் அக்கறை கொண்டவர்கள். ஆயினும், பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னரே, பெரும் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் பாட்டாளி வர்க்கம் அடக்கி ஒடுக்கிய பிறகே, தங்களுக்கு உதவவும் வழிகாட்டவும் போதிய வலிமையும் உறுதியும் உள்ள ஒழுங்கமைந்த தலைவனும் காப்பாளனும் கிடைத்திருப்பதை இந்த நசுக்கப்பட்ட மக்கள் நடைமுறையில் கண்ட பிறகுதான், பாட்டாளி வர்க்கத்தை உறுதியாக ஆதரிக்க இவர்களால் முடியும் என்பதை அக்டோபர் புரட்சியின் அனுபவம் காட்டியது.

நடுத்தர விவசாயிகளின் தன்மையை லெனின் சித்திரித்தார். இவர்கள் பொருளாதார அர்த்தத்தில் சிறு நிலச் சொந்தக்காரர்கள். சொந்தமாகவோ குத்தகைக்கு எடுத்தோ சிறு நிலப் பகுதிகளை வைத்திருப்பவர்கள். ஆனால் இவர்கள் வைத்திருக்கும் நிலப் பகுதிகள் முதலாளித்துவ அமைப்பில் பொதுவாக இவர்களுடைய குடும்பங்களையும் பண்ணைகளையும் நிர்வகிப்பதற்குப் போதுமான அற்ப வருவாய் அளிப்பதோடு, ஓரளவு உபரி வருமானமும் தருகின்றன. குறைந்த பட்சம் நல்ல விளைச்சல் உள்ள ஆண்டுகளில் இந்த உபரி வருமானம் மூலதனமாக மாற வல்லது. இந்த விவசாயிகள் மிக அடிக்கடி பிறருடைய உழைப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நடுத்தர விவசாயிகளின் விஷயத்தில்—குறைந்த பட்சம் அண்மை வருங்காலத்திலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஆரம்பக் காலத்திலும்—இவர்களைத் தன் தரப்புக்குக் கொண்டு வருவதைப் பாட்டாளி வர்க்கம் நோக்கமாகக் கொள்ள முடியாது, இவர்களைச் செயலற்றவர்கள் ஆக்குவதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று தம் காலத்துப் புரட்சிப் போராட்ட அனுபவத்திலிருந்து பெற்ற முடிவின் அடிப்படையில் லெனின் காட்டினர். நடுத்தர விவசாயிகளைச் செயலற்றவர்கள் ஆக்கி, அவர்களை பூர்ஷ்வா வர்க்கத்திலிருந்து துணித்தபின் அவர்களுடன் உறுதியான ஐக்கியம் ஏற்படுத்துவது அவசியம் என்று லெனின் அறிவுறுத்தினர்.

பெரு நில விவசாயிகள் விஷயத்தில் தொழிலாளி வர்க்கம்

வேறு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். இவர்கள் விவசாயத்தில் முதலாளித்துவத் தொழிலதிபர்கள். பொதுவாக இவர்கள் சில கூலித் தொழிலாளர்களை வைத்துக் கொண்டு பண்ணை நடத்துபவர்கள். குறைந்த பண்பாட்டுத் தரம், வாழ்க்கை முறை, தங்கள் பண்ணையில் உடல் உழைப்பு ஆகியவற்றால் மட்டுமே ''விவசாயிகளுடன்'' தொடர்பு கொண்டவர்கள் இவர்கள். பெருநில விவசாயிகள் (குலாக்குகள்), பூர்ஷ்வா வட்டாரங்கள் எல்லாவற்றிலும் பெருத்த எண்ணிக்கை கொண்டவர்கள். புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தின் நேர்முகமான, உறுதிமிக்க பகைவர்கள் இவர்கள். பாட்டாளி வர்க்கம் நகரங்களில் வெற்றி அடைந்த பின்னர் இந்த வட்டாரத்தினர் முடிந்த எல்லா வகைகளிலும் அழிவு வேலை செய்வதும் புரட்சி எதிர்ப்புத் தன்மை கொண்ட நேர்முக ஆயுதப் போராட்டங்கள் நடத்துவதும் தவிர்க்க இயலாதவை. ஆகவே இந்த வட்டாரத்தினர் ஒவ்வொருவரையும் நிராயுதபாணிகள் ஆக்கவும் அவர்கள் எதிர்த்தால் அவர்களுக்கு மரண அடி கொடுக்கவும் பாட்டாளி வர்க்கம் முன்னேற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.

ஆயினும் பெருநில விவசாயிகளின் உடைமைகளைக் கூடப் பறித்துக் கொள்வது வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கத்தின் உடனடிப் பணியாக இருக்கவே முடியாது என்று அழுத்திக் கூறினார் லெனின். காரணம், இத்தகைய பண்ணைகளைச் சமூக உடைமை ஆக்குவதற்குத் தேவையான பொருளியல் நிலைமைகளோ, தொழில் நுட்ப நிலைமைகளோ, சமுதாய நிலைமைகளோ இன்னும் உருவாகவில்லை. பொது வழக்காக, வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் பெருநில விவசாயிகளின் நிலத்தை அவர்களிடமே விட்டுவைக்க வேண்டும். உழைப்பாளிகளின் ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களின் உடைமைகளை மட்டுமே ஜப்தி செய்ய வேண்டும். ''...எதிர்ப்பதற்கான அற்ப முயற்சிக்கும் சரியான படிப்பினை பெற்றதும் இந்த வட்டாரத்தினர் பாட்டாளி வர்க்க அரசு இடும் பணிகளை விசுவாசத்துடன் நிறைவேற்ற வல்லவர்கள்...'' என்பதை அக்டோபர் புரட்சியின் அனுபவம் காட்டி இருக்கிறது என்றார் லெனின்.[1]

நிலப்பிரபுக்கள், மிகப் பெரிய நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோரின் எல்லா நிலங்களையும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம்

---

[1] **வி.இ. லெனின்.** *முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 158.*

தாமதமின்றி, நிபந்தனை இன்றிப் பறிமுதல் செய்து விட வேண்டும். இவர்கள் முதலாளித்துவ நாடுகளில் நேரடியாகவோ அல்லது தங்கள் பண்ணைக்காரர்கள் மூலமாகவோ கூலி உழைப்பாளிகளதும், அக்கம் பக்கத்துச் சிறு நில (அடிக்கடி ஓரளவு நடுத்தர) விவசாயிகளதும் உழைப்பைச் சுரண்டுபவர்கள். உடலுழைப்பில் இவர்கள் எவ்விதத்திலும் பங்கு கொள்வதில்லை. இவர்களில் பெரும் பகுதியினர் நிலப்பிரபு வம்சத்தையோ, அல்லது விசேஷமாகச் செல்வம் திரட்டிவிட்ட நிதி அதிபர்களையோ அல்லது இந்த இரு வகையான சுரண்டுவோரையும் சோம்பேறிகளையுமோ சேர்ந்தவர்கள்.

காங்கிரசின் குழுக்களிலும் முழுக் கூட்டங்களிலும் நிலப் பிரச்சினை மீது கடுமையான விவாதம் நிகழ்ந்தது. நிலப்பிரபுக்களின் நிலங்களை, சிறு, நடுத்தர விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிப்பதைச் சில பிரதிநிதிகள் சிறப்பாக எதிர்த்தார்கள். இத்தகைய எதிர்ப்புக்கள் கிளம்பும் என்று லெனின் எதிர்பார்த்தார். முன்னணி முதலாளித்துவ நாடுகளுக்கு, முன்னாள் நிலப்பிரபுக்களின் பண்ணைகளைப் பெரும்பாலும் அப்படியே வைத்திருப்பதும் ருஷ்யாவில் உள்ள ''அரசாங்கப் பண்ணைகளின்'' மாதிரியில் நடத்துவதும் சரியானது என்று கம்யூனிஸ்டு அகிலம் ஒப்புக்கொள்கிறது என்று தமது ஆய்வுரைகளில் அவர் குறித்திருந்தார். ஆயினும், ''...இந்த விதியை மிகைப்படுத்துவதும் ஒரே மாதிரியாகச் செயல்படுத்துவதும் பறிமுதல் செய்யப்பட்ட பறிமுதலாளர்களின் நிலத்தின் ஒரு பகுதியை அக்கம் பக்கத்துச் சிறு விவசாயிகளுக்கும் சில வேளைகளில் நடுத்தர விவசாயிகளுக்கும் கூட இலவசமாகப் பகிர்ந்தளிப்பதை ஒருபோதும் அனுமதிக்காதிருப்பதும் மிகப் பெரிய தவறு'' ஆகும் என்று அவர் எச்சரித்தார்.[1]

சிறு விவசாயிகளுடன் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான ஐக்கியம் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்கு நிர்ணயகரமான முக்கியத்துவம் உள்ளது என்பதைச் சில பிரதிநிதிகள் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை. லெனின் குட்டிபூர்ஷ்வா மனப்பான்மையைக் காட்டுவதாக இவர்கள் குற்றம் சாட்டினார்கள். உதாரணமாக, சிறு விவசாயிகளுக்கு விட்டுக் கொடுப்பது மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தை சந்தர்ப்பவாதப் பாதையில் தள்ளும்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி *31*, பக்கம் *160*.

என்று கிரிஸ்பின் (ஜெர்மனி), ஸெர்ராத்தி (இத்தாலி) இருவரும் கூறினர்கள். ''பாட்டாளி வெகுஜனங்களின் நலன்களுக்குத் தீங்கு விளைக்காதிருக்கும் பொருட்டு, நாட்டுப்புறச் சிறு பூர்ஷ்வாக் களுக்கு எந்த விதமான சலுகையும்'' புரட்சிக்கு முன் ''அளிக்கக் கூடாது'' என்று ஸெர்ராத்தி யோசனை கூறினர்.[1] பெரும் பாலான பிரதிநிதிகள் இந்தக் கருத்தை ஏற்கவில்லை. அவர்கள் லெனினை ஆதரித்தார்கள், ஏனெனில் லெனினது ஆய்வுரை ருஷ்யப் புரட்சி அனுபவத்தை மட்டுமின்றி ஹங்கேரிய, பவேரிய சோவியத் குடியரசுகளின் படிப்பினைகளையும் ஆதாரமாகக் கொண்டிருந்தது.

தேசிய-காலனிப் பிரச்சினை காங்கிரசின் விவாதங்களில் அசாதாரண முக்கியத்துவம் பெற்றது. காலனிகள், ஆதீன நாடுகள் ஆகியவற்றின் மக்கள் தொகையில் விவசாயிகள் மிகப் பெரும் பான்மையினராக இருந்தமையால் இந்தப் பிரச்சினை அடிப்படை யில் சர்வதேச அளவில் விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம் பற்றியதாக இருந்தது. ஒரு தனி நாட்டில் பூர்ஷ்வா வர்க்கத்தை வெல்வது உழைக்கும் விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம் இல்லாமல் எப்படி சாத்தியம் ஆகாதோ அப்படியே உலக ஏகாதிபத்தியத்தின்மீது வெற்றி பெறுவது தேசிய விடுதலை இயக்கத்துடன் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தின் ஐக்கியம் இல்லாமல் சாத்தியம் ஆகாது. புதிய வரலாற்றுக் காலப் பகுதியில் தேசிய விடுதலை இயக்கம் உலக சோஷலிஸப் புரட்சியின் பிரிக்கமுடியாத உறுப்பு ஆகிவிடும் என்ற அடிப்படை யில், முதலாளித்துவ வளர்ச்சி பெற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினது புரட்சிப் போராட்டத்தை ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் பெருக்காகக் கலந்துவிடும் பணியைக் காங்கிரஸ் முன்வைத்தது.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் இந்தப் போர்த் தந்திரப் பணியைத் திட்டப்படுத்துவதில் லெனின் நிர்ணயகரமான பங்கு ஆற்றினர். அக்டோபர் புரட்சிக்குப் பின் அவர் எழுதிய நூல் களில், உலகப் புரட்சி இயக்கத்தின் பல்வேறு படைப் பிரிவுகளின் பரஸ்பரப் பாதிப்பு பற்றிய மிகச் சிக்கலான பிரச்சினைகள் ஆராயப்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 383.

பட்டிருந்தன. ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் விடுதலைப் போராட்டத்துடன் முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் பரஸ்பரத் தொடர்பு அவற்றில் காட்டப் பட்டிருந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் தொடங்கு வதற்கு முன்பே, ''தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வு ரையின் முதல் திட்டக் குறிப்பு'' மீது விவாதம் நடத்துமாறு லெனின் யோசனை கூறினார். இவ்விஷயம் பற்றித் தங்கள் கருத்துக் களை வெளியிடும்படி அவர் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளைக் கேட்டுக்கொண்டார். சில பிரதிநிதிகள் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தங்கள் குறிப்புக்களையும் விவரங்களையும் அனுப் பினார்கள். லெனின் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டார். இதன் பின்பு லெனினது தலைமையில் கூடிய காங்கிரசின் விசேஷக் குழு கூட்டாகப் பெருத்த வேலை செய்தது. லெனினது வேண்டுகோளின் படி இந்தியக் கம்யூனிஸ்டு எம். என். ராய் பின்னிணைப்பு ஆய்வுரை எழுதினார். தேசிய விடுதலை இயக்கத்தின் சித்திரம், '...முதன்மை யாக பிரிட்டனின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கும் இந்திய மக்களதும் பிற பெரிய ஆசிய மக்கள் இனங்களதும் நோக்கு நிலை யிலிருந்து'' இதில் தீட்டப்பட்டிருந்தது.[1] சர்வாம்ச ரீதியான விவாதத்துக்குப் பிறகு விசேஷக் குழு லெனினது ஆய்வுரையை ஒரு சில மாறுதல்களுடனும் ராயின் பின்னிணைப்பை லெனினுடைய திருத்தங்களுடனும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

காங்கிரசின் முழுக் கூட்டத்தில் விசேஷக் குழுவின் வேலை பற்றிய அறிக்கையை லெனின் சமர்ப்பித்தார். ''எல்லா அதி முக்கியப் பிரச்சினைகளிலும் முழுமையான ஒருமனப்பாட்டுக்கு வர அதற்கு வாய்த்து விட்டது'' என்று அவர் குறிப்பிட்டார்.[2] ஏகாதிபத்தியத்துக்கும் சோஷலிஸத்துக்கும் உள்ள முரண்பாடு, தொடங்கியிருந்த காலக் கட்டத்தின் முக்கிய முரண்பாடு என்ற வகையில், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வுரையில் வரையறுக்கப் பட்டிருந்தது. இந்த வரையறுப்பு ஆய்வுரையின் தொடக்கப் பகுதி யாக விளங்கியது. உலக வளர்ச்சி அனைத்தும் சோவியத் ருஷ்யா வுக்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளின் போராட்டத்தினாலேயே

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 241.

[2] அதே நூல், அதே பக்கம்.

இப்போது நிர்ணயிக்கப்படுகிறது என்றார் லெனின். ''இதை நாம் பார்வையிலிருந்து நழுவ விட்டோமானால், சர்ச்சைக்கு உரிய விஷயம் உலகின் தொலைதூரப் பகுதியாக இருந்தாலும், எந்த ஒரு தேசிய, அல்லது காலனிப் பிரச்சினையையும் சரியாக ஆராய நம்மால் முடியாது. இந்த நோக்கை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டால்தான் நாகரிக வளர்ச்சி பெற்ற நாடுகளிலும் பின் தங்கிய நாடுகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அரசியல் பிரச்சினைகளைச் சரியாக ஆராய்ந்து முடிவு செய்ய முடியும்'' என்றார் அவர்.[1] பிரச்சினையைஇந்த நோக்கில்ஆராய்ந்ததன் விளைவாகக் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு நேர்ந்த பணி, பொதுப் பகைவனான உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எல்லா தேசிய, காலனி விடுதலை இயக்கங்களையும் சோவியத் ருஷ்யாவுடன் நெருங்கிய கூட்டணியில் இணைப்பதாக இருந்தது. உலகின் மிகப் பெரும்பான்மையான மக்களைச் சுரண்டியும் ஒடுக்கியும் வந்த ஏகாதிபத்திய வல்லரசுகளின் குழு, இந்தப் பகைவனைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

ஒடுக்கப்பட்ட நாடுகளின் கம்யூனிஸ்டுகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னணிச் சக்தியாக விளங்க வேண்டும், குறித்த நிலைமைகளில் அவர்களால் அவ்வாறு விளங்க முடியும் என்ற கருத்தை லெனின் ஆதாரமாகக் கொண்டார். ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசியத் தன்னுணர்வு விழிப்படைந்திருப்பது முற்போக்குப் பணி ஆற்றி வருவதை லெனின் சுட்டிக் காட்டினார். புரட்சிகரமான, தேசிய உணர்வு பெற்ற கிழக்கு நாடுகள் வளர்ந்துவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியாகத் திகழ்கின்றன என்றார் அவர். கிழக்கு நாடுகளில் நடந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை மேற்கு நாடுகளில் நடந்த சோஷலிஸப் புரட்சிக்கு எதிராக நிறுத்தும் எல்லா வித முயற்சிகளையும் லெனின் தீவிரமாக எதிர்த்தார். ''...மேற்கு நாடுகளின் விதி, கிழக்கு நாடுகளில் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சித் தரத்தையும் சக்தியையுமே பிரத்தியேகமாகச் சார்ந்திருப்பதாகக்'' கூறுவது ஆதாரமற்றது என்று அவர் நிராகரித்தார்.[2]

''பின்தங்கிய நாடுகளில் நடக்கும் பூர்ஷ்வா-ஜனநாயக விடுதலை இயக்கங்களுக்குக் கம்யூனிஸ வண்ணம் தீட்டுவதைத் தீவிரமாக

---

[1] அதே நூல், பக்கம் 241.

[2] ''கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் தூதன்,'' இதழ் 1, 1920, ஜூலை 27.

எதிர்க்கும்படி'' அதே சமயம் அவர் கோரினர்.[1] பிற்காலத்தில், வளர்ச்சி குன்றிய நாடுகளில் எந்த மாதிரிக் கட்சிகளை அமைக்க முடியும் என்பதை லெனின் விளக்கினர். மங்கோலியா போன்ற ஒரு நாட்டில், ''...மேய்ப்பர்களைப் பாட்டாளி வெகுஜனங்களாக உருவாக்குவதற்குப் புரட்சியாளர்கள் அரசு நிர்மாணத்திலும் பொருளாதார, பண்பாட்டுக் கட்டுமானத்திலும் இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டி இருக்கும். பின்னர் இந்தப் பாட்டாளி வெகுஜனங்கள், மக்கள் புரட்சிக் கட்சியைக் கம்யூனிஸ்டுக் கட்சியாக 'மாற்ற' உதவுவார்கள். வெறுமே பெயர்ப் பலகையை மாற்றுவது தீங்கானது, அபாயம் விளைப்பது'' என்று அவர் எழுதினர்.[2]

தனது வர்க்க உள்ளடக்கத்தில் பூர்ஷ்வா-ஜனநாயக இயக்கமாக விளங்கும் தேசிய விடுதலை இயக்கத்தைக் கம்யூனிஸ்டு அகிலம் எவ்வாறு, எந்த நிலைமைகளில் ஆதரிக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கும் லெனினது ஆய்வுரையில் தெளிவான விடை தரப்பட்டிருந்தது. எந்தத் தேசிய விடுதலை இயக்கங்களையும், அவை உண்மையில் புரட்சித்தன்மை கொண்டிருந்து ஏகாதிபத்தியத்தைத் தகர்க்கும் கருவியாகப் பயன்பட்டால், கம்யூனிஸ்டுகள் ஆதரிக்க வேண்டும் என்று அதில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ''...காலனிகளையும் பின்தங்கிய நாடுகளையும் சேர்ந்த பூர்ஷ்வா-ஜனநாயகத்துடன் கம்யூனிஸ்டு அகிலம் தாற்காலிக ஒப்பந்தங்கள் செய்து கொள்ள வேண்டும், அதனுடன் கூட்டு சேரக்கூட வேண்டும், ஆனுல் அதில் கலந்துவிடக் கூடாது. பாட்டாளி வர்க்க இயக்கத்தின் சுயேச்சையை, இந்த இயக்கத்தின் மிகத் தொடக்க வடிவில் கூட, கண்டிப்பாகக் காக்க வேண்டும்.''[3]

பெயரளவில் மட்டும் இன்றி, உள்ளடக்கத்தில் கம்யூனிஸ்டுத் தன்மை கொண்ட புரட்சிக் கட்சிகளை அமைப்பது; கம்யூனிஸ போதனையை ஒவ்வொரு மக்கள் இனத்தின் மொழியிலும் பெயர்ப்பது; உலகப் பாட்டாளி வர்க்கத்துடன் இந்த நாடுகளின் உழைப்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 149.

[2] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 361.

[3] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 495.

பாளி வெகுஜனங்களுக்கும் சுரண்டப்படும் வெகுஜனங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவது; வெகுஜனங்கள் எந்தத் தரத்தில் இருந்தாலும் அவர்களுடைய புரட்சிச் செயலூக்கத்தையும் சுயேச்சை உணர்வையும் தட்டி எழுப்புவது; வெகுஜனங்களின் உடனடிக் கோரிக்கைகளின் நிறைவேற்றத்தின் பொருட்டுப் போராட்டம் நடத்துவது—இவையே ஒடுக்கப்பட்ட நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகளின் பணிகள் என்று லெனின் கருதினர். கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்டுகள், ''...இந்த நாடுகளின் மக்களிடையே விழிப்படைந்து வரும் பூர்ஷ்வா தேசிய உணர்வை ஆதாரமாகக் கொள்ள வேண்டி வரும். இந்த உணர்வு விழிப்படையாமல் இருக்க முடியாது. இதற்கு நியாயமான வரலாற்றுக் காரணம் உள்ளது'' என்று லெனின் கூறினர்.[1]

காலனிகளில் உண்மையான புரட்சித்தன்மைகொண்ட பூர்ஷ்வா-ஜனநாயகச் சக்திகளை ஆதரிப்பது, அதே சமயம் கம்யூனிஸ்டுகளின் ஸ்தாபன, கொள்கைவாதச் சுயேச்சையைப் பாதுகாப்பது என்ற கோஷத்தை முன்வைத்ததன் மூலம் லெனின் தமது ஆய்வுரையில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி அமைக்கும் கருத்துக்கு எதார்த்தத்தில் வித்திட்டார்.

பிரச்சினை கோட்பாட்டு நோக்கில் புதியதான இந்த வடிவத்தில் முன்வைக்கப்பட்டதைக் காங்கிரசின் சில பிரதிநிதிகள் எதிர்த்தார்கள். உதாரணமாக, ஸெர்ராத்தியும் (இத்தாலி) சுல்தான்-ஸாதேயும் (ஈரான்), பூர்ஷ்வா வர்க்கம் பங்கு கொள்ளும் தேசிய இயக்கங்கள் புரட்சித்தன்மை உள்ளவை அல்ல என்று கூறினர்கள். தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தை ஆதரிப்பது, ''பாட்டாளி வர்க்கத்தின் உணர்வை இருட்டடிப்பதற்கே காரணமாகக் கூடும்...'' என்றார் ஸெர்ராத்தி.[2] இந்தியப் பிரதிநிதி ராய் இதே போன்ற கருத்தைத் தமது ஆய்வுரையின் முதல் வாசகத்தில் வெளியிட்டார். காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் தேசிய விடுதலைக்காக உள்நாட்டு பூர்ஷ்வா வர்க்கம் நடத்தும் இயக்கமும் சுரண்டலுக்கு எதிராகத் தொழிலாளி-விவசாயி வெகுஜனங்கள் நடத்தும் இயக்கமும் ஒன்றுக்கு ஒன்று

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 162.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 155.

மிக எதிரானவை என்றும் அவை ஒன்று சேர்ந்து வளர்ச்சி அடைய முடியாது என்றும் அவர் கருதினர்.

இந்தப் பிரச்சினை மீது விரிவான விவாதம் நடந்தது. தேசிய விடுதலை இயக்கம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளியாக இருக்க முடியாது என்று கருதியவர்களின் கூற்று ஆதாரம் அற்றது என்பது விவாதத்தின் பின் பெரும்பாலான பிரதிநிதிகளுக்கு உறுதிப்பட்டு விட்டது. காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் உள்நாட்டு பூர்ஷ்வா-ஜன நாயக இயக்கங்கள் தங்கள் எதார்த்தமான புரட்சிப் பணியை இன்னும் நிறைவேற்றித் தீர்த்துவிடவில்லை ஆதலால் கம்யூனிஸ்டு கள் அவற்றை ஆதரிக்க வேண்டும் என்று காங்கிரஸ் முடிவு செய் தது. ஆயினும், கம்யூனிஸ்டுகளுக்கும் தேசியப் புரட்சிச் சக்தி களுக்கும் உடன்பாடு ஏற்படுவது, இந்தச் சக்திகள் ''...விவசாயி களையும் சுரண்டப்படும் விரிவான வெகுஜனங்களையும் புரட்சி உணர்வில் பயிற்றவும் ஒழுங்கமைக்கவும்'' கம்யூனிஸ்டுகளுக்கு இடைஞ்சல் செய்யாதிருந்தால்தான் சாத்தியமாகும் என்று காங்கிரஸ் கருதியது.[1]

குட்டி பூர்ஷ்வா தேசியவாத மீதமிச்சங்களைக் கம்யூனிஸ்டு களின் உணர்விலிருந்து களைந்து அகற்றுவதன் உடனடியான இன்றியமையாமையையும் காங்கிரஸ் வலியுறுத்தியது. தொழி லாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுடையவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முயற்சிகளை ஒன்றுபடுத்துவதற்கு இந்த மீதமிச்சங்கள் பெருத்த கேடு விளைக்கக் கூடும் என்று காங்கிரஸ் கருதியது. லெனினது ஆய்வுரையில் பின்வருமாறு கூறப்பட்டது: ''இந்தத் தீமையுடன், மிக ஆழமாக வேரோடியிருக்கும் குட்டி பூர்ஷ்வா தேசியவாதக் காழ்ப்புக்களுடன்(இவை சாத்தியமான எல்லா வடிவங்களிலும் வெளிப்படுகின்றன. உதாரணமாக இன வெறுப்பு, குறித்த நாட்டினத்தவரைத் துன்புறுத்துவது, யூத எதிர்ப்பு ஆகியவை இத்தகைய வடிவங்கள்) போராட்டம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை தேசிய (அதாவது ஒரு நாட்டில் நிலவு வதும் அனைத்துலக அரசியலை நிர்ணயிக்க வல்லமை அற்றதுமான) சர்வாதிகாரத்திலிருந்து சர்வதேசிய சர்வாதிகாரமாக (அதாவது, குறைந்த பட்சம் ஒரு சில முன்னணி நாடுகளில் நிலவுவதும்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி ***31***, பக்கம் ***242***.

உலக அரசியல் அனைத்தின்மீதும் நிர்ணயகரமான செல்வாக்கு செலுத்த வல்லதுமான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக) மாற்றும் பணி உடனடியானது ஆவதற்கு ஏற்ப முதன்மை முக்கியத்துவம் பெறுகிறது.''[1]

தொழிலாளர் இயக்கத்தில் பங்குகொண்ட சிலரின் தேசியத் தன்னலப் போக்கை லெனின் கண்டனம் செய்தார். இவர்கள் நாட்டினங்களின் சம உரிமையை வற்புறுத்தினர்கள், ஆனால் பாட்டாளி வர்க்கம் அனைத்திற்கும் பொதுவான, சர்வதேசியக் குறிக்கோள்களையும் பணிகளையும் புறக்கணித்தார்கள். பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்குத் தேவையானது, முதலாவதாக, ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்களை உலகு பரவிய பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு அடிப்படுத்துவது; இரண்டாவதாக, பூர்ஷ்வா வர்க்கத்தை வெற்றி கொண்டுவிட்ட நாடுகள் சர்வதேச மூலதனத்தை வீழ்த்தும் பொருட்டு மாபெரும் தேசியத் தியாகங்களை மேற்கொள்ளத் திறன் கொண்டிருப்பதும் ஆயத்தமாய் இருப்பதும் என்று எழுதினர் லெனின்.

பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சி அடைவதன் சாத்தியக் கூறும் தேசிய-காலனிப் பிரச்சினை பற்றிய விவாதத்தின் போது ஆராயப்பட்டது. காங்கிரஸ் பிரதிநிதிகள் சோவியத் மத்திய ஆசியாவில் சோவியத் அரசு அமைப்பின் அனுபவத்தை உயர்வாக மதித்தார்கள். ''...முன்னணி நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் உதவியால், பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தில் புகாமலே சோவியத் அமைப்புக்கும், குறித்த வளர்ச்சித் தரத்தின் பின்னர் கம்யூனிஸத்துக்கும் பரிணமிக்க முடியும்''[2] என்ற லெனினது முடிவை ஒருமனதாக ஆமோதித்தார்கள். மத்திய ஆசிய சோவியத் குடியரசுகளதும் மங்கோலிய மக்கள் குடியரசினதும் வரலாற்று வளர்ச்சி, மிக முக்கியமான இந்தச் சித்தாந்த வரையறுப்பை மேற்கொண்டு உறுதிப்படுத்தியது.

கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் பணியை லெனின் பின்வருமாறு வரையறுத்தார்: ''...முதலாளித்துவத்துக்கு முந்திய

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கங்கள் *493-494*.

[2] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *31*, பக்கம் *244*.

உறவுகள் ஆதிக்கம் வகிக்கும் நாடுகளுக்கு சோவியத் அமைப்பின் அடிப்படையான தொடக்க வடிவங்களைப் பொருந்தச் செய்வதற்கு 'உழைப்பாளி மக்களின் சோவியத்துக்கள்' முதலியவற்றை நிறுவுவதன் வாயிலாக எல்லா முயற்சிகளையும் ஈடுபடுத்துவது சிறப்பாக இன்றியமையாதது.''[1] லெனின் குறிப்பிட்டது முக்கியமாக விவசாயிகளின் சோவியத்துக்களையே, அதாவது, வர்க்க அமைவில் பாட்டாளி அல்லாத அரசு உறுப்புக்களையே. பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவம் அல்லாத பாதையில் வளர்ச்சி அடைவதற்கு, கம்யூனிஸ்டுகள் இந்த நாடுகளில் ஆட்சிக்கு வருவது கட்டாயமான நிபந்தனை அல்ல என்றும் லெனின் அறிவுறுத்தினார்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் வேறு பல முக்கியப் பிரச்சினைகளை ஆராய்ந்தது. அறிக்கை, சோவியத்துக்கள் அமைப்பதற்கான நிபந்தனைகள் பற்றிய தீர்மானம், எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகளுக்கும் பாட்டாளி மாதருக்கும், எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிற் சங்கங்களுக்கும், பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் எல்லா உறுப்பினர்களுக்கும் பிரான்சின் அரசியல் உணர்வுள்ள தொழிலாளர்களுக்கும், பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கும், ருஷ்ய சோவியத் சோஷலிஸக் கூட்டுக் குடியரசின் செஞ்சேனைக்கும் கடற்படைக்கும் செய்திகள், ஹங்கேரியின் கொலைகாரர்களுக்கு எதிரான அறைகூவல் ஆகியவை காங்கிரசால் ஏற்கப்பட்டன.

இரண்டாவது காங்கிரஸ் கம்யூனிஸ்டு அகிலத்தின் விதிகளை ஒருமனதாக அங்கீகரித்தது. ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் அமைவையும் ஸ்தாபனக் கட்டமைப்பையும் இவை திட்டவட்டமாக நிர்ணயித்தன.

பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி கபாக்சீயெவ் உரை ஆற்றினார். புரட்சி எதிரி பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒன்றித்த முன்னணிக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிக்கு உரிய ஒரே நிபந்தனையாக விளங்குவது பாட்டாளி வர்க்கச் சக்திகளின் ஒற்றுமையும் மையப்பாடுமே என்று வலியுறுத்தினார் அவர். உலகப் பாட்டாளி வர்க்கச் சக்திகளின் ஒற்றுமையை நடைமுறையில் ஏற்படுத்துவது கம்யூனிஸ்டு அகிலத்தின் கடமை. இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்குக் கம்யூனிஸ்டு அகிலம் வலிமைவாய்ந்த, கட்டுப்பாடு உள்ள, கண்டிப்பாக மையப்படுத்தப்பட்ட

---

[1] மை. ஆ.கூ., 2/1/14423/7.

ஸ்தாபனமாக விளங்க வேண்டும். எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகளின் நடைமுறைச் செயல்களையும் புரட்சி நடவடிக்கைகளையும் கண்காணித்து, நடத்தி, ஒருங்கிசைக்கும் ஸ்தாபனமாக அது திகழ வேண்டும் என்று அவர் கூறினார்.

உலகு அனைத்தின் உழைப்பாளிகளுக்கும் விடுதலை பெற்றுத் தருவதைக் கம்யூனிஸ்டு அகிலம் தனது பணியாகக் கருதுகிறது என்று விதிகளில் கூறப்பட்டது. எனவே வெள்ளை, மஞ்சள், கறுப்புத் தோல்கள் கொண்ட மனிதர்கள், அனைத்துலக உழைப்பாளி மக்கள், கம்யூனிஸ்டு அகிலத்தின் அணிகளில் சோதரப்பாங்குடன் ஒன்று சேர்ந்துள்ளனர். ''கம்யூனிஸ்டு அகிலம், ஒன்றித்த அனைத்துலகக் கம்யூனிஸ்டுக் கட்சியாகச் செயலிலும் எதார்த்தத்திலும் விளங்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் இயங்கும் கட்சிகள் இதன் பிரிவுகள் ஆகும்'' என்று விதிகளில் துல்லியமாகக் குறிக்கப் பட்டது.[1]

கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்ந்துள்ள எல்லாக் கட்சிகளதும் ஸ்தாபனங்களதும் அனைத்துலகக் காங்கிரஸ், கம்யூனிஸ்டு அகிலத்தின் உச்ச உறுப்பாக வரையறுக்கப்பட்டது. விதிப்படி அனைத்துலகக் காங்கிரஸ் ஆண்டுதோறும் கூட வேண்டும். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தை மாற்றவும் மிக முக்கியமான போர்த்தந்திர, செயல்தந்திரப் பிரச்சினைகளை முடிவு செய்யவும் அதற்கு மட்டுமே உரிமை இருந்தது.

காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்பாக இருந்தது செயற்குழு. இது காங்கிரசுக்கு விவர அறிக்கை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருந்தது. செயற்குழுவின் அலுவல் இடம், விதிகளின்படி, காங்கிரசால் அவ்வப்போது தீர்மானிக்கப்பட வேண்டும். செயற்குழுவின் அலுவல் இடமாக விளங்கும் நாட்டின் கம்யூனிஸ்டுக் கட்சி, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவில் ஐந்து பிரதிநிதிகளை நிர்ணய வாக்குரிமை பெற்ற உறுப்பினர்களாக அனுப்பியது. காங்கிரசால் தீர்மானிக்கப்பட்ட இன்னும் 10, 13 பெரிய கம்யூனிஸ்டுக் கட்சிகளும் இளைஞர் கம்யூனிஸ்டு அகிலமும் புரட்சிகரத் தொழிற்சங்க ஸ்தாபனங்களும் ஒவ்வொன்றும் நிர்ணய வாக்குரிமை பெற்ற ஒரு பிரதிநிதியை அனுப்பியது. மற்றக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் தலைக்கு ஒரு

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 536.

பிரதிநிதியைச் செயற்குழுவின் உறுப்பினராக அனுப்ப உரிமை பெற்றிருந்தன. ஆனால் இந்தப் பிரதிநிதிகளுக்கு யோசனைகூறும் உரிமை மட்டுமே இருந்தது. காங்கிரசின் கடைசிக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை செயற்குழுவுக்கு அளிக்கப்பட்டது.

ஒரு காங்கிரஸ் முடிந்து மறு காங்கிரஸ் கூடும்வரை கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலையை வழிகாட்டி நடத்துவது, ''கம்யூனிஸ்டு அகிலம்'' என்னும் பத்திரிகையை வெவ்வேறு மொழிகளில் பிரசுரிப்பது, கம்யூனிஸ்டு அகிலத்தின் பெயரால் இன்றியமையாத அறைகூவல்களும் கட்டளைகளும் விடுப்பது ஆகியவை செயற்குழுவின் பொறுப்புக்கள் ஆயின. ''உறுப்பு வகிக்கும் கட்சிகளிடம் சர்வதேசக் கட்டுப்பாட்டை மீறும் குழுக்களையும் நபர்களையும் விலக்கும்படிக் கோரவும் அனைத்துலகக் காங்கிரசின் தீர்மானங்களை மீறும் கட்சிகளைக் கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்து விலக்கவும்'' கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கு விதிகள் உரிமை அளித்தன.[1] தனித் தனிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கிடையே முக்கியமான எல்லா உறவுகளும் செயற்குழுவின் மூலமாகவே வைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது பொது விதியாய் இருந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் பிரதிநிதிகளுக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் பிரதிநிதிகளுக்கும் சிறந்த அரசியல் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது. காங்கிரசின் முழுக் கூட்டங்களிலும் தொழிலாளர் குழுக்களிலும் நிலவிய படைப்புத்தன்மை உள்ள காரியப்பாங்கு, லெனினுடன் நட்பார்ந்த சந்திப்புக்களும் உரையாடல்களும்—இவை எல்லாம் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் நோக்கங்களையும் பணிகளையும் முன்னிலும் ஆழமாக ஆராயவும் புரிந்துகொள்ளவும் பிரதிநிதிகளுக்கு உதவின. காங்கிரசில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் லெனினது ஆளுமையின் விறல் மிக்க பாதிப்புக்கு உள்ளாயினர். ''ஏக காலத்தில் சித்தாந்தகர்த்தராகவும் செயல் ஆற்றுபவராகவும் விளங்கும் லெனின் தற்போது உலகத் தொழிலாளர் இயக்கத்தில் யாவரிலும் பெரிய மனிதராகத் திகழ்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், பக்கம் 537.

கிறுர்''[1] என்று அப்பொழுது எழுதினுர் பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்கத்தின் பிரபல பிரதிநிதி மார்ஸேல் கஷேன்.

உலகப் புரட்சியின் முன்னணியில் வீரப் போராட்டம் நிகழ்த்தி வந்த சோவியத் மக்கள் காங்கிரஸ் பிரதிநிதிகள் மீது மிகப் பெரிய உளப்பதிவு ஏற்படுத்திஞர்கள். பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் பிரபலத் தலைவர் வில்லியம் காலாஹர் அந்த நாட்களைப் பிற்காலத்தில் இவ்வாறு நினைவுகூர்ந்தார்: ''இளங் கம்யூனிஸ்டுகள் சோவியத் குடியரசைக் காப்பதற்காகப் போர்முனை சென்றதை நாங்கள் கண்டோம். லெனின் அவர்களுக்கு உத்வேகம் ஊட்டிஞர். அவர்களுடைய வீரம் லெனினுக்கு உத்வேகம் ஊட்டியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசின் பிரதிநிதிகளான நாங்கள் அனைவரும் ஒரு விஷயத்தை உணர்ந்தோம், அறிந்தோம். இளைஞர்கள், முதியவர்கள், இராணுவச் சீருடை அணிந்தவர்கள், அணியாதவர்கள் ஆகிய எல்லா சோவியத் மக்களதும் புரட்சி வீரத்தை முறிக்க எந்த வகையான இடர்களாலும் எந்த விதமான துன்பங்களாலும் முடியாது என்பது அந்த விஷயம். மாஸ்கோவில் நாங்கள் கண்கூடாகக் கண்ட காட்சி, பிரதிநிதிகளான எங்கள் மீது பெருத்த செல்வாக்கு செலுத்தியது. செயல் புரியவும், தாங்குதிறனைக் காட்டவும் இடர்களைக் கடக்கவும் எங்களது சொந்த மனவுறுதி மேலும் வலுவடைந்தது.''[2]

1920ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் வேலையை முடித்தது. அன்றே கம்யூனிஸ்டு அகிலத்தின் இருபது பிரிவுகளுடைய பிரதிநிதிகளைக் கொண்டு செயற்குழு அமைக்கப்பட்டது. கி. ஸிஞேவியெவ் (தலைவர்), நி. புஹாரின் (உதவித் தலைவர்), மி. கொபேத்ஸ்கி (செயலாளர்),எ.மேயர்,அ.ருத்னியான்ஸ்கி ஆகிய ஐவர் அடங்கிய செயற்குழுவின் சிறு பியூரோ (தலைமைக் குழு) நிறுவப்பட்டது. அன்றாட வேலையை நடத்துவதும் செயற்குழுவின் முழுக் கூட்டத்துக்கு வேண்டிய விவரங்கள் தயாரிப்பதும் இதன் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் நிறைவுற்ற

---

[1] அயல் நாடுகளிலிருந்து லெனினுக்குக் கடிதங்கள். மாஸ்கோ, 1966, பக்கம் 233.

[2] லெனினைப் பற்றி. சமகாலத்து அயல்நாட்டினரின் நினைவுக் குறிப்புகள். மாஸ்கோ, 1966, பக்கம் 337.

சிறிது காலத்துக்குப்பின் கிழக்கு நாடுகளின் மக்களது முதல் காங்கிரஸ் பாக்கூ நகரில் கூடியது. மத்திய ஆசிய சோவியத் குடியரசுகள், இந்தியா, சீனு, ஆப்கனிஸ்தான், துருக்கி, ஈரான், பிற கிழக்கு நாடுகள் ஆகியவற்றிலிருந்து சுமார் இரண்டாயிரம் பிரதிநிதிகளும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலிருந்து விருந்தாளிகளும் அதற்கு வந்தார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசினுடைய உணர்வில் அனேக தஸ்தாவேஜுகளை இந்தக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. ''உலகத் தொழிலாளர்களே, உலகனைத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற போராட்ட கோஷத்தைக் காங்கிரஸ் பிரகடனம் செய்தது.

காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானங்களின் பெருத்த முக்கியத்துவத்தை லெனின் வலியுறுத்திஞர். அவர் கூறிஞர்: ''மாஸ்கோவில் கூடிய கம்யூனிஸ்டுகளின் காங்கிரசும் பாக்கூவில் கூடிய கிழக்கு நாடுகளின் மக்களுடைய கம்யூனிஸ்டுப் பிரதிநிதிகளின் காங்கிரசும் செய்தவற்றை உடனடியாக அளவிட முடியாது. இது நேரடியான கணக்கீட்டுக்கு அப்பாற்பட்டது. ஆனுல் இது மற்ற இராணுவ வெற்றிகளைக் காட்டிலும் அதிக முக்கியமான வெற்றி. ஏனெனில், போல்ஷிவிக்குகளின் அனுபவம், அவர்களுடைய நடவடிக்கைகள், அவர்களுடைய செயல்திட்டம், முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிராகப் போராட அவர்களது அறைகூவல் ஆகியவை உலகம் முழுவதிலும் மதிப்பு பெற்று விட்டன என்று இது நமக்குக் காட்டுகிறது...''[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை நோக்கமாகக் கொண்டு உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அரசியல் கொள்கைப் போக்கை வகுத்தது. இந்தக் காங்கிரசின் உலக வரலாற்று முக்கியத்துவம் இதுவே. உழைக்கும் விவசாயிகளுடனும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசியவிடுதலை இயக்கத்துடனும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் நிலையான கூட்டணி அமைப்பது பற்றிய உத்தரவுகளை அது அளித்தது. சந்தர்ப்பவாதிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் அணிகளில் புகும் வழியை அது அடைத்து விட்டது. கம்யூனிஸ்டு இயக்கத்தில் இடதுசாரியினரின் தவறுகளைத் திருத்தும் வழியைக் குறித்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத நோக்கிலும்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி ***31***, பக்கம் ***330.***

ஸ்தாபன ரீதியாகவும் உறுதிப்படுத்தும் பணியையும் வெகுஜனங்களுடன் அவற்றின் தொடர்புகளை வலுப்படுத்தும் பணியையும் முன்வைத்தது. ''இருபத்தொரு நிபந்தனைகளையும்'' விதிகளையும் ஏற்றதன் மூலம் அது கம்யூனிஸ்டு அகிலத்தைப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றித்த அனைத்துலகக் கட்சியாக ஸ்தாபன ரீதியில் அமைத்தது. சர்வதேசப் பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டின் உறுதியான கோட்பாடுகளை நிலைநாட்டியது. ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுகளுக்கு அனுப்பிய கடிதத்தில் லெனின் பின்வருமாறு எழுதினார்: ''தங்கள் விடுதலையின் பொருட்டுத் தொழிலாளர்களது போராட்டத்தின் மாபெரும் பிரச்சினைகளை, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டும், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் அனுபவத்தைக் கருத்தில் கொண்டும், அவர்களுடைய விஷய ஞானத்தையும் சித்த உறுதியையும் கவனத்தில் எடுத்துக் கொண்டும் நாம் தீர்க்கிறோம், இவ்வாறு உலகனைத்திலும் கம்யூனிஸத்திற்காகத் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்ட ஒற்றுமையைச் செயலளவில் (ரென்னர்கள், ஃபிரித்ஸ் ஆட்லர்கள், ஆட்டோ பௌவர்கள் ஆகியோர் போலச் சொல்லளவில் அல்ல) ஏற்படுத்துகிறோம் என்பது குறித்து நாம் பெருமைப்படுகிறோம்.''[1]

1919ம் ஆண்டில் கம்யூனிஸ்டு அகிலம் நிறுவப்பட்ட கணம் முதல் உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் அடைந்த வெற்றிகளை லெனின் குறிப்பிட்டார். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பிரபல முன்னறிவிப்பாளர்கள் மட்டும் இன்றி, பாட்டாளி வெகுஜனங்களுடன் தொடர்பு கொண்ட வலிவான ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இரண்டாவது காங்கிரஸில் ஒன்றிணைந்தார்கள் என்று அவர் எழுதினார். கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது (சட்ட அமைப்புக்) காங்கிரஸ் கம்யூனிஸப் பதாகையின் கீழ் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கொள்கைவாத, ஸ்தாபன ஒற்றுமைக்கு அடிகோலியது என்றால் இரண்டாவது காங்கிரஸ் அடுத்த அடி எடுத்து வைத்தது: தனது தீர்மானங்களில் அது சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் சித்தாந்தத்தையும் செயல் தந்திரத்தையும் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்ந்தது.

---

[1] வி.இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 269.

அத்தியாயம் இரண்டு

வெகுஜனங்களுக்காகவும் ஒன்றித்த தொழிலாளர் முன்னணிக்காகவும் சோவியத் குடியரசை வலுப்படுத்துவதற்காகவும் கம்யூனிஸ்டு அகிலத்தின் போராட்டம்

(1921-1923)

புதிய நிலைமைகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள்

தொழிலாளர் இயக்கத்தின் நிலை

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது, மூன்றுவது காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சர்வதேசச் சூழ்நிலையிலும் உலகப் புரட்சி இயக்கத்திலும் ஆழ்ந்த மாறுதல்கள் நிகழ்ந்தன.

சோவியத் ருஷ்யாவில் அயல்நாட்டு இராணுவத் தலையீடும் உள்நாட்டுப் போரும் 1920 இறுதியில் அனேகமாக முடிந்து விட்டன. போல்ஷிவிக் கட்சியின் தலைமையில் சோவியத் மக்கள் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிகளையும் சோவியத் ஆட்சியையும் தங்கள் நாட்டின் சுயாதீனத்தையும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவுடன் காப்பாற்றி விட்டார்கள். உலகின் முதலாவது சோஷலிஸப் புரட்சியை வலிமையால் மாய்த்து விடுவதற்கு சர்வதேச ஏகாதிபத்தியம் செய்த முயற்சி தோல்வி அடைந்தது. தலையீட்டாளர்கள் மீதும் உள்நாட்டுப் புரட்சி எதிர்ப்பாளர்கள் மீதும் இளம் சோஷலிஸ அரசு பெற்ற வெற்றி, புதிய அமைப்பின் வெல்லரும் விறலையும் முதலாளித்துவத்தின் தொடங்கிவிட்ட அழிவுப் போக்கின் மாற்ற முடியாமையையும் காட்டியது. உலக சோஷலிஸப் புரட்சியின் அரணுகவும் முதலாளித்துவ நாடுகளிலும் காலனிகளிலும் போராடி வந்த வெகுஜனங்களின் புரட்சிக் கலங்கரை விளக்கமாகவும் திகழ்ந்த சோவியத் குடியரசு நிலைபெற்றுவிட்டதை இந்த வெற்றி குறித்தது.

காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ந்துவந்த தேசிய-விடுதலை இயக்கம் உலக அரசியலிலும் ஏகாதிபத்தியத்தின் மீது புரட்சித் தாக்குதலிலும் மேலும் மேலும் அதிகமாகச் செயல்படும் காரணி ஆயிற்று. ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத மக்கள் புரட்சி வெற்றி அடைந்ததன் விளைவாக 1921ல் மங்கோலியா ஏகாதிபத்தியத்தின் காலனி

அமைப்பிலிருந்து விலகி, விடுதலையும் சுயாதீனமும் உள்ள ஜனநாயக நாடாக வளர்ச்சி அடையும் வாய்ப்பைப் பெற்றது. 1921, மார்ச்சு 1ந் தேதி நிறுவப்பட்ட மங்கோலிய மக்கள் கட்சி புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தியது.

அதே சமயம் முதலாளித்துவ நாடுகளில் புரட்சிப் போராட்டம் வெளிப்படையாகத் தணியத் தொடங்கியது. 1920ம் ஆண்டின் இரண்டாம் பாதியிலும் 1921ம் ஆண்டின் தொடக்கத்திலும் விரிவாக நடந்த புரட்சிப் போராட்டங்களில் பாட்டாளி வர்க்கத்தைத் தோற்கடிப்பது, வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் ஆதரவால் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு இயன்றது. வடக்கு இத்தாலியின் தொழிலாளர்கள் ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் கைப்பற்றுவதற்கு 1920, செப்டெம்பரில் முயற்சிகள் செய்தார்கள். ஆனால் இந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. டிசம்பர் மாதம் செக்கோஸ்லோவாக்கியப் பாட்டாளி வர்க்கத்தின் பொது வேலை நிறுத்தத்தை பூர்ஷ்வா வர்க்கம் ஒடுக்கிவிட்டது. 1921, மார்ச்சில் ஜெர்மானியப் பிற்போக்காளர்கள் மத்திய ஜெர்மனியின் முன்னணித் தொழிலாளர்களை முதலில் தூண்டிவிட்டு, பின்னர் அவர்களுடைய புரட்சி நடவடிக்கைகளை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தார்கள்.

பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டது. தொழிலாளி வர்க்கம் கடினமான தற்காப்புப் போராட்டங்கள் நிகழ்த்த வேண்டியதாயிற்று. அதிலும் இந்தப் போராட்டங்கள், 1920ம் 1921ம் ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளைப் பீடித்த பொருளாதார நெருக்கடியின் சூழலில் நடந்தன. லட்சக்கணக்கானவர்கள் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலுமிருந்து வெளியேற்றப்பட்டார்கள். வேலையில் இருந்தவர்களுடைய சம்பளங்கள் குறைக்கப்பட்டன. உலக யுத்தம் முடிந்தபின் உழைப்பாளிகள் போராடிப் பெற்றிருந்த பல அரசியல், பொருளாதார நலங்கள் இப்போது ஆபத்துக்கு உள்ளாயின. சில நாடுகளில் இவை ஒழிக்கப்பட்டன. உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மூலதனம் தாக்கிய அதே சமயத்தில் அரசியல் பிற்போக்கும் அதிகரித்தது. பல்வகையான பயங்கரவாத ஸ்தாபனங்களும் கருங்காலிகள் நிறுவனங்களும் தொழிலாளர்களுக்கு எதிராக மேலும் மேலும் அடிக்கடி ஏவிவிடப்பட்டன. ஆயுதந்தாங்கிய பாசிஸ்டுக் கும்பல்களும் தொழிலாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. தொழிலாளர்

களின் வேலைநிறுத்தங்களும் பிற நடவடிக்கைகளும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தோல்வியில் முடிந்தன.

ஐரோப்பிய, அமெரிக்க பூர்ஷ்வா வர்க்கம் நேரடியான வற்புறுத்தலையும் பயங்கர நடவடிக்கைகளையும் மேற்கொண்டதோடு சந்தர்ப்பத்துக்கு ஏற்பத் தந்திரமாகப் போக்கை மாற்றிக் கொண்டது, சில விஷயங்களில் விட்டுக் கொடுத்தது. அதன் ஊன்றுகோலாக விளங்கினார்கள் சீர்திருத்தவாதத் தலைவர்கள். தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மைமீது இவர்களது செல்வாக்கு குன்றாமல் இருந்தது. புரட்சி ஏற்றத்தின் ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளில் லட்சோபலட்சம் உழைப்பாளி வெகுஜனங்களின் அரசியல் செயலூக்கம் ஒரேயடியாக அதிகரித்திருந்தது. ஆயினும், பூர்ஷ்வா வர்க்கம் வலிமையும் அனுபவமும் பெற்றிருந்தது. சோஷல்-சீர்திருத்தவாதக் கட்சிகள் கொள்கைவாத, ஸ்தாபனச் செல்வாக்கு கொண்டிருந்தன. வெகுஜனங்கள் போதிய அரசியல் முதிர்ச்சி பெற்றிருக்கவில்லை. உழைப்பாளிகளின் உணர்வில் தப்பு எண்ணங்களும் மருட்சிகளும்ஆழமாக வேரோடிஇருந்தன. பூர்ஷ்வா ஜனநாயகத்தின் நிலைமைகளில் தங்கள் நலன்களை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று அவர்கள் வெகுளித்தனமாக நம்பினார்கள். இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பலவீனமும் அனுபவம் இன்மையும் இவற்றோடு சேர்ந்து கொண்டன. இந்தக் காரணங்களால் தொழிலாளர்களதும் பிற உழைப்பாளி வட்டாரங்களதும் கணிசமான பகுதி புரட்சிப் பாதையை மேற்கொள்ளத் திறன் அற்றதாக இருந்தது, சீர்திருத்தவாதிகளைப் பின்பற்றியது.

1921ம் ஆண்டு, சமூக-ஜனநாயகக் கட்சிகளிலும் சோஷலிஸ்டுக் கட்சிகளிலும் சுமார் எண்பது லட்சம் உறுப்பினர்கள் இருந்தார்கள். சீர்திருத்தவாதிகளின் தலைமையில் இயங்கிய சர்வதேசத் தொழிற்சங்க சம்மேளனத்தில் (ஆம்ஸ்டர்டாம் அகிலத்தில்)இரண்டு கோடி இருபது லட்சம் உறுப்பினர்கள் இருந்தார்கள்.[1]

இந்த சமயத்தில் சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்களும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கத் தலைவர்களும் ''வர்க்க சமாதானம்'' பற்றியும் ''முதலாளித்துவம் சோஷலிஸமாக வளர்வது'' பற்றியும் ஊக்கத்துடன் விரிவாகப் பிரசாரம் செய்யத்

---

[1] Jahrbuch für Wirtschaft, Politik und Arbeiterbewegung 1923-24, Hamburg, S. 51; ''கம்யூனிஸ்டு அகிலத்தின்ஆண்டுமலர்'', பெத்ரோகிராத்—மாஸ்கோ, 1923, பக்கங்கள் 54-55, 82-83.

தொடங்கினார்கள். பொருளாதாரத்தை ''சோஷலிஸமாக்குவது'' எனப்பட்ட தங்கள் திட்டங்களை எங்கும் பறைசாற்றினார்கள். உலக யுத்தம் முடிந்த பின்னர், புரட்சி இல்லாமலே, நாடாளுமன்ற ஜன நாயகத்தின் வாயிலாக சோஷலிஸத்தை அடையும் வழி பாட்டாளி வர்க்கத்துக்கு முன் திறக்கப்பட்டுவிட்டது என்றும், எனவே நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று, தங்கள் செயல் திட்டத்தை நிறைவேற்றுவதே சோஷலிஸ்டுக் கட்சிகளின் பணி என்றும் அவர்கள் கூறினார்கள். ''...நமது ஆற்றல் முதன்மையாகத் தேர்தல்களில் ஈடுபடுத்தப்பட வேண்டும். தேர்தல் அறிக்கை குண்டுகளைவிட வன்மை வாய்ந்தது. அது கடைசியில் வெற்றி பெற்றுத் தீர வேண்டும்'' என்றார் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவரான ஜே. தாமஸ்.[1] சீர்திருத்தவாதிகள் உழைப்பாளிகளின் ஜனநாயக மனநிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வர்க்கப் போராட்டத்தின் போது பெறப்பட்ட வெற்றிகளைத் தங்களுடைய தொண்டின் விளைவு என்று வாய்ச் சவடால் அடித்தார்கள். தாங்களே ''ஜனநாயக சோஷலிஸத்துக்கு'' வழி வகுப்பதாக அவர்கள் வலிந்துரைத்தார்கள். வெகுஜனங்களை ஊக்கமுள்ள புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுப்பதற்குத் தங்கள் சக்தி அனைத்தையும் அவர்கள் பயன்படுத்தினார்கள். வர்க்கப் போராட்டம் மிகத் தீவிரம் அடைந்த சந்தர்ப்பங்களில் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் புரட்சியை ஒடுக்குபவர்களாகவும் அதன் கொலைகாரர்களாகவும் பணி ஏற்றார்கள். அவர்கள் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக உக்கிரமாகப் போராடினார்கள். கம்யூனிஸ்டுகளை மக்களிடமிருந்து தனிப்படுத்தவும் தொழிலாளி வர்க்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கை ஒழிக்கவும் அவர்கள் முயன்றார்கள். இதே நோக்கத்துடன் சீர்திருத்தவாதிகள் கம்யூனிஸ்டுகளைத் தொழிற்சங்கங்களிலிருந்து நீக்கினார்கள், கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகமாய் இருந்த தொழிற்சங்கங்களை தொழிற்சங்க சம்மேளனங்களிலிருந்து விலக்கினார்கள்.

ஜெர்மனியிலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் வேறு சில நாடுகளிலும் ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகளின் தவறுகளும் சீர்திருத்தவாதிகளின் பிளவுபடுத்தும் கொள்கைக்கு உதவின.

---

[1] ''சர்வதேசத் தொழிலாளர் இயக்கம்'', 1921, இதழ் 2, பக்கம் 7.

புரட்சிகரத் தொழிலாளர்கள் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்றும் சுயேச்சையான தொழிற்சங்க ஸ்தாபனங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் இந்த ''இடதுசாரியினர்'' போராடினார்கள். இத்தகைய போலித் தீவிரவாதப் பேச்சுக்கள் தொழிற்சங்கங்களைப் பிளவுபடுத்தும் சீர்திருத்தவாதிகளின் வேலையை உண்மையில் எளிதாக்கின. தொழிற்சங்கங்களிலிருந்து விலக்கப்பட்டவர்கள் தங்கள் தொழிற் சங்கங்களை அமைக்க வேண்டியதாயிற்று. இவை புரட்சி நிலையை மேற்கொண்டன ஆயினும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களில் இருந்த விரிவான தொழிலாளி வெகுஜனங்களிடமிருந்து தனிப் படுத்தப்பட்டு விட்டன.

இடைநிலைவாதக் கட்சிகளின் தலைவர்கள் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் தீங்கு விளைக்கும் கொள்கையைக் கடைப் பிடித்தார்கள். வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளைப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு, புரட்சி நடவடிக்கையின் இன்றியமையாமையை உணரத் தொடங்கியிருந்த தொழிலாளர்கள் கம்யூனிஸ்டுகளை அணுகவிடாமல் தடுக்க அவர்கள் முயன்றார்கள். இடைநிலைவாதத் தலைவர்கள் புரட்சிகர மாற்றங்களும் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை நிலைநாட்டுவதும் கூடச் சரியானவை, அவசியமானவை என்று சொல்லளவில் ஒப்புக் கொண்டு அதே சமயம் தொழிலாளர் இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதில் வலதுசாரி சமூக-ஜனநாயக வாதிகளுக்குச் செயலளவில் உதவினார்கள். அவர்கள் இரண்டா வது அகிலத்தைச் சீர்திருத்தவாத ஸ்தாபனம் என்று தாக்கி விமர் சித்தார்கள். உண்மையிலோ அதே போன்ற சந்தர்ப்பவாத, பிளவு படுத்தும் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். இவை எல்லா வற்றினதும் காரணமாக, இடைநிலைவாதக் கட்சிகளில், இடப்புறம் சென்ற சாதாரண உறுப்பினர்களுக்கும் வலப்புறம் விரைந்த தலைவர்களுக்கும் இடையே வேறுபாடு வரவர அதிக ஆழம் ஆயிற்று.

1921ம் ஆண்டு பிப்ரவரி மாதம், சோஷலிஸக் கட்சிகளின் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை இடைநிலைவாதக் கட்சிகள் வியன்னா நகரில் அமைத்தன. இது இரண்டரையாவது அகிலம் என்று பெயர் பெற்றது. வெகுஜனங்களிடையே வளர்ந்து வந்த கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குக்கு எதிராகச் செயல்புரியும் பொருட்டு இடைநிலைவாதிகள், இரண்டரையாவது அகிலத்தைப் பயன்படுத்தினார்கள். புரட்சிச் சொற்றொடர்களை அள்ளி வீசினார்

கள், ஒன்றுசேரும்படிப் போலி வேண்டுகோள்களை இடைவிடாது திரும்பத் திரும்ப விடுத்தார்கள்.

''இரண்டரையாவது அகிலத்தைச் சேர்ந்த கனவான்கள் புரட்சிக்காரர்கள் என்ற பெயர் பெற ஆசைப்படுகிறார்கள், ஆனால் உண்மையில் எல்லா வித ஆழ்ந்த நிலைமைகளிலும் புரட்சி எதிர்ப்பாளர்களாகவே செயல்படுகிறார்கள். ஏனெனில் பழைய அரசு இயந்திரத்தை வன்முறையால் உடைத்து எறிய அவர்கள் அஞ்சுகிறார்கள். தொழிலாளி வர்க்கத்தின் சக்தியில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை'' என்று எழுதினார் லெனின்.[1]

சமூக-ஜனநாயகத் தலைவர்களின் துரோகம் காரணமாக சர்வ தேசத் தொழிலாளி வர்க்கத்தில் ஏற்பட்ட பிளவும் சீர்திருத்த வாதத் தலைவர்கள் வர்க்கப் போராட்டத்தில் செய்த மறைமுக அழிவு வேலையும் பாட்டாளி வர்க்கச் சக்திகளைப் பலவீனப்படுத்தி, தொழிலாளர் வர்க்கத்தின் மீது தாக்கு நடத்துவதில் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு உதவின. முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தைத் தாற்காலிகமாகத் தோற்கடிப்பதும் உலகப் புரட்சி நிகழ்முறையின் போக்கைத் தடைப்படுத்துவதும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு இயன்றன. ஆனால் இந்தப் போக்கை நிறுத்துவது அதன் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி மேலும் ஆழ்ந்ததாயிற்று.

பாட்டாளி வர்க்கத்தின் தோல்வி காரணமாகப் புரட்சி அலையில் மேற்குறித்த வற்றம் ஏற்பட்டதாயினும் நிலைமை எதார்த்தத்தில் முன்போலவே புரட்சிகரமாக இருந்து வந்தது. முதலாளித்துவ, காலனி நாடுகளில் குவிந்திருந்த ''எரி பொருள்'' மிகுதி, புதிய புரட்சி வெடிப்புக்கு ஏற்றவாய்ப்பை உருவாக்கிற்று.

புதிய கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றுதல்

இந்தக் காலப்பகுதியில் வர்க்கப் போராட்டத்தின் நிலைமைகள் சிக்கலான போதிலும் தொழிலாளர் இயக்க அணிகளில் வகைப் பிரிவு மேலும் தீவிரம் ஆயிற்று. இந்தப் பாகுபாட்டின் விளைவாக

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கங்கள் 25-26.

சோஷலிஸ்டுக் கட்சிகளின் மிகுந்த முற்போக்குள்ள நபர்கள் கம்யூனிஸத்தின் தரப்புக்கு வந்து விட்டார்கள்.

சில கட்சிகள் மூன்ருவது அகிலத்தில் சேரும் விருப்பத்தை அறிவித்தன, ஆனால் உண்மையில் இன்னமும் இடைநிலைவாதக் கட்சிகளாகவே இருந்து வந்தன. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் தீர்மானங்கள் மீது, சிறப்பாக "இருபத்தொரு நிபந்தனைகள்" மீது இந்தக் கட்சிகளில் காரசாரமான விவாதம் மூண்டது. ஜெர்மன் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சியிலும் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியிலும் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியிலும் வேறு சில கட்சிகளிலும் புரட்சிச் சாரியினருக்கும் "இருபத்தொரு நிபந்தனைகளை" ஏற்க விரும்பாத சந்தர்ப்பவாதப் போக்குள்ள இடைநிலைவாதிகளுக்கும் இடையே கடும் போராட்டம் தொடங்கியது. கம்யூனிஸ்டுஅகிலம், சிறப்பாக ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி "சர்வாதிகாரம்" நடத்துவதாகவும் தொழிலாளர் இயக்கத்தை "மாஸ்கோவின் நலன்களுக்கு" அடிப்படுத்த விரும்புவதாகவும் சந்தர்ப்பவாதிகள் கூறினர்கள். ஜெர்மானிய, பிரெஞ்சுத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதத்தில் லெனின் இந்த அவதூற்றைக் கண்டனம் செய்தார். "மாஸ்கோவின் 'சர்வாதிகாரம்' என்பது போன்ற கூச்சல்கள் கவனத்தை வேறு புறம் திருப்பும் முயற்சிகள் தவிர வேறில்லை. உண்மையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவில் உள்ள இருபது உறுப்பினர்களில் ஐந்து பெயர் மட்டுமே ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். 'சர்வாதிகாரம்' என்பது போன்ற பேச்சுக்கள் எல்லாம் தங்களையே ஏமாற்றிக் கொள்வது அல்லது தொழிலாளர்களை ஏமாற்றுவது ஆகும்" என்று அவர் குறிப்பிட்டார்.[1] உண்மையில் ஒருபுறம் புரட்சிகரமான பாட்டாளி வர்க்க நபர்களுக்கும் மறுபுறம் சந்தர்ப்பவாத, குட்டி பூர்ஷ்வா நபர்களுக்கும் இடையே போராட்டம் நடக்கிறது. இந்த சந்தர்ப்பவாதிகள் பாட்டாளி வர்க்கக் கட்சியின் உள்ளிருந்தபடியே பூர்ஷ்வாக்களின் செல்வாக்கைப் பாட்டாளிகள்மீது செலுத்துகிருர்கள், பாட்டாளி வர்க்கத்தை பூர்ஷ்வாச் சீர்திருத்தவாதத்துக்கு அடிப்படுத்துகிருர்கள். "இவர்களுடனும் இவர்கள் போன்றவர்களுடனும் பிளவுபடுவதே பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராக, அதைக் கவிழ்க்கும்

---

[1] **வி.இ. லெனின்.** *முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 280.*

பொருட்டு, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச ஒற்றுமையை ஏற்படுத்தும்.''[1]

இடைநிலைவாதிகளை அம்பலப்படுத்தி மூன்றாவது அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளிலிருந்து அவர்களை வெளியேற்றியது கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிறுவப்பட்ட நிகழ்முறையின் பகுதியாக விளங்கியது. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையை உருவாக்கி வலுப்படுத்துவதற்கு இது இன்றியமையாததாக இருந்தது.

ஜெர்மனியில் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சியின் புரட்சிச் சாரியினர் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உதவியுடன் கட்சி வெகுஜனங்களைத் தங்கள் தரப்புக்குக் கொண்டு வந்தார்கள். கால் நகரில் நடந்த காங்கிரசில் பெரும்பான்மை வாக்குகள் அவர்களுக்குக் கிடைத்தன. அவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்வது, ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் இணைவது என்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் நிறைவேற்றச் செய்தார்கள். வலதுசாரியினர் காங்கிரசிலிருந்து வெளியேறிக் கட்சியைப் பிளவுபடுத்தினார்கள். 1920ம் ஆண்டு டிசம்பர் மாதம் பெர்லினில் நடந்த காங்கிரசில் ஜெர்மன் சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரியினர் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள். இவ்வாறு ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி உருவாயிற்று.[2] ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணியை ஒன்று திரட்டியதும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியை வரலாற்று நோக்கில் குறுகிய காலத்தில் வெகுஜனக் கட்சியாக மாற்றியதும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பெருத்த சாதனையாக விளங்கின. வேறு நாடுகளில் இது வெகுவாக வரவேற்கப்பட்டது. ''...இயந்திரத் தொழில் துறையில் மிகுந்த வளர்ச்சி பெற்ற நாட்டின் இரண்டு தொழிலாளர் கட்சிகளின் கூட்டான போராட்டத்தின் விளைவாக, புரட்சி அடிப்படையில் அவை ஒன்றுவது நிகழ்ந்தது.''[3]

1920ம் ஆண்டு டிசம்பர் மாத முடிவில் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ் தூர் நகரில் கூடியது. இதற்கு முன்பு, மார்க்சிய-லெனினிய நிலையை மேற்கொள்வதற்கும்''இருபத்தொரு

---

[1] வி.இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 282.

[2] 1921, ஆகஸ்டில் இது ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி என்று பெயர் வைத்துக்கொண்டது.

[3] Geschichte der deutschen Arbeiterbewegung, Bd. 3, Von 1917 bis 1923. Berlin, 1966, S. 311.

நிபந்தனைகளை'' ஏற்பதற்கும் ஆதரவாகக் கட்சிக்குள் புரட்சிச் சாரியினர் கடுமையான போராட்டம் நடத்தினார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் செல்வாக்கினாலும் அதன் உதவியுடனும் காங்கிரசில் ஏற்கப்பட்ட தீர்மானங்கள், கட்சி புரட்சிப் பாதையில் முன்னேறுவதற்கும் கம்யூனிஸ்டுக் கட்சியின் பண்புகளைப் பெறுவதற்கும் வழி வகுத்தன. பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் கருத்துக்களைப் புகுத்தவும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவவும் தளரா ஊக்கத்துடன் உழைத்தார் மர்ஸேல் காஷேன். இவர் சோவியத் ருஷ்யா சென்று லெனினைக் கண்டு உரையாடிய பின் பற்றுறுதி கொண்ட புரட்சியாளர் ஆகிவிட்டார். தூர் காங்கிரசுக்கு இரகசியமாக வந்த கிளாரா த்ஸேத்கின் வர்க்கப் போராட்டத்தின் புரட்சி நிலைகளை மேற்கொள்ளும்படியும் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைக்கும்படியும் காங்கிரசைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவின் சார்பில் கேட்டுக் கொண்டார். ''நீங்கள் முன்னேறுவதற்கு, வலிய, ஒன்றித்த, மையப்படுத்தப்பட்ட, நல்ல கட்டுப்பாடு உள்ள கட்சியை அமைத்து, மூன்றாவது அகிலத்தில் சேர்வதாகத் தெளிவாய் அறிவிக்க வேண்டும்'' என்றார் அவர்.[1]

கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்வது என்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் நான்கில் மூன்று பெரும்பான்மை வாக்குக்களால் நிறைவேற்றியது. ப. வாயான்-குத்யுரியே படித்த அறிக்கையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''தூர் காங்கிரஸ், பிரான்சில் சோஷலிஸத்தின் புகழ் பெற்ற நீண்ட வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல் கல்லாக விளங்கும். நமக்கு ஒரு காலத்தில் புனிதமாக இருந்தவையும் ஆனால் நடைமுறையில் நாம் மிக அடிக்கடி மறந்து விடுபவையுமான மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவருடையவும் உண்மையான கருத்துக்களையும் போதனையையும் இந்தக் காங்கிரஸ் நம் நாட்டில் மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறது. அதே சமயம், நமது ஆயத்த முறைகளையும் நம்முடைய செயல்களையும் புதிய காலப்பகுதியின் தேவைகளுக்கு ஏற்ப, அனைத்துலகப் புரட்சி நெருக்கடி நம்மிடம் அதிகாரத்துடன் ஒப்படைக்கும் பொறுப்புக்களுக்கு ஏற்ப இசைவித்துக் கொள்ளவும் அது நமக்குக் கற்பிக்கிறது... நமது கட்சி மாட்சி மிக்கதாகத்

[1] ஜ. தியூக்ளோ. *1917 அக்டோபரும் பிரான்சும்*, மாஸ்கோ, 1967, பக்கம் 361.

திகழுமாக! நமது கட்சி வலிமையும் கட்டுப்பாடும் உள்ளதாக, சாதாரண உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, தலைவர்களுக்கும் மதிப்புள்ளதாக விளங்குமாக!''[1]

தூர் நகரில் நடந்த காங்கிரஸ் பிரெஞ்சுத் தொழிலாளர் இயக்கத்தை மார்க்சிய-லெனினியத்துடன் இணைப்பதற்கு வேண்டிய நிலைமைகளை ஏற்படுத்தியது. கம்யூனிஸ்டுக் கட்சி, வலதுசாரியினர், இடைநிலைவாதிகளின் சந்தர்ப்பவாத, சீர்திருத்தவாதக் கொள்கையை அகற்றிவிட்டு பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி மரபுகளது வாரிசாக வரலாற்று அரங்கில் அடி வைத்தது. நிறுவப்பட்ட நாள் முதலே கம்யூனிஸ்டுக் கட்சி வெகுஜனக் கட்சியாக விளங்கியது. தொழிலாளி வர்க்கத்தில் அது விரிவான செல்வாக்கு பெற்றிருந்தது. அனேக விவசாயி வட்டாரங்களிலும் அதற்கு வலுத்த அடிப்படை இருந்தது. ஆயினும் புரட்சிச் செயலாற்றும் உண்மையான கட்சியாக மாறுவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சி சமூக-ஜனநாயகவாதத்தின் அனேக மீதமிச்சங்களிலிருந்து விடுபடுவது அவசியமாய் இருந்தது. சந்தர்ப்பவாதச் சிறுபான்மையினர் கட்சியைப் பிளவுபடுத்தி சோஷலிஸ்டுக் கட்சியை அமைத்தார்கள்.

இதே காலப் பகுதியில் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவப்பட்டது. 1920ம் ஆண்டில் இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி மூன்றுவது அகிலத்தில் சேர்ந்தது. ஆயினும் நாட்டில் புரட்சி இயக்கத்தைத் தலைமை ஏற்று நடத்த அது திறன் அற்றதாக இருந்தது. அதற்குள் கொள்கைவாத, ஸ்தாபன ஒற்றுமையோ, உறுதியான அரசியல் கட்டுப்பாடோ இல்லை. புரட்சி ஏற்றத்தின் சூழ்நிலையிலோ, பூர்ஷ்வா வர்க்கத்தின் தாக்குதலும் பாசிஸம் தீவிரம் அடைந்ததும் நிகழ்ந்த போதோ அதனுல் சரியாகச் செயல்பட முடியவில்லை. புரட்சிச் சாரியினரோடு கூடவே வெளிப்படையான சந்தர்ப்பவாதிகளும் கட்சியில் புகுந்து கொண்டார்கள். தலைமை இடைநிலைவாதக் குழுவின் கைகளில் இருந்தது. வலதுசாரிச் சந்தர்ப்பவாதிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகார கோஷத்தையும் ''இருபத்தொரு நிபந்தனைகள்'' ஏற்கப்படுவதையும் எதிர்த்தார்கள். இடைநிலைவாதத் தலைவர்களோ, சீர்திருத்தவாதிகளுடன் உறவைத் துணித்துக்கொள்ள விரும்பவில்லை. கட்சியை அடிப்படையில் புதுக்கி அமைப்பதும் அதை உண்மையில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக்

---

[1] அதே நூல், பக்கங்கள் 364-365, 366.

கட்சியாக மாற்றுவதும் அவசியம் என்பதைக் கட்சித் தலைமை புரிந்து கொள்ளாததால் கட்சியில் ஆழ்ந்த நெருக்கடி முற்றியது. கட்சியை அடிப்படையில் மாற்றி அமைப்பதோ, சீர்திருத்தவாதிகளை அதிலிருந்து வெளியேற்றுமல் நடக்கக் கூடியதாய் இல்லை. 1921ம் ஆண்டு ஜனவரி மாதம் லிவொர்னோ நகரில் கட்சிக் காங்கிரஸ் நடந்தது. முழுப் பெரும்பான்மை வாக்குகள் இடைநிலைவாதக் குழுவின் தரப்பில் இருந்தன. அவர்கள் சீர்திருத்தவாதிகளுடன் உறவைத் துணித்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள். இதன் பின் கம்யூனிஸ்டுகள் காங்கிரசிலிருந்து வெளியேறி, இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைத்தார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அதை இத்தாலியில் மூன்றுவது அகிலத்தின் பிரிவாக ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்பட்டது இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாக விளங்கியது. மார்க்சிய-லெனினியத்தைக் கொள்கைவாத அடிப்படையாகக் கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான புரட்சிக் கட்சி நாட்டில் உதயமாயிற்று. ஆயினும், முன்னுள் சோஷலிஸக் கட்சியின் சிறுபான்மை உறுப்பினர்தாம் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள். பல புரட்சிகரத் தொழிலாளர்கள் பழைய கட்சியில் இருந்துவிட்டார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியிலும் கூடத் தலைமை போர்டிகாவின் பிரிவுவாதக் குழுவின் கைகளில் இருந்தது. அ. கிராம்ஷி, ப. தளியாத்தி, உ. தெர்ராச்சீனி ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட ''ஓர்தினே நுவோவோ'' குழு மார்க்சிய-லெனினியப் போக்கைக் கடைப்பிடித்தது, ஆனுல் அந்தக் காலத்தில் அது தூரின் ஸ்தாபனத்தையே சார்ந்திருந்தது. சோஷலிஸ்டு இயக்கத்தின்மீது அதன் செல்வாக்கு போர்டிகாவின் ஆதரவாளர்களுக்கு இருந்த செல்வாக்கை விடக் குறைவாகவே இருந்தது. எனவே, நிறுவப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சிக்கு உடனே தலைமை ஏற்க அதனுல் முடியவில்லை. அப்போதுதான் அமைக்கப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டில் விரிவாகத் தொடங்கிய பாசிஸத்தின் தாக்குதலுக்கு எதிராகக் கடினமான போராட்டத்தை உடனேயே நடத்த வேண்டியதாயிற்று.

ருமேனிய சோஷலிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ், 1921, மே மாதம் 8ந் தேதி, கட்சியைக் கம்யூனிஸ்டுக் கட்சியாக மாற்றி அமைப்பது என்றும் மூன்றுவது அகிலத்தில் சேர்வது என்றும் மிகப் பெரும்பான்மை வாக்குக்களால் முடிவு செய்தது. காங்கிரஸ்

கூடுவதற்கு முன் கம்யூனிஸ்டுக் குழுக்கள் கட்சிக்குள் ஊக்கத்துடன் வேலை செய்தன. பெரும்பான்மையான ஸ்தாபனங்களைத் தம் தரப்புக்குக் கொண்டுவருவதில் அவை வெற்றி அடைந்தன. பிற்போக்காளர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியை அழிக்க முயன்றார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் மிகப் பலர் கைது செய்து சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். ஆனால் அடக்குமுறையைப் பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்டுக் கட்சி தொடர்ந்து நிலவியது, தொடர்ந்து போராடியது.

அதே மாதத்தில் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சட்ட அமைப்புக் காங்கிரஸ் நடைபெற்றது. சமூக-ஜனநாயகக் கட்சியின் புரட்சிச் சாரியான ''மார்க்சிய இடதுசாரியினர்'' ப. ஷ்மிராலின் தலைமையில் விடாப்பிடியான போராட்டம் நடத்தினர். இதன் விளைவாக, கட்சியின் முழுப் பெரும்பான்மை உறுப்பினர்கள், கட்சியைக் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்ப்பதற்கு ஆதரவாக ''மார்க்சிய இடதுசாரியினரின்'' தரப்புக்கு வந்து விட்டார்கள். வலதுசாரித் தலைவர்கள் கட்சியைப் பிளவுபடுத்த நேரடியாக முயன்றார்கள். இதன் பின், 1920, செப்டெம்பரில் ''மார்க்சிய இடதுசாரியினர்'' சுயேச்சையான கட்சியாக அமைந்தார்கள். இந்தக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைப் போக்குக்குக் கோட்பாட்டு நோக்கில் இசைவு தெரிவித்தது. கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்வது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தும் பணியை அது தனது மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைத்தது. 1921, மே மாதம் நடந்த செக்கோஸ்லோவாக்கிய சமூக-ஜனநாயக (இடதுசாரிக்) கட்சியின் காங்கிரஸ் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்வது என்று முடிவு செய்து, கட்சியின் பெயரைக் கம்யூனிஸ்டுக் கட்சி என்று மாற்றிக் கொண்டது. செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி வெகுஜனக் கட்சியாக உதயமாயிற்று. உருவான சமயத்தில் அதன் உறுப்பினர் தொகை ருஷ்யாவினதும் ஜெர்மனியினதும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அடுத்தபடியாக இருந்தது.

சீனா, தென் ஆப்பிரிக்கா, பெல்ஜியம், கானடா, லக்ஸம்பர்க், சுவிட்ஸர்லாந்து, பாலஸ்தீனம், போர்ச்சுகல், நியூ ஜீலாந்து ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைக்கப்பட்டன. 1922ல் பிரேசில், ஜப்பான், சிலி ஆகியவற்றிலும் 1923ல் நார்வேயிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாயின. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு லெனின் பின்வருமாறு முடிவு செய்தார்: ''கம்யூனிஸ்டு அகிலம் இரண்டாவது காங்கிரசுக்குப் பின்

முற்போக்குள்ள பெரிய ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும்... இந்த ஒவ்வொரு நாட்டினதும் தொழிலாளர் இயக்கத்தின் செயல் ஆகிவிட்டது. அது மட்டும் அல்ல, கம்யூனிஸ்டு அகிலம் சர்வதேச அரசியலில் மிக முக்கியக் காரணி ஆகிவிட்டது.''[1]

கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவானது புரட்சிகரப் பாட்டாளிகளின் பெருத்த வெற்றியாகத் திகழ்ந்தது. இந்த நாடுகளின் தொழிலாளர் இயக்க வளர்ச்சியில் வரலாற்று முக்கியத்துவம் உள்ள திருப்பத்தை அது குறித்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வடிவில் ஒத்திசைந்த புரட்சிப் போக்குள்ள போராட்ட ஊக்கம் கொண்ட முன்னணிப் படை உழைப்பாளிகளுக்கு இப்போது கிடைத்துவிட்டது.

வெகுஜனங்களுக்காகப் போராட்டம்—கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியப் பணி

கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி, சர்வதேசச் சூழ்நிலையில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள் ஆகியவற்றைப் பகுத்து ஆராய்ந்து, அனைத்துலக அளவிலும் தனி நாடுகளிலும் வர்க்க சக்திகளின் ஒப்புநிலையையும் முந்திய ஆண்டுகளில் நடந்த புரட்சிப் போராட்டங்களின் அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டு போர்த்தந்திர, செயல்தந்திரப் போக்கை வகுத்தன. 1918-1920 ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் தோல்வி அடைந்ததற்கான காரணங்களையும் அவை கருத்தில் கொண்டன.

பூர்ஷ்வா வர்க்கத்தின் தாக்குதல் காரணமாகவும் தொழிலாளி வர்க்கம் தற்காப்புக்கு மாறியதன் காரணமாகவும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் புதிய பணிகளை மேற்கொள்வது அவசியம் ஆயிற்று. வெகுஜனங்களின் உடனடியான கோரிக்கைகளையும் அவர்களுடைய பொருளாதார நலன்களையும் ஆதரித்துப் போராடுவது, புரட்சி ஏற்றக் காலத்தில் உழைப்பாளிகள் போராடிப் பெற்றிருந்த ஜனநாயக சுதந்திரங்களையும் சமுதாய, அரசியல் வெற்றிகளையும் காத்து விரிவுபடுத்துவது, புதிய யுத்தங்களின் அபாயத்தை எதிர்த்தும் சோவியத் நாட்டின் தற்காப்புக்காகவும் போராடுவது, வருங்

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 167.

காலப் புரட்சிப் போராட்டங்களுக்கு முன்னிலும் அதிகக் கவனத்துடன் முன்னேற்பாடுகள் செய்வது—இவை எல்லாம் பாட்டாளி வர்க்கத்துக்கும் அதன் புரட்சிகர ஸ்தாபனங்களுக்கும் மிக மிக உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆயின. இவற்றில் வெற்றி, தொழிலாளர்கள் தங்கள் அணிகளை எந்த அளவுக்கு ஒற்றுமைப்படுத்துகிருர்கள் என்பதைப் பொறுத்திருந்தது. எனவே, பாட்டாளி வர்க்கத்தின் சக்திகளை ஒழுங்கமைக்கும் சள்ளைபிடித்த அன்றாட வேலை கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முதல் பணியாக இருந்தது. பூர்ஷ்வா வர்க்கத்தின் தாக்குதல் எல்லா உழைப்பாளி வட்டாரங்களையும் பாதித்தது. முதன்மையாகத் தொழிலாளி வர்க்கம் அனைத்திற்கும் எதிராக நடந்தது இந்தத் தாக்குதல். ஆகவே வெவ்வேறு அரசியல் கருத்துக்கள் கொண்டவர்களும் வெவ்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களும் ஆன எல்லாத் தொழிலாளிகளும் பூர்ஷ்வாத் தாக்குதலை முறியடிப்பதில் ஒரே மாதிரி அக்கறை கொண்டிருந்தார்கள். தொழிலாளி வர்க்கத்தின் வெவ்வேறு படைப்பிரிவுகளின் செயல்களில் ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு எதார்த்தமான வாய்ப்பு இதனுல் உருவாயிற்று.

பெரும்பாலான கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர் எண்ணிக்கை குறைவாய் இருந்ததும் அனுபவம் இன்மையும் இந்தக் கட்சிகளின் செல்வாக்கு வெகுஜனங்களிடையே பரவுவதற்குப் பெருத்த தடையாக இருந்தன. முழுமையற்ற புள்ளி விவரங்களின் படி, 1921ம் ஆண்டு தொடங்கும் தறுவாயில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் [ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி நீங்கலாக] அணிகளில் சுமார் ஏழு லட்சத்து அறுபதாயிரம் உறுப்பினர்கள் இருந்தார்கள்.[1]

1921ம் ஆண்டுக் கோடைகாலத்துக்குள் புதிய கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாகி அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததால் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் கணிசமாக வளர்ச்சி அடைந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசினது அத்தாட்சிப் பத்திரக் குழு வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர் தொகை 22 லட்சத்து 38 ஆயிரம் என்று கணக்கிடப்பட்டது. இவர்களில் 7 லட்சத்து 22 ஆயிரம் பெயர் ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி உறுப்

---

[1] Jahrbuch für Wirtschaft, Politik und Arbeiterbewegung 1923-24, Hamburg, S. 51.

பினர்கள், 15 லட்சத்துப் 16 ஆயிரம் உறுப்பினர்கள் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்தவர்கள்.[1] பாட்டாளி வெகுஜனங்கள் மீது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கு கணிசமாக அதிகரித்தது. ஆயினும் பாட்டாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினர் சமூக-ஜனநாயகக் கட்சிகளையும் பிற சீர்திருத்தவாத ஸ்தாபனங்களையுமே இன்னமும் பின்பற்றி வந்தார்கள்.

வெகுஜனங்களிடையே வேலை செய்ய இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அனுபவமும் திறமையும் போதவில்லை. புதிய நிலைமைகளில் வர்க்கப் போராட்டங்களுக்கு வெகுஜனங்களை ஆயத்தம் செய்யும் பணியை அவை எப்போதும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ''உலகு அனைத்திலும் கம்யூனிஸ்டுகளின் பெருஞ் சேனை நம்மிடம் இருக்கிறது'' என்று 1921ம் ஆண்டுக் கோடையில் எழுதினார் லெனின். ''அது இன்னும் நன்கு பயிற்சி பெறவில்லை, நன்கு ஒழுங்கமைக்கப்படவில்லை. இந்த உண்மையை மறப்பதோ ஒப்புக் கொள்ள அஞ்சுவதோ குறிக்கோளுக்கு மிகப் பெரிய தீங்கு விளைக்கும். இந்தச் சேனை, காரியப் பாங்குடன், மிக மிக ஜாக்கிரதையாகவும் கண்டிப்பாகவும் தன்னைச் சரிபார்த்துக் கொண்டு, தனது சொந்த இயக்கத்தின் அனுபவத்தை ஆராய்ந்து, தன் படையினருக்கு உரிய முறையில் பயிற்சி அளித்து, உரிய முறையில் ஒழுங்

[1] இந்த விவரங்கள் முழுவதும் சரியானவை அல்ல, ஏனெனில் அந்தக் காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் உறுப்பினர்கள் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை. புரட்சிகரத் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களும் சில வேளைகளில் கம்யூனிஸ்டுகளில் சேர்த்து எண்ணப்பட்டார்கள். அ. திவேல் தொகுத்த ''கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்து ஆண்டுகள்'' (மாஸ்கோ, 1924, பக்கங்கள் 26-27) என்னும் தகவல் நூல், மூன்றுவது காங்கிரஸ் கூடிய தறுவாயில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர் தொகை 19 லட்சத்து 63 ஆயிரம் என்றும் இவர்களில் 6 லட்சத்து 43 ஆயிரம் பெயர் ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் 13 லட்சத்து 20 ஆயிரம் பெயர் முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறுகிறது. 1921ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு வெளியிட்ட விவரங்களின்படி, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மொத்த உறுப்பினர்கள் 20 லட்சம் பெயர். இவர்களில் 6 லட்சத்து 74 ஆயிரம் பெயர் ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி உறுப்பினர்கள். வெளிநாடுகளின் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 13 லட்சத்து 26 ஆயிரம் பெயர் (''பிராவ்தா'', 13 நவம்பர், 1921).

கமைத்து எல்லா வகையான அணி வகுப்புக்களிலும் பல விதமான போர்களிலும் தாக்கி முன்னேறும் நடவடிக்கைகளிலும் பின்வாங்கும் நடவடிக்கைகளிலும் பரீட்சிக்க வேண்டும். கடினமான இந்த நீண்டகாலப் பயிற்சி இல்லாமல் வெற்றி பெறுவது இயலாது.''[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் உதவியால் சோதரக் கட்சிகள் தொழிலாளி வெகுஜனங்களை ஒன்றுபடுத்துவதற்கான வழிகளையும் முறைகளையும் திட்டப்படுத்திக் கொண்டன. தங்கள் அனுபவத்தால் அவை கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்தினதும் கூட்டு அனுபவத்தை வளப்படுத்தின. மூலதனத்தின் தாக்குதலை எதிர்க்க ஏற்பாடு செய்வதற்கும் தொழிலாளர்களை ஒன்று திரட்டுவதற்கும் புதிய அணுகுமுறையை ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகள் மேற்கொண்டார்கள். அவர்களுடைய முன்முயற்சி மிகப் பயனுள்ளதாய் இருந்தது. 1921ம் ஆண்டுத் தொடக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி வெகுஜனங்களிடையே முன்னிலும் விரிவான வேலையை முறைப்படுத்தி முடித்தது. தொழிலாளி வர்க்கத்தை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் அது உழைப்பாளிகளின் அன்றாடப் பொருளாதாரக் கோரிக்கைகளுக்கு முதலிடம் கொடுத்தது. அதே சமயம், ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் காத்து விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட கோரிக்கைகளுக்கும் அது முக்கியத்துவம் அளித்தது. தொழிற்சங்கங்களிலும் பிற வெகுஜனப் பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களிலும் கட்சி முறையாக வேலை செய்யத் தொடங்கியது. தனது குறிக்கோள்களை விளக்குவதற்கும் வெகுஜனங்களை அணிதிரட்டுவதற்கும் நாடாளுமன்றப் பேச்சு மேடையை அது ஊக்கத்துடன் பயன்படுத்திக் கொண்டது. 1921ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ந் தேதி ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி நாட்டின் எல்லாப் பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களுக்கும் ஒரு ''பகிரங்கக் கடிதம்'' வெளியிட்டது. சமூக-ஜனநாயக் கட்சி, சுதந்திர சமூக-ஜனநாயகக் கட்சி, ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி, தொழிற்சங்கங்கள் ஆகியன இந்த ஸ்தாபனங்கள். தொழிலாளர்களுடையவும் பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளி வெகுஜனங்களுடையவும் உடனடிக் கோரிக்கைகளின் பொருட்டும் பிற்போக்கின் தீவிரம் அடைந்துவந்த தாக்குதல்களை எதிர்த்தும் ஒன்றித்த போராட்டம் நடத்தும்படி பாட்டாளி வர்க்க ஸ்தா

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 520.

பனங்களை இந்த ''பகிரங்கக் கடிதத்தில்'' அது கேட்டுக் கொண்டது. சம்பளங்களையும் படிகளையும் பென்ஷன்களையும் உயர்த்துவதற்காகவும், பொருள்களின் கிராக்கிக்கும் விலைவாசிகளின் அதிகரிப்புக்கும் எதிராகவும், காலியாகும் கட்டிடங்களை உடனே பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளும்படியும் உழைப்பாளிகளின் வசிக்கும் இட நிலைமைகளை மேம்படுத்தும்படியும் கோரியும், உற்பத்தியின் மீதும் உணவுப் பண்டங்கள், மூலப் பொருள்கள் ஆகியவற்றின் வினியோகத்தின் மீதும் தொழிலாளர் கண்காணிப்பை ஏற்படுத்துவதற்காகவும் போராட்டம் தொடங்கும்படி கடிதத்தில் யோசனை கூறப்பட்டது. எல்லாப் புரட்சி எதிர்ப்பு ஸ்தாபனங்களுடையவும் ஆயுதங்களை உடனே பறித்துக் கொண்டு அவற்றைக் கலைத்து விட வேண்டும், பாட்டாளி வர்க்கத் தற்காப்பு ஸ்தாபனங்களை நிறுவ வேண்டும், அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும், சோவியத் ருஷ்யாவுடன் தாமதமின்றித் தூதராலய உறவுகளும் வர்த்தக உறவுகளும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கோஷங்கள் முன் வைக்கப்பட்டன. இந்தக் கடிதம் வெளியானதை ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கம் விரிவாக வரவேற்றது. நாட்டின் பல நகரங்களிலும் தொழில் மையங்களிலும் நடந்த தொழிலாளர் கூட்டங்களில் கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சி ஆமோதிக்கப்பட்டது, ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் யோசனைகளை ஏற்கும்படி சமூக-ஜனநாயகவாதிகளிடம் கோரப்பட்டது. ஆயினும் சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர்களும் ''சுயேச்சையாளர்களுடையவும்'' சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களுடையவும் தலைவர்களும் இந்த யோசனைகளை நிராகரித்து விட்டார்கள். சமூக-ஜனநாயகக் கட்சி, தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் வலதுசாரித் தலைவர்களின் கம்யூனிஸ எதிர்ப்பு தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த நடவடிக்கைக்குப் பெருத்த தடையாக இருந்தது. ''அதிதீவிர இடதுசாரி'' ஜெர்மானியக் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி ''பகிரங்கக் கடிதத்திற்கு'' வெளிப்படையான எதிர்ப்பு நிலையை மேற்கொண்டது. இந்தக் கடிதம் சீர்திருத்தவாத உளையில் புதைவதாகும் என்று அது கருதியது. மக்களுக்கான வெகுஜனப் போராட்டத்தை நிராகரித்ததன்மூலம் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் பிரிவுவாதிகள் வெகுஜனங்களிடையே எல்லாவிதமான ஆழ்ந்த புரட்சி வேலையையும் உண்மையில் மறுத்தார்கள்.

கம்யூனிஸ்டு இயக்கத்துக்குள் இடதுசாரி சந்தர்ப்பவாத அபாயத்தின் அதிகரிப்பு

தொழிலாளி வர்க்கத்தை ஒன்று திரட்டும் பாதையில் கம்யூனிஸ்டுகளின் முக்கியமான முன்னேற்றமாகத் திகழ்ந்த ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ''பகிரங்கக் கடிதம்,'' சர்வ தேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பெருத்த கவனத்தை ஈர்த்தது. இதை மையமாகக் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தில் மூண்ட விவாதங்கள், முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டத்தின் அடுத்த வாய்ப்புக்கள் பற்றியும் வெகுஜனங்களிடையே கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகளையும் செயல் முறைகளையும் பற்றியும் கம்யூனிஸ்டுகள் கொண்டிருந்த மனப்போக்கையும் கருத்துக்களையும் பிரதிபலித்தன. கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருந்த சந்தர்ப்பவாதிகள் சோஷல்-சீர்திருத்தவாதத்துக்குக் கோட்பாட்டு நோக்கில் விட்டுக் கொடுக்கவும் வெகுஜனங்களைப் புரட்சிக்கு ஆயத்தம் செய்ய மறுக்கவும் தயாராயிருந்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகளும் கம்யூனிஸ்டு அகிலமும் சமூக-ஜனநாயகவாதத்தின் சந்தர்ப்பவாத மீதமிச்சங்களுடனும் சில கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளில் வெளிப்பட்ட சீர்திருத்தவாத, இடைநிலைவாதப் போக்குகளுக்கு எதிராகவும் போராட்டம் நடத்த வேண்டியதாயிற்று.

அதே சமயம், கம்யூனிஸ்டுக் கட்சிகளில் தவறான குறுகிய பிரிவுவாதக் கண்ணோட்டங்கள் விரிவாகப் பரவி இருந்தன. உழைப்பாளிகளின் அன்றாடத் தேவைகளுக்காகப் போராடுவதும் இந்தப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தை ஒன்று திரட்டுவதும் முக்கியமானது என்பது இந்தக் கட்சிகளில் புரிந்து கொள்ளப்படவில்லை. பெரும்பாலான தொழிலாளர்கள் பின்பற்றிய சமூக-ஜனநாயகக் கட்சிகளுடனும் சீர்திருத்தவாதத் தொழிற் சங்கங்களுடனும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொடர்பு கொள்வது இன்றியமையாதது என்பது மறுக்கப்பட்டது. குட்டி பூர்ஷ்வாப் புரட்சிவாதத்தின் ஒரு வடிவமாக விளங்கிய கருத்துக்கள் சில கட்சிகளில் ஆதரிக்கப்பட்டன. இளம் கம்யூனிஸ்டுகள் தங்கள் அனுபவம் இன்மை காரணமாக, லெனினுடைய சொற்களின்படி, ''உடனடியான, தொடர்ந்த புரட்சி நடவடிக்கைகளுக்கு அவ்வளவு சாதகமற்ற சூழ்நிலையை நிதான புத்தியுடன் கணக்கில்

எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, செங்கொடிகளை முன்னிலும் தீவிரமாக ஆட்டுவதை'' மேலாக மதித்தார்கள்.[1]

''இடதுசாரியினர்'' புரட்சி அலையில் வற்றம் ஏற்படத் தொடங்கிவிட்டது என்பதை மறுத்தார்கள். தாமதம்இன்றிப் புரட்சி நடவடிக்கைகள் தொடங்க வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். விரிவான உழைப்பாளி வெகுஜனங்களைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தரப்புக்குக் கொண்டுவருவதன் அவசியத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. செயலூக்கமுள்ள சிறுபான்மையினரின் நடவடிக்கை நிர்ணயகரமான பங்கு ஆற்றுகிறது என்று சாதித்தார்கள். அப்போது புரட்சி அலை அடங்கத் தொடங்கியிருந்தது. தொழிலாளி வர்க்கத்தின் சிறுபான்மையினர் மட்டுமே கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஆதரித்து வந்தார்கள். அத்தகைய நிலைமைகளில் இந்தக் கருத்துக்கள் சிறப்பாக அபாயமாக இருந்தன. ''இடதுசாரியினரின்'' கொள்கை புதிய நிலைமைகளில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் உள்ளே முதன்மையான அபாயமாக மாறிவிட்டது. ஏனெனில், தருணத்துக்கு முந்திய போராட்டங்களில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் கண்டிப்பாகத் தோல்வி அடையும் நிர்ப்பந்தத்தை அது ஏற்படுத்தியது, கம்யூனிஸ்டுக் கட்சியைத் தனிமை நிலைக்கு இட்டுவந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைவர் ஸினோவியெவும் செயற்குழு உறுப்பினர் புஹாரினும் ''இடதுசாரியினரின்'' சில போக்குக்களை ஆதரித்ததும் ''பகிரங்கக் கடிதத்தை'' எதிர்த்ததும் நிலைமையை இன்னும் சிக்கலாக்கின. ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்தந்திரம் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவில் 1921 பிப்ரவரி 22ந் தேதி விவாதம் நடந்த போது ஸினோவியெவ் ''பகிரங்கக் கடிதத்தை'' செயற்கை விவகாரம் என்று அழைத்தார். இந்தக் கடிதத்தில் முன்வைக்கப் பட்டிருந்த செயல்தந்திரம் முற்றிலும் நிறைவேற்ற முடியாதது என்று கூறி அதைக் கண்டனம் செய்தார். கம்யூனிஸ்டுகள் மற்றத் தொழிலாளர் கட்சிகளோடு உடன்பாடு செய்து கொள்ள முயலக் கூடாது என்றார் அவர். ''பகிரங்கக் கடிதத்தை'' புஹாரின் ''புரட்சித் தன்மை இல்லாத செயல்'' என்று மதிப்பிட்டார். உழைப்பாளிகளின் அன்றாட நலன்களைக் காப்பதற்கான

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 208.

போராட்டத்தைக் கட்சியின் புரட்சிக் கொள்கைக்கு முரணான தாகக் காட்டினார் அவர். ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி உண்மையான போராட்டம் நடத்த மறுப்பதாகவும் செயற்கை வழிகளைக் கற்பனை செய்வதாகவும் புஹாரின் கூறினார்.

ஸினோவியெவும் புஹாரினும் மேற்கொண்ட இந்த நிலை, கம்யூனிஸ்டுக் கட்சிகள் திட்டமிட்டிருந்த புதிய கொள்கைப் போக்குக்கு உலை வைப்பதாய் இருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளில் பிரிவு வாத-இடதுசாரிக் கருத்துக்கள் மேலோங்க இது உதவியது. லெனின் இந்த ஆபத்தை வெளிப்படுத்தி, ''பகிரங்கக் கடிதம்'' பற்றிய விவாதத்தில் ஊக்கத்துடன் தலையிட்டு, அதைத் தீவிர மாக ஆதரித்தார். கிளாரா த்ஸேத்கினுக்கும் பால் லெவிக்கும் எழுதிய கடிதத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். ''நான் இப்போதுதான் பகிரங்கக் கடிதத்தைப் பார்த்தேன். அது **முற்றிலும் சரியான** செயல்தந்திரம் என்று நான் கருதுகிறேன் (இந்தக் கடிதத்துக்கு எதிராயிருந்த எங்கள் 'இடதுசாரியினரின்' எதிரான கருத்தை நான் கண்டனம் செய்தேன்).''[1] ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கடிதம் ஒரே பாட்டாளி வர்க்க முன்னணியை அமைப்பதற்கான சரியான முயற்சி என்று லெனின் மதிப்பிட்டார். ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ''பகிரங்கக் கடிதத்தில்'' பிரேரிக்கப்பட்டிருந்த செயல்தந்திரத்தைக் கடைப்பிடிப்பது மற்றக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கடமை என்று அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். இது ''ஆதர்ச அரசியல் நடவடிக்கை'' என்று அவர் கூறினார். ''...தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைத் தன்பால் ஈர்க்கும் நடைமுறையின் முதல் செயல் என்ற வகையில் இது ஆதர்சமானது.''[2]

''பகிரங்கக் கடிதத்தை'' ஆதரித்தும் ''இடதுசாரிப்'' பிரிவு வாதத்தை எதிர்த்தும் லெனின் தீர்மானமாகச் செயலாற்றியதற்குக் காரணம், ''இடதுசாரியினர்'' பரப்பிவந்த பிரிவுவாத-துர்ச்சாகசப் போக்குகளின் கடும் அபாயமே ஆகும். வெகுஜனங்கள் புரட்சிக்கு ஆயத்தமாய் இருப்பதை ''இடதுசாரியினர்'' மிகைப் படுத்தியது, வர்க்கப் போராட்டத்தின் எதார்த்த வாய்ப்புக்களை

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 45, பக்கம் 124.

[2] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 470.

நிதானமாக மதிப்பிடவும், புரட்சி அலை தணிந்து, பாட்டாளி வர்க்கத்தின்மீது பூர்ஷ்வா வர்க்கத்தின் தாக்குதல் விரிவாகத் தொடங்கியிருந்த சூழ்நிலையில் கட்சியின் இன்றியமையாத பணிகளையும் வேலைமுறைகளையும் சரியாக நிர்ணயிக்கவும் அவர்கள் விரும்பாதது ஆகியவற்றின் விளைவாக, கம்யூனிஸ்டு முன்னணிப் படை வெகுஜனங்களிலிருந்து தனித்து ஒதுங்கிவிடும் அபாயத்தை ஏற்படுத்தியதோடு கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிலவுவதற்கே ஆபத்து உண்டாக்கின.

தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்காகப் போராடும் செயல் தந்திரத்துக்கு எதிராக ''தாக்குதல் சித்தாந்தம்'' எனப்பட்டதை ''இடதுசாரியினர்'' முன்வைத்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி எப்போதும் தாக்குதல் செயல்தந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், ஆயுதந்தாங்கிய தாக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், எதார்த்த நிலைமைகளைச் சார்ந்திராமல், எந்த சந்தர்ப்பத்திலும் ''முன்னணிப் போர்கள்'' நடத்த வேண்டும் என்பது இதன் சாரம். இந்த ''சித்தாந்தத்தின்'' ஆதரவாளர்கள் ஜெர்மானிய, ஹங்கேரிய, செக்கோஸ்லோவாக்கிய, இத்தாலிய, ஆஸ்திரிய, பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளிடையே இருந்தார்கள்.

ஜெர்மனியில் 1921ம் ஆண்டு மார்ச்சு மாதம் நடந்த நிகழ்ச்சிகளின் தொடர்பாகத் ''தாக்குதல் சித்தாந்தத்தின்'' மீது சிறப்பாகக் கடுமையான விவாதம் மூண்டது. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு வலுவாய் இருந்த மத்திய ஜெர்மனியில், சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர்களின் உதவியால் புரட்சி எதிர்ப்பாளர்கள் தொழிலாளர்களை ஆயுதமேந்திக் கிளர்ச்சி நடத்துவதற்குத் தூண்டிவிட்டார்கள். ஸக்ஸோனி மாநிலத்தின் ஓபர்-பிரசிடெண்டாய் இருந்த சமூக-ஜனநாயகவாதி ஹெர்ஸிங்கின் ஆணைப்படி போலீஸ் படைகள் தொழிற்சாலைக்குள் கொண்டுவரப்பட்டன. இந்தச் செயல் தொழிலாளர்களுக்கு ஆத்திரம் ஊட்டியது. போலீசுடன் மோதல்களும் எதிர்ப்பு வேலைநிறுத்தங்களும் ஆயுதப் பூசல்களாக வளர்ந்தன. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிலாளி வர்க்கமும் நாடுமுழுவதிலும்ஆயுதந்தாங்கிய கிளர்ச்சி நடத்த ஆயத்தமாய் இல்லை. போராட்டம் மத்திய ஜெர்மானிய வட்டாரங்களோடு (முக்கியமாக மான்ஸ்பீல்டு பிரதேசத்துடன்) நின்றுவிட்டது. கம்யூனிஸ்டுகளின் தலைமையில் செயலாற்றிய புரட்சிகரத் தொழிலாளர்கள் வீரத்துடன் போராடினார்கள். ஆயினும் அவர்கள் படு தோல்வி அடைந்தார்கள். அந்தக்

காலத்தில் ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் பிரிவுவாதிகள் ஆதிக்கம் வகித்தார்கள். மார்ச்சு நிகழ்ச்சிகள் நாடு முழுவதிலும் புரட்சி நடவடிக்கைகளின் தொடக்கம் என்று இவர்கள் கருதினார்கள். தொழிலாளி வெகுஜனங்களைக் கட்சி இந்த நடவடிக்கைகளுக்கு அறைகூவி அழைக்க வேண்டும் என்று இவர்கள் கூறினார்கள். '' 'தாக்குதல் சித்தாந்தத்தின்' விளைவாக மூண்ட, துர்ச்சாகசம் நிறைந்த, அகநிலைப் போக்குள்ள கொள்கை வர்க்கப் பகைவர்களுக்கே சாதகமாக முடிந்தது.''[1]

1921, பிப்ரவரியில் ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியிலிருந்து வெளியேறிய பால் லெவி, இந்த சமயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதுகில் குத்தினார். மார்ச்சு நிகழ்ச்சிகள் முடிந்தபின் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் அவர் ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு அகிலமும் சதியாலோசனை செய்து பலவந்தமாக ஆட்சியைக் கைப்பற்ற முயன்றதாகக் குற்றம் சாட்டினார். அவரது இந்த வாதம் கம்யூனிஸ்டுகளைத் தொல்லைப் படுத்துவதில் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் சமூக-ஜனநாயகக் கட்சிக்கும் உதவியது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காகவும் அவதூறான பிரசுரம் எழுதி வெளியிட்டதன் மூலம் தீங்கு செய்ததற்காகவும் லெவியை ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி கட்சியிலிருந்து விலக்கியது. லெவியின் சொல்லாடம்பர அறிக்கை, ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இடதுசாரிப் பிரிவுவாதப் போக்குகளை ஒழிப்பதைக் கடினம் ஆக்கியது.

''தாக்குதல் சித்தாந்தம்'' தொழிலாளி வர்க்கத்தில் கட்சியின் செல்வாக்கைப் பலவீனப்படுத்தியது. கட்சி வெகுஜனங்களிலிருந்து தனித்து ஒதுங்கிவிடும் அபாயம் இதனால் ஏற்பட்டது. வெகுஜனங்களுக்காகக் கம்யூனிஸ்டுகளின் வெற்றிகரமான போராட்டத்துக்கு ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதம் முதன்மையான தடை ஆயிற்று. அதைக் கூடிய விரைவில் ஒழிப்பது இன்றியமையாததாக இருந்தது.

சில கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைவர்களும் ஸினோவியெவ், புஹாரின், ராதெக் ஆகியோரும் இதைப் புரிந்து கொள்ளவில்லை. வலதுசாரி சந்தர்ப்பவாதம் மட்டுமே ஆபத்தானது என்று அவர்கள் தொடர்ந்து எண்ணினார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்

[1] Geschichte der deutschen Arbeiterbewegung, Bd. 3, S. 327-328.

தந்திரம் மாற்றப்படுவது அவசியம் என்பதை எதிர்த்தார்கள். இந்தப் போக்குகள் கம்யூனிஸ்டுக் கட்சியில் பிரிவுவாத மனப்பான்மையைத் தீவிரப்படுத்தின. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில் இவற்றுக்கு எதிராக விடாப்பிடியான போராட்டம் நடத்த நேர்ந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசுக்கு ஏற்பாடுகள்

உலக நிகழ்ச்சிப் போக்கினது புதிய கட்டத்தின் தேவைகளுக்கு ஏற்பத் தன் செயல்தந்திரத்தை மாற்றி அமைத்துக் கொள்வது சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு இன்றியமையாததாய் இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசுக்கு ஏற்பாடுகள் செய்வதில் பல கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். ''தாக்குதல் சித்தாந்தத்தின்'' கருத்தைக் காங்கிரசின் தீர்மானங்களில் புகுத்த விரும்பியவர்களுடன் இந்தக் கட்டத்திலேயே கடுமையான விவாதம் மூண்டது.

இந்த ''சித்தாந்தத்தின்'' ஊக்கமுள்ள ஆதரவாளர்களாக விளங்கிய பேலா கூன், ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர் அ. தால்ஹைமர் இருவரும் செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரை நகலைத் தயாரித்தார்கள். கம்யூனிஸ்டு அகிலம் சக்திகளைத் திரட்டுவதற்கான பிரசாரக் காலப் பகுதியை ஏற்கனவே முடித்துவிட்டது என்றும் புதிய காலப் பகுதிக்கு—செயல் ஆற்றும் காலப் பகுதிக்கு—பரிணமிப்பது அவசியம் என்றும் இதில் கூறப்பட்டது. ஆய்வுரை நகல் ஒன்றை ராதெக்கும் தயாரித்தார். பின்னர் அவர் ''இடதுசாரியினருக்கு'' விட்டுக் கொடுப்பதற்காக அதில் அனேகத் திருத்தங்கள் செய்தார். இந்த ஆய்வுரை நகல்கள் கிடைத்ததும், லெனின் அவற்றைப் படித்துவிட்டு, கூன்-தால்ஹைமர் நகல் அரசியல் நோக்கில் சரியற்றது, ''இடதுசாரி'' விளையாட்டு என்று மதிப்பிட்டார். ராதெக்கின் ஆய்வுரை நகலில் இருந்த குறைகளை அவர் விரிவாக ஆராய்ந்தார். '''இடதுசாரியினரின்' அசட்டுத்தனத்துக்கு விட்டுக் கொடுத்ததை'' அவர் சிறப்பாக அலசி ஆராய்ந்தார். தமது ஆய்வுரையின் முதலாவது நகலிலிருந்த, ''தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மை

யினரை ஈர்ப்பது'' அவசியம் என்ற சொற்களின் இடத்தில், ''தொழிலாளி வர்க்கத்தின் சமுதாய நோக்கில் நிர்ணயகரமான பகுதிகளை ஈர்ப்பது என்ற சொற்களைப் புகுத்தியதற்காக ராதெக்கை வன்மையாகக் கண்டனம் செய்தார் லெனின். ''இந்த சந்தர்ப்பத்தில், 'கம்யூனிஸக் கோட்பாடுகளுக்காகத்' தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரை ஈர்ப்பதன் இன்றியமையாமையைப் பலவீனப்படுத்துவது அளவு கடந்த அசட்டுத்தனம் ஆகும்'' என்று எழுதினார் லெனின். ''ஆட்சியை வென்று கைப்பற்றுவதற்கு, குறித்த நிலைமைகளில் (கம்யூனிஸக் கோட்பாடுகளின் பொருட்டு தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினர் ஏற்கனவே ஈர்க்கப்பட்டிருப்பது இத்தகைய நிலைமைகளில் ஒன்று) தொழிலாளி வர்க்கத்தின் சமுதாய நோக்கில் நிர்ணயகரமான பகுதிகளின் பெரும்பான்மையினர் நிர்ணயகரமான இடத்தில் தாக்கு நடத்துவது அவசியம்''...[1] ''ஸ்தாபனத் தலைமைக்கு மட்டும் இன்றி கம்யூனிஸக் கோட்பாடுகளுக்காகவும் (தொழிலாளி வர்க்கத்தின்) பெரும்பான்மையினரை எங்குமே கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் தரப்புக்கு இன்னும் ஈர்க்கவில்லை. இதுவே எல்லாவற்றினதும் அடிப்படை. அறிவார்ந்த ஓரே செயல்முறையின் இந்த அஸ்திவாரத்தைப் 'பலவீனப்படுத்துவது ''குற்றத்தன்மையுள்ள பொறுப்பின்மை ஆகும்''.[2]

ஆய்வுரையின் பிரதானக் கருத்தை லெனின் பின்வருமாறு சூத்திரப்படுத்தினார்: ''கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்தந்திரம் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரை, முதன்மையாகப் பழைய தொழிற்சங்கங்களின் உள்ளே, இடைவிடாமல் முறையாக ஈர்ப்பது என்ற அடிப்படையில் வகுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் நிகழ்ச்சிகளின் எல்லாவிதத் திருப்பத்திலும் நாம் நிச்சயமாக வெல்வோம்... இதனால் பெறப்படும் முடிவு: 'பகிரங்கக் கடிதத்தின்' செயல்தந்திரம் எங்கும் கட்டாயமாகத் தேவை.[3] பின்னர் காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரப் போக்கின் அடிப்படை, லெனினது இந்தத் திட்டவட்டமான முடிவில் அடங்கியிருந்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கங்கள் 319-20.

[2] அதே நூல், பக்கம் 320.

[3] அதே நூல், பக்கம் 321.

தது. பூர்ஷ்வா வர்க்கத்தால் சுமத்தப்படும் பொதுப் போராட்டத்தை உரிய தருணத்துக்கு முன் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஏற்றுக் கொள்வதையும் ''இடதுசாரிப் போக்கு'' விளையாட்டு ஆடுவதையும் தடை செய்யும் நிபந்தனைகள் ஆய்வுரையில் அடங்கியிருக்க வேண்டும் என்று லெனின் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். 1921, மார்ச்சு நடவடிக்கைகளில் ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி செய்த ஸ்தூலமான தவறுகள் விவரமாக ஆய்வுரையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்தத் தவறுகள் மறுபடி நிகழாதிருப்பதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கைகள் விடாப்பிடியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார். செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரையின் நகல், லெனினது குறிப்புக்களின் அடிப்படையில் திருத்தப்பட்டது. பூர்வாங்கக் கூட்டங்களில் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிக் குழுக்களுடன் விவாதிக்கப்பட்டபின், ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிக் குழுவின் சார்பில் காங்கிரசில் பிரேரிக்கப்பட்டது. ''எங்கள் ஆய்வுரை சமரசம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே'' என்று லெனின் காங்கிரசில் கூறினார். ''ஆனால் ஏன் அவ்வாறு இருக்கக் கூடாது? மூன்றாவது காங்கிரசில் கூடியுள்ளவர்களும் குறித்த அடிப்படைக் கருத்துக்களை வகுப்பவர்களுமான கம்யூனிஸ்டுகளுக்குள் சமரசங்கள், குறித்த நிலைமைகளில், இன்றியமையாதவை. ருஷ்யப் பிரதிநிதிக் குழுவால் முன்வைக்கப்படும் எங்களுடைய ஆய்வுரை, மிகவும் கவனமாக ஆராய்ந்து தயாரிக்கப்பட்டது. பல்வேறு பிரதிநிதிக் குழுக்களுடன் நீண்ட ஆலோசனைகளும் கூட்டங்களும் நடத்தியதன் விளைவாக உருவாயிற்று.''[1]

தொழிலாளர் இயக்கத்துக்கு எதிர்ப்பட்டிருந்த புதிய பணிகளை நிறைவேற்றுவதற்கு இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஸ்தாபனரீதியாக வலுப்படுத்துவதும், கட்சி அமைப்புக் கோட்பாடுகளைச் செப்பம் செய்வதும் கட்சி வேலை முறைகளையும் உள்ளடக்கத்தையும் சீராக்குவதும் தேவைப்பட்டன. இந்த விஷயம் பற்றிய ஆய்வுரை நகல் ஒ. கூஸினெனால் தயாரிக்கப்பட்டது. ஸ்தாபனப் பிரச்சினை குறித்த கட்டுரையின் ஒரு பகுதியையும் கட்டுரையின் அடிப்படைக் கருத்துக்களாக விளங்கிய ஆய்வுரையையும் அவர் லெனினுக்கு அனுப்பினார். இவற்றைப் படித்துப்

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 468.

பார்த்துவிட்டு லெனின் இவற்றை ஆமோதித்தார். காங்கிரசுக்கு அறிக்கை தயாரிக்கும்படி கூஸினெனுக்கு அவர் யோசனைகூறினார். அதை ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதி படிப்பது பொருத்தமாய் இருக்கும் என்று லெனின் கருதினார்.[1]

ஸ்தாபனப் பிரச்சினை குறித்த ஆய்வுரையில் ஒரு விஷயத்தை அழுத்திக் கூறுமாறு லெனின் யோசனை கூறினார். அதாவது, மேற்கு நாடுகளின் பெரும்பாலான சட்டபூர்வமான கட்சிகளில் "...அன்றாட வேலை (புரட்சி வேலை) ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் இல்லை.

இது அடிப்படையான தீங்கு.

இதை மாற்றுவது எல்லாவற்றிலும் மிகக் கடினம்.

ஆனால் இது எல்லாவற்றிலும் முக்கியமானது."[2]

"...ஸ்தாபனங்களில் சேராதவர்களும் மஞ்சள் சங்கங்களில் (இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களும் இவற்றில் அடங்கும்) ஸ்தாபன ரீதியாகச் சேர்ந்தவர்களுமான பாட்டாளி **வெகுஜனங்களிடையிலும் பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளி வட்டாரங்களிடையிலும்"**[3] கம்யூனிஸ்டுகளுடைய வேலையின் பொறுப்புக்கள் பற்றி விவரமாகக் கூறும்படியும் லெனின் யோசனை தெரிவித்தார். வெகுஜனங்களிடையே ஆழப்புகுந்து வேலை செய்யும்படியும் உழைப்பாளிகளின் ஜீவாதார நலன்களைக் காத்துப் போராடுவதன் அடிப்படையில் அவர்களைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளைச் சுற்றி ஒன்று திரட்டும்படியும் தம் எல்லா யோசனைகளாலும் குறிப்புக்களாலும் லெனின் கம்யூனிஸ்டுகளுக்கு அறிவுறுத்தினார். பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வு மிக்க பகுதியின் குறுகிய வட்டத்துக்குள் அடைபட்டுக் கிடப்பது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இயலாது. உழைப்பாளிகளின் மிக மிக விரிவான வட்டாரங்களுக்கிடையே வேலை நடத்துவது அவற்றின் கடமை. சீர்திருத்தவாதக் கட்சிகளையும் ஸ்தாபனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள்பால் அவை சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். ஒன்றித்த பாட்டாளி வர்க்க முன்னணி ஏற்படுத்தும் செயல்தந்திரம் இன்றியமையாதது என்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் புரிந்து கொள்வதற்கு

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 45, பக்கங்கள் 185-86.

[2] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 317.

[3] அதே நூல், பக்கம் 318.

லெனினுடைய யோசனைகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு உதவின. ஆய்வுரையைச் சீர்படுத்துவதில் ஜெர்மன் கம்யூனிஸ்டு வி. கியோனென் ஒ. கூஸினெனுக்கு உதவினார். அவரே காங்கிரசில் அறிக்கை சமர்ப்பித்தார்.

புதிய முடிவுகளைத் தயாரிப்பதற்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒவ்வொரு பிரிவினுடையவும் நடைமுறைச் செயல் அனுபவத்தைப் பொதுமைப்படுத்துவது மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் தங்கள் முடிவுகளையும் மதிப்பீடுகளையும் சோதரக் கட்சிகளுக்கு விளக்க முயன்றார்கள். சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திர, செயல்தந்திரப் போக்குக்களைக் கூட்டாகச் சேர்ந்து வகுக்க இதன் மூலம் அவர்கள் உதவினார்கள். இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியைத் தங்கள் ஆதர்சமாக நியாயமாகக் கருதி, அதன் அனுபவத்தைச் சிறப்பாக ஆழ்ந்த கவனத்துடன் ஆராய்ந்து அறிந்துகொண்டன.

சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டு உறுப்பான கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசுக்கு முன் தன் செயல்கள் பற்றி விவரித்து விளக்குவது தனது சர்வதேசியக் கடமை என்று ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி கருதியது. ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் கட்டளைப்படி, கட்சியின் செயல்தந்திரம் பற்றிய அறிக்கையின் சுருக்கம் லெனினால் தயாரிக்கப்பட்டது. ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் கொள்கையைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் முன்னிலும் நன்றாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ''உணவுப்பண்டத் தீர்வை'' என்னும் லெனினது கட்டுரை ஜெர்மன், ஆங்கில, பிரெஞ்சு மொழிகளில் பெயர்க்கப்பட்டுக் ''கம்யூனிஸ்டு அகிலம்'' என்னும் சஞ்சிகையில் வெளியிடப்பட்டது.

காங்கிரஸ் கூடுவதற்குத் தலைக்கு நாள் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது கூட்டங்கள் நடைபெற்றன. தனித்தனிக் கட்சிகளின் நிலைமை இவற்றில் பகுத்து ஆராயப்பட்டது. காங்கிரஸ் பிரதிநிதிகள் லெனினைச் சந்தித்து உரையாடினார்கள். இந்தச் சந்திப்புக்களும் உரையாடல்களும் மிகுந்த முக்கியத்துவம் கொண்டிருந்தன. கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிக உடனடியான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. வெகுஜனங்களிடையே சள்ளை பிடித்த அன்றாட வேலை செய்வது சூழ்நிலை காரணமாக இன்றியமையாததாக இருந்தது; இந்தப் பிரச்சினைகளை அணுகுகையில்,

சில கட்சிகள் இந்தப் பணியைப் புறக்கணித்துவிட்டு அதன் இடத்தில் ''புரட்சி'' கோஷங்களைக் கையாண்டன, செயல் புரிய அறை கூவல்கள் விடுத்தன. இந்தக் காரணத்தால் விவாதங்கள் சில வேளைகளில் மிகக் கடுமையானவையாக இருந்தன.

ஜெர்மன் கம்யூனிஸ்டு ஹெக்கேர்த் பின்வரும் நிகழ்ச்சியை நினைவுகூர்ந்தார்: இத்தகைய ஒரு சந்திப்பின்போது லெனின் ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளிடம் கேட்டார்: '' 'நீங்கள் தொழிலாளர்களைப் போராட்டத்துக்கு இட்டுச் சென்று, அவர்கள் மான்ஸ்ஃபீல்டில் உள்ளானது போன்ற கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளானல் அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்?'

'' 'தாங்கள் படும் அடிகளிலிருந்து தொழிலாளர்கள் கற்றுக் கொள்வார்கள்.'

'' 'அவர்கள் வேலையற்றவர்கள் ஆகிவிட்ட இப்போதுமா கற்றுக் கொள்கிறார்கள்?' என்று கேட்டார் லெனின். கியோனென் அதற்குப் பதில் சொன்னார்:

'' 'அப்போது அவர்களுடைய இரைப்பைகள் மூளைகளைப் புரட்சி ஆற்றலால் மின்னேற்றம் பெறச் செய்யும்.'

''லெனின் இந்த வாக்கியத்தைப் பிடித்துக் கொண்டு, இந்தப் பிரச்சினைகளில் எங்கள் நிலை அனைத்தையும் எள்ளி நகையாடினார். ஏதேனும் ஒரு பிரச்சினையில் எங்களது போக்கு ஆதாரம் அற்றது, தவறானது, அபாயமானது என்று நிரூபித்த ஒவ்வொரு தடவையும் அவர் கட்டாயமாகப் பின்வரும் சொற்களைக் கூறினார்:

'' 'ஆம், ஆம், இரைப்பைகள் மூளைகளை மின்னேற்றம் பெறச் செய்வதால் உங்களுக்கு இதெல்லாம் நேர்கிறது...' ''[1]

''தாக்குதல் சித்தாந்தத்தையும்'' மார்ச்சு மாத நிகழ்ச்சிகளின்போது ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி செய்த இடதுசாரித் தவறுகளையும் வன்மையாகத் தாக்கி விமர்சித்த கிளாரா த்ஸேத்கினை லெனின் ஆதரித்தார்.

1921, ஜூன் மாதம் 16 முதல் 18ந் தேதிவரை கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுக் கூட்டங்களில் காங்கிரசுக்கு முன்னேற்பாடுகள் செய்யும் வகையில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகள் விவாதிக்கப்பட்டன. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக்

---

[1] வி.இ. லெனினைப் பற்றிய நினைவுக் குறிப்புகள். தொகுதி 2, மாஸ்கோ, 1957, பக்கம் 621.

கட்சி இளைஞர்களிடையே போதிய அளவு வேலை செய்யவில்லை என்று "இடதுசாரியினர்" குறை கூறினார்கள். கம்யூனிஸ்டுகள் "நிதான புத்தியையும் கட்டுப்பாட்டையும்" கடைப்பிடிக்க வேண்டும் என்ற பொருள்பட „L'Humanité" (லா யுமானித்தே) என்ற பத்திரிகையில் வெளியான கட்டுரைக்காக அவர்கள் கட்சித் தலைமையைத் தாக்கினார்கள். லெனின் அவர்களுக்குச் சூடான பதில் அளித்தார். வலதுசாரி சந்தர்ப்பவாதத் தவறுகள் மட்டுமே நிகழ்கின்றன என்று எண்ணுபவர்கள் தவறு செய்கிறார்கள் என்றார் அவர். இல்லை, "இடதுசாரித்" தவறுகளும் நேர்கின்றன. "இடதுசாரியினரின்" யோசனைகளைப் பின்பற்றினால் "நீங்கள் புரட்சி இயக்கத்தை மடித்து விடுவீர்கள்..."[1] பிரெஞ்சுக் கட்சியை விமர்சிக்க வேண்டியதுதான். ஆனால் விமர்சனம், கட்சியின் குறிப்பிட்ட சில சரியற்ற சந்தர்ப்பவாதச் செயல்களைப் பற்றியதாக இருக்க வேண்டும். ஆயினும், மானுங்காணியாகக் கட்சியைத் தாக்குவதும் அதைப் பிளவுபடுத்துவதும் கூடாது. சந்தர்ப்பவாதச் செயல்களுக்கு எதிர்நிறையாக வேறு "இடதுசாரி" அசட்டுத்தனங்களைச் செய்யும்படி யோசனை சொல்வது கூடாது. "குறித்த நிலைமைகளில் எந்த மாதிரிக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் திறமையில்தான் மார்க்சியம் அடங்கி இருக்கிறது" என்று லெனின் விளக்கினார்.[2] "பிரான்சிலும் பிரிட்டனிலும் ஜெர்மனியிலும் கம்யூனிஸத்தின் வெற்றிக்குத் தடை விளைக்க ஒரு வழிதான் இருக்கிறது. இடதுசாரி அசட்டுத்தனங்கள் செய்வதே அந்த வழி" என்று கூறினார் லெனின். "சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து நமது போராட்டத்தை நாம் வரம்பு கடவாமல் தொடர்ந்து நடத்தினால், வெற்றி பெறுவோம் என்று நாம் உறுதியாக நம்பலாம்."[3] வெகுஜனங்கள் மேலும் மேலும் அதிகமாக நம்மை நெருங்கி வரும்போது தொழிற்சங்கங்களை நம் தரப்புக்குக் கொண்டுவருவது அவசியம். அவற்றை நாம் நம் பக்கத்துக்கு ஈர்த்து விட்டால் அது நமது மிகப் பெரிய வெற்றியாக விளங்கும் என்றார் லெனின். இதற்கு முதன் முதலில் பெரும்பான்மையை நமது தரப்புக்குக் கொண்டுவருவது தேவை. இதன்

---

[1] மை. ஆ.கூ., 2/1/19320/12.

[2] விளாதீமிர் இலியீச் லெனின். வாழ்க்கைச் சரிதை. மாஸ்கோ 1967, பக்கம் 684.

[3] மை. ஆ.கூ., 2/1/19320/13.

பின்னரே, சந்தர்ப்பவாதத்தையும் இடதுசாரி அசட்டுத்தனங்களை யும் எதிர்த்துப் போராடியவாறு நாம் புரட்சி நடத்தத் தொடங்குவோம்.

''லெனினுடைய சொற்பொழிவு பிரதிநிதிகளின் மூளைகளில் முழுமையான தெளிவு ஏற்படுத்தியது'' என்று நினைவுகூர்ந்தார் பல்கேரியக் கம்யூனிஸ்டு வ. கொலாரவ். ''பேசுபவர் உலகப் புரட்சியின் மாபெரும் தலைவர், அதன் வெற்றியில் உறுதியான நம்பிக்கை கொண்டவர், கம்யூனிஸ்டு அகிலத்தின் சுக்கானைத் தம் கரங்களில் வலிவாகப் பிடித்துக் கொண்டிருப்பவர் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.''[1]

காங்கிரஸ் தொடங்குவதற்குச் சற்று முன்பு கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு செக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டு இயக்கம் பற்றி விவாதித்தது. செக்கோஸ்லோவாக்கியக் கம்யூ னிஸ்டுக் கட்சி உருவானது அனேகக் கட்டங்களின் வழியாக நிகழ்ந் தது (தொடக்கத்தில் இடதுசாரியினர் சுயேச்சையான கட்சியாக அமைந்தார்கள், முன்னாள் சமூக-ஜனநாயகக் கட்சியின் பெரும் பான்மை உறுப்பினர் அதில் சேர்ந்தார்கள், பின்னர் இந்த இடது சாரிக் கட்சி கம்யூனிஸ்டுக் கட்சியாக மாற்றி அமைக்கப்பட்டது) ஆகையால், கட்சித் தலைமையின், சிறப்பாக ப. ஷ்மிராலின் கொள்கை கம்யூனிஸ்டுக் கட்சியின் ''இடதுசாரியினராலும்'' 1921, மார்ச்சில் உருவான செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி யின் ஜெர்மானியப் பிரிவுப் பிரதிநிதிகளாலும் கடுமையாகத் தாக்கப்பட்டது. ஷ்மிரால் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ் டுக் கட்சி அமைக்கப்படுவதைக் கிட்டத்தட்ட வேண்டுமென்றே எதிர்த்ததாக ''இடதுசாரியினர்'' பழிசாட்டினார்கள். அவர் இடை நிலைவாதி என்று கூறி, செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையிலிருந்து அவரை நீக்க வேண்டும் என்று கோரி னார்கள். ஷ்மிராலின் தலைமையில் ''மார்க்சிய இடதுசாரியினர்'' தலைவர்கள் கடைப்பிடித்த சமயோசிதமான கொள்கையின் பயனாகவே செக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெகுஜனத் தன்மையைக் காப்பாற்ற முடிந்தது என்பதை அவர் கள் புரிந்து கொள்ளவில்லை. அதே சமயம், ஷ்மிராலும் தமது செயல்களில் சில தவறுகளுக்கு இடம் கொடுத்தார். ஜெர்மானியப்

---

[1] லெனினைப் பற்றி. சமகால அயல்நாட்டினரின் நினைவுக் குறிப்புகள், பக்கம் 144.

பிரிவுடன் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி சேர்வதற்கான கெடுக்கள் விஷயத்தில் அவர் செய்த தவறு இவற்றில் ஒன்று. லெனின் ஷ்மிராலே ஆதரித்துப் பேசினார். ஷ்மிரால் இடைநிலை வாதத்தின் தரப்பாளர் என்ற தவறான விவரம், மூன்றாவது காங்கிரசின்செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரையின் வாசகத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கோரி வென்றார் லெனின். ஆயினும் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியை ஜெர்மானியப் பிரிவுடன் இணைக்கும் காரியத்தில் ஏற்பட்ட தவறான இழுத்தடிப்பை அவர் சுட்டிக் காட்டினார்.[1] செக்கோஸ்லோவாக்கியத் தோழர்கள் தங்கள் நிலையை இன்னும் தெளிவாக வரையறுக்க வேண்டும் என்னும் விருப்பத்தை லெனின் வெளியிட்டார். பின்னர், சட்ட அமைப்புக் காங்கிரசில் ஷ்மிரால் ஆற்றிய உரையை லெனின் கவனமாகப் படித்தார். உரையின் முக்கியமான கருத்துக்களுக்கு அவர் அடிக்கோடுகள் இட்டார். கட்சியினது வெகுஜனத்தன்மையின் முக்கியத்துவத்தையும், சமயோசிதமான செயல்தந்திரமும் தொழிலாளி வர்க்கத்தின் தரப்பில் கூட்டாளிகளை ஈர்ப்பதும் இன்றியமையாதவை என்பதையும் பற்றிய ஷ்மிராலின் வாதங்கள் தமக்கு ஏற்புடையவை என்று லெனின் அறிவித்தார். உரையின் வாசகத்தில் லெனின் அடிக்கோடிட்ட பகுதிகளில் சில பின்வருமாறு:

''...மத்திய ஐரோப்பிய பூர்ஷ்வா வர்க்கம், யுத்தத்தில் தோல்வி அடைந்த பிறகு முதலாவது நெருக்கடியான கணத்தைக் கடந்து விட்டது (இங்கும் கீழேயும் அடிக்கோடுகள் லெனினால் இடப்பட்டவை.— **பதிப்பகத்தார்**). பழைய சுரண்டுவோர் அரசு இயந்திரத்தை நிறுவ அது மீண்டும் தலைப்பட்டிருக்கிறது... சோஷல்-தேசபக்தர்கள், நிர்ணயகரமான தருணத்தில் முதலாளித்துவத்தின் வெளிப்படையான காப்பாளர்களாகச் செயல்படுகிறார்கள்... இந்தக் கட்சிகள் வெகுஜனக் கட்சிகளாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. நாம் மாபெரும் கம்யூனிஸ்டுக் கட்சியாக, வெகுஜனங்களின் கட்சியாக மாறினால்தான் இந்தக் கட்சிகளையும் முதலாளிகளையும் வெல்ல நம்மால் முடியும்...'' வெகுஜனங்களை ஈர்ப்பதற்கு ''அமைதியாக விளக்கி விவரிப்பது, சகிப்புத்தன்மை,

---

[1] செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி, அதன் ஜெர்மானியப் பிரிவு ஆகியவற்றை இணைக்கும் காங்கிரஸ், **1921**, அக்டோபர் **30** முதல் நவம்பர் 4ந் தேதி வரை நடந்தது.

பொறுமை ஆகியவை கொண்ட செயல்தந்திரம் இன்றியமையாதது'' என்ற ஷ்மிராலின் சொற்கள்மீது லெனின் கவனம் செலுத்தினார். தொழிலாளர்களின் தேசிய உணர்ச்சிகள்பால் மரியாதையான போக்கு கடைப்பிடிப்பது. அவசியம் என்றும் ஸ்லோவாக்கியாவில் உள்ள ஏழைகளின் மதக் கருத்துக்களின்பால் அவமதிப்பான போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது என்றும் ஷ்மிரால் கூறியிருந்ததை லெனின் கவனத்துக்கு உரியதாகக் கருதினார். ''வெகுஜனங்களின் ஊக்கமுள்ள இயக்கங்களையும் வேலை நிறுத்தங்களையும், உணவுப் பண்டங்கள் போதாமை காரணமாக நடக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், கலகங்களையும், ஸ்தூலமான பலாத்காரச் செயல்களுக்கும் பிற்போக்குக்கும் விரோதமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும்'' கட்சி ஆதரிக்க வேண்டும் என்றும் கட்சி எப்போதும் வெகுஜனங்களோடு இருக்க வேண்டும் என்றும் வெகுஜனங்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட கோரிக்கைகளுக்கு ஆதரவாக வெகுஜனங்களின் போராட்டத்தைக் கட்சி தானே ஒழுங்கமைத்து நடத்தும் என்றும் உரையில் கூறப்பட்டிருந்த இடத்தில் லெனின் அடிக்கோடு இட்டார். ''நிலைமைகளுக்குச் சார்பு இன்றி, போராட்ட நிலைமையைச் செயற்கையாக ஏற்படுத்தும் விருப்பத்தை'' ஷ்மிரால் எதிர்த்த போதும், ''இந்தச் செயல்தந்திரத்தைக் கோட்பாட்டு நோக்கில் மிகத் தீர்மானமாக எதிர்க்க வேண்டும்'' என்று அவர் கூறியபோதும் லெனின் அவருடைய கருத்துக்கு முழுமையான இசைவு தெரிவித்தார். ஷ்மிராலின் உரையில் இருந்த தவறான கருத்துக்களையும் லெனின் குறித்தார். செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஜெர்மானியப் பிரிவுடன் தாமதமின்றி இணைவதற்கு அவர் மறுத்ததையும் உரையில் இருந்த வேறு சில தவறுகளையும் லெனின் எடுத்துக் காட்டினார்.[1] லெனின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அனுபவத்தை எவ்வளவு கவனமாக ஆராய்ந்தார், கம்யூனிஸ்டு அகிலத்தின் சரியான அரசியல் கொள்கைப் போக்கையும் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் வகுப்பதற்கு இந்த அனுபவம் பயன்படுத்தப்படுவதற்காக அவர் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார் என்பதை ஷ்மிராலினது உரையின் வாசகத்தை அவர் பகுத்து ஆராய்ந்தது தெளிவாகக் காட்டுகிறது.

[1] மை.ஆ. கூ., *2/1/20565/2, 5, 7, 8.*

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரஸ்

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்தந்திரம் பற்றிக் காங்கிரஸ்

1921ம் ஆண்டு, ஜூன் மாதம் 22ந் தேதி, கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரஸ் மாஸ்கோவில் தொடங்கியது. நாற்பத்தெட்டு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள், இருபத்தெட்டு இளைஞர் சங்கங்கள், வேறு பல பாட்டாளி ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் (மொத்தம் ஐம்பத்திரண்டு நாடுகளைச் சேர்ந்த நூற்றுமூன்று ஸ்தாபனங்களின் அறுநூற்று ஐந்து பிரதிநிதிகள் காங்கிரசில் பிரசன்னமாய் இருந்தார்கள்), மாறிய நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தினதும் அதன் பிரிவுகளதும் கொள்கையைக் கூட்டு முயற்சியால் வகுக்கவும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வேறு பல உடனடிப் பிரச்சினைகளுக்கு விடை காணவும் கூடினர்கள். காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் பின்வரும் பிரச்சினைகள் இருந்தன: உலகப் பொருளாதார நெருக்கடியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் புதிய பணிகளும், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது விவர அறிக்கைமீதும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயல்தந்திரத்தின்மீதும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது செயல்தந்திரத்தின்மீதும் கம்யூனிஸ்டு அகிலத்தினதும் அதன் பிரிவுகளதும் ஸ்தாபன அமைப்பு மீதும் விவாதம், தொழிற்சங்க, கூட்டுறவு, இளைஞர், மாதர் இயக்கங்கள் பற்றிய பிரச்சினைகள், சில கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிலைமை முதலியன. சர்வதேச நிலைமை, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவை குறித்த பிரச்சினைகள் விவாதங்களின் மையமாக விளங்கின. லெனின் காங்கிரசில் மூன்று தடவைகள் பேசினர். ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது செயல்தந்திரம் பற்றிய அறிக்கையைப் பிரேரித்தார், இத்தாலியப் பிரச்சினை குறித்தும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்தந்திரத்தை ஆதரித்தும் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

யுத்தத்துக்குப் பிறகு தொடங்கிய புரட்சி இயக்கத்தின் முதல் காலப் பகுதி பெருமளவு முடிவு பெற்று விட்டது என்று காங்கிரஸ் ஆதாரத்துடன் நிலைநாட்டியது. இந்தக் காலப் பகுதியில் வெகு ஜனங்களின் இயல்பான தாக்குதல்கள் நடந்தன. அவர்களுடைய முறைகளும் குறிக்கோள்களும் கணிசமான அளவு தெளிவாக உருப்பெறவில்லை. ஆளும் வர்க்கங்கள் பெருந்திகிலுக்கு உள்ளாயின. இந்தக் காலப்பகுதியின் சிறப்புத் தன்மைகள் இவை. எல்லா நாடுகளிலும் பூர்ஷ்வா வர்க்கம் பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் தொழிலாளி வெகுஜனங்களுக்கு எதிராகத் தாக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆட்சி அதிகாரத்தின் பொருட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டம் உலகு எங்கும் தடங்கலுக்கு, வேகக் குறைவுக்கு உள்ளாகி இருக்கிறது. ஆயினும் யுத்தத்துக்குப் பிறகு முதலாளித்துவச் சமநிலையை மீண்டும் ஏற்படுத்துவது இன்னும் தொடங்கவில்லை.

முதலாளித்துவத்தை மீண்டும் உறுதியாக நிலைப்படுத்துவதற்குச் சுரண்டல் தீவிரமாக்கப்படுவது அவசியம். எனவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களையும் வர்க்கப் போராட்டத்தின் பிற வடிவங்களையும் இடைவிடாது மேற்கொள்ள வேண்டியதாகிறது. முதலாளித்துவ நாடுகளில் நிலைமை எதார்த்தத்தில் புரட்சிகரமாகவே இருந்து வருகிறது. ஆனல் புரட்சி இயக்கம் பின்வாங்கும் கட்டத்தில் இருக்கிறது. "பாட்டாளி வர்க்கத்தின் தற்போதையத் தற்காப்புப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்று நடத்துவதும் அதை விரிவுபடுத்தி ஆழமாக்குவதும் அதை ஒன்றுபடுத்துவதும் நிகழ்ச்சிப் போக்குக்கு ஏற்ப அதை **இறுதியான அரசியல் போராட்டத்தின்** தரத்துக்கு உயர்த்துவதும் தற்போதைய நெருக்கடியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கியப் பணியாக விளங்குகிறது, விளங்கிவரும்."[1] முதலாளித்துவத்தைப் புரட்சியின் மூலம் ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு நீண்ட காலப் போராட்டம் நடத்துவது இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும், புரட்சிக்கு முன்னிலும் ஆழ்ந்த அடிப்படையில் ஆயத்தம் செய்ய வேண்டும், வெவ்வேறு நாடுகளின் சிறப்புத் தன்மைகளுக்கு ஏற்ப முக்கியமான புரட்சிக் கோட்பாடுகளைக் கையாளத் திறமை பெறும் பொருட்டு

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில். *1919-1932. மாஸ்கோ, 1933 பக்கம் 179.*

முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டத்தின் ஸ்தூலமான வளர்ச்சியை ஆழ்ந்து ஆராய்ந்து அறிய வேண்டும் என்ற முடிவு சூழ்நிலையையும் புரட்சி இயக்கத்தின் அடுத்துவரும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களையும் பற்றிய இந்த மதிப்பீட்டிலிருந்து பெறப்பட்டது. ''முதலாளித்துவ நோக்கில் வளர்ச்சி அடைந்த ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கம் எந்த அளவுக்கு ஸ்தாபன அமைப்பு பெற்றிருக்கிறதோ அந்த அளவுக்கு அடிப்படையான முறையில் புரட்சிக்கு ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று வரலாறு நம்மிடம் கோருகிறது. அந்த அளவுக்கு அடிப்படையான முறையில் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நாம் நம் பக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும்''[1] என்று காங்கிரசில் கூறினர் லெனின். உலகப் புரட்சி, பிரசண்டமான தொடக்க வேகத்தில் இடைநிறுத்தம் இன்றி முன்னேறுகிறது, ''நாம் இரண்டாவது புரட்சி அலையின் முடிமீது இருக்கிறோம்'', புரட்சியின் வெற்றி கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சித்தத்தையும் அவற்றின் செயலூக்கத்தையும் மட்டுமே சார்ந்திருக்கிறது'' என்ற ''இடதுசாரி'' மருட்சிகளுக்கு முடிவு கட்டுவது இந்தக் காரணத்தால் அவசியம் ஆகிறது.[2]

லெனினும் அவரைத் தீவிரமாக ஆதரித்த கிளாரா த்ஸேத்கின், ஓ. கூஸினென், வ. கொலாரவ், ப. ஷ்மிரால், ழ. ழாக்மோத், ர. மாய்ஞேர் (பாலிஸ்டர்) அகியோரும் வேறு பலரும், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் நிலைமைக்கும் பணிகளுக்கும் பொருத்தமான தீர்மானங்கள் காங்கிரசால் ஏற்கப்பட வேண்டும் என்பதற்காகப் போராடினர்கள். இந்தக் கொள்கைப் போக்கைக் கடைப்பிடிப்பது எளிதாகவே இல்லை. ஏனென்றல் கணிசமான எண்ணிக்கையில் பிரதிநிதிகள், ''தாக்குதல் சித்தாந்தத்துக்கு'' ஒப்புதல் பெற வேண்டும், அதைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வருங்கால நடவடிக்கைகளுக்கு அடிப்படை ஆக்க வேண்டும் என்ற மனப்பாங்குடன் காங்கிரசுக்கு வந்திருந்தார்கள். இந்தக் கருத்துக்களை ஆதரித்த இளங் கம்யூனிஸ்டுகளில் பெரும்பான்மையினர் நேர்மையாளர்கள், புரட்சி லட்சியத்துக்குத் தங்களை அர்ப்பணித்து

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 44, பக்கம் 481.

[2] லெனினைப் பற்றி. சமகால அயல்நாட்டினரின் நினைவுக் குறிப்புக்கள், பக்கம் 45.

விட்டவர்கள். ஆனால் அப்போதையக் கட்டத்தில் தங்கள் கட்சிகளின் முக்கியப் பணியை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. புரட்சி உற்சாகம் காரணமாகவும் அனுபவமின்மை காரணமாகவும் ''இடதுசாரித்'' தவறுகளுக்கு இடம் கொடுத்தார்கள். விவாதம் போராட்டத் தோழர்களிடையே நடந்தது. இவர்கள் ஒரே மாதிரி அரசியல் கருத்துக்கள் உள்ளவர்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காகப் போராடுவது இன்றியமையாதது என்ற முக்கிய விஷயத்தில் ஒருமனப்பாடு கொண்டவர்கள். ஆனால் போராட்ட முறைகளையும் சாதனங்களையும் பற்றிய கருத்துக்களில் இவர்கள் வேறுபட்டார்கள். காங்கிரசில் ''அதிதீவிர இடதுசாரியினரின்'' சிறு குழுவும் ஆலோசனை கூறும் உரிமை பெற்றுப் பிரசன்னமாய் இருந்தது. இந்தக் குழு கடைக்கோடிப் பிரிவுவாத, துர்ச்சாகச நிலைகளை மேற்கொண்டது. ஜெர்மனியின் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சிப் பிரதிநிதிகளும் அராஜக-சிண்டிகலிஸத்தின் பெருத்த செல்வாக்குக்கு உட்பட்டிருந்த ஹாலந்து நாட்டு ''இடதுசாரியினரும்'' இந்தக் குழுவில் இருந்தார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது செயல்பற்றி ஸிநோவியெவ் சமர்ப்பித்த அறிக்கையிலும் இடதுசாரிப் போக்குகள் வெளிப்பட்டன. வெகுஜனங்களுடன் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தொடர்புகளை வலுப்படுத்துவதிலும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைக் கட்சியின்பால் ஈர்ப்பதிலும் கட்சிகளின் செயல்களில் ''இடதுசாரி'' அசட்டுத்தனங்களை அகற்றுவதிலும் சக்தியை ஈடுபடுத்தும்படி லெனின் அறிவுறுத்தி இருந்தார். ஸிநோவியெவ் இந்த அறிவுரையை மதிக்காமல், கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருந்த வலதுசாரியினருடனும் இடைநிலையினருடனும் போராட்டத்தை வலுப்படுத்தும் திசையில் பிரதிநிதிகளின் கவனத்தை முதன்மையாகத் திருப்பினார். இந்தப் போராட்டம் ''முக்கியமான பணி'' என்று அவர் கூறினார்.[1] இத்தாலிய (ஜென்னாரி, தெர்ராச்சீனி), ஜெர்மானிய (ஹெக்கேர்த், கியோனென்), ஹங்கேரிய (ரக்கோஷி) கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அனேகப் பிரதிநிதிகள், இடைநிலைவாதிகளுடனும் அரை இடைநிலைவாதிகளுடனும் போராட்டத்தை எல்லா வகையிலும் தீவிரப்படுத்த வேண்டும்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது உலகக் காங்கிரஸ். சுருக்கெழுத்து விவரம். பெத்ரோகிராத், 1922, பக்கங்கள் 85, 86, 101.

என்றும் அவர்களைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளிலிருந்து விலக்கிவிட வேண்டும் என்றும் கோரினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகள் அதிகச் சமயோசிதமான செயல்தந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர்களையும் இவர்கள் இடைநிலைவாதிகள் எனத் தவறாகக் கருதினார்கள். சமூக-ஜனநாயகக் கட்சிகளின் சந்தர்ப்பவாத, இடைநிலைவாதத் தலைவர்கள் விஷயத்திலும், கம்யூனிஸ்டுக் கட்சிகளில் சேர்ந்து விட்டவர்களும் பழைய எண்ணங்களிலிருந்தும் காழ்ப்புக்களிலிருந்தும் இன்னும் விடுபடாதவர்களுமான முன்னாள் சமூக-ஜனநாயகவாதிகள் விஷயத்திலும் ஒரே மாதிரியான போக்கு கடைப்பிடிக்க வேண்டும் என்று ''இடதுசாரியினர்'' உண்மையில் வலியுறுத்தினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகளின் புதிய உறுப்பினர்களுக்கு மறு பயிற்சி அளிப்பது பற்றி அல்ல, கம்யூனிஸ்டுக் கட்சிகளின்' ''தூய்மைக்காக'' இயந்திர ரீதியில் போராடுவது பற்றியும், தவறான கருத்துக்களை இன்னும் போக்கிக் கொள்ளாதவர்களை அவற்றிலிருந்து வெளியேற்றி விடுவது பற்றியுமே விவாதம் நடந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வெகுஜனத் தன்மைக்காகப் போராடுவதன் இன்றியமையாமையை ''இடதுசாரியினர்'' எதார்த்தத்தில் மறுத்தார்கள். வெகுஜனங்களை ஈர்க்கும் பொருட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலையை மாற்றி அமைப்பதன் அவசியத்தையும் வெகுஜனங்களைப் புரட்சியின் தரப்புக்குக் கொண்டுவருவதன் நிர்ணயகரமான முக்கியத்துவத்தையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. லெனினது மதிப்பீட்டின்படி சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் இருந்த நிலைமையின் ''சாரம்'' இதில்தான் அடங்கியிருந்தது. ''...கம்யூனிஸ்டு அகிலத்தின் சிறந்த, செல்வாக்குள்ள பகுதிகளில் சில... 'இடைநிலைவாதத்துடன் போராட்டத்தை' ஒரு சிறிது மிகைப்படுத்தின, போராட்டத்தின் வரம்பை ஒரு சிறிது தாண்டிவிட்டன. இந்த வரம்புக்கு அப்பால் போராட்டம் விளையாட்டாக மாறிவிடுகிறது, அதற்கு அப்பால் புரட்சிகர மார்க்சியத்துக்குக் கேடு விளையத் தொடங்குகிறது...

''இந்த மிகைப்படுத்தல் பெரிதாய் இல்லை. ஆனால் அதன் அபாயம் மிகப் பெரிதாய் இருந்தது.''[1] ''மிகைப்பாடு சரிப்படுத்தப்படாவிட்டால் கம்யூனிஸ்டு அகிலத்தைக் கட்டாயமாக மாய்த்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 520.

திருக்கும்.''[1] ''...இடைநிலைவாதத்துடன் போராட்டத்தை மிகைப் படுத்துவதன் அர்த்தம், இடைநிலைவாதத்தைக் காப்பாற்றுவது ஆகும், அதன் நிலைமையையும் தொழிலாளர்கள் மீது அதன் செல்வாக்கையும் வலுப்படுத்துவது ஆகும்.''[2]

வலதுசாரி சந்தர்ப்பவாதத்தையும் ''இடதுசாரிப்'' பிரிவுவாதிகளையும் எதிர்த்துப் போராடுகையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள், ஏற்கனவே திரண்டுள்ள புரட்சி அனுபவத்தை, முதன்மையாக போல்ஷிவிஸத்தின் அனுபவத்தை எல்லா வகையிலும் பயன்படுத்த வேண்டும் என்று லெனின் அறிவுறுத்தினார். போல்ஷிவிக் கட்சியின் அனுபவமும் அக்டோபர் புரட்சியின் அனுபவமும் உலக முக்கியத்துவம் உள்ளவை, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்திற்கும் பொதுவாக முக்கியமான அம்சங்கள் அடங்கியவை என்றும் போல்ஷிவிக்குகளின் செயல்தந்திரம் எல்லோருக்கும் ஆதர்சமாக விளங்குகிறது என்றும் லெனின் பல முறை சுட்டிக்காட்டினார். ஆனால் இந்த அனுபவத்தைக் குருட்டுத்தனமாகக் காப்பி அடிப்பதும் அப்படியே கையாள்வதும் கூடாது என்று அவர் எச்சரித்தார். ''ஸெர்ராத்தி இத்தாலியில் ருஷ்யப் புரட்சியைப் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் ஒரு போதும் விரும்பவில்லை. அவ்வாறு செய்வது அசட்டுத்தனம் ஆகும். இந்த அசட்டுத்தனத்தைத் தவிர்ப்பதற்கு வேண்டிய அறிவும் சமயோசித சாமர்த்தியமும் நம்மிடம் போதிய அளவு இருக்கின்றன'' என்று கங்கிரசில் அழுத்திக் கூறினார் லெனின்.[3]

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றியதை அடுத்த முதல் கட்டம், சீர்திருத்தவாதத்துடன் ஆழ்ந்த முறையில், இறுதியாக, தயக்கமின்றி, தீர்மானமாக உறவைத் துணித்துக்கொள்வது ஆகும் என்றார் லெனின். ''இரண்டாவது கட்டம் புரட்சிக் கோஷங்களை மறுபடி முழக்குவதாக இருக்கவே இருக்காது. நமது அறிவார்ந்த, திறமைசான்ற முடிவுகளில் அது அடங்கி இருக்கும். இந்த முடிவுகள் எப்போதும் இத்தகையனவாய் இருக்கும், எப்போதும் பின்வருவதை மீண்டும் கூறும்: அடிப்படையான புரட்சிக் கோட்பாடுகள் வெவ்வேறு நாடுகளின் தனித்தன்மைகளுக்கு ஏற்ப இசைவித்துக்கொள்ளப் பட வேண்டும்.''[4]

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம்520.
[2] அதே நூல், பக்கம் 521.
[3] அதே நூல், பக்கம் 466.
[4] அதே நூல், பக்கம் 465.

சமயோசிதமான, எச்சரிக்கையுள்ள செயல்தந்திரத்தைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது என்பதை லெனின் கம்யூனிஸ்டுகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். ஆனால் இது புரட்சிப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒருபோதும் அர்த்தப் படாது என்று அதே சமயம் அவர் மிக மிக உறுதியாக எச்சரித்தார். ''லட்சக் கணக்கான மக்கள் பங்கு கொண்ட போராட்டத்தின் பின் யாராவது இந்தப் போராட்டத்திற்கு எதிராகப் பேசி, லெவி போன்று நடந்து கொண்டால், அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட வேண்டும்''[1] என்று வலதுசாரியினரை விமர்சித்தார் லெனின். வெவ்வேறு நாட்டுத் தொழிலாளர்களுக்கு இடையே போராட்டத்தின் ஒருங்கிசைவு இன்றியமையாதது என்பதை, குறைந்த மக்கள் தொகை கொண்ட நாடு, அதிகச் செல்வ வளமும் அதிக மக்கள் தொகையும் உள்ள வேறொரு நாடு போராட்டம் தொடங்குவதற்காகக் காத்திருக்க வேண்டும் என்று அர்த்தப் படுத்திக் கொள்வது ஒளிவு மறைவு அற்ற ஏமாற்று ஆகும் என்று லெனின் சுட்டிக்காட்டினார். ''எந்தக் கணங்கள் முக்கியத்துவம் உள்ளவை என்பதை மற்ற நாடுகளைச் சேர்ந்த தோழர்கள் அறிந்து கொள்வது ஒருங்கிசைவில் அடங்கி இருக்க வேண்டும். ஒருங்கிசைவின் மிக முக்கியமான விளக்கம்: நல்ல உதாரணத்தை அதிகச் சிறந்த முறையிலும் அதிக விரைவாகவும் பின்பற்றுவது என்பதாகும்.''[2]

செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி உள்ளிட்ட எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் ''...எல்லா இடைநிலைவாத மரபுகளையும் ஊசலாட்டங்களையும்''[3] ஒழித்துவிடுவது இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரஸ் அழுத்திக் கூறியது. செக்கோஸ்லோவாக்கியாவில் உண்மையாகக் ''...காரியம் தாக்குதலுக்கு ஆயத்தம் செய்யும் நிலையை எட்டுமா அல்லது இடர்கள் பற்றிய பேச்சுக்களுடன் நின்றுவிடுமா''[4] என்பதே எங்களுக்குக் கலக்கம் தரும் விஷயம் என்று ஜெர்மானிய, போலந்து, செக்கோஸ்லோவாக்கிய, ஹங்கேரிய, இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் உரையாடுகையில் லெனின் கூறினார். ''...தவறு போராட்டம் தொடங்குவதற்கான மனவுறுதி சம்பந்த

---

[1] அதே நூல், பக்கம் 473.

[2] அதே நூல், பக்கம் 328.

[3] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில். மாஸ்கோ, 1933, பக்கம் 187.

[4] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 328.

மானது'' என்றால் ''அது சிறு தவறே அல்ல, துரோகம் ஆகும் ...நாங்கள் புரட்சி செய்வோம், ஆனால் மற்றவர்கள் போராட்டம் தொடங்கிய பிறகே என்ற சித்தாந்தம் அடிப்படையில் தவறானது.''[1]

மூன்றாவது காங்கிரசின் வெளியீடான ''மஸ்க்வா'' செய்தித் தாளின் ஜூலை 1ந் தேதி இதழில் செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரை நகலுக்குத் திருத்தங்கள் அச்சிடப்பட்டன. ஜெர்மானிய, ஆஸ்திரிய, இத்தாலியப் பிரதிநிதிகள் இவற்றில் கையொப்பங்கள் இட்டிருந்தார்கள். ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியால் மார்ச்சு மாத நடவடிக்கைகளின் போது செய்யப்பட்ட தவறுகள் இவற்றில் விமர்சிக்கப் படவில்லை. ''தாக்குதல் சித்தாந்தத்தை'' ஏற்றுக் கொள்ளும்படியும், ''பொறுமை அற்றவர்களும் அனுபவம் இல்லாதவர்களுமான புரட்சிக்காரர்களால்'' மேற்கொள்ளப்பட்ட போக்குக்களைக் கடுமையாக எதிர்த்த எல்லா அம்சங்களையும் நீக்கிவிடும்படியும் இவற்றில் யோசனை கூறப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரைக் கம்யூனிஸ்டுக் கோட்பாடுகளின் ஆதரவாளர்கள் ஆக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்த இடத்தில் ''பெரும்பான்மையினர்'' என்னும் சொல்லை எடுத்துவிடும் படியும்''பகிரங்கக் கடிதம்'' பற்றிய குறிப்பை அடித்துவிடும்படியும் திருத்தங்களில் யோசனை சொல்லப்பட்டிருந்தது. இந்தத் திருத்தங்கள் மூன்று பிரதிநிதிக் குழுக்களால் பிரேரிக்கப்பட்டதும், செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஜெர்மானியப் பிரிவுப் பிரதிநிதிகளும் ஹங்கேரியப் பிரதிநிதிக் குழுவின் பெரும்பான்மையினரும் இளைஞர் கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் அவைகளோடு சேர்ந்து கொண்டதும் காங்கிரசில் விவாதத்தை மிகக் கடுமை ஆக்கிவிட்டன.

காங்கிரஸ் கூட்டத்தில் ஜூலை 1ந் தேதி பேசுகையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் கோட்பாட்டு அடிப்படைகளை லெனின் விளக்கினார். ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதம் கம்யூனிஸ்டு இயக்கத்தின் நலன்களுக்கு எவ்வளவு ஆபத்தானது என்பதை அவர் விவரமாகக் காட்டினார். ''காங்கிரஸ் இத்தகைய தவறுகளை எதிர்த்து, இத்தகைய 'இடதுசாரி' அசட்டுத்தனங்களை எதிர்த்து உறுதியுடன் தாக்குதல் தொடுக்காவிட்டால் இயக்கம் அனைத்தும் கட்டாயமாக அழிவுக்கு

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 328.

உள்ளாகி விடும். இது என்னுடைய ஆழ்ந்த கருத்து''[1] என்றார் லெனின். செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரை கம்யூனிஸ்டு அகிலத்தின் அடிப்படையான கொள்கைப் போக்கை வகுப்பதை நோக்கமாகக் கொண்டது. கம்யூனிஸ்டுகள் உண்மையான இடைநிலைவாதிகளை ஒப்புக்குக் கண்டனம் செய்ததுடன் நில்லாமல் அவர்களைக் கட்சிகளிலிருந்து விலக்கியும் விட்ட இந்தச் சமயத்தில் அது சிறப்பாக இன்றியமையாதது என்று லெனின் கூறினார். ''இடைநிலைவாதிகள் ஒழிக'' என்பது கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது, இரண்டாவது காங்கிரசுகளின் கோஷமாக இருந்தது என்பதை அவர் நினைவுபடுத்தினார். இடைநிலைவாதித் தலைவர்களுக்கு எதிராக உறுதியான போராட்டம் நடத்தியதன் மூலம் ஜெர்மனியிலும் பிரான்சிலும் பிற நாடுகளிலும் இடைநிலைவாதக் கட்சிகளின் புரட்சி மனப்பான்மை கொண்ட உறுப்பினர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் தரப்புக்கு ஈர்க்கப்பட்டார்கள். இன்னும் மேலே செல்வது அவசியம். ''இப்போது நாம் அபாயமானதாகக் கருதும் மறு புறத்திற்கும் எதிராக நாம் செயல்பட வேண்டும்'',[2] ''...இடைநிலைவாதிகளை விரட்டுவதைக் காட்டிலும் முக்கியமான வேறு பிரச்சினைகள் இப்போது நம் முன் நிற்கின்றன...''[3], ''இதற்கு பதிலாகத் தோழர்கள் உண்மையான புரட்சிப் போராட்டம் நடத்தவும் கற்க வேண்டும்...'',[4] ''...வெற்றுன வாய்வீச்சுக்களில் ஈடுபடுவது சரி அல்ல. உடனே கற்கத் தொடங்கவேண்டும். நடந்துவிட்ட தவறுகளிலிருந்து, போராட்டத்தை இன்னும் நன்முக ஒழுங்கமைப்பதற்குத் தாமதமின்றிக் கற்கத் தொடங்க வேண்டும்.''[5]

ஆய்வுரைக்குத் திருத்தங்களில் மிகத் துலக்கமாக வெளியிடப்பட்டிருக்கும் ''இடதுசாரிப்'' போக்கு மிக மிகத் தீங்கானதும் அபாயம் உள்ளதுமாக மாறிவிட்டது. எனவே, ''...இந்தப் போக்கை எதிர்த்து தயாதாட்சிண்ணியம் இன்றிப் போராடுவது இன்றியமையாதது. ஏனெனில், அவ்வாறு செய்யாவிட்டால் கம்யூனிஸமும் இருக்காது, கம்யூனிஸ்டு அகிலமும் இருக்காது''[6] என்று அழுத்திக் கூறினார் லெனின். ''இடதுசாரியினர்,'' தொழிலாளி வர்க்கத்தின்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 328.
[2] அதே நூல், பக்கம் 477.
[3] அதே நூல், அதே பக்கம்.
[4] அதே நூல், அதே பக்கம்.
[5] அதே நூல், அதே பக்கம்.
[6] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 469.

பெரும்பான்மையினரைக் கம்யூனிஸத்தின் பக்கம் ஈர்க்கும் பணியை மறுப்பதும் ''பகிரங்கக் கடிதத்தை'' சந்தர்ப்பவாதத் தன்மை கொண்டதாகக் கூறி எதிர்ப்பதும் கம்யூனிஸ்டுக்கு வெட்கம் தரும் செயல்கள் என்ருர் லெனின். ''அனேகமாக எல்லாப் பாட்டாளிகளும் ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் ஐரோப்பாவில், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நாம் நம் பக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாதவன், கம்யூனிஸ்டு இயக்கத்துக்குத் தகுதி அற்றவன்...''[1] பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரை, பொதுவாக உழைப்பாளிகளின் பெரும்பான்மையினரை ஈர்க்கும் பணியை ஆதாரம் காட்டி விளக்குகையில் லெனின் கூறினுர்: ''ருஷ்யாவில் நாங்கள் சிறு கட்சியாக இருந்தோம். ஆனுல் இதோடுகூட, நாடு முழுவதையும் சேர்ந்த தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதி களின் சோவியத்துக்களில் பெரும்பான்மையானவை எங்கள் பக்கம் இருந்தன. உங்களிடம் இவை எங்கே இருக்கின்றன? எங்கள் நாட்டுப் படைகளில் அப்போது குறைந்தது ஒரு கோடிப் பெயர் இருந்ததாகக் கணக்கிடப்பட்டிருந்தது. இவர்களில் அனேகமாகப் பாதிப் பெயர் எங்கள் தரப்பில் இருந்தார்கள். படையினரில் பெரும்பான்மையினர் உங்கள் தரப்பில் இருக்கிருர்களா? அத்தகைய நாட்டை எனக்குக் காட்டுங்கள்!''[2] ''எங்களிடம் இருந்த கட்சி சிறியதுதான் என்ருலும் ருஷ்யாவில் நாங்கள் வென்று விட்டோம் என்று யாரேனும் சொன்னுல் அவர்கள் ருஷ்யப் புரட்சியைப் புரிந்து கொள்ளவில்லை என்பதையும் புரட்சிக்கு எவ்வாறு ஆயத்தம் செய்ய வேண்டும் என்று அறவே அறியவில்லை என்பதையுமே இதனுல் காட்டிக் கொள்கிருர்கள்.''[3]

கம்யூனிஸ்டுகளின் தரப்புக்கு விரிவான வெகுஜனங்களை ஈர்ப்பதன் அவசியத்தைக் காங்கிரசின் பிரதிநிதிகளுக்கு விளக்குகையில் லெனின் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். ''வெகுஜனங்கள்'' என்னும் கருதுகோள் போராட்டத்தின் தன்மை மாறுவதற்கு ஏற்ப மாறக் கூடியது என்ருர் அவர். போராட்டத்தின் தொடக்

---

[1] அதே நூல், பக்கம் 470.
[2] அதே நூல், பக்கம் 471.
[3] அதே நூல், பக்கம் 474.

கத்தில் சில ஆயிரம் புரட்சிக்காரர்கள் இருந்தால் போதும், வெகு ஜனங்கள் நம் தரப்பில் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளலாம். தன்னுடைய உறுப்பினர்களை மட்டும் இன்றி, கட்சிச் சார்பு இல்லாதவர்களையும் போராட்டத்தில் ஈடுபடுத்தக் கட்சிக்கு வாய்த்து விட்டால் அதுவே வெகுஜனங்களை ஈர்ப்பதன் தொடக்கம் ஆகும். புரட்சி நடக்கும் போது ''வெகுஜனங்கள்'' என்ற கருதுகோள் பெரும்பான்மை என்று அர்த்தப்படும். அதுவும் வெறுமே தொழிலாளர்களின் பெரும்பான்மை மட்டும் அல்ல, சுரண்டப்படுவோர் அனைவரதும் பெரும்பான்மை. ''...வெற்றி பெறுவதற்கு, ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு இன்றியமையாதது தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மை மட்டும் அல்ல... ஒடுக்கப்பட்டவர்களுடையவும் நாட்டுப்புற மக்களதும் பெரும்பான்மையும் தான்''[1] என்று லெனின் மீண்டும் மீண்டும் திருப்பிக் கூறினார். புரட்சிக் கட்சியில் புரட்சித் தாக்குதலின் இன்றியமையாமை பற்றி விவாதம் இருக்க முடியாது. வெற்றிக்கு முக்கியமான நிபந்தனை தாக்குதலுக்கு முன்னேற்பாடு செய்வதாகும், அதாவது, முதன்மையாக நகரங்களையும் கிராமங்களையும் சேர்ந்த பெரும்பான்மை உழைப்பாளி வெகுஜனங்களை நம் பக்கத்துக்குக் கொண்டு வருவது ஆகும் என்பதைச் சரியாகப் புரிந்து கொள்வது பற்றியே விவாதம் நடக்கிறது.

''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகளின் தவறுகளை வெளிப்படுத்திய பின், இந்தத் தவறுகளைப் பகிரங்கமாக, ஆண்மையுடன் ஒப்புக் கொண்டு திருத்திக் கொள்ளும்படி லெனின் அழைப்பு விடுத்தார். ''நாம் நமது தவறுகளைப் பகைவர்கள் முன் மறைக்கத் தேவையில்லை. இதற்கு அஞ்சுபவன் புரட்சிக்காரன் அல்ல'' என்று தமது உணர்ச்சி பொங்கிய உரையின் முடிவில் அவர் கூறினார். ''மாறாக, 'ஆம், நாங்கள் தவறுகள் செய்தோம்' என்று நாம் தொழிலாளர்களுக்குப் பகிரங்கமாக அறிவித்தால் இந்தத் தவறுகள் மேற்கொண்டு செய்யப்பட மாட்டா, உரிய தருணத்தை இன்னும் நன்றாகத் தெரிந்தெடுக்க நம்மால் முடியும் என்று அது அர்த்தப்படும். போராட்டம் நடக்கும்போது பெரும்பான்மையான உழைப்பாளர்கள்—பெரும்பான்மையான தொழிலாளர்கள் மட்டும் அல்ல, சுரண்டவும் ஒடுக்கவும் படும் எல்லோருடையவும் பெரும்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 476.

பான்மை—நம் தரப்பில் இருந்தால் நாம் உண்மையிலேயே வெற்றி பெறுவோம்.''[1]

லெனினது சொற்பொழிவு பிரதிநிதிகள் மீது மிகப் பெருத்த பாதிப்பு விளைத்தது. ''...நசுக்குவதுபோன்ற இறுக்க உணர்வு காங்கிரசை விட்டு அகன்றது[2] என்று நினைவுகூர்ந்தார். வி. கியோனென். அந்த சமயத்தில் ''இடதுசாரிக்'' கருத்துக்களை ஊக்கத்துடன் ஆதரித்த உ. தெர்ராச்சீனி, லெனினது சொற்பொழிவின் போது தாம் பின்வரும் உண்மையைப் புரிந்து கொண்டதாகப் பின்னர் எழுதினார்: ''...சம்மட்டி போன்று தாக்கிய அவருடைய சொற்களில் ஒலித்த கடுமையான கண்டனம் அவர்மீது சார்ந்திருந்த உயர்ந்த கடமையின் காரணமாகவே தெரிவிக்கப்பட்டது. என்னையும் எங்கள் அனைவரையும் தவறு செய்வதிலிருந்து காப்பது இந்தக் கடமை: நாங்கள் செய்யவிருந்த தவறு திருத்த முடியாததாகவும் அழிவு விளைப்பதாகவும் முடிந்திருக்கலாம்—எங்களுக்கு மட்டும் அல்ல, எங்கள் யாவருக்கும் பொதுவான மிக உயர்ந்ததும் ஒளி மிக்கதுமான குறிக்கோளுக்கும்—சமுதாய விடுதலைக் குறிக்கோளுக்கும்—கூடத்தான்... பின்னர், கம்யூனிஸ்டு என்ற முறையில் எனது நாற்பதாண்டுப் போராட்டத்தில் இந்தப் படிப்பினை எனக்கு உறுதுணையாகக் கைகொடுத்தது.''[3]

''செயல்தந்திரம் பற்றி ருஷ்யப் பிரதிநிதிக் குழு பிரேரித்த ஆய்வுரையை முழுமையாக ஏற்பதாக''[4] அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ர. மாய்னோர் (பாலிஸ்டர்) அறிவித்தார். கிளாரா த்ஸேத்கின் லெனினுடைய சொற்பொழிவை உற்சாகமாக ஆதரித்தார். ''நாம் நம்முடைய ருஷ்யச் சோதரர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்'' என்றார் அவர். ''உலகப் புரட்சியின் பாதிப்பினால் பழைய உலகம் தகர்ந்து சிதறும் சமயத்தில் நமக்குப் போராட்ட முறைகளையும் சாதனங்களையும் அளித்ததற்காக ருஷ்யப் பாட்டாளிகளுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். அது மட்டும் அல்ல. புரட்சிப் போராட்டத்திற்கான சித்த உறுதியில்

---

[1] வி.இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32. பக்கம் 477.

[2] லெனினைப் பற்றி. சமகால அயல்நாட்டவரின் நினைவுக் குறிப்புகள், பக்கம் 368.

[3] அதே நூல், பக்கம் 395.

[4] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது உலகக் காங்கிரஸ், பக்கம் 270.

எத்தகைய ஆற்றலும் விறலும் மறைந்துள்ளன என்பதைத் தங்கள் உதாரணத்தால் நமக்குக் காட்டியதற்காகவும் அவர்களுக்கு நாம் முதன்மையாக நன்றி தெரிவிக்கிறோம்.''[1] ''பிரெஞ்சுப் பிரதிநிதிக் குழு, ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியால் பிரேரிக்கப்பட்ட ஆய்வுரைக்குத் தனது முழு இசைவைத் தெரிவித்துக் கொள்கிறது''[2] என்று காங்கிரஸ் மேடையிலிருந்து அறிவித்தார், ப. வாயான்-குத்யுரியே. ''பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிக் குழு, பிரேரிக்கப்பட்ட ஆய்வுரையை ஏற்கிறது'' என்று டி. பெல் அறிவித்தார்.[3] செக்கோஸ்லோவாக்கியா, பிற நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய பிரதிநிதிகள் ஆய்வுரையை ஆதரித்தார்கள்.[4] விவாதங்களும் சொற்போர்களும் சில சந்தர்ப்பங்களில் மிக மிகக் கடுமையாக இருந்தன என்றாலும் காங்கிரசின் நடவடிக்கைகள் சோதர ஒத்துழைப்பு, பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றின் உணர்வால் நிறைந்திருந்தன. கம்யூனிஸ்டுகள் மேற்கொண்டு எப்படிச் செயல்பட வேண்டும், வரப்போகும் தற்காப்பு, தாக்குப் போராட்டங்களுக்கு எப்படி ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற கேள்விக்குக் கூட்டாக விடை காண்பதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் முயற்சி செய்தார்கள். எனவே, இந்த விவாதங்களின் விளைவாக ''இடதுசாரியினரின்'' தவறான கருத்துக்கள் முழுப் பெரும்பான்மையினரான பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்டது முறையாகவே இருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள், முறைகள் ஆகியவற்றின்பால், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பல்வகைப்பட்ட அனுபவம் அனைத்தையும் ஆதாரமாகக் கொண்டு லெனின் கடைப்பிடித்த அணுகுமுறை, பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் வருங்கால நலன்களுக்கு உகந்தது என்பதையும் வெகுஜனங்களைக் கம்யூனிஸ்டுகளின் தரப்புக்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்புக்கள் அளிக்கிறது என்பதையும் பெரும்பாலான பிரதிநிதிகள் கண்டுகொண்டார்கள்.

''காங்கிரஸ் லெனினை ஆதரித்து நின்றது''[5] என்று நினைவு

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது உலகக் காங்கிரஸ், பக்கம் 286.

[2] அதே நூல், அதே பக்கம்.

[3] அதே நூல், பக்கம் 288.

[4] அதே நூல், பக்கம் 256.

[5] ஒ. கூஸினென். பொறுக்கியெடுத்த நூல்கள். மாஸ்கோ, 1966, பக்கம் 670.

கூர்ந்தார் ஓ. கூஸினென். ''இடதுசாரித்'' திருத்தங்களைப் பிரேரித்தவர்கள் காங்கிரசின் தலைமைக் குழுவுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்கள். ருஷ்யப் பிரதிநிதிக் குழு முன்வைத்துள்ள செயல்முறை பற்றிய ஆய்வுரையின் அடிப்படைக் கோட்பாடுகளை, பிரத்தியேகமாகவும் திட்டவட்டமாகவும் லெனினும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மற்றப் பிரதிநிதிகளும் கூறியவற்றின் அர்த்தத்தில் ஏற்றுக் கொள்வதாக அவர்கள் இந்த அறிக்கையில் தெரிவித்தார்கள்.[1] செயல்முறை பற்றிய ஆய்வுரைக்குக் காங்கிரஸ் ஒருமனதாக ஒப்புதல் தந்தது. ஆய்வுரையில் கூறப்பட்டபடி கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகளாவன: முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினர் மீது பெருத்த செல்வாக்கு பெறுவது, தொழிலாளி வர்க்கத்தின் நிர்ணயகரமான பகுதியினரைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவது, ''...தொழிலாளி வெகுஜனங்கள் போராட்டத்தில் நேர்முகமாகப் பங்கு கொள்வது, இந்தப் போராட்டத்துக்குக் கம்யூனிஸ்டுகள் தலைமை ஏற்பது, போராட்டம் நிகழ்கையில், புரட்சிகரமான, பெரிய, கம்யூனிஸத் தன்மை கொண்ட வெகுஜனக் கட்சிகளை நிறுவுவது.''[2] பாட்டாளிகளின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளின் பொருட்டுப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்வதன் அவசியம் ஆய்வுரையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. உழைப்பாளிகளின் அம்சரீதியான கோரிக்கைகளை ஆதரித்துப் போராடுவதும் சோஷலிஸப் புரட்சியின் பணிகளை நிறைவேற்ற வெகுஜனங்கள் முன்செல்வதும் நேர்முகமான தொடர்பு உள்ளவை என்பதைக் காங்கிரஸ் குறிப்பிட்டது. ''பாட்டாளி வர்க்கத்தின் நடைமுறைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்குவதன் வாயிலாகவே, இந்தப் போராட்டத்துக்கு ஊக்கம் அளிப்பதன் மூலமே கம்யூனிஸ்டுகள் சர்வாதிகாரத்துக்கான போராட்டத்தில் விரிவான வெகுஜனங்களை ஈர்த்து ஈடுபடுத்த முடியும்'' என்று ஆய்வுரையில் கூறப்பட்டது.[3]

''இடதுசாரியினர்'' அம்சரீதியான கோரிக்கைகளை ஆதரித்துப் போராடுவதை அசட்டை செய்தார்கள். ஆயுதந்தாங்கிய தாக்குதலை ஒழுங்கமைப்பதில் எல்லாச் சக்திகளையும் ஈடுபடுத்தும்படி அவர்கள் அறைகூவினார்கள். காங்கிரஸ் அவர்களுக்கு எதிரான

---

[1] மை. ஆ.கூ., 512/1/8133/1.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 183.

[3] அதே நூல், பக்கம் 189.

போக்கை மேற்கொண்டது. பாட்டாளி வர்க்கம், ''சர்வாதிகாரம் பெறும் வரையில் தனது அத்தியாவசியமான, உடனடியான வாழ்க்கைத் தேவைகளுக்காகப் போராடுவதற்கு மறுக்க முடியாது''[1] என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் முன்வைப்பது, முதலாளித்துவத்தின் வரம்புகளுக்குள் அதன் அற்றலைந்து போன கட்டிடத்தை வலுவாக்கி மேம்படுத்தும் நோக்கத்துடன் சமூக-ஜனநாயகக் கட்சிகள் மேற்கொண்டுள்ள குறைந்த பட்சச் செயல்திட்டம் அல்ல என்று செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரையில் கூறப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் ஸ்தூலமான கோரிக்கைகளுக்கான போராட்டத்தை உடனடியான பணியின் வடிவில் காங்கிரஸ் பிரேரிப்பதற்குக் காரணம், இந்தக் கோரிக்கைகளின் நிறைவேற்றம் மொத்தமாகச் சேர்ந்து பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சியைச் சிதைக்கும், பாட்டாளி வர்க்கத்தை ஒழுங்கமைக்கும், ஆட்சி அதிகாரத்திற்காகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தில் ஒரு கட்டமாக அமையும் என்பதே. ஸ்தூலமான கோரிக்கைகளுக்கான போராட்டம் வளர்ச்சி அடைவதற்கு ஏற்ப, கம்யூனிஸ்டுக் கட்சி புதிய கோஷங்களை முன்வைத்து உழைப்பாளிகளின் போராட்டத்தை இன்னும் மேல் படிக்கு உயர்த்த வேண்டும். ''இத்தகைய அம்சரீதியான கோரிக்கைகளை முன்வைப்பதற்கு மறுப்பதும் அம்சரீதியான போராட்டத்தைச் சீர்திருத்தவாதம் என்று குற்றம் சாட்டுவதுமான ஒவ்வொரு செயலும், புரட்சி நடவடிக்கையின் ஜீவாதாரத் தேவைகளைப் புரிந்து கொள்ளும் திறன் இன்மையின் விளைவாகும். தொழிற்சங்கங்களில் பங்கு கொள்வதற்கும் நாடாளுமன்ற முறையைப் பயன்படுத்துவதற்கும் சில கம்யூனிஸ்டுக் குழுக்கள் மறுத்ததில் இந்தத் திறனின்மையே வெளிப்பட்டது. முடிவான குறிக்கோள்களை அடைவதற்காகப் பாட்டாளி வர்க்கத்தை அறைகூவி அழைப்பது முக்கியம் அல்ல, பாட்டாளி வர்க்கத்தின் நடைமுறைப் போராட்டத்தை உயர் மட்டத்துக்குக் கொண்டு போவதே முக்கியம். அது மட்டுமே பாட்டாளி வர்க்கத்தை இறுதிக் குறிக்கோள்களுக்கான போராட்டத்துக்கு இட்டு வர வல்லது'' என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது.[2]

உழைப்பாளிகளின் ஸ்தூலமான, அம்சரீதியான கோரிக்கைகளுக்காகப் போராடுவதற்கும் முதலாளித்துவ அமைப்பை வீழ்த்து

---

[1] அதே நூல், அதே பக்கம்.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 191.

வதன் இன்றியமையாமையை வெகுஜனங்கள் புரிந்து கொள்ளும்படி செய்வதற்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பைக் காங்கிரஸ் ஆழ்ந்த ஆதாரங்கள் காட்டி விளக்கியது. சோஷலிஸத்துக்கான போராட்டத்தின் வழிகள் பற்றிய லெனினது வரையறுப்பை அது ஸ்தூலப்படுத்தியது.

காங்கிரஸ் ''தாக்குதல் சித்தாந்தத்தை'' அறவே நிராகரித்து விட்டது. புரட்சிக்காகப் பொறுமையின்றித் துடிப்பவர்களும் அரசியல் அனுபவம் இல்லாதவர்களுமான ஒரு சிலர், உண்மையில் நிர்ணயகரமான புரட்சி எழுச்சிக்கான அதி தீவிர முறைகளைத் தனித் தனிப் பிரச்சினைகள் விஷயத்தில் கடைப்பிடிக்க முயல்வது மிக அபாயகரமான துர்ச்சாகசத் தன்மைகளைக் கொண்டிருக்கிறது என்றும் இந்த முறைகள் எதார்த்தத்தில் கடைப்பிடிக்கப் பட்டால், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் பாட்டாளி வர்க்கம் செய்துவரும் உண்மையில் புரட்சிகரமான முன்னேற்பாட்டு வேலை அனைத்தையும் அவை நீண்ட காலத்துக்குப் பாழாக்கிவிடக் கூடும் என்றும் காங்கிரஸ் அழுத்திக் கூறியது.

தொழிலாளி வர்க்கத்தின் உடனடியான அன்றாடத் தேவைகளுக்கான ஒன்றித்த போராட்டத்தில் அதன் எல்லாப் பிரிவுகளையும் ஸ்தாபனங்களையும் ஈடுபடுத்துவது அவசியம் என்று, வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு, ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ''பகிரங்கக் கடிதத்தின்'' உதாரணத்தைப் பின்பற்றிக் காங்கிரஸ் முடிவு செய்தது. ''மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தொழிலாளி வெகுஜனங்கள். தொழிற் சங்கங்களிலும் அரசியல் கட்சிகளிலும் ஸ்தாபன வடிவில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அங்கே இயக்கங்கள் இயல்பாகத் தொடங்கும் என்று மிக அபூர்வமாகச் சில சந்தர்ப்பங்களில்தான் எதிர்பார்க்க முடியும். இதைக் கருத்தில் கொண்டு, தொழிற்சங்கங்கள் மீது தங்கள் செல்வாக்கை நிலைநாட்டுவதன் வாயிலாகவும், பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்த பிற கட்சிகள் மீது தங்கள் பாதிப்பை வலுப்படுத்துவதன் வாயிலாகவும் பாட்டாளிகளின் அண்மை நலன்களுக்கான ஒன்றித்த போராட்டத்தைத் தொடங்க முயல்வது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கடமையாகும்.''[1]

---

[1] அதே நூல், பக்கம் 193.

இவ்வாறு, தொழிலாளர் இயக்க நடைமுறையிலிருந்து பெறப்பட்ட முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு, இந்த நடைமுறை பற்றிக் கலந்து ஆலோசித்து, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்றில் புதிய கட்டத்துக்கு—ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணி அமைப்பதற்கான போராட்டக் கட்டத்துக்குக்—கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் லெனினது நிர்ணயகரமான உதவியுடன் அடிகோலின.

அதே சமயம், மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராக விரிவான சர்வஜனநாயகக் கூட்டணி அமைக்கும் நோக்கத்துடன் அரைப் பாட்டாளி, குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களை, முதன்மையாகச் சிறு நில விவசாயிகளையும் குட்டி பூர்ஷ்வாக்கள், அலுவலக ஊழியர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரின் பகுதிகளையும் பாட்டாளி வர்க்கத்தின் தரப்புக்குக் கொண்டுவரும் பணியையும் மூன்றுவது காங்கிரஸ் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு முன் வைத்தது.

ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் காங்கிரசுக்கு எழுதிய கடிதத்தில் லெனின் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசின் முக்கியத்துவத்தை விளக்கி, பின்வருமாறு யோசனை கூறினார்: ''நிதான புத்தியையும் தாங்குதிறனையும் இழந்து விடக் கூடாது. சென்ற காலத்தில் செய்த தவறுகளை முறையாகத் திருத்திக் கொள்ள வேண்டும். தொழிற்சங்கங்களிலும் அவற்றுக்கு வெளியிலும் தொழிலாளி வெகுஜனங்களிடையே பெரும்பான்மையினரை விடா முயற்சியுடன் நம் தரப்புக்குக் கொண்டுவர வேண்டும். நிகழ்ச்சிகளின் எல்லா வகையான திருப்பங்கள் யாவற்றிலும் வெகுஜனங்களைத் தலைமையேற்று நடத்திச் செல்ல உண்மையில் திறன் வாய்ந்த, வலிவான, அறிவு சான்ற கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுமையுடன் நிறுவ வேண்டும். மிக மிக (பொதுவாக நூற்றுண்டுக் கணக்கான அனுபவத்தாலும் சிறப்பாக 'ருஷ்ய அனுபவத்தாலும்') 'ஞானம் பெற்ற' முன்னணி பூர்ஷ்வா வர்க்கத்தின் தலைசிறந்த சர்வதேசப் போர்த்தந்திரத்துக்கு இணை ஆகக் கூடிய போர்த்தந்திரத்தை வகுக்க வேண்டும். இவையே செய்ய வேண்டியவை. ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கம் இவற்றையே செய்யப் போகிறது. இவையே அதன் வெற்றியை உறுதிப் படுத்தும்.''[1] மூன்றுவது காங்கிரசின் செயல்தந்திரம் பற்றிய

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கங்கள் 513-14.

ஆய்வுரையின் ஒரு பகுதியை லெனின் தமது கடிதத்தில் சிறப்பாக மேற்கோள் காட்டினார். பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று இணைக்கும்படி இதில் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி பணிக்கப் பட்டிருந்தது. ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்குச் சீர்திருத்த வாதக் கட்சிகளின் சாதாரண உறுப்பினர்கள் தங்கள் தலைமை யுடன் தொடர்பைத் துணித்துக் கொள்வது அவசியம் என லெனின் நிபந்தனை விதிக்கவில்லை. வெகுஜனங்களைப் போராட்டத்தில் ஒரே கூட்டணியாகத் திரட்டுவதே முக்கியமானது. இந்தப் போராட்டப் போக்கில் வெகுஜனங்கள் ஒற்றுமையின் இன்றியமையாமை யையும் கம்யூனிஸ்டுகளது கொள்கை சரியானது என்பதையும் தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் புரிந்து கொண்டு அவர் களைப் பின்பற்றுவார்கள். ''இவ்வாறு பெறப்படும் வெற்றி உலகு அனைத்திலும் எங்கும் எல்லா வகையிலும் முன்னேறும். இதற்கு முன்னிலும் திண்ணமாக, கவனமாக முன்னேற்பாடுகள் செய் வோம். பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தைப் போராட எழும்படி நிர்ப்பந்திக்கும் எந்த ஒரு பெரிய சந்தர்ப்பத்தையும் நழுவ விடாதிருப்போம். பாட்டாளி வெகுஜனங்கள் நம்மோடு சேர்ந்து போராட்டத்துக்கு எழாமல் இருக்க முடியாத தருணத் தைச் சரியாகத் தீர்மானித்துக் கொள்வோம்'' என்று எழுதினார் லெனின்.

''அவ்வாறு செய்தால், நமது மாபெரும் முன்னேற்றத்தில் தனித் தனித் தோல்விகளும் தனித் தனி இட மாற்றங்களும் எவ்வளவுதான் கடினமாக இருந்தாலும் வெற்றி கிடைப்பது உறுதி.''[1]

ருஷ்யாவின் கம்யூனிஸ்டு
(போல்ஷிவிக்) கட்சியின்
செயல்தந்திரம் பற்றி
லெனினது உரை

ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் செயல்தந் திரம் பற்றி ஜூலை 5ந் தேதி, லெனின் உரையாற்றினார். சமகால சர்வதேச நிலைமை, புரட்சிப் போராட்டத்தின் வாய்ப்புக்களும்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 522.

பணிகளும் ஆகியவை பற்றிய ஆழ்ந்த பகுத்தாராய்வை அவர் தந்தார். உலகப் புரட்சி இயக்கம் ஒன்றித்த நிகழ்முறை என்று அவர் சித்திரித்தார். இந்த நிகழ்முறையில் மூன்று முக்கிய சக்திகள் செயல்படுகின்றன. அவையாவன: வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கத்தின் நாடு, முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் புரட்சி இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் விடுதலைப் போராட்டம். தேசிய விடுதலை இயக்கம், செயல்பாங்குள்ள புரட்சிக் காரணி என்று மதிப்பிட்டார் லெனின். அவர் சொன்னார்: "...உலகப் புரட்சி இயக்கத்தின் அடுத்துவரும் நிர்ணயகரமான போராட்டங்களில், தேசிய விடுதலையை ஆரம்ப நோக்கமாகக் கொண்டிருந்த பெரும்பாலரான உலக மக்கள், முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்ப்பார்கள்..."[1]

சோவியத் நாட்டில் நடந்தேறிய சோஷலிஸ மாற்றங்களின் சர்வதேச முக்கியத்துவத்தை லெனின் விளக்கினார். சோவியத் நாட்டில் சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பது தனது சர்வதேசக் கடமை, உலகப் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமான தொண்டு எனக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதியது. காங்கிரஸ் தொடங்குவதற்குச் சற்றுமுன்பு, ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் பத்தாவது மகாநாட்டில் லெனின் பின்வருமாறு கூறியிருந்தார்: "இப்போது சர்வதேசப் புரட்சிமீது நமது முதன்மையான பாதிப்பை நமது பொருளாதாரக் கொள்கையின் மூலம் நாம் நிகழ்த்துவோம். எல்லோரும் சோவியத் ருஷ்யக் குடியரசை நோக்குகிறார்கள். எந்த விதமான விதிவிலக்கும் எந்த விதமான மிகைப்படுத்தலும் இன்றி, உலக நாடுகள் அனைத்தின் உழைப்பாளிகளும் சோவியத் ருஷ்யக் குடியரசை நோக்குகிறார்கள்... இந்தத் துறையில் போராட்டம் அகில உலகப் பரிமாணத்துக்கு மாறிவிட்டது. இந்தப் பணியை நாம் நிறைவேற்றிவிட்டால், சர்வதேச அளவில் நாம் கட்டாயமாகவும் முடிவாகவும் வெற்றி பெற்றுவிடுவோம்."[2]

மூன்றாவது காங்கிரசில் ஆற்றிய உரையில் புதிய பொருளாதாரக் கொள்கையின் ("நெப்") முக்கியக் கோட்பாடுகளை லெனின் விவரித்தார். சோஷலிஸப் பாதையில் அடி வைக்கும் எல்லா நாடு

---

[1] அதே நூல், பக்கம் 482.

[2] அதே நூல், பக்கம் 437.

களும் கையாளத் தக்கவை இவை. ''நெப்'' தனிப்பட்ட பிரச்சினை அல்ல, உலகப் புரட்சி வளர்ச்சியின் மிக முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று என்று அவர் காட்டினார். வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் பரிணமிப்புக் காலப் பகுதியில் கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கை, ''நெப்''பில் வடிவம் பெற்றிருக்கிறது. விவசாயத்தையும் மாற்றி அமைக்க வல்லதான இயந்திரத் தொழிலினது முழுமையான வளர்ச்சியின் வாயிலாக சோஷலிஸத்தின் பொருளாதார அடித்தளத்தை நிறுவுவது இந்தக் கொள்கையின் நோக்கம். தனி முதலாளிகளுக்குக் குறித்த அளவு விடுதலை அளித்து, சரக்கு-பண உறவுச் செயல்முறையைக் கையாள்வதன்மூலம் முதலாளித்துவத்தின் மீது சோஷலிஸத்தின் முழு வெற்றிக்கு வகை செய்வதும், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோருடையவும் இயந்திரத் தொழில், விவசாயம் ஆகியவற்றினதும் பொருளாதார ஐக்கியத்தின் அடிப்படையில், இறுதியில் சுரண்டுவோர் வர்க்கங்களை ஒழிப்பதும் இந்தக் கொள்கையின் குறிக்கோள். விவசாயிகளுடன் தொழிலாளிகளின் ஐக்கியம் ஏற்படுத்துவதன் இன்றியமையாமை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஆக உயர்ந்த கோட்பாடு என்றும் இந்த வர்க்கங்களுக்கிடையே பொருளாதார ஐக்கியம் வளர்ந்து வலுப்படுவது விதிமுறைக்கு இசைந்தது என்றும் லெனின் ஆதாரங்களுடன் நிலைநாட்டினார். சோவியத் ருஷ்யாவில் உணவுப் பண்ட உபரி வசூலிப்பின் இடத்தில் உணவுப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டதே இந்த ஐக்கியத்தின் அடிப்படையாக விளங்கியது. விவசாயி வெகுஜனங்களை சோஷலிஸக் கட்டுமானத்தில் படிப்படியாக ஈடுபடுத்த இது வழி வகுத்தது. முதலாவது பாட்டாளி வர்க்க அரசை உள்நாட்டுப் பொருளாதார நோக்கிலும் அரசியல் நோக்கிலும் வலுப்படுத்துவதில் மிகப் பெரிய முக்கியத்துவம் கொண்டிருந்தது இது.

இந்தப் பணி, ''...எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கும் எதிர்ப்படப் போகிற, மிகக் கடினமான சோஷலிஸக் கட்டுமானப் பணிகளில் ஒன்றாகும்...'' என்று கூறினார் லெனின்.[1]

''நெப்''பின் அடிப்படையில் சோஷலிஸத்தை நிறுவுவதற்குரிய நடைமுறை வழிகளைத் தீர்மானிக்கையில் ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி சோவியத் ருஷ்யாவின் இடைக்காலப் பொரு

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 456.

ளாதாரத்தின் தனித் தன்மையைக் கருத்தில் கொண்டது. இதில் வெவ்வேறு வகை அமைப்புக்கள் இருந்தன. அவற்றில் முக்கிய மானவை, சோஷலிஸம், விவசாயிகளின் சிறு அளவுச் சரக்குப் பொருளாதாரம், முதலாளித்துவம் ஆகியவை. ஒரு நாட்டில் சோஷலிஸக் கட்டுமானம் எந்த நிலைமைகளில் தொடங்குகிறது என்பதைப் பொறுத்து, முதன்மையாக அந்த நாட்டில் பெரிய அளவு இயந்திரத் தொழில் உற்பத்தி மேலோங்கி இருக்கிறதா அல்லது சிறு அளவுப் பொருளாதாரம் மேலோங்கி இருக்கிறதா என்பதைப் பொறுத்து, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத் துக்குப் பரிணமிப்பதன் ஸ்தூல வடிவங்கள் வெவ்வேறு வகை யானவையாக இருந்து தீரும், அவை அவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் கட்சி கவனத்தில் எடுத்துக் கொண்டது.

பல்வகை அமைப்புக்கள் உள்ள பொருளாதாரத்தை சோஷ லிஸப் பொருளாதாரமாகப் படிப்படியாக மாற்ற வகை செய்த வடிவங்களையும் முறைகளையும் கையாள்வதை அடிப்படையாகக் கொண்டே புதிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டது. நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையே பண்டமாற்றின் வாயிலாக, வர்த்தக நட்புறவின் மூலம் சிறு அளவுச் சரக்குப் பொருளாதாரத்தின் மீது பாட்டாளி வர்க்க அரசின் செல்வாக் குக்கு வகை செய்வது, விவசாயி வெகுஜனங்கள் சோஷலிஸப் பாதைக்கு மாறுவதற்கு முன்னேற்பாடுகள் செய்வது ஆகியவற்றை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டிருந்தது. தொழி லாளி வர்க்கம் அரசியல் தலைமை ஏற்பதும் நாட்டில் சோஷலிஸத் தொழில் பெருக்கம் ஏற்படுவதும் அரசு விவசாயிகளுக்குப் பொரு ளாதார உதவி செய்வதும் இதைச் சாத்தியம் ஆக்குவதற்கு இன்றியமையாத நிபந்தனைகளாக இருந்தன. தொழில் பெருக்க மும் நாடு மின்சாரமயம் ஆவதும் விவசாயப் பண்ணைகள் கூட்டுறவு முறையில் அமைக்கப்படுவதும் பிரிக்க முடியாதபடி இணைந்தவை என்னும் லெனினது கருத்து, ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் புதிய பொருளாதாரக் கொள்கையில் இழையோடி இருந்தது.

''அதிதீவிர இடதுசாரிக்'' குழுக்களின்—ஜெர்மானியக் கம் யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி, ஹாலந்து நாட்டு ''இடதுசாரி யினர்'', ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியில் இருந்த உட்குழுவான ''தொழிலாளர் எதிர்த்தரப்பு'' ஆகியவற்றின்— பிரதிநிதிகள் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தாக்கிக்

காங்கிரசில் பேசினார்கள். கட்சியின் இந்தக் கொள்கை உலகப் புரட்சியின் வளர்ச்சியைக் கடினம் ஆக்கும் என்றும் உலகம் அனைத்திலும் முதலாளித்துவம் வலுவடைய உதவும் என்றும் அவர்கள் சொன்னார்கள். முதலாளித்துவ நாடுகளின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் சோவியத் நாட்டின் நலன்களுக்கும் இடையே முரண்பாடு இருப்பதாக நிரூபிக்க ''அதிதீவிர இடதுசாரியினர்'' முயன்றார்கள். உலகப் புரட்சி நிகழ்முறையின் எதார்த்தப் போக்கையும் சோவியத் நாட்டில் சோஷலிஸம் நிறுவப்படுவதன் உலக வரலாற்று முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள ''அதிதீவிர இடதுசாரிப்'' பிரிவுவாதிகள் விரும்பவில்லை. ''முடிந்த அளவு குறுகிய காலத்தில் புரட்சியை முன்னே கொண்டு செல்வோம்''[1] என்ற கோஷத்தை அவர்கள் பரப்பினார்கள். உலகம் முழுவதிலும் ''மறைமுக நாசவேலையை'' ஒழுங்கமைப்பது போன்ற பல விதமான துர்ச்சாகசக் கோரிக்கைகளை அவர்கள் விடுத்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகள் இவற்றை உக்கிரமாக எதிர்க்கவே, ''அதிதீவிர இடதுசாரியினர்'' சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அணிகளில் பிளவு ஏற்படுத்த முயன்றார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகளிலும் கம்யூனிஸ்டு அகிலத்திலும் எதிர்த்தரப்பு நிலவுவது பொருத்தமானது என்று கூச்சலிட்டார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தில் ''இடதுசாரி'', ''அதிதீவிர இடதுசாரிக்'' கட்சிகள் இருப்பது, அவை கம்யூனிஸ்டு அகிலத்தின் கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படியாதிருந்தால் கூட, கம்யூனிஸ்டு அகிலத்தின் முறையான, ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று ''அதிதீவிர இடதுசாரியினரின்'' சார்பாக ரொலாந்து-ஹோல்ஸ்ட் காங்கிரசில் கூறினார். ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி தனது அரசு நலன்களின் நோக்கில் புரட்சி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் என்றும் அதன் செல்வாக்கை எதிர்த்து நிற்பதற்கு இத்தகைய எதிர்த்தரப்பு இருப்பது அவசியம் என்றும் ''அதிதீவிர இடதுசாரியினர்'' தங்கள் கோரிக்கைக்கு விளக்கம் கூறினார்கள். காங்கிரசில் ''அதிதீவிர இடதுசாரியினர்களுடைய'' செயல்களிலும் பேச்சுக்களிலும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அணிகளில் பிளவு ஏற்படுத்த முயலும் எல்லா வகையான நபர்களுக்கும் இயல்பான அரசியல் போராட்ட முறைகள் வெளிப்பட்டன.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது உலகக் காங்கிரஸ், பக்கம் 377.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் மீது தங்கள் வரட்டுச் சூத்திரத்தைச் சுமத்தும் முயற்சி, இந்த நோக்கத்துடன் இயக்கத்தில் பிளவு உண்டு பண்ணுவது, முதன்மையாக, முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் போல்ஷிவிக் கட்சிக்கும் உறவுகளைத் துணித்து அவற்றை ஒன்றுக்கு ஒன்று எதிர் நிறுத்தும் முயற்சி, போல்ஷிவிக் கட்சி உலகப் புரட்சியை மறுப்பதாகக் குற்றம் சாட்டுவது ஆகியவை இந்த முறைகள்.

மூன்றாவது காங்கிரசுக்குப் பிறகு ''அதிதீவிர இடதுசாரியினர்'' சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தோடு தொடர்பை அறுத்துக் கொண்டு, தொழிலாளி வர்க்கத்தில் செல்வாக்கு இல்லாத அற்பப் பிரிவாக விரைவில் மாறிவிட்டார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் ''அதிதீவிர இடது சாரியினரின்'' தாக்குதல்களை நிராகரித்து, ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியினது கொள்கைக்கு உறுதியான ஆதரவு தெரிவித்தார்கள். காங்கிரஸ் அதன் நடவடிக்கைகளை ஒருமனதாக ஆமோதித்தது. ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி, ''...தொடக்கத்திலிருந்தே எல்லா வித நிலைமைகளிலும் அடுத்துவரும் அபாயங்களை முன்கண்டு அவற்றைத் தவிர்ப்பதற்கான சாதனங்களை எப்போதுமே கண்டறிந்து வந்திருக்கிறது. புரட்சிகர மார்க்சியத்திற்கு அது எப்போதும் விசுவாசம் உள்ளதாக இருந்து வந்திருக்கிறது'' என்றும், ''ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியுடைய ஒத்திசைந்த, உணர்வு பூர்வமான இந்தக் கொள்கையின் பயனாகவே சோவியத் ருஷ்யா உலகப் புரட்சியின் மிக முக்கியமான முதல் அரணாக விளங்கிவருகிறது...''[1] என்றும் அது கூறியது. சோவியத் ருஷ்யாவின் உழைப்பாளிகளை ஆதரிக்கும்படியும் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்காகப் போராடும் படியும் காங்கிரஸ் உலகத் தொழிலாளர்களை வேண்டிக் கொண்டது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஸ்தாபன அமைப்பு

தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரைத் தங்கள் தரப்புக்குக் கொண்டு வரும் பொருட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஸ்தாபன ரீதியில் தங்களை வலுப்படுத்திக் கொள்வது அவசியம்

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 231.

ஆயிற்று. கம்யூனிஸ்டுக் கட்சிகள் சமூக-ஜனநாயகக் கட்சிகளின் ஸ்தாபன வடிவங்களை மேற்கொள்வது இயலாததாக இருந்தது. கட்சி அமைப்புக்கு ஏற்ற புதிய கோட்பாடுகளை வகுப்பதும் அவற்றுக்குப் பொருத்தமான ஸ்தாபனக் கட்டமைப்பை முறைப் படுத்துவதும் தேவைப்பட்டன. இதன் தொடர்பாக, கட்சிகளின் ஸ்தாபனக் கட்டுமானம், வேலை முறைகள், அதன் உள்ளடக்கம் ஆகியவை பற்றிக் காங்கிரசில் விவாதிக்கப்பட்டது. வெகுஜனங் களிடையே கம்யூனிஸ்டுகள் அன்றாடம் வேலை செய்வது இன்றி யமையாதது என்றும், ஏனெனில் ''பெரிய, நடுத்தரத் தொழில் நிலையங்களில் வேலை செய்யும் பாட்டாளி வெகுஜனங்களுடன் கட்சி ஸ்தாபனங்கள் மிக நெருங்கிய தொடர்புகள் வைத்துக் கொள்ளாவிட்டால் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பெரிய வெகுஜனப் போராட்டங்களும் உண்மையில் புரட்சித் தன்மை கொண்ட இயக்கங்களும் நடத்துவது இயலாது''[1] என்றும் காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆய்வுரையில் கூறப்பட்டது. பிரதேச-உற்பத்திக் கோட்பாட்டின்படிக் கட்சிகளை மாற்றி அமைக்கும்படியும், ஆலை களிலும் தொழிற்சாலைகளிலும் மையக் குழுக்கள் ஏற்படுத்தும் படியும், வெகுஜன ஸ்தாபனங்களில் வேலை செய்யும் கம்யூனிஸ்டு களை ஒன்றிணைக்கும்படியும் பணி விதிக்கப்பட்டது. ஜனநாயக மத்தியத்துவம் உட்கட்சி வாழ்க்கையின் அடிப்படையாக விளங்க வேண்டும் என்று உறுதிப்படுத்தப்பட்டது.

ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதி வி. கியோனென், கம்யூனிஸ்டுக் கட்சிகளில் மத்தியத்துவத்தையும் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையும் ஒருங்கிசையும்படி இணைப்ப தன் இன்றியமையாமை குறித்து ஆய்வுரையின் முக்கியக் கருத்தை விளக்கி விவரித்தார். அவர் கூறினர்: ''... தங்களிடம் நடவடிக் கைகளின் மத்தியத்துவ அமைப்பு உண்மையில் இருக்கிறதா, அது சடங்கு முறையான மத்தியத்துவம் அல்லவா என்பதைக் கட்சிகள் கண்டிப்பாகக் கூர்ந்து கவனித்துவர வேண்டும். தொழிலாளி வெகுஜனங்களின் தலைமையை உண்மையில் மையப்படுத்த வகை செய்யும் பொருட்டு அவை தங்கள் அலுவலக அமைப்பை இடை யருது மேம்படுத்தவும் சோதித்துப் பார்க்கவும் வேண்டும். கட்சி மையத்துக்கும் எல்லாக் கட்சி உறுப்புக்களுக்கும் இடையே துடி

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 216.

யான தொடர்பு, அலுவலக அமைப்பைச் சடங்குமுறைக்கு உள்ளாகாமல் தவிர்ப்பதற்கான மிக நம்பகமான சாதனம் ஆகும்.''[1]

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஒற்றுமை பற்றிய பிரச்சினையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரஸ் பெருத்த கவனம் செலுத்தியது. கம்யூனிஸ்டு அகிலம், தேசியப் பிரிவுகளின் கூட்டு முயற்சியால் நிறுவப்பட்ட உலகக் கட்சி என்று சோதரக் கட்சிகள் கருதின. இவற்றில் ஒவ்வொன்றும் ஒன்றித்த சர்வதேச நிறுவனத்தின் சம உரிமை உள்ள பகுதியாக இருந்தது. மூன்றுவது அகிலத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒவ்வொரு பிரிவும் பொறுப்பு ஏற்றது. ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பிரேரித்த ஒரு தீர்மானத்துக்குக் காங்கிரஸ் ஒப்புதல் அளித்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் ''செயற்குழுவுடன் மிகத் துடியான நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்; அவை தங்கள் நாட்டின் சிறந்த பிரதிநிதிகளைச் செயற்குழுவுக்கு அனுப்புவதோடு, நம்பகமான தகவல்களைச் சோதித்துச் சரிபார்த்து, இடைவிடாமல் தொடர்ந்து செயற்குழுவுக்கு அளித்துக் கொண்டிருக்க வேண்டும்; அப்போதுதான் செயற்குழு, அசல் தஸ்தாவேஜுகளின் அடிப்படையிலும் நம்பகமான விவரங்களின் ஆதாரத்திலும் அவ்வப்போது எழும் அரசியல் பிரச்சினைகள் குறித்துத் தனது போக்கை வெளியிட முடியும்''[2] என்று இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டது. முக்கியமான மகாநாடுகளில் பரஸ்பரப் பிரதிநிதிகளை அனுப்புவதன் மூலமும், தலைமை அலுவலர்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலமும் பிரிவுகளுக்கிடையே ஸ்தாபனத் தொடர்பும் தகவல் தொடர்பும் நிலவ வேண்டும் என்றும் தீர்மானம் கூறியது. ''தலைமைச் சக்திகளின் இந்தப் பரிமாற்றம் உடனே தொடங்க வேண்டும், ஓரளவு செயல்திறன் கொண்ட பிரிவுகளின் நிலையான வழக்கம் ஆகி விட வேண்டும்.''[3]கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவை விரிவுபடுத்தி, எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் பிரதிநிதிகள் அதன்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது உலகக் காங்கிரஸ், பக்கம் 447.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசின் ஆய்வுரைகளும் தீர்மானங்களும். மாஸ்கோ, 1921, பக்கம் 55.

[3] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றுவது காங்கிரசின் ஆய்வுரைகளும் தீர்மானங்களும். பக்கம் 55.

உறுப்பினராக வகை செய்வது என்ற தீர்மானம் ஏற்கப்பட்டு, நடைமுறையில் செயல்படுத்தப்பட்டது.

1921, செப்டெம்பர் மாதம், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது சிறு தலைமைக் குழுவின் பெயர், தலைமைக் குழு என மாற்றப்பட்டது. 1921, டிசம்பரில் செயற்குழுவின் பொதுச் செயலாளர் பதவி ஏற்படுத்தப்பட்டது. ஒ. கூஸினன் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1922, டிசம்பரில் வ. கொலாரவ் பொதுச் செயலாளர் ஆனார்.

கம்யூனிஸ்டுகள் நெருக்கமாக ஒன்றிணைக்கப்படுவதும் எல்லோருக்கும் ஒரே மாதிரிக் கட்டுப்பாடு விதிக்கப்படுவதும் கட்சிகளதும் கம்யூனிஸ்டு அகிலத்தினதும் தீர்மானங்கள் கட்டாயமாகச் செயல்படுத்தப்படுவதும் அவசியம் என்று மூன்றாவது காங்கிரசின் பிரதிநிதிகள் வலியுறுத்தினார்கள். ஒன்றித்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகள் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிகளை 1921, ஜூலை 9ந் தேதி சந்தித்தார்கள். கட்சி கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தன் குறைகளை வெளிப்படுத்த அஞ்சக் கூடாது என்றும் இந்தச் சந்திப்பின் போது லெனின் கூறினார். நாம் நமது குறைகளை மூடி மறைத்தால் அது அபாயம் என்றார் அவர். அதே சமயம், உட்குழு நடவடிக்கைகள் எவற்றுக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று அவர் தீர்மானமாக வலியுறுத்தினார். கம்யூனிஸ்டுக் கட்சிகளதும் கம்யூனிஸ்டு அகிலத்தினதும் ஒற்றுமையை வலுப்படுத்தும்படி அவர் கேட்டுக்கொண்டார். "நாங்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் இங்கே இருக்கிறோம். கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்பவர்கள் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்"[1] என்றார் லெனின். மார்க்சிய-லெனினிய அடிப்படையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஒற்றுமை, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்தினதும் ஒற்றுமை தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்தினது வெற்றிக்கு உத்தரவாதம் ஆகும்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஒற்றுமை, கட்சிக் கட்டுப்பாடு, கம்யூனிஸ்டு அகிலத்தால் கூட்டாகத் தயாரித்து ஏற்கப்பட்ட முடிவுகள் அதில் சேர்ந்துள்ள எல்லாக் கட்சிகளாலும் கட்டாயம் செயல்படுத்தப்பட வேண்டும் என்பது, கட்சியின் முடிவுகளையும் கட்சி

---

[1] மை. ஆ. கூ., 2/1/25774/1.

ஸ்தாபனங்களின் முடிவுகளையும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என்பது ஆகியவற்றை மூன்றாவது காங்கிரஸ் வலியுறுத்தியது. கட்சிக் கட்டுப்பாட்டை மறுப்பதும் கட்சியினதும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தினதும் ஒன்றித்த கொள்கைப் போக்கை எதிர்ப்பதும் கட்சி உறுப்பினராய் இருப்பதற்குப் பொருத்தம் அற்றவை என்று காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. ''முன்னணியின் பொது ஒற்றுமையைப் பலவீனப்படுத்துவதோ சிதைப்பதோ கட்டுப்பாட்டைப் படு மோசமாக மீறுவதும் புரட்சிப் போராட்டத்தில் படு மோசமான தவறும் ஆகும்'' என்று காங்கிரஸ் தனது தீர்மானத்தில் குறித்தது. ''கம்யூனிஸத்தின் பகைவர்கள் அனைவரிடமிருந்தும் கம்யூனிஸ்டுக் கட்சியையும் முதன்மையாகக் கம்யூனிஸ்டு அகிலத்தையும் காப்பது கட்சியின் ஒவ்வொரு உறுப்பினனதும் தலையாய கடமை ஆகும். இதை மறப்பவன், அல்லது கட்சியையோ கம்யூனிஸ்டு அகிலத்தையோ வெளிப்படையாகத் தாக்குபவன் கட்சியின் பகைவனாக எண்ணப்பட வேண்டும்.''[1]

ஸ்தாபனப் பிரச்சினை பற்றிக் காங்கிரசால் ஏற்கப்பட்ட ஆய்வுரை அடிப்படையில் சரியானது என்றாலும் அதில் முக்கியமான குறையும் இருந்தது. இந்தத் தீர்மானம் ''மட்டுமீறிய ருஷ்யத் தன்மை கொண்டிருந்தது'' என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரசில் லெனின் குறிப்பிட்டார். இது ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் அனுபவத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது, வெவ்வேறு நாடுகளின் போராட்டத்தின் சிறப்பான நிலைமைகளையும் பணிகளையும் அது கருத்தில் கொள்ளவில்லை என்றார் அவர். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய நோக்கில் தனிவகைப்பட்ட வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதன் முக்கியத்தையும் இன்றியமையாமையையும் லெனின் கம்யூனிஸ்டுகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அனுபவத்தை அப்படியே இயந்திர ரீதியாகக் காப்பி அடிப்பது கூடாது என்றும், ஆழ்ந்து சிந்தித்து, சொந்த நாடுகளின் நிலைமைகளில் படைப்புத் தன்மையுடன் கையாள வேண்டும் என்றும் அவர் கூறினார். ''...இதை நாம் புரிந்து கொள்ளாவிட்டால் மேற்கொண்டு முன்

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 222.

செல்ல நம்மால் முடியாது. நம் அனைவருக்கும், ருஷ்யர்களுக்கும் சரி, அயல் நாட்டுத் தோழர்களுக்கும் சரி, எல்லாவற்றிலும் முக்கியமானது நாம்... கற்க வேண்டும் என்பதே என நான் நினைக்கிறேன்''[1] அயல் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் ''...ருஷ்ய அனுபவத்தின் ஒரு பகுதியை ஏற்க வேண்டும்... ருஷ்யர்களான நாங்களும் இந்தத் தீர்மானத்தின் அடிப்படைகளை அயல் நாட்டாருக்கு விளக்கி விவரிக்க வழிகள் தேட வேண்டும். இல்லாவிட்டால் இந்தத் தீர்மானத்தைச் செயல் படுத்த அவர்களால் அறவே முடியாது''[2] என்று லெனின் யோசனை கூறினார்.

மூன்றாவது காங்கிரசின் ஸ்தாபனப் பிரச்சினை குறித்த ஆய்வுரையில் இருந்த குறையைப் பிற்காலத்தில் ஓ. கூஸினென் குறிப்பிட்டார். ஆய்வுரையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பணிகள் தம் வரையில் சரியானவை, அவசியமானவை என்றார் அவர். ஆனால் அவை சரியாக விவரிக்கப்படவில்லை. ஒவ்வொரு தனி முதலாளித்துவ நாட்டின் நிலைமைகளுக்கும் ஒவ்வொரு கட்சியின் நோக்கங்களுக்கும் ஒரே அளவில் பொருந்தும் விதத்தில் அவை தவறாக விவரிக்கப்பட்டிருந்தன. எந்தப் பணிகள் முதலில் நிறைவேற்றப்பட வேண்டும், எவை இரண்டாவதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பது முறையாக நிச்சயிக்கப்படவில்லை. ஸ்தாபன வேலையில் பொதுவாக எந்த மாதிரிப் பணிகள் எதிர்ப்படக் கூடும் என்பது, ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு ஆய்வுரையில் வெறுமே சித்தாந்த ரீதியாக விவரிக்கப்பட்டிருந்தது. ''எனவே, சாராம்சத்தில் இந்தத் தீர்மானம், ஸ்தாபன அமைப்பை போல்ஷிவிஸமயமாக்கும் சித்தாந்தச் செயல் திட்டமாக இருந்தது. ஆயினும் இந்தத் தீர்மானம் நடைமுறை வழிகாட்டிக் குறிப்புக்கள் தருவதாகக் காட்டிக் கொண்டது. இதுதான் அதன் தவறு''[3] என்று ஓ. கூஸினென் பின்னர் எழுதினார்.

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *33*, பக்கம் *431*.

[2] அதே நூல், அதே பக்கம்.

[3] லெனினும் சர்வதேச தொழிலாளர் இயக்கமும். நினைவுக் குறிப்புக்கள். மாஸ்கோ, *1934*, பக்கம் *58*.

வெகுஜன ஸ்தாபனங்களில்
கம்யூனிஸ்டுகளின் வேலை
பற்றி மூன்றாவது காங்கிரஸ்.
காங்கிரசின் முக்கியத்துவம்

தொழிற்சங்கங்களிலும் கூட்டுறவுக் கழகங்களிலும் மாதர், இளைஞர் நிறுவனங்களிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலை பற்றிய பிரச்சினையை மூன்றாவது காங்கிரஸ் பரிசீலனை செய்தது. பழைய தொழிற்சங்கங்களைக் கலைத்துவிட்டுப் புதிய ''புரட்சிகரமான'' தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டும் என்று ''அதிதீவிர இடது சாரிப்'' பிரிவுவாதிகள் காங்கிரசில் கோரினார்கள். சீர்திருத்த வாதத் தொழிற்சங்கங்கள் ''முதலாளித்துவ அரசின் பகுதியாக, அதிலும் மிகவும் முக்கியமான பகுதியாக'' மாறிவிட்டன என்று ஜெர்மானியக் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் சார்பில் பேசிய ல. மேயர் (பெர்க்மன்) கூறினார். எனவே. ''கம்யூனிஸ்டு களின் கோஷம் தொழிற்சங்கங்களைத் தங்கள் தரப்புக்கு ஈர்ப்பது அல்ல, அவற்றை ஒழிப்பதும் அதே சமயம் புதிய ஸ்தாபனங்களை நிறுவுவதுமாக இருக்க வேண்டும்''[1] என்றார் அவர். காங்கிரஸ் பிரிவுவாதிகளின் வாதங்களை நிராகரித்துவிட்டது.''புதிய தொழிற் சங்கங்களை அமைக்காமல் பழையவற்றிலிருந்து வெளியேறி ஸ்தாபனம் அற்றவர்களாக இருப்பதில் மீட்சி கிடைக்காது என்றும் தொழிற்சங்கங்களைப் புரட்சிகரமாக மாற்றி, சீர்திருத்தவாத உணர்வையும் துரோகிகளான சீர்திருத்தவாதத் தலைவர்களையும் அவற்றிலிருந்து அகற்றி, அவற்றைப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான அரண் ஆக்கினால்தான் மீள முடியும் என்றும் எல்லாப் பாட்டாளிகளுக்கும் விளக்கும்படி''[2] காங்கிரஸ் கம்யூனிஸ்டுகளைக் கேட்டுக் கொண்டது. ஒரு கம்யூனிஸ்டுக் கட்சியின் பலத்தைக் காட்டும் சிறந்த பிரமாணம், தொழில் முறையில் ஒழுங் கமைக்கப்பட்ட தொழிலாளி வெகுஜனங்கள் மீது அதற்கு உள்ள எதார்த்தமான செல்வாக்குதான். தொழிற்சங்கங்களை அரவணைக் கும் அற்ப விருப்பத்தைக் காட்டிக்கொள்ளாமல் அவற்றின் மீது செல்வாக்கு செலுத்தக் கட்சி வல்லதாய் இருக்க வேண்டும்.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது உலகக் காங்கிரஸ், பக் கங்கள் 343-345.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 235.

தொழிற்சங்கங்கள் அரசியல் போராட்டத்தில் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்ற கருத்தைச் சீர்திருத்தவாதிகள் பரப்பி வந்தார்கள். இதன் உதவியால் தொழிற்சங்கங்களைப் புரட்சிப் போராட்டத்தில் சேராமல் தடுக்க அவர்கள் முயன்றார்கள். காங்கிரஸ் இந்தக் கருத்தைத் தீவிரமாக எதிர்த்தது. தொழிற் சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலம் தொழிலாளி வர்க்கத்தில் சர்வ தேச மூலதனத்தின் முக்கிய அரண் என்றுகூறி அதையும் தொழிற் சங்கங்களைப் பிளவுபடுத்தும் சீர்திருத்தவாதிகளின் செயலையும் எதிர்த்துப் போராடும் பணி காங்கிரசின் ஆய்வுரையில் விதிக்கப் பட்டது.

தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகளின் பணிகள் பற்றிக் கம் யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில் விவாதம் நடந்த சமயத்தில் புரட்சிகரத் தொழிற்சங்கங்கள், உற்பத்திச் சங்கங் களின் முதலாவது சர்வதேசக் காங்கிரஸ் ஜூலை 3 முதல் 19ந் தேதிவரை மாஸ்கோவில் நடந்தது. தொழிற்சங்கக் காங்கிரசுக்கு அனுப்பிய வரவேற்புச் செய்தியில் லெனின் பின்வருமாறு எழுதி யிருந்தார்: "தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களைக் கம்யூனிஸக் குறிக்கோள்களின் ஆதரவாளர்கள் ஆக்கும் பணி எல்லா நாடுகளி லும், உலகம் முழுவதிலும், எங்கும் தடுக்க இயலாதபடி முன்னேறி வருகிறது. சரியின்றி, ஒழுங்கு இல்லாமல், ஒரு சீராக இன்றி, ஆயி ரம் தடைகளைக் கடந்து முன்னேறுகிறது, ஆனால் தடுக்கமுடியாத வாறு முன்னேறி வருகிறது. தொழிற்சங்கங்களின் சர்வதேசக் காங்கிரஸ் இந்த இயக்கத்தை விரைவுபடுத்தும். கம்யூனிஸம் தொழிற்சங்கங்களில் வெற்றி பெறும். முதலாளித்துவத்தின் படு தோல்வியையும் பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது தொழிலாளி வர்க்கத் தின் வெற்றியையும் உலகில் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது."[1] அந்தக் காலத்திற்குள் அனேக நாடுகளில் சுயேச்சையான புரட்சி கரத் தொழிற்சங்கங்கள் இருந்தன. அவற்றை ஒன்றிணைப்பது இன்றியமையாதது ஆயிற்று. காங்கிரசுக்கான முன்னேற்பாடுகளை சர்வதேசத் தொழிற்சங்கங்களின் சபை செய்தது. இது 1920, ஜூலை மாதம் மாஸ்கோவில் ஏற்படுத்தப்பட்டு, தொழிற்சங்கங் களின் புரட்சிகர வர்க்கப் போராட்டம் பற்றிய கருத்தைப் பரப்பி வந்தது.

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 501.

ஒன்றித்த போராட்ட ஸ்தாபனத்தையும் சிவப்புத் தொழிற் சங்க அகிலம் (தொழிற்சங்க அகிலம்) என்னும் ஒன்றித்த சர்வ தேசத் தலைமை மையத்தையும் அமைப்பது, உலகு அனைத்திலும் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தின் முன்னணிப் படையான கம்யூனிஸ்டு அகிலத்துடன் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுத்து வது என்று தொழிற்சங்கக் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றி யது. புரட்சிகரத் தொழிலாளர்கள் பழைய சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்கள்பால் கடைப்பிடிக்க வேண்டிய போக்குபற்றிக் குறிப்பிடுகையில், இவற்றில் இருந்து கொண்டே இவற்றைப் புரட்சிப் போராட்டத்தின் தரப்புக்கு இட்டுவருவது இன்றியமை யாதது என்றும் தனித் தனியான, சிதறிய தொழிற்சங்கக் குழுக் களை அமைப்பது அவசியம் இல்லை என்றும் காங்கிரஸ் அறிவுரைத் தது. ''சங்கங்களைத் தகர்ப்பது அல்ல, ஆனால் சங்கங்களை, அதாவது பழைய சங்கங்களில் இருக்கும் லட்சோபலட்சம் வெகுஜனங்களை, நம் கொள்கைக்கு ஈர்ப்பது என்ற நோக்கத்துடனேயே புரட்சிப் போராட்டம் இயங்கி உருவாக வேண்டும்''[1] என்று காங்கிரசின் தீர்மானம் கூறியது.

சிவப்புத் தொழிற்சங்க அகிலத்தின் மத்திய ஆலோசனை சபை யைக் காங்கிரஸ் தேர்ந்தெடுத்தது. தொழிற்சங்க அகிலத்தின் பொதுச் செயலாளராக ஸ.அ. லஸோவ்ஸ்கி தேர்ந்தெடுக்கப்பட் டார். ஆம்ஸ்டர்டாம் அகிலத்தில் சேராத தொழிற்சங்க மையங் களையும் தொழிற்சங்களையும் தொழிற்சங்க அகிலம் ஒன்றிணைத் தது. இவையாவன: தொழிற்சங்கங்களின் அகில ருஷ்ய மத்திய சபையும் (சோவியத் தொழிற்சங்கங்கள்), அயர்லாந்து ஆஸ்தி ரேலியா, இந்தோனீசியா, உருகுவாய், எஸ்தோனியா, கானடா, கொரியா, கொலம்பியா, சிலி, சீனா, செக்கோஸ்லோவாக்கியா, ஹாலந்து, பல்கேரியா, பாரசீகம், பிரான்ஸ், பெரு, பெல்ஜியம், மங்கோலியா, லித்துவானியா ஆகிய நாடுகளின் தேசியப் புரட்சி கரத் தொழிற்சங்க மையங்கள், அனேக முதலாளித்துவ நாடு களைச் சேர்ந்த சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களுக்குள் இருந்த எதிர்த்தரப்புக் குழுக்கள், போக்குக்கள் ஆகியவை. தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளை ஆதரித்தும், மூலதனத்தினதும்

---

[1] புரட்சிகரத் தொழிற்சங்கங்கள் உற்பத்திச் சங்கங்களின் சர்வதேசக் காங்கிரஸ். சுருக்கெழுத்து விவரம். மாஸ்கோ, 1921. சுருக்கெழுத்து விவரத்தின் பின்னிணைப்பு, பக்கம் 15.

பாசிஸத்தினதும் தாக்குதலை எதிர்த்தும், ஏகாதிபத்திய யுத்த அபாயத்திற்கு எதிராகவும் சோவியத் நாட்டின் தொழிலாளி வர்க்கத்துடன் நெருங்கிய உறவுகள் ஏற்படுத்துவதற்காகவும் புரட்சிகரப் போராட்டம் நடத்துவதன் அடிப்படையில் தொழிற் சங்க இயக்கத்தின் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்குக் காங்கிரஸ் ஊக்கத்துடன் ஆதரவு அளித்தது.

கூட்டுறவுக் கழகங்களிலும் மாதர்கள், இளைஞர்கள் இடையி லும் கம்யூனிஸ்டுகளின் வேலை பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானங்களில், உழைப் பாளிகளின் பல்வேறு வெகுஜன ஸ்தாபனங்கள் தொழிலாளி வர்க் கத்தின் போராட்டத்தில் மேலும் மேலும் ஊக்கத்துடன் ஈடுபடு மாறு செய்வதன் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது. இளம் தலைமுறையினரைக் கம்யூனிஸ உணர்வில் பயிற்றிப் போதிப்பதும் இளங்கம்யூனிஸ்டுகளின் நிறுவனங்களைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சேம நிலையங்களாகவும் துணைவர்களாகவும் மாற்றுவதும் இளங் கம்யூனிஸ்டு அகிலம், தனித் தனி நாடுகளில் உள்ள இளங் கம்யூனி ஸ்டுகள் சங்கங்கள் ஆகியவற்றின் மிக முக்கியப் பணி யாகும் என்று இந்தத் தீர்மானங்கள் கூறின.

மூன்றாவது காங்கிரஸ் கூடியதற்குச் சற்று முன்னால், ஜூன் 9 முதல் 15ந் தேதிவரை கம்யூனிஸ்டு மாதர்களின் இரண்டாவது சர்வதேச மகாநாடு மாஸ்கோவில் நடந்தது. இருபத்தெட்டு நாடு களைச் சேர்ந்த எண்பத்திரண்டு பிரதிநிதி மாதர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். மாதர்களுக்கிடையே கம்யூனிஸ்டு வேலை யின் வடிவங்களையும் முறைகளையும் பற்றியும் சர்வதேச மாதர் செயலகத்தின் பணிகளைப் பற்றியும் மகாநாடு கலந்தாலோசித் தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ், மாதர் மகாநாட்டுத் தீர்மானங்களுக்கு ஒப்புதல் தந்தது. தொழிலாளி மாதரிடையே வேலையைத் தீவிரப்படுத்தும்படி அது கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கேட்டுக் கொண்டது. ''பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை வென்று பெறுவதும் பூர்ஷ்வா வர்க்க நுகத்தை உடைத்து எறிந்துவிட்ட நாட்டில் கம்யூனிஸத்தைச் செயல்படுத்து வதும் பாட்டாளி, அரைப்பாட்டாளி மாதரின் விரிவான வெகு ஜனங்கள் துடியாகப் பங்கு கொள்ளாவிட்டால் சாத்தியம் ஆகாது''[1] என்று அது கூறியது.

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 243.

கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரஸ், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்றில் முக்கியக் கட்டமாகத் திகழ்ந்தது. புரட்சிப் போராட்டத்தின் நடைமுறை அனுபவத்தையும் மாறிய புதிய நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, புரட்சி அலை தணிந்துள்ள சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகள் எப்படி மேற்கொண்டு வேலை செய்ய வேண்டும் என்பதைக் காங்கிரஸ் திட்டப்படுத்தியது. பெரும்பாலான தொழிலாளி வர்க்கத்தினரையும் உழைப்பாளி வெகுஜனங்களையும் தங்கள் தரப்புக்குக் கொண்டுவருவதற்காகவும் வருங்காலப் புரட்சிப் போராட்டங்களுக்கு முன்னிலும் விரிவான முன்னேற்பாடுகள் செய்வதற்காகவும் முயல்வதில் கம்யூனிஸ்டுகளுடைய கவனத்தை ஈடுபடுத்தியது.

''இடதுசாரிப்'' பிரிவுவாதிகள் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் திணிக்க முயன்ற மிக மிகத் தீங்கான கொள்கையை லெனினது தலைமையில் காங்கிரஸ் அறவே நிராகரித்து விட்டது. ''இடதுசாரியினர்'' கம்யூனிஸ்டுக் கட்சிகளைப் ''புரட்சிகர'' துர்ச்சாகசத்தின் ஆபத்தான பாதையில் தள்ளவும், தருணத்துக்கு முந்திய, முன்னேற்பாடுகள் இல்லாத கலகக் கிளர்ச்சிகளில் ஈடுபடுத்தவும் முயன்றார்கள். இவை பாட்டாளி வர்க்கத்தைப் படுதோல்விகளில் வீழ்த்தி இருக்கும். சோதரக் கம்யூனிஸ்டுக் கட்சிகளைச் சேர்ந்த அறிவு முதிர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன் சரியான செயல்தந்திரப் போக்கை—வெகுஜனங்களுக்காகப் போராடும் போக்கை—லெனின் திட்டமிட்டுக் காங்கிரசில் கடைப்பிடித்தார்.

மூன்ருவது காங்கிரசின் நடவடிக்கைகள் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு உண்மையான பயிற்சிப் பள்ளியாக விளங்கின. பரஸ்பர அனுபவப் பரிமாற்றம், கட்சிகளுடைய வேலை முறைகளையும் பணிகளையும் பற்றிய கலந்தாலோசனை ஆகியவற்றின் அடிப்படையில் காங்கிரஸ் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரத்திற்கும் செயல்தந்திரத்திற்கும் வளம் கூட்டுவதில் முக்கியப் பங்கு ஆற்றியது. தொழிலாளி வர்க்கத்தின் உடனடி நலன்களுக்கான கூட்டுப் போராட்டத்தில் அதன் எல்லாப் படைப்பிரிவுகளையும் ஸ்தாபனங்களையும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஈடுபடுத்த வேண்டும், உழைப்பாளிகளின் அன்ருடப் பொருளாதார நலன்களை அவை காக்க வேண்டும், ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்துப் போராட வேண்டும், அதே சமயம் வெகுஜனங்களைப் புதிய புரட்சிப் போராட்டங்களுக்கு ஆயத்தம் செய்ய

வேண்டும் என்பதே காங்கிரஸ் செய்த முடிவு. ''தொழிலாளி வெகு ஜனங்களின் அடிப்படையான வாழ்க்கைத் தேவைகளுக்காகப் போராடுவதன் மூலமே நாம் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராக ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணி அமைப்பது சாத்திய மாகும். பூர்ஷ்வா வர்க்கம் மேற்கொண்டு நிலவுவதை எளிதாக்கும் பாட்டாளி வர்க்கப் பிளவுக்கு முடிவு கட்டுவது அப்போது தான் நமக்கு இயலும்''[1] என்று காங்கிரஸ் முடிந்தபின் செயற்குழு வெளியிட்ட செய்தி கூறியது.

கட்சியையும் சோவியத் அரசையும் தலைமை வகித்து நடத்துவதில் பெரிதும் ஈடுபட்டிருந்தாலும் லெனின் அயல் நாடுகளிலிருந்து மாஸ்கோவுக்கு வந்த கம்யூனிஸ்டுகளை எப்போதும் சந்தித்து அவர்களுடன் உரையாடினார். தொழிலாளி வெகுஜனங்களின் வேலை நிலைமைகளையும் வாழ்க்கை நிலைமைகளையும் அவர்களுடைய மனப் பாங்கையும் பற்றி விவரமாகக் கேட்டு அறிந்தார். இதன் மூலம் உழைப்பாளி வெகுஜனங்களின் வாழ்க்கையுடனும் போராட்டத் துடனும் இடையறாத நெருங்கிய தொடர்பு கொள்வது லெனினுக்கு இயன்றது. தொழிலாளர்களின் மனப்பாங்கை நன்கு உணரவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்தந்திரத்தைச் சரியாகத் தீர்மானிக்கவும் இது அவருக்கு உதவியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதியாக இருந்த டி. பெல்லை 1921, ஆகஸ்டு மாதத் தொடக்கத்தில் லெனின் சந்தித்தார். ''தொழிற்சங்கங்களையும் தொழிற்கட்சியையும் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் அவற்றின் ஒப்பு வலிமையையும் செல்வாக்கையும் பற்றியும், எங்கள் கம்யூனிஸ்டுக் கட்சியையும் அதன் உறுப்பினர்களையும் தொழிலாளர்களிடையே அதன் செல்வாக்கையும் பற்றியும் நாங்கள் உரையாடினோம்''[2] என்று நினைவுகூர்ந்தார் டி. பெல். பிரிட்டனில் சுரங்க முதலாளிகள் சம்பளக் குறைவை அறிவித்திருந்தார்கள். இதற்கு எதிராக 1921, ஏப்ரல் முதல் ஜூன் வரை சுரங்கத் தொழிலாளர்கள் விடாப்பிடியான போராட்டம் நடத்தினார்கள். வேலை நிறுத்தத்தில் பத்து லட்சத்துக்கும் மேல் சுரங்கத்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசின் ஆய்வுரைகளும் தீர்மானங்களும், பக்கம் 93.

[2] லெனினைப் பற்றி. சமகால அயல் நாட்டினரின் நினைவுக் குறிப்புகள், பக்கம் 384.

தொழிலாளர்கள் பங்கு கொண்டார்கள். தொழிற்சங்கங்களின் சீர்திருத்தவாதித் தலைவர்கள், சுரங்கத் தொழிலாளர்களுடன் ஒருமைப்பாட்டைக் காட்டுவதற்கான பொது வேலை நிறுத்தத்தை முறித்துத் துரோகம் செய்துவிட்டதன் விளைவாகச் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தோல்வி அடைந்தது. சுரங்கத் தொழிலாளர்களின் இயக்கம் பற்றியும் அவர்களுடைய மன நிலை பற்றியும் கம்யூனிஸ்டுகள் அவர்களிடையே செய்யும் வேலை பற்றியும் லெனின் டி. பெல்லிடம் விவரமாக விசாரித்து அறிந்தார்.

சில நாட்கள் கழித்து டி. பெல் லெனினுக்கு ஒரு கடிதம் எழுதினார். தெற்கு வேல்ஸின் சுரங்கத் தொழிலாளர்களுடைய அடுத்த காங்கிரஸ் பற்றியும் மூன்றாவது அகிலத்தில் சேர்வதாக அவர்கள் முடிவு செய்திருப்பது பற்றியும் அதில் தகவல் தெரிவித்திருந்தார். வேலைநிறுத்தத்தை அடக்குவதற்காக நிலக்கரிப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட கடற்படை வீரர்களின் செயல் பற்றியும் தொழிலாளர்களும் கடற்படையினரும் சோதரப் பாங்குடன் பழகியது பற்றியும் விவரங்கள் டி. பெல்லின் கடிதத்தில் தரப்பட்டிருந்தன.

லெனின் தமது பதில் கடிதத்தில் தெற்கு வேல்ஸ் சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டத்தை உயர்வாக மதிப்பிட்டார். "...இது **கம்யூனிஸ்டு அர்த்தத்தில்** பிரிட்டனில் உண்மையான பாட்டாளி வர்க்க வெகுஜன இயக்கத்தின் **தொடக்கமாக"** இருக்கலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஏனெனில் அதுவரை அங்கே "...உண்மையில் வெகுஜனத் தன்மை கொண்ட கம்யூனிஸ்டு இயக்கம்"[1] இருக்கவில்லை. பிரிட்டிஷ் முதலாளிகள் தந்திரசாலிகள், மூளை உள்ளவர்கள், வஞ்சகர்கள். தொழிலாளர்களின் கவனத்தை அரசியல் குறிக்கோள்களிலிருந்து திருப்பும் பொருட்டு எல்லா விதமான பொருளாதார நடவடிக்கைகளையும் (சமூகச் சமையலறைகள் போன்றவற்றை) அவர்கள் ஆதரிப்பார்கள் என்றார் லெனின். பின்வருவனவற்றை அவர் முக்கியப் பணிகளாக விதித்தார்:

"1) பிரிட்டனின் இந்தப் பகுதியில் மிக நல்ல, உண்மையில் பாட்டாளி வர்க்கத்தினுடைய, உண்மையில் வெகுஜனத்தன்மை கொண்ட **கம்யூனிஸ்டுக் கட்சியை,** அதாவது பிரிட்டனின் இந்தப்

[1] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 510.

பகுதியில் தொழிலாளர் இயக்கம் அனைத்திலும் தலைமை வகிக்கும் சக்தியாக எதார்த்தத்தில் விளங்கக் கூடிய கட்சியை அமைப்பது (கட்சி அமைப்பையும் வேலையையும் பற்றி மூன்றுவது காங்கிர சால் ஏற்கப்பட்ட தீர்மானத்தை உங்கள் நாட்டின் இந்தப் பகுதி யில் செயல்படுத்துவது).

''2) பிரிட்டனின் இந்தப் பகுதியில் உள்ள தொழிலாளி வர்க் கத்துக்காகத் தொழிலாளர் தினசரிச் செய்தித்தாளை வெளியிடத் தொங்குவது.''[1] தொழிலாளர்களின் ஆதரவுடனும் அவர் களுடைய பணத்தைக் கொண்டும் செய்தித்தாள் வெளியீட்டை எப்படி ஒழுங்கமைப்பது, இந்தக் காரியத்தை''...வெகுஜனங் களுடைய போராட்டத்தில் அவர்களது பொருளாதார, அரசியல் ஆயுதமாக''[2] எப்படி மாற்றுவது என்பதை லெனின் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு விவரமாக விளக்கினார்.

பிரிட்டிஷ் தொழிலாளர்களிடையே சோவியத் ருஷ்யாமீது பற்றுதல் விரிவாக இருந்தது என்றாலும் புரட்சி மனப்பான்மை தொழிலாளி வெகுஜனங்களுக்கு இன்னும் ஏற்படவில்லை என்பதை லெனின் புரிந்து கொண்டிருந்தார். எனவேதான் வெகுஜனங் களைத் தன்னைச் சுற்றி ஒன்றுதிரட்டக் கூடிய செய்தித்தாள் தொடங்கும்படி அவர் யோசனை கூறினார். ஆனால் அக்காலத்தில் லெனினுடைய இந்த யோசனையைக் கடைப்பிடிக்க பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளால் முடியவில்லை. 1930ல் தான் ''டெய்லி வொர்க்கர்'' என்ற தினசரி வெளியாகத் தொடங்கியது.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளின் செயல்களை லெனின் கூர்ந்து கவனித்து வந்தார். போல்ஷிவிக்குகளின் அனுபவத்தைக் கற்றுத் தேர்வதற்கு அவர்களுக்கு உதவ வேண்டும் என்று அவர் எழுதி னார். 1921, செப்டெம்பர் 8ந் தேதி யா. பேர்ஸினுக்கு எழுதிய கடிதத்தில் அவர் பின்வருமாறு யோசனை கூறினார்:''போல்ஷிவிக்கு கள் வேலை செய்தது போல வேலை செய்வதற்கு பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்குக் கற்பிக்க வேண்டும், கற்பிக்க வேண்டும், கற்பிக்க வேண்டும். கட்டுரைகள் வாயிலாகக் கற்பிக்க வேண்டும், கட்டாயமாகப் பகிரங்கமாக, கட்டாயமாகப் பத்திரிகைகள் வாயிலாகக் கற்பிக்க வேண்டும்.''[3]

---

[1] வி.இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 32, பக்கம் 510.
[2] அதே நூல், பக்கம் 511.
[3] மை. ஆ.கூ., 2/1/24694/1.

இத்தாலியக் கம்யூனிஸ்டுகளுக்குக் கட்டாயம் உதவ வேண்டும் என்று அதே தினம் வ. வரோவ்ஸ்கிக்கு எழுதினார் லெனின்: ''...போல்ஷிவிக்குகள் வேலை செய்தது போல வேலை செய்வதற்கு அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும், கற்பிக்க வேண்டும், கற்பிக்க வேண்டும். கட்டாயம் கட்டுரைகள் வாயிலாக, கட்டாயம் பத்திரிகைகள் மூலம் கற்பிக்க வேண்டும்''.[1] இந்த நாடுகளில் வெளியான மிக முக்கியக் கட்டுரைகளையும் பிரசுரங்களையும் புத்தகங்களையும் தமக்கு அனுப்பும்படி லெனின் இடைவிடாமல் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தார்.

முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் தொழிலாளர் இயக்கம் பற்றிய தகவல்களை விரிவுபடுத்துவது இன்றியமையாதது என்று லெனின் கருதினார். இந்த விஷயம் பற்றிய மெய்விவரங்களைத் திரட்டும் பொருட்டு ஜெர்மனியில் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்று அவர் யோசனை கூறினார். இந்த அலுவலகத்தின் பணிகளையும் வேலை முறையையும் அவர் விவரமாகக் குறித்தார். ''நமக்குத் தேவையானவை முழுமையான உண்மைத் தகவல்கள்'' என்று எழுதினார் லெனின். ''உண்மை யாருக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதைச் சார்ந்திருக்கக் கூடாது.''[2] பெர்லினில் புள்ளிவிவர-தகவல் நிலையம் அமைப்பது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைமைக்குழு 1921, செப்டெம்பர் 6ந் தேதி செய்த முடிவு லெனினுடைய யோசனைகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. எ. வார்கா இந்த நிலையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கம்யூனிஸ்டுகள் தங்கள் செயல்களின் கோட்பாட்டுரீதியான புரட்சித் தன்மையைக் கைவிடாமல் சமயத்துக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளும் கலையில் தேர்ச்சி பெறுவது இன்றியமையாதது என்று லெனின் இடைவிடாமல் வலியுறுத்தினார். ''...வளைந்து கொடுக்கும் தன்மை, மாறிவிட்ட எதார்த்த நிலைமையைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு விரைவாகவும் அடியோடும் தங்கள் செயல் தந்திரத்தை மாற்றிக் கொள்ளும் திறமை, முந்திய பாதை குறித்த காலப் பகுதியில் பொருத்தம் அற்றதாக, அசாத்தியமாக இருந்தால் நமது குறிக்கோளை அடைவதற்கு வேறு பாதையைத் தெரிந்

---

[1] மை. ஆ.கூ., *2/1/24693/1.*

[2] **வி.இ. லெனின்.** *முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 339.*

தெடுத்துக் கொள்வது''[1] ஆகியவற்றை அவர் கம்யூனிஸ்டுகளுக்குக் கற்பித்தார். கம்யூனிஸ்டுகள் அவசரப்படக் கூடாது, புரட்சி அலை முழுவதும் எழுவதற்கு முன் நடைமுறைச் செயல்கள் தொடங்கக் கூடாது என்று அவர் எச்சரித்தார். கனி நன்கு முதிர்ந்து பழுக்கும் வரை புரட்சியை வளர்ப்பது அவசியம் என்று அவர் கூறினார். புரட்சியை நசுக்கும் நோக்கத்துடன் தருணத்துக்கு முந்திய எழுச்சியைத் தூண்டிவிட பூர்ஷ்வா வர்க்கம் முயலும். கம்யூனிஸ்டுகள் இந்தத் தூண்டுதலுக்கு ஆளாகக் கூடாது. ''பூர்ஷ்வா வர்க்கம் 100-300 மனிதர்களைக் கொன்றால் அதனால் இயக்கம் மடிந்து விடாது'' என்று 1921, அக்டோபர் 19ந் தேதி போலந்துக் கம்யூனிஸ்டுகளுக்கு எழுதினார் லெனின். ''ஆனால் படுகொலையைத் தூண்டிவிட்டு 10-30 ஆயிரம் தொழிலாளர்களைக் கொல்ல அதனால் முடிந்தால், இந்த நிகழ்ச்சி புரட்சியைச் சில ஆண்டுகளுக்குக் கூடத் தவக்கப்படுத்தக் கூடும்.''[2] எனவே கம்யூனிஸ்டுகள் தாங்கு திறனையும் பொறுமையையும் சமயோசித சாமர்த்தியத்தையும் முன்யோசனையையும் புரட்சி அலை முழு ஏற்றம் பெறும் வரை காத்திருந்து, அன்றாட வர்க்கப் போராட்டங்களில் பாட்டாளி வர்க்க முன்னணிப் பிரிவை அதற்கு ஆயத்தம் செய்யும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று லெனின் கற்பித்தார்.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி நிலப் பிரச்சினை குறித்து வெளியிட்ட ஆய்வுரையைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக் குழு வேண்டிக்கொண்டதன் பேரில் லெனின் படித்தார். 1921, டிசம்பர் 11ந் தேதி ஒரு தனிக் கட்டுரையில் இந்த ஆய்வுரையின் முக்கியக் கருத்துக்களை அவர் ஆழ்ந்து பகுத்தாராய்ந்தார். மொத்தத்தில் அவை சரியானவை என அவர் மதிப்பிட்டார். நிலப் பிரச்சினை பற்றிய தெளிவான செயல்திட்டம் வகுக்க பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளுக்கு லெனின் உதவினார். புரட்சியின் வெற்றிக்குப்பிறகு விவசாயிகள் தாமாகவே விரும்பி விவசாயத்தைச் சமூகப் பாங்கில் அமைக்க ஏற்றவையும் அதே சமயம் மிகப் பெரும்பாலரான நாட்டுப்புற வாசிகள், கூலித் தொழிலாளர்கள், சிறு நில விவசாயிகள் ஆகியோரது

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 58.

[2] அதே நூல், தொகுதி 42, பக்கம் 354.

நிலையை உடனடியாக மேம்படுத்தக் கூடியவையுமான ''இடைக் கால நடவடிக்கைகள் கொண்ட செயல்திட்டத்தை'' அமைப்பதில் சிறப்பாகக் கவனம் செலுத்தும்படி அவர் அவர்களுக்கு யோசனை கூறினர். தங்கள் நிலத்தைத் தாங்களே பண்படுத்தும் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குத் தங்கள் நிலத்தை நிரந்தரமாகவும் (மரபு வழியிலும்) பெற்றுப் பயன்படுத்தும் உரிமையை நிபந்தனையின்றி உறுதிப்படுத்துவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினர். ''சிறு நில விவசாயிகளின் பண்ணைகள் விஷயத்தில் (பிரான்சில் மட்டும் அல்ல, சிறு நில விவசாயிகளின் பண்ணைகள் இருக்கும் எல்லா நாடுகளிலுமே) முழுமையான கம்யூனிஸத்தை... உடனடியாகக் கடைப் பிடிப்பது ஆழ்ந்த தவறு ஆகும்.''[1]

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கொள்கையையும் உழைக்கும் விவசாயிகளிடையே நிலவும் மருட்சியையும்—சாத்துவிகக் கொள் கைவாதத்தையும்—முன்னிலும் தீவிரமாகக் கண்டனம் செய்வது அவசியம் என்று லெனின் கருதினர். 1789ம் ஆண்டு நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி மரபுகளையும் பிரெஞ்சு மக்களின் விடுதலைப் போராட்ட மரபுகளையும் அதிகமாகச் சார்ந்திருக்கும் படி அவர் கட்சியைக் கேட்டுக் கொண்டார்.

தொடங்கியுள்ள காலக்கட்டத்தில் யுத்தத்தின் தன்மை பற்றிய வரையறுப்பை இந்தக் கட்டுரையில் லெனின் விரிவுபடுத்தினர். ''பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒன்றுதான் பொதுவாக எல்லா யுத்தங்களுக்குமே முடிவு கட்ட வல்லது என்பதில் சந்தேகம் இல்லை. சந்தேகமின்றி அது இவற்றுக்கு முடிவு கட்டிவிடும்'' என்று எழுதினர் லெனின். ''ஆனல் ஒரு நாட்டில், உதாரணமாக பிரான்சில் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிகரமான புரட்சி எல்லா வகைப் போர்களையும் உடனே கட்டாயமாக ஒழித்துவிடும் என்று எண்ணுவது சாத்துவிகவாத மருட்சி ஆகும்.''[2] ஏகாதிபத்திய யுத்தங்கள் வேறு, புரட்சிப் போர்களும் விடுதலைப் போர்களும் வேறு என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம் என்று அவர் கூறினர். ''பிற்போக்கு யுத்தங்களும் சிறப்பாக ஏகாதிபத்திய யுத்தங்களும் எந்த அளவுக்கு குற்றத் தன்மை கொண்டவையும் அழிவு விளைப் பவையுமோ அந்த அளவுக்குச் சட்ட பூர்வமானவையும் நியாய

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 135.

[2] அதே நூல், பக்கம் 132.

மானவையும் ஆகும் புரட்சிப் போர்கள், அதாவது, முதலாளிகளுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைக் காக்கும் போர்கள், விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய ஒரு சில நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளால் ஒடுக்கப்படும் மக்களைக் காப்பதற்காக ஒடுக்குவோருக்கு எதிராக நடக்கும் போர்கள், வெளிநாட்டினரின் படையெடுப்பிலிருந்து சோஷலிஸப் புரட்சியைக் காப்பதற்கான யுத்தங்கள்.''[1]

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் பற்றிய பிரச்சினைகளை லெனின் முறைப்படுத்தினர். பாட்டாளிகள் அல்லாத வெகுஜனங்களுடன் விரிவான ஐக்கியங்கள் ஏற்படுத்தும் கொள்கையைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் ஏகாதிபத்தியத்துடன் போராடுவதில் அக்கறை கொண்ட எல்லா சமூகச் சக்திகளையும் ஒன்றித்த கூட்டணியாக ஒருங்கு சேர்க்க வேண்டும் என்றும் லெனின் இடைவிடாது வற்புறுத்தினர்.

---

[1] வி. இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 132.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக்கான போராட்டம்

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியின் செயல்தந்திரம் வகுக்கப்படுதல்

மூன்றுவது காங்கிரசால் வகுக்கப்பட்ட ஒன்றித்த கூட்டணி பற்றிய செயல்தந்திரம் கடைப்பிடிக்கப்பட்டதும் "வெகுஜனங்களிடம்!" என்ற கோஷம் செயல்படுத்தப்பட்டதும் பெரும்பான்மையான தொழிலாளி வர்க்கத்தினரையும் பெரும்பான்மையான உழைப்பாளிகளையும் தங்கள் தரப்புக்கு ஈர்க்கக் கம்யூனிஸ்டுகளுக்கு வாய்ப்பு அளித்தன. உழைப்பாளிகளின் அத்தியாவசியமான உடனடிக் கோரிக்கைகளை ஆதரித்துப் போராடுவது இவ்விஷயத்தில் முதன்மை முக்கியத்துவம் கொண்டிருந்தது; ஏனெனில் இந்த அன்றாடப் போராட்டத்துக்குத் தலைமை ஏற்று நடத்துவதன் மூலமே கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களைத் தங்கள் பக்கம் ஈர்க்க முடிந்தது. 1921, ஆகஸ்டு 1ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு விசேஷ வேண்டுகோள் விடுத்தது. அதில் பின்வருமாறு கூறப்பட்டது: "முதலாளித்துவத்தின் தாக்குதல்களிலிருந்து தற்காப்பின் பொருட்டு எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளி வெகுஜனங்களை ஒன்றிணைக்கும் முயற்சி, ஒன்றிணைந்த தொழிலாளி வெகுஜனங்களின் தலைமையில் அவர்களுடைய விடுதலைக்கான போராட்டம்—இதுவே நமது பணி. இதை நிறைவேற்றுவதன் வாயிலாக, பாட்டாளி வர்க்கத்தை பூர்ஷ்வா வர்க்கத்தின் செல்வாக்கிலிருந்து விடுவிக்கவும் அதை ஒன்று சேர்த்து ஒரு சக்தியாக பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிர்நிறுத்தவும் **திறன் கொண்ட உயிரோட்டம் உள்ள ஒரே அகிலமான** கம்யூனிஸ்டு அகிலத்தைச் சுற்றி வெகுஜனங்களை நாம் ஒற்றுமையாகத் திரட்டுவோம்."[1]

---

[1] 1921, ஜூலை 13 முதல் 1922, பிப்ரவரி 1ந் தேதி வரை கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, செயற்குழுவின் தலைமைக் குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள். பெத்ரோகிராத், 1922, பக்கம் 73.

ஒன்றித்த கூட்டணி பற்றிய கோஷம் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் விரிவான வெகுஜனங்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது. யுத்தத்துக்குப் பிந்திய ஆரம்ப ஆண்டுகளில் பெற்ற ஜனநாயக சுதந்திரங்களையும் பொருளாதார, அரசியல் நலங்களையும் காப்பாற்றவும் இன்னும் அதிகமாக்கவும் உழைப்பாளிகளின் உரிமைகளை விரிவுபடுத்தவும் அவர்கள் கொண்டிருந்த ஆர்வத்துக்கு இந்த கோஷம் ஏற்றதாய் இருந்தது. ஆயினும் தொழிலாளி வர்க்கம் பிளவுபட்டிருந்தது. சர்வதேசச் சீர்திருத்தவாத ஸ்தாபனங்கள் நிலவிவந்தன. அவற்றின் தலைவர்கள் தொழிலாளர்களின் நடவடிக்கைகளில் உண்மையான ஒற்றுமை ஏற்படுவதற்கு எதிராக எல்லா வகையிலும் செயலாற்றி வந்தார்கள். இளங் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பலவீனமாகவும் உறுப்பினர் எண்ணிக்கையில் சிறியவையாகவும் இருந்தன. பூர்ஷ்வா வர்க்கம் சமயத்துக்கு ஏற்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. அது சில விஷயங்களில் விட்டுக் கொடுத்தது, அதே சமயம் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிக்கு எதிராக வெளிப்படையான பயங்கரச் செயல்களையும் கொடிய வன்முறையையும் கையாண்டு வந்தது. இவை எல்லாம் ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணி உருவாவதைக் கடினம் ஆக்கின. வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் தொழிலாளர்களின் நடவடிக்கை ஒற்றுமையை மறைமுகமாகக் குலைக்கும் நோக்கத்துடனும் அதைத் தகர்ப்பதற்காகவும், ஒன்றித்த கூட்டணி என்ற கோஷம் கம்யூனிஸ்டுகளின் தந்திரம் என்று கூறினார்கள். ஒன்றித்த கூட்டணியின் பணிகளை ஒருதலைச் சார்பாகவும் குறுகிய பிரிவு நோக்குடனும் விளக்கிய ஸினோவியெவ், புஹாரின் போன்ற சில கம்யூனிஸ்டு அகிலத் தலைவர்களின் கூற்றுக்களை அவர்கள் இதற்கு மேற்கோள் காட்டினார்கள்.

ஒன்றித்த கூட்டணியினது செயல்தந்திரத்தின் நோக்கத்தையும் அர்த்தத்தையும் தொழிலாளி வர்க்கத்தின் நடவடிக்கை ஒற்றுமையைப் பெறுவதற்கான வழிகளையும் லெனினது தலைமையில் கம்யூனிஸ்டு அகிலம் வரையறுத்தது. "மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் மேலும் மேலும் விரிவான தொழிலாளி வெகுஜனங்களை ஈர்ப்பதும், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் தலைவர்களிடங்கூட இத்தகைய போராட்டத்தைக் கூட்டாக நடத்தும் யோசனை அடங்கிய வேண்டுகோள்களை மீண்டும் விடுப்பதற்காகத் தாமதம் செய்யாதிருப்பதுமே ஒன்றித்த

கூட்டணிச் செயல்தந்திரத்தின் நோக்கமும் அர்த்தமும் ஆகும்''[1] என்று எழுதினார் லெனின். ஒன்றித்த கூட்டணி கோஷத்தை எழுப்பியதன் மூலம் கம்யூனிஸ்டுகள் உழைப்பாளிகளின் பொதுப் பகைவனான மூலதனத்துக்கு எதிராக வெகுஜனங்களை ஒன்று திரட்ட முயன்றார்கள். தொழிலாளர்களுக்கு மிக உடனடியானவையும் புரியக்கூடியவையுமான நடைமுறைப் பிரச்சினைகளில் நடவடிக்கை ஒற்றுமை ஏற்படுத்துவதன் வாயிலாகவும் வெகுஜனங்களின் நேர்முகப் போராட்டத்தின் வாயிலாகவும் இந்த ஒற்றுமையைப் பெறுவது அவசியமாய் இருந்தது. அதே சமயம், நடவடிக்கை ஒற்றுமை பெறுவதற்கான நிலைமைகளை எளிதாக்கும் பொருட்டு சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முயல்வதும் இன்றியமையாதது என்று லெனின் அறிவுறுத்தினார். தொழிலாளர்களின் ஒன்றித்த கூட்டணி பற்றிய லெனினது செயல்தந்திரத்தின் சாராம்சம் பின்வருவது ஆகும்: வெகுஜனங்களுக்கு உடனடியானவையும் புரியக்கூடியவையுமான நடைமுறைப் பிரச்சினைகளுக்காகப் போராடும் போது தொழிலாளர்களின் நடவடிக்கை ஒற்றுமையை ஏற்படுத்துவது, சீர்திருத்தவாதிகளின் செல்வாக்குக்கு ஆட்பட்டிருந்தவர்கள் உட்பட, தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு பிரிவுகளை இயக்கத்தில் ஈடுபடுத்துவது, இந்தப் போராட்டத்தின் போது பாட்டாளி வர்க்கத்திற்குப் புரட்சிப் போதனை அளிப்பது, அடிப்படையான பணிகளை நிறைவேற்றுவதற்கு—பூர்ஷ்வா அமைப்பை ஒழிப்பதற்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கும் சோஷலிஸத்தை நிறுவுவதற்கும்—பாட்டாளி வர்க்கத்தை ஆயத்தப்படுத்துவது. தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த கூட்டணி பற்றிய செயல்தந்திரம் கம்யூனிஸ்டுகளின் உபாயம் அல்ல. அவர்களுடைய செயல்களுக்கு அடிப்படையாக இருந்த கோட்பாடு, எல்லா உழைப்பாளிகளுடையவும் ஜீவாதார நலன்கள் பற்றிய அக்கறை காரணமாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் கொள்கைப் போக்கு இது.

சர்வதேச அளவில் எல்லாத் தொழிலாளர் கட்சிகளும் ஸ்தாபனங்களும் கலந்துகொள்ளும் ஒன்றித்த கூட்டணி அமைக்கும் யோசனையைக் கம்யூனிஸ்டு அகிலம் 1921ம் ஆண்டு பல முறை முன்வைத்தது. சோவியத் ருஷ்யாவில் பட்டினிக்கு உள்ளான

---

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 411.

வெகுஜனங்களுக்கு உதவும்படி எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் தொழிலாளி மாதருக்கும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1921, ஜூலை 30ந் தேதி வேண்டுகோள் விடுத்தது. உதவிக்கான பொதுக் கமிட்டிகள் அமைக்கும் நோக்கத்துடன் எல்லாத் தொழிலாளர் ஸ்தாபனங்களோடும் தொடர்பு கொள்ளும்படி கம்யூனிஸ்டு அகிலம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு யோசனை கூறியது. பட்டினி கிடப்பவர்களுக்காகத் தானியமும் மருந்துகளும் வாங்குவதற்கு விரிவான வெகுஜனங்களிடையே பிரசாரம் செய்து பணம் திரட்டுவது இந்தக் கமிட்டிகளின் பணியாகும். ருஷ்யாவில் பஞ்சத்துக்கு ஆளானவர்களுக்குத் தொழிலாளர்களின் உதவியை ஒழுங்கமைக்கும் அயல் நாட்டுக் கமிட்டி, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது முயற்சியால் ஆகஸ்டு 12ந் தேதி பெர்லினில் உருவாக்கப்பட்டது. பின்னர் இது சர்வதேசத் தொழிலாளர் உதவிக் கமிட்டி என மாற்றி அமைக்கப்பட்டது. கிளாரா த்ஸேத்கின் இந்தக் கமிட்டியின் தலைவராகவும் வ. மியூன்ஸென்பெர்க் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், மர்தீன்-அந்தர்சன் நேக்ஸே, பெர்னார்டு ஷா, அனத்தோல் பிரான்ஸ், அன்ரீ பர்பியூஸ் ஆகியோரும் வேறு பலரும் கமிட்டி உறுப்பினராக இருந்தார்கள். பஞ்சத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிப்பதில் இந்தக் கமிட்டி பெரிய வேலை செய்தது. ஆம்ஸ்டர்டாம் அகிலத்துக்கும் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களுக்கும் ஆகஸ்டு 15ந் தேதி விடுத்த வேண்டுகோளில் கூட்டாகச் செயலாற்றும் யோசனையை அது முன்வைத்தது, ஆனால் இவற்றின் தலைவர்கள் கமிட்டியுடன் ஒத்துழைக்க மறுத்து விட்டார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகள் பஞ்சத்திற்கு உள்ளானவர்களுக்கு உதவும் கமிட்டிகளை எங்கும் அமைத்தன, பிரபல சமூகத் தலைவர்களையும் எழுத்தாளர்களையும் விஞ்ஞானிகளையும் அவற்றில் பங்கு கொள்ள வைத்தன. கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் சமூக-ஜனநாயகவாதிகளுடன் கூட்டாக உதவிக் கமிட்டிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனால் சீர்திருத்தவாதிகளின் பிளவுபடுத்தும் கொள்கையின் விளைவாக, செக்கோஸ்லோவாக்கியாவிலும் இத்தாலியிலும் மட்டுமே, அதுவும் குறைந்த காலத்துக்கே இத்தகைய கமிட்டிகளை அமைக்க முடிந்தது.

வோல்காப் பிரதேசத்தில் பஞ்சத்திற்கு உள்ளானவர்களுக்கு உதவும் இயக்கம் உலகம் முழுவதிலும் தொழிலாளர்களின் விரி

வான வெகுஜனங்களிடையே பரவியது. பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் உண்மையான வெளியீடாகத் திகழ்ந்தது இது. வெகு ஜனங்களின் வற்புறுத்தல் காரணமாகத் தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலம் உதவி இயக்கத்தில் பங்கு கொண்டது. பொருளாதார நெருக்கடியும் சம்பளக் குறைவும் வேலையில்லாத் திண்டாட்டமும் இருந்ததைப் பொருட்படுத்தாமல், முதலாளித் துவ நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் சோவியத் நாட்டின் உதவிக்கு வந்தது.

பஞ்சத்திற்கு உள்ளானவர்களுக்கு உதவும் கமிட்டி, 1923ம் ஆண்டுக் கோடைகாலத்துக்குள், 50 லட்சம் டாலருக்கும் அதிக மான மதிப்புள்ள உணவுப் பண்டங்களும் சரக்குக்களும் ரொக்கப் பணமும் சோவியத் ருஷ்யாவுக்கு அனுப்பியது. தொழிற்சங்கங் களின் ஆம்ஸ்டர்டாம் அகிலம் சுமார் 10 லட்சம் டாலர்கள் திரட்டி யது. சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு, பஞ்சத்தில் அடிபட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பல்லாயிரம் மனிதர்களின், சிறப்பாகக் குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்றியது. சோவியத் ருஷ்யாவின் பொருளாதாரத்தை மீட்டமைப்பதற்கு சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் சோதர உதவியின் முக்கியத்துவத்தை லெனின் பல முறை குறிப்பிட்டார். சர்வதேச ஏகாதிபத்தியத் துடன் நடக்கும் போராட்டம் என்ற பொது லட்சியத்திற்கு அளவு கடந்த முக்கியத்துவம் உள்ள தொண்டாக விளங்கியது இந்த உதவி. ''சோவியத் ருஷ்யாவில் தேசியப் பொருளாதாரத்தை மீட்டமைக்க உதவுவது போன்று அவ்வளவு விரைவாகவும் அவ் வளவு நிச்சயமாகவும் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடிய சாதனம், சர்வதேச நிதி மூலதனத்தின் நுகத்துக்கும் சர்வதேசப் பிற்போக்குக்கும் எதிரான போராட்டத்துக்குரிய அமைதியான சாதனங்களில் வேறு எதுவும் இல்லை''[1] என்று எழுதினார் லெனின். பஞ்சத்திற்கு உள்ளானவர்களுக்கு உதவும் இயக்கம் முதலாளித் துவ நாடுகளில் தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தவும் அவர் களது வர்க்க உணர்வு அதிகரிக்கவும் பாட்டாளி வர்க்க சர்வ தேசியம் ஏற்றம் பெறவும் உதவியது.

பிற்போக்கு சிறப்பாகப் பேயாட்டம் ஆடிய நாடுகளைச் சேர்ந்த உழைப்பாளிகளுக்கு உதவி அளிப்பதற்கு கம்யூனிஸ்டு அகிலம்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 527.

தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது. பால்கன் நாடுகளிலும் ஸ்பெயினிலும் புரட்சி எதிர்ப்பாளர்களின் பயங்கரச் செயல்களுக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் யோசனையைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1921, அக்டோபர் 9ந் தேதி தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலத்துக்கு விடுத்தது. 1921, அக்டோபர் 19ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் தொழிற்சங்க அகிலத்தின் செயலகமும் வெளியிட்ட வேண்டுகோளில் சந்திப்பையும் ஒன்றித்த நடவடிக்கைகளையும் பற்றிய இந்த யோசனை அடங்கியிருந்தது. நவம்பர் 17ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது தலைமைக்குழு தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலத்துக்கு ஒரு விசேஷக் கடிதம் அனுப்ப முடிவு செய்தது. ஸ்பானிய, யூகோஸ்லாவிய உழைப்பாளிகளுக்கு ஆதரவாக நடத்த வேண்டிய போராட்டத்தின் ''வடிவம், முறைகள், சாதனங்கள் ஆகியவைபற்றி ஆலோசனை செய்வதற்கு விசேஷ மகாநாட்டைக்''[1] கம்யூனிஸ்டு அகிலம், தொழிற்சங்க அகிலம் இரண்டின் பிரதிநிதிகளையும் கொண்டு நடத்த ஏற்பாடு செய்யும் யோசனை இந்தக் கடிதத்தில் மீண்டும் கூறப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டு அகிலமும் தொழிற்சங்க அகிலமும் விடுத்த யோசனைகளை ஆம்ஸ்டர்டாம் அகிலத்தின் சீர்திருத்தவாதத் தலைவர்கள் புறக்கணித்துவிட்டார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளர்களின் கூட்டு நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க முயன்றன. உழைப்பாளிகளின் உரிமைகளைக் காப்பதற்காகவும், வரிச் சுமையை உடைமையாளர்களின் தோள்களுக்கு மாற்றுவதற்காகவும், எல்லாப் புரட்சி எதிர்ப்பு ஸ்தாபனங்களுடையவும் ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு அவற்றைக் கலைத்துவிடுவதற்காகவும், உழைப்பாளிகளின் தற்காப்பு உறுப்புக்களை அமைப்பதற்காகவும் தொழிலாளி வர்க்கத்தின் கண்காணிப்பில் அரசு இயந்திரத்திலிருந்தும் இராணுவத்திலிருந்தும் முடியரசுவாதி நபர்களை ஒழிப்பதற்காகவும் இத்தகைய பிற நோக்கங்களுக்காகவும் கூட்டாக நடவடிக்கைகள் நடத்தும் யோசனையை ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மற்றத் தொழிலாளர் கட்சிகளுடையவும் தொழிற்சங்கங்களுடையவும் தலைவர்களுக்கு 1921, அக்டோபர் முடிவில் விடுத்தது. ஏகபோகங்களின் தாக்குதலுக்கு எதிராகத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் விடுத்த

[1] செயற்குழுவின் நடவடிக்கைகள், பக்கம் 282.

பத்து கோரிக்கைகளைக் கம்யூனிஸ்டுக் கட்சி தீவிரமாக ஆதரித்தது. பிற்போக்குக்கு எதிராக வெகுஜனங்களது போராட்டத்தின் வாயிலாக மட்டுமே உழைப்பாளிகளின் ஜனநாயக சுதந்திரங்களுக்கு வகை செய்ய முடியும் என்று கட்சி வலியுறுத்தியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது ஆதரவுடன் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான செயல் திட்டத்தைத் தயாரித்தது. இதன் அடிப்படையில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைக்க அது முயன்றது. தொழிலாளர் அரசாங்கம் அமைப்பதற்கான போராட்டத்தை அது தன் நடவடிக்கைகளின் மையமாக வைத்துக் கொண்டது. இந்த அரசாங்கம் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைக் காக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் குறித்த நிபந்தனைகளின் பேரில் இவ்வரசாங்கத்தில் சேர்ந்துகொள்ளத் தான் ஆயத்தமாய் இருப்பதாகவும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி அறிவித்தது.[1] சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர்கள் இதற்கு விடையாகக் கம்யூனிஸ்டுகளை வன்மத்துடன் துன்புறுத்தினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி வன்முறைகளால் ஆட்சியைக் கைப்பற்ற முயல்வதாகக் குற்றம் சாட்டினார்கள். ஒன்றித்த கூட்டணி அமைப்பது பற்றிய ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் யோசனையை நிராகரித்து விட்டார்கள்.

ஒன்றித்த கூட்டணி பற்றிய செயல்தந்திரத்தை இளங் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குச் சரியாகப் புரிய வைக்கும் நோக்கத்துடன், ருஷ்யக் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி போலிட்பியூரோவின் யோசனைப்படி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1921, டிசம்பர் 18ந் தேதி, மூன்றாவது காங்கிரசின் தீர்மானங்களை விரிவுபடுத்தியது. ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றியும், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களையும் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தையும் சேர்ந்த தொழிலாளர்கள்பாலும் அராஜக-சிண்டிகலிஸ்டு ஸ்தாபனங்களை ஆதரிக்கும் தொழிலாளர்கள்பாலும் கடைப்பிடிக்க வேண்டிய உறவுகள் பற்றியும் அது ஆய்வுரை தயாரித்து ஏற்றுக் கொண்டது. ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணி பற்றிய செயல்தந்திரம் இந்த ஆய்வுரையில் ஆழ்ந்த ஆதாரங்களுடன் நிலைநாட்டவும் தெளிவாக விளக்கவும் பட்டிருந்தது. இந்தச் செயல்தந்திரத்தை நடப்பில்

[1] Geschichte der deutschen Arbeiterbewegung, Bd. 3, S. 349-350.

கொண்டு வருவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிறைவேற்ற வேண்டிய பணிகளும் இதில் குறிப்பிடப்பட்டிருந்தன. ''ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி என்பதன் அர்த்தம், முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராட விரும்பும் எல்லாத் தொழிலாளர்களதும் ஒற்றுமை ஆகும்''[1] என்று ஆய்வுரையில் கூறப்பட்டது. ''தொழிலாளி வெகுஜனங்கள் மீது கொள்கைவாதச் செல்வாக்கு செலுத்தும் சுதந்திரம் தங்களுக்கு இருக்கும்படி ஸ்தாபன ரீதியாக ஏற்பாடு செய்து கொண்டு, எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்த வெகுஜனங்களின் நடைமுறைச் செயலில் கூடியவரை அதிக விரிவான, முழுமையான அளவில் ஒற்றுமையை எல்லா சந்தர்ப்பங்களிலும் பெறுவதற்கு இப்போது முயன்றுவருகின்றன.''[2] இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களைச் சேர்ந்த கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் விதித்த முக்கிய நிபந்தனை, கம்யூனிஸ்டுகளின் எதிரிகளை விமர்சிப்பதிலும் தன் கருத்துக்களை வெளியிடுவதிலும் ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் பூரண சுயேச்சையும் அரசியல் சுதந்திரமும் பெற்றிருக்க வேண்டும் என்பதே. ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிய ஆய்வுரையில் லெனினது யோசனைப்படி ஒரு பின்னிணைப்பு சேர்க்கப்பட்டது. ருஷ்ய போல்ஷிவிக்குகளின் அனுபவத்தை இது விவரித்தது. போல்ஷிவிக்குகள் சீர்திருத்தவாதத்துக்கு எதிராக ஓய்வற்ற போராட்டம் நடத்துவதை நிறுத்தாமலே, மென்ஷிவிக்குகளுடன் பல முறை ஒப்பந்தங்கள் செய்து கொண்டார்கள், அவர்களோடு முழு அளவில் அல்லது பாதி அளவில் ஒன்று சேர்ந்தார்கள். போல்ஷிவிக்குகள் சமயோசிதமான செயல்தந்திரத்தைக் கையாண்டார்கள். முதலாளிகளுக்கு எதிராகத் தொழிலாளர்களின் புரட்சிகரக் கோரிக்கைகளுக்கு ஆதரவாக நடைமுறைப் போராட்டத்தில் தொழிலாளி வெகுஜனங்களின் ஒற்றுமையை உருவாக்க முயன்று அவர்கள் வெற்றி அடைந்தார்கள். இந்தக் கொள்கையின் பயனாக ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினர் போல்ஷிவிக் கட்சியின் தரப்புக்கு வந்து விட்டார்கள். ஒன்றித்த கூட்டணி என்பது இரண்டாவது அகிலத்துடன் கொள்கைவாத ஒப்பந்தம் என்று அர்த்தப்படுத்தவும்

---

[1] செயற்குழுவின் நடவடிக்கைகள், பக்கம் 398.

[2] அதே நூல், பக்கம் 389.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் சீர்திருத்தவாதிகளுடன் கோட்பாடற்ற கூட்டணியில் கலந்து விட வேண்டும் என்று வற்புறுத்தவும் வலது சாரியினர் முயல்வார்கள் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற் குழு கம்யூனிஸ்டுக் கட்சிகளை எச்சரித்தது. இந்த சந்தர்ப்பவாத விளக்கத்துக்கும் ஒன்றித்த கூட்டணி பற்றிய செயல்தந்திரத்துக் கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு உண்டு. இந்தச் செயல்தந்திரத்தைக் கையாள்வதில் சமயோசித சாமர்த்தியமும் புரட்சிக் கொள்கைகளைக் காத்துப் போராடுவதில் உறுதியும் காட்ட வேண்டும். பிற ஸ்தாபனங்களுடன் கம்யூனிஸ்டுகள் நடத் தும் பேச்சுவார்த்தைகளின் பால் விரிவான தொழிலாளி வெகு ஜனங்களின் கவனம் ஈர்க்கப் பட வேண்டும். இவ்வாறு அவர்கள் அவசியமான அரசியல் அனுபவம் பெற வகை செய்யப்பட வேண் டும் என்று ஆய்வுரை வலியுறுத்தியது.

தொழிலாளி வர்க்கத்தின் ஜீவாதார நலன்களைக் காத்தும் புதிய ஏகாதிபத்திய யுத்த அபாயத்தை எதிர்த்தும் போராடும் நோக்கத்துடன் இரண்டாவது, இரண்டரையாவது, ஆம்ஸ்டர்டாம் அகிலங்களோடு உடன்பாடு செய்து கொள்ள ஆயத்தமாய் இருப்பதாகத் தனது யோசனையைக் கம்யூனிஸ்டு அகிலம் மீண்டும் முன்வைத்தது. இரண்டாவது, இரண்டரையாவது, ஆம்ஸ்டர்டாம் அகிலங்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் நடைமுறை யோசனை கள் எவற்றையேனும் நிராகரித்து விட்டாலும் கம்யூனிஸ்டு அகிலம் தனது செயல்தந்திரத்தை விட்டு விடாது என்றும் இந்தச் செயல் தந்திரம் வெகுஜனங்களிடையே ஆழமாக வேரோடியிருப்பதாக வும் இதை முறையாக, இடைவிடாது விரிவுபடுத்துவது இன்றிய மையாதது என்றும் கம்யூனிஸ்டு அகிலம் அறிவித்தது. ''எல்லாக் கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களுக்கும் பொதுவாகவே நேர்மை யுள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் உழைப்பாளிகளின் ஒன் றித்த குடும்பமாக எங்கும் எல்லா இடங்களிலும்—தொழிற்கூடங் களிலும் கூட்டங்களிலும்—ஒன்று சேரும்படியும் இத்தகைய ஒன்றித்த குடும்பம் ஒவ்வொரு கடினமான கணத்திலும் மூலதனத் தின் எல்லாத் தாக்குதல்களிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள வும் அவற்றை முறியடிக்கவும் வல்லதாகும்''[1] என்றும் கம்யூ னிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் தொழிற்சங்க அகிலத்தின் செயலகமும் 1922, ஜனவரி 1ந் தேதி வேண்டுகோள் விடுத்தன.

---

[1] செயற்குழுவின் நடவடிக்கைகள், பக்கம் 416.

இந்த வேண்டுகோளில் பின்வருமாறு கூறப்பட்டது: ''பாட்டாளி களே, தொழிற்கூடங்களிலும் சுரங்கங்களிலும் நீங்கள் ஒருவருக்கு ஒருவர் துணை நின்ருல்தான், பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்து இருப்பவையும் அதன் ஆதரவை நாடுபவையுமான எல்லாக் கட்சி களும் மூலதனத்துக்கு எதிராகக் கூட்டான தற்காப்புப் போரின் பொருட்டு ஒன்றிணைவதன் கட்டாயத்தை உணரும். அப்போதுதான் அவை முதலாளித்துவக் கட்சிகளுடன் தொடர்பைத் துணித்துக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்படும்.''[1] வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் சம்பளக் குறைப்புக்கும் எதிராகவும், உற்பத்தி மீது தொழிலாளர் கண்காணிப்பை ஆதரித்தும், ஆயுத உற்பத்தி அதிகரிப்பையும் புதிய ஏகாதிபத்திய யுத்த அபாயத்தையும் எதிர்த் தும் ஏகாதிபத்திய நேசநாடுகளால் ஜெர்மனி சூறையாடப்படு வதற்கு எதிராகவும் சோவியத் ருஷ்யாவுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு ஆதரவாகவும் போராட்டம் நடத்துவதற்கான தெளிவாக வரை யறுக்கப்பட்ட செயல்திட்டம் இந்த வேண்டுகோளில் அடங்கியிருந் தது. மிக விரிவான வெகுஜனங்களின் நலன்களுக்கு இசைந்ததான இந்தச் செயல்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத் தினுடையவும் அதன் ஸ்தாபனங்களுடையவும் நடவடிக்கை ஒற்று மையை ஏற்படுத்தக் கம்யூனிஸ்டு அகிலம் முயன்றது.

ஒன்றித்த கூட்டணி பற்றிய கோஷத்தை கம்யூனிஸ்டுக் கட்சி களின் சில தலைவர்கள் உடனே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இத்தாலியில் அ. போர்டிகா போன்ற ''இடதுசாரி'' நபர்கள், பொருளாதாரப் போராட்டத் துறையில் தொழிற்சங்கங்களில் ஒத்துழைப்பது என்று மட்டுமே இந்தச் செயல்தந்திரத்துக்குப் பொருள் கொண்டார்கள். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சோஷலிஸ்டுக் கட்சிகளுடன் ஸ்தாபன ரீதியில் கலந்து ஒன்ருகிவிடுவதில் முடிந்து விடலாம் என்று பிரான்சில் ல. ஃபிரஸார் கூறினர். புரட்சிகர சிண்டிகலிஸ்டு களுடன் ஒத்துழைப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளலாம் என்று அவர் யோசனை கூறினர். கூட்டாகச் செயல்புரியும் நோக்கத்துடன் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களுடன் தொடர்பு கொள்வது தக்கதே என்று ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கு 1921, டிசம்பரிலேயே விடுத்த யோசனைபற்றி அறிந்ததும் போர்திகா

[1] செயற்குழுவின் நடவடிக்கைகள், பக்கம் 416.

வும் வலேத்ஸ்கியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்குக் கலவரம் நிறைந்த தந்தி ஒன்றை அனுப்பினர்கள். ''இந்தச் செயல் பிரான்சிலும் பிற நாடுகளிலும் குழப்பத்தையும் கடுமையான சச்சரவுகளேயும் ஏற்படுத்தும்''[1] என்று கூறியது அவர்களுடைய தந்தி.''இடதுசாரியினரின்'' பிரிவுவாதக் கண்ணேட்டங்கள் சரியான செயல்தந்திரத்தை வகுத்து விரிவான வெகுஜனங்களிடையே வேலே நடத்துவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடைஞ்சலாய் இருந்தன. அதே சமயம், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணிகளில் இருந்த வலதுசாரி சந்தர்ப்பவாதிகள், கம்யூனிஸ்டுக் கட்சிகளேச் சீர்திருத்தவாதப் பாதையில் தள்ளுவதற்கு ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைப் பயன்படுத்த முயன்றார்கள்.

லெனினும் கம்யூனிஸ்டு அகிலமும் இளங் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை எப்படிக் கையாளுகின்றன என்பதை உன்னிப்பாகக் கவனித்து அவற்றுக்கு உதவினர்கள். தவறுகளேத் திருத்த உதவி செய்தார்கள். ஜனவரி மாதம் 12ந் தேதி, பிரிட்டனில் அணுகி வந்த பொதுத் தேர்தல்களே ஒட்டி, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவில் ''விவரமான நோக்க விளக்கம் கொண்ட ஒரு தீர்மானம்'' ஏற்கப்பட வேண்டும் என்று லெனின் யோசனே கூறினர். ''எல்லாக் கம்யூனிஸ்டுகளும் தேர்தல்களில் தொழிற்கட்சி உறுப்பினர்களுக்கு ஆதரவாகக் கிளர்ச்சி நடத்தவும் வாக்களிக்கவும் வேண்டும் என்றும், கம்யூனிஸ்டு வேட்பாளருக்கு வாக்களிப்பதால் பூர்ஷ்வா வேட்பாளர் வெற்றி பெற எவ்வகையிலும் வாய்ப்பு ஏற்படாது என்று நிச்சயமாக உறுதி கூறக் கூடிய மிகச் சில சந்தர்ப்பங்கள் மட்டுமே இந்த விதிக்கு விலக்காய் இருக்க வேண்டும் என்றும் தீர்மானத்தில் கண்டிப்பாகக் கோரப்பட வேண்டும்''[2] என்று அவர் கூறினர். ''தேர்தல்களில் தொழிற் கட்சிக்கு ஆதரவளிக்கும்படி பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளுக்கு யோசனே கூறுவது முற்றிலும் இன்றியமையாதது என ஒப்புக் கொள்வதாக''[3] ஒரு தீர்மானத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலேமைக்குழு ஜனவரி 13ந் தேதி ஏற்றது. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி தேர்தல்களில் தொழிற்

---

[1] மை. ஆ. கூ., *495/18/110/1*

[2] மை. ஆ. கூ., *2/1/22623/1.*

[3] மை. ஆ. கூ., *495/2/12/11.*

கட்சி அரசாங்கத்தின் வெற்றிக்காகப் போராட வேண்டும் என்ற கோஷத்தைச் செயற்குழுவின் யோசனைக்கு இணங்க 1922 மார்ச்சு மாதம் முன்வைத்தது. இந்தத் தீர்மானத்துக்கு ஏற்ப, அதே ஆண்டு இலையுதிர் காலத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் தொழிற்கட்சியினருக்கு எதிராக நிறுத்தியிருந்த தன் வேட்பாளர்களைக் கம்யூனிஸ்டுக் கட்சி வாபஸ் பெற்றுக் கொண்டு, இந்த முடிவின் காரணங்களைத் தொழிலாளர்களுக்கு விளக்கியது.

லெனின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளைப் பகுத்து ஆராய்ந்து, சமயத்துக்கு ஏற்ற செயல்தந்திரத்தைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை அவற்றுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தினார். ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதம், துர்ச்சாகசம் ஆகியவற்றின் நாசகரமான அபாயத்தைக் குறித்து அவற்றை எச்சரித்தார். ''...ஒரு புறம், மட்டு மீறிய முன்ஜாக்கிரதை தவறுகளுக்கு இட்டுச் செல்லும்'' என்று எழுதினார் லெனின். ''மறு புறம், சூழ்நிலையை நிதான புத்தியுடன் கணக்கில் எடுத்துக் கொள்வதன் இடத்தில் வெறும் ''மனநிலையையோ'' செங்கொடிகளை ஆட்டுவதையோ மேற்கொண்டால், திருத்தவே முடியாத தவறு செய்து விடலாம் என்பதை மறந்துவிடக் கூடாது. இடர்கள் மிகப் பெரியவையாக இருந்தாலும் அழிவு சிறிதும், இம்மியளவு கூட, கட்டாயம் இல்லை என்று இருக்கும் சந்தர்ப்பங்களில், இவ்வாறு செய்வதால் அழிவுக்கு உள்ளாகக் கூடும்.''[1]

அதே சமயம், இன்னொரு விஷயத்தையும் லெனின் வலியுறுத்தினார். கம்யூனிஸ்டுக் கட்சிகளில் முன்னாள் சமூக-ஜனநாயகவாதிகள் பலர் இருந்தார்கள். தங்கள் வழக்கங்களிலிருந்தும் கட்சியின் பாத்திரம் பற்றிய பழைய எண்ணங்களிலிருந்தும் இவர்கள் விடுபடவில்லை. இத்தகைய கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்களை உண்மையில் புரட்சிகரமான, போராட்ட ஊக்கம் உள்ள, வெகுஜனக் கம்யூனிஸ்டுக் கட்சிகளாக மாற்றிக் கொள்வதற்குத் தங்கள் அமைப்பு முழுவதையும் வேலை அனைத்தையும் அடிப்படையில் உள்ளார்ந்த முறையில் சீர்படுத்தும் நீண்ட நிகழ்முறைக்கு உள்ளாவது இன்றியமையாதது என்றார் லெனின். ''அன்றாட வாழ்க்கையில் கட்சி வேலையின் மாதிரியை மாற்றி அமைப்பது, வரட்டு வேலைக்குப் புது வடிவம் அளிப்பது, கட்சி வெகுஜனங்களிடமிருந்து

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 210.

விலகாமல், அவர்களுக்கு மேலும் மேலும் நெருங்கி வந்து, புரட்சி உணர்வு பெறவும் புரட்சிப் போராட்டம் நடத்தவும் அவர்களைத் தூண்டி எழுப்பியவாறு புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக விளங்கும்படி செய்வது, மிகக் கடினமான, மிக முக்கியமான வேலை ஆகும்.''[1]

கம்யூனிஸ்டுக் கட்சிகள் உண்மையான புரட்சிக் கட்சிகளாக மாற லெனின் அவற்றுக்கு நிர்ணயகரமான உதவி அளித்தார். மார்க்சியக் கோட்பாடுகளில் பற்றுறுதியை அவற்றுக்குக் கவனமாகவும் பரிவுடனும் புகட்டினார். புது வகையான கட்சிகளாக அவை நிலை பெற உதவினார். அவற்றின் அரசியல் செயலூக்கத்தை வளர்ப்பதற்கு அவர் விடாப்பிடியாக முயன்றார். உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின்பால், சோஷலிஸத்தின் வெற்றியின் பால் தங்களுக்கு உள்ள பொறுப்பைக் கம்யூனிஸ்டுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று போதித்தார். சரியான கொள்கையை வகுத்து, அதைத் திறமையுடன் செயல்படுத்தவும், வர்க்கப் போராட்டத்தின் தேவைகளுக்குப் பொருந்தும் விதத்தில் வெகுஜனங்களுடன் தொடர்புகளின் அமைப்பையும் ஸ்தாபன வடிவங்களையும் மாற்றவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு லெனின் கற்பித்தார். ''ஆரவாரம் இல்லாமல், பகட்டு இல்லாமல், கூச்சல் இல்லாமல், அவசரம் இல்லாமல். ஆழ்ந்த முறையில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சிகளை, பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான புரட்சிகர முன்னணிப் படைகளை உருவாக்கும் வேலை தொடங்கி விட்டது, இந்த வேலை நடந்து வருகிறது''[2] என்று 1922 பிப்ரவரியில் லெனின் எழுதினார்.

**சர்வதேசத் தொழிலாளர்
மகாநாட்டுக்கு முன்னேற்பாடு.
கம்யூனிஸ்டு அகிலத்தின்
செயற்குழுவினது முதலாவது
முழுக் கூட்டம்**

ஒன்றித்த கூட்டணி அமைக்கும் கருத்தும் இந்த நோக்கத்துடன் தொழிலாளர் கட்சிகள், ஸ்தாபனங்களின் உலக மகாநாட்டைக் கூட்டும் கருத்தும் மேலும் மேலும் விரிவாகப் பரவின.

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 209.

[2] அதே நூல், பக்கங்கள் 209-10.

ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்கியா, பிரான்ஸ், பிரிட்டன், பிற நாடுகள் ஆகியவற்றில் தொழிலாளர் பத்திரிகைகளிலும் உழைப்பாளிகளின் கூட்டங்களிலும் இவ்விஷயம் குறித்து விரிவான விவாதம் நடந்தது. இரண்டரையாவது அகிலத்தைச் சேர்ந்த பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ், இரண்டாவது, மூன்றுவது அகிலங்களின் பிரதிநிதிகளைக் கூட்டு மகாநாட்டுக்கு அழைக்கும்படி தனது அகிலத்தின் தலைமைக் குழுவுக்கு யோசனை கூறியது. தொழிலாளர் ஸ்தாபனங்களின் சர்வதேச மகாநாடு கூட்டுவதை இரண்டரையாவது அகிலத்தின் தலைவர்கள் கூட ஆதரித்தார்கள். இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் பிரதிநிதிகள் மட்டும் அடங்கிய மகாநாட்டைக் கூட்டும்படி பிரிட்டிஷ் தொழிற்கட்சி கூறிய யோசனையை இவர்கள் நிராகரித்து விட்டார்கள். இவ்வாறு, நடவடிக்கை ஒற்றுமை பெறுவதற்குத் தொழிலாளி வெகுஜனங்களின் ஆர்வத்தை ஆதாரமாகக் கொண்டு கம்யூனிஸ்டு அகிலம் நடத்திய தீவிரப் போராட்டத்தின் விளைவாக, கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொள்ளாமலும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகவும் சீர்திருத்தவாதத்தின் அடிப்படையில் ஒன்றித்த கூட்டணி அமைக்கச் சீர்திருத்தவாதத் தலைவர்கள் செய்த முயற்சிகள் பலிக்காது போயின. 1922, ஜனவரி 13ந் தேதி, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது தலைமைக் குழு பின்வரும் செய்தியைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அறிவிப்பதென்று தீர்மானித்தது: பிப்ரவரியில் நடக்கப் போகிற விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தில், கம்யூனிஸ்டு அகிலம் மற்ற எல்லா சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனங்களுடனும் சேர்ந்து கூட்டு மகாநாடு நடத்துவது பற்றிய பிரச்சினை ஆலோசனைக்கு வைக்கப்படும். ஜினேவா மகாநாட்டின் போது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படப் போகிற, சர்வதேச அரசியல் சம்பந்தமான அடிப்படைப் பிரச்சினைகளை (இவற்றில் ஜெர்மானியப் பிரச்சினையும் வெர்சேல்ஸ் சமாதான உடன்படிக்கை பற்றிப் புனராலோசனை செய்வதும், சோவியத் ருஷ்யாவுக்கு உதவி அளிப்பதும் பிற பிரச்சினைகளும் அடங்கும்) விவாதிப்பது இந்த மகாநாட்டின் நோக்கமாய் இருக்கும். இரண்டரையாவது அகிலத்தின் தலைமைக் குழு பெர்லினில் ஜனவரி 14, 15 தேதிகளில் நடத்திய கூட்டத்தில் எல்லாத் தொழிலாளர் கட்சிகளதும் பொது மகாநாடு கூட்டுவது பற்றிப் பேச்சுவார்த்தைகள் தொடங்குவது என்று தீர்மானித்தது. 1922, ஜனவரி 19ந் தேதி அது கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கு ஒரு யோசனை

விடுத்தது. ஐரோப்பாவின் பொருளாதார நிலைமை குறித்த பிரச்சினையையும் பிற்போக்கின் தாக்குதலுக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் நடவடிக்கைகளையும் ஆராயும் பொருட்டு, மூன்று அகிலங்களின் செயற்குழுக்களும் பங்கெடுத்துக் கொள்ளும் சர்வ தேச மகாநாடு கூட்டப்பட வேண்டும் என்று இந்த யோசனையில் கூறப்பட்டிருந்தது. ஜனவரி, 21ந் தேதி, கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வது அவசியம் என்று கருத்து தெரிவித்து, செயற்குழுவின் விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இந்தப் பிரச்சினையை ஆலோசனைக்குச் சேர்த்துக் கொண்டது.

நடக்கவிருந்த மகாநாட்டுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவை ஆயத்தப்படுத்துவதில் லெனின் ஊக்கத்துடன் பங்கு கொண்டார். கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதிக் குழு கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான கொள்கைப் போக்கை அவர் குறித்தார். ''மகாநாட்டில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகளின் பட்டியல் முன்கூட்டிச் சிந்திக்கப்பட்டு, மகாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு தரப்பாருடனும் கலந்து ஆலோசித்த பின்னரே தயாரிக்கப்பட வேண்டும்'' என்று அவர் எழுதினார். ''நம் தரப்பில், செயலாற்றும் மூன்று தரப்புக்களில் ஒவ்வொன்றும் பத்திரிகைகளுக்கு விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கைகளில் விவாதத்துக்கு இடமற்றவை என்று ஒப்புக் கொண்டிருக்கும் துறையில் தொழிலாளி வெகுஜனங்களின் நடைமுறையான நேர்முகக் கூட்டு நடவடிக்கைகள் சம்பந்தமான பிரச்சினைகளை மட்டுமே நாம் இந்தப் பட்டியலில் வைக்க வேண்டும்.''[1] புரட்சி ஸ்தாபனங்களுக்கும் சீர்திருத்தவாத ஸ்தாபனங்களுக்கும் இடையே அடிப்படையான கருத்து வேற்றுமை இருந்தாலும் தொழிலாளி வெகுஜனங்களின் நடவடிக்கை ஒற்றுமையைப் பெற முடியும் என்றும் அதைப் பெற முயற்சி செய்யும்படியும் கம்யூனிஸ்டுகளை லெனின் மீண்டும் கேட்டுக் கொண்டார். ஆனால், ஒன்றித்த கூட்டணியைக் குலைக்கும் நோக்கத்துடன் சீர்திருத்தவாதிகள் மென்ஷிவிக்குகளிடமும் பிறரிடமும் கடைப்பிடிக்க வேண்டிய உறவுகள் பற்றிய பிரச்சினையை விவாதத்துக்குக் கொண்டுவந்தால், 1912ம் வருடத்து பாஸேல் அறிக்கை விஷயத்தில் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள் கடைப்

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 393.

பிடித்த கொள்கைமாறிப் போக்கையும், சீர்திருத்தவாதக் கட்சிகள் ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகளின் கொலையில் தாங்கள் ஆதரிக்கும் பூர்ஷ்வா அரசாங்கங்களின் வாயிலாகப் பங்கு கொண்டதையும், காலனிகளில் புரட்சிக்காரர்கள் கொலை செய்யப்படும் விஷயத்தில் இந்தக் கட்சிகள் மேற்கொள்ளும் இதே போன்ற போக்கையும் பிறவற்றையும் விவாதத்துக்குக் கொண்டுவரக் கம்யூனிஸ்டுகள் முயற்சி செய்ய வேண்டும் என்று லெனின் யோசனை கூறினார். ''இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களைப் புரட்சிக்கு எதிரான உலக பூர்ஷ்வாக் கூட்டணியில் ஒத்திசைவு இன்றி, ஊசலாட்டத்துடன் பங்கு கொள்பவை என்று மட்டுமே நாம் கருதுகிறோம் என்பதை அதிகாரபூர்வமாக அறிவிக்க நாம் வாய்ப்பு தேடிக் காண வேண்டும். நாம் ஒன்றித்த கூட்டணி பற்றிய மகாநாட்டில் கலந்து கொள்வது, வெகுஜனங்களின் நேரடியான நடவடிக்கைகளில் சாத்தியமான அளவு நடைமுறை ஒற்றுமையைப் பெறுவதற்காகவும் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் நிலைகள் அனைத்தும் அரசியல் நோக்கில் சரியில்லாதவை என்பதை அம்பலப்படுத்துவதற்காகவுமே என்பதையும் அதிகாரபூர்வமாக அறிவிக்க நாம் வாய்ப்பு தேடிக் காண வேண்டும்...''[1] என்று எழுதினார் லெனின். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைச் சமயோசித சாமர்த்தியத்துடன் கடைப்பிடிப்பதன் இன்றியமையாமையைப் பல முறை வலியுறுத்திய அதே சமயத்தில், கம்யூனிஸ்டுக் கட்சியையும் சோவியத் ஆட்சியையும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தையும் பலவீனப்படுத்தக் கூடிய வகையில் கோட்பாட்டுரீதியான அரசியல் பிரச்சினைகளில் விட்டுக் கொடுப்பதை லெனின் தீவிரமாக எதிர்த்தார்.

1922, பிப்ரவரி 21 முதல் மார்ச்சு 4ந் தேதிவரை நடந்த கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது விரிவாக்கப்பட்ட முதலாவது முழுக் கூட்டத்தில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரம் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. முப்பத்தாறு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்ட நடவடிக்கைகளில் கலந்து கொண்டார்கள். லெனின், மூன்று அகிலங்கள் மகாநாட்டில் கலந்து கொள்வது சம்பந்தமான தீர்மானத்தின் நகலை ஆழ்ந்து படித்து விட்டு, இந்த நகல் தீர்மானம் முழுக் கூட்டத்தால் ஏற்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 394.

கப்படுவது முதல்தர முக்கியத்துவம் உள்ளது என்று எண்ணினர். நகலில் அவர் அனேகத் திருத்தங்கள் செய்தார். இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் தலைவர்களைக் குறித்துத் தீர்மானத்தில் கடுமையான சொற்களைப் பயன்படுத்துவது தகாது என்றும் இதைச் சாக்காக வைத்துக் கொண்டு அவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ள மறுக்க இடம் தரக் கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினர். ''நான் பிரேரித்துள்ளவற்றில் மிக முக்கியமான திருத்தம், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் தலைவர்களை உலக பூர்ஷ்வா வர்க்கத்தின் உதவியாளர்கள் என்று குறிக்கும் பாராவை நீக்குவதாகும்'' என்று எழுதினர் லெனின். ''...நாம் இந்தக் கயவர்களைத் திட்டி வருகிறோம், வேறோர் இடத்தில் ஆயிரந் தடவை திட்டப் போகிறோம். அவர்களை இன்னும் ஒரு முறை திட்டும் மனநிறைவைப் பெறுவதற்காக மிகப் பெருத்த முக்கியத்துவம் உள்ள நடைமுறைச் செயலுக்கு உலை வைக்கும் ஆபத்தை மேற்கொள்வது முற்றிலும் விவேகமற்றதாகும்.''[1]

கடும் விவாதத்துக்குப்பின் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது முழுக் கூட்டம் பெரும்பான்மை வாக்குக்களால் (இத்தாலிய, ஸ்பானிய வாக்குக்களுக்கும் பிரெஞ்சுப் பிரதிநிதிக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினரின் வாக்குக்களுக்கும் எதிராக) ஒன்றித்த கூட்டணி பற்றிய டிசம்பர் ஆய்வுரையை உறுதிப்படுத்தியது. உலகத் தொழிலாளர் ஸ்தாபனங்கள் அனைத்தினதும் மகாநாட்டில் கலந்து கொள்வது என அது தீர்மானித்தது. இந்த மகாநாடு உலகின் எல்லாத் தொழிலாளர் நிறுவனங்களுடையவும் உண்மையான, எல்லாத் தரப்புக்களையும் பிரதிபலிக்கும் பிரதிநிதியாக விளங்கும் பொருட்டு எல்லாத் தொழிற்சங்கங்களையும் அவற்றின் தேசிய, சர்வதேசிய சம்மேளனங்களையும் அதில் கலந்து கொள்ள வைக்க வேண்டும் என்று முழுக் கூட்டம் யோசனை கூறியது. ''தொழிலாளர் ஸ்தாபனங்களின் உலக மகாநாடு ஒரே ஒரு பெரிய பணியை மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும். சர்வதேச மூலதனத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் தற்காப்புப் போராட்டத்தை ஒழுங்கமைப்பதே இந்தப் பணி.''[2]

புதிய ஏகாதிபத்திய யுத்த அபாயம் பற்றிச் செயற்குழுவின் முழுக் கூட்டம் விவாதித்தது. ''யுத்தத்துக்கும் ஏகாதிபத்தியத்

---

[1] அதே நூல், பக்கங்கள் 400-01.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 269.

துக்கும் எதிராகப் போராடுவதற்குப் பாட்டாளி வர்க்கத்தின் அணி திரண்ட ஒன்றித்த கூட்டணியை நாம் நிறுவ வேண்டும்''[1] என்று தமது உரையில் கூறினர் கிளாரா த்ஸேத்கின். போர் மூளாது தடுக்கும் பொருட்டு வர்க்கப் போராட்டத்திற்கான கொள்கை வாத, ஸ்தாபன ஏற்பாடுகள் செய்யும்படி செயற்குழுவின் முழுக் கூட்டம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கடமை விதித்தது. யுத்தத்துக்குப் பிந்திய, சம உரிமை அற்ற எல்லா உடன்பிடிக்கைகளையும் ரத்து செய்ய வேண்டும், ஆயுதங்களைக் குறித்த வரம்புகளுக்குள் குறைக்க வேண்டும், போரின் விளைவுகளையும் நஷ்ட ஈட்டுச் சுமையையும் பூர்ஷ்வா வர்க்கம் ஏற்க வேண்டும் என்ற கோஷங்களுடனும் சோவியத் ருஷ்யாவைக் காப்போம் என்ற கோஷத்துடனும் வெகுஜனங்களை அணி திரட்டும்படி அது கம்யூனிஸ்டுக் கட்சிகளை அறைகூவி அழைத்தது. புதிய ஏகாதிபத்திய யுத்தங்களின் அபாயத்தை எதிர்த்தும் சமாதானத்திற்காகவும் போராடும்படி கம்யூனிஸ்டு அகிலம் உழைப்பாளி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து, வெகுஜனங்களின் உளமார்ந்த விருப்பங்களை வெளியிட்டது.

மூன்று அகிலங்களின் மகாநாடு

உலகத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஏற்பாடுகள் செய்வது பற்றி விவாதிக்கும் பொருட்டு, மூன்று அகிலங்களுடையவும் செயற்குழுக்களின் பிரதிநிதிகளது மகாநாடு, ஏப்ரல் 2 முதல் 5ந் தேதிவரை பெர்லினில் நடந்தது. ''நடக்கவிருக்கும் சர்வதேச மகாநாட்டில், தொழிலாளி வெகுஜனங்களின் நடைமுறைக் கூட்டுச் செயல்களுடன் தொடர்பு உள்ளவையும் தொழிலாளி வெகுஜனங்களைப் பிரிவுபடுத்தாதவையும் அவர்களை ஒன்று சேர்ப்பவையுமான பிரச்சினைகளை மட்டுமே விவாதிக்க வேண்டும்''[2] என்று கம்யூனிஸ்டு அகிலத்தினுடைய செயற்குழுவின் சார்பில் கிளாரா த்ஸேத்கின் முதல் கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

---

[1] Die Taktik der Kommunistischen Internationale gegen die Offensive des Kapitals. Hamburg, 1922, S. 143.

[2] சர்வதேச சோஷலிஸ்டு மகாநாடு (மூன்று அகிலங்களுடைய செயற்குழுக்களின் ஒருமித்த கூட்டம்). சுருக்கெழுத்து விவரம். மாஸ்கோ, 1922, பக்கம் 15.

மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராகவும் பிற்போக்குக்கு எதிராகவும் தற்காப்பு, புதிய ஏகாதிபத்திய யுத்தங்களுக்கான ஏற்பாடுகளுக்கு எதிர்ப்பு, சோவியத் ருஷ்யாவுக்கு உதவி, வெர்சேல்ஸ் உடன்படிக்கை, அழிவுக்கு உள்ளான பிரதேசங்களின் மீட்டமைப்பு ஆகிய பிரச்சினைகள் சர்வதேச மகாநாட்டில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பிரேரித்தது. ஆனால் இரண்டாவது அகிலத்தின் பிரதிநிதிக் குழுவின் சார்பில் எ. வாந்தர்வெல்தே சில நிபந்தனைகள் விதித்தார். கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்கங்களில் தங்கள் மையக் குழுக்களை அமைக்கக் கூடாது, செஞ்சேனை ஜார்ஜியாவிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும், ஜார்ஜியாவில் மென்ஷிவிக்குகளின் ஆட்சி மீண்டும் ஏற்பட வேண்டும், சோவியத் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட சோஷலிஸ்டுப்-புரட்சிவாதி பயங்கரவாதிகளின் வழக்கில் அவர்கள் தரப்பில் வாதாட இரண்டாவது அகிலத்தின் பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்பவை இந்த நிபந்தனைகள். இவை ஏற்றுக்கொள்ளப்பட்டால் தான் உலகக் காங்கிரஸ் கூட்டுவது சாத்தியம் ஆகும் என்று எ. வாந்தர்வெல்தே அறிவித்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது பிரதிநிதிக் குழு, இந்தக் கோரிக்கைகள் தன்னால் ஏற்க முடியாதவையாக இருப்பதால் இந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள மறுத்துவிடும். மகாநாட்டை முறித்த பழியை அதன் மேல் சுமத்திவிடலாம் என்ற எண்ணத்துடன் செய்யப்பட்ட ஆத்திரமூட்டும் வெளிப்படையான முயற்சி இது. இரண்டரையாவது அகிலத்தின் பிரதிநிதி ப. ஃபோர், இரண்டாவது அகிலத்தின் கோரிக்கைகளை எதார்த்தத்தில் ஆதரித்தார்.

இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் பிரதிநிதிக் குழுக்களது நடத்தைக் காரணமாக மகாநாட்டு வேலையில் நெருக்கடி ஏற்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவின் பிரதிநிதிக் குழு மகாநாட்டுத் தலைமைக் குழுவுக்கும் இரண்டரையாவது அகிலத்தின் பிரதிநிதிக் குழுவுக்கும் ஏப்ரல் 3ந் தேதி எழுதிய கடிதங்களில் தர்க்கத்தை நிறுத்தும் படியும் எல்லாப் பிரதிநிதிக் குழுக்களுக்கு முன்பும் ''சர்வதேசக் காங்கிரசில் பங்கு கொள்ள அவர்கள் தயாராய் இருக்கிறார்களா?''[1] என்ற கேள்வியை வைக்கும்படியும் யோசனை கூறியது. மகாநாட்டின் ஏப்ரல் 4ந் தேதிக்

[1] மை. ஆ. கூ., 495/18/86/219.

கூட்டத்தில் மாக்டொனுல்டும் ஆ: பௌவரும் முன்பு விடுத்த கோரிக்கைகளைச் சாராம்சத்தில் மீண்டும் விடுத்தார்கள். பொது உடன்பாடு செய்து கொள்ளும் பொருட்டுக் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதிக் குழு முக்கிய விஷயங்களில் விட்டுக்கொடுத்தது. சோவியத் அரசாங்கம் சோஷலிஸ்டுப்-புரட்சிவாதக் கட்சியைச் சேர்ந்த பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை விதிக்காது என்றும் அவர்களுடைய வழக்கில் பிரசன்னமாய் இருக்க இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் பிரதிநிதிகளை அனுமதிக்கும் என்றும் அது ஒப்புக் கொண்டது. ஒருதலைச்சார்பாக இவ்வாறு விட்டுக் கொடுத்தது கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் கட்டளைகளை மீறுவதாக இருந்தது. ''நாம் மிகவும் அதிகமான விலை செலுத்திவிட்டோம்'' என்னும் கட்டுரையில் லெனின் பின்வருமாறு எழுதினுர்: ''...இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் பிரதிநிதிகளது வற்புறுத்தல் காரணமாகக் கம்யூனிஸ்டு அகிலம் சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அரசியல் பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்து விட்டது... மாற்றுக நாம் எவ்விதச் சலுகையும் பெறவில்லை... பூர்ஷ்வா வர்க்கம் தன் ராஜதந்திரிகளின் வடிவில் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதிகளைக் காட்டிலும் திறமை வாய்ந்தது என்பதை இன்னொரு முறை காட்டி விட்டது. பெர்லின் மகாநாட்டின் படிப்பினை இது.''[1] நிறைவேறிய ஒப்பந்தத்தை உறுதிப்படுத்துவது அவசியம் என்று லெனின் கருதினுர். ஆயினும், சோவியத் ருஷ்யா விஷயத்திலோ, முதலாளித்துவத்துடன் போராடும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் பிற படைப் பிரிவுகள் விஷயத்திலோ ஏறத்தாழச் சம மதிப்புள்ள சலுகைகள் பெறுமல் சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அரசியல் பிரச்சினைகளில் விட்டுக்கொடுக்கக் கூடாது என்பதை விதியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கோரினுர்.

பெர்லின் மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையில் ஏப்ரல் 20, மே 1ந் தேதிகளில் கூட்டு மகாநாடுகள் நடத்துவதும் கூட்டாக நடவடிக்கைகள் மேற்கொள்வதும் சாத்தியம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. எட்டு மணி நேர வேலை நாளுக்காகவும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் மூலதனத்தின் தாக்குதலுக்கும் எதிராகவும், ருஷ்யாவின் புரட்சியைக் காப்பதன் பொருட்டும்,

---

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கங்கள் 333-34.

ருஷ்யாவில் பஞ்சத்துக்கு உள்ளானவர்களுக்கு உதவுவதற்காகவும், சோவியத் ருஷ்யாவுடன் எல்லா அரசுகளும் அரசியல், பொருளாதார உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளுமாறு கோரியும், ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணி அமைக்கும் பொருட்டும் இந்தக் கூட்டு நடவடிக்கைகள் நடத்தப்படலாம் என்று அறிக்கை கூறியது. தொழிலாளர் ஸ்தாபனங்களின் உலகக் காங்கிரசை விரைவில் கூட்டுவது அவசியம் என்று மகாநாடு கருத்து தெரிவித்தது. அடுத்து வரும் மகாநாடுகளுக்கும் காங்கிரசுக்கும் முன்னேற்பாடுகள் செய்வதற்காக ஒன்பது பெயர் (ஒவ்வொரு அகிலத்திலிருந்தும் மூன்று பிரதிநிதிகள்) கொண்ட ஒழுங்கமைப்புக் கமிட்டியை அது நிறுவியது. ஆயினும் காங்கிரஸ் கூட்டுவதற்கான நேரங்களையும் காங்கிரசில் கலந்து கொள்பவர்களையும் பற்றித் தெளிவான உடன்பாடு ஏற்படவில்லை.

அடிப்படையான அரசியல் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் கூட, மிக மிக உடனடியானவையும் தொழிலாளர்களுக்குப் புரியக் கூடியவையுமான நடைமுறைப் பிரச்சினைகளில் தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே உடன்பாடு காண்பது சாத்தியமே என்று பெர்லின் மகாநாட்டின் விளைவுகள், அவை என்னதான் அளவறுத்தவை ஆயினும், காட்டின. கம்யூனிஸ்டு அகிலத்தின் அரசியல் கொள்கைப் போக்கும், அது கடைப்பிடித்த ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரமும் சரியானவை என்பது கண்கூடாக உறுதிப்பட்டுவிட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது பிரதிநிதிக் குழு, இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் பிரதிநிதிகளுக்கு ஒருதலைச் சார்பாக விட்டுக் கொடுத்ததன் மூலம் மகாநாட்டில் ஆழ்ந்த தவறு செய்துவிட்டது என்றாலும், பெர்லினில் நிறைவேறிய ஒப்பந்தம் ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்கு வழிகோலியது, வெகுஜனங்களிடையே வேலையைக் கம்யூனிஸ்டுகளுக்கு எளிதாக்கிற்று. ''கம்யூனிஸ்டுகள் தங்களுக்குள்ளேயே குமைந்து கொண்டிருக்கக் கூடாது. ஓரளவு தியாகங்கள் செய்ய நேர்வதைக் கண்டு தயங்காமல், எந்தப் புதிய, கடினமான காரியத்திலும் ஆரம்பத்தில் ஏற்படும் தவறுகளைக் கண்டு அஞ்சாமல், பூர்ஷ்வா வர்க்கத்தின் பிரதிநிதிகள் தொழிலாளர்கள் மீது செல்வாக்கு செலுத்தி வரும் பூட்டிய கட்டிடத்துக்குள் புகும் விதத்தில் செயலாற்றக் கற்க வேண்டும்''[1] என்று இது

[1] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கங்கள் 333-34.

பற்றி எழுதினார் லெனின். இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் செல்வாக்கிற்கு இன்னும் உட்பட்டிருந்த தொழிலாளி வர்க்கத்தின் கணிசமான வட்டாரங்களிடையே வேலை செய்வது கம்யூனிஸ்டுகளுக்கு இன்றியமையாதது. என்று லெனின் வலியுறுத்தினார். பெர்லினில் ஒப்பந்தம் நிறைவேறிய பின், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் கொள்கையைத் தாக்கி விமர்சிப்பது ஓரளவு வேறு தன்மை கொண்டிருக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். இந்தத் தொழிலாளர்களைக் கடும் சொற்களால் அச்சுறுத்தாமல், அதிக விளக்கமாக, பொறுமையுடனும் விரிவாகவும் விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களுடைய பிரதிநிதிகள் பெர்லினில் ஏற்றுக்கொண்ட கோஷங்களுக்கும் சீர்திருத்தவாதக் கொள்கை அனைத்திற்கும் உள்ள சமரசப்படுத்த முடியாத முரண்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும். ''இந்த வெகுஜனங்கள் மூலதனத்துக்கு எதிராகப் போராட உதவும் பொருட்டு, சீர்திருத்தவாதம் அழிவு விளைப்பது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள உதவும் பொருட்டு, இதன் பொருட்டே, நாம் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை ஏற்றோம். அதைக் கடைசிவரை கடைப்பிடிப்போம்''[1] என்று எழுதினார் லெனின்.

பெர்லின் மகாநாட்டின் விளைவாகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்குச் சாதகமான வாய்ப்பு கிட்டியிருப்பதாகக் கம்யூனிஸ்டு அகிலம் கருதியது. முதன்மையாக சமாதானத்தின் பொருட்டும் ஜினேவா சர்வதேச மகாநாட்டில் சோவியத் பிரதிநிதிக் குழுவால் முன்வைக்கப்பட்ட உலக ஆயுதக் குறைப்புச் செயல்திட்டத்திற்கு ஆதரவாகவும் ஒன்றித்த போராட்டம் நடத்துவது இதனால் சாத்தியம் ஆகும் என்று அது அபிப்பிராயப்பட்டது. ஏப்ரல் 17ந் தேதி, லெனினும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி பொலிட்பியூரோவின் இதர தலைவர்களும் கையெழுத்திட்டு, பெர்லினில் இருந்த கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பிரதிநிதிக் குழுவுக்கு ஒரு தந்தி அனுப்பினார்கள். பிரதிநிதிக் குழுவின் செயல்பற்றிய மதிப்பீடு தந்தியில் இருந்தது, புதிய பணிகள் இடப்பட்டிருந்தன. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஜினேவா பேச்சுவார்த்தைகளின் போக்கு பற்றிய பிரச்சினையைத் தாமதமின்றி ஒன்பதின்மர் கமிட்டி முன் வைக்கும்படி பிரேரிக்கிறோம். ஆயுத ஒழிப்புப்

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 334.

பிரச்சினை காரணமாகவும் பெருத்த அயல்நாட்டு முதலாளிகள் வழங்கியுள்ள தனிப்பட்ட கடன்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நேசநாட்டினர் கோருவதன் காரணமாகவும் பேச்சு வார்த்தைகள் எந்தக் கணத்திலும் முறியக் கூடும். ஆயுத ஒழிப்புக் கோரிக்கை இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் கோரிக்கைகளில் ஒன்று என்பதைச் சுட்டிக்காட்டுங்கள். இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவர்கள் முடிவெடுக்காமல் இழுத்தடித்தால், செயற்குழுவின் அறிக்கையை நீங்களே வெளியிடுங்கள்; எதிர்ப்பு தெரிவிக்கும்படி எல்லாத் தொழிலாளர்களையும் வேண்டிக் கொள்ளுங்கள்.''[1]

ஏப்ரல் 18ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தினுடைய செயற்குழுவின் தலைமைக்குழு பெர்லின் மகாநாட்டில் நிறைவேறிய ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தியது. தொழிற்சங்க அகிலத்துடனும் ஆம்ஸ்டர்டாம் அகிலத்துடனும் பின்வரும் விஷயங்கள் பற்றி ஆலோசனைக் கூட்டம் நடத்தும் பிரச்சினை ஒன்பதின்மர் கமிட்டியின் விவாதத்துக்கு வைக்கப்பட வேண்டும் என்று அது பிரேரித்தது: 1) யுத்த அபாயத்துக்கு எதிரான போராட்டம்; 2) மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிரான போராட்டம். இதோடு, ஜினேவா மகாநாடு முறியும் அபாயத்தை ஒட்டி மூன்று அகிலங்களதும் கூட்டு நடவடிக்கையை ஒழுங்கமைக்க ஏற்பாடு செய்யும்படி ஒன்பதின்மர் கமிட்டியில் இருந்த தனது பிரதிநிதிகளை (இவர்களாவர் கிளாராத்ஸேத்கினும் ஃபுரோஸரும் ராதெக்கும்) கம்யூனிஸ்டு அகிலத்தினுடைய செயற்குழுவின் தலைமைக் குழு கேட்டுக்கொண்டது.

ஒன்பதின்மர் கமிட்டியில் இருந்த கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பிரதிநிதி, இரண்டரையாவது அகிலத்தின் தலைவர் ஆட்லருக்கும் ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர் வெல்ஸுக்கும் ஏப்ரல் 20ந் தேதி ஒரு தந்தி அனுப்பினார். செயற்குழுவின் தலைமைக் குழுவுடைய தீர்மானத்தில் கண்டுள்ள பிரச்சினைகள் பற்றி விவாதிக்கும் பொருட்டு ஒன்பதின்மர் கமிட்டியை நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் கூட்டும்படி தந்தியில் கூறப்பட்டிருந்தது.[2] இதற்குத் தேவையான அதிகாரம் தமக்கு இல்லை என்று வெல்ஸ் கூறிவிட்டதால் ஒன்பதின்மர் கமிட்டி கூடவில்லை.[3]

---

[1] மை. ஆ. கூ., 2/1/25669/1-2.

[2] மை. ஆ. கூ., 495/18/86/18.

[3] மை. ஆ. கூ., 495/18/86/19.

கூட்டு நடவடிக்கைகள் பற்றிய பெர்லின் மகாநாட்டு முடிவை முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வெகுஜனங்கள் உற்சாகமாக வரவேற்றார்கள். ஆஸ்திரியா, ஜெர்மனி, சுவீடன், நார்வே ஆகிய நாடுகளில் ஏப்ரல் 20ந் தேதியன்றும் மே 1ந் தேதியன்றும் ஒன்றித்த கூட்டணியின் கோஷங்களை முழக்கியவாறு தொழிலாளர்கள் பெருத்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தினார்கள். ஆனால் இது சீர்திருத்தவாதிகளின் நோக்கங்களுக்கு ஒத்துவரவில்லை. அவர்கள் ஒன்பதின்மர் கமிட்டிக் கூட்டத்தை எல்லா வகையிலும் தாமதப்படுத்தினார்கள், உலகத் தொழிலாளர் காங்கிரசுக்கான முன்னேற்பாடுகளுக்குக் குழி பறித்தார்கள்.

1922, மே 16ந் தேதி, ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் நடந்தது. லெனின் கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். முழுக் கூட்டம் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவில் இருந்த ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிக்கு ஆணைக் குறிப்புக்களின் நகலை (ஒன்பதின்மர் கமிட்டியைக் கூட்டுவது பற்றி) அனுப்பியது. குறுகிய கெடுவுக்குள் உலகத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டப்பட வேண்டும் என்ற வன்மையான கோரிக்கை இதில் அடங்கியிருந்தது. ''இரண்டாவது அகிலம் இந்தப் பிரச்சினையில் தனது மறைமுக அழிவு வேலையைத் தொடர்ந்தால் கம்யூனிஸ்டு அகிலம் ஒன்பதின்மர் கமிட்டியிலிருந்து தனது பிரதிநிதிகளை உடனே திருப்பி அழைத்துக் கொண்டு, சூழ்நிலைக்குப் பொருத்தமான வடிவத்தில் ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணிக்கு ஆதரவாகக் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தும்.

''சோவியத் ருஷ்யாவைக் காப்பது என்ற வாக்குறுதியைப் பொதுக் கொள்கைத் திட்டத்திலிருந்து அகற்றிவிட்டு, எட்டு மணி நேர வேலை நாளுக்கான போராட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கான போராட்டம் முதலியவற்றில் முழுக் கவனத்தையும் செலுத்த நாங்கள் முற்றிலும் தயார் என்று ஒன்பதின்மர் கமிட்டியில் உள்ள ருஷ்யப் பிரதிநிதி, ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் சார்பில் தகுந்த வடிவத்தில் அறிவிக்க வேண்டும்.

''இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள் தங்கள் கருத்தை மாற்றிக்கொண்டு, காங்கிரசைக் கூட்டுவதற்குச் சொல்லளவில் அல்ல, செயலளவில் ஆயத்தமாய் இருக்கும் பிரதிநிதிகளைத் தந்தால், எங்கள் பிரதிநிதிகளை ஒன்பதின்மர் கமிட்டிக்கு

மறுபடி அனுப்ப நாங்கள் தயாராயிருக்கிறோம் என்றும் அதே சமயம் அறிவிக்க வேண்டும்.''[1]

கம்யூனிஸ்டு அகிலத்தினுடைய செயற்குழுவின் தலைமைக்குழு ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் யோசனைக்கு மே 17ந் தேதி இணங்கியது. ஒன்பதின்மர் கமிட்டியில் தன் பிரதிநிதிகளுக்குப் பின்வருமாறு அறிவிக்கும் பொறுப்பை அது அளித்தது: ''கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் சோவியத் ருஷ்யாவின் அரசு நலன்களை நோக்கமாகக்கொண்டு வகுக்கப்பட்டிருப்பதாக இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் தலைவர்கள் பல முறை கூறியுள்ளார்கள். ருஷ்யக் கம்யூனிஸ்டுகளின் அறிக்கை, நிலைமை மாறானது என்று நிரூபிக்கிறது. ருஷ்யக் கம்யூனிஸ்டுகளின் அறிக்கை பற்றி அதிகாரபூர்வமான அறிக்கையை இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் பிரதிநிதிகளிடமிருந்து கம்யூனிஸ்டு அகிலம் முழுவதும் கோருகிறது. சோவியத் ருஷ்யாவுக்கு ஆதரவு அளிப்பது என்ற கோஷம் ஏதேனும் ஒரு வடிவத்தில் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் பிரதிநிதிகள் உண்மையாக வற்புறுத்தினால், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் இந்த அறிக்கையைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவும் அதன்மீது விவாதம் நடத்தவும் கம்யூனிஸ்டு அகிலம் தயாராய் இருக்கிறது.''[2] கம்யூனிஸ்டு அகிலத்தைப் பொறுத்தவரை ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி மக்களை, உழைப்பாளிகளின் உடனடிக் கோரிக்கைகளின் பொருட்டு பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான அவர்களது போராட்டத்தில் ஒன்று இணைப்பதே என்றும் இந்தச் செயல்தந்திரம் கடைப்பிடிக்கப்பட்டது விரிவான உழைப்பாளி வெகுஜனங்களின் நலன்களை நோக்கமாகக் கொண்டிருந்ததே தவிர, இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் கூறியது போல சோவியத் ருஷ்யாவின் வெளிவிவகாரக் குறிக்கோள்களை அல்ல என்று, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைமைக் குழுவினால் ஆதரிக்கப்பட்ட ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் முன்முயற்சி காட்டியது.

---

[1] மை. ஆ. கூ., 17/2/79/2.

[2] மை. ஆ. கூ., 495/2/12/108.

இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் தலைவர்கள் முற்றிலும் வேறு கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக் கொள்ளாமல் சர்வதேசத் தொழிலாளர் மகாநாடு கூட்டுவது பற்றி இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களைச் சேர்ந்த அனேகக் கட்சிகள் ஒன்பதின்மர் கமிட்டிக்குத் தெரியாமல் மே 21ந் தேதி கூடிச் சதியாலோசனை செய்தன. ஒன்பதின்மர் கமிட்டியின் மே 23ந் தேதிக் கூட்டத்தின் முடிவை இந்தச் செயல் முன்கூட்டித் தீர்மானித்துவிட்டது. கம்யூனிஸ்டு அகிலம் கமிட்டியிலிருந்து தான் விலகிக் கொள்வதாக இந்தக் கூட்டத்தில் அறிவித்தது. 1922ம் ஆண்டு வசந்தத்தில் ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணியை அமைக்கும் முயற்சியைச் சீர்திருத்தவாதத் தலைவர்களின் பிளவுபடுத்தும் கொள்கை குலைத்துவிட்டது. இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் வேண்டுமென்றே இதற்கு முயன்றார்கள் என்பதற்கு ஜெர்மன் சமூக-ஜனநாயகப் பத்திரிகை “Vorwärts” விளக்கமாகச் சான்று பகர்ந்தது: ‘‘தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமை கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகக் கடும் போராட்டம் நிகழ்த்துவதன் வாயிலாகவே மீண்டும் நிலை நாட்டப்பட முடியும்.’’[1] இரண்டாவது அகிலம், ‘‘மூன்றாவது அகிலத்துடன் சர்வதேச உடன்பாடு ஏற்படுத்துவதற்கான வருங்கால முயற்சிகளில் பங்கு கொள்ள முடியாது’’[2] என்று 1922, ஜூன் 18, 19 தேதிகளில் லண்டனில் நடந்த இரண்டாவது அகிலத்தின் மகாநாடு தீர்மானித்தது.

ஒன்பதின்மர் கமிட்டியில் இருந்த கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது பிரதிநிதிக் குழு மே 24ந் தேதியன்று எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. இரண்டாவது அகிலத்தின் தலைவர்களது பிளவுபடுத்தும் நடவடிக்கைகளை இது அம்பலப்படுத்தியது. ‘‘...உலகத் தொழிலாளர் காங்கிரசைக் கூட்டும் முயற்சி நிறைவேறுவதற்கு ஜெர்மனியிலும் பிரிட்டனிலும் சமூக-ஜனநாயகத் தலைவர்களின் எதிர்ப்பை முறியடிப்பது இன்றியமையாதது என்பதை இந்த முதல் முயற்சியின் அனுபவம் காட்டியது. இந்த நாடுகளில் ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்கான அன்றாட நடைமுறைப் போராட்டத்தில் கட்சி பேதம் இன்றித் தொழிலாளி வெகுஜனங்களை

---

1 „Vorwärts", 29. V. 1922.

2 மை. ஆ.கூ., 495/33/185/157-158.

ஒன்றிணைப்பது அவசியம் என்றும் பின்னால் இந்தக் கூட்டணி எல்லா நாடுகளிலும் பரவும் என்றும் இந்த முயற்சி காட்டியது.''[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் ஜூன் 7 முதல் 11ந் தேதிவரை நடந்தது. இரண்டாவது அகிலத்துக்கு எதிர்நிறையாக, பெர்லினில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவின் பிரதிநிதிக் குழுவினது செயலுக்கு அது ஒப்புதல் அளித்தது. ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை மேற்கொண்டும் கடைப்பிடிப்பதாக அது தீர்மானித்தது. பிரெஞ்சு, இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சிகளிலும் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்த ''இடது சாரி'' எதிர்த்தரப்பினரிடையிலும் பரவியிருந்த ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் பற்றிய குறுகிய பிரிவுவாதக் கருத்துக்களைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது முழுக் கூட்டம் தாக்கி விமர்சித்தது.

ஒன்பதின்மர் கமிட்டி தனது நடவடிக்கைகளை நிறுத்திய பிறகும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளர்களுடைய நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தும் முயற்சியைத் தொடர்ந்தன. ஜெர்மனியில் முடியரசுவாதப் பிற்போக்கு ஸ்தாபனங்களின் வளர்ந்துவந்த தீவிரச் செயல்களை எதிர்த்து உழைப்பாளிகளின் ஒன்றித்த போராட்டத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சி 1922ம் ஆண்டுக் கோடையில் முன்னின்று நடத்தி வைத்தது. ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சி, தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் வலது சாரித் தலைவர்கள் வெகு ஜனங்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி இந்த இயக்கத்தில் பங்கு கொண்டார்கள். ஆனால் பின்னர், உருவான ஒன்றித்த கூட்டணியை அவர்கள் பிளவுபடுத்தினார்கள். பிற்போக்குடன் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் எதார்த்தமான வெற்றிகள் பெறுவதற்கு இடையூறு செய்தார்கள்.

இத்தாலியில் ஒன்றித்த கூட்டணி அமைக்கும் பிரச்சினை, முதன்மையாக ஒன்றித்த பாசிஸ்டு-விரோதக் கூட்டணி அமைக்கும் பணி சிறப்பாகக் கடுமையாய் இருந்தது. பெரு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் அரசு இயந்திரமும் அளித்த ஆதரவைக் கொண்டு முசோலினியின் பாசிஸ்டுக் கும்பல்கள் அங்கே ஆட்சியைக் கைப்பற்ற வெறித்தனமாக முயன்றுகொண்டிருந்தன. அவை தொழிலாளர் நிறுவனங்களைத் தகர்த்தன, தொழிலாளர்

---

[1] "International Press-Correspondence", vol. 2, N 42, 27 May, 1922, p. 318.

இயக்கத்தின் துடியான ஊழியர்களைக் கொன்றன, பயங்கரச் செயல்களுக்கு உள்ளாக்கின. மேடைப் பிரசங்கங்கள், கடைக்கோடி இனவெறி, நாட்டு வெறிப் பிரசாரம் ஆகியவற்றின் துணையால் குட்டி பூர்ஷ்வாக்களையும் மக்களின் மிக மிகப் பின்தங்கிய வட்டாரங்களையும், பாட்டாளி வர்க்கப் போராட்டமே தங்கள் விபத்துக்களுக்குக் காரணம் என்று எண்ணியவர்களையும் பாசிஸம் தன் பக்கம் ஈர்த்தது.

ஜனநாயக சுதந்திரங்களைக் காப்பதில் அக்கறை கொண்டிருந்த தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், நகரக் குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோர் அனைவரையும் பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்திற்காக ஒன்றுதிரட்ட இத்தாலியப் ப்ாட்டாளி வர்க்க ஸ்தாபனங்கள் அந்த சமயத்தில் திறனற்று இருந்தன. தொழிலாளி வர்க்கத்தின் மீது பெருத்த செல்வாக்கு பெற்றிருந்த சோஷலிஸ்டுக் கட்சி ''சாத்துவிக எதிர்ப்புக்'' கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. 1921, ஆகஸ்டில் பாசிஸ்டுகளுடன் வெட்கக்கேடான ''சமரச உடன்படிக்கை'' செய்துகொள்ளும் அளவுக்கு அது இழிந்துவிட்டது. இரு தரப்பாரும் ஒருவருக்கு ஒருவர் பகை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில்லை என்று இதன் மூலம் வாக்குறுதி அளித்தார்கள். சோஷலிஸ்டுக் கட்சியின் இந்தச் செயல் பாசிஸத்துடன் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்துக்கு மிகப் பெருத்த தீங்கு இழைத்தது. பாசிஸ்டு எதிர்ப்பு இயக்கத்துக்குத் தலைமை ஏற்க இந்தக் கட்சி திறனற்றது என்பதை இந்த உடன்படிக்கை கண்கூடாகக் காட்டியது.

இத்தாலியின் இளம் கம்யூனிஸ்டுக் கட்சி பாசிஸத்துடன் தீவிரமாகப் போராடியது. ஆனால் அதன் தலைமை அ. போர்டிகாவின் தலைமையில் பிரிவுவாத நிலையை மேற்கொண்டது. பாசிஸம் ஆட்சிக்கு வந்தது, முந்திய பூர்ஷ்வா ஆட்சியின் வரம்புகளுக்குள் குறித்த ஆட்கள் அல்லது குழுக்களின் இடத்தில் வேறு ஆட்கள் அல்லது குழுக்கள் அரசாங்கத் தலைமைப் பீடத்தில் அமர்வதுதான் என்று அது தவறாகக் கருதியது. பாசிஸத்தின் உண்மையான தன்மையை அது புரிந்து கொள்ளவில்லை. பாசிஸத்தை எதிர்க்கத் தயாராய் இருந்த மற்றக் கட்சிகளுடனும் ஸ்தாபனங்களுடனும் ஒத்துழைக்க அது மறுத்துவிட்டது. இதன் விளைவாகப் புரட்சிகர முன்னணிப் பிரிவு தனிப்படுத்தப்பட்டது. ''பல்வேறு சமூகக் குழுக்கள் விஷயத்திலும் அவற்றின் அரசியல் கட்சிகள் விஷயத்திலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவ்வாறு செய்வதன்

வாயிலாக மிகுந்த பிற்போக்குள்ள சக்திகளைத் தனிப்படுத்தவும், ஜனநாயகத்துக்கும் சோஷலிஸத்துக்குமான போராட்டத்திற்கு இன்றியமையாத ஒத்துழைப்பை நிலைநாட்டவும் உள்ள வாய்ப்பு தொழிலாளி வர்க்கத்துக்குக் கிட்டாது போயிற்று.''[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்த பிரிவுவாதத் தவறுகளை நீக்க முயன்றது. ''அணிகளை ஒன்றுசேர்க்கும்படியும், பாட்டாளி வர்க்கம் வரவர அதிகரிக்கும் அளவில் வறுமையில் ஆழ்வதையும் பாசிஸ்டுப் பிற்போக்காளர்களின் தீவிரம் அடைந்து வரும் தாக்குதலையும் எதிர்த்துப் பொதுவான போராட்டம் நடத்தும் பொருட்டுத் தொழிலாளர் அரசாங்கம் நிறுவுவோம் என்ற கோஷத்தை மையமாகக் கொண்டு லட்சோபலட்சம் நகர, நாட்டுப்புறப் பாட்டாளிகளை ஒன்றிணைக்கும்படியும்''[2] இத்தாலியக் கம்யூனிஸ்டுகளையும் சோஷலிஸ்டுகளையும் அது அறைகூவி அழைத்தது. போர்டிகாவின் தலைமை பிரிவுவாத நிலையை மேற்கொண்டிருந்தாலும் இத்தாலியக் கம்யூனிஸ்டுகள் பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்ட வீரர்களின் முன்னணிகளில் இருந்தார்கள். வீரம், தன்னலமின்மை, பாசிஸத்துடன் இறுதிவரை போராடும் உறுதி ஆகியவற்றில் உழைப்பாளிகளுக்கு ஆதர்சமாக விளங்கினார்கள் அவர்கள்.

பாசிஸத்தின் தாக்குதலை நிறுத்துவது முடியவில்லை. பயங்கரவாத பாசிஸ்டு சர்வாதிகாரம், 1922, அக்டோபரில் இத்தாலியில் நிலைபெற்றுவிட்டது. தொழிலாளி வர்க்கம், இத்தாலிய மக்களின் ஜனநாயகச் சக்திகள் ஆகியவற்றின் பெருத்த தோல்வியை இது குறித்தது.

முதலாளித்துவ நாடுகளின் அரசியல் வாழ்வு அரங்கில் பாசிஸம் என்னும் மிகுந்த செயல்திறன் கொண்ட பிற்போக்குச் சக்தி தோன்றிவிட்டதையும், புரட்சி, ஜனநாயக இயக்கங்களை ஒடுக்கவும் தனது பகிரங்கமான பயங்கர சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும் அதைப் பயன்படுத்த ஏகபோக மூலதனம் முயன்றதையும் இத்தாலிய நிகழ்ச்சிகள் கண்கூடாகக் காட்டின. முசோலினி செய்த ஆட்சி மாற்றம், ஜெர்மனியிலும் போலந்திலும் பிற நாடுகளிலும் பாசிஸ்டு ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் மும்

---

[1] ப. தளியாத்தி. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி. மாஸ்கோ, 1959, பக்கம் 37.

[2] ''பிராவ்தா,'' 1922, ஜூலை 29.

முரம் ஆக உதவியது. பாசிஸ அபாயத்தை எதிர்த்துப் போராடுவது சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கு மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் உள்ளது ஆயிற்று. இந்தப் போராட்டத்தின் முறைகளையும் சாதனங்களையும் வகுப்பதும், பாசிஸத்துக்கு எதிராக அணி திரட்டக் கூடிய அரசியல் சக்திகள் எவை என்பதைத் திட்டப்படுத்துவதும், பாட்டாளி வர்க்கம் தன் புரட்சிக் குறிக்கோள்களை அடைவதற்கு பாசிஸ்டுவிரோதப் போராட்டம் வகிக்கும் இடத்தையும் முக்கியத்துவத்தையும் நிர்ணயிப்பதும் இன்றியமையாதவையாக இருந்தன. உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் இந்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, வாழ்க்கையே முன்வைத்த இந்தப் பிரச்சினைகளுக்கு விடை தேடியது.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரம் பற்றி நான்காவது காங்கிரஸ்

கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரஸ், 1922, நவம்பர் 5ந் தேதி பெத்ரோகிராதில் கூட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியது. அதன் அடுத்த கூட்டங்கள் மாஸ்கோவில் நடந்தன. காங்கிரசில் 58 கம்யூனிஸ்டுக் கட்சிகளும் அனேகத் தொழிலாளர் ஸ்தாபனங்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. 58 நாடுகளைச் சேர்ந்த 66 கட்சிகள், ஸ்தாபனங்களின் மொத்தம் 408 பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்து கொண்டார்கள். சான்றிதழ்க் கமிட்டியின் புள்ளிவிவரங்களின்படி அந்தக் காலப்பகுதியில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 12 லட்சத்து 53 ஆயிரம். முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர்கள் இவர்களில் 8 லட்சத்து 25 ஆயிரம் பெயர்.[1] 17 கட்சிகள் தங்கள் உறுப்பினர் எண்ணிக்கை பற்றிய தகவல்களைத் தரவில்லை.[2]

காங்கிரசின் முதல் கூட்டத்தில் வி.இ. லெனினது வரவேற்புத் தந்தி படிக்கப்பட்டது. ''கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பாதையில் எதிர்ப்படும் பிரமாண்டமான இடர்களைப் பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்டு அகிலம் வளர்ந்து வலுப்பெற்று வருகிறது'' என்று தந்தியில் கூறப்பட்டிருந்தது. ''பெரும்பாலான தொழிலாளர்களை நம் தரப்புக்குக் கொண்டுவருவதே இன்னும் நமது முக்கியப் பணி

---

[1] முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம், புரட்சி அலையின் வற்றம் தொடர்ந்ததும் பிற்போக்கின் தாக்குதலும், நிலையுறுதி அற்றவர்கள் விலகியதும் ஆகும். 1921-1922ல் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியில் துப்புரவாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

[2] மை. ஆ. கூ., 49/1/338/2.

யாக விளங்குகிறது. எது ஆயினும் சரியே, இந்தப் பணியை நாம் நிறைவேற்றுவோம்... முதலாளித்துவத்தை வீழ்த்துவதற்கான கடின மான போராட்டத்தில் உலகு அனைத்தினதும் தொழிலாளர்களுக்கு உதவுவது மிகப் பெரிய பெருமைக்குரிய செயல் என்று சோவியத் ருஷ்யா கருதுகிறது. வெற்றி நமதே.

''கம்யூனிஸ்டு அகிலம் நீடூழி வாழ்க!''[1]

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் விவர அறிக்கை, ''ருஷ்யாவின் புரட்சி நிறைவேறிய ஐந்து ஆண்டுகளும் உலகப் புரட்சிக்கான வாய்ப்புக்களும்'' என்னும் பொருள்பற்றிய லெனி னது விரிவுரை, முதலாளித்துவம் பாசிஸம் ஆகியவற்றின் தாக்கு தல், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம், தொழிற்சங்கங் களில் கம்யூனிஸ்டுகளின் வேலையினது நோக்கங்கள், பஞ்சத்திற்கு ஆளானவர்களுக்கு உதவி, கிழக்குப் பிரச்சினை, நிலப் பிரச்சினை, இளைஞர் இயக்கம், கூட்டுறவு இயக்கம், மாதர்களுக்கிடையே வேலை, கம்யூனிஸ்டுகளின் போதனை வேலை, வெர்சேல்ஸ் சமாதான உடன்படிக்கை ஆகியவை பற்றியும் சில கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிலைமை பற்றியும் காங்கிரஸ் விவாதித்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைவர் ஸினோவியெவ் சமர்ப்பித்த செயற்குழுவின் விவர அறிக்கையிலும், மூலதனத் தின் தாக்குதல் பற்றி ராதெக் ஆற்றிய உரையிலும் சர்வதேச நிலைமை பற்றிய மதிப்பீடு தரப்பட்டிருந்தது. அவை தொழிலாளி வர்க்கத்தின் தற்காப்புப் போராட்டத்தின் நோக்கங்களை விளக் கின, ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை மேற்கொண்டு கடைப்பிடிப்பதன் அவசியத்தை ஆதாரங்களுடன் நிரூபித்தன. புரட்சியின் வளர்ச்சி வாய்ப்புக்களை மதிப்பிடுவதில் ஸினோவியெ வின் விவர அறிக்கையில் ஆழ்ந்த தவறுகள் செய்யப்பட்டிருந்தன. உருவாகியுள்ள நிலைமையிலிருந்து மீள முதலாளித்துவத்துக்கு முடியாது என்று அவர் ஒரு புறம் கூறினார். அதே சமயம், மத்திய ஐரோப்பா முழுவதிலும் பாசிஸம் ஆட்சிக்கு வரும் என எதிர் பார்க்க வேண்டும் என்றார் அவர். இது புரட்சியை உருவாக்கும் காரணி என்று வலிந்துரைத்தார் ஸினோவியெவ். இத்தாலியில் பாசிஸம் ஆட்சிக்கு வந்திருப்பது வரலாற்றுத் தொலைநோக்கில் ''இந்த நாட்டில் நிலைமை கூர்மை அடைவதையும் பாட்டாளி

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 417.

வர்க்கப் புரட்சி முதிர்வதையும்''[1] குறிக்கிறது என்றூர் அவர்.

காங்கிரஸ் இந்த நோக்கு நிலையை ஏற்கவில்லை. பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தின் வருங்காலம் பற்றி ஸினேவியெவ் தந்த இடதுவாகானதும் அதே சமயம் சரணுகதித் தன்மை கொண்டதுமான மதிப்பீட்டை ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிகள் உட்படப் பெரும்பாலான பிரதிநிதிகள் நிராகரித்து விட்டார்கள். உழைப்பாளிகளின் புரட்சிப் போராட்டத்தை ஒடுக்குவதற்குச் ''சட்டபூர்வமான'' முறைகள் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு இப்போது போதவில்லை. எனவே அது ''தனிப்பட்ட புரட்சி எதிர்ப்புப் படையை நிறுவுகிறது. இந்தப் படை பாட்டாளி வர்க்கத்தின் எல்லாப் புரட்சி முயற்சிகளுக்கும் எதிராகச் செலுத்தப்படுகிறது. தன் நிலைமையை மேம்படுத்தும் பொருட்டுப் பாட்டாளி வர்க்கம் எல்லா வித முயற்சிகளேயும் வன்முறையால் நசுக்குவதற்கு மேலும் மேலும் அதிகமாகப் பயன்படுகிறது.''[2] காங்கிரசால் ஏற்கப்பட்ட செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரையில் இவ்வாறு கூறப்பட்டது. பாசிஸத்தின் வெளிப்படையான ஆதிக்கம் ''அதே சமயம் பொதுவாகவே பூர்ஷ்வா ஜனநாயகத்தின் அடிப்படைகளுக்கு எதிராகச் செல்கிறது''[3] என்றும், பூர்ஷ்வா வர்க்கம் ஜனநாயக ஆட்சியின் இடத்தில் புரட்சிவிரோத, பயங்கரவாதப் பிற்போக்கின் பண்பற்ற வடிவத்தைக் கொண்டுவர முயல்கிறது என்றும் காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. இது பாசிஸ்டு எதிர்ப்பு இயக்கம் விரிவாகத் தொடங்குவதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. பாசிஸ்டுகள் ஆயுதமேந்திய பயங்கரவாத ஸ்தாபனங்களே உருவாக்குவதோடு கூடவே, சமுதாய, நாட்டின வாய்வீச்சு வாயிலாக வெகுஜனங்களிடையே—விவசாயிகள், குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோர் இடையிலும் பாட்டாளி வர்க்கத்தின் பின்தங்கிய வட்டாரத்தினரிடையிலும் கூட—தங்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொள்ள முயல்வார்கள் என்று காங்கிரஸ் குறிப்பிட்டது. பாசிஸத்தின் இயல்பையும் தோற்ற மூலத்தையும் அதன் பாத்திரத்தையும் சமுதாய அடித்தளத்தையும் காங்கிரஸ் பகுத்

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலத்தினது நான்காவது காங்கிரசின் அறிக்கை'', மலர் 3, 1922, நவம்பர் 13, பக்கம் 2.

[2] ''நான்காவது காங்கிரசின் அறிக்கை'', மலர் 32, 1922, டிசம்பர் 9, பக்கம் 11.

[3] அதே நூல், பக்கம் 12.

தாராய்ந்தது. பாசிஸ அபாயம் பல முதலாளித்துவ நாடுகளில் நிலவுகிறது என்று அது கூறியது. பாசிஸ எதிர்ப்பை ஒழுங்கமைப்பது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியப் பணிகளில் ஒன்று என்று நான்காவது காங்கிரஸ் வரையறுத்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகள், ''பாசிஸ்டுக் கும்பல்களுக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்க வேண்டும். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை இங்கும் அவை ஊக்கத்துடன் கையாள வேண்டும். ஒழுங்கமைப்பின் சட்டப்புறம்பான முறைகளைக் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும்.''[1] கம்யூனிஸ்டு அகிலம், ஒன்றித்த கூட்டணிக் கொள்கையையே உழைப்பாளிகளின் பொது ஜனநாயக, அரசியல் கோரிக்கைகளுக்கும் அன்றாடத் தேவைகளுக்கும் ஆதரவான போராட்டத்துடன் மேலும் மேலும் நெருக்கமாக ஒன்றிணைத்தது.

இத்தாலியக் கம்யூனிஸ்டுகளைச் சந்தித்தபோது லெனின் கூறிய சொற்களை நான்காவது காங்கிரசில் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட க. ரவேரா நினைவுகூர்கிறார். ''ஜனநாயக உரிமைகளை, அவை பூர்ஷ்வா ஆட்சியால் அளவறுக்கப்பட்டிருந்தாலும் கூட, பெறுவதற்காகவும் காப்பதற்காகவும் தொழிலாளி வர்க்கம் எப்போதும் போராடுகிறது'' என்று லெனின் கூறினாராம். ''அவற்றை இழந்துவிடும் போது அவற்றை மீட்பதற்காக அது போராடுகிறது. அதோடு கூடவே தனக்குக் கூட்டாளிகளையும் தேடுகிறது...''[2]

முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டத்தின் அடுத்து வரும் வளர்ச்சி நேரடியான பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இட்டுச் செல்லக் கூடும், அல்லது இந்தப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் இடைக் கட்டங்கள் கொண்டிருக்கக் கூடும் என்று கம்யூனிஸ்டு அகிலம் கருதியது. ''பகிரங்கமான பூர்ஷ்வாப் பிற்போக்கு ஆதிக்கம் செலுத்தும் தற்போதையக் காலப் பகுதிக்கும் பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முழு வெற்றிக்கும் நடுவே பல விதக் கட்டங்கள் உள்ளன, பல வகையான குறுகிய கால நிகழ்ச்சிகள் சாத்தியம்'' என்று காங்கிரசின் ஆய்வுரை

---

[1] ''நான்காவது காங்கிரசின் அறிக்கை'', மலர் 32, 1922, டிசம்பர் 9, பக்கம் 12.

[2] லெனினைப் பற்றி. சமகால அயல்நாட்டினரின் நினைவுக் குறிப்புகள், பக்கம் 471.

யில் கூறப்பட்டது. ''கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் இந்தச் சாத்தியக் கூறுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவை புரட்சிக் கொள்கைகளை எல்லா வித நிலைமைகளிலும் காத்துப் போராட வல்லமை பெற்றிருக்க வேண்டும்.''[1] சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்கு முன் உள்ள இடைக்காலக் கட்டங்களைக் கருத்தில் கொண்டு, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் காங்கிரஸ் விரிவாக வகுத்தது, ''புதிய காலப்பகுதிக்கு இது நிர்ணயகரமான முக்கியத்துவம் கொண்டிருக்கும்.''[2] என்று காங்கிரஸ் அழுத்திக் கூறியது.

தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோஷம்

ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணிச் செயல்தந்திரத்தை விரிவுபடுத்தி, தொழிலாளி அரசாங்கம் அமைப்பது சாத்தியமா என்ற பிரச்சினையை நான்காவது காங்கிரஸ் ஆராய்ந்தது. இந்த கோஷம் ஆலோசிக்கப்பட்டபோது காங்கிரசில் கடுமையான விவாதம் மூண்டது. இடதுசாரி வரட்டுச் சூத்திரவாதிகள், இந்த கோஷத்தைப் ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பொருளைக் குறிக்கும் ஒப்புச் சொற்றொடர் மட்டுமே''[3] என்று வியாக்கியானம் செய்ய முயன்றார்கள். இந்தக் கருத்தை ஸினோவியெவ் ஆதரித்தார். தொழிலாளி அரசாங்கம் என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே, இது சோவியத் அரசாங்கத்தின் புனைபெயர் என்று 1922ம் ஆண்டுக் கோடையில் நடந்த கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு முழுக் கூட்டத்திலேயே அவர் கூறியிருந்தார்.[4] நான்காவது காங்கிரசின் பல பிரதிநிதிகள், ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிக் குழு உறுப்பினர்கள் உட்பட,

---

1 கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 298.

2 அதே நூல், பக்கம் 300.

3 ''நான்காவது காங்கிரசின் அறிக்கை,'' மலர் 4, 1922, நவம்பர் 14, பக்கம் 16.

4 "Bericht über Tätigkeit des Präsidiums und der Exekutive der Kommunistischen Internationale für die Zeit vom 6. März bis 11. Juni 1922," Hamburg, 1922, S. 123.

இத்தகைய கருத்துக்களை விமர்சித்தார்கள். தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோஷம் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்திலிருந்தே நேராகத் தோன்றி உள்ளது, வெகுஜனங்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதை எளிதாக்குகிறது என்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குப் பரிணமிப்பதற்குரிய சாத்தியமான வடிவமாக அதைக் கருத வேண்டும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

தொழிலாளி அரசாங்கம் பற்றிய பிரச்சினையை வரையறுக்கையில் கம்யூனிஸ்டு அகிலம், தங்கள் நாடுகளின் ஸ்தூல நிலைமைகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை அணுகுவதற்கு அல்லது அதற்குப் பரிணமிப்பதற்கு ஏற்ற வடிவத்தை நிர்ணயிக்க முயன்ற கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டது. இந்தக் கட்சிகள் இவ்வாறு செய்ததன் வாயிலாக சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்தினதும் கூட்டு அனுபவம் வளம் பெற உதவின. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிக் குழு தனது கட்சிச் செயல் திட்ட நகலைக் காங்கிரசின் ஆலோசனைக்கு முன்வைத்தது. அரசியல் ஆட்சியை வென்று பெறும் வரையில் மேற்கொள்ள வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள் மீது செயல்திட்ட நகலில் கணிசமான கவனம் செலுத்தப்பட்டிருந்தது. தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோஷமும் இவற்றில் அடங்கியிருந்தது. ஒரு புறம் பாட்டாளி வர்க்கத்துக்கும் மறு புறம் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் அதனுடன் தொடர்பு கொண்ட தொழிலாளித் தலைவர்களுக்கும் இடையே உள்ள அகாதம் ஆழமாகி, பெரும்பாலான பாட்டாளிகள் பூர்ஷ்வா ஜனநாயக வரம்புகளை உடைக்க இன்னும் ஆயத்தமாய் இராத காலத்தில், பாட்டாளி வர்க்கத்தின் சுயேச்சையான வெகுஜன இயக்கம் குறித்த அளவு ஏற்றமும் விரிவும் பெற்றுவிடும்போது பாட்டாளி வர்க்கத்தை பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சியிலிருந்து மேற்கொண்டு விடுவிப்பதற்கான தகுந்த சாதனமாக விளங்குவது தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோரிக்கை என்று அதில் கூறப்பட்டிருந்தது. அந்த நிலைமைகளில் தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோரிக்கை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான போராட்டத்தின் அதிக விரிவான ஆரம்பக் கட்டமாக இருக்கக் கூடும். ஆயுதந்தாங்கிய தொழிலாளர்களை ஆதாரமாகக் கொண்டு தொழிலாளி அரசாங்கம் அனேக அரசியல், பொருளாதார, நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கைகள், பூர்ஷ்வா அமைப்பின் சட்டபூர்வமான வரம்புகளை மீறுமல், தங்கள் சொத்தையும் முதலாளித்துவ லாபத்

தையும் நிர்வகிப்பதற்கு முதலாளிகளுக்கு உள்ள உரிமைகளை எதார்த்தத்தில் குறுக்குபவையாக இருக்க வேண்டும். பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்பு தொழிலாளி அரசாங்கத்தை அரைகுறை நடவடிக்கைகளின் வரம்புகளுக்கு வெளியே செல்லும்படி இயல்பாகவே கட்டாயப்படுத்தும். உற்பத்திச் சாதனங்கள் மீது பூர்ஷ்வாச் சொத்து உரிமையை முழுமையாக ரத்து செய்வதன் அவசியத்தையும் பழைய பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை உடைத்து எறிவதன் இன்றியமையாமையையும் வெகு ஜனங்கள் புரிந்து கொள்ளவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும் இது வழி கோலும். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் எ.மேயர், எ.ஹெர்ன்லே, வா. ஊல்பிரிஷ்த் ஆகியோர் சரிபார்ப்புக் கமிட்டியில், செயல்தந்திரம் பற்றிய ஆய்வுரையில் திருத்தங்கள் பிரேரித்தார்கள். தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோஷம் இவற்றில் இன்னும் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. இத்தகைய அரசாங்கங்களின் பல்வேறு வகைகள் அவற்றில் விளக்கப் பட்டிருந்தன. கமிட்டியும் பின்னர் காங்கிரசும் இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொண்டன.

பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுக்காக பூர்ஷ்வாக் கட்சிகளுடன் கூட்டணி அரசாங்கங்கள் அமைப்பதற்குச் சீர்திருத்தவாதிகள் செய்துவந்த முயற்சிகளுக்கு எதிராகத் தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோஷத்தைக் கம்யூனிஸ்டு அகிலம் முன்வைத்தது. இந்த கோஷம் எல்லா உழைப்பாளிகளதும் ஒன்றித்த கூட்டணி பற்றிய கோரிக்கை என்றும், பூர்ஷ்வா ஆட்சியுடன் போராடுவதற்கும் அதை இறுதியாக வீழ்த்துவதற்கும் பொருளாதார, அரசியல் துறைகளில் எல்லாத் தொழிலாளர் கட்சிகளுடையவும் கூட்டணி பற்றிய கோரிக்கை என்றும் நான்காவது காங்கிரஸ் கருதியது. தொழிலாளி அரசாங்கம் நாடாளுமன்ற அடிப்படையிலும் தோன்றக் கூடும். ஆனால், பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டே, வெகுஜனங்களைச் சார்ந்து புரட்சி இயக்கத்தைத் தீவிரப்படுத்தி வெகுஜனப் போராட்டம் நடத்துகையில் மட்டுமே இவ்வாறு செய்ய முடியும். பொதுக் கிளர்ச்சி கோஷம் என்ற முறையில் தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோஷம் அனேகமாக எங்கும் கையாளப்படலாம் என்று காங்கிரஸ் கூறியது. ஆனால், எந்த நாடுகளில் தொழிலாளிகளுக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையே நிலவும் ஒப்பு வலிமை காரணமாக அரசாங்கம் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது

நடைமுறையில் இன்றியமையாதது ஆகியிருக்கிறதோ அந்த நாடுகளில் இந்த கோஷம் உடனடி அரசியல் கோஷம் என்ற முறையில் முக்கியத்துவம் உள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு ஆகிவிடாத தொழிலாளி அரசாங்கத்தின் பணிகளில் பின்வருவன அடங்கும்: தொழிலாளி வர்க்கத்தை ஆயுதபாணி ஆக்குவது, புரட்சி எதிர்ப்பு பூர்ஷ்வா ஸ்தாபனங்களின் ஆயுதங்களைப் பறித்துக் கொள்வது, உற்பத்திமீது கண்காணிப்பைச் செயல்படுத்துவது, பெருமளவு வரிச் சுமையை உடைமையாளர்களின் வர்க்கங்கள் மீது ஏற்றுவது, புரட்சி விரோதிகளின் எதிர்ப்பை அடக்குவது. இந்த நடவடிக்கைகள் ஒத்திசைந்த முறையில் மேற்கொள்ளப்பட்டால் உழைப்பாளிகளுக்குப் புரட்சி போதனை அளிக்கவும் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சுற்றி அவர்களை அணி திரட்டவும் உதவும். சோஷலிஸப் புரட்சிக்குப் பரிணமிப்பதற்கான முன்னேற்பாடுகளையும் இவை செய்யக் கூடும்.

கம்யூனிஸ்டுகள் அல்லாத தொழிலாளர் கட்சிகளுடனும் தொழிலாளர் ஸ்தாபனங்களுடனும் சேர்ந்து தொழிலாளர் அரசாங்கம் அமைக்கத் தாங்கள் தயாராய் இருப்பதாகவும், இந்த அரசாங்கம் பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து உண்மையாகப் போராட்டம் நடத்தும் என்பதே அதற்குரிய நிபந்தனை என்றும் கம்யூனிஸ்டுகள் அறிவிக்க வேண்டும். இத்தகைய அரசாங்கத்தில் உறுப்பினர் ஆகும் கம்யூனிஸ்டுகள் தங்கள் கட்சியின் கண்டிப்பான கண்காணிப்புக்கு உட்பட்டிருக்க வேண்டும். வெகுஜனங்களின் புரட்சி ஸ்தாபனங்களுடன் அவர்கள் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். கம்யூனிஸ்டுக் கட்சி தனது சொந்த உருவத்தையும் தனது கிளர்ச்சியின் முழு சுதந்திரத்தையும் நிலையாக வைத்திருக்க வேண்டும். தொழிலாளி அரசாங்கம் அமைக்கப்படுவதும் அது நிலவுவதும் எல்லா நாடுகளிலும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்திலிருந்து பிரிக்க முடியாதது ஆகும்.

தொழிலாளி அரசாங்கம் பற்றிய கோஷம், வெகுஜனங்களை சோஷலிஸப் புரட்சிக்கு இட்டுச் செல்வதற்குரிய திட்டமான வழிகளின் தேட்டத்தில் முக்கியமான அடிவைப்பாக விளங்கியது. உழைப்பாளிகளின் அன்றாடப் பொருளாதார, அரசியல் நலன்களின் பாதுகாப்பிற்காகவும் பொது ஜனநாயகக் கோரிக்கைகளுக்காகவும் போராடும் கருத்தும் சோஷலிஸத்துக்கான போராட்டத்துக்கு வெகுஜனங்களை இட்டுச் செல்வதும் இதில் ஒன்றிணைந்தன.

பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய மார்க்சிய-லெனினிய போதனையின் படைப்புத்தன்மை உள்ள வளர்ச்சியாகத் திகழ்ந்தது இது.

"ருஷ்யாவின் புரட்சியினது
ஐந்து ஆண்டுகளும்
உலகப் புரட்சி
வாய்ப்புக்களும்."
லெனினது விரிவுரை

மார்க்சிய சித்தாந்தத்தையும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் திரட்டிச் சேர்த்துள்ள அனுபவத்தையும் தங்கள் நாடுகளின் ஸ்தூல நிலைமைகளுக்கு ஏற்பப் படைப்புத் தன்மையுடன் கையாளும்படி வி.இ. லெனின் கம்யூனிஸ்டுகளைக் கேட்டுக் கொண்டார். கம்யூனிஸ்டுக் கட்சிகள் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகத் தாக்குதலுக்கு மாறும் சாத்தியப்பாட்டை மட்டும் முன்கூட்டி ஆலோசிப்பதுடன் நின்று விடாமல், பின்வாங்கும் சாத்தியப்பாட்டையும் அவ்வாறு பின்வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதன் அவசியத்தையும் தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டும் என்று அவர் எச்சரித்தார். புரட்சி தாக்குதலை மேற்கொண்டு வெற்றி பெறும் போது எப்படிச் செயல்பட வேண்டும் என்று மட்டும் கம்யூனிஸ்டுகள் அறிந்திருப்பது போதாது. "புரட்சியின் போது பகைவன் அறிவை இழந்து விடும் கணங்கள் எப்போதுமே இருக்கும். அந்த மாதிரிக் கணத்தில் நாம் அவனைத் தாக்கினால் எளிதில் வெற்றி பெறலாம். ஆனால் இந்த வெற்றி எவ்வகையிலும் நிலையானது ஆகாது. ஏனென்றால் நமது பகைவனிடம் போதிய தாங்குதிறன் இருக்குமானால், முன்கூட்டி பலம் திரட்டிக்கொள்ளவும் வேறு ஏற்பாடுகள் செய்துகொள்ளவும் அவனால் முடியும். அப்போது நம்மை எளிதாகத் தாக்குதலுக்குத் தூண்டவும் பின்னர் பல ஆண்டுகளுக்குப் பின்னே தள்ளிவிடவும் அவனுக்கு இயலக் கூடும்."[1] இத்தாலியில் பாசிஸம் அடைந்த வெற்றியிலிருந்து கம்யூனிஸ்டுகள் படிப்பினை பெறுவது அவசியம். பாசிஸ அபாயம் காரணமாகப் பிற்போக்கை எதிர்த்துப் போராடுவது முதன்மையான பணி ஆகிவிட்டது என்று லெனின் கம்யூனிஸ்டுகளை எச்சரித்தார். இந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பெறும் அனுபவம், ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 421.

யின் புரட்சி அனுபவத்தைக் கற்கவும் கையாளவும் அவர்களுக்கு உதவும் என்றார் அவர். அயல்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் போல்ஷவிக் கட்சியின் அனுபவத்தை வரட்டுச் சூத்திரவாத நோக்கில் இன்றிப் படைப்புத் தன்மையுடன் கற்றுத் தேற வேண்டும். புரட்சி சித்தாந்தத்தை நடைமுறையில் கையாள அவர்கள் திறன் பெற வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினார். சோதரக் கட்சிகளின் மிக முக்கியப் பணி "...புரட்சி வேலையின் ஸ்தாபன அமைப்பையும் கட்டுமானத்தையும் முறையையும் உள்ளடக்கத்தையும் உண்மையாகவே புரிந்து கொள்வது"[1] ஆகும் என்று அவர் கூறினார்.

உள்நாட்டுப் போர் முடிந்த பின் சோவியத் நாட்டின் வளர்ச்சி குறித்த அடிப்படைப் பிரச்சினைகள், சோஷலிஸக் கட்டுமானத்தின் பணிகள், புதிய பொருளாதாரக் கொள்கையின் வெற்றிகள் ஆகியவற்றை லெனின் பகுத்து ஆராய்ந்தார். ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி, சோஷலிஸத்தின் வெற்றிக்கு வகை செய்யும் ஒரே சாத்தியமான கொள்கையை வகுத்துச் செயல்படுத்தி இருக்கிறது என்றும் அது வகுத்துள்ள வழியில் மற்ற எல்லா நாடுகளின் மக்களும் கட்டாயமாகச் செல்ல வேண்டி வரும் என்றும் போல்ஷிவிக் கட்சித் தலைவர் காட்டினார். "...நாங்கள் தொழிலாளர்களுக்காக ஆட்சியைக் கைப்பற்றினோம். எங்கள் முன் உள்ள குறிக்கோள் இந்த ஆட்சியின் உதவியால் சோஷலிஸ அமைப்பை நிறுவுவது ஆகும்" என்றார் லெனின். "எனவே சோஷலிஸ நிர்வாகத்திற்குப் பொருளாதார முன்னேற்பாடு செய்வது எங்களுக்கு எல்லாவற்றிலும் முக்கியமானதாக இருந்தது."[2] ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷவிக்) கட்சியால் கடைப்பிடிக்கப்படும் புதிய பொருளாதாரக் கொள்கை சோஷலிஸப் பொருளாதாரக் கட்டுமானத்துக்கு உரிய ஒரே சரியான வழியாகும். புரட்சி நிறைவேறிய உடனே பொருளாதார நிர்வாகத்தினதும் வினியோகத்தினதும் தூய சோஷலிஸ வடிவத்தைக் கையாள்வது சாத்தியம் அற்றதாக இருந்தது என்றார் அவர். பொருளாதார வளர்ச்சி விதிகளை எதார்த்த நோக்குடன் கவனத்தில் எடுத்துக் கொள்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். ஏற்க முடியாத வளர்ச்சி வேகத்தைத் தேசியப் பொருளாதாரத்தின் மீது சுமத்துவது உண்மையில் பெருத்த கேடு விளைக்கக் கூடும்,தேசியப் பொருளா

---

[1] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *33*, பக்கம் *432*.

[2] அதே நூல், பக்கம் *427*.

தாரத்தைக் குலைக்கக் கூடும், விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தை முறிக்கக் கூடும் என்றார் அவர்.

சோவியத் நாட்டில் தொழில் பெருக்கம் செய்வது பற்றித் தாம் முன்னர் வெளியிட்டிருந்த மிக முக்கியமான கருத்தைத்தம் உரையில் லெனின் விரிவாக விளக்கினார். "...கனரக இயந்திரத் தொழிலைக் காப்பாற்றாமல், அதை மீட்டமைக்காமல் எந்த விதமான தொழிலையும் நம்மால் நிறுவ முடியாது. அது இல்லாவிட்டால் சுதந்திர நாடு என்ற வகையில் நாம் மொத்தத்தில் அழிந்து போவோம். இதை நாம் நன்கு அறிவோம்"[1] என்றார் லெனின். கனரகத் தொழிலை மீட்டமைப்பதற்குத் தேவையான நிதி வசதிகள் திரட்டுவதற்குரிய ஊற்றுக்கள் எவை என்று அவர் சிறப்பாக ஆராய்ந்தார். இந்த நிதி வசதிகளை ஏற்படுத்துவதற்கு வர்த்தகத்தின் முக்கியத்துவத்தையும் மிகக் கண்டிப்பான சிக்கனம் கடைப்பிடிப்பதன் இன்றியமையாமையையும் அவர் வலியுறுத்தினார். ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் முதற்படியான பணி, அறிவியல்களில் தேர்ச்சி பெறுவதும், அரசு செலுத்தவும், தேசியப் பொருளாதாரத்தைச் சரியாக நிர்வகிப்பதற்கும் பயில்வதும், இடைவிடாது கற்பதுமே என்று லெனின் அறிவுறுத்தினார்.

சோவியத் நாட்டில் சோஷலிஸத்தின் வெற்றிக்குத் தேவையான அரசியல், பொருளாதார முன்னேற்பாடுகள் செய்வதற்கு ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியினுடைய முயற்சியின் அனுபவத்தை லெனினது உரை பொதுமைப்படுத்தியது. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தை இந்த அனுபவத்தால் அது வளப்படுத்தியது.

காங்கிரசின் பிரதிநிதிகள் போல்ஷிவிக் கட்சியின் செயல்களை வெகு உயர்வாக மதித்தார்கள். அது உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முன்னணிப் படை என்று அவர்கள் வருணித்தார்கள். "...'புதிய கொள்கை' ருஷ்யாவில் நிலவும் நிலைமைகளில் தவிர்க்க முடியாதது. அது மட்டுமல்ல, கம்யூனிஸத்துக்குப் பரிணமிப்பைச் செயல் படுத்துவதற்கும் அது இன்றியமையாதது" என்று கிளாரா த்ஸேத்கின் 1922, நவம்பர் 12ந் தேதி லெனினுக்கு எழுதினார். "Mutatis Mutandis[2] மற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கமும் அரசியல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், 'புதிய கொள்கை' என்னும் கடினமான பாதையில், ஆனால் உங்கள்

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 426.
[2] —ஏற்ற மாறுதல்களுடன்.— ப-ர்.

நாட்டில் இருப்பதைக் காட்டிலும் எவ்வளவோ அதிகச் சாதக மான சூழ்நிலையில் செல்ல வேண்டி இருக்கும்.''[1] சோவியத் ருஷ்யா, உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கு வரலாற்றுச் சிறப்புள்ள புரட்சி அனுபவத்தின் வளம் மிக்க பொக்கிஷமாக விளங்குகிறது என்று ருஷ்யப் புரட்சி பற்றிய நான்காவது காங்கிரசின் தீர்மானத்தில் கூறப்பட்டது. உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றித்த முயற்சி கள்தாம் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஏகாதி பத்திய வல்லரசுகளின் தாக்குதலிலிருந்தும் பூர்ஷ்வா அமைப்பு முறைகள் மீண்டும் நிலைபெறுவதிலிருந்தும் காக்க முடியும் என்று காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. சோவியத் ருஷ்யாவுக்கு ஆதரவு அளிக்கும்படி காங்கிரஸ் உலகு அனைத்தினதும் உழைப்பாளிகளைக் கேட்டுக் கொண்டது. சோவியத் நாட்டுக்குப் பாட்டாளி வர்க்கத் தின் உதவி குறித்துக் காங்கிரஸ் விவாதித்தது. எல்லாத் தொழி லாளர் கட்சிகளுடையவும் ஸ்தாபனங்களுடையவும்—முதன்மை யாகக் கம்யூனிஸ்டுகளுடையவும்—கடமை, சோவியத் ருஷ்யாவுக்கு அதன் பொருளாதாரத்தை மீட்டமைப்பதில் உடனடியான, எதார்த்த ஆதரவு அளிப்பதாகும் என்று காங்கிரஸ் வலியுறுத்தி யது. தங்கள் நாடுகளில் புரட்சிகரமான அரசியல் போராட்டம் நடத்துவதன் வாயிலாக மட்டும் இன்றி, விரிவான உழைப்பாளி வெகுஜனங்களால் திரட்டப்படும் பொருளாதார உதவிக்கு ஏற்பாடு செய்வதன் வாயிலாகவும் இந்த ஆதரவு அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் ''உலகின் முதலாவது தொழிலாளர் அரசான சோவியத் ருஷ்யாவை வலுப்படுத்தும் எல்லா வகையான செயல்களும், தனது வர்க்கப் பகைவனாகிய பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தை வலுப்படுத்துவதாக அர்த்தப்படும்.''[2]

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்ட நகல்மீது விவாதம்

காங்கிரசில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்ட நகல்மீது நடைபெற்ற விவாதம் படைப்புத் தன்மை கொண்டிருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் இரண்டாவது விரிவாக்

---

[1] மை. ஆ. கூ., *2/1/23461/1.*

[2] Protokoll des Vierten Kongresses der Kommunistischen Internationale. Hamburg, 1923, S. 936.

கப்பட்ட முழுக் கூட்டம், செயல்திட்ட நகலைத் தயாரிப்பதற்காகச் செயல்திட்டக் கமிட்டியை அமைத்தது. வி.இ. லெனின், கிளாரா த்ஸேத்கின், மா.கஷேன், ப. ஷ்மிரால், ஒ. கூஸினென், பேலா கூன், ஹ. கபாக்சீயெவ், ஸான் கத்தயாமா ஆகியோரும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிற தலைவர்களும் இதன் உறுப்பினர் ஆனார்கள். செயல்திட்டக் கமிட்டியின் கூட்டங்களிலும் கம்யூனிஸ்டுப் பத்திரிகைகளிலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி உற்சாகமான விவாதங்கள் நடந்தன. செயல்திட்டத்தில் தற்போதையக் காலக்கட்டம் பற்றிய தன்மை விளக்கமும் ஏகாதிபத்தியம் பற்றிய தன்மை விளக்கமும், சோஷலிஸப் புரட்சி தவிர்க்க இயலாதது என்பதற்கான ஆதாரங்களும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் பற்றிய போதனையும் அடங்கி இருக்க வேண்டும் என்று விவாதங்களில் கலந்து கொண்டவர்கள் கருதினார்கள். ஆனால், முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டம் குறித்த ஸ்தூலமான பிரச்சினைகளுக்குச் செயல்திட்டம் எவ்வாறு விடை அளிக்க வேண்டும், அரசியல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையுள்ள காலப்பகுதியில் வெவ்வேறு நாடுகளின் தனித்தன்மைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் யாவற்றிலும் பொதுவான கோஷங்களும் கோரிக்கைகளும் செயல்திட்டத்தில் எவ்வாறு முன்வைக்கப்பட வேண்டும் என்ற விஷயத்தில் வெவ்வேறு நோக்குநிலைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

வெகுஜனங்களைப் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பணிகளுக்கு இட்டுச் செல்லும் காலகட்டத்தின் உள்ளடக்கத்தைக் கொண்ட, கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய யாவற்றிலும் பொதுவான இடைக்காலக் கோரிக்கைகளை (தொழிலாளர் அரசாங்க கோஷம், உற்பத்திமீது தொழிலாளர் கண்காணிப்பு முதலியவை) செயல்திட்டத்தில் சேர்க்க வேண்டாம் என்று விவாதத்தில் கலந்துகொண்ட ஒரு சாரார் அபிப்பிராயப்பட்டார்கள். இந்தப் பிரச்சினைகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நேரடியான நடைமுறைச் செயல்களின் துறையைச் சேர்ந்தவை என்று அவர்கள் எண்ணினார்கள். எனவே, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தில் இவற்றைச் சேர்ப்பதற்கு அவர்கள் எதிராய் இருந்தார்கள்.

விவாதத்தில் கலந்து கொண்டவர்களில் கிளாரா த்ஸேத்கின், ப. ஷ்மிரால், ஏ. வார்கா ஆகியோர் உள்ளிட்ட மறு சாரார் வேறு

விதமாக எண்ணினார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் பொதுவாகத் தொழிலாளர் இயக்கப் போராட்டத்தின் கோட்பாடுகள் மட்டும் இன்றி, வெவ்வேறு நாடுகளில் அரசியல் ஆட்சி அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் நிலைநாட்டுவதற்கான போராட்டத்தின் ஸ்தூலமான நடைமுறை வழிகளும் மூலதனத்துக்கு எதிரான போராட்டத்திற்குத் தொழிலாளி வெகுஜனங்களை அணி திரட்ட உதவும் மிகப் பொதுவான இடைக்காலக் கோரிக்கைகளும் அடங்கிய போர்த்தந்திரத் திட்டத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அளிக்க வேண்டும் என்று இவர்கள் கருதினார்கள். பரிணமிப்புக் காலக் கோரிக்கைகள் எனப்பட்டவற்றுக்கும் சோஷலிஸப் புரட்சியின் முடிவான பணிகளுக்கும் உள்ள ஒப்பு உறவு பற்றிய பிரச்சினைகள் இந்த விவாதத்தின் மையமாக விளங்கின. காங்கிரசிலும் இந்த விவாதம் தொடர்ந்து நடந்தது.

புஹாரின் தயாரித்திருந்த செயல்திட்ட நகல், முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் பற்றிய தன்மை விளக்கமும், கம்யூனிஸ சமூகம் பற்றிய பொது வரையறுப்புக்களும், பாட்டாளி வர்க்கப் புரட்சியினதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினதும் பணிகளின் விவரமும் தருவதுடன் நின்றுவிட்டது.[1] கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிக்கு முன்னேற்பாடு செய்யும் பொருட்டு எந்த நடவடிக்கைகள் மேற்கொள்வது (எவ்வளவு) இன்றியமையாதது என்பது பற்றிய பகுப்பாய்வு அதில் இல்லை. மிகப் பொதுவான பரிணமிப்புக் காலக் கோரிக்கைகளையும் அம்சரீதியான கோரிக்கைகளையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தில் ஆதாரங்காட்டி விளக்குவதன் அவசியத்தை புஹாரின் அறவே மறுத்தார். அவருடைய நோக்கு நிலையைக் காங்கிரசில் கலந்துகொண்ட ஜெர்மானிய, பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் கடுமையாக விமர்சித்தார்கள். பரிணமிப்புக் காலக் கோரிக்கைகள் செயல்திட்டத்தில் சேர்க்கப்படுவதன் இன்றியமையாமையை அவர்கள் ஆதாரங்களுடன் நிலைநாட்டினார்கள். ''கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்திட்டம், அந்தச் சமயத்துக்கு உரிய தாற்காலிகக் கோரிக்கைகள் அடங்கிய கொள்கைத் திட்டமாக இருக்கக் கூடாது, ஆனால் நமது வரலாற்றுக் கண்ணோட்டத்தை சித்தாந்த நோக்கிலும் கோட்பாட்டு நோக்கி

---

[1] பார்க்க: கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் பற்றிய பிரச்சினை (விவரங்கள்), மாஸ்கோ, 1924, பக்கங்கள் 56-66.

லும் விளக்குவதாகவும் அதே சமயம், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையில் உள்ள பரிணமிப்புக் காலத்திலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் காலத்திலும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் எவற்றுக்காகப் போராடுமோ அந்த அடிப் படைக் கோரிக்கைகளை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும்''[1] என்றார் பல்கேரியக் கம்யூனிஸ்டு ஹ. கபாக்சீயெவ்.

புஹாரினால் தயாரிக்கப்பட்ட செயல்திட்ட நகல், ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிக் குழுவால் முன் கூட்டி விவாதிக்கப்படவில்லை. செயல்திட்ட நகல் மீது பொது விவாதம் நடத்துவதுடன் நின்று கொள்ளும்படியும் அதற்கு ஒப்புதல் அளிப்பதை ஒத்திவைக்கும் படியும் லெனின் காங்கிரசில் ஆற்றிய விரிவுரையில் யோசனை தெரிவித்தார். செயல்திட்டத்தை இன்னும் ஆழ்ந்த முறையிலும் சர்வாம்ச ரீதியாகவும் செப்பம் செய்வது, சிறப்பாகப் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத் தையும் குறித்த பிரச்சினைகளையும் பரிணமிப்புக்கால கோஷங்கள் பற்றிய பிரச்சினைகளையும் ''...சாத்தியமான பின்வாங்குதலையும் இந்தப் பின்வாங்குதலுக்கு ஏற்பாடு செய்வதையும் பற்றிய பிரச்சினையையும்'' ஆராய்ந்து வரையறுப்பது இன்றியமையாதது என்று லெனின் கருதினார். ''முதலாளித்துவம் வீழ்த்தப்பட்டு சோஷலிஸம் மிகப் பெருத்த கஷ்டங்களுடன் நிறுவப்படுவது என்ற மிக அடிப்படையான மாற்றங்கள் உலகு எங்கும் நிகழும் நிலையில் நாம் கட்டாயமாகக் கவனம் செலுத்த வேண்டிய பிரச் சினை ஆகும் இது.''[2] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தில் பரிணமிப்புக்காலக் கோரிக்கைகளுக்கு உரிய இடம் பற்றித் தனது கூட்டத்தில் விவாதிக்கத் தனக்கு வாய்ப்பு அளிக்கும்படி ருஷ்யா வின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிக் குழு காங்கிர சின் தலைமைக் குழுவை வேண்டிக்கொண்டது. காங்கிரஸ் தலைமைக் குழு இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது.

நவம்பர் 20ந் தேதியன்று ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷி விக்) கட்சிப் பிரதிநிதிக் குழுவின் தலைமைக் குழு, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்ட நகல் மீது லெனினது தலைமையில் விவா தம் நடத்தியது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்திட்டத்தில்

---

[1] அதே நூல், பக்கம் 101.

[2] வி.இ.லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கங்கள் 420-21.

பரிணமிப்புக்காலக் கோரிக்கைகள் சேர்க்கப்படுவதும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தின் பொதுப் பகுதியில் இவை பொதுவாகச் சூத்திரப்படுத்தப்பட்டு சித்தாந்த ரீதியான ஆதாரங்களுடன் நிலைநாட்டப்படுவதும் இன்றியமையாதவை என்ற கருத்தை அது வெளியிட்டது.[1] காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானத்தில், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தை உருவாக்குவதில் மேற்கொண்டு வேலை செய்வது அவசியம் என்று கூறப்பட்டது. எல்லாப் பரிணமிப்புக்கால, அம்சரீதியான கோரிக்கைகளுக்கும் சித்தாந்த ஆதாரங்கள் செயல்திட்டத்தில் அடங்கி இருக்க வேண்டும். ஒரு புறம் பிரிட்டன், மறுபுறம் இந்தியா முதலியன போன்ற வெவ்வேறு நாடுகளின் பொருளாதார, அரசியல் கட்டமைப்பில் நிலவும் அடிப்படை வேறுபாடுகளுக்கு இணங்க வெவ்வேறு தேசியப் பிரிவுகளின் பரிணமிப்புக்காலக் கோரிக்கைகளுடைய முக்கியமான வரலாற்று வகைகள் தெளிவாக விவரிக்கப்பட வேண்டும். இவ்வாறு தீர்மானம் கூறியது. ''செயல்திட்டத்தில் பரிணமிப்புக்காலக் கோரிக்கைகளைச் சேர்ப்பது சந்தர்ப்பவாதம் என்று கருதும் போக்கைக் காங்கிரஸ் உறுதியாகக் கண்டனம் செய்கிறது. அவ்வாறே, அம்சரீதியான கோரிக்கைகளால் முக்கியமான புரட்சிப் பணிகளை மறைக்கவோ மாற்றவோ முயல்வதையும் காங்கிரஸ் கண்டிக்கிறது'' என்று காங்கிரசின் தீர்மானத்தில் கூறப்பட்டது.[2] உழைப்பாளி வெகுஜனங்களைப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் பணியை எளிதாக்கும் திட்டவட்டமான வழிகளைத் தேடும்படி கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரஸ் தனது எல்லாத் தீர்மானங்களின் வாயிலாகவும் கம்யூனிஸ்டுகளை ஏவியது.

பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி அடைவது வரையில் உள்ள காலத்தில் நாட்டுப்புற உழைப்பாளி மக்களின் அன்றாட நலன்களுக்கு ஆதரவாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் முன்வைக்கும் கோஷங்களை (விவசாயப் பாட்டாளிகளின் நலன்களைக் காத்தும், மூலதனத்தால் ஏழை, நடுத்தர விவசாயிகள் சுரண்டப்படுவதற்கான எல்லா வடிவங்களையும் எதிர்த்தும், ஏழை விவசாயிகளை வரிகளிலிருந்து விடுவிப்பதற்காகவும், குத்தகைக்காரர்களின் நிலை

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 427.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது உலகக் காங்கிரஸ் தீர்மானங்கள். பெத்ரோகிராத், 1923, பக்கம் 107.

மையை மேம்படுத்துவதற்காகவும் குத்தகை விகிதத்தைக் குறைப்பதற்காகவும், குறைந்த நிலம் உள்ள எல்லா விவசாயிகளுக்கும் நிலமும் கால்நடைகளும் உற்பத்திச் சாதனங்களும் வழங்குவதற்காகவும் இவைபோன்ற பிறவற்றுக்காகவும் போராடுவது) நிலப் பிரச்சினை பற்றி நான்காவது காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்கள் ஸ்தூலப்படுத்தின. ஒவ்வொரு நாட்டிலும் நாட்டுப்புற உழைப்பாளி வட்டாரங்களின் நலன்களுக்காக இடையறாது போராடுவதன் வாயிலாகக் கம்யூனிஸ்டுக் கட்சி தான் உண்மையில் எல்லா உழைப்பாளிகளதும் ஒடுக்கப்பட்டவர்களுடையவும் கட்சி என்பதை நிரூபிக்க வேண்டும்.

ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியின் பொருட்டு

காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் தேசிய விடுதலை இயக்கத்தின் நிலைமையை நான்காவது காங்கிரஸ் விரிவாகப் பகுத்து ஆராய்ந்தது. அந்தக் காலத்திற்குள் சுயாதீனத்திற்காகத் துருக்கிய மக்கள் நடத்திய போர் வெற்றி அடைந்து விட்டது. இந்தியா, எகிப்து, மொரோக்கோ, சீனா, கொரியா ஆகிய நாடுகளில் விடுதலை இயக்கத்தின் ஏற்றம், கிழக்கு நாடுகளில் தொழிலாளர் இயக்கம் விழித்தெழுந்தது, கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவானது ஆகிய நிகழ்ச்சிகள், தேசிய-காலனிப் பிரச்சினையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் லெனினியக் கொள்கையும் தேசிய விடுதலை இயக்கம் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் உள்ளார்ந்த பகுதி என்ற லெனினது போதனையும் சரியானவை என்பதைக் கண்கூடாகக் காட்டின. காலனிகளிலும் அரைக்காலனிகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மையக்குழுக்களை அமைப்பதும், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியப் புரட்சி இயக்கத்துக்கு எல்லா வகையிலும் ஆதரவு அளிப்பதும், கம்யூனிஸ்டுக் கட்சிகளை இதன் முன்னணிப் படைப் பிரிவுகளாக மாற்றுவதும், தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரம்புகளுக்குள் சமுதாய இயக்கத்துக்கு விழிப்பூட்டி அதைத் தீவிரப்படுத்துவதும் கம்யூனிஸ்டுகளின் முதல் பணி என்று கம்யூனிஸ்டு அகிலம் கருதியது.

1922, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில், தூரக் கிழக்கு நாடுகளின் புரட்சி ஸ்தாபனங்களின் காங்கிரஸ் மாஸ்கோவிலும்

பெத்ரோகிராதிலும் நடைபெற்றது. சீனு, கொரியா, ஜப்பான், மங்கோலியா, இந்தியா, இந்தோனீசியா, சைபீரிய மக்களினங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்துகொண்டார்கள். தேசிய, காலனிப் பிரச்சினை பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசுகள் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு தூரக் கிழக்கு நாடுகளின் காங்கிரஸ் முழு ஒருமைப்பாட்டைத் தெரிவித்தது. ''ஒரு புறம் தேசியப் புரட்சி இயக்கங்களுக்கும் மறு புறம் தங்கள் சமுதாய விடுதலையின் பொருட்டு உழைப்பாளிகள் நடத்தும் போராட்டத்துக்கும் உள்ள பரஸ்பர உறவைச் சரியாகப் புரிந்து கொள்வது இன்றியமையாதது என்றும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டுச்சேர்ந்தே ஏகாதிபத்தியத்தால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் தூரக் கிழக்கு நாடுகளின் உழைப்பாளி வெகுஜனங்கள் தங்கள் தேசிய, சமுதாய விடுதலையைப் பெறமுடியும் என்று தான் கருதுவதாகவும்''[1] காங்கிரஸ் சிறப்பாகக் குறித்தது. ஜப்பானின் தொழிலாளர் இயக்கத்தின் முது பெரும் தலைவரும் ஜப்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவியவருமான ஸான் கத்தயாமா நான்காவது காங்கிரசில் உரை ஆற்றினுர். இந்தக் காங்கிரசில் ''நாம் ஒன்றித்த கூட்டணியை அமைத்துவிட்டோம். இதற்கு ஆதாரமாக இருந்தது, ஜப்பானிய, சீன, கொரியக் கம்யூனிஸ்டுகள் ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒன்றித்த கூட்டணி அமைத்திருப்பதே''[2] என்று அவர் கூறினுர்.

தேசிய-காலனிப் பிரச்சினை குறித்த கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கையை நான்காவது காங்கிரஸ் விரிவாக்கி ஸ்தூலப்படுத்தியது. ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி என்ற கோஷத்தை அது முன்வைத்தது. சுதந்திரக் குடியரசைப் போராடி அமைப்பது, எல்லா நிலப்பிரபுத்துவ உரிமைகளையும் சலுகைகளையும் ஒழிப்பது, நிலச் சீர்திருத்தம், முற்போக்குள்ள தொழிலாளர் சட்டங்கள் இயற்றுவது, அரசியல் அமைப்பை ஜனநாயகம் ஆக்குவது முதலியன, அதாவது, ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோத, ஜனநாயகப் புரட்சியைச் செயல்படுத்துவது கூட்டணியின் செயல்திட்டத்தில் அடங்கி இருந்தது. இத்தகைய புரட்சி வெற்றி பெறுவதற்கான நிபந்தனையாக விளங்குவது சர்வ

---

[1] மை. ஆ. கூ., *495/154/170.*

[2] ''நான்காவது காங்கிரசின் அறிக்கை'' மலர் *19, 1922,* டிசம்பர் *1,* பக்கம் *30.*

தேசப் பாட்டாளி வர்க்கத்துக்கும் சோவியத் குடியரசுகளுக்கும் இடையே ஐக்கியம் ஆகும். தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒத்திசைவின்மையைக் குறிப்பிட்டு, தேசியப் புரட்சி இயக்கத்தை ஆதரிப்பதன் இன்றியமையாமையையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் அடிப்படைப் பணிகளின் நிறைவேற்றத்தில் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்துக்கு உள்ள அக்கறையைப் பயன் படுத்துவதன் அவசியத்தையும் நான்காவது காங்கிரஸ் வலியுறுத் தியது. "காலனிகளிலும் அரைக்காலனிகளிலும் தொழிலாளர் இயக்கம் பொது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியில் சுதந்திர மான புரட்சிக்காரணி என்ற நிலையை முதலில் பெற வேண்டும். அதன் இந்தச் சுதந்திர நிலை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கு முழுமையான அரசியல் சுதந்திரம் இருப்பது உறுதிப்படுவதன் அடிப்படையிலேயே பூர்ஷ்வா ஜனநாயகத்துடன் தாற்காலிக ஒப்பந்தங்கள் செய்து கொள்ள அனுமதிக்கப்படலாம், அனு மதிக்கப்பட வேண்டும்."[1] இந்த நாடுகளின் விவசாயி, அரைப் பாட்டாளி வெகுஜனங்களுடன் கூட்டு சேர்வதற்குத் தொழிலாளி வர்க்கம் இடைவிடாமல் முயற்சி செய்ய வேண்டும்.

காலனிகளில் புரட்சி இயக்கம், விரிவான விவசாயி வெகுஜனங் களின் நடவடிக்கைகளை ஆதாரமாகக் கொண்டிராவிட்டால் வெற்றி அடைய முடியாது என்று காங்கிரஸ் அழுத்திக் கூறியது. கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்டுகள் முன்வைத்த நிலச் செயல்திட் டம், நிலப்பிரபுத்துவமும் அதன் மீதமிச்சங்களும் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்று கோரியது. தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் விவசாயி வெகுஜனங்களைச் செயலூக்கத்துடன் ஈடுபடச் செய்வதை இந்தச் செயல்திட்டம் நோக்கமாகக் கொண் டிருந்தது. தேசியப் புரட்சிக் கட்சிகள் தீவிர நிலச் சீர்திருத்தச் செயல்திட்டத்தை ஏற்குமாறு செய்யக் கம்யூனிஸ்டுகள் முயல வேண்டும் என்று ஆய்வுரையில் கூறப்பட்டது. பின்தங்கிய நாடு களின் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தினுடைய முன்னேற்றப் போக் குக்களை ஏகாதிபத்தியத்திற்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிரான போராட்டத்தின் நலன்களுக்காகப் பயன்படுத்துவது இந்த நாடு களைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளின் முக்கியமான பணி என்று கம்யூ னிஸ்டு அகிலம் வலியுறுத்தியது. நிலப்பிரபுக்களும் நிலப்பிரபுத் துவ அதிகாரவர்க்கமும் காலனிகளில் அயல்நாட்டு ஏகாதிபத்

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 322.

தியத்தின் ஆதாரத் தூண்களாக ஆற்றும் பங்கைக் காங்கிரஸ் குறிப்பிட்டது. அதே சமயம், எந்த நாடுகளில் நிலப்பிரபுத்துவ-தந்தைவழி அமைப்பு மேற்குடியினரை வெகுஜனங்களிலிருந்து முழுமையாக வேறுபடுத்தும் அளவுக்கு நிலை பெறவில்லையோ, அந்த நாடுகளில் ''இந்த மேற்குடியினரின் பிரதிநிதிகள் ஏகாதிபத்திய வன்முறைக்கு எதிரான போராட்டத்தில் ஊக்கமுள்ள தலைவர்களாகச் செயல்படக் கூடும்''[1] என்று அது கூறியது. ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் சேர்ந்த அனேகப் பின்தங்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கு இந்த நாடுகளில் போராட்டத்தின் சாத்தியமான வழிகள் யாவை என்ற கேள்விக்கு இந்த அறிவுரை விடை அளித்தது:

காங்கிரசின் ஆய்வுரையில் பின்வருமாறு கூறப்பட்டது: ''அரசு சுதந்திரம் பெற வேண்டும் என்னும் ஒரு நாட்டினத்தின் சங்கற்பத்தை வெளியிடுபவர்கள் வெவ்வேறு வரலாற்று நிலைமைகளில் மிக மிக வெவ்வேறு வகையினராக இருக்க முடியும் என்பதைத் தெளிவாகக் கருத்தில் கொண்டு, கம்யூனிஸ்டு அகிலம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எல்லா விதமான தேசியப் புரட்சி இயக்கத்தையும் ஆதரிக்கிறது. ஆயினும், அதே சமயம், மிக மிக விரிவான வெகுஜனங்களைச் செயல்முறைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒத்திசைந்த புரட்சிப் போக்கும், தங்கள் வர்க்க ஆதிக்கத்தின் நலன்களுக்காக ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்வதன் ஆதரவாளர்களோடு தொடர்பை அறவே துணித்துக் கொள்வதும்தான் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களை வெற்றிக்கு இட்டு வர முடியும் என்பதையும் கம்யூனிஸ்டு அகிலம் கவனிக்காமல் விடவில்லை.''[2] அரசியல் தலைவன் பாத்திரத்துக்குத் தன்னை ஆயத்தம் செய்துகொள்வதற்காகக் கிழக்கு நாடுகளின் பாட்டாளி வர்க்கம், ''தன்னையும் தன்னுடன் சேர்ந்த சமூக வட்டாரங்களையும்'' நீண்ட காலம் பயிற்றிக் கொள்ள வேண்டி இருக்கும் என்று காங்கிரஸ் கூறியது. ''சுயேச்சையான வர்க்க நலன்களைக் 'காத்துக்கொள்வது' என்ற சாக்கில் ஏகாதிபத்திய வன்முறைக்கு எதிராகப் போராட்டத்தில் கலந்துகொள்ளக் காலனிகளின் கம்யூனிஸ்டுகள் மறுப்பது படுமோசமான சந்தர்ப்பவாதம் ஆகும். கிழக்கு நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 318.

[2] அதே நூல், பக்கம் 319.

இது இகழ்ச்சியையே ஏற்படுத்தக் கூடும். 'தேசிய ஒருமைப்பாடு' அல்லது பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளுடன் 'பிரஜா சமாதானம்' என்பதன் பெயரால் தொழிலாளி வர்க்கத்தின் உடனடியான அன்றாட நலன்களுக்கான போராட்டத்திலிருந்து விலகி இருக்க முயல்வதும் இவ்வாறே கேடு விளைப்பது என்று கருதப்பட வேண்டும்.''[1] ''இன்னும் ஓரளவு தொடக்க நிலையில் இருக்கும்'' கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள், ''வெகுஜனங்களை அணுக வாய்ப்பு அளிக்கும் எல்லா வகையான இயக்கத்திலும் பங்கு கொள்ள வேண்டும்''[2] என்றும், காலனிகளையும் அரைக் காலனிகளையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் வாயிலாகவே புரட்சித் தலைவன் என்ற பாத்திரத்தை வகிக்க முடியும் என்றும், தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் ஒழுங்கமைப்பு, இந்தப் போராட்டத்தின் புரட்சி வீச்சை அதிகமாக்கும் என்றும் காங்கிரஸ் முடிவு செய்தது.

இவ்வாறு, ஒடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கரீதியான பணிகளும் தேசியப் பணிகளும் நான்காவது காங்கிரசின் ஆய்வுரையில் துலக்கமாக வரையறுக்கப்பட்டன. இந்தப் பணிகள் எந்த அளவிலும் ஒன்றுக்கு ஒன்று எதிராய் இல்லை என்பதோடு, ஒன்றை ஒன்று நிறைவும் செய்தன. கிழக்கு நாடுகளில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிச் செயல்தந்திரம், மேற்கு நாடுகளில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி கோஷத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இவை ஒரே செயல்தந்திரத்தின் வெவ்வேறு அம்சங்களாக இருந்தன. இந்தச் செயல்தந்திரத்தைக் கடைப்பிடிக்கையில் புரட்சிச் செயல்முறையில் பாட்டாளி வர்க்கத்தினுடையவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் தலைமைப் பாத்திரம், ஒன்றித்த கூட்டணியின் வரம்புகளுக்குள் விடாப்பிடியான இடையறாத அன்றாடப் போராட்டத்தின் வாயிலாகப் பெறப்பட்டது. ஏதேனும் ஒரு அரசியல் சக்தி இந்தக் கூட்டணியில் ''ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு'' இந்தத் தலைமைப் பாத்திரத்தை ஒப்புக் கொள்வது நிபந்தனையாகக் கருதப்படவே இல்லை. ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக்கான போராட்டம், ''பூர்ஷ்வா தேசியவாதத்தின் தனிப்பட்ட

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 321.

[2] அதே நூல், பக்கம் 322.

குழுக்களது ஊசலாட்டத்தையும் தயக்கத்தையும்அம்பலப்படுத்த''[1] உதவும் என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது.

புதிய நிலைமைகளில் வெகுஜனங்களைப் புரட்சிப் போராட்டத்தில் ஈடுபடச் செய்வதற்கு உரிய புதிய வழிகளும் வடிவங்களும் தோன்றக்கூடும் என்று தேசியவிடுதலை இயக்கத்தின் அடுத்து வந்த வளர்ச்சி காட்டியது.

காலனிகளில் வசித்த ஐரோப்பிய உழைப்பாளிகளும் உள்நாட்டினரும் ஒன்று சேர்வதற்கு இடையூறாக இருந்த தேசியவாத, இனக் காழ்ப்புக்களைக் கம்யூனிஸ்டு அகிலம் கடுமையாக எதிர்த்தது. ''காலனிகளில் வேலை, முதலாளித்துவக் காழ்ப்புக்களுக்கும் தேசியவாதக் காழ்ப்புக்களுக்கும் முழுக்க முழுக்க ஆட்பட்டுவிட்ட இத்தகைய நபர்களைச் சார்ந்திருக்கக் கூடாது. உள்நாட்டினரில் சிறந்த நபர்களை, முதன்மையாக உள்நாட்டுத் தொழிலாளி இளைஞர்களைச் சார்ந்திருக்க வேண்டும்''[2] என்று அது வலியுறுத்தியது. நான்காவது காங்கிரசால் ஏற்கப்பட்ட கிழக்கு நாடுகள் பிரச்சினை பற்றிய ஆய்வுரையில், சோஷலிசப் பாட்டாளி வர்க்க அரசுக்கும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்துக்கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் இடையே மிக நெருங்கிய ஐக்கியம் இன்றியமையாதது என்ற லெனினது போதனை இழையோடி இருந்தது. நான்காவது காங்கிரசால் முன்வைக்கப்பட்ட ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி என்ற கோஷம், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான போராட்டத்தில் மிக முக்கியமான தொண்டு ஆற்றியது.

வெகுஜனங்களிடையே கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலை பற்றி நான்காவது காங்கிரஸ். காங்கிரசின் முக்கியத்துவம்

வெகுஜனங்களிடையே கம்யூனிஸ்டுகளின் வேலையைத் தீவிரப் படுத்துவதற்கு, கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒழுங்கமைப்பாளராகவும் பிரசாரராகவும் கிளர்ச்சிக்காரராகவும் வெகு

---

[1] அதே நூல், அதே பக்கம்.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 349.

ஜனங்களின் போதகராகவும் இருக்கத் தேர்ச்சி பெறுவது இன்றிய மையாததாக இருந்தது. வெகுஜனங்களுக்குப் போதனை அளித்து அவர்களைப் பயிற்றும் துறையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நட வடிக்கை பற்றிய பிரச்சினையைக் காங்கிரஸ் தனிப்பட விவாதித் தது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டு எ. ஹெர்ன்லேயும் சோவியத் பிரதிநிதி நத்யேழ்தா குரூப்ஸ்கயாவும் உரை ஆற்றினார்கள். போதித்துப் பயிற்றும் வேலை கட்சிகளுக்கு உள்ளும் விரிவான உழைப் பாளி வெகுஜனங்கள் இடையிலும் நடத்தப்பட வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். இந்த வேலை வெகுஜனங்களின் அன்றாட நடைமுறையுடனும் அன்றாடப் போராட்டத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அவர்களை அரசியல் துறையில் போதித்துப் பயிற்றுவதையும், புரட்சிகர வர்க்கப் போராட்ட வீரர்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். கட்சியின் போராட்டத் திறனும் கிளர்ச்சிச் சக்திகளும் (ஒழுங்கமைப்புச் சக்திகளும் மேம்பாடும் தீவிரமும் அடைவதற்கு இந்த வேலை உதவ வேண்டும். கொள்கைவாத வேலையின் முக்கியத் துவத்தை போல்ஷிவிக் கட்சியின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு நத்யேழ்தா குரூப்ஸ்கயா விளக்கினார். ''...கம்யூனிஸ்டுக் கட்சி கிளர்ச்சியையும் பிரசாரத்தையும் அடிப்படை வேலை அனைத் திலிருந்தும் ஒருபோதும் பிரிக்கவில்லை'' என்றார் அவர். ''கிளர்ச்சி யையும் பிரசாரத்தையும் குறித்த பிரச்சினைகள் கட்சி வேலையின் சாராம்சமாக விளங்கின.''[1]

உழைப்பாளிகளின் வெகுஜன ஸ்தாபனங்களில்—தொழிற்சங் கங்களிலும் கூட்டுறவுக் கழகங்களிலும் மாதர், இளைஞர் நிறுவனங் களிலும்—கம்யூனிஸ்டுகளின் வேலையை நான்காவது காங்கிரஸ் விரிவாகப் பகுத்து ஆராய்ந்தது. பல்வேறு பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களை உழைப்பாளிகளின் நலன்களைக் காக்கும் ஆயுதங் களாகவும் அவர்களுக்குப் புரட்சிப் பயிற்சி அளிக்கும் சாதனங் களாகவும் மாற்றும்படி காங்கிரசின் தீர்மானங்கள் கம்யூனிஸ்டு களைப் பணித்தன. ஸ.அ.லஸோவ்ஸ்கியின் அறிக்கைப்படி,தொழிற் சங்க இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் பணிகள் பற்றிய ஆய்வுரை காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொழிற்சங்கங்களில் பிளவு ஏற்படாமல் தவிர்ப்பது, தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்று

---

1 ''நான்காவது காங்கிரசின் அறிக்கை'', மலர் 25, 1922, டிசம்பர் 5, பக்கம் 8.

மையைப் பாதுகாப்பது, சீர்திருத்தவாதிகளால் இந்த ஒற்றுமை குலைக்கப்பட்ட இடங்களில் அதை மீண்டும் ஏற்படுத்துவது ஆகிய வற்றுக்காக முயற்சி செய்வதன் இன்றியமையாமையை இந்த ஆய்வுரை வலியுறுத்தியது. 1922, நவம்பர் 19 முதல் டிசம்பர் 2ந் தேதிவரை மாஸ்கோவில் நடந்த தொழிற்சங்கங்களின் சிவப்பு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசால் நிறைவேற்றப்பட்ட தீர் மானங்களின் அடிப்படையாக விளங்கியது, தொழிற்சங்க இயக் கத்தின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவது என்னும் கோஷம்.

பழைய போல்ஷவிக்குகள் சங்கத்தின் உறுப்பினர் ஃபே. கோன் பிரேரித்த ஒரு தீர்மானம் நவம்பர் 30ந் தேதி ஏற்றுக் கொள்ளப் பட்டது. இதன்படி, புரட்சிப் போராட்ட வீரர்களுக்கு உதவும் சர்வதேச ஸ்தாபனத்தை நிறுவ முடிவு செய்யப்பட்டது. ''மூல தனத்துக்கு பலி ஆகி,சிறைகளில் வாடுபவர்களுக்குப் பொருளுதவி அளிப்பதும் உற்சாகம் ஊட்டுவதும்''[1] இந்த ஸ்தாபனத்தின் நோக்கம்.இவ்வாறு உருவான சர்வதேச ஸ்தாபனம், உழைப்பாளி களின் சர்வதேச ஒருமைப்பாட்டை வளர்த்து வலுப்படுத்துவதி லும், புரட்சி எதிர்ப்பாளர்களின் பயங்கர நடவடிக்கைகளுக்குப் பலியானவர்களுக்கும் பாசிஸத்தையும் யுத்தத்தையும் எதிர்த்துப் போராடியவர்களுக்கும் உதவி அளிப்பதிலும் பெருந் தொண்டு ஆற்றியது.சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல தலைவர் களான யூ. மர்ஹ்லேவ்ஸ்கி, கிளாரா த்ஸேத்கின், யெ. ஸ்தாஸவா, வி. பிக் ஆகியோர் இந்த ஸ்தாபனத்தின் வேலையை வழிகாட்டி நடத்தினார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் தனித் தனிப் பிரிவுகளின் நிலைமையை நான்காவது காங்கிரஸ் மிகுந்த கவனத்துடன் ஆராய்ந்தது. பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, செக்கோஸ்லோவாக்கியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், யூகோஸ்லாவியா, போலந்து, டென்மார்க், பிற நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நட வடிக்கைகள் காங்கிரசின் முழுக் கூட்டங்களிலும் கமிட்டிகளின் முழுக் கூட்டங்களிலும் விவாதிக்கப்பட்டன.காங்கிரசாலும் கமிட்டி களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், சமூக-ஜன நாயகவாதத்தின் மீதமிச்சங்களையும் வலதுசாரி சந்தர்ப்பவாத, பிரிவுவாத-வரட்டுச் சூத்திரவாதத் தவறுகளையும் களைவதிலும்

---

[1] நான்காவது காங்கிரசின் அறிக்கை, மலர் 27, 1922, டிசம் பர் 6, பக்கம் 16.

கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளைப் புதுவகையான மார்க்சிய-லெனினியக் கட்சிகளாக மாற்றுவதிலும் கட்சிகளுக்குப் பெருத்த உதவி செய்தன. 1922, டிசம்பர் 5ந் தேதி காங்கிரசின் கடைசிக் கூட்டத்தில் செயற்குழுவுக்குத் தேர்தல் நடந்தது. செயற்குழுத் தேர்தல் காங்கிரசின் கூட்டத்தில் நடைபெற்றது (அதற்கு முன் செயற்குழு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைக்கப்பட்டு வந்தது), ஒன்றித்த உலகக் கட்சி என்ற முறையில் கம்யூனிஸ்டு அகிலம் திண்மை பெற்றுவிட்டதையும் உலகக் கம்யூனிஸ்டு இயக்க ஒற்றுமை வளர்ந்திருப்பதையும் காட்டிற்று.

நான்காவது அகிலம் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த கூட்டணியை நிறுவுவதற்குப் புதிய நடவடிக்கை எடுத்துக் கொண்டது. ஆம்ஸ்டர்டாம் அகிலம், புதிய உலக யுத்த அபாயத்தை எதிர்த்த தொழிலாளி வெகுஜனங்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, 1922, டிசம்பர் மாதம் ஹேக் நகரில் சர்வதேச சமாதானக் காங்கிரசைக் கூட்டியது. கம்யூனிஸ்டு அகிலம் இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டது. இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களைச் சேர்ந்த கட்சிகளும், பூர்ஷ்வா சாத்துவிகவாத ஸ்தாபனங்களும், சோவியத் தொழிற்சங்கங்களும் கூட்டுறவுக் கழகங்களும் உட்படத் தொழிற்சங்கங்களும் கூட்டுறவுக் கழகங்களும் சமாதானக் காங்கிரசுக்கு அழைக்கப்பட்டிருந்தன. ஹேக் காங்கிரசிற்கும், இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களுக்கும், எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிற்சங்கங்களுக்கும் நான்காவது காங்கிரஸ் ஒரு பகிரங்கக் கடிதம் விடுத்தது. மூலதனத்தின் தாக்குதலுக்கும் யுத்த அபாயத்துக்கும் எதிராகவும் உற்பத்தி மீது கண்காணிப்புக்கும் எட்டு மணி நேர வேலை நாளுக்கும் ஆதரவாகவும், பாட்டாளிகளுக்கு வாழ்க்கை நடத்தத் தேவையான குறைந்தபட்சச் சம்பளத்தைக் கோரியும், பாட்டாளி வர்க்கத்தின் பொதுப் பணிகள் மூலம் ஒன்றுபட்டிருக்கும் தொழிலாளர் கட்சிகளைக் கொண்ட அரசாங்கத்தைத் தொழிலாளி வர்க்கத்தின் உடனடியான நலன்களுக்குரிய போராட்டக் கருவி என்ற முறையில் அமைப்பதற்காகவும் கூட்டாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி பகிரங்கக் கடிதம் அழைப்பு விடுத்தது.[1] சோவியத் தொழிற்

---

[1] பார்க்க: ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வரலாறு பற்றிய பிரச்சினைகள்,'' 1962, மலர் 1, பக்கங்கள் 144-148.

சங்கங்களின் பிரதிநிதிக் குழு, யுத்த அபாயத்துக்கு எதிராகவும் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைப்பதற்கு ஆதரவாகவும் போராடுவதற்கு ஹேக் காங்கிரசின் பிரசங்க மேடையைப் பயன் படுத்திக் கொண்டது. ஆனல் ஹேக் காங்கிரசின் பெரும்பாலராய் இருந்த சந்தர்ப்பவாதிகள் சோவியத் பிரதிநிதிக் குழுவின் யோசனைகளை நிராகரித்துவிட்டார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரஸ், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்திலும் கம்யூனிஸ்டு இயக்கத்திலும் முக்கிய மான இடத்தைப் பெற்றிருக்கிறது. காங்கிரஸ் ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணி பற்றிய செயல்தந்திரத்தை விரிவு படுத்தியது. பொது ஜனநாயகக் கோரிக்கைகளை வலியுறுத்தும் பணிகளுடன், முதன்மையாகப் பிற்போக்கையும் பாசிஸத்தையும் எதிர்த்துப் போராடும் பணிகளுடன் இந்தச் செயல்தந்திரத்தை அது இணைத்தது. வெகுஜனங்களைப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இட்டு வருவதற்கேற்ற புதிய வழிகளைப் படைப்புத்தன்மையுடன் தேடும்படி காங்கிரஸ் கம்யூனிஸ்டுக் கட்சிகளைப் பணித்தது. தொழிலாளி அரசாங்கம், தொழிலாளி வர்க்கம் ஆட்சிக்கு வரு வதற்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு மாறுவதற்கும் உரிய சாத்தியமான வடிவமாக இருக்க முடியும் என்று அது காட்டியது. ஒடுக்கப்பட்ட ஆதீன நாடுகளில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைப்பது என்ற கோஷத்தை நான்காவது காங்கிரஸ் முன்வைத்தது. இந்த நாடுகளில் ஏகாதி பத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிரான ஜனநாயகப் புரட்சிக்குரிய செயல்திட்டத்தை அது வகுத்தது.

சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் சித்தாந்தத்தையும் செயல்தந்திரத்தையும் விவரித்து விளக்குவதற்குக் கம்யூனிஸ்டு அகிலம் லெனினது நூல்களில் இருந்த உலகப் புரட்சி நிகழ்முறை யின் வருங்கால வாய்ப்புக்கள் பற்றிய பகுத்தாய்வை ஆதாரமாக எடுத்துக் கொண்டது. லெனினுடைய நூல்களில் சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானம் பற்றிய திட்டம் விரிவாக வகுக்கப்பட்டிருந்தது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக விளங்கியது இதுவே. உலகப் புரட்சி இயக்கத்தின் வருங்கால வாய்ப்புக்களைப் பகுத்தாராய்ந்து, பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெற்ற நாட்டின் சக்திகளும் முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் இயக்கச் சக்திகளும்

ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசிய-விடுதலை இயக்கச் சக்திகளும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒன்று சேரும் என்று லெனின் குறிப்பிட்டிருந்தார். இவை உலகின் பூரணமான, மிகப் பெரிய பெரும்பான்மை ஆகும் என்றார் அவர். புரட்சிகரப் படைப்புத் திறனை அவர் கம்யூனிஸ்டுகளுக்குக் கற்பித்தார். கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டத்தின் தனித் தன்மையையும் தங்கள் நாடுகளின் ஸ்தூல நிலைமைகளில் புரட்சியின் வளர்ச்சியையும் புரிந்து கொள்ள வல்லவர்களாய் இருக்க வேண்டும். தங்கள் நாட்டின் சூழ்நிலைக்கும், வர்க்கச் சக்திகளின் ஒப்புவலிமைக்கும், புரட்சிப் போராட்டத்தின் பணிகளுக்கும், உலகப் புரட்சி இயக்கத்தின் பணிகளுக்கும் பொருந்தக் கூடிய சரியான கொள்கையைக் கடைப்பிடிப்பதன் இன்றியமையாமையைக் கம்யூனிஸ்டுகள் அறிந்திருக்க வேண்டும் என்று லெனின் போதித்தார். சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம், கம்யூனிஸ்டு அகிலத்தின் மாபெரும் ஸ்தாபகரும் தலைவரும் ஆன விளாதீமிர் இலியீச் லெனினுடைய அறிவுரைகளைத் தன் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாகப் பிறழாது பின்பற்றி வருகிறது.

1923ம் ஆண்டுப் புரட்சி நிகழ்ச்சிகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும்

சர்வதேசச் சூழ்நிலை கூர்மையடைந்த நிலைமைகளில் ஒன்றித்த கூட்டணிக்கான போராட்டம்

கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரஸ், சர்வதேசச் சூழ்நிலையை விளக்குகையில், பூர்ஷ்வா வர்க்கத்தின் தாக்குதல் தொடர்ந்து நடந்த போதிலும் நிலைமை எதார்த்தத்தில் புரட்சித் தன்மை கொண்டிருக்கிறது என்றும், மிகச் சிறிய காரணம் மாபெரும் புரட்சிப் போராட்டங்களின் தொடக்கப் புள்ளி ஆகக் கூடும் என்னும் குறிப்பிட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் இந்த முன்னேக்கு 1923ம் ஆண்டு நடந்த புரட்சி நிகழ்ச்சிகளின் போது உறுதிப்பட்டது.

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் ரூர் பிரதேசத்தைப் படைபலத்தால் கைப்பற்றியதன் விளைவாக சர்வதேச நிலைமை திடீரெனக் கூர்மை அடைந்தது. 1923, ஜனவரி மாதம் எஸ்ஸேன் நகரில் ஒரு மகாநாடு கூடியது. பிரிட்டன், பெல்ஜியம், ஜெர்மனி, இத்தாலி, ஹாலந்து, பிரான்ஸ், செக்கோஸ்லோவாக்கியா ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய பிரதிநிதிகளும், ஜெர்மானிய, பிரெஞ்சுப் புரட்சிகரத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், தொழிற்சங்க அகிலம், இளைஞர் கம்யூனிஸ்டு அகிலம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். ரூர் கைப்பற்றப்பட்டதன் விளைவாக சமாதானத்துக்கு ஏற்பட்டுள்ள பெருத்த அபாயம் பற்றி ஐரோப்பிய உழைப்பாளி வெகுஜனங்களை மகாநாடு எச்சரித்தது. மூலதனத்தின் தாக்குதலையும் யுத்த அபாயத்தையும் எதிர்த்து ஒன்று சேர்ந்து போராடுவதற்கு அவர்களை அறைகூவி அழைத்தது.

புதிய யுத்தம் மூளவிடாது தடுப்பதற்குக் கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றிப் பேச்சுவார்த்தைகள் தொடங்கும்படி இரண்டாவது அகிலத்துக்கும் ஆம்ஸ்டர்டாம் அகிலத்துக்கும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் தொழிற்சங்க அகிலத்தின்

செயலகமும் சேர்ந்து யோசனை கூறின.[1] பாசிஸத்துடன் போராடுவதற்கும் இத்தாலியப் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவாகவும் கூட்டாக நடைமுறைச் செயல்களை ஒழுங்கமைப்பது பற்றிச் சீர்திருத்தவாதச் சங்கங்களுக்குப் புது வேண்டுகோள் ஜனவரி 15ந் தேதி விடுக்கப்பட்டது.[2] சீர்திருத்தவாதத்தின் தலைவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லா யோசனைகளையும் நிராகரித்து விட்டார்கள். ரூர் பிரதேசத்தில் பிரெஞ்சு-பெல்ஜிய ஆக்கிரமிப்புக்கு விரோதமாக சர்வதேச எதிர்ப்பு இயக்கம் தொடங்கும்படியும் பாசிஸ அபாயம் வளர்வதை எதிர்த்து ஊக்கத்துடன் விரிவான போராட்டம் நடத்தும்படியும் எல்லாத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் படையினரையும் கம்யூனிஸ்டு அகிலம் நேர்முகமாக அறைகூவி அழைத்தது.

ரூர் பிரதேசம் கைப்பற்றப்பட்டது, அதன் காரணமாக ஜெர்மனியின் பொருளாதாரத்துக்கு நேர்ந்த சங்கடங்கள், ஜெர்மானிய உழைப்பாளி மக்கள் முன்னிலும் கடுமையாகச் சுரண்டப்பட்டது ஆகியவற்றின் பயனாக நாட்டில் வர்க்கப் போராட்டம் புதிய ஏற்றம் பெற்றது. சமுதாய, தேசிய விடுதலையின் பொருட்டு ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டத்தின் முன்னணியில் இருந்தது ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி. கம்யூனிஸ்டு அகிலம் அதற்கு எல்லா வகையிலும் ஆதரவு அளித்தது. கம்யூனிஸ்டுக் கட்சி வேலைநிறுத்தத்தைத் தலைமை ஏற்று நடத்தியது. அயல்நாட்டு இராணுவத் தலையீட்டை எதிர்த்தும், அரசாங்கத்தின் இனவெறியையும் தேசிய விரோத, பிற்போக்குக் கொள்கையையும் எதிர்த்தும், உழைப்பாளிகள் சீரழிந்து வறுமை அடைவதற்கு எதிராகவும், பாசிஸத்துக்கும் தனித்து ஒதுங்கும் போக்குக்கும் எதிராகவும் நடந்த கிளர்ச்சிகளையும் கம்யூனிஸ்டுக் கட்சி தலைமை தாங்கி நடத்தியது. 1923, ஜனவரி 28 முதல் பிப்ரவரி 1ந் தேதி வரை ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ் லேப்ஸிக் நகரில் நடந்தது. உழைப்பாளி மக்களுடைய சமுதாய, ஜனநாயக உரிமைகளையும் நாடு அனைத்தின் நலன்களையும் காக்கும் பொருட்டு வெகுஜனப் போராட்டம் நடத்தும்படியும், தற்காப்புப் போராட்டத்தைத் தாக்கு நடவடிக்கைகளாக விரிவுபடுத்தும்படியும் தொழிலாளர் அரசாங்கம் அமைக்கும் படியும் காங்கிரஸ்

---

[1] "Internationale Presse-Korrespondenz", 1923, N. 11, S. 76.

[2] அதே சஞ்சிகை, இதழ் 17, பக்கம் 124.

கம்யூனிஸ்டுக் கட்சியைப் பணித்தது. காங்கிரசில் கலந்து கொண்ட இடதுசாரியினர் (ஃபிஷர், மாஸ்லவ் முதலியோர்) ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைச் சாராம்சத்தில் மறுக்கும்படி பிரதிநிதிகளை வற்புறுத்த மீண்டும் முயன்றார்கள். தொழிலாளி அரசாங்கம் என்னும் கோஷம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே என்று வியாக்கியானம் செய்ய அவர்கள் முயன்றார்கள். காங்கிரஸ் அவர்களுடைய கருத்துக்களை நிராகரித்து விட்டது. தொழிலாளி அரசாங்கம் என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குப் பரிணமிக்கும் கட்டம் என்று அது விளக்கம் தந்தது.

இவ்வாறு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ''ஒரே பாய்ச்சலில்'' நிலைநாட்டுவது இயலாது என்ற சரியான முடிவுக்கு ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தின் உதவியால் வந்தது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அடையும் வழியில் உள்ள இடைக்காலக் கட்டம் என்ற முறையில் தொழிலாளி அரசாங்கத்தை ஏற்படுத்தும் குறிக்கோளை அது வைத்துக் கொண்டது. இது கம்யூனிஸ்டு அகிலத்தினது நான்காவது காங்கிரசின் தீர்மானங்களின் ஸ்தூல வடிவமாக விளங்கியது. ஜெர்மனி போன்ற நாட்டில் வெகுஜனங்களைப் புரட்சிக்கு இட்டுச் செல்வதற்கான வழிகளை நடைமுறையில் நிர்ணயிப்பதில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகளின் முக்கியமான புதிய அடிவைப்பை இது குறித்தது. அதே சமயம், ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தையும் தொழிலாளி அரசாங்கத்தையும் பற்றிய ஆய்வுரையிலும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் காங்கிரஸ் செய்த வேறு சில தீர்மானங்களிலும் சரியில்லாத, தவறான சூத்திர வாக்கியங்கள் இருந்தன. பூர்ஷ்வா ஜனநாயகத்தின் வரம்புகளுக்குள் தொழிலாளி அரசாங்கம் நீடித்த காலம் நிலவும் என்ற வலதுசாரி சந்தர்ப்பவாத மருட்சி பரவுவதற்கு இவை இடம் அளித்தன. கம்யூனிஸ்டு அகிலமோ, தொழிலாளி அரசாங்கம் பூர்ஷ்வா வர்க்கத்தை இறுதியாக வீழ்த்துவதற்கான போராட்டச் சாதனம், அதாவது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அடைவதற்கான இடைக்காலக் கட்டம் என்று கருதியது. ஜெர்மானியக் கட்சியில் நிலவிய கருத்து வேறுபாடுகள் பற்றிய தீர்மானத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் லைப்ஸிக் காங்கிரஸ் தீர்மானங்களில் இருந்த தவறான சூத்திர வாக்கியங்களைச் சுட்டிக் காட்டியது. ''தொழிலாளி அரசாங்கம் நிலவும் ஜனநாயக நிலையங்களிலிருந்து செயல் தொடங்கலாம். பாட்டாளி

வர்க்கத்தின் மீது பூர்ஷ்வா வர்க்கத்தின் தாக்குதல் காரணமாக, சமூக-ஜனநாயகவாதிகளைப் பின்பற்றுபவர்கள் உட்பட விரிவான வெகுஜனங்கள் ஜனநாயகம் தங்களுக்கு அளிக்கும் சாதனங்கள் பாட்டாளி வர்க்க நலன்களுக்காகப் போராடுவதற்குப் போதியவை அல்ல என்று தெரிந்து கொள்ளும் போது இந்த நிலையங்களை ஒழிப்பது சாத்தியம் ஆகும். ஆனால், தொழிலாளி அரசாங்கம் தனது செயல்திட்டத்தை நிறைவேற்றவும் தான் நிலவுவதற்கு பூர்ஷ்வா வர்க்கத்தால் ஏற்படும் அபாயத்தை விலக்கவும் தொடங்கியதும், பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை அக்கணமே உடைத்து விட்டு, தனது சொந்தமான, பாட்டாளி வர்க்க அரசு இயந்திரத்தை நிறுவுவது அதற்குத் தேவைப்படும்''[1] என்று செயற் குழுவின் தீர்மானத்தில் கூறப்பட்டது. தொழிலாளி அரசாங்கம் பற்றிய பிரச்சினை ஜெர்மனியின் தனிப் பகுதிகளின் வரம்புகளுக்குள் திருப்தி கரமாகத் தீர்க்கப்பட முடியாது என்றும் அனைத்து ஜெர்மானியத் தொழிலாளி அரசாங்கத்தின் பொருட்டுப் போராடுவது அவசியம் என்றும் கம்யூனிஸ்டு அகிலம் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியை எச்சரித்தது. ''ஸக்ஸோனியாவின் சமூக-ஜனநாயக அரசாங்கத்துக்கு யூனியன் அரசாங்கத்தின் தரப்பில் ஏற்படும் அபாயத்தையும் நாடு முழுவதிலும் நிலவும் பாசிஸ அபாயத்தையும் அனைத்து ஜெர்மானியத் தொழிலாளி அரசாங்கம் நிறுவப்படுவதற்கு ஆதரவாக விரிவான தீவிர இயக்கத்தின் பொருட்டுப் பயன்படுத்துவது''[2] ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பணி ஆகும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கூறியது. செயற்குழுவின் இந்த அறிவுரைகளில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகளது தெளிவான வருங்காலத் திட்டம் அடங்கி இருந்தது.

ரூர் பிரதேசம் கைப்பற்றப்பட்டதையும் பாசிஸ்டுப் பிற்போக்கையும் புதிய யுத்த அபாயத்தையும் எதிர்த்துப் போராட்டத்தை ஒழுங்கமைக்கும் நோக்கத்துடன் ரைன்-வெஸ்ட்ஃபாலியா மாவட்டத்தின் தொழிற்சாலை-ஆலைக் கமிட்டிகளால் கூட்டப்பட்ட சர்வதேச மகாநாடு மைன் ஆற்றின் கரையிலுள்ள ஃபிராங்க்ஃபர்ட் நகரில் மார்ச்சு 17 முதல் 20ந் தேதி வரை நடந்தது. இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களும் ஆம்ஸ்டர்டாம் அகிலமும் மகாநாட்டில் கலந்து கொள்ள மறுத்துவிட்டன. கம்யூனிஸ்டு அகிலம்,

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1923, இதழ் 25, பக்கம் 6847.
[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1923, இதழ் 25, பக்கம் 6852.

கம்யூனிஸ்டு இளைஞர் அகிலம், தொழிற்சங்க அகிலம், ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள், புரட்சிகரத் தொழிற்சங்கங்கள் ஆகியவையும் ஜெர்மானிய வட்டார சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களும் தொழிற்சாலை-ஆலைக் கமிட்டிகளும் தங்கள் பிரதிநிதிகளை மகாநாட்டுக்கு அனுப்பின. மகாநாடு, ''எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கு!'' ஓர் அறிக்கை விடுத்தது. ரூர் பிரதேசத்தின்மீது பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக்காரத்தனமான தாக்குதல்,புதிய யுத்த அபாயம்,பாசிஸத்துக்கு எதிரான போராட்டம், ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணி அமைப்பது ஆகியவை பற்றி மகாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. யுத்த அபாயத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிராக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கு ஒரு சர்வதேசக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. கிளாரா த்ஸேத்கின், ஃப. ஹெக்கேர்த், அ. பர்பியூஸ் ஆகியோர் கமிட்டியின் தலைமையை ஏற்றுர்கள். சர்வதேசப் பரிமாணத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றித்த கூட்டணியை நிறுவ முயற்சி செய்யும் பொறுப்பு இந்தக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது.[1] சீர்திருத்தவாத சங்கங்களுக்கு ஒன்றித்த பாசிஸ்டு விரோதக் கூட்டணி அமைக்கும் பிரேரணையுடன் பிரதிநிதிக் குழுக்களை அனுப்புவது என்ற தீர்மானத்தை ஃபிராங்க்ஃபர்ட் மகாநாடு அங்கீகரித்தது. ஆனுல் வலதுசாரி இடைநிலைவாதப் பிளவுவாதிகளின் நேர்முக அழிவு வேலை காரணமாக இந்த முயற்சியும் வீணுயிற்று.[2]

எல்லா ஜனநாயக உரிமைகளும் சுதந்திரங்களும் ஒழிக்கப்பட்டு விட்டதும் இத்தாலியில் பயங்கரமும் வன்முறையும் கொண்ட ஆட்சியை பாசிஸ்டுகள் நிலைநாட்டியிருப்பதும் மற்ற முதலாளித்துவ நாடுகளின் மக்களுக்கும் அபாயம் ஏற்படுத்தி இருக்கிறது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு உழைப்பாளிகளை எச்சரித்தது. ''பாசிஸம் தொழிலாளி வர்க்கத்தின் ஏதேனும் ஒரு அரசியல் போக்குக்கு எதிராக அல்ல, தொழிலாளி வர்க்கம் அனைத்திற்கும் எதிராகச் செலுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில், எல்லாத் தொழிலாளர்களையும் தீவிரமாகச் சுரண்டுவதன் வாயிலாகவும் அரசியல் துறையில் முழுமையாக அடிமைப்படுத்துவதன் வாயிலாகவுமே முதலாளித்துவத்தை நிலைபெறச் செய்ய முடியும் என்று

[1] "Internationale Presse-Korrespondenz", 1923, N 52 S. 406-424.

[2] அதே சஞ்சிகை, இதழ் 75, பக்கங்கள் 651-652.

பூர்ஷ்வா வர்க்கம் கருதுகிறது.''[1] பாசிஸத்தின் ஆதிக்கம் ஏகாதிபத்திய யுத்தங்களுக்குத் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்லும். பாசிஸம் சமுதாய யுத்தத்தை எத்தகைய கொடுமையுடன் நடத்துகிறதோ, அதே போன்ற கொடுமையுடன் இந்த யுத்தங்களில் அது செயல் புரியும். பாசிஸத்துடன் போராடுவதில் இத்தாலிய உழைப்பாளிகளுக்கு நடைமுறை உதவி அளிக்கும்படி பிரான்சு, ஜெர்மனி, பிரிட்டன், அமெரிக்கா, பிற நாடுகள் ஆகியவற்றின் தொழிலாளர்களைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கேட்டுக் கொண்டது. **1923**, ஜனவரி 18ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு விடுத்த செய்தியில் பின்வருமாறு கூறப்பட்டது: ''இத்தாலிய பாசிஸத்தை எதிர்த்து நீங்கள் போராடும்போது உங்கள் விடுதலைக்காகப் போராடுகிறீர்கள். இத்தாலி அனுபவிக்க நேர்ந்துள்ள எதேச்சாதிகாரம், கொலை ஆகியவற்றின் ஆதிக்கம் மற்ற நாடுகளுக்குப் பரவும்படி ஒருபோதும் விடமாட்டீர்கள் என்று நீங்கள் ஆளும் வர்க்கங்களுக்குக் காட்டுகிறீர்கள்''.[2] பாசிஸம் இவ்வாறு பரவும் அபாயம் நாளுக்கு நாள் மேலும் கண்கூடாகப் புலப்பட்டது.

பொருளாதார நிலைமை ஆழ்ந்த சீர்கேடு அடைந்ததன் காரணமாக, தேசியவாத, இனவெறிக் கொந்தளிப்பை ஆதாரமாகக் கொண்டு ஜெர்மனியில் பாசிஸ்டு ஸ்தாபனங்கள் விரைவாக வளர்ந்தன. ஹிட்லரைத் தலைவனாகக் கொண்ட நேஷனல்-சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி (நாஜிக் கட்சி) எனப்பட்டது ஏகபோக மூலதனத்தின் ஆதரவைச் சார்ந்திருந்தது. பெரும் பூர்ஷ்வா வர்க்கத்தின் யாவற்றிலும் பிற்போக்குள்ள வட்டாரங்கள் அதற்கு நிதி உதவி செய்தன. பாசிஸ்டுகள் சமுதாய மேடைப் பிரசங்க முறையை விரிவாகக் கையாண்டார்கள். இனவெறியும் பழி வாங்கும் வெறியும் நிறைந்த கோஷங்களை முழக்கினார்கள். வர்க்கத்தன்மை இழந்த நபர்களிடையிலும், நகர, நாட்டுப்புறக் குட்டிபூர்ஷ்வா வட்டாரங்களிலும் நடுத்தர வட்டாரங்களிலும் தங்களுக்கு ஆதரவு தேட முயன்றார்கள். ஹிட்லரின் ஆட்கள் இராணுவ முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவுகளை அமைத்தார்கள். அவர்கள் தொழிலாளர்களின் கூட்டங்களைத் தாக்கினார்கள். மறைவிலிருந்து கம்யூனிஸ்டுகளைக் கொன்றார்கள். ஆட்சியைக் கைப்பற்ற ஏற்பாடு செய்தார்கள்.

---

[1] "Internationale Presse-Korrespondenz", 1923, N 19, S. 150.

[2] அதே சஞ்சிகை.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அலுவலகம், பாசிஸ, யுத்த அபாயத்தையும் ஃபிராங்க்ஃபர்ட் மகாநாட்டில் வெளியான தொழிலாளர்களின் ஒற்றுமை ஆர்வத்தையும் கருத்தில் கொண்டு, மே மாதம் 1ந் தேதியன்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு ஏற்பாடு செய்யும்படிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கடிதமூலம் கேட்டுக் கொண்டது. இந்தக் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''எங்கள் கருத்துப்படி நம் மே தின ஆர்ப்பாட்டங்கள் முதன்மையாக பாசிஸத்துக்கு எதிராக நடத்தப்பட வேண்டும். பாசிஸத்துக்கு எதிரான வெற்றிகரமான போராட்டத்துக்கு முதலாவது முக்கிய நிபந்தனையாக விளங்குவது ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணியின் வளர்ச்சி ஆகும்... நம் மே தின ஆர்ப்பாட்டங்கள், அச்சுறுத்தும் யுத்த அபாயத்துக்கு எதிராக நடத்தப்பட வேண்டும்''.[1] ''தொழிலாளர்களே, மே மாதம் முதல் தேதியன்று பாசிஸத்துக்கு எதிராகவும் யுத்த அபாயத்துக்கு எதிராகவும் ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணியின் பொருட்டும் சோவியத் ருஷ்யாவின் பொருட்டும் ஆர்ப்பாட்டம் நடத்துங்கள்''[2] என்று மே தினக் கொண்டாட்டம் பற்றி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு விடுத்த வேண்டுகோளில் கூறப்பட்டது. மே தினத்தன்று ஒருமித்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் சமூக-ஜனநாயகக் கட்சிகளுக்கு யோசனை விடுத்தன. ஆனால் பின்னவை இதை மறுத்து விட்டன. பெர்லினில் அன்று ஐந்து லட்சம் பெயர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள். கூனோ, புவன்கரே ஆகியோரின் அரசாங்கங்கள் கவிழ்த்தப்பட வேண்டும், பாசிஸ்டுகளுக்கு எதிராகத் தற்காத்துக் கொள்வதற்கு ஆயுதந்தாங்கிய பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பொறித்த போஸ்டர்களை ஊர்வலத்தினர் ஏந்திச் சென்றார்கள். ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினர் ஒரு தூக்கு மேடையை எடுத்துச் சென்றார்கள். ஹிட்லரின் உருவம் அதில் தொங்கிக் கொண்டிருந்தது.''[3]

இத்தாலியிலும் ஸ்பெயினிலும் போலந்திலும் லாட்வியாவிலும் ஜப்பானிலும் மே தினக் கொண்டாட்ட ஊர்வலம் நடத்திய தொழிலாளர்களைப் போலீசாரும் பாசிஸ்டுகளும் கொடுமையாகத் தாக்கினார்கள்.

---

[1] மை. ஆ. கூ., 495/18/44/236.
[2] ''பிராவ்தா'', 1923, ஏப்ரல் 14.
[3] ''பிராவ்தா,'' 1923, மே 3.

தொழிலாளி வர்க்கத்தின் எல்லாப் பிரிவுகளும் ஒன்றுபட வேண்டும் என்ற ஆர்வம் வெகு ஜனங்களிடையே மேலும் மேலும் முதிர்ந்து வந்த சமயத்தில், சீர்திருத்தவாதித் தலைவர்கள் 1923, மே மாதம் ஹாம்பர்கில் நடந்த காங்கிரசில் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களை வலதுசாரி சமூக-ஜனநாயகக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலமாக ஒன்று சேர்த்தார்கள். சமுதாயப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இன்றியமையாதவை என்று சொல்லளவில் கூட ஒப்புக்கொள்ள மறுத்த வலதுசாரித் தலைவர்களுக்கு முன் இரண்டரையாவது அகிலத்தைச் சேர்ந்த மையவாதிகள் முழுமையாகச் சரணுகதி அடைந்து விட்டார்கள். இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள் ஒன்று சேர்ந்தது, சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்களுடைய நிலையை வலுப்படுத்தியது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் பிளவை இது இன்னும் ஆழ்ந்தது ஆக்கியது. சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தில் சேர்ந்திருந்த கட்சிகளின் உறுப்பினர் தொகை, 1923ம் ஆண்டு 67 லட்சத்துக்கும் மேல் இருந்தது.[1]

யுத்த அபாயத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிராக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கான சர்வதேசக் கமிட்டியின் பிரதிநிதிக் குழு, எல்லாருக்கும் பொதுவான பாசிஸ, யுத்த அபாயத்துக்கு எதிராக வெவ்வேறு கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் சேர்ந்த எல்லா நாட்டுப் பாட்டாளிகளும் ஒன்றித்துப் போராட்டம் நடத்துவது பற்றி ஹாம்பர்க் மகாநாட்டின் ஒரு கூட்டத்தில் விவாதிக்குமாறு பிரேரித்தது. ஆனால் காங்கிரஸ் அதன் உரையைக் கேட்கவே மறுத்துவிட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது மூன்ருவது முழுக் கூட்டம்

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது மூன்ருவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம், 1923, ஜூன் 12 முதல் 23ந் தேதி வரை மாஸ்கோவில் நடந்தது. 26 கம்யூனிஸ்டுக் கட்சிகளின்

[1] Jahrbuch für Wirtschaft, Politik und Arbeiterbewegung 1923-24, Hamburg, S. 51.

பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள். சீர்திருத்தவாதிகளின் பிளவுபடுத்தும் கொள்கைக்கு மாறாக இந்தக் கூட்டம், பாசிஸ அபாயத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த கூட்டணி அமைக்கும் முயற்சியில் கணிசமாகக் கவனம் செலுத்தியது. இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள் ஹாம்பர்கில் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலமாக ஒன்று சேர்ந்தது, வெளிப்படையான சீர்திருத்தவாதிகளுக்கு முன் இடைநிலைவாதிகள் சரணடைந்து விட்டதைக் காட்டுவதாக முழுக் கூட்டம் மதிப்பிட்டது. தொழிலாளர் இயக்கத்தில் சீர்திருத்தவாதத்தை எதிர்த்துப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும்படி அது அறைகூவல் விடுத்தது. ''ஆனால் தேசிய, சர்வதேசியப் பரிமாணத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றித்த கூட்டணிக்கான முயற்சியின் அடிப்படையிலேயே இந்தப் போராட்டம் நடத்தப்பட முடியும், நடத்தப்பட வேண்டும். ஒன்றித்த கூட்டணிக்கான இந்தப் போராட்டம் எல்லா நாடுகளிலும் மேலும் மேலும் திட்டமிட்ட முறையிலும் உறுதியாகவும், மிக ஸ்தூலமான, மிகத் தெளிவான வகையிலும் நடத்தப்பட வேண்டும். சோஷல்-தேசபக்தர்கள், பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் ஒன்றித்த கூட்டணிக்கு எதிராக, பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்தும் சுரண்டப்படுவோர் அனைவரதும் ஒன்றித்த கூட்டணியின் பொருட்டும் போராட்டம் நடத்தப்பட வேண்டும். முதலாளிகளுடன் தொழிலாளர் கட்சிகளின் கூட்டணிக்கு எதிராக, தொழிலாளர்கள்-விவசாயிகள் அரசாங்கத்தின் பொருட்டும் முதலாளிகளை எதிர்த்தும் எல்லாத் தொழிலாளர் கட்சிகளும் ஒன்றித்த போராட்டம் நடத்த வேண்டும்.''[1]

தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே பரஸ்பர உறவு பற்றிய பிரச்சினை, சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிக அடிப்படையான பிரச்சினைகளில் ஒன்று. கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் நிலப் பிரச்சினை பற்றிய அடிப்படைச் செயல்திட்டக் கருத்துக்களை முறையாக வகுத்தது. நான்காவது காங்கிரஸ் இவற்றைத் தன் தீர்மானங்களில் ஸ்தூலப்படுத்தியது. செயற்குழுவின் முழுக் கூட்டம் இந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் என்ற கோஷத்தை முன்வைத்தது. இரண்டாவது, நான்காவது காங்கிரஸ்களின் தீர்மானங்களைச் செயல்படுத்துவ

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 376.

தும் விரிவாக்குவதுமான, திட்பமுள்ள அரசியல் சூத்திரமாக விளங்கியது இந்த கோஷம். செயற்குழுவினது முழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: "கம்யூனிஸ்டுக் கட்சி நாளையே பூர்ஷ்வா வர்க்கத்தை வெற்றி கொள்ள ஆயத்தமாய் இருக்க வேண்டும். எனவே, அனைத்து மக்கள் குறிக்கோள்களை வைத்துக் கொள்வதும், தங்கள் சமுதாய நிலை காரணமாக, நிர்ணயகரமான கணத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ஏதேனும் ஒரு வகையில் ஆதரவு அளிக்கக் கூடிய மக்களின் எல்லா வட்டாரங்களையும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவாக ஈர்ப்பதும் இன்றே அதன் பணியாக இருக்க வேண்டும்."[1] முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகரத் தொழிலாளர்களை விவசாயி வெகுஜனங்களுடன் ஒன்றிணைப்பதில் சர்வதேச விவசாயிகள் சபை (விவசாயிகள் அகிலம்) கணிசமான பங்கு ஆற்றியது. கட்சிச் சார்பற்ற இந்த விவசாயிகள் ஸ்தாபனம் கம்யூனிஸ்டு அகிலத்துடன் இணைந்து கொண்டது. 1923, அக்டோபரில் நடந்த சர்வதேச விவசாயிகள் மகாநாட்டினுல் நிறுவப்பட்டது இது. சர்வதேச விவசாயிகள் சபை, விவசாயிகளை ஒன்றிணைக்கவும் நிலப்பிரபுக்களதும் முதலாளிகளதும் செல்வாக்கிலிருந்து அவர்களை விடுவிக்கவும் முயன்றது. "உலகத் தொழிலாளர்களே, விவசாயிகளே, ஒன்று சேருங்கள்!" என்பதும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிய கோஷமும் அதன் முக்கிய கோஷங்களாக இருந்தன.

உழைப்பாளி விவசாயிகளுடையவும் பாட்டாளிகள் அல்லாத பிற உழைப்பாளி வெகுஜனங்களுடையவும் பொருளாதார நலன்களைக் காத்துப் போராடுவதன் மூலம் தொழிலாளி வர்க்கக் கட்சியான கம்யூனிஸ்டுக் கட்சி எல்லா உழைப்பாளி வட்டாரங்களையும் தன்பால் ஈர்த்து, முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அவர்களைத் தூண்டி ஊக்குகிறது. தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிய கோஷமானது, மூலதனம், பிற்போக்கு, பாசிஸம் ஆகியவற்றின் தாக்குதலை எதிர்த்துப் போராடும் அனைத்து மக்கள் லட்சியத்தையும், முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளி விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியம் ஏற்படுத்துவதன் இன்றியமையாமையையும் வெளியிட்டது. நான்காவது காங்கிரஸ் முன்வைத்த தொழிலாளி அரசாங்கம் என்னும் கோஷத்தின் ஸ்தூல வடிவமாக விளங்கியது அது. கம்யூனிஸ்டு

[1] அதே நூல், பக்கம் 371.

அகிலத்தின் செயற்குழுவினது முழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் கூறப்பட்டது போல, ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கடைப்பிடிப்பதற்கான அடித்தளத்தை விரிவுபடுத்தி, ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் வழியாக''[1] விளங்கியது இந்த கோஷம். கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றின் அடுத்த வளர்ச்சியாக இருந்தது இது.

ஒன்றித்த கூட்டணி பற்றி ஸிநோவியெவ் முழுக் கூட்டத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம், ''போர்த்தந்திர நடவடிக்கை'' என்றும், அதன் நோக்கம் சமூக-ஜனநாயகக் கட்சிகளின் உண்மை வடிவத்தை அம்பலப்படுத்துவதே என்றும்,ஏனெனில்,இந்தக் கட்சிகள் ஒன்றித்த கூட்டணிக்கு இசைய மாட்டா என்பது முன்கூட்டியே தெளிவாய் இருக்கிறது என்றும் தவறான, பிரிவுவாத வியாக்கியானம் தரப்பட்டிருந்தது.[2] இந்த வியாக்கியானம் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் பற்றிய லெனினது போதனையைச் சாராம்சத்தில் திரிப்பதாகவும் ஒன்றித்த கூட்டணிக் கோஷத்தை எதார்த்தத்தில் இகழ்ச்சிக்கு உள்ளாக்குவதாகவும் இருந்தது. ஸிநோவியெவின் நோக்கு நிலை முழுக் கூட்டத்தின் தீர்மானங்களில் ஆதரவு பெறவில்லை.

முழுக் கூட்டத்தில் பாசிஸத்துக்கு எதிராக கிளாரா த்ஸேத்கின் உரை ஆற்றினார். பல்கேரியாவில் 1923, ஜூன் 9ந் தேதி நடந்த இராணுவ-பாசிஸ ஆட்சி கைப்பற்றலின் விளைவாக அ.ஸ்தம்பலீஸ்கியின் ஜனநாயக அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு இராணுவ-பாசிஸ்டு சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டதன் தொடர்பாக இந்தப் பிரச்சினையை விவாதிப்பது சிறப்பாக முக்கியமாய் இருந்தது. இந்த நிகழ்ச்சிகளின் போது பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் தவறான நிலையை மேற்கொண்டார்கள். பூர்ஷ்வா வர்க்கத்தின் இரண்டு முகாம்களுக்கு—நாட்டுப்புற முகாமுக்கும் நகர முகாமுக்கும்—இடையே போராட்டம் நடப்பதாகவும் கம்யூனிஸ்டுக் கட்சி அதில் பங்கு கொள்ளப் போவதில்லை என்றும் அவர்கள் அறிவித்தார்கள். விஷயம் ஒரு பூர்ஷ்வா அரசாங்கத்தின் இடத்துக்கு

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 371.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் (1923, ஜூன் 12 முதல் 23ந் தேதி வரை). விவர அறிக்கை. மாஸ்கோ, 1923, பக்கம் 13.

வேறொரு பூர்ஷ்வா அரசாங்கம் வருவது அல்ல, பிற்போக்குள்ள பயங்கரவாத ஆட்சி நிலைபெறுவதும் ஜனநாயக சுதந்திரங்கள் பறிக்கப்படுவதுமே என்பதை பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் புரிந்துகொள்ளவில்லை. இராணுவ-பாசிஸ்டு ஆட்சி கைப்பற்றலின் போது கட்சியை சந்தர்ப்பவாதச் செயலின்மைக்கு இட்டுவந்த பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களின் பிரிவுவாத-போலிச் சித்தாந்தவாத நிலையைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் முழுக் கூட்டம் சர்வாம்ச ரீதியாகத் தாக்கிவிமர்சித்தது.

பாசிஸத்தை ''அளவுகடந்த அபாயம் நிறைந்த பயங்கரமான எதிரியாக...'' பாவிக்க வேண்டும் என்றும் ''பாசிஸத்துக்கு எதிரான போராட்டம் பாட்டாளி வர்க்கம் அனைத்தினதும் காரியம் ஆகும்''[1] என்றும் கிளாரா த்ஸேத்கின் தமது உரையில் கூறினார். பாசிஸம் என்பது வன்முறை நிறைந்த பூர்ஷ்வா பயங்கரம் மட்டுமே என்று எளிமையாக எண்ணுவது தவறு என்று த்ஸேத்கின் நிரூபித்தார். மக்களின் கணிசமான பகுதியினரின்—குட்டி பூர்ஷ்வாக்கள், வர்க்கத்தன்மை இழந்தவர்கள், பாட்டாளி வர்க்கத்தின் பின்தங்கிய பகுதியினர் ஆகியோரின்—ஆதரவு பாசிஸத்துக்கு இருக்கிறது என்றும் பிற்போக்குள்ள பூர்ஷ்வா சர்வாதிகாரத்தின் பிற வடிவங்களுக்கும் பாசிஸத்துக்கும் உள்ள வேறுபாடு இதுவே என்றும் அவர் கூறினார். பூர்ஷ்வா ஜனநாயகம் அனைத்தையும் இரத்தப் பெருக்குடன் நசுக்குவதற்கு இந்த ஆதரவைப் பிற்போக்கு திறமையாகப் பயன்படுத்துகிறது. ''ஒரு நாட்டின் ஸ்தூல நிலைமைகளைப் பொறுத்து பாசிஸம் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டிருக்கிறது'' என்றார் த்ஸேத்கின், ''ஆனால் இரண்டு தன்மைகள் அதற்கு எங்கும் இயல்பானவை: முதலாவது, மிக விரிவான சமூக வெகுஜனங்களின் மனப்பாங்குக்கும் நலன்களுக்கும் கோரிக்கைகளுக்கும் மிகத் திறமையுடன் இசைவிக்கப்பட்ட போலிப் புரட்சிச் செயல்திட்டம், இரண்டாவது, மிக அநாகரிகமான, கொடுமை நிறைந்த பயங்கரச் செயல்கள்.''[2] பாசிஸத்துடன் போராடுவதற்கு சமயோசிதமான கொள்கையைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது. பாசிஸத்தைத் தனிப்படுத்தவும் அதற்கு எதிராக

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம், பக்கம் 207.

[2] அதே நூல், பக்கம் 213.

மக்களின் மிக மிக விரிவான வட்டாரங்களை ஒன்றுதிரட்டவும், நடுத்தர வட்டாரங்களையும் விவசாயிகளையும் அறிவுஜீவிகளையும் ''பொருளாதார நிலை காரணமாகப் பெரு மூலதனத்துடன் பகைமை உறவு கொண்டிருக்கும் எல்லா வட்டாரங்களையும்''[1] தன் தரப்புக்கு ஈர்க்கவும் இந்தக் கொள்கை வல்லதாய் இருக்க வேண்டும். வர்க்க நோக்கில் உணர்வு குறைந்த நபர்கள் பாசிஸத்துக்கு ஈர்க்கப்படுவதைத் தொழிலாளர்கள் ஆளும் வர்க்கத்துக்கு எதிரான ஊக்கமுள்ள போராட்டத்தின் வாயிலாகத் தடுக்காவிட்டால் இத்தாலியத் தொழிலாளி வர்க்கத்தின் கதியே அவர்களுக்கு நேரும் என்பதைத் தொழிலாளர்களின் உணர்வில் பதிய வைக்க வேண்டும் என்று முழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் கூறப்பட்டது. எனவே, தொழிலாளர் ஸ்தாபனங்கள் விரிவான உழைப்பாளி வெகுஜனங்களைச் சுரண்டலிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் வர்த்தகச் சூதாட்டத்திலிருந்தும் காக்கும்பொருட்டு மூலதனத்தை எதிர்த்துப் பேரூக்கத்துடன் போராட வேண்டும். பாசிஸத்தின் போலிப் புரட்சித்தன்மை கொண்ட மேடைப் பிரசங்க கோஷங்களுக்கு எதிராக ஆழ்ந்த, ஒழுங்கமைந்த வெகுஜனப் போராட்டத்தை நடத்த வேண்டும். ''தங்கள் நாட்டில் பாசிஸத்தை ஏற்படுத்துவதற்கான தொடக்க முயற்சிகளை அவர்கள் முழுச் சக்தியுடனும் தடுக்க வேண்டும். இத்தாலியிலும் உலகு அனைத்திலும் பாசிஸத்துடன் போராடுவதற்கான மிகச் சிறந்த வழி, சொந்த நாட்டில் அதற்கு எதிராக ஊக்கத்துடன் போராடுவதே என்பதை அவர்கள் எப்போதும் புரிந்து கொள்ள வேண்டும்.''[2]

பாசிஸத்துக்கு எதிராகத் தங்கள் அணிகளை ஒற்றுமைப்படுத்தும்படி கம்யூனிஸ்டு அகிலம் தொழிலாளர்களை இடைவிடாது வேண்டிக் கொண்டது. 1923, ஆகஸ்டு 25ந் தேதி, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் தொழிற்சங்க அகிலத்தின் செயலகமும் சோஷலிஸ்டுத் தொழிலாளர்களுக்கும் ஆம்ஸ்டர்டாம் அகிலத்துக்கும் விடுத்த பகிரங்கக் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: ''ஜெர்மனியில் பாசிஸம் தலை தூக்குகிறது. சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்கள் பாசிஸத்துக்கு எதிராக ஜெர்மானியப் புரட்சிகரத் தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும்.''[3]

---

[1] அதே நூல், பக்கம் 225.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 383.

[3] "Internationale Presse-Korrespondenz", 1923, Bd. II. N 35, S. 835.

ஜெர்மானியத் தொழிலாளர்களுடன் ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கும் சர்வதேச மகாநாடு நடத்தி, சமாதானப் போராட்டம் பற்றி அதில் விவாதிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு யோசனை கூறியது. இம்முறையும் சீர்திருத்தவாதத் தலைவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைகளை நிராகரித்து விட்டார்கள்.

இந்தோனீசியாவிலும் சீனாவிலும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி பற்றிய பிரச்சினை

தேசிய-காலனிப் பிரச்சினை பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது, நான்காவது காங்கிரசுகள் செய்த தீர்மானங்களை ஒத்திசைந்த முறையில் செயல்படுத்துவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு மேற்கொண்டது. தேசியக் கொள்கை—இந்தோனீசியாவிலும் சீனாவிலும் விடுதலைப் போராட்டம் —பற்றிய பிரச்சினையில் செயற்குழு கடைப்பிடித்த போக்கு இந்த விஷயத்தில் சிறப்பாக எடுத்துக்காட்டாக இருந்தது.

இந்தோனீசியக் கம்யூனிஸ்டுகள் புரட்சிகர-தேசியவாத ஸ்தாபனங்களில், முதன்மையாக அப்போது வெகுஜனத் தன்மை கொண்டிருந்த ஸரேக்கத் இஸ்லாம் ஸ்தாபனத்தில் வேலை செய்வது பொருத்தமானது, இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பல முறை அறிவுறுத்தியது. இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களில் சிலர் இந்தச் செயல்தந்திரத்தை எதிர்த்தார்கள்.

கிழக்கு நாடுகளில் நடக்கும் தேசியவிடுதலை இயக்கத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1923ம் ஆண்டுத் தொடக்கத்தில் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியது. கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஸரேக்கத் இஸ்லாம் இயக்கம் நமக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த முக்கியத்துவம் பற்றி எழுதத் தேவையில்லை, ஏனென்றால் நமது கட்சி தொடக்கம் முதலே

ஸரேக்கத் இஸ்லாமுடன் ஒத்துழைக்க முயன்று வந்திருக்கிறது. மூன்ருவது அகிலமும் இந்த இயக்கத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது... ஸரேக்கத் இஸ்லாமின் இரண்டு அல்லது மூன்று தலைவர்கள் ஏற்படுத்தும் இடர்கள், ஸரேக்கத் இஸ்லாமின் வெகுஜனங்களால் நமக்குக் கிடைக்கும் லாபத்துடன் ஒப்பிடும்போது ஒரு பொருட்டே ஆக மாட்டா.'' ஸரேக்கத் இஸ்லாமின் பிரபல தலைவர் உ.ஸ. சொக்ரோ அமினேேத்தோவுக்கு, இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையின் வாயிலாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஒரு கடிதம் அனுப்பியது. ஸரேக்கத் இஸ்லாம் ஸ்தாபனம் விரிவான உழைப்பாளி வட்டாரங்களின் நலன்களுக்குப் பொருந்தும் கோரிக்கைகளை முன்வைக்கிறது என்றும், ''எல்லா நிலமும் விவசாயிகளுக்குத் திருப்பி அளிக்கப்பட வேண்டும், தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் 'பொது உரிமை' அமுல் நடத்தப்பட வேண்டும்,தொழிலாளர் கண்காணிப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்'' என்ற கோஷங்கள் 1921, மார்ச்சு மாதம் இந்த ஸ்தாபனத்தின் காங்கிரசில் உருவாக்கப்பட்டபோது இந்த உண்மை சிறப்பாகத் துலக்கமாக வெளிப்பட்டது என்றும் கடிதம் கூறியது. செயற்குழுவின் கருத்துப்படி ஸரேக்கத் இஸ்லாம் ''வெறும் தேசியவாத இயக்கம் மட்டுமல்ல, இன்னும் மேலானது'' என்று கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.''எங்கள் நோக்கம் ஸரேக்கத் இஸ்லாமின் நோக்கத்துக்கு எல்லா வகையிலும் ஒத்திருக்கவில்லை என்பதை நாங்கள் அறிவோம்'' என்று தொடர்ந்து கூறியது செயற்குழு. ''ஆயினும் கூட்டான ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கு இது தடையாய் இருக்க முடியாது'' என்று கடிதம் குறித்தது. ''மூன்ருவது அகிலமும் ஸரேக்கத் இஸ்லாமும் ஒன்றித்துச் செயல் புரிய''[1] வகை செய்வது கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் நோக்கமாகும் என்று கடிதத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஆனுல், இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் இந்தச் செயல்தந்திரம் ஏற்கத்தக்கது அல்ல என்று அப்போது கருதினுர்கள். அவர்கள் ஸரேக்கத் இஸ்லாமுடன் தொடர்பைத் துணித்துக்கொள்ளும் போக்கைக் கடைப்பிடித்தார்கள். இந்த ஸ்தாபனத்திலிருந்து தனது மிகப் பெரும் பகுதியை விலகச்

---

[1] மை. ஆ. கூ., செப்பம் செய்யப்படாத தஸ்தாவேஜுகளின் தொகுப்பு.

செய்து, முதலில் ''சிவப்பு ஸரேக்கத் இஸ்லாம்'' என்றும் பின்னர் ''ஸரேக்கத் ரக்கியாத்'' (மக்கள் சபை) என்றும் அமைத்தார்கள்; இது பெரும்பாலும் விவசாயிகள் கொண்ட ஸ்தாபனம். ஜனநாயக அரசியல் சக்திகளும் வெகுஜன ஸ்தாபனங்களும் உள்ள தொகுப்பில் கம்யூனிஸ்டுக் கட்சியின் இடமும் பாத்திரமும் என்ன என்ற தெளிவான புரிவு இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களுக்கு இல்லை. கம்யூனிஸ்டுகள் ஜனநாயக இயக்கத்தில் கரைந்து விடும் அபாயம் இந்தப் புரிவின்மையில் அடங்கியிருந்தது. உதாரணமாக, ஸரேக்கத் ரக்கியாத் ஸ்தாபனத்துடன் உறவுகளில் தெளிவாக எல்லை கோலப்பட்ட கொள்கைப் போக்கு இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியிடம் இல்லை. தங்கள் தலைமைப் பாத்திரத்தை வலுப்படுத்தும் போக்கைக் கடைப்பிடிக்கும்படியும் ஸரேக்கத் ரக்கியாத் ஸ்தாபனத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் நெருக்கமாகக் கூட்டு சேர்ந்து செயலாற்றும் சுயேச்சையான தேசிய-புரட்சிக் கட்சியாக மாற்றும்படியும் அந்த ஸ்தாபனத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கை எல்லா வகையிலும் வலுப்படுத்தும்படியும் கம்யூனிஸ்டு அகிலம் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுகளுக்கு யோசனை கூறியது.

கிழக்கு நாடுகளில் தேசிய-புரட்சிக் கட்சிகளையும் தொழிலாளர்-விவசாயிகள் கட்சிகளையும் அமைப்பதற்கு ஆதரவளித்த போது கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு மாற்றாக அவற்றைக் கையாள எண்ணவே இல்லை. தேசிய-புரட்சிக் கட்சிகளின் பெரும்பான்மை உறுப்பினர்கள் தொழிலாளர்களாகவும் விவசாயிகளாகவும் இருப்பது அவற்றின் தலைவர்கள் தொழிலாளர்-விவசாயிகள் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு உத்தரவாதம் ஆகும் என்றும் செயற்குழு நினைக்கவில்லை. இந்த வெகுஜன ஸ்தாபனங்களில் பெரும்படியான செல்வாக்கும் ஆதிக்கமும் பெறும் பொருட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் இடையே போராட்டம் நடப்பது திண்ணம் என்றே அது கருதியது.

சீனாவில் தேசிய-புரட்சிச் சக்திகளுடன் ஒன்றித்த கூட்டணி அமைக்கும் பிரச்சினையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சிறப்பாகப் பெருத்த கவனம் செலுத்தியது. 1921, ஜூலை மாதத்தில் நடந்த சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதல் காங்கிரஸ், மற்றக் கட்சிகளுடன் ஒத்துழைக்கும் செயல்தந்திரத்தை நிராகரித்து விட்டது:'' நாம்... தனிப்படப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைக்

காக்கவேண்டும், மற்றக் கட்சிகளுடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்ளக் கூடாது''[1] என்று காங்கிரசின் ஒரு தீர்மானம் கூறியது. அப்போது பல சீனக் கம்யூனிஸ்டுகள் சோஷலிஸப் புரட்சியை உடனடிப் பணியாகக் கருதினார்கள். சீனக் கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்துடனும் தேசிய-புரட்சி இயக்கத்துடனும் தொடர்பு அற்ற நிலையில் இருப்பதைச் சீனாவில் இருந்த கம்யூனிஸ்டு அகிலப் பிரதிநிதிகள் அந்த சமயத்தில் தங்கள் உரைகளில் குறிப்பிட்டார்கள். '''இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோயின்'' இந்தத் தனிப்பட்ட வடிவம், கிழக்கு நாடுகளின் பல கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இயல்பாய் இருந்தது. கம்யூனிஸ்டு அகிலம் யோசனைகூறிய கொள்கைப் போக்கு சரியானது என்பதைச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் தெரிந்து கொள்வதற்குப் போராட்ட அனுபவம் தேவைப்பட்டது.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இரண்டாவது காங்கிரசின் தீர்மானங்கள் சரியான கொள்கைப் போக்கை வகுப்பதில் முன்நோக்கிய அடிவைப்பாக இருந்தன. தேசியவாதிகளுடன் (அதாவது குவோமிந்தானுடன்) ஒன்றித்த கூட்டணி அமைக்கும் தீர்மானத்தை இந்தக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. காங்கிரசின் தீர்மானத்தில் சிறப்பாகப் பின்வருமாறு கூறப்பட்டது: ''மொத்தமாகச் சேர்ந்த சக்திகளைக் கொண்டு சைனியவாதிகளதும் ஏகாதிபத்தியவாதிகளதும் ஆட்சியை அகற்றிவிட்டு, உண்மையான ஜனநாயகமும் சுதந்திரமும் உள்ள நாட்டுக்கு அடிகோலும் பொருட்டு எல்லாப் புரட்சிக் கட்சிகளையும் ஸ்தாபனங்களையும் ஒன்றித்த கூட்டணியாக நாம் இணைக்க வேண்டும்.''[2]

''குவோமிந்தான் கட்சியின்பால் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கு பற்றிய'' தீர்மானத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு *1923*, ஜனவரி *12*ந் தேதி ஏற்றுக்கொண்டது. ''சீனாவுக்கு முக்கியப் பணியாக விளங்குவது, ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களுடைய உள்நாட்டு நிலப்பிரபுத்துவக் கையாட்களுக்கும் எதிரான தேசியப் புரட்சியே''[3] என்று செயற்குழு கூறியது. ''சீனாவில் உள்ள ஒரே தேசிய-புரட்சிக் குழு குவோமிந்தான் குழு

---

[1] மை. ஆ. கூ., *514/1/13*.

[2] மை. ஆ. கூ., *514/1/33*.

[3] தேசிய-காலனிப் புரட்சியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரமும் செயல் தந்திரமும் சீனாவின் உதாரணத்தில், பக்கம் *112*.

ஆகும். இது ஒரு பகுதி மிதவாத-ஜனநாயக பூர்ஷ்வாக்களையும் குட்டிபூர்ஷ்வாக்களையும் மறு பகுதி அறிவுஜீவிகளையும் தொழிலாளர்களையும் சார்ந்திருக்கிறது''[1] என்றும் தொழிலாளி வர்க்கம் தேசியப் புரட்சியின் வெற்றியில் நேரடியான அக்கறை கொண்டிருக்கிறது என்றும்அது விளக்கி, குவோமிந்தானுக்கு உள்ளே வேலை செய்யும்படி சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களுக்கு யோசனை கூறியது. இதனால் கம்யூனிஸ்டுக் கட்சி தனது சுயேச்சையை இழந்து விடவோ குறைத்துக் கொள்ளவோ வேண்டியதே இல்லை என்று அது விவரித்தது. போராட்டத்தின் கடினமான அனுபவத்தால் (பீக்கிங்-ஹாங்கோ இருப்புப்பாதைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் 1923, பிப்ரவரியில் படுதோல்வி அடைந்தது) சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வெகுஜனக் கூட்டாளிகள் தேவை என்பதை உணர்ந்து கொண்ட அதன் தலைவர்கள், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பிரேரித்த செயல்தந்திரம் சரியானது என்ற முடிவுக்கு வந்தார்கள். சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மூன்றுவது காங்கிரஸ் (1923, ஜூன்), பிரிவுவாதிகளுடையவும் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளுடையவும் எதிர்ப்பை வெற்றி கொண்டு, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது 1923, ஜனவரி 12ந் தேதித் தீர்மானத்தின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஒடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணிகளும் உண்மையில் வர்க்கத் தன்மை கொண்ட பணிகளும் ஒன்றுக்கு ஒன்று எந்த அளவிலும் முரண்படவில்லை என்று கம்யூனிஸ்டு அகிலம் கருதியது. எனவே, கிழக்கு நாடுகளின் தேசிய-புரட்சி ஸ்தாபனங்களில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிலை வலுவடைந்தது பாட்டாளிகளின் நேரடியான வர்க்க நலன்களுக்குச் சந்தேகமின்றி உகந்ததாகவே இருந்தது. அதே சமயம் தேசிய-புரட்சி இயக்கம் எல்லா வகையிலும் தீவிரமாக நடக்கவும், கிழக்கு நாடுகளில் எந்த ''மாபெரும் போராட்டங்களும் புரட்சிகளும்'' நெருங்கி வருவதை லெனின் முன்கண்டு உரைத்தாரோ அவற்றுக்கு ஆயத்தம் செய்யவும் இது உதவியது.

தேசிய-காலனிப் பிரச்சினை பற்றிய தனது கொள்கையில், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்கும் புரட்சிகரக் கிழக்கு நாடுகளுக்கும் ஐக்கியம் ஏற்படுவது இன்றியமையாதது என்ற

[1] அதே நூல், அதே பக்கம்.

லெனினது அறிவுரையைக் கம்யூனிஸ்டு அகிலம் அடிப்படையாகக் கொண்டது. எம். எம். பரொதீன் 1923ம் ஆண்டில் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதியாகச் சீனுவுக்கு அனுப்பப்பட்ட போது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் நோக்கங்களில் சீனுவின் தேசிய-விடுதலை இயக்கத்தின் நலன்களை முதன்மையான வழிகாட்டியாகக் கொள்ளும்படி அவருக்கு அறிவுரை வழங்கப் பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சீனுவின் புரட்சிச் சக்தி களுக்கு முறையான உதவி அளித்து வந்தது. ''தேசிய-விடுதலை இயக்கத்தையும் குவோமிந்தான் கட்சியையும் பற்றிய தீர் மானத்தைச்''[1] செயற்குழு 1923, நவம்பரில் ஏற்றுக் கொண்டது. விரிவான உழைக்கும் விவசாயி வெகுஜனங்களதும் நகரவாசிகளதும் ஆதரவு இல்லாமல் மேல்மட்டத்தில் நடக்கும் அரசியல் போராட் டத்தின் பயனின்மையின்பால் குவோமிந்தானின் கவனம் இந்தத் தீர்மானத்தில் ஈர்க்கப்பட்டிருந்தது. குவோமிந்தானின் ''மூன்று மக்கள் கோட்பாடுகளின்'' (தேசியம், ஜனநாயகம், மக்களின் நல்வாழ்வு) உள்ளடக்கம் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது நோக்குநிலையின் விளக்கம் தீர்மானத்தில் நடுநாயகமாகத் திகழ்ந் தது.

தேசியம் என்பது, உலக ஏகாதிபத்தியத்துக்கும் அதன் கைப் பாவைகளுக்கும் எதிராக, நாட்டின் விவசாயிகள், தொழிலாளர் கள், அறிவுஜீவிகள், வர்த்தக-தொழில் வட்டாரங்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு சீனுவின் சுதந்திரத்தின் பொருட்டுக் குவோமிந்தான் நடத்தும் போராட்டம், அதாவது, ஏகாதிபத்திய விரோத தேசியம் என்று விளக்கப்பட்டது. உழைப்பாளி மக்களுக்கு தேசியம் என்பது, நிலப்பிரபுத்துவ-எதேச்சாதிகார ஒடுக்கு முறையும், அயல்நாட்டு மூலதனமும் உள்நாட்டு மூலதனமும் நடத்தும் வேட்டைவிலங்குத் தனமான சுரண்டலும் ஒழிக்கப்படு வது என்று அர்த்தப்பட்டது. சீனுவின் ஆளும் வட்டாரத்தினரால் ஒடுக்கப்பட்டிருக்கும் அந்நாட்டின் மக்களினங்களுடைய விடுதலை இயக்கத்துக்கு சீனுவின் தேசிய இயக்கம் ஒத்துழைப்பு தர வேண் டும், இந்த மக்கள் இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது தேசியம் என்னும் கோட்பாட்டின் மறு பக்கமாக இருக்க வேண்டும்.

---

[1] மை. ஆ. கூ., 514/1/36.

ஜனநாயம் என்பது, ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரா டும் கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் மக்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் எல்லா உரிமைகளும் சுதந்திரங்களும் கிடைக்க வகை செய்யும் கோட்பாடு என வியாக்கியானம் செய்யப்பட்டது.

''மக்களின் நல்வாழ்வு '' என்னும் கோட்பாட்டுக்கு, அயல் நாட்டு வர்த்தக நிறுவனங்களும் தொழில் நிலையங்களும் நிதி மனைகளும் இருப்புப் பாதைகளும் நீர் வழிகளும் தேசிய உடைமை ஆக்கப்படுவது என்றும் நிலம் அதில் உழைப்பவர்களுக்கு வழங்கப்படுவது என்றும் வரிச்சுமை குறைக்கப்படுவது என்றும் விளக்கம் தரப்பட்டால் வெகுஜனங்களுக்கு அது புரட்சிகரமான முக்கியத்துவம் உள்ளதாக முடியும் என்று கம்யூனிஸ்டு அகிலம் கருத்து தெரிவித்தது.

சீனுவின் விடுதலை இயக்கம், தொழிலாளர்-விவசாயிகள் அர சான சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியனுடன் ஒன் றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைத்துக் கொள்வ தன் அவசியம் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. சுன்-யாட்-சென்னை முதல்வராகக் கொண்ட குவோமிந்தான் ஸ்தாபனத் தின் தலைவர்கள், தேசிய-புரட்சி இயக்கத்தை விரிவாக நடத்துவ தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று குவோமிந்தானின் முதலாவது காங்கிரஸ் (1924, ஜனவரி) காட்டியது.

சீனப் பிரச்சினை பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் தீர்மானங் கள், குவோமிந்தானை வெகுஜன தேசியக் கட்சியாக மாற்றி அமைப்பதில் அதன் நடைமுறை உதவி, சீனுவின் தேசிய அரசாங் கத்துக்கு சோவியத் யூனியன் அளித்த ஆதரவு ஆகியவை, ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி பற்றிய லெனினது கருத்தின் செயல் வடிவமாக விளங்கின. குவோமிந்தான் சீனுவின் ஏகாதி பத்திய எதிர்ப்புச் சக்திகளது கூட்டணியின் கட்சி ஆயிற்று. அதன் புரட்சி முன்னணிப் படைப்பிரிவாக விளங்கினுர்கள் கம்யூனிஸ்டு கள். குவோமிந்தான் தேசியக் கட்சியாக மாறியதில் கம்யூனிஸ்டு அகிலம் ஊக்கத்துடன் ஒத்துழைத்தது. குவோமிந்தானின் இந்த மாற்றம் சீனுவின் வெகுஜனங்களுக்கு உற்சாகமூட்டியது. சீனப் புரட்சிக்கு முன்னேற்பாடு செய்த முக்கியமான அம்சமாக இருந் தது இந்த நிகழ்முறை. ஆனுல் தனி வகைப்பட்ட ''பல வர்க்கங் கள் கொண்ட'' இந்தக் கட்சியின் வரம்புகளுக்குள் ஒரு புறம்

புரட்சியாளர்களுக்கும் மறு புறம் பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவ வட்டாரத்தினருக்கும் இடையே தலைமையின் பொருட்டு விரிவான போராட்டம் நிகழ்ந்தது.

பல்கேரியாவில் நடந்த செப்டெம்பர் கிளர்ச்சி, போலந்தில் பொது வேலைநிறுத்தம், இவற்றின் படிப்பினை

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, அந்த சமயத்தில் பல்கேரியக் கம்யூனிஸ்டுகளுக்குப் பேருதவி செய்தது. இந்த உதவியின் பயனாக பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி தவறான பிரிவுவாதக் கொள்கையைக் கைவிட்டு எல்லா பாசிஸ-விரோதச் சக்திகளையும் நகர, நாட்டுப்புற உழைப்பாளிகளின் ஒன்றித்த கூட்டணியாக இணைக்கும் உறுதியான போக்கை மேற்கொண்டது. நாட்டில் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிக்கு முன்னேற்பாடுகள் தொடங்கின. கிளர்ச்சியின் குறிக்கோள் பொது ஜனநாயகத் தன்மை உள்ளது, அதாவது, முடியரசு-பாசிஸ்டு சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்த்து விட்டுத் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஸ்தாபிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. எல்லா ஜனநாயகச் சக்திகளும் பங்கு கொள்ளும் மக்கள் கிளர்ச்சிக்கு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. கட்சியின் புதுக் கொள்கைப் போக்கை வகுப்பதில் கொலாரவ், திமீத்ரொவ் இருவரும் பெரும் பங்கு ஆற்றினார்கள். கட்சியின் மைய வெளியீடான ''ரபோத்னிசெஸ்கி வெஸ்த்னிக்'' (''தொழிலாளர் செய்தி அறிவிப்பாளன்'') என்னும் நாளிதழில் திமீத்ரொவின் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. இவற்றில் அவர் ஒன்றித்த கூட்டணி பற்றிய பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தினார், பாசிஸ்டு சர்வாதிகாரத்தை எதிர்த்து உறுதியுடன் போராடும் பொருட்டு நாட்டின் எல்லா உழைப்பாளிகளும் ஜனநாயகச் சக்திகளும் ஒத்துழைப்பது ஜீவாதார அவசியம் உள்ளது என்பதை ஆதாரத்துடன் நிலைநாட்டினார், பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டத்தின் சர்வ ஜனநாயக உள்ளடக்கத்தை விளக்கினார். ''பாசிஸம் பொதுவில் கம்யூனிஸ விரோதி மட்டும் அல்ல, அதே சமயம் அது மக்கள் விரோதியும் ஆகும்'' என்று எழுதினார் கி. திமீத்ரொவ். ''...உழைப்பாளி வெகுஜனங்களுடையவும் உழைக்கும் அறிவுஜீவிகளுடையவும் அவர்களது அரசியல் கட்சிகளுடையவும் பொரு

ளாதார ஸ்தாபனங்களுடையவும் பொதுவான ஜீவாதார நலன்கள் இப்போது கோருவது, தலைதூக்கும் பூர்ஷ்வாப் பிற்போக்கையும் அதன் மிக எடுத்துக்காட்டான வெளியீடாகிய பாசிஸத்தையும் தொடக்கத்திலேயே அடக்கி, தங்கள் சுதந்திரங்களையும் உரிமைகளையும் கௌரவத்தையும் வாழ்வையும் கூட்டு முயற்சிகளால் காப்பதுதான்.''[1] உழைப்பாளி வெகுஜனங்களதும் அவர்களுடைய அரசியல், பொருளாதார ஸ்தாபனங்களதும் ஒன்றித்த கூட்டணி நாட்டில் உண்மையிலேயே மக்கள் ஆட்சி, தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் நிலைபெற வகை செய்யும். நாட்டின் பொருளாதார, பண்பாட்டு, அரசியல் வாழ்வும் சமூக வளர்ச்சி அனைத்தும், உழைப்பாளி மக்களுடைய தேவைகளை நிறைவேற்றவும் அவர்களுடைய உரிமைகளையும் சுதந்திரங்களையும் வாழ்க்கையையும் நல்வளத்தையும் சமாதானத்தையும் உறுதிப்படுத்தவும் ஏற்ற பாதையில் செலுத்தப்படுவதை இது குறிக்கும் என்று எழுதினார் திமீத்ரொவ். இவ்வாறு, பாசிஸ விரோதப்போராட்டத்தின் பணிகளை ஸ்தூலமாகப் பகுத்தாய்ந்ததன் அடிப்படையில் விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கான புதிய வழிகள் பற்றிய எண்ணம் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் உருவாகி வளர்ந்தது. ஜனநாயக உரிமைகளை விரிவுபடுத்தி ஆழமாக்கும்பொருட்டுப் பிற்போக்கையும் பாசிஸத்தையும் எதிர்த்து சர்வ ஜனநாயகப் போராட்டம் நடத்தும் பணிகளும் சோஷலிஸத்துக்கான போராட்டத்தின் பணிகளும் இதில் மேலும் மேலும் நெருக்கமாக இணைந்தன.

கம்யூனிஸ்டு அகிலம் பல்கேரியாவில் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியம் ஏற்படுத்த முயன்றது. ''த்ஸன்கோவின் ஆத்திரமூட்டும் கொள்கைக்குப் பதில் அளிப்பதற்கு பல்கேரியாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்கள் அணிகளை ஒன்று இணைக்க வேண்டும், நாடு முழுவதிலும் சட்டப்புறம்பான குழுக்களை ஒழுங்கமைக்க வேண்டும், லட்சக் கணக்கான, பத்துலட்சக் கணக்கான உழைப்பாளிகளுக்கு இடையே வெகுஜனக் கிளர்ச்சி நடத்த வேண்டும், உரிய தருணம் வாய்க்கும் போது, தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தையும் நிறுவ வேண்டும்'' என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1923 செப்டெம்பரில் விடுத்த அறைகூவலில் கூறப்பட்டது. ''வெள்ளைக்

---

[1] **கி. திமீத்ரொவ்,** பொறுக்கி எடுத்த படைப்புக்கள். தொகுதி 1, மாஸ்கோ, 1957, பக்கங்கள் 100-101.

கொலைகாரர்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்பு அலை நாளுக்கு நாள் மேலே எழும். பல்கேரியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் வன்முறையாளர்களுக்கு உரிய தண்டனை கொடுக்கும் காலம் வரும்.''[1]

பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி, பல்கேரிய மக்கள் விவசாய சபை, சமூக-ஜனநாயகக் கட்சி, பிற ஜனநாயகக் கட்சிகள் ஆகியவற்றுக்கு ஒன்றித்த கூட்டணி அமைக்கும் யோசனை விடுத்தது. ஆனால் விவசாய சபையின் இடதுசாரி மட்டுமே பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் யோசனையை ஏற்றுக் கொண்டது. அதன் ஒத்துழைப்புடன் பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1923 செப்டெம்பரில் நடந்த ஆயுதமேந்திய மக்கள் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியது. கம்யூனிஸ்டுகளின் தலைமையில் பாசிஸ்டுகளுக்கு எதிராக வரலாற்றிலேயே முதன் முறையாக நடந்த கிளர்ச்சி இதுவே. கிளர்ச்சி தோல்வி அடைந்துவிட்டது என்றாலும், கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் வெகுஜனங்களுக்கும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்திற்குமே அது பெருத்த புரட்சிப் படிப்பினையாக விளங்கியது. பாசிஸ எதிர்ப்புக் கூட்டணி அமைப்பதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்திய தன்னலமற்ற போராட்டம், கம்யூனிஸ்டுகள் காட்டிய வீரம்,பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டப் பணிகளும் பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் எதிரான போராட்டத்தின் சர்வஜனநாயகப் பணிகளும் சரியாக ஒன்றிணைக்கப்பட்டது ஆகியவை கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் திரளான வெகுஜனங்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தின. ''ஜனநாயகத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராட்டத்தில் நகர, நாட்டுப்புற உழைப்பாளிகளின் உண்மைத் தலைவனாகக் கம்யூனிஸ்டுக் கட்சியை மாற்றுவதற்கு வேண்டிய முதனிலைகளை''[2] இவை ஏற்படுத்தின.

1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் தொழிலாளி வர்க்கத்தின் புயல் வேக நடவடிக்கைகள் போலந்தின் பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவ அமைப்பை உலுக்கின. அதற்கு முன் ஒருபோதும் காணாத ஆற்றலுடன் வேலைநிறுத்த இயக்கம் எங்கும் பரவியது. வேலைநிறுத்தங்கள் அடிக்கடி அரசியல் தன்மையை மேற்கொண்டன. வீதி ஆர்ப்பாட்டங்களும் போலீசாருடன் மோதல்களும் அவற்றை

---

[1] ''பிராவ்தா'', 1923, செப்டெம்பர் 21.

[2] கி. திமீத்ரொவ், பொறுக்கி எடுத்த படைப்புக்கள். தொகுதி II. மாஸ்கோ, 1957, பக்கம் 590.

அடுத்து நிகழ்ந்தன. தொழிலாளர்கள் போராட்டத்தின் முன்னணியில் இருந்தது போலந்தின் கம்யூனிஸ்டுக் கட்சி. 1923, ஆகஸ்டில் போலந்தின் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சி, போலந்தின் உழைப்பாளி மக்களுக்கும் போலிஷ் சோஷலிஸ்டுக் கட்சிக்கும் ''வீஸ்வலேனி'' என்னும் விவசாயிகள் கட்சிக்கும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் அமைப்பதற்காக ஒன்றித்த போராட்டக் கூட்டணியை உருவாக்கும்படி வேண்டுகோள் விடுத்தது. இந்த அரசாங்கம் உழைப்பாளி வெகுஜனங்களின் நலன்களைப் பாதுகாக்க வல்லதாய் இருக்கும், நிலம் இல்லாதவர்களும் குறைந்த நிலம் உள்ளவர்களுமான விவசாயிகளுக்கு நிலப்பிரபுக்களின் நிலங்களை ஈடு பெருமல் வழங்கும், நாட்டினச் சிறுபான்மையினரின் சுய நிர்ணய உரிமையை ஒப்புக் கொள்ளும், ஏகாதிபத்திய வல்லரசுகளிலிருந்து போலந்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும், சோவியத் யூனியனுடன் நெருங்கிய உறவு ஏற்படுத்தும் என்று வேண்டுகோளில் விளக்கப்பட்டது. 1923, செப்டெம்பர் 19 முதல் அக்டோபர் 2ந் தேதி வரை போலந்தின் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் நடை பெற்றது. ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியையும், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட நாட்டினங்கள் ஆகியவற்றின் ஐக்கியத்தையும் அமைத்து, பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவ அமைப்பை வீழ்த்தவும் தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சியை ஏற்படுத்தவும் ஒன்றித்துப் போராடுமாறு இந்தக் காங்கிரஸ் போலந்தின் உழைப்பாளி மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. இரண்டாவது காங்கிரசின் தீர்மானங்கள் அ. வார்ஸ்கி, ம. கஷேத்ஸ்கயா, க. வலேத்ஸ்கி, எ. புருஹ்னியாக் ஆகியோராலும் போலந்தின் கம்யூனிஸ்டுத் தொழிலாளர் கட்சியுடைய பிற பிரபல தலைவர்களாலும் தயாரிக்கப்பட்டன. இவற்றில் லெனினது போதனை போலந்தின் நிலைமைகளுக்கு ஏற்பப் படைப்புத் தன்மையுடன் கையாளப்பட்டிருந்தது.

1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நடந்த வெகுஜன வேலை நிறுத்த இயக்கத்தின் ஒரு மையமாக இருந்தது மேல் சைலேஸியா. இங்கே ஆலை-தொழிற்சாலைக் கமிட்டிகளின் காங்கிரஸ் ஒன்றித்த கூட்டணியின் உறுப்பான ''இருபத்தொருவர் கமிட்டியைத்'' தேர்ந்தெடுத்தது. கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் இதன் உறுப்பினராக இருந்தார்கள். கம்யூனிஸ்டு யூ. வெச்செரேக் கமிட்டிக்குத் தலைமை தாங்கினர். ''இரு

பத்தொருவர் கமிட்டியின்'' அறைகூவலுக்கு இணங்க அக்டோபர் 15ந் தேதி மேல் சைலேஸியாவில் பொது வேலைநிறுத்தம் தொடங்கியது. சுரங்கத் தொழிலாளர்கள், உலோகத் தொழிலாளர்கள், இருப்புப்பாதைத் தொழிலாளர்கள், தபால், தந்தி ஊழியர்கள், நகராட்சி மன்றத் தொழிலாளர்கள் முதலியோர் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள். வேலைநிறுத்த அலையின் ஏற்றத்துக்கு எதிராக அரசாங்கம் நாட்டில் நெருக்கடி நிலைமையை அமுலுக்குக் கொண்டுவந்தது. இருப்புப் பாதைகள் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதற்கும் இராணுவ நீதி மன்றங்கள் நிறுவப்பட்டதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டு நாடு முழுவதிலும் பொது வேலைநிறுத்தம் நவம்பர் 5ந் தேதி நடக்கும் என்று போலந்துத் தொழிற்சங்கம், சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் தொழிலாளர்களின் வற்புறுத்தலின் பேரில் அறிவிக்க வேண்டியதாயிற்று. அதே சமயம் சமரசவாதக் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கினார்கள். அரசாங்கத்தைச் சில விஷயங்களில் விட்டுக் கொடுக்கும்படி செய்து அதன் பின் வேலைநிறுத்தத்தை ரத்து செய்து விடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். ஒன்றித்த கூட்டணியாகப் போராட்டத்தை நடத்துமாறும் பூர்ஷ்வா அரசாங்கத்தைக் கவிழ்த்த முயலுமாறும் கம்யூனிஸ்டுக் கட்சி உழைப்பாளிகளை அறைகூவி அழைத்தது.

நவம்பர் 5ந் தேதி வேலைநிறுத்தம் நாட்டின் பல பகுதிகளில் நடந்தது. கிராக்கவ் நகரில் அது ஆயுதமேந்திய மோதலாக வளர்ந்தது. ஆனால் கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை மையம் இருக்கவில்லை. கிராக்கவ் நகரைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளில் கணிசமான பகுதியினர் சிறைச்சாலைகளில் இருந்தார்கள். வெளியே இருந்த கம்யூனிஸ்டுகளிடம் எழுச்சிக்குத் தலைமை ஏற்கும் திறன் இல்லை. போலந்து தொழிற்சங்கத் தலைவர்கள் அதிகாரிகளுடன் சூழ்ச்சி செய்து தொழிலாளர்களின் ஆயுதங்களைப் பறித்துக்கொள்வதில் வெற்றி பெற்று விட்டார்கள். இதைத் தொடர்ந்து அவர்கள் பொது வேலைநிறுத்தத்தை முடித்துவிடத் தீர்மானம் செய்தார்கள். கொடிய அடக்குமுறை நடவடிக்கைகளால் பலவீனம் ஆக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்டுக் கட்சி, பெரும்பான்மையான தொழிலாளர்கள் மீது இன்னும் செல்வாக்கு பெறாதிருந்தமையால் பொது வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து நடக்குமாறு செய்ய அதற்கு இயலவில்லை.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கிராக்கவ் கிளர்ச்சியின் விளைவுகளை ஆராய்ந்து பின்வருமாறு கூறியது: ''கிராக்கவில் இரத்தத்தால் உறுதிப்படுத்தப்பட்ட தொழிலாளி-விவசாயி ஐக்கியம் போலந்துப் புரட்சியின் வெற்றிக்கான முக்கிய நிபந்தனை ஆகும். கிராக்கவ் நிகழ்ச்சிகளிலிருந்து கிடைக்கும் பிரதான படிப்பினை இதுவே. கம்யூனிஸ்டுகளின் முதன்மையான பணி இதுவே.''[1] போலந்துத் தொழிற்சங்கத் தலைவர்கள் கிராக்கவ் கிளர்ச்சிக்காரர்களுக்கு இழைத்த துரோகத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கண்டனம் செய்தது. போலந்துத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் உழைப்பாளிகளையும் போலந்து முதலாளிகளாலும் நிலப்பிரபுக்களாலும் ஒடுக்கப்பட்டிருந்த நாட்டினச் சிறுபான்மையினரையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் கொடியின் கீழ் ஒன்று சேரும்படியும், முதலாளிகள், நிலப்பிரபுக்களின் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் பொருட்டும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவும் பொருட்டும் போராடும்படியும் செயற்குழு அறைகூவி அழைத்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தில் ஜெர்மானியப் பிரச்சினை

1923ம் ஆண்டில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கவனம் ஜெர்மனியில் நடந்த நிகழ்ச்சிகள் மீது பதிந்திருந்தது. வ. கூனோ அரசாங்கத்தின் தேசிய விரோத, பிற்போக்குக் கொள்கைக்கு எதிராக வெகுஜன இயக்கம் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் நாட்டில் விரிவாகப் பரவியது. 1923ம் ஆண்டு வசந்தத்திலும் கோடையிலும் வேலைநிறுத்த இயக்கம் விரிவான அளவில் நடக்கலாயிற்று. கம்யூனிஸ்டுக் கட்சியின் மதிப்பு உயர்ந்தது. சமூக-ஜனநாயகக் கட்சி, தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் வலதுசாரித் தலைவர்களுடைய செல்வாக்கு குறைந்தது. ஆயினும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரை அவர்கள் தொடர்ந்து தங்கள் பின்னே நடத்திச் சென்றார்கள். நடவடிக்கை ஒற்றுமையில் தொழிலாளர்கள் கொண்டிருந்த ஆர்வம் ஒன்றித்த கூட்டணி உறுப்புக்கள் அமைக்கப்பட்டதில் வெளிப்பட்டது. ஆலை-தொழிற்சாலைக் கமிட்டிகள், கண்காணிப்புக் கமிட்டிகள், வேலை

---

[1] ''பிராவ்தா,'' 1923, நவம்பர் 17.

யற்றோர் கமிட்டிகள் ஆகியன இவை. பாசிஸ அபாயத்துக்கும் யுத்த அபாயத்துக்கும் எதிரான தற்காப்பு ஸ்தாபனங்கள் பாட்டாளிவர்க்க நூற்றுவர் என்ற பெயரால் நிறுவப்பட்டதும் இந்த ஆர்வத்தைப் பிரதிபலித்தது. 1923, மே மாதம் நடந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம், கூனோ அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காகவும் தொழிலாளர் அரசாங்கம் அமைப்பதற்காகவும் போராட்டம் தொடங்கும்படி அறைகூவல் விடுத்தது. நாட்டில் வளர்ந்து வந்த பாசிஸ அபாயத்தின் மீது ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பெருத்த கவனம் செலுத்தியது. ஜூலை 29ந் தேதியன்று நாடு முழுவதிலும் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட தினத்தைக் கட்சி நடத்தியது. லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டார்கள். கூனோ அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும் என்னும் கோஷம் மக்களின் ஆதரவை மேலும் மேலும் அதிக அளவில் பெற்றது. சமூக-ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்களிடையிலும் இதற்கு ஆதரவு அதிகரித்தது; அவர்கள் தங்கள் தலைவர்களை வற்புறுத்தினார்கள். கூனோ அரசாங்கத்தைக் கவிழ்க்கும் பொருட்டு நாடு முழுவதிலும் பொது வேலைநிறுத்தம் நடத்தும்படி புரட்சிகரத் தொழிற்சாலைக் கமிட்டிகளின் பெர்லின் கமிட்டி ஆகஸ்டு 11ந் தேதி அறைகூவல் விடுத்தது. அன்றே பெர்லின் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் தொடங்கியது. ஆகஸ்டு 12ந் தேதி ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியும் தொழிற்சாலைக் கமிட்டிகளின் அனைத்து அரசுக் கமிட்டியும் நாடு முழுவதிலும் பொது வேலைநிறுத்தம் நடத்துமாறு அறைகூவி அழைத்தன. சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்க மறுக்க வேண்டியதாயிற்று. கூனோ அரசாங்கம் வீழ்ந்தது. ஷ்த்ரேஸெமானின் கூட்டணி அரசாங்கம் நிறுவப்பட்டது. வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளும் இதில் சேர்ந்தனர்.

நிகழ்ச்சிகளின் போக்கினால் கலவரம் அடைந்த ஜெர்மானிய பூர்ஷ்வா வர்க்கம், புரட்சி இயக்கத்தை நசுக்குவதில் சக்தி அனைத்தையும் ஈடுபடுத்தியது. செப்டெம்பர் 27ந் தேதி நாட்டில் நெருக்கடி நிலைமை அறிவிக்கப்பட்டது. பூர்ஷ்வா-ஜனநாயக சுதந்திரங்கள் அகற்றப்பட்டன. ஆளும் வர்க்கம் பழைய சாதனங்களின் உதவியால் ஆட்சியைக் கைகளில் வைத்திருக்க வல்லமை அற்றது ஆகிவிட்டது என்பதை இந்த நடவடிக்கை காட்டியது. அதே சமயம்

உழைப்பாளிகளுடைய பொருளாதார நிலைமை தொடர்ந்து சீர்கேடுற்றமையால் வர்க்க முரண்பாடுகள் கூர்மை அடைந்தன, வர்க்கப் போராட்டம் தீவிரமாயிற்று.

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போர்த்தந்திரம் பற்றிய தீர்மானங்கள் 1923ம் ஆண்டின் தொடக்கத்தில் லேப்ஸிக் காங்கிரசிலேயே தயாரிக்கப்பட்டு விட்டன. ஜனநாயக சுதந்திரங்களைப் பாதுகாத்து அவற்றை விரிவுபடுத்துவதற்காகவும் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காகவும் போராடுவதன் வாயிலாக ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணியை உருவாக்குவது, உழைப்பாளிகளின் மற்ற வட்டாரங்களுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தை ஏற்படுத்தித் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தின் பொருட்டு விரிவான போராட்டம் நடத்துவது, இவையே இந்தத் தீர்மானங்களின் உள்ளடக்கமாக இருந்தன. ஜெர்மனியின் ஸ்தூல நிலைமைகளில், பூர்ஷ்வா அரசாங்கத்திடம் கணிசமான இராணுவ பலம் இருந்ததாலும் பாசிஸ்டுக் கும்பல்கள் தீவிரமாகச் செயல்பட்டு வந்ததாலும் கம்யூனிஸ்டுக் கட்சி வெகுஜனப் போராட்டத்துக்குத் தலைமை தாங்குகையில் ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய்வது இன்றியமையாததாக இருந்தது.[1]

பொது வேலைநிறுத்தம் முடிந்து கூனோ அரசாங்கம் வீழ்ந்தபின் ஜெர்மனியில் புரட்சி நெருக்கடி விரைந்த வேகத்துடன் நெருங்கி வந்து கொண்டிருப்பதாக ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் எண்ணின. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொலிட்பியூரோ (அரசியல் தலைமைக் குழு) கிளர்ச்சிக்கு முன்னேற்பாடுகள் செய்வதற்காக மத்தியக் கமிட்டியின் ஆறு உறுப்பினர்கள் கொண்ட குழுவை ஆகஸ்டு 28ந் தேதி அமைத்தது. இராணுவ ஆலோசனை சபை நிறுவப்பட்டது. கிளர்ச்சிக்கான இராணுவ-ஒழுங்கமைப்பு ஏற்பாடுகளுக்குரிய திட்டத்தை இது வகுத்தது. பாட்டாளி வர்க்க நூற்றுவர் குழுக்களை அமைத்து, அவற்றுக்குப் பயிற்சி அளித்து ஆயுதங்கள் வழங்குவதில் இது முனைந்தது.[2] கட்சி ஸ்தாபனங்கள் கிளர்ச்சிக்கான இராணுவ-தொழில்நுட்ப ஆயத்தங்கள் செய்வதில் முதன்மையாகக் கவனம் செலுத்தின. ஆயினும், தொழிலாளி

---

[1] *பார்க்க:* Geschichte der deutschen Arbeiterbewegung, Bd. 3, S. 416.

[2] மை. ஆ. கூ., *495/19/70/6.*

வர்க்கத்தின் சமுதாய, ஜனநாயக உரிமைகளைக் காக்கும் பொருட்டு வெகுஜனப் போராட்டத்தைத் தொடர்ந்து விரிவாக நடத்துவதன் முக்கியத்துவத்தை, ஹெ. பிராண்ட்லரைத் தலைவராகக் கொண்ட கட்சித் தலைமை முழுமையாக மதிப்பிடவில்லை. ''கூனோவுக்கு எதிரான வேலைநிறுத்தத்துக்கு பிறகு தவறு செய்யப்பட்டது. தானுகத் தொடங்கிய வெகுஜன இயக்கத்தை இறுதிப் போராட்டம் வரை ஒத்திப்போட முயற்சி செய்யப்பட்டதே இந்தத் தவறு'' என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1924, ஜனவரி மாதம் குறிப்பிட்டது. ''நிர்ணயகரமான வாரங்களில் தொழில்நுட்ப முன்னேற்பாடுகள் செய்வதில் மும்முரமான ஈடுபாடு, போராட்டம் நமது கட்சி ஒன்றினது காரியம் மட்டுமே என்ற எண்ணம், முன்னர் தேவைப்பட்ட தனித்தனி மோதல்களும் வெகுஜன இயக்கங்களும் வளர்ச்சி அடையாத போது 'நிர்ணயகரமான வாக்கு' ஒன்றிலேயே குறியாக இருந்தது, இவை எல்லாம் சக்திகளின் எதார்த்தமான ஒப்பு நிலையைத் திட்டவட்டமாக அறிய இடையூருய் இருந்தன. நோக்கப் பொருத்தமுள்ள கெடுவுகளை நிர்ணயிப்பதை இவை அசாத்தியம் ஆக்கின.''[1] நிர்ணயகரமான போராட்டங்களுக்கு வெகுஜனங்களின் ஆயத்த நிலையின் தரத்தையும் புரட்சி நெருக்கடியின் வேகத்தையும் கட்சித் தலைமை மிகையாக மதிப்பிட்டது. ஏகாதிபத்திய, சைனியவாத சக்திகளின் சமயோசிதச் செயல்திறனை அது முழுமையாக மதிப்பிடவில்லை.[2]

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு உதவும் நோக்கத்துடன் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, ஜெர்மனி, பிரான்ஸ், செக்கோஸ்லோவாக்கியா ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியுடையவும் பிரதிநிதிகளின் மகாநாட்டைக் கூட்டியது. மகாநாடு 1923, செப்டெம்பர் 21ந் தேதி தொடங்கியது. கடும் நோய்வாய்ப்பட்டிருந்தமையால் லெனின் மகாநாட்டு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவில்லை.

ஜெர்மானிய நிலைமை பற்றி ஹெ. பிராண்ட்லர் மகாநாட்டில் உரை ஆற்றினர். நாட்டில் நிலவிய நிலைமையை விளக்குகையில்

---

[1] ஜெர்மானிய நிகழ்ச்சிகளின் படிப்பினைகள். ஜெர்மானியப் பிரச்சினை கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைமைக் குழுவில் (1924, ஜனவரி). மாஸ்கோ, 1924, பக்கங்கள் 95, 96.

[2] பார்க்க: Geschichte der deutschen Arbeiterbewegung, Bd. 3, S. 422-423.

அவர் ஆட்சிக்காக நிர்ணயகரமான போராட்டங்கள் நடத்துவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சியினது ஆயத்த நிலையின் தரத்தை மிகைப்படுத்தினார். சமூக-ஜனநாயகக் கட்சியின் நிலைமையைத் தவறாகச் சித்திரித்தார். கூனோ அரசாங்கத்துக்கு எதிராகப் பொது வேலைநிறுத்தத்தில் விரிவான தொழிலாளி வெகுஜனங்கள் கலந்து கொண்டது, கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் நாடு முழுவதிலும் போராட்டத்துக்குக் கிளர்ந்து எழ ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கம் தயாராயிருப்பதைக் காட்டுவதாக அவர் விளக்கம் தந்தார். கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதற்குப் பெருத்த எதிர்ப்பு எதுவும் இருக்காது என்று அவர் வலிந்து உரைத்தார். ''ஆட்சியைக் கைப்பற்றுவது கடினமற்ற, முற்றிலும் நிறைவேறக் கூடிய பணி என்று பொறுப்புள்ள ஊழியர்களான நாங்கள் அனைவரும் கருதுகிறோம்''[1] என்றார் பிராண்ட்லர்.

புரட்சிப் போராட்டங்களுக்கு ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஏற்பாட்டை மதிப்பிடுகையில், இரண்டரை லட்சம்[2] பெயர் கொண்ட பாட்டாளி வர்க்க நூற்றுவர் குழுக்கள் கட்சியிடம் இருப்பதாகவும் அவர்களைக் கொண்டு பதினைந்து டிவிஷன்களைக் கட்சி அமைக்கப் போவதாகவும் பிராண்ட்லர் அறிவித்தார். ஆயுதங்கள் பற்றிய பிரச்சினையும் அடிப்படையில் தீர்ந்துவிட்டது என்றும், படைப்பிரிவுகளுக்கு ஆயுதங்கள் வழங்குவதைப் போலீஸ் இடைமுறிக்காதபடி இந்த ஆயுதங்களை வினியோகிப்பதில்தான்

---

[1] ''பிராவ்தா,'' **1923**, செப்டெம்பர் **22**. இந்த மகாநாட்டில் கலந்துகொண்ட ஒ. கூஸினென் பின்னர் எழுதினார்: ''இங்கே பிராண்ட்லர் புரட்சிக் கற்பனையில் கூட ஈடுபட்டுவிட்டார். ஆட்சியைக் கைப்பற்றுவது இப்போது எளிதாகவும் நிச்சயமானதாகவும் அவருக்குத் தோன்றியது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி போராட்டத்துக்குத் தயாராய் இருப்பதையும் அதன் இராணுவ ஆயத்தத்தையும் அவர் வெகுவாக மிகைப்படுத்தினார். ஜெர்மானிய இயக்கத்தில் அருகே நெருங்கிக் கொண்டிருந்த கஷ்டங்களையும் தேவைகளையும் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சரியாகப் புரிந்து கொள்வதை இதன் மூலம் அவர் கடினமாக்கினார்'' (ஒ. கூஸினென், ''ஜெர்மானிய அக்டோபரின்'' சரியாக வாய்க்காத வருணனை. மாஸ்கோ—லெனின்கிராட், **1924**, பக்கம் **11**.)

[2] எதார்த்தத்தில், **1923**, அக்டோபர் நடுவில் பாட்டாளி வர்க்க நூற்றுவர் குழுக்களில் ஒரு லட்சத்து முப்பத்து மூவாயிரம் பெயர்தாம் இருந்தார்கள். மை. ஆ. கூ., **495/19/70/29**.

தொழில்நுட்ப இடர்ப்பாடு இருப்பதாகவும் அவர் மேற்கொண்டு உறுதியாகக் கூறினார்.[1]

பிராண்ட்லர் செய்த மிகைக்கூற்றும் நல் நம்பிக்கையும் நிறைந்த வருணனையை எ. தேல்மனும் ஹியூகோ எபர்லேனும் மறுத்தார்கள். பிராண்ட்லரின் உரை நாடு முழுவதிலும் இருந்த நிலைமையையும் ஒப்புவலிமையையும் அடிப்படையாகக் கொள்ளாமல், ஒன்றித்த தொழிலாளி வர்க்கக் கூட்டணி இயக்கம் மிக அதிக வளர்ச்சி பெற்றிருந்த ஸக்ஸோனியாவிலும் தியுரிங்கியாவிலும் இருந்த நிலைமையின் மதிப்பீட்டை மட்டும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்றார் தேல்மன். வெகுஜனங்கள் ஆயுதமேந்திய எழுச்சி இன்றியமையாதது என்ற கருத்தை ஏற்பார்கள் என்று பொது வேலைநிறுத்தம் காட்டியது எனத் தேல்மன் குறிப்பிட்டார். அதே சமயம், பிராண்ட்லர் சக்திகளின் ஒப்புநிலையை மிகையாக மதிப்பிட்டுவிட்டார் என்றும் அவர் கூறினார். பாட்டாளி வர்க்க நூற்றுவர்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு அறவே பயிற்றப்படவில்லை என்றும் அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை என்றும் தேல்மன் கூறினார். அவர்களை விரைவில் ஆயுத சன்னத்தர்கள் ஆக்க முடியும் என்று வலிந்துரைத்த பிராண்ட்லரின் நம்பிக்கை நிறைந்த கூற்றை அவர் மறுத்தார். ''அரசியல் முன்னேற்பாடும் இராணுவ முஸ்தீப்பும் வேண்டிய விதத்தில் செய்யப்படாவிட்டால் பாட்டாளி வர்க்கப் புரட்சியுடன் விளையாடுவது கூடாது என்று நாங்கள் [மாஸ்கோ]வில் மிக ஆழ்ந்த முறையில் கூறினோம்'' என்று 1923, நவம்பர் 3ந் தேதி நடந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் கூட்டத்தில் தேல்மன் விவரித்தார். ''பிராண்ட்லர் டிவிஷன்களைப் பற்றிச் சொன்னார். உண்மையிலோ, நம்முடைய போராட்ட வீரர்களையே கூட ஆயுத சன்னத்தர்கள் ஆக்குவது எங்களுக்கு முடியாததாக இருந்தது.''[2] கட்சி உள்

---

[1] ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1923, நவம்பர் 5ந் தேதி எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: ''காரியத்தின் ஒழுங்கமைப்பு-தொழில்நுட்ப ஏற்பாடுகளின், சிறப்பாக ஆயுத சன்னத்தத்தின் தரம் குறித்து மாஸ்கோவில் நீங்கள் கொடுத்த தகவல்கள், ஒரு போதும் கேட்டிராத அளவு மிகைப்படுத்தப்பட்டிருந்தன''. மை. ஆ. கூ., 495/1/70/85.

[2] ஆயுதந்தாங்கிய புரட்சியின் வரலாறு பற்றிய கட்டுரைகள். தொகுதி II. மாஸ்கோ, 1931, பக்கங்கள் 60-61.

நாட்டுப் போருக்குக் கொள்கைவாத நோக்கிலும் அரசியல் நோக்கிலும் இன்னும் ஆயத்தமாகவில்லை என்று தேல்மன் எச்சரித்தார்.

போராட்டத்தின் நிலைமையையும் வருங்கால வாய்ப்புக்களையும் மதிப்பிடுவதில் கட்சி ஒருமனதாய் இருப்பதாக எபர்லேன் ஒப்புக் கொண்டார். ஆனால் போராட்ட ஸ்தாபனங்களையும் ஆயுதங்களையும் பற்றிப் பேசுகையில் பிராண்ட்லர் விரும்பியதை எதார்த்தமாக வருணிக்கிறார் என்றும், இந்தப் படைப்பிரிவுகள் அமைக்கப்படும் நிலையில் மட்டுமே இருக்கின்றன என்றும் ஆயுதங்கள் மிகமிகக் குறைவாக இருப்பதாகவும் அவர் கூறினார். ஆயினும் தேல்மனும் எபர்லேனும் வெளியிட்ட ஆழ்ந்த கருத்துக்களை மகாநாடு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்த ''இடதுசாரி'' எதிர்த்தரப்பின் பிரதிநிதிகளான ஃபிஷரும் மாஸ்லவும் தொழிலாளர்-விவசாயிகளை அரசாங்கத்தின் இடத்தில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பொருட்டும் சோவியத் ஆட்சியின் பொருட்டும் போராடுவதை நேரடியான பணியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் நேரடியாக ஆட்சியைக் கைப்பற்றும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கோரினார்கள். கி.ஸினோவியெவ் அவர்களைத் தீவிரமாக ஆதரித்தார். அக்டோபர் 4ந் தேதியன்று விவாதத்தைத் தொகுத்து உரைக்கையில், ஜெர்மனியின் தற்போதைய வளர்ச்சிக் கட்டத்துக்குத் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிய கோஷம் போதாது என்று அவர் கூறினார். தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் என்பது சோவியத்துக்களின் வடிவில் அமைந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே என்று வெகுஜனங்களுக்கு விளக்கி விவரிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் செப்டெம்பர் 23ந் தேதி நடந்த முழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ''அடுத்துவரும் ஜெர்மானியப் புரட்சியும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் பணிகளும்'' என்ற ஆய்வுரையின் விவரங்களை ஸினோவியெவ் மகாநாட்டுக்கு அறிவித்தார். இந்த ஆய்வுரை பெரும்பாலும் அவராலேயே எழுதப்பட்டிருந்தது. ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுவதற்கு உரிய எல்லா நிலைமைகளும் முதிர்ந்துவிட்டன என்று இந்த ஆய்வுரையில் கூறப்பட்டிருந்தது. ''ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கப் புரட்சி தவிர்க்க முடியாதது என்பது மட்டுமின்றி,

ஏற்கனவே முற்றிலும் அருகே நெருங்கி விட்டது, உடனடியாக நிகழ இருக்கிறது என்பது தற்போது முற்றிலும் தெளிவாகி விட்டது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையான செயலூக்கமுள்ள வட்டாரங்களைத் தன் தரப்புக்கு ஈர்த்து விட்டது. மிக அணித்தான வருங்காலத்தில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாட்டாளி வர்க்கம் முழுவதன் பெரும்பான்மையையும் தன் பின் இட்டுச் செல்ல வல்லதாகி விடும்.''[1] ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சி கடுமையான நெருக்கடிக் கட்டத்தில் பிரவேசித்திருக்கிறது என்றும் வெகு ஜனங்கள் மீது செல்வாக்கை இழந்து விட்டது என்றும் ஆய்வுரையில் கூறப்பட்டிருந்தது. சமூக-ஜனநாயகவாதித் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் இடதுசாரி எதிர்த்தரப்பின் பக்கம் இருப்பதாகவும் ''சமூக-ஜனநாயகக் கட்சியின் 'புதிய' தலைவர்கள் பழைய கொள்கையையே கடைப்பிடிக்கிறார்கள் என்பதைக் கண்டதுமே இவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சி காட்டும் வழியில் செல்வார்கள்'' என்றும் ஆய்வுரை வலிந்துரைத்தது. ஷ்த்ரேஸெமான் அரசாங்கம், தன் வசம் எதார்த்தமான சக்தி எதுவும் இல்லாத அரசாங்கம் என்று ஆய்வுரை சித்திரித்தது.

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளைக் கலந்து கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அக்டோபர் 1ந் தேதி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகள் ஸக்ஸோனியா, தியுரிங்கியா அரசாங்கங்களில் சில நிபந்தனைகளுடன் பங்கு கொள்வது பொருத்தமாய் இருக்கும் என்று இந்தத் தீர்மானம் கூறியது. அரசாங்கத்திற்குத் தலைமை வகித்த இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள், ஸக்ஸோனியாவை பாசிஸ்டுகள் தீவிரமாகச் செயலாற்றி வந்த பவேரியாவுக்கு எதிராகக் காக்க ஆயத்தமாய் இருப்பதாக அறிவிக்க வேண்டும், ஐம்பது, அறுபது ஆயிரம் தொழிலாளர்கள் ஆயுத சன்னத்தர்கள் ஆக்கப்பட வேண்டும், புரட்சிப் போராட்டத்தை நசுக்குவதற்காக ஜெர்மானிய அரசாங்கத்தால் ஸக்ஸோனியாவுக்கு அனுப்பப்பட்டிருந்த ஜெனரல் மியூல்லர் எதிர்க்கப்பட வேண்டும் என்பவை இந்த நிபந்தனைகள். தியுரிங்கியாவுக்கும் இதே நிபந்தனைகள் பொருந்தின. அடுத்து வரும் நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் ஜெர்மனியில் ஆயுதமேந்திய கிளர்ச்சி நடந்து தீரும்,

---

[1] மை. ஆ. கூ., 17/2/101/6.

ஸக்ஸோனிய, தியுரிங்கிய அரசாங்கங்களில் கம்யூனிஸ்டுகள் சேர்ந்து கொள்வது புரட்சி முதிர்வதைக் கட்டாயம் விரைவு படுத்தும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாறு தீர்மானம் செய்யப்பட்டது.[1]

மகாநாட்டில் வகுக்கப்பட்ட கட்சியின் போராட்டத் திட்டம் பின்வரும் அடிப்படையைக் கொண்டிருந்தது: தொழிலாளி அரசாங்கத்தைக் காக்கும் பொருட்டுக் கிளர்ந்து எழுந்து பாட்டாளி வர்க்கம் ஸக்ஸோனியாவில் தாக்குதல் தொடங்கும். ஸக்ஸோனியப் பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தித் தன்னை ஆயுதசன்னத்தம் ஆக்கிக் கொண்டு, தெற்கே பவேரியப் புரட்சி எதிர்ப்பாளர்களுக்கும் வடக்கே பாசிஸத்துக்கும் இடையே மத்திய ஜெர்மனியில் தடையரண் அமைக்கும். அதே சமயம் கட்சி வெகு ஜனங்களை அணி திரட்டி, நாடு முழுவதிலும் போராட்டம் தொடங்கும்.[2]

ஜெர்மனியில் நிலவிய நிலைமையின் பகுத்தாய்வில் நிலையின் முதிர்ச்சி மிகையாகவும் எதிரிகளின் பலம் குறைவாகவும் மதிப்பிடப்பட்டிருந்தது.[3] ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கத்தில் புரட்சி மனப்பான்மை வளர்ந்திருந்தது. முக்கியமான தொழிற் சங்கங்களிலும் பெரிய தொழில் நிலையங்களைச் சேர்ந்த தொழிற் சாலைக் கமிட்டிகளிலும் கட்சியின் நிலைமை வலுவடைந்திருந்தது. ஆயினும் 1923ம் ஆண்டு இலையுதிர்கால வாக்கில் கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினருக்கு இன்னும் தலைமை ஏற்கவில்லை. சமூக-ஜனநாயகக் கட்சி, தொழிற்சங்கங்களை ஆதாரமாகக் கொண்டு ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மை வெகுஜனங்களைத் தனது செல்வாக்கின் கீழ் இன்னமும் வைத்திருந்தது.

மகாநாட்டின் தீர்மானங்கள் ஜெர்மனியில் நிலவிய நிலைமை

---

[1] ஜெர்மானிய நிகழ்ச்சிகளின் படிப்பினை, பக்கம் 55.

[2] அதே நூல், பக்கம் 5.

[3] ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டி போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்கு 1924, பிப்ரவரி 4ந் தேதி எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: ''அக்டோபர் மாதம் நாம் அனைவரும் நிலைமையின் முதிர்ச்சியை மிகையாகவும் எதிரிகளின் பலத்தைக் குறைவாகவும் மதிப்பிட்டோம் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஒப்புக் கொள்ளுகிறது''. "Nowy przeglad", Gliwice, 1924, N 3, S. 666.

யின் மிகையான நல் நம்பிக்கை நிறைந்த மதிப்பீட்டை ஆதாரமாகக் கொண்டிருந்தன. ஜெர்மனியில் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் அமைக்கும் பொருட்டு வெகுஜனங்களைப் போராட்டத்துக்கு இட்டுச் செல்வதே அந்த சந்தர்ப்பத்துக்கு ஏற்றதாய் இருந்தது. மகாநாட்டுத் தீர்மானங்களோ, இதைக் குறியாகக் கொள்ளும்படி கட்சியைப் பணிக்கவில்லை. மாறாக, போராட்டத்தின் கட்டங்களைத் தாண்டிக் குதிப்பதற்கு ஒப்பான பணிகளை அதற்கு முன் வைத்தன. கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரசின் தீர்மானங்களில் வெகுஜனங்களைப் புரட்சிக்கு இட்டு வருவதற்கான வழிகள் தேடப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. இந்தத் தேட்டங்கள் முழுமையாக மதிப்பிடப்படவில்லை. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைக் குழு அக்டோபர் 8ந் தேதி ''ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கத்துக்கு'' ஒரு செய்தி விடுத்தது. வெள்ளை சர்வாதிகாரத்துக்கு எதிராகச் சிவப்பு சர்வாதிகாரம் வைக்கப்பட வேண்டும் என்ற கோஷம் இதில் எழுப்பப்பட்டிருந்தது. நாடாளுமன்றத்துக்குப் பதில் சோவியத்துக்களின் காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அது கூறியது. ''நாடு முழுவதிலும் சோவியத் ஆட்சி என்ற கோரிக்கை அப்போதைய நிலைமைக்குப் பொருத்தமாயில்லை. ஸக்ஸோனியாவிலும் தியுரிங்கியாவிலும் ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து கூட்டணி அரசாங்கம் அமைப்பது பற்றி அதே சமயம் விடப்பட்ட அறிக்கைக்கு இது பொருந்தவில்லை என்று கூறவே வேண்டியதில்லை''[1] என்று இதைப் பற்றிக் குறிப்பிடுகிறார் வா. ஊல்பிரிஹ்த்.

ஜெர்மனியில் எதார்த்த நிலைமை, மாஸ்கோ மகாநாட்டில் பிராண்ட்லர் தீட்டிய ''மகிழ்பொங்கும் ஓவியத்தை''[2] அறவே ஒத்திருக்கவில்லை. சூழ்நிலையைச் சரியாக மதிப்பிட முடியாமையால் பிராண்ட்லர் கட்சியை நாடாளுமன்ற உணர்வில் செயல் புரியும் திசையில் எதார்த்தத்தில் செலுத்தினார். பூர்ஷ்வாச் சட்டங்களின் வரம்புகளுக்குள் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய சந்தர்ப்பவாதப் புரிவும், ஒன்றித்த கூட்டணியாக வெகுஜனப்

---

[1] W. Ulbricht. Referat zum "Grundriß der Geschichte der deutschen Arbeiterbewegung", „Einheit", Sonderheft, August 1962, S. 36-37.

[2] ***1923***, நவம்பர் ***13***ந் தேதி த்ஸேத்கினுக்கு எழுதிய கடிதத்தில் அவரே இதை ஒப்புக்கொண்டார். மை. ஆ. கூ., ***495/19/70/136***.

போராட்டம் நடத்துவதை முழுமையாக மதிப்பிடாமையும் காரணமாக ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஸக்ஸோனிய, தியுரிங்கியத் தொழிலாளர் அரசாங்கங்களை நாட்டில் புரட்சி இயக்கத்தை மேற்கொண்டு பரப்பும் நோக்கத்துக்குப் பயன் படுத்திக் கொள்ள முடியாது போயிற்று. வலதுசாரி சந்தர்ப்பவாதி களான பிராண்ட்லர் குழுவினரின் பிழை காரணமாகப் பாட்டாளி வர்க்கத்தை ஆயுத சன்னத்தம் ஆக்குவதற்கு இன்றியமையாத முயற்சிகள் செய்யப்படவில்லை.[1] ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் பிராண்ட்லர் குழுவின் வலதுசாரி சந்தர்ப்ப வாதக் கொள்கை, 1923 அக்டோபர் நாட்களில் கட்சியின் நட வடிக்கைகளை வெகுவாகப் பாதித்தது. ''அரசு அதிகாரத்தின் தன்மை பற்றிய தெளிவின்மையும் வலதுசாரி சந்தர்ப்பவாத, அதி தீவிர இடதுசாரி வியாக்கியானங்களும் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைத் தன் தரப்புக்குக் கொண்டுவர முடியாத வாறு கட்சிக்கு இடைஞ்சல் செய்தன''[2] என்று குறிப்பிட்டார் வா. ஊல்பிரிஹ்த்.

ஜெர்மானியப் படைப் பிரிவுகள் ஸக்ஸோனியாவுக்கு அனுப் பப்பட்ட செய்தி தெரிந்த பிறகு, அக்டோபர் 20ந் தேதி, ஜெர்மா னியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைக் குழு ஒரு முடிவு செய்தது: ஹெம்னித்ஸ் நகரில் அக்டோபர் 21ந் தேதி கூட இருந்த ஸக்ஸோனியத் தொழிற்சாலைக் கமிட்டிகள், தொழிற்சங்கங்கள், கண்காணிப்புக் கமிட்டிகள் ஆகியவற்றின் மகாநாட்டில் பொது வேலைநிறுத்தம் பற்றிய தீர்மானம் ஏற்கப்படுமாறு முயல்வது என்பது அந்த முடிவு. வேலைநிறுத்தம் ஹாம்பர்கில் ஆயுதமேந்திய கிளர்ச்சியாக வளரவேண்டும் என்பது நோக்கம். ஆனால் பொது வேலைநிறுத்தம் பற்றி இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் போக்கு தெரிந்துகொள்ளப்படவில்லை.[3] ஹெம்னித்ஸ் மகாநாட் டில் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் பொது வேலைநிறுத்த அறிவிப்பை எதிர்த்ததும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை தனது திட்டத்தைக் கைவிட்டு விட்டது.

---

[1] அக்டோபர் 21ந் தேதிவரை பாட்டாளி வர்க்க நூற்று வரிடம் 11 ஆயிரம் துப்பாக்கிகள் மட்டுமே இருந்தன. மை. ஆ. கூ., 495/19/70/29.

[2] „Einheit", Sonderheft, August 1962, S. 37.

[3] மை. ஆ. கூ., 495/19/67/51.

ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரியினர் பொது வேலைநிறுத்தப் பிரேரணையை நிர்ணயகரமான கணத்தில் ஆதரிக்க விரும்பாததும், ஜெர்மனி முழுவதிலும் 1923ம் ஆண்டு இலையுதிர் கால நிகழ்ச்சிகளின் போது இடதுசாரி சமூக-ஜனநாயக வாதிகளின் ஊசலாட்டமும் தயக்கமும் நிறைந்த கொள்கையும் புரட்சிப் போராட்டத்துக்குப் பெருங்கேடு விளைத்தன. இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் உறுதியின்மையைப் போக்கவும் வலது சாரித் தலைவர்களைப் பொருட்படுத்தாமல் அவர்களைக் கம்யூனிஸ்டு களுடன் ஒன்று இணைக்கவும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வாய்க்கவில்லை. ஸக்ஸோனியாவிலும் தியுரிங்கியாவிலும் தொழிலாளர் அரசாங் கங்கள் கலைக்கப்பட்டன. புரட்சி இயக்கத்தை நசுக்குவதில் சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் வலதுசாரித் தலைவர்கள் தீவிரமாகப் பங்காற்றினார்கள்.

பிற்போக்கின் தாக்குதல் விஷயத்தில் விரிவான எதிர்ப்பு இயக் கத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிராண்ட்லர் போன்ற தலைவர் கள் ஒழுங்கமைக்கவில்லை. அவர்கள் பிற்போக்குக்கு முன் எதார்த் தத்தில் சரணடைந்து விட்டார்கள். ஒரே விதிவிலக்காக இருந்தது ஹாம்பர்கில் புரட்சிகரத் தொழிலாளர்கள் எ. தேல்மனின் தலை மையில் நடத்திய வீரம் நிறைந்த கிளர்ச்சி மட்டுமே. ஆயினும் இந்தக் கிளர்ச்சி தனிப்பட்டதாக இருந்தது. அறுபது மணி நேர இடைவிடாத சண்டைகளுக்குப் பின் இது நிறுத்தப்பட்டுவிட்டது. 1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஜெர்மானியத் தொழி லாளி வர்க்கம் நடத்திய புரட்சிப் போராட்டம் தோல்வியில் முடிந்தது. புரட்சி எதிர்ப்புச் சக்திகளுக்கு சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர்கள் அளித்த தீவிர ஆதரவு காரண மாகவும் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் ஊசலாட்டமும் தயக்கமும் காரணமாகவும் ஏற்பட்ட சக்திகளின் பாதகமான ஒப்புநிலையால் விளைந்தது இந்தத் தோல்வி. நிர்ணயகரமான நிகழ்ச்சி கள் தொடங்குவதற்கு முன் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான் மையினரையும் விவசாயிகளின் விரிவான வட்டாரங்களையும் தன் தரப்புக்குக் கொண்டுவர ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியால் முடியவில்லை. பிராண்ட்லர்-தால்ஹைமர் குழுவின் தலைமையில் இயங்கிய கட்சித் தலைவர்கள் பல வலதுசாரி சந்தர்ப்பவாதத் தவறுகளும் இடதுசாரித் தவறுகளும் செய்தார்கள். இவை நாட் டில் புரட்சி இயக்கத்தை ஆழமாக்கித் தீவிரப்படுத்துவதில் கட்சிக்கு இடையூறு விளைத்தன.

1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நடந்த ஜெர்மானிய நிகழ்ச்சிகளும் அவ்வாறே பல்கேரியாவிலும் போலந்திலும் நடந்த நிகழ்ச்சிகளும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் கூர்ந்த கவனத்துடன் ஆராய்வதற்கு உரிய விஷயங்கள் ஆயின.

தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிய கோஷம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் வழி, பிற்போக்கினதும் பாசிஸத்தினதும் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்தைத் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவுவதற்கான போராட்டத்துடன் இணைக்கும் முயற்சி என்ற விளக்கமும், இந்த அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் செயலொற்றுமையை ஏற்படுத்துவதற்கும் தொழிலாளி வர்க்கத்துக்கு விரிவான உழைப்பாளி வேகுஜனங்களின் ஆதரவைப் பெறுவதற்குமான முயற்சியும் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தன. ஆனல் 1923ம் ஆண்டு இலையுதிர் காலத்துக்குள் இந்தப் போர்த்தந்திரக் கொள்கைப் போக்கை ஆழ்ந்த முறையிலும் முழுமையாகவும் வகுக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகளால் முடியவில்லை. இடையில் உள்ள கட்டங்கள் எல்லாவற்றையும் தாண்டி ஒரே ''நிர்ணயகரமான தாக்குதலால்'' புரட்சியில் வெற்றி பெற்றுவிடலாம் என்ற எண்ணம் இன்னமும் வலிவாய் இருந்தது. தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரையும் பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளி வெகுஜனங்களில் பெரும்பான்மையினரையும் தங்கள் தரப்புக்குக் கொண்டுவரவும், தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியம் ஏற்படுத்தவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இயலவில்லை. சமூக-ஜனநாயக, சந்தர்ப்பவாத மீத மிச்சங்களும் பிரிவுவாத-வரட்டுச் சூத்திரவாதத் தவறுகளும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்களைப் பாதித்தன.

சோதரக் கட்சிகள் கொள்கைவாத-ஸ்தாபன நோக்கில் வலுவடைவதும், வெகுஜனங்களிடையே வேலை செய்வதற்கான எல்லா வடிவங்களிலும் முறைகளிலும் தேர்ச்சி பெறுவதும், போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் மேற்கொண்டு வளர்ச்சி அடைவதும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு நிர்ணயகரமான முக்கியத்துவம் உள்ளவை ஆயின. ஆனல் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தின் வலதுசாரி சந்தர்ப்பவாதத் திரிபுகளை எதிர்த்துப் போராடுகையில் இடதுசாரிப் பிரிவுவாதத் தன்மை கொண்ட தவறுகள் செய்யப்பட்டன.

பெருமளவு வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளுடைய கம்யூ

னிஸ்டு எதிர்ப்புக் கொள்கைக்கு எதிர் செயலாகவே இத்தகைய தவறுகள் செய்யப்பட்டன. வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் புரட்சி இயக்கத்துடன் போராடுவதில் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு இடைவிடாது தொடர்ந்து உதவி வந்தார்கள். இந்த நோக்கத்துடன் அவர்கள் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் பிளவுகள் ஏற்படுத்தும் நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து வந்தார்கள். அதே சமயம் சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரியினரும் 1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில், ஜெர்மனியில் வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைந்திருந்த காலப்பகுதியில் பிற்போக்குக்கு எதிராக நிர்ணயகரமாகச் செயல் புரிய மறுத்தார்கள். இதனால் தொழிலாளி வெகுஜனங்களிடையே பிளவு இன்னும் ஆழமாயிற்று.

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிராண்ட்லர் குழுத் தலைவர்களுடைய சந்தர்ப்பவாதச் செயலும் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் உறுதியின்மையும் ஸக்ஸோனியாவிலும் தியுரிங்கியாவிலும் தொழிலாளி அரசாங்கங்களின் தோல்வியும் ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதக் கட்சியின் வலதுசாரித் தலைவர்களுடைய புரட்சிவிரோத நடவடிக்கைகளும் ஆட்சியின் இடைக்கால வடிவங்கள் பற்றிய கருத்தை மறுப்பதற்கு உரிய காரணங்களாக ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவிலும் இருந்த இடதுசாரி நபர்களால் பயன்படுத்தப்பட்டன. தொழிலாளி அரசாங்கம் என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மறுபெயர் என்றே விளக்கப்பட வேண்டும் என்று இந்த அடிப்படையில் அவர்கள் வலிந்துரைத்தார்கள். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை சமூக-ஜனநாயகக் கட்சியின் வண்டவாளத்தை அம்பலப்படுத்தும் வழி என்ற குறுகிய அர்த்தத்தில் அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

இத்தகைய மதிப்பீடுகளின் இடதுசாரி-பிரிவுவாதத் தன்மையைக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அனேகத் தலைவர்கள் (கிளாரா த்ஸேத்கின், வி. பிக். போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் முதலியோர்) சுட்டிக் காட்டினார்கள். உதாரணமாக, போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு எழுதிய கடிதத்தில், ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தின் கண்டனமாக அர்த்தப்படக் கூடிய எந்தச் சூத்திரங்களும் தவறானவை என்று கூறப்பட்டது. ஆனால் இந்தக் கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சமூக-ஜனநாயகவாதம் ''பாசிஸத்

தின் பகுதி'' என அறிவிக்கப்பட்டது. 1924, ஜனவரியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது தலைமைக் குழுக் கூட்டத்தில் ஜெர்மானியப் பிரச்சினை விவாதிக்கப்பட்டபோது ஸினோவியெவ் இவ்வாறு கூறினார்.[1] முதன்மையான எதிரி இடதுசாரி சமூக-ஜனநாயகம் என்றும், இடதுசாரி சமூக-ஜனநாயகம் இல்லாமல் மட்டுமல்ல, அதற்கு எதிராகவும் போராட்டம் நடத்துவது அவசியம் என்றும், ஒன்றித்த கூட்டணியை சமூக-ஜனநாயகத் தலைவர்களுடன் எவ்விதப் பேச்சு வார்த்தைகளும் வைத்துக் கொள்ளாமல் கீழிருந்து ஏற்படுத்த வேண்டும் என்றும் ஓர் ஆய்வுரையையும் அவர் முன்வைத்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது தலைமைக் குழுவின் தீர்மானங்கள் இந்தக் கருத்துக்களைப் பிரதிபலித்தன.[2] இடதுசாரிப் பிரிவுவாத-வரட்டுச் சூத்திரவாதத் தவறுகள் பிற்காலத்தில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்கான முயற்சிகளுக்கும் பெருத்த கேடு விளைத்தன. அடுத்து வந்த ஆண்டுகளில் திரட்டப்பட்ட புதிய வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில் இந்தத் தவறுகள் கம்யூனிஸ்டுகளால் நீக்கவும் திருத்தவும் பட்டன.

மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தில் படைப்புத் தன்மையுடன் தேர்ச்சி பெறுவதும், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் மேற்கொண்டு செப்பம் செய்வதும், கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் தொழிலாளி வர்க்கத்தினதும் எல்லா உழைப்பாளிகளுடையவும் மிக மிக விரிவான வட்டாரங்களுடன் தொடர்பு கொண்ட வெகுஜனப் போராட்டக் கட்சிகளாக மாற்றுவதும் இன்றியமையாதது என்பதே 1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஏற்பட்ட தோல்வியிலிருந்து கம்யூனிஸ்டுக் கட்சிகள் கற்றுக்கொண்ட முக்கியமான படிப்பினை ஆகும்.

---

[1] ஜெர்மானிய நிகழ்ச்சிகளின் படிப்பினைகள், பக்கங்கள் 57—67.

[2] அதே நூல், பக்கங்கள் 92, 99—100.

அத்தியாயம் மூன்று

முதலாளித்துவத்தின் அம்ச ரீதியான நிலைப்பாடும் சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமான வளர்ச்சியும் நிகழ்ந்த ஆண்டுகளில் கம்யூனிஸ்டு அகிலம்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத-ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்தும் திசையில் முன்னேற்றம்

(1924-1928)

முதலாளித்துவத்தினது
நிலைப்பாட்டின் பொது இயல்புகள்

1924ம் ஆண்டு தொடங்கும் தறுவாயில் போருக்குப் பிந்திய முதல் ஆண்டுகளில் நிகழ்ந்த புரட்சி ஏற்றம் முடிந்து விட்டது. 1921-1923ம் ஆண்டுகளிலேயே அனேக முதலாளித்துவ நாடுகளில் பூர்ஷ்வா அரசாங்கங்கள் படிப்படியாக நிலைபெறத் தொடங்கி இருந்தன. ஆயினும் அப்போது ஆரம்பம் ஆகியிருந்த முதலாளித்துவத்தின் நிலைப்பாடு இன்னும் உலகு பரவிய தன்மை பெறவில்லை. ஜெர்மனியிலும் பல்கேரியாவிலும் போலந்திலும் 1923ம் ஆண்டு நடந்த பாட்டாளி வர்க்கப் போராட்டங்களின் தோல்விக்குப் பிறகு முதலாளித்துவ உலகம் தாற்காலிகமான, அம்சரீதியான நிலைப்பாடு அடையலாயிற்று.

பூர்ஷ்வா அரசாங்கங்கள் மீது நேரடித் தாக்குதல் வெற்றி பெருதது, முதலாளித்துவ நாடுகளில் புரட்சி நிகழ்முறையின் விரைவு குறைந்த வளர்ச்சிக் காலப்பகுதிக்கு மாற்றம் ஏற்பட முதன்மையான காரணமாக இருந்தது. ஆனல் இதற்கு வேறு காரணங்களும் இருந்தன.

முதலாளித்துவப் பொருளாதாரம் யுத்தத்துக்குப் பிந்திய நெருக்கடியிலிருந்து வெளியேறி, ஏற்றக் கால கட்டத்தில் அடிவைத்திருந்தது. இதனேடு கூடவே தொழில்துறைகள் தொழில் நுட்ப நோக்கிலும் ஸ்தாபன நோக்கிலும் மாற்றி அமைக்கப் பட்டன, உழைப்பின் உற்பத்திச் சக்தி உயர்ந்தது, உற்பத்தியின் அளவு அதிகரித்தது. உற்பத்தியின் ஓரிடக் குவிவும் மூலதனத்தின் மையப்பாடும் முன் ஒருபோதும் காணுத அளவை எட்டின. விளைவாக பிரமாண்டமான ஏகபோக நிறுவனங்கள் தோன்றின.

இருபதுக்களில் ஏற்பட்ட பொருளாதார ஏற்றத்தை ஒட்டி பூர்ஷ்வா அரசு ஆட்சிகள் வலுவடைந்தன. பூர்ஷ்வாக் கட்சிகள் முன்பு இழந்திருந்த நிலைகளில் ஒரு பகுதியை மீண்டும் பெற்றன.

முதலாளித்துவத்தின் தாற்காலிக நிலைப்பாடு சர்வதேச உறவுகளின் துறையிலும் பரவியது. வெர்சேல்ஸ் உடன்படிக்கையிலும் வாஷிங்டன் ஒப்பந்தங்களிலும் உறுதியாக்கப்பட்டிருந்த உலகின் மறுபங்கீடு பற்றிய முடிவுகள், முக்கியமான முதலாளித்துவ வல்லரசுகளின் செல்வாக்கு மண்டலங்கள் குறித்த தாற்காலிக ஒப்பந்தங்கள் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்தன. வெற்றி பெற்ற நாடுகள் வாஷிங்டன் மகாநாட்டில் (1921 நவம்பர் முதல் 1922 பிப்ரவரி வரை) சீனுவின் அரைக் காலனி நிலையை அப்படியே வைத்திருப்பதையும் உறுதிப்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டு சீன மக்களைக் கூட்டாகச் சுரண்டுவது பற்றிக் குறிப்பிட்ட காலத்துக்கு ஒப்பந்தம் செய்து கொண்டன. வாஷிங்டன் மகாநாடு பசிபிக் மாகடல் பிரதேசத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் சக்தியில் தாற்காலிகச் சம நிலைமை ஏற்படுத்தியது. ஆனால் அவற்றுக்கு இடையே நிலவிய முரண்பாடுகளை அது அகற்றிவிட வில்லை.

ஐரோப்பாவின் மத்தியில் சோவியத் எதிர்ப்புச் சக்திகளை நிறுவுவதில் அக்கறை கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன் ஆகியவற்றின் ஆளும் வட்டாரங்களின் விடாப்பிடியான வற்புறுத்தலின் பேரில் 1924ல் டாவெஸ் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்படி ஜெர்மனி இழப்பீட்டுத் தொகைகளின் கணிசமான பகுதியிலிருந்து விடுதலை பெற்றது. தனது இராணுவ, பொருளாதார வலிமையை மீட்டமைப்பதற்காக பிரிட்டிஷ்-அமெரிக்கக் கடன்களும் பெற்றது. டாவெஸ் திட்டம், வெற்றி பெற்ற வல்லரசுகளுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் இருந்த கடுமையான முரண்பாடுகளைத் தாற்காலிகமாக மென்மைப்படுத்தியது. அதே சமயம், 'சோவியத் யூனியனை ஜெர்மனியின் தொழில் உற்பத்திப் பொருள்களுக்கு ஏற்ற விற்பனைச் சந்தையாக மாற்றுவதும் சோவியத் யூனியனின் தொழில் பெருக்கத் திட்டங்களைக் குலைப்பதும் இந்தத் திட்டத்தின் நோக்கங்களாய் இருந்தன. லொகார்னோ ஒப்பந்தப்படி (1925 அக்டோபர்) ஏகாதிபத்திய நேசநாடுகள், ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் பெல்ஜியத்துக்கும் இடையே வெர்சேல்ஸ் உடன்படிக்கை மூலம் நிறுவப்பட்ட எல்லைகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தன. அதே சமயம், ஜெர்மனிக்கும் போலந்துக்கும், ஜெர்மனிக்கும் செக்கோஸ்லோவாக்கியாவுக்கும் இடையில் இருந்த எல்லைகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க அவை மறுத்துவிட்டன; வருங்கால ஜெர்மானிய

ஆக்கிரமிப்புக்குக் ''கிழக்கு வாயிலே'' இதன் மூலம் அவை குறித்துக் காட்டின.

முதலாளித்துவத்தின் அம்சரீதியான நிலைப்பாடு ஏற்பட்ட நிலைமைகளில் உழைப்பாளிகள் மீது பூர்ஷ்வா வர்க்கத்தின் கொள்கைவாத-அரசியல் பாதிப்பு தீவிரம் அடைந்தது. பொருளாதார ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டத்தில் குறைவு, சில உழைப்பாளி வட்டாரங்களின் வாழ்க்கைத் தரத்தில் ஓரளவு உயர்வு ஆகியவை காரணமாக, நிலவும் உறவுகள் நிலையானவை என்ற நம்பிக்கை மக்களின் விரிவான வட்டாரங்களில் உறுதிப்பட்டது. முதலாளித்துவம் தன்னுடைய மோசமான அம்சங்களை அகற்றி விட்டது என்ற பூர்ஷ்வா-நாடாளுமன்ற, சாத்துவிகவாத மருட்சிகள் விரிவாகப் பரவலாயின. வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் வெகுஜனச் சீர்திருத்தவாதத் தொழிலாளர் ஸ்தாபனங்களை பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒத்துழைக்கும் வழியை மேற்கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்றார்கள். முதலாளித்துவம் என்றென்றும் செழித்துத் தழைக்கும் காலக் கட்டம் வந்து விட்டது என்று பூர்ஷ்வா,வலதுசாரி சோஷலிஸ்டுக் கொள்கைவாதிகளும் அரசியல் வாதிகளும் அறிவித்தார்கள்.

முதலாளித்துவம் அழுகும் காலப்பகுதியிலிருந்து வெளிவந்து விட்டது, தன் முரண்பாடுகளை அகற்றி விட்டது என்ற பூர்ஷ்வா-சீர்திருத்தவாத வலிந்துரைகளைக் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தீர்மானமாக நிராகரித்து விட்டன.

முதலாளித்துவத்தின் நிலைப்பாடு நிரந்தரமானதாக இருக்க முடியாது, ஏனென்றால் அது, முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி நிலைமைகளில் ஏற்பட்டிருந்தது. மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றியும் உலகம் இரு அமைப்புக்களாகப் பிளவுபட்டிருந்ததும் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க மண்டலம் பரப்பில் குறுகிவிட்டதும் இந்த நெருக்கடியின் குறிகளாக விளங்கின. சோவியத் நாடு நிலவியதும் அதன் வலிமையும் செல்வாக்கும் வளர்ந்ததும் முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டைக் குலைக்கும் விறல் மிக்க காரணிகளாக இருந்தன. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு வலுப்பட்டதும் சோவியத் யூனியனில் சோஷலிஸம் வெற்றிகரமாக நிறுவப்பட்டு வந்ததும் உலகம் முழுவதன்மீதும் புரட்சிக்குத் தூண்டும் பெருத்த பாதிப்பு நிகழ்த்தின.

நிலைப்பாடு முதலாளித்துவத்தின் புறநிலையாகச் செயல்படும் விதிகளை ''ரத்து செய்துவிட'' முடியவில்லை. தொழிலாளர்களும்

பிற உழைப்பாளி வட்டாரங்களும் சுரண்டப்படுவது முன்னிலும் தீவிரம் ஆயிற்று. முதலாளித்துவப் புதுமைப் புனைவு காரணமாக உழைப்பின் தீவிரம் மேலும் அதிகரித்தது. வேலையில்லாத் திண்டாட்டம் தீரா நோய் ஆகி விட்டது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியால் தோன்றிய காரணிகள் அதற்கு இயல்பான எல்லா முரண்பாடுகளையும் மீண்டும் தீவிரப்படுத்துவது தவிர்க்க முடியாத தாக இருந்தது.

முதலாளித்துவம் நிலைப்பட்ட நிலைமைகளில் பாட்டாளி வர்க்கம் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது. மிக அடிக்கடி இது கடுமையாக இருந்தது. 1924, ஜூலையில் இத்தாலியில் நடந்த, ஐந்து லட்சம் பெயர் கலந்துகொண்ட பாசிஸ்டு எதிர்ப்பு வேலை நிறுத்தம்; பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் காலனிப் போருக்கு எதிராக 1925, அக்டோபர் மாதம் பிரான்சில் நடந்த வெகுஜன ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் வேலைநிறுத்தங்களும்; நாட்டின் பொருளாதார வாழ்க்கையை ஸ்தம்பிக்கச் செய்யும் அளவுக்கு பிரிட்டனில் 1926, மே மாதம் நடந்த பொது வேலை நிறுத்தம், 1927, ஜூலையில் வியன்னு நகர வீதிகளில் தடையரண்கள்; ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்கியா, பிற நாடுகள் ஆகியவற்றில் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் — இந்த எல்லா நடவடிக்கைகளும் முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டை ஆட்டி அசைத்தன. ஏகாதிபத்தியத்தின் காலனி ஆதிக்க அமைப்புக்கு நேர்ந்த நெருக்கடி ஆழமானதும் முதலாளித்துவத்தின் நிலைப் பாட்டைக் குலைத்தது. அக்டோபர் புரட்சியால் தட்டி எழுப்பப் பட்ட கிழக்கு நாடுகளின் மக்கள் விடாப்பிடியான தேசிய-விடுதலைப் போராட்டப் பாதையில் முன்னேறத் தொடங்கினுர்கள். இந்த ஆண்டுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சித் தீ சிரியாவிலும் மொரோக்கோவிலும் இந்தோனீசியாவிலும் பரவியது. 1925 முதல் 1927 வரை சீனுவில் தேசியப் புரட்சி விரிவாக நடந்தது. மேலும் மேலும் பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் மக்கள் விழித்தெழுந்து அரசியல் போராட்டம் தொடங்கினுர்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளதும் பிரிட்டனதும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வெகுஜனங்களின் போராட்டங்கள் லத்தீன் அமெரிக்காவில் மேலும் விரிவாக நடந்தன.

தனித்தனி நாடுகளின் வளர்ச்சியில் சமமின்மை தீவிரமடைந்ததும் முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டினது உறுதியின்மைக்குக் காரணம் ஆயிற்று. இதனுல் ஏகாதிபத்தியங்களுக்கிடையே முரண்

பாடுகள் மேலும் கூர்மையடைவது தவிர்க்க முடியாதது ஆயிற்று. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், ஜெர்மனி ஆகியவற்றின் பொருளாதார விறல் விரைவாக வளர்ந்தது. உலகப் பொருளாதா ரத்தில் பிரிட்டனின் ஒப்பு நிறை குறைந்தது. பிரான்ஸ் அனேக மாக இருந்த இடத்திலேயே இருந்தது. ஏகாதிபத்தியங்களுக்கிடை யே முரண்பாடுகளில் சிக்கலான புதிய முடிச்சுக்கள் விழுந்தன.

இந்த எல்லாக் காரணிகளும் முதலாளித்துவ நிலைப்பாட்டை வீழ்ச்சிக்கு இட்டு வருவதும் புரட்சிப் போராட்டத்தை ஏற்றம் பெறச் செய்வதும் கட்டாயம் நிகழ்ந்து தீரும் என்று கம்யூனிஸ்டு கள் முன் கண்டார்கள். நிகழ்ச்சிகளின் வருங்காலப் போக்கு பற்றிய விஞ்ஞானக் கணிப்பாக இருந்தது இது. ஆனால் முதலா ளித்துவ உறவுகள் தாற்காலிகமாக வலுவடைந்துவிட்டதால் உலகப் புரட்சி நிகழ்முறையின் வளர்ச்சி வேகம் தணிவதும் "உலகப் புரட்சியின் ஓரளவு தாமதித்த வளர்ச்சிக்"[1] கட்டம் தொடங்குவதும் தவிர்க்க இயலாதவையாக இருந்தன.

சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்துக்கு எதிர் நின்றது உலக மூலதனம். வரலாற்று நோக்கில் அதன் வாழ்வு தீர்ந்து விட்டது என்றாலும் அது இன்னும் வலிமை குன்றாத எதிரியாக இருந்தது. பொருளாதார, அரசியல், இராணுவ, கொள்கைவாத வளங்களால் அது சர்வாயுத சன்னத்தமாக இருந் தது. நீண்ட கால, கடினமான போராட்டம் முன் நின்றது. இந்தப் போராட்டத்தில் புரட்சிச் சக்திகளின் அரணாக விளங்கியது சோவியத் நாடு.

முதலாளித்துவ அமைப்பின் செயல்திறன் மிக்க "நிலைப்படுத்தி களில்" ஒன்றாகப் பணி ஆற்றியது வலதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சி. முதலாளித்துவ அமைப்பின் அஸ்திவாரங்களைத் தகர்க்காமலே வெகுஜனங்களின் நிலைமையை அடிப்படையில் மேம்படுத்துவதும் சமுதாய விடுதலை பெறுவதும் சாத்தியமே என்ற சந்தர்ப்பவாதக் கருத்தை அதன் தலைவர்கள் உழைப்பாளிகளிடையே பரப்பி வந்தார்கள். தொழிலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினர் போராட்டத்தின் பயனாக ஓரளவு எதார்த்தச் சம்பள உயர்வு பெற்றிருந்ததை சமூக-ஜனநாயகம் தன் கூற்றுக்குச் சாதகமாக சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டது.

முதலாளித்துவத்தின் நிலைப்பாடு நிகழ்ந்த ஆண்டுகளில் சோஷ

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 475.

லிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தைச் சேர்ந்த சீர்திருத்தவாதத் தொழிலாளர் கட்சிகளின் உறுப்பினர் எண்ணிக்கை 65-70 லட்சம் என்று கணக்கிடப்பட்டது. ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலத்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளின் சீர்திருத்தவாதத் தொழிற்சங்க மையங்களிலும் 175 லட்சம் தொழிலாளர்கள் சேர்ந்திருந்தார்கள். சுமார் இரண்டரைக் கோடி வாக்காளர்கள் அந்தக் காலப் பகுதியில் தங்கள் வாக்குகளைச் சீர்திருத்தவாதிகளுக்கு அளித்தார்கள்.

1925ம் ஆண்டு மார்ஸேல்ஸ் நகரில் நடந்த சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் காங்கிரஸ், முதலாளித்துவம் தானாகவே சோஷலிஸமாக வளர்ந்துவிடும் என்று தனது தீர்மானங்களில் கூறியது. இந்தத் தீர்மானங்கள் தொழிலாளர்களைத் தவறான திசையில் திருப்பின. 1925ம் ஆண்டு ஹைடல்பர்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியின் செயல் திட்டம், மூலதனக் குவிவை உற்பத்திச் சாதனங்கள் சமூக உடைமையாகப் படிப்படியாகப் பரிணமிக்கும் நிகழ்முறை என்று சித்திரித்தது. ஜெர்மானிய சமூக-ஜனநாயகத்தின் சித்தாந்தகர்த்தரான ர. கில்ஃபெர்டிங்கு, ''ஒழுங்கமைந்த முதலாளித்துவ'' சகாப்தம் தொடங்கிவிட்டதாக அறிவித்தார். இது நெருக்கடிகளையும் உற்பத்தி அராஜகத்தையும் சமாளிக்க வல்லதாய் இருக்கும் என்றார் அவர். டிரஸ்டுகளும் கூட்டு வணிக நிலையங்களும் வலுவடைந்ததும், அவற்றின் சர்வதேசத் தொடர்புகள் பலப்பட்டு விரிவானதும், அரசு-ஏகபோகக் கட்டுப்பாடும், ''கட்டற்ற போட்டி என்னும் முதலாளித்துவக் கோட்பாட்டின் இடத்தில் திட்டமிட்ட உற்பத்தி என்ற சோஷலிஸக் கோட்பாடு வந்துவிட்டதைக் காட்டுவதாக''[1] ர. கில்ஃபெர்டிங்கு கருதினார். சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தைச் சேர்ந்த எல்லாக் கட்சிகளுடையவும் வலதுசாரித் தலைவர்கள் இந்தக் கருத்துக்களை ஆதரித்தார்கள்.

சீர்திருத்தவாதத் தலைவர்கள் ஐரோப்பாவின் குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களுடையவும் தொழிலாளி மேற்குடியினரதும் மனப்போக்கைப் பிரதிபலித்து, காலனியாதிக்க ஒடுக்குமுறையை எதார்த்தத்தில் நியாயப்படுத்தினார்கள். சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸ் (1928) தீர்மானங்கள் இதே மனப்போக்கைக் காட்டின: முதலாளித்துவம் ஏகாதி

[1] Sozialdemokratischer Parteitag in Kiel, Berlin, 1927, S. 168.

பத்தியவாதியாக இருந்தது நின்றுவிட்டது, காலனிகளையும் விற்பனைச் சந்தைகளையும் கைப்பற்றுவதில் இப்போது அதற்கு அக்கறை இல்லை, முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே நிலையான சமாதானம் ஏற்படுவது சாத்தியம் என்பன போன்ற மருட்சிகள் உழைப்பாளி வெகுஜனங்களிடையே பரவின.

பூர்ஷ்வா வர்க்கத்துடன் மிக விரிவான அளவுகளில் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு இந்த முடிவுகள் யாவும் கொள்கைவாத அடிப்படையாக விளங்கின. இந்த ஆண்டுகளில் போன்று இவ்வளவு பெருந்திரளான உழைப்பாளி வெகுஜனங்களை பூர்ஷ்வா வர்க்கத்தோடு ஒத்துழைக்கச் செய்ய வலதுசாரி சமூக-ஜனநாயகத்துக்கு முன் ஒருபோதும் வாய்த்ததில்லை.

முதலாளித்துவம் அம்சரீதியாக நிலைப்பட்ட நிலைமைகளில் புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு ஆழ்ந்த இடர்கள் ஏற்பட்டன. கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் சர்வதேசத் தொழிலாளர், கம்யூனிஸ்டு இயக்கங்கள், மொத்தத்தில் உலகப் புரட்சி நிகழ்முறை ஆகியவற்றின் அணித்தான பணிகளையும் வருங்கால வாய்ப்புக்களையும் புதிதாக நிர்ணயிப்பது புதிய சூழ்நிலை காரணமாக இன்றியமையாதது ஆயிற்று. தொழிலாளி வர்க்கக் கட்சிகளை உறுதிப்படுத்தி, வெகுஜனங்களுடன் அவற்றின் தொடர்புகளை விரிவாக்கி வலுப்படுத்தும் பெரும் பணி கம்யூனிஸ்டுகளுக்கு எதிர்ப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ். கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத, ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்த முடிவு

ஐந்தாவது காங்கிரசின் ஆரம்பம்

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் 1924, ஜூன் 17ந் தேதி மாஸ்கோவில் தொடங்கியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஸ்தாபகரும் வழிகாட்டியுமான விளாதீமிர் இலியீச் லெனின் இல்லாமல் கூடிய முதல் காங்கிரஸ் இதுவே. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத் தலைவரது மறைவு உலகின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த கோடானுகோடி உழைப்பாளிகளையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு நேர்ந்த பேரிழப்பு, அதன் அணிகளை இன்னும் நெருக்கமாக ஒற்றுமைப்படுத்துவதை, அவசியம் ஆக்கிற்று.

ஐந்தாவது காங்கிரசின் நடவடிக்கைகளில் 504 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்கள் 49 கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளையும் ஒரு மக்கள்-புரட்சிக் கட்சியையும் 10 சர்வதேச ஸ்தாபனங்களையும் (தொழிற்சங்க அகிலம், இளைஞர் கம்யூனிஸ்டு அகிலம், சர்வதேசத் தொழிலாளர் உதவிக் கமிட்டி, சர்வதேசத் தொழிற்சங்க ஸ்தாபனம் முதலியவை) சேர்ந்தவர்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் கூடிய தறுவாயில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர் தொகை 13லட்சத்து 19 ஆயிரம். இவர்களில் சுமார் பாதிப் பெயர் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி உறுப்பினர்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மொத்த உறுப்பினர் தொகை 1922ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓரளவு குறைந்து விட்டது. 1923ம் ஆண்டில் நடந்த போராட்டங்களில் தொழிலாளி வர்க்கத்தின் தோல்வி, அனேக முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மறைமுகமாக வேலை நடத்த வேண்டி இருந்ததால் ஏற்பட்ட சங்கட நிலைமைகள் ஆகியவற்றின் விளைவாகவும் நிலையுறுதி அற்ற நபர்கள் சீர்திருத்தவாதிகளிடம் போய்விட்டதாலும் உறுப்பினர் எண்ணிக்கை இவ்வாறு குறைந்தது.

நான்காவது காங்கிரசுக்குப் பின் கழிந்திருந்த ஒன்றரை ஆண்டுகளில் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு எதிர்ப்பட்டிருந்த அனேக சித்தாந்த, செயல்திட்ட, செயல்தந்திரப் பிரச்சினைகளை ஐந்தாவது காங்கிரசின் பிரதிநிதிகள் ஆராய வேண்டி இருந்தது.

மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிர் நிற்கும் பொருட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளையும் உலகப் புரட்சி இயக்கம் அனைத்தின் அணிகளையும் ஒன்று திரட்டும் பணியும் சிறப்பாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளை வலுப்படுத்தும் பணியும் காங்கிரசினது கவனத்தின் மையமாக இருந்தன. மார்க்சிய-லெனினியத்தின் சித்தாந்த,செயல்திட்ட, செயல்தந்திர முடிவுகளை மேற்கொண்டு விரிவுபடுத்துவதன் அடிப்படையிலும், குறித்த நாட்டின் ஸ்தூல நிலைமைகளுக்கு ஏற்ப அவற்றைக் கையாள்வதன் வாயிலாகவும், ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் அனுபவத்தைப் படைப்புத் தன்மையுடன் பயன்படுத்துவதன் மூலமுமே இந்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவது சாத்தியமாய் இருந்தது.

புதிய நிலைமைகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கையையும் செயல்தந்திரத்தையும் காங்கிரஸ் ஆராய வேண்டி இருந்தது. 1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஜெர்மனியிலும் பல்கேரியாவிலும் போலந்திலும் நடந்த நிகழ்ச்சிகள் புரட்சியின் புதிய காலக் கட்டம் தொடங்கி இருப்பதை அறிவிக்கின்றன என்று கம்யூனிஸ்டு அகிலத்தில் இருந்த ''இடதுசாரியினர்'' கருதினார்கள். முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நேரடியாக நிறுவும் கொள்கையை மேற்கொள்வதும் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கைவிட்டு விடுவதும் இன்றியமையாதவை என்று இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அவர்கள் முடிவு செய்தார்கள்.ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் வெறுமே போக்குக் காட்டும், அதிலும் குறுகிய இடைக்காலத்திற்குரிய நடவடிக்கைதான், தொழிலாளி வெகுஜனங்களுக்கான போராட்டத்தின் அடிப்படையை நிறுவும் கோட்பாடு அல்ல என்று அவர்கள் எண்ணினார்கள். காங்கிரசில் விவாதிக்கப்பட இருந்த தேசியகாலனிப் பிரச்சினையிலும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு கூட்டணி என்ற கோஷத்தை ''இடதுசாரியினர்'' தங்கள் கடுந் தாக்குதலுக்கு இலக்கு ஆக்கினார்கள்.

அனைத்துலகக் கம்யூனிஸ்டுகள் இம்முறை லெனின் இல்லாமல் காங்கிரசில் கூடியிருந்தது, ஐந்தாவது காங்கிரசுக்கு எதிர்ப்பட்

டிருந்த சித்தாந்த, நடைமுறைப் பிரச்சினைகளின் சிக்கலான தொகுப்புக்குத் தீர்வு காண்பதை மிகப் பெரிய அளவுக்குக் கடினம் ஆக்கியது. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தலைவர், கம்யூனிஸ்டு அகிலத்தின் ஸ்தாபகர், வழிகாட்டி, புரட்சியின் மாபெரும் சித்தாந்தகர்த்தர், நடைமுறையாளர் லெனினது மரணம் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு மெய்யாகவே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாக இருந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் தொழிற்சங்க அகிலத்தின் செயலகமும் 1924, ஜனவரி 23ந் தேதி விடுத்த ''வேண்டுகோள் செய்தியில்'' உலகு அனைத்தின் கோடிக்கணக்கான உழைப்பாளிகளின் உணர்ச்சிகளை வெளியிட்டன. லெனினது மறைவால் ஏற்பட்ட துயரம் கம்யூனிஸ்டுகளின் துணிவைப் பறித்துவிடவில்லை என்றும், இறப்பற்ற பெருந் தலைவரின் ஆதர்சத்தால் உத்வேகம் பெற்று அவர்கள் அவருடைய வரலாற்று முக்கியத்துவம் உள்ள ஆணைகளை நிறைவேற்ற ஆர்வத்துடன் முன்வருவார்கள் என்றும் இந்தச் ''செய்தி'' கூறியது. ''மார்க்ஸ் போன்றே லெனினும் மறைந்து விட்டாலும் என்றென்றும் நம் தலைவராக இருந்து வருவார்'' என்றது ''செய்தி''. அது பின்வரும் சொற்களுடன் முடிந்தது: ''உலகு அனைத்திலும் உள்ள பத்து லட்சக் கணக்கான நம் போராட்டத் தோழர்களுக்கு நாம் அறைகூவல் விடுக்கிறோம்: 'லெனினுடைய ஆணைகளைப் பின்பற்றுங்கள். அவை அவருடைய கட்சியிலும் அவரது வாழ்வின் உழைப்பினல் படைக்கப்பட்ட யாவற்றிலும் தொடர்ந்து உயிர்த்து இயங்கி வருகின்றன.' லெனின் போன்று போராடுங்கள், லெனின் போன்றே வெற்றி பெறுவீர்கள்.''[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசைத் திறந்து வைத்துப் பேசுகையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினுடைய பொதுச் செயலாளர் வ.கொலாரவ் கூறினர்: ''முந்திய காங்கிரசிலிருந்து ஒன்றரை ஆண்டுகள் மட்டுமே நம்மைப் பிரிக்கின்றன. இது மிகக் குறுகிய காலப்பகுதி. ஆனல் இந்தக் குறுகிய காலப் பகுதிக்குள் மிக பிரமாண்டமான முக்கியத்துவம் உள்ள ஏராளமான நிகழ்ச்சிகள் நடந்தேறிவிட்டன. சர்வதேச உறவுகளிலும் நம் தனித் தனிக் கட்சிகளின் வாழ்விலும் வளர்ச்சியிலும் மிகப் பெரிய மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. ...இந்தப் போராட்

---

[1] ''பிராவ்தா,'' 1924, ஜனவரி 23.

டத்தில் அம்சரீதியான தோல்விகள் ஏற்பட்டன, கணிசமான வெற்றிகளும் கிடைத்தன. பெருத்த இழப்புக்களும் நேர்ந்தன. காங்கிரசைத் தொடங்குகையில் நாம் முதலில் குறிப்பிட வேண்டியவை நமது மாபெரும் இழப்புக்களே ஆகும். முதல் சொற்களில் முதலாவதாக இருக்க வேண்டியது, உலகப் புரட்சியின் மாபெரும் தலைவரான தோழர் லெனினை நாம் இழந்துவிட்டது பற்றியே.''[1]

ஜூலை 18ந் தேதி காங்கிரஸ் பிரதிநிதிகள் லெனின் சமாதி அருகே கூடினார்கள். சோவியத் யூனியனின் மத்திய நிர்வாகக் கமிட்டித் தலைவர் மி. இ. கலீனின் அவர்கள் முன் ''லெனினியமும் கம்யூனிஸ்டு அகிலமும்'' என்னும் பொருள் பற்றி உரை ஆற்றினார். அவர் கூறினார்: ''தோழர்களே, தற்போதையக் காங்கிரஸ் தொடங்குவதற்கு வெகு நாட்கள் முன்பே, காங்கிரசில் முதல் சொல், சந்தேகம் இன்றித் தோழர் லெனினைப் பற்றியே கூறப்படும் என்பது உங்களில் ஒவ்வொருவருக்கும் தெளிவாகத் தெரிந்திருந்தது என்று நினைக்கிறேன். இது கூறாமலே விளங்கும். ருஷ்யப் புரட்சியின் தலைவர், போல்ஷிவிஸத்தின் தலைவர், அதே சமயம் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைவராகவும் இருந்தார். இது வரலாற்று நோக்கில் ஏதோ தற்செயல் நிகழ்ச்சி அல்ல. நாம் 'லெனினியம்' என்று அழைப்பது எல்லாவற்றிலும் ஒத்திசைந்த, எல்லாவற்றிலும் முழுமையான, எல்லாவற்றிலும் செயல்திறன் மிக்க சர்வதேசியமே ஆகும்.''[2]

கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத-ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்தும் வழிகள். போல்ஷிவிஸமயமாக்கும் கோஷம்

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அடிப்படைப் பணிகளைக் குறித்துக் காட்டியது. ''பாட்டாளி வர்க்க அணிகளதும் அவற்றின் கம்யூனிஸ்டு முன்னணிப் பிரிவுகளதும் (கட்சிகளதும்) ஒழுங்கமைப்பின் தரம் இந்த வரலாற்றுக் காலப் பகுதி அனைத்தினுடையவும் மையமான

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ். சுருக்கெழுத்து விவரம். மாஸ்கோ, 1925, பகுதி 1, பக்கம் 5.
[2] அதே நூல், பக்கம் 33.

பிரச்சினையாக விளங்குகிறது''[1] என்று அது அறிவுறுத்தியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசால் முன்வைக்கப்பட்ட ''வெகுஜனங்களிடம் செல்வோம்!'' என்னும் கோஷம் முழுமையாக நடப்பில் இருக்கிறது என ஐந்தாவது காங்கிரஸ் வலியுறுத்தியது. வலதுசாரியினரின் போக்கை அது கண்டனம் செய்தது. இவர்கள் ''உழைப்பாளி வெகுஜனங்களின் புள்ளிவிவரப் பெரும்பான்மையை முன்னதாக நம் தரப்புக்கும் கொண்டுவர வேண்டும் என்று கோருகிறார்கள். கம்யூனிஸ்டுகள் 99 சதவிகிதம் உழைப்பாளிகளைத் தங்கள் தரப்புக்குக் கொண்டுவரும் வரை எந்த விதமான ஆழ்ந்த புரட்சிப் போராட்டங்கள் பற்றியும் பேசவே இடமில்லை என்று இவர்கள் எண்ணுகிறார்கள்''.[2] மறு புறம், ''வெகுஜனங்களிடம் செல்வோம்!'' என்ற கோஷத்தின் நிர்ணயகரமான முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாத ''அதிதீவிர இடதுசாரியினரின்'' கருத்துக்களைக் காங்கிரஸ் அறவே நிராகரித்து விட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகள், வெகுஜனக் கட்சிகள் ஆகாமலே கூட, எந்தக் கணத்திலும் உழைப்பாளிகளைப் போராட்டத்துக்கு இட்டுச் செல்ல வல்லவை என்று இந்தப் பிரிவுவாதிகள் எண்ணினார்கள் என்பது காங்கிரசில் வெளியாயிற்று.[3]

ஐந்தாவது காங்கிரஸ், மூன்றாவது, நான்காவது காங்கிரசுகளின் கொள்கைப் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்தது. அதன் தீர்மானங்கள் தருணத்துக்கு ஏற்றவையாக இருந்தன. ஏனெனில், அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் பெருத்த செல்வாக்கு பெற்றிருந்த சில நபர்கள், மெய்யாகவே நிலவிய வலதுசாரி அபாயத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு ''அதிதீவிர இடதுசாரிப்'' போக்கை மேற்கொண்டிருந்தார்கள். உதாரணமாக இத்தகைய நிலைமை ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் உருவாயிருந்தது. இந்தக் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் மிகக் கெடுபிடி நிறைந்த களம் ஒன்றில் செயலாற்றி வந்தது. பிராண்ட்லர், தால்ஹைமர் குழுவினர் 1924ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனியிலும் பின்னர் மாஸ்கோவில் நடந்த ஐந்தாவது காங்கிரசிலும் 1923ம் ஆண்டு அக்டோபர் மாத நிகழ்ச்சிகளோடு சம்பந்தப்பட்ட தங்கள் சரணாகதிவாதத் தவறு

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 403.

[2] அதே நூல், பக்கம் 403.

[3] பார்க்க: அதே நூல், அதே பக்கம்.

களை நியாயப்படுத்த முயன்ருர்கள். முடிவாகப் பார்க்கையில் இந்தத் தவறுகள் எதிரியின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்ட தால் விளைந்தன. மறு புறம், ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த ''அதிதீவிர இடதுசாரியினரின் குழு (ஃபிஷர், மாஸ்லவ், ஷொலேம்), ஸக்ஸோனியாவிலும் தியுரிங்கியாவிலும் நடந்த நிகழ்ச்சிகள் ஒன்றித்த கூட்டணி பற்றிய கருத்தின் ''தீமையைக்'' காட்டியதாக வலிந்துரைத்தது. இந்தக் குழு சமூக-ஜனநாயகத்துடன் தொடர்பை அறவே துணித்துக் கொள்ளும் போக்கைக் கடைப்பிடித்தது, அதன் இடதுசாரியைத் தாக்குக்கு இலக்கு ஆக்கிற்று. ஜெர்மனியிலும் சரி, சர்வதேச அளவிலும் சரி, தொழிற்சங்க ஒற்றுமைக்கான முயற்சிகள் கை விடப்பட வேண்டும் என்று ''அதிதீவிர இடதுசாரியினர்'' கோரிஞர் கள். பிராண்ட்லரும் தால்ஹைமரும் செய்த வலதுசாரி சந்தர்ப்ப வாதத் தவறுகளையும் சமூக-ஜனநாயகத் தலைவர்களது செயல் களால் புரட்சி மனப்பான்மை கொண்ட தொழிலாளர் பிரிவுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும் பயன்படுத்தி, ''அதிதீவிர இடதுசாரி யினர்'' குழு ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைக்கு வந்து விட்டது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஃபிராங்க் ஃபர்ட் காங்கிரஸ் (1924ம் ஆண்டு, ஏப்ரல் 7முதல் 10ந் தேதி வரை), புதிய புரட்சி ஏற்றம் விரைவாக நெருங்கிக் கொண் டிருப்பதாக இந்தக் குழுவின் வற்புறுத்தலால் முடிவு செய்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுப் பிரதிநிதிகளான கூஸினென், மனுயீல்ஸ்கி, லஸோவ்ஸ்கி ஆகியோர் எதிர்த்தும் கூட, ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை எதார்த்தத்தில் நிராகரிக்கும் தீர்மானத்தை ''அதிதீவிர இடதுசாரியினர்'' நிறைவேற்றி விட்டார்கள்.

அப்போது இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் ''அதிதீவிர இடதுசாரிப்'' போக்குகள் வலுவாயிருந்தன. போர்டிகா குழு வினரின் தீங்கான கருத்துக்கள் ஐந்தாவது காங்கிரசில் அவர் ஆற்றிய உரையில் சார உருவத்தில் வெளிப்பட்டன. அரசியல் எதார்த் தத்தை அறவே புறக்கணித்து, தொழிலாளி இயக்கத்தின் மீது சீர்திருத்தவாதத்தின் செல்வாக்கைக் கணக்கில் எடுத்துக் கொள் ளாமல் அவர் கூறிஞர்: ''பாட்டாளி வர்க்கத்தைப் புரட்சிக்கும் அரசியலிலும் பயிற்றி ஆயத்தப்படுத்துவதற்கு நாம் செய்த வேலை அனைத்தையும் இழிவுபடுத்த நாம் விரும்பாவிட்டால், கம்யூ னிஸ்டுக் கட்சி தவிர வேறு தொழிலாளர் கட்சி இருக்கிறது என்ற

எண்ணத்துக்கே நாம் இடம் தரலாகாது...''[1] இதன் தொடர்பாக ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிய எந்தக் கொள்கையும் மறுக்கப்பட்டது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் தொழிலாளி வர்க்கத்திலிருந்தும் மொத்தத்தில் உழைப்பாளி வெகுஜனங்களிலிருந்தும் தனிப்பட்டு விடும் அபாயத்துக்கு உள்ளாக்கிய ''அதிதீவிர இடதுசாரிப்'' போக்கை ஐந்தாவது காங்கிரஸ் கண்டனம் செய்தது இந்தச் சூழ் நிலையில் நிச்சயமாகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. ''செயல்தந்திரப் பிரச்சினைகள்'' பற்றிய தனது ஆய்வுரையில் காங்கிரஸ் பின்வருமாறு கூறியது: ''ருஷ்யாவின் புரட்சி கரப் பாட்டாளி வர்க்கத்தின் இயக்கமான போல்ஷிவிஸம், மென்ஷிவிஸத்துக்கும் இடைநிலைவாதத்துக்கும் எதிரான தயவு தாட்சிணியமற்ற போராட்டத்தில் மட்டுமல்ல, ''அதிதீவிர இடது சாரிப்'' போக்குகளுக்கும் எதிரான போராட்டத்தில் உருவா யிற்று. சர்வதேச போல்ஷிவிக் ஸ்தாபனம் ஆகிய கம்யூனிஸ்டு அகிலம், தான் நிலவத் தொடங்கிய நாள் முதலே வலதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக மட்டுமின்றி, அடிக்கடி சந்தர்ப்ப வாதத்தின் மறு புறமாகவே விளங்கும் ''அதிதீவிர இடதுசாரிப்'' போக்குகளுக்கு எதிராகவும் தயவு தாட்சிணியம் அற்ற போராட்டம் நடத்தி வருகிறது''.[2]

ஐந்தாவது காங்கிரஸ் தொழிலாளி வர்க்கத்தின் கட்சிகளைக் கொள்கைவாத-ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்தும் பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளை போல்ஷிவிஸமயமாக்கும் கோஷத்தை முன் வைத்தது. கம்யூ னிஸ்டுக் கட்சிகளை போல்ஷிவிஸமயமாக்குவதும் அவற்றைக் கொள்கைவாத நோக்கில் உரமேறிய வெகுஜன ஸ்தாபனங்களாக மாற்றுவதும் கம்யூனிஸ்டு அகிலத்தினது வேலையின் முக்கிய நோக் கங்கள் என்று ஐந்தாவது காங்கிரஸ் கருதியது. பூர்ஷ்வா அரசாங் கங்களை வீழ்த்துவதற்கான நேரடித் தாக்குதல்களின் இடத்தில் தொழிலாளி வர்க்கம் மூலதனத்துக்கு எதிராக நீடித்த ஒருநிலைப் போராட்டம் நடத்த வேண்டியிருந்த சூழ்நிலையில், பாட்டாளி

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 1, பக்கம் 383.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கங்கள் 406-407.

வர்க்க ஸ்தாபனங்களையும் முதன்மையாகப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படைப்பிரிவுகளும் வழிகாட்டிச் சக்திகளுமான கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் வலுப்படுத்துவதற்கு எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்துவது இன்றியமையாததாக இருந்தது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஸ்தாபன அமைப்பின் பற்றாக்குறையும் விரிவான வெகுஜனங்களுடன் அவற்றின் தொடர்புகளின் உறுதியின்மையும் தேவையான அனுபவமும் உரமும் இல்லாமையும் 1918-1923ல் நடந்த புரட்சிப் போராட்டங்களில் அடிக்கடி உணரப்பட்டன. இதைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டு அகிலம் இந்தக் குறைகளைப் போக்கும் பணியை முன்வைத்தது. புரட்சி ஏற்றத்துக்கான புறநிலை நிலைமைகள் மீண்டும் முதிர்ச்சி அடைவதற்குள் எல்லா அகநிலை முன்னேற்பாடுகளும் தயாராய் இருக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டு அகிலம் கருதியது. உழைப்பாளிகளை வெற்றிக்கு இட்டுச்செல்லத் திறன் வாய்ந்த உறுதியான, உரம் பெற்ற கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொண்ட தொழிலாளி வர்க்கம் புதிய ஏற்றத்தை எதிர்கொள்ள வேண்டும். இவ்வாறு, கம்யூனிஸ்டுக் கட்சிகளை போல்ஷிவிஸமயமாக்குவது, வருங்காலப் போராட்டங்களுக்குக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தை சர்வாம்ச ரீதியாக ஆயத்தப்படுத்துவதற்கு வேண்டிய மிக முக்கியப் பண்பாக இருந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலை தொடங்கியது முதலே வி.இ. லெனின் இந்தப் பணியில் மிகப் பெருத்த கவனம் செலுத்தி வந்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசுகளில் அவருடைய உரைகளும் சொற்பொழிவுகளும், ''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தைப் பருவ நோய்'' என்ற நூலும், அவருடைய சித்தாந்த,நடைமுறைச் செயல்கள் யாவும் இளம் கம்யூனிஸ்டு இயக்கத்தை வலுவாக்கி ஒன்றிணைப்பதையும் அதன் போராட்டத் திறனை உயர்த்துவதையுமே நோக்கமாகக் கொண்டிருந்தன. போல்ஷிவிஸம் செயல்தந்திரத்தின் முன்மாதிரியாக எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் பயன்படக் கூடும் என்றும் சோதரக் கட்சிகள் போல்ஷிவிஸத்தின் அனுபவத்தைப் படைப்புத்தன்மையுடன் கற்றுத் தேர்வது அவசியமானது என்றும் லெனின் பல முறை கூறினார். ஏனெனில் அது மூன்று புரட்சிகளின் அனுபவத்தைத் திரட்டியுள்ளது, பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசப் புரட்சி இயக்கத்தில் இருந்த மதிப்புமிக்க பண்புகள் எல்லா

வற்றையும் அது ஏற்றுக்கொண்டு வளர்த்திருக்கிறது, தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள்பால் தன்னலமற்ற விசுவாசத்தையும் இந்த நலன்களைக் காத்துப் போராடுவதில் உயர்ந்த கோட்பாட்டு உறுதியையும் அது காட்டியிருக்கிறது என்று எழுதினார் லெனின். போல்ஷிவிஸம், முன் கேட்டிராத துன்பங்களும் தியாகங்களும் முன் கண்டிராத புரட்சி வீரமும் நம்பமுடியாத ஆற்றலும் தன்னலமற்ற தேட்டங்களும் பயிற்சியும் நடைமுறைச் சோதனையும் சரி பார்த்தலும் ஐரோப்பாவின் அனுபவத்துடன் ஒப்பிடலும் நிறைந்த ஆண்டுகளைக் கடந்திருக்கிறது என்றார் லெனின். ருஷ்யாவின் முன்மாதிரியை அச்சுப் பிரதி போன்று, இயந்திர ரீதியாக அப்படியே பின்பற்றுவது தகாது என்று லெனின் இடைவிடாமல் நினைவுபடுத்தி வந்தார். போல்ஷிவிக்குகளின் அனுபவத்தைக் குறையற்ற முழுமை எனக் கொச்சையாக எடுத்துக் கொள்வதையும் இயந்திர ரீதியாகக் கடைப்பிடிப்பதையும் அவர் கடுமையாக எதிர்த்தார். சிறப்பாக வரட்டுச் சூத்திரவாதத்தையோ, தன் நாட்டின் ஸ்தூல நிலைமைகளுக்கு ஏற்ப போல்ஷிவிஸ விஞ்ஞானத்தைக் கையாளும் திறனின்மையையோ இந்த அனுபவத்தால் மூடி மறைக்க முயற்சி செய்யப்பட்ட போது லெனின் அதை வன்மையாகக் கண்டித்தார். சோதரக் கட்சிகளை போல்ஷிவிக்குகளிடமிருந்து கற்கும்படி வேண்டிக் கொண்ட அதே சமயத்தில் ருஷ்யாவின் அனுபவத்தைப் படைப்புத் தன்மையுடன் கற்றுத் தேரவும் கையாளவும் அவற்றுக்கு எல்லாவகையிலும் உதவி செய்வது ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியினது சர்வதேசக் கடமை என்று லெனின் கருதினார்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரஸ், தனது பிரிவுகளைக் கொள்கைவாத-சித்தாந்த நோக்கிலும் ஸ்தாபன-ஒழுங்கமைப்பின் நோக்கிலும் வலுப்படுத்துவது பற்றிய தன்னுடைய தீர்மானங்களுக்கு போல்ஷிவிஸ அனுபவத்தைப் பயின்று தேர்வது குறித்த லெனினது கருத்துக்களை அடிப்படையாக வைத்துக் கொண்டது. போல்ஷிவிஸமயமாக்கும் ஸ்தூலமான பணிகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் இந்த நிலைகளிலிருந்தே திட்டப்படுத்தியது. போல்ஷிவிஸமயமாக்குவது என்பது, கட்சியை உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சியாக மாற்றுவதற்கும், மார்க்சினதும் லெனினுடையவும் கருத்துக்களின் பதாகையின் கீழ் வெகுஜனப் புரட்சி இயக்கத்தை ஏற்படுத்துவதற்கும், ஸ்தூல எதார்த்தங்களைப் பகுத்தாய்வதற்கு மார்க்சிய-லெனினியக்

கருத்துக்களைக் கையாளத் திறன் பெறுவதற்குமான நீண்ட, சிக்கலான நிகழ்முறை ஆகும்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளை வெகுஜனக் கட்சிகளாக மாற்றுவதற்கு வேண்டிய அடிப்படை நிபந்தனைகளும் முதனிலைகளும் பின்வருவன என்று காங்கிரஸ் கருதியது: தொழில் நிலையங்களில் உள்ள கட்சியின் மையக் குழுக்கள் கட்சியின் அஸ்திவாரமாக அமையும் விதத்தில் கட்சி ஸ்தாபனத்தை மாற்றி அமைப்பது; தொழிற்சங்கங்களுக்குள் சரியான கம்யூனிஸ வேலை; விவசாயிகள்பால் உறவுகள் விஷயத்தில் சரியான கொள்கை; நாட்டினங்களின் பிரச்சினையில் மார்க்சிய-லெனினியக் கொள்கை.

உண்மையான போஷிவிஸத் தன்மை கொண்ட கட்சியின் முக்கியப் பண்புகள் இவை என்று கட்சி வரையறுத்தது:

கட்சி எதார்த்தத்தில் வெகுஜனங்களுடையதாக இருக்க வேண்டும்; சட்டபூர்வமான சூழ்நிலையிலும் சட்டபூர்வமற்ற சூழ்நிலையிலும் அது உழைப்பாளிகளுடன் அறுத தொடர்பு கொண்டிருக்கவும் அவர்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் வெளியிடவும் வேண்டும்.

கட்சி வரட்டுச் சூத்திரவாதத்திலும் குறுகிய பிரிவுவாதக் கண்ணோட்டத்திலுமிருந்து விடுபட்ட சமயோசிதமான செயல்தந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வர்க்கப் பகைவனுக்கு எதிராக எல்லா யுத்ததந்திரச் சேமிப்புக்களையும் பயன்படுத்த அது திறன் கொண்டிருக்க வேண்டும்.

அது எதார்த்தத்தில் புரட்சித்தன்மை உள்ள, மார்க்சியக் கட்சியாக இருக்க வேண்டும், குறிக்கோளை நோக்கி இடையறாது முன்னேற வேண்டும், எல்லா நிலைமைகளிலும் பூர்ஷ்வா வர்க்கத்தின்மீது வெற்றியை அருகில் கொண்டுவரப் பாடுபட வேண்டும்.

அது மையப்படுத்தப்பட்ட, கண்டிப்பான கட்டுப்பாடு உள்ள கட்சியாக இருக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடு இயந்திரத் தன்மை கொண்டிராமல் கட்சியின் சித்தம், கட்சியின் செயல் ஆகியவற்றின் ஒற்றுமையைக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

கட்சிகளை போல்ஷிவிஸமயமாக்கும் கோஷம், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்தினுடையவும் அனுபவத்தைப் படைப்புத் தன்மையுடன் கற்கவும் கையாளவும் அவற்றை அறைகூவி அழைத்தது. ''கட்சிகளை போல்ஷிவிஸமயமாக்குவது என்பது, ருஷ்ய போல்ஷிவிஸத்தில் இருந்ததும் இருப்பதுமான, சர்வதேசத் தன்மையும் பொது முக்கியத்துவமும் கொண்ட அம்சத்தை நம்முடைய

பிரிவுகளுக்குக் கொண்டுவருவது ஆகும்''[1] என்று ஐந்தாவது காங்கிரஸ் கூறியது. ருஷ்யாவில் போல்ஷிவிக் கட்சியின் அனுபவம் அனைத்தையும் மற்ற எல்லாக் கட்சிகளுக்கும் இயந்திர ரீதியாகக் கொண்டுவருவது என்று இந்த கோஷத்தை எந்த நிலைமையிலும் புரிந்து கொள்ளக் கூடாது என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது. ''கட்சிகளை போல்ஷிவிஸமயமாக்குவது, லெனினுடைய ஆணைகளை விசுவாசத்துடன் கடைப்பிடித்தவாறும் ஒவ்வொரு நாட்டிலும் நிலவும் ஸ்தூல நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் செயல்படுத்தப்பட வேண்டும்''[2] என்று காங்கிரஸ் வலியுறுத்தியது.

''இதற்கு ஏற்கனவே அடிகோலப்பட்டு விட்டது'' என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. ''கட்சியின் தலைமை உறுப்புக்களுடையவும் ஸ்தாபனங்களுடையவும் பல பிரிவுகளில் தனி உறுப்பினர்களுடையவும் செயலூக்கம், மெதுவாகத்தான் என்றாலும், இடைவிடாமல் அதிகரித்து வருகிறது. சிறந்த கட்சிகள் உண்மையான புரட்சி முன்முயற்சியையும் விடாப்பிடியான ஊக்கத்தையும் போராட்டத் திறனையும், சமயத்துக்கு ஏற்றவாறு செயல் புரியும், அறிவார்ந்த திறமையையும், மெய்யான புரட்சி ஸ்தாபனத்துக்கு உரிய உணர்வுபூர்வமான எஃகுக் கட்டுப்பாட்டையும் இப்பொழுதே மிக அடிக்கடி காட்டி வருகின்றன.''[3]

கம்யூனிஸ்டுக் கட்சிகளை போல்ஷிவிஸமயமாக்குவதற்கான மிக முக்கியப் பணிகளில் ஒன்று மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் திரிபுகளை எதிர்த்துப் போராடுவது ஆகும் என்று காங்கிரஸ் குறித்தது. ''வலதுசாரி இடதுசாரி அரசியல் பிறழ்வுகளும் மார்க்சிய-லெனினியத்திலிருந்து விலக்கங்களும் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கக் கொள்கைவாதத்திலிருந்து பிறழ்வதன் விளைவு ஆகும்''[4] என்று அது கூறியது. ''கம்யூனிஸ்டு அகிலம், அதன் பிரிவுகள் ஆகியவற்றின் பிரசார நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுரையில்'' காங்கிரஸ் பின்வருமாறு கூறியது; ''கம்யூனிஸ்டுக் கட்சிகள், மார்க்சிய-லெனினியத்தின் சில முக்கியக் கருத்துக்களை வெகுஜனங்களி

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 412.

[2] அதே நூல், பக்கம் 396.

[3] அதே நூல், அதே பக்கம்.

[4] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 2, பக்கம் 97.

டையே பிரசாரம் செய்வதுடன் நின்றுவிடக் கூடாது. திட்டமிட்ட, துடியான பிரசாரத்தின் வாயிலாக மார்க்சிய-லெனினியம் முழுவதையும் கட்சியின் ஒவ்வொரு தனி உறுப்பினருடையவும் செல்வமாகும்படிச் செய்ய அவை முயல வேண்டும்... கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒத்திப்போட முடியாத, மிக மிக உடனடியான பணிகளில் ஒன்று லெனினுடைய அறிவுரைகளை மிகவும் விரிவாகப் பரப்புவதும் இந்தப் பிரசாரம் முறையாகத் தொடர்ந்து நடப்பதற்கு ஸ்தாபனரீதியாக ஏற்பாடு செய்வதும் ஆகும்''.[1] மார்க்ஸ், எங்கெல்ஸ், இருவருடையவும் நூல்கள், கடிதங்களின் முழுத் திரட்டை வெளியிடுவது என்று ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் 13 வது காங்கிரஸ் முடிவு செய்ததைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் வரவேற்றது.[2]

போல்ஷிவிஸமயமாக்குவது என்ற கோஷம்—ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் அனுபவத்தைப் படைப்புத்தன்மையுடன் கையாளுவது பற்றிய தீர்மானம்—கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் திட்டமிட்ட, விடாப்பிடியான முறையில் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் வலுப்படுத்துவது, வெகுஜனங்களுடன் அவற்றின் தொடர்புகளை விரிவுபடுத்துவது, தொழிலாளி வர்க்கத்தையும் அதன் கம்யூனிஸ்டு முன்னணிப் படைப்பிரிவையும் நிர்ணயகரமான வருங்காலப் போராட்டங்களுக்கு ஆயத்தம் செய்யும் பொருட்டு அடுத்த காலப்பகுதியைப் பயன்படுத்துவது, மார்க்சிய-லெனினிய ஊழியர்களைக் கவனமாகத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு உரமேற்றுவது என்ற தீர்மானம்—முதலாளித்துவத்தின் அம்சரீதியான நிலைப்பாடு நிலவிய காலப்பகுதியில் அரசியல் எதார்த்தத்தின் தேவைக்கு முற்றிலும் பொருத்தமாய் இருந்தது. இந்த கோஷத்தை முன்வைத்தது கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசின் முக்கியமான தொண்டாக விளங்கியது. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தால் இந்த கோஷம் உற்சாகமாக வரவேற்கப்பட்டது.

மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்துவது போல்ஷிவிஸமயமாக்குவதற்கு இன்றியமையாத நிபந்தனையாக இருந்தது. ஒற்றுமைக் கோட்பாடு உட்குழுப் பிரிவுகளின்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 2, பக்கங்கள் 97—99.

[2] அதே நூல், பக்கம் 180.

தாக்குதலுக்கு முதன்மையாக இலக்காகி வந்தபடியால் ஒற்றுமைக்கான போராட்டம் சிறப்பாக இன்றியமையாதது ஆயிற்று.

1923ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிக்குள் லெனின்விரோத எதிர்த்தரப்பு ஸ்தாபன வடிவில் அமைந்தது. இதன் தலைவராய் இருந்தார் திரோத்ஸ்கி. எதிர்த்தரப்பாளர்கள் சாதாரணக் கம்யூனிஸ்டுகளைக் கட்சி இயந்திரத்துக்கு எதிராக நிறுத்த முயன்றார்கள். உட்குழுச் செயல்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்றும் புதிய பொருளாதாரக் கொள்கையை எதார்த்தத்தில் கைவிட்டுவிடும்படியும் கோரினார்கள். தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியத்தை எதிர்த்தார்கள். இது பற்றி விவாதம் நடத்தும்படி கட்சியை நிர்ப்பந்தித்தார்கள். ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிக்கு உள்ளே தங்களுக்கு உறுதியான எதிர்ப்பு இருப்பது தெரிந்ததும் எதிர்த்தரப்பினர் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளில், சிறப்பாக ''அதிதீவிர இடதுசாரி'' நிலைகளை மேற்கொண்டிருந்த நபர்களிடையே தங்களுக்கு ஆதரவு தேடுவதில் முனைந்தார்கள். எனவே, திரோத்ஸ்கிவாதத்துக்கு எதிராக சோவியத் கம்யூனிஸ்டுகளின் போராட்ட அனுபவம் கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் வலுப்படுத்துவதற்குப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது.

ஜூன் 27ந் தேதி, ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி ''சோவியத் யூனியனின் பொருளாதார நிலைமையையும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியில் நடந்த விவாதத்தையும் பற்றி'' ஐந்தாவது காங்கிரசில் அறிக்கை சமர்ப்பித்தது. சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுகள், சோஷலிஸக் கட்டுமானத்தின் நடப்பையும் அதன் வெற்றிகளையும் இடர்ப்பாடுகளையும் பற்றி சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு விவரமாக அறிவித்தார்கள். கட்சியில் உள்ள குழுக்களுக்கும் உட்குழுப் பிரிவுகளுக்கும் எதிராகப் போராடுவதன் அவசியம் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எதிர்த்தரப்பு, கட்சியிடம் பகைமை கொண்ட சக்திகளின் ஈர்ப்பு மையம் ஆகி விட்டது என்று அதில் குறிக்கப்பட்டிருந்தது. கட்சியின் அனுபவம் முதிர்ந்த உறுப்பினர்களுக்கு எதிராக இளைஞர்களைத் தூண்டிவிடும் திரோத்ஸ்கிவாதத்துக்கு இயல்பான போக்கு கண்டனம் செய்யப்பட்டிருந்தது.

1924, ஜூன் 24ந் தேதி, ஜெர்மானிய, பிரெஞ்சு, அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதிநிதிக் குழுக்கள் "ருஷ்யப் பிரச்சினை பற்றிய பிரேரணையைக்" காங்கிரசின் தலைமைக் குழுவுக்கு அனுப்பின. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: "கீழே கையெழுத்து இட்டுள்ள பிரதிநிதிக் குழுக்கள் எந்தக் கட்சிகளின் சார்பாகப் பேசுகின்றனவோ அவை, ருஷ்யக் கட்சி விவாதத்தின் மீது மிகப் பெருத்த கவனத்துடனும் ஆழ்ந்த கவலையுடனும் கருத்து செலுத்தி வந்தன, ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்கு இவை ஒரு மனதாக ஆதரவு தெரிவித்தன. இந்தக் கட்சிகள் இவ்வாறு செய்ததற்குக் காரணம், எதிர்த்தரப்பினரின் பிரேரணைகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒற்றுமைக்கும் அபாயம் இருப்பதாக அவை கருதுவதுதான்... கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய பதின்மூன்ருவது காங்கிரசின் தீர்மானங்களை உறுதிப்படுத்த வேண்டும். எதிர்த்தரப்பினரின் கருத்துக்கள் குட்டி பூர்ஷ்வா சந்தர்ப்பவாதப் போக்கைக் குறிப்பதாக அது வலியுறுத்த வேண்டும். ருஷ்யப் பிரச்சினை தேசியப் பிரச்சினை அல்ல, அது சர்வதேச முக்கியத்துவம் உள்ளது என்பதை நாங்கள் இங்கே அழுத்திக் கூறுகிறோம்."[1]

இந்தப் பிரதிநிதிக் குழுக்களின் யோசனைக்கு இணங்கக் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் பதின்மூன்ருவது கட்சி மகாநாடு, பதின்மூன்ருவது காங்கிரஸ் ஆகியவற்றின் தீர்மானங்களை உறுதிப்படுத்தியது. இந்தத் தீர்மானங்கள் எதிர்த்தரப்பின் கொள்கைத் திட்டத்தையும் அதன் நடவடிக்கைகளையும் "கட்சியின் ஒற்றுமைக்கும், எனவே சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் யூனியனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் அபாயம் விளைப்பவை"[2] என்ற வகையில் கண்டனம் செய்திருந்தன. திரோத்ஸ்கிவாத எதிர்த் தரப்பை இவ்வாறு கடுமையாகக் கண்டனம் செய்ததன் மூலம் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிக்குப் பேருதவி புரிந்தது.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 1, பக்கம் 550.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 463.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்தந்திரம் பற்றி ஐந்தாவது காங்கிரஸ்

தொழிலாளர் இயக்கம் இரண்டு ஏற்ற அலைகளுக்கு நடுவே போல இருக்கிறது என்ற தன் முடிவை அடிப்படையாகக் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் செயல்தந்திரம் பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டது. சர்வதேசச் சூழ்நிலை பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது அறிக்கையில் புரட்சி இயக்கத்தில் வற்றம் ஏற்பட்டிருப்பது குறிக்கப்பட்டது; எனினும் அதே சமயம் புரட்சி நெருக்கடி விரைவாக நெருங்கும் என்ற நம்பிக்கையும் வெளியிடப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசின் தீர்மானங்களில் முதலாளித்துவத்தின் நிலைப்பாடு தொடங்கி இருப்பது பற்றிய கருத்து இன்னும் ஏற்படவில்லை. எதார்த்தத்தில் பின்னணி நடவடிக்கைகளின் தன்மையைக் கொண்டிருந்த 1923ம் ஆண்டுப் போராட்டங்களைப் புரட்சி ஏற்றத்தின் தொடக்கம் என்று சில பிரதிநிதிகள் மதிப்பிட்டார்கள். இந்த மதிப்பீடு எதார்த்த நிலைமையைப் பிரதிபலிக்கவில்லை. இடதுசாரிப் போக்குள்ள புரட்சிக்காரர்கள் சூழ்நிலையை ஊக்கமுள்ள நடவடிக்கைகளுக்குச் சாதகமானவையாகக் கருத விரும்பியதையே இது காட்டியது. செயல்தந்திரம் பற்றிய தனித் தனிப் பிரச்சினைகளில், உதாரணமாக ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியையும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தையும் உழைப்பாளர்களின் அணித்தான கோரிக்கைகளுக்கான போராட்டத்தையும் பற்றிய பிரச்சினைகளில் ஐந்தாவது காங்கிரஸ் செய்த முடிவுகள் மீது இந்த மதிப்பீடு ஓரளவு பாதிப்பு விளைத்தது. 1923ம் ஆண்டில் நடந்த வர்க்கப் போராட்டத்தின் படிப்பினைகளை சிறப்பாக ஜெர்மனியில் தோல்வியின் படிப்பினைகளை, விளக்குகையில் ஸினோவியெவும் அவருடைய ஆதரவாளர்களும் மூன்றாவது, நான்காவது காங்கிரசுகளால் சூத்திரப்படுத்தப்பட்ட ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் சரியானதாக மெய்ப்பிக்கப் பட வில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். எனவே, இந்தச் செயல் தந்திரத்தில் ஓரளவு திருத்தம் செய்வது அவசியம் என்று அவர்கள் கூறினார்கள். கம்யூனிஸ்டு அகிலம் ஒன்றித்த கூட்டணிச் செயல் தந்திரத்தைக் கிளர்ச்சிக்கும் வெகுஜனங்களை அணி திரட்டுவதற்குமான வழியாக, தந்திர நடவடிக்கையாக மட்டுமே கருதுகிறது

என்று ஸினோவியெவ் தம் விரிவுரையில் வெளிப்படையாகச் சொன்னார். இந்தப் பிரச்சினை குறித்த நான்காவது காங்கிரசின் முடிவுகளைக் கைவிட்டுவிடும்படி அவர் யோசனை கூறினார்.

தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிய கோஷத்தைப் பொறுத்தவரை, ஸினோவியெவ் அதைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ''புனைபெயர்'' என்று குறிப்பிட்டார். இதன் மூலம் அவர் கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காவது காங்கிரசினது தீர்மானத்தைத் திரித்தார். தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிய கோஷத்தின் எதார்த்தமான அரசியல் உள்ளடக்கத்தையும் அதன் இடைக்காலத் தன்மையையும் பொருளற்றவை ஆக்கினார். கம்யூனிஸ்டு, சமூக-ஜனநாயகக் கட்சிகளின் நடவடிக்கை ஒற்றுமை பற்றியும் எல்லா உழைப்பாளிகளதும் ஒன்றித்த கூட்டணி பற்றியும் நான்காவது காங்கிரஸ் செய்த தீர்மானங்கள் ''சந்தர்ப்பவாத விவிலிய நூல்'' தவிர வேறில்லை என்று அவர் கருத்து தெரிவித்தார். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தின் பிரிவுவாத விளக்கத்துக்கு ஏற்ப, சமூக-ஜனநாயகவாதத்துக்கும் சிறப்பாக அதன் இடதுசாரிக்கும் எதிராக முதன்மையான தாக்குதல் தொடுக்கும்படி ஸினோவியெவ் யோசனை கூறினார்.

ஸினோவியெவின் இந்தக் கருத்துக்களை அனேக பிரதிநிதிகள் எதிர்த்தார்கள். ஒன்றித்த கூட்டணி என்ற கருத்து கம்யூனிஸ்டுக் கட்சிகளின் எதார்த்தமான கொள்கையில் வடிவம் பெற வேண்டும் என்று அவர்கள் நியாயமாக எண்ணினார்கள். பல்கேரியக் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதியும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பொதுச் செயலாளருமான வ. கொலாரவ் 1923ம் ஆண்டு கம்யூனிஸ்டுக் கட்சி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பகுத்து ஆராய்ந்து பின்வருமாறு கூறினார்: ''எங்கள் கட்சி செய்த தவறுகளின் தோற்றுவாய் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை முழு அளவில் நாங்கள் கையாளாததே என்று நான் உங்களுக்குச் சொல்லிவிடவேண்டும். ஒன்றித்த கூட்டணியை நாங்கள் கீழிருந்து மட்டுமே செயல்படுத்தினோம். பல்கேரிய மென்ஷிவிக்குகளையும் சமூக-ஜனநாயகவாதிகளையும் புறக்கணித்தது போலவே விவசாயிகளின் ஸ்தாபனங்களையும் நாங்கள் அலட்சியம் செய்தோம்... ஜூன் மாதத் தோல்விக்குப் பிறகு நிலைமை அடியோடு மாறிவிட்டது. எங்கள் கட்சி ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை மேலிருந்தும் செயல்படுத்தத் தொடங்கியது... தற்போது இந்த விஷயத்தை எவ்வாறு அணுக வேண்டும்? ஒன்றித்த கூட்டணிச் செயல்

தந்திரம் மேலிருந்தும் கீழிருந்தும், ஒன்றித்த கூட்டணிச் செயல் தந்திரம் எல்லாத் திசைகளிலும் எல்லாவித வடிவங்களிலும்''.[1]

கிளாரா த்ஸேத்கின் ஆதார பூர்வமான வாதங்கள் கொண்ட தமது சொற்பொழிவில் ஸினோவியெவின் கருத்தைக் கடுமையாக விமர்சித்தார். ஒன்றித்த பாட்டாளி வர்க்க முன்னணியைச் சரிவரப் புரிந்து கொண்டு செயல்படுத்தும் பிரச்சினை ஜெர்மனிக்கு மட்டும் அல்ல, கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் மிகப் பெருத்த, நிர்ணயகரமான முக்கியத்துவம் உள்ளது என்றார் கிளாரா த்ஸேத்கின். ''இந்த நோக்கில் தோழர் ஸினோவியெவின் உரையோ அதன்பின் நடந்த விவாதமோ எனக்குத் திருப்தி அளிக்க வில்லை என்பதை நான் சொல்லிவிட வேண்டும்''[2] என்று அவர் கூறினார். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய ஒரு முதனிலை, ''உழைப்பாளி வெகுஜனங்களுடன் நாளுக்கு நாள் மேலும் மேலும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு, அவர்களுடைய தேவைகளையும் விருப்பங் களையும் மனநிலைகளையும் கவனமாக ஆராய்ந்து தெரிந்து கொள்ள வும், நம் நடவடிக்கைகளைத் தக்க ஆதாரங்களுடன் சிந்தித்து முடிவு செய்து, பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை உறுதியாகக் காத்துப் போராடவும் திறன் பெறுவதுதான்''[3] என்று கிளாரா த்ஸேத்கின் அறிவுறுத்தினார். தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிக் குறிப்பிட்டு அவர் பின்வருமாறு கூறினார்: ''தொழிலாளர்-விவசாயி கள் அரசாங்கம் என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் புனைபெயர், மறு பெயர் அல்லது வேறு ஏதோ ''பெயர்'' என்ற தோழர் ஸினோவியெவின் கூற்றை நான் ஏற்றுக் கொள்ளவே முடியாது.''[4]

தீம் பாக் சொன்னார்: ''தொழிலாளர்-விவசாயிகள் அரசாங் கம் தொழிலாளர் சர்வாதிகாரத்தின், பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் மறு பெயர் என்று இங்கே கூறப்பட்டது. ஆனால் கான டாவுக்கோ வட அமெரிக்காவுக்கோ இந்தக் கருத்து பொருந்தும் என்று எண்ணாதீர்கள். கானடாவின் பண்ணைக்காரர்கள்-தொழி

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 1, பக்கங்கள் 277—278.

[2] அதே நூல், பக்கம் 321.

[3] அதே நூல், பக்கம் 322.

[4] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 1, பக்கம் 323.

லாளர் அரசாங்கம் மிதவாதிகள்-தொழிலாளர் அரசாங்கமாகவே இருந்துவரும், அவ்வளவுதான்.''[1]

குறுகிய பிரிவுவாதிகள் ஸினேவியெவ்வை ஆதரித்துப் பேசினார்கள். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் பற்றிய ஸினேவியெவின் விளக்கத்தை ஏற்காத பிரதிநிதிகள் மீது பாய்ந்தார் ஃபிஷர். போர்டிகாவும் இதே நிலையை மேற்கொண்டார். ஒன்றித்த கூட்டணி பற்றிய நான்காவது காங்கிரசின் தீர்மானங்களையும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் என்னும் கோஷத்தையும் ''கிளர்ச்சிச் சாதனங்கள்'' என்ற முறையில் கூடக் கைவிட்டு விட்டதாகக் காங்கிரஸ் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று அவர் கோரினார்.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரம் பற்றி, ''பாட்டாளி வர்க்கத்தின் நிர்ணயகரமான வட்டாரங்களின் பெரும்பாலரைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கும் அதன் மூலம் பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது தாக்குதலுக்குப் பரிணமிப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கும்''[2] இந்தச் செயல்தந்திரம் இன்றியமையாததாக இருந்தது, இருந்து வருகிறது என்று காங்கிரசின் தீர்மானங்களில் கூறப்பட்டது.

ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கீழிருந்து அமுலாக்குவதன் அவசியத்தைக் காங்கிரஸ் சிறப்பாக வலியுறுத்தியது. இதை ''மேலிருந்து'' மட்டுமே செயல்படுத்துவதற்கு அது தடை விதித்தது. ''சமூக-ஜனநாயகம் இன்னும் கணிசமான சக்தியாக இருந்தவரும் நாடுகளில் கீழ் மட்டத்தில் ஒற்றுமையும் அதே சமயம் மேல் மட்டத்துடன் பேச்சுவார்த்தைகளும் என்ற முறையைக் கணிசமாக அடிக்கடி கையாள்வது இன்றியமையாதது''[3] என்று இதோடு கூடவே காங்கிரஸ் அறிவுறுத்தியது.

காங்கிரசின் செயல்தந்திரப் பிரச்சினைகள் பற்றிய துணைக்குழு ''இடதுசாரியினரின்'' வற்புறுத்தலின் பேரில் செயல்தந்திரம் பற்றித் தயாரித்த ஆய்வுரையில் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் வேண்டும் என்ற கோஷத்தை ஆட்சிக்கான போராட்டத்தில் இடைக்காலக் கோஷமாக அர்த்தப்படுத்தாமல் பூர்ஷ்வா சர்வாதிகாரத்தின் மீது நேர்முகமான தாக்குதல் என்று குறுகிய

---

[1] அதே நூல், பக்கம் 399.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 408.

[3] அதே நூல், அதே பக்கம்.

பிரிவுவாத நோக்கில், அர்த்தப்படுத்தியது. சமூக-ஜனநாயகம் அனேக சந்தர்ப்பங்களில் பாசிஸத்தின் பகுதியாக மாறும் என்ற இடதுசாரிக் கருத்து தீர்மானங்களில் பிரதிபலித்தது.[1]

செயல்தந்திரம்பற்றிய தீர்மானங்களில் நேர்ந்த சில தவறுகள், தொழிலாளர்களின் ஒன்றித்த கூட்டணிக்காகவும், கம்யூனிஸ்டுக் கட்சிகள், சமூக-ஜனநாயகக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கை ஒற்றுமைக்காகவும் கம்யூனிஸ்டுகள் செய்த முயற்சிகளுக்கு இடைஞ்சலாய் இருந்தன. வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்களின் நடத்தையால் இளங் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு உண்டான ஆத்திரம் காரணமாகவே பெரும் அளவில் இந்த முடிவுகள் செய்யப்பட்டன. இந்தத் தலைவர்கள் யுத்தத் துக்குப் பின் புரட்சி ஏற்றம் பெற்ற ஆண்டுகளில் பாட்டாளி களின் வர்க்கப் பகைவர்களுக்கு வெளிப்படையான ஆதரவு அளித் தார்கள். அடிக்கடி பகைவர்களுடன் சேர்ந்து உழைப்பாளிகளின் புரட்சி நடவடிக்கைகளை ஒடுக்கினார்கள். போர்த்தன்மை கொண்ட கம்யூனிஸ எதிர்ப்பு நிலையை மேற்கொண்டார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ், தொழிற்சங்க இயக்கத்தில் ஒற்றுமை ஏற்படுத்தும் நோக்கத்துடன் முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது. இந்தப் பிரச்சினை பற்றி லஸோவ் ஸ்கி உரை ஆற்றினார். "...தொழிற்சங்கங்களை நம் தரப்புக்குக் கொண்டு வராமல் வெகுஜனங்களை நம் தரப்புக்கு ஈர்ப்பது நட வாது"[2] என்றார் அவர். சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களில் வேலை செய்வதை உரிய அளவில் மதிப்பிடாமல் தங்கள் ஆதர வாளர்களுக்கு அவற்றிலிருந்து வெளியேறிவிடும்படி ஆலோசனை கூறும் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வழக்கத்தை அவர் கடு மையாகச் சாடினார். தொழிற்சங்கங்களிலிருந்து வெளியேறுவது வெளியேறுபவர்களின் செயல் ஊக்கத்தைக் காட்டவில்லை, அவர் களுடைய புகலின்மையின் சின்னமாகவே விளங்குகிறது என்றார் அவர். பிரான்சிலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் போல இணையான தொழற்சங்க மையங்கள் நிலவும் நாடுகளில், "பொதுக் காங்கிரசின் வாயிலாக ஒற்றுமை" என்பது பிரதான கோஷ மாக இருக்க வேண்டும். "...தொழிற்சங்க இயக்கத்தைப் பிளவு

---

[1] அதே நூல், அதே பக்கம்.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 1, பக்கம் 805.

படுத்தும் சீர்திருத்தவாதிகளின் கைகளில் ஒற்றுமையின் ஏகபோக உரிமையை எந்த சந்தர்ப்பத்திலும் விடக் கூடாது.''[1]

ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிக் குழு சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமையை வலுப் படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான ஒரு பிரேரணையை முன்வைத்தது. சிவப்புத் தொழிற்சங்க அகிலத்தையும் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தையும் தொழிற்சங்கங்களின் ஒன்றித்த சர்வதேச சம்மேளனமாக ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் எல்லாத் தொழிற்சங் கங்களதும் சர்வதேசக் காங்கிரசைக் கூட்டும் யோசனையைத் தொழிற்சங்க அகிலம் ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலத்துக்கு முன்வைப்பது பொருத்தமாய் இருக்கும் என்று அது கருதியது. ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிக் குழு முன்வைத்த பிரேரணையில் பின்வருமாறு கூறப்பட்டது: ''கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமையைக் கோட்பாட்டு நோக்கில் ஆதரிக்கிறோம்''. ருஷ்யாவிலும் கட்சிப் பிளவுகள் இருந்த போதும் தொழிற்சங் கங்களின் ஒற்றுமை பாதிக்கப்படாமல் இருந்தது.[2]

ஐந்தாவது காங்கிரஸ், லஸோவ்ஸ்கியின் உரைப்படி ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைக்கும் முயற்சியின் நோக்கங்களுக்குப் பொருத்தமான ஒரு தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்தது. தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''கம்யூனிஸ்டு அகிலத்தின் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் உலகத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்கான போராட்டம் இழையோடி இருக்கிறது. இது ஸ்தாபனத்தின்பால் குருட்டு வழிபாட்டின் காரணமாக விளைந்தது அல்ல. தொழிற்சங்கங்களின் உள்ளே ஒற்றுமைக்காகப் போராடுகையில் கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களுடன் தொடர்பை ஒரு நிமிடம்கூடத் துணித்துக்கொள்ளாமல், கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கை விரிவுபடுத்துகிறார்கள் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது இது. தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காகப் போராடுவதே வெகுஜனங்களை நம் பக்கம் ஈர்ப்பதற்கான மிகச் சிறந்த வழி ஆகும். எனவே, கம்யூனிஸ்டு அகிலமும் அதைச்

---

[1] அதே நூல், பக்கம் 807.

[2] மை. ஆ. கூ., 492/1/134/19.

சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தங்கள் அடிப்படையான கொள்கைப் போக்கை மாற்றிக் கொள்ளும்படி செய்ய எதனாலும் முடியாது, எதுவும் அவ்வாறு செய்யக் கூடாது. தொழிற்சங்கங்களைக் குலைப்பது அல்ல, அவற்றை நம் தரப்புக்குக் கொண்டு வருவது, தொழிற்சங்கங்களிலிருந்து வெளியேறி ஓடுவதை எதிர்த்துப் போராடுவது, வெளியேறியவர்கள் மீண்டும் தொழிற்சங்கங்களில் சேர்வதற்காகப் போராடுவது, ஒற்றுமைக்காகப் போராடுவது என்னும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பழைய கோஷங்கள் இப்போதும் அமுலில் இருக்கின்றன. இவை முழு உறுதியுடனும் ஊக்கத்துடனும் செயல்படுத்தப்பட வேண்டும்.''[1]

1924, ஜூன் மாதம், தொழிற்சங்க அகிலத்தின் நான்காவது காங்கிரஸ் மாஸ்கோவில் கூடியது. தொழிற்சங்கங்களின் ஒன்றித்த அகிலம் அமைப்பது என்ற கோஷத்தை அது முன்வைத்தது. ஆம்ஸ்டர்டாம் அகிலத்துடனும் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் பொதுச் சபையுடனும் பேச்சுவார்த்தை தொடங்க அது தீர்மானித்தது. இந்த ஸ்தாபனங்களின் இடதுசாரியினர் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமையை ஆதரித்தார்கள்.

தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமையை ஏற்படுத்தும் கோஷத்தை முன்வைத்ததன் மூலம் ஐந்தாவது காங்கிரஸ், ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரம் பற்றிய சில பிரிவுவாத யோசனைகளுக்குச் சாராம்சத்திலும் எதார்த்தத்திலும் எதிராகச் சென்றது.

புரட்சி இயக்கத்துக்கு பாசிஸத்தால் ஏற்பட்டிருந்த தனிப்பட்ட அபாயத்தைக் கருதியும் இத்தாலியில் பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தின் பணிகளைக் கருதியும் பாசிஸத்துடன் போராடுவதற்கான வழிகளைக் காங்கிரஸ் ஆராய்ந்தது. பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவு விரிவான வெகுஜனங்களின், முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்தினதும் கம்யூனிஸ்டுக் கட்சியினதும் செயலூக்கத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிகரமான புரட்சியின் விளைவாக பாசிஸம் வீழ்த்தப்படலாம் அல்லது பூர்ஷ்வா ஜனநாயகத்தின் ஏதேனும் ஒரு வடிவம் அதன் இடத்துக்கு வரலாம் என்று காங்கிரஸ் கருதியது. போர்டிகாவின் பிரிவுவாதக் குழு, எந்த நிலைமைகளிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் *439*.

மட்டுமே பாசிஸத்தின் இடத்துக்கு வர முடியும் என்று எண்ணியது. இந்தக் குழுவுடன் விவாதம் நடத்திய பின்னரே இத்தாலிய அரசியல் பிரச்சினைகள் குறித்த சமயோசிதமான அணுகுமுறையைக் காங்கிரஸ் வகுத்தது. காங்கிரசின் கடைசிக் கூட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலம், கட்சிகளின் நடைமுறை அனுபவத்தால் இடையறாது வளம் பெற்று, இந்த அனுபவத்தைச் சித்தாந்த ரீதியில் பொதுமைப்படுத்தியது. தன் பிரிவுகளின் உயிரோட்டமுள்ள செயல்களுடன் அது ஆயிரமாயிரம் வழிகளில் தொடர்பு கொண்டிருந்தது. எனவே மாபெரும் இயக்கத்தின் நாடித் துடிப்பை அது உணர்ந்தது. அதன் செயல்தந்திரத் திருப்பங்கள், வழக்கமாகவும் முடிவாகப் பார்க்கும் போதும், அதன் பிரிவுகளிலும் மூலதனத்துக்கு எதிரான பொது அனைத்துலகப் போர்முனையிலும் நிலவிய நிலைமையைப் பிரதிபலித்தன. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் இந்த எல்லாப் பிரிவுகளையும் உறுதியான மார்க்சிய-லெனினியக் கொள்கைவாத-ஸ்தாபன அடிப்படையில் ஒன்றிணைத்து, ஒவ்வொரு பிரிவும் உழைப்பாளி வெகுஜனங்களையும், ஒடுக்கவும் சுரண்டவும் பட்ட வெகுஜனங்களையும் இயக்கி நடத்திச் செல்லுமாறு செய்வது அதன் வரலாற்றுப் பணியாக இருந்தது. போராட்டத்தின் உயிரோட்டமுள்ள நடைமுறை எதார்த்த நிலைமைகளின் தேவைகளுக்குப் பொருந்தாத திட்டங்களை உடைத்தெறிந்துவிட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசினுடைய தீர்மானங்களின் உணர்வில் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் விரிவாக நடந்த போல்ஷிவிஸமயமாக்கும் செயல்முறை இதில் மிகப் பெரிய பங்கு ஆற்றியது.

மூலதனத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளை ஒன்றுதிரட்டுவதற்கும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக்குமான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலம்

வெவ்வேறு நாடுகளின் நிலைமைகளில் ஒன்றித்த கூட்டணியின் பொருட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்டம்

முதலாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு, உலகப் புரட்சிச் செயல்முறையின் அரண் ஆகிய சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியன், இருபதுக்களின் நடுவிற்குள் சோஷலிஸக் கட்டுமானத்தில் பெருத்த வெற்றிகள் பெற்று விட்டது. மீட்டமைப்புக் காலப்பகுதி முடிந்து விட்டது. தொழில் பெருக்கம் செய்வது, முன்னணி சோஷலிஸப் பொருளாதாரத்தை நிறுவுவது என்ற பெரும் பணி நாட்டுக்கு முன் நின்றது.

சோஷலிஸம் ஒரு நாட்டில் வெற்றி பெறுவது சாத்தியமே என்ற லெனினது அடிப்படை முடிவு மீது திரோத்ஸ்கிவாதிகள் அந்த சமயத்தில் தாக்குதல் தொடுத்தார்கள். ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் அரசு உதவி இன்றி சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பது இயலாது என்ற திரோத்ஸ்கியின் கருத்தை ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியினது 14வது மகாநாடு (1925, ஏப்ரல் 27—29) வன்மையாகக் கண்டனம் செய்தது. ''இப்போதே சோஷலிஸத்தைத் துணிவுடனும் உறுதியுடனும் நிர்மாணிப்பது''[1] கட்சியின் பணி என்று மகாநாடு அறிவுறுத்தியது.

14வது கட்சி மகாநாடு முடிந்த சிறிது காலத்துக்குள் ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியில் ''புதிய எதிர்த்தரப்பு'' தோன்றியது. ஸிநோவியெவும் காமினெவும் கொஞ்சங் கொஞ்சமாக, முதலில் மறைமுகமாகவும் பிறகு வெளிப்படையாகவும் கூட, திரோத்ஸ்கியை ஆதரிக்கத் தொடங்கினார்கள். எதிர்த்தரப்பின் நடவடிக்கைகள் சோஷலிஸக் கட்டுமான நோக்கத்துக்கு நேரடியான தீங்கு விளைத்தன.

---

[1] சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி தீர்மானங்களில். மாஸ்கோ, 1954, பகுதி II, பக்கம் 170.

ஸினோவியெவ், காமினெவ் ஆகியோரின் தலைமையில் இயங்கியதும் திரோத்ஸ்கிவாதத்துடன் கொள்கை ஒருமை கொண்டதுமான ''புதிய எதிர்த்தரப்பை'' 1925, டிசம்பரில் கூடிய சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் 14வது காங்கிரஸ் தகர்த்து விட்டது. எதிர்த்தரப்பினர் சோஷலிஸக் கட்டுமானத்தின் எதிரிகள், அதற்கு மறைமுக அழிவு விளைப்பவர்கள் என்பதையும் அவர்களுடைய மக்கள் விரோதத் தன்மையையும் வெளிப்படுத்தியது, முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் தங்களுக்கு ஆதரவு தேடமுயன்ற திரோத்ஸ்கிவாதிகளுக்கும் ஸினோவியெவ்வாதிகளுக்கும் வழியை அடைத்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி நாட்டில் தொழில் பெருக்கம் செய்யும் கொள்கைப் போக்கை மேற்கொண்டது, சோவியத் யூனியன் பெருத்த பொருளாதார, அரசியல், இராணுவச் சக்தியாக மாறும், உலகப் புரட்சி நிகழ்முறை மீது மேலும் மேலும் அதிகச் செல்வாக்கு விளைக்கும் என்பதைக் காட்டியது.

கம்யூனிஸ்டுகளின் தலைமையில் சோவியத் மக்கள் நாட்டில் தொழில் பெருக்கம் செய்வதில் முனைந்திருந்த ஆண்டுகளில், முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் உழைப்பாளிகளின் உடனடியான அன்றாட நலன்களின் பொருட்டு விடாப்பிடியான போராட்டம் நடத்தி வந்தன. ஜெர்மனியில் இந்தப் போராட்டம் ஏகபோகங்களின் தாக்குதலுக்கு எதிராகவும், பிற்போக்கு-முடியரசுவாதக் குழுக்களுக்கும் எட்டு மணி நேர வேலைநாள் மீது மூலதனத்தின் தாக்குதலுக்கும் டாவெஸ் திட்டத்தின் விளைவுகளுக்கும் எதிராகவும் நடந்தது. பிரான்சில் கம்யூனிஸ்டுக் கட்சி 1925ம் ஆண்டு மொரோக்கோவில் நடந்த காலனியாதிக்கப் போருக்கு எதிராக விரிவான கிளர்ச்சி இயக்கம் நடத்தியது. ரீஃப் குடியரசுடன் தாமதமின்றி சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளும்படியும் எல்லாக் காலனி மக்களுக்கும் சுயாட்சி வழங்கும்படியும் அது கோரியது. தொழில் நிலையங்களில் ஒற்றுமைக் கமிட்டிகள் கம்யூனிஸ்டுக் கட்சியின் முயற்சியால் அமைக்கப்பட்டன. கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டுத் தொழிலாளர்களையும் கட்சிச் சார்பு அற்ற தொழிலாளர்களையும் யுத்த எதிர்ப்புப் போராட்டத்தில் இந்தக் கமிட்டிகள் ஈடுபடுத்தின. செக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுகள் விலைவாசி உயர்வை எதிர்த்து விரிவாகக் கிளர்ச்சி இயக்கம் நடத்தினர்கள்.

பிரிட்டனில் கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்கங்களில் ''சிறுபான்மையினர் இயக்கத்தை'' ஒழுங்கமைப்பதில் முன்னணியில் இருந்தார்கள். 1924, ஆகஸ்டில் ''சிறுபான்மையினர் இயக்கத்தின்'' முதலாவது அகில பிரிட்டிஷ் மகாநாடு கூடியது. டாம் மான் அதன் தலைவராகவும் ஹாரி போலிட் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ''சிறுபான்மையினர் இயக்கத்தால்'' பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் இடதுசாரி, உற்பத்தி மீது தொழிலாளர் கண்காணிப்பைச் செயல்படுத்தும்படியும் யுத்த அபாயத்துக்கு எதிராகவும் தொழிற்சங்க ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகவும் போராட்டம் நடத்தும்படியும் கோரியது.

1925ம் ஆண்டுக் கோடையில் சுரங்க முதலாளிகள் சுரங்கத் தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைக்க முயன்றார்கள். தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைக் காத்து உறுதியாகப் போராடினார்கள். இந்தச் சூழ்நிலையில் ஆளும் வட்டாரங்கள் பின்வாங்க வேண்டியதாயிற்று. பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை அதற்கு வெற்றி தேடித் தந்த நாளாகிய 1925, ஜூலை 31ந் தேதி, தொழிலாளிகளால் ''சிவப்பு வெள்ளிக்கிழமை'' என்று அழைக்கப்பட்டது. புதிய வர்க்க மோதல்களுக்கு ஆயத்தம் செய்யும்படி கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளர்களை எச்சரித்தது.

அனேகக் காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஊக்கத்துடன் கலந்து கொண்டன. இந்தோனீசியாவில் கம்யூனிஸ்டுக் கட்சி ஹாலந்தின் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு எதிராக வெகுஜனங்களை அணி திரட்டி, செல்வாக்குள்ள அரசியல் சக்தி ஆகிவிட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமையில் எல்லா இடங்களிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உழைப்பாளி வெகுஜனங்களின் நலன்களுக்காக மிக மிகச் செயலூக்கத்துடன் போராடின, ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் காத்துத் தன்னலமற்ற போராட்டம் நடத்தின, புதிய ஏகாதிபத்திய யுத்த அபாயத்தை எதிர்த்துப் போராடின, சோவியத் நாட்டுக்கு ஆதரவாக இயக்கம் நடத்தின, பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளையும் கம்யூனிஸ ஆதர்சங்களையும் வெகுஜனங்களிடையே பரப்பின.

புரட்சிச் சக்திகளை ஒன்றுசேர்த்து வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு

மிகப் பெருத்த தடங்கல்கள் ஏற்பட்டன. பூர்ஷ்வா வர்க்கமும் வலதுசாரி சமூக-ஜனநாயகமும் அவற்றுக்குப் பிடிவாதமாக எதிர்ச் செயல்கள் நடத்தின. பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆளும் வட்டாரங்கள் யுத்தத்துக்குப் பிந்திய கொந்தளிப்பு நிறைந்த ஆண்டுகளில் நிறையப் படிப்பினை பெற்றிருந்தமையால், வெகுஜனங்களை ஏமாற்று வதற்காகப் பல வகையான சமயோசித தந்திரங்களைத் திறமை யாகக் கையாண்டன. சில விஷயங்களில் விட்டுக் கொடுத்தன, சில வற்றில் ஓரளவு விட்டுக் கொடுத்தன. பூர்ஷ்வா நாடாளுமன்ற முறையின் வழிகளைக் கடைப்பிடித்தன. அதே சமயம், நிலைமை முற்றிவிட்ட இடங்களில் தொழிலாளர்கள்மீது வெட்கமின்றி அபாண்டமான பழிகள் சாட்டின, கொடுமையான அடக்குமுறை களைக் கையாண்டன. உதாரணமாக, பிரிட்டிஷ் கன்சர்வடிவ்கள் 1924, அக்டோபரில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடப்பதற்குச் சில நாட்கள் முன்பு ''ஸினோவியெவின் கடிதம்'' எனப்பட்ட போலிப் பிரசுரத்தை வெளியிட்டனர். பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சி யைக் கவிழ்த்துவதற்காக பிரிட்டனில் ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யும்படி கம்யூனிஸ்டு அகிலம் ஆணையிட்டிருப்பதாக இந்தப் பிரசுரம் கூறியது. கன்சர்வடிவ்களின் இந்த ஆத்திர மூட்டும் சூழ்ச்சி தேர்தல் முடிவைப் பெருமளவு பாதித்தது. முதலாவது தொழிற்கட்சி அரசாங்கம் தோல்வி அடைந்தது.

வலதுசாரி சமூக-ஜனநாயகம் ''ஒழுங்கமைந்த முதலாளித்து வம்'' என்னும் கருத்தைப் பரப்பியது. பல நாடுகளில் அது ''பொருளாதார ஜனநாயகம்'' எனப்படும் கொள்கையைக் கடைப் பிடித்தது. எதார்த்தத்தில் இது அரசு-ஏகபோக நடவடிக்கைகளை நியாயப்படுத்தியது. பொருளாதார வாழ்வில் முதலாளித்துவ அரசாங்கத்தின் தலையீட்டை முதலாளித்துவத்தின் அஸ்திவாரம் ஆட்டங்கண்டு விட்டதற்கான அறிகுறி என்றும் மூலதனத்தின் தனியாட்சி தகர்ந்ததைக் காட்டுவது என்றும் சமூக-ஜனநாயகம் வெகுஜனங்களுக்கு விவரித்தது.

தொழிலாளர் இயக்கத்தில் முதன்மையான அபாயமாக விளங்கிய சீர்திருத்தவாதம் கம்யூனிஸ்டுகளின் சில குழுக்களுக்கும் தொற்றிவிட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகளில் வலதுசாரிப் போக்கு தோன்றுவது இதனால் சாத்தியம் ஆயிற்று. இத்தகைய போக் குக்களை எதிர்த்துச் சமரசமற்ற போராட்டம் நடத்துவதன் அவ சியத்தின்பால் கம்யூனிஸ்டு அகிலம் தன் பிரிவுகளின் கவனத்தை இடையறாது ஈர்த்தது. தொழிலாளர்களின் வெகுஜன நடவடிக்

கையை ஒழுங்கு குலைத்த வலதுசாரி பூப்னிக் குழு செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் தோன்றியது. 1925, ஏப்ரலில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு இதை வன்மையாகக் கண்டித்தது. இந்தக் குழுவின் நடவடிக்கைகளை "அரசியல் துரோகம்" என்று மதிப்பிட்டது செயற்குழு. "சமூக-ஜனநாயகவாதத்தின் தீங்கான மரபுக்கு" எதிராக உறுதியுடன் பயன்விளைக்கும் போராட்டம் நடத்தும்படி அது கோரியது. செக்கோஸ்லோவாக்கியாவில் அப்போது இருந்த நிலைமைகளில் வலதுசாரி அபாயத்துக்கு எதிராகச் சக்தியை ஈடுபடுத்துவது அவசியமாய் இருந்தது என்று செயற்குழு அறிவுறுத்தியது.[1]

1926, மார்ச்சில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்த நிலைமையை மதிப்பிட்டுக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பின்வருமாறு கூறியது: "கட்சிக்குள் வலதுசாரி அபாயம் குறைத்து மதிப்பிடப்படும் மிகப் பெரிய ஆபத்து... உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த வலதுசாரி அபாயமோ, கட்சியின் கதவை இப்போதே விடாப்பிடியாகத் தட்டிக் கொண்டிருக்கிறது."[2] ரோஸ்மேர், மொனுத் ஆகியோரின் குழுவையும் ஸுவாரின் குழுவையும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் வலதுசாரிச் செல்வாக்கைக் கொண்டுவருபவை என்று செயற்குழு சித்திரித்தது (பின்னர் இந்தக் குழுக்கள் திரோத்ஸ்கிவாதத்துடன் சேர்ந்து, பகிரங்கமான கட்சிவிரோத நிலையை மேற்கொண்டன).

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஐந்தாவது விரிவாக்கப்பட்ட (1925, மார்ச் 21 முதல் ஏப்ரல் 6ந் தேதிவரை நடந்த) முழுக் கூட்டம், கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத-ஸ்தாபன நோக்கில் வலுப்படுத்தும் காரியத்தில் பெரும் தொண்டு ஆற்றியது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிக முக்கியமான சித்தாந்த, நடைமுறைப் பிரச்சினைகள் இந்தக் கூட்டத்தினது கவனத்தின் மையமாக விளங்கின.

முதலாவதாக ஐந்தாவது முழுக் கூட்டம் கம்யூனிஸ்டு அகிலத்தினது ஐந்தாவது காங்கிரசின் போல்ஷிவிஸமயமாக்குவது பற்றிய தீர்மானத்தை விரிவாக்கி ஸ்தூலப்படுத்தியது. "கம்யூனிஸ்டு அகிலத்தின் கட்சிகள் போல்ஷிவிஸமயமாக்கப்படுவது" என்ற

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கங்கள் 507—508.

[2] அதே நூல், பக்கம் 592.

ஆய்வுரை முழுக் கூட்டத்தில் ஏற்கப்பட்டது. ஆய்வுரை பின்வருமாறு கூறியது: "நாம் உலகப் புரட்சியின் ஓரளவு நீடிக்கும் வளர்ச்சிக் கட்டத்தின் முன் நிற்கிறோம் என்பது கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது உலகக் காங்கிரசிற்குச் சற்று முன்பு தெளிவுபடத் தொடங்கிவிட்டது. ஐந்தாவது உலகக் காங்கிரஸ் கூடிய தறுவாயில் இது இன்னும் அதிகத் தெளிவாகப் புலப்பட்டது. புரட்சியின் விரைவற்ற, நீடித்த வளர்ச்சி நிகழ்கையில் போல்ஷிவிஸமயமாக்குவது என்ற கோஷம் முக்கியத்துவத்தில் குறைந்துவிடவில்லை, மாறாக இன்னும் அதிகம் ஆகி இருக்கிறது..."[1] "எல்லா நிலைமைகளிலும் எந்த வகையான நிலைமைகளிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்னேற்பாடு செய்து அதை ஒழுங்கமைக்கப் போகிற பாட்டாளி வர்க்க மையக் குழுவை ஒன்றிணைக்கும் பொருட்டுக் கம்யூனிஸ்டுகள் முன்னிலும் அதிக விடாப்பிடியாக முனைந்து வேலை செய்ய வேண்டும்"[2] என்று முழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

புரட்சிக் கட்சியின் சரியான வளர்ச்சிக்கும் அதை வலுவாக்குவதற்கும் வகை செய்வது இரண்டு முனைகளில், அதாவது, வலது சாரி அபாயத்துக்கு எதிராகவும் "அதிதீவிர இடதுசாரிப்" போக்குக்கு எதிராகவும் போராடுவதன் மூலமே சாத்தியமாகும், ஏனெனில் இவ்விரண்டுமே பகைச் சக்திகளின் தாக்குதலுக்கு எதார்த்தத்தில் உதவுகின்றன என்று முழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கைவாத-சித்தாந்தத் தரத்தை உயர்த்துவது அவற்றை வலுப்படுத்துவதற்கும் அவற்றின் போராட்டத் திறனை அதிகமாக்குவதற்கும் நிர்ணயகரமான நிபந்தனை என்ற முறையில் இன்றியமையாதது என ஐந்தாவது முழுக் கூட்டம் வலியுறுத்தியது. லெனினியம் மார்க்சியத்தின் வளர்ச்சியில் புதிய கட்டமாக விளங்குகிறது, ருஷ்யாவின் மூன்று புரட்சிகளது அனுபவத்தாலும் உலகப் புரட்சி இயக்கம் அனைத்தினுடையவும் அனுபவத்தாலும் மார்க்சியத்தை வளப்படுத்தி இருக்கிறது எனவே லெனினியத்தைப் பயின்று தேர்வது ஒவ்வொரு கட்சியினதும் கடமை ஆகும் என்று முழுக் கூட்டம் பணித்தது. மார்க்சியத்துக்கும் லெனினியத்துக்கும் உள்ள உறுப்புத் தொடர்பைக் குறிப்

[1] அதே நூல், பக்கம் 475.

[2] அதே நூல், அதே பக்கம்.

பிட்டு, மார்க்சியம் இல்லாவிட்டால் லெனினியம் இல்லை என்றும் லெனினியம் இல்லாவிட்டால் புரட்சிகர மார்க்சியம் இருக்க முடியாது என்றும் ஐந்தாவது முழுக் கூட்டம் அழுத்திக் கூறியது. தனது காலத்துக்குப் பொருத்தமாக லெனினியத்தின் தன்மையை வரையறுத்து, ஏகபோக மூலதனம் (ஏகாதிபத்தியம்), ஏகாதிபத்திய யுத்தங்கள், பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் ஆகியவற்றின் காலக் கட்டத்துக்கு உரிய மார்க்சியமே லெனினியம் என்று முழுக் கூட்டம் விளக்கம் தந்தது. கம்யூனிஸ்டு அகிலம், லெனினியத்தின் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் தனது செயல்களில் கடைப் பிடிக்கும் சர்வதேச ஸ்தாபனமாக விளங்குவதைத் தனது நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்று முழுக் கூட்டத்தின் தீர்மானம் கூறியது. லெனினியச் சித்தாந்தத்தைப் பயின்று தேர்வது கட்சிகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன நோக்கிலும் வலுப் படுத்துவதற்கு மிக முக்கியமான முதனிலை என்று செயற்குழு கருதியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசாலும் செயற்குழுவின் ஐந்தாவது முழுக் கூட்டத்தாலும் வகுக்கப்பட்ட "போல் ஷிவிஸமயமாக்கும்" கொள்கை கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள் கைவாத, அரசியல், ஸ்தாபனத் தரத்தை உயர்த்துவதிலும் அவை மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளில் தேர்ச்சி பெறச் செய்வதிலும் அவற்றின் போராட்டத் திறனை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு ஆற்றியது. கட்சிகளை "போல்ஷிவிஸமயமாக்கும்" இயக்கத்தின் நோக்கம் "ருஷ்ய அனுபவத்தின் ஒரு பகுதியைப்" பயின்று தேர்வதில் வெளிநாட்டுத் தோழர்களுக்கு உதவுவது என்றும் இந்த இயக்கம் விரிவான அளவில் நடந்தது என்றும் எழுதினார் தளியாத்தி.

"ஒவ்வொரு நாட்டிலும் கட்சியையும் அதன் தலைமை ஊழியர்களையும் நிலைப்படுத்தும் செயலை முன்னேற்றவும் மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளை ஆழ்ந்து பயின்று தேற விரும்பாதவர்களும் புரட்சிக் கட்சியின் கட்டுப்பாட்டையும் வேலை முறைகளையும் பிடிவாதமாக எதிர்த்தவர்களுமான நபர்களையும் குழுக்களையும் அகற்றவும் இது உதவியது."[1]

போல்ஷிவிஸமயமாக்கும் செயல்முறையின் போது கட்சியின் அமைவு மாறியது. வேலையின் ஈர்ப்பு மையம் உற்பத்தி மையக்

---

[1] P. Togliatti. Sul movimento operaio internationale. Roma, 1964, p. 301.

குழுக்களுக்கு மாற்றப்பட்டது (இது, ஸ்தாபன முக்கியத்துவம் மட்டும் இன்றி அரசியல் முக்கியத்துவமும் கொண்டிருந்தது). கூட்டுத் தலைமை உறுதிப்பட்டது.

அதே சமயம், சில சந்தர்ப்பங்களில் போல்ஷிவிஸமயமாக்கு வதைச் செயல்படுத்தும் போது வெவ்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் செயலாற்றிய ஸ்தூல நிலைமைகள் போதிய அளவு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

''ஐரோப்பிய சந்தர்ப்பவாதமும் 'இடதுசாரித் தீவிரவாதச்' சொற்றொடரும்'' ஒன்றாய்ச் சேர்ந்த திரோத்ஸ்கிவாதத்தின் தனிப்பட்ட அபாயத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஐந்தாவது முழுக் கூட்டம் சுட்டிக் காட்டியது. திரோத்ஸ்கிவாதம் என்பது, ''லெனினியத்துக்கு எதிரான பல்லாண்டுப் போராட்ட முறை என்றும், இது ருஷ்ய நிகழ்ச்சி மட்டும் அல்ல, சர்வதேசத் தன்மை உள்ள நிகழ்ச்சி''[1] என்றும் முழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் கூறப்பட்டது.

புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகள் பற்றிய பிரச்சினை லெனினது உணர்வில் தீர்க்கப்பட்டது. ''குறிப்பிட்ட ஸ்தூலமான பணிக்கு ஏற்ற ஸ்தூலமான கூட்டாளியைச் சோதித்து அறியத் திறன் கொண்டிருப்பது''[2] அவசியம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. விவசாயிகள்பால் சில கட்சிகள் முன்பு கடைப்பிடித்த, ''கம்யூனிஸ்டு அகிலத்தின் சில பிரிவுகள் இப்பொழுதும் கடைப்பிடிக்கும்''[3] தவறான, குறுகிய பிரிவுவாதப் போக்கு விமர்சிக்கப்பட்டது. ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம், புரட்சிப் போராட்டத்தில் விரிவான வெகுஜனங்களை ஈர்க்கும் லெனினியத்துக்கு இயல்பான வழி என்று வரையறுக்கப்பட்டது. மேற்கு ஐரோப்பாவின் சில நாடுகள் விஷயத்தில், சில்லறை நகர ஊழியர்களின் கணிசமான பகுதியினர்—அலுவலர்கள், தொழில்நுட்ப அறிவு ஜீவிகள் முதலியோர்—பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே தற்போது நிலவும் வலிமையின் ஒப்புநிலையில் குறித்த அளவு வரை போராடும் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகளாக விளங்க முடியும் என்றும் சில நாடுகளில் இந்தப் பகுதியினர் குறித்த சூழ்நிலைகளில், ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 481.

[2] அதே நூல், பக்கம் 486.

[3] அதே நூல், பக்கம் 481.

புரட்சியின் சில கட்டங்களில் விவசாயிகள் ஆற்றியதை ஓரளவு ஒத்தபங்கைக் கூட ஆற்ற முடியும் என்று கூறப்பட்டது.

அணித்தான, அம்சரீதியான அரசியல் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தையும் முதன்மையாக சமூக-அரசியல் வாழ்க்கையை ஜனநாயகமயமாக்கும் பொருட்டுப் போராட்டத்தை விரிவாக நடத்துவதன் முக்கியத்துவத்தையும் அறிவுறுத்தியது, கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஐந்தாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தின் தீர்மானங்களது எடுத்துக்காட்டான இயல்பாக விளங்கியது.

தேசிய-காலனிப் பிரச்சினை முழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப் பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டபோதே வெளியிடப்பட்ட கருத்துக் கள் ஸ்தூலமாக்கப்பட்டன. ஒடுக்கப்பட்ட நாட்டினங்களுடனும் காலனிகளுடனும் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றித்த புரட்சிக் கூட்டணி பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தின் கருத்து எவ்வளவு ஆழ்ந்த முறையில் சரியானது என்பதை நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தி விட்டன என்று ருஷ்யாவின் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிக் குழுவின் உறுப்பினர் மனுயீல்ஸ்கி ஐந்தாவது காங்கிரஸில் ஆற்றிய உரையில் கூறினர். ''வெவ்வேறு நாடுகளில் ஒடுக் கப்பட்ட நாட்டினங்களுடன் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றித்த புரட்சிக் கூட்டணியைக் கையாளும் பிரச்சினை பற்றிய'' வளமான மெய் விவரங்களைப் பொதுமைப்படுத்தும்படியும், இந்தப் பிரச்சினை யில் அனேக நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் செய்த தவறு களைப் பகுத்தாராயும்படியும், ''பல நாட்டினங்கள் கொண்ட விவசாயி நாட்டின் நிலைமைகளில் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் கீழ் நாட்டினப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சோதனை என்ற முறையில் சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியன்''[1] உருவானதன் முக்கியத்துவத்தை மதிப்பிடும்படியும் மனுயீல்ஸ்கி கேட்டுக் கொண்டார்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒப்புநோக்கில் தீவிரச் செயல் திட்டம் கொண்ட தொழிலாளர்-விவசாயிகள் கட்சிகள் அமைக் கும் போக்கைப் பொறுத்தவரை கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்த ஸ்தாபனங்கள் பற்றிய தங்கள் போக்கைத் தீர்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது உலகக் காங்கிரஸ், பகுதி 1, பக்கங்கள் 591-592.

மானிக்க வேண்டி இருந்தது. ஜாவாக் கம்யூனிஸ்டுகளுக்கு ''அங்குள்ள தொழிலாளர்-விவசாயிகள் கட்சியில் ஊக்கத்துடன் பங்கு கொள்ளும்படி''[1] கம்யூனிஸ்டு அகிலம் யோசனை கூறியது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு, குவோமிந்தானில் சேரும்படியும் இந்தக் கட்சி ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அதிக உறுதியான போராட்டப் பாதையை மேற்கொள்ள இது உதவலாம் என்றும் கம்யூனிஸ்டு அகிலம் அறிவுரைத்தது. ''கிழக்கு நாடுகளைப் புரட்சிகரமாக்கும் இவ்வகையான புதிய நிகழ்ச்சிகளை மறுப்புவாதப் பாங்கில் புறக்கணிப்பதன்'' அபாயத்தை மனுயீல்ஸ்கி தமது பேச்சில் சுட்டிக்காட்டினர். அதே சமயம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ''தங்கள் சுதந்திரமான வர்க்க வடிவத்தை இழந்துவிட்டுக் குட்டி பூர்ஷ்வாக்களுடன் கொச்சைத்தனமாக ஒத்துழைப்பது''[2] அனுமதிக்கத் தகாதது என்று அவர் கூறினர்.

தேசிய-விடுதலை இயக்கத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொண்ட தன் அனுபவம் பற்றி ஆலோசனை செய்தபின் செயற்குழுவின் ஐந்தாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் ஏப்ரல் 6ந் தேதி சில தீர்மானங்களை ஏற்றுக் கொண்டது. இந்தியா, இந்தோனீசியா, எகிப்து ஆகியவற்றின் அரசியல் நிலைமை இவற்றில் மதிப்பிடப்பட்டது. செயல்திட்டம், செயல்தந்திரம் ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இந்த நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கு யோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

''ஒரு புறம் கம்யூனிஸ்டுகளுக்கும் தொழிலாளர் இயக்கத்துக்கும் ஒத்திசைந்த தேசியவாதிகளுக்கும் எதிராக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக் கொள்கை தீவிரம் ஆகி இருப்பதும், மறுபுறம் தேசிய இயக்கத்துக்குள் நிலவும் முரண்பாடுகளும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு இந்திய வெகுஜனங்களின் ஒழுங்கமைந்த எதிர்ப்பைத் தாற்காலிகமாக பலவீனப்படுத்தியுள்ளன''[3] என்று முழுக் கூட்டம் கருத்துரைத்தது. இந்த நிலைமை நாட்டில் தேசிய விடுதலை இயக்கத்தின் தோல்வியையோ வீழ்ச்சியையோ குறிக்கவில்லை என்றும் நிலவும் தேசியக் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள தாற்காலிக நெருக்கடியையே காட்டுகிறது என்றும் முழுக் கூட்டம் கருதியது. ''இந்தியாவின் சுதந்திரத்துக்காக நிர்ணயகர

---

[1] அதே நூல், பக்கம் 593.

[2] அதே நூல், அதே பக்கம்.

[3] மை. ஆ.கூ., 495/163/178/1.

மான போராட்டம் நடத்தும் அடிப்படையில் தேசிய-விடுதலை இயக்கத்தை ஒழுங்கமைக்கும் நோக்கத்துடன் ஊக்கமாகச் செய லாற்றுவது இந்தியாவில் உள்ள நம் தோழர்கள் தற்போது மேற் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பணிகளில் ஒன்ருகும்''[1] என்று முழுக்கூட்டம் கூறியது. ''வெகுஜன தேசியப் புரட்சிக் கட்சியையும் அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியை யும் அமைக்கும்'' நோக்கத்துடன் நாட்டின் முதன்மையான வெகு ஜன ஸ்தாபனம் ஆகிய இந்திய தேசியக் காங்கிரசில் தொடர்ந்து வேலை செய்யும்படியும் ''இந்திய பூர்ஷ்வா வர்க்கத்தை அதிக உறு தியுள்ள அரசியல் போராட்டம் நடத்தும்படி வற்புறுத்துவதற்கு'' ஏற்ற வழிகளைக் காணும்படியும் ''ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியின் அடிப்படையில் அதன் எல்லா வித ஏகாதிபத் திய எதிர்ப்புக்கும் ஆதரவு அளிக்கும்படியும்''[2] இந்தியக் கம்யூ னிஸ்டுகளுக்கு யோசனை கூறப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்டுகளின் முக்கியப் பணி, ''கம்யூனிஸ்டுக் குழுக்களையும் நபர்களையும் தொழி லாளி வர்க்கத்தின் வலுவான கட்சியாக—கம்யூனிஸ்டுக் கட்சி யாக—ஒன்றுபடுத்துவதுதான்''[3] என்று முழுக் கூட்டம் கருதியது.

முழுக் கூட்டம் இந்தோனீசிய நிலைமையை விளக்கியது. கம்யூ னிஸ்டுக் கட்சி, ''ஜாவாவில் நிலவும் எல்லா தேசிய-புரட்சிக் கட்சிகளையும் சேர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைக் கும் கோஷத்தை முன்வைக்க'' வேண்டும் என்று அது அறிவுறுத் தியது. ஆனல், இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சில தலை வர்கள், உரிய தருணத்துக்கு முந்தி, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜன நாயகப் புரட்சி கட்டத்தைத் தாண்டிக் குதித்து, ''ஜாவாவிற்கு சோவியத் ஆட்சி கோஷங்களைப் பயன்படுத்துவதைத்'' தொடர் கிருர்கள் என்றும் ''இந்த கோஷங்கள் தேசிய-புரட்சிக் கட்சி யான ஸரேக்கத் ரக்கியாத்தை (''மக்கள் ஐக்கியம்''—ப-ர்.) சுற்றி விரிவான விவசாயி வெகுஜனங்களையும் நகர பூர்ஷ்வா வர்க்கத்தை யும் அணிதிரட்ட முடியவில்லை''[4] என்றும் முழுக் கூட்டம் குறிப் பிட்டது.

எகிப்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு ''தேசிய-புரட்சி இயக்கத்தின் எல்லா வடிவங்களையும் ஊக்கத்துடன் ஆதரிக்கும் படியும் அதன்

---

[1] மை. ஆ. கூ., *495/163/178/1.*

[2] மை. ஆ. கூ., *495/163/178/3—4.*

[3] மை. ஆ. கூ., *495/163/178/4.*

[4] ''கம்யூனிஸ்டு,'' *1969,* இதழ் *4,* பக்கங்கள் *16—17.*

அடிப்படைகளை விரிவுபடுத்துவதிலும் அதன் போராட்டத்தை ஆழமாக்குவதிலும் எல்லா வகையிலும் ஒத்துழைக்கும் படியும்''[1] முழுக் கூட்டம் யோசனை கூறியது.

அமெரிக்க ஐக்கிய நாட்டு ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்டுள்ள நாடுகளில் நடக்கும் விடுதலை இயக்கத்தின்பால் அமெரிக்கக் கம்யூனிஸ்டுகள் கடைப்பிடிக்க வேண்டிய செயல்தந்திரம் பற்றியும் முழுக் கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது. அமெரிக்கக் கம்யூனிஸ்டுகளுக்குப் பின்வருமாறு யோசனை கூறப்பட்டது: ''தற்போது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் காலனிகள் அல்லது அரைக் காலனிகள் நிலையில் இருக்கும் நாடுகளில் தேசிய-புரட்சி இயக்கத்தில் ஊக்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்''[2] (எடுத்துக்காட்டாக, புயெர்ட்டோ-ரிக்கோ, ஃபிலிப்பைன், கியூபா ஆகியவற்றில்); ஃபிலிப்பைன் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைப்பதிலும் அந்த நாட்டில் புரட்சிகரத் தொழிற்சங்க இயக்கத்தையும் விவசாயிகள் ஸ்தாபனங்களையும் வலுப்படுத்துவதிலும் உதவ வேண்டும்; மத்திய அமெரிக்காவிலும் தெற்கு அமெரிக்காவிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் பிரசாரத்தை ஒழுங்கமைக்கும் நோக்கத்துடன், அமெரிக்கக் கண்டம் அனைத்திலும் உள்ள பிற கம்யூனிஸ்டுக் கட்சிகளோடு சேர்ந்து அனைத்து அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புச் சங்கம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

வரலாற்று அரங்கில் தேசிய-விடுதலை இயக்கங்கள் ஏற்றம் பெற்றிருப்பதாகச் செயற்குழு கருதியது. இவற்றில் முன்னணிப் படைப் பிரிவுகளாகப் பங்காற்றும்படி அது கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஏவியது. அதே சமயம், வெகுஜனங்களின் ஆதரவைச் சாராத அவசர நடவடிக்கைகளைத் தவிர்க்கும்படி அது ஒடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளை எச்சரித்தது.

எல்லா உழைப்பாளிகளையும் சுரண்டப்படுவோரையும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் தன்னைச்சுற்றி ஒன்று திரட்ட வல்லதும் விடுதலை இயக்கத்தின் முன்னணிப் படையுமான பாட்டாளி வர்க்கத்தில் ஊக்கத்துடன் வேலை செய்யும்படி கம்யூனிஸ்டு அகிலம் கம்யூனிஸ்டுகளைப் பணித்தது. அதே சமயம், காலனிகளையும் அரைக் காலனிகளையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கம்

---

[1] மை. ஆ. கூ., *495/163/180/2.*

[2] மை. ஆ. கூ., *495/163/186/3.*

இப்போதுதான் நிலையாக உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் அங்கே கம்யூனிஸ்டுக் கட்சிகள் முதல் அடிகள் மட்டுமே வைத்திருக்கின்றன என்பதையும் கருத்தில் கொண்டு இவற்றில் மிக மிக வளர்ச்சி பெற்ற நாடுகளில்கூட, பாட்டாளி வர்க்க மேலாதிக்கம் பெறும் கோஷத்தை முன்வைப்பதும் கம்யூனிஸ்டுகள் விடுதலை இயக்கத்தின் தலைமையை மேற்கொள்வதும் நேரடியான பணிகள் என்ற முறையில் தருணத்துக்கு முந்தியவை என்று செயற்குழு அபிப்பிராயப்பட்டது.

ஒடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் தேசிய-விடுதலைப் போராட்டத்தில் மிக ஊக்கத்துடன் பங்கு கொள்ளும்போது அவற்றுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய வாய்ப்புக்களைக் கம்யூனிஸ்டு அகிலம் சுட்டிக் காட்டியது. போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கலந்துகொள்வதால் தேசிய-விடுதலை இயக்கம் அளவிலும் விறலிலும் அதிகரிக்கும், புரட்சித் தன்மை பெறும், அந்த இயக்கத்தின் தலைமை மிக உறுதிவாய்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் கைகளுக்கு மாறும் என்று அது விளக்கியது.

''மக்கள் புரட்சிக்'' கட்சிகள், ''மக்கள்'' கட்சிகள், ''தொழிலாளர்-விவசாயிகள்'' கட்சிகள் ஆகியவற்றை நிறுவும் கோஷத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு முன்வைத்தது. தனது சொந்த அரசியல் சுதந்திரத்தை அப்படியே வைத்துக் கொண்டு, இந்தக் கட்சிகளை ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியின் அரசியல் ஸ்தாபனங்களாக மாற்றும் பொருட்டு இவற்றுக்குள் விடாப்பிடியான ஒத்திசைந்த வேலை செய்வதன் இன்றியமையாமையை அது கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கு எடுத்துக் காட்டியது.

இந்தத் தீர்மானங்கள், கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது, நான்காவது காங்கிரசுகளின் கருத்துக்களது வளர்ச்சியாகவும் கம்யூனிஸ்டு அகிலம், காலனிகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆகியவற்றின் நடைமுறை வேலை அனுபவத்தின் படைப்புத்தன்மையுள்ள பொதுமைப்பாடாகவும் விளங்கின. ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்டவை அல்லது அதற்கு அடிப்பட்டவையான மேலும் மேலும் புதிய நாடுகளில் கம்யூனிஸ்டு இயக்கம் தோன்றி ஸ்தாபன வடிவம் பெற்றது. 1925, ஆகஸ்டில் கியூபாக் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்பட்டது. விரைவில் இது கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவு ஆகி விட்டது. 1925ல் லத்தீன் அமெரிக்கா முழுவதிலும் இருந்த கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை 7,500. கம்யூ

னிஸ்டு அகிலத்துடன் இளம் கட்சிகளின் தொடர்புகள் வலுப்பட்டதும் லெனினது கருத்துச் செல்வத்தைப் பயின்று தேர்ந்ததும் அராஜகவாத மரபுகளை விட்டு ஒழிக்கவும் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைத் தேசிய எதார்த்தங்களுக்குப் பொருந்தும் வகையில் கையாளவும் லத்தீன் அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு உதவின.

மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளிலும் ஒடுக்கப்பட்ட கிழக்கத்திய நாடுகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வெகுஜனக் கொள்கையின் வளர்ச்சியில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஐந்தாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தின் தீர்மானங்கள் மிக முக்கியமான பங்கு ஆற்றின.

1925ம், 1926ம் ஆண்டுகளில் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியின் வளர்ச்சியில் பெருத்த வெற்றிகள் அடைந்தார்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் நடவடிக்கை ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மற்ற தொழிலாளர் கட்சிகளுக்கும் பாசிஸ-எதிர்ப்புக் கட்சிகளுக்கும் திண்ணமான பிரேரணைகள் விடுக்கும்படி கம்யூனிஸ்டு அகிலம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு யோசனை கூறியது. பாசிஸ-எதிர்ப்பாளர்களை ஒன்று திரட்டும் பொருட்டு ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை மேற்கொள்ளும்படி இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைமைக்குழு 1925, நவம்பர் 26ந் தேதி எழுதியது: ''கட்சி ஒன்றித்த கூட்டணியைக் கீழிருந்து செயல்படுத்தியது. தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கிடையே ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை முதலில் கடைப்பிடிப்பதன் இன்றியமையாமையை அது ஆதரித்தது. இது சரியே. ஆனால் இதோடு கூடவே பிற கட்சிகளின் தலைமை உறுப்புக்களுக்கும் வேண்டுகோள் விடுப்பதன் உபயோகம் இதனால் அற்றுப் போய்விடவில்லை...''[1]

சோஷலிஸ்டுக் கட்சியின் அசாதாரணக் காங்கிரஸ் கூட்டப்பட்டதை ஒட்டி, 1926, ஜனவரி 9ந் தேதி பிரெஞ்சுக கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி ஒரு வேண்டுகோள் விடுத்தது. இந்த வேண்டுகோளில் தவறுகள் இருப்பதாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்கு

---

[1] மை. ஆ. கூ., 495/2/43/40.

எழுதியது. கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கே நேராக வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டும் என்று செயற்குழு கருதியது. ''உங்களுடைய வேண்டுகோள் பிரெஞ்சுத் தொழிலாளர்களுக்கும் தொழிலாளி-சோஷலிஸ்டுகளுக்கும் விடப்பட்டிருக்கிறது. இவ்வாறு செய்ததன் மூலம், ஒன்றித்த கூட்டணி பற்றிய உங்கள் யோசனைமீது காங்கிரசின் கருத்தை அறியும் வாய்ப்பையே நீங்கள் இழந்து விட்டீர்கள்...[1] சோஷலிஸ்டுக் கட்சிக்குள் இருந்த பல்வேறு போக்குக்களை ''ஒரே குவியலில் கொட்டியதும்'' தவறு என்று செயற்குழு கருதியது. ''இதனால் தொழிலாளி-சோஷலிஸ்டுகள் தங்கள் தலைவர்களுடன் இணங்குவதை நீங்கள் எளிதாக்குகிறீர்கள். உண்மையிலோ, அவர்களைப் பிரிக்கும் அகழை மேலும் ஆழமாக்குவதே நம் கொள்கை''[2] என்று செயற்குழுவின் கடிதம் கூறியது. ''சோஷலிஸ்டுத் தலைவர்களுக்கு விடுத்துள்ள பிரேரணையில் நீங்கள் கடைப்பிடிக்கும் தோரணையே ஒன்றித்த கூட்டணியைச் செயல்படுத்தும் வாய்ப்பை முன்கூட்டி அகற்றி விடுகிறது... ஆரம்பத்தில் தலைவர்களுக்கு வேறு தோரணையில் எழுதி இருக்க வேண்டும், அதன் பின், அவர்கள் மறுக்கும் பட்சத்தில், நீங்கள் கடைப்பிடித்த முறையை மேற்கொண்டிருக்க வேண்டும்—அதாவது, அவர்களைப் பின்பற்றும் வெகுஜனங்களுக்கு, அவர்களை ஒரு புறம் ஒதுக்கி விட்டு, வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டும். இதை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள். தலைவர்கள் மறுத்தால் மட்டுமே நீங்கள் உரிய முறையில் அவர்களை அம்பலப்படுத்தி இருக்க வேண்டும்.''[3]

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக்கான போராட்டத்தின் போது கம்யூனிஸ்டுக் கட்சிகள் வலதுசாரி, ''இடதுசாரிப்'' பிறழ்வுகளை அகற்றி வலுவடைந்தன. ஒன்றித்த கூட்டணிக்கான போராட்டத்தின் நடைமுறை, கட்சியின் கொள்கை மீது செல்வாக்கு செலுத்திவந்த இடதுசாரிக் குழுக்களின் தீங்கைக் கம்யூனிஸ்டுகள் புரிந்து கொள்ள உதவியது. குட்டி பூர்ஷ்வா துர்ச்சாகசப் போக்குகளை வெளியிட்டுவந்த அதிதீவிர இடதுசாரிக் குழுக்கள் இந்த சமயத்தில்தான் அனேகக் கட்சிகளின் தலைமையிலிருந்து அகற்றப்பட்டன. ஜெர்மனியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை

---

[1] மை. ஆ. கூ., *495/2/47/122.*

[2] மை. ஆ. கூ., *495/2/47/12.*

[3] மை. ஆ. கூ., *495/2/47/122-123.*

யில் இருந்த ஃபிஷர்—மாஸ்லவ் குழுவின் ''அதிதீவிர இடதுசாரிக்'' கொள்கை, கட்சிக்கும் தொழிலாளர் இயக்கத்துக்கும் பெருத்த தீங்கு விளைத்தது. தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகளின் நிலை அதன் காரணமாகக் கணிசமாகப் பலவீனம் அடைந்தது. 1924, டிசம்பரில் நடந்த ஜெர்மன் நாடாளுமன்றத் தேர்தல்களில் ஃபிஷர்—மாஸ்லவ் குழு, ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காகவும் சோஷலிஸத்தை நிறுவுவதற்காகவும்'' என்னும் கோஷத்துடன் கலந்து கொண்டது (தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் பற்றிய கோஷம், கிளர்ச்சிப் பிரசார கோஷம் என்ற முறையில் கூடக் கைவிடப்பட்டது). இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சி, 1924, வசந்தத்தில் நடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழப் பத்து லட்சம் வாக்குகளை இழந்தது. 1925ல் ஜெர்மானிய ''அதிதீவிர இடதுசாரியினர்'' சோவியத் யூனியனில் இருந்த ''புதிய எதிர்த்தரப்புடன்'' தங்கள் ஒருமைப்பாட்டைப் பிரகடனம் செய்தார்கள். புரட்சிப் போராட்டம், கட்சியின் வளர்ச்சி ஆகியவற்றின் தேவைகளுக்கும் ''அதிதீவிர இடதுசாரியினரின்'' அரசியல் கொள்கைப் போக்குக்கும் இடையே இருந்த வெளிப்படையான முரண்பாட்டின் விளைவாக அவர்கள் வெகுஜனங்களின் ஆதரவை இழந்தார்கள். 1925, நவம்பரில் ''அதிதீவிர இடதுசாரியினர்'' ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையிலிருந்து அகற்றப்பட்டார்கள். தொழிலாளி வர்க்கத்தின் நம்பகமான தலைவர்கள் எர்ன்ஸ்த் தேல்மனின் தலைமையில் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுர்கள். ''அதிதீவிர இடதுசாரியினரைத்'' தலைமையிலிருந்து நீக்குவதில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் பேருதவி புரிந்தது. அது ஃபிஷர்—மாஸ்லவ் குழுவை வன்மையாகக் கண்டித்து, தேல்மனது தொழிலாளர் குழுவுக்கு ஆதரவு அளித்தது.[1]

ஜெர்மனியில் ''வெகுஜனங்களை ஈர்க்கும் நிகழ்முறைக்கு முதன்மையான முட்டுக்கட்டையாக விளங்கியது ''அதிதீவிர இடதுசாரியே''[2] என்று செயற்குழு சுட்டிக்காட்டியது.

இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் போர்டிகாவின் ''அதிதீவிர இடதுசாரிப்'' போக்குடன் போராட்டம் முடிவு பெற்றது. லியோன் என்னும் பிரெஞ்சு நகரத்தில் நடந்த தனது மூன்றுவது

---

[1] மை. ஆ. கூ., 558/2/6373/2.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 579.

காங்கிரசில், கட்சி கிராம்ஷியையும் தளியாத்தியையும் தலைவர்களாகக் கொண்ட மார்க்சிய-லெனினிய மையக் குழுவைச் சுற்றி ஒன்று திரண்டது.

ஜப்பானில் இந்தக் காலப் பகுதியில் கம்யூனிஸ்டுக் கட்சி ஃபுகுமோத்தோவின் இடதுசாரிப் போக்கிற்கு முடிவு கட்டியது. இந்தப் போக்கின் பிரதிநிதிகள் வெகுஜனப் பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களின் முக்கியத்துவத்தையும் தொழிலாளி வர்க்கத்தின் அம்சரீதியான கோரிக்கைகளுக்காகப் போராடுவதன் முக்கியத்துவத்தையும் முழுமையாக மதிப்பிடத் தவறி விட்டார்கள்.

''அதிதீவிர இடதுசாரியினர்'' மீது நடந்த தாக்கு, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வெகுஜன வேலை நடப்பதற்கு இருந்த பெரும் தடையை அகற்றிவிட்டது.

கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் வலதுசாரி ''இடதுசாரிப்'' பிறழ்வுகளை எதிர்த்து நடத்திய விடாப்பிடியான போராட்டம் கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன நோக்கிலும் வலுப்படுத்தவும் அவற்றை போல்ஷிவிஸமயமாக்கவும் உதவிற்று.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைப் படைப்புத் தன்மையுடன் கையாண்ட இடங்களில் வெகுஜன இயக்கங்கள் நடத்துவதில் அவை குறிப்பிடத்தக்க வெற்றிகள் பெற்றன. ஜெர்மனியில் அரசுரிமை பெற்ற சிற்றரசர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதற்காக நடந்த இயக்கம் (1925ன் முடிவிலும் 1926ன் முதல் பாதியிலும்) ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தின் பயன்பாட்டுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. ஒன்றித்த கூட்டணியாகச் செயல்பட்ட தொழிலாளிக் கம்யூனிஸ்டுகளையும் சமூக-ஜனநாயகவாதிகளையும் தொழிற்சங்க உறுப்பினர்களையும் சுற்றி விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், அறிவுஜீவிகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் கணிசமான திரளாக ஒன்று திரண்டார்கள். சிற்றரசர்களின் உடைமைகளை இழப்பீடு இல்லாமல் பறிமுதல் செய்வதற்காகக் கூட்டாகப் போராட்டம் நடத்துவதற்கு, வெகுஜனங்களின் வற்புறுத்தல் காரணமாக ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியுடன் வேறு வழியின்றி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. பொது வாக்கெடுப்பில் 145 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் சிற்றரசர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதற்கு ஆதர

வாக வாக்களித்தார்கள். முந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் ஜெர்மானிய சமூக-ஜன நாயகக் கட்சிக்கும் கிடைத்த மொத்த வாக்குகளைக் காட்டிலும் இவை அதிகமாய் இருந்தன.

தேல்மன் இந்த இயக்கத்தை உயர்வாக மதிப்பிட்டார். இது பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தைப் பலப்படுத்தி இருக்கிறது என்றும் பூர்ஷ்வாக் கட்சிகளுடன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தொடர்புகளைப் பலவீனப்படுத்தி இருக்கிறது என்றும் கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சியை ஆதரிக்கும்படி ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியைக் கட்டாயப்படுத்தி விட்டது என்றும் அவர் சொன்னார். சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுக்கும் கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களுக்கும் நடுவே வெகு காலமாக இருந்து வந்த வலிய சுவர், தொழில் நிலையங்களில் ஒற்றுமைக் கமிட்டிகள் அமைக்கப்பட்டதன் மூலம் தகர்க்கப்பட்டுவிட்டது.[1] ஆயினும், சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர்கள், தொழிலாளர் இயக்கத்தைப் பிளவுபடுத்தும் போக்கை முன்போலவே கடைப்பிடித்து வந்தார்கள்.

இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டில் பாசிஸ்டு சர்வாதிகாரத்துக்கு எதிராக எல்லா ஜனநாயகச் சக்திகளையும் ஒன்று திரட்ட மும்முரமாக முயன்று வந்தது. தனது மூன்றாவது காங்கிரசில் (1926, ஜனவரி) இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி இத்தாலிய சமூகத்தின் வர்க்க முரண்பாடுகளை ஆழ்ந்து பகுத்தாராய்ந்தது. பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியில் தீர்க்கப்படாத தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பைத் தொழிலாளி வர்க்கம் தன் கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அது தெளிவாகக் கூறியது. கட்சி பாட்டாளி வர்க்கத்தையும் அதன் கூட்டாளிகளையும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ''அம்சரீதியான போராட்டங்களின் முழுத் தொடரின் வழியே''[2] இட்டுச் செல்ல வேண்டும் என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது. இவை பொருளாதாரத் தன்மை மட்டும் இன்றி வேறு தன்மைகளும் கொண்டிருக்கலாம். தனது நடவடிக்கையைச் சுளுவாக்கும் நோக்கத்துடன் கட்சி ''பொது

---

[1] பார்க்க: எ. தேல்மன், பொறுக்கி எடுத்த கட்டுரைகளும் சொற்பொழிவுகளும். தொகுதி 1, 1919-1928; மாஸ்கோ, 1957, பக்கம் 235.

[2] இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முப்பதாண்டு வாழ்வும் போராட்டமும். மாஸ்கோ, 1953, பக்கம் 235.

அரசியல் பிரச்சினைகளுக்கு சமரசத் தன்மை கொண்ட இடைக் காலத் தீர்வுகளைப் பிரேரித்து அவற்றுக்காக வெகுஜனங்க ளிடையே கிளர்ச்சி நடத்தலாம்''.[1] இதன் தொடர்பில், பாசிஸ்டுச் சட்டங்களுக்கும் முடியரசுக்கும் எதிராகவும் உழைப்பாளி களுக்கு ஜனநாயக சுதந்திரங்கள் பெறும் பொருட்டும் நிலச் சீர்திருத்தத்துக்காகவும் பிறவற்றுக்காகவும் போராடுவது என்ற கோஷத்தின்பால் தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச அளவில் தொழிலாளி வர்க்கத்தின் நடவடிக்கை ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கம்யூனிஸ்டு அகிலமும் தொழிற்சங்க அகிலமும் கடைப்பிடித்த கொள்கைப் போக்கின் விளைவாக, பல்வேறு போக்குகள் கொண்ட தொழிற்சங்க மையங் களுக்கிடையே, உதாரணமாக, சோவியத் யூனியன் தொழிற் சங்கங்களுக்கும் முதலாளித்துவ நாடுகளின் தொழிற்சங்கங் களுக்கும் இடையே, தொடர்புகள் வலுப்பட்டன. 1925ம் ஆண்டு வசந்தத்தில், பிரிட்டிஷ்-சோவியத் தொழிற்சங்க ஒற்றுமைக் கமிட்டி (ஆங்கில-ருஷ்யக் கமிட்டி) அமைக்கப்பட்டது. இது உரு வாவதில் ''சிறுபான்மையினர் இயக்கம்'' பெருத்த பங்கு ஆற்றி யது. அதன் வற்புறுத்தல் காரணமாகவே பிரிட்டிஷ் தொழிற்சங் கங்களின் தலைவர்கள் இந்தச் செயலுக்கு இசைந்தார்கள். சோவி யத் தொழிற்சங்கங்களுக்கும் பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களுக்கும் இடையே தொடர்புகளை விரிவுபடுத்துவது, மூலதனத்தின் தாக்கு தலுக்கும் சோவியத் எதிர்ப்பு யுத்தத்துக்கும் எதிரான சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காக அவை கூட்டாக நட வடிக்கைகள் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்வது ஆகிய வற்றைத் தனது பணியாகக் கமிட்டி வைத்துக் கொண்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஆறாவது விரிவாக் கப்பட்ட முழுக் கூட்டம் (1926, பிப்ரவரி 17—மார்ச்சு 15), ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தின் முக்கியத்துவத்தை மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியது. சமூக-ஜனநாயகத் தொழி லாளர்களுடன் ஒத்துழைப்பதன் அவசியத்தை அது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குப் பின்னும் ஒரு முறை அறிவுறுத்தியது. பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒத்துழைப்பதையும் கூட்டணி அரசாங்கங்களில் மேற்கொண்டு பங்கு கொள்வதையும் எதிர்த்த சமூக-ஜனநாயகத் தின் இடதுசாரிப் பிரதிநிதிகள், சமரசவாதக் கொகைமீது தொழி

[1] அதே நூல், பக்கம் 248.

லாளி சமூக-ஜனநாயகவாதிகளுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை, மிதமான அளவில்தான் என்ருலும், வெளியிட்டார்கள் என்றது முழுக் கூட்டம். ''ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கொண்டிருக்கும் இந்த நேர்மையுள்ள விருப்பத்தைக் கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் உறுதியாகவும் உளமாரவும் வரவேற்க வேண்டும்''[1] என்று முழுக் கூட்டத்தின் தீர்மானம் கூறியது.

தொழிலாளர் இயக்கத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஒன்றிணைப்பதற்கான முக்கிய நடவடிக்கை என்ற வகையில் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளுடன் செயல் ஒற்றுமை ஏற்படுத்துவது இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டு அகிலம் கருதியது. தொழிலாளி வர்க்கத்தினுடையவும் எல்லா உழைப்பாளிகளுடையவும் அதிகத்திலும் அதிக விரிவான வட்டாரங்களை மூலதனத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதும், சீர்திருத்தவாதத் தலைவர்களின் ஒத்திசைவின்மையையும் உறுதியின்மையையும் ஊசலாட்டத்தையும் வர்க்கப் போராட்டங்களின் போது வெகுஜனங்களுக்குக் காட்டுவதும் இதன் மூலம் சாத்தியம் ஆகும் என்று அது எண்ணியது.

தொழிற்சங்கங்களின் இடதுசாரி நபர்களுக்கு உதவுவது, தொழிலாளி வர்க்கச் சக்திகளை ஒன்றுபடுத்த அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தை ஆதரிப்பது, ஒவ்வொரு தனி நாட்டிலும் தொழிற்சங்கங்களின் ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்தவும் தொழிற்சங்கங்களின் ஒன்றித்த அகிலத்தை அமைக்கவும் போராடுவது ஆகியவை ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை அமுலாக்குவதற்கான முக்கிய சாதனங்கள் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கருதியது. சீர்திருத்தவாத மனப்போக்குள்ள தொழிலாளர்களால் ஏற்க முடியாத கோரிக்கைகளைக் கூட்டு நடவடிக்கைகளுக்கு நிபந்தனையாக வைக்கக் கூடாது என்றும் செயற்குழு அறிவுறுத்தியது. அதே சமயம், கம்யூனிஸ்டுக் கிளர்ச்சிக்கான சுதந்திரத்தை மறுப்பது ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல என்று செயற்குழு கருதியது. ''ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம், தொழிலாளர்களின் கூட்டு நடவடிக்கையை முதன்மையாக அடிப்படையாகக் கொண்டது. ஆனால் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் இத்துடன் தீர்ந்து போய்விடவில்லை. சாதகமான சூழ்நிலை இருக்கும்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 544.

போது, சில அரைப்பாட்டாளி, குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களை ஈர்க்கக் கூடிய அம்சரீதியான கோரிக்கைகளைக் கம்யூனிஸ்டுகள் முன்வைக்க வேண்டும்''[1] என்று சுட்டிக் காட்டியது கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு.

ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை ''முன் ஒரு போதும் இல்லாத அளவு பெருத்த சக்தியுடன்'' கையாளப் போவதாகக் கம்யூனிஸ்டு அகிலம் அறிவித்தது. ''அதாவது, சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படக் கூடிய மிக முக்கியமான எல்லா அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளிலும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகக் கூட்டான போராட்டம், ஒன்று சேர்ந்த நடவடிக்கை நடத்தும் யோசனையை சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுக்கும் (கட்சிச் சார்பு அற்றவர்களுக்கும்) அது விடுக்கும்.''[2]

''ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம், தலைவர்களின் துரோகத்தை அம்பலப்படுத்துவதாக மட்டும் இருந்துவிடக் கூடாது. ஸ்தாபன அமைப்பு பெறாத வெகுஜனங்களுக்கும் அவர்களுடைய சர்வ சாதாரணமான உடனடிக் கோரிக்கைகளின் நிறைவேற்றத்துக்காக அவர்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கு நாம் தயாராய் இருப்பதை அது காட்ட வேண்டும்''[3] என்று பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளுக்கு அளித்த யோசனைகளில் கூறப்பட்டது. ''கம்யூனிஸ்டுக் கட்சிகளை மிக மிகக் கவனமாகப் பேணி வளர்ப்பது, அவற்றின் அரசியல் பயிற்சி, உரம், ஸ்தாபன ஒற்றுமை, கொள்கைவாத நிலையுறுதி, புரட்சித் திடம், வெகுஜனங்களை அணுகும் திறன் ஆகியவற்றை மேம்படுத்தப் பாடுபடுவது—இவையே அடுத்து வரும் ஆண்டுகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் மிக முக்கியமான பணி ஆகும்''[4] என்று முழுக்கூட்டம் தன் தீர்மானங்களில் சுட்டிக் காட்டியது. ''உலகத் தொழிலாளர்களே, உலகின் ஒடுக்கப்பட்ட மக்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற கோஷத்தின் முக்கியத்துவத்தைச் செயற்குழு மீண்டும் வலியுறுத்தியது.

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 551.

[2] அதே நூல், பக்கங்கள் 542—543.

[3] அதே நூல், பக்கம் 596.

[4] அதே நூல், பக்கம் 547.

ஊழியர்களைப் பயிற்றுவதிலும் மார்க்சிய-லெனினியத்தைப் பரப்புவதிலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலை

சித்தாந்தத்திலும் அரசியலிலும் தேர்ச்சி பெற்ற கட்சி ஊழியர்களைப் பயிற்றுவது, கம்யூனிஸ்டுக் கட்சிகளை வலுப்படுத்துவதில் கம்யூனிஸ்டு அகிலத்தின் மிக முக்கியத் துறையாக இருந்தது. ஆயிரக் கணக்கான கம்யூனிஸ்டுகள் சர்வதேச லெனின் பள்ளி,[1] கிழக்கு நாட்டு உழைப்பாளிகளின் கம்யூனிஸ்டுப் பல்கலைக் கழகம், சுன் யாட்-சென் பல்கலைக் கழகம் ஆகிய கல்வி நிலையங்களில் பயிற்சி பெற்றார்கள். இந்தக் கல்வி நிலையங்கள், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது தலைமையில் இயங்கின. கிழக்கு நாட்டு உழைப்பாளிகளின் கம்யூனிஸ்டுப் பல்கலைக் கழகத்தில் சீனா, இந்தியா, அரபு நாடுகள், இந்தோனீசியா, இந்தோசீனம், மங்கோலியா, ஜப்பான், ஃபிலிப்பைன், லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றையும் உலகின் பிற நாடுகளையும் பிரதேசங்களையும் சேர்ந்த புரட்சியாளர்கள் பயின்றார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் கல்வி நிலையங்களில் பல்வேறு கம்யூனிஸ்டுக் கட்சிகளால் அனுப்பப் பட்டவர்கள் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தையும், கட்சி அமைப்பின் அடிப்படைகளையும், வெகுஜனங்களிடையே கிளர்ச்சியும் பிரசாரமும் நடத்தும் முறைகளையும் கற்றுத் தேர்ந்தார்கள், அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தில் இருந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஊக்கமுள்ள ஊழியர்கள் பலர், நடைமுறைப் போராட்ட அனுபவம் பெற்று, மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்திலும் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளிலும் தேர்ச்சி அடைந்து, உழைப்பாளி வெகுஜனங்களின் உண்மையான தலைவர்கள் ஆனார்கள்.

விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் ஸ்தாபகர்களது நூல்களைக் கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் அச்சிட்டு விரிவாகப் பரப்பின. கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு மார்க்சிய-லெனினியப் பயிற்சியால் உரமேற்றுவதில் இந்தச் செயல் மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு, கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்ற

---

[1] 1926ல் நிறுவப்பட்ட இந்தக் கல்வி நிலையம், 1928வரை சர்வதேச லெனின் வகுப்புக்கள் என்று அழைக்கப்பட்டு வந்தது.

வாய்ப்புக்கள் இருந்த எல்லா இடங்களிலும் பிரசுரிக்கப்பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சிகள் சட்ட விரோதம் ஆக்கப்பட்டிருந்த நாடு களில் கம்யூனிஸ்டுகள் இந்த நூல்களை மறைமுக அச்சகங்களில் பதிப்பித்து, புனைபெயர்களின் கீழ் இவற்றை வெளியிட்டார்கள். அயல் நாடுகளில் அவை பிரசுரமாகும்படி ஏற்பாடு செய்து இரகசி யமாகத் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு வந்தார்கள். கம்யூனிஸ் டுக் கட்சிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் நூல்களையும் துண்டுப் பிர சுரங்களையும் பரப்பின. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோ ரின் படைப்புக்களும், கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தீர்மானங்களும் கடிதங்களும் வேண்டுகோள்களும், அதன் கூட்டங் களின் சுருக்கெழுத்து விவரங்களும், கம்யூனிஸ்டு அகிலத்தின் தலை வர்களுடைய சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் இவற்றில் இருந்தன. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தகவல் அறிக்கை (''இன்பிரிகோர்'') பல மொழிகளில் வெளியாயிற்று. 1929 வரை கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரசுரங்கள் மொத்தம் 38 நாடுகளில் 40 மொழிகளில் வெளியிடப்பட்டன.[1]

வி.இ.லெனினுடைய பொறுக்கி எடுத்த நூல்களின் தொகுப்பை அயல் மொழிகளில் வெளியிடுவது என்று கம்யூனிஸ்டு அகிலத் தினது செயற்குழுவின் தலைமைக்குழு 1924, ஜனவரி 22ந் தேதி முடிவு செய்தது.[2] விரைவில் லெனினுடைய நூல்கள் ஜெர்மன், ஆங்கில, பிரெஞ்சு, ஸ்பானிய, இத்தாலிய, நார்வே, ஜப்பானிய, போலிஷ், ஃபின் மொழிகளிலும் பிற மொழி களிலும் வெளிவந்தன. 1929க்கு முன் ஆஸ்திரியாவில் லெனி னுடைய படைப்புக்களின் 15தனிப் பதிப்புக்கள் வெளியாயின. பிரிட்டனில் இவற்றின் 29 பதிப்புக்களும், ஹங்கேரியில் 16ம், ஜெர்மனியில் 82ம், இத்தாலியில் 13ம், அமெரிக்க ஐக்கிய நாடு களில் 18ம், செக்கோஸ்லோவாக்கியாவில் 22 பதிப்புக்களும் பிற நாடுகளில் பல பதிப்புக்களும் வெளிவந்தன. 1927 முதல் கம்யூ னிஸ்டு அகிலம் வி.இ. லெனின் ஆராய்ச்சிக் கல்லூரியின் ஒத்து ழைப்புடன் ஜெர்மன், ஆங்கில, பிரெஞ்சு மொழிகளில் லெனி னுடைய நூல் திரட்டை வெளியிடத் தொடங்கியது. ''ஏகாதிபத்தி யம், முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'', ''அரசும் புரட்சியும்,'' ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் கொள்கைமாறி காவுத்ஸ்கியும்'',

---

[1] மை. ஆ. கூ., 495/78/58.

[2] மை. ஆ. கூ., 495/2/27/1.

''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'', ''சோவியத் ஆட்சியின் அடுத்த பணிகள்'' என்னும் லெனினுடைய நூல்களும் கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசு களில் அவர் ஆற்றிய உரைகளும் இன்னும் பலவும் இந்த ஆண்டு களில் சிறப்பாக அடிக்கடி வெளியிடப்பட்டன. லெனின் மரபுச் சொத்தாக விட்டுச் சென்ற கருத்துச் செல்வம் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயலுக்கு முதன்மை வழிகாட்டி ஆயிற்று. தொழி லாளர்கள், விவசாயிகள், முற்போக்கு அறிவுஜீவிகள் ஆகியோ ரிடையே லெனினுடைய நூல்களைப் பரப்பியது கம்யூனிஸ்டு அகிலத் தின் மிக முக்கியமான வரலாற்றுச் சிறப்புள்ள தொண்டு ஆயிற்று.

கம்யூனிஸ்டு அகிலமும் புதிய நிலைமைகளில் உலகப் புரட்சி இயக்க வளர்ச்சியின் பிரச்சினைகளும். திரோத்ஸ்கிவாதத்தின் படு தோல்வி

சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்தின் வரலாற்று முக்கியத்துவம். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம்

வர்க்கப் போராட்டத்தின் போது கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் பற்பல சிக்கலான அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இன்றியமையாததாக இருந்தது. இதோடு கூடவே, மாறிய நிலைமைகளுக்கு ஏற்பப் போர்த்தந்திரத்தையும் செயல் தந்திரத்தையும் ஸ்தூலப்படுத்தும் தேவை இருபதுக்களின் பிற் பாதியில் ஏற்பட்டது. முதலாளித்துவ முற்றுகைக்கு உள்ளாகி இருந்த ஒரு நாட்டில் சோஷலிஸத்தை நிருமிப்பதற்கான வருங்கால வாய்ப்புக்கள் யாவை, உலகப் புரட்சி இயக்கத்தில் அந்த நாட்டின் பாத்திரம் யாது என்ற பிரச்சினைகள் தனிப்பட்ட கூர்மையுடன் எழுந்தன.

இந்தப் பிரச்சினைகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி யின் கொள்கைக்கு மட்டும் இன்றி, கம்யூனிஸ்டு அகிலம் அனைத் தினதும் கொள்கைக்கு முதற்படி முக்கியத்துவம் உள்ளதாக இருந்தது. இந்த எல்லா அடிப்படைப் பிரச்சினைகளும் தெளிவு படுவது பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துக்குரிய திண்ண மான பணிகளைச் சரியாக முடிவு செய்வதற்கு ஜீவாதார முக்கியத்து வம் கொண்டிருந்தது.

சோவியத் யூனியன் முதலாளித்துவ முற்றுகையின் கடினமான நிலைமைகளில் இருந்தாலும் அதில் சோஷலிஸத்தை வெற்றிகரமாக நிறுவுவது முற்றிலும் சாத்தியமே என்ற லெனினது கருத்தை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி உறுதியாகக் கடைப் பிடித்தது. அளவு கடந்து பெரியவையான சமுதாய-பொருளா தாரப் பணிகள் கொண்ட இந்த நிர்மாணம் 'தேசிய வரம்புகளுக் குள்' அடைபட்டுக் கிடப்பது அல்ல, உலகப் புரட்சி வளர்ச்சியில் சோவியத் யூனியனின் பாத்திரம் குறைந்துவிட்டதாக அதற்கு

அர்த்தம் அல்ல. மாறாக, இது உலகப் புரட்சியின் விறல் மிக்க காரணியாக விளங்குகிறது. சோஷலிஸக் கட்டுமானத்தின் பொருட்டு சோவியத் யூனியனின் தொழிலாளி வர்க்கத்தினது போராட்டம் சோவியத் நாட்டின் உள் விவகாரமாக மட்டும் இருக்கவில்லை, மாபெரும் சர்வதேசக் கடமையின் நிறைவேற்ற மாக, உலகு அனைத்திலும் நடந்த புரட்சிப் போராட்டங்களின் மிக முக்கிய முனைமுகமாக விளங்கியது.

கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிக்கும் எதிர்ப்பட்டிருந்த செயல்திட்டம், செயல்தந்திரம் சம்பந்தமான பிரச்சினைகளை ஸ்தூலப்படுத்துவது, இன்னொரு காரணத்தாலும் ஜீவாதார முக்கியத்துவம் உள்ளதும் உடனடியானதும் ஆயிற்று: 1926ம் ஆண்டுக் கோடையில் திரோத் ஸ்கிவாதிகளாலும் ''புதிய எதிர்த்தரப்பாலும்'' நிறுவப்பட்ட ஒன்றித்த லெனின்விரோத, கட்சிவிரோதக் கூட்டணி, கம்யூ னிஸ்டு அகிலத்தினதும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷி விக்) கட்சியினதும் பொதுக் கொள்கைப் போக்கைத் தாக்கியது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் செயல்திட்டத் தீர்மானங்கள் பற்றியும் ஸ்தூலமான அரசியல் பிரச்சினைகள் பற்றியும், உதாரணமாக பிரிட்டிஷ், சீனப் பிரச்சினைகள் பற்றியும், திரோத்ஸ்கிவாதிகள் தங்கள் கொள்கைத் திட்டத்தைப் பிரசாரம் செய்தார்கள்.

1926, மே மாதம், பிரிட்டனில் பொது வேலைநிறுத்தம் நடந் தது. முதலாளித்துவத்தின் தாற்காலிக நிலைப்பாடு நிகழ்ந்த ஆண்டுகளில் ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் நடத்திய மிகப் பெரிய, நிர்ணயகரமான வெகுஜனப் போராட்டம் இது. பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிற்சங்கங்களில் இருந்த ''சிறுபான்மையோர் இயக்கமும்'' இந்த வேலைநிறுத்தத்தை ஒழுங்கமைப்பதில் ஊக்கத்துடன் பங்காற்றின.[1]

---

[1] பொது வேலைநிறுத்தம் உச்ச கட்டத்தில் இருந்தபோது அதில் சுமார் 40 லட்சம் பெயர் பங்கு கொண்டார்கள். வேலை நிறுத்தத்தைத் தொடங்கி வைத்தவர்கள் சுரங்கத் தொழிலாளர் கள். தொழிலாளர்களால் நிறுவப்பட்ட வேலைநிறுத்தக் கமிட்டி களும் ''போராட்ட சபைகளும்'' பொது வேலைநிறுத்தத்தின் போது அவ்விடங்களில் அதிகார உறுப்புக்களின் பொறுப்புக் களை ஏற்றுக் கொண்டன. ஆயினும் தொழிற்சங்கங்களின் பொதுச் சபையினது சமரசம் செய்துகொள்ளும் கொள்கையின் விளைவாக வேலைநிறுத்தம் தனது பொதுத் தன்மையை இழந்து விட்டது. சுரங்கத் தொழிலாளர்கள் நவம்பர் இறுதிவரை

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பிரிட்டனில் மோதல் வளர்ந்துவந்ததைப் பகுத்தாய்ந்து, பிரிட்டிஷ் தொழிலாளர்களுடன் விரிவான ஒருமைப்பாட்டு இயக்கத்தை ஒழுங்கமைத்து நடத்தும்படி சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தை அறைகூவி அழைத்தது. ஏப்ரல் 23ந் தேதி செயற்குழுவின் தலைமைக்குழு ஓர் அறிக்கை வெளியிட்டது. அனேக நாடுகளின் சுரங்கத் தொழிலாளர்களிடையே ஒன்றித்த கூட்டணியும் ஆம்ஸ்டர்டாம் அகிலம், சிவப்புத் தொழிற்சங்க அகிலம் ஆகியவற்றுக்கிடையே செயல் ஒற்றுமையும் ஏற்படுவதன் இன்றியமையாமையை அறிக்கை வலியுறுத்தியது. ''உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசப் போராட்ட ஒருமைப்பாட்டை என்ன ஆயினும், எந்த விதமான நிலைமைகளிலும் ஏற்படுத்த நாம் முயன்று வருகிறோம். இந்த ஒருமைப்பாட்டின் பொருட்டு'', புரட்சி ஸ்தாபனங்களுக்கும் சீர்திருத்தவாத ஸ்தாபனங்களுக்கும் இடையில் உள்ள கருத்து வேற்றுமைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடுவது இன்றியமையாதது ஆகும் என்று கம்யூனிஸ்டு அகிலம் மீண்டும் கூறியது.[1] ஆயினும் சீர்திருத்தவாத ஸ்தாபனங்களின் தலைவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் யோசனைகளைப் புறக்கணித்தார்கள். தொழிற்சங்கங்களின் பொதுச் சபையினுடையவும் தொழிற்கட்சியினுடையவும் வலதுசாரிச் சீர்திருத்தவாதத் தலைவர்கள் பிரிட்டிஷ் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அளித்த நேர்முக உதவி பொது வேலைநிறுத்தம் தோல்வி அடைந்ததற்கு ஒரு மிக முக்கியக் காரணம் ஆகும். சோவியத் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தங்களையும் சுரங்கத் தொழிலாளர்களுக்கு உதவுவதையும் பற்றி விவாதிக்கும் பொருட்டு பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டும்படி வற்புறுத்தின. தொழிற்சங்கங்களின் பொதுச் சபை இந்தக் கூட்டம் கூடுவதற்கு எல்லா வகையிலும் முட்டுக்கட்டை போட்டது.

பிரிட்டனில் பொது வேலைநிறுத்தத்தின் தோல்விக்குப் பின் சுரங்கத் தொழிலாளர்கள் மட்டுமே வேலைநிறுத்தப் போராட்டத்தை விடாப்பிடியாகத் தொடர்ந்து நடத்தினார்கள். திரோத்ஸ்கி

போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். பிறகு அவர்களும் வேலைநிறுத்தத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. சோவியத் யூனியனின் உழைப்பாளிகள் பிரிட்டிஷ் தொழிலாளர்களுக்குப் பெருத்த பொருளுதவி அளித்து உற்சாகமூட்டினார்கள்.

[1] மை. ஆ. கூ., 495/2/55/106.

வாத எதிர்த்தரப்பினர் பொது வேலைநிறுத்தத்தின் இந்தத் தோல்வியைத் தங்கள் உட்குழுவின் நலன்களுக்காகவும், ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை எதிர்த்துப் போராடும் நோக்கத்திற்காகவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியையும் அதன் கொள்கையையும் இகழ்வதற்காகவும் பயன்படுத்த முயன்றார்கள். பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டி விஷயத்தில் கம்யூனிஸ்டு அகிலமும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியும் கடைப்பிடித்த கொள்கையை எதிர்த்தரப்பினர் வன்மம் நிறைந்த தாக்குதலுக்கு உள்ளாக்கினார்கள்.

பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டியில் இருந்த சோவியத் யூனியன் மையத் தொழிற்சங்கப் பிரதிநிதிக் குழுவுக்கு 1926 ஜூலையில் ஓர் ஆணைக் குறிப்பு அனுப்பப்பட்டது. ''பிளவு ஏற்படாமல் தவிர்ப்பதற்கு முடிந்தவரை பாடுபடுவது, வேலைநிறுத்தம் செய்திருக்கும் சுரங்கத் தொழிலாளர்களுக்கு எல்லா வித உதவியும் அளிக்கும் காரியத்தில் கமிட்டியின் பிரிட்டிஷ் உறுப்பினர்களை எப்படியாவது முயன்று ஈடுபடுத்துவது...''[1] என்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கைப் போக்கைக் கடைப்பிடிக்கும்படி இதில் கூறப்பட்டிருந்தது. எதிர்த்தரப்பினரோ, சாராம்சத்தில் பிரிட்டிஷ் தொழிற்சங்கச் சடங்குவாதிகளின் நலன்களுக்கு உகந்த கொள்கையை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மீதும் கம்யூனிஸ்டு அகிலத்தின் மீதும் சுமத்த முயன்றார்கள். ஸினோவியெவ் சோவியத் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் போலிட்பியூரோவுக்கு அனுப்பிய ஆய்வுரையில், சோவியத் தொழிற்சங்கங்கள் பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டியிலிருந்து தாமதமின்றி வெளியேறிவிட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கி இருந்தது. முதலாளித்துவத்தின் நிலைப்பாடு முடிந்துவிட்டது, அல்லது இறுதி நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறது என்றும், முதலாளித்துவ அமைப்பு புரட்சி வெடியதிர்ச்சிகளின் கட்டத்தில் பிரவேசித்துக் கொண்டிருக்கிறது என்றும், எனவே, சக்திகளைத் திரட்டும் செயல்தந்திரம் பின்னுக்குப் போய்விடுகிறது என்றும் ஸினோவியெவ் நினைத்தார். ஸினோவியெவைத் தொடர்ந்து திரோத்ஸ்கியும் காமினெவும் பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டியிலிருந்து வெளியேறும் கோரிக்கையை முன்வைத்தார்கள். பொதுச் சபையின் இடதுசாரியை முக்கியத் தாக்குக்கு இலக்கு ஆக்கும்படி அவர்கள்

[1] மை. ஆ. கூ., 17/13/576.

யோசனை கூறினர்கள். சோவியத் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் போலிட்பியூரோ, ஸினேவியெவின் ஆய்வுரையையும் காமினெவ், திரோத்ஸ்கி இருவரதும் யோசனைகளையும் நிராகரித்து விட்டது.

ஜூன் 8ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு பிரிட்டிஷ் வேலைநிறுத்தத்தின் படிப்பினைகள் பற்றிய ஆய்வுரையை உறுதிப்படுத்தியது. உலக நிலைமை பற்றி, இது முதலாளித்துவத்தின் ஒப்புநோக்கான, தாற்காலிக நிலைப்பாடு நிகழும் காலப்பகுதி என்று கம்யூனிஸ்டு அகிலம் தந்த மதிப்பீடு சரியானது என்பதை வேலைநிறுத்தம் காட்டிவிட்டது என்று தலைமைக் குழு கூறியது. பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் சீர்திருத்தவாதத் தலைவர்களின் துரோகத்தை ஆய்வுரை கடுமையாக விளாசியது. "தொழிலாளர் இயக்கத்தில் சந்தாப்பவாதத்தை ஒழிக்காவிட்டால் முதலாளித்துவ ஆட்சியை ஒழிப்பதும் சாத்தியம் ஆகாது" என்று அது சுட்டிக் காட்டியது. அத்துடன் "சோவியத் தொழிற்சங்கங்கள் தாமாகவே வெளியேறுவது... பெருத்த 'வீரமுள்ள' சைகையாக இருக்கும், ஆனல் அரசியல் நோக்கில் அது சிறு பிள்ளைத்தனமாகவும் நோக்கப் பொருத்தம் அற்றதாகவும் இருக்கும்"[1] என்று ஆய்வுரை கூறியது. பிரிட்டிஷ் வேலைநிறுத்தம் பற்றிய டி. பெல்லின் உரை மீது விவாதம் நடத்துவதற்காகக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக் குழுவின் கூட்டம், மே 7ந் தேதி கூடியது. சீர்திருத்தவாதிகளின் இடதுசாரி, பிரிட்டனில் "ஆகப் பெரிய பகைவன்" ஆகிவிட்டது என்று ஸினேவியெவ் செய்த முடிவைக் கூட்டம் நிராகரித்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி, மத்திய கண்காணிப்புக் கமிஷன் ஆகியவற்றின் ஒன்றித்த முழுக் கூட்டம் ஜூலையில் நடந்தது (முழுக் கூட்ட நடவடிக்கைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக்

---

[1] "பிராவ்தா," 1926, ஜூன் 9. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டி, மத்திய கண்காணிப்புக் கமிஷன் ஆகியவற்றின் ஒன்றித்த முழுக் கூட்டத்தில் மனுயீல்ஸ்கி பேசினர். எதிர்தரப்பினரை நோக்கி, அவர்களுடைய பிரிவுவாதக் செயல்தந்திரத்தைக் கருத்தில் கொண்டு அவர் கூறினர் :"உங்களுடைய கதவடைப்பு, தொழிற்சங்க ஒற்றுமை என்னும் கருத்துக்குக் கதவு அடைப்பதாகும்." (மை. ஆ. கூ., 17/2/246/1/24.)

குழுவின் உறுப்பினர்கள் பங்கு கொண்டார்கள்). ப. தளியாத்தி கூட்டத்தில் பேசுகையில் தொழிற்சங்க ஒற்றுமைக் கொள்கை பற்றிய செயற்குழுத் தலைமைக் குழுவின் போக்கை வெளியிட்டார். அவர் கூறினர்: ''பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டி என்பது என்ன? நமது ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்திற்கான சாதனம் இது. வெகுஜனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்காக நாம் பெற்றுள்ள சாதனம் இது... பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டி தலைவர்களின் கூட்டணியாக இருந்ததா? சந்தேகமின்றி, பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டியில் இந்த அம்சமும் இருந்தது. நமது ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தில் இந்த வகையான அம்சம் ஏதாவது ஓர் அளவில் எப்போதும் இருந்து வருகிறது. வெகுஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் பொருட்டு நாம் கையாளும் முறை ஆகும் இது. அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இது நமக்கு உதவுகிறது... ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கீழிருந்து மட்டும் அல்ல, மேலிருந்தும் நாம் இன்னும் பயன்படுத்த வேண்டும். வெகுஜனங்களை நம் பக்கம் ஈர்க்கும் பொருட்டு, நாம் தலைவர்களின் அருகே இன்னும் நிற்பது கட்டாயமாய் இருக்கிறது''. பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டியிலிருந்து வெளியேறுவது பிரான்சில் தொழிற்சங்க ஒற்றுமைச் செயல் தந்திரத்தையும் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி கடைப்பிடித்து வரும் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தையும் குலைக்கும். ''சுருங்கச் சொன்னல், இது கம்யூனிஸ்டு அகிலம் முழுவதிலும் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது ஆகும்''[1]

1926, மே மாதம் ஸினோவியெவ் இன்னும் ஒரு பிரிவுவாதக் கருத்தை முன்வைத்தார். சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு குவோமிந்தானிலிருந்து வெளியேறிவிடுமாறு ஆணைக் குறிப்பு அனுப்பும்படி அவர் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கு யோசனை கூறினர். இந்த யோசனை ''சீனவில் புரட்சி இயக்கத்துக்கு முடிவு கட்டுவதாகும்''[2] என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் போலிட்பியூரோ சரியாக மதிப்பிட்டது. தேசிய-காலனிப் பிரச்சினையில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் நடைமுறைக் கொள்கைப் போக்கு, அதன்

---

[1] மை. ஆ. கூ., *17/2/246/1/81-82.*

[2] மை. ஆ. கூ., *558/1/5297/1.*

ஆருவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தின் தீர்மானங்களுக்கு இணங்கக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இதன் செயல்தந்திரப் போக்கு—ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் பற்றிய தீர்மானம்—சர்வப் பொதுவான, உலகு பரவிய முக்கியத்துவம் கொண்டிருந்தது. கிழக்கு நாடுகளில் இது காலனிகளுக்கும் அரைக் காலனிகளுக்கும் ஏற்ற தனிப்பட்ட வடிவில், அதாவது, எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றுபடுத்தும் கொள்கையாகச் செயல்பட்டது.

திரோத்ஸ்கி-ஸினோவியெவ் எதிர்த்தரப்பு கம்யூனிஸ்டு அகிலத்தின் பொதுக் கொள்கைப் போக்கை எதிர்த்தது. உலகப் புரட்சி நிகழ்முறையின் வளர்ச்சியினது வருங்கால வாய்ப்புகள் பற்றிய அதன் முக்கிய மதிப்பீடுகளையும் முடிவுகளையும் புனராலோசனை செய்யும்படி அது கோரியது. ஒரு நாட்டில் சோஷலிஸம் நிறுவப் பட முடியுமா என்னும் பிரச்சினை பற்றியே எதிர்த்தரப்புடன் போராட்டம் முக்கியமாக நடந்தது.

திரோத்ஸ்கியும் ஸினோவியெவும் சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்துக்கு இருந்த இடர்ப்பாடுகளை மேடைப் பிரசங்க முறையில் சுட்டிக் காட்டி, ஒரு நாட்டில் சோஷலிஸம் வெற்றி பெற முடியும் என்ற லெனினது முடிவை வெளிப்படையாக எதிர்த்தார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கும் விவசாயிகளுக்கும் மோதல் ஏற்படுவது ''தவிர்க்க முடியாதது'' என்று நிரூபிக்க முயன்ருர்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வீழ்ச்சி அடையும் என்று குறி சொன்ஞர்கள். பதினைந்தாவது கட்சி மகா நாடு அவர்களை உறுதியாக எதிர்த்துத் தோற்கடித்தது. ஆயினும் திரோத்ஸ்கிவாத எதிர்த்தரப்பு தனது உட்குழு நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. சர்வதேச அளவில் லெனின் விரோதக் கூட்டணியை உருவாக்க அது முயன்றது.

''தற்போது கம்யூனிஸ்டு அகிலத்தில் சர்வதேச உட்குழு உருவாகிவருகிறது'' என்று திமீத்ரொவ் அப்போது முழு ஆதாரத்துடன் கூறினர். எனவே அதற்கு எதிரான போராட்டமும் சர்வதேசத் தன்மை கொண்டிருக்க வேண்டும். இது ''கம்யூனிஸ்டு அகிலம் நிலவுவதற்கான போராட்டம் ஆகும்''[1] என்ருர் அவர்.

மேற்கு நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் ''நேர்முகமான அரசு ஆதரவு'' இல்லாமல் சோவியத் யூனியனில் சோஷ

---

[1] மை. ஆ. கூ., 495/2/63/42.

லிஸத்தை நிறுவுவது சாத்தியம் என்பதைத் திரோத்ஸ்கிவாதம் மறுத்தது. சோவியத் யூனியனில் சோஷலிஸ சமூகத்தை நிறுவுவது உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்பை மறுப்பதாகும் என்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை மறப்பதாகும் என்றும் எதிர்த்தரப்பினர் வலிந்து அவதூறு கூறினர்கள். சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை நிறுவும் பணி உலகப் புரட்சி நிகழ்முறையை மேற்கொண்டு நடத்தும் பணியுடன் தொடர்பு உள்ளது என்பதை எதிர்த்தரப்பினர் பொது மக்களை ஏமாற்றும் பொருட்டுச் செயற்கையாக மறைத்து, இந்தப் பணிகள் ஒன்றுக்கொன்று முரணனவை என்று கதை கட்டினர்கள். நிரந்தரப் புரட்சி என்னும் திரோத்ஸ்கியின் சித்தாந்தமும், புரட்சியின் பூர்ஷ்வா-ஜனநாயகக் கட்டத்தைத் ''தாண்டிக் குதிப்பது'' எல்லா நாடுகளுக்கும் பொதுவான விதி என்ற கருத்தும், தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியம் ஏற்படுத்தி வலுப்படுத்தும் பணியை—லெனினது மிக முக்கியமான அறிவுரையை—புறக்கணிப்பதும் எதிர்த்தரப்பின் ''நம்பிக்கைச் சின்னமாக'' இருந்தது.

உலகப் பரிமாணத்தில் புரட்சியின் வெற்றிதான் சோவியத் நாட்டில் பாட்டாளி வர்க்க ஆட்சியை ''இழிநிலை அடைவதிலும் அழுகுவதிலும்'' இருந்து காப்பாற்ற முடியும் என்றும், ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, அரசியல் நசுக்குதல் காரணமாக சோஷலிஸப் பொருளாதாரம் வேறு வழியின்றி நொறுங்கிப் போகும், சோவியத் யூனியனில் முதலாளித்துவ உறவுகள் மீண்டும் ஏற்படுவதற்கு வழி திறந்து விடும் என்றும், எந்த முறையையேனும், யுத்தத்தை மூட்டிவிடும் முறையைக் கூட, கையாண்டு உலகப் புரட்சியைச் செயற்கையாகத் ''தூண்டிவிடுவதன்'' மூலம் இந்த இடர்களிலிருந்து வெளியேற வழி தேட வேண்டும் என்றும் திரோத்ஸ்கி வலிந்துரைத்தார். சோஷலிஸத்தை வெற்றிகரமாக நிறுவுவதற்கு வகை செய்யும் பொருட்டு சமாதானத்தை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டதும் உலகப் புரட்சி நிகழ்முறையினது வளர்ச்சியின் நலன்களுக்கு உகந்ததுமான சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கையைப் ''பிறழ்ச்சி'' என்று சித்திரித்தார் திரோத்ஸ்கி.

இத்தகைய வாதங்கள் குறித்து 1918ம் ஆண்டிலேயே லெனின் பின்வருமாறு எழுதி இருந்தது யாவரும் அறிந்ததே: ''சர்வதேசப் புரட்சியின் நலன்களுக்கு அதைத் தூண்டிவிடுவது தேவைப்படுவதாகவும் அத்தகைய தூண்டுதலாக விளங்கக் கூடியது யுத்தமே

அன்றிச் சமாதானம் அல்ல என்றும், சமாதானம் ஏகாதிபத்தியத்தை ஒரு வகையில் 'சட்டபூர்வம் ஆக்குவதாக' வெகுஜனங்கள் எண்ணும்படிச் செய்யும் என்றும் இவ்வாறு வாதிப்பவர்கள் ஒரு வேளை நினைக்கிறார்களோ? இத்தகைய 'சித்தாந்தம்' மார்க்சியத்துக்கு முற்றிலும் எதிரானது ஆகும். புரட்சிகளைத் 'தூண்டிவிடுவதை' மார்க்சியம் எப்போதும் மறுத்து வந்திருக்கிறது. புரட்சியைத் தோற்றுவிக்கும் வர்க்க முரண்பாடுகளின் கூர்மை முற்றும் அளவுக்கு ஏற்பப் புரட்சிகள் வளர்ச்சி அடையும். ஆயுதந்தாங்கிய கிளர்ச்சி எங்கும் எப்போதும் கட்டாயமானது என்று எண்ணுவது போன்றது இத்தகைய சித்தாந்தம். உண்மையில் சர்வதேசப் புரட்சியின் நலன்கள் கோருவது, நாட்டின் பூர்ஷ்வா வர்க்கத்தை வீழ்த்திவிட்ட சோவியத் ஆட்சி இந்தப் புரட்சிக்கு உதவ வேண்டும், ஆனால் உதவியின் வடிவத்தைத் தன் சக்திக்கு ஏற்பத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே"[1] லெனினுடைய இந்த முடிவுகளைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கைவிடுமாறு செய்யத் திரோத்ஸ்கிவாதிகள் முயன்றார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் அணிகளது ஒற்றுமை பற்றிய லெனினது கோட்பாடு எதிர்த்தரப்பினருக்குச் சிறப்பாக வெறுப்பு ஊட்டியது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி இந்தக் கோட்பாட்டின்படியே எதிர்த்தரப்பினரின் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடியது.

உலகப் புரட்சி நிகழ்முறையின் வளர்ச்சி வழிகளை மேற்கொண்டு நிர்ணயிப்பதிலும் சர்வதேச அளவில் திரோத்ஸ்கி-ஸினோவியெவ் வாதக் கூட்டணியை முறியடிப்பதிலும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவுபடுத்தப்பட்ட முழுக் கூட்டம் (1926, நவம்பர் 22 முதல் டிசம்பர் 16 வரை) பெரும் பங்கு ஆற்றியது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒருமனதான சங்கற்பத்தை இந்தக் கூட்டம் வெளியிட்டது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் உள் நிலைமை பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தில் இ. ஸ்தாலின் அறிக்கை சமர்ப்பித்தார். எதிர்த்தரப்புடன் போராடுவதற்குக் கட்சியின் சக்திகளை அணிதிரட்டும் முக்கியமான பொறுப்பு அவர்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 27, பக்கங்கள் 71-72.

மீதே சார்ந்திருந்தது. அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''எங்கள் கட்சியில் தற்போது உள்ள உடனடிப் பிரச்சினை, எங்கள் நாட்டில் சோஷலிஸத்தை நிறுவும் பிரச்சினை ஆகும். எங்களை, எங்கள் பொருளாதாரக் கட்டுமானத்தை, நிர்மாண முனைமுகத்தில் எங்கள் வெற்றிகளை உலகம் அனைத்தும் கவனித்துக் கொண்டிருக்கிறது என்று லெனின் கூறியது சரியே. ஆனால் இந்த முனைமுகத்தில் வெற்றிகள் பெறுவதற்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முக்கியக் கருவி ஆகிய எங்கள் கட்சி இந்தக் காரியத்துக்கு ஆயத்தமாய் இருப்பதும் இந்தப் பணியின் முக்கியத்துவத்தை உணர்வதும் எங்கள் நாட்டில் சோஷலிஸக் கட்டுமான வெற்றியின் நெம்புகோலாகப் பயன்பட வல்லதாய் இருப்பதும் இன்றியமையாதவை ஆகும்.''[1] ''சோவியத் யூனியன் பாட்டாளி வர்க்கத்தின் தேசியப் பணிகளும் சர்வதேசியப் பணிகளும் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவத்திலிருந்து விடுவிப்பது என்ற ஒரே பொதுப் பணியில் ஒன்று கலக்கின்றன'' என்றார் அறிக்கையாளர். அறிக்கையிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகளான ஸெமார், ஷ்மிரால், தளியாத்தி, தேல்மன், கொலாரவ், த்ஸேத்கின், ஸான் கத்தயாமா முதலியோரின் சொற்பொழிவுகளிலும் எதிர்த்தரப்பின் லெனின் விரோதக் கருத்துக்களும் அதன் பிளவுபடுத்தும் செயல்களும் கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்டன.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஆதரவு தங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை வீண் என்பதை எதிர்த்தரப்பினர் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தில் தெளிவாகக் கண்டு கொண்டார்கள். செயற்குழு முழுக் கூட்டத்தில் ருஷ்யப் பிரச்சினை மீது நடந்த விவாதம், திரோத்ஸ்கிவாதிகள் முழுமையாகத் தனிப்பட்டு விட்டதைக் காட்டியது. எதிர்த்தரப்பின் சித்தாந்த, ஸ்தாபன, செயல்தந்திரக் கொள்கைத் திட்டமும் அதன் செயல்களும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பகைவர்களுக்கே சாதகமாகப் பயன்படுகின்றன என்று கூறி முழுக் கூட்டத்தின் பிரதிநிதிகள் ஒருமுகமாக அவற்றைக் கண்டனம் செய்தார்கள். சோஷலிஸப் புரட்சி ஒரு நாட்டில் வெற்றி பெறுவது அசாத்தியம் என்ற

---

[1] இ. வி. ஸ்தாலின், நூல் திரட்டு, தொகுதி 9, பக்கம் 63.

திரோத்ஸ்கியின் கருத்தை முழுக் கூட்டம் வன்மையாகக் கண்டித்தது. ''சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியனிடம் முழுமையான சோஷலிஸ சமூகத்தைக் கட்டி அமைப்பதற்கு 'இன்றியமையாதவை எல்லாம் போதிய அளவு' நாட்டுக்கு உள்ளே இருக்கின்றன என்ற முழு நம்பிக்கையுடன் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி சோஷலிஸக் கட்டுமானக் கொள்கையை முற்றிலும் சரியாகக் கடைப்பிடிக்கிறது''[1] என்று முழுக் கூட்டம் சுட்டிக் காட்டியது. லெனினது கட்சி ''குறுகிய தேசிய மனப்பான்மை'' கொண்டிருக்கிறது என்ற எதிர்த்தரப்பினரின் குற்றச்சாட்டை முழுக் கூட்டத்தின் பிரதிநிதிகள் தங்கள் கட்சிகளின் சார்பில் கடுமையாக எதிர்த்தார்கள். சோவியத் யூனியனில் சோஷலிஸ சமூகத்தின் கட்டுமானத்துக்குத் தலைமை ஏற்று நடத்துவதன் வாயிலாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி சர்வதேசப் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்துக்கும், மக்கள் இனங்களின் தேசியவிடுதலைப் போராட்டத்துக்கும் கம்யூனிஸ்டுகளின் சர்வதேசப் பெரும் படைக்கும் மிகப் பெருத்த ஆதரவு அளித்து வருகிறது என்ற கருத்து முழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எல்லாச் சொற்பொழிவுகளிலும் இழையோடி இருந்தது.

முழுக் கூட்டத்தால் ஏற்கப்பட்ட தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''சோவியத் நாடு சர்வதேசப் புரட்சியின் முதன்மையான ஒழுங்கமைப்பு மையமாக எதார்த்தத்தில் விளங்குகிறது என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் நினைக்கிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி தனது முந்திய செயல்கள் எல்லாவற்றாலும் தன்னுடைய தற்போதைய செயல்கள் அனைத்தினாலும் தனது சர்வதேசியத்தைச் சொற்களில் இன்றிக் காரியத்தில் நிரூபித்து, இந்த சர்வதேசியத்தின் மாபெரும் ஆதர்சங்களைக் காட்டியுள்ளது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷவிக்) கட்சி குறுகிய தேசிய மனப்பாங்கு உள்ளது என்ற குற்றச்சாட்டு அவதூறு என்று விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் கருதுகிறது''.[2]

கம்யூனிஸ்டு அகிலத்தின் அணிகளது கொள்கைவாத, ஸ்தாபன

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 680.

[2] அதே நூல், அதே பக்கம்.

ஒற்றுமையைக் குலைப்பதற்கு எதிர்த்தரப்பினர் செய்துவரும் முயற்சிகளை எதிர்த்துத் திரோத்ஸ்கிவாதத்துடன் உறுதியாகப் போராடுவது கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாப் பிரிவுகளதும் கட்டாயக் கடமை என்று முழுக் கூட்டம் விதித்தது. ஏகாதிபத்திய அரசுகள் சோவியத் யூனியனை முற்றுகையிட முயன்றுவரும் சூழ் நிலையில் இந்தப் போராட்டம் சிறப்பாக இன்றியமையாதது என்று தீர்மானம் அழுத்திக் கூறியது. எதிர்த்தரப்புக் கூட்டணி பற்றி சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் பதினைந்தாவது மகாநாடு நிறைவேற்றிய தீர்மானத்தை முழுக் கூட்டம் உறுதிப்படுத்தியது.

த்ஸேத்கின், தளியாத்தி, கெஷ்கே, ஷ்மிரால், கூஸினென், வலேத்ஸ்கி, திமீத்ரொவ், ஸான் கத்தயாமா, மான்னர், கொதொ வீலியா ஆகியோரும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பிற பிரமுகர்களும் தங்கள் கட்சிகளின் சார்பில் ஒரு பிரேரணை மசோ தாவைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழுவில் அக்டோபர் 23ந் தேதி வைத்தார்கள். ஏழாவது முழுக் கூட்டத்தின் தலைமைக் குழுவுக்கு விடுக்கப்பட்ட இந்தப் பிரேரணை, கம்யூனிஸ்டு அகிலத்தில் ஸினோவியெவின் வேலையைப் பற்றியது. ஸினோவியெவ் மேற்கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தில் இருப்பதும் வேலை செய்வதும் சாத்தியம் என்று தலைமைக் குழு நினைக்கவில்லை என்று இந்தப் பிரேரணையில் கூறப்பட்டிருந்தது.[1]

செயற்குழுவின் தலைமைக் குழு இந்தப் பிரேரணைக்கு இசைந்து இதை ஏழாவது முழுக் கூட்டத்தின் ஆலோசனைக்காக வைத்தது. ஸினோவியெவ் கம்யூனிஸ்டு அகிலத்தினது தலைமைக் குழுவின் தலைவர் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டார்.

எதிர்த்தரப்பின் கொள்கைவாத-அரசியல் தோல்வி சர்வ தேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்றில் முக்கியமான மைல் கல்லாக விளங்கியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் பொதுக் கொள் கைப் போக்கைச் செயல்படுத்துவதில் இருந்த பெருத்த தடை அகற்றப்பட்டது. உலகப் புரட்சி வளர்ச்சியின் வழிகள் பற்றியும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத் தையும் பற்றியும் மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் அதன் அணிகளை ஒன்றுபடுத்துவது பற்றியும் தெளிவான, திட்ட வட்டமான ஆணைகளைக் கம்யூனிஸ்டு அகிலம் பிறப்பித்தது.

---

[1] மை. ஆ. கூ., 495/2/64/198-199.

ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் சர்வதேச நிலைமையையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளையும் ஆராய்ந்து, நடப்புக் காலப்பகுதி முதலாளித்துவத்தின் அம்சரீதியான நிலைப்பாடு ஏற்பட்டுள்ள காலப்பகுதி என்று கூறியது. முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டைத் தாற்காலிகமும் உறுதி அற்றதும் ஆக்கும் சிறப்பாக முக்கியமான காரணிகளில் பின்வருவனவும் சேர்ந்தவை என்று அது குறித்தது: சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியனில் சோஷலிஸத்தின் வளர்ச்சி, பிரிட்டிஷ் முதலாளித்துவத்தின் வீழ்ச்சி, பிரிட்டனில் வர்க்கப் போராட்டம் கடுமையாகத் தீவிரம் அடைந்தது, சீனவில் தேசியப் புரட்சி.

பிரிட்டனில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் படிப்பினைகளை முழுக் கூட்டம் ஆராய்ந்தது. பிரிட்டிஷ் தொழிற்சங்கங்களின் சீர்திருத்தவாதத் தலைவர்களது சரணகதி நிலையை அது கண்டனம் செய்தது. பிரிட்டிஷ்-ருஷ்யக் கமிட்டியில் இருந்து கொண்டு பொதுச் சபையின் பின்வாங்கும் போக்கை விமர்சித்த சோவியத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளது செயலும், சுயேச்சைத் தொழிலாளர் கட்சியின் வட்டார ஸ்தாபனங்களோடு சேர்ந்து வேலைநிறுத்தக்காரச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு உதவும் இயக்கத்தை ஒழுங்கமைக்க முயன்ற பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளின் கொள்கையும் ''முதலாளிகளுடன் போராடும் பொருட்டுத் தொழிலாளர்களை ஒன்றிணைக்கவும் சீர்திருத்தவாதத் தலைவர்கள் தங்கள் உண்மை உருவத்தைக் காட்டும்படி செய்யவும் ஏற்ற சாதனம் என்ற முறையில் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தின் முக்கியத்துவத்தை நிரூபித்து விட்டன''[1] என்று அது குறிப்பிட்டது.

ஏழாவது முழுக் கூட்டம் ஸ்தாபனப் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்து, செயற்குழுவுக்குப் பொறுப்புள்ள கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களின் அமைப்பில் மாறுதல் செய்யத் தீர்மானித்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுத் தலைவர் பதவி அகற்றப்பட்டது. செயற்குழுவின் அரசியல் செயலகம் என்ற கூட்டு உறுப்பு ஏற்படுத்தப்பட்டது.

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 664.

சீனப் பிரச்சினையில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயல்தந்திரம்

கம்யூனிஸ்டு அகிலத்தின் மிகவும் கெடுபிடி நிறைந்த செயற் களங்களில் ஒன்ருக இருந்தது சீனப் பிரச்சினை. சீனுவில் நடந்த புரட்சியைச் செயற்குழு கூர்ந்து கவனித்து வந்தது. கம்யூனிஸ்டு களின் செயல்தந்திரப் போக்கைச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதல் களுக்கு ஏற்ப அது திட்டப்படுத்தியது. இந்த மாறுதல்களாவன: குவோமிந்தான் தேசிய-புரட்சிப் படைகள் வடக்கே மேலும் மேலும் முன்னேறியது, தொழிலாளர்-விவசாயிகள் இயக்கத்தின் ஏற்றம், வெகுஜனங்களிடையே சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியினது செல்வாக்கு விரிவடைந்தது, சியாங் காய்-ஷேக், குவோமிந்தான் தலைவர்கள் ஆகியோரின் கம்யூனிஸ்டு விரோதப் போக்குகள் அதி கரித்தது. எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் எல்லா வகையிலும் ஒற்றுமைப்படுத்துவது என்ற தீர்மானம் சீனப் புரட்சி யில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயல்தந்திரத்தின் அடிப்படை யாக இருந்தது.

சீனுவில் தேசிய-விடுதலை இயக்கத்தின் ஏற்றத்தை ஒட்டி அந் நாட்டில் தேசிய-புரட்சிச் சக்திகளுக்கு நடைமுறை உதவி அளிக் கும்படி தனது பிரிவுகளைக் கம்யூனிஸ்டு அகிலம் ஏவியது.

1925, மே, *30*ந் தேதி சீனுவில் நடந்த நிகழ்ச்சிகளுக்குப் பின் (ஷங்ஹாய் நகரத் தொழிலாளர்களும் மாணவர்களும் நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சி சீனுவில் தேசியப் புரட்சிக்கு அடி கோலியது) கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலை மைக் குழு சீனப் பிரச்சினை பற்றி ஆலோசனை செய்து, முதலாளித் துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு ஜூன் *17*ந் தேதி ஒரு தந்தி அனுப்பியது. தந்தியின் வாசகம் வருமாறு:

''சீனுவில் நிகழ்ச்சிகள் முன்னேறி வருகின்றன. ஏகாதிபத்திய வாதிகளின், முதன்மையாக பிரிட்டிஷ், ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளின் தாக்குதல் மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. ஆயுதந்தாங்கிய படைகளின் பகிரங்கமான தலையீடாக அது உரு வம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தொடர்பில் கம்யூனிஸ்டு அகிலத்தினதும் தொழிற்சங்க அகிலத்தினதும் தலைமைக் குழுக் கள் சீனுவின் போராடும் மக்களின் உதவிக்காக வேறு அனேக நடவடிக்கைகளோடு கூடவே, ஏகாதிபத்தியவாதிகளைக் கண்ட

னம் செய்யும் நோக்கத்துடனும் சீனு மீது மேற்கொண்டு தாக்குதல்கள் நடக்காதவாறு தடுக்கும் நோக்கத்துடனும் கூட்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் யோசனையை இரண்டாவது அகிலத்துக்கும் ஆம்ஸ்டர்டாம் அகிலத்துக்கும் விடுக்கத் தீர்மானித்திருக்கின்றன. சீன மக்கள் தங்கள் சுதந்திரத்திற்காக நடத்தும் போராட்டத்திற்கு ஆதரவாகத் தொழிலாளி வெகுஜனங்களின் விரிவான பொது அபிப்பிராயத்தை ஈர்க்கும் பொருட்டு அவசியமான எல்லா நடவடிக்கைகளேயும் எடுத்துக் கொள்ளும்படியும், சோஷலிஸ்டுத் தொழிலாளர்களுடனும் கட்சிச் சார்பற்ற தொழிலாளர்களுடனும் கூட்டாகச் சேர்ந்து எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தவும் பணம் திரட்டவும் முயலும் படியும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தாருக்கும் ஒன்றித்துச் செயல் புரியும் யோசனே விடுக்கும் படியும் தலைமைக் குழு உங்களுக்கு யோசனே கூறுகிறது. கோஷங்கள்: 1) ஏகாதிபத்தியவாதிகளே, சீனுவிலிருந்து வெளியேறுங்கள், 2) சீனுவுக்கு அவமானகரமான உடன்படிக்கைகள் ரத்து செய்யப்படுக, 3) வெளிப் பிரதேச அரசுச் சலுகைகள் ரத்து செய்யப்பட வேண்டும், 4) வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும், 5) ஷங்ஹாய், ஹான்கோ, சிந்தா, பிற இடங்கள் ஆகியவற்றில் தொழிலாளர்கள் மீதும் மாணவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப் பொறுப்பாளிகளாய் இருந்தவர்கள் மீது உடனே வழக்கு தொடுக்கப்பட வேண்டும்.''[1]

சீன மக்களுக்கு ஆதரவாக எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை ஒடுக்கும் நாடுகளேயும் ஒடுக்கப்படும் நாடுகளேயும் சேர்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளே ஒன்றுபடுத்த உதவிற்று. முக்கியமான ஸ்தூலப் பிரச்சினே ஒன்றில் மேற்கு நாடுகளின் தொழிலாளர் கட்சிகள் ஒன்றித்துச் செயல்படுவதற்கு இது அடிப்படை அமைத்தது. ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தின் துலக்கமான வெளியீடாகத் திகழ்ந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக் குழுவின் நடவடிக்கை, சர்வதேச வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் உரிய தருணத்தில் எதிர்ச் செயல் புரிந்ததையும் பகைவர் முகாமில் ஏற்பட்ட பிளவைக் கண்டுபிடிக்க அதனுல் முடிந்ததையும் புரட்சி இயக்கத்துக்கு எதிர்ப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்திக்

[1] மை. ஆ. கூ., 495/2/40/90.

கொள்வதற்கு அது உறுதியுடன் சக்திகளை அணிதிரட்டியதையும் காட்டியது. செயற்குழுத் தலைமைக் குழுவின் தீர்மானம் சீன மக்களின் உதவிக்கான இயக்கத்தில் லட்சோபலட்சம் மக்களை ஈடுபடுத்த உதவியது. தொலை தூரச் சீனாவின் புரட்சி முதலாளித்துவ நாடுகளுக்கு ''அருகே நெருங்கிவிட்டது'', இந்த நாடுகளைச் சேர்ந்த பாட்டாளிகளின் உடனடி விவகாரம் ஆகிவிட்டது. சோவியத் யூனியனில் ''சீனாவைத் தொடாதே'' என்ற கோஷத்துடன் தொடங்கப்பட்ட இயக்கம் உலகம் முழுவதிலும் பரவிற்று. சீனாவின் உள் விவகாரங்களில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் தலையீட்டுக்கு எதிர்ப்பு, பிரான்சிலும் ஜெர்மனியிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிரிட்டனிலும் ஆஸ்திரியாவிலும் ஜப்பானிலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் கொரியாவிலும் இத்தாலியிலும் எகிப்திலும் துருக்கியிலும் பிற நாடுகளிலும் நடந்த பொதுக் கூட்டங்களில் முழங்கியது.

''நாட்டின் சுதந்திரம், மக்கள் ஆட்சியை அமைத்தல் என்ற கோஷங்களுடன் விறல் மிக்க சர்வஜன இயக்கம்'' சீனாவில் பரவி வருகிறது என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஆறாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் (1926 பிப்ரவரி—மார்ச்சு) குறித்தது. சீனாவின் தொழிலாளி வர்க்கம் ''இந்த இயக்கத்தைத் தூண்டிவிட்டு அதன் முக்கியப் போராட்ட வீரனாக விளங்குகிறது''[1] என்று அது கூறியது. குவோமிந்தான் எந்த அளவுக்கு ''நாட்டின் சுதந்திரத்துக்காகவும் ஒன்றித்த புரட்சிகர-ஜனநாயக ஆட்சிக்காகவும் அன்னிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இராணுவ-நிலப்பிரபுத்துவ அமைப்பு அனைத்துக்கும் எதிராகப்''[2] போராட்டம் நடத்துமோ அந்த அளவுக்குக் கம்யூனிஸ்டுகள் அதற்கு ஆதரவு அளிப்பார்கள் என்று முழுக் கூட்டத்தின் தீர்மானங்களில் கூறப்பட்டிருந்தது. சீனப் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திரமான வர்க்கப் பணிகளைப் புறக்கணித்த சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வலது சாரிக் கலைப்புவாதிகளையும், ''இயக்கத்தின் புரட்சிகர-ஜனநாயகக் கட்டத்தைத் தாண்டிக் குதித்துப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் சோவியத் ஆட்சியையும் நேரே அடைந்துவிட''[3] முயன்ற இடதுசாரியினரையும் செயற்குழு வன்மையாகக் கண்டித்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 619.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 621.

[3] அதே நூல், அதே பக்கம்.

தது. சீனுவின் பல கோடி விவசாயிகள் சீனப் புரட்சியில் ஆற்ற வேண்டி இருந்த அசாதாரண முக்கியத்துவம் உள்ள பணியைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சுட்டிக் காட்டியது.

சீனப் புரட்சி ஏகாதிபத்திய எதிர்ப்பு பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி என்றும், அயல்நாட்டாரின் ஒடுக்குமுறையிலிருந்து சீன மக்களை விடுவிப்பதும், நாட்டை ஒன்றுபடுத்துவதும், தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகளதும் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதும், நிலத்தை தேசிய உடைமை ஆக்குவதையும், அன்னிய மூலதனத்தின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதையும் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதும் இந்தப் புரட்சியின் நோக்கங்கள் என்றும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் விளக்கியது. சீனப் புரட்சி பொது தேசியக் கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது என்றும், சீனுவில் நடக்கும் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறது என்றும், இப்போது பாட்டாளி வர்க்கமும் விவசாயிகளும் குட்டி பூர்ஷ்வாக்களும் நடுத்தர பூர்ஷ்வாக்களும் பெரும் பூர்ஷ்வாக்களில் ஒரு பகுதியினரும் கூட அதன் இயக்கு சக்தியாக இருப்பதாகவும், இவர்கள் எல்லோரும் சேர்ந்து விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியாக உருவாயிருப்பதாகவும் செயற்குழு கருதியது.[1]

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தின் சீனப் பிரச்சினை பற்றிய ஆய்வுரையின் முதல் வாசகத்தில் இ.வி. ஸ்தாலின் சில முக்கியமான திருத்தங்கள் செய்தார். இவை ஆய்வுரைக்குக் கணிசமாக அதிக எதார்த்தத் தன்மையை அளித்தன. உதாரணமாக, சீனுவில் அப்போது இருந்த நிலைமைகளில் கடுவட்டித் தொழிலை நிறுத்துவது நடக்க முடியாது என்று ஸ்தாலின் சரியாகக் கருதினுர். எனவே, ''கடுவட்டித் தொழிலை எதிர்த்து ஊக்கத்துடன் போராட வேண்டும்'' என்ற கோரிக்கையை அதன் இடத்தில் புகுத்தும்படி அவர் கூறினுர். கம்யூனிஸ்டுகள் குவோமிந்தானின் இடதுசாரியினது தலைமையை இயந்திர ரீதியாகக் கைப்பற்றக் கூடாது என்பதன் இடத்தில் பின்வருமாறு எழுதும்படி ஸ்தாலின் யோசனை சொன்னுர்: ''இடதுசாரிமீது கம்யூனிஸ்டுச் செல்வாக்கு இயந்திர ரீதியாகச் செலுத்தப்படக் கூடாது''. சீனப் புரட்சியின் பணிகள் பற்றிய பகுதியில் ''பெரிய அளவுத் தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் நிதிமனைகளும் தேசிய உடைமை ஆக்கப்படுவது'' என்ற சொற்களுக்கு முன் ''ஏகாதிபத்தியச் சலுகைகளின் தன்மையைக்

சீனப் புரட்சியின் பிரச்சினைகள் பற்றிய செயல்தந்திரப் போக்கை வகுக்கையில், கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு முன் முதன் முறையாக முழு அளவில் எழுந்த அனேக முக்கியமான சித்தாந்த, நடைமுறைப் பிரச்சினைகளுக்குச் சரியான அணுகுமுறையைக் கம்யூனிஸ்டு அகிலம் கண்டு கொண்டது. குவோமிந்தான் சாதாரணமான பூர்ஷ்வாக் கட்சி என்றும் சாதாரண வகையான அரசியல் கட்சி என்றும் கம்யூனிஸ்டு அகிலம் அந்தக் காலத்தில் நினைக்கவே இல்லை. அது ஓர் அரசியல் கூட்டணி, விரிவான ஸ்தாபனம் என்றும் அதற்குள் வெவ்வேறு வகையான வர்க்க-அரசியல் சக்திகளுக்கு இடையே போராட்டம் நடந்து வருவதாகவுமே கம்யூனிஸ்டு அகிலம் கருதியது. 1925—27ல் நடந்த சீனப் புரட்சியின் முதல் கட்டத்தில் அதன் பொது தேசியத் தன்மையை வலியுறுத்தியதன் மூலம் கம்யூனிஸ்டு அகிலம் மார்க்சியக் கருத்துக்களின் வளர்ச்சிக்குப் பெரு வளம் கூட்டியது. இந்தப் புரட்சியில் இராணுவக் காரணி ஆற்றிய பெரிய, ஓரளவு சுதந்திரமான, அடிக்கடி நிர்ணயகரமான பங்கு பற்றிய குறிப்பும் புதிதாய் இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தின் சீனப் பிரச்சினை பற்றிய கமிஷன் தயாரித்தளித்த சீனச் சைனியவாதத்தின் ஆழ்ந்த, சரியான தன்மைச் சித்திரிப்பும் புதியதாய் இருந்தது. சீனாவின் வட மேற்கில் பிரதான ஆதாரத் தளங்களை அமைக்கும் கருத்து அந்தக் காலத்திலேயே முன்வைக்கப்பட்டது. அங்கே "தலையீட்டு அபாயம் குறைவு, அங்கே நாங்கள் சோவியத் யூனியனுடன் தொடர்பு கொண்டிருப்போம், அதனிடமிருந்து உதவி பெறுவது எங்களுக்கு

கொண்ட " என்னும் சொற்களைச் சேர்க்கும்படி அவர் பிரேரித்தார் (மை. ஆ. கூ., 495/165/278/1—2). தேசிய-பூர்ஷ்வா வட்டாரங்களின் முற்போக்கு வாய்ப்புக்கள் பற்றி ஸ்தாலின் கொண்டிருந்த நோக்கைப் பிரதிபலித்த இந்தத் திருத்தங்கள் முழுக் கூட்டத்தால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஆனால் சியாங் காய்-ஷேக், வாங் சிங்-வேய் ஆகியோரின் புரட்சி எதிர்ப்பு ஆட்சி மாற்றங்களுக்குப் பின், சீனா, இந்தியா, இந்தோசீனம், இந்தோனீசியா, அனேகப் பிற ஒடுக்கப்பட்ட நாடுகள் ஆகியவற்றின் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் முற்போக்கு வாய்ப்புக்கள் மீது ஸ்தாலின் தமது உரைகளில் வர வர அதிக சந்தேகம் தெரிவிக்கலானார். தேசிய-விடுதலை இயக்கத்தின் அனேகப் பிரச்சினைகள் குறித்துப் பிற்காலத்தில் அவர் மேற்கொண்ட நிலைகளில் இந்த மனப்போக்கு பிரதிபலித்தது.

முடியும்''[1] என்று சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் வலியுறுத்தினார்கள்.

சீனப் புரட்சியின் மொத்த வருங்கால வாய்ப்புக்களை மதிப்பிடுகையில், இந்தப் புரட்சியின் விளைவாக ''நாட்டின் முதலாளித்துவ வளர்ச்சிக்கு இட்டுச் செல்வதற்கு ஏற்ற சமுதாய-அரசியல் நிலைமைகள் உருவாவது கட்டாயமாக இருக்க வேண்டியதில்லை''[2] என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது முழுக் கூட்டம் குறிப்பிட்டது. புரட்சி வெற்றி அடைவதன் விளைவாக அமைக்கப்படும் அரசு தூய பூர்ஷ்வா-ஜனநாயக அரசாக இருக்காது. ''பாட்டாளி வர்க்கம், விவசாயிகள், பிற ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் ஆகியோரின் ஜனநாயக சர்வாதிகாரமாக இருக்கும்.''[3]

சீனாவில் ஏகாதிபத்தியச் செல்வாக்கின் ஆதாரத் தூண்களாக இருந்த சைனியவாதிகளின் படைகள் மீது தேசிய-புரட்சி சேனைகள் வெற்றி மேல் வெற்றி அடைந்து வந்த சமயத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஏழாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் கூடியிருந்தது. சீனாவில் ஏகாதிபத்தியத் தலையீடு வலுத்து வருகிறது. சீனாவிலுள்ள நிலைமைகள் தனி வகையானவை. எனவே, சீனாவில் நடக்கும் தேசியப் புரட்சி ''சென்ற நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த பழைய பூர்ஷ்வாப் புரட்சிகளிலிருந்தும் ருஷ்யாவில் 1905ல் நடந்த புரட்சியிலிருந்தும் சாராம்சத்தில் வேறானது''[4] என்று முழுக்கூட்டம் கருத்து தெரிவித்தது. சீனாவின் தேசிய-புரட்சி இயக்கத்தில் கலந்து கொண்ட சமுதாய சக்திகளின் விரைந்த அணி மாற்ற நிகழ்முறையையும் பெருமூலதன அதிபர்களான பூர்ஷ்வாக்கள் புரட்சி எதிர்ப்பின் பக்கத்துக்கு மாறுவதன் தவிர்க்க இயலாமையையும் முழுக்கூட்டம் சுட்டிக் காட்டியது. நிலப் பிரச்சினை ''தற்போதைய நிலைமையில் மையப் பிரச்சினை'' என்று அது கூறியது. ''தொழிலாளி வர்க்க வெகுஜனங்களை இயக்கத்தில் ஈடுபடுத்தவும் தேசியப் புரட்சியில் அதன் நிலையை வலுப்படுத்தவும்'' விவசாயிகளைப் புரட்சியின் தரப்புக்கு ஈர்க்கவும் தேவையான கோரிக்கைகளின் திண்ணமான செயல்திட்டத்தை அது குறித்தது. சீனப் புரட்சியின் மிக முக்கிய

---

[1] மை. ஆ. கூ., 495/166/159/39.

[2] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 672.

[3] அதே நூல், பக்கம் 673.

[4] அதே நூல், பக்கம் 670.

மான பொது ஜனநாயகப் பணிகளை விளக்கியது. குவோமிந்தாளை பூர்ஷ்வா-நிலப்பிரபுக் கட்சியாக மாற்ற முயன்றுவந்த வலதுசாரி குவோமிந்தான்காரர்களைக் கம்யூனிஸ்டுகள் இடைவிடாமல் உறுதியாக எதிர்த்துப் போராடுவதும் குவோமிந்தானின் இடதுசாரியுடன் ஒத்துழைப்பதும் எவ்வளவு முக்கியமானவை என்பதைச் சிறப்பாக வலியுறுத்தியது.

1926, மார்ச்சு *20*ந் தேதி நிகழ்ச்சிகள் (குவாங்ஜோவில் புரட்சி எதிர்ப்பு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தும் முயற்சி), தேசிய-புரட்சி சேனைகளின் தலைமைத் தளகர்த்தரின் கம்யூனிஸ்டு விரோத உருவத்தைக் காட்டி விட்டன. சியாங் காய்-ஷேக் விரைவிலோ தாமதித்தோ சீனாவின் புரட்சிச் சக்திகளைத் தாக்குவார் என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு அனுமானித்தது.[1] சீனப் புரட்சி வளர்ந்து ஆழமாகும் அளவுக்கு ஏற்ப, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் தன் நலன்களுக்கு அபாயம் விளைக்கும் என்று பெரும் பூர்ஷ்வா வர்க்கம் முடிவு செய்து, புரட்சியிலிருந்து விலகி, அதை நசுக்க முயலும் எனச் செயற்குழு குறித்தது. புரட்சியை மேற்கொண்டு விரிவாக நடத்துவதற்கும் கம்யூனிஸ்டுக் கட்சியை வலுப்படுத்துவதற்கும் தாக்குதலுக்குத் தயார் ஆகிக் கொண்டிருந்த புரட்சி எதிர்ப்பாளர்களை எதிர்த்துத் தாக்குவதற்கும் தேவைப்பட்ட நேரத்தைப் பெறுவதே கம்யூனிஸ்டுகளின் பணியாக இருந்தது.

[1] குவோமிந்தான் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து செயலாற்றிய போது, ''குவோமிந்தான் உலகப் புரட்சியின் தலைமை அலுவலகத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும்'' என்றும் அதற்குக் ''கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை இன்றியமையாதது'' என்றும் ''கம்யூனிஸ்டு அகிலத்துடன் இன்றும் நெருங்கிய உறவு கொள்வதே குவோமிந்தானின் மிகப் பெரிய விருப்பம்'' என்றும் குவோமிந்தானின் தலைவர்கள் பலவகையிலும் அழுத்திக் கூறிவந்தார்கள். குவோமிந்தானைக் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அந்த ஸ்தாபனத்தின் செயற்குழு விண்ணப்பித்தது (கம்யூனிஸ்டு அகிலம் இந்த விண்ணப்பத்தை நிராகரித்து விட்டது). வேறு சொற்களில் கூறினால், குவோமிந்தான் தலைவர்கள் தீவிரமாகக் ''கம்யூனிஸ வண்ணம் பூசிக் கொண்டார்கள்''. குவோமிந்தான் தேசிய-புரட்சி ஸ்தாபனமே தவிரக் கம்யூனிஸ்டு ஸ்தாபனம் அல்ல என்பதில் கம்யூனிஸ்டு அகிலத்தில் எவருக்கும் இம்மியளவும் சந்தேகம் இருக்கவில்லை என்பதைத் திண்ணமாகக் கூறிவிட வேண்டும். இந்த விஷயத்தில் எதிர்த்தரப்பினரின் தாக்குதல்கள் முற்றிலும் ஆதாரமற்றவையாக இருந்தன (மை. ஆ. கூ., *495/165/66/31-33; 514/1/236/2-3; 141-144*).

அந்தக் காலத்தில் குவோமிந்தான்காரர்கள் தரப்பில் பலம் சந்தேகமின்றி அதிகமாய் இருந்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. நேற்றுக் கூடப் புரட்சித் தன்மை கொண்டிருந்த குவோமிந்தான்மீது விரிவான வெகுஜனங்கள் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருந்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சி குவோமிந்தானின் புரட்சிப் பதாகையின் கீழ் செயலாற்றியிராவிட்டால் அதன் ஆதரவாளர்கள் பலர் அதைப் பின்பற்றியிருக்க மாட்டார்கள். சேனைத் தலைவர்களில் பெரும்பகுதியினர் குவோமிந்தான் மேலாண்மையின் நிர்ணயகரமான செல்வாக்கின் கீழ் இருந்தார்கள். புரட்சி எதிர்ப்பு ஆட்சி மாற்றத்தையும் இராணுவ சர்வாதிகாரத்தின் ஆதரவாளர்களையும் வன்மையாக எதிர்த்துத் தாக்குவதற்கு வேண்டிய பலம் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியிடம் இன்னும் இருக்கவில்லை. இன்னொரு விஷயமும் முக்கியப் பங்கு ஆற்றியது: *1921—24*லேயே கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கையை எதிர்க்க முயன்றவரான சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பொதுச் செயலாளர் சென் தூ-ஸியூ, *1927*ம் ஆண்டு வசந்தத்திலும் கோடையிலும் தீவிர வலதுசாரி சந்தர்ப்பவாதப் போக்குகளைக் காட்டினர். இவை குவோமிந்தான் தலைமையின் வலதுசாரி விஷயத்தில் அவருடைய எச்சரிக்கை உணர்ச்சியை மந்தப் படுத்தின. இவற்றோடு கூடவே, சியாங் காய்-ஷேக் கும்பல் போன்ற அனுபவம் மிகுந்த, கொடுமை உள்ள, வெகுஜன ஆதரவை இன்னும் இழந்துவிடாத பகைவனைச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி சமாளிக்க வேண்டி இருந்தது.[1]

சியாங் காய்-ஷேக் ஷங்காயில் புரட்சி எதிர்ப்பு ஆட்சி மாற்றம் நிகழ்த்திய பிறகு சீனாவில் உருவாகி இருந்த நிலைமை பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் எட்டாவது முழுக் கூட்டம் (*1927*, மே) ஆலோசனை நடத்தியது. புரட்சியின் புதிய

---

[1] பிற்காலத்திலும், *1927*ல் சியாங் காய்-ஷேக் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னரும், சீனாவின் எல்லா ஏகாதிபத்திய விரோதச் சக்திகளையும் ஒன்றிணைக்கும் போக்கு சரியான ஒரே கொள்கையாக இருந்தது என்ற நோக்கைக் கைவிடாமல் தக்க ஆதாரங்களுடன் முன் போன்றே கம்யூனிஸ்டு அகிலம் கடைப்பிடித்து வந்தது. முதன்மையாக ஒப்புவலிமை புரட்சி எதிர்ப்பாளர் தரப்புக்கு வந்துவிட்டதன் விளைவாகவே சியாங் காய்-ஷேக் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது என்று அது கருதியது. சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் தவறுகளுக்கு அதன் இளமையும் அனுபவம் போதாமையுமே காரணம் என்று அந்தக் காலத்தில் கருதப்பட்டது (மை. ஆ. கூ., *495/166/186/8-9*).

கட்டத்தில் அதன் இயக்கு சக்திகளாக இருந்த விவசாயிகள், தொழிலாளர்கள், கைத்தொழிலாளர்கள், நடுத்தர பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியினர் ஆகியோரின் பிரதிநிதியாகத் திகழ்ந்த உஹான் இடதுசாரி குவோமிந்தான் அரசாங்கம் ''வெகுஜனங்களைச் சார்ந்த கொள்கையை'' உறுதியாகக் கடைப்பிடித்தால் புரட்சிகரமான பாத்திரம் வகிக்க முடியும் என்று முழுக் கூட்டம் கருதியது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்தந்திரப் போக்கும் இதனாலேயே வரையறுக்கப்பட வேண்டும். இடதுசாரி குவோமிந்தான் அரசாங்கத்தின் வேலையில் பங்கெடுத்துக் கொண்டு, இந்த அரசாங்கத்தைப் புரட்சிப் பாதையில் செல்லுமாறு கட்டாயப்படுத்தும் வலிய வெகுஜன வற்புறுத்தலை ஏற்படுத்துவது கம்யூனிஸ்டுக் கட்சி செய்ய வேண்டிய காரியம் ஆகும். உஹான் புரட்சிச் சக்திகளின் ஈர்ப்பு மையம் ஆகிவிடும் என்றும், ஷங்காயில் இராணுவ சர்வாதிகாரத்தை நிலைநாட்டியிருந்த வஞ்சகன் சியாங் காய்-ஷேக்கை எதிர்த்து நிற்க உஹான் அரசாங்கத் தலைவர்கள் வல்லவர்களாய் இருப்பார்கள் என்றும் முழுக் கூட்டம் எண்ணியது. ஆனால் இவ்வாறு நடக்கவில்லை. சியாங் காய்-ஷேக் துரோகம் இழைத்ததாக அண்மையில்தான் குற்றம் சாட்டிய வாங் சிங்-வேயின் தலைமையில் இயங்கிய உஹான் அரசாங்கம், 1927 ஜூலையில் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பைத் துணித்துக் கொண்டு. அவர்கள் மீது அடக்குமுறை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது. இவ்வாறு அது சீனாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியின் பிளவை முழுமை ஆக்கிவிட்டது.

முன்னர் தேசிய-புரட்சிக் கட்சியாக இருந்த குவோமிந்தான், பூர்ஷ்வா-சைனியவாத, மக்கள் விரோதச் சாதியினரின் நிர்வாகத்துக்கு உட்பட்ட கழகமாக மாறியது இந்த நிலைமைகளில் நிறைவு பெற்றது. இந்த மாற்றத்தைத் தொடர்ந்து உழைப்பாளிகளுக்கு எதிராகவும் முதன்மையாகக் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகவும் கொடிய பயங்கர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒடுக்கப்பட்ட நாடுகளில் உள்ள தேசிய பூர்ஷ்வா வர்க்கம், ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் சக்தி என்ற முறையில் முக்கியத்துவம் அற்றது என்ற முடிவுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் வருவதற்கான காரணங்களில் இந்த மாற்றமும் ஒன்றாகும்.

1921ல் முப்பது உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருந்த சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி, 1927 மார்ச்சுக்குள் வெகுஜன ஸ்தாபனமும் செல்வாக்குள்ள அரசியல் சக்தியும் ஆகி விட்டது என்பதைக்

கருத்தில் கொண்டால், 1927ம் ஆண்டு வசந்தத்திலும் கோடையிலும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சக்தியைப் பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தின் மிகையான மதிப்பீட்டைப் புரிந்து கொள்ள முடியும். 1927 மார்ச்சில் ஏறத்தாழ 58 ஆயிரம் பெயர் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியில் உறுப்பினராய் இருந்தார்கள். இவர்களில் 53.8 சதவிகிதம் தொழிலாளர்கள், 18.7 சதவிகிதம் விவசாயிகள், 19.1 சதவிகிதம் அறிவுஜீவிகள், 3.1 சதவிகிதம் இராணுவத்தினர்.[1] கணிசமான எண்ணிக்கையில் தொழிலாளி வெகுஜனங்களை உறுப்பினராகக் கொண்ட தொழிற்சங்கங்களும் ஏராளமான விவசாயிகள் சங்கங்களும் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கில் இருந்தன. கட்சி நாட்டில் புரட்சிப் போராட்டத்தின் யாவற்றிலும் செயலூக்கம் மிக்க சக்தியாக இயங்கியது.

கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்ற முயலுமாறு தூண்டிவிட இது தக்க ''அடிப்படை'' என்று எதிர்த்தரப்பு எண்ணியது. கம்யூனிஸ்டு அகிலம் இந்த துர்ச்சாகச போதனையை நிராகரித்து விட்டது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மிக விரிவான வெகுஜனங்களை ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவ அமைப்புக்கும் எதிரான புரட்சிக்குத் தூண்ட வேண்டும் என்றும் ஆட்சிக்கான போராட்டத்தை ஒன்றித்த கூட்டணியின் வரம்புகளுக்குள்ளேயே நடத்த வேண்டும் என்றும் அது கருதியது. வேறு சொற்களில் கூறினல், கம்யூனிஸ்டு அகிலமும் எதிர்த்தரப்பும் சீனப் புரட்சியின் பிரச்சினைகள் பற்றி முற்றிலும் எதிரெதிரான கருத்துக்கள் கொண்டிருந்தன.

சீனவின் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றிணைக்க வேண்டும், கம்யூனிஸ்டுக் கட்சி அவற்றின் முன்னணிப் படையாகச் செயல்பட வேண்டும் என்பது சாராம்சத்தில் சீனப் பிரச்சினை பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் கொள்கைப் போக்காக இருந்தது. திரோத்ஸ்கி-ஸினோவியெவ் எதிர்த்தரப்பு இந்தக் கொள்கைப் போக்கை இடைவிடாது வன்மத்துடன் தாக்கிவந்தது. எதிர்த்தரப்புக்குச் சீனப் புரட்சி பற்றிய பிரச்சினை கம்யூனிஸ்டு அகிலத்தினதும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியினதும் பொதுக் கொள்கைப் போக்கைத் தாக்குவதற்கான ஒரு வியாஜமாகப் பயன்பட்டது. பிற்காலத்தில் சீனப் புரட்சியின் தோல்வியை இதே நோக்கங்களுக்குப் பயன்படுத்த எதிர்த்தரப்பு முயன்றது.

---

[1] மை. ஆ. கூ., 495/166/159/42.

சீனப் பிரச்சினே பற்றிய எதிர்த்தரப்பின் கருத்துக்களைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம். ஒடுக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் புரட்சித் தன்மை கொண்ட தேசிய இயக்கங்களை ஆதரிப்பது இன்றியமையாதது என்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் முடிவு, கம்யூனிஸ்டுகள் அல்லாத ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுடன் தொடர்பைத் துணித்துக் கொள்வதாகும் என்று திரித்து விளக்கப்பட்டது. வர்க்கச் சக்திகளின் அணி வகுப்பு, அவற்றின் தன்மை ஆகியவற்றில் சீனப் புரட்சி 1905ல் ருஷ்யாவில் நடந்த புரட்சியிலிருந்து கோட்பாட்டு ரீதியில் வேறுபடுவதல்ல என்று எதிர்த்தரப்பு கருதியது. சீனப் புரட்சி சோஷலிசப் புரட்சியாக வளர்வது நேரடியாக நிகழும் என்று அது அறிவித்தது. சுன் யாட்-சென்வாதம் முன்னேக்கிய அடிவைப்பு என்றே, விரிவான வெகுஜனங்களைக் கொள்கைவாதத்தின் அதிக உயர்வான வடிவத்துக்கு ஆயத்தம் செய்வது என்றே (இவ்வாறு கம்யூனிஸ்டு அகிலம் கருதியது) அல்ல, அடிப்படையில் பிற்போக்குத் தன்மை கொண்ட கொள்கைவாதம் என்று எதிர்த்தரப்பு எண்ணியது. அனேக வர்க்கங்களது கூட்டணியின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தை அமைப்பது ''நான்சென்ஸ்'' என்றும் ''மார்க்சியத்தை ரத்து செய்வது'' என்றும் அது கூறியது. குவோமிந்தான் சாதாரணமான பூர்ஷ்வாக் கட்சி என்றும் அது ஒருபோதும் புரட்சி நிலைகளை மேற்கொள்ளவில்லை என்றும் புரட்சிக் கட்சியாக வெறுமே ''வேஷம் போட்டது'' என்றும் எதிர்த்தரப்பு சித்திரித்தது. திரோத்ஸ்கி-ஸினேவியெவ் எதிர்த்தரப்பு புரட்சி வளர்ச்சியின் இடைக்காலக் கட்டங்களைப் புறக்கணித்துவிட்டு, சீனவில் சோவியத்துக்கள், முதன்மையாகத் தொழிலாளர் பிரதிநிதி சோவியத்துக்கள் ஆட்சி உறுப்புக்கள் என்ற முறையில் தாமதமின்றி நிறுவப்பட வேண்டும் என்று கோரியது. உழைப்பாளிகளின் சோவியத்துக்கள், சுரண்டப்படுவோரின் சோவியத்துக்கள் போன்ற வெகுஜன அரசியல் ஸ்தாபனங்களை நிறுவும் பிரச்சினே பற்றிய இரண்டாவது காங்கிரசின் தீர்மானங்களை எதிர்த்தரப்பாளர்கள் இதற்கு மேற்கோள் காட்டிப் பசப்பினர்கள். வேறு வார்த்தைகளில் சொன்னல், எதிர்த்தரப்பினர் புரட்சியின் பூர்ஷ்வா-ஜனநாயகக் கட்டத்தைப் புறக்கணித்துவிட்டு, சீனவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காக உடனடியாகப் போராட்டம் நடத்தும்படி கோரினர். குவோமிந்தானின் நிலச் செயல்திட்டத்தின் நிறைவேற்றத்துக்கான போராட்டம், இந்தச் செயல்திட்டத்தை

உருப்படாமல் அடித்து வந்த குவோமிந்தான் தலைமைப் பீடத்துக்கு எதிராக வெகுஜனங்களைக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சுற்றி அணிதிரட்டுவதற்கு உதவியிருக்கும். இந்தத் திட்டத்தை எதிர்த்தரப்பு அசட்டையாகத் தள்ளிவிட்டது. சீனு முழுவதிலும் விவசாயிகள் புரட்சியைத் துரிதப்படுத்தும்படி கம்யூனிஸ்டு அகிலத்தைத் தூண்டிவிட அது முயன்றது.

1927, ஏப்ரலில் சியாங் காய்-ஷேக்கின் புரட்சிவிரோத ஆட்சி மாற்றத்துக்குப் பின், வலதுசாரிக் குவோமிந்தான்காரர்கள் மிக விரைவில் தூக்கி எறியப்பட்டு விடுவார்கள் என்றும் சீனுவில் ''பாட்டாளி வர்க்கம், விவசாயிகள், நகர ஏழை மக்கள் ஆகியோரின் சர்வாதிகாரம்'' நிலைநாட்டப்படும் என்றும் எதிர்த்தரப்பு உறுதி கூறியது. இதன் தொடர்பாக, ''எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம், முதற்படியாகத் தொழிலாளர் வட்டாரங்களில், சோவியத்துக்கள்'' என்ற கோஷம் முன்வைக்கப்பட்டது.[1] சோவியத்துக்கள் பற்றிய கோஷத்தை எதிர்த்துப் பேசியவர்கள் அனைவரையும் உஹான் இடதுசாரிக் குவோமிந்தான் அரசாங்கத்திலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்ற அசாத்தியமான கோரிக்கையை எதிர்த்தரப்பினர் விடுத்தார்கள்.

இந்தக் கொள்கையைச் செயல்படுத்தும் முயற்சி, புரட்சியின் தொடக்கக் கட்டத்திலேயே சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியைப் படுதோல்விக்கு உள்ளாக்கி இருக்கும். அதோடு, புரட்சியின் அளவையும் வெகுவாகக் குறுக்கி இருக்கும். இந்த அளவு, ஒன்றித்த தேசியக் கூட்டணியில் கம்யூனிஸ்டுகள் நீண்ட காலம் முன்னணிப் படையாகப் பங்காற்றுவதைப் பொறுத்திருந்தது. எதிர்த்தரப்பினரின் செயல்திட்டம் பின்பற்றப்பட்டிருந்தால் சீனப் புரட்சி வெகுஜனக் கட்டத்துக்கு வந்திராது.

கம்யூனிஸ்டு அகிலம் பொது ஜனநாயக கோஷங்களுடன் நடந்த புரட்சிப் போராட்டத்தில் மேலும் மேலும் விரிவான வெகுஜனங்களை ஈடுபடுத்தி, கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை சரியானது என்பதை அவர்கள் இந்தப் போராட்டத்தின் போது சொந்த அனுபவத்தால் கண்டு கொள்ளுமாறு செய்ய முயன்று கொண்டிருந்த சமயத்தில் திரோத்ஸ்கி வெகுஜனங்களின் சொந்த அரசியல் அனுபவத்தின் மாபெரும் முக்கியத்துவம் பற்றிய முடிவை எள்ளி நகையாடினுர். ''குவோமிந்தானின் பழமைப்பற்றுள்ள

---

[1] மை. ஆ. கூ., 495/166/187/157.

தேசிய-பூர்ஷ்வா அரசாங்கம், சியாங் காய்-ஷேக்கின் இராணுவ சர்வாதிகாரம்,... சுருங்கச் சொன்னால், உடைமையாளர்களான ஆளும் வர்க்கத்தாரால் அமைக்கப்பட்ட, புரட்சிகர வெகுஜன இயக்கத்தின் பாதையில் தடையாக விளங்குகிற ஒவ்வொரு நிலையும், இந்தச் சித்தாந்தத்தின்படி, மாபெரும் வரலாற்றுக் கட்டம் ஆகிவிடும்; 'வெகுஜனங்கள் தாங்களே' இந்தத் தடையைப் புரட்டி அகற்றும் வரை நம்முடைய கொள்கை இந்தக் கட்டத்துக்குத் தன்னை இசைவித்துக் கொள்ள வேண்டும்.''[1]—கம்யூனிஸ்டு அகிலத்தின் நோக்குநிலையை இவ்வாறு சித்திரித்தார் திரோத்ஸ்கி. வரலாறு திரோத்ஸ்கியைக் குரூரமாக எள்ளி நகையாடியது: சியாங் காய்-ஷேக்கின் சர்வாதிகாரத்தைப் புரட்டித் தள்ளுவதற்கு, சமரசங்களும் நீண்ட பல ஆண்டுப் போராட்டமும் தேவைப்பட்டன. ''வெகுஜனங்கள் தாங்களே'' இல்லாமல் இந்தக் குறிக்கோளை அடைவதற்கான முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன.

எதிர்த்தரப்பு தன்மீது சுமத்தப் பெரு முயற்சி செய்த செயல் தந்திரப் போக்கைக் கம்யூனிஸ்டு அகிலம் கண்டிப்பாக நிராகரித்து விட்டது. சீனப் புரட்சியின் பிரச்சினைகள் பற்றிய எதிர்த்தரப்பினரின் இடதுசாரி துர்ச்சாகசக் கருத்துக்களின் தொகுப்பைத் தகர்த்து எறிவதில் பெருந் தொண்டு ஆற்றினர் இ. ஸ்தாலின். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவில் சீனப் பிரச்சினை குறித்து நடந்த விவாதங்களிலும், பொருத்தமான தஸ்தாவேஜுகளைத் தயாரிப்பதிலும், சீனவில் கம்யூனிஸ்டு அகிலத்தினது கொள்கையின் அடிப்படைப் போக்குகளை வகுப்பதிலும் அவர் ஊக்கத்துடன் பங்கெடுத்துக் கொண்டார்.

1927ல் புரட்சிச் சக்திகளின் தோல்விக்குப் பின் சீனவில் உருவான நிலைமையைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு தனது ஒன்பதாவது முழுக் கூட்டத்தில் (1928, பிப்ரவரி 9-25) ஆராய்ந்தது. ''தொழிலாளர்கள் விவசாயிகளின் விரிவான புரட்சி இயக்கத்தின் முதல் அலை'' படு தோல்விகளில் முடிந்துவிட்டது என்று கம்யூனிஸ்டு அகிலம் கூறியது. ''நாடு அனைத்திலும் பரவிய அளவில் வெகுஜனப் புரட்சி இயக்கத்தின் புதிய விறல் மிக்க ஏற்றம் இன்னும் ஏற்படவில்லை'' என்றும், பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியின் பொருளாதாரப் பணிகளோ, வர்க்கப் பணிகளோ, தேசியப் பணிகளோ இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்றும், சீனப்

---

1 மை. ஆ. கூ., 495/166/196/151.

புரட்சி சோஷலிஸப் புரட்சியாக வளர்ந்து விட்டது என்றோ ''நிரந்தரமானது'' என்றோ எண்ணுவது சரியாகாது என்றும் கம்யூனிஸ்டு அகிலம் கூறியது. ''புரட்சியை 'நிரந்தரப்' புரட்சி என்று மதிப்பிடும் அதே சமயத்தில் புரட்சியின் பூர்ஷ்வா-ஜனநாயகக் கட்டத்தைத் தாண்டிக் குதிக்கும் போக்கு, 1905ம் ஆண்டு திரோத்ஸ்கி செய்தது போன்ற தவறு ஆகும். அரைக் காலனிப் புரட்சி என்ற வகையில் சீனப் புரட்சியின் பெருத்த தேசியத் தனித் தன்மையையும் சேர்த்துப் பார்க்கும்போது இந்தத் தவறு இன்னும் அதிகத் தீங்கு விளைப்பது ஆகிவிடுகிறது.''[1]

சீனாவில் புரட்சி இயக்கம் முற்றிலும் ஒரு சீரின்றி நடக்கிறது என்றும் முழுக் கூட்டம் குறித்தது. ''தற்போதைய நிலை என்னவென்றால், அனேக மாநிலங்களில் விவசாயிகள் இயக்கம் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்து வருகையில் அனேகத் தொழில் மையங்களில் முன் ஒருபோதும் கேட்டிராத அளவு கொடுமையான புரட்சி எதிர்ப்புப் பயங்கர நடவடிக்கைகளின் இடுக்கிகளில் நசுக்குண்டு வலிவிழந்துவிட்ட தொழிலாளர் இயக்கம் ஓரளவு இறங்குமுகமான கட்டத்தில் இருக்கிறது என்பதாகும்.'' சீனப் புரட்சியின் அசாதாரண முக்கியத்துவம் உள்ள தனித்தன்மையைக் கம்யூனிஸ்டு அகிலம் 1928ன் தொடக்கத்திலேயே இவ்வாறு குறித்துக் காட்டியது, அடுத்து வந்த ஆண்டுகளில் புரட்சியின் போக்கைப் பெருமளவு நிர்ணயித்தது.

லட்சோபலட்சம் தொழிலாளி, விவசாயி வெகுஜனங்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவது, அவர்களுக்கு அரசியல் கல்வி அளிப்பது, கட்சியையும் அதன் கோஷங்களையும் மையமாகக் கொண்டு அவர்களை ஒழுங்கமைப்பது, அவர்களது அன்றாடப் போராட்டத்தை வழிகாட்டி நடத்துவது ஆகியவையே இந்தக் காலப் பகுதியில் சீனக் கம்யூனிஸ்டுகளின் முக்கியப் பணி என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கருதியது. குவோமிந்தான் தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுக் கட்சி வேலை செய்வதன் அவசியத்தைச் செயற்குழு வலியுறுத்தியது. ''சோவியத் முறைக்கு உள்ளாக்கப்பட்ட விவசாயப் பிரதேசங்களில்'' நிலப் புரட்சியைச் செயல்படுத்துவதும் செஞ்சேனைப் படைப்பிரிவுகளை, பிற்காலத்தில் சீனா அனைத்துக்கும் பொதுவான ஒரே செஞ்சேனையாக அவற்றை ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் நிறுவுவதும் கம்யூனிஸ்டுக்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 763.

கட்சியின் முக்கியப் பணி என்று செயற்குழு கருதியது. நாட்டுப் புறங்களிலும் நகரங்களிலும் ஒன்றிணைந்த பொதுப் போராட்டங்களுக்கு ஏற்பாடு செய்யும்படி சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியை அது பணித்தது.

கான்டோன் நகரில் நடந்த கிளர்ச்சியை (1927, டிசம்பர்), ''சீனாவில் சோவியத் ஆட்சியை ஏற்படுத்தப் பாட்டாளி வர்க்கம் செய்த வீர முயற்சி'' என்று செயற்குழு வருணித்தது. அதே சமயம், கிளர்ச்சியில் ஆழ்ந்த தவறுகளும் நிகழ்ந்தன என்று அது குறித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், படையினர் ஆகியோரிடையே முன்னேற்பாடுகள் போதிய அளவு செய்யப்படாதது, குவோமிந்தான் தொழிற்சங்க உறுப்பினர்களான தொழிலாளர்களை அணுகிய சரியற்ற முறை, கான்டோன் நிகழ்ச்சிகள் பற்றி அனைத்துச் சீனக் கட்சி மையத்துக்குத் தகவல் தெரிவிக்காதது ஆகியவை இந்தத் தவறுகள் என்று செயற்குழு கூறியது. ''தலைவர்களின் இந்தத் தவறுகள் இருப்பினும், கான்டோன் கிளர்ச்சி, மாபெரும் சீனப் புரட்சியின் முதல்வன் என்ற வரலாற்றுச் சிறப்புள்ள பாத்திரத்தை வகிக்கத் தகுதியுடன் விரும்புபவர்களான சீனத் தொழிலாளர்களின் மாண்பு மிக்க வீரத்துக்கு எடுத்துக்காட்டாகக் கருதப்பட வேண்டும்.''[1] வன்முறையால் அரசாங்கத்தைக் கைப்பற்றுவது, ''கிளர்ச்சியுடன் விளையாடுவது'' அபாயமானது என்று கம்யூனிஸ்டு அகிலம் சீனக் கம்யூனிஸ்டுகளை எச்சரித்தது.

நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும், எட்டு மணி நேர வேலை நாள் அமுலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள், சீனாவின் தேசிய ஒருமைப்பாடு, ஏகாதிபத்திய நுகத்திலிருந்து அதன் விடுதலை, நிலவும் ஆட்சி அகற்றப்படுவது, பாட்டாளிகள், விவசாயிகளின் சர்வாதிகாரம் நிலைநாட்டப்படுவது, சோவியத்துக்கள் ஏற்படுத்தப்படுவது ஆகியவற்றைக் கோஷங்களாக வைத்துக்கொள்ளும்படி கம்யூனிஸ்டுக் கட்சிக்குச் செயற்குழு யோசனை கூறியது. சீனப் பிரச்சினையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் அரசியல் கொள்கைப் போக்கு மாறிவிட்டதை, பாட்டாளி வர்க்கத்தினதும் விவசாயிகளதும் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரத்தின் உறுப்புக்கள் என்ற முறையில் சோவியத்துக்களை அமைக்கும் கோஷத்துக்கு அது அளித்த ஆதரவு காட்டியது. குவோமிந்தான் தலைமைப் பீடத்தின் துரோகம், 1925-1927ம் ஆண்டுப்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 766.

புரட்சியின் தோல்வி, விரிவான ஏகாதிபத்திய விரோத தேசியக் கூட்டணி அமைப்பதற்கு ஏற்ற நிலைமைகள் அப்போது இல்லாதது ஆகியவற்றின் காரணமாக உருவாகியிருந்த புதிய சூழ்நிலையில் இந்த மாறுதல் ஏற்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலமும் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியும்

தேசிய-காலனிப் பிரச்சினையில் கம்யூனிஸ்டு அகிலம் கடைப்பிடித்த செயல்தந்திரப் போக்கு சரியானது என்பதற்கு, இந்தோனீசியாவில் நடந்த விடுதலை இயக்கம், கம்யூனிஸ்டு இயக்கம் ஆகியவற்றின்பால் அது மேற்கொண்ட கொள்கை துலக்கமான எடுத்துக்காட்டாக விளங்கியது.

ஐந்தாவது முழுக் கூட்ட நடவடிக்கைகள் முடிந்ததுமே கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, முழுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்தையும் அதிகப்படியான விளக்கங்களையும் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுகளுக்கு அனுப்பியது. ''ஸரேக்கத் ரக்கியாத் தனது உறுப்பினரின் தன்மையிலும் கொள்கைவாதத்திலும் குட்டி பூர்ஷ்வா ஸ்தாபனம். எனவே இந்த நிலையில் அது தேசிய விடுதலைச் செயல்திட்டம் கொண்டிருக்க வேண்டுமே தவிரப் போலிக் கம்யூனிஸச் செயல்திட்டம் அல்ல''[1] என்று செயற்குழு வலியுறுத்தியது.

கணிசமான எண்ணிக்கையுள்ள விவசாயி வெகுஜனங்கள் உறுப்பினராயிருந்த ஸரேக்கத் ரக்கியாத் ஸ்தாபனத்தைக் கலைத்து விடுவது என்று இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் டிசம்பர் (1924) மகாநாடு செய்த முடிவுக்கு எதிராகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கருத்து தெரிவித்தது. ''பெரும்பான்மையான விவசாயிகளின் செயலூக்கமுள்ள ஆதரவைப் பெறுமல் போராட்டத்தில் வெற்றி பெறலாம் என்று பாட்டாளி வர்க்கம் நம்பக்கூடிய நாடு உலகத்தில் ஒன்று கூட இல்லை என்று சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அனுபவம் காட்டி இருக்கிறது... டச்சு ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக இந்தோனீசிய விவசாயிகளின் போராட்டத்தின் தலைமையை நீங்கள் கைவிட்டால் புரட்சியை நீண்ட பல

---

[1] மை. ஆ. கூ., செப்பம் செய்யப்படாத தஸ்தாவேஜுகளின் தொகுப்பு.

ஆண்டுகளுக்குத் தாமதப்படுத்தி விடுவீர்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது''[1] என்று செயற்குழு எழுதியது.

இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இடது சாரிப் பிரிவுவாதப் போக்குகள் அந்தக் காலத்தில் ஆதிக்கம் செலுத்திவந்தன. எனவே கட்சித் தலைவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தீர்மானத்துக்குச் சடங்கு முறையில் இசைந்தார்களாயினும் கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைகளைப் பின்பற்றாமல் பழைய போக்கையே கடைப்பிடித்தார்கள்.

செயற்குழு இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இன்னொரு கடிதம் அனுப்பியது. பிரிவுவாதத் தவறுகளுக்காகவும், விவசாயிகளின் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாததற்காகவும், உழைப்பாளிகளின் அன்றாடக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தை அரசியல் போராட்டத்துடன் ஒன்று சேர்த்து நடத்த விரும்பாததற்காகவும் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைப் போக்கைச் செயற்குழு இந்தக் கடிதத்தில் கடுமையாகத் தாக்கி விமர்சித்திருந்தது.

இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைகளை ''அனுவசியமான ஆணைக் குறிப்புகள்'' என்று கருதியது. தேசிய-புரட்சி ஸ்தாபனமான ஸரேக்கத் ரக்கியாத்தைக் கலைத்ததனால் கட்சிக்கு நேர்ந்த துன்பகரமான விளைவுகளை அது கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. 1926ல் டச்சுக் காலனி ஆட்சியாளர்கள் அடக்குமுறை நடவடிக்கைகளை ஒரேயடியாகத் தீவிரமாக்கியது காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தை, போராட்டத்துக்கு வெகுஜனங்கள் ஆயத்தம் ஆகிவிட்டதன் அறிகுறியாக எடுத்துக்கொண்டு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் ''அதிதீவிர புரட்சி'' நிலைக்கு மாறினார்கள். பின்னர் இதனால் கட்சிக்குத் துன்பகரமான விளைவுகள் ஏற்பட்டன.

1926ம் ஆண்டுக் கோடையில் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிக் குழு கம்யூனிஸ்டு அகிலத்துக்கு வந்தது. 1925ம் ஆண்டு முடிவில் ஸோலோ (மத்திய ஜாவா) என்னும் இடத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் மிகமுக்கியப் பகுதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திய மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் ஸரேக்கத் ரக்கியாத் ஸ்தாபனம், அனேகத் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட மகாநாடு

---

[1] அதே நூல்.

நடைபெற்றதாக அவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கு அறிவித்தார்கள். ''வலிமையுள்ள எதிர்ப்பாலும் கிளர்ச்சியாலும் பிற்போக்காளர்களுக்குப் பதில் கொடுப்பதற்கு எதார்த்தத்தில் போதிய பலம் தன்னிடம் இருப்பதாகக் கட்சி உணர்கிறது''[1] என்று இந்த மகாநாடு முடிவு செய்தது. இந்தோனீசியாவில் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் எண்ணூயிரம் பெயரும் ஸரேக்கத் ரக்கியாத் ஸ்தாபனத்தின் உறுப்பினர்கள் ஒரு லட்சத்து ஆயிரம் பெயரும் இருப்பதாகவும், இருபத்து மூவாயிரம் தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களும் கொண்ட ஒன்பது தொழில் மையங்கள் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மேற்பார்வையில் இருப்பதாகவும் பிரதிநிதிக் குழு கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்குத் தெரிவித்தது.

ஜூலை 22ந் தேதி இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிக் குழு கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவைச் சந்தித்தது. பிரதிநிதிக் குழு தகவல் கொடுத்தது போன்ற புரட்சி நிலைமை இந்தோனீசியாவில் உண்மையாக நிலவுகிறதா என்பது பற்றியும் நடக்கவிருந்த போராட்டத்தின் அரசியல் செயல்திட்டம் பற்றியும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பிரதிநிதிகள் ஆழ்ந்த கவலை கொண்டிருந்தார்கள். செயல்திட்டம் பற்றிய பிரச்சினை கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிக் குழுவுக்கே தெளிவுபடவில்லை. ''மக்கள் அனைவரும் எங்களைப் பின்பற்றுவார்கள். அதன் பிறகு நாங்கள் அரசியல் செயல்திட்டம் வகுப்போம். சந்தேகமின்றி, தருணம் வாய்த்ததுமே நாங்கள் தயாராய் இருந்தால் ஆட்சியையும் கைகளில் எடுத்துக் கொள்வோம்'' என்றார்கள் பிரதிநிதிக் குழுவினர். கிளர்ச்சியில் வெற்றி கிட்டுவது உறுதி என்று பிரதிநிதிக் குழு எண்ணியது.[2]

ஆகஸ்டில் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிகள், கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு உறுப்பினராய் இருந்த இ. ஸ்தாலினைச் சிந்தித்தார்கள். நாட்டில் உள்ள நிலைமை வெகுஜனப் புரட்சிப் போராட்டத்துக்குச் சாதகமாய் இருப்பதாகப் பிரதிநிதிக் குழு அறிவித்தது. கிளர்ச்சிக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுவிட்டன என்பதில் ஸ்தாலின் சந்தே

---

[1] மை. ஆ. கூ., செப்பம் செய்யப்படாத தஸ்தாவேஜுகளின் தொகுப்பு.

[2] அதே நூல்.

கம் தெரிவித்தார். புரட்சியின் தேசிய-ஜனநாயகக் கட்டத்தைத் தாண்டிக் குதிப்பது பயனற்ற முயற்சியாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். 1926 செப்டம்பரில் இந்தோனீசியப் பிரச்சினை பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தீர்மான மசோதா பிரதிநிதிக் குழுவின் பார்வைக்கு வந்தது. தீர்மானத்தின் அடிப்படைக் கருத்துக்கள் இ. ஸ்தாலினுடைய முடிவுகளை ஒத்திருந்தன. பிரதிநிதிக் குழு இந்தத் தீர்மான மசோதாவைக் கடுமையாக எதிர்த்தது.

இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கியப் பணிகளில் ஒன்று, நாட்டின் எல்லாத் தேசிய-புரட்சிச் சக்திகளையும் ஒன்று சேர்த்து, தனது ஸ்தாபன, அரசியல் சுதந்திரத்தை முழுமையாக வைத்துக் கொண்டு ஒன்றித்த தேசியக் கூட்டணியை அமைப்பதாகும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, இந்தோனீசியப் பிரச்சினை குறித்த தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. பிரேரிக்கப்பட்ட போராட்டச் செயல் திட்டத்தின் மையப் புள்ளியாக இருந்தது நாட்டின் சுதந்திரக் கோரிக்கை.

1926, நவம்பரில் டச்சுக் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிரான கிளர்ச்சி நடந்த போது, வீரக் கிளர்ச்சிக்காரர்களுடன் பாட்டாளி வர்க்கத்தினதும் உழைப்பாளிகளதும் விரிவான வட்டாரங்களின் ஒருமைப்பாட்டு இயக்கத்தைக் கம்யூனிஸ்டு அகிலம் தொடங்கி வைத்தது. இந்தோனீசிய மக்களின் கொலையாளிகளான காலனி ஆட்சியாளர்களை உலகம் அனைத்தின் முன்பும் அது கண்டனம் செய்தது. காலனி ஆட்சி நுகத்திலிருந்து நாட்டை விடுவிக்கும் போராட்டத்தில் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சி முன்னணிப் படையாகப் பங்காற்றுவதை அது சுட்டிக் காட்டியது. பிற்காலத்தில் கிளர்ச்சி தோல்வி அடைந்ததன் விளைவாகச் சிதறிப் போயிருந்த கட்சியை மீட்டமைப்பதில் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுகளுக்கு உதவி அளிப்பதில் கம்யூனிஸ்டு அகிலம் பெருத்த தொண்டு ஆற்றியது. இந்தோனீசியாவின் பாட்டாளி அல்லாத ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுக்கும் அது பல முறை ஆதரவு அளித்தது. புரட்சிகர-ஜனநாயகப் பகுதி உறுதியாக நிலைபெற்று அதன் செல்வாக்கு விரிவடைந்த அளவுக்கு ஏற்ப இந்தச் சக்திகள் கம்யூனிஸ்டுகளுடன் ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்கு மேலும் மேலும் அதிகச் சாதகமாயின.

ஏகாதிபத்திய எதிர்ப்புச் சங்கம் அமைக்கப்பட்டது

இந்தக் காலப்பகுதியில் குறிக்கப்பட்ட தேசிய-விடுதலை இயக்கத்தின் ஏற்றம் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் செயலூக்கத்தைத் தீவிரப்படுத்தியது.

1926, பிப்ரவரியிலேயே அனேக ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பெர்லினில் மகாநாடு கூடி, காலனியாதிக்க ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடும் சங்கத்தை அமைத்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் பிரதிநிதிகள் கொண்ட சர்வதேசக் காங்கிரசைக் கூட்டுவது என்றும் மகாநாடு தீர்மானித்தது. மகாநாட்டினுல் தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்பாட்டுக் கமிட்டி காங்கிரசை பிரஸ்ஸல்ஸ் நகரில் கூட்டுவது என்று திட்டமிட்டது. காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் பின்வரும் பிரச்சினைகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு அது யோசனை கூறியது: ஏகாதிபத்தியத்தின் காலனிக் கொள்கையும் காலனிகள் மீதும் அரைக் காலனிகள் மீதும் அதன் செல்வாக்கும்; ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் விடுதலை இயக்கமும் அதற்கு ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர் இயக்கமும் முற்போக்கு ஸ்தாபனங்களும் ஆதரவு அளிப்பதும்; காலனிகளிலும் ஏகாதிபத்திய நாடுகளிலும் தேசிய-விடுதலை இயக்கம், தொழிலாளர் இயக்கம் ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கைகள்; எல்லா நாடுகளதும் தேசிய-விடுதலை இயக்கத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் ஒன்றுபடுத்தும் நோக்கத்துக்காகக் காலனியாதிக்க ஒடுக்கு முறைக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான நிரந்தர சர்வதேச ஸ்தாபனத்தை அமைப்பது.

காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான சர்வதேசக் காங்கிரஸ் **1927,** பிப்ரவரி **10**ந் தேதி பிரஸ்ஸல்ஸ் நகரில் கூடியது. **37** நாடுகளைச் சேர்ந்த **137** முற்போக்கு ஸ்தாபனங்களின் **152** பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்து கொண்டார்கள். ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் பிரதிநிதிகளும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்க, அறிவுஜீவிப் பிரதிநிதிகளும் இவர்களில் இருந்தார்கள்.

பிரிட்டிஷ், இந்திய, சீனப் பிரதிநிதிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து பிரேரித்த தீர்மானம் காங்கிரசால் ஏற்கப்பட்ட மிக முக்கிய தஸ்தாவேஜுகளில் ஒன்று.

ஏகாதிபத்திய நாடுகளின் தொழிலாளி வர்க்கம் தேசிய-விடுதலை இயக்கத்தின் விஷயத்தில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்

புக்கள் இந்தத் தீர்மானத்தில் சூத்திர வடிவில் தரப்பட்டிருந் தன. இவையாவன: ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் முழு விடு தலையின் பொருட்டு அவற்றுடன் தோளோடு தோள் சேர்த்துப் போராடுவது; காலனிகளின் மக்களை நசுக்குவதற்காகவும் காலனி அமைப்பை நிலையாக வைத்திருப்பதற்காகவும் கோரப்படும் கடன்களுக்கு எதிராக வாக்களிப்பது; ஏகாதிபத்தியத்தின் கொள் கையை அம்பலப்படுத்துவது, ''வர்க்கப் போராட்டம் பற்றிய போதனைக்கு இணங்க விடுதலை பெற முயல்வது''.[1] சீனுவிலிருந்து எல்லா வெளி நாட்டுப் படைகளும் உடனே வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தியா பற்றிய தீர்மானத்தில் அயல்நாட்டு ஒடுக்கு முறையிலிருந்து அதன் முழு விடுதலைக்கான இயக்கத்தைக் காங்கிரஸ் உறுதியாக ஆதரித்தது. இந்தியாவுக்குத் துருப்புக்கள் கொண்டு செல்லப்படுவதைத் தடுக் கும் பொருட்டுத் தேவையான நடவடிக்கைகளை மற்ற நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கமும் மக்களும் மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையைக் காங்கிரஸ் வெளியிட்டது. சிரியாவில் காலனி ஆட்சியாளர்களின் செயல்களைக் காங்கிரஸ் நிந்தித்தது.

சர்வதேசத் தொழிலாளர் உதவி ஸ்தாபனத்தின் மத்தியக் கமிட்டிப் பொதுச் செயலாளர் மியூன்ஸென்பெர்கின் அறிக்கைப் படி ''ஏகாதிபத்தியத்துக்கும் காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கும் எதிரான, தேசிய-சுதந்திரத்துக்கு ஆதரவான சங்கம்'' என்ற பெயரால் ஒரு சர்வதேச ஸ்தாபனம் அமைப்பது என்று தீர்மானிக் கப்பட்டது. முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு எதிராக வும், எல்லா நாட்டினங்களதும் சுயநிர்ணய உரிமை, எல்லா மக்களினங்களதும் தேசிய விடுதலை, மக்கள் இனங்களுடையவும் எல்லா மனிதர்களதும் சம உரிமை ஆகியவற்றை ஆதரித்தும் போராடுபவையும், பிரஸ்ஸல்ஸ் காங்கிரசின் தீர்மானங்களை ஒப்புக்கொள்பவையுமான எல்லா ஸ்தாபனங்களும் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தனி நபர்களும் சங்க உறுப்பினர் ஆக முடியும் என்று தீர்மானம் குறித்தது.

''எல்லா ஒடுக்கப்பட்ட மக்களினங்களுக்கும் வர்க்கங்களுக் கும்'' காங்கிரஸ் ஓர் அறிக்கை விடுத்தது. ''காங்கிரசில் கூடியுள்ள உலகின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களினங்

---

[1] Das Flammenzeichen vom Palais Egmont. Offizielles Protokoll des Kongresses gegen koloniale Unterdrückung und Imperialismus. Brüssel, 10-15 Februar 1927, Berlin 1927, S. 52.

களுடையவும் தொழிலாளி வர்க்கத்தினுடையவும் பிரதிநிதிகள், தங்கள் அடிப்படை உரிமைகளையும் தங்கள் வளர்ச்சியையும் உறுதிப்படுத்தும் பொருட்டுத் தங்களுக்குள் சோதர ஐக்கியம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்... ஒடுக்கப்பட்ட மக்களினங்களே, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களே, ஒன்று சேருங்கள்!''[1] என்று காங்கிரஸ் அறைகூவி அழைத்தது. 1927, பிப்ரவரி 16ந் தேதி இதழில் ''பிராவ்தா'' செய்தித்தாள் பிரஸ்ஸல்ஸ் காங்கிரசின் நடவடிக்கைகள் பற்றிப் பின்வருமாறு எழுதியது: ''ஒரு முறை எழுப்பப்பட்டு விட்ட இந்தக் கோஷத்தை எந்தக் கூச்சல்களாலும் அமுக்கி விட முடியாது. 'உலகத் தொழிலாளர்களே, உலகின் ஒடுக்கப்பட்ட மக்களே, ஒன்று சேருங்கள்!' ''

கம்யூனிஸ்டு அகிலம் சங்கத்தின் வேலையில் எல்லா வகையாலும் ஒத்துழைத்தது. பல்வேறு ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் ஒன்றித்த கூட்டணி ஸ்தாபனம் என அது சங்கத்தை மதித்தது.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவ நாடுகளின் முற்போக்கு அறிவுஜீவிகள், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்கக் காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த மக்களினங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய ஒன்றித்த கூட்டணியின் முதலாவது விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனமாக இருந்தது இதுவே. எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த பெருந்தொகையான அரசியல், தொழிற்சங்க, பண்பாட்டு, சமூக ஸ்தாபனங்கள் அதில் இணைந்து கொண்டன.

1929, ஜூலையில் கி. திமீத்ரொவ் எழுதினார்: ''சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்புச் சங்கம்... முதன்மையாகப் பெரிய காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடும் பொருட்டு நிறுவப்பட்டது... அது பால்கன் நாடுகளையும் உள்ளடக்கி இருக்கிறது... மக்களினங்களின் பொதுக் கூட்டணியை பால்கன் தீபகற்பத்திலிருந்து சீனு, இந்தியா, லத்தீன் அமெரிக்கா, சிரியா, மொரோக்கோ, எகிப்து, ஆப்கனிஸ்தான், ஈரான் முதலியவைவரை ஏகாதிபத்திய எதிர்ப்பு உலகக் கூட்டணியாக விரிவாக்கி இருக்கிறது.''[2]

---

[1] Das Flammenzeichen vom Palais Egmont, S. 243-250.

[2] கி. திமீத்ரொவ், பொறுக்கி எடுத்த நூல்கள். மாஸ்கோ, 1957, தொகுதி 1, பக்கம் 310.

சோவியத் விரோத யுத்த
அபாயம் தீவிரமடையும்
நிலையில் கம்யூனிஸ்டு
அகிலத்தின் செயல்

யுத்தத்துக்கும் யுத்த அபாயத்துக்கும் எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளும் சீனப் புரட்சி சம்பந்தமான பிரச்சினைகளும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் எட்டாவது முழுக் கூட்டத்தால் ஆலோசனை செய்யப்பட்ட முக்கியப் பிரச்சினைகளாக இருந்தன.

1927ம் ஆண்டு வசந்தத்தில் ஏகாதிபத்திய அரசுகளின் ஆளும் வட்டாரங்கள் சோவியத் நாட்டுக்கு ஏதிராக அனேக ஆத்திரமூட்டும் சூழ்ச்சிகளை நடத்தின. அந்தக் காலத்தில் சர்வதேச ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் மிக மிக ஊக்கமாகப் பங்காற்றியது பிரிட்டன். 1927, ஏப்ரல் 6ந் தேதி, பீக்கிங் நகரில் இருந்த இராணுவ அதிகாரிகளுடைய சில நூறு அரசியல் போலீசாரும் படையினரும் சோவியத் அரசியல் பிரதிநிதி நிலையத்தைத் தாக்கி தூதரக ஊழியர்களைச் சோதனை போட்டார்கள். இந்த ஆத்திரமூட்டும் சூழ்ச்சியை ஒழுங்கமைத்தது பிரிட்டிஷ் ஒற்றர் படை. சோதனையின் போது கைப்பற்றப்பட்டதாகப் புனைந்துரைத்த சில கள்ள தஸ்தாவேஜுகளின் உதவியால் பிரிட்டிஷ் அரசாங்கம் சோவியத் யூனியன் மீது சீனாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டவும் சோவியத் யூனியனுக்கும் வட சீனச் சைனியவாதிகளுக்கும் இடையே இராணுவ மோதலைத் தூண்டிவிடவும் முயன்றது. அதே சமயம் ஷங்காயிலிருந்த சோவியத் கான்சல் நிலையம் முற்றுகை இடப்பட்டது. இதற்குச் சில நாட்கள் பின்னர் சியாங் காய்-ஷேக் இராணுவ பலத்தால் ஆட்சியைக் கைப்பற்றி, அதன் மூலம் சீனப் புரட்சிச் சக்திகளுக்குப் பலத்த அடி கொடுத்து விட்டார்.

பீக்கிங்கில் நடந்த ஆத்திரமூட்டும் சூழ்ச்சி பற்றிய தகவல் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவுக்குக் கிடைத்ததுமே அரசியல் செயலகம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குப் பின்வரும் தந்தியை அனுப்பியது: ''பீக்கிங்கில் சோவியத் தூதரகம் தாக்கி நொறுக்கப்பட்டது, ஆட்கள் கைது செய்யவும் அடிக்கவும் பட்டது, ஷங்காயில் சோவியத் கான்சல் நிலையம் ஆங்கிலேயர்களால் முற்றுகை இடப்பட்டது ஆகியவை அரச தூதர் குழுவின் அனுமதியுடன் செய்யப்பட்டன. இந்தச் சூழ்ச்சியை ஏற்பாடு செய்தது பிரிட்டன் என்

பதில் சந்தேகமில்லை. சோவியத் யூனியனுடன் யுத்தத்தைத் தூண்டி விட அது முயல்கிறது. சீனத் துறைமுகங்கள் ஏகாதிபத்தியவாதிகளால் கைப்பற்றப்படுகின்றன. நிலைமை மட்டுமீறிக் கெடுபிடி நிறைந்ததாய் இருக்கிறது. சீனப் புரட்சிக்கு எதிரான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்த அபாயம் தோன்றி இருக்கிறது. மிக மிக விரிவான வெகுஜனங்களைத் தட்டி எழுப்புவதும் எல்லாத் துணை நிறுவனங்களையும் இளைஞர்களையும் பயன்படுத்துவதும் எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளதும் கடமை ஆகும். பிரிட்டிஷ் விரோத வெகுஜன ஆர்ப்பாட்டங்களை, முடிந்த இடங்களில் எல்லாம் பிரிட்டிஷ் தூதரகங்களுக்கும் கான்சல் நிலையங்களுக்கும் முன்னர் ஆர்ப்பாட்டங்களை மிக மிகக் குறுகிய கெடுவுக்குள் நடத்துவது கட்டாயமாக இன்றியமையாததாகும். சாத்தியமான இடங்களில் நாடாளுமன்றங்களில் கேள்விகள் கேட்பதும் அரசாங்கங்களின் நிலை தெளிவாக விளக்கப்படுமாறு கோருவதும் இன்றியமையாதவை''.[1] யுத்த அபாயம் நிலவியதால் கம்யூனிஸ்டு அகிலம் உலகு அனைத்தின் கம்யூனிஸ்டுகளையும் இயக்கத்துக்குத் தூண்டியது. யுத்தத்துக்கு எதிராக உழைப்பாளிகளின் வெகுஜன ஆர்ப்பாட்டங்களைக் கம்யூனிஸ்டுகளே முன்னின்று நடத்தினார்கள்.

ஆனால் பிற்போக்காளர்கள் தங்கள் ஆத்திரமூட்டும் சூழ்ச்சிகளை நிறுத்தவில்லை. பிரிட்டிஷ் போலீஸ், லண்டனில் இருந்த சோவியத் வணிக தூதரகத்திலும் பிரிட்டிஷ்சோவியத் ஐக்கிய மூலதனக் கம்பெனியிலும் மே மாதம் 12ந் தேதி புகுந்தது. ''இழுக்கு உண்டாக்கும் பொருள்களை'' சூழ்ச்சியாளர்கள் நான்கு நாட்கள் இடைவிடாது வீணே தேடினார்கள். விரைவில் பிரிட்டிஷ் அரசாங்கம் சோவியத் யூனியனுடன் தூதரக உறவுகளைத் துணித்துக் கொண்டு விட்டது. இதற்குப் பத்து நாட்கள் பின்னர் வார்ஸாவில் சோவியத் அரசியல் பிரதிநிதி வோய்கவ் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவன் புரட்சி எதிர்ப்பு வெண்படையினன், ஆனால் தடங்கள் மீண்டும் லண்டனுக்கு இட்டுச் சென்றன. சர்வதேச நிலைமை வரவர அதிகக் கெடுபிடி நிறைந்தது ஆயிற்று.

நெருங்கி வந்து கொண்டிருந்த புதிய ஏகாதிபத்திய யுத்த அபாயத்தை எதிர்த்துத் தடுப்பது தொழிலாளி வர்க்கத்தின் கடமை ஆயிற்று. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின்

---

[1] மை. ஆ. கூ., 495/3/18/2.

எட்டாவது முழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: ''உலகு அனைத்தின் தொழிலாளி வெகுஜனங்களும் முன் எப்போதையும் விட அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் தங்கள் அணிகளை நெருக்கமாக வகுத்துக் கொள்ள வேண்டும். சீனாவில் ஏற்கனவே தொடங்கிவிட்ட யுத்தத்துக்கும் சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியனுக்கு எதிராக ஏற்பாடு ஆகிக் கொண்டிருக்கும் யுத்தத்துக்கும் எதிர் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு எல்லாச் சக்திகளையும் அவர்கள் அணி திரட்ட வேண்டும்.''[1]

யுத்தத்தை மூட்டிவிடுவது ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கம். இதன் பொருட்டு அவர்கள் தொழிலாளி வர்க்கத்தை நசுக்குவதற்கு பாசிஸ்டு, பயங்கரவாத முறைகளைக் கையாள்கிறார்கள், இந்த முறைகளை ''சர்வதேச அளவில் பரப்புகிறார்கள்'' என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் எட்டாவது முழுக் கூட்டம் சுட்டிக் காட்டியது. ''யுத்தத்தை நடத்துவதற்கு 'அமைதியான பின்புலம்' முதலாளித்துவத்துக்குத் தேவை. தற்கால யுத்தத்தின் தன்மை காரணமாக, போர் முனையில் திரளான ஆட்களோடு கூடவே, யுத்த இயந்திரத்தைச் செலுத்துவதற்குப் பிரமாண்டமான தொழிற்சாலைச் சேனைகளும் தேவைப்படுகின்றன. எனவே, இந்த மனிதர்கள் யுத்த இயந்திரத்தின் திருகாணிகள் ஆகி விட வேண்டும். போராட்டத்துக்கான அவர்களுடைய சித்த உறுதி மாய்க்கப்பட வேண்டும்...''[2]

சர்வதேச ஏகாதிபத்தியம் சோவியத் யூனியனுக்கு எதிராகச் ''சிலுவைப் போர்'' நடத்த ஆயத்தம் செய்து கொண்டிருந்த சூழ்நிலையில் வலதுசாரி சமூக-ஜனநாயகம் ஏகாதிபத்தியக் கொள்கையின் ''மிதமற்ற கடுமையைச்'' சொல்லளவில் நிந்தித்ததே தவிர அதற்கு எதிராக எவ்விதப் பயனுள்ள நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. அதன் இந்தப் போக்கு புரட்சிகரத் தொழிலாளர்களுக்கு ஆத்திரம் ஊட்டியது. யுத்தத்துக்குக் கொள்கைவாத முன்னேற்பாடுகள் செய்யும் பொறுப்பை சமூக-ஜனநாயகமும் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலமும் எடுத்துக் கொண்டிருப்பதாகக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தீர்மானம் கூறியது. சமாதானத்துக்கு எல்லாவற்றிலும் அதிக ஆபத்து

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 699.

[2] அதே நூல், பக்கம் 703.

விளக்கும் காரணி ''உலக போல்ஷிவிஸமே'' என்று சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் தனது மார்சேல்ஸ் காங்கிரசில் அறிவித்திருந்தது. எனவே, கம்யூனிஸ்டுக் கட்சிகள் யுத்த அபாயத்தைக் குறைத்து மதிப்பிடுவதை நிறுத்த வேண்டும் என்று கம்யூனிஸ்டு அகிலம் வேண்டிக் கொண்டது.

பூர்ஷ்வாப் பத்திரிகைகள் உழைப்பாளிகளின் தேசிய உணர்ச்சிகளை வஞ்சகச் சொற்ருெடர்களால் தூண்டி விட்டன. சோவியத் யூனியனுக்கு ஆபத்து விளைக்கும் யுத்த அபாயத்துக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலம் ''சோவியத் யூனியனின் நலன்களுக்காகப்'' பாடுபடுகிறது என்று அவை கூச்சலிட்டன. ஆனுல் அரசியல் உணர்வுள்ள உழைப்பாளிகள் உண்மை நிலவரத்தை அறிந்திருந்தார்கள். சோவியத் யூனியனில் சோஷலிஸப் புரட்சியால் பெறப்பட்டுள்ள நலன்களைக் காப்பதன் வாயிலாக, உலகப் புரட்சியின் முக்கிய அரணை, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஆதாரத் தம்பத்தை, மிக முக்கியமான ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியைப் பாதுகாக்கிருேம், அவ்வாறு செய்வதனுலேயே சொந்த மக்களின் உண்மைத் தேசிய நலன்களுக்குத் தொண்டு ஆற்றுகிருேம் என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் எட்டாவது முழுக் கூட்டம், திரோத்ஸ்கிவாதிகளின் இடையருத உட்குழுச் செயல்கள் மீது மீண்டும் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. திரோத்ஸ்கி முழுக் கூட்டத்தில் பல முறை பேசினுர். கம்யூனிஸ்டு அகிலத்தின் மீதும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மீதும் அவதூறுகளைச் சொரிந்தார். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கைவிடும்படி அவர் கோரினுர். முதலாளித்துவத்தின் நிலைப்பாடு தகர்ந்துவிட்டது என்று எதிர்த்தரப்புத் தலைவர் பின்னும் ஒரு முறை ''கண்டுபிடிப்பு'' செய்தார். இந்த வலிந்துரை ஆதாரமற்றது, கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் தொழிலாளி வர்க்கத்தையும் தவருன திசையில் செலுத்துவது என்று முழுக் கூட்டத்தில் காட்டப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் மீதும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மீதும் திரோத்ஸ்கியினதும் அவருடைய தரப்பாளர்களதும் தாக்குதல்களை பூர்ஷ்வாப் பிரசாரகர்கள் ஆர்வத்துடன் பற்றிக் கொண்டு சோவியத் யூனியனுக்கு எதிரான அவதூறுகள் நிறைந்த கிளர்ச்சிப் பிரசாரத்தில் விரிவாகப் பயன்படுத்தினுர்கள். திரோத்ஸ்கி முழுக் கூட்டத்தில் தமது பேச்சுக்களை உட்குழு நோக்கங்களுக்காக

மட்டுமே பயன்படுத்தினர். திரோத்ஸ்கியின் பேச்சுக்களும் அவரைப் பின்பற்றியவர்களின் பேச்சுக்களும் "உலகனைத்தினதும் கம்யூனிஸ்டுகளின் கூட்டணிக்கு எதிராக அரசியல் ஒடுகாலித் தனிநபர்களின் புகலற்ற போராட்டம்"[1] என்று முழுக் கூட்டத்தின் தீர்மானங்களில் கூறப்பட்டது.

திரோத்ஸ்கி உட்குழு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தக் கூடாது என்று முழுக் கூட்டம் திட்டவட்டமாகத் தடை விதித்து விட்டது. முழுக் கூட்டத்தின் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப் படாவிட்டால் திரோத்ஸ்கியைச் செயற்குழு உறுப்பினர் பதவி யிலிருந்து நீக்கிவிடும்படி செயற்குழுவின் தலைமைக் குழுவுக்கு அது அதிகாரம் அளித்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கையையும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் கொள் கையையும் எதிர்த்து "இறுதிவரை" போராடப் போவதாகத் திரோத்ஸ்கி முழுக் கூட்டத்தில் அறிவித்தார். அவர் தம் ஆயுதங் களைப் போட்டு விடாமல் உட்குழு நடவடிக்கைகளைத் தொடர்ந் தார். எட்டாவது முழுக் கூட்டத்தின் தீர்மானப்படி கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு திரோத்ஸ்கியைச் செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியது. திரோத்ஸ்கிவாத எதிர்த்தரப்பு கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்து களைந்து எறியப் பட்டது. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தால் கண்டனத்துக்கு உள்ளாக்கப்பட்ட எதிர்த்தரப்பு அதன் எதிரிகளின் ஆதரவை மேலும் மேலும் அதிக அளவில் பெற்றது. கம்யூனிஸ்டு அகிலத்துக் கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிக்கும் எதிரான போராட்டத்தில் எதிர்த்தரப்பு தங்கள் கூட்டாளி என்று பகைவர்கள் கருதினர்கள். மென்ஷிவிக் செய்தித்தாளான "சோஷ லிஸ்டு வேஸ்த்னிக்" 1927, ஜூன் மாதம் பின்வருமாறு எழுதி யது: "ஸ்தாலின் பெரும்பான்மை மீது எதிர்த்தரப்பின் தாக்கு தல்களின் முக்கியத்துவம் எதிர்த்தரப்பின் செயல்திட்டத்தில் அல்ல, அதன் விமர்சனத்தில், போல்ஷிவிஸத்தைச் சிதைத்ததில், சர்வாதிகாரத்தின் 'ஒற்றைப் பாறை போன்ற' உறுதியான கட்டி டத்தை ஆட்டி அசைத்ததில், கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கை வாத, ஸ்தாபன அஸ்திவாரங்களைத் தகர்த்ததில் தான் அடங்கி இருக்கிறது."[2]

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கங்கள் 744-745.

[2] மை. ஆ. கூ., 17/2/317/14.

அந்தக் காலப் பகுதியில் சோவியத் யூனியன் வெளிநாட்டுக் கொள்கை அரங்கில் கணிசமான வெற்றிகள் பெற்றிருந்தது. சோவியத் யூனியனுக்கு எதிராக முதலாளித்துவ அரசுகளின் ஒன்றித்த கூட்டணி அமைப்பதில் போர் வெறியினருக்கு வெற்றி கிட்டவில்லை. போல்ஷிவிக் கட்சியும் அதன் மத்தியக் கமிட்டியும் லெனினது சமாதானக் கொள்கையைப் பிறழாது கடைப்பிடித்தது யுத்தம் மூளாது தடுப்பதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றியது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டி, மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் ஆகியவற்றின் ஒன்றித்த முழுக் கூட்டம் 1927 ஜூலை-ஆகஸ்டில் நடந்தது. சமாதானத்தைப் பாதுகாப்பதன் இன்றியமையாமையை முழுக் கூட்டம் தன் தீர்மானங்களில் விளக்கியது. சமாதானம் "ஆண்டுக்கு ஆண்டு, மாதத்துக்கு மாதம் பாட்டாளி வர்க்க அரசின் நிலையை மேலும் வலுப்படுத்துகிறது"[1] என்று அது வலியுறுத்தியது.

சோவியத் யூனியனுக்கு எதிராகப் புதிய தலையீட்டுத் திட்டங்கள் முறிந்து போனதற்கு இன்னொரு காரணம், உலகு அனைத்தினதும் உழைப்பாளி மக்களின் மதிப்பில் சோவியத் யூனியனின் செல்வாக்கு வளர்ந்து வந்ததை ஏகாதிபத்திய அரசாங்கங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியாதது ஆகும். சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் ஒடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த தேசிய-புரட்சிச் சக்திகளும் சோவியத் யூனியனைத் தங்கள் அரணாகவும் வருங்கால நம்பிக்கையாகவும் மதித்தன.

சோவியத் நாட்டின் மீது உழைப்பாளி மக்கள் கொண்டிருந்த பற்று மாபெரும் அக்டோபர் புரட்சியின் பத்தாவது ஆண்டு விழா நாட்களில் சிறப்பாகத் துலக்கமாக வெளிப்பட்டது. தொழிலாளர்கள், விவசாயிகளின் முதலாவது அரசின் பத்தாண்டு விழாவை உலகனைத்திலும் இருந்த லட்சக் கணக்கான ஒடுக்கப்படுபவர்களும் சுரண்டப்படுபவர்களுமான மக்கள் தங்கள் சொந்தத் திருநாளாகக் கொண்டாடினார்கள். சோவியத் யூனியன் மீது அவதூறுகளைப் பொழிந்த பூர்ஷ்வாப் பிரசாரத்தின் முயற்சிகளுக்கு விடையாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியும் சோவியத் அரசாங்கமும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த உழைப்பாளிப் பிரதிநிதிக் குழுக்களுக்கும் காலனிகள், அரைக்காலனிகளின் ஒடுக்

---

[1] சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி தீர்மானங்களில், பாகம் 11, பக்கம் 363.

கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுக்கும் ''திறந்த கதவுக் கொள் கையைக்'' கடைப்பிடித்தன. டஜன் கணக்கான பிரதிநிதிக் குழுக் கள் சோவியத் யூனியனுக்கு வருகை தந்தன. சோவியத் மக்களின் வாழ்க்கையை நேரில் கண்டு அறிந்ததன் விளைவாக, அண்மைக் காலம் வரை ஒடுக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டிருந்த ருஷ்யாவின் உழைப்பாளி மக்கள் மாபெரும் நாட்டின் எஜமானர்கள் ஆகிவிட் டார்கள் என்ற முடிவுக்கு அவை வந்தன. சோஷலிஸக் கட்டுமானத் தின் பிரமாண்டமான காட்சியை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கண்கூடாகக் கண்டார்கள். தொழிலாளர்களின் உழைப்பு உற்சா கம் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. உறவுகளின் புதிய சோஷ லிஸ அமைப்பில்தான் இத்தகைய உற்சாகம் பொங்குவது சாத்திய மாய் இருந்தது. சோவியத் நாட்டுக்கு வருகை தந்த பிரதிநிதிகளில் கணிசமான பகுதியினர் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் என்பது சிறப்பாக முக்கியமானதாக இருந்தது. இவர்களில் மிகப் பலர் தங்கள் தலைவர்கள் தடை செய்ததைப் பொருட்படுத்தாமல் சோவியத் யூனியனுக்கு வந்திருந்தார்கள்.

1927, நவம்பரில் சோவியத் யூனியனின் நண்பர்களது காங் கிரஸ் மாஸ்கோவில் நடந்தது. 43 நாடுகளைச் சேர்ந்த 947 பிரதிநிதி கள் இதில் கலந்து கொண்டார்கள். தொழிலாளர்கள், விவசாயி கள், உழைக்கும் அறிவுஜீவிகள், கிழக்கு நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் காங்கிரஸ் பிரதிநிதிகளாக இருந்தார்கள். பிரதிநிதி களில் கணிசமான பகுதியினர் (சுமார் 22 சதவிகிதம்) சமூக-ஜன நாயகத் தொழிலாளர்கள். ''சோஷலிஸம் இப்போதே, உலக உருண்டையின் ஆறிலொரு பாகத்தின் மாட்சி மிக்க அனுபவத்தில் தனது உயிராற்றலைக் காட்டி விட்டது''[1] என்று காங்கிரசின் தீர் மானத்தில் கூறப்பட்டிருந்தது. ''ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்க்க வும் சோவியத் யூனியனையும் சீனப் புரட்சியையும் காக்கவும் உலக உழைப்பாளிகளுக்கு வேண்டுகோள்'' ஏற்கப்பட்டது. சோவியத் யூனியனுக்கு எதிராகத் தொடுக்கப்படும் போர் மனிதகுலத்துக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய குற்றமாகக் கருதப்படும் என்று காங்கிரஸ் பிரதிநிதிகள் முழங்கினார்கள்.

கொலை செய்ததாகப் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு அமெ ரிக்க நீதி மன்றத்தால் 1921ம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப் பட்ட ஸாக்கோ, வன்ஸேத்தி என்னும் இரண்டு இத்தாலியத்

---

[1] ''பிராவ்தா'', 1927, நவம்பர் 13.

தொழிலாளர்களைக் காப்பதற்காக உலகம் முழுவதிலும் பரவிய இயக்கம், மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்தில் உழைப்பாளிகளின் சர்வதேச ஒருமைப்பாட்டின் வளர்ச்சியைத் துலக்கமாக எடுத்துக் காட்டியது. இந்த இரு தொழிலாளர்களும் வேலைநிறுத்த இயக்கத்தில் கலந்து கொண்டதற்காக அமெரிக்கச் சட்ட நீதி இவ்வாறு வர்க்க நோக்கில் பழிவாங்க முயன்றது. அமெரிக்க நீதி மன்றத்தின் இந்தச் செயல் ''சிவப்பர்கள்'' மீது புதிய தாக்குதல் தொடுக்கவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எல்லா முற்போக்குச் சக்திகளுக்கும் எச்சரிக்கை விடுக்கவும் குறி காட்டும் பொருட்டுச் செய்யப்பட்டது. மரண தண்டனை விதிக்கப் பெற்ற ஸாக்கோ, வன்ஸேத்தி இருவரதும் வழக்கு பல ஆண்டுகள் நீடித்தது. எதிர்ப்பு இயக்கமும் அந்த ஆண்டுகள் முழுவதும் தொடர்ந்து நடந்தது. மரண தண்டனை மாற்றப்படாது என்று 1927 கோடையில் முடிவாகத் தெரிந்ததும் இந்த இயக்கம் சிறப்பாக விரிந்த அளவில் நடைபெற்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், சுவீடன், சீனு ஆகியவற்றிலும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் அமைக்கப்பட்ட ஸாக்கோ, வன்ஸேத்தி பாதுகாப்புக் கமிட்டிகளால் ஒழுங்கமைக்கப்பட்ட வெகுஜன எதிர்ப்பு இயக்கம் உலகம் அனைத்திலும் அலையடித்துப் பரவியது.

உதாரணமாக பிரிட்டனில், 1927, ஆகஸ்டில் மட்டும் 158 எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் நடந்தன. தண்டனை பெற்றவர்களைக் காப்பதற்காக ஆகஸ்டு 10ந் தேதி நியூயார்க்கில் நடந்த வெகுஜன ஆர்ப்பாட்டத்தில் ஐம்பதாயிரம் தொழிலாளர்கள் பங்கு கொண்டார்கள். சர்வதேச எதிர்ப்பு இயக்கத்தில் முற்போக்கு அறிவுஜீவிகள், சமூக-ஜனநாயகவாதிகள், கம்யூனிஸ்டுகள், கத்தோலிக்கர்கள் போன்ற வெவ்வேறு அரசியல் கருத்துக்களும் போக்குக்களும் நம்பிக்கைகளும் கொண்டவர்கள் ஒன்றித்த கூட்டணியாகச் செயல்பட்டார்கள். போராட்டத்தின் முன் வரிசையில் இருந்தது சர்வதேசப் புரட்சி வீரர் உதவி ஸ்தாபனம். ஸாக்கோவும் வன்ஸேத்தியும் தண்டிக்கப்பட்டது எல்லா நாடுகளையும் சேர்ந்த முற்போக்குச் சக்திகளுக்கு விடுக்கப்பட்ட அறைகூவல் ஆகும் என்று அது உழைப்பாளிகளுக்குக் காட்டியது.

ஸாக்கோவும் வன்ஸேத்தியும் மரண தண்டனைக்கு உள்ளானார்கள். இந்தத் தண்டனை மூலதனத்தின் ''ஜனநாயகத்தினுடைய'' உண்

மைச் சொரூபத்தை உலகம் முழுவதற்கும் காட்டிவிட்டது. ''ஸாக்கோ, வன்ஸேத்தி, இருவரையும் காப்பதற்கான போராட்டம், உழைப்பாளிகளின் மாட்சி மிக்க ஆர்ப்பாட்டமாக மாறிவிட்டது. அமெரிக்கச் சூழ்ச்சியாளர்கள் மீதும் கொலையாளிகள் மீதும் மக்களது சீற்றம் கரை கடந்து பெருகி, மக்களின் மிக மிக விரிவான வட்டாரங்களுக்குப் பரவியது. அனேக நாடுகளில் இது சர்வஜனத் தன்மையை மேற்கொண்டது'' என்று ''கம்யூனிஸ்டு அகிலம்'' பத்திரிகை 1927, செப்டெம்பர் இதழில் எழுதியது.[1]

**1927-1928ல்
ஒன்றித்த கூட்டணிச்
செயல்தந்திரத்தின்
பிரச்சினைகள்**

1926-1927ல் அனேக முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டங்கள் தீவிரமாயின. 1927, ஜூன் மாதம் வியன்னு நகரில் தொழிலாளர்களின் பலத்த ஆர்ப்பாட்டம் தானுகவே நிகழ்ந்தது. இதைப் போலீஸ் ஆயுத பலத்தால் நசுக்கியது. சமூக-ஜனநாயகத் தலைவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தின்மீது தங்கள் கட்டுப்பாட்டை இழந்து விட்டார்கள். அதே சமயம், கம்யூனிஸ்டுக் கட்சி பலவீனம் காரணமாக ஆர்ப்பாட்டத்தைத் தன் தலைமையில் நடத்திச்செல்லத் திறன் அற்றதாக இருந்தது. ஆயினும் முன்னணிப் பாட்டாளிகளிடையே போராட்ட மனப்பான்மை வளர்ந்து வந்ததை ஆஸ்திரிய நிகழ்ச்சிகள் காட்டின. மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராகவும் யுத்த அபாயத்துக்கு எதிராகவும் ஏகாதிபத்தியவாதிகளின் கொள்ளைக்காரத் தன்மை வாய்ந்த காலனி ஆதிக்கக் கொள்கைக்கு எதிராகவும் ஒன்றித்த கூட்டணி அமைப்பதை நோக்கமாகக் கொண்ட கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கையை, சமூக-ஜனநாயகத் தலைவர்களும் தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தின் தலைவர்களும் இடைவிடாது உறுதியாகத் தொடர்ந்து எதிர்த்துவந்தார்கள். சமூக-ஜனநாயகத் தலைவர்கள், ''வர்க்க சமாதானத்தைக்'' காப்பதற்கு முழுமூச்சாக முயன்று வந்தார்கள். தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜன நடவடிக்கைகள்இதற்குஆபத்து விளைக்கும் நிலையை எட்டியதுமே சமூக-ஜனநாயகத் தலைவர்கள் இந்த நடவடிக்கைகளை இடைமுறித்தார்கள். பல நாடுகளில்

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்,'' 1927, இதழ் 35, பக்கம் 8.

வளர்ந்து வந்த பாசிஸ அபாயத்தைக் கவனிக்காமல் சீர்திருத்த வாதத் தலைவர்கள் கண்களை மூடிக் கொண்டார்கள். சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தில் ஏற்பட்டிருந்த பிளவை அகற்றும்படி தொழிற்சங்க அகிலம் விடுத்த யோசனையைத் தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தின் தலைவர்கள் நிராகரித்து விட்டார்கள். ஏனெனில், இதனால் தொழிலாளி வெகுஜனங்கள் மீது கம்யூனிஸ்டு களின் செல்வாக்கு அதிகரிக்கும் என்று அவர்கள் அஞ்சினார்கள். சமூக-ஜனநாயகத்தின் இடதுசாரித் தலைவர்கள், அதன் வலதுசாரித் தலைவர்களோடு சேர்ந்து கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் சோவியத் நாட்டுக்கும் எதிராக அவதூறுகளைப் பரப்பினார்கள்.

இதற்கிடையே, சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத் தின் விரைந்த வேகமும் வெற்றிகளும், முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தின் ஒழுங்கமைப்பிலும் போராட்டத் திறனிலும் வளர்ச்சியும், காலனிகள், அரைக்காலனிகளின் மக்களது அரசியல் செயலூக்கம் தீவிரம் அடைந்ததும், ஏகாதிபத் தியங்களுக்கிடையே முரண்பாடுகள் கூர்மை அடைந்ததும், முத லாளித்துவத்தின் தாற்காலிக நிலைப்பாடு தீர்ந்து விட்டது என்றும் அதன் முடிவு எந்தக் கணமும் நேரலாம் என்றும் விளைவாக முதலாளித்துவ அமைப்பு அனைத்துமே தகர்ந்து சிதறிவிடும் என்றும் புரட்சி நிகழ்முறையை மேலும் மேலும் விரைவுபடுத்துவதற்கு ஏற்ற நிலைமைகள் ஏற்கனவே முதிர்ந்து விட்டன என்றும் சில கம்யூனிஸ்டுகள் நினைப்பதற்குக் காரணம் ஆயின. ஏகாதிபத்தியத் துக்கு எதிராகப் போராட்டம் நடத்துகையில் முதலாளித்துவ நாடுகளில் சமூக-ஜனநாயகத்தையும் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தையும் முதன்மையாகத் தாக்க வேண்டும் என்று இந்தச் சூழ்நிலையில் பல புரட்சியாளர்கள் எண்ணினார்கள். சமூக-ஜனநாயகம் பற்றிய கம்யூனிஸ்டு அகிலத் தின் கொள்கையில் இந்த எண்ணம் ஓரளவு மாறுதலுடன் பிரதி பலித்தது.

பிரிட்டிஷ், பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தேர்தல் செயல்தந்திரம் பற்றிய பிரச்சினை, 1927, அக்டோபர் மாதம், கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அரசியல் செயலகத் தில் விவாதிக்கப்பட்டது. அக்டோபர் 1ந் தேதி அரசியல் செயல கம் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிக் காங்கிரசுக்கு ஒரு தந்திச் செய்தி அனுப்பியது. ''தொழிற் கட்சியின் பூர்ஷ்வாத் தலைமைக்கு எதிராகவும் எல்லாவகையான நாடாளுமன்றக் குறளைத்தனத்துக்

கும் எதிராகவும் போராட்டத்தைத்'' தீவிரப்படுத்தும்படியும், நாடாளுமன்றத் தேர்தல்களில் கம்யூனிஸ்டுக் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராகத் தொழிற்கட்சியின் அதிகாரபூர்வமான வேட்பாளர்கள் எனப்படுபவர்கள் நிறுத்தப்படும் சந்தர்ப்பங்களில் கூட, சுதந்திரக் கட்சியாக, சொந்தக் கொள்கைத் திட்டத்துடன் சொந்த வேட்பாளர்களை நிறுத்தித் தேர்தல் போராட்டம் நடத்தும்படியும்...''[1] தந்தியில் யோசனை கூறப்பட்டிருந்தது. தொழிற்கட்சி தேர்தலில் வெற்றி பெறுவதால் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையில் சாராம்சமான எவ்வித மாறுதல்களும் ஏற்படா என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டு அரசியல் செயலகம் இவ்வாறு யோசனை கூறியது. இதே உள்ளடக்கம் கொண்ட தந்தி பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் அனுப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஒரு கடிதம் அனுப்பியது. தேர்தல்களின் போது ''முக்கியப் பிரிவு அகழ்'' ஒரு புறம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் மறு புறம் பூர்ஷ்வாக் கட்சிகளுக்கும் சமூக-ஜனநாயகத்துக்கும் இடையே செல்லும்படியாக பிரிட்டிஷ், பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் முயல வேண்டும் என்று கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.[2]

இவ்வாறு கம்யூனிஸ்டு அகிலத்தில் புதிய கொள்கை நாளடைவில் உருவாயிற்று. ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கச்'' செயல்முறை என்ற அதிகாரபூர்வமான பெயரைப் பின்னர் இது பெற்றது.

புதிய செயல்தந்திரம் வர்க்கப் போராட்டம் கூர்மை அடைந்த சூழ்நிலையில் உருவாயிற்று. சமூக-ஜனநாயகக் கட்சிகள் பூர்ஷ்வாக் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதைத் தடை செய்வதும் சமூக-ஜனநாயகக் கட்சிகளின் சமரசக் கொள்கையை எதிர்த்துப் போராடுவதும் இதன் நோக்கங்களாக இருந்தன. தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த கூட்டணி அமையும் என்று இது அனுமானித்தது. ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கச்'' செயல்முறை கட்டாயமாகப் பாட்டாளிகளின் வர்க்க உணர்வை வலுப்படுத்தும், பூர்ஷ்வா வர்க்கத்துடன் உறவுகளில் பாட்டாளி வர்க்கத்தை அதிகச் சுதந்திரம் உள்ளது ஆக்கும், அதன் போராட்டத் திறனை உயர்த்தும் என்று கம்யூனிஸ்டுகள் எதிர்பார்த்தார்கள். இதில் புதிய செயல் தந்திரத்தின் பயனுள்ள கரு அடங்கி இருந்தது. இதன்

---

[1] மை. ஆ. கூ., 495/3/46/11.

[2] மை. ஆ. கூ., 495/3/49/127—128.

உதவியால் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துத் தங்கள் போராட்டத்தைத் தீவிரமாக்கவும் சீர்திருத்தவாத மருட்சிகளின் மீதமிச்சங்களிலிருந்து விடுபடவும் தங்கள் கொள்கைவாத-அரசியல் நிலைகளை வலுப்படுத்திக் கொள்ளவும் முடிந்தது.

அதே சமயம், சீர்திருத்தவாத ஸ்தாபனங்கள் முழுமையாக பூர்ஷ்வா வர்க்கத்தின் தரப்புக்கு வந்துவிட்டன என்ற கருத்தை ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம்'' என்னும் செயல்முறை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வலதுசாரித் தலைவர்களுக்கும் சாதாரண சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் இடையே அவசியமான பாகுபாடு செய்யப்படவில்லை. ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம்'' என்ற செயல் தந்திரம் நடைமுறையில் கையாளப்படுகையில் வெளிப்பட்ட குறுகிய பிரிவுவாதம் கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் ஒன்றித்துச் செயலாற்ற வகை செய்யவில்லை. மாறாக, சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களின் உறுப்பினர்களுடன் கம்யூனிஸ்டுகளின் உறவுகளை அது மோசமாக்கியது. சமூக-ஜனநாயகக் கட்சிகள் ''பூர்ஷ்வாத் தொழிலாளர் கட்சிகள்'' என்றோ, அல்லது ''பூர்ஷ்வா வர்க்கத்தின் மூன்றாவது கட்சிகள்'' என்றோ கருதப்பட்டன. பாட்டாளி வர்க்கத்தைச் சேராத உழைப்பாளி வட்டாரங்களுடனும், ஏகபோக மூலதனத்தின் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டாளிகளாக எதார்த்தத்தில் விளங்கும் இடை நிலை மக்கள் குழுக்கள் எல்லாவற்றுடனும் ஒத்துழைப்பு ஏற்படுத்திக் கொள்ள ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம்'' என்ற செயல்தந்திரம் உண்மையில் உதவவில்லை. கம்யூனிஸ்டுகள் சமூக-ஜனநாயக வேட்பாளர்களுக்கும் தீவிரவாதக் கட்சி வேட்பாளர்களுக்கும் சாதகமாக வாக்களிக்கவும் இந்தக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டணிகள் அமைத்துக் கொள்ளவும் அது வாய்ப்பு இல்லாமல் செய்தது. முதலாளித்துவத்தின் தாக்குதலுக்கும் பாசிஸத்தினதும் யுத்தத்தினதும் வளர்ந்து வந்த அபாயத்துக்கும் எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்காகக் கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களிடையே முயற்சிகள் செய்வதற்கு அது இடையூறாக இருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளை வெகுஜனங்களிலிருந்து தனிப்படுத்தும் நோக்கத்துடன் சமயோசித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதைச் சீர்திருத்தவாதத் தலைவர்களுக்கு எளிதாக்கிற்று.

ஏகபோக எதிர்ப்பு இயக்கத்தில் பின்னர் கலந்துகொள்ளக் கூடிய சமுதாய சக்திகளைத் தொழிலாளி வர்க்கத்துடன் ஐக்கியம்

ஏற்படுத்திக் கொள்ளுமாறு இணங்குவிப்பதற்கு இந்தச் செயல் தந்திரம் பல நாடுகளில் இடையூறாய் இருந்தது.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரம் 1927க்குப் பிந்திய காலப்பகுதியில் சந்தேகத்துக்கு உள்ளாகி, செயலளவில் மறந்துவிடப்பட்டது என்று பின்னர் எழுதினார் மொ. தோரேஸ். ''அந்தக் காலப்பகுதியில், குறுகிய பிரிவுவாதத் தவறுகள் கட்சி அனைத்திலும் மட்டும் அல்ல, அதன் தலைமையிலும் நிகழ்ந்தன. கட்சித் தலைமை வெகுஜனங்களை அசட்டை செய்தது. அவர்களுடன் வேலை செய்யத் தனக்குத் திறமை இல்லை என்பதைக் காட்டிக் கொண்டது. தொழிலாளி வர்க்கத்தின் அணித்தான கோரிக்கைகள் மறக்கப்பட்டன. 'இறைச்சித் துண்டுக்காகப் போராடிய காலம் மலையேறிவிட்டது' என்று பிரிவுவாதிகள் கூறினார்கள். சோஷலிஸ்டுத் தொழிலாளர்களையும் அவர்களது தலைவர்களையும் இவர்கள் ஒன்றாக மதித்தார்கள்''.[1]

1928, பிப்ரவரி 9முதல் 25ந் தேதி வரை நடந்த கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஒன்பதாவது முழுக் கூட்டம், ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம்'' என்ற செயல்திட்டப்போக்கை, பிரிட்டிஷ், பிரெஞ்சுப் பிரச்சினைகள் பற்றிய தீர்மானங்களில் உறுதிப்படுத்தியது.

தொழிற்சங்க இயக்கம் குறித்த பிரச்சினைகளும் இதே நோக்கில் ஆராயப்பட்டன.

தொழிற்சங்க இயக்கத்தில் செயல்தந்திரம் சம்பந்தமான கோட்பாட்டு முக்கியத்துவம் உள்ள சில பிரச்சினைகள்பற்றி லஸோவ்ஸ்கியின் யோசனைகள் 1928 ஆரம்பத்தில் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு அனுப்பப்பட்டன. ''ஒரு நாட்டில் புரட்சி மையம் இருக்கும் போது சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களுக்குள் வேலை செய்வது, வசமாகிவிட்ட ஸ்தாபனங்களைப் புரட்சி மையத்துடன் இணைப்பதைத் தனது தர்க்கரீதியான முடிவாகக் கொண்டிருக்க வேண்டும்''[2] என்று லஸோவ்ஸ்கி வலியுறுத்தி இருந்தார். சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களில் வேலை செய்வதன் அர்த்தம் தனித் தனிக் குழுக்களை அவற்றிலிருந்து உடைத்து அகற்றுவது என்ற கருத்து, தொழிற்சங்க இயக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு வளர்வதற்கு எதார்த்தத்தில் தடையாய் இருந்தது.

---

[1] பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நாற்பது ஆண்டுகள். மாஸ்கோ, 1961, பக்கம் 17.

[2] மை. ஆ. கூ., 508/1/56/39.

ஆறுவது காங்கிரசின் முன்வேளையில் இருந்த நிலைமை

முதலாளித்துவத்தின் தாற்காலிக நிலைப்பாட்டுக் காலப்பகுதியில், எத்தனையோ இடர்களும் பிற்போக்கின் தாக்குதல்களும் இருப்பினும் கம்யூனிஸ்டு இயக்கம் இடையருது தொடர்ந்து வளர்ச்சி அடைந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனங்கள் மீது தங்கள் அரசியல், கொள்கைவாதச் செல்வாக்கை விரிவுபடுத்தின. லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் கம்யூனிஸக் கருத்துக்கள் விரிவாகப் பரவின. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசுக்குப் பிறகு முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் அணிகளை போல்ஷிவிஸமயமாக்கும் வேலையைத் தீவிரப்படுத்தின.

சில கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனலும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளில் உறுப்பினர் எண்ணிக்கை குறைவதே பொதுவான போக்காக இருந்தது. தொழிலாளர் இயக்கத்தில் சீர்திருத்தவாதத்தின் செல்வாக்கு தாற்காலிகமாக ஓங்கியதும், நிலையற்ற நபர்கள் வெளியேறியதும், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வெகுஜன வேலையில் இருந்த குறைபாடுகளும் இந்த நிகழ்ச்சியின் முக்கியக் காரணங்கள். தொழிற்சங்கங்களிலும் விவசாயிகளிடையிலும் இளைஞரிடையிலும் மாதரிடையேயும் வேலை பெரும்பாலான கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளில் பலவீனமான பகுதியாக இருந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் விரிவான வட்டாரங்கள் மீது இன்னும் கணிசமாயிருந்த சமூக-ஜனநாயகத்தின் செல்வாக்கு, கம்யூனிஸ்டு அகிலத்தின் சில பிரிவுகளில் வலதுசாரி சந்தர்ப்பவாதப் போக்குகள் புகுவதற்கு வழி வகுத்தது. முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டை மிகையாக மதிப்பிடுவதும், உற்பத்தி நிலையங்களில் மையக்

குழுக்கள் இருக்கும் வகையில் கட்சியை மாற்றி அமைப்பதை எதிர்ப்பதும் வலதுசாரிப் போக்குகளின் காரணமாக நிகழ்ந்தன. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது, ஆறுவது காங்கிரசுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பல விதமான வலதுசாரி சந்தர்ப்ப வாதக் குழுக்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் அணிகளிலிருந்து வெளி யேற்றப்பட்டன.

தனது அணிகளில் இருந்த ''அதிதீவிர இடதுசாரிப்'' போக்கு களுக்கும் எதிராகக் கம்யூனிஸ்டு அகிலம் உறுதியாகப் போராடி யது. முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டை மறுப்பது, சீர்திருத்த வாதத் தொழிற்சங்கங்களில் வேலை செய்யக் கம்யூனிஸ்டுகள் இணங்காதது, ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை எதிர்ப் பது ஆகியவற்றில் இந்தப் போக்குகள் வெளிப்பட்டன.

கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிக்கும் எதிராகத் திரோத்ஸ்கிவாதக் குழுக்கள் வன்மம் நிறைந்த போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்த மையால், திரோத்ஸ்கிவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்குக் கம்யூனிஸ்டு அகிலம் சிறப்பான முக்கியத்துவம் அளித்தது. திரோத்ஸ்கிவாதத்துடன் நடந்த போராட்டத்தில், ''ருஷ்யாவில் புரட்சியின் வருங்காலம் மட்டும் அல்ல, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்தினதும் வருங்காலம் பணயம் வைக்கப்பட்டிருந் தது'' என்று எழுதினார் வில்லியம் ஃபோஸ்டர்.[1] கம்யூனிஸ்டு இயக்கத்தில் திரோத்ஸ்கிவாதத்துடனும் வலதுசாரி சந்தர்ப்ப வாதத்துடனும் ''அதிதீவிர இடதுசாரிப்'' போக்குகளுடனும் போராடிக் கம்யூனிஸ்டு அகிலம் மார்க்சிய-லெனினிய போதனை யின் தூய்மையையும், தனது அணிகளின் கொள்கைவாத, ஸ்தாபன ஒற்றுமையையும் காத்தது.

சர்வதேச நிலைமையையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளையும் பற்றி ஆறுவது காங்கிரஸ்

கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறுவது காங்கிரஸ் நடவடிக்கை கள் 1928ம் ஆண்டு ஜூலை 17 முதல் செப்டெம்பர் 1ந் தேதிவரை மாஸ்கோவில் நடந்தேறின. 57 கட்சிகளையும் 9 ஸ்தாபனங்களையும்

[1] வி. ஃபோஸ்டர். மூன்று அகிலங்களின் வரலாறு. மாஸ்கோ, 1959, பக்கம் 371.

சேர்ந்த 532 பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்து கொண்டார்கள். இளைஞர் கம்யூனிஸ்டு அகிலம், தொழிற்சங்க அகிலம், சர்வ தேசப் புரட்சி வீரர் உதவி ஸ்தாபனம், சர்வதேசத் தொழிலாளர் உதவி ஸ்தாபனம் முதலியன இந்த ஸ்தாபனங்களில் சில. சான்றிதழ்க் கமிஷனின் புள்ளிவிவரப்படி உலகில் 1,799 ஆயிரம் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள். இவர்களில் 1,211 ஆயிரம் பெயர் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி உறுப்பினர் கள் அல்லது வேட்பாளர்கள்.[1] உலகின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்து கொண்டார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் பின்வரும் முக்கியப் பிரச்சினைகளை விவாதித்தது: கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் விவர அறிக்கை, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம், ஏகாதிபத்திய யுத்த அபாயத்துக்கு எதிரான போராட்டம், காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் புரட்சி இயக்கம், சோவியத் யூனியனின் பொருளாதார நிலைமை, சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு(போல்ஷிவிக்)கட்சியின் நிலைமை. காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் இருந்த பிரச்சினைகள் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக் கத்தின் உடனடிப் பிரச்சினைகளை முழுமையாகப் பிரதிபலித்தன.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை மீது நடந்த விவாதங்களில் சுமார் 100 பிரதிநிதி கள் பங்கு கொண்டார்கள். சர்வதேச நிலைமையையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளையும் பற்றி புஹாரின் தயாரித்திருந்த அறிக் கையின் சில கருத்துக்களும் ஆய்வுரை நகலின் சில பகுதிகளும் விரிவான விமர்சனத்துக்கு உள்ளாயின. ஆய்வுரை நகலில் முத லாளித்துவத்தின் நிலைப்பாட்டின் உறுதி மிகையாக மதிக்கப்பட் டிருப்பதாகச் சில பிரதிநிதிகள் கூறினார்கள். வெளி முரண்பாடு கள் மேலும் தீவிரம் அடைவதன் காரணமாக, முதலாளித்துவ நாடுகளுக்கிடையே இராணுவ மோதல் ஏற்படுவதன் விளைவாக மட்டுமே முதலாளித்துவத்தின் நிலைப்பாடு தகர்ந்து சிதறத் தொடங்கும் என்ற கருத்தைப் பிரதிநிதிகள் அறவே மறுத்தார்கள். முதலாளித்துவத்தின் வீழ்ச்சி, முதலாளித்துவ அமைப்பின் உள், வெளி, எல்லா முரண்பாடுகளும் தீவிரம் அடைவதன் விளைவாகவும்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறுவது காங்கிரசின் சுருக் கெழுத்து விவரம், வெளியீடு 5, 1929, பக்கங்கள் 97, 159.

உழைப்பாளி மக்களின் புரட்சிப் போராட்டத்தின் விளைவாகவும் தொடங்கும் என்ற லெனினது கருத்தைக் காங்கிரஸ் உறுதிப் படுத்தியது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அறிக்கை மீது ஆலோசனை ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றச் சூழ்நிலையில் நடந்தேறியது.

ஏகாதிபத்தியவாதிகளின் புரட்சி எதிர்ப்புக் கூட்டணி சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்துக்கு ஆயத்தம் செய்வது உலக பூர்ஷ்வா வர்க்கத்தினது கொள்கையில் முக்கியப் போக்காக விளங்குகிறது என்று காங்கிரஸ் குறிப்பிட்டது. ஏகாதிபத்திய யுத்த அபாயத்தை எதிர்த்துப் போராடுவது, சோவியத் யூனியனைக் காப்பது, சீனுவில் அன்னியத் தலையீட்டையும் அதைத் துண் டாடுவதையும் எதிர்த்துப் போராடுவது, சீனப் புரட்சியையும் காலனிகளில் நடக்கும் கிளர்ச்சிகளையும் ஆதரிப்பது ஆகியவை அந்த நேரத்தில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முதன்மையான சர்வ தேசப் பணிகள் என்று காங்கிரஸ் தீர்மானித்தது.

தொழிற்சங்கங்களில் வேலையையும் தேசிய, சர்வதேச அளவில் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காகப் போராட்டத்தை யும் அதிகத்திலும் அதிகமாகத் தீவிரமாக்கும்படிக் காங்கிரஸ் எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் கேட்டுக்கொண்டது. விவ சாயிகள், இளைஞர்கள், உழைப்பாளி மாதர்கள் ஆகியோரிடையே வேலையை மேம்படுத்துவதன் அவசியத்தின் மீது அது விசேஷ கவனம் செலுத்தியது.

பூர்ஷ்வாக் கட்சிகளுக்கு மட்டும் எதிராக இன்றி சமூக-ஜனநா யகத்துக்கும் எதிராகப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும் நோக் கத்துடன் ஏற்கனவே செயல்பட்டு வந்த புதிய கொள்கையைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆருவது காங்கிரஸ் உறுதிப்படுத்தியது.

சமூக-ஜனநாயகம் பற்றிய எளிமை ஆக்கப்பட்ட விளக்கத்தை யும் அதுவும் பாசிஸமும் எதார்த்தத்தில் ஒன்றே என்ற கூற்றையும் சில பிரதிநிதிகள் ஏற்கவில்லை. உதாரணமாக, ஒன்றித்த கூட்டணியை வலுப்படுத்தும் வேலை இப்போதே போதுமானதாக இல்லை என்றும் சமூக-ஜனநாயகம் பற்றி ஆய்வுரையில் யோசனை கூறப் படுவதும் நடைமுறையில் ஏற்கனவே அனுசரிக்கப்பட்டு வருவது மான அதிகக் கடுமையான போக்கு கைக்கொள்ளப்படுமானல், இந்த வேலை இன்னும் பலவீனம் ஆகிவிடும் என்றும் சுவிட்ஸர்

லாந்துப் பிரதிநிதி போதென்மான் கூறினர்[1]. வலதுசாரி சமூக-ஜன நாயகம் குறித்த நிலைமைகளில் வெளிப்படையான பாசிஸ்டு முறைகளைக் கையாளுகிறது என்று தளியாத்தி குறிப்பிட்டார். ஆயினும், ''பாசிஸத்துக்கும் சமூக-ஜனநாயகத்தால் பாசிஸ்டு முறைகள் கையாளப்படுவதற்கும் இடையே ஆழ்ந்த வேறுபாடுகள் இருப்பதால், இந்தத் துறையில் மிகையாகப் பொதுமைப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்'' என்று அவர் சுட்டிக் காட்டினர்: ''பாசிஸம் என்பது, பெரு முதலாளிகளாலும் பெரு நிலப் பிரபுக்களாலும் தலைமையேற்று நடத்தப்படும் குட்டி, நடுத்தர பூர்ஷ்வாக்களின் இயக்கம். தொழிலாளி வர்க்கத்தின் மரபு வழி வந்த ஸ்தாபனத்தில் அதற்கு வேர்கள் இல்லை. மறு புறம், சமூக-ஜனநாயகமோ, தொழிலாளி வெகுஜனங்களையும் குட்டி பூர்ஷ்வா வெகுஜனங்களையும் சார்ந்திருக்கும் இயக்கம். விரிவான தொழிலாளி வெகுஜனங்களின் எண்ணத்தில் அவர்களுடைய வர்க்கத்தின் மரபு வழி வந்த ஸ்தாபனமாக விளங்கும் ஸ்தாபனத்திலிருந்தே சமூக-ஜனநாயகம் முதன்மையாகத் தனது சக்தியைத் திரட்டுகிறது''[2] என்று அவர் விளக்கினர்.

கீழிருந்து ஒன்றித்த கூட்டணி அமைக்கும் நோக்கத்துடன் முதன்மையாகச் செயல்படும்படி காங்கிரஸ் கம்யூனிஸ்டுக் கட்சிகளிடம் கோரியது. சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களையும் சமூக-ஜனநாயகத் தலைவர்களையும் வேறுபடுத்திக் காண்பது கம்யூனிஸ்டுகளின் கடமை என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் அணிகளில் சந்தர்ப்பவாதப் போக்குகளை எதிர்த்துப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதன் இன்றியமையாமையைக் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. ''முதலாளித்துவம் அம்சரீதியாக நிலைப்பாடு அடைந்திருப்பதன் அடிப்படையிலும் சமூக-ஜனநாயகச் செல்வாக்கின் நேரான தொடர்பிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குள் தற்போது பிறழ்வுகளின் முக்கியப் போக்கு சரியான அரசியல் நிலையிலிருந்து வலப்புறம் செல்கிறது''[3] என்ற முடிவுக்கு அது வந்தது. ஒப்புநோக்கில் வலிய சமூக-ஜன

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆருவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம். வெளியீடு 1, 1929, பக்கம் 132.

[2] அதே நூல், பக்கம் 503.

[3] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆருவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 80.

நாயகக் கட்சிகள் நிலவும்போது வலதுசாரிப் பிறழ்வுகள் சிறப்பாக ஆபத்தானவை என்றும் அவற்றுக்கு எதிரான போராட்டத்துக்கு முதன்மை தரப்பட வேண்டும் என்றும் காங்கிரஸ் குறிப்பிட்டது. அதோடு கூடவே, ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை மறுப்பதிலும் தொழிற்சங்க வேலையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமையிலும், புரட்சிகரமான வாய்வீச்சுக் கொள்கையிலும் வன்முறை ஆட்சிமாற்றப் போக்குகளிலும் (சீனுவில்) வெளிப்படும்''இடதுசாரிப்'' பிறழ்வுகளுடனும் போராடுவது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியமான கடமை ஆகும். சந்தர்ப்பவாதப் போக்குகளை எதிர்த்துப் போராடுவதில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சித்தாந்த நடவடிக்கைகளின் தரத்தை உயர்த்துவதற்கு விசேஷ முக்கியத்துவம் தரப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தினதும் அதன் பிரிவுகளுடையவும் ஒற்றுமையை எல்லா வகையாலும் காப்பது கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் கடமை என்று காங்கிரஸ் வலியுறுத்தியது. உட்கட்சி ஜனநாயக வளர்ச்சியின் அடிப்படையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அரசியல் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் வாயிலாகவே கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தவறுகளும் குறைகளும் வெற்றிகரமாக நீக்கப்பட முடியும் என்று அது அழுத்திக் கூறியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் ஏற்கப்படுகிறது

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் நடவடிக்கைகளின் மையப்புள்ளியாக விளங்கியது, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் விவாதிக்கப்பட்டு ஏற்கப்பட்டதாகும். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் பற்றிய பிரச்சினை மீது விவாதம், 1922, ஜூன் மாதம் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் இரண்டாவது விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டத்தில் முதன் முதலாக நடந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஐந்தாவது காங்கிரசில் செயல்திட்ட மசோதா பிரிவுகளில் விவாதத்தின் பொருட்டு அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. செயல் திட்டத்தை முடிவாக ஏற்பது அடுத்த காங்கிரசுக்குத் தள்ளிப் போடப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயல்திட்டக் கமிஷன், 1928ம் ஆண்டுத் தொடக்கத்தில் செயல்திட்டத்தின் புதிய மசோதாவைத் தயாரித்தது. இது, கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவு

களில் விரிவாக விவாதிக்கப்பட்டது. செயல்திட்ட மசோதா தயாரிப்பதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி செயலூக்கத்துடன் பங்கு கொண்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாப் பிரிவுகளும் செயல்திட்டத்தை உருவாக்குவதில் பயனுள்ள பங்கு ஆற்றின. செயல்திட்டத்தின் இறுதி வாசகத்தைத் தயாரிக்கும் பொருட்டுக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் ஒரு கமிஷனை நியமித்தது. நாற்பது வெவ்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகள் இதன் உறுப்பினர் ஆக்கப்பட்டார்கள்.

செயல்திட்டக் கமிஷனிலும் காங்கிரஸ் கூட்டங்களிலும் விவாதத்தின்போது செயல்திட்ட மசோதாவில் சுமார் 600 யோசனைகளும் சேர்ப்புக்களும் திருத்தங்களும் புகுத்தப்பட்டன.[1] கோட்பாட்டு நோக்கில் கருத்து வேறுபாடுகள் ஏற்படவில்லை. விவாதம் அனேக முக்கியப் பிரச்சினைகள் பற்றிக் கலந்தாலோசிக்கும் தன்மை கொண்டிருந்தது. இவற்றில் சில பிரச்சினைகள் பின்வருவன: புதிய பொருளாதாரக் கொள்கை, போர்க்காலக் கம்யூனிஸக் காலப் பகுதி ஆகியவற்றின் தவிர்க்க இயலாமையும் இன்றியமையாமையும்; பாசிஸத்தினதும் அதன் சமுதாய வேர்களதும் விளக்கம்; ''நிதி மூலதனம்'' என்ற சொல்லின் உட்பொருள் முதலியன.

போர்க்காலக் கம்யூனிஸம் எல்லா நாடுகளுக்கும் பொதுவான விதியாக இருக்கும் என்று செயல்திட்டத்தில் குறிக்கும்படி சில பிரதிநிதிகள் யோசனை கூறினர்கள். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறும் இடைக்காலக் கட்டம், போர்க்காலக் கம்யூனிஸக் கட்டமாகவே எப்போதும் இருந்து வரும் என்றும் போர்க்காலக் கம்யூனிஸம் சோஷலிஸத்தை அடைவதற்கான நேர் வழி என்றும் அவர்கள் கூறினர்கள். இடைக்காலப் பகுதியின் விதிகளைப் புரிந்து கொள்ளாமையால் மேற்கொள்ளப்பட்ட இந்த நோக்குக்குக் காங்கிரஸ் பிரதிநிதிகளின் ஆதரவு கிடைக்கவில்லை.

எந்த விதமான பிற்போக்குக் கொள்கையையும் சித்திரிப்பதற்கு ''பாசிஸம்'' என்னும் சொல் பயன்படுத்தப்படுவதை அனேக பிரதிநிதிகள் எதிர்த்தார்கள். பாசிஸம், முதலாளித்துவப் பிற்போக்கின் ஒரே ஒரு வடிவம் என்று எண்ணுவது கூடாது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்கள். வெவ்வேறு நாடுகளில் பெரும் பூர்ஷ்வா வர்க்க சர்வாதிகாரத்தின் வெவ்வேறு வடிவங்கள் நிலவு

---

[1] எ. யாரஸ்லாவ்ஸ்கி. கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறுவது காங்கிரசின் விளைவுகள் பற்றி, 1928, பக்கம் 7.

கின்றன. இவை இத்தாலிய பாசிஸத்திலிருந்து வேறுனவை. ''எதார்த்தமான அரசியல் நிலேயின் சரியான பகுப்பாய்வைக் குழப்புவது, இந்தப் பகுப்பாய்வின் இடத்தில் சோஷல்-பாசிஸம், இடதுசாரிகளின் பாசிஸ்டுக் கூட்டணி, பாசிஸ்டு அரசாங்கம் என்பன போன்ற இயந்திரரீதியான வகைப்பிரிவுகளேக் கையாள்வது''[1] ஆகிய போக்குக்களே பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி ஸெமார் எதிர்த்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் வெளிப்படையான பாசிஸத்துக்கும் பூர்ஷ்வா வர்க்கத்தினது நிலேயுறுதி அற்ற நிலேமையின் விளேவாக ஏற்படும் பாசிஸப் போக்குகளுக்கும் உள்ள வேறுபாட்டை வரையறுத்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் ''பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசப் புரட்சி இயக்கத்தினது வரலாற்று அனுபவம் அனேத்தையும் விமர்சன நோக்கில் பொதுமைப்படுத்தி இருப்பதால், உலகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான போராட்டத்தின் செயல்திட்டமாகவும் உலகக் கம்யூனிஸத்துக்கான போராட்டத்தின் செயல்திட்டமாகவும் விளங்குகிறது''[2] என்று காங்கிரஸ் அழுத்திக் கூறியது. கம்யூனிஸ்டு அகிலம், ''லெனினியத்தில் மேற்கொண்டு விரிவாக்கப்பட்ட புரட்சிகர மார்க்சியத்தின் நோக்குநிலேயை முழுமையாகவும் விதிவிலக்கின்றியும்''[3] தனது சித்தாந்த, நடைமுறை வேலேயில் கடைப்பிடிக்கிறது என்று செயல்திட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டிருந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தில் ஏகாதிபத்தியச் சக்திகளின் மதிப்பீடும் புரட்சிச் சக்திகளின் மதிப்பீடும் தரப்பட்டிருந்தன. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழ்ந்து பகுத்தாராயப்பட்டிருந்தது. முதலாளித்துவம் தகர்ந்து சிதறுவதும் உலக சோஷலிஸப் புரட்சி வெற்றி பெறுவதும் தவிர்க்க இயலாதவை என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

உலகப் புரட்சி இயக்கத்தின் இறுதிக் குறிக்கோள் ஆகிய கம்யூனிஸத்தை அடைவதற்கான போராட்டத்தின் வழிகளேக் கம்யூனிஸ்டு அகிலம் திட்டவட்டமாக வரையறுத்தது. ''வரலாற்று வளர்ச்சியின் போக்கு அனேத்திலுைம் முன்னேற்பாடு செய்யப்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆருவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 3, 1929, பக்கம் 93.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம், 1928, பக்கம் 6.

[3] அதே நூல், பக்கம் 8.

படும் கம்யூனிஸ சமூகம் மனிதகுலத்துக்கு உள்ள ஒரே வழி ஆகும், ஏனெனில் அதுதான் மனிதகுலத்தை இழிநிலைக்கும் அழிவுக்கும் இட்டுச் செல்லும் அபாயம் விளைக்கும் முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடுகளுக்கு முடிவு கட்டும்''[1] என்று செயல்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் இடைக்காலப் பகுதி சம்பந்தமான பிரச்சினைகள் செயல்திட்டத்தில் பெருத்த இடம் பெற்றிருந்தன.

சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சியாகக் கருதக் கூடாது என்றும், தொடக்கத்தில் சோஷலிஸம் சில முதலாளித்துவ நாடுகளிலோ அல்லது ஒரு தனி முதலாளித்துவ நாட்டிலோ வெற்றி பெறுவது சாத்தியம் என்றும் செயல்திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. ஏகாதிபத்தியக் காலக்கட்டத்தில் நாடுகளின் பொருளாதார, அரசியல் வளர்ச்சி சமமற்றதாக இருக்கும் என்ற லெனினது போதனையை அடிப்படையாகக் கொண்டது செயல்திட்டத்தின் இந்தக் குறிப்பு. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கைக்கு அடிகோலும் முக்கியத்துவம் கொண்டிருந்தது இது.

திரோத்ஸ்கி தமது செயல்திட்ட மசோதாவைக் காங்கிரசுக்கு அனுப்பி இருந்தார். சோஷலிஸம் ஒரு நாட்டில் வெற்றி பெறும் என்ற கருத்தை அவர் இதில் எதிர்த்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு தயாரித்திருந்த செயல்திட்ட மசோதாவை அவர் ''திரிபுவாத தஸ்தாவேஜு'' என்று குறிப்பிட்டார். ''உலகப் புரட்சியின் ஆதரவு இல்லாமல் ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறுவது அசாத்தியம்'' என்ற கருத்தைச் செயல்திட்டத்தில் சேர்க்கும்படி யோசனை கூறினார். தமது லெனின் விரோதக் கருத்துக்களைச் செயல்திட்டத்தில் நுழைக்கத் திரோத்ஸ்கி செய்த முயற்சிகள் பலிக்கவில்லை.

தனித் தனி முதலாளித்துவ நாடுகளினது சமுதாய-பொருளாதார வளர்ச்சியின் வெவ்வேறு தரங்களையும் அவற்றின் தனிப்பட்ட ஸ்தூல நிலைமைகளையும் கருத்தில் கொண்டு காங்கிரஸ் பின்வருமாறு கூறியது: ''பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வருவதற்கான வழிகளும் வேகங்களும் வெவ்வேறாக இருப்பதை இந்தச்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ். சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 21.

சூழ்நிலைமைகள் வரலாற்று ரீதியில் தவிர்க்க முடியாதது ஆக்கு கின்றன. சில நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்குச் செல்லும் வழியில் பரிணமிப்புக் கட்டங்கள் இருப்பதும் நாடுகளில் நிறுவப்படும் சோஷலிஸத்தின் வடிவங்கள் வெவ்வேறாக இருப்ப தும் இந்தக் காரணத்தால் இன்றியமையாதவை ஆகின்றன.''[1]

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குப் பரிணமிப்பதற்கான நிலைமைகளையும் வழிகளையும் பொறுத்து, எல்லா நாடுகளையும் மூன்று முக்கிய மாதிரிகளாகச் செயல்திட்டம் பாகுபடுத்தியது:

—உயர் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள். பாட் டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு நேரடியாகப் பரிணமிப்பது இவற்றுக்கு முக்கிய அரசியல் கோரிக்கையாக வைக்கப்பட்டது.

—முதலாளித்துவம் நடுத்தர வளர்ச்சி பெற்று, பூர்ஷ்வா-ஜனநாயக மாற்றங்கள் இன்னும் முழுமை பெறாதிருக்கும் நாடுகள். இத்தகைய சில நாடுகளில் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி சோஷ லிஸப் புரட்சியாக ஓரளவுக்கு விரைவில் வளர்வது சாத்தியம் என்று செயல்திட்டம் கூறியது. மற்ற நாடுகளில், பூர்ஷ்வா-ஜன நாயக வகைப்பட்ட பணிகள் ஏராளமான அளவில் அடங்கிய பல் வேறு விதமான பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் நடக்கும் என அது குறித்தது.

—காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஆதீன நாடுகளி லும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குப் பரிணமிப்பது, பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி சோஷலிஸப் புரட்சியாக வளரும் முழுக் காலப்பகுதியின் விளைவாகவே சாத்தியம் ஆகும் என்றும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெற்றிகரமான சோஷலிஸக் கட்டுமானம் பாட்டாளி வர்க்க சர்வாதிகார நாடுகளின் நேர்முக மான உதவி கிடைத்தால்தான் நடைபெறும் என்றும் செயல் திட்டம் கூறியது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார நாடுகளும் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கமும் உதவியும் ஆதரவும் அளித்தால், பின்தங்கிய காலனிகள் பலவற்றில் முதலாளித்துவக் கட்டத்தில் புகாமலே சோஷலிஸத்தில் பிரவேசிப்பது சாத்தியம் என்ற செயல் திட்டத்தின் குறிப்பு பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது.

சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானம், எல்லா நாடு களிலும் புரட்சி இயக்கம் வளர்வதற்குப் பாட்டாளிவர்க்க சர்வாதி

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம், பக்கங்கள் 176-177.

கார நாடு என்ற முறையில் சோவியத் யூனியனின் முக்கியத்து வம் ஆகியவற்றின்மீது செயல்திட்டத்தில் பெருத்த கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ''எனவே, சோவியத் யூனியனில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் உள்ளுக்குள் வலுவாக்கப்படுவதும் சோஷலிஸக் கட்டுமானத்தின் வெற்றிகளும் பாட்டாளி வெகு ஜனங்கள் இடையிலும் காலனிகளின் ஒடுக்கப்பட்ட மக்கள் இடையிலும் சோவியத் யூனியனின் செல்வாக்கும் மதிப்பும் வளர்வதும் சர்வதேசப் புரட்சி தொடர்வதையும் தீவிரம் அடைவதையும் பரவுவதையும் குறிக்கும்'' என்று செயல்திட்டம் கூறியது.[1]

சோவியத் யூனியனில் சோஷலிஸ அமைப்பு, வெளியே முதலாளித்துவ அமைப்பு என்ற இரண்டு அமைப்புக்கள் ஒரே சமயம் நிலவுவதால், பாட்டாளி வர்க்க அரசு முதலாளித்துவ உலகின் தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்கவும், அதோடு கூடவே பொருளாதாரத் துறையில் சமயோசிதமான போக்கைக் கையாண்டு முதலாளித்துவ நாடுகளுடன் பொருளாதார உறவுகளைப் பயன் படுத்தவும் வேண்டி இருக்கிறது என்று செயல்திட்டம் குறித்தது. ''வெளிநாடுகளுடன் முடிந்தவரை அதிக விரிவான தொடர்புகள் வைத்துக் கொள்வது, ஆனால் அவை சோவியத் யூனியனுக்கு, அதாவது, முதன்மையாக சோவியத் யூனியனில் இயந்திரத் தொழிலை வலுப்படுத்துவதற்குச் சாதகமாய் இருக்கும் அளவுக்குள் வைத்துக் கொள்வது முக்கியமான, அடிப்படையான போக்கு'' என்று செயல்திட்டத்தில் கூறப்பட்டது.[2]

''சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வழிகாட்டி நடத்தும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவு''[3] என்ற முறையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் சர்வதேசக் கடமைகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டிருந்தன: முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் இயக்கத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் காலனிகளின் மக்களது இயக்கத்துக்கும் ஆதரவு, எந்த வடிவிலும் நாட்டின ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு. சோவியத் யூனியன் விஷயத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் கடமை—சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானம் வெற்றி பெற உதவுவதும் முதலாளித்துவ வல்லரசு

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம், பக்கம் 84.

[2] அதே நூல், பக்கம் 91.

[3] அதே நூல், பக்கம் 92.

களின் தாக்குதலிலிருந்து அதைக் காப்பதும் என்றும் செயல் திட்டம் குறிப்பிட்டது.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான் மையினரைத் தங்கள் தரப்புக்கு ஈர்க்க வேண்டும் என்று செயல் திட்டம் பணித்தது. வெகுஜன ஸ்தாபனங்களிலும் முதன்மை யாகத் தொழிற்சங்கங்களிலும் ஊக்கத்துடன் வேலை செய்வது இதனுல் கம்யூனிஸ்டுகளின் கடமை ஆயிற்று. விவசாயிகளிடையி லும் அறிவுஜீவிகள், குட்டி பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் கீழ் வட் டாரங்களிலும் வேலையைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தீவிரப்படுத்த வேண்டும், காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஆதீன நாடு களிலும் புரட்சிப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்று செயல்திட்டம் விதித்தது.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் செயல்தந்திரப் போக்கைத் தீர்மானிக்கும் போது ஸ்தூலமான உள், வெளி நிலைமையையும் வர்க்கச் சக்திகளின் ஒப்புநிலையையும் பூர்ஷ்வா வர்க்கத்தின் நிலை யுறுதி, சக்தி ஆகியவற்றின் தரத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் ஆயத்தத் தரத்தையும் இடைநிலை வட்டாரங்களின் போக்கையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று செயல்திட்டம் கூறியது.

கம்யூனிஸ்டு அகிலம் ஏகாதிபத்திய யுத்த அபாயத்தை எதிர்த்துப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும்படி கம்யூனிஸ்டுக் கட்சிகளை அறைகூவி அழைத்தது. ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டுப் போராக மாற்றுவது, "சொந்த" ஏகாதிபத்திய அரசாங்கத்தைத் தோற்கடிப்பது, சோவியத் யூனியனையும் தேசிய-விடுதலைப் புரட்சிகளையும் எல்லா சாதனங்களாலும் காப்பது என் பவற்றை முக்கிய கோஷங்களாக அது முன்வைத்தது.

சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் ஒற்றுமையை வலுப் படுத்துவதற்கும் சர்வதேச வர்க்கக் கட்டுப்பாட்டைக் கடைப் பிடிப்பதற்கும் செயல்திட்டத்தில் பெருத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. "இயக்கத்தின் தனிப்பட்ட நலன்களையும் வட்டார நலன்களையும் அதன் பொதுவான நீண்டகால நலன்களுக்கு அடிப்படுத்துவதிலும், கம்யூனிஸ்டு அகிலத்தினுடைய தலைமை உறுப்புக்களின் தீர்மானங்களை எல்லாக் கம்யூனிஸ்டுகளும் நிபந் தனையின்றி நிறைவேற்றுவதிலும் இந்த சர்வதேசக் கம்யூனிஸ்டுக் கட்டுப்பாடு வெளிப்பட வேண்டும்."[1]

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம், பக்கம் 121.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் முக்கியப் பணிகளும் அவற்றை நிறைவேற்றும் வழிகளும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தில் சூத்திர வடிவில் தரப்பட்டிருந்தன. ஆனால் சில ஆதாரமற்ற சூத்திரங்களும் மதிப்பீடுகளும் அதில் அடங்கியிருந்தன. குறித்த அரசியல் நிலைமைகளில் சமூக-ஜனநாயகம் எதிர்க் கட்சி என்ற முறையில் பூர்ஷ்வா அரசாங்கத்தைக் குறை கூறலாம் என்று செயல்திட்டம் குறித்தது. அதே சமயம், சமூக-ஜனநாயகத்துக்கும் பாசிஸத்துக்கும் உள்ள வேறுபாட்டை அது போதிய அளவு துலக்கமாக வரையறுக்கவில்லை. சமூக-ஜனநாயகத்தின் இடதுசாரி, ''சமூக-ஜனநாயகக் கட்சிகளின் மிக மிக அபாயம் நிறைந்த உட்குழு''[1] என்று அது சித்திரித்தது. சமூக-ஜனநாயகம் பற்றிய இந்த மதிப்பீடும் முக்கியமான தாக்குதல் முதன்மையாக அதன் இடதுசாரி மீது தொடுக்கப்படவேண்டும் என்ற கூற்றும் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கடைப்பிடிப்பதையும் கம்யூனிஸ்டுகளுக்கும் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுக்கும் இடையே ஒத்துழைப்பையும் கணிசமாகக் கடினம் ஆக்கின. அடுத்துவந்த ஆண்டுகளில் கம்யூனிஸ்டு இயக்கத்தில் பிரிவுவாதக் கருத்துக்கள் பரவ இவை உதவின.

மொத்தத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம் பெருத்த வரலாற்று முக்கியத்துவம் உள்ள தஸ்தாவேஜாக விளங்கியது. மார்க்சிய-லெனினிய போதனையை அடிப்படையாகக் கொண்ட உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் செயல்திட்டமாக இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகள் பருவடிவம் பெற்றன. கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளினது படைப்புத்தன்மை கொண்ட கூட்டு முயற்சியின் விளைவாக இருந்தது அது. கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்த கட்சிகளின் கூட்டு ஆக்க உழைப்பின் பயனாகத் திகழ்ந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ், செயல்திட்டத்தோடு கூடவே கம்யூனிஸ்டு அகிலத்தின் புதிய விதிகளையும் ஏற்றுக் கொண்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் விதிகள் முதலில் இரண்டாவது காங்கிரசால் நிறைவேற்றப்பட்டன என்பதும் பின்பு ஐந்தாவது காங்கிரஸ் அவற்றில் மாறுதல்கள் செய்து அவற்றைச் செப்பமாக்கியது என்பதும் தெரிந்த செய்திகள்.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டம், பக்கம் 28.

''கம்யூனிஸ்டு அகிலம், தொழிலாளர்களின் சர்வதேசக் கழகம். வெவ்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்றாக இணைந்த ஒன்றித்த உலகக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆகும் இது''[1] என்று ஆறாவது காங்கிரசால் ஏற்கப்பட்ட விதிகளில் கூறப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவாக விளங்குவதும் அதில் அங்கம் வகிப்பதுமான ஒரு கம்யூனிஸ்டுக் கட்சிதான் இருக்க முடியும். விதிகளின்படி கம்யூனிஸ்டுக் கட்சியின் அடிப்படை ஸ்தாபனம் தொழில் நிலையத்தில் (தொழிற்சாலை, ஆலை, சுரங்கம் ஆகியவற்றில்) உள்ள மையக்குழு ஆகும். கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையில் அமைந்துள்ளன என்று விதிகளில் கூறப்பட்டிருந்தது.

ஏகாதிபத்திய யுத்த அபாயத்தை எதிர்த்துப் போராடுவது பற்றிக் காங்கிரஸ்

யுத்தப் பிரச்சினை பற்றியும் யுத்தங்களின் பல்வேறு வகைகள் பற்றியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் சித்தாந்த, அரசியல் நிலைகளை ஆறாவது காங்கிரஸ் சூத்திர வடிவில் முறைப்படுத்தியது. யுத்த அபாயத்திற்கு எதிரான போராட்டத்தில் நடைமுறைப் பணிகளை அது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு விதித்தது.

புதிய ஏகாதிபத்திய யுத்த முஸ்தீப்புகளுக்கு எதிராகக் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து ஒன்றித்துச் செயல் புரிவதற்கு சமூக-ஜனநாயகக் கட்சிகளின் வலதுசாரித் தலைவர்கள் எல்லா வகையிலும் இடையூறு விளைவித்து வந்தார்கள். இந்தக் காரணத்தால் யுத்த அபாயத்துக்கு எதிராகப் போராடுவது கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் மிகக் கடினம் ஆகிவிட்டது. தேசிய நலன்களைப் பாதுகாக்கும் வியாஜத்தில் பூர்ஷ்வா அரசாங்கங்களின் யுத்தச் சூழ்ச்சிகளையும் செயல்திட்டங்களையும் ஆதரித்துவந்த ஐரோப்பிய சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்களுடைய போக்கு, பிரஸ்ஸல்ஸ் நகரில் (கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ் நடந்த அதே சமயத்தில்) நடைபெற்ற சோஷலிஸ்டுத்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டமும் விதிகளும். கட்சிப் பதிப்பகம், சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டி, 1937, பக்கம் 72.

தொழிலாளர்கள் அகிலத்தின் காங்கிரசில் சிறப்பாகத் துலக்கமாக வெளிப்பட்டது. இந்தக் காங்கிரசின் நிகழ்ச்சி நிரலிலும் யுத்த அபாயம் பற்றிய பிரச்சினை இடம் பெற்றிருந்தது. ஆனால் சமூக-ஜனநாயகக் கட்சிகள் ஏகாதிபத்திய யுத்த அபாயம் நிலவுவதை ஒப்புக் கொண்டன என்றாலும் சர்வதேச சங்கத்தையே முழுமையாக நம்பி இருந்தன. ஏகாதிபத்தியவாதிகளின் யுத்த துர்ச்சாக சங்களை எதிர்த்து ஊக்கத்துடன் சுதந்திரமாகச் செயல் புரிய அவை மறுத்தன. பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிலாளர் கட்சியின் தீர்மானத்தை பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. இந்தத் தீர்மானத்தில் எல்லா நாடுகளும் முழுமையாக ஆயுத ஒழிப்பு செய்ய வேண்டும் என்ற சோவியத் அரசாங்கத்தின் யோசனை வரவேற்கப்பட்டிருந்தது, யுத்தக் கடன்களுக்கு ஆதரவாக வாக்களிக்க மறுக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது, அனைத்துலக யுத்த எதிர்ப்புக் காங்கிரஸ் கூட்டப்பட வேண்டும் என்றும் கம்யூனிஸ்டு அகிலமும் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலமும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டிருந்தது.[1]

ஆயுதங்களை ஓர் அளவுக்குள் "குறுக்குவது" பற்றியும், "சேனைகளை ஜனநாயகமயம் ஆக்குவது" பற்றியும், நாடுகளுக்கிடையே தகராறுகளைக் "கட்டாய நடுவர் தீர்ப்பு" மூலம் தீர்த்துக் கொள்வது பற்றியும், பிற விஷயங்கள் பற்றியும் பொதுவான சொற்றொடர்கள் அடங்கிய தீர்மானத்தை நிறைவேற்றியதுடன் பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸ் நின்று கொண்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரசில் ஏகாதிபத்திய யுத்த அபாயம் பற்றி நடந்த விவாதமும் அந்தப் பிரச்சினை பற்றிய தீர்மானங்களும் முற்றிலும் வேறு தன்மை கொண்டிருந்தன.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதி டி. பெல், ஏகாதிபத்திய யுத்த அபாயத்தை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகள் பற்றிக் காங்கிரசில் அறிக்கை சமர்ப்பித்தார். முதலாளித்துவ நாடுகளின் யுத்த முஸ்தீப்புகள் பற்றிய திட்டவட்டமான விவரங்கள் அறிக்கையில் தரப்பட்டிருந்தன. சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்த அபாயம் அதிகரித்து விட்டது என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளின்

[1] „Internationale Presse-Korrespondenz", 1928, B. II, N 84, S. 1524.

பல அம்சங்கள் விவாதங்களின் போது ஆராயப்பட்டன. ''முதலாளித்துவ வல்லரசுகளுக்கு இடையிலேயே யுத்தங்கள் நடப்பது சாத்தியம், மிக நிச்சயம் கூட, என்றாலும் எல்லாவற்றிலும் மேலோங்கி இருக்கும் முக்கிய அபாயம் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தமே, சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தாய் நாட்டுக்கு எதிரான யுத்தமே...''[1] என்று கூறினர் கி.திமீத்ரொவ்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாப் பிரிவுகளும் யுத்த அபாயம் பற்றிய பிரச்சினையில் ஒன்றித்த அரசியல் போக்கைக் கடைப்பிடிப்பது அவசியம் என்றார் கி. திமீத்ரொவ். உலக யுத்த ஆண்டுகளில் வெகுஜனங்களின் புரட்சிப் போராட்ட அனுபவத்தையும் பழைய தரைப்படையிலும் கடற்படையிலும் போல்ஷிவிக் கட்சியின் வேலை அனுபவத்தையும் ஆழ்ந்து கற்பதன் இன்றியமையாமையை அவர் வலியுறுத்தினர்.

மற்றப் பிரதிநிதிகள் பேசும் போது, யுத்தம் பற்றிய லெனினது போதனைகளை மக்களிடையே பரப்புவது, யுத்தத்துக்கு எதிரான போராட்டத்தை ஒழுங்கமைக்கும் சக்தி என்ற முறையில் கட்சியின் முக்கியத்துவம், மக்களுக்கு எளிதில் விளங்கும் யுத்த எதிர்ப்பு நூல்களை வெளியிடுவது, மாதர்களிடையிலும் இளைஞர்களிடையிலும் யுத்த எதிர்ப்புப் பிரசாரம் செய்வது ஆகியவற்றையும் பிற பிரச்சினைகளையும் குறிப்பிட்டார்கள். யுத்த அபாயத்துக்கு எதிரான போராட்டம் தனிப்பட்டதாக இருக்கக் கூடாது என்றும் தொழிலாளி வர்க்கத்தின் அன்றாடப் பொருளாதாரப் போராட்டத்துடனும் அதன் கோரிக்கைகளுடனும் அதன் உரிமைகளையும் அது போராடிப் பெற்றுள்ள நலங்களையும் காப்பதுடனும் மிக மிக நெருக்கமாக இணைந்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

ஏகாதிபத்திய யுத்த அபாயத்துடன் போராடுவதற்கான நடவடிக்கைகள் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுரையில் யுத்தம் பற்றிப் பாட்டாளி வர்க்கத்தின் நிலையும் செயல்தந்திரமும் விளக்கப்பட்டிருந்தன. ''வரலாற்று நிகழ்ச்சி என்ற முறையில் யுத்தத்தின் காரணம், மனிதர்களிடையே படிந்திருக்கும் 'இயல்பான கெட்ட மூலப் பண்போ' அரசாங்கங்களின் 'கெட்ட' கொள்கையோ அல்ல.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறாவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 2, பக்கம் 175.

சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் என்னும் வர்க்கங்களாக சமூகம் பிரிவுபட்டிருப்பது தான் இதன் காரணம். புதிய வரலாற்றின் யுத்தத்துக்குக் காரணம் முதலாளித்துவமே''[1] என்று ஆய்வுரையில் கூறப்பட்டிருந்தது.

சோஷலிஸத்தின் பொருட்டும் யுத்தங்களுக்கு எதிராவும் போராடுகையில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் நியாயமான யுத்தங்களின் முக்கியத்துவத்தை மறுக்கவில்லை என்று ஆய்வுரை வலியுறுத்தியது. பாட்டாளி வர்க்கம் குறித்த ஒவ்வொரு யுத்தத்தினதும் வரலாற்று, அரசியல், வர்க்க முக்கியத்துவத்தையும் யுத்தத்தில் ஆளும் வர்க்கங்களின் பங்கையும் ஆழ்ந்து பகுத்தாராய வேண்டும்.

தற்போதையக் கால கட்டத்தில் பின்வரும் வகையான யுத்தங்கள் நடக்கக் கூடும் என்று காங்கிரஸ் சுட்டிக்காட்டியது: ஏகாதிபத்திய அரசுகள் தங்களுக்குள் நடத்தும் யுத்தங்கள்; ஏகாதிபத்தியப் புரட்சி எதிர்ப்பாளர்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கோ அல்லது சோஷலிஸம் நிறுவப்படும் நாடுகளுக்கோ எதிராக நடத்தும் யுத்தங்கள்; ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, சிறப்பாகக் காலனிகள் நடத்தும் தேசிய-புரட்சிப் போர்கள். ''ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களினங்கள் நடத்தும்'' போர், ''நியாயமானது மட்டும் அல்ல, புரட்சிகரமானதும் கூட. தற்போது அது உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கணுவாக விளங்குகிறது.''[2] பாட்டாளி வர்க்கம் தேசிய-புரட்சிப் போர்களை ஆதரிக்கிறது, பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசுகளையும் பாதுகாக்க ஏற்பாடு செய்கிறது.

ஏகாதிபத்திய யுத்தம் மூண்டால், முதல் உலக யுத்த ஆண்டுகளில் போல்ஷிவிக் கட்சி அனுசரித்த செயல்திட்டத்தை வழிகாட்டியாகக் கொள்ளும்படி காங்கிரஸ் கம்யூனிஸ்டுகளைக் கேட்டுக்கொண்டது. ஏகாதிபத்திய யுத்தத்தை பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் உள்நாட்டுப் போராக மாற்றுவது இந்தச் செயல்திட்டத்தின் முக்கியப் பகுதியாக இருந்தது.

எல்லா நாடுகளும் முழுமையாக ஆயுத ஒழிப்பு செய்ய வேண்டும் என்ற சோவியத் அரசாங்கத்தின் யோசனையினது பெருத்த

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறுவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம். வெளியீடு 6, பக்கம் 85.

[2] அதே நூல், பக்கம் 86.

முக்கியத்துவத்தைக் காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. பாட்டாளி வர்க்க அரசாங்கம் லெனினது சமாதானக் கொள்கையைக் கடைப்பிடிப்பது, சோவியத் ஆட்சி ''முதலாளித்துவத்துடன் சமரசம் செய்துகொண்டு விட்டதாக'' எவ்விதத்திலும் அர்த்தப்படாது எனக் காங்கிரஸ் அழுத்திக் கூறியது. ''சோவியத் யூனியன் அக்டோபர் புரட்சிக் காலம் முதல் இடைவிடாது நடத்திவரும் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் வேறொரு, தற்போதைய நிலைமையில் அதிகச் சாதகமான வடிவமே''[1] இந்தக் கொள்கை என்று அது குறித்தது.

சோவியத் யூனியனின் பாதுகாப்பு யுத்த அபாயத்துக்கு எதிரான போராட்டத்தின் மையமாக விளங்க வேண்டும் என்று காங்கிரஸ் அறிவித்தது. யுத்த அபாயமும் ஏகாதிபத்திய வல்லரசுகள் சோவியத் யூனியனை நேர்முகமாகத் தாக்கும் ஆபத்தும் அதிகரித்து வந்த நிலைமைகளில் காங்கிரசின் இந்த அறிக்கை பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது.

யுத்தத்துக்கு எதிரான போராட்டம் சற்றும் எளிதல்ல என்ற லெனினுடைய சொற்களைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ் எல்லாக் கம்யூனிஸ்டுகளுக்கும் நினைவுபடுத்தியது. ஏகாதிபத்திய யுத்த அபாயத்துக்கு எதிரான போராட்டத்தை அதிக சர்வதேச முக்கியத்துவம் உள்ளதாகக் கருதும்படியும் யுத்த எதிர்ப்புப் புரட்சி நடவடிக்கைகளை சர்வதேச அளவில் ஒருங்கிணைக்கும் படியும் எல்லாப் பிரிவுகளையும் அது கேட்டுக்கொண்டது.

காலனிகளிலும் அரைக்
காலனிகளிலும் புரட்சி
இயக்கம் பற்றி

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ் நிகழ்ச்சி நிரலில் இருந்த முக்கியப் பிரச்சினைகளில் ஒன்று, காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் புரட்சி இயக்கம் பற்றிய பிரச்சினை ஆகும். இந்தக் காலத்துக்குள் பல ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டப் பாதையில் வெகு தூரம் முன்னேறி இருந்தார்கள்.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறாவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 99.

முதலாளித்துவம் தாற்காலிகமான, அம்சரீதியான நிலைப்பாடு அடைந்து வந்த காலப்பகுதியில் கிழக்கு நாடுகளில் கம்யூனிஸ்டு இயக்கம் உருவாகும் நிகழ்முறை தொடர்ந்து நடந்தது. தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் முதிர்ச்சியிலும் ஒழுங்கமைப்பிலும் ஏற்பட்ட வளர்ச்சியுடன் இது நேரான தொடர்பு கொண்டிருந்தது. 1925, டிசம்பர் மாதம், இந்தியாவின் சட்டபூர்வமான கம்யூனிஸ்டுக் கட்சியின் சட்ட அமைப்புக் காங்கிரஸ் கூடியது. கொரியாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது சட்ட அமைப்புக் காங்கிரஸ் 1925, ஏப்ரல் மாதம் நடந்தது. அதே ஆண்டில் முதல் மார்க்சிய ஸ்தாபனங்கள் இந்தோசீனுவில் உருவாயின.

காலனிப் பிரச்சினை பற்றிய அறிக்கையை ஒ. கூஸினென் காங்கிரசில் சமர்ப்பித்தார்.

''லெனினுல் தயாரிக்கப்பட்டு, இரண்டாவது காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'தேசிய, காலனிப் பிரச்சினைகள் பற்றிய ஆய்வுரையின்' முக்கியத்துவம் முழுமையாக நிலைத்து இருக்கிறது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வருங்கால வேலைக்கு அது வழிகாட்டியாக இருக்க வேண்டும்''[1] என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆருவது காங்கிரஸ் அறிவித்தது.

சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்தில் ஏற்பட்ட வெற்றிகளும் முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டு இயக்கம் வலுவடைந்ததும் காலனி நாடுகள் மீது புரட்சிகரமான பாதிப் விளைத்தன.

ஏகாதிபத்திய நுகத்திலிருந்து விடுபடும் பொருட்டுக் காலனிகளின் மக்கள் நடத்திவந்த போராட்டத்துக்கு சோவியத் யூனியனின் பாட்டாளி வர்க்கமும் முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் இயக்கமும் அளித்த ஆதரவு அசாதாரண முக்கியத்துவம் உள்ளது என்று காங்கிரஸ் கருதியது. காங்கிரசின் ஆய்வுரையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''சோவியத் யூனியனுடனும் ஏகாதிபத்திய நாடுகளின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துடனும் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்வது சீனு, இந்தியா ஆகியவற்றையும் மற்ற எல்லாக் காலனிகளையும் அரைக் காலனிகளையும் சேர்ந்த உழைப்பாளி வெகுஜனங்களுக்கு, முதலாளித்துவ அமைப்பின் ஆதிக்கக் கட்டத்தில் புகாமலோ அல்லது முதலாளித்துவ உறவு

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆருவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 122.

களின் வளர்ச்சியை அறவே தவிர்த்தோ, சுதந்திரமான, கட்டற்ற பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சி பெறும் வாய்ப்பை அளிக்கும்''[1] என்று காங்கிரசின் ஆய்வுரை வலியுறுத்தியது.

கூஸினெனது அறிக்கைமீது நடந்த விவாதத்தின்போது காலனிகளில் ஏகாதிபத்தியத்தின் பாத்திரம் பற்றிய பிரச்சினை சர்ச்சையைக் கிளப்பிற்று. ஏகாதிபத்தியக் காலனிக் கொள்கை காலனிகளில் இயந்திரத் தொழில் பெருக்கத்துக்கு உதவுகிறது என்றும், உதாரணமாக இந்தியாவில் பிரிட்டனின் கண்காணிப்பின் கீழ் இயந்திரந் தொழில் பெருகி வருகிறது என்றும் சில பிரதிநிதிகள் கூறினார்கள். இந்த நோக்கு நிலை, சமூக-ஜனநாயகவாதிகளின் ''காலனித்தன்மை நீக்கம்'' என்னும் சித்தாந்தத்தை எதார்த்தத்தில் ஆதரிப்பதாக இருந்தது. ஏகாதிபத்தியம் காலனிகளில் முற்போக்குள்ள பாத்திரம் வகிக்கிறது என்றும் முதலாளித்துவ வளர்ச்சியை விரைவுபடுத்திக் காலனிகளைச் சுதந்திரமான முதலாளித்துவ நாடுகளாக மாற்றுகிறது என்றும் இந்தச் சித்தாந்தம் கூறியது. காலனிகளில் ஏகாதிபத்தியக் கொள்கையை நியாயப்படுத்துவதும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களின் புரட்சிப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதுமே ''காலனித்தன்மை நீக்க'' சித்தாந்தத்தின் நோக்கமாக இருந்தது.

காலனிகளில் ஏகாதிபத்தியத்தின் பாத்திரம் பற்றி அனேகப் பிரதிநிதிகள் பேசியதில் இருந்த தவற்றைக் காங்கிரஸ் குறிப்பிட்டது. ''காலனித்தன்மை நீக்க'' சித்தாந்தத்தின் பிற்போக்கான உள்ளடக்கத்தை அது அம்பலப்படுத்தியது. காலனிகளின் தொழில் பெருக்கத்தை ஏகாதிபத்தியம் தடை செய்கிறது என்றும் அவற்றின் உற்பத்திச் சக்திகள் முழுமையாக வளர்வதற்கு முட்டுக்கட்டை போடுகிறது என்றும் காங்கிரஸ் அழுத்திக் கூறியது. காலனிகள் விஷயத்தில் ஏகாதிபத்தியம் கடைப்பிடிக்கும் கொள்கையின் முக்கியமான நோக்கம் அவற்றின் சார்பு நிலையைக் காப்பாற்றி வலுப்படுத்துவதே ஆகும். ''ஏகாதிபத்திய வல்லரசுகள் கடைப்பிடிக்கும் காலனித்தன்மை நீக்கக் கொள்கை பற்றியும் ''காலனிகளின் கட்டற்ற வளர்ச்சியில்'' அவை ஒத்துழைப்பது பற்றியும் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுடைய கையாட்களும் பிதற்றுவது எல்லாம் ஏகாதிபத்தியப் பொய் தவிர வேறு இல்லை''[2] என்று காங்கிரசின் ஆய்வுரையில் கூறப்பட்டது.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறாவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 126.

[2] அதே நூல், பக்கம் 134.

சீனு, இந்தியா, பிற ஒடுக்கப்பட்ட நாடுகள் ஆகியவற்றில் புரட்சி இயக்கத்தின் வருங்கால வாய்ப்புக்களைக் காங்கிரஸ் ஆராய்ந்தது. இந்த நாடுகளின் புரட்சி இயக்கத்தில் பூர்ஷ்வா-ஜன நாயகக் கட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்று அது குறித்தது. காலனிகளில் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி, ஏகாதிபத்திய அடிமைத் தனத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருந்தது.

தேசிய-விடுதலை இயக்கத்தில் பூர்ஷ்வா வர்க்கத்தின் பாத்திரம் என்ன என்ற பிரச்சினைக்குக் காங்கிரசின் ஆய்வுரை மீது நடந்த விவாதத்தில் முக்கியமான இடம் ஒதுக்கப்பட்டது. காலனி நாடுகளில் உள்ள தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்தியத்தைப் பற்றி ஒரே மாதிரி நிலையை மேற்கொள்ளவில்லை என்று காங்கிரசின் ஆய்வுரையில் கூறப்பட்டிருந்தது. இந்த பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியினர் ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்குத் தொண்டு ஆற்றுகிறார்கள். தேசியவிரோதமான, ஏகாதிபத்தியத்துக்குச் சாதகமான போக்கை இவர்கள் ஆதரிக்கிறார்கள். ''உள்நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்தின் எஞ்சிய பகுதியினர், சிறப்பாக உள்நாட்டு இயந்திரத் தொழில் நலன்களைப் பிரதிபலிக்கும் பகுதியினர், தேசிய இயக்கத்தை ஆதரிக்கிறார்கள். சிறப்பான ஊசலாட்டமும் சமரச மனப்பான்மையும் கொண்ட போக்கை இவர்கள் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். இந்தப் போக்கைத் தேசிய-சீர்திருத்தவாதம் என்று அழைக்கலாம் (அல்லது, இரண்டாவது காங்கிரசின் சொற்களில் 'பூர்ஷ்வா-ஜனநாயகப்' போக்கு எனலாம்).''[1] பூர்ஷ்வா தேசிய-சீர்திருத்தவாதம் நிலப்பிரபுத்துவ-ஏகாதிபத்திய முகாமிலிருந்து வேறானது. குட்டிபூர்ஷ்வா, விவசாயி வெகுஜனங்கள் மீதும் ஓரளவு தொழிலாளி வர்க்க வெகுஜனங்கள்மீதும் இதற்குச் செல்வாக்கு உண்டு. இதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதால் கம்யூனிஸ்டுகள் உழைப்பாளி வெகுஜனங்களிடமிருந்து தனித்துவிடக் கூடும் என்று காங்கிரஸ் சுட்டிக்காட்டியது.

காங்கிரஸ் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: ''ஆளும் ஏகாதிபத்திய-நிலப்பிரபுத்துவக் கூட்டணிக்கு விரோதமாக பூர்ஷ்வா எதிர்த்தரப்பு செயல்படுவது—அது ஆழ்ந்த தன்மை கொண்டிருக்காவிட்டாலும் கூட—விரிவான உழைப்பாளி வெகுஜனங்கள் அரசியல் விழிப்பு பெறும் நிகழ்முறையை விரைவுபடுத்தக்

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆருவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 136.

கூடும்; ஏகாதிபத்தியத்துடன் தேசிய-சீர்திருத்தவாத பூர்ஷ்வா வர்க்கத்தின் ஸ்தூலமான பகிரங்க மோதல்கள், தனிப்பட எடுத்துக்கொண்டால் முக்கியத்துவம் குறைந்தவையாக இருந்தாலும், குறித்த நிலைமைகளில் பெருத்த வெகுஜனப் புரட்சி நடவடிக்கைகள் விரிவாக நடப்பதற்குக் கூட மறைமுகமான காரணம் ஆகலாம்''.[1]

இதோடு கூடவே, காலனிப் பிரச்சினை குறித்த ஆறாவது காங்கிரசின் ஆய்வுரையில் தேசிய-விடுதலைப் போராட்டத்தின் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் பற்றியும் தேசிய புர்ஷ்வா வர்க்கத்தின் பாத்திரம் பற்றியும் சரியற்றவையும் முரணானவையும் ஆகிய சில கருத்துக்கள் அடங்கி இருந்தன. பூர்ஷ்வா தேசிய-சீர்திருத்தவாதத்துக்கும் நிலப்பிரபுத்துவ-ஏகாதிபத்தியவாத முகாமுக்கும் உள்ள வேறுபாடு காங்கிரசின் தீர்மானங்களில் வரையறுக்கப்பட்டிருந்தது ஆயினும் தேசிய பூர்ஷ்வா வர்க்கம் பற்றிய மொத்த மதிப்பீடு குறுகிய பிரிவுவாதத் தன்மை கொண்டிருந்தது. உதாரணமாக, ''தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடும் சக்தி என்ற முறையில் முக்கியத்துவம் அற்றது''[2] என்று வலிந்துரைக்கப்பட்டிருந்தது. ''தேசிய-சீர்திருத்தவாத எதிர்த்தரப்புடன் கம்யூனிஸ்டுக் கட்சி எவ்விதக் கூட்டணியும் அமைப்பதை நிராகரிக்கும்படி''[3] யோசனை கூறப்பட்டிருந்தது.

காலனிகளையும் அரைக் காலனிகளையும் சேர்ந்த தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் பாத்திரம் பற்றி கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறாவது காங்கிரஸ் செய்த மதிப்பீடு ''ஓரளவு பிரிவுவாத வண்ணச் சாயல் கொண்டிருந்தது'' என்று பிற்காலத்தில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் இருபதாவது காங்கிரசில் ஒ. கூஸினென் கூறினர்.[4]

கிழக்கு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களிடையே செய்யவேண்டிய வேலையின் நோக்கத்தை ஆறாவது காங்கிரஸ் விளக்கியது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி அதில் காணப்படும்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறாவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 142.

[2] அதே நூல், பக்கம் 141.

[3] அதே நூல், அதே பக்கம்.

[4] ஒ. கூஸினென், பொறுக்கி எடுத்த நூல்கள். மாஸ்கோ, 1966, பக்கம் 509.

இடதுசாரித் தன்மை கொண்ட தவறுகளை (வன்முறையால் ஆட்சியைக் கைப்பற்றும் போக்கு, இராணுவ துர்ச்சாகச வாதம், தனிநபர் பயங்கர நடவடிக்கைகள் முதலியன) களைவது இன்றியமையாதது என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது. ''வெகுஜனங்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்துப் போதிக்கும் முறைக்குப் பதிலாக, கட்டாயப்படுத்துவது, உத்தரவு இடுவது, ஆணைகள் பிறப்பிப்பது முதலிய முறைகளைக் கையாளும் போக்கைக்'' கட்சி தவிர்த்திருக்க வேண்டும். ''மிகக் கொடிய வர்க்க பயங்கர நடவடிக்கைகளின் நிலைமைகளில் இந்த முறைகள் உழைப்பாளி வெகுஜனங்களுடன் கட்சியின் தொடர்பு துணிக்கப்பட்டுவிடும் ஆழ்ந்த அபாயத்தை அதிகமாக்கின.''[1]

எல்லாக் கம்யூனிஸ்டுக் குழுக்களையும் ஒன்று சேர்த்து, சுதந்திரமான, மையப்படுத்தப்பட்ட கட்சியை அமைப்பது இந்தியக் கம்யூனிஸ்டுகளின் மிக முக்கியப் பணி என்று காங்கிரஸ் கூறியது.

ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் காலனிகளின் புரட்சி இயக்கங்களுக்கு ஊக்கத்துடன் ஆதரவும் நேர்முகமான நடைமுறை உதவியும் அளிப்பதை நோக்கமாகக் கொண்டு, அவற்றுடன் நெருங்கிய, முறையான, நிலைத்த தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் பணித்தது.

1928, ஆகஸ்டு மாதம் பிரஸ்ஸல்ஸ் நகரில் நடந்த சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் காங்கிரசிலும் காலனிப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினை குறித்த ''செயல்திட்டமும்'' அதில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. காலனி மக்களின் பூரண சுதந்திரக் கோரிக்கையைக் காங்கிரஸ் எதிர்த்தது. தேசிய-விடுதலைப் போராட்டத்தில் கணிசமான முன்னேற்றம் அடைந்திருந்த சீனு, எகிப்து, சிரியா, ஈராக் போன்ற நாடுகளுக்கு மட்டுமே சடங்கு ரீதியான சுதந்திரம் பெறும் உரிமை அங்கீகரிக்கப்பட்டது, இந்தியா போன்ற நாட்டுக்கு ஸ்தல சுயாட்சி உரிமையை மட்டுமே சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் ஒப்புக் கொண்டது. முழு அரசியல் சுதந்திரம் பெறும் உரிமை அதற்கு மறுக்கப்பட்டது. ''ஆதிகால வளர்ச்சிக் கட்டத்தை'' இன்னும் கடக்காத காலனி மக்களுக்கு ''அன்னியர் ஆதிக்கம் உடனே அகற்றப்படு

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறுவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 152.

வது தேசியப் பண்பாட்டின் திசையில் முன்னேற்றமாக இராது, ஆதிகால அநாகரிக நிலைக்குத் திரும்புவதாகவே இருக்கும்''[1] என்று காங்கிரசின் தீர்மானம் கூறியது.

காங்கிரசிற்கு வந்திருந்த காலனி நாடுகளின் பிரதிநிதிகள், பூர்ஷ்வா வர்க்கத்தின் காலனியாதிக்கக் கொள்கையை சமூக-ஜன நாயகத்தின் வலதுசாரித் தலைவர்கள் ஆதரிப்பதைக் கண்டு கொண்டதும் காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டார்கள். காலனிப் பிரச்சினை குறித்து பிரஸ்ஸல்ஸ் காங்கிரஸ் மேற்கொண்ட நிலை, காலனிகளின் ஒடுக்கப்பட்ட மக்களுடைய நலன்கள்பால் வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்களின் அசட்டையான போக்கைக் கண்கூடாகக் காட்டியது. ஏகாதிபத்திய அரசுகளின் காலனிக்கொள்கைக்கு அவர்கள் அளித்த ஆதரவை இது வெளிப்படுத்தியது.

சோவியத் யூனியனின் வெற்றிகளும் சோவியத் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியில் இருந்த நிலைமையும்

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் சோவியத் யூனியனிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியிலும் இருந்த நிலைமையைப் பரிசீலனை செய்தது. ஒரு பெரிய நாட்டில் சோஷலிசக் கட்டுமானத்தை வழிகாட்டி நடத்தி வந்த கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒரே பிரிவாக விளங்கியது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி. இந்தக் காரணத்தாலும் சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவம் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அன்றாடப் போராட்டத்துக்கு மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தபடியாலும் இந்தப் பிரச்சினை மகத்தானதாக இருந்தது.

சோவியத் யூனியனின் பொருளாதார நிலைமைபற்றி எ. வார்கா அறிக்கை சமர்ப்பித்தார். அண்மை ஆண்டுகளில் சோவியத் யூனியன் பெற்றிருந்த பொருளாதார வெற்றிகளையும் சோவியத் சமூகத்தில் சோஷலிஸ அம்சங்களின் வளர்ச்சியையும் அறிக்கை குறிப்பிட்டது. சோவியத் யூனியனின் பொருளாதாரத்தில் திட்ட

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', *1928*, இதழ்கள் *29-30*, பக்கம் *115*.

வகுப்பின் பாத்திரம் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. சோஷலிஸக் கட்டுமானத்தில் உள்ள கஷ்டங்களும் வருங்கால வளர்ச்சியின் வாய்ப்புக்களும் காட்டப்பட்டிருந்தன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியில் இருந்த நிலைமைபற்றிய அறிக்கையை மனுயீல்ஸ்கி சமர்ப்பித்துப் பேசுகையில் திரோத்ஸ்கிவாத எதிர்த்தரப்பு வெறும் ''தேசியத்'' தன்மை கொண்ட நிகழ்ச்சி அல்ல என்று அழுத்திக் கூறினார். அதற்கு எதிரான போராட்டம் சர்வதேச அளவில் நடத்தப்பட்டது என்றும் எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் போல்ஷிவிஸமயம் ஆக்கும் செயலின் அங்கமாக விளங்கியது என்றும் அவர் எடுத்துக் காட்டினார்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியினதும் அதன் மத்தியக் கமிட்டியினதும் அரசியல் கொள்கைப் போக்கையும் ஸ்தாபனக் கொள்கைப் போக்கையும் சோதரக் கட்சிகளின் பிரதிநிதிகள் முழுமையாக ஆமோதித்தார்கள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டியின் சரியான கொள்கை காரணமாக, ஏகாதிபத்திய முற்றுகையின் மிகக் கடின மான நிலைமைகளில் சோஷலிஸக் கட்டுமானத்தில் கணிசமான வெற்றிகள் பெறப்பட்டுள்ளன, தொழிலாளி-விவசாயி வெகுஜனங் களின் பொருளியல், பண்பாட்டுத் தரம் உயர்ந்திருக்கிறது, விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம் வலுவாகி இருக்கிறது, சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் செல்வாக்கு அதிகரித்திருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள்.

சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்தின் வெற்றி கள் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் நிலையை வலுப்படுத்து கின்றன என்றும் வெகுஜனங்கள் புரட்சி உணர்வு பெறுவதை விரைவுபடுத்துகின்றன என்றும் காங்கிரஸ் கூறியது.

திரோத்ஸ்கிவாத எதிர்த் தரப்பின் உறுப்பினராக இருந்து கொண்டும் அதன் கருத்துக்களைப் பிரசாரம் செய்து கொண்டும் போல்ஷிவிக் கட்சியில் உறுப்பினராய் இருப்பது பொருந்தாது என்ற கருத்துள்ள சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியினது பதினைந்தாவது காங்கிரசின் தீர்மானத்தையும் கம்யூ னிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஒன்பதாவது முழுக் கூட்டத் தின் தீர்மானத்தையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் ஆமோதித்தது. தம்மைக் கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளும் படி கேட்டுத் திரோத்ஸ்கி அனுப்பியிருந்த விண்ணப்பத்தைக்

காங்கிரஸ் நிராகரித்து விட்டது. ''செயல்திட்டம், அரசியல், ஸ்தாபனப் பிரச்சினைகள் பற்றிய தனது கண்ணோட்டங்களில் திரோத்ஸ்கிவாதக் குழு மென்ஷிவிக்குகளின் நிலைக்கு இழிந்து விட்டது. எதார்த்தத்தில் அது சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போராடும் உறுப்பாக மாறிவிட்டது. எனவே அது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியிலிருந்து விலக்கப்பட்டது சரியானது, தவிர்க்க முடியாதது''[1] என்று காங்கிரஸ் கூறியது.

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் தங்களை மறுபடி சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மாஸ்லவும் ஃபிஷரும் செய்துகொண்ட மனுவைக் காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. அதே சமயம், ''திரோத்ஸ்கிவாதக் குழுக்களில் சேர்ந்திருந்ததற்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட எல்லாத் தொழிலாளர்களுக்கும், அவர்கள் மாஸ்லவுடனும் ஃபிஷருடனும் கம்யூனிஸத்தின் பிற கொள்கைமாறிகளுடனும் தொடர்புகளைத் துணித்துக் கொண்டு, கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாத் தீர்மானங்களுக்கும் நிபந்தனை இன்றிப் பணிந்தால் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் திரும்புவதற்கான வழி திறந்திருக்கிறது''[2] என்ற ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கைக்குக் காங்கிரஸ் ஒப்புதல் அளித்தது.

புதிய கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றியதும் அவை கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்ந்ததும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செல்வாக்கு வளர்ந்ததைக் காட்டின. கொரியா, கியூபா, நியூ ஜீலாந்து, பராகுவே ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் அயர்லாந்துத் தொழிலாளர் சங்கமும் ஈக்வடோர் சோஷலிஸ்டுக் கட்சியும் கொலம்பியாவின் புரட்சிகர சோஷலிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளாக ஆறாவது காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப் பட்டன.

* * *

ஆறாவது காங்கிரசுக்குப் பின்னர் நிகழ்ச்சிகளின் போக்கு, உலகப் பொருளாதார, அரசியல் நிலைமை பற்றிய அதன் மதிப்பீடு சரியானது என்பதைக் காட்டியது.

சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்களுடைய முன்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 873.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஆறாவது காங்கிரசின் சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 6, பக்கம் 178.

கூற்றுக்கு மாறாக முதலாளித்துவத்தின் நிலைப்பாடு உறுதிப்படவில்லை, மேலும் மேலும் அதிகமாக ஆட்டம் கண்டது.

புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தினது புதிய ஏற்றத்தின் முதல் அறிகுறிகள் 1928ன் முடிவிலும் 1929ன் தொடக்கத்திலும் தென்படலாயின. லோத்ஸியில் நடந்த பொது வேலைநிறுத்தம், ரூர் பிரதேசச் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், பிரான்சில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும் பஞ்சாலைத் தொழிலாளர்களும் செய்த வேலை நிறுத்தம் ஆகியன போன்ற தொழிலாளி வர்க்க நடவடிக்கைகள் இதற்குச் சான்று கூறின.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்திட்டத்தினது அடிப்படையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கொள்கைவாத-அரசியல் நோக்கில் மேலும் வலுவாக்கப்பட்டன. அவற்றின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் தெளிவாயின. அந்தக் காலத்தில் லத்தீன் அமெரிக்காவின் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள், அவற்றின் நாடுகளில் புரட்சி ஏகாதிபத்திய விரோத, நில, ஜனநாயகத் தன்மை கொண்டிருக்கும் என்ற முடிவுக்கு வந்தன. 1929, ஜூன் 1 முதல் 12ந் தேதி வரை போனஸ்-அய்ரஸ் நகரில் நடந்த லத்தீன் அமெரிக்க நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளது முதலாவது மகாநாட்டில் புரட்சியின் தன்மை குறித்த பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

ஆர்ஜெண்டீனா, பிரேசில், பொலீவியா, கொலம்பியா, கியூபா, ஈக்வடோர், சால்வடோர், குவாட்டமாலா, மெக்சிக்கோ, பனாமா, பராகுவே, பெரு, உருகுவாய், வெனிசுவேலா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளைச் சேர்ந்த 38 பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். மகாநாட்டிற்குப் புறப்பட்ட சிலி நாட்டின் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகள் நாட்டில் போலீஸ் அடக்குமுறை காரணமாக மகாநாடு போய்ச் சேர முடியவில்லை.

லத்தீன் அமெரிக்கத் தொழிற்சங்க சம்மேளனம் என்ற பெயரால் முதலாவது லத்தீன் அமெரிக்கத் தொழிற்சங்க மையத்தை 1928ல் நிறுவி இருந்த தொழிலாளி வர்க்கத்தின் அணிகளது ஒற்றுமையை வலுப்படுத்துவதில் மகாநாடு சிறப்பாகக் கவனம் செலுத்தியது. புரட்சியின் வருங்காலத்துக்குத் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்வது எவ்வளவு நிர்ணயகரமான முக்கியத்துவம் உள்ளது என்பது வலியுறுத்தப்பட்டது. லத்தீன் அமெரிக்காவில் நேரடியான சோஷலிஸப் புரட்சிகள் நிகழ முடியும் என்ற கருத்தைச் சுமத்துவதற்கு திரோத்ஸ்கி

ஆதரவாளர்கள் செய்த முயற்சிகளை லத்தீன் அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மகாநாடு முறியடித்துவிட்டது.

செயல்தந்திரம் பற்றிய பிரச்சினைகள் மீது மகாநாட்டில் கடும் விவாதம் மூண்டது. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காகக் காத்திருக்காமல்... ஒவ்வொரு வட்டாரத்திலும் எழுச்சி மையங்களை அமைக்கும்படி சில பிரதிநிதிகள் யோசனை கூறினார்கள். அது தங்கள் சொந்தக் கருத்து என்றார்கள் அவர்கள். லத்தீன் அமெரிக்கா முழுவதிலும் புரட்சிக்கு ஏற்ற நிலைமைகள் ஏற்கனவே உருவாகி விட்டன என்றும் தாமதமின்றி ''ஆயுதக் கிளர்ச்சி நடத்தும்படியும்'' அவர்கள் கூறினார்கள்.

இந்தப் பிரதிநிதிகளின் நோக்கு அகநிலைப் போக்கின் வெளிப்பாடு என்று மகாநாடு சித்திரித்தது. பாட்டாளி வர்க்கக் கட்சிகள் தகர்ந்து சிதறிக் குட்டி பூர்ஷ்வாத் தான்தோன்றித்தனத்தில் கலந்து விடுவதுதான் எதார்த்தத்தில் இதன் விளைவாக நேரும் என்று மகாநாடு கருதியது. குட்டிபூர்ஷ்வா ஊசலாட்டங்களை எதிர்த்துப் போராடவும் தொழிலாளி வர்க்கத்தின் முக்கியப் பிரிவுகளுடன் நெருக்கமாகத் தொடர்பு கொள்ளவும் அதன் போராட்ட நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கி நடத்தவும் இளம் லத்தீன் அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு மகாநாடு உதவியது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பத்தாவது முழுக் கூட்டம் 1929, ஜூலையில் நடந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செல்வாக்கு மேலும் வளர்ந்திருக்கிறது என்றும் அதன் பிரிவுகளுடைய ஸ்தாபன, கொள்கைவாத வலிமை அதிகரித்திருக்கிறது என்றும் முழுக் கூட்டம் குறிப்பிட்டது.

உட்கட்சிக் கொள்கைத் துறையில் வலதுசாரி சந்தர்ப்பவாதப் போக்குடன் போராட்டம் கம்யூனிஸ்டு அகிலத்தினதும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் முக்கியப் பணியாக விளங்குகிறது என்று முழுக் கூட்டத்தின் தீர்மானங்களில் கூறப்பட்டது. முதலாளித்துவத்தின் நிலைப்பாட்டை மிகையாக மதிப்பிடுவது, யுத்த அபாயத்தைக் குறைத்து மதிப்பிடுவது, எஃகுக் கட்டுப்பாட்டின் இன்றியமையாமையை மறுப்பது ஆகியவை கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணிகளில் உள்ள வலதுசாரிப் போக்கின் மிக எடுத்துக்காட்டான பண்புகளாகும் என்று முழுக் கூட்டம் கருதியது. அமெரிக்க முதலாளித்துவம் தனிவகையானது என்று கூறிய தனது கொள்கைத்திட்டத்தையும் கட்டுப்பாடுபற்றிய சமூக-ஜனநாயகப்

புரிவையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்த லோவ்ஸ்டனது வலதுசாரி சந்தர்ப்பவாதக் குழு கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைப் போக்குக்கு எதிராக முன்வைத்தது. கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களிடையே புரட்சி வேலையை விரிவாக நடத்துவதற்கு இந்தக் குழு இடையூறு விளைத்தது. செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இலெக்—போலென் சந்தர்ப்பவாதக் குழு சமூக-ஜனநாயகவாதப் பாதைக்கு இழிந்து விட்டது. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் (தாஸ்கா குழு) ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் (பிராண்ட்லர், தால்ஹைமர்) சுவீடிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் (சில்பும் குழு) வேறு சில கட்சிகளிலும் இருந்த வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளில் குட்டி பூர்ஷ்வா நம்பிக்கையின்மையைப் பரப்ப முயன்றார்கள்.

வலதுசாரி சந்தர்ப்பவாதிகளைத் தங்கள் அணிகளிலிருந்து நீக்கிவிடுவது என்று அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் செய்திருந்த முடிவுகளை முழுக் கூட்டம் உறுதி செய்தது. வலதுசாரி சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் உள்ளவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்களாக இருப்பது பொருத்தம் அற்றது என்று முழுக் கூட்டம் சுட்டிக்காட்டியது.

புஹாரினைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலையிலிருந்து நீக்குவது என்று 1929, ஏப்ரல் 23ந் தேதி, சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டி, மத்திய கண்காணிப்புக் கமிஷன் ஆகியவற்றின் ஒன்றித்த முழுக் கூட்டம் செய்த தீர்மானத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பத்தாவது முழுக் கூட்டம் உறுதிப்படுத்தியது. செயற்குழுவின் முழுக் கூட்டத்தினது தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரசுக்குமுன்பே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் பொது அரசியல் கொள்கைப் போக்கிலிருந்து பிறழ்வு புஹாரினிடம் காணப்பட்டது. புஹாரினும் அவருடைய கருத்தை ஆதரித்தவர்களும் கட்சியின் கொள்கைக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் போது இந்தப் பிறழ்வு தனிப்பட்ட சந்தர்ப்பவாதக் கொள்கைத் திட்டமாக உருவாயிற்று. சாராம்சத்தில் அவர்களுடைய கொள்கைத் திட்டம் வலதுசாரிப் பிறழ்வு கொண்ட கொள்கைத் திட்டம்.''[1]

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 911.

வலதுசாரி சந்தர்ப்பவாதப் பிறழ்வோடு போராடுவதில் கவனத்தை மையப்படுத்துமாறு கம்யூனிஸ்டுக் கட்சிகளை வேண்டிக் கொண்ட அதே சமயத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணிகளில் நிலவிய "இடதுசாரி," குறுகிய பிரிவுவாதப் போக்குகளுடன் அதே சமயம் போராடுவதன் இன்றியமையாமையைக் குறைத்து மதிப்பிடவில்லை. சீர்திருத்தவாத ஸ்தாபனங்களுடன் செயல் ஒற்றுமை ஏற்படுத்தும் விருப்பம் வலதுசாரிப் பிறழ்வுப் போக்கைக் காட்டுவதாக எண்ணும் மனப்பான்மை சில இடங்களில் நிலவியது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பத்தாவது முழுக் கூட்டத்தின் தீர்மானங்களிலேயே பிரிவுவாதப் போக்குகளைத் தீவிரப்படுத்த உதவும் கருத்துக்களும் சூத்திரங்களும் அடங்கியிருந்தன. "சர்வதேச நிலைமையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் அடுத்து வரும் பணிகளும்" என்ற முழுக் கூட்டத்தின் முக்கிய தஸ்தாவேஜில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: "வலுவான சமூக-ஜனநாயகக் கட்சிகள் உள்ள நாடுகளில் பாசிஸத்தின் தனிப்பட்ட வடிவமாக விளங்குவது சோஷல்-பாசிஸம் ஆகும்...".[1] "சமூக-ஜனநாயகத்தையும், சிறப்பாக அதன் "இடது" சாரியையும் தொழிலாளர் இயக்க அணிகளில் கம்யூனிஸத்தின் மிகமிக அபாயம் நிறைந்த பகைவனாகவும் தொழிலாளி வெகுஜனங்களின் போராட்டச் செயலூக்கத்துக்கு முதன்மையான முட்டுக்கட்டையாகவும் கருதி, அவற்றுக்கு எதிரான போராட்டத்தை உறுதியுடன் தீவிரப்படுத்துவது"[2] கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணி என்று இந்த தஸ்தாவேஜு வலியுறுத்தியது. வலதுசாரி சமூக-ஜனநாயகத்தின் சமரசப் போக்குள்ள, தொழிலாளர்விரோதக் கொள்கையின் நேரான விளைவாக இருந்தது இந்த மதிப்பீடு. ஆனால், சமூக-ஜனநாயகத்தை எதார்த்தத்தில் பாசிஸத்துக்குச் சமமாகக் கருதியதும், பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் கூட்டாளிகள் ஆகியிருக்கக் கூடிய சமூக-ஜனநாயகத்தின் இடதுசாரி நபர்கள் மீது முதன்மையாகத் தாக்குதல் நடத்தும் கோஷமும் தவறானவையாக இருந்தன. தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரை நம் தரப்

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பத்தாவது முழுக் கூட்டம், ஆய்வுரைகள், தீர்மானங்கள், பிரேரணைகள். மாஸ்கோ—லெனின்கிராத், 1929, பக்கம் 14.

[2] அதே நூல், பக்கங்கள் 25-26.

புக்குக் கொண்டுவருவது என்ற, முழுக் கூட்டத்தால் முன்வைக்கப் பட்ட பணியை நிறைவேற்றுவது இந்தத் தவற்றின் காரணமாகக் கடினம் ஆயிற்று.

ஏகாதிபத்திய யுத்த அபாயத்துக்கு எதிரான சர்வதேசப் போராட்ட தினம் கொண்டாடுவது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் செய்த தீர்மானத்துக்கு இணங்க, 1929, மே மாதம் பிரஸ்ஸல்ஸ் நகரில் நடந்த பதின்மூன்று கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மகாநாடு செய்த முடிவைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பத்தாவது முழுக் கூட்டம் உறுதிப்படுத்தியது. இதன்படி, மேற்படி தினம் ஆகஸ்டு 1ந் தேதி கொண்டாடப்பட வேண்டி இருந்தது. ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் பிற்போக்குக்கும் எதிராக ஆகஸ்டு 1ந் தேதி தொழிலாளி வர்க்கம் எடுத்துக் கொள்ளும் சர்வதேச நடவடிக்கை, தொழிலாளி வர்க்கத்தின் வழக்கமான யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் வரம்புகளுக்குள் அடங்காத நிகழ்ச்சி என்ற முக்கியத்துவம் கொண்டிருக்க வேண்டும் என்று முழுக் கூட்டத்தின் தீர்மானம் வலியுறுத்தியது. தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் போராட்டம் அனைத்துடனும் அது நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். முதலாளித்துவத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி நடவடிக்கைகளை சர்வதேச அளவில் ஒன்றிணைக்கும் விறல் மிக்க சாதனமாக அது விளங்க வேண்டும்.

ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராகவும் சோவியத் யூனியனுக்கு ஆதரவாகவும் ஆகஸ்டு 1ந் தேதி தொழிலாளி வர்க்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அனேக நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிச் சக்திகளது போராட்ட அணிவகுப்பின் தன்மையை மேற்கொண்டன.

* * *

1924 முதல் 1929 வரையுள்ள காலப்பகுதியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் நடவடிக்கைகளுக்கான நிலைமைகள் அதிகச் சிக்கலாயின. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தலைவர் வி. இ. லெனின் இல்லாதது கம்யூனிஸ்டு அகிலத்தினது நடவடிக்கைகளின் சில அம்சங்களைப் பாதித்தது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தினுடையவும் கம்யூனிஸ்டு இயக்கத்தினுடையவும் சில பிரச்சினைகள் இந்தக் காலப்பகுதியில் ஒத்திசைந்த மார்க்சிய-லெனினிய நோக்கில் தீர்க்கப்படவில்லை. அதே சமயம் கம்யூனிஸ்டு இயக்கம் தன்

அணிகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் வலுப்படுத்துவதில் முன்னேறியது. கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கும் ''அதிதீவிர இடதுசாரிப்'' பிறழ்வுகளுக்கும் எதிராக இடையறாத போராட்டம் நடத்தின. கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கைத் திரிக்க முயன்ற திரோத்ஸ்கிவாதத்தைக் கொள்கைவாத-அரசியல் துறையிலும் ஸ்தாபனத் துறையிலும் முறியடித்தது, கம்யூனிஸ்டு அகிலமும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியும் ஆற்றிய சிறப்பான தொண்டாக விளங்கியது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிக முக்கியமான செயல்திட்ட தஸ்தாவேஜுகள் கூட்டு முயற்சியால் தயாரிக்கப்பட்டன.

அத்தியாயம் நான்கு

முதலாளித்துவ உலகில் பொருளாதார நெருக்கடியும் சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் அடிப்படைகளினது கட்டுமானமும் நிகழ்ந்த ஆண்டுகளில் கம்யூனிஸ்டு அகிலம்

(1929-1933)

முதலாளித்துவ உலகில் பொருளாதார நெருக்கடி முற்றிய நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும்

உலகப் பொருளாதார நெருக்கடியும் உழைப்பாளிகளின் புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சியும்

முதலாளித்துவத்தின் நிலைப்பாடு ஏற்பட்ட ஆண்டுகளிலேயே புதிய, கடுமையான உலகப் பொருளாதார நெருக்கடி முற்றுவது தவிர்க்க முடியாதது என்று கம்யூனிஸ்டு அகிலம் சுட்டிக்காட்டியது. முதலாளித்துவ வளர்ச்சியின் முரண்பாடுகளை மார்க்சிய-லெனினிய நோக்கில் ஆழ்ந்து பகுத்து ஆராய்ந்ததன் அடிப்படையில் இந்த முடிவு பெறப்பட்டிருந்தது. முதலாளித்துவ நாடுகளில் பொருளாதாரத்தின் ஒப்புநோக்கில் விரைந்த வளர்ச்சியின் விளைவாக முதலாளித்துவ முரண்பாடுகள் முன்னைவிட அதிக விரிவான அளவில் மீண்டும் எழும் என்றும், முதலாளித்துவத்தின் உறுதியற்ற நிலைப்பாடு முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் அதன் பின்னே நெருக்கடியின் பயங்கரமான நிழல் ஏற்கனவே தென்படத் தொடங்கி விட்டது என்றும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ் குறிப்பிட்டது.

முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் பொருளாதார நிலைமை ஏற்றப் போக்கில் வளர்ச்சி அடைந்து வந்தாலும் "புதிய பொருளாதார நெருக்கடி இப்போதே கண்கூடாகத் தெரிகிறது"[1] என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பத்தாவது முழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளிலும் சொற்பொழிவுகளிலும் கூறப்பட்டது. சிறிது காலம் கழிவதற்குள் கம்யூனிஸ்டு அகிலத்தின் இந்த முன்னறிவிப்புகள் முழுமையாக உறுதிப்பட்டுவிட்டன.

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பத்தாவது முழுக் கூட்டம். வெளியீடு 1. சர்வதேச நிலைமையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளும். மாஸ்கோ, 1929, பக்கம் 210.

1929ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதற்கு முன் ஒருபோதும் இல்லாத பங்கு மார்க்கெட் கிலி பரவியது. நிதிமனைகளும் கடன் நிலையங்களும் திவாலாயின. பிற நாடுகளிலும் இந்த நிலைகுலைவு பரவியது. தொடங்கிவிட்ட உலகப் பொருளாதார நெருக்கடியின் முதல் அறிகுறியாக விளங்கியது இது.

1929-1933 நெருக்கடி, முதலாளித்துவ வரலாற்றில் நிகழ்ந்த நெருக்கடிகள் எல்லாவற்றிலும் மிக நீண்டது மட்டுமின்றி மிக மிக ஆழ்ந்ததும் அழிவு விளைப்பதுமாக இருந்தது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் நிலைமைகளில் நிகழ்ந்த இந்த நெருக்கடி, முதலாளித்துவ உலகின் எல்லா நாடுகளையும் ஆட்கொண்டு, பூர்ஷ்வா வர்க்கத்தின் பொருளாதாரத்துக்கும் அரசியல் அடிப்படைகளுக்கும் கொள்கைவாதத்துக்கும் மிகப் பலத்த அடிகள் கொடுத்தது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி இன்னும் கடுமை ஆயிற்று.

தொழில்துறை, விவசாயம், கடன்-நிதி அமைப்பு, வர்த்தகம், சர்வதேசப் பொருளாதார உறவுகள் ஆகிய, முதலாளித்துவப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் நெருக்கடி பாதித்தது. பெருத்த உயரத்துக்கு ஏற்றம் அடைந்திருந்தது போல இருந்த முதலாளித்துவ உற்பத்தி, கடன் செலுத்தத் திறனுள்ள சந்தை மிக மிகக் குறுகி விட்டதன் விளைவாக விரைவாகச் சரியத் தொடங்கியது. 1929 முடிவிலிருந்து 1930 முடிவு வரையுள்ள ஓர் ஆண்டில் மட்டும் தொழில் உற்பத்தி முக்கியமான முதலாளித்துவ நாடுகளில் 10-17 சதவிகிதம் குறைந்துவிட்டது. முதலாளித்துவப் பொருளாதாரம் வீழ்ச்சியின் அடிமட்டத்தை 1932ல் எட்டியது. நெருக்கடிக்கு முந்திய தரத்துடன் ஒப்பிடும் போது தொழில் உற்பத்தி அந்த ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 46 சதவிகிதம் குறைவாக இருந்தது. ஜெர்மனியில் இது 47 சதவிகிதமும் பிரிட்டனில் 16.5 சதவிகிதமும் பிரான்சில் 31 சதவிகிதமும் இத்தாலியில் 33 சதவிகிதமும், செக்கோஸ்லோவாக்கியாவிலும் பெல்ஜியத்திலும் ஹாலந்திலும் ஏறக்குறைய 37 சதவிகிதமும் குறைவாயிருந்தது.[1] மொத்தத்தில் முதலாளித்துவ உலகின் தொழில் உற்பத்தி 1930 முதல் 1933 வரை 38 சதவிகிதம் குறைந்தது.[2]

---

1 ''1936ல் உலகப் பொருளாதாரம்.'' ஆண்டு நூல். மாஸ்கோ, 1937, பக்கங்கள் 180, 184, 188, 192, 200, 214, 222.

2 எ. வார்கா. முதலாளித்துவமும் சோஷலிஸமும் 20 ஆண்டுகளில். மாஸ்கோ, 1938, பக்கம் 37.

முதலாளித்துவ நாடுகளில் நிறுவப்பட்டிருந்த பிரமாண்டமான உற்பத்திச் சக்திகள் வேலையற்றுக் கிடந்தன. உயிரற்ற சுரங்கங்கள், அணைந்த ஊதுலைகள், ஆலைகள் தொழிற்சாலைகளின் வெறிச்சோடி, இயந்திரங்களின் கல்லறைகளாக மாறிவிட்ட கட்டிடங்கள் ஆகியவை, முதலாளித்துவம் தன் உற்பத்திச் சக்திகளைத் தானே எப்படி அழிக்கிறது என்பதற்குக் கண்கூடான சான்றுகளாக விளங்கின. விற்பனை ஆகாத பொருள்களின் சேமிப்பைக் குறைப்பதற்காகவும் விலைகளும் லாபங்களும் மேற்கொண்டு சரிவதைத் தடுப்பதற்காகவும் ஏகபோக நிறுவனங்கள் ஏராளமான சரக்குக்களை அழித்தன, புத்தம் புதிய இயந்திரக் கருவிகளையும் இயந்திரங்களையும் உடைசல்களாக மாற்றின.

தொழில் துறையில் நெருக்கடி விவசாய நெருக்கடியுடன் கலந்து அதைத் தீவிரமாக்கிற்று. மூலப் பொருள்கள், உணவுப் பண்டங்கள் ஆகியவற்றின் விலைவாசிகள் சரியவே விவசாய உற்பத்தி குறைந்தது. 1929—1933ல் இதன் அளவு மூன்றிலொரு பங்கு குறைந்தது. நிதி கடன் அமைப்பு அடியோடு சீர்குலைந்தது. பல்லாயிரம் நிதிமனைகள் திவாலாயின. 56 அரசுகளில் நாணயம் மதிப்பு இழந்தது. முதலாளித்துவச் சந்தையில் வெளிநாட்டு வர்த்தகம் விலைமதிப்பில் மூன்று மடங்கு குறைந்தது.

நெருக்கடி காரணமாக விற்பனைச் சந்தைகளின் பொருட்டு ஏகாதிபத்திய நாடுகளின் போராட்டம் வலுத்தது. உலகைச் செல்வாக்கு மண்டலங்களாகப் பங்கிட்டுக் கொள்வதற்கான முந்திய ஒப்பந்தங்கள் யாவும் எதார்த்தத்தில் காற்றில் விடப்பட்டன. அவற்றை எவரும் மதிக்கவில்லை. வெர்சேல்-வாஷிங்டன் ஒப்பந்தத் தொகுப்பு தகர்ந்து சிதையலாயிற்று. நெருக்கடி ''நிரந்தரச் செழிப்பு'' பற்றிய பூர்ஷ்வா சித்தாந்தங்களுக்கு மரண அடி கொடுத்தது. ''ஒழுங்கமைந்த முதலாளித்துவம்'' பற்றிய வலதுசாரி சோஷலிஸ்டுகளின் சித்தாந்தமும் அதே கதிக்கு உள்ளாயிற்று. முதலாளித்துவம் தன் அடிப்படைத் தீமைகளிலிருந்து விடுபட்டுவிட்டதாகக் கூறியது வலதுசாரி சோஷலிஸ்டுகளின் இந்த சித்தாந்தம். விஞ்ஞானக்கேடான கற்பனைகளை ஆதாரமாகக் கொண்ட பூர்ஷ்வாக்களதும் வலதுசாரி சோஷலிஸ்டுகளதும் இந்த மருட்சிகள் முழுமையாகத் தகர்ந்து சிதறின. முதலாளித்துவ நிலைப்பாடு நீடித்திருக்கும் என்ற வலதுசாரி சந்தர்ப்பவாதிகளின் வலிந்துரைகளையும் நெருக்கடி தூள் பரத்திவிட்டது.

முதலாளித்துவ உலகம் முழுவதையும் பீடித்திருந்த நெருக்

குடியின் அழிவு விளைக்கும் பின்னணியில் சோவியத் யூனியனது பொருளாதாரத்தின் விரைந்த வளர்ச்சி வேகம் சிறப்பான உளப் பதிவு ஏற்படுத்தியது. இந்த ஆண்டுகளில்தான் சோவியத் உழைப் பாளிகள் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் முதலாவது ஐந் தாண்டுத் திட்டத்தின் மாட்சிமிக்க பணிகளை வெற்றிகரமாக நிறை வேற்றி, தங்கள் சாதனைகளால் உலகை வியப்பில் ஆழ்த்தினார்கள். சோஷலிஸம் முதலாளித்துவம் என்னும் இரண்டு சமுதாய-பொரு ளாதார அமைப்புக்களின் வளர்ச்சிப் பாதைகளின் எதிரெதிரான தன்மையை வாழ்க்கை முன் ஒருபோதும் இல்லாத ஆற்றலுடன் வெளிக்காட்டியது. முதலாளித்துவத் தொழில் உற்பத்தி கீழே சரிந்த அதே காலத்தில் சோவியத் யூனியனில் தொழில் உற்பத்தி *1929-1932*ல் இரு மடங்கு அதிகரித்தது. *1932*ல், குறித்த கெடு வுக்கு முன்னரே நிறைவேற்றப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சோவியத் யூனியன் தொழில் பெருக்கப் பாதையில் வெகுவாக முன்னேறியது. *1500* பெரிய புதிய தொழில் நிலையங் கள் கட்டப்பட்டன. இவற்றில் ஹார்க்கவ் டிராக்டர் தொழிற் சாலை, குஸ்னேத்ஸ்க் உலோக வார்ப்புத் தொழிற்சாலை, த்னேப் பர் நீர்மின் நிலையம், பெரெஸ்னிக்கி இரசாயனத் தொழிற்சாலை ஆகியனவும் பிரமாண்டமான வேறு பல தொழிற்சாலைகளும் உற்பத்தி தொடங்கின.

விவசாயம் கூட்டுறவு முறையில் அமைக்கப்படுவது விரைவாக வளர்ச்சி அடைந்தது. குறைந்த உற்பத்தி தந்த சிறு சிறு தனி விவசாயிகளின் பண்ணைகளின் இடத்தில் கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. நாட்டில் எஞ்சியிருந்த இறுதியான சுரண்டு வோர் வர்க்கம்—குலாக்குகள் சமூகம்—ஒழிக்கப்பட்டுக் கொண் டிருந்தது.

வேலை இல்லாத் திண்டாட்டம் அறவே அகற்றப்பட்டது சோவியத் சமூகத்தின் மிகப் பெரிய சமுதாய வெற்றியாக விளங் கியது. பண்பாட்டுப் புரட்சி வெற்றிகரமாக நடந்தது.

சோவியத் மக்களின் வெற்றிகளது மாபெரும் முக்கியத்துவம், மனிதகுல வரலாற்றிலேயே சோஷலிஸத்தின் அடிப்படைகளை நிறுவும் முதல் சோதனை அங்கே நிகழ்ந்தது என்பதாகும். பழைய சுரண்டுவோர் அமைப்பை அழிக்க மட்டும் இன்றி, புதிய சமூகத் தை வெற்றிகரமாக நிறுவவும் கம்யூனிஸத்தின் ஒளி வீசும் ஆதர் சங்களைச் செயல்படுத்தவும் தாங்கள் வல்லவர்கள் என்பதை சோவி யத் உழைப்பாளிகள் தங்கள் செயல்களால் உலகம் முழுவதற்கும்

நிரூபித்துவிட்டார்கள். முதலாளித்துவத்துடன் ஒப்பிடும் போது சோஷலிஸத்துக்கு உள்ள பெருத்த சாதகங்களையும், உற்பத்தி அராஜகம் நிறைந்த முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கு முன் திட்டமிட்ட சோஷலிஸப் பொருளாதாரத்தின் மேம்பாட்டையும் சோவியத் யூனியனின் வளர்ச்சி கண்கூடாகக் காட்டிவிட்டது. சோஷலிஸத்தின் அடிப்படைகளை நிறுவுவதில் சோவியத் யூனியனின் வெற்றிகளை, சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் அனைத்தினதும் வெற்றியாகவும் உலகனைத்திலும் சோஷலிஸக் கருத்துக்களின் செல்வாக்கைத் தீவிரப்படுத்தும் காரணியாகவும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் மதித்தன. நவீனத் தொழில்நுட்ப சாதனங்கள் பெற்றுவிட்ட சோஷலிஸம், ஏகாதிபத்தியத்துக்கு எதிர்நிற்கும் பெருத்த பொருளியல் சக்தி ஆகிவிட்டது என்பதும் மாபெரும் முக்கியத்துவம் கொண்டிருந்தது. சோவியத் யூனியனில் நடந்த வளர்ச்சி, முதலாளித்துவ உலகில் நடந்தவற்றுக்கு முற்றிலும் வேறுபட்டதாகக் காட்சி அளித்தது.

உலகப் பொருளாதார நெருக்கடி முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த திரளான பொது மக்களின் நிலைமையைப் பெருத்த அளவில் பாதித்தது. நெருக்கடியின் சுமைகள் எல்லாவற்றையும் அவர்கள் மீது சுமத்த பூர்ஷ்வா வர்க்கம் முயன்றது. சிறப்பாகப் பாட்டாளி வர்க்கத்தின் நிலைமை படு மோசமாயிற்று. நெருக்கடியின் தாக்குதல்களால் இரு மடங்கு பீடிக்கப்பட்டது பாட்டாளி வர்க்கம்: ஒரு புறம் சம்பளம் இடைவிடாது குறைந்து கொண்டு போயிற்று. மறு புறம் வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமாக அதிகரித்தது. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட்ட சம்பளப் பணத்தின் மொத்தத் தொகை 30-50 சத விகிதம் குறைந்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் முன் ஒருபோதும் இல்லாத அளவை எட்டிவிட்டது. 350 லட்சத்துக்கும் அதிகமான பெயர் தொழிற்சாலைகளிலிருந்து வெளியே அனுப்பப்பட்டார்கள். இவர்கள் முழுமையாக வேலையற்றவர்கள் ஆயினர். இவர்களில் 160 லட்சம் பெயர் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் 55 லட்சம் பெயர் ஜெர்மனியையும் 30 லட்சம் பெயர் பிரிட்டனையும் 28 லட்சம் பெயருக்கும் மேல் ஜப்பானையும் 23 லட்சம் பெயர் பிரான்சையும் 9 லட்சம் பெயர் செக்கோஸ்லோவாக்கியாவையும் 8 லட்சம் பெயர் ஹங்கேரியையும் சேர்ந்தவர்கள். இன்னும் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் அறைகுறை வேலையற்றவர்களாக இருந்தார்கள்.

பூர்ஷ்வா அரசாங்கங்கள் ''சிக்கனத் திட்டங்களின்'' அடிப்படையில் வேலையில்லாதாருக்கு அளித்த படிகளை வரவரக் குறைத்தன. மற்ற எல்லா வகையான சமுதாய உதவி நிதிகளையும் வெட்டின. பல நாடுகளில் வேலையில்லாதாரின் அரசுப் பராமரிப்பு முறை இருக்கவே இல்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜெர்மனி, பிரிட்டன், பிற நாடுகள் ஆகியவற்றின் வீதிகளில் லட்சோபலட்சம் ஆட்கள் வேலையையும் ரொட்டித் துண்டையும் தேடி வீணே அலைந்து திரிந்தார்கள்.

நெருக்கடி கோடிக்கணக்கான விவசாயிகளை வன்மையாகத் தாக்கியது. 1929-1933ல் சுமார் பத்து லட்சம் பண்ணைகள் கடன்களைத் தீர்ப்பதற்காக வேறு வழியின்றி விற்கப்பட்டன. ஏலத்தில் விடப்பட்ட விவசாயிப் பண்ணைகளின் தொகை பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் மூன்று மடங்கும் அதற்கு அதிகமும் ஆகி விட்டது. வழக்கமாக இவை சிறு பண்ணைகள். கிராமங்களில் உடைமைகளை இழந்தவர்கள் நகர வேலையில்லாதோரின் பெரும் படைகளை நிறைத்தார்கள்.

நெருக்கடியின் தாக்குதல்களால் லட்சக் கணக்கான கைத்தொழிலாளர்களும் சிறு தொழிலதிபர்களும் வர்த்தகர்களும் அலுவலர்களும் வாழ்க்கை நடத்துவதற்கான பொருளியல் ஆதாரத்தை இழந்து சீரழிந்து போனார்கள்.

காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் மக்களின் வறுமை சிறப்பாகக் கடுமையாக இருந்தது. காலனிகளும் அரைக்காலனிகளும் முதன்மையாக உற்பத்தி செய்துவந்த விவசாய மூலப் பொருள்களும் உணவுப் பண்டங்களும் உலகச் சந்தையில் விலை மதிப்பை இழந்துவிட்டன. அதே சமயம் காலனிகள் ஏகாதிபத்திய வாதிகளால் சூறையாடப்படுவது தீவிரம் ஆயிற்று. காலனிகளில் கோடிக்கணக்கான விவசாயிகளின் நிலங்கள் கடுவட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் கைகளுக்கும் நிலப் பிரபுக்களின் கைகளுக்கும் மாறிவிட்டன. கோடானுகோடி மக்கள் பட்டினிச் சாவின் எல்லைக்கு வந்து விட்டார்கள். இவை எல்லாம் ஏகாதிபத்தியக் காலனி ஆட்சியாளர்கள் மீது வெகுஜனங்களின் வெறுப்பை மேலும் ஆழ்ந்தது ஆக்கின.

பாட்டாளிகளினதும் நடுத்தர வகுப்பினருடையவும் பொருளியல் நிலைமையும் உரிமைகளும் முதலாளித்துவ நாடுகளில் மட்டு மீறிச் சீர்குலைந்ததன் விளைவாக வர்க்கப் போராட்டம் கடுமையாகத் தீவிரமடைந்தது. புரட்சிச் சக்திகள் செயல்படத் தொடங்

கின. வேலைநிறுத்த இயக்கம் வளர்ந்தது. 1929-1932ல் 15 மிகப் பெரிய நாடுகளில் சுமார் 19 ஆயிரம் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. இவற்றில் 85 லட்சம் பெயர் பங்கு கொண்டார்கள்.[1]

சம்பளக் குறைப்பு, வேலையிலிருந்து நீக்கம், சமுதாயப் படிச் சலுகைகளில் வெட்டு ஆகியவற்றுக்கு எதிராகவும், உழைப்பாளிகளின் ஜனநாயக நலங்களை அழிப்பவையான நெருக்கடிக் கால அரசாங்க நடவடிக்கைகளை எதிர்த்தும் தொழிலாளி வர்க்கம் விரிவான போராட்டம் தொடங்கியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஜெர்மனியிலும் பிரான்சிலும் போலந்திலும் ஹங்கேரியிலும் ருமேனியாவிலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் பல வேலைநிறுத்தங்கள் தொடக்க ஆண்டுகளிலேயே அதிகாரிகளுடனும் போலீசுடனும் கடுமையான மோதல்களாக விரிவடைந்தன. 1930, அக்டோபர் மாதம் பெர்லின் நகரின் 130 ஆயிரம் உலோகவார்ப்புத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். 1931ம் ஆண்டுத் தொடக்கத்தில் ரூர் பிரதேசத்திலும் போலந்தின் நிலக்கரிப் பிரதேசங்களான தம்புரோவாவிலும் கிராக்கவிலும் சுரங்கத் தொழிலாளர்கள் பேரளவில் வேலைநிறுத்தங்கள் செய்தார்கள்.

1930, செப்டெம்பர் 1ந் தேதி ஹங்கேரியில் லட்சம் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது. கம்யூனிஸ்டுகளும் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளும் இதை உற்சாகம் பொங்கும் புரட்சி நடவடிக்கையாக மாற்றிவிட்டார்கள். போலீஸ் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. ஓர் ஆண்டுக்குப் பின் தொழிலாளர்களின் விறல் மிக்க அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நாட்டை மீண்டும் உலுக்கி எடுத்தன. அரசாங்கம் தொழிலாளர்களுக்கு எதிராகப் போலீசை மட்டுமின்றி, பீரங்கிகள் கொண்ட படைப் பிரிவுகளையும் அனுப்பியது.

1931ம் ஆண்டின் நடுவில், ''பட்டினிச் சாவுக்கு எதிராக'' என்ற கோஷத்துடன் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வெடித்துக் கிளம்பியது. துப்பாக்கிகளும் கண்ணீர்ப் புகையாவிக் குண்டுகளும் கொண்டு தாக்கிய போலீசாருடன் தொழிலாளர்கள் கைகலப்பு நடத்த வேண்டியதாயிற்று. வேலைநிறுத்த இயக்கம் பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் மேலும் மேலும் ஏற்றம் அடைந்தது.

---

[1] வி. ஃபோஸ்டர். உலகத் தொழிற்சங்க இயக்கம் பற்றிய கட்டுரைகள். மாஸ்கோ, 1956, பக்கம் 385.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்ததற்கு ஏற்ப வேலையில்லாதவர்களின் இயக்கம் நாளுக்கு நாள் அளவில் விரிவாகிக் கொண்டு போயிற்று. சமுதாயப் பராமரிப்பை அமல் படுத்தும் படியும் சமூக வேலைத்திட்டத்தை ஏற்கும்படியும் தங்கள் குடும்பங்களைப் பட்டினியிலிருந்து காக்கும்படியும் இவர்கள் கோரினார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஜெர்மனியிலும் போலந்திலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் பிரிட்டனிலும் பிரான்சிலும் ஆஸ்திரியாவிலும் கானடாவிலும் பிற நாடுகளிலும், "வேலையும் உணவும்!" என்ற கோஷத்துடன் வேலையற்றோரின் பட்டினி ஊர்வலங்கள் நடந்தன. எங்கும் வேலையற்றோர் கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

தொழிலாளர்களுக்கும் வேலையற்றோருக்கும் இடையே ஒன்றித்த கூட்டணி ஏற்படுத்தும் பொருட்டும் அவர்களுக்குள் பிணக்குகளை மூட்டிவிட பூர்ஷ்வா வர்க்கம் செய்த முயற்சிகளைத் தடுக்கும் பொருட்டும் வேலையற்றோர் இயக்கத்தை விரிவாக நடத்துவதில் கம்யூனிஸ்டு அகிலம் அந்தக் காலத்தில் பெருத்த கவனம் செலுத்தியது. இதன் பொருட்டு வேலையற்றோர் கமிட்டிகளில் வேலை செய்யும் தொழிலாளர் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்வது இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அரசியல் செயலகம் 1930 ஜனவரியில் அகிலத்தின் பிரிவுகளுக்கு விடுத்த ஆணைக் குறிப்புக்களில் அறிவுறுத்தியது. "தங்கள் கோரிக்கைகளுக்காக வேலையற்றோர் நடத்தும் போராட்டத்தைத் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் போராட்டத்துடன் பிணைப்பது இன்றியமையாதது. பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் பொதுக் கோஷங்களோடு கூடவே, உங்கள் நாட்டு நிலைமைகளுக்குப் பொருத்தமான, மக்கள் விரும்பும் திட்டவட்டமான கோஷங்களையும் முன்வைப்பது இன்றியமையாதது ஆகும்"[1] என்று அது கூறியது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளதும் கம்யூனிஸ்டு அகிலத்தினுடையவும் முன்முயற்சியால் 1930, மார்ச்சு 6ந் தேதியும் 1931, பிப்ரவரி 25ந் தேதியும் சர்வதேச வேலையில்லாத் திண்டாட்ட எதிர்ப்பு நாட்களாகக் கொண்டாடப்பட்டன. அந்த நாட்களில் வெகுஜன ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் வேலையற்றோர் கூட்டங்களும் நடைபெற்றன. உழைப்பாளிகள் வறுமையும் துன்பமும்

---

[1] மை. ஆ. கூ, 495/19/242/14.

உழலும் படி விதித்திருந்த பூர்ஷ்வா அமைப்பு முறையின்பால் கோடிக்கணக்கான பாட்டாளிகளின் அதிகரித்து வந்த வெறுப்பு தொழிலாளி வர்க்கத்தின் நடவடிக்கைகளில் வெளிப்பட்டது.

வர்க்கப் போராட்டம் நாட்டுப் புறத்திலும் விரிவாயிற்று. கடன்களுக்காகத் தங்கள் நிலங்களைக் கட்டாயமாக விற்பனை செய்வதை நிறுத்தும்படியும் வரிகளைக் குறைக்கும்படியும் கடன்களை ரத்து செய்யும்படியும் விவசாயிகள் கோரினூர்கள். அநேக நாடுகளில் விவசாயிகளின் வெகுஜனப் போராட்ட ஏற்பாடுகள் தீவிரம் அடைந்தன.

நெருக்கடி முற்ற முற்ற நகர நடுத்தர வட்டாரங்களிலும் அதிருப்தியும் அமைதியின்மையும் அதிகரித்தன. இந்த வட்டாரங்களின் பல பிரதிநிதிகள் தொழிலாளர்களின் தோளோடு தோள் சேர்த்து உறுதியுடன் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். ஆனல் நடுத்தர வகுப்புக்களின் கணிசமான பகுதியினர் புகலின்மையாலும் நிராசையாலும் ஆட்கொள்ளப்பட்டு, பிற்போக்குக் கட்சிகளின் வெற்று வாய்வீச்சுக்களால் இன்னமும் ஈர்க்கப்பட்டார்கள் அல்லது ஊசலாடினூர்கள். எண்ணிக்கை பெருத்த இந்த ''அமைதியற்ற பகுதி'' தொழிலாளி வர்க்கத்தின் பின் செல்லக் கூடும் என்று பூர்ஷ்வா வர்க்கம் அஞ்சியது.

முதலாளித்துவ உலகம் கடுமையான வர்க்கப் போராட்டக் காலப்பகுதியில் இருந்தது. 1931ல் ஸ்பெயினில் முடியரசு கவிழ்க்கப்பட்டு பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி வளர்ச்சி அடைந்தது. ஜெர்மனியிலும் போலந்திலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் வேறு சில நாடுகளிலும் தொழிலாளர் இயக்கம் ஏற்றம் பெற்றது. புரட்சிச் சக்திகள் செயலில் இறங்கிவிட்டதை இந்த நிகழ்ச்சிகள் காட்டின.

காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் பொருளாதார நெருக்கடி முற்றியது, அவற்றின் மீது ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தம் வலுத்தது, தொழிலாளர்கள் மேலும் மேலும் கடுமையாகச் சுரண்டப்பட்டது, விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும் திரளாகச் சீரழிந்தது ஆகியவற்றின் காரணமாக, ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரதும் அதிருப்தி மேலும் ஆழமாயிற்று, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் பரப்பு அதிகரித்தது. காலனிகளில் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களும் வெகுஜன ஆர்ப்பாட்டங்களும் நகரங்களில் கிளர்ச்சிகளும் விவசாயிகளின் போராட்டங்களும் அலைகளாகப் பரவின. ஏகாதிபத்தியத்துடன் தேசிய

பூர்ஷ்வா வர்க்கத்தின் முரண்பாடுகள் கூர்மை அடைந்தன. இந்தக் காரணத்தால் அது தேசிய-விடுதலை இயக்கத்தில் அதிகச் செயலூக்கத்துடன் பங்கு கொள்ளுமாறு தூண்டப்பட்டது. பல வகைப்பட்ட வர்க்கச் சக்திகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒன்றித்த தேசியக் கூட்டணி வடிவில் ஒன்றுதிரள்வதற்கான தக்க வாய்ப்பு பல நாடுகளில் ஏற்பட்டது.

இந்தியாவில் காலனியாட்சி அதிகாரிகளுக்கு எதிராக சாத்துவிக சட்ட மறுப்பு இயக்கம் நடந்தது. தொழிலாளர்களும் விவசாயிகளும் நகர ஏழை மக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டது இந்த இயக்கத்துக்குத் தாக்கி முன்னேறும் போராட்டத் தன்மையை அளித்தது. 1930ல் சிட்டகாங்கிலும் பெஷாவரிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சிகள் மூண்டெழுந்தன. பெரிய இயந்திரத் தொழில் மையமான ஷோலாப்பூரில் தொழிலாளர்கள் போராடக் கிளர்ந்து எழுந்தார்கள். அவர்கள் ஆங்கில அதிகாரிகளின் பிரதிநிதிகளையும் வட்டாரப் போலீசாரையும் நகரிலிருந்து வெளியே துரத்திவிட்டுப் புரட்சிகரச் சுயாட்சி உறுப்புகளை அமைத்தார்கள். அன்னிய அரசாங்கத்தின் தண்டனைப் படைகளுடன் பல நாட்கள் இரத்தம் பெருக்கிப் போரிட்டார்கள். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிரான கிளர்ச்சி விரிவாகப் பரவியது. இந்திய மக்களின் விடுதலைப் போராட்டம் ஏற்றம் பெற்றதை எதிர்த்துக் காலனி ஆட்சியாளர்கள் வெகுஜன அடக்கு முறை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். 1930ல் 60 ஆயிரத்துக்கும் மேல் தேசபக்தர்கள் கைது செய்யப்பட்டார்கள். மகாத்துமா காந்தியும் தேசிய-சீர்திருத்தவாதக் கட்சியான இந்திய தேசியக் காங்கிரசின் பிற தலைவர்களும் கைது செய்யப்பட்டவர்களில் இருந்தார்கள். தேசியக் காங்கிரசின் பெரும்பாலான தலைவர்கள், வெகுஜன இயக்கத்தின் அளவையும் தன்மையையும் கண்டு அஞ்சியும் ஆங்கில அதிகாரிகளிடமிருந்து சில சலுகைகள் பெற விரும்பியும் காலனி ஆட்சியாளர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். விடுதலைக்காக யாவரிலும் ஒத்திசைந்த முறையில் போராடியவர்களான இந்தியக் கம்யூனிஸ்டுகள், காலனி ஆட்சி அதிகாரிகளுடன் சீர்திருத்தவாதிகள் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்தார்கள்.

சீனாவில் அனேகத் தெற்கு மாநிலங்களில் நிலப்பிரபுக்களுக்கு எதிராக விவசாயிகளின் போராட்டம் அந்தக் காலத்தில் விரிவாகப் பரவியது. புரட்சித் தளங்களின் பெரிய வட்டாரங்கள்

உருவாயின. இந்த வட்டாரங்களில் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சியின் உறுப்புக்களாக சோவியத்துக்கள் அமைக்கப்பட்டன. புரட்சித் தளங்களின் பிரதேசத்தில் தேசபக்த கொரில்லாப் படைப்பிரிவுகளைக் கொண்டு புரட்சியின் சொந்த இராணுவம்—சீனாவின் செஞ்சேனை—நிறுவப்பட்டது. 1931ல் அதில் ஒரு லட்சத்துக்கும் மேல் படையினர் இருந்தார்கள். சோவியத் பிரதேசங்களுக்கு எதிராகக் குவோமிந்தான் படைகளின் தாக்குதல்களைச் செஞ்சேனை வெற்றிகரமாக எதிர்த்து முறியடித்தது.

இந்தோசீனாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் தீவிரம் அடைந்தது. 1930ல் யென்பாய் கோட்டையை (வடக்கு வியத்நாம்) சேர்ந்த படை பிரெஞ்சுக் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தது. வேறு சில வட்டாரப் படைப் பிரிவுகளும் கிளர்ச்சியில் கலந்து கொண்டன. தனித்தனியான, இந்தக் குறுகிய காலக் கிளர்ச்சிகளைக் காலனி ஆட்சியாளர்கள் அடக்கி விட்டார்கள். விரைவில் மத்திய வியத்நாமின் சில பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றி, சோவியத்துக்களை அமைத்து, நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தார்கள். இங்கே மக்கள் ஆட்சி மூன்று மாதங்களுக்கு நீடித்து இருந்தது. காலனி ஆட்சியாளர்கள் கிளர்ச்சி செய்த விவசாயிகளுக்கு எதிராகக் கொடிய அடக்குமுறைகளைக் கையாண்டார்கள். கீழ்ப்படிய மறுத்த கிராமங்கள் மீது விமானங்களிலிருந்து குண்டுகளையும் வீசினார்கள். இந்தோசீனக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களைக் கைது செய்வதில் அதிகாரிகள் வெற்றி பெற்றார்கள்.

1930-1931ல் நிலப்பிரபுத்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக விவசாயிகள் நடத்திய போர் பர்மாவை உலுக்கியது. இதே ஆண்டுகளில் பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராக எகிப்திய உழைப்பாளிகளின் போராட்டங்கள் இரு முறை ஆயுதந் தாங்கிய கிளர்ச்சிகளாக வளர்ந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியத்திலிருந்து நாட்டை விடுவிக்கும் பொருட்டு ஃபிலிப்பைன் விவசாயிகள் ஆயுதமேந்திப் போராடக் கிளர்ந்து எழுந்தார்கள். டச்சுக் கடற்படையில் இந்தோனீசிய மாலுமிகள் 1933ல் கிளர்ச்சி செய்தார்கள்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் அனேக லத்தீன் அமெரிக்க நாடுகளில் மூண்டது. சிலி நாட்டில் 1931ல் கிளர்ச்சி நடத்திய

கடற்படையினர் செங்கொடிகளைப் பறக்கவிட்டுப் புரட்சிக் கமிட்டிகளை அமைத்தார்கள். கிளர்ச்சி செய்த கப்பல்களை அரசாங்கம் குண்டுத்தாக்குக்கு இலக்கு ஆக்கிற்று. அடுத்த ஆண்டில் கிளர்ச்சி நடத்திய தொழிலாளர்கள் சிலியில் சோவியத் ஆட்சியைப் பிரகடனம் செய்ய முயன்றார்கள். காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் புதிய புதிய போராட்ட மையங்கள் உருவாயின. அடிமைப்பட்ட லட்சோபலட்சம் மக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராட எழுந்தார்கள்.

இவ்வாறு முதலாளித்துவம் ஒப்புநோக்கில் நிலைப்பாடு பெற்றிருந்த காலப்பகுதிக்குப் பிறகு, புரட்சிகரத் தொழிலாளர் இயக்கமும் தேசிய-விடுதலை இயக்கமும் உலகில் வளரத் தொடங்கின. பொருளாதார நெருக்கடி முற்றியதாலும் வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைந்ததாலும் முதலாளித்துவ அரசாங்கங்களின் நிலையுறுதி குலைந்தது. இந்த அரசாங்கங்களின் வருங்காலம் என்ன ஆகுமோ என்ற அச்சம் பூர்ஷ்வா வர்க்கத்தைப் பற்றிக் கொண்டது. நெருக்கடியின் முதல் ஆண்டில் பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணர்களும் அரசியல்வாதிகளும் பொருளாதாரச் ''செழிப்பு'' விரைவில் மீண்டும் வந்துவிடும் என்ற நம்பிக்கையை வெளியிட்டு வந்தார்கள். நெருக்கடி மேலும் ஆழமாகவே அவர்கள் நிலவும் ''ஒழுங்குக்கு'' ஆபத்து நேரலாம் என்று பேசத் தொடங்கினார்கள். நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முடிந்த எல்லா வகையான செயல்திட்டங்களையும் பிரேரித்தார்கள். இந்தச் செயல்திட்டங்களின் சாரம் ஒன்றுதான்: முதலாளித்துவச் சுரண்டுவோர் அமைப்பைக் காக்கவும் வலுப்படுத்தவும் உரிய வழிகளைக் கண்டுபிடிப்பதே அது. முதலாளித்துவச் சந்தை, கட்டற்ற போட்டி என்னும் சாதனம் முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரே கருவியாக இனி இருக்க முடியாது என்றும் நெருக்கடியின் பயங்கரமான அடிகளிலிருந்து அதைக் காக்க முடியாது என்றும் பிரிட்டிஷ் பொருளாதார அறிஞர் கேன்ஸ் உட்பட பூர்ஷ்வாப் பொருளாதார இயலின் மிகப் பெரும் பிரதிநிதிகள் முடிவு செய்தார்கள். கட்டற்ற சந்தையின் விதிகளை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ மறு உற்பத்தி முறையைச் செவ்வைப்படுத்தும் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும்படியும் பொருளாதாரத்தில் அரசு தலையிடும் பாதையை, அதாவது அரசு-ஏகபோக ஒழுங்குமுறையை மேற்கொள்ளும்படியும் கேன்ஸ் யோசனை கூறினார்.

பல முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் அரசு-ஏகபோக ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியதற்குப் பொருளாதாரக் காரணங்கள் மட்டும் தூண்டுகோலாக இருக்கவில்லை. முதலாளித்துவப் பொருளாதார நிர்வாகத்துடன் சோஷலிஸப் பொருளாதார நிர்வாகம் போட்டி போடத் தொடங்கி இருந்ததும் முதலாளித்துவ நாடுகளுக்குள்ளே சமுதாய-அரசியல் முரண்பாடுகளும் ஏகாதிபத்தியங்களின் பரஸ்பர முரண்பாடுகளும் ஒரேயடியாகக் கடுமையாகிவிட்டதும் இதற்குத் தூண்டுகோலாக இருந்தன. முதலாளித்துவம் அரசு-ஏகபோகப் புனரமைப்பின் உதவியால் தன் பலவீனமாகிவிட்ட நிலைகளை வலுப்படுத்திக் கொள்ள முயன்றது. பெரும்பாலான நாடுகளில் இந்தப் புனரமைப்பு நிகழ்கையில் உழைப்பாளிகள் பொருளாதார நோக்கிலும் அரசியல் நோக்கிலும் அடிமைகளாக்கப்படுவது மேலும் தீவிரமாயிற்று, முன்னிலும் அதிகப் பிற்போக்குள்ள ஆட்சி அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

சமயோசித சாமர்த்திய முறைகளும் பூர்ஷ்வா ஜனநாயக முறைகளும் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியை நிறுத்த முடியவில்லை என்று கண்டதும் பூர்ஷ்வா பிற்போக்கும், நிலப்பிரபுத்துவ, இராணுவத் தலைமைப் பீடமும் பகிரங்கமான வன்முறைகளையும் அரசியல் துர்ச்சாகசங்களையும் மேற்கொள்ளும் போக்கை மேலும் மேலும் துலக்கமாகக் காட்டின. பகிரங்கமான பயங்கரவாத சர்வாதிகாரத்தை நிலைநாட்டவும் தொழிலாளர்கள், விவசாயிகளின் புரட்சி இயக்கத்தை முறியடிக்கவும் எந்த விதமான மிருகத் தனத்தையும் குற்ற நடவடிக்கைகளையும் கையாள அவை தயாராய் இருந்தன. உழைப்பாளிகளின் போராட்டத்தை ஈவிரக்கமின்றி நசுக்குவதன் வாயிலாகப் புரட்சியின் சக்திகள் வளர்வதைத் தடுக்கும் ஒரே சாதனம் என்ற முறையில், பாசிஸத்தை ஏகாதிபத்தியப் பிற்போக்கு பல நாடுகளில் ஆதாரமாகக் கொண்டது. நெருக்கடியின் சுமை முழுவதையும் "உறுதியான கரத்தால்" உழைப்பாளிகள் மீது சுமத்தவும் மூலதனத்துக்குப் பெருத்த லாபங்கள் கிடைக்க வகை செய்யவும் வல்ல சக்தி பாசிஸம் என்று ஏகபோகங்கள் கருதின. அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் பாசிஸ வடிவமும் அதில் அடங்கியிருந்த அரசின் முழு ஆட்சி அதிகாரமும் ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் கடைக்கோடிப் பிற்போக்கு வட்டாரங்களுக்கு யாவற்றிலும் அதிக்க கவர்ச்சி அளித்தன. சோவியத் யூனியனின் வெற்றிகள்

காரணமாக உலகனைத்தையும் சேர்ந்த உழைப்பாளி மக்கள் சோஷலிஸ ஆதர்சத்தின் பால் சிறப்பாக ஈர்க்கப்பட்டார்கள். சோவியத் யூனியனுக்கு எதிரான போராட்டத்தில் பாசிஸம் தாக்குச் சக்தியாகப் பயன்படும் என்று ஏகாதிபத்திய வட்டாரங்கள் நம்பின். பல நாடுகளில் பூர்ஷ்வா அரசாங்கங்கள் படிப்படியாக பாசிஸமயம் ஆக்கப்பட்டதும் பாசிஸ்டுக் கட்சிகளின் விரைந்த வளர்ச்சியும் பாசிஸத்தின் மீது ஏகாதிபத்தியப் பிற்போக்காளர்கள் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டின.

ஜனநாயகத்திலிருந்து அரசியல் பிற்போக்குக்கு மாறுவது ஏகாதிபத்தியத்துக்கு இயல்பானது என்றும், வெளிநாட்டுக் கொள்கையிலும் சரி, உள்நாட்டுக் கொள்கையிலும் சரி, ஜனநாயகத்தை மீறவும் பிற்போக்கைக் கைக்கொள்ளவும் ஏகாதிபத்தியம் ஒரே மாதிரி முயல்கிறது என்றும் வி. இ. லெனின் தம் காலத்தில் கூறியிருந்தார்.[1] உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைந்த ஆண்டுகளில் பாசிஸ்டுப் போக்குகள் வளர்ந்தது, ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் பிற்போக்குத் தன்மை மேலும் அதிகரிக்கும் என்பதையும் அது மக்கள் விரோத, மனிதாபிமான விரோத சக்தியாக நாளுக்கு நாள் அதிக அளவில் தன்னைக் காட்டிக்கொள்ளும் என்பதையும் தெளிவாகப் புலப்படுத்தியது.

பூர்ஷ்வாக்களுடன் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த வலதுசாரி சமூக-ஜனநாயகம், நெருக்கடி விபத்திலிருந்து மீளும் வழியை வெகுஜனங்களுக்குக் காட்டத் தனக்கு அறவே திறன் இல்லை என்பதைக் காட்டிவிட்டது. நெருக்கடி ஆண்டுகளில் முதலாளித்துவத்தைத் தகர்ந்து சிதறுவதிலிருந்து, புரட்சியிலிருந்து காக்கும் போக்கை அது மேற்கொண்டது. புரட்சி இயக்கத்தை எதிர்த்து ஊக்கத்துடன் செயல்பட்டது. சமூக-ஜனநாயகத் தலைவர்கள் நெருக்கடி தீரும்வரை காத்திருக்கும் படியும் தியாகங்களுக்கும், போராடிப் பெற்றிருக்கும் அனேக நலங்களை இழப்பதற்கும் இணங்கும்படியும் உள்நாட்டுப் போர் மூள்வதற்கு மட்டும் இடம் கொடுக்காதிருக்கும்படியும் தொழிலாளர்களை வேண்டிக் கொண்டார்கள். 1931ல் லைப்ஸிக் நகரில் நடந்த ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சிக் காங்கிரசில், கட்சித்

---

[1] பார்க்க: **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 9, பக்கம் 368.

தலைவர்களில் ஒருவரான தர்னேவ் பகிரங்கமாகப் பின்வருமாறு கூறினார்: ''நோயுற்ற முதலாளித்துவத்தின் படுக்கை அருகே நோயை நிர்ணயிப்பவர்கள் என்ற முறையில் மட்டும் நாம் நிற்கவில்லை. நோயைத் தீர்க்க ஆழ்ந்த முறையில் விரும்பும் மருத்துவர்களாக இருக்கவும் அதே சமயம் நாம் வாரிசுகள் என்ற உணர்வைக் கை விடாதிருக்கவும்... நாம் விதிக்கப்பட்டிருக்கிறோம்.''[1] பிரஷ்ய நாடாளுமன்றத்தில் சமூக-ஜனநாயகக் குழுத் தலைவராயிருந்த எ. கேல்மன் பின்வருமாறு எழுதினார்: ''முதலாளித்துவத்தின் அழிவைத் தவிர்க்கும் பொருட்டு சமூக-ஜனநாயகம் அனைத்தும் பாடுபட்டு வருவது கூறாமலே விளங்கும்''.[2]

புரட்சிகரத் தொழிலாளர்களும் கம்யூனிஸ்டுகளும் குழப்பம் விளைக்க முயல்வதாகக் குற்றம் சாட்டி அவர்களையே முதன்மையாகத் தாக்கினார்கள் சமூக-ஜனநாயகத் தலைவர்கள். உண்மையிலோ, சமூக-ஜனநாயகம் எதைக் காத்துப் போராடியதோ அந்த முதலாளித்துவமே பொருளாதாரக் குழப்பத்தையும் வறுமையையும் பஞ்சத்தையும் ஏற்படுத்தி இருந்தது. எந்த விதமான புரட்சியாலும் உண்டாகும் நஷ்டம், மிக மிக ஆழ்ந்த நெருக்கடியைக் காட்டிலும் பல மடங்கு அதிகக் கடுமையாகவும் துன்பம் தருவதாகவும் இருக்கும் என்று கூறி வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் உழைப்பாளி வெகுஜனங்களைப் பயமுறுத்தினார்கள். புரட்சியின் விளைவாக உள்நாட்டுப் போரும் வெகுஜனங்களின் துன்பமும் உற்பத்திச் சக்திகளின் அழிவும் நேரும் என்றார்கள் அவர்கள். இதனாலும் இதுபோன்ற வாதங்களாலும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் சீர்திருத்தவாதத் தொழிலாளர்களை ஊக்கமுள்ள நடவடிக்கைகளிலிருந்து தடுத்து நிறுத்த முயன்றார்கள். பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரத்துக்கான போராட்டம் பற்றிய கருத்தும், புரட்சியும் உள்நாட்டுப் போரும் சமூக-ஜனநாயகத்துக்கு எல்லாவற்றையும் விட அதிகமாகத் திகில் ஊட்டின.[3]

வலதுசாரி சமூக-ஜனநாயகம் உழைப்பாளிகளின் நலன்களுக்காக சில அற்ப, அம்சரீதியான கோரிக்கைகளுடன் நின்று கொண்

---

[1] Sozialdemokratischer Parteitag in Leipzig—1931—Protokoll. Berlin, 1931, S. 45.

[2] „Das freie Wort", 1931, N 29.

[3] *Julias Braunthal*. Geschichte der Internationale. Bd. II. Hannover, 1963, S. 384.

டது. சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தினதும் தொழிற்சங்கங்களின் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தினதும் ஒன்றித்த கமிஷனின் கூட்டம் 1931, ஜனவரி மாதம் ஜூரிக் நகரில் நடந்தது. கூட்டத்தில் ஒரு விசேஷ அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமூக-ஜனநாயகம், ''பொருளாதார நெருக்கடிகளின் காலப்பகுதியில் அரசு நடவடிக்கைகள் குறுக்கப்படுவதை அல்ல, உற்பத்தி வேலைகளுக்கு அதிகத்திலும் அதிகமான நிதி ஒதுக்கப்படுவதை'' ஆதரிக்கிறது என்று இந்த அறிக்கை கூறியது... இவ்வாறு, நெருக்கடியை ''மென்மைப்படுத்தும்'' பொருட்டு அரசு-ஏகபோக முறைப்பாட்டை சமூக-ஜனநாயகம் ஆதரித்தது. சம்பளக் குறைப்புக்கு எதிராகப் போராடும் கோஷம் முன்வைக்கப்பட்டது. ''வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு'' ஐந்து நாள் வேலை வாரத்திற்காகப் போராட்டம் தொடங்கும்படி யோசனை கூறப்பட்டது.[1] மேற்கொண்டு சம்பளம் குறைக்கப்படுவதும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதும் நெருக்கடியை இன்னும் ஆழமாக்கவே செய்யும் என்றும் நிலவும் அமைப்புக்குப் பின்னும் பெருத்த அபாயம் விளைக்கும் என்றும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதத் தலைவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் நான்காவது காங்கிரசில் (1931, ஜூலை-ஆகஸ்டு) முக்கிய கவனம் மூலதனத்தின் தாக்குதலை எதிர்த்துப் போராடும் பிரச்சினை மீது அல்ல, ஜெர்மனியைப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து எவ்வாறு காப்பது என்ற பிரச்சினை மீதே செலுத்தப்பட்டது. இதுவே பாசிஸத்திலிருந்து தப்புவதற்கான வழியாகும் என்று சீர்திருத்தவாதத் தலைவர்கள் கருதினார்கள்.

சமூக-ஜனநாயகத் தலைவர்கள் தொழிலாளர்களை வேலைநிறுத்தங்களிலிருந்து தடுத்தார்கள். நெருக்கடி நிலைமைகளில் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்துவது கடுங்குற்றம் ஆகும், ஏனெனில் இது உழைப்பாளிகளின் நிலைமையை மேலும் சீர்கேட்டுக்கு இட்டுச் செல்லும் என்ற கோஷத்தைக் கூட அவர்கள் முன்வைத்தார்கள். தொழிலாளர்களுக்கு எதிராக பூர்ஷ்வா அரசாங்கங்கள் மேற்கொண்ட பிற்போக்கு நடவடிக்கைகளை அவர்கள் ஆதரித்தார்கள். ''குறைந்த தீமையின்'' பொருட்டு, அதாவது, பாசிஸமோ அல்லது ''இடதுசாரித் தீவிரவாதமோ'' வந்துவிடாமல் தடுப்ப

[1] „Vorwärts", 27. I. 1931.

தன் பொருட்டு இவ்வாறு செய்வது இன்றியமையாதது என்று அவர்கள் கூறினார்கள். உண்மையிலோ, பெரும் பூர்ஷ்வா வர்க்கத்தின் மிதவாத வட்டாரங்களுடன் ஒத்துழைக்கும் கொள்கை, பிற்போக்குக்கு அடுத்தடுத்து விட்டுக் கொடுப்பதற்கும் பாசிஸத்தின் தாக்குதலை எதிர்த்து உறுதியாகப் போராடுவதைக் கைவிடுவதற்குமே காரணம் ஆயிற்று. பூர்ஷ்வா-நாடாளுமன்ற அரசாங்கங்கள் சீர்திருத்தவாதக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு ஏற்ற ஒரே ஆதாரம் என்று வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகள் எண்ணினார்கள். எனவே, நெருக்கடி ஆண்டுகளில் இந்த பூர்ஷ்வா-நாடாளுமன்ற அரசாங்கங்கள் மேலும் மேலும் அதிகப் பிற்போக்குள்ளவை ஆனதையும் அனேக நாடுகளில் பாசிஸத்தைப் புகுத்த உதவியதையும் பொருட்படுத்தாமல் இவற்றுக்கு ஆதரவு அளித்து வந்தார்கள்.

பாசிஸத்தின் தாக்குதலுக்கு முன் செயலற்றிருந்த அதே சமயத்தில் வலதுசாரி சமூக-ஜனநாயகம் சோவியத் யூனியனுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் எதிரான இயக்கத்தை மேலும் தீவிரமாக நடத்திற்று. சோவியத் யூனியனில் உதயமாகிக் கொண்டிருந்த சோஷலிஸத்தின் உயிருள்ள உதாரணத்தைப் பற்றிய உண்மையை சமூக-ஜனநாயகத் தலைவர்கள் பொய்களும் அவதூறுகளும் நிறைந்த கடலில் மூழ்கடிக்க முயன்றார்கள். சோவியத் யூனியனில் நிறுவப்படுவது ''சோஷலிஸம் அல்ல, அரசு முதலாளித்துவம்'' என்றும், ஐந்தாண்டுத் திட்டம் என்பது மற்ற முதலாளித்துவ நாடுகளில் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டதைப் பலவந்த முறையால் செய்வதற்கான முயற்சி மட்டுமே என்றும் ஒரு கருத்தை அவர்கள் தீவிரமாகப் பரப்பினார்கள்.

காவுத்ஸ்கி சோவியத் யூனியனையும் கம்யூனிஸ்டு இயக்கத்தையும் வன்மத்துடன் தாக்கினார். உலகில் நடந்து கொண்டிருந்த எதார்த்தமான வர்க்கப் போராட்டம் பற்றிய அறிவை அறவே இழந்து, வெண்படையினரின் புரட்சி எதிர்ப்பு போல்ஷிவிஸத்தைக் காட்டிலும் குறைந்த அபாயம் உள்ளது என்று ''போல்ஷிவிஸம் முட்டுச் சந்தில்'' என்னும் நூலில் அவர் எழுதினார். ருஷ்யாவில் போல்ஷிவிஸத்தின் ஆதிக்கமும் தொழில் பெருக்கம் உள்ள ஐரோப்பாவிலிருந்து ருஷ்யாவின் சந்தை பிரிந்து விட்டதுமே உலக நெருக்கடியின் முக்கியக் காரணங்கள் என்று சொல்லும் அளவுக்குக் காவுத்ஸ்கி சென்றுவிட்டார். ''போல்ஷிவிஸத்தைப் பாதையிலிருந்து அகற்றுவது ருஷ்யாவின் செழிப்புக்கு மட்டுமின்றி

ஐரோப்பா அனைத்தினதும் செழிப்புக்கு வழி திறப்பதாகும்''[1] என்று அவர் வெளிப்படையாகக் கூறினார். கம்யூனிஸ எதிர்ப்பு என்ற அடிப்படையில் கொள்கைமாறி காவுத்ஸ்கி சோவியத் விரோத ஏகாதிபத்திய யுத்தத்தின் பகிரங்க ஆதரவாளர்களோடு சேர்ந்து கொண்டார்.

பிற்போக்குடன் இணங்கிச் செல்வதும் கம்யூனிஸ்டுகளை வேட்டையாடித் துன்புறுத்துவதும் சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்களது கொள்கையாக இருந்தது. இந்தக் கொள்கையின் விளைவாகத் தொழிலாளி வர்க்கத்தின் பிளவு மேலும் ஆழமாயிற்று. பிற்போக்கின் தாக்குதலுக்கு முன் அது பலவீனம் அடைந்தது.

உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரம், செயல்தந்திரம் பற்றிய பிரச்சினைகள். செயற்குழுவின் 11வது முழுக் கூட்டம்

நெருக்கடி ஆண்டுகளில் ஏகாதிபத்தியப் பிற்போக்குக்கு எதிராக உறுதியுடன் சமரசம் அற்ற போராட்டம் நடத்தி வந்த, ஒழுங்கமைந்த ஒரே அரசியல் சக்தியாக விளங்கியது கம்யூனிஸ்டு இயக்கம். உலகப் பொருளாதார நெருக்கடியின் வருகையை உரிய தருணத்தில் முன்னறிவித்த கம்யூனிஸ்டு அகிலம், பொருளாதார நெருக்கடியின் வளர்ச்சியோடு கூடவே ஏகாதிபத்தியத்தின் முக்கியமான உள் முரண்பாடுகளும் வெளி முரண்பாடுகளும் கடுமையாகத் தீவிரம் அடைவதையும் முதலாளித்துவ நாடுகளிலும் காலனிகளிலும் புரட்சியின் புதிய ஏற்றம் தொடங்குவதையும் நோக்கமாகக் கொண்டு செயல்படும்படி கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு வழி காட்டியது. 1930, பிப்ரவரியில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் விரிவாக்கப்பட்ட முழுக் கூட்டம் நடந்தது. உலகப் பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் சீர்கேடு விளைப்பதும் சமுதாய முரண்பாடுகளை மேலும் மேலும் ஆழப்படுத்துவதும்

---

[1] **கார்ல் காவுத்ஸ்கி.** போல்ஷிவிஸம் முட்டுச்சந்தில். பெர்லின், 1930, பக்கங்கள் 110, 152.

ஆகிக் கொண்டு போகிறது என்று முழுக் கூட்டம் குறிப்பிட்டது. இதன் விளைவாக ஒரு புறம் வர்க்கப் போராட்டம் தீவிரமாகும், வெகுஜனங்களை ஒடுக்குவதற்கான பயங்கர முறைகள் அதிகரிக்கும், பாசிஸம் நிலை பெறும் என்றும் மறு புறம், ''புரட்சி ஏற்றம் மேலும் மேலும் வளரும், பாட்டாளி வர்க்கப் போராட்டக் கூட்டணி விரிவடையும், காலனிகளையும் அனேக முதலாளித்துவ நாடுகளையும் சேர்ந்த விவசாயிச் சேமப் பிரிவுகள் பொதுப் புரட்சிக் கூட்டணியில் ஈர்க்கப்படும்''[1] என்றும் அது கூறியது.

1931, மார்ச்சு—ஏப்ரலில் நடந்த செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டம் உலகில் உருவாகி இருந்த சூழ்நிலையைப் பகுத்தாராய்ந்தது. முன்னேறிச் செல்லும் சோஷலிஸம், அழிவு விளைக்கும் நெருக்கடியின் இடுக்கியில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் முதலாளித்துவம் என்னும் இரண்டு அமைப்புக்களுக்கிடையே வளர்ந்துவரும் வேறுபாட்டை அது வலியுறுத்தியது. நெருக்கடி காரணமாக சமுதாய மோதல்கள் மேலும் கடுமையாகி வருகின்றன என்றும் பூர்ஷ்வா வர்க்கம் நெருக்கடியின் விளைவுகள் எல்லாவற்றையும் உழைப்பாளிகள் மீது சுமத்த முயல்வதாகவும், ''தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராக மட்டும் இன்றி, நகரத்தையும் நாட்டுப்புறத்தையும் சேர்ந்த உழைப்பாளிகளின் விரிவான மற்ற வட்டாரங்களுக்கும் எதிராகத்''[2] தாக்குதலுக்கு ஏற்பாடு செய்வதாகவும் முழுக்கூட்டம் சுட்டிக் காட்டியது. நெருக்கடியிலிருந்து மீள வழி காணும் பொருட்டும் தனது ஆட்சி அதிகாரத்தை நிலைப்படுத்தும் பொருட்டும் பூர்ஷ்வா வர்க்கம் அரசியல் பிற்போக்கைத் தீவிரப்படுத்தும் பாதையை, பாசிஸமயமாக்கும் பாதையை மேற்கொண்டுவருகிறது. அது ''பயங்கரவாத பாசிஸ்டுக் கும்பல்களை ஒழுங்கமைக்கிறது, தொழிலாளர் ஸ்தாபனங்களையும் மற்ற எல்லாப் புரட்சி நிறுவனங்களையும் தகர்க்கிறது, தொழிலாளர்கள், உழைக்கும் விவசாயிகள் ஆகியோரின் கூட்டம் கூடும் உரிமையையும் அச்சு வெளியீட்டு உரிமையையும் பறிக்கிறது, வேலைநிறுத்தங்களைப் பலவந்தமான நடுவர் தீர்ப்பு மூலமும் வன்முறைகளாலும் ஒடுக்குகிறது, வேலையற்றோர், வேலைநிறுத்தத் தொழிலாளர் ஆகியோரின் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மீது

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 922.

[2] அதே நூல், பக்கம் 954.

துப்பாக்கிச் சூடு நடத்துகிறது, புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தை இரக்கமின்றி நசுக்குகிறது''.[1]

நெருக்கடி ஆழமாவதனாலும் ஏகாதிபத்தியங்களுக்கிடையே முரண்பாடுகள் தீவிரம் அடைவதாலும் யுத்தத்தை மூட்டிவிடவும் சோவியத் யூனியனுக்கு எதிராகப் போர் தொடுப்பதன் மூலம் இந்த முரண்பாடுகளைத் தீர்க்கவும் முதலாளித்துவ வல்லரசுகள் செய்யும் முயற்சி வலுக்கிறது என்று முழுக் கூட்டம் குறிப்பிட்டது. சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவத் தலையீடு நடக்கும் அபாயம் பற்றி மார்ஸேல் கஷேன் உரை ஆற்றினார். அவர் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதி. அவருடைய நாட்டின் ஆளும் வட்டாரத்தினர் உலக அரங்கில் பல்வேறு வகையான சோவியத் விரோத ஏகாதிபத்தியக் கூட்டுக்களில் ஊக்கத்துடன் பங்காற்றி வந்தார்கள். கஷேனின் உரையைக் கேட்டபின், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலையைத் தீவிரப் படுத்துவதும் சோவியத் யூனியனுக்கும் சீனப் புரட்சிக்கும் எதிராக ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் சூழ்ச்சிகளையும் சதித் திட்டங்களையும் இடைவிடாது அம்பலப்படுத்துவதும் சேனைகளிலும் யுத்த தளவாட உற்பத்திச் சாலைகளிலும் நாடாளுமன்றக் கமிட்டிகளிலும் பிறவற்றிலும் செய்யப்பட்டுவரும் ஸ்தூலமான யுத்த முஸ்தீப்பு நடவடிக்கைகளைப் பொது மக்களுக்கு முன் அம்பலப்படுத்துவதும் மிக மிக இன்றியமையாதவை என்பதை முழுக் கூட்டம் எடுத்துக் காட்டியது.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியப் பணி ''பூர்ஷ்வா வர்க்கத்தை வெற்றிகொள்வதற்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பொருட்டு நிர்ணயகரமான போராட்டங்கள் நடத்துவதற்குத் தொழிலாளி வர்க்கத்தைத் தயார்படுத்துவதற்கும் இன்றியமையாத நிபந்தனை என்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையைத் தங்கள் தரப்புக்குக் கொண்டுவருவதாகும்''[2] என்று செயற்குழுவின் பதினேராவது முழுக் கூட்டம் தீர்மானித்தது. வெகுஜனங்களைத் தங்கள் தரப்புக்குக் கொண்டுவருவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உழைப்பாளி மக்களின் அன்றாடக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தைக் குறைவாக மதிப்பதைத் தவிர்க்க வேண்டும், ''வெகுஜனங்களை அவர்களுடைய அன்றாடத்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கங்கள் 854-855.

[2] அதே நூல், பக்கம் 964.

தேவைகளின் அடிப்படையில் அணிதிரட்டுவதற்கான''[1] திறன் இன்மையைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதி மனுயீல்ஸ்கி தமது உரையில் குறிப்பிட்டார். போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி யூ. லேன்ஸ்கி தமது துணையுரையில் இவ்வாறே வலியுறுத்தினர்: ''பட்டினியாலும் வறுமையாலும் வேலையின்மையாலும் ஏற்படும் உடனடியான கோரிக்கைகளுக்கான போராட்டத்தை முறையாக ஒழுங்கமைப்பது, பாட்டாளி வர்க்கத்தின் நிர்ணயகரமான பெரும்பான்மையை நம் பக்கத்துக்குக் கொண்டுவருவதற்குரிய முக்கிய வழியாக விளங்க வேண்டும்.''[2] ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி எ. தேல்மனும் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி கி. கோட்வால்டும் தம் துணையுரைகளிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதி இ. பியாத்நித்ஸ்கி தமது சொற்பொழிவிலும் இதே கருத்தைத் துலக்கமாக ஒலித்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தினுடையவும் நகரத்தையும் நாட்டுப்புறத்தையும் சேர்ந்த விரிவான அரைப்பாட்டாளி வெகுஜனங்களுடையவும் அன்றாட நலன்களை ஊக்கத்துடன் காத்துப் போராட வேண்டும், அவர்களைப் பாதிக்கும் ஒரு பிரச்சினையையும் கவனிக்காமல் விடக்கூடாது என்பது இந்தக் கருத்து. வேலைநிறுத்தப் போராட்டத்தால் கிடைக்கும் பொருளாதார வெற்றிகள் குறித்துக் குறுகிய பிரிவுவாதிகள் தெரிவித்த அச்சத்தைப் பேச்சாளர்கள் மறுத்தார்கள். வேலைநிறுத்தங்களின் போது கிடைக்கும் சில பொருளாதார வெற்றிகள் இன்னும் விரிவான போராட்டங்கள் நடைபெற உதவும் என்று அவர்கள் காட்டினார்கள்.[3]

கம்யூனிஸ்டுக் கட்சிகள் பின்வரும் திசைகளில் போராட்டம் நடத்தி வெகுஜனங்களைத் தங்கள் தரப்புக்குக் கொண்டுவர வேண்டும் என்று பதினோராவது முழுக் கூட்டம் தன் தீர்மானங்களில் கூறியது:

---

[1] கம்யூனிஸ்டுக் கட்சிகளும் முதலாளித்துவத்தின் நெருக்கடியும். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டம். சுருக்கெழுத்து விவரம், வெளியீடு 1, மாஸ்கோ, 1932, பக்கம் 75.

[2] அதே நூல், பக்கம் 130.

[3] அதே நூல், பக்கங்கள் 182, 217, 230.

1) மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராகவும், சம்பளக் குறைப்புக்கும் வெகுஜன வேலைநீக்கத்துக்கும் எதிராகவும், சம்பள உயர்வுக்காகவும் தொழிலதிபர்களின் செலவில் சமுதாயப் பராமரிப்புக்காகவும், வேலையற்றோருக்கு உடனடியாக உதவுவதற்காகவும்;

2) பூர்ஷ்வா வர்க்க சர்வாதிகாரத்தின் எல்லா வடிவங்களுக்கும் எதிராகவும், தொழிலதிபர்களதும் போலீசாரதும் பயங்கரத்துக்கு எதிராகவும், புரட்சிகரத் தொழிலாளர் ஸ்தாபனங்களின் விடுதலைக்காகவும், பாசிஸ்டு ஸ்தாபனங்களின் ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு அவற்றைக் கலைத்துவிடுவதற்காகவும், பாசிஸ்டுகளுக்கு எதிராக வெகுஜனத் தற்காப்பு ஏற்படுத்துவதற்காகவும், பூர்ஷ்வா சர்வாதிகாரத்தின் அரசியல் பிற்போக்குக்கு எதிராக வெகுஜன அரசியல் வேலைநிறுத்தங்களுக்கு ஆயத்தம் செய்வதற்காகவும்;

3) ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் சோவியத் விரோத இராணுவத் தலையீட்டுக்கும் ஏற்பாடுகள் செய்வதற்கு எதிராகவும் சீனாவின் புரட்சித் தளங்களின் பிரதேசத்தில் தலையீடு செய்வதற்கு எதிராகவும்.[1]

பாசிஸம் பற்றிய சில தவறான கருத்துக்களின் விமர்சனம் முழுக் கூட்டத்தின் வேலையினது முக்கிய அம்சமாக விளங்கியது. பாசிஸம் முதலாளித்துவம் சிதைவதை, பலவீனமடைவதைக் காட்டும் அறிகுறி மட்டுமே என்பது இத்தகைய தவறான கருத்துக்களில் ஒன்று. பாசிஸம் முதலாளித்துவத்தின் சிதைவில் தவிர்க்க முடியாத வரலாற்றுக் கட்டம் என்றும் அது விரைவில் முதலாளித்துவம் தகர்ந்து சிதறுவதற்கு வழி வகுக்கும் என்றும் பொருள்பட்ட எளிய மதிப்பீட்டை மனுயீல்ஸ்கி தமது முடிவுரையில் கண்டனம் செய்தார். "இந்தக் கருத்திலிருந்து பெறப்படும் முடிவு என்னவென்றால், பாசிஸம் வருவது அனேகமாக விரும்பத்தக்கது, அது எவ்வளவு மோசமானதோ அவ்வளவு நல்லது என்பதாகும். இதன்படி பாசிஸத்தின் வளர்ச்சி கம்யூனிஸத்தின் வெற்றிக்கு முன்னேற்பாடு செய்கிறது"[2] என்றார் மனுயீல்ஸ்கி.

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 965.

[2] கம்யூனிஸ்டுக் கட்சிகளும் முதலாளித்துவத்தின் நெருக்கடியும். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டம், வெளியீடு 1, பக்கம் 607.

இத்தகைய கருத்துக்களைக் கம்யூனிஸ்டு அகிலம் நிராகரித்து விட்டது. பாசிஸத்தைத் தவிர்க்க முடியாத வரலாற்று கட்டம் என்று எண்ணக் கூடாது என்றும் பாசிஸத்தின் தாக்குதல் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தைக் கடினமாக்குகிறது என்றும் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதியான கிரியேக்கோ (கர்லாந்தீ) தமது பேச்சில் சான்று காட்டி விளக்கினர்.[1] பாசிஸம் முதலாளித்துவம் சிதைவதையும் அதன் நெருக்கடியையும் காட்டும் அறிகுறி மட்டும் அல்ல என்றும் அது ''மூலதனத்தின் தாக்குதலினது ஒரு வடிவமும் ஆகும். இந்த நெருக்கடியைத் தீர்க்கும் அம்சங்களைத் தன்னகத்தே கொண்டது இந்த வடிவம்... பாசிஸம் என்பது மூலதனத்தின் தாக்குதலும் தற்காப்பும் ஆகும்''[2] என்றும் மனுயீல்ஸ்கி கூறினர். பாசிஸ்டு சர்வாதிகாரம் நிலைபெறுவது பாட்டாளி வர்க்கத்தின் தாற்காலிகத் தோல்வியைக் குறிக்கும். எனவே, நிலவும் பாசிஸ்டு சர்வாதிகாரங்களை மட்டும் இன்றி, பாசிஸத்தின் எல்லாவிதமான தாக்கு நடவடிக்கைகளையும் எதிர்த்து, பாசிஸமயம் ஆக்குவதை எதிர்த்து, பாசிஸத்துக்கு வழி வகுக்கும் பிற்போக்கு அரசாங்கங்களின் எல்லா நடவடிக்கைகளையும் எதிர்த்துச் சக்திகள் அனைத்தையும் செலுத்திப் போராடுவது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணியாக வைக்கப்பட்டது.

ஜெர்மனியில் ஹிட்லர் சார்பினரின் இயக்கத்தினது தனிப்பட்ட அபாயத்தின் பால் முழுக் கூட்டம் கம்யூனிஸ்டுகளின் கவனத்தை ஈர்த்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதிஞேராவது முழுக் கூட்டம் செய்த தீர்மானங்கள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்ட ஊக்கம் நிறைந்த, புரட்சி உணர்வையும் மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் வெகுஜனங்களைத் துணிவுடன் நடத்திச் செல்ல அவை கொண்டுள்ள விருப்பத்தையும் வெளியிட்டன. ஆனல் புரட்சி நெருக்கடி முதிரும் வேகம் பற்றி ஓரளவு மிகையான மதிப்பீடும் வர்க்கப் பகைவனது சக்திகள் பற்றிக் குறைவான மதிப்பீடும் இந்தத் தீர்மானங்களில் அடங்கி இருந்தன.

பொருளாதார நெருக்கடியின் அழிவு விளைக்கும் தன்மையைப் பல கம்யூனிஸ்டுகள் நீண்ட காலம் வரை மிகையாக மதிப்பிட்டு

---

[1] அதே நூல், பக்கங்கள் 307-308.

[2] அதே நூல், பக்கம் 606.

வந்தார்கள். அது ''கடைசி நெருக்கடி என்றும் இந்த உலக நெருக்கடியிலிருந்து பூர்ஷ்வா வர்க்கம் மீளாது என்றும் இது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியில் கட்டாயம் முடியும்''[1] என்றும் அவர்கள் எண்ணினார்கள். குறிப்பிட்ட நாட்டில் வர்க்க முரண்பாடுகளது வளர்ச்சியின் அடிப்படையில் புரட்சி நிலைமை எந்த அளவுக்கு முதிர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை நிதான மாகப் பகுத்தாராய்வதற்குப் பதிலாக இந்த முடிவே அடிக்கடி ஏற்றுக்கொள்ளப்பட்டது. சோஷலிஸப் புரட்சிக்கு இன்றியமை யாத புறநிலை, அகநிலை வாய்ப்புக்கள் கம்யூனிஸ்டுப் பத்திரிகை களில் அடிக்கடி மிகைப்படுத்தப்பட்டன.

ஆனால் நெருக்கடி ஆண்டுகளில் சமுதாய பொருளாதார நிலை மைகளின் வளர்ச்சியும் வர்க்கப் போராட்டம் அனைத்தின் வளர்ச்சி யும் சிக்கலான, முரண்பாடுகள் நிறைந்த பாதையில் நடந்தது.

வர்க்கச் சக்திகள் எதிரெதிராக அணி திரளும் நிகழ்முறை விரைவாக நடைபெறுவதையும் பூர்ஷ்வா வர்க்கம் பாசிஸப் பாதையில் நாளுக்கு நாள் மேலே செல்வதையும் அதே சமயம் பூர்ஷ்வா-ஜனநாயக சுதந்திரங்களின் காவலர்களாக நடித்த கட்சிகள் தாக்கி முன்னேறி வந்த பிற்போக்கையும் பாசிஸத்தை யும் எதிர்க்கத் திறன் அற்றிருப்பதையும் கம்யூனிஸ்டுகள் கண்டார் கள். உழைப்பாளிகளை வறுமையிலும் அரைப்பட்டினி நிலையிலும் உரிமை இன்மையிலும் வீழ்த்திவிட்ட பிற்போக்குள்ள பூர்ஷ்வா ஒழுங்கு முறைகளுக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பாலான பகுதியினரது மனக்கசப்பு அதிகரிப்பதையும், முதலாளித்துவத்தை ஒழிப்போம், பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை நிலைநாட்டுவோம் என்னும் கோஷம் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் பகுதியினரிடையே நாளுக்கு நாள் அதிக வரவேற்பு பெறுவதையும் கம்யூனிஸ்டுகள் கவனித்தார்கள். சில பூர்ஷ்வாக் கொள்கைவாதிகள் கூட முதலாளித்துவ அமைப்பு அழிவை நோக்கி விரைகிறது என்று அந்தக் காலத்தில் எண்ணினார் கள்.

பாட்டாளி வர்க்க வெகுஜனங்கள் அனைவரதும் மனநிலையைக் கருத்தில் கொள்ளாமல், முன்னணித் தொழிலாளர்களின் மனப் பாங்கை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு, பூர்ஷ்வா-ஜனநாயக சுதந்திரங்களைக் காப்பதில் உழைப்பாளிகள் அக்கறை இழந்து

---

[1] மை. ஆ. கூ., *494/1/423/13.*

விட்டார்கள் என்றும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காகப் போராடும் நிலைக்கு விரைவில் மாறிவிடுவார்கள் என்றும் அந்த அரைகுறை அடிப்படையில் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் கருதின. கம்யூனிஸ்டுகளின் வீரம் நிறைந்த உற்சாகப் பெருக்கினால் ஈர்க்கப்பட்டு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட நிகழ்ச்சிகள் சோஷலிஸப் புரட்சியின் ஆதரவாளர்களுடைய அணிகள் விரைவாகப் பெருகும் என்று அர்த்தம் செய்து கொள்ளப்பட்டன. இந்த மிகையான மதிப்பீடுகளை வைத்துக் கொண்டு, ஒரு புறம் முதலாளித்துவ நாடுகளில் நெருக்கடியும் அவை பாசிஸமயமாவதும் காரணமாகவும், மறு புறம் சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றிகள் காரணமாகவும் பூர்ஷ்வா ஜனநாயகம் உள்ளிட்ட மூலதன சர்வாதிகாரத்தின் எல்லா வடிவங்களுக்கு எதிராகவும் உறுதியாகப் போராடுவதற்குத் தொழிலாளி வர்க்கம் தூண்டப்படும் என்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் எண்ணின. தங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் பிற்போக்கினதும் பாசிஸத்தினதும் தாக்குதலுக்கு எதிராகவும் புரட்சிகரத் தொழிலாளர்கள் நடத்திவந்த போராட்டத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டம் சோஷலிஸப் புரட்சிக்கு நேரடியான ஏற்பாடுகள் செய்யும் பணிகளுடன் இணைத்தது.

சோஷலிஸப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் இன்றியமையாதவை என்று ஒவ்வொரு கம்யூனிஸ்டும் உண்மையான புரட்சியாளரும் ஒப்புக்கொண்டார்கள். சீர்திருத்தவாதிகளிலிருந்தும் இணக்கக்கொள்கையினரிலிருந்தும் அவர்களை வேறுபடுத்தியது இது. ஆயினும், உழைப்பாளிகளுடைய போராட்டத்தின் இறுதிக் குறிக்கோள் என்ற முறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சரியான கோஷமாக இருந்தாலும், அந்த ஆண்டுகளில் முதலாளித்துவ உலகில் தோன்றியிருந்த சிக்கலானதும் முரண்பாடுகள் நிறைந்ததுமான ஸ்தூல நிலைமைக்குப் பொருந்தவில்லை. எல்லாவற்றுக்கும் மேல், பெரும்பாலான தொழிலாளி வர்க்கத்தினரும் பிற உழைப்பாளிகளும் இந்த கோஷத்துக்கு இன்னும் ஆதரவு அளிக்கவில்லை.

தொழிலாளி வர்க்கத்தின் ஒழுங்கமைப்பும் உணர்வுபூர்வமான ஆயத்த நிலையும் புரட்சி நடவடிக்கைகளுக்கு எவ்வளவு அசாதாரண முக்கியத்துவம் கொண்டவை என்பதை லெனின் பல முறை

வலியுறுத்தியது தெரிந்ததே. ஆட்சி மாற்றத்துக்கான புறநிலைத் தேவைகள் மட்டுமே நிறைவேறியிருக்கையில் எந்தக் கணத்திலும் ஆட்சி மாற்றம் நிகழ்த்துவதற்கு வேண்டிய போதுமான சக்தி புரட்சிகர வர்க்கங்களிடம் இருப்பதாக நினைக்கும் கருத்தை முற்றிலும் அபத்தமானது என்று அவர் நிராகரித்தார்: ''இல்லை, மனித சமூகம் அவ்வளவு அறிவார்ந்த முறையில், முன்னணி நபர்களுக்கு அவ்வளவு 'சௌகரியமான' முறையில் அமைக்கப்படவில்லை. ஆட்சி மாற்றத்துக்கான நிலைமைகள் பக்குவம் அடைந்திருக்கலாம், ஆனால் இந்த ஆட்சி மாற்றம் நிகழ்த்துவோரான புரட்சிக்காரர்களிடம் அதை நிறைவேற்றத் தேவையான சக்திகள் போதாமல் இருக்கலாம்...''[1] வெகுஜனங்களின் புரட்சி மனப்பாங்கின் ஆழத்தையும் சோஷலிஸப் புரட்சிக்காகப் போராடுவதற்கு வேண்டிய ஆயத்த நிலை பெரும்பாலான உழைப்பாளிகளிடையே பக்குவப்படும் விரைவையும் பற்றி உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிகையாக எண்ணிக் கொண்டிருந்தன.

நெருக்கடி ஆண்டுகளில் புறநிலைச் சூழ்நிலைமையிலும் ஆழ்ந்த மாற்றங்கள் நிகழ்ந்தன. அவற்றைக் கவனமாகப் பகுத்து ஆராய்வது அவசியமாய் இருந்தது. நெருக்கடி நிலைமைகளில் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் தலைமைப் படைப்பிரிவான பாசிஸத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துடன் இருந்த முரண்பாடுகள் மட்டுமின்றி எல்லா ஜனநாயக வட்டாரங்களுடனும் இருந்த முரண்பாடுகளும் விரைவாக ஆழமாயின. வெகுஜனங்களின் ஜனநாயக சுதந்திரங்களையும் உரிமைகளையும் தாக்கிய பிற்போக்கும் பாசிஸமும் தங்கள் சுதந்திரங்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடும் தீவிர விருப்பத்தை இந்த வெகுஜனங்களிடையே தோற்றுவித்தன. ஏகபோக மூலதனத்தின் பிரதான அரசியல் தாக்கு சக்தி ஆகிவிட்ட பாசிஸத்தின் தாக்குதல், நிலைமை முழுவதையும் சாராம்சத்தில் மாற்றி விட்டது. 1918-1923ம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்த நிலைமையிலிருந்து இது வெகுவாக வேறுபட்டது.

ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் மேலும் ஆழமானதன் விளைவாக உழைப்பாளி மக்கள் பொது ஜனநாயகப் பணிகளை மீண்டும் மேற்கொள்வது அவசியம் ஆயிற்று. இவை தெளிவாக

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 9, பக்கம் 368.

வெளியிடப்பட்ட பாசிஸ்டு விரோத, ஏகபோக விரோத உள் ளடக்கம் கொண்டிருந்தன. ஏகாதிபத்தியம் எந்த அளவுக்குப் பிற் போக்கு உள்ளதாயிற்றோ, ஜனநாயகக் கோரிக்கைகள் உழைப் பாளிகளுக்கு அந்த அளவுக்கு அதிக முக்கியத்துவம் உள்ளவை ஆயின. வர்க்கப் போராட்டத்தின் நிலைமைகளில் ஏற்பட்ட புற நிலையான மாற்றங்களின் முக்கியமான, ஆழ்ந்த போக்கு இத்தகைய தாக இருந்தது. பாசிஸத்தின் தாக்குதல் நடந்து கொண்டிருந்த நாடுகளில் இந்தப் போக்கு துலக்கமாக வெளிப்படத் தொடங் கியது. மற்ற எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் இது படிப்படி யாகவும் கவனத்தைக் குறைவாக ஈர்க்கும் வகையிலும் முதிர்ந் தது. இவ்வாறு, பாசிஸ்டு விரோத, பொது ஜனநாயகக் கோரிக் கைகளின் பொருட்டு முதன்மையாகப் போராடுவதற்குத் தொழி லாளி வர்க்கத்தையும் அதன் கூட்டாளிகளையும் தூண்டி ஊக் கும்படி வாழ்க்கை நிலைமைகள் கம்யூனிஸ்டுகளுக்கு வழி காட் டின. உருவாகி இருந்த நிலைமைகளில், ஏகாதிபத்திய நாடுகளில் புரட்சிப் பேராட்டம் சோஷலிஸப் புரட்சியாக மாறுவதற்கு முன் புறநிலை, அகநிலைக் காரணங்களின் விளைவாக, முதல் கட்டத்தில், அல்லது முதற்படியாக, பொதுஜனநாயக, பாசிஸ்டுவிரோதத் தன்மையைக் கொண்டிருப்பது தவிர்க்க இயலாததாக இருந்தது. இவ்வாறு, கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கையில் ஆழ்ந்த திருப் பம் ஏற்படுத்துவது உடனடியான தேவை ஆயிற்று. முதலாளித் துவ நாடுகளில் போராட்டத்தின் பொது ஜனநாயக, ஏகபோக விரோதக் கட்டத்தின் இன்றியமையாமையைக் கருத்தில் கொண்டு புதிய போர்த்தந்திரக் கொள்கைப் போக்கை வகுப்பது அவசியம் ஆயிற்று.

மாறிய சூழ்நிலையின் தனித்தன்மையையும் அதன் காரண மாக, பொது ஜனநாயக பாசிஸ்டு விரோதப் பணிகளை முதலில் நிறைவேற்றுவதன் இன்றியமையாமையையும் கம்யூனிஸ்டு இயக்கம் உடனே கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

1918—1923 ஆண்டுகளில் வலதுசாரி சமூக-ஜனநாயகம் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எதிரான கூட்டணியில் இடம் பெற் றிருந்தது. பெரும்பாலான தொழிலாளர்களைக் கம்யூனிஸ்டுக் கட்சி களின் தரப்புக்குப் போக விடாமல் தடுக்க அப்போது அதற்கு முடிந்தது. அதே போன்ற நிலைமை இப்போதும் நிலவுவதாகக் கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் நினைத்தன. சமூக-ஜன நாயகம் பூர்ஷ்வா வர்க்கத்தின் முதன்மையான சமுதாயத் தூண்

என்று எண்ணுவதற்கு முன்பு இருந்தவற்றை விட அதிக ஆதாரங்கள் புதிய நிலைமைகளில் இருப்பதாக எண்ணி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான போராட்டத்துக்குத் தொழிலாளி வர்க்கத்தைத் தயார்படுத்துவது உடனடியான பணி என்று அவை கருதின. உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்கள் கடைப்பிடித்த கொள்கை, இந்தச் சக்தி தொழிலாளிகளின் புரட்சிப் போராட்டம் வளர்ச்சி அடைவதற்கு எதிராக எல்லா வகையிலும் செயல் புரியும் என்பதைக் காட்டியது. ஆனால் இதன் காரணமாகவே சமூக-ஜனநாயகத்தின் கீழ்ப்படிகளில் ''மேல்படியினரின்'' கொள்கைப் போக்கின்பால் அதிருப்தி வளரத் தொடங்கியது. இடது சாரிப் போக்குகளும் குழுக்களும் தோன்றின. பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தும்படி அவை கோரின. இந்தப் போக்குகளைக் கம்யூனிஸ்டுகள் இன்னும் போதிய அளவு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

சமூக-ஜனநாயகத்தின் வளர்ச்சி அனைத்தும் ''பாசிஸத்திற்குப் பரிணமிக்கும் இடையறாத நிகழ் முறை ஆகும்''[1] என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டத்தின் தீர்மானங்களில் கூறப்பட்டது. இந்த வரையறுப்பு எல்லா பாசிஸ்டு விரோதச் சக்திகளும் ஒன்றாக இணைவதற்குத் தடையாக இருந்தது.

உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் சமூக-ஜனநாயகத்தின்மீது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தாக்குதல் தீவிரம் அடைந்ததற்கும் சமூக-ஜனநாயகத்தை சோஷல்-பாசிஸம் என்று அவை மதிப்பிட்டதற்கும் வலதுசாரிச் சீர்திருத்தவாதத் தலைவர்களின் துரோகக் கொள்கையால் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்ட ஆத்திரமே பெருமளவு காரணம். வலதுசாரி சமூக-ஜனநாயகத்தின் சில தலைவர்கள் எதார்த்தத்தில் பாசிஸ முறைகள் புகுத்தப்படுவதற்கு உதவினார்கள். புரட்சிகரத் தொழிலாளர்களுக்கு எதிராக வன்முறையைக் கையாள அவர்கள் தயங்கவில்லை. அவர்களுடைய இந்தப் போக்கு அவர்கள் சோஷல்-பாசிஸ்டுகள் என்ற குற்றச்சாட்டுக்கு இடமளித்தது.

பெர்லின் நகரப் போலீசின் சமூக-ஜனநாயகத் தலைவர் த்ஸெர்கிபெல்லின் உத்தரவுப்படி, 1929ல் மே தின ஊர்வலத்தினர்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 961.

மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு புரட்சிகரத் தொழிலாளருக்குச் சிறப்பாக ஆத்திரம் ஊட்டியது. இத்தகைய நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்டுகள் சோஷல்-பாசிஸம் என்று அழைத்தார்கள். ஆனால், சமூக-ஜனநாயகத்தையும் லட்சக்கணக்கான தொழிலாளர்களை உறுப்பினராகக் கொண்ட சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்கள் எல்லாவற்றையும் சோஷல்-பாசிஸம் என்று குறிப்பிட்டது சரி அல்ல. பாசிஸத்தின் தாக்குதல் நடக்கையில் வலதுசாரித் தலைவர்களும் வலதுசாரிக் குழுக்களும் நீங்கலாக எஞ்சிய சமூக-ஜனநாயகம் பாசிஸ்டு விரோதப் போராட்டத்தில் பங்கு கொள்ளக்கூடும் என்பதைக் கம்யூனிஸ்டுகள் உரிய சமயத்தில் கவனிக்க முடியாதபடி சோஷல்-பாசிஸம் பற்றிய சூத்திரம் குறுக்கிட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் சோஷல்-பாசிஸம் என்ற பட்டத்தை சமூக-ஜனநாயகக் கட்சிகளின் லட்சோபலட்சம் சாதாரண உறுப்பினர்களுக்குச் சூட்டுகின்றன என்று குற்றம் சாட்டுவதற்கும் ஒரு காரணத்தை சோஷல்-பாசிஸம் பற்றிய சூத்திரம் கம்யூனிஸ்டுகளின் பகைவர்களுக்கு அளித்தது. சீர்திருத்தவாதக் கட்சிகள் கீழ்ப் படிகள் வரையில் முழுமையாக பாசிஸமயமாக்கப்படுகின்றன என்ற, கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டத்தின் முடிவு, சீர்திருத்தவாதத் தொழிலாளர்களைக் கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்வதற்கான சரியான வழிகளைக் காண்பதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடையூறாய் இருந்தது. மாறாக ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம்'' என்னும் செயல்தந்திரம் நடப்பில் வலதுசாரி சோஷலிஸ்டுத் தலைவர்களுக்கு எதிராக மட்டும் இன்றி, சீர்திருத்தவாத ஸ்தாபனங்களின் கீழ்ப்படி அலுவலர்களுக்கும் எதிராகக் கையாளப்படத் தொடங்குவதற்கும் இந்த முடிவு வழி வகுத்தது. ''வர்க்கத்துக்கு எதிராக வர்க்கம்'' என்னும் செயல் தந்திரம் இவ்வாறு கூர்மையாக்கப்பட்டது சீர்திருத்தவாதத் தொழிலாளர்களைக் கம்யூனிஸ்டுகளின் தரப்புக்குக் கொண்டு வருவதற்கு உதவவில்லை, அவர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே மேலும் மேலும் இறுக்கம் நிறைந்த உறவுகள் ஏற்படவே காரணம் ஆயிற்று.

அந்த சமயத்தில் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள், ''ஒன்றித்த சிவப்புக் கூட்டணி'', ''ஒன்றித்த பாசிஸக் கூட்டணிக்கு எதிராக —ஒன்றித்த கம்யூனிஸக் கூட்டணி'' என்பன போன்ற கோஷங்களை முன்வைத்தன. கம்யூனிஸ்டுகளை உணர்வு பூர்வமாக ஆதரித்த

தொழிலாளர்கள் மட்டுமே ஒன்றித்த கூட்டணியில் சேர முடியும் என்று இது நடைமுறையில் அர்த்தப்பட்டது. சீர்திருத்தவாதிகளைப் பின்பற்றிய விரிவான தொழிலாளி வெகுஜனங்கள் கூட்டணிக்கு வெளியே இருந்து விட்டார்கள்.

பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகரத் தொழிற்சங்க எதிர்த்தரப்புக்களை சுதந்திரமான புரட்சிகரத் தொழிற்சங்கங்களாக மாற்றுவது இன்றியமையாதது என்று தொழிற்சங்க அகிலத்தின் ஐந்தாவது காங்கிரஸ் (1930, ஆகஸ்டு) செய்த தீர்மானத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டம் ஆதரித்தது. இந்தத் தொழிற்சங்கங்கள் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களைப் பொருட்படுத்தாமல் பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்க வேண்டும், தொழிலாளர்களைத் தீவிரமான புரட்சி நடவடிக்கைகளுக்குத் தூண்டி ஊக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானம் கூறியது. இந்த யோசனைகள் வெகுஜனங்களிடையே கம்யூனிஸ்டுகள் விரிவாகச் செயல் புரியும் வாய்ப்புக்களைக் குறுக்கின, புரட்சிகரச் சிறுபான்மையைத் தொழிலாளர்களின் முக்கியத் திரளிலிருந்து தனிப்படுத்தின என்று பிந்திய நடைமுறை காட்டியது.

''பாசிஸம் பூர்ஷ்வா ஜனநாயகத்துக்கும் பூர்ஷ்வா சர்வாதிகாரத்தின் நாடாளுமன்ற வடிவம் அதன் பகிரங்கமான பாசிஸ வடிவத்துக்கும்''[1] எதிரானவை என்ற கருத்தைக் கைவிடுவது இன்றியமையாதது என முழுக் கூட்டம் முடிவு செய்தது. எல்லா பூர்ஷ்வா-ஜனநாயக நிலையங்களையும் தகர்க்கவும் உழைப்பாளிகளின் அளவறுத்த உரிமைகளுக்குக் கூட முடிவு கட்டவும் பாசிஸம் முயன்று கொண்டிருந்த நிலைமைகளில் செய்யப்பட்ட இந்த முடிவு பூர்ஷ்வா ஜனநாயகத்துக்கும் பாசிஸத்துக்கும் இடையே இருந்த முரண்பாடுகளை எதார்த்தமாக மதிப்பிடவும், ஜனநாயக சுதந்திரங்களைக் காத்து பாசிஸத்துக்கும் ஏகாதிபத்தியப் பிற்போக்குக்கும் எதிராகப் போராடிவந்த விரிவான வெகுஜனங்களை அணிதிரட்டுவதற்கான வாய்ப்பைப் புரிந்து கொண்டு பயன்படுத்தவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளால் முடியாதவாறு தடுத்தது.

ஆதிக்கத்தின் பூர்ஷ்வா-ஜனநாயக முறைகளையும் பாசிஸ முறைகளையும் ஒன்றாகக் கருதியது பாசிஸத்தை ஓரளவு குறைத்து

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 957.

மதிப்பிடவும் சில பூர்ஷ்வா-நாடாளுமன்ற அரசாங்கங்களை ஏற் கனவே பாசிஸ்டு அரசாங்கங்களாகக் கருதவும் காரணமாயிற்று. உண்மையான பாசிஸ்டுச் சக்திகளிலிருந்து தோன்றிய அபாயத் தின் எதார்த்தமான அளவுகளைக் காண்பதற்கு இது இடைஞ்ச லாய் இருந்தது. பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் எதிரான போராட்டத்தில் மிக விரிவான உழைப்பாளி வெகுஜனங்களை ஈடுபடுத்துவதற்கு உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த மிகப் பெருத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்துவது இந்தக் கருத்துக்களின் காரணமாகக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு இயலாது போயிற்று.

பாசிஸத்தின் தாக்குதலுக்கு எதிராகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் போராட்டம்

வர்க்க மோதல்கள் தீவிரம் அடைகின்றன. கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாசிஸத்துக்கும் பிற்போக்குக்கும் எதிரான போராட்டத்தில்

1932ம் ஆண்டில் வர்க்கப் போராட்டம் மேலும் தீவிரம் ஆயிற்று. ஆண்டின் தொடக்கத்தில் மூண்ட போலந்து சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஆயுதமேந்திய போலீசாருடன் தொழிலாளர்களின் கடுமையான மோதலோடு சேர்ந்து கொண்டது. 1932, மார்ச்சு மாதம் நாடு முழுவதிலும் ஒரு நாள் பொது வேலைநிறுத்தம் நடந்தது. கம்யூனிஸ்டுகள் இதில் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களின் வற்புறுத்தல் காரணமாக, உழைப்பாளிகள் போராடிப் பெற்றிருந்த அனேக சோஷலிஸ நலன்களுக்கு முடிவு கட்டுவதை அரசாங்கம் கைவிட நேர்ந்தது: வேலைநிறுத்த இயக்கத்தில் போராட்டத்தின் புதிய வடிவம் தோன்றியது: வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள் தொழில் நிலையத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பிற நாடுகளின் தொழிலாளர்களும் இந்தப் போராட்ட உதாரணத்தைப் பின்பற்றினார்கள்.

செக்கோஸ்லோவாக்கியாவில் வேலைநிறுத்தப் போராட்டம் பெரிதும் தீவிரம் ஆயிற்று. நாட்டின் மிக முக்கியமான நிலக்கரிப் பிரதேசங்களில் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் 1932ம் ஆண்டு வசந்தத்தில் நடந்தது. இதை அடுத்து, போலீசுடனும் அரசியல் போலீசுடனும் தொழிலாளர்களின் மோதல்கள் நிகழ்ந்தன. வடக்குச் செக்கோஸ்லோவாக்கியாவில் நிலக்கரிப் பிரதேசத்தின் எல்லாத் தொழிலாளர்களையும் ஒன்றித்த கூட்டணியாக வேலைநிறுத்தத்தில் ஈடுபடுத்துவது கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இயன்றது. இந்தக் காரணத்தினுலேயே இதன் முக்கியத்துவம் நாட்டின் எல்லைகளுக்கு வெளியே நெடுந்தூரம் சென்றது.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ், பிரிட்டன், பெல்ஜியம், ருமேனியா, கானடா, யூகோஸ்லாவியா ஆகியவற்றிலும் வேறு பல நாடுகளிலும் வேலைநிறுத்த இயக்கமும் வேலை அற்றவர்களின்

போராட்டமும் தீவிரமடைந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1932ம் ஆண்டு கோடைகாலத்தில் முன்னாள் படைவீரர்கள் வாஷிங்டன் நகருக்கு அணிநடை ஆர்ப்பாட்டப் பயணம் நடத்தினார்கள். ஓய்வுச் சம்பளம் தரும்படி முன்னாள் படைவீரர்கள் கோரிக்கை விடுத்தார்கள். இதற்குப் பதிலாக ஜெனரல் மாக் ஆர்தர் தலைமையில் இராணுவத்தினர் அணிநடையில் கலந்துகொண்டவர்களைக் கொடிய அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கினர். முன்னாள் படைவீரர்களில் பலர் காயமடைந்தனர். குடியிருப்பும் அவர்களுடைய உடைமைகளும் தீக்கிரையாக்கப் பட்டன.

ருமேனிய இருப்புப் பாதை ஊழியர்களின் போராட்டம் கடும் மோதலில் ஒன்று கலந்தது. 1933, பிப்ரவரியில் கிரிவிஸா என்னுமிடத்தில் (புஹாரெஸ்டுப் பிரதேசம்) வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்கள் ரெயில்வேத் தொழிற்சாலையைக் கைப்பற்றிக் கொண்டு தண்டனைப் படைகளை எதிர்த்துப் பல மணி நேரம் போரிட்டார்கள். கிரிவிஸா நிகழ்ச்சிகள் நாடு முழுவதிலும் பெருந்திரளான தொழிலாளர்கள் இடையே கொந்தளிப்பு ஏற்படுத்தின. பாசிஸ்டு விரோதிகளை ஒன்றுபடுத்த உதவின.

ஜெர்மனியில் போராட்டம் சிறப்பாகக் கூர்மை அடைந்தது. இங்கே 1932, செப்டெம்பர் 5ந் தேதி முதல் டிசம்பர் வரையில் ஏறத்தாழ 1100 வேலைநிறுத்தங்கள் நடந்தன. இவற்றில் பெரும்பாலானவை வெற்றியிலோ, அரைகுறை வெற்றியிலோ முடிந்தன.[1] நாட்டில் அரசியல் சக்திகள் முற்றிலும் எதிரெதிராக அணிதிரண்டன: கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்தது. மறு புறம் பாசிஸம் விரைவாகத் தீவிரம் அடைந்தது.

அனேக நாடுகளில் விவசாயிகள் இயக்கம் பேரலையாகப் பரவியது. இதில் கலந்து கொண்டவர்கள் கடன்கள் குறைக்கவோ ரத்து செய்யப்படவோ வேண்டும் என்று கோரியதுடன் நில்லாமல் நிலம் மறுபங்கிடப்பட வேண்டும் என்றும் கோரினார்கள். 1932ம் ஆண்டுக் கோடையில் போலந்து நாட்டில் விவசாயிகளின் ஆயுதமேந்திய கிளர்ச்சி மேற்கு உக்ரேனின் லிஸ்க் பகுதியிலும் வொாலீன் என்னும் இடத்திலும் பேரளவில் நடந்தது. ஜப்பானிய நாட்டுப்புறத்தில் வெகுஜன மோதல்கள் அதிர்ச்சி விளைத்தன. பண்ணைக்காரர்களின் வேலைநிறுத்த அலை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பரவியது. சில நாடுகளில் ஆழ்ந்த அதிருப்தியும் ஆட்சியாளருக்கு சாத்துவிக

[1] Geschichte der deutschen Arbeiterbewegung. Bd. 4, Berlin, 1966, SS. 365-366.

எதிர்ப்பும், வேறு சில நாடுகளில் பெருத்த ஆர்ப்பபாட்டங்கள், பின்னும் சிலவற்றில் வெகுஜனங்களின் ஆயுதமேந்திய போராட்டங்கள்—நாட்டுப்புறத்தில் வர்க்கப் போராட்டம் கடுமையாகத் தீவிரம் அடைந்ததன் மொத்தக் காட்சி இத்தகையதாக இருந்தது.

புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சியைச் சுரண்டுவோர் வர்க்கங்கள் மேலும் மேலும் கடுமையாக எதிர்த்தன. உழைப்பாளிகளின் போராட்டத்தை வன்முறைகளின் உதவியால் நசுக்கவும் சர்வாதிகார அரசாங்கங்களை நிலைநாட்டவும் அவை முயன்றன. பொது மக்கள் திரளின் எந்த அதிருப்தியையும் முளையிலேயே கிள்ளி எறிய இத்தகைய அரசாங்கங்கள் வல்லவையாய் இருக்கும் என்று சுரண்டுவோர் வர்க்கங்கள் நினைத்தன. ஏகாதிபத்தியப் பிற்போக்கு பாசிஸ முறைகளைப் புகுத்தும் பாதையில் நாளுக்கு நாள் முன்னே சென்றது இதற்குச் சான்றாக விளங்கியது. பல நாடுகளில் பாசிஸம் விரைவாக வலிமையைத் திரட்டிக் கொண்டு பிற்போக்குள்ள ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் தலைமைக் கட்சி ஆகி விட்டது. சோஷலிஸத்தையும் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் முற்போக்கையும் அடியோடு வெறுத்த எல்லாவற்றையும் ஒன்று சேர்க்கும் மையம் ஆயிற்று பாசிஸம். ஏகபோக பூர்ஷ்வா வர்க்கம் நாளுக்கு நாள் அதிகப் பிற்போக்கு அடைந்ததை இது பிரதிபலித்தது.

ஏகாதிபத்தியப் பிற்போக்கு, பாசிஸம் ஆகியவற்றின் தாக்குதல் முப்பதுக்களின் தொடக்கத்தில் ஜெர்மனியில் மிக அச்சுறுத்தும் அளவுகளை மேற்கொண்டது. கடைக்கோடி ஆக்கிரமிப்புப் போக்குள்ள நிதி மூலதனத்தின் முக்கியக் குழுக்கள் அங்கே நேஷனல்-சோஷலிஸ்டுக் (நாஜிக்) கட்சிக்கு மேலும்மேலும் ஊக்கத்துடன் ஆதரவு அளிக்கலாயின. பயங்கர முறைகளால், ''இரும்பாலும் நெருப்பாலும்'' புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தைத் தகர்த்து நொறுக்கவும், ஹிட்லரின் சொற்படி ''சாவு விளைக்கும் ஜனநாயக நோயை'' ஒழிக்கவும், ''மிக மிகக் கண்டிப்பான ஆட்சியாதிக்க அரசு நிர்வாகத்தை'' நிலைநாட்டவும், யுத்தத்துக்கு விரிவாக முஸ்தீப்பு செய்யவும், அதன் மூலம் பிற மக்களினங்களை அழித்துவிடவும் அல்லது அடிமைகளாக்கவும் , ''வாழ் நிலப்பகுதியை'' வென்று கைப்பற்றவும், அவ்வாறு கைப்பற்றிய பிரதேசங்களை ஜெர்மன்மயமாக்கவும், பின்னர் ''ஜெர்மன் இனத்தின்'' உலக ஆதிக்கத்தை நிலைநாட்டவும் பாசிஸத்தில் வாய்ப்பு இருப்ப

தாக ஜெர்மனியின் ஏகாதிபத்தியப் பிற்போக்கு கருதியது.[1] ஹிட்லரின் பாசிஸம் ஏகபோக மூலதனத்தின் கடைக்கோடிப் பிற்போக்கான, மனிதவெறுப்பு நிறைந்த தன்மைகளைத் தனக்குள் குவித்துக் கொண்டிருந்தது. போரிடும் கம்யூனிஸ எதிர்ப்பின் பரு வடிவாக விளங்கியது அது.

சர்வதேச ஏகாதிபத்தியம் ஜெர்மானிய பாசிஸ்டுகளை ஆதரித்தது, அவர்களுக்குப் பொருள் உதவி செய்தது, அவர்கள் ஆட்சிக்கு வர உதவியது. ஏனெனில், கம்யூனிஸ்டு இயக்கத்தையும் சோவியத் யூனியனையும் இலக்காகக் கொண்ட தாக்குப்படையாக அவர்களை அது மதித்தது.

1932, ஜூலையில் ஜெர்மானிய நாடாளுமன்றமான ரைஹ்ஸ்தாகுக்கு நடந்த தேர்தல்களில் ஜெர்மானிய பாசிஸ்டுகள் 138 லட்சம் வாக்குகள் பெற்று நாட்டின் யாவற்றிலும் பெரிய அரசியல் சக்தி ஆகிவிட்டார்கள். கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் முறையே 54 லட்சம் வாக்குகளும் 80 லட்சம் வாக்குகளும் பெற்றூர்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்கள் தனித்தனியே செயல்பட்டார்கள். ஹிட்லர்வாதிகள் தொழிலாளி வர்க்கத்தின் பிளவைப் பயன்படுத்திக் கொண்டு, தங்கள் பயங்கரவாதக் கும்பல்களைப் புரட்சிகரத் தொழிலாளர்களுக்கு எதிராக நாளுக்கு நாள் அதிகத் துடுக்குடன் ஏவத் தொடங்கினார்கள்.

பிரான்ஸ், ஆஸ்திரியா, ஸ்பெயின், கிரீஸ், பால்டிக் நாடுகள் ஆகியவற்றில் பாசிஸ்டு இயக்கம் துலக்கமாக வலுவடைந்தது.

கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்த பாசிஸ அபாயத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டின. பாசிஸத்தைக் குறி வைத்துத் தாக்கின. பாசிஸம் பற்றிய பூர்ஷ்வாக் கருத்துக்களும் சமூக-ஜனநாயகக் கருத்துக்களும் எவ்வளவு தீங்கானவை என்பதை அவை வெகுஜனங்களுக்கு விளக்கின. இந்தக் கருத்துக்கள் பாசிஸத்தின் உண்மையான வர்க்கத் தன்மையைப் பூசி மறைத்தன. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1930ம் ஆண்டுக் கோடையில் ஏற்கப்பட்ட ''ஜெர்மானிய மக்களின் சமுதாய, தேசிய விடுதலைக்கான செயல்திட்டத்தில்'' பாசிஸத்தின் இந்த வர்க்கத் தன்மையைப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: பாசிஸம் கடைக்கோடிப் பிற்போக்கின் கட்சி என்ற

---

[1] Der Nationalsozialismus 1933-1945, in Dokumenten, Frankfurt a. M. 1959, SS. 180-181.

முறையில் பெருத்த அபாயம் உள்ளது; அதன் குறிக்கோள்கள் ஜெர்மானிய மக்களின் தேசிய நலன்களுடன் எவ்விதப் பொதுத் தன்மையும் கொண்டிருக்கவில்லை; மாறாக, கடைக்கோடிப் பிற் போக்கும் ஆக்கிரமிப்பு வேட்கையும் கொண்ட ஏகாதிபத்திய வட்டாரங்களின் விருப்பங்களையே அவை வெளியிடுகின்றன. தொழி லாளர்கள் தங்கள் சக்திகளை விரைவில் ஒன்றுசேர்த்துக் கொள் ளாவிட்டால் வலுவடைந்து வரும் பாசிஸம் தொழிலாளர்களை முறியடித்துவிடக் கூடும் என்று 1932ம் ஆண்டுத் தொடக்கத்தில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி சுட்டிக் காட்டியது. எனவே, தொழிலாளர்களின் ஒன்றித்த கூட்டணி பற்றிய கொள்கை, பாசிஸத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே கொள்கை என்றும் கட்சிக் கொள்கையின் முக்கிய அம்சம் என்றும் விளக்கப்பட்டது.[1]

பிரியூனிங், பாப்பென் அரசாங்கத்தின் நெருக்கடிக்கால ஆணை கள் உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதித்தன. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி இந்த ஆணைகளுக்கு எதிராகத் தன்னலமின்றிப் போராட்டம் நடத்தியது. நாளுக்கு நாள் தீவிர மாகி வந்த பாசிஸ்டு விரோத நடவடிக்கைகளுடன் இந்தப் போராட் டத்தை அது நெருக்கமாக இணைத்தது. 1932ம் ஆண்டுக் கோடை யில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி ''பாசிஸ்டு விரோத நடவடிக்கைகள்'' என்னும் வெகுஜன இயக்கத்தை நடத்தியது. வெகுஜனங்களிடையே பாசிஸ்டுச் செல்வாக்கு வளர்வதைத் தடுப் பதில் இந்த இயக்கம் முக்கியப் பங்கு ஆற்றியது. ''பாசிஸத்துக்கு எதிராகவும் புதிய சம்பளக் குறைப்புக்கு எதிராகவும் போராட்டம் நடத்த உண்மையில் விரும்பும் எந்த ஸ்தாபனத்துடனும்'' சேர்ந்து, தோளோடு தோள் பொருத்திப் போராடத் தான் தயாராய் இருப் பதாக ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை விடுத்தது.[2] 1932, ஜூலை 8ந் தேதி சமூக-ஜனநாயகக் கட்சியின் முதுநிலை ஊழியர்களுடன் உரையாடுகையில் எ. தேல்மன் பின்வருமாறு கூறினார்: ''ஜெர்மனி நெகிடி நெருப்புக்களும் தூக்குமேடைகளு மாக மாறிவிடும் பயங்கரமான அபாயம் எதிர்ப்பட்டிருக்கும் போது, இத்தகைய நிலைமைகளில், ஒன்றித்த பாசிஸ்டு விரோதப் பாட்டாளி வர்க்கக் கூட்டணி அமைப்பதற்கு உளமார முயற்சி

[1] Geschichte der deutschen Arbeiterbewegung. Bd. 4, S. 326.

[2] „Die Rota Fahne", 27. IV. 1932.

செய்யாதிருக்க, கம்யூனிஸ்டுகளாகிய எங்களால் முடியுமா?''[1] ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பெருத்த பாசிஸ்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தியது. அதன் முன்முயற்சியால் நாட்டின் அனேக நகரங்களிலும் மக்கள் தொகை மிகுந்த பகுதிகளிலும் தற்காப்புப் படைப் பிரிவுகள் அமைக்கப் பட்டன. கம்யூனிஸ்டுகள் மட்டும் இன்றி, கட்சிச்சார்பு இல்லாதவர் களும் சமூக-ஜனநாயகவாதிகளின் ஒரு பகுதியினரும் இவற்றில் சேர்ந்தார்கள். ஹிட்லர்வாதிகள் ஆட்சிக்கு வருவதற்கு முந்திய ஆறுமாதக் காலத்தில், பாசிஸத்துக்கு எதிராகப் பொது வேலை நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்யும்படி ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சிக்கு சுமார் பத்து தடவைகள் யோசனை விடுத்தது. ஆனால் ஒவ்வொரு தடவையும் அதன் யோசனை நிராகரிக்கப்பட்டது.[2]

பிற்போக்கு பூர்ஷ்வாக் கட்சிகள் நாட்டில் பாசிஸ முறைகளைப் புகுத்தும் கொள்கையை ஏற்கனவே கடைப்பிடித்து வருகின்றன என்று பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி வெகுஜனங்களுக்கு விளக்கி யது. 1932ம் ஆண்டுத் தேர்தல் பிரசாரத்தின்போது, யுத்தத்துக் கும் வறுமைக்கும் பாசிஸத்துக்கும் எதிரான கோஷங்களைக் கம் யூனிஸ்டுகள் முழக்கினார்கள். இதே கோஷங்களுடன் கம்யூனிஸ்டு கள் வேலைநிறுத்த இயக்கத்தில் ஊக்கத்துடன் பங்காற்றினார்கள். பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகப் பாட் டாளிகளை ஒன்றிணைப்பதற்கு ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கை மிகப் பெருத்த முக்கியத்துவம் உள்ளது என்று பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி கருதியது. 1932ல் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக ஆம்ஸ்டர்டாம் நகரில் காங்கிரஸ் கூட்டு வதற்கான பிரசாரத்தில் அது கலந்துகொண்டது. சோஷலிஸ்டுக் கட்சிகளின் 141 பிரிவுகளையும் முற்போக்கு அறிவுஜீவிகளின் கணிசமான பகுதியினரையும் இந்தப் பிரசார இயக்கத்தில் கலந்து கொள்ளுமாறு செய்ய அதற்கு வாய்த்தது.[3]

---

[1] வி. பிரேதெல். எர்ன்ஸ்ட் தேல்மன். மாஸ்கோ, 1955, பக்கம் 129.

[2] சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் பதினேழாவது காங்கிரஸ். சுருக்கெழுத்து விவரம். மாஸ்கோ, 1934, பக்கம் 345.

[3] பார்க்க: „La Korrespondence Internationale", 1933, N 15, p. 212.

தொழிலாளர்களின் ஒன்றித்த கூட்டணி அமைப்பதில் வேலை நிறுத்தப் போராட்டங்களின் போது முக்கியமான அனுபவம் திரட்டியிருந்த செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது. வெளியே, ஜெர்மனியிலிருந்தும், உள்ளே, அரசை பாசிஸமயமாக்க முயன்று கொண்டிருந்த உள்நாட்டுப் பிற்போக்கு வட்டாரங்களிலிருந்தும் பாசிஸ அபாயம் வரக் கூடும் என்று 1932ம் ஆண்டு நடுவிலிருந்து செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி பொது மக்களை எச்சரித்து வந்தது. செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாசிஸ்டு எதிர்ப்பு இயக்கம் தொடங்கியது. கி. கோட்வால்டு எழுதியபடி இந்த இயக்கத்தின் நோக்கம் ஒன்றித்த கூட்டணியாகச் செயல்படுவதும் ''செக்கோஸ்லோவாக்கிய நகரங்களின் வீதிகளிலே ஆயுதமேந்திய பாசிஸ்டுக் கும்பல்கள் மணியம் செய்வதையும் தொழிலாளிகளைச் சுடுவதையும் தடுப்பதும் ஆக இருந்தது. தொழிலாளர்களும் விவசாயிகளும் மாஞுங்காணியாகக் கொலை செய்யப்படுவதைத் தடுப்பது செக்கோஸ்லோவாக்கியத் தொழிலாளி வர்க்கத்தால் முடியும். பாப்பென்களும் ஷ்லேஹர்களும் ஹிட்லர்களும் செக்கோஸ்லோவாக்கியாவுக்குள் புகுவதைச் செக்கோஸ்லோவாக்கியத் தொழிலாளி வர்க்கம் தவிர்க்க முடியும்''.[1]

போலந்தில் வர்க்க முரண்பாடுகளின் வளர்ச்சி மட்டுமீறிக் கடுமை அடைந்திருந்தது. அங்கே கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளர்களின் வேலைநிறுத்த இயக்கத்தையும் வெகுஜன ஆர்ப்பாட்டங்களையும் விவசாயிகளின் போராட்டங்களையும் பாசிஸ்டு அரசாங்கத்துக்கு எதிராகப் பொது அரசியல் வேலைநிறுத்தத்துக்கு உழைப்பாளிகளை ஆயத்தம் செய்வதுடன் இணைக்க முயன்றது.[2]

ஸ்பெயின், ருமேனியா, ஹங்கேரி, யூகோஸ்லாவியா, கிரீஸ், பிரிட்டன் ஆகியவற்றையும் வேறு பல நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளும் பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தைக் கணிசமாகத் தீவிரப்படுத்தின.

கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் பெருத்த கொள்கைவாத, பிரசார வேலை தொடங்கின. பாசிஸம் பற்றி, குட்டி பூர்ஷ்

[1] கிளிமேந்த் கோட்வால்டு. பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி 1. மாஸ்கோ, 1957, பக்கங்கள் 287—288.

[2] யூ. லேன்ஸ்கி. போலந்தில் வர்க்கப் போராட்டம் முற்றுதல். ''பிராவ்தா'', 1933, ஜனவரி 27.

வாக்களும், வலதுசாரி சோஷலிஸ்டுகளும் திரோத்ஸ்கிவாதிகளும் கொண்டிருந்த பல வகையான கருத்துக்களை அவை கண்டனம் செய்தன. பாசிஸ்டு இயக்கத்தின் முக்கிய இயல்புகளை மேலும் ஆழ்ந்து பகுத்தாராயவும் அதன் பலவீனங்களை வெளிப்படுத்தவும் அதன் வளர்ச்சியின் காரணங்களை விளக்கவும் அவை முயன்றன. சமூக-ஜனநாயகமும் பல்வகையான குட்டி பூர்ஷ்வாக் கொள்கை வாதிகளும் பாசிஸம் பற்றித் தந்திருந்த விளக்கங்கள் அந்தக் காலத்தில் வெகுஜனங்களிடையே இன்னமும் விரிவாகப் பரவி வந்தன. பாசிஸம் என்பது குட்டி பூர்ஷ்வாக்களின் இயக்கமும் சர்வாதிகாரமும் ஆகும் என்று சமூக-ஜனநாயகத்தின் பல பிரபல சித்தாந்தகர்கள் சித்திரித்தார்கள். இதன் மூலம் அவர்கள் பாசிஸத்தின் தன்மை குறித்துப் பொது மக்களை ஏமாற்றி வந்தார்கள்.

பெரும் ஏகபோக மூலதனத்துடனும் ஆகக் கொடிய பிற்போக்குடனும் பாசிஸம் கொண்டிருந்த தொடர்புகளை சமூக-ஜனநாயகத் தலைவர்கள் ஒன்று மறுத்தார்கள் இல்லாவிட்டால் மறைத்தார்கள். பாசிஸம் பாட்டாளி வர்க்கத்தையும் பெரும் பூர்ஷ்வா வர்க்கத்தையும் தனது சர்வாதிகாரத்துக்கு ஒரே மாதிரியாக அடிப்படுத்துகிறது என்று அவர்கள் கூறினார்கள். பாசிஸம் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட ஆட்சி அதிகாரம் என்றும், ஒருவகையான போனப்பார்ட்டிஸம் (நெப்போலியனியம்) என்றும், பூர்ஷ்வா வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட இயலாதிருந்த நிலைமைகளில் அது தோன்றியதாகவும் குட்டி பூர்ஷ்வா சித்தாந்தகர்த்தர்களும் திரோத்ஸ்கிவாதிகளும் அடிக்கடி விளக்கம் தந்தார்கள். இத்தகைய கருத்துக்கள் பாசிஸத்துடன் போராடுவதற்கு வெகுஜனங்களை அணி திரட்ட இடைஞ்சலாய் இருந்தன. பெரும்பாலான ''ஜனநாயக'' நாடுகளில் பாசிஸம் வருவது புறநிலைக் காரணங்களால் அசாத்தியம் என்றும் பாசிஸ்டு இயக்கத்துக்கான வெகுஜன அடிப்படையாக விளங்கக் கூடிய லும்பென் பாட்டாளிகள் (வர்க்கத்தன்மை இழந்த வறியவர்கள்) இந்த நாடுகளில் அவ்வளவு பெருத்த எண்ணிக்கையில் இல்லாதது இதற்குச் சிறப்பான காரணம் என்றும் சமூக-ஜனநாயகப் பத்திரிகைகளும் மிதவாத-பூர்ஷ்வாப் பத்திரிகைகளும் பரப்பி வந்த கருத்தும் பெருத்த தீங்கு விளைத்தது. மேற்கு ஐரோப்பாவில் இருந்த சமூக-ஜனநாயகத் தலைவர்கள் பாசிஸத்தை அறவே ஏற்காத, பாசிஸத்தைத் ''தடுக்கும் திறன் கொண்ட'' ''ஜனநாயக மண்டலம்'' பற்றி வெகுவாகப் பேசி வந்தார்கள்.

பாசிஸம் பெரு மூலதனத்தின் பயங்கரவாத சர்வாதிகாரம் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் பத்திரிகைகளும் அதனுடைய பிரிவுகளின் பத்திரிகைகளும் இடைவிடாது அம்பலப்படுத்தி வந்தன. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிக் காலப்பகுதியில், வர்க்க முரண்பாடுகள் ஒரேயடியாக முற்றி, பூர்ஷ்வா அரசாங்கங்கள் நிலையுறுதியை இழந்துவிட்ட காலப்பகுதியில் ஓர் அரசியல் போக்காக பாசிஸம் வர்க்கப் போராட்ட அரங்கில் அடிவைத்திருக்கிறது என்று கம்யூனிஸ்டுகள் வலியுறுத்தினார்கள். முதலாளித்துவத்தின் அழுகலுடனும் அழிவதுடனும் அது தொடர்பு கொண்டது. இந்த அர்த்தத்தில் அது பூர்ஷ்வா வர்க்கத்தின் ஓரளவு பலவீனத்தைக் குறிக்கிறது. ஆனால் அதே சமயம், இந்த பலவீனத்தை எந்த விலை செலுத்தி ஆகிலும், எந்த விதமான மிருகத்தனங்களாலும் இரத்தப் பெருக்குள்ள வன்முறைகளாலும் அகற்றவும், நிலவும் அமைப்புக்கு எதிராக அற்ப நடவடிக்கைகளைக் கூட அனுமதிக்காத, பகிரங்கமான பயங்கரவாத அரசாங்கங்களை நிறுவவும் பிற்போக்கு பூர்ஷ்வா வர்க்கம் கொண்டுள்ள வெறியுள்ள விருப்பத்தின் பரு வடிவாக விளங்குகிறது பாசிஸம். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதிமூன்றாவது முழுக் கூட்டத்தால் செய்யப்பட்ட இந்த முடிவுகளை, வெகுஜனங்களிடையிலும் ஒரு சில கம்யூனிஸ்டுகளிடையிலும் பரவியிருந்த, பாசிஸ்டு அபாயத்தைக் குறைத்து மதிப்பிடும் போக்கை அகற்றுவதற்காகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பயன்படுத்திக் கொண்டன.

பாசிஸம் உலக அரங்கில் சோஷலிஸத்தின் எதிர்முனையாக, சோஷலிஸத்தின்பாலும் சோவியத் யூனியன்பாலும் யாவற்றிலும் பகைமை நிறைந்த சக்தியாகச் செயல்படுவதையும் முதல் சோஷலிஸ அரசை அழிக்கத் திட்டமிட்டு வருவதையும் கம்யூனிஸ்டு அகிலம் உழைப்பாளிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தது. பாசிஸத்தின் தாக்குதல் சோவியத் விரோத ஏகாதிபத்திய யுத்த அபாயம் அதிகரித்திருப்பதற்குக் காரணமாகும் என்று எடுத்துக் காட்டப்பட்டது.

பாசிஸம், தேசியவாத, சமுதாய மேடைப் பிரசங்க வாய்வீச்சின் உதவியால் சீர்கேடுற்ற குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களையும் வர்க்கத் தன்மை இழந்த மக்கள் முழுக்களையும் தனது அணிகளுக்கு ஈர்த்து, தனக்கு வெகுஜன அடிப்படை ஏற்படுத்திக் கொள்கிறது என்பதைக் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் கவனித்தன. நெருக்கடி ஆண்டுகளில் நடுத்தர வகுப்பாரின் லட்சக்

கணக்கான பிரதிநிதிகள் சீர்கேடு அடைந்து சமுதாய ஏணியின் அடிக்கு இழிந்திருந்தார்கள்.

வி.இ. லெனின் தம் காலத்தில் எழுதினர்: ''சிறு உற்பத்தியாளனின் அதிருப்தி, சிறு உடைமையாளன் என்ற வகையில் தான் நிலவுவதைக் காப்பாற்றிக் கொள்ளும் விருப்பத்தை, அதாவது, தற்போதைய ஒழுங்கு முறையின் அடிப்படைகளைக் காக்கவும், அதைப் பின்னுக்குத் திருப்பவும் கூட விருப்பத்தை, மிக அடிக்கடி தோற்றுவிக்கிறது (அவனிடம் அல்லது அவனது வகுப்பாரின் கணிசமான பகுதியினரிடம் தோற்றுவிக்க வேண்டும்)''.[1] நெருக்கடிக் காலப்பகுதியில் இதுவே பெரும்பாலான சிறு உடைமையாளர்களிடம் சிறப்பாகக் காணப்பட்டது. சீரழிந்து ஆத்திரம் அடைந்திருந்த சிறு உடைமையாளன் துர்ச்சாகசச் செயல்களிலும் பயங்கர நடவடிக்கைகளிலும் இறங்கும் போக்கைக் காட்டினன். பாசிஸ்டுகளின் கம்யூனிஸ்டு விரோத, ஜனநாயக விரோத அறைகூவல்கள் இந்த உடைமையாளனுக்கு ஏற்புடையவையாக இருந்தன. அவர்களுடைய சாமர்த்தியமான இனவெறிப் பிரசாரமும், சிறு மனிதனுக்கு ''மதிப்பையும்'' நாட்டுக்கு ''தேசிய மாண்மையும்'' மீண்டும் கிடைக்கச் செய்வதாக உறுதி கூறிய கோஷங்களும் அவனுக்கு உவப்பாய் இருந்தன. எந்த நாடுகள் யுத்தத்தில் தோல்வி அடைந்திருந்தனவோ, எங்கே போருக்குப் பிந்திய உடன்படிக்கைகளின் சுமையைப் பொது மக்கள் தாங்க வேண்டி இருந்ததோ, சிறப்பாக அவற்றில் தேசியவாதப் பிரசாரம் பாசிஸ்டுகளின் பலத்த துருப்புச் சீட்டாகப் பயன்பட்டது. வெகுஜனங்களுக்கு தேசியவாத நஞ்சு ஊட்டவும் துன்ப நிலைமைகளின் உண்மைக் காரணங்களிலிருந்து அவர்களுடைய கவனத்தை வேறு புறம் திருப்பவும் இந்தச் சூழ்நிலை பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் இந்த ஆபத்தான போக்கைப் பகுத்தாய்ந்து நடுத்தர வகுப்பாரிடையே பாசிஸ்டு விரோத வேலையைத் தீவிரப்படுத்த முடிவு செய்தன. இந்த வகுப்பாரை பாசிஸத்தின் ''இயல்பான சேமிப்பாகக்'' கருதிய கம்யூனிஸ்டுகளது சில பகுதிகளின் கருத்துக்கு எதிராகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் போராட்டம் தொடங்கின.

---

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 6, பக்கம் 49.

கம்யூனிஸ்டு இயக்கம் விரிவடைகிறது. இடதுசாரிப் பிரிவுவாதக் குழுக்களுடன் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் போராட்டம்

கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாசிஸத்தினதும் ஏகாதிபத்தியப் பிற்போக்கினதும் தாக்குதலுக்கு எதிராகக் கடினமான நிலைமைகளில் போராட்டம் நடத்தின. பூர்ஷ்வா அரசு இயந்திரத்தின் வெறிகொண்ட அடக்குமுறைகள் கம்யூனிஸ்டுகள் மீது பொழிந்தன. பாசிஸ்டுக் கும்பல்கள், இராணுவ முறையில் அமைந்த வெவ்வேறு வகையான பிற்போக்கு ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பயங்கர நடவடிக்கைகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எதிராகத் திருப்பப்பட்டன. சட்டபூர்வமான வேலையையும் சட்டப் புறம்பான வேலையையும் திறமையாக ஒன்றிணைக்கும் கலையில் தேவையான அளவு தேர்ச்சி இன்னும் பெருத கட்சிகள் சிறப்பாகக் கடும் துன்பத்துக்கு உள்ளாயின. கம்யூனிஸ்டுக் கட்சி இயந்திரத்தின் நடுப்பகுதியிலும் தலைமைப் பகுதியிலும் இழப்புக்கள் நிறைய ஏற்பட்டன. ஏனெனில் பகைவர்கள் அனுபவசாலிகளான புரட்சியாளர்களையே முதலில் தாக்கினுர்கள்.

ஆயினும், பயங்கரமும் துன்புறுத்தலும் இருந்த போதிலும், வெறி கொண்ட கம்யூனிஸ்டு விரோத வேட்டையைப் பொருட்படுத்தாமல், உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் கம்யூனிஸ்டு இயக்கம் பலப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் உழைப்பாளிகளின் நலன்களை உறுதியுடன், ஒத்திசைந்த முறையில் காத்தது, பாசிஸத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் போராட்டத்தில் அவை காட்டிய வீரமும் வளையா உறுதியும் ஆகியவற்றின் காரணமாகக் கம்யூனிஸ்டுகள் மீது முன்னணித் தொழிலாளர்கள், உழைக்கும் விவசாயிகள், இடதுசாரி அறிவுஜீவிகள் ஆகியோரின் நேசம் அதிகரித்தது. இந்த வட்டாரங்களின் சிறந்த பிரதிநிதிகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணிகளை நிறைத்தார்கள். பாசிஸத்துடன் நடந்த போராட்டத்தின் சர்வதேச முனைமுகத்தினது மையப் பகுதியில் இருந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரைவாக வளர்ச்சி அடைந்தது. 1933ம் ஆண்டுத் தறுவாயில் அதன் உறுப்பினர் தொகை மூன்று லட்சத்துக்கு மேல் இருந்தது. சீனு, செக்கோஸ்லோவாக்கியா, பின்லாந்து, வேறு அனேக நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் பல புதிய பிரிவுகள் தோன்றின. பிரான்சின் காலனியாக இருந்த இந்தோசீனுவின் கம்யூனிஸ்டுக் குழுக்கள், 1930ல் இந்தோசீனக் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைத்தன. 1931ம் ஆண்டு, கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினேராவது முழுக் கூட்டத்தில், இந்தக் கட்சி சுதந்திரமான பிரிவாகக் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்தோசீனக் கம்யூனிஸ்டுக் கட்சியை உருவாக்குவதில் ஹோஷி மின் சிறப்பான பங்கு ஆற்றினுர். 1930ல், குறிப்பிடத்தக்க திருநாளாகிய நவம்பர் 7ந் தேதியன்று, ஃபிலிப்பைன் தீவுக்கூட்டத்தின் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்பட்டது. தொடக்கத்தில் அது சட்டபூர்வமாக இயங்கியது. ஆனுல் 1931லேயே அமெரிக்கக் காலனி ஆட்சியாளர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சட்டவிரோதமானது என அறிவித்து விட்டார்கள்.

மலாயா, சைப்ரஸ் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் 1930—1931ல் உருவாயின. அதே சமயத்தில் லத்தீன் அமெரிக்கக் கண்டத்தில் சால்வடோர், வெனிசுவேலா, கொலம்பியா, கோஸ்டா-ரிக்கா ஆகிய நாடுகளில் சிதறியிருந்த கம்யூனிஸ்டுக் குழுக்களைக் கொண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைக்கப்பட்டன.

ஐரோப்பாவில் ஐஸ்லாந்திலும் (1930) அயர்லாந்திலும் (1933) கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாயின.

1925 முதல் 1933 வரை இந்தியாவில் கம்யூனிஸ்டுக் கட்சி எதார்த்தத்தில் மையத் தலைமை இல்லாமல் இருந்தது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர் அனைவரும் சிறைகளில் இருந்தார்கள். 1933ல், இந்தியக் கம்யூனிஸ்டுகளை ஸ்தாபன ரீதியில் ஒன்றிணைக்கும் திசையில் முக்கியமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. புதிய மத்தியக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது. அனைத்து இந்திய அளவில் கட்சித் தலைமையைச் செயல்படுத்த இது தொடங்கியது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி அதே ஆண்டு கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர்ந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் அணிகள் பெருகியதும் புதிய பிரிவுகள் உருவானதும் கம்யூனிஸ்டு இயக்கம் மேற்கொண்டு வலுவடைந்ததைக் காட்டின.

மூலதனம், பாசிஸம் ஆகியவற்றின் தாக்குதலுக்கு எதிராக வெகுஜனங்களை அணிதிரட்டுகையில் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தங்கள் அணிகளில் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டே இடதுசாரி-பிரிவு

வாத நபர்களையும் குழுக்களையும் தாக்குவது இன்றியமையாதது ஆயிற்று. ஏனெனில் இவை சரியான கொள்கை வகுப்பதற்கும் உண்மையில் வெகுஜன பாசிஸ்டுவிரோத வேலையை நடத்துவதற்கும் இடையூறு விளைத்தன.

சிறிது காலம் ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையில் இருந்த பூலெஹோஸ்—திரிலியா பிரிவுவாத-சந்தர்ப்பவாதக் குழுவை ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1932ல் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் உதவியுடன் முறியடித்தது. ஸ்பெயினில் 1931ம் ஆண்டு தொடங்கிய புரட்சி பூர்ஷ்வா-ஜனநாயகத் தன்மை கொண்டது என்பதையும் நிலப் பிரச்சினை அதில் மையப் பிரச்சினையாக இருந்தது என்பதையும் இந்தக் குழு புரிந்து கொள்ளவில்லை. ''பாட்டாளி வர்க்கம் தனக்காக மட்டுமே போராட வேண்டும்'' என்று பூலெஹோசும் திரிலியாவும் எண்ணினார்கள். எனவே அவர்கள் ''பூர்ஷ்வாக் குடியரசு ஒழிக!'' என்னும் கோஷத்தைக் கிளப்பினார்கள். பூர்ஷ்வா-ஜனநாயக மாற்றத்தின் பொருட்டுப் போராடிவந்த விரிவான வெகுஜனங்களைக் கம்யூனிஸ்டுகள் நெருங்குவதற்கு இதன் மூலம் அவர்கள் பெருத்த சங்கடத்தை ஏற்படுத்தினார்கள்.

நாட்டினப் பிரச்சினையில் இந்தக் குழு தவறான நிலையை மேற்கொண்டது. கத்தலோனியா, பஸ்கோனியா, கலீஷியா ஆகிய நாட்டினப் பிரதேசங்களைத் தாமதமின்றியும் கட்டாயமாகவும் பிரித்துவிடவேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். இந்தப் பிரிவுவாத-போலிச் சித்தாந்தவாதக் குழு வெகுஜனங்களிடையே வேலை செய்வதைப் புறக்கணித்தது. வெகுஜன ஒழுங்கமைப்பாளி என்ற முறையில் கட்சியின் பாத்திரத்தை அது குறைவாக மதிப்பிட்டது.

தீவிரவாதத்தில் தோய்ந்த குட்டி பூர்ஷ்வா வகைச் சிந்தனையைப் பிரதிபலித்த இந்தக் குழு கட்சியிலிருந்து நீக்கப்பட்டது கட்சி வளர்ந்து வலுவடைவதில் முக்கியப் பங்கு ஆற்றியது. ''...கட்சியின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டதும் அதை வெகுஜனங்களிலிருந்து ஓரளவு துணித்துவிட்டதுமான குறுகிய வரட்டுச் சூத்திரவாதப் போக்கு சீராக்கப்பட்டது.''[1] ஹொசே தியாஸ், தாலரேஸ் இபரூரி, விசேந்த் ஊரிபே போன்ற புரட்சியாளர்கள் கட்சியின் தலைமையை ஏற்றார்கள். நிலப்பிரபுத்துவப் பிற்

---

[1] ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு. மாஸ்கோ, 1961, பக்கம் 78.

போக்குக்கும் பாசிஸத்துக்கும் எதிராகவும் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியைக் கடைசிவரை நடத்திச் செல்வதற்காகவும் போராடும் விரிவான பாதையில் கட்சி முன்னேறலாயிற்று.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பர்பே-செலோர் இடதுசாரிப்-பிரிவுவாதக் குழுவுக்கு எதிராகக் கடுமையான போராட்டம் நிறைவுறும் நிலையில் இருந்தது. இந்தக் குழு பிரான்சில் நிலவிய பொருளாதார, அரசியல் நெருக்கடியை மிகையாக மதிப்பிட்டது. தார்தியே அரசாங்கம் பாசிஸ்டு சர்வாதிகாரத்தை ஏற்கனவே நடப்புக்குக் கொண்டுவந்து விட்டதாக இது வலிந்துரைத்தது. இந்தக் குழு போலிப் புரட்சிகர கோஷங்களை முன்வைத்தது, புரட்சிச் சொற்றொடர்களைக் கையாண்டது. அதே சமயம் ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் குலைத்தது. அம்சரீதியான கோரிக்கைகளுக்காகப் போராட இது மறுத்தது. அவற்றை "வரலாற்று நோக்கில் தாண்டப்பட்ட" கட்டங்கள் என்று எண்ணியது.

பர்பேயும் செலோரும் தொழிலாளர்கள் உட்பட சமூக-ஜனநாயகக் கட்சியின் எல்லா உறுப்பினர்களையும் "சோஷல்-பாசிஸ்டுகள்" என்றும் "பூர்ஷ்வா வர்க்கத்தின் வேட்டை நாய்கள்" என்றும் அழைத்தார்கள். இந்தப் பேச்சு, தொழிலாளி-சோஷலிஸ்டுகளைக் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக நிறுத்த வலதுசாரிச் சீர்திருத்தவாதத் தலைவர்களுக்கு உதவ மட்டுமே செய்தது. இந்தக் குழுவின் கொள்கை கட்சிக்குப் பெருத்த தீங்கு விளைத்தது. கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்தது.[1]

பர்பே-செலோர் குழு 1930ல் கட்சித் தலைமையிலிருந்து அகற்றப்பட்டது, பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராக மொரீஸ் தோரேஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது, 1932, மார்ச்சில் நடந்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஏழாவது காங்கிரசில், பர்பே-செலோர் குழுவின் பிரிவுவாதக் கொள்கையால் நேர்ந்த விளைவுகள் ஆதார பூர்வமாகத் தாக்கி விமர்சிக்கப்பட்டது ஆகிய செயல்கள், ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியின் பொருட்டும் மூலதனத்தினதும் பாசிஸத்தினதும் தாக்குதலுக்கு எதிராகவும் போராடும் பிரச்சினைகள் பால் கவனம் செலுத்தவும் வெகுஜனங்களிடையே வேலையை வெகுவாக மேம்படுத்தவும் கட்சிக்கு வாய்ப்பு அளித்தன.

---

[1] 1926ல் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் 55 ஆயிரம் உறுப்பினர்கள் இருந்தார்கள். 1930 லோ, 39 ஆயிரம் பெயரே இருந்தார்கள். *Maurice Thorez.* Oeuvres. Livre 2. T. I. Paris, 1950, p. 45.

நேமன்—ரெம்மெலே பிரிவுவாத-சந்தர்ப்பவாதக் குழுவுக்கு எதிராகக் கம்யூனிஸ்டு அகிலமும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையும் கடும் போராட்டம் நடத்த நேர்ந்தது. பொருளாதார நெருக்கடி தவிர்க்க முடியாதவாறு புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்று இந்தக் குழு எண்ணியது. எனவே, உழைப்பாளிகளின் அம்சரீதியான கோரிக்கைகளுக்கும் அன்றாடத் தேவைகளுக்குமான போராட்டத்தை இது உரிய அளவு முக்கியமானதாகக் கருதவில்லை. பாசிஸ அபாயத்தைக் குறைத்து மதிப்பிட்டதும், ஆட்சியைக் கைப்பற்ற ஹிட்லர்வாதிகளின் முயற்சி ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை விரைவுபடுத்தும் என்ற எண்ணமும் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்களின் பொது இயல்பாக இருந்தன. அதே சமயம், புரட்சிகரத் தொழிலாளர்களுடையவும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியினதும் சாத்தியக்கூறுகளை நேமனும் ரெம்மெலேயும் அவர்களுடைய தரப்பாளர்களும் எதார்த்தமற்ற முறையில் தீர்மானித்தார்கள். 1931ல் கம்யூனிஸ்டுக் கட்சி ''பாசிஸத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதில் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டது'' என்றும், தேர்தல்களில் அது பெரும்பான்மை வாக்குகள் பெறும் என்றும், 1931—1932ம் ஆண்டுகளின் குளிர் காலம் ''மிக மிகப் புரட்சிகரமான குளிர்காலமாக'' இருக்கும் என்றும் இன்னும் பலவாறுகவும் வலிந்துரைத்தார் நேமன்.

பாசிஸ்டுக் கும்பல்களுடன் நேரடியான கைகலப்புக்களோடு பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தை இந்தக் குழு நிறுத்திக் கொண்டது. தனிநபர் பயங்கர முறைகளுக்கு இழியும் அபாயம் இதனுல் ஏற்பட்டது. சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களை ''சோஷல்-பாசிஸ்டுகள்'' என்றும் ''சிறு-த்ஸெர்கிபெல்கள்'' என்றும் இடதுசாரிப் பிரிவுவாதிகள் அழைத்தார்கள். இதன் மூலம், சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களை நடைமுறைப் புரட்சிப் போராட்டத்தில் ஈடுபடுத்தும் சாத்தியக் கூற்றை அவர்கள் மறுத்தார்கள். ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி என்னும் கோஷத்தின் இடத்தில் ''சிவப்புத் தொழிலாளர் கூட்டணி'' என்னும் கோஷத்தை அவர்கள் பிரேரித்தார்கள். ஒற்றுமைக் கொள்கையின் வரம்புகளை இது முன்னதாகவே குறுக்கிவிட்டது. இந்தக் குழுவின் தீங்கான இடதுசாரி-பிரிவுவாதக் கருத்துக்கள் ஜெர்மானிய இளங் கம்யூனிஸ்டுகள் சங்கத் தலைமையில் சிறப்பாக வலுவாய் இருந்தன.

நேமன்—ரெம்மெலே குழுவுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு அலுவலகத்தின் இடதுசாரி மனப்பான்மை கொண்ட

சில ஊழியர்களின் ஆதரவு இருந்தது. கிரேரின் இவர்களில் ஒருவர். ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகளுக்கு இவர் சில வேளை களில் பிரிவுவாத உணர்வில் யோசனைகள் கூறி வந்தார்.

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரபல தலைவர்களான எ. தேல்மன், வி. பிக், வா. ஊல்பிரிஹ்த் ஆகியோரும் பிறரும், இடதுசாரியினரின் தீங்கான கருத்துக்களை எதிர்த்து, கட்சி மேடை களில் மீண்டும் மீண்டும் பேசியும் கட்சிப் பத்திரிகைகளில் எழுதி யும் வந்தார்கள். பிரிவுவாதிகளால் ஆதரிக்கப்பட்ட பல கருத்துக் களை **1932**, பிப்ரவரியில் நடந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் தாக்கி விமர்சித்தது. **1932**, ஏப்ரல் மே மாதங்களில், கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற் குழுவின் அரசியல் கமிஷன், நேமன், ரெம்மெலே, ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் குழுவின் நடவடிக்கைகளை ஆராய்ந்து அது குறுகிய உட்குழுத் தன்மையும் பிரிவுவாதமும் கொண்டது என்று கூறி அதைக் கண்ட னம் செய்தது.[1] இது கட்சித் தலைமைக்கு முக்கியமான உதவியாக இருந்தது. நேமன்-ரெம்மெலெ குழுவை விரைவில் முறியடிக்க இது ஒத்தாசை செய்தது.

அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருந்த இடதுசாரிப் பிரிவு வாதக் குழுக்கள் தாக்கப்பட்டது கம்யூனிஸ்டுகளின் வெகுஜன வேலை தீவிரம் அடைவதற்குப் பெருத்த முக்கியத்துவம் கொண் டிருந்தது. பாசிஸ்டு விரோதித் தொழிலாளர்களை ஒன்றுபடுத்து வதற்கு அதிகச் சமயோசிதமான கொள்கையைக் கடைப்பிடிப் பதற்கும் அது வழி வகுத்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் மேலும் வலு வாக்குவதற்கும் இந்தத் தாக்குதல் பெருத்த முக்கியத்துவம் உள்ளதாய் இருந்தது.

உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பேருதவி புரிந்தது. **1929—1930**ல் இந்தக் கட்சியில் கடுமை யான உட்குழுப் போராட்டம் தொடங்கியது. கட்சியில் பிளவு ஏற்படுவதற்கும் வெகுஜனங்கள் மீது அதன் செல்வாக்கு பலவீனம் அடைவதற்கும் இது காரணம் ஆயிற்று. ‘‘ருமேனியக் கம்யூ னிஸ்டுக் கட்சியில் நடக்கும் கோட்பாடற்ற உட்குழுப் போராட்டத்

---

[1] Geschichte der deutschen Arbeiterbewegung. Bd. 4, S. 373.

நேமன்—ரெம்மெலே பிரிவுவாத-சந்தர்ப்பவாதக் குழுவுக்கு எதிராகக் கம்யூனிஸ்டு அகிலமும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையும் கடும் போராட்டம் நடத்த நேர்ந்தது. பொருளாதார நெருக்கடி தவிர்க்க முடியாதவாறு புரட்சிக்கு இட்டுச் செல்லும் என்று இந்தக் குழு எண்ணியது. எனவே, உழைப்பாளிகளின் அம்சரீதியான கோரிக்கைகளுக்கும் அன்றாடத் தேவைகளுக்குமான போராட்டத்தை இது உரிய அளவு முக்கியமானதாகக் கருதவில்லை. பாசிஸ அபாயத்தைக் குறைத்து மதிப்பிட்டதும், ஆட்சியைக் கைப்பற்ற ஹிட்லர்வாதிகளின் முயற்சி ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கப் புரட்சியை விரைவுபடுத்தும் என்ற எண்ணமும் இந்தக் குழுவைச் சேர்ந்தவர்களின் பொது இயல்பாக இருந்தன. அதே சமயம், புரட்சிகரத் தொழிலாளர்களுடையவும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியினதும் சாத்தியக்கூறுகளை நேமனும் ரெம்மெலேயும் அவர்களுடைய தரப்பாளர்களும் எதார்த்தமற்ற முறையில் தீர்மானித்தார்கள். 1931ல் கம்யூனிஸ்டுக் கட்சி ''பாசிஸத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதில் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டது'' என்றும், தேர்தல்களில் அது பெரும்பான்மை வாக்குகள் பெறும் என்றும், 1931—1932ம் ஆண்டுகளின் குளிர் காலம் ''மிக மிகப் புரட்சிகரமான குளிர்காலமாக'' இருக்கும் என்றும் இன்னும் பலவாறாகவும் வலிந்துரைத்தார் நேமன்.

பாசிஸ்டுக் கும்பல்களுடன் நேரடியான கைகலப்புக்களோடு பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தை இந்தக் குழு நிறுத்திக் கொண்டது. தனிநபர் பயங்கர முறைகளுக்கு இழியும் அபாயம் இதனால் ஏற்பட்டது. சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களை ''சோஷல்-பாசிஸ்டுகள்'' என்றும் ''சிறு-த்ஸெர்கிபெல்கள்'' என்றும் இடதுசாரிப் பிரிவுவாதிகள் அழைத்தார்கள். இதன் மூலம், சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களை நடைமுறைப் புரட்சிப்போராட்டத்தில் ஈடுபடுத்தும் சாத்தியக் கூற்றை அவர்கள் மறுத்தார்கள். ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி என்னும் கோஷத்தின் இடத்தில் ''சிவப்புத் தொழிலாளர் கூட்டணி'' என்னும் கோஷத்தை அவர்கள் பிரேரித்தார்கள். ஒற்றுமைக் கொள்கையின் வரம்புகளை இது முன்னதாகவே குறுக்கிவிட்டது. இந்தக் குழுவின் தீங்கான இடதுசாரி-பிரிவுவாதக் கருத்துக்கள் ஜெர்மானிய இளங் கம்யூனிஸ்டுகள் சங்கத் தலைமையில் சிறப்பாக வலுவாய் இருந்தன.

நேமன்—ரெம்மெலே குழுவுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு அலுவலகத்தின் இடதுசாரி மனப்பான்மை கொண்ட

சில ஊழியர்களின் ஆதரவு இருந்தது. கினோரின் இவர்களில் ஒருவர். ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகளுக்கு இவர் சில வேளை களில் பிரிவுவாத உணர்வில் யோசனைகள் கூறி வந்தார்.

ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரபல தலைவர்களான எ. தேல்மன், வி. பிக், வா. ஊல்பிரிஹ்த் ஆகியோரும் பிறரும், இடதுசாரியினரின் தீங்கான கருத்துக்களை எதிர்த்து, கட்சி மேடை களில் மீண்டும் மீண்டும் பேசியும் கட்சிப் பத்திரிகைகளில் எழுதி யும் வந்தார்கள். பிரிவுவாதிகளால் ஆதரிக்கப்பட்ட பல கருத்துக் களை 1932, பிப்ரவரியில் நடந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் தாக்கி விமர்சித்தது. 1932, ஏப்ரல் மே மாதங்களில், கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற் குழுவின் அரசியல் கமிஷன், நேமன், ரெம்மெலே, ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் குழுவின் நடவடிக்கைகளை ஆராய்ந்து அது குறுகிய உட்குழுத் தன்மையும் பிரிவுவாதமும் கொண்டது என்று கூறி அதைக் கண்ட னம் செய்தது.[1] இது கட்சித் தலைமைக்கு முக்கியமான உதவியாக இருந்தது. நேமன்-ரெம்மெலெ குழுவை விரைவில் முறியடிக்க இது ஒத்தாசை செய்தது.

அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் இருந்த இடதுசாரிப் பிரிவு வாதக் குழுக்கள் தாக்கப்பட்டது கம்யூனிஸ்டுகளின் வெகுஜன வேலை தீவிரம் அடைவதற்குப் பெருத்த முக்கியத்துவம் கொண் டிருந்தது. பாசிஸ்டு விரோதித் தொழிலாளர்களை ஒன்றுபடுத்து வதற்கு அதிகச் சமயோசிதமான கொள்கையைக் கடைப்பிடிப் பதற்கும் அது வழி வகுத்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் மேலும் வலு வாக்குவதற்கும் இந்தத் தாக்குதல் பெருத்த முக்கியத்துவம் உள்ளதாய் இருந்தது.

உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பேருதவி புரிந்தது. 1929—1930ல் இந்தக் கட்சியில் கடுமை யான உட்குழுப் போராட்டம் தொடங்கியது. கட்சியில் பிளவு ஏற்படுவதற்கும் வெகுஜனங்கள் மீது அதன் செல்வாக்கு பலவீனம் அடைவதற்கும் இது காரணம் ஆயிற்று. “ருமேனியக் கம்யூ னிஸ்டுக் கட்சியில் நடக்கும் கோட்பாடற்ற உட்குழுப் போராட்டத்

[1] Geschichte der deutschen Arbeiterbewegung. Bd. 4, S. 373.

தையும் கட்சியின் ஒற்றுமையை மீண்டும் ஏற்படுத்துவதையும்'' பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அரசியல் செயலகம் 1930, ஆகஸ்டில் விசேஷத் தீர்மானம் நிறைவேற்றியது. கட்சித் தலைமையின் உட்குழுத் தன்மையையும் அலுவலகச் சடங்கு முறைகளையும் ஒன்றுக்கொன்று எதிரான குழுக்களுக்கு இயல்பாக இருந்த குட்டி பூர்ஷ்வா துர்ச்சாகசப் போக்கையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கண்டனம் செய்தது. கட்சியில் மீண்டும் ஒற்றுமை ஏற்படுத்துவதற்கும் அதைச் சொஸ்தப்படுத்துவதற்கும் ஏற்ற முறைகளைக் குறித்தது (புதிய தாற்காலிகத் தலைமையை நியமிப்பது, கட்சிக் கலந்துரையாடல்கள் நடத்துவது, காங்கிரசுக்கு ஆயத்தம் செய்வது).[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளில் போராட்ட ஊக்கம் மிக்க மார்க்சிய-லெனினியத் தலைமை மையங்களை அமைத்தது கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் வலுப்படுத்தும் வேலையின் மிக மிகச் சாரம் நிறைந்த பகுதியாக இருந்தது. வலதுசாரி, ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதிகளுடன் கடும் போராட்டத்திலும், பூர்ஷ்வா வர்க்கத்தினதும் பாசிஸத்தினுடையவும் தாக்குதலுக்கும் எதிரான வர்க்கச் சமர்களிலும் கட்சி ஊழியர்கள் உருவாகி உரம் பெற்றார்கள். கம்யூனிஸ்டு இயக்கத் தலைவர்கள் மேலே வந்தார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளில் நிலையான பெரும்பான்மையாக இவர்கள் அமைந்தார்கள். இந்தப் பெரும்பான்மை சரியான கொள்கைப் போக்கை உறுதிப்படுத்தியது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பன்னிரண்டாவது முழுக் கூட்டம்

1932, ஆகஸ்டு-செப்டெம்பரில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பன்னிரண்டாவது முழுக் கூட்டம் நடைபெற்றது. மூலதனம், பாசிஸம், ஏகாதிபத்தியம், யுத்தம் ஆகியவற்றின் தாக்குதலுக்கு எதிராக வெகுஜனங்களை அணி திரட்டுவது குறித்த பிரச்சினைகள் முழுக் கூட்டத்தினது கவனத்தின் மையமாக இருந்தன. அனேக முதலாளித்துவ நாடுகளில் புரட்சி நெருக்கடிக்கு

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1930, இதழ் 23, பக்கங்கள் 54—59.

ஏற்ற முதனிலைகள் தொடர்ந்து வளர்ந்து வருவதை ஆதாரமாகக் கொண்டு கம்யூனிஸ்டுகளுக்குப் பின்வரும் பணியை விதித்தது: ''ஒரு நிமிடம் கூட வீணுக்காமல், தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையை நம் பக்கம் ஈர்ப்பதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிச் செயலூக்கத்தை உயர்த்துவதற்கும் உரிய போல்ஷிவிக் தன்மையுள்ள வெகுஜன வேலையைத் தீவிரமாக்கி விரைவுபடுத்துக''.[1]

ஓ. கூஸினென் முழுக் கூட்டத்தில் ஆற்றிய உரையில், கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் வெகுஜன வேலையில் ''தொழிலாளர்களை இந்தக் கணத்தில் சிறப்பாகக் கொந்தளிப்புக்கு உள்ளாக்கும் பிரச்சினைகளையும் நிகழ்ச்சிகளையும்''[2] அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கையின் அடிப்படையாக ''பாட்டாளி வர்க்கத்தின் தற்போதைய வர்க்கப் போராட்டங்களின் உடனடியான நடைமுறைக் குறிக்கோள்களையும் கம்யூனிஸ்டுக் கொள்கையின் உடனடியான நடவடிக்கைக் கோஷங்களையும் மட்டுமே'' வைத்துக் கொள்ள வேண்டும், ''கம்யூனிஸ்டுச் செயல்திட்டத்தின் கோட்பாடுகளை அல்ல. இவை கட்சிச் சார்பு அற்ற தொழிலாளர்களுக்கும் சீர்திருத்தவாதத் தொழிலாளர்களுக்கும் இன்னும் புரியாதவை, ஆனுல் உடனடியான பகுதிப் போராட்டங்களின்போது அவர்களுக்கு இவற்றை விளக்கிவிட வேண்டும்''[3] என்று அவர் கூறினுர். சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களைக் கம்யூனிஸ்டுகளின் தரப்புக்குக் கொண்டுவருவது அனேகமாக இயலாது (''அவர்களுடைய எண்ணத்தை மாற்றமுடியாது''), பகுதிக் கோரிக்கைகளுக்காகப் போராட்டம் நடத்துவது அவ்வளவு முக்கியமல்ல என்ற கருத்தை உரையாளர் கடுமையாக விமர்சித்தார். தங்கள் கொள்கைதான் தொழிலாளர்களின் நலன்களுக்கு எதார்த்தமான, நடைமுறையில் பயனுள்ள ஒரே ஒரு காப்பு என்று சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்கள் சித்திரிக்க உதவுவது இந்தக் கருத்துதான் என்ருர் ஓ. கூஸினென். கட்சிச் சார்பற்றவர்களும்,

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 978.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் 12வது முழுக் கூட்டம். சுருக்கெழுத்து விவரம். தொகுதி 1, மாஸ்கோ, 1933, பக்கம் 29.

[3] அதே நூல், பக்கம் 30.

சமூக-ஜனநாயகவாதிகளும் சிண்டிகலிஸ்டுகளுமான தொழிலாளி வெகுஜனங்களுடன் நிலையான தொடர்புகள் வைத்துக் கொள்வதும் அவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவதும் இன்றியமையாதவை என்று உரையில் வலியுறுத்தப்பட்டது. ''கீழிருந்து ஒன்றித்த கூட்டணி'', கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுப்பது என்பது, சிறப்பான சந்தர்ப்பங்களில் ஒன்றித்த கூட்டணிபற்றிக் கம்யூனிஸ்டுகளின் யோசனை ''கீழ்ப்படித் தொழிற்சங்க ஸ்தாபனத்துக்கோ அல்லது வட்டார சமூக-ஜனநாயக ஸ்தாபனத்துக்கோ விடுக்கப்படுவதைத்''[1] தடுக்கவில்லை என்று ஒ. கூஸினென் கூறினர். ஒன்றித்த கூட்டணி யோசனையை விடுக்கையில் சீர்திருத்தவாதத் தொழிலாளர்கள் தங்கள் தலைவர்களுடன் தொடர்பைத் துணித்துக் கொள்ள வேண்டும் என்று எடுத்த எடுப்பிலேயே கோருவது சரியாகாது என்ருர் அவர்.

எ. தேல்மன் பொருளாதார வேலைநிறுத்தங்களிலும் வேலையற்ருேர் போராட்டத்திலுமிருந்து கிடைத்த படிப்பினைகளைப் பகுத்து ஆராய்ந்தார். பகுதிக் கோரிக்கைகளுக்காகப் போராடுவதையும் தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகள் வேலை செய்வதையும் பற்றிய பிரச்சினைகளின் பால் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கவனத்தை ஈர்த்தார். பகுதிப் போராட்டங்கள் நடத்துவதற்குப் போலிப் புரட்சிப் பாங்குடன் மறுப்பதையும் தொழிற்சங்கக் கொள்கையில் இடதுசாரிப் பிரிவுவாதத்தையும் அவர் கண்டனம் செய்தார். ''சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களை ஒழிப்போம்'' என்ற கோஷத்தை முன்வைப்பதற்குச் சிற்சில இடங்களில் நடந்த முயற்சிகளில் இந்தப் பிரிவுவாதம் வெளிப்பட்டது. சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களை ''முதலாளித்துவப் பள்ளி'', ''ஒரே பிற்போக்குக் கும்பல்'' என்று எண்ணுவது சரியல்ல என்று எ. தேல்மன் கூறினர். இந்தச் சங்கங்களில் திரளான தொழிலாளர்கள் மூலதனத்தின் தாக்குதலை எதிர்த்துப் போராட விரும்புகிருர்கள் என்றும் எனவே கம்யூனிஸ்டுகள் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களிலிருந்து வெளியேறக் கூடாது, அவற்றில் ஒவ்வொரு பதவிக்காகவும் போராட வேண்டும் என்றும், சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களின் பல்வேறு கீழ்ப்படி உறுப்புக்களை—வேலைநிறுத்தக் கமிட்டிகள், வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய கமிஷன் முதலியவற்றை—பகிஷ்கரிக்கக்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் 12வது முழுக் கூட்டம். சுருக்கெழுத்து விவரம். தொகுதி 1, பக்கம் 31.

கூடாது, அவற்றின் வேலையில் மிக மிக ஊக்கத்துடன் பங்கு கொள்ள வேண்டும், தங்கள் காரியத்திஞல் உழைப்பாளி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திஞர்.[1]

கி. கோட்வால்டும் தமது துணையுரையில் இதே பிரச்சினைகளைக் கிளப்பிஞர். உடனடியான அன்ருடக் கோரிக்கைகளை முன்வைப்பதன் முக்கியத்துவத்தையும் வெகுஜனங்களுக்குப் புரியக்கூடியவையும் உகந்தவையுமான போராட்ட வடிவங்களின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துக் கூறிஞர். தொழிலாளர் ஸ்தாபனங்களில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையை மட்டுமே பறைசாற்றிக் கொண்டிராமல் கடுமையாக உழைத்து, நாளுக்கு நாள், நடைமுறைப் போக்கிலேயே தொழிலாளர்களின் ஒன்றித்த கூட்டணிக்காகவும் அதில் தலைமையின் பொருட்டும் போராடும்படி அவர் கேட்டுக் கொண்டார்.

''லெனினை—1917ம் ஆண்டு அவர் சோவியத்துக்கள் பற்றிக் கூறியவற்றை—நான் கவனமாகப் படித்தேன்'' என்ருர் கோட்வால்டு. '' 'போல்ஷிவிக்குகளின் தலைமையில் சோவியத்துக்களை நிறுவுங்கள்' என்ற கோஷத்தை அப்போது லெனின் முன்வைத்ததாக நான் எங்குமே படிக்கவில்லை. 'தொழிலாளர்கள், விவசாயிகள், படையினர் பிரதிநிதிகளின் சோவியத்துக்களை நிறுவுங்கள்' என்றே அப்போது கூறப்பட்டது. ஒன்றித்த கூட்டணியின் தற்போதைய உறுப்புக்கள் — போராட்டக் கமிட்டிகள், வேலைநிறுத்தக் கமிட்டிகள் முதலியன—சோவியத்துக்களுடன் ஒப்பிடும்போது மிகச் சிறியவை. ஆனுலும் அவை நம்முடைய தலைமையில்தான் அமைக்கப்பட வேண்டும் என்று நாம் அடிக்கடி பிடிவாதம் செய்கிருேம்.

''உண்மையான தலைமையை மேலிருந்து சுமத்த முடியாது. அறிக்கைகள் மூலம் அதை அடைய முடியாது. பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் மூலம் அதை முயன்று பெற வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களை விடாப்பிடியாக, பொறுமையுடன், தன்னலமின்றிக் காப்பதன் வாயிலாக அதை முயன்று பெற வேண்டும்.''[2] வெகுஜன வேலையில் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் கோட்பாடுகளின் பாத்திரத்தைக் கி. கோட்வால்டு வலியுறுத்திஞர். வேலைநிறுத்தக் கமிட்டிகள், வேலையற்

[1] அதே நூல், பக்கம் 58.

[2] கி. கோட்வால்டு. பொறுக்கி எடுக்கப்பட்ட நூல்கள், தொகுதி 1, பக்கங்கள் 302-303.

ளூர் கமிட்டிகள் முதலியன போன்ற உறுப்புக்களைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மேலிருந்து நியமிக்கக் கூடாது, பாட்டாளி வர்க்க ஜன நாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லாத் தொழிலாளர் களாலும் அவை தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த வழிதான் தொழிலாளி வெகுஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், செயலின் வாயிலாகத் தங்கள் நிலையை அவர்களுக்குக் காட்டவும், சமூக-ஜனநாயகத் தொழி லாளர்களுடன் தனிப்பட்ட நட்பு உறவு ஏற்படுத்திக் கொள்ள முயலவும் கம்யூனிஸ்டுகளுக்கு வாய்ப்பு அளிக்கும் என்றூர் அவர்.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் முழுக் கூட்டம் செய்த இந்த முடிவுகள் யாவும் ஒன்றித்த தொழிலாளர் கூட் டணிக் கொள்கையின் வரம்புகள் விரிவாக்கப்பட்டதையும் முந்திய கருத்துக்கள் சில கைவிடப்பட்டதையும் குறித்தன. சீர்திருத்த வாதக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் கீழ்ப்படி அலு வலகங்கள் பாசிஸமயம் ஆக்கப்பட்டுவிட்டன என்ற கருத்து, ஒன்றித்துச் செயல்படும் யோசனையை சமூக-ஜனநாயகக் கட்சி களின் கீழ்ப்படி உறுப்புக்களுக்குக் கூட விடுப்பது சாத்தியம் இல்லை என்ற கருத்து முதலியன இத்தகைய கருத்துக்கள். வெகு ஜனங்களைத் தங்கள் தரப்புக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெகுஜனங்களிடையே வேலையை முழு மையாகச் சீர்படுத்த வேண்டும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பன்னிரண்டாவது முழுக் கூட்டம் பணித்தது. ''விரிவான வெகுஜனங்களின் அன்றூடப் பொருளாதார, அரசியல் நலன்களின் பொருட்டு, அதிகரிக்கும் வறுமைக்கு எதிராகவும் உரிமையின்மைக்கும் பலாத்காரத்துக்கும் பயங்கர நடவடிக்கை களுக்கும் எதிராகவும் போராடுவதே இந்தப் பணியை நிறை வேற்றுவதற்காகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் செய்யவேண்டிய முதல் வேலை ஆகும்''[1] என்று முழுக் கூட்டத்தின் தீர்மானம் அறிவுறுத் தியது. பகுதிக் கோரிக்கைகளின் பொருட்டுப் பாட்டாளி வர்க்கத் தின் பொருளாதாரப் போராட்டம் அரசியல் நடவடிக்கைகளின் பல்வேறு வடிவங்களுடன் நாளுக்கு நாள் மிக அடிக்கடி ஒன்றிணைந்து வந்தது. இந்தப் போராட்டம், வெகுஜனங்களைப் பெருத்த புரட்சிப் போராட்டங்களுக்கு இட்டுச் செல்வதற்குரிய முக்கிய மான வழி என்று முழுக் கூட்டம் கருதியது.[2]

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 979.
[2] அதே நூல், பக்கம் 983.

முதலாளித்துவ சமூகத்தில் நடந்து வந்த நிகழ்முறைகளின் தன்மையை முழுக் கூட்டம் சித்திரித்தது. பொருளாதாரத்தில் அரசின் தலையீடு அதிகரிப்பதையும் அரசின்மீது தனியார் ஏக போகங்களின் கண்காணிப்பு வலுப்பதையும் அது சுட்டிக் காட்டியது. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் அரசியல் பிற்போக்கும் பாசிஸமயமாவதும் தீவிரம் அடைந்து வருவதைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் முழுக் கூட்டம் தக்க ஆதாரங்களுடன் குறிப்பிட்டது. இந்த நாடுகளில் ''பெரும் பூர்ஷ்வா வர்க்கம் உள்நாட்டுப் போருக்கான பாசிஸ்டுப் படைப் பிரிவுகளை அமைக்கிறது, அரசியல் கொள்ளைக்கூட்ட முறை, பயங்கர முறைகள், அரசியல் கைதிகளைச் சித்திரவதை செய்தல், வஞ்சகமாகத் தூண்டிவிடுதல், பித்தலாட்டம், வேலைநிறுத்தம் செய்பவர்கள் மீதும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினர்மீதும் துப்பாக்கிச் சூடு, தொழிலாளர் ஸ்தாபனங்களைக் கலைப்பதும் தாக்கி நொறுக்குவதும் ஆகிய முறைகளை அரசு அமைப்பில் புகுத்தி வருகிறது''[1] என்று அது எடுத்துக் காட்டியது. ஜெர்மனியிலும் பிற நாடுகளிலும் தேசியவாதமும் இனவெறியும் தலைவிரித்தாடு வதையும் இன வெறி மனப்பான்மைகள் ஏற்றம் அடைந்து வருவதையும் பாசிஸ்டுகள் அவற்றைப் பயன்படுத்துவதையும் முழுக் கூட்டம் சுட்டிக் காட்டியது.

முழுக் கூட்டத்தில் பேசியவர்கள் ''குறைந்த தீமை'' என்ற வலதுசாரி சோஷலிஸ்டுக் கொள்கையை நியாயமாகக் கண்டனம் செய்தார்கள். இது பூர்ஷ்வாப் பிற்போக்குக்கு ஒத்துப்பாடுவதாக முடிகிறது என்று அவர்கள் கூறினார்கள்.

ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீனாவைத் தாக்கி மஞ்சூரியாவைக் கைப்பற்றிக் கொண்ட பின்னரும் ஏகாதிபத்தியங்களின் பரஸ்பர முரண்பாடுகள் தீவிரம் அடைந்திருப்பதன் தொடர்பாகவும் ஏற்பட்டிருந்த சர்வதேசச் சூழ்நிலையை முழுக் கூட்டம் மதிப்பிட்டது. இவை எல்லாவற்றின் காரணமாகவும், சோவியத் யூனியனைப் பலி கொடுத்தும் தூரக் கிழக்கில் செல்வாக்கு மண்டலங்களை மறு பங்கீடு செய்தும் தங்கள் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் போக்கு ஏகாதிபத்திய முகாமில் வலுப்பட்டிருக்கிறது என்று முழுக் கூட்டம் சுட்டிக் காட்டியது. ''சீனாவைப் பங்கு போட்டுக் கொள்வதற்காக ஆயுதப் போராட்டம் நடத்தவும். சோவியத்

---

[1] அதே நூல், பக்கம் 975.

யூனியனில் தலையீடு செய்யவும் திட்டம் உருவாகி இருக்கிறது''[1] என்று முழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் கூறப்பட்டது. யுத்த அபாயம் தீவிரமாகி இருந்ததைத் தூரக் கிழக்கில் யுத்தத்தின் பிறப்பிடம் தோன்றி இருந்ததும் வட சீனவில், சோவியத் யூனியனின் எல்லை அருகே படைவெறி கொண்ட ஜப்பானின் நிலைகள் வலுப்பட்டிருந்ததும் மட்டுமின்றி வேறு பல நிகழ்ச்சிகளும் காட்டின: சோவியத் எதிர்ப்பு அனைத்து ஐரோப்பியக் கூட்டணி அமைப்பதற்கு பிரான்சும் பிரிட்டனும் செய்து வந்த ஏகாதிபத்தியச் சூழ்ச்சிகள், தன் கிழக்கு ஐரோப்பியக் கூட்டாளி நாடுகளின் சோவியத் விரோத நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்கு பிரெஞ்சு ஏகாதிபத்தியம் செய்துவந்த முயற்சிகள், உலகச் சந்தையில் ''சோவியத் மலிவுப் பண்டக் குவிப்பு'' எனப்பட்டதற்கு எதிராக முதலாளித்துவ நாடுகளில் நடந்த வெறிகொண்ட பிரசார இயக்கம், சோவியத் யூனியனுக்கு எதிராகச் சிலுவைப் போர் நடத்தும்படி 11வது போப் பையஸ் விடுத்த அறைகூவல், ஆயுத ஒழிப்பு பற்றிய சோவியத் யோசனைகளை ஏற்க ஜெனீவா மகாநாடு மறுத்தது முதலியன இவை.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பன்னிரண்டாவது முழுக் கூட்டம், கலவரமூட்டும் இந்த சர்வதேச நிகழ்ச்சிகளைப் பகுத்தாராய்ந்து யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடும் போக்கு பாசிஸத்தினால் சிறப்பாக விரைவுபடுத்தப்படுகிறது என்றும் ஏகாதிபத்தியவாதிகளின் யுத்த முஸ்தீப்புக்களை எதிர்த்து உண்மையில் தீவிரமான போராட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்வது கம்யூனிஸ்டுகளின் கடமை என்றும் குறித்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் முழுக் கூட்டம் நடந்த அதே சமயத்தில் சர்வதேச யுத்த எதிர்ப்புக் காங்கிரஸ் ஆம்ஸ்டர்டாம் நகரில் (1932, ஆகஸ்டு) நடந்தது. இதைக் கூட்டுவதில் கம்யூனிஸ்டுகள் முக்கியப் பங்கு ஆற்றினார்கள். புதிய ஏகாதிபத்திய யுத்தத்தைத் தடுக்கும்படியும், ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் யூனியனைத் தாக்குவதற்கு விடாதிருக்கும்படியும் காங்கிரஸ் உலக மக்களை வேண்டிக்கொண்டது. காங்கிரசில் கலந்து கொண்டவர்களில் கட்சிச் சார்பற்ற தொழிலாளர்களும் சமூக-ஜனநாயகவாதிகளும் முற்போக்கு அறிவுஜீவிப் பிரதிநிதிகளும் இருந்தார்கள். இந்தச் சக்திகளை பாசிஸத்துக்கும் யுத்தத்

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 975.

துக்கும் எதிராக ஒன்று திரட்டுவதற்குக் காங்கிரஸ் உதவியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளுடைய முக்கியப் பணிகள் பின்வருவன என்று செயற்குழுவின் பன்னிரண்டாவது முழுக் கூட்டம் வரையறுத்தது: 1) மூலதனத்தின் தாக்குதலுக்கு எதிராகவும் 2) பாசிஸத்துக்கும் பிற்போக்குக்கும் எதிராகவும் 3) அணுகிவரும் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் சோவியத் யூனியனில் தலையீட்டுக்கும் எதிராகவும் திட்டமான போராட்டம் நடத்துவது.[1]

பாசிஸத்துக்கும் பிற்போக்குக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தின் பொருட்டு வெகுஜனங்களை அணி திரட்டுவதற்கு வேண்டிய பல திட்டமான பணிகளை வரையறுத்த செயற்குழுவின் பன்னிரண்டாவது முழுக் கூட்டம், அதே சமயம் முந்திய முழுக் கூட்டத்தின் ஒருதலைச் சார்பான சில தீர்மானங்களை நடப்பில் வைத்துக் கொண்டது, சிலவற்றை மேலும் கூர்மையாக்கிற்று. பன்னிரண்டாவது முழுக் கூட்டம் புரட்சி ஏற்றம் பக்குவம் அடைந்த அளவை மிகையாக மதிப்பிட்டது. உண்மையிலோ, ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கமும் பாசிஸமும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் அதிக விரைவாகத் தங்கள் சக்திகளை அணிதிரட்டின.

ஜெர்மனியில் பாசிஸத்தின் வளர்ச்சியை அந்த நாட்டுக்கு இயல்பான முக்கிய நிகழ்முறை என்று மதிப்பிடுவது தவறு என்றும், ஜெர்மனியில் நடக்கும் முக்கியமான நிகழ்முறை, ஜெர்மானியப் பொருளாதாரம் தகர்ந்து சரிவதும், முரண்பாடுகள் கூர்மை அடைவதும், கம்யூனிஸச் சக்திகள் வளர்வதுமே என்றும், இவற்றோடுகூடவே புரட்சியுடன் போராடுவதற்கு பூர்ஷ்வா வர்க்கத்தின் சக்திகளது குவியல் என்ற முறையில் பாசிஸத்தின் வளர்ச்சியும் நிகழ்கிறது என்றும் முழுக் கூட்டத்தில் கூறப்பட்டது.[2] பாசிஸ்டு சர்வாதிகாரம் என்ற கோஷத்துக்கு எதிராக சோவியத் சோஷலிஸ்டு ஜெர்மனி என்னும் கோஷத்தை வைக்கும்படி ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. பூர்ஷ்வா வர்க்கத்தின் பிரதான சமுதாய ஆதாரத் தூண் என்ற முறையில் சமூக-ஜனநாயகத்தை முதன்மையாகத் தாக்கும்படி முழுக் கூட்டம் மீண்டும் கூறியது. அனேக நாடுகளில் பாசிஸம் ஆட்சி

[1] கம்யூனிஸ்டு அகிலம் தஸ்தாவேஜுகளில், பக்கம் 979.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் 12 வது முழுக் கூட்டம். சுருக்கெழுத்து விவரம், பாகம் II, பக்கம் 69.

அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்று கொண்டிருந்த நிலைமைகளில் பாசிஸத்துக்கு எதிராக எல்லாச் சக்திகளையும் ஒன்று சேர்ப்பது அவசியமாய் இருந்தது. முழுக் கூட்டத்தின் இந்த ஆணைக் குறிப்புக்கள் அதற்குப் பொருத்தமாய் இல்லை.

ஜெர்மனியில்
ஹிட்லர் குழுவினர்
ஆட்சிக்கு வருகிறார்கள்.
பாசிஸ்டு விரோதிகளை
ஒன்றுபடுத்தும் முயற்சியில்
கம்யூனிஸ்டு அகிலத்தின்
முக்கிய நடவடிக்கைகள்

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பன்னிரண்டாவது முழுக் கூட்டம் நிறைவுற்ற சிறிது காலத்திற்குள் நடந்த நிகழ்ச்சிகள் பாசிஸம் எவ்வளவு அச்சுறுத்தும் சக்தி ஆகிவிட்டது என்பதைக் காட்டின. ஜெர்மனியில் நிகழ்ச்சிகளின் போக்கில் சிறப்பாகக் கலவரமூட்டும் திருப்பம் ஏற்பட்டது. ஹிட்லர் குழுவினரின் இயக்கம் ஓரளவு தணியத் தொடங்கி, கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு தொடர்ந்து வளர்ந்து வந்த சமயத்தில் நிதி மூலதனத்தின் மிகவும் பிற்போக்கான வட்டாரங்கள் பாசிஸ்டுகளை ஆட்சிக்குக் கொண்டுவர முடிவு செய்தன. 1932, ஜனவரி 27ந் தேதியன்றே ''கடவுளர் சபை''—ஏகபோக மூலதனம், சைனியவாதிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் 300 பிரதிநிதிகள்—முன் ஹிட்லர் உரை ஆற்றினுன். அவர்கள் அவனுடைய செயல்திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தார்கள்.

1933, ஜனவரி 30ந் தேதி, ஏகபோக முதலாளிகள் ஹிட்லரை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினுர்கள். அந்த நாட்களில் பாசிஸத்துக்கு எதிராகப் பொது வேலைநிறுத்தத்துக்கு உழைப்பாளிகளைத் தூண்டி எழுப்ப ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகள் பெரு முயற்சி செய்தார்கள். ஆனல் ஜெர்மானிய சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்கள் ''அமைதியும் நிதான புத்தியும்'' கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். சட்டபூர்வமான போராட்ட முறைகளையும் தேர்தல்களின் வலிமையையும் அவர்கள் குருட்டுத்தனமாக நம்பிக் கொண்டிருந்தார்கள். பாசிஸ்டுகளோ, வெகு காலமாகவே பயங்கர முறைகளைக் கையாளத் தொடங்கிவிட்

டார்கள். ஹிட்லர் ஆட்சிக்கு வந்த பின்பும், கணிசமான வெகு ஜனங்களின் ஆதரவைப் பெற்றிருந்த ஜெர்மானிய சமூக-ஜன நாயகக் கட்சியின் தலைவர்கள் பொது வேலைநிறுத்தத்துக்கு ஏற் பாடு செய்வதற்கான கம்யூனிஸ்டுகளின் முயற்சிகளை முறித்து விட்டார்கள். வேலைநிறுத்தங்களைக் கையாள்வதற்கு "சற்று தாமதிக்கும்படி செயல்தந்திர நிதான புத்தி வற்புறுத்துகிறது"[1] என்று சமூக-ஜனநாயகப் பத்திரிகையான "ஃபோர்வார்ட்ஸ்" எழுதியது. ஜெர்மானிய சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்கள் ஹிட்லர் அரசாங்கத்தின் "சட்டபூர்வமான இயல்பு" பற்றி வாய் ஓயாமல் பேசினார்கள். அதற்கு எதிராக வாக்குச் சீட்டுகள் மூலம் போராடும்படி அவர்கள் வேண்டிக் கொண்டார்கள். அதே சமயம் பாசிஸ்டுகள் முன்னணித் தொழிலாளர்களுக்கு எதிராகப் பயங்கர முறைத் தாக்குதல் நடத்தினார்கள். பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒத்துழைக்கும் வலதுசாரி சோஷலிஸ்டுக் கொள்கையின் விளை வாகத் தொழிலாளி வர்க்கத்தில் ஏற்பட்டிருந்த ஆழ்ந்த பிளவு, வரலாற்றின் இந்த நிர்ணயகரமான தருணத்தில் ஜெர்மானிய உழைப்பாளிகள் தங்கள் மிகக் கொடிய பகைவர்களை எதிர்த்துத் தாக்க முடியாமல் போனதற்குரிய காரணங்களில் ஒன்றாகும்.

ஹிட்லர் குழுவினர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஜெர்மனியின் வரலாற்றில் மிக மிகத் துயரம் நிறைந்த ஓர் அத்தியாயம் தொடங் கியது. ஜெர்மனி உலகப் பிற்போக்கின் மையமாக, தூக்கு மேடை களும் தண்டனை முகாம்களும் நிறைந்த நாடாக, புரட்சிக்காரர் களையும் ஜனநாயகவாதிகளையும் இரத்தப் பழிவாங்குவதும் எல்லா வித சுதந்தரச் சிந்தனைகளையும் கொடுமையாக ஒடுக்குவதும் தாண்டவமாடிய நாடாக மாறிவிட்டது. பிற மக்களினங்களை அடிமைப்படுத்துவது அல்லது கொன்று ஒழிப்பது, "ஜெர்மன் இனத்தின்" உலக ஆதிபத்தியத்தை நிலைநாட்டுவது என்ற, வெறி பிடித்த, மனித வெறுப்பு நிறைந்த திட்டங்கள் ஜெர்மனியின் வெளிநாட்டுக் கொள்கை ஆகிவிட்டன என்பதையும் பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தது குறித்தது. ஐரோப்பாவில் யுத்தத்தின் பிரதான விளைநிலம் உருவாகிவிட்டது. ஹிட்லரின் "சர்வாதிபத்திய அரசில்", அரசு-ஏகபோக நிறுவனத்தின் மிகக் கொடிய இந்த வடிவில், புத்தம் புதிய முதலாளித்துவத்தின் பிற்போக்குள்ள இயல்புகள் மிகத் தெளிவாக வெளிப்பட்டன. பொருளாதாரம் நிதி

[1] „Vorwärts", 31. I. 1933.

மூலதனத்தின் நலன்களுக்கு முழுமையாக அடிப்படுத்தப்பட்டது, எல்லா விதமான, மிக மிக அற்ப எதிர்ப்பும் இரக்கமின்றி நசுக்கப் பட்டது, அரசு இயந்திரமும் பொருளாதார நிர்வாக இயந்திரமும் பெரிய யுத்தத்துக்கான முன்னேற்பாடுகளை விரைவுபடுத்தும் திட்டங்களுக்கு அடிப்படுத்தப்பட்டது ஆகியவை இந்த இயல்பு கள்.

ஹிட்லர் குழுவினரின் வெற்றி உலகின் மிக மிகப் பிற்போக் குள்ள சக்திகளைத் தூண்டிவிட்டது. பிற நாடுகளில் பாசிஸத் தாக் குதலின் புதிய அலையை எழுப்பியது.

பாசிஸமயமாக்குவதையும் பாசிஸத்தையும் முக்கியப் பாதை யாக பூர்ஷ்வா வர்க்கம் எல்லா நாடுகளிலும் தெரிந்தெடுக்கவில்லை என்பது உண்மையே. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பூர்ஷ்வா வர்க் கத்தின் அதிகத் தொலைநோக்குள்ள வட்டாரங்கள், நாட்டில் சமுதாய இறுக்கத்தைத் தளர்த்தும் பொருட்டு அரசு-ஏகபோக ஒழுங்குமுறையை வலுப்படுத்த முயன்றன. ரூஸ்வெல்ட் அரசாங் கத்தின் ''புது ஏற்பாடு'' என்னும் சமுதாய பொருளாதாரத் திட்டத்தில் இந்தப் போக்கு வெளிப்பட்டது. வேலையின்மையை ஒழிப்பதற்காக சமூக வேலைகளை விரிவுபடுத்த இது வகை செய் தது, உழைப்பாளிகளுக்குச் சில அம்சங்களில் விட்டுக் கொடுத் தது. ''புது ஏற்பாட்டின்'' நடவடிக்கைகள் இன்றியமையாதவை என்பதைப் பல முதலாளித்துவவாதிகள் ஒப்புக் கொண்டார்கள். ''தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகட்டும்'' என்றார்கள். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நிதி மூலதனச் சிலராட்சி யின் கடைக்கோடிப் பிற்போக்காளர் பகுதி ''புது ஏற்பாட்டை'' எதிர்த்துப் போராட்டம் நடத்தியது. நாட்டில் நிலவிய சமுதாய முரண்பாடுகளை பாசிஸ முறைகளால் தீர்க்கும்படி அது யோசனை கூறியது. சுவீடன், டென்மார்க், வேறு சில நாடுகள் ஆகியவற்றின் ஆளும் வட்டாரங்கள் ''புது ஏற்பாடு'' போன்ற வழியைப் பின் பற்ற முயன்றன. எனினும் மொத்தத்தில் முதலாளித்துவ உலகில் பாசிஸச் சக்திகள் ஒரேயடியாகத் தீவிரம் அடைந்தன.

ஜெர்மனியில் நாஜிகளின் வெற்றிக்குப் பின், ஹிட்லர் குழு வினர் ''ஒரு நாழிகை அரசர்களாக'' மட்டுமே இருப்பார்கள் என்றும் பாசிஸம் முதலாளித்துவத்தின் சிதைவுக்கு வழி வகுக்கும் என்றும் ஜெர்மனியில் புரட்சி இயக்கம் விரைவில் வளர்ந்து பாசிஸ்டு சர்வாதிகாரத்தை ஒழித்து விடும் என்றும் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தொடக்கத்தில் நம்பிக்கை

தெரிவித்தன.[1] ஆனால் இந்த நம்பிக்கை வீணாயிற்று. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியை, சிறப்பாக அதன் ஊழியர்களது நடுக் கருவை பாசிஸ்டுகள் வன்மையாகத் தாக்கினார்கள். நாடாளு மன்றக் கட்டிடத்துக்குச் சூழ்ச்சித் திட்டமிட்டுத் தீவைத்துவிட்டு, ஹிட்லர் குழுவினர் புரட்சிகரத் தொழிலாளர்கள் எல்லோர் மீதும் பயங்கரத் தாக்குதல் நடத்தினார்கள். ஜெர்மானியக் கம்யூ னிஸ்டுக் கட்சித் தலைவர் எ. தேல்மனை அவர்கள் 1933, மார்ச்சு 3ந் தேதி பிடித்துவிட்டார்கள். சில நாட்கள் சென்றதும் பிரபல பல்கேரியப் புரட்சியாளரும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற் குழுவின் மேற்கு ஐரோப்பிய அலுவலகத் தலைவருமான கி. திமீத் ரொவைச் சிறைப்படுத்தினார்கள். ஐரோப்பிய பாசிஸ்டு விரோதத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு அவர் ஜெர்மனியில் தங்கி இருந்தார்.

ஜெர்மனியில் பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தது, பாசிஸ்டுக் கொள்ளைக் கும்பல்கள் வெறித் தாண்டவம் ஆடியது, ஜெர் மானியத் தொழிலாளி வர்க்கத்தின் எல்லா அரசியல், பொருளாதார ஸ்தாபனங்களும் தகர்த்து நொறுக்கப்பட்டது, தொழிலாளி வர்க் கத்தில் பிளவு, ஹிட்லர் குழுவினரின் வெற்றியை எளிதாக்கிய வலது சாரி சமூக-ஜனநாயகத் தலைவர்களின் கொள்கை, இவை எல்லாம் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தை அடியோடு உலுக்கி எடுத்து விட்டன. ஜெர்மானிய நிகழ்ச்சிகள் அபாய எச்சரிக்கை யாக இருந்தன. சர்வதேச அளவில் பாசிஸத்துக்கு எதிரான பாட் டாளி வர்க்க இயக்கத்தையும் சர்வஜனநாயக இயக்கத்தையும் தீவிரப்படுத்துமாறு அவை அறைகூவல் விடுத்தன. பாசிஸத்துக் கும் யுத்தத்துக்கும் எதிராக ஒன்றித்துச் செயல் புரியும் ஆர்வம் பாட்டாளி வர்க்கத்தின் அணிகளிலும் எல்லாத் தொழிலாளர் களிடையிலும் இவற்றால் மூண்டது. தொழிலாளி வர்க்கத்தின் செயல் ஒற்றுமையை ஏற்படுத்துவது நாளுக்கு நாள் தொழிலாளர் இயக்கத்தின் உடனடியான ஜீவாதாரத் தேவை ஆகிக்கொண்டு போயிற்று. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்தையும் ஜனநாயக இயக்கத்தையும் முறியடிக்கக் கங்கணம் பூண்டிருந்த பாசிஸம், தன்னைச் சவக் குழியில் புதைப்பதை நோக்கமாகக் கொண்ட சக்திகளை ஒன்றுபடுவதற்கும் வளர்ச்சி அடைவதற்கும் அதே சமயம் தூண்டிவிட்டது.

---

[1] பார்க்க: ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1933, இதழ் 11, பக்கம் 14.

கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் எல்லா பாசிஸ்டு விரோதிகளேயும் ஒன்று திரட்டவும் பாசிஸ்டுத் தாக்குதலே எதிர்த்து முறியடிக்கவும் உரிய வழிகளே விடாப்பிடியாகத் தேடத் தொடங்கின. 1933, பிப்ரவரி 13ந் தேதியன்று பிரெஞ்சு, ஜெர்மானிய, போலிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சோஷலிஸ்டுத் தொழிலாளர்களுக்குக் கூட்டாக வேண்டுகோள் விடுத்தன. ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் வெல்ல முடியாத ஒன்றித்த கூட்டணியை உருவாக்கும்படி''[1] அவை கேட்டுக் கொண்டன.

சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் ஜெர்மனியின் துன்ப நிலேயை இப்போது கண்ணெதிரே கண்டார்கள். பாசிஸ்டுகளுக்கு எதிராக ஒன்றித்த நடவடிக்கைகளே மேற்கொள்ளும்படி கம்யூனிஸ்டுகள் விடுத்த யோசனேகளுக்கு அவர்களிடையே மேலும் மேலும் அதிக வரவேற்பு கிடைக்கலாயிற்று. கம்யூனிஸ்டுகளுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் இடையே ஒப்பந்தம் பற்றிய கருத்தை நாளுக்கு நாள் அதிகப் பெயர் ஆதரிக்கலாயினர். ஏழு சோஷலிஸ்டுக் கட்சிகளின் மகாநாடு(இதில் நார்வே தொழிலாளர் கட்சி, பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிலாளர் கட்சி, இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சி, பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்க ஒற்றுமைக் கட்சி, ஹாலந்தின் சுயேச்சை சோஷலிஸ்டுக் கட்சி, போலந்தின் சுயேச்சை சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி, ஜெர்மானிய சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சி ஆகியவை பங்கெடுத்துக் கொண்டன) பிப்ரவரி 6ந் தேதி பாரிஸ் நகரில் நடந்தது. கம்யூனிஸ்டு அகிலமும் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலமும் பாசிஸத்துக்கு எதிராக ஒன்றித்த நடவடிக்கைத் திட்டம் வகுக்கும் பொருட்டு இரண்டு அகிலங்களின் மகாநாட்டைக் கூட்ட வேண்டும் என்று இரு அகிலங்களின் தலேவர்களுக்கும் மகாநாடு வேண்டுகோள் விடுத்தது.

இரண்டாவது அகிலத்துக்கும் மூன்ருவது அகிலத்துக்கும் இடையே ''அனுக்கிரமிப்பு உடன்படிக்கை'' ஏற்படுவது அவசியம் என்ற எண்ணம் அனேக ஐரோப்பிய நாடுகளின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுக்குத் தோன்றியது. சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் இந்த முயற்சிகளே இப்போது புறக்கணிக்க முடியவில்லே. 1933, பிப்ரவரி 19ந் தேதியன்று சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் செயற்குழுத் தலேமை அலுவலகம் உலகு அனேத்தின் தொழிலாளர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்தது.

---

[1] "L'Humanité", 13. II. 1933.

பொது பாசிஸ்டு விரோத நடவடிக்கைகளை நோக்கமாகக் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த சோஷலிஸ்டுகள் தயாராயிருப்பதாக இதில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இந்த வேண்டுகோள் தெளிவான போராட்டத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் ஒருவரை ஒருவர் தாக்குவதை நிறுத்த வேண்டும் என்ற யோசனை மட்டுமே கூறப்பட்டிருந்தது. சீர்திருத்தவாத அகிலத்தின் கொள்கையைக் கவர்ச்சியுள்ளது ஆக்கும் பொருட்டு வேண்டுகோளில் ஓரளவு மேடைப் பிரசங்க வாய்வீச்சு கையாளப்பட்டிருந்தது. சோஷலிஸ்டுத் தலைவர்களது யோசனையின் செயலற்ற தன்மையைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சுட்டிக் காட்டின. அவர்களது ஆடம்பர வாய்வீச்சையும் அவை கண்டனம் செய்தன, ஆனால் இது போதவில்லை. பாசிஸ்டு விரோதப் பாட்டாளிகள் நெருக்கமாக இணைவதற்கு வகை செய்யும் ஆக்க நடவடிக்கைகள் வாழ்க்கை நிலைமைகளுக்குத் தேவைப்பட்டன. அத்தகைய ஆக்க நடவடிக்கையைக் கம்யூனிஸ்டு அகிலம் எடுத்துக் கொண்டது.

1933, மார்ச்சு மாதம் 5ந் தேதி, கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. இரு தொழிலாளர் கட்சிகளதும் செயல் ஒற்றுமைக்கான கொள்கைத் திட்டம் என்ற வடிவில் அவற்றின் பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டத்திற்குரிய தெளிவான செயல் திட்டம் இதில் முன்வைக்கப்பட்டிருந்தது. வேண்டுகோளில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஜெர்மானியத் தொழிலாளி வர்க்கத்தைத் தாக்கும் பாசிஸம், உலகப் பிற்போக்கின் எல்லாச் சக்திகளையும் கட்டவிழ்த்து விட்டுவிட்டது. இந்த நிலையில், சமூக-ஜனநாயகத் தொழிலாளி வெகுஜனங்களோடு சேர்ந்து, சமூக-ஜனநாயகக் கட்சிகள் வாயிலாக ஒன்றித்த கூட்டணி ஏற்படுத்துவதற்கு இன்னும் ஒரு முயற்சி செய்யும்படிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறது. பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த கூட்டணியை நிறுவுவது, முதலாளித்துவம், பாசிஸம் ஆகியவற்றின் தாக்குதலை முறியடிக்கும், எல்லா வகையான முதலாளித்துவச் சுரண்டலுக்கும் தவிர்க்க இயலாத முடிவைப் பெரிதும் விரைவுபடுத்தும் என்ற உறுதியான நம்பிக்கையில் கம்யூனிஸ்டு அகிலம் இந்த முயற்சியை எடுத்துக்கொள்

றது''.[1] இன்றியமையாத சந்தர்ப்பங்களில் சீர்திருத்தவாதிகளின் கீழ்ப்படி ஸ்தாபனங்களோடு மட்டுமே கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒப்பந்தம் செய்துகொள்ள முயல வேண்டும் என்று 1932ல் யோசனை கூறிய கம்யூனிஸ்டு அகிலம், கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் சமூக-ஜனநாயகக் கட்சிகளுடையவும் தலைவர்கள் மட்டத்தில் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு இவ்வாறு இப்போது பிரேரணை விடுத்தது.

சமூக-ஜனநாயகக் கட்சிகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் விடுத்த முக்கிய யோசனைகள் பின்வருவன: தொழிலாளர்களின் அரசியல், தொழிற்சங்க, கூட்டுறவு ஸ்தாபனங்கள் மீதும் பிற ஸ்தாபனங்கள் மீதும், தொழிலாளர் பத்திரிகைகள் மீதும், கூட்டங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் வேலைநிறுத்தங்களும் நடத்தும் உரிமை மீதும் பாசிஸத்தினதும் பிற்போக்கினதும் தாக்குதல்களை எதிர்த்து முறியடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யவும் போராட்டம் நடத்தவும் கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் தாமதமின்றி முயற்சி தொடங்குவார்கள்; பாசிஸ்டுக் கொள்ளைக் கூட்டங்களின் ஆயுதத் தாக்குகளை எதிர்ப்பதற்கு அவர்கள் ஏற்பாடுகள் செய்வார்கள், கூட்டுத் தற்காப்புப் படைப் பிரிவுகளை அமைப்பார்கள்; சம்பளக் குறைப்பையும் வேலையில்லாதோருக்கு அளிக்கப்படும் உதவிப் பணத்தில் வெட்டையும் இவை போன்ற பிறவற்றையும் எதிர்த்துக் கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் கூட்டுப் போராட்டத்துக்கு ஆயத்தம் செய்வார்கள். இவ்வாறு, கம்யூனிஸ்டுகளுக்கும் சீர்திருத்தவாதத் தொழிலாளர்களுக்கும் பொதுவான உடனடி பாசிஸ்டு எதிர்ப்புக் கோரிக்கைகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் முதல் இடம் அளித்தது. முந்தியதைக் காட்டிலும் அதிக விரிவான ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கைக்குரிய அடிப்படையை இது நிறுவியது. இந்த நிபந்தனைகளை நடைமுறையில் நிறைவேற்றும் போது, மூலதனத்தினதும் பாசிஸத்தினுடையவும் தாக்குதலுக்கு எதிராகக் கூட்டுப் போராட்டம் நடக்கும் சமயத்தில் சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு எதிராகக் கடுமையான வாதப் பிரதிவாதங்களைக் கைவிடும்படிக் கம்யூனிஸ்டு அகிலம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு யோசனை கூறியது. எனவே, ஒன்றித்த கூட்டணியைச் செயல்படுத்தும் சந்தர்ப்பத்தில் வாதப் பிரதிவாதங்கள் கைவிடப்பட வேண்டும் என்ற சமூக-ஜனநாயகவாதிகளின் யோசனையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

[1] ''பிராவ்தா'', 1933, மார்ச்சு 6.

இது கம்யூனிஸ்டு அகிலத்தின் முக்கியமான நடவடிக்கையாக விளங்கியது. உடனடியான ஜனநாயக, பாசிஸ்டு விரோதப் பணிகள் மீது கவனத்தைத் தீவிரப்படுத்த இது உதவியது. பாசிஸத்தின் எதிர்த் தரப்புக்கு வந்துவிட்ட சமூக-ஜனநாயகவாதிகளுடன் உறவுகளில் ஓரளவு மாறுதலையும் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரத்தின் புரிவில் பிரிவுவாதக் குறுகிய மனப்பான்மையிலிருந்து முன்னேற்றத்தையும் இது குறித்தது.

ஆயினும், முதலில் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் செயலகமும் பின்னர் செயற்குழுவும் இந்த யோசனையை நிராகரித்து விட்டன. கம்யூனிஸ்டு அகிலம் பேச்சுவார்த்தைகளை அகிலங்களின் மட்டத்தில் நடத்த விரும்பாமல் ''தனித்தனி நாடுகளில் பேச்சுவார்த்தைகள் நடத்தும்படி யோசனை கூறியதுடன் நின்றுவிட்டது'' என்றும், இது வெறும் சமயோசித சூழ்ச்சியாக இருக்கலாம் என்றும் இவ்வாறு நிராகரித்ததற்குக் காரணம் கூறப்பட்டது![1] தாங்கள் முதலில் கம்யூனிஸ்டு அகிலம் அனைத்தினுடனும் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் பின்னர் தனித்தனி நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் இடையே ஒப்பந்தங்கள் ஏற்பட வேண்டுமென்றும் விரும்புவதாக வலதுசாரி சோஷலிஸ்டுத் தலைவர்கள் அறிவித்தது, ஒன்றித்த நடவடிக்கை குறித்த சர்வதேச ஒப்பந்தத்தின் எதிரிகள் கூறிய சாக்குப் போக்கு. பிற்காலத்தில் இதே வலதுசாரி சோஷலிஸ்டுத் தலைவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்துடன் ஒன்றித்த கூட்டணி அமைப்பதை நிராகரித்து, முதலில் தனித்தனி நாடுகளில் செயல் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் என்றும் பிறகே சர்வதேச அளவில் ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்குக் காரணம் கூறினார்கள். அவர்கள் முன்னர் விடுத்த அறிக்கை வெறும் கண் துடைப்பே என்பதற்கு இது சான்று பகர்கிறது.

ஒன்றித்த பாசிஸ்டு எதிர்ப்புக் கூட்டணி அமைக்கும் யோசனையைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எந்த சோஷலிஸ்டுக் கட்சிகளுக்கு விடுத்தனவோ அவை அனைத்தும் இந்த யோசனையை வெவ்வேறு காரணங்கள் கூறித் தட்டிக் கழித்து விட்டன.[2] இந்த மறுப்பைப்

---

[1] கம்யூனிஸ்டு அகிலம் ஏழாவது அனைத்து உலகக் காங்கிரசுக்கு முன். மாஸ்கோ, 1935, பக்கம் 41.

[2] பாசிஸ்டு சர்வாதிகாரத்துக்கும் ''கம்யூனிஸ்டு சர்வாதிகாரத்துக்கும்'' எதிராகப் போராடும்படி தொழிற்கட்சியினர் தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி பூர்ஷ்வா ஜனநாயகக் கொள்கைத்

பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாசிஸ்டு விரோத மனப்பான்மை கொண்ட தொழிலாளர்களையும் அவர்களுடைய கூட்டாளிகளையும் பாசிஸத்துக்கு எதிராக ஒன்றுபடுத்துவதற்கான வழிகளைத் தொடர்ந்து தேடினார்கள்.

சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் தலைவர்களுடன் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு பேச்சுவார்த்தைகள் நடத்துவது சாத்தியமா என்பது பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்திலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளிலும் கருத்துப் பரிமாற்றம் தொடங்கியது. செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பெயரால் கி. கோட்வால்டு கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவுக்கு 1933, ஏப்ரல் 7ந் தேதி ஒரு தந்தி அனுப்பினார். கம்யூனிஸ்டு அகிலம் ''கூட்டுப் போராட்டம் பற்றிய பிரச்சினையை விவாதிக்கும் பொருட்டு'' இத்தகைய பேச்சுவார்த்தைகள் நடத்தும் யோசனையை முன்வைக்க வேண்டும் என்று அவர் எழுதினார். ''ஒற்றுமை பற்றிய பிரச்சினை பற்றி நாட்டின் அளவில் ஆலோசனை நடத்துவது நடவாது என்று சோஷலிஸ்டு அகிலத்தின் தலைவர்கள் செய்யும் கடைசி வாதம் இதனால் தகர்ந்துவிடும், கீழ்ப்படியிலிருந்து ஒன்றித்த கூட்டணிக்கான நடவடிக்கைகள் வலுப்படும். இந்த யோசனை ஒன்றித்த கூட்டணியின் எதிர்ப்பாளர்களது சங்கடங்களை அதிகமாக்கும், அவர்களுக்கிடையே கருத்து வேறுபாட்டை எதார்த்தத்தில் தீவிரமாக்கும்.''[1] என்றார் அவர். பிரெஞ்சு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கு எழுதிய கடிதங்களில் இதே கருத்தை வெளியிட்டன. சமூக-ஜனநாயகத் தலைவர்களின்

திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று செக்கோஸ்லோவாக்கியாவில் சமூக-ஜனநாயகக் கட்சிகள் நிபந்தனை விதித்தன. ஒன்றித்த பாசிஸ்டு எதிர்ப்புக் கூட்டணி சர்வதேச அளவில் மட்டுமே செயல்படுத்தப்பட முடியும் என்றார்கள் ஆஸ்திரிய சோஷலிஸ்டுகள். பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியும் பிறவும் இவ்வாறே கூறின. டென்மார்க்குத் தொழிலாளர்களும் அவர்களுடைய ஸ்தாபனங்களும் ''தங்களைப் பயன்படுத்த விடக் கூடாது, இந்தப் புதிய, மோசமாக மறைக்கப்பட்ட பிளவுபடுத்தும் முயற்சியை நிராகரித்துவிட வேண்டும்'' என்று சமூக-ஜனநாயகக் கட்சித் தலைமை அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று டென்மார்க்கு சமூக-ஜனநாயகக் கட்சி தனது பதிலில் கூறியது. பார்க்க: “Právo Lidu”, 26. III. 1933; „Arbeiter-Zeitung“, Wien, 5. IV. 1938; “Social-Demokraten”, 26. III. 1933.

[1] மை. ஆ. கூ., 495/19/248/32.

நிலே, அகிலங்களின் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தும் வாய்ப்புக்கு இடம் தரவில்லே என்று செயற்குழு கருதியது. எனவே இந்த யோசனே பொருத்தம் அற்றது என்று அது எண்ணியது.

ஐரோப்பியத் தொழிலாளர்களின் பாசிஸ்டு எதிர்ப்புக் காங்கிரஸ் நடந்தது, கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களேயும் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களேயும் அருகே கொண்டுவரும் திசையில் முக்கியமான அடிவைப்பாக விளங்கியது. இந்தக் காங்கிரஸ் பாரிஸ் நகரில் பிளேயேல் ஹாலில் 1933, ஜூன் மாதம் நடைபெற்றது. இது கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சியால் கூட்டப்பட்டது. ஐரோப்பாவின் முப்பது லட்சத்துக்கும் மேற்பட்ட உழைப்பாளிகளே—கம்யூனிஸ்டுகள், சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களின் ஒரு பகுதியினர், பாசிஸ்டுவிரோத முற்போக்கு அறிவுஜீவிகள் ஆகியோரை இது பிரதிநிதித்துவப்படுத்தியது. பாசிஸத்துக்கும் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் எதிராகவும் உழைப்பாளிகளின் ஜனநாயக உரிமைகளேயும் பொருளாதாரக் கோரிக்கைகளேயும் ஆதரித்தும் போராடுவதற்கேற்ற விரிவான செயல்திட்டத்தைக் காங்கிரஸ் முன்வைத்தது. பாசிஸத்தைக் கவிழ்ப்பதற்காகவும் மக்களின் புதிய ஏகாதிபத்தியப் படுகொலே நேராது தடுப்பதற்காகவும் போராட்டத்தில் ஒத்துழைக்கத் தயாராயிருக்கும் பாசிஸ்டு விரோதிகள் அனேவரையும், அவர்கள் எந்தக் கட்சி, தொழிற்சங்கம், மதம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாயினும் சரி, ஒன்றுசேர்த்து மிக மிக விரிவான, போராட்ட ஊக்கமுள்ள ஒன்றித்த கூட்டணி அமைக்கும் கருத்து காங்கிரசின் முக்கிய நோக்கமாக இருந்தது.[1] காங்கிரசின் தஸ்தாவேஜுகளில் ஒரு சில சூத்திர வாக்கியங்களில் பிரிவுவாதச் சாயல் இருந்தது என்ருலும், மொத்தத்தில் இது பாசிஸ்டு விரோதிப் பாட்டாளிகள் அனேவரும் ஏற்கக் கூடிய செயல்திட்டமாக விளங்கியது. ப. தளியாத்தி பிற்காலத்தில் எழுதினுர்: ''...காங்கிரசின் போது பிளேயேல் ஹாலில் ஓர் இயக்கம் தொடங்கியது. எந்தக் கட்சியுடனும் தொடர்பு இல்லாத இந்த இயக்கம், குறைந்தபட்சம் ஒரு நாட்டில், அதாவது பிரான்சில், சமூக-ஜனநாயகக் கட்சிகளுடையவும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களுடையவும் தொழிலாளர்களும் கீழ்ப்படி ஊழியர்களும் கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களுடனும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலேமை அலுவலர்களுடனும் நெருங்கிய உறவு

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1933, இதழ்கள் 19-20, பக்கம் 99.

கொள்ளத் தொடங்குவதற்கு ஏற்ற அடிப்படையை நிறுவியது.''[1]

காங்கிரசால் அமைக்கப்பட்ட பாசிஸ்டு எதிர்ப்பு மத்தியக் கமிட்டி, பல பாசிஸ்டு எதிர்ப்புக் கிளர்ச்சி இயக்கங்களை நடத்துவதற்கு முன்முயற்சி எடுத்துக் கொண்டது. துறைமுகங்களில் ஜெர்மானியக் கப்பல்கள் பகிஷ்காரம் செய்யப்படுவதற்காகவும் ஜெர்மானிய அரசாங்க தூதரகங்களுக்கும் கான்சலகங்களுக்கும் முன்னே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்காகவும், பாசிஸ்டுத் திரைப்படங்களைப் பகிஷ்கரிப்பதற்காகவும் விரிவான பாசிஸ்டு எதிர்ப்புக் கிளர்ச்சியை அது நடத்தி வைத்தது. ஜெர் மனிக்கு பாசிஸ்டு எதிர்ப்பு நூல்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தது.

பாசிஸ்டு எதிர்ப்பு மத்தியக் கமிட்டியும் 1932ல் ஆம்ஸ்டர் டாம் காங்கிரசில் நிறுவப்பட்ட அனைத்துலக சமாதானப் போராட்டக் கமிட்டியும் 1933, ஆகஸ்டு மாதம் ஒன்றிணைந்தன. யுத்தத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிரான அனைத்துலகக் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த இயக்கம், ஆம்ஸ்டர்டாம்-பிளையேல் இயக்கம் என்ற பெயரால் பிரபலம் ஆயிற்று. ஜெர்மானிய பாசிஸத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை அம்பலப்படுத்துவதிலும், பாசிஸ ஆபத்தை எதிர்த்துப் போராடுவதற்கு ஐரோப்பாவின் உழைப்பாளர்களை அணி திரட்டுவதிலும், மற்ற பாசிஸ்டு எதிர்ப்புச் சக்திகளுடன் பாட்டாளிகளுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதிலும் இந்த இயக்கம் முக்கியப் பங்கு ஆற்றியது.

லைப்ஸிக் வழக்கு நடவடிக்கையில் (1933) சிறந்த புரட்சியாளர் கி. திமீத்ரொவையும் குற்றம் சாட்டப்பட்ட மற்றக் கம்யூனிஸ்டுகளையும் காப்பதற்காக நடத்தப்பட்ட சர்வதேசக் கிளர்ச்சி இயக்கமும் கி. திமீத்ரொவின் சொற்பொழிவும் பாசிஸ்டு விரோதிகளை ஒன்றுபடுத்துவதற்கு அடுத்த வலிய தூண்டுதலாக விளங்கின. இந்த வழக்கை ஏற்பாடு செய்த ஹிட்லர் குழுவினர், நாட்டில் உள் நாட்டுப் போருக்குக் கம்யூனிஸ்டுகள் ஏற்பாடு செய்தார்கள் என்றும் ஜெர்மன் நாடாளுமன்றக் கட்டிடத்துக்கு அவர்களே தீ வைத்தார்கள் என்றும் ''நிரூபிக்க'' எண்ணினார்கள். தாங்கள் கம்யூனிஸ்டுகளுடன் மிகச் சிறந்த முறையில் போராடுவதாகப் பிற முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வட்டாரங்களுக்குக் காட்ட

---

1 ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ்கள் 20-21, பக்கம் 49.

நாஜிகள் திட்டமிட்டார்கள். கி. திமீத்ரொவ் லேப்ஸிக் வழக்கில் வீரத்துடன் உரையாற்றினர். பாசிஸத்தின் மிருகத்தனத்தையும் பயங்கரவாதக் கொள்கையையும் அவர் விளாசினர். கம்யூனிஸ்டுக் கட்சியை இரத்தப் பழி வாங்கும் நோக்கத்துடனும் நாட்டில் பயங்கர முறைகளும் படுகொலைகளும் நிறைந்த ஆட்சியை நிறுவும் நோக்கத்துடனும் ஹிட்லர் குழுவினர் நாடாளுமன்றத்துக்கு நெருப்பு வைக்க ஏற்பாடு செய்தார்கள் என்று நம்பிக்கையூட்டும் விதத்தில் நிரூபித்தார். பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர் நடந்து கொள்வதற்கான ஆதர்சத்தை திமீத்ரொவ் உலகனைத்துக்கும் காட்டினர். ''குற்றம் சாட்டப்பட்ட கம்யூனிஸ்டு என்ற முறையில் நான் என்னைக் காத்துக்கொள்ள வாதிக்கிறேன்'' என்றூர் அவர். ''என்னுடைய சொந்தக் கம்யூனிஸ்டுப் புரட்சியாளனுக்குரிய தன்மானத்தைக் காத்து நான் வாதாடுகிறேன். என்னுடைய கருத்துக்களை, என் கம்யூனிஸ்டு நம்பிக்கைகளைக் காத்து நான் வாதிக்கிறேன். என் வாழ்க்கையின் பொருளையும் உள்ளடக்கத்தையும் காத்து நான் வாதாடுகிறேன்.''[1]

பொதுப் பகைவனை பாசிஸத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம், உழைப்பாளிகள், ஜனநாயகவாதிகள், பாசிஸ்டு விரோதிகள் அனைவருடைய சக்திகளையும் ஒன்று திரட்டும்படிக் கம்யூனிஸ்டு விடுத்த அறைகூவல் பாசிஸ்டு விசாரணை மன்றத்திலிருந்து உலகு அனைத்திலும் சென்று ஒலித்தது. பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் கொள்கை சம்பந்தமாகச் சில முக்கியமான கருத்துக்களை கி. திமீத்ரொவ் வழக்கு விசாரணையின் போது ஆற்றிய உரைகளில் வெளியிட்டார். பாசிஸத்துடன் போராட்டத்தில் வெற்றியின் பொருட்டு சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுடனும் பிற தொழிலாளர்களுடனும் ஒன்றித்த கூட்டணி அமைத்துக் கொள்வதன் இன்றியமையாமையை அவர் வலியுறுத்தினர். பாசிஸ்டுச் சிறைக்கூடத்தினரின் விலங்குப் பிடிகளிலிருந்து விடுபட்ட பிறகு ஓர் உரையாடலின் போது, தாம் ''வழக்கு விசாரணையின்போது கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களையும் கம்யூனிஸ்டுக் கட்சியையும் மட்டும் அல்ல, சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களையும் ஓர் அளவுக்கு சமூக-ஜனநாயகக் கட்சியையும் காத்து வாதித்ததாக'' கி. திமீத்ரொவ் கூறினர். ''நான் இப்படிச்

---

[1] கி. திமீத்ரொவ். லேப்ஸிக் வழக்கு. சொற்பொழிவுகள், கடிதங்கள், தஸ்தாவேஜுகள். மாஸ்கோ, 1961, பக்கம் 167.

செய்தது, இது அரசியல் நோக்கில் சரியானது என்பதால்தான்'' என்றார் அவர்.[1]

எல்லா பாசிஸ்டு விரோதிகளையும் ஒன்றுபடுத்த அதிகத்திலும் அதிகமான அளவில் உதவும் போராட்ட வடிவங்களைக் கம்யூனிஸ்டுகள் கையாள்வது முன் எப்போதையும் விட இப்போது அவசியம் என்ற கருத்து திமீத்ரொவின் சொற்பொழிவுகளில் விடாப்பிடியாக வலியுறுத்தப்பட்டது. வழக்கு விசாரணையில் கி. திமீத்ரொவ் ஹிட்லர் குழுவினரின் தாக்குதல்களிலிருந்து பல்கேரிய நாட்டினத்தின் நலன்களைக் காத்து வாதிட்டார். கம்யூனிஸ்டுகள் பாசிஸத்துடன் போராடுகையில் அனைத்து நாட்டினக் கோரிக்கைகளின் பாதுகாப்புக் கொடியைத் தங்கள் கைகளில் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்பதற்கு உதாரணம் காட்டினார்.

லைப்ஸிக் வழக்கு விசாரணையின் போது ஹிட்லர் குழுவினரின் குற்றச் செயல்கள் அம்பலப்படுத்தப்பட்டது உலகம் முழுவதிலும் பாசிஸ்டு எதிர்ப்புச் சக்திகளைச் செயலுக்குத் தூண்ட உதவியது. திமீத்ரொவையும் குற்றம் சாட்டப்பட்ட பிறரையும் காப்பதற்கான வெகுஜன இயக்கம் உண்மையில் சர்வதேச நடவடிக்கையாக மாறிவிட்டது. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் ஹிட்லர் குழுவின் பயங்கர நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கூட்டங்களும் வெகுஜனப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் பேரலையாகப் பரவின. 1933, டிசம்பரில், லைப்ஸிக் பாசிஸ்டு விசாரணை மன்றம் தண்டனைத் தீர்ப்பைத் தயாரித்துக்கொண்டிருக்கையில் பாரிஸ் நகரின் தொழிலாளர் வட்டாரங்களில் ஒரே நாளில் இருபது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் நடந்தன.[2] இந்த இயக்கத்தில் கம்யூனிஸ்டுத் தொழிலாளர்கள் மட்டும் இன்றி சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களும் சீர்திருத்தவாத, கிறிஸ்தவத் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களும், முற்போக்கு அறிவுஜீவிகளும் கலந்து கொண்டார்கள். அறிவுஜீவிகளின் கணிசமான சக்திகள் பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டத்தில் செயலூக்கத்துடன் முதன்முறையாகப் பங்கு கொண்டன. ஹிட்லர் குழுவினரின் பேய்த்தனமான கொடுஞ் செயல்களைப் பற்றிய உண்

---

[1] மேற்கோள் ''சமாதானம், சோஷலிஸம் பற்றிய பிரச்சினைகள்,'' 1958, இதழ் 4, பக்கம் 64ல் உள்ளபடி.

[2] „Rundschau", 1933, N 49, S. 1875.

மையைப் பரப்புவதில் இந்த அறிவுஜீவிகள் பெருத்த தொண்டு ஆற்றினார்கள்.

குற்றமற்ற கம்யூனிஸ்டுகளைக் காப்பதற்கான இயக்கத்தில் தான், சடங்கு முறைப்படி உடன்படிக்கை நிறைவேறவில்லை என்றாலும், உலக அளவில் ஒன்றித்த கூட்டணி உருவாயிற்று என்று கி. திமீத்ரொவ் பின்னர் கூறினார். ''கம்யூனிஸ்டுகளும், சமூக-ஜன நாயகவாதிகளும், அராஜகவாதிகளும் கட்சிச் சார்பு அற்றவர்களும் எல்லோருமே ஜெர்மானிய பாசிஸத்தை எதிர்த்தார்கள். லைப்ஸிகில் நடந்த போராட்டத்தைக் கோடானுகோடித் தொழிலாளி ஆடவரும் பெண்டிரும் நாள் தோறும் கவனித்துவந்தார்கள். கோடானுகோடிக் குட்டி பூர்ஷ்வாக்களும் விவசாயிகளும் அறிவுஜீவிகளும் ஒன்றித்த பாசிஸ்டு விரோதக் கூட்டணியின் தரப்பில் இருந்தார்கள்''.[1]

சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்டுகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டது, பாசிஸத்துடன் புரட்சிப் போராட்டம் நடத்த வேண்டும் என்று கோரிய இடதுசாரிப் போக்குகள் சீர்திருத்தவாதக் கட்சிகளில் வலுவடைந்ததன் மூலம் நாளுக்கு நாள் மேலும் தெளிவாகப் புலப்பட்டது. 1933, ஆகஸ்டில் பாரிஸ் நகரில் நடந்த சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் மகாநாடு, சோஷலிஸ்டுக் கட்சிகளின் புதிய நிகழ்முறைகளைப் பிரதிபலித்தது. தங்கள் கட்சிகள் மீது வெகுஜனங்கள் கொண்டிருந்த நம்பிக்கை ஆட்டங்கண்டுவிட்டதை உணர்ந்த வலதுசாரி சோஷலிஸ்டுத் தலைவர்கள், இந்த நம்பிக்கையை மறுபடி நிலைநாட்டும் பொருட்டு, சமூக-ஜனநாயகம் பாசிஸத்துக்கு எதிராக உறுதியுடன் போராடுகிறது என்று காட்ட முயன்றார்கள். அதே சமயம், வலதுசாரித் தலைவர்களின் பேச்சுக்கள் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் அவற்றின் ஒன்றித்த கூட்டணிக் கொள்கையையும் பற்றிய அவதூறுகளால் நிறைந்திருந்தன. கம்யூனிஸ்டுகளுடன் எல்லா விதமான ஒன்றித்த நடவடிக்கைகளும் அறவே நிராகரிக்கப்பட்டன. மகாநாட்டில் பேசுகையில் ஃபி. ஆட்லர், ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிப் பின்வருமாறு கூறினார்: ''மாஸ்கோவால் நடத்தப்படும் ஒன்றித்த கூட்டணி பற்றிய எந்தச் சூழ்ச்சி நடவடிக்கை

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ்கள் 20-21, பக்கம் 13.

யையும், எந்த வடிவத்திலாயினும் சரி, இதுவரை எதிர்த்து வந்தது போலவே முழு வலிமையுடனும் எதிர்ப்போம்''.[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஒன்றித்த நடவடிக்கைகள் பற்றி 1933, மார்ச்சு 5ந் தேதி விடுத்த யோசனை தள்ளிவிடப்பட்டது. இந்தக் கொள்கை பாசிஸ்டு எதிர்ப்புச் சக்திகளின் பிளவை நிலையாக வைத்திருந்தது, எதார்த்தத்தில் பாசிஸ்டுகளுக்குச் சாதகமாய் இருந்தது.

ஆயினும் மகாநாட்டில் இடது சாரிப் போக்கு தன்னைத் துலக்கமாகக் காட்டிக் கொண்டது. பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த ழிரோம்ஸ்கி குழு, கம்யூனிஸ்டுக் கட்சிகளுடன் செயலொற்றுமை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆதரவாயிருந்த இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சித் தலைமை, ஸ்பெயினையும் பெல்ஜியத்தையும் சேர்ந்த இளைஞர் சோஷலிஸ்டு நிறுவனங்கள், ஆஸ்திரிய சோஷலிஸ்டுக் கட்சியின் இடதுசாரி முதலியன இந்தப் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தின. சமூக-ஜனநாயகக் கொள்கைத் திட்டத்தைக் கைவிடாமல் இந்தக் குழுக்கள் பாசிஸத்துக்கு எதிராகச் செயல்முறை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகக் கம்யூனிஸ்டுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு கோரின. சமூக-ஜனநாயகத்தின் கீழ்ப்படிகளில் பாசிஸத்துக்கு எதிராகக் கம்யூனிஸ்டுகளுடன் ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ளும் ஆர்வம் வளரத் தொடங்கியிருந்ததை இடதுசாரியினரின் பேச்சுக்கள் காட்டின.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதின்மூன்றுவது முழுக் கூட்டம் 1933, நவம்பர்—டிசம்பரில் நடந்தது. பாசிஸத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்துக்கு சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தை அணிதிரட்டுவது பற்றிய பிரச்சினைகள் இதில் விவாதிக்கப்பட்டன.

மிகப் பெரிய அபாயம் என்ற முறையில் பாசிஸத்தின் மீது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கவனத்தை முழுக் கூட்டம் ஒருமுனைப் படுத்தியது. பாசிஸம் பின்வருமாறு விளக்கப்பட்டது: நிதி மூலதனத்தின் கடைக்கோடிப் பிற்போக்கும் கடைக்கோடி இனவெறியும் கடைக்கோடி ஏகாதிபத்தியத் தன்மையும் கொண்ட பகுதிகளின் பகிரங்கமான பயங்கரவாத சர்வாதிகாரம் இது[2]. முன்னேறிய

[1] „Populaire", 22. VIII. 1933.

[2] பார்க்க: கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது 13வது முழுக் கூட்டம். சுருக்கெழுத்து விவரம். மாஸ்கோ, 1934, பக்கம் 589.

முதலாளித்துவ நாடுகளில் பாசிஸத்தின் உண்மையான வர்க்க இயல்பை இந்த விளக்கம் தெளிவுபடுத்தியது. அதே சமயம் முழுக் கூட்டம் பின்வருவதையும் வலியுறுத்தியது: ''பாசிஸம் ஏகபோக முதலாளித்துவத்துக்குக் குட்டி பூர்ஷ்வாக்களிடையே வெகுஜன அடித்தளம் ஏற்படுத்த முயல்கிறது. இதன் பொருட்டு, பழக்கமான வாழ்க்கைத் தடத்திலிருந்து விலகிய விவசாயிகளுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் சிற்றதிகாரிகளுக்கும், சிறப்பாகப் பெரிய நகரங்களில் உள்ள வர்க்கத் தன்மை இழந்த நபர்களுக்கும் அது வேண்டுகோள் விடுக்கிறது. தொழிலாளி வர்க்கத்தில் கூடப் புகுவதற்கு அது முயற்சி செய்கிறது.''[1] முழுக் கூட்டத்தின் முடிவுகள் பாசிஸ்டு விரோதக் கொள்கையை முன்னைவிடச் சரியாக வகுக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு உதவின. பாசிஸத்தின் வர்க்க இயல்பு பற்றிய தன்மைச் சித்திரிப்பும், ஏகபோக மூலதனம் நாடாளுமன்ற முறைகளுக்கும் பூர்ஷ்வா ஜனநாயகம் முழுவதற்குமே முடிவு கட்டத் தீர்மானித்து விட்டது என்று முழுக் கூட்டம் சுட்டிக் காட்டியதும் எல்லா பாசிஸ்டு விரோத, ஜனநாயகச் சக்திகளையும் ஒன்றுபடுத்தும் சாத்தியக் கூறு பற்றிய வருங்கால முடிவுகளுக்கு ஆதாரம் அளித்தன. பாசிஸ சர்வாதிகாரம் எல்லா நாடுகளிலும் பூர்ஷ்வா சர்வாதிகாரத்தின் தவிர்க்க முடியாத கட்டமாக விளங்கவில்லை என்று முழுக் கூட்டம் பின்னும் ஒரு முறை வலியுறுத்தியது. பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பது போராடும் பாட்டாளி வர்க்கத்தின் சக்திகளைச் சார்ந்திருக்கிறது என்று அது கூறியது.

பாசிஸத்தின் வீழ்ச்சிக்குப் பின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உடனடியாக, கட்டாயமாக நிறுவப்பட்டு விடாது என்ற கருத்து முழுக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது. பாசிஸத்துக்கு எதிரான போராட்டம் சர்வஜனநாயகத் தன்மை கொண்டிருக்கும், பாசிஸ்டு சர்வாதிகாரம் ஒன்றையே இலக்காகக் கொண்டிருக்கும் என்ற கருத்தின் முளை இந்தக் கூற்றுக்களில் ஏற்கனவே தென்படத் தொடங்கியிருந்தது.

யுத்தத்துக்கு எதிரான போராட்டம் பற்றிய பிரச்சினைகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதின்மூன்றுவது முழுக் கூட்டம் பல அம்சங்களில் புது விதமாக முன்வைத்தது. ஜெர்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது 13வது முழுக் கூட்டம், பக்கம் 589.

மனியில் உள்ள பாசிஸ்டு அரசாங்கம் ஐரோப்பாவில் யுத்த நெருப்பை மூட்டிவிடக் கூடிய முதன்மையான சக்தி என்றும் யுத்த எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கியச் சக்திகள் அதற்கு எதிராகக் குவிக்கப்பட வேண்டும் என்றும் முழுக் கூட்டம் தெளிவாகக் கூறியது. ''யுத்தம் தொடங்குவதற்கு முன், இப்போதே விரிவான வெகுஜனங்களை யுத்தத்துக்கு எதிராக அணி திரட்டும்படியும் அதன் மூலம் முதலாளித்துவத்தினுடைய அழிவை விரைவுபடுத்தும் படியும்''[1] கம்யூனிஸ்டுக் கட்சிகளைப் பணித்ததன் வாயிலாக, பாட்டாளி வர்க்கம் தனது போராட்டத்தால் ''யுத்தத்தைத் தேக்கி நிறுத்தவும் பின்வாங்கச் செய்யவும்'' முடியும் என்ற கோட்பாட்டு ரீதியான முடிவை முழுக் கூட்டம் செய்தது. ஏகாதிபத்திய யுத்தத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பது இயலாது, உண்மையான புரட்சி புதிய ஏகாதிபத்திய யுத்தத்தின் விளைவாகவே தொடங்கும் என்ற விதிவாதக் கண்ணோட்டத்தை எதிர்த்துக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் போராட வேண்டும்[2] என்று அது கூறியது.

பாசிஸத்துக்கு எதிரான ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியின் பொருட்டு முயற்சி செய்வது பற்றி முழுக் கூட்டம் ஆராய்ந்தது. ''சமூக-ஜனநாயகத்தின் துரோகித் தலைவர்களைப் பொருட்படுத்தாமலும் அவர்களுக்கு எதிராகவும் முழுமையான விடா முயற்சியுடன்'' இத்தகைய கூட்டணியின் பொருட்டுப் போராடும் படி அது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அறைகூவல் விடுத்தது.[3]

ஆனால் தனது தீர்மானங்களின் அனேக முக்கிய அம்சங்களில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் முழுக் கூட்டம், உருவாகி இருந்த நிலைமைகளுக்குப் பொருந்தாத கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டது. உதாரணமாக ஜெர்மனியில் ''புதிய புரட்சி ஏற்றம் தொடங்குகிறது''[4] என்று அது கருதியது. பாசிஸத்தின் தாக்குதலை முழுக் கூட்டம் குறைவாக மதிப்பிட்டது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளை உடனடியான சோஷலிஸப் புரட்சிக்கு ஆயத்தம் செய்யும்படி அது பணித்தது. உண்மையிலோ, பெரும்பாலான உழைப்பாளிகளும்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் **13**து முழுக் கூட்டம், பக்கம் **592**.

[2] அதே நூல், பக்கங்கள் ***13, 312***.

[3] அதே நூல், பக்கம் **593**.

[4] அதே நூல், பக்கம் **591**.

பெரும்பாலான பாசிஸ்டு எதிர்ப்பாளர்களும் இந்தப் பணியை உணரும் அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை. பாசிஸத்தின் தாக்குதல் காரணமாக நிலைமைகளில் ஏற்பட்டிருந்த மாறுதலைப் பொருட்படுத்தாமல், பாசிஸ்டு நாடுகள் உட்பட எங்கும் பூர்ஷ்வா வர்க்கத்தின் முக்கியமான சமுதாய ஆதாரத்தூணாக விளங்குவது சமூக-ஜனநாயகம் என்ற மதிப்பீட்டை முழுக் கூட்டம் உறுதிப்படுத்தியது. கீழ்ப்படிகளிலிருந்து ஒன்றித்த செயல்தந்திரம், மேற்படிகளிலிருந்து ஒற்றுமைச் செயல்தந்திரத்துக்கு முன்போலவே திட்டப்படி எதிராக வைக்கப்பட்டது. ஆயினும், பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தின் திட்டமான பணிகள் பற்றி முழுக் கூட்டம் செய்த பல முடிவுகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளில் அவற்றுக்குக் கணிசமாக உதவின.

தேசிய-விடுதலை இயக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்தந்திரம்

உலகப் பொருளாதார நெருக்கடி ஆண்டுகளில் தேசிய-விடுதலை இயக்கத்தின் ஏற்றம் இந்த இயக்கத்தில் கலந்து கொண்ட சக்திகளின் விரைவான செயலூக்கத்துக்குக் காரணம் ஆயிற்று. தேசிய-பூர்ஷ்வாக் கட்சிகள் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டும், உழைப்பாளி வெகுஜனங்களின், சிறப்பாகப் புரட்சிகரத் தொழிலாளர்களின் சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்காதிருக்கும் பொருட்டும் இந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்க முயன்றன. வலதுசாரி தேசிய-பூர்ஷ்வா அரசியல் குழுக்கள் உள்நாட்டு நிலப்பிரபுத்துவச் சக்திகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு இசைந்தன. அடிக்கடி இவை காலனி ஆட்சியாளர்களுக்கு அடிபணியும் போக்கை வெளிக்காட்டின. குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் வழக்கமாக தேசிய-புரட்சி நிலைகளை மேற்கொண்டன. அவை தொழிலாளர்களுடன் சேர்ந்து போராட்டம் நடத்தின. தீவிரமான அரசியல் செயல்திட்டங்களை முன்வைத்தன. ஏகாதிபத்தியவிரோத, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியை நடத்தும் உறுதியான கொள்கைப் போக்கின் சார்பில் இருந்தன.

கம்யூனிஸ்டுக் கட்சிகள், ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் புரட்சிகர-விடுதலைப் போராட்டத்தினது மிக மிக ஒத்திசைந்த சக்தியாக விளங்கின. கம்யூனிஸ்டு அகிலமும் காலனிகளையும் அரைக்காலனிகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தேசிய-விடுதலை இயக்கத்தின் புரட்சிச் சக்திகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பெரிய அளவில் வேலை செய்தன. எங்கும் கம்யூனிஸ்டுகள் புரட்சிகர-விடுதலைப் போராட்டத்தின் முன் அணிகளில் இருந்தார்கள். அதில் தன்னலம் இன்மையையும் வீரத்தையும் காட்டினார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் பெரிய பிரிவாக விளங்கியதும் தேசிய-விடுதலைப் போராட்டத்தின் முக்கியக் களத்தில் இருந்ததுமான

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையில் கம்யூனிஸ்டு அகிலம் தொடர்ந்து தனிப்பட்ட கவனம் செலுத்திவந்தது.

1925—1927ம் ஆண்டுப் புரட்சியில் தோல்வியிலிருந்து கிடைத்த படிப்பினைகளைக் கம்யூனிஸ்டு அகிலம் விரிவாக ஆராய்ந்தது. சென் தூ-ஸியூவின் தலைமையில் அமைந்த வலதுசாரி சந்தர்ப்பவாதப் பிறழ்வை முறியடிப்பதிலும் அரசியல் கொள்கைப் போக்கைத் தீர்மானிப்பதிலும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அது உதவியது. நாட்டில் புரட்சிப் போராட்டத்தை வெற்றிகரமாக விரிவுபடுத்தும் பொருட்டுப் பாட்டாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் நகர ஏழை மக்களையும் ஒன்றிணைக்கும் வேலையை இன்னும் தீவிரப்படுத்தும்படி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அறிவுறுத்தியது. 1929ம் ஆண்டு டிசம்பர் மாதம், செயற்குழு சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்கு ஒரு கடிதம் அனுப்பியது. தற்போது முக்கியமானது, ''வெகுஜனங்கள் மீது செல்வாக்குக்கான போராட்டம்'' என்றும், உருவாகி இருக்கும் நிலைமையை ''சுதந்திரமான புரட்சி இயக்கத்தை மேலும் விரிவாக நடத்துவதற்குப்'' பயன்படுத்துவது இன்றியமையாதது என்றும், கட்சி தொழிற்சங்க இயக்கத்தில் பெருத்த கவனம் செலுத்த வேண்டும், தொழிலாளி வர்க்கத்தில் தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்'', எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கும் எதிராக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்குத்''[1] தலைமை தாங்க முயற்சி செய்யவேண்டும் என்றும் இந்தக் கடிதத்தில் செயற்குழு வலியுறுத்தியது. ஆனால் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு லீ லீ-ஸானுடைய இடதுசாரிப் பிரிவுவாதக் குழு வந்தது. அது கட்சியின்மீது துர்ச்சாகசக் கொள்கைப் போக்கைத் திணிக்க முயன்றது. சீனப் புரட்சி ''உலகப் புரட்சியின் முக்கியத் தூணாக விளங்கும்'' என்றும் சீனாவில் கிளர்ச்சி வெடித்துக் கிளம்பியதும் ஏகாதிபத்தியத்தின் முக்கியச் சக்திகள் போராட்டத்தில் கலந்து கொள்ளும் என்றும் ஜப்பான் சோவியத் யூனியனுக்கு எதிராகத் தலையிடும் என்றும் உலகப் புரட்சி மூளும் என்றும் உள்ள கருத்துக்களின் அடிப்படையில் லீ லீ-ஸானும் அவருடைய ஆதரவாளர்களும் வகுத்த போராட்டத்

---

[1] தேசிய-காலனிப் புரட்சியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்தந்திரம் சீனாவின் உதாரணத்தில். மாஸ்கோ, 1934, பக்கங்கள் 256, 257.

திட்டம் அமைந்திருந்தது.[1] சில மாநிலங்களில் ஆட்சியதிகாரம் தாமதமின்றி வென்று பெறப்பட வேண்டும் என்றும் பெரிய நகரங்களில் ஆயுதந் தாங்கிய கிளர்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்றும் லீ லீ-ஸான் தலைமையால் ஏற்கப்பட்ட தீர்மானங்களில் யோசனை கூறப்பட்டது. அப்போது முதலாவது போர்முனையின் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி முனைமுகக் கமிட்டித் தலைவராக இருந்த மா சே-துங் இந்தப் போக்கைப் பெருமளவு ஆதரித்தார். லீ லீ-ஸான் தலைமைக் குழுவினர் இந்த துர்ச்சாகசக் கணக்கீடுகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தினிடமிருந்து மறைத்தார்கள். வெகுஜனங்களிடையே தங்கள் செல்வாக்கின் அளவு பற்றித் தவறான தகவல்கள் கொடுத்தார்கள். ஆயுதந் தாங்கிய போராட்டத்துக்குப் பாட்டாளி வர்க்கமும் விவசாயிகளும் எந்த அளவு தயாராய் இருக்கிறார்கள் என்பது குறித்தும் அவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்குத் தவறான தகவல்கள் தந்தார்கள். அழிவு விளைக்கும் கொள்கைப் போக்கைக் கைவிடும்படி சீனக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமைக்குக் கம்யூனிஸ்டு அகிலம் யோசனை கூறியது. லீ லீ-ஸானும் அவருடைய தரப்பாளர்களும் கம்யூனிஸ்டு அகிலத்தின் இந்த யோசனைகளைச் சில மாதங்கள் வரை புறக்கணித்தார்கள்.

அந்தக் காலத்தில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியில் தேசியவாதப் போக்குகளும் தலைதூக்க ஆரம்பித்திருந்தன. சீனாவின் ''தேசியத் தனிப்பண்பு'' என்ற சாக்கில் கட்சியின் கொள்கைத் திட்டத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு எதிர் நிறுத்துவதற்கும், கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமையின்பால் அவநம்பிக்கையைக் கட்சியில் பரப்புவதற்கும், வட்டார ஊழியர்களைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் லெனின் பள்ளியில் அல்லது மாஸ்கோவில் இருந்த பிற கல்வி நிலையங்களில் பயின்று திரும்பிய கட்சி ஊழியர்களுக்கு எதிராக வைப்பதற்கும் முயல்வதில் இந்தப் போக்குகள் வெளிப்பட்டன.

லீ லீ-ஸானின் பலாத்கார ஆட்சி மாற்றக் கொள்கைப் போக்கு செயல்படுத்தப்பட்டால், தருணத்துக்கு முந்திய போராட்டங்களில் தோல்வி ஏற்படும் என்ற அபாயம் இருந்தது. இந்தக் கொள்கைப் போக்கு பின்பற்றப்படுவதை இடைமுறிக்கவும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அரசியல் கொள்கையைத் திருத்தவும் கம்யூ

---

[1] ''ஹூங்க்ஸி'' (சீன மொழி), 1930, ஏப்ரல் 12.

னிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் அதன் கிழக்கு நாட்டுச் செயலகமும் ஊக்கத்துடன் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டன. 1930ம் ஆண்டுக் கடைசியில் நடந்த செயற்குழுவின் அரசியல் கமிஷன் கூட்டத்தில் கிழக்கு நாட்டுச் செயலகத்தின் பிரதிநிதி சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இன்றியமையாத கொள்கைப் போக்கின் உள்ளடக்கத்தைப் பின்வருமாறு வரையறுத்தார்: ''செஞ்சேனையால் யாவற்றிலும் அதிகமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள சோவியத் பிரதேசத்தில் சோவியத் அரசாங்கத்தை நிறுவுவது; சோவியத் அரசாங்கம் தனது நிலச் சீர்திருத்த, ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிச் செயல்திட்டத்தை வகுத்து, சூத்திரப்படுத்தி, அதைப் பிரகடனம் செய்து, நிலையான பிரதேச அடித்தளம் இருப்பதைப் பயன்படுத்திக் கொண்டு தனது செயல்திட்டத்தை அமல்படுத்தத் தொடங்கும்; அதன்பின், பிரதேச அடித்தளம் உண்மையில் அமைக்கவும் செஞ்சேனை வலுவாக்கவும் பட்ட பிறகு, சீனுவில் (வழக்கமாக) ஏகாதிபத்தியத்தின் நேரடித் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கும் ஒரு அல்லது அனேகப் பெரிய இயந்திரத் தொழில் மையங்களையும் மொத்தத்தில் பெரிய நகரங்களையும் வசப்படுத்தும் பணியை மேற்கொள்ள வேண்டி இருக்கும்''.[1]

''லீ லீ-ஸான் குழுவினர் பற்றிச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் கடிதம்'' 1930, அக்டோபர் மாதம் அனுப்பப்பட்டது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் துர்ச்சாகசம் நிறைந்த பலாத்கார ஆட்சி மாற்றத் தவறுகளை அது வன்மையாகக் கண்டனம் செய்தது. விவசாயிகள் புரட்சியின் ஏற்றம் இன்னும் எங்கும் நிகழவில்லை என்றும், தெற்குப் பகுதி நீங்கலாக ''விவசாயிகள் இப்போதுதான் போராட்டத்தில் ஈர்க்கப்படுகிறுர்கள்'' என்றும், தொழிலாளர் இயக்கம் இன்னும் மெதுவாகவே வளர்ச்சி அடைந்து வருகிறது என்றும், ''பாட்டாளி வர்க்கம் பலவீனமாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது'' என்றும், ''மிகப் பெரிய தொழில் மையங்களில் சக்திகளின் ஒப்புநிலை ஆயுதமேந்திய கிளர்ச்சிக்குச் சாதகம் அற்றது'' என்றும், சோவியத் பிரதேசங்களிலேயே ''சோவியத் ஆட்சி வலுவாக்கப்படவில்லை'' என்றும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமை ''புரட்சியின் இராணுவ பலத்தைப் பயங்கரமாக மிகைப்படுத்துகிறது'' என்றும், உண்மையில் செஞ்சேனையில் இன்னும் நிறைய

---

[1] மை. ஆ. கூ., *495/19/238/3; 495/19/242/57.*

பலவீனங்கள் இருக்கின்றன, இந்த பலவீனங்கள் இராணுவ-இயந்திரங்கள் விஷயத்திலும் நிலவுகின்றன[1] என்றும் கடிதம் குறிப்பிட்டது. இத்தகைய நிலைமைகளில், நகரங்களை உடனடியாகக் கைப்பற்றும் லீ லீ-ஸான் கொள்கை புரட்சியின் இரத்தப் பெருக்கு நிறைந்த தோல்விகளுக்கு இட்டுச் சென்றது (சான்ஷா கைப்பற்றப் பட்டதும் பின்னர் கைவிடப்பட்டதும் இதைக் காட்டின).

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதினோராவது முழுக் கூட்டம் பின்னர் குறிப்பிட்டது போல, சீன ''இடதுசாரியினர்'' நிலைமையைத் தவருக மதிப்பிட்டார்கள். ''சீனுவில் புரட்சியின் ஏற்றம் தொடங்கி இருப்பதற்கான சில அறிகுறிகளை, சீனுவிலும் உலகம் முழுவதிலும் புரட்சி நிலைமையின் தொடக்கம் என்று விளக்க முயன்றூர்கள். இதிலிருந்து முற்றிலும் தவருன, பலாத்கார ஆட்சிமாற்ற முடிவுகள் செய்தார்கள்.''[2]

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு தன் கடிதத்தில் முன் வைத்த கருத்தின் முழு ஆழத்தையும் முக்கியத்துவத்தையும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை பிற்பாடுதான், வேறு வித நிலைமைகளிலேயே புரிந்து கொண்டது. ''சோவியத் அல்லாத பிர தேசங்களில் விவசாயிகள் இயக்கத்தை விரிவாக நடத்தும்படியும், அங்கே கொரில்லாப் போராட்டத்தை நடத்தும்படியும், பெரியவையும் மிகப் பெரியவையும் உள்ளிட்ட நகரங்களை விவசாயிக் கிளர்ச்சிகளின் வளையத்தால் முற்றுகையிடும்படியும்...''[3] கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு யோசனை கூறியது. அதே சமயம் நகரங்களில் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தையும் தூண்டி நடத்தும்படி அது கூறியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவில் இருந்த சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிக் குழுவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு செயற்குழு லீ லீ-ஸான் குழுவினர் பற்றித் தயாரித்த தீர்மானங்கள், லீ லீ-ஸானும் அவருடைய தரப்பினரும் கடைப்

---

[1] தேசிய-காலனிப் புரட்சியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் சீனுவின் உதாரணத்தில், பக்கங்கள் 284, 285, 286, 287.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் 11வது காங்கிரஸ், பக்கம் 71.

[3] தேசிய-காலனிப் புரட்சியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் சீனுவின் உதாரணத்தில், பக்கம் 289.

பிடித்து வந்த அதிதீவிரப் புரட்சிவாத, குட்டிபூர்ஷ்வா-தேசிய வாதப் போக்கை ஒழிப்பதற்காகச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியில் நலமுள்ள சக்திகள் நடத்திய போராட்டத்துக்கு உறுதியான அடிப்படை அமைத்தன. சோவியத்துக்களுக்காக என்ற கோஷத்துடன் புரட்சிப் போராட்டம் நடக்கும் கட்டத்தில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போர்த்தந்திரத்துக்கும் செயல்தந்திரத்துக்கும் உரிய அஸ்திவாரம் போடப்பட்டது.

சீனாவின் சோவியத்துக்களுடைய, அதாவது புரட்சித் தளங்களின் பிரதேசங்களில் இருந்த தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சி உறுப்புக்களுடைய முதலாவது காங்கிரஸ் **1931**ம் ஆண்டில் கூடியது. காங்கிரஸ் தாற்காலிக மத்திய சோவியத் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தது, நிலம் பற்றிய சட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. சோவியத் பிரதேசங்களின் நிலப் பரப்புக்களில் இருந்த பெரிய தனியுடைமையாளர்களின் நிலங்கள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டு ஏழை விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்கும் வழங்கப்படும் என்று முடிவாயிற்று. நிலம் பற்றிய சட்டம் விவசாயி வெகுஜனங்களைப் புரட்சிப் போராட்டத்தில் ஈடுபடுத்த உதவியது.

சோவியத் மையங்களையும் செஞ்சேனையையும் அமைக்கும் கொள்கைப் போக்கு செயல்தந்திரக் கட்டம் என்ற முறையில் இன்றியமையாததாக இருந்தது. 'இந்தச் செயல் நிகழ்கையில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி தேசிய-விடுதலைப் புரட்சிப் பணிகளை நிறைவேற்ற வல்ல புதிய ஒன்றித்த கூட்டணியை நிறுவுவதற்கான நிலைமைகளை உருவாக்கிற்று. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி சீனா முழுவதையும் சோவியத்மயமாக்கும் கொள்கையை (''சோவியத்துக்கள் தாம் சீனாவைக் காப்பாற்றும்'' என்ற கோஷத்தை) செயல்படுத்தவும் எல்லா இடங்களிலும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும் முயன்றது. அப்போதிருந்த நிலைமைகளில் இது நடக்கக் கூடாததாய் இருந்தது.

ஜப்பான் மஞ்சூரியாவில் படையெடுத்துப் புகுந்த பிறகு (**1931**, செப்டெம்பர்) சீனாவின் பல்வேறு தேசபக்தச் சக்திகளுக்கிடையே ஏகாதிபத்திய அடிமைத்தனத்திலிருந்து நாட்டைக் காக்கும் நோக்கத்துடன் தங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ளும் விருப்பம் தோன்றியது. இதன் தொடர்பாகக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தவும் சீனக் கம்யூனிஸ்டுக்

கட்சியின் கூட்டாளிகளது வட்டத்தை விரிவாக்கவும் அனேக நடவடிக்கைகளை மேற்கொண்டன.

ஆனால் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியை உருவாக்கும் பாதையில் பல தடங்கல்கள் இருந்தன. இவையாவன தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் ஊசலாட்டங்களும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோவியத் பிரதேசங்களுக்கும் எதிராகக் குவோமிந்தானின் ஆயுதப் போராட்டமும். சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இடதுசாரித் தவறுகளும் நிலைமையைப் பாதித்தன. குவோமிந்தானுக்கு உள்ளே இருந்த பல்வேறு குழுக்களுக்கிடையே நிலவிய ஆழ்ந்த முரண்பாடுகளைக் கட்சித் தலைமை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. சீனாவின் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் விரிவான வட்டாரங்களில் இருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்குகளை அது சரிவர மதிப்பிடவில்லை. ''ஷங்காய் நிகழ்ச்சிகள் பற்றிய செய்தியில்'' (1932, ஜனவரி 31),''குவோமிந்தானின் எல்லாக் குழுக்களும் சீன பூர்ஷ்வா வர்க்கம் அனைத்தும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள்'' என்று சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி எழுதியது. ''ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதற்கு ஏகாதிபத்தியத்தின் கைக்கருவியான சீன குவோமிந்தானை வீழ்த்துவது இன்றியமையாதது'' என்பதை உழைப்பாளி வெகுஜனங்கள் ஏற்கெனவே புரிந்து கொண்டு விட்டார்கள் என்று சீனக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமை தவறாக எண்ணியது. உண்மையிலோ, ஜப்பானியத் தலையீட்டாளர்களுக்கு எதிராகப் போராடக் கிளர்ந்து எழுந்த மக்கள் வட்டாரங்கள் பலவற்றிற்குக் குவோமிந்தான் மீது இருந்த நம்பிக்கை இன்னும் அகன்றுவிடவில்லை. இந்த வட்டாரத்தினர் சீனாவில் சோவியத் ஆட்சியின் பொருட்டுப் போராட இன்னும் தயாராய் இல்லை. சீனாவின் நிலைமைகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை விரிவுபடுத்துவதற்கான போராட்டப் பணிகளைப் புறக்கணிப்பது தகாது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அறிவுறுத்தியது. மிக முக்கியமான இந்த அறிவுரை செயலில் கடைப்பிடிக்கப்படவில்லை.

ஆயினும், முப்பதுக்களின் ஆரம்பத்தில் கம்யூனிஸ்டு அகிலம் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இட்ட சில ஆணைகளில் புரட்சி ஏற்றத்தின் தரத்தையும் குவோமிந்தான் ஆட்சியினது நெருக்கடியின் அளவையும் புரட்சிச் சக்திகளின் வாய்ப்புக்களையும் மிகையாக மதிப்பிடும் தன்மைச் சித்திரிப்புக்கள் காணப்பட்டன.

சீனாவில் ''நாடு அனைத்திலும் பரவிய நெருக்கடி'' பற்றிய

எண்ணங்களையும் உடனடியான புரட்சி நிலைமை பற்றிய எண்ணங்களையும் கூட ஆதாரமாகக் கொண்டு கொள்கையை வகுக்கும்படி சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பிரிவுவாத நபர்கள் கோரினார்கள். இது கட்சியின் நடவடிக்கைகளைக் கெடுதலாகப் பாதித்தது. இந்தத் தவறுகளும் இடர்ப்பாடுகளும் இருப்பினும், அந்த ஆண்டுகளில் சீனாவில் சோவியத் இயக்கம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்தும் வளமான அனுபவம் திரட்டியும் வந்தது. வலுவாக்கப்பட்ட சோவியத் பிரதேசங்களை ஆதாரமாகக் கொண்டு செஞ்சேனை 1930-1933ல் சியாங் காய்-ஷேக் படைகளின் நான்கு தண்டனைப் படையெடுப்புக்களை முறியடித்தது. சோவியத் பிரதேசங்கள் நாட்டின் வாழ்க்கையில் மிக முக்கியமான அரசியல் காரணிகள் ஆகிவிட்டன. அவை ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திற்கு அரண்களாக விளங்குவதைச் சீனாவின் முற்போக்குச் சக்திகள் கண்டன.

கம்யூனிஸ்டு அகிலம் பிற ஒடுக்கப்பட்ட நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் பெருத்த உதவி செய்தது. அவற்றின் அரசியல் கொள்கைப் போக்கை வகுப்பதில் அது பங்குகொண்டது. அவற்றின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தது. அவற்றின் போராட்டத்துக்கு அரசியல் நோக்கிலும் பொருள் வகையிலும் உதவியது.

கொரியா, இந்தோசீனம், ஃபிலிப்பைன், வேறு அனேக ஒடுக்கப்பட்ட நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள், அடக்குமுறைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் அஞ்சாமல் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தன்னலமற்ற போராட்டங்கள் நிகழ்த்தினார்கள். மக்கள் ஆயுதமேந்திப் போராடிய இடங்களில் அவர்கள் போராட்டத்தின் முன் வரிசைகளில் இருந்தார்கள். கம்யூனிஸ்டுகள் நகரங்களில் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தினார்கள். பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் துன்புறுத்தப்படுவதை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி இயக்கங்கள் நடத்தினார்கள். உதாரணமாக இந்தியாவில் மீரட் சதி வழக்கு சம்பந்தமாகச் சிறைப்படுத்தப்பட்டிருந்த 33 கைதிகளைக் காக்கும் பொருட்டு அவர்கள் வெகுஜனங்களைத் தட்டி எழுப்பினார்கள்.

இந்தோசீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போராட்டச் செயல் திட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஏகாதிபத்தியம் எல்லா விதப் புரட்சி இயக்கத்துக்கும் எதிராக, முதன்மையாக நமது வீரக் கட்சிக்கு எதிராக இருப்பதா இறப்பதா என்பதை நிர்ணயிக்கும் போர்ப் பிரகடனம் செய்திருக்கிறது. அது நமது

கட்சியை மாய்த்து அதை அழித்துவிடுவதைத் தனது நோக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறது... பல்லாயிரம் புரட்சி வீரர்கள் சிறைகளில் வாடுகிறார்கள். இன்னும் பல்லாயிரவர் நாடு கடத்தவும் சுட்டுக் கொல்லவும் பட்டுவிட்டார்கள். நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது, பதிற்றுக்கணக்கான கிராமங்கள் தீக்கிரை ஆக்கப்பட்டன. இந்தோசீனம் இரத்தப் பெருக்கில் திணறுகிறது''.[1]

துன்புறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களிடையே வேலை செய்தார்கள். ஒடுக்கப்பட்ட நாடுகளின் பல கோடி விவசாயி வெகுஜனங்களிடையே சிறப்பாகச் செயலூக்கத்துடன் வேலை செய்வதன் இன்றியமையாமையைக் கம்யூனிஸ்டு அகிலம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எடுத்துக் காட்டியது.

கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அந்தக் காலத்தில் வீரப் போராட்டம் நடத்தியவாறு தீவிரமான செயல்திட்டங்களை முன்வைத்தன. ஆழ்ந்த ஜனநாயகப் புரட்சிகளுக்கு வெகுஜனங்களின் ஆயத்த நிலையைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிகையாக மதிப்பிட்டு, அதன் அடிப்படையில் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கங்களை நிறுவும் கோஷத்தை எழுப்பின. புரட்சி சோஷலிஸப் புரட்சியாக வளர்வதற்கு இந்த அரசாங்கங்கள் நிறுவப்படுவது தொடக்கமாக அமையும் என்று அவை கருதின. இந்தியாவின் கம்யூனிஸ்டுகள் தங்கள் போராட்டக் கொள்கைத்திட்ட நகலில் ''சோவியத் ஆட்சியை நிலைநாட்டும்படியும்'' ''இந்தியத் தொழிலாளர்-விவசாயிகள் சோவியத் கூட்டுக் குடியரசை நிறுவும்படியும்'' கோரினார்கள்.[2] ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தேசிய பூர்ஷ்வா வர்க்கம் பங்கு கொள்வது சாத்தியம் என்பது கொள்கைத் திட்டத்தில் மறுக்கப்பட்டது.

'' 'சோஷலிஸம் இப்போதே', 'சோவியத் இந்தோனீசியா', 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்' ஆகியனவும் இவை போன்றவையும் தன் கோஷங்களாக இருக்க வேண்டும்'' என்று அந்த ஆண்டுகளில் இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சி எண்ணியது.[3]

[1] கிழக்கு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய செயல் திட்ட தஸ்தாவேஜுகள். மாஸ்கோ, *1934*, பக்கம் *117*.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', *1931*, இதழ் *1*, பக்கம் *75*.

[3] **தி. ந. ஐதித்.** இந்தோனீசியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சுருக்கமான வரலாறு. மாஸ்கோ, *1956*, பக்கம் *19*.

பிலிப்பைன் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதலாவது காங்கிரஸ் (1931) தஸ்தாவேஜுகளிலும் ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையே நிலவிய முரண்பாடுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. பல காலனிகளையும் அரைக் காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் ''சோவியத் புரட்சிக்கு'' ஆயத்தம் செய்யும் பணியை முன் வைத்தன. ''சோவியத் புரட்சி'' என்பது தூய சோஷலிஸப் புரட்சியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. முதல் கட்டத்தில் பூர்ஷ்வா-ஜனநாயகப் பணிகள் ஆதிக்கம் வகிக்கும் புரட்சி என அது கருதப்பட்டது. ஆனால் இந்த கோஷங்கள் சில சந்தர்ப்பங்களில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் யோசனைகளுக்குப் பொருந்திய போதிலும் பெரும்பாலான ஒடுக்கப்பட்ட நாடுகள் இவற்றுக்கு ஏற்ற பக்குவத்தை இன்னும் அடையவில்லை.

கிழக்கு நாடுகளின் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் இடது சாரிப் பிரிவுவாதத் தவறுகள் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சங்கத்தின் (1927—1935) நிலையைப் பாதித்தது. இந்தச் சங்கம் நிறுவப்பட்டது கம்யூனிஸ்டுகளதும் பிற முற்போக்குச் சக்திகளுடையவும் பெருத்த சாதனையாக விளங்கியது. சங்கத்தின் சில தீர்மானங்கள் தேசிய-சீர்திருத்தவாத ஸ்தாபனங்களுடன் ஒத்துழைப்பதைக் கடினம் ஆக்கின. இந்திய தேசியக் காங்கிரஸ், அனைத்திந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ், எகிப்திய தேசியக் கட்சி, இந்தோனீசிய தேசியக் கட்சி முதலியன போன்ற ஸ்தாபனங்கள் சங்கத்திலிருந்து விலகிவிட்டன.

வெகுஜனங்களின் முன் ஒருபோதும் கேட்டறியாத துன்ப துயரங்களை உழைப்பாளிகளின் ஒரு பகுதியினரால் பொறுக்க முடியாததும், ஊசலாட்டங்களையும் அடிக்கடி ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்துகொள்ளும் போக்கையும் காட்டிவந்த தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததுமே கிழக்கு நாடுகளின் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மேற்கொண்ட நிலைக்குப் பெரிதும் காரணமாய் இருந்தன.

காலனிகளையும் அரைக் காலனிகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வழியில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளும் அவை செய்த சில தவறுகளும் இருப்பினும், அவற்றின் சொந்தப் போராட்ட அனுபவம், எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளதும் ஒற்றுமையை உருவாக்குவதும், ஒவ்வொரு நாட்டின் ஸ்தூலமான வரலாற்று, தேசிய நிலைமைகளுக்குப் பொருத்தமான போர்த்தந்திரத்

தையும் செயல்தந்திரத்தையும் வகுப்பதும் இன்றியமையாதவை என்று உணர்த்தியது. மார்க்சிய-லெனினியத்தின் ஆக்கபூர்வமான, நிலையான உயிரோட்டமுள்ள போதனையும் இதையே கோரியது.

* * *

மார்க்சிய-லெனினியப் புரட்சிப் பதாகைக்கு விசுவாசம் கடைப் பிடித்த அதே சமயத்தில், ஏகாதிபத்தியப் பிற்போக்கினதும் பாசிஸத்தினதும் தாக்குதலை உறுதியாக எதிர்த்துச் சமரசமற்ற போராட்டம் நடத்திய ஒரே ஒழுங்கமைந்த அரசியல் சக்தியாகக் கம்யூனிஸ்டு இயக்கம் 1929-1933ம் ஆண்டுகளின் புயல்வேக நிகழ்ச்சிகளின் போது தன்னைக் காட்டிக் கொண்டது. வலதுசாரி சமூக-ஜனநாயகம் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்தும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்தும் பாசிஸத்தின் தாக்குதலுக்கு மேலும் மேலும் விட்டுக் கொடுத்தும் எதார்த்தத்தில் அதற்கு முன் சரணாகதி அடைந்தும் வந்த சமயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எல்லாப் புரட்சி சக்திகளையும் ஒன்றுபடுத்த முயன்றன. இடர்ப்பாடுகளை வெற்றிகொண்டு, நிகழ்ந்த தவறுகளை நீக்கிவிட்டுக் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் விலைமிக்க அனுபவத்தைத் திரட்டின, அனேக முக்கிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டன. இவை மாறிய நிலைமைகளுக்குப் பொருத்தமாய் இருந்தன. பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு போக்குக்களை நெருக்கமாக இணைப்பதற்குரிய வழியைக் குறித்துக் காட்டின. புதிய நிலைமைகளில் முதலாளித்துவ நாடுகளின் போராட்டத்தின் போர்த்தந்திரத்தையும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய பணிகளையும் திட்டவட்டமாக வரையறுப்பதன் இன்றியமையாமையைக் கம்யூனிஸ்டு இயக்கம் கடுமையான படிப்பினைகள் மூலம் நாளடைவில் கண்டுகொண்டது. ஆனால், பாசிஸத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பிற்போக்குக்கும் எதிராக எல்லாப் புரட்சிச் சக்திகளையும் ஜனநாயகச் சக்திகளையும் மிக நெருக்கமாக ஒன்றுபடுத்துவதற்கான புதிய அரசியல் போக்கை உருவாக்குவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இன்னும் அனேகப் போராட்டங்களைக் கடப்பது தேவையாய் இருந்தது.

அத்தியாயம் ஐந்து

கம்யூனிஸ்டு அகிலம் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக்கான போராட்டத்தில்

(1934—1939)

கம்யூனிஸ்டு அகிலத்தினதும் அதன் பிரிவுகளதும் போர்த்தந்திரத்திலும் செயல்தந்திரத்திலும் திருப்பத்தின் தொடக்கம்

பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் புதிய அனுபவம்

முப்பதுக்களின் நடுவில் உலகில் உருவான சூழ்நிலை இரண்டு மிக முக்கியக் காரணிகளால் நிர்ணயிக்கப்பட்டது. சோவியத் யூனியனில் சோஷலிசக் கட்டுமானத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள வெற்றிகளும் முதலாளித்துவ நாடுகளில் பாசிஸம், ஏகாதிபத்தியப் பிற்போக்கு ஆகியவற்றின் தாக்குதலும் இந்தக் காரணிகள் ஆகும். ஒன்றுக்கொன்று எதிரான இந்த வளர்ச்சிப் போக்குகளில் சோஷலிஸத்தினதும் முதலாளித்துவத்தினதும் எதிர்நிலை தெளிவாக வெளிப்பட்டது.

சோவியத் யூனியனின் தொழிலாளி வர்க்கம், தன்னைச் சுற்றி விவசாயிகளை ஒன்று திரட்டிக் கொண்டு, கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் சோவியத் யூனியனில் சோஷலிஸம் மிகக் குறுகிய காலத்தில் வெற்றி அடைவதற்கு வகை செய்திருந்தது. மனிதனை மனிதன் சுரண்டுவது களைந்து அகற்றப்பட்டு விட்ட சமூகம் மானிட இன வரலாற்றில் முதன்முதலாகத் தோன்றி இருந்தது. உற்பத்திச் சாதனங்கள் சமூகத்தின் சோஷலிஸ உடைமையாக இருப்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது இந்த சமூகம். சோவியத் சமூகத்தின் கொள்கைவாத-அரசியல் ஒற்றுமை இந்த அடிப்படையில் உருவாகி வளர்ந்து வந்தது.

சோவியத் யூனியன் முன்னணியில் உள்ள, விறல் மிக்க இயந்திரத் தொழில்-விவசாய வல்லரசாக மாற்றப்பட்டது சோஷலிஸக் கட்டுமானத்தின் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் உள்ள வெற்றியாகத் திகழ்ந்தது. ருஷ்யாவைப் ''பெருமளவு இயந்திரத் தொழில், மின்சாரமயமாக்கல் என்னும் குதிரைமீது அமர்த்துவதில் வெற்றி பெறுக''.[1] நேரக்கூடிய தாக்குதல்களை

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *33*, பக்கம் *501*.

எதிர்த்து முறியடிப்பது அப்போது அதற்கு இயலும் என்ற வி.இ. லெனினது கட்டளையை சோவியத் யூனியனின் உழைப்பாளிகள் நிறைவேற்றிவிட்டார்கள். சோஷலிஸத்தை ஒழிப்பது என்ற முக்கிய நோக்கத்துடன் உலக அரங்கில் பாசிஸமும் ஏகாதிபத்தியப் பிற்போக்கும் நடத்திவந்த தாக்குதலின் தொடர்பில், இந்தப் பணியின் நிறைவேற்றம் அசாதாரண முக்கியத்துவம் உள்ளது ஆகிவிட்டது.

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றியும் சோஷலிஸக் கட்டுமானத்தின் முன்னேற்றமும் உலகில் வர்க்கச் சக்திகளின் அணி வகுப்பை முதலாளித்துவத்துக்குப் பாதகமான முறையில் சாராம்சத்தில் மாற்றிவிட்டன. சோவியத் யூனியனின் வடிவில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்கு இப்போது ஒரு முன்னணிப் படை கிடைத்திருந்தது. அது தனது இயந்திரத் தொழில், இராணுவ விறலை விரைவாக அதிகரித்து, உலகில் சோஷலிஸத்தின் வெற்றிகளைக் காக்கவும் வலுப்படுத்தவும் தேவையான தனது திறனை அதன் மூலம் மேம்படுத்திக் கொண்டிருந்தது.

சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்லும் நெடுஞ்சாலை போடப்பட்டு விட்டது. இது சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்கு நம்பகமான திசையறிவை அளித்தது, உழைப்பாளிகளுக்கு உற்சாகம் ஊட்டியது, அவர்களுடைய போராட்ட ஊக்கத்தை உயர்த்தியது, இறுதி வெற்றியில் அவர்களுடைய நம்பிக்கையை வலுப்படுத்தியது. எல்லாப் புரட்சிச் சக்திகளதும் பாசிஸ்டுவிரோதச் சக்திகளதும் ஈர்ப்பு மையம் என்ற வகையில் சோவியத் யூனியனின் பாத்திரம் பெரிதாயிற்று.

முப்பதுக்களின் நடுவில், முதலாளித்துவ நாடுகளில் பாசிஸத்தின் தாக்குதல் தீவிரம் அடைந்தது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி கூர்மையானதனுலும் அனேக நாடுகளில் புரட்சி நிலைமை நெருங்கியதாலும் சோவியத் யூனியனில் சோஷலிஸம் வெற்றி மேல் வெற்றி அடைந்ததாலும் ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்துக்கு ஏற்பட்ட ஆத்திரத்தை இது காட்டியது. முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கம் நெருக்கடி ஆண்டுகளில் அடைந்த விரைந்த வளர்ச்சி, ஏகாதிபத்தியப் பிற்போக்கின் வெறிகொண்ட தாக்குதல் மூலம் எதிர்க்கப்பட்டது. ஜெர்மனியில் ஹிட்லர் குழுவினர் அடைந்த வெற்றியால் உற்சாகம் அடைந்து பாசிஸ்டுகள் பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திஞர்கள்.

அரசாங்கத்தை மாற்றி அமைப்பதன் மூலமும், நாடாளுமன்றத்தின் தனி உரிமைகளைக் குறுக்குவதன் மூலமும், ஜனநாயக சுதந்திரங்களைக் குறுக்கி நாளடைவில் அவற்றுக்கு முடிவு கட்டுவதன் மூலமும், வேலைநிறுத்த உரிமையை அகற்றுவதன் மூலமும் பிற வழிகளாலும் அரசாங்கத்தை பாசிஸமயம் ஆக்கும்படி ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியினர் கோரினார்கள். மறு பகுதியினரோ, பல்வேறு பாசிஸ்டு ஸ்தாபனங்களை ஆதாரமாகக் கொண்டு அரசு ஆட்சி மாற்றத்துக்கு ஏற்பாடுகள் செய்தார்கள்.

பிரான்சிலும் ஆஸ்திரியாவிலும் ஸ்பெயினிலும் பாசிஸ அபாயம் அந்த சமயத்தில் அச்சுறுத்தும் அளவுகளை மேற்கொண்டது. பல்கேரியாவில் பாசிஸ ஆட்சி மாற்றத்துக்கு முன்னேற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. போலந்திலும் ஹங்கேரியிலும் ஆளும் வட்டாரத்தினர் அரசியல் ஆட்சி அமைப்புக்களை பாசிஸ மயமாக்க முயன்றார்கள். ஃபின்லாந்தில் பாசிஸ்டு இயக்கம் ஒரேயடியாகத் தீவிரம் அடைந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பாசிஸ்டு ஸ்தாபனங்கள் ஊக்கத்துடன் செயல்படலாயின. ஜப்பானின் அரசியல் வாழ்க்கை அரங்கில் இராணுவ-பாசிஸ்டுக் குழுக்கள் பிரவேசித்து, ஆளும் வட்டாரங்கள் முன்னிலும் அதிகப் பிற்போக்கும் அதிக ஆக்கிரமிப்புத் தன்மையும் கொண்ட கொள்கைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கோரின. பாசிஸத்தின் கொடு நிழல் ஐரோப்பா முழுவதிலும் பிற கண்டங்களிலும் பரவி, மனிதகுலத்தைப் பல பத்தாண்டுகள் பின்னுக்குத் தள்ளி விடும் அபாயத்தை ஏற்படுத்தியது.

ஹிட்லர் ஜெர்மனியில் மட்டும் இன்றி எல்லா இடங்களிலும் பாசிஸ்டுக் கும்பல்கள் தொழிலாளி வர்க்கத்தையே முதன்மையாக இலக்கு வைத்துத் தாக்கின. கம்யூனிஸ்டுக் கட்சியையும் தொழிலாளி வர்க்கத்தின் மற்ற ஸ்தாபனங்களையும் இரத்தப் பெருக்குள்ள பயங்கர நடவடிக்கைகள் மூலம் நசுக்கவும் பாட்டாளிகளின் வர்க்க ஒருமைப்பாடு ஏற்பட விடாமல் தடுக்கவும் அவை முயன்றன. உழைப்பாளிகள் பல பத்தாண்டுகள் போராடிப் பெற்றிருந்த எல்லா உரிமைகளையும் சுதந்திரங்களையும் அழிப்பதையும் உழைப்பாளிகளை நிதி மூலதனத்தின் பணிவுள்ள அடிமைகளாக மாற்றுவதையும் பாசிஸம் தனது லட்சியமாக வைத்துக் கொண்டது. ஆனால் பாசிஸம் சோஷலிஸத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் எதிரான சக்தியாக மட்டும் செயல்படவில்லை. அது எல்லா ஜனநாயக வட்டாரங்களுக்கும் பகைவனாக இருந்தது.

பூர்ஷ்வா-ஜனநாயக முறைகள் நெருக்கடியின் தாக்குதல்களுக்கு உட்பட்டிருந்த முதலாளித்துவத்துக்கு ஆபத்தானவை என்று பாசிஸ்டுகள் எண்ணினர்கள். எனவேதான் பாசிஸ்டுகள் பூர்ஷ்வா-ஜனநாயக நிலையங்களையும் நாடாளுமன்ற ஆட்சி அமைப்புக்களையும் ஜனநாயகப் போக்கின் எல்லாவித வெளியீடுகளையும் வெறியுடன் தாக்கினர்கள்.

பாசிஸம், ஏகாதிபத்தியப் பிற்போக்கு ஆகியவற்றின் தாக்குதல் சோஷலிஸ நாட்டுக்கும், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்கும், உழைப்பாளிகளின் ஜனநாயக உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும், பல மக்களினங்களின் தேசிய வாழ்வுக்கும் மரண அபாயம் விளைத்தது. சோவியத் யூனியனுடனும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துடனும் மட்டுமின்றி எல்லா ஜனநாயக, சமாதானப்பற்றுள்ள சக்திகளுடனும் ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளும் அதன் தாக்கு சக்தியான பாசிஸத்தின் முரண்பாடுகளும் ஒரேயடியாக முற்றிவிட்டன. முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் பாசிஸவிரோத, சர்வஜனநாயகப் பணிகளை எல்லாவற்றுக்கும் முன்னுல் நிறைவேற்றுவது அவசியம் என்பதை நிகழ்ச்சிப் போக்கு முதன்மையாக வலியுறுத்தியது என இது குறித்தது. இந்தப் பணிகளில் பிரதானமாக இருந்தது பாசிஸத்துக்கு எதிரான போராட்டம்.

பாசிஸ்டு விரோதிகள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்த வல்ல புதிய கொள்கையின் தேவையைத் தொழிலாளி வர்க்கமும் ஜனநாயக வட்டாரங்களின் முன்னணிப் பிரதிநிதிகளும் முப்பதுக்களின் நடுவில் சிறப்பாகக் கடுமையாக உணர்ந்தார்கள். குட்டி பூர்ஷ்வா ஜனநாயக ஸ்தாபனங்களோ சமூக-ஜனநாயகக் கட்சிகளோ இந்தத் தேவையை நிறைவேற்றும் நிலையில் இல்லை. கம்யூனிஸ்டு இயக்கம், ஒரு சிறிது தாமதத்துக்குப் பிறகுதான் என்றாலும், பாசிஸத்தை முறியடிப்பதன் பொருட்டு எல்லாப் புரட்சிச் சக்திகளையும் ஜனநாயகச் சக்திகளையும் ஒன்றுசேர்க்கும் நோக்கத்துடன் புதிய போர்த்தந்திரத்தை வகுக்க முற்பட்டது. மேற்கொண்டு சமுதாய முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்லும் பாதையை பாசிஸத்தை முறியடித்த பின்னரே அடைய முடியும் என்று கம்யூனிஸ்டுகள் சுட்டிக் காட்டினர்கள்.

திறமையுள்ள கொள்கை மூலமும் உடனடித் தேவைகளுக்காக உரிய நேரத்தில் போராடுவதன் மூலமும் விரிவான வெகுஜனங்களைத் தங்கள் தரப்புக்குக் கொண்டுவந்து, முதன்மைப் பகைவனை

பாசிஸத்துக்கு எதிராக அவர்களைச் செலுத்துவது கம்யூனிஸ்டு களுக்கு இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற் குழுவினது அரசியல் செயலகம் 1934ம் ஆண்டுத் தொடக்கத்தி லேயே வலியுறுத்தி இருந்தது.

1934ம் ஆண்டு நிகழ்ச்சிகள், சிறப்பாக பிரான்சிலும் ஸ்பெயி னிலும் ஆஸ்திரியாவிலும் பாசிஸத்துடன் நடந்த கைகலப்புக்கள், தொழிலாளி வர்க்கத்தின் பாசிஸ்டுவிரோதப் போராட்டத்தின் வளர்ச்சியில் புதிய திருப்பம் ஏற்படுத்தின. இந்த நிகழ்ச்சிகளின் போது, இவற்றின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு கம்யூ னிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் புதிய கொள்கைப் போக்கைப் படிப்படியாக வகுக்கத் தொடங்கின. ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியையும் உழைப்பாளிகளின் விரிவான ஐக் கியத்தையும் பற்றிய லெனினுடைய கருத்துக்களையும் முடிவுகளை யும் கம்யூனிஸ்டு இயக்கம் விரிவுபடுத்தியது. பாசிஸத்துடன் போராடுவது முக்கியப் பணி ஆகிவிட்ட நிலைமைகளில் இந்தக் கருத்துக்களையும் முடிவுகளையும் படைப்புத் தன்மையுடன் கையாள அது முயன்றது.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிய அதிக விரிவான கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. 1934ம் ஆண்டின் தொடக்கத்தில், பாசிஸ்டு ஸ்தாபனங்கள் தங்கள் நிலைகளை வலுப்படுத்திக் கொண்டு பிரான் சில் ஆட்சியைக் கைப்பற்ற ஏற்பாடுகள் செய்தன. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி முக்கிய அபாயத்தைச் சரியாக மதிப்பிட்டு, பாசிஸத்தை உறுதியுடன் எதிர்த்து முறியடிக்கும்படியும் எல்லா உழைப்பாளி மக்களுடையவும் ஜனநாயக சுதந்திரங்களையும் பொ ருளாதார உரிமைகளையும் காக்கும்படியும் கோரிக்கை விடுத்தது. 1934, பிப்ரவரியில் பாசிஸ்டுக் கும்பல்கள் பாரிஸ் நகரில் நடவடிக் கைகள் மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றபோது கம்யூனிஸ்டுக் கட்சி, எல்லாப் போக்குகளையும் சேர்ந்த தொழி லாளர்களை வீதிகளுக்கு வந்து பாசிஸ்டுகளை விரட்டி அடிக்குமாறு அறைகூவி அழைத்தது. தொழிலாளி வர்க்கம் ஒன்றித்துச் செயல் பட்டது பாசிஸத்தை எதிர்த்து முறியடிப்பதில் முக்கியமான பங்கு ஆற்றியது. கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் ஒன்று சேர்ந்து பிப்ரவரி 12ந் தேதி நடத்திய வேலைநிறுத்தத்தில் 45 லட்சம் பெயர் கலந்து கொண்டார்கள். பாட்டாளி வர்க்க ஒற் றுமையின் பேராற்றலை இது காட்டியது. பிரான்சில் பாசிஸத்தின்

முதலாவது பெரிய தாக்குதலைத் தொழிலாளி வர்க்கம் முறியடித்து விட்டது. தாக்கி முன்னேறிய பாசிஸத்துக்கு எதிரே உழைப்பாளி மக்கள் கொண்டிருந்த கலவரத்தின் இடத்தில் அதை முறியடிக்க முடியும் என்பதில் நம்பிக்கை நிலைபெற்றது.

இந்த நிகழ்ச்சிகளின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிய கொள்கையை விரிவுபடுத்தி முக்கியமான புதிய முடிவுகளால் அதை வளப்படுத்தியது. 1934 மார்ச்சு மாதம் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி முழுக் கூட்டம் நடைபெற்றது. பொதுவான பாசிஸ்டு எதிர்ப்புக் கோரிக்கைகளின் அடிப்படையில் எல்லா அரசியல் போக்குகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் செயல் ஒற்றுமையை ஏற்படுத்தி வலுப்படுத்துவது அவசியம் என்று இது காட்டியது.[1]

1934, ஜூன் மாத இறுதியில் இவ்ரி என்னும் இடத்தில் நடந்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தேசிய மகாநாடு, பாசிஸத்துக்கு எதிராக "பாட்டாளி வர்க்க வெகுஜனங்களின் செயல் ஆற்றல் முழுவதையும்" ஒருமுனைப்படுத்துமாறும் "உழைப்பாளி மக்களின் எல்லா வட்டாரங்களுடையவும் நடவடிக்கைகளை அதனுடன் சேர்க்குமாறும்" அறைகூவல் விடுத்தது.[2] முதன்மையான குறிக்கோள் பாசிஸத்தை முறியடிப்பது ஆகும் என்றும், ஜனநாயக சுதந்திரங்களைக் காக்கும் பொருட்டும் அவற்றை விரிவுபடுத்தும் பொருட்டும் கம்யூனிஸ்டுகள் போராடி வருகிறார்கள், மேற்கொண்டும் போராடுவார்கள் என்றும், பாசிஸத்துக்கு எதிராகவும் ஜனநாயகத்தின் பொருட்டும் அணித்தான பொருளாதாரக் கோரிக்கைகளின் பொருட்டும் போராட்டத்தில் தொழிலாளர்களை மட்டுமின்றி, உழைக்கும் விவசாயிகளின் மிக விரிவான திரளையும் குட்டி பூர்ஷ்வாக்களையும் அறிவுஜீவிகளையும் ஈடுபடுத்த அவர்கள் முயல்கிறார்கள் என்றும் கம்யூனிஸ்டுக் கட்சி அறிவித்தது. விரிவான பாசிஸ்டு எதிர்ப்புக் கூட்டணி பற்றிய கொள்கையின் வடிவ வரைகள் இவ்வாறு தீட்டப்பட்டன.

கம்யூனிஸ்டுக் கட்சி வெகுஜனங்களிடையே ஊக்கத்துடன் விரிவாக வேலை தொடங்கியது. அது ஒற்றுமைப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடத்தியது. பாசிஸ்டுகளின் ஒவ்வொரு திடீர்த்தாக்கையும் எதிர்த்துத் தாக்கி முறியடிக்க அது

[1] "La Correspondance Internationale", 1934, N 34-35, p. 647.

[2] "L'Humanité", 6. VII. 1934.

ஏற்பாடு செய்தது. பாசிஸ்டுகளுக்கு எதிராக ஒன்றித்துச் செயல் புரியும் ஆர்வம் தொழிலாளர்களின் மேலும் மேலும் விரிவான வட்டாரங்களை—சோஷலிஸ்டுகளையும் சீர்திருத்தவாதத் தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களையும்—ஆட்கொண்டது. அதே சமயம் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றித்த கூட்டணி பற்றிய யோசனையை விடுத்தது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் ஊக்கமுள்ள நடவடிக்கைகளின் விளைவாகப் பல நகரங்களிலும் வட்டாரங்களிலும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியுடையவும் சோஷலிஸ்டுக் கட்சியுடையவும் தலைவர்களுக்கிடையே ஒன்றித்த கூட்டணி பற்றிய ஒப்பந்தங்கள் ஏற்படலாயின. இத்தகைய நிலைமைகளில், கீழ்ப்படிகளின் வற்புறுத்தல் காரணமாக பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் தலைமை பாசிஸத்துக்கு எதிராக இரண்டு கட்சிகளுக்கும் இடையே ஒற்றுமை உடன்படிக்கை செய்து கொள்வது பற்றிய பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் யோசனையை (ஏற்றுக் கொண்டது. 1934, ஜூலை 27ந் தேதி இந்த உடன்படிக்கை அதிகாரபூர்வமாகக் கையெழுத்திடப் பட்டது. பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் அனேக யோசனைகளைக் கம்யூனிஸ்டுகள் ஏற்றுக் கொண்டார்கள். அதே சமயம் தொழிலாளி வர்க்கம் அனைத்திற்கும் பல நன்மைகளை அவர்கள் ஏற்படுத்தினர்கள். பாசிஸத்துக்கும் பிற்போக்குக்கும் எதிராக வர்க்கப் போராட்டத்தின் பயன் விளைக்கும் முறைகளைக் கையாள்வதாக இரு கட்சிகளும் வாக்குறுதி அளித்தன. பிரான்சில் எதார்த்தம் ஆகிவிட்ட ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி உலகனைத்தின் தொழிலாளர் இயக்கத்திலும் கம்யூனிஸ்டு இயக்கத்திலும் முக்கியமான திருப்பத்தின் தொடக்கத்தைக் குறித்தது. கம்யூனிஸ்டுகளுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் இடையே பல நீண்ட ஆண்டுகளாக நடந்துவந்த கடும் போராட்டத்திற்குப் பிறகு, பொதுப் பகைவனை பாசிஸத்துக்கு எதிராக ஒன்றித்துச் செயல் புரிவது பற்றி இரு கட்சிகளும் முதன் முதலாக ஒப்பந்தம் செய்துகொண்டன. பிரான்சில் ஏற்பட்ட ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பிற முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் இயக்கத்துக்கு அணி திரட்டும் எடுத்துக்காட்டு ஆயிற்று.

ஆஸ்திரியாவில் 1934ம் ஆண்டுத் தொடக்கத்தில் நடந்த நிகழ்ச்சிகள் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கு முக்கியமான படிப்பினையாகப் பயன்பட்டன. அங்கே பாசிஸ்டுகள் தங்கள் நிலைகளைப்

படிப்படியாக வலுப்படுத்திக்கொண்டு, 1934ம் ஆண்டுத் தொடக்கத்தில் தாக்குதலை மேற்கொண்டார்கள். பாசிஸ்டுத் தாக்குதல் விரைவில் நடக்கும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி உழைப்பாளிகளை எச்சரித்திருந்தது. எல்லா பாசிஸ்டுவிரோதத் தொழிலாளர்களும் ஒன்றித்துச் செயல்படுவதன் இன்றியமையாமையை அது சுட்டிக் காட்டியது. ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சி பலவீனமாய் இருந்தது. ஆஸ்திரிய சமூக-ஜனநாயகக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் மிக அதிகமான பெரும்பான்மையினரைத் தன் ஆதரவாளர்களாகக் கொண்டிருந்தது. நிலைமை முற்றும்போது தாங்கள் செயல்புரிவதாக அறிக்கைகள் விடுவதில் ''ஆஸ்திரிய மார்க்சியவாதிகள்'' கொஞ்சங்கூடச் செட்டு பிடிக்கவில்லை. கட்சியின் கீழ்ப்படிகளில் இடதுசாரி நபர்கள் பலம் பெற்றிருந்தார்கள். ''ஷுத்ஸ்புந்த்'' எனப்பட்ட சமூக-ஜனநாயகக் குழுக்கள் இருந்தன. அதிகாரிகள் அறியாதபடி இவை ஆயுதங்கள் வைத்திருந்தன. ஆனால் இடைநிலைவாதப் போக்கைக் கடைப்பிடித்த கட்சித் தலைவர்கள் உறுதியான சொற்களால் பகட்டித் தொழிலாளர்களை ஏமாற்றினார்களே தவிர, துடுக்காகத் திரிந்த பாசிஸத்துக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே வெகுஜன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதிலிருந்து தொழிலாளர்களை எப்போதும் தடை செய்து வந்தார்கள். பிப்ரவரி 12ந் தேதி பாசிஸ்டுகள் லிந்த்ஸ் நகரில் இருந்த ஆஸ்திரிய சோஷலிஸ்டுக் கட்சி அலுவலகத்தைத் தாக்கினார்கள். அப்போதுதான் முதலில் லிந்த்ஸிலும் பிறகு வியன்னாவிலும் ''ஷுத்ஸ்புந்த்''காரர்கள் பாசிஸ்டுகளுடனும் போலீசாருடனும் ஆயுதப் போராட்டம் நடத்தினார்கள். சமூக-ஜனநாயகத் தலைவர்கள் பொது வேலை நிறுத்தத்துக்குத் தாமதித்து வேண்டுகோள் விடுத்தார்கள். ஆயுதப் போராட்டம் நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்தது. கம்யூனிஸ்டுகள் அதில் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். போராட்டம் தொழிலாளர்களின் தோல்வியில் முடிந்தது.

சமூக-ஜனநாயகத்தின் இடைநிலைவாதக் கொள்கை பாசிஸத்துடன் மோதல்களில் நடந்த வரலாற்றுச் சோதனையில் தவறிவிட்டது என்பதை ஆஸ்திரிய நிகழ்ச்சிகள் குறித்தன. தாக்கி முன்னேறிய பாசிஸத்துக்குமுன் சீர்திருத்தவாதக் கொள்கையின் எல்லா வடிவங்களும் கவைக்கு உதவா என்பது தெட்டத்தெளிவு ஆகிவிட்டது.

பிரான்சில் ஒன்றித்த கூட்டணியின் அனுபவம் பாசிஸத்தை

வெற்றிகரமாக எதிர்த்துத் தாக்கி முறியடிப்பது முடியும் என்பதை உலகு அனைத்தின் தொழிலாளர்களுக்கும் காட்டியது என்றால், உறுதியான வர்க்கப் போராட்டங்கள் நடத்தச் சீர்திருத்தவாதக் கட்சிகள் மறுப்பதன் விளைவாக முடிவில் உழைப்பாளிகள் படு தோல்வி அடைகிறார்கள் என்பதை ஆஸ்திரியாவின் உதாரணம் இன்னும் ஒரு முறை புலப்படுத்திவிட்டது.

சமூக-ஜனநாயகக் கட்சியின் கீழ்ப்படிகள் தங்கள் தலைவர்களைப் பொருட்படுத்தாமல் ஊக்கத்துடன் வர்க்கப் போராட்டம் நடத்துவதற்கு ஆதரவாய் இருக்கின்றன. *1934*, பிப்ரவரிக்குப் பிறகு, சுமார் மூவாயிரம் உறுப்பினர்கள் கொண்ட ஆஸ்திரியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் பதின்மூன்றாயிரம் முன்னாள் சமூக-ஜனநாயகவாதிகள் சில மாதங்களில் சேர்ந்தார்கள்.[1] ஆஸ்திரிய சமூக-ஜனநாயகக் கட்சிக்குள்ளேயே பலமான இடதுசாரிக் குழுக்கள் தோன்றின.

பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் எதிராக விரிவான வெகு ஜனங்களை ஒன்றுபடுத்த ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சி வெகுவாக முயன்றது. நாட்டில் ஜனநாயகப் புரட்சி வளர்ச்சி அடைவதற்கு பாசிஸம் முறியடிக்கப்படுவது மிக முக்கியமான நிபந்தனையாக இருக்கும் என்று கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களுக்கு விளக்கினார்கள். *1933* லேயே கம்யூனிஸ்டுக் கட்சி பாசிஸ்டு விரோதக் கூட்டணி என்ற கோஷத்தை முன்வைத்தது. பிற்போக்கின் வழியை மறிக்கத் தயாராய் இருக்கும் எல்லோருடையவும் விரிவான வெகு ஜன இயக்கமாக இந்தக் கூட்டணியை அது மதித்தது.[2] தெளிவாக கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் குடியரசுவாதிகளும் அடங்கிய மக்கள் கூட்டணி மலாகா நகரில் அமைக்கப்பட்டது, இந்தப் பாதையில் பெறப்பட்ட முதல் முன்னேற்றங்களில் ஒன்றாகும். *1933*, நவம்பரில் நடந்த தேர்தல்களில் இந்தக் கூட்டணி வெற்றி அடைந்தது. வெளியிடப்பட்ட பாசிஸ்டு விரோத உள்ளடக்கம் கொண்ட ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கூட்டணிக் கொள்கையின் விளைவாக, சோஷலிஸ்டுகளுடனும் அராஜகவாதிகளுடனும் மட்டுமின்றி இடதுசாரிக் குடியரசுவாதச் சக்திகளுடனும் சேர்ந்து அனேக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இயன்றது.

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', *1934*, இதழ் *35*, பக்கங்கள் *35*, *36*.

[2] ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு, பக்கம் *82*.

இளங் கம்யூனிஸ்டுகள் சங்கத்துடன் ஸ்பானிய சோஷலிஸ்டு இளைஞர்கள் சங்கம் போராட்டத்தில் ஒத்துழைத்தது. சோஷலிஸ்டுகளால் நிறுவப்பட்ட ''தொழிலாளர் நட்புறவு'' ஸ்தாபனங்களில் கம்யூனிஸ்டுக் கட்சி 1934, செப்டெம்பரில் சேர்ந்தது. ஜனநாயகப் புரட்சியின் மிக முக்கியமான இயக்கு சக்திகளில் ஒன்று என்ற வகையில் விவசாயிகள் பொதுவான பாசிஸ்டு எதிர்ப்புக் கூட்டணியில் சேர்க்கப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி அப்போது அறிவித்தது. கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளர் நட்புறவு ஸ்தாபனங்களில் சேர்ந்ததும் இந்த ஸ்தாபனங்களில் விவசாயிகளுக்கு விரிவான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று அது போராடியதும் பாசிஸ்டு விரோத ஒற்றுமைக் கொள்கையை நடப்பில் கொண்டு வருவதற்கு ஸ்பானியக் கம்யூனிஸ்டுகள் எடுத்துக்கொண்ட மிக முக்கியமான நடவடிக்கை ஆகும்.

1934, அக்டோபரில் ஸ்பானியத் தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தம் நடத்திய போது, சோஷலிஸ்டுகளும் அராஜகவாதிகளும் கம்யூனிஸ்டுகளும் கூட்டாகச் செயலாற்றிய அஸ்தூரி என்னும் இடத்தில் மட்டுமே தாற்காலிக வெற்றி கிட்டியது. பிற்போக்காளர்கள் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை இரத்தப் பழி வாங்கினார்கள். ஆயினும் ஸ்பெயினில் நடந்த அக்டோபர் மாத நிகழ்ச்சிகள் ஒரு முக்கியமான படிப்பினை நல்கின: பாசிஸத்தின் மீது வெற்றி பெறுவதற்கு எல்லா அரசியல் போக்குகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் செயல் ஒற்றுமை இன்றியமையாதது. அராஜகவாதிகளதும் சோஷலிஸ்டுக் கட்சியினதும் கொள்கைக்கு இயல்பான பிரிவுவாதத்தையும் தொழில்முறைக் குழுக் கண்ணோட்டத்தையும் இயக்கத்தின் தனித் தலைமையைக் கோரும் போக்கையும் கைவிடுவது இதற்கு இன்றியமையாதது. அதே சமயம், கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் அராஜகவாதிகளும் ஒன்றித்துச் செயல்படுவது சாத்தியம் என்பதையும் இந்த நிகழ்ச்சிகள் காட்டின.

பாசிஸ்டு விரோதக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கைக்குத் திருப்பம் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் ஏற்பட்டது. பாசிஸத்தை எதிர்த்துப் போராடுகையில் கம்யூனிஸ்டுகளுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் இடையே தொடர்புகள் மேலும் மேலும் நெருக்கமாயின. அவற்றுக்கு இடையே செயலொற்றுமை பற்றிய ஒப்பந்தம் 1934,

ஆகஸ்டில் ஏற்பட்டது. பாசிஸத்தை ஆட்சியிலிருந்து அகற்றும் பொருட்டும், சமாதானம், விடுதலே, உழைப்பாளிகளின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவது ஆகியவற்றுக்காகவும் போராட்டத்தில் அவர்களது பொது நோக்கங்கள் உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டன.[1] நாடு கடந்து வாழ்ந்த பாசிஸ்டு விரோதிகளுக்கும் நாட்டுக்கு உள் இருந்த பாசிஸ்டு எதிரிகளுக்கும் உரிய போராட்டச் செயல்திட்டமாக விளங்கியது இந்த உடன்படிக்கை. இந்தக் காலத்தில் பல கம்யூனிஸ்டுக் கட்சிகள் நடைமுறைப் போராட்ட அனுபவத்தைத் திரட்டி, புது நோக்கில் அதை மதிப்பிட்டு, ஏகாதிபத்தியப் பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தில் எல்லா அரசியல் போக்குகளையும் சேர்ந்த தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவதற்கான வழிகளை மும்முரமாகத் தேடின.

கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் முன் வேளையில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பணிகள் பற்றிய ஆலோசனை

கம்யூனிஸ்டுக் கட்சிகள், கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாலும், லெனினுடைய கருத்துக்கள் புதிய நிலைமைகளில் படைப்புத்தன்மையுடன் கையாளப்பட்டதாலும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய அரசியல் கொள்கைப் போக்கு உருவாயிற்று. பிரான்சிலும் ஸ்பெயினிலும் ஆஸ்திரியாவிலும் பிற நாடுகளிலும் நடந்த வர்க்கப் போராட்டத்தின் படிப்பினைகளைப் பற்றி, நிகழ்ச்சிகள் நடந்து முடிந்ததுமே கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழுவும் அரசியல் செயலகமும் ஆலோசனைகள் நடத்தின. கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளுடைய பிரதிநிதிகள், முதன்மையாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் பிரதிநிதிகள் இந்த ஆலோசனைகளில் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். செயற்குழுவின் உறுப்புக்கள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் புதிய

---

[1] இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முப்பதாண்டு வாழ்வும் போராட்டமும். மாஸ்கோ, *1953*, பக்கங்கள் *361—362*.

முடிவுகளை அடிப்படையில் ஆதரித்தன. இந்த முடிவுகளை மேற்கொண்டு விரிவுபடுத்த அவை உதவின. பாசிஸத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம் அனைத்தையும் ஒன்று இணைப்பதற்குத் தடையாய் இருந்த, காலத்துக்கு ஒவ்வாத அல்லது சரியற்ற சில தீர்மானங்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களில் படிப்படியாக மறு பரிசீலனை செய்யப்படலாயின.

1934, ஜூன் 11ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு ஒரு கடிதம் அனுப்பியது. இதைத் தயாரிப்பதில் செயற்குழுவில் இருந்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி பங்கு கொண்டார். இந்தக் கடிதத்தில் அடங்கியிருந்த அனேக யோசனைகள், இவ்ரி மகாநாட்டில் முக்கியமான தீர்மானங்களை ஏற்பதற்கு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளுக்கு உதவின. முதன்மையான தாக்குதல் பாசிஸத்துக்கு எதிராக நடத்தப்பட வேண்டும் என்றும் இந்தப் பகைவனுக்கு எதிராக எல்லா அரசியல் போக்குகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் கூட்டணி அமைக்கப்பட வேண்டும் என்றும் கடிதம் வலியுறுத்தியது. பொது மக்களின் விரிவான குழுக்களுடையவும் அவர்களது ஸ்தாபனங்களுடையவும் கோரிக்கைகளை உள்ளடக்கிய போராட்டச் செயல் திட்டத்தை பாசிஸத்துக்கு எதிராகத் தயாரிக்குமாறு கடிதம் யோசனை கூறியது. பிற்போக்குத் தன்மை இல்லாதவையும் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் பிற உழைப்பாளிகளின் நலன்களுக்கும் முரண்படாதவையுமான குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களின் எல்லாக் கோரிக்கைகளையும் கம்யூனிஸ்டுகள் திறமையாகவும் விடாப்பிடியாகவும் காத்துப் போராட வேண்டும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. பூர்ஷ்வா ஜனநாயகத்தின்பால் கம்யூனிஸ்டுகளின் போக்கு மாற வேண்டும் என்பது சிறப்பான வன்மையுடன் வலியுறுத்தப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சி பூர்ஷ்வா ஜனநாயகத்தை அழிப்பதற்காகப் போராடுகிறது என்று கட்சிப் பத்திரிகைகளில் எழுதுவதையும் கூட்டங்களில் பேசுவதையும் கம்யூனிஸ்டுகள் நிறுத்த வேண்டும், ஏனெனில் இவ்வாறு கூறுவது ''அரசியல் நோக்கில் தவறானது'' என்று கடிதம் கூறியது. ஜனநாயக சுதந்திரங்களை ஒரேயடியாக ஒழிக்கவோ அல்லது குறுக்கவோ பாசிஸமும் பூர்ஷ்வா வர்க்கமும் செய்யும் முயற்சிகளை எதிர்த்து முழு வலிமையுடன் போராடுவதோடு ''அவற்றை விரிவுபடுத்தவும் முயல வேண்டும்'' என்று கடிதம் வலியுறுத்தியது.

ஆஸ்திரியா, கிரீஸ், பல்கேரியா, கானடா, பிற நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்டப் பணிகள் குறித்துக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அரசியல் செயலகம் அந்தக் காலத்தில் நிறைவேற்றிய அனேகத் தீர்மானங்களில், ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிய அதிக விரிவான கொள்கையை வகுப்பதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் செய்துவந்த முயற்சிகள் ஆதரிக்கப்பட்டன. அதோடு இந்தக் கொள்கையைச் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்கள் விஷயத்தில் அதிகத் துணிவுடன் கடைப்பிடிக்கும்படியும், குட்டி பூர்ஷ்வா வெகுஜனங்களை பாசிஸ்டு எதிர்ப்பு முகாமில் சேர்க்க முயலும்படியும், உழைப்பாளி வெகுஜனங்களுடைய ஜனநாயக உரிமைகளையும் நலங்களையும் உண்மையில் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட திட்ட வட்டமான கோஷங்களுக்கு முதன்மை கொடுக்கும்படியும் இந்தக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் பாசிஸ்டுவிரோதிகளின் ஒன்றித்த செயல்களுக்கு வழி வகுக்கும்படியும் யோசனைகளும் கூறப்பட்டன.

1934ம் ஆண்டு கோடையிலும் இலையுதிர் காலத்திலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசுக்கான முன்னேற்பாடுகளை ஒட்டி, கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களில் வர்க்கப் போராட்டத்தின் படிப்பினைகள் பற்றிய ஆழ்ந்த, சர்வாம்சரீதியான ஆலோசனைகளும், சூடான விவாதங்களும் நடந்தன. காலத்துக்குப் பொருந்தாத தீர்மானங்களை மறு பரிசீலனை செய்யும்படி கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

1934, மே 28ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு ஏழாவது காங்கிரசின் நிகழ்ச்சி நிரலையும் அது தொடங்க வேண்டிய முறையையும் தீர்மானித்தது. சான்றிதழ்களின் வினியோகம் பற்றிய பிரச்சினையும் முடிவு செய்யப்பட்டது. நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சங்களைத் தயாரிப்பதற்கான கமிஷன்கள் விரைவில் அமைக்கப்பட்டன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி, கம்யூனிஸ்டு அகிலத்தின் பிற பெரிய பிரிவுகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் முன்னேற்பாட்டுக் கமிஷன்களின் உறுப்பினர்கள் ஆனார்கள். திமீத்ரொவ், கூஸினென், மனுயீல்ஸ்கி, பீக், தளியாத்தி, கூன், ஷ்மிரால், ஹெக்கேர்த், பியாத்நித்ஸ்கி, வார்கா, லஸோவ்ஸ்கி, புரன்கோவ்ஸ்கி (பொர்த்னோவ்ஸ்கி), மத்தலேனு, வான் மின் முதலியோர் இவர்கள். பிற்பாடு கமிஷன்களின் வேலையில் வேறு பல கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஊக்கத்துடன் பங்காற்றினார்கள். கம்யூனிஸ்டு

அகிலத்தின் தலைமை உறுப்புக்களில் இருந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிகள் பல புதிய பிரச்சினைகளை முன்வைப்பதில் மிக முக்கியமான பங்கு ஆற்றினர் கள். முன்னேற்பாட்டுக் கமிஷன்களின் கூட்டங்களில் சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் சம்பந்தமான பிரச்சினைகள் எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராயப்பட்டன. இந்த ஆராய்ச்சியின் போது கம்யூனிஸ்டுச் சிந்தனை உடனடிப் பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகளை ஒன்று சேர்ந்து தேடியது.

1934, ஜூன் 14ந் தேதி, முன்னேற்பாட்டுக் கமிஷனின் முதல் கூட்டத்தில் காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் குறிக்கப்பட்டிருந்த முதலாவது பிரச்சினை மீது விவாதம் நடந்தது. விவாதத்தின் போது, வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்திற்குரிய முக்கியப் பணி பற்றி ஆலோசிக்கப்பட்டது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காக உடனடியான போராட்டம் என்ற கோஷம் தற்போது பல முதலாளித்துவ நாடுகளில் உருவாகியுள்ள நிலைமைகளுக்குப் பொருந்தவில்லை என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதி மனுயீல்ஸ்கி கருத்து தெரிவித்தார். சோஷலிஸம் இயக்கத்தின் இறுதிக் குறிக்கோளாகும். ஆனால் ''நம்மிடம் அதிகத் திண்ணமான போராட்டச் செயல்திட்டம் இருக்க வேண்டும். அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமோ சோஷலிஸமோ அல்ல. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராடுவதற்கு வெகுஜனங்களை இட்டுவரக் கூடியதாக இருக்க வேண்டும்''[1] என்றார் அவர். போராட்டத்தின் பாசிஸ்டுவிரோத, பொது ஜனநாயகக் கட்டம் தவிர்க்க முடியாதது என்ற கருத்து இவ்வாறு பக்குவப்பட்டது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் செயல்தந்திரத்தில் மாறுதல்கள் இன்றியமையாதவை என்பதைக் கவனத்தில் கொள்ளும்படி இந்தக் கூட்டத்தில் பேசிய கூஸினென் கேட்டுக் கொண்டார்.

திமீத்ரொவ் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டிக்கும் எழுதிய கடிதம், காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் இருந்த இரண்டாவது அம்சம் பற்றி ஆலோசிப்பதற்காக நடந்த

---

[1] மை. ஆ. கூ., 459/1/1/7-8.

முன்னேற்பாட்டுக் கமிஷன் கூட்டத்தில் 1934, ஜூலை 2ந்தேதி அவர் ஆற்றிய உரை, இந்தக் கூட்டத்தில் அவர் பிரேரித்த ''பாசிஸத்தின் தாக்குதலும் பாசிஸத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்க ஒற்றுமையின் பொருட்டுப் போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளும்'' என்ற அறிக்கையின் முன்வரைவும் புதிய போக்கை வகுக்கும் பாதையில் பெருத்த அடிவைப்பாக விளங்கின. பாசிஸத்தின் தாக்குதலுக்கும் யுத்த அபாயத்துக்கும் எதிராக ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைப்பதற்கான போராட்டம் பற்றிய பிரச்சினையைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசினது ஆலோசனைக்கும் தீர்மானங்களுக்கும் உரிய முக்கிய விஷயம் ஆக்குவதன் இன்றியமையாமை இந்தத் தஸ்தாவேஜுகளில் வலியுறுத்தப்பட்டது. மாறிய நிலைமைகளின் தொடர்பாக, தற்காலத்துக்குப் பொருந்தாதவை ஆகிவிட்ட செயல்தந்திரக் கருத்துக்களைத் துணிவுடன் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றார் திமீத்ரொவ். கம்யூனிஸ்டுகளின் குறுகிய பிரிவுவாதத் தவறுகளை அவர் கடுமையாகக் கண்டனம் செய்தார். சமூக-ஜனநாயகத்தை சமூக-பாசிஸம் என்று ஆதாரமின்றி மதிப்பிடுவதை அவர் எதிர்த்தார். கம்யூனிஸ்டுகள் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களை அணுகுவதற்கான வழியை இந்த மதிப்பீடு அடைத்தது என்றார் அவர். சமூக-ஜனநாயகம் பூர்ஷ்வா வர்க்கத்தின் முக்கியமான சமுதாய ஆதாரத் தூண் என்றும் இடதுசாரி சமூக-ஜனநாயகக் குழுக்கள் முக்கியமான அபாயம் என்றும் எங்கும், எப்போதும் கருதுவதை அவர் எதிர்த்தார். ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியைக் கீழ்ப்படிகளிலிருந்து மட்டுமே உருவாக்க முடியும் என்ற கருத்தை அவர் விமர்சித்தார். சமூக-ஜனநாயகக் கட்சி, சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் விஷயத்தில் தங்கள் போக்கைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மாற்றிக் கொள்ள வேண்டும், அவர்களை பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டத்தின் தரப்புக்குக் கொண்டுவர வேண்டும், கம்யூனிஸ்டுக் கட்சியின் மேலாண்மை ஒப்புக்கொள்ளப்படுவதை முன் நிபந்தனையாக விதிக்காமல் புரட்சிகரத் தொழிற்சங்கங்களையும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களையும் ஒன்றுபடுத்த வேண்டும் என்று அவர் யோசனை கூறினார். ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் பற்றி, ''பாசிஸத்தின் தாக்குதலுக்கு எதிராக வெகுஜனப் போராட்டத்தை விரிவாக நடத்துவதற்கு ஏற்ற பயன்விளைக்

கும் காரணியாக'' அதை மாற்ற வேண்டும் என்று அவர் எழுதினார்.[1]

எதார்த்த நிலைமையை மார்க்சிய நோக்கில் பகுத்தாராய்வதன் இடத்தில் சில வேளைகளில் கையாளப்படுபவையும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டத்தின் உண்மையான ஒழுங்கமைப்பாளர்களும் தலைவர்களும் ஆவதற்குத் தடையாய் இருப்பவையுமான கிளிப்பிள்ளைவாதத்துக்கும் வரைவுத்திட்டவாதத்துக்கும் முடிவு கட்டுவது அவசியம் என்றார் திமீத்ரொவ். ஒரு மையத்திலிருந்து கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் செயல்முறையில் தலைமை வகித்து நடத்துவது இயலாதிருப்பதால், கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலை முறைகள் மாற்றப்பட வேண்டும் என்றும் அது கம்யூனிஸ்டு இயக்கத்துக்குப் பொதுக் கொள்கைவாத-அரசியல் துறையில் வழிகாட்டுவதில் கவனத்தை ஒருமுனைப்படுத்த வேண்டும் என்றும் திமீத்ரொவ் யோசனை கூறினார். பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமரசம் செய்துகொள்ளும் கொள்கையை நிராகரிப்பவையும் புரட்சிப் போராட்டப் பாதையை மேற்கொள்ளுபவையுமான சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களுடன் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்றுசேர்வதற்கான வாய்ப்புக்கள்; பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கோஷங்கள்; குட்டி பூர்ஷ்வாக்களின் பல்வேறு வட்டாரங்கள் பால் கடைப்பிடிக்க வேண்டிய போக்குக்கள் ஆகியவை பற்றிய பிரச்சினைகளும் பிற பிரச்சினைகளும் ''அறிக்கை முன்வரைவில்'' ஆராயப்பட்டிருந்தன.[2] பாசிஸ்டு-விரோதிகளான பாட்டாளிகளை ஒன்றிணைக்கத் தடையாய் இருந்த குறுகிய பிரிவுவாதக் கருத்துக்களுக்கும் தவறுகளுக்கும் எதிரான உறுதியான பேச்சாகத் திகழ்ந்தது இது.

கம்யூனிஸ்டு அகிலத்தில் இருந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிகளின் ஆதரவுடன், வர்க்கப் போராட்டத்தின் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப லெனினியத்தைப் படைப்புத்தன்மையுடன் கையாள்வதை அடிப்படையாகக் கொண்டு திமீத்ரொவ் தயாரித்திருந்த யோசனைகள் மற்றக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகளால் பரிவுடன் வரவேற்கப்பட்

---

[1] கி. திமீத்ரொவ். கடிதங்கள். 1905—1949. சோபியா, 1962, பக்கம் 298.

[2] ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு பற்றிய பிரச்சினைகள்'', 1965, இதழ் 7, பக்கங்கள் 85-86.

டன. நிகழ்ச்சி நிரலின் முதல் விஷயம் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூடிய முன்னேற்பாட்டுக் கமிஷனின் கூட்டத்தில் 1934, ஆகஸ்டு 22ந் தேதியன்று ''உலக நிலைமையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளும்'' என்ற ஆய்வுரை மசோதா மீது சமர்ப்பித்த அறிக்கையிலும் ஆகஸ்டு 29ந் தேதியன்று நிகழ்த்திய சொற்பொழிவிலும் கூஸினென் ஒரு விஷயத்தைத் தெளிவாக வலியுறுத்தினர். முந்திய சூத்திரங்கள் புரட்சி நெருக்கடியின் முதிர்ச்சி பற்றிய மிகையான மதிப்பீடு காரணமாகக் குறைபாடு உள்ளவை என்றும் அவற்றைப் பொருட்படுத்தாமல் நிலைமையை நிதானமாகப் பகுத்து ஆராய்வது இன்றியமையாதது என்றும் அவர்கூறினர். கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்தந்திரம் ஓரளவு சரியற்றதாகவோ மாறிய நிலைமைகளுக்குப் பொருந்தாததாகவோ இருந்ததால் அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் கருத்து தெரிவித்தார். இடதுசாரிப்-பிரிவுவாதப் பிறழ்ச்சிகளுக்கும் தவறுகளுக்கும் எதிராக ஆழ்ந்த போராட்டம் நடத்துவது இன்றியமையாதது என்றும் அவர் கூறினர். சமூக-ஜனநாயகத்தின் அணிகளில் கணிசமான முன்னேற்றங்கள் நிகழ்ந்திருப்பதாகவும் பாசிஸத்தை எதிர்ப்பதில் அக்கறை கொண்ட இடதுசாரிக் குழுக்களும் போக்குகளும் தோன்றி இருப்பதாகவும் எனவே அதன்பால் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போக்கு மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினர்.[1]

தொழிற்சங்க இயக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கை அப்போது நடந்த முன்னேற்பாட்டுக் கமிஷன்களின் கூட்டங்களில் விமர்சன நோக்கில் பகுத்தாராயப்பட்டது. திமீத்ரொவ், மனுயீல்ஸ்கி, கூஸினென், ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி மத்தலேன ஆகியோரும் பிறரும் புரட்சிகரத் தொழிற்சங்கங்களையும் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களையும் ஒன்று சேர்ப்பதையும் பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் அவற்றின் ஒற்றுமையையும் ஆதரித்தார்கள்.

விவாதத்தில் கலந்துகொண்டவர்கள் பாசிஸத்துக்கு எதிராக ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைக்கும் பிரச்சினைக்கு முதலிடம் கொடுத்ததுடன், பாட்டாளி அல்லாத வட்டாரங்களுடனும் கட்சிகளுடனும் ஐக்கியம் ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் இந்தக் கூட்டணியை விரிவுபடுத்த வேண்டும் என்ற கருத்தையும் வெளி

[1] மை. ஆ. கூ., 495/1/3/28-37, 206.

யிட்டார்கள். பாசிஸ்டுகள் தங்கள் செல்வாக்கின் கீழ்க் கொண்டு வர முயலும் குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளுடனும் விவசாயிகள் கட்சிகளுடனும் பிற ஸ்தாபனங்களுடனும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் இன்றியமையாமையைப் பற்றி மனுயீல்ஸ்கி பேசினுர். ஒன்றித்த கூட்டணி விவசாயிகளேயும் குட்டி பூர்ஷ்வாக்களேயும் சிறப்பாக விவசாயிகளின் புரட்சி ஸ்தாபனங்களேயும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி புரன்கோவ்ஸ்கி கருத்து தெரிவித்தார். இவ்வாறு தெரிவிக்கப்பட்ட கருத்து பிற்காலத்தில் மக்கள் கூட்டணியின் வடிவத்தை மேற்கொண்டது.

ஆலோசனையின் போது பல நோக்கு நிலைகள் முன்வைக்கப் பட்டன. ஆலோசனையில் கலந்துகொண்டவர்களில் சிலர்—கூன், லஸோவ்ஸ்கி, கினேரின், வான் மின்—முதலில் பழைய கருத்துக் களே ஆதரித்துப் பேசினுர்கள். செயல்தந்திரத்தில் குறித்த சில மாற்றங்கள் செய்வதற்கு மட்டுமே அவர்கள் இணங்கினுர்கள். புரட்சி ஏற்றத்தின் மதிப்பீட்டை அதிகப்படுத்தும்படி அவர்கள் கோரினுர்கள். கம்யூனிஸ்டு அகிலம் எதார்த்தம் அற்ற முன்கணிப்பு செய்யும்படி இவ்வாறு அவர்கள் தூண்டினுர்கள். சமூக-ஜனநாயகம் பூர்ஷ்வா வர்க்கத்தின் முதன்மையான சமுதாய ஆதாரத் தூண் என்று முன்போலவே கருதிவர வேண்டும் என்றும், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் வலதுசாரிப் பிறழ்வு முக்கிய அபாயமாக இருந்து வருவதாகவும் பெரும்பாலான நாடுகளில் சுதந்திரமான கம்யூனிஸ்டுப் புரட்சிகரத் தொழிற்சங்கங்களே நிலேயாக வைத்திருக்க வேண்டும் என்றும் இன்னும் பலவாருகவும் இவர்கள் தொடக்கத்தில் வற்புறுத்தினுர்கள்.[1] ஆனுல் தீவிரமான விவாதங்களின் போது இந்தக் கருத்துக்கள் படிப்படியாகக் கைவிடப் பட்டன. அவற்றை மறுபரிசீலனே செய்வது அவசியம் என்பதை அவற்றின் ஆதரவாளர்களே உணர்ந்தார்கள்.

1934, ஜூன்—ஆகஸ்டில் முன்னேற்பாட்டுக் கமிஷன்களில் நடந்த ஆலோசனேகள், கம்யூனிஸ்டு இயக்கத்தில் புதிய அரசியல் போக்குக்கு அடி கோலின.

காங்கிரசிற்குச் சர்வாம்சரீதியான, இன்னும் ஆழ்ந்த முன்னேற்பாடுகள் தேவை என்பதை இந்த ஆலோசனேகள் காட்டின. இந்தக் காரணத்தாலும் சர்வதேச நிலேமையின் அசாதாரணமான

[1] மை. ஆ. கூ., *495/1/3/201-204*.

சிக்கலேக் கருத்தில் கொண்டும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற் குழுவின் தலைமைக்குழு ஏழாவது காங்கிரஸ் கூடும் தேதியை 1935ம் ஆண்டின் முதல் பாதிக்குத் தள்ளிப் போடும் தீர்மானத்தை 1934, செப்டெம்பர் 5ந் தேதி நிறைவேற்றியது.[1]

கம்யூனிஸ்டு அகிலமும் அதன் கட்சிகளும் புதிய அரசியல் போக்குக்குத் திரும்பத் தொடங்குதல்

ஆலோசனையின் போது பெறப்பட்ட முடிவுகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் திட்டவட்டமான தீர்மானங்களில் உடனே வடிவாக்கப்பட்டன. உதாரணமாக, பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பணிகள் பற்றி ஆலோசிக்கும் பொருட்டு ஜூலை 9-10 தேதிகளில் நடந்த செயற்குழுத் தலைமைக் குழுவின் கூட்டங்களில் செய்யப்பட்ட தீர்மானங்களில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிய பிரச்சினை முன்பைவிட மிக விரிவாக்கப்பட்டது. ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி பற்றிய லெனினது கருத்து இந்தப் பணிகளுக்குப் பொருந்தும் வகையில் தெளிவாக வரையறுக்கப்பட்டது. ஒன்றித்த கூட்டணியின் அடிப்படையாக, மிக மிக உடனடியானவையும் வெகுஜனங்களின் நலன்களோடு சம்பந்தப்பட்டவையுமான குறைந்தபட்சக் கோரிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டன. சுயேச்சையான தொழிற்சங்கங்களை மீண்டும் அமைக்கும் பணியை மேற்கொள்ளும்படியும், முன்பு சுயேச்சையான, அதாவது சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களில் இருந்த அலுவலர்களின் சிறந்த பகுதியினர் உட்பட எல்லா பாசிஸ்டு விரோதித் தொழிலாளர்களேயும் அவற்றில் ஒன்று சேர்க்கும்படியும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு யோசனை கூறப்பட்டது.[2] இவ்வாறு, தொழிற்சங்கங்களின் ஒற்றுமையை உருவாக்குவதன் பால் கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய அணுகுமுறையை இந்தத் தீர்மானம் பிரதிபலித்தது.

1934, ஆகஸ்டு 21ந் தேதி ''பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்கு அனுப்பிய கடிதத்தில்'' கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அரசியல் செயலகம் பிரெஞ்சுக் கம்யூ

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்,'' 1934, இதழ் 28, பக்கம் 3.

[2] மை. ஆ. கூ., 495/2/189/252.

னிஸ்டுக் கட்சியின் கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது. ''சமயோசிதமான ஒத்திசைந்த கொள்கையின் உதவியால் ஒன்றித்த கூட்டணியின் அதிகபட்ச வளர்ச்சிக்கு வகை செய்யும்படியும், ஒன்றித்த கூட்டணியைக் குலைக்கும் நோக்கத்துடன் பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் வலதுசாரித் தலைவர்கள் செய்யும் முயற்சிகளைச் சிதைக்கும்படியும், உழைப்பாளிகளின் கூட்டு நடவடிக்கைகளின் அடிப்படையில் ஆங்காங்கு ஒன்றித்த கூட்டணிக் கமிட்டிகளை நிறுவும்படியும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் செயற்குழு கேட்டுக் கொண்டது. தொழிற்சங்கங்களை ஒன்று சேர்ப்பதற்காகவும் ஒன்றிணைக்கும் தொழிற்சங்கக் காங்கிரசிற்கு ஆயத்தம் செய்வதற்காகவும் கிளர்ச்சி இயக்கம் நடத்திய பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கைச் செயற்குழு ஆதரித்தது. காண்டன் தேர்தல்களின் இரண்டாவது வாக்களிப்பின் போது சோஷலிஸ்டு வேட்பாளருக்கோ அல்லது கம்யூனிஸ்டு வேட்பாளருக்கோ, ஒருவருக்குப் பெரும்பான்மை வாக்குக்கள் கிடைப்பதை நோக்கமாகக் கொண்டு பரஸ்பரம் வேட்பாளர்களை வாபஸ் பெறுவதுபற்றி பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முயலுமாறு செயற்குழு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு யோசனை கூறியது.

பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியுடன் ஒற்றுமை பெறுவதற்கு, அதாவது, அதனுடன் ஸ்தாபனரீதியாக ஒன்று சேர்வதற்கு முயல்வதன் வாய்ப்புக்கள் பற்றிய பிரச்சினைக்கும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சாதகமான பதில் அளித்தது. இந்த ஒற்றுமையை ஏற்படுத்தும் வழி கடினமானது என்றும், பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி பூர்ஷ்வா வர்க்கத்துடன் தொடர்புகளை அறவே துணித்துக் கொண்டு மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதன் அடிப்படையிலேயே ஒற்றுமை சாத்தியம் என்றும் செயற்குழுவின் கடிதம் குறிப்பிட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தினதும் அதன் பிரிவுகளுடையவும் கூட்டுச் சிந்தனையும் கூட்டு அனுபவமும் புதிய அரசியல் போக்கைப் படிப்படியாக உருவாக்கின. இந்தப் போக்கை வகுப்பதில் முக்கியமான தொண்டாக விளங்கியது பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி முன் வைத்த மக்கள் கூட்டணி என்னும் கோஷம். பாசிஸ்டுச் சங்கங்களை அடக்கி, அவற்றின் ஆயுதங்களைப் பறித்து, அவற்றைக் கலைத்துவிடும் பொருட்டும், உழைப்பாளிகளின் ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் காப்பதற்காகவும், ''இருநூறு குடும்பத்தின

ரால்''[1] சுரண்டி ஒடுக்கப்பட்டவர்கள் எல்லோருடையவும் உடனடியான பொருளாதார நலன்களின் நிறைவேற்றத்துக்காகவும் அமைந்த, எல்லாப் பாட்டாளி வர்க்க, ஜனநாயகச் சக்திகளினதும் போராட்டச் சங்கம் இது. மக்கள் கூட்டணி அமைக்கும் செயல்திட்டம் மொரிஸ் தோரேஸால் நாண்ட் நகரில் 1934, அக்டோபர் 24ந் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் முதன்முதலாக அறிவிக்கப்பட்டது. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இந்தத் தீர்மானம் கம்யூனிஸ்டு அகிலத்தின் சில அலுவலர்களது கருத்து வளர்ச்சியை முந்திக் கொண்டுவிட்டது. நாண்ட் நகரில் பேசுவதற்குச் சில மணி நேரம் முன்பு ''மக்கள் கூட்டணி பற்றிய சூத்திரத்தையும் கருத்தையும் கைவிடும்படி''[2] மொ.தோரேஸுக்கு யோசனை கூறப்பட்டதற்குக் காரணம் இதுவே.

பாசிஸத்துக்கு எதிராக சக்திகளின் விரிவான ஐக்கியத்தை அணிதிரட்டும் தேவைக்குப் பொருத்தமாய் இருந்த இந்தப் புதிய கருத்து விரைவில் மக்களின் அறிவுகளை ஆட்கொண்டு, அரசியல் போராட்ட நடைமுறையில் இடம் பெற்றது. 1934, டிசம்பர் 9ந் தேதி நடந்த கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழுக் கூட்டத்தில் இதற்கு ஆதரவு கிடைத்தது. இந்தக் கூட்டத்தில், கம்யூனிஸ்டு அகிலத்தின் பெரும்பாலான பிரிவுகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் (170க்கும் மேற்பட்டவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்), ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக்கும் விரிவான மக்கள் கூட்டணிக்குமான போராட்டத்தில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அனுபவம் பற்றி மொ.தோரேஸ் அறிக்கை சமர்ப்பித்துப் பேசினார். புதிய கொள்கையும் செயல் ஒற்றுமை பற்றிய உடன்படிக்கையும் வெகுஜனங்களிடையே கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கையும் மதிப்பையும் உயர்த்தி விட்டன, ''கட்சி, நாட்டின் வாழ்க்கையில் செயல்திறனுள்ள அரசியல் காரணி ஆகிவிட்டது''[3] என்று மொ. தோரேஸ் காட்டினார்.

அறிக்கையாளர் பல சிக்கலான பிரச்சினைகளை முழுக் கூட்டத்தின் ஆலோசனைக்கு முன்வைத்தார். தொழிற்சங்க ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வழிகளும் நிபந்தனைகளும், மக்கள் கூட்

---

[1] "L'Humanité", 25. X. 1934.

[2] மொரிஸ் தோரேஸ். மக்களின் மைந்தன். மாஸ்கோ, 1960, பக்கம் 90.

[3] மை. ஆ. கூ., 495/2/192/15.

டணியின் செயல்திட்டத்தில் ஏகபோகங்களைத் தேசிய உடைமை ஆக்கும் கோஷம், அமையும் வாய்ப்பு பெற்றிருந்த சோஷலிஸ்டு கள், தீவிர-சோஷலிஸ்டுகள் அரசாங்கம் பாசிஸ்டுக் கும்பல்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு உழைப்பாளிகளின் நலன்களுக்கு ஏற்ற முறைகளைக் கையாண்டால் அதற்கு ஆதரவு அளிப்பது ஆகியவை இந்தப் பிரச்சினைகள். இத்தகைய அரசாங் கத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்வதா கூடாதா என்ற பிரச் சினைப்பற்றிப் பொதுவான நோக்கு நிலையைத் திட்டப்படுத்தும் படியும் மொ. தோரேஸ் யோசனை கூறினார். கம்யூனிஸ்டு அகி லத்தினது செயற்குழுத் தலைமைக்குழுவின் கூட்டத்தில் நடந்த விவாதங்களில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியினது புதிய கொள் கையின் சில அம்சங்கள் விஷயத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் தனித் தனி உறுப்பினர்கள் (ஸ. லஸோவ்ஸ்கி) காழ்ப்பு கொண் டிருப்பது புலப்பட்டது. ஒன்றித்த கூட்டணியின் பெருத்த முக்கியத் துவத்தைக் குறிப்பிட்ட அதே சமயத்தில், இதனால் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கைகள் கட்டப்பட்டுவிடாவா, வெகுஜனங்களிடையே ''குடியரசு மனப்பான்மை அதிகரிக்கும்'' அபாயம் வளர்ந்து விடாதா, தொழிலாளி வர்க்கத்தில் புரட்சி ஆர்வம் வளர்வதை இது தடுக்காதா என்ற சந்தேகங்களைச் சில பேச்சாளர்கள் வெளி யிட்டார்கள்.[1]

1934, டிசம்பர் 9, 19 தேதிகளில் நடந்த கூட்டங்களில் செயற்குழுவின் தலைமைக் குழு புதிய கொள்கையைக் குறைத்து மதிப்பிடுவதை எதிர்த்தது. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியினது சோதனையின் சர்வதேச முக்கியத்துவத்தை அது வலியுறுத்தியது. கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கங்களின் புதிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குறுகிய பிரிவுவாத,இயந்திர ரீதியான அணுகுமுறையை கூஸினெனும் மனுயீல்ஸ்கியும் ஆதாரபூர்வமாகக் கடும் விமர் சனத்துக்கு உள்ளாக்கினார்கள். பழைய கிளிப்பிள்ளை வாதங்களை ஆதாரமாகக் காட்டுவதும், பாசிஸ்டு விரோத இயக்கத்தில் விரி வான வெகுஜனங்களை ஈடுபடுத்தும் போக்கைச் சீர்திருத்தவாதம் என்றும் வலதுசாரிச் சந்தர்ப்பவாதம் என்றும் குற்றம் சாட்டுவ தும் இந்த அணுகுமுறைக்கு இயல்பானவை என்று அவர்கள் காட் டினார்கள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிகள் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையை

---

[1] மை. ஆ. கூ., 495/2/192/154-156.

ஆதரித்தார்கள். ''எங்கள் கட்சி கடைப்பிடித்த செயல் ஒற்றுமை பற்றிய துணிவுள்ள கொள்கையை இ.வி. ஸ்தாலின் ஆதரித்தார். இந்தக் கொள்கை லெனினியத்தின் உணர்வுக்குப் பொருந்துகிறது என்று அவர் கூறினார்'' என எழுதினார் மொ. தோரேஸ்.[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அளித்த ஆதரவு, ஒற்றுமைக் கொள்கையை விரிவுபடுத்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு உதவியது. கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கையின் பயனாக 1935ம் ஆண்டு நடுவில் பிரான்சில் மக்கள் கூட்டணி அமைக்கப் பட்டது. கடைக்கோடி வலதுசாரி பூர்ஷ்வாக் கட்சிகளுக்கு எதிர் நிறையாக ''இடதுசாரிக் கூட்டணிகள்'' என்ற பெயரால் முன்பு அமைக்கப்பட்டு வந்த கூட்டணிகளுக்குக் கோட்பாட்டு நோக்கில் முற்றும் மாறுபட்ட தன்மை கொண்ட ஜனநாயக சக்திகளின் ஐக்கியம் முதன் முறையாக உருவானதை இது குறித்தது. ''இடதுசாரிக் கூட்டணிகள்'' பூர்ஷ்வாக்களின் தலைமையில் இயங்கி வந்தன. முடிவில் அவை பூர்ஷ்வா வர்க்கத்தின் கொள்கையைச் செயல்படுத்தின. தவிரவும் அவை மேல்படிக் கூட்டணிகளாக விளங்கின. மக்கள் கூட்டணியோ, விரிவான உழைப்பாளி வெகுஜனங்களின் ஐக்கியமாக இருந்தது. அதற்கு அடிப்படையாக இருந்தவை வெகுஜனங்களின் செயல்களே. மக்கள் கூட்டணியின் தலைமைச் சக்தியாக இருந்தது தொழிலாளி வர்க்கம். அது விவசாயிகளுடனும் நகரக் குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களுடனும் கூட்டு சேர்ந்து செயல்பட்டது. மக்கள் கூட்டணியின் முக்கியக் குறிக்கோள்கள் எல்லா உழைப்பாளிகளுடையவும் எல்லா ஜனநாயகவாதிகளுடையவும் ஆர்வம் நிறைந்த முயற்சிகளுக்கு ஏற்றவையாக இருந்தன. முதலாளித்துவத்தின் மிகத் தீய பிற்போக்கான பாசிஸத்தை எதிர்த்து முறியடித்து வெகுஜனங்களின் உரிமைகளைக் காப்பது இந்த முயற்சிகளின் நோக்கம்.

பிரான்சில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைக்கப்பட்டதும் மக்கள் கூட்டணிக் கொள்கைக்கு மாற்றமும் பிரெஞ்சுத் தொழிலாளர் இயக்கத்தை ஐரோப்பாவின் முதலாளித்துவ நாடுகளுக்கிடையே பிரதானமான முதல் இடத்துக்கு இட்டுச் சென்றன.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியும் விரிவான மக்கள் கூட்டணியும் அமைப்பதற்கான இயக்கம் ஸ்பெயினிலும் மிகக் கொடிய

[1] மொ. தோரேஸ். மக்களின் மைந்தன், பக்கம் 90.

36*

பயங்கர நடவடிக்கைகள் பேயாட்டம் நடத்திக் கொண்டிருந்த நிலைமைகளில் பரவலாயிற்று. அஸ்தூரி என்னும் இடத்தில் நடந்த கிளர்ச்சி தோல்வி அடைந்த பின்னர் கம்யூனிஸ்டுகள் மீதும் முன்னணித் தொழிலாளர்கள் மீதும் அரசாங்கம் பயங்கரமுறைகளால் தாக்குதல் நடத்தியது. பொதுக் குற்ற மன்னிப்பின் பொருட்டும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் யுத்தகால நிலைமையை ரத்து செய்யும் பொருட்டும் நடத்திய கிளர்ச்சி இயக்கத்தில் தொழிலாளர் ஸ்தாபனங்களுடன் தங்கள் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளக் கம்யூனிஸ்டுகளுக்கு இயன்றது. அதோடு, பூர்ஷ்வா-ஜனநாயகச் சக்திகளுடன் தங்கள் தொடர்புகளைச் சீர்படுத்திக் கொள்வதிலும் அவர்கள் வெற்றி அடைந்தார்கள். பல்வேறு இடதுசாரி அரசியல் குழுக்கள் பழைய வகையான கூட்டணியை அமைக்க முயன்றன. ஆயினும் மக்கள் கூட்டணி அமைப்பதற்கான முயற்சியில் உண்மையான வெற்றிகள் பெறக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு **1935**ம் ஆண்டுக் கோடையில் வாய்த்தது. ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போராட்ட அனுபவம் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களுக்கு முன்னேற்பாடுகள் செய்வதில் முக்கியப் பங்கு ஆற்றியது.

கிரீஸ், இத்தாலி, பிரிட்டன், செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றினதும் வேறு அனேக நாடுகளுடையவும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் புதிய போக்கைக் கடைப்பிடிப்பதில் பெருத்த முன்னேற்றம் அடைந்தன. இந்தக் கட்சிகளின் போராட்டப் பணிகள் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களில் நடந்த விவாதத்தின் விளைவாகக் கோட்பாட்டு நோக்கில் புதிய முடிவுகள் செய்யப்பட்டன, அல்லது இன்னும் விடை காண வேண்டியிருந்த பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுகளுடைய பணிகள் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு **1934**, டிசம்பர் தொடக்கத்தில் ஆலோசனை செய்து கம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிற்சங்கக் கொள்கையைப் பரந்த நோக்குடன் அணுகியது. புரட்சிகரத் தொழிற்சங்கங்கள் அமெரிக்கத் தொழில் சம்மேளனத்தில் சேர்வதற்கு ஏற்பாடு செய்வதோடு தொழிலாளர்களின் அன்றாட நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு மிக ஊக்கத்துடன் விரிவான போராட்டத்தை அங்கே நடத்தும்படியும், அமெரிக்கத் தொழில் சம்மேளனத்தில் கம்யூனிஸ்டுகளின் பணி

''சிறுபான்மையினர் இயக்கத்தை'' அல்லது கம்யூனிஸ்டுகளுக்கு நெருக்கமான தொழிலாளர்கள் மட்டும் அடங்கிய ''எதிர்த்தரப்பை'' நிறுவுவதுடன் நின்றுவிடாதவாறு பார்த்துக் கொள்ளும்படியும், அமெரிக்கத் தொழில் சம்மேளனத்தின் பெருந்திரளான உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெறும்படியும்''[1] யோசனை கூறப்பட்டது. இதன் தொடர்பாக, கம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிற்சங்கக் கொள்கை சம்பந்தமான சில பழைய கோஷங்கள், உதாரணமாக, ''பொருளாதாரப் போராட்டங்களுக்குச் சுதந்திரமான தலைமை'' என்ற கோஷம், விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டன. இந்தக் கோஷத்தின் குறுகிய நோக்கை விளக்கினுர் வ. கொலாரவ். ''போராட்டத்துக்குச் சுதந்திரமான தலைமையைக் கடைப்பிடிக்கும் பாவனையில் கம்யூனிஸ்டுகள் நடப்பில் இந்தப் போராட்டத்துக்கு வெளியே இருந்து விடுவார்கள்''[2] என்றுர் அவர். வெகுஜனத் தொழிலாளர்-பண்ணையினர் கட்சி அமைப்பது பற்றிய அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கும் ஒப்புதல் பெற்றது.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைப்பதற்கான போராட்டத்தில் கிரேக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அனுபவத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அரசியல் செயலகமும் தலைமைக் குழுவும் 1934ன் இறுதியிலும் 1935ன் தொடக்கத்திலும் பகுத்தாராய்ந்தன. கிரேக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைக்கு அவை ஒப்புதல் அளித்தன. ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தை பாசிஸத்துக்கு எதிராகப் போராட வல்ல எல்லாக் கட்சிகள் விஷயத்திலும் சமூக வட்டாரங்கள் விஷயத்திலும் கடைப்பிடிக்கும்படி யோசனை கூறின.[3]

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியின் 13வது காங்கிரசுக்கான முன்னேற்பாடு பற்றி ஹாரி போலிட்டின் அறிக்கைமீது கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு 1935 மார்ச்சு மாதம் விவாதம் நடத்தியது. ஹாரி போலிட்டின் அறிக்கையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசுக்காகப் பிரச்சினையை எடுத்துரைக்கும் விதத்தில் அவர் தயாரித்திருந்த கட்டுரையும் ஒன்றித்த கூட்டணிக் கொள்கையில் பிரிவுவாதத்தைக் களைந்து

[1] மை. ஆ. கூ., 495/2/191/124.

[2] மை. ஆ. கூ., 495/2/191/88.

[3] மை. ஆ. கூ., 495/2/196/87 , 93, 103.

அகற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. தொழிற்கட்சித் தொழிலாளர்களால் ஏற்க முடியாதவையும் நடைமுறைப் பயன் விளைக்காதவையுமான நிபந்தனைகளை அவர்களுடன் செயல் ஒற்றுமைக்கு விதிக்கும் வழக்கத்தைக் கட்டுரை ஆசிரியர் கண்டனம் செய்திருந்தார்.[1] சர்வதேச அளவில் சமூக-ஜனநாயகவாதிகளுடன் ஒன்றித்த கூட்டணி அமைப்பது சம்பந்தமான அனேகப் பிரச்சினைகளையும் ஹாரி போலிட் எழுப்பியிருந்தார். இந்த யோசனைகள் புதிய கொள்கைப் போக்கை வகுப்பதில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியின் குறிப்பிடத்தக்க தொண்டாக விளங்கின.

இடதுசாரி-பிரிவுவாதக் குழுக்களும் நபர்களும் புதிய கொள்கையை விடாப்பிடியாக எதிர்த்துவந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளும் கம்யூனிஸ்டு அகிலத்தின் உதவியால் புதுக் கொள்கைக்கு மாற்றம் நிகழ்த்தின.

கடினமான நிலைமைகளில் மறைமுகமாக வேலை செய்து, பாசிஸ்டு பயங்கரவாதிகளின் இடைவிடாத தாக்குதலுக்கு உள்ளாகி வந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1934ம் ஆண்டுக் கோடையிலேயே ஒன்றித்த கூட்டணிக்குச் செயல்தந்திரத் திருப்பத்தைக் குறித்தது. ஆனால் அதைச் செயல்படுத்திய போது ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பிரிவுவாதம் மீண்டும் தலை தூக்குவதை எதிர்ப்பட நேர்ந்தது. இது நேமன்—ரெம்மெலே குழுவினரின் "அதிதீவிர இடதுசாரிப்" போக்கின் தொடர்ச்சியாக விளங்கியது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டித் தலைமையில் ஷூபெர்ட்—ஷுல்டே குழு ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கையை மறைமுகமாகக் குலைத்தது. இடதுசாரி சமூகஜனநாயகவாதிகளுக்கு எதிராகக் கட்சிப் பத்திரிகைகளில் கிளர்ச்சி இயக்கம் நடத்தியது. இந்தக் குழு வி. பிக் மீதும் வா. ஊல்பிரிஹ்த் மீதும் அவர்கள் வலதுசாரிப் பிறழ்ச்சிக்கு உள்ளானவர்கள் என்று குற்றம் சாட்டியது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி, ஜெர்மானிய சமூக- ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் மறைமுக ஸ்தாபனங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த முதல் ஒப்பந்தங்களை அது கடுமையாகத் தாக்கியது. இந்தப் பிரிவுவாத-போலிச் சித்தாந்தவாதக் குழு கட்சிக்குத் தீங்கு விளைத்தது, அது புதிய கொள்கைக்கு மாறுவதைச் சுணக்கப் படுத்தியது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அரசியல் செயலக

---

[1] மை. ஆ. கூ., 495/2/198/63.

மும் தலைமைக் குழுவும் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை பற்றிய பிரச்சினையை 1934 அக்டோபரிலும் டிசம்பர் முடிவிலும் 1935 ஜனவரியிலும் பரிசீலனை செய்தன. அவை பிரிவு வாதிகளைக் கண்டனம் செய்து, பிரிவுவாதத்துக்கும் ''இடதுசாரிப்'' போலிச் சித்தாந்தவாதத்துக்கும் எதிராகக் கட்சியின் எல்லாப் பகுதிகளிலும் உறுதியான போராட்டம் நடத்தும்படி கம்யூனிஸ்டுக் கட்சிக்கு யோசனை கூறின. ஜெர்மனியில் விரிவான பாசிஸ்டு விரோத மக்கள் கூட்டணி அமைப்பதற்கான வழிகளையும் வாய்ப்புக்களையும் பற்றி ஆலோசனை நடத்தும்படி செயற்குழுவின் அரசியல் செயலகம் 1935, ஜனவரி 19ந் தேதி செய்த தீர்மானத்தில் யோசனை கூறியது.[1] செயற்குழுவின் ஒத்துழைப்பு, ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அரசியல் தலைமைக் குழு (போலிட்பியூரோ)வின் பெரும்பான்மை உறுப்பினர்களையும் பின்னர் மத்தியக் கமிட்டி அனைத்தையும் படைப்புத்தன்மை வாய்ந்த மார்க்சிய-லெனினியக் கொள்கையின் நிலைகளில் ஒற்றுமைப்படுத்தவும், ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி, மக்கள் கூட்டணிக் கொள்கையை பாசிஸ்டு ஜெர்மனியின் நிலைமைகளுக்கு ஏற்ப விரிவாகச் செப்பம் செய்யவும் வி. பிக், வா. ஊல்பிரிஹ்த் இருவருக்கும் உதவியது.

பாசிஸ்டு சர்வாதிகாரத்தின் நிலைமைகளில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக்காகவும் மக்கள் கூட்டணிக்காகவும் போராட்டம் நடத்துவதில் ஓரளவு அனுபவமும், மிகக் கொடிய துன்புறுத்தல்கள் நிறைந்த சூழலிலும், உழைப்பாளிகளிடையிலும் பரவியிருந்த வெகுஜன பாசிஸ்டு ஸ்தாபனங்களின் வலைப்பின்னல் நிலவுகையிலும் பாசிஸ எதிர்ப்பு வேலை நடத்துவதில் அனுபவமும் பெற்று, ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசுக்கு வந்தது.

கம்யூனிஸ்டு அகிலம் பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் பிரிவுவாதத் தவறுகளைக் களைவதற்கு உதவியது. இங்கே பிரிவுவாதத் தலைமை நீண்ட காலம் வரை பாசிஸ அபாயத்தைச் சரிவர மதிப்பிடவில்லை. பெரும்பாலான விவசாயி வெகுஜனங்களைக் கொண்ட வேளாண்மைச் சங்கத்தையும் சமூக-ஜனநாயகக் கட்சியையும் அது முதன்மையாகத் தாக்கி வந்தது. 1934, மே 19ந் தேதி நிகழ்ந்த பாசிஸ்டு ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு, ''இடது

[1] மை. ஆ. கூ., 495/3/439/71.

சாரிப்'' பிரிவுவாதிகள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ளாததோடு அவற்றை இன்னும் ஆழ்ந்தவை ஆக்கி வேளாண்மைச் சங்கத்தையும் சமூக-ஜனநாயகக் கட்சியையும் முன்னிலும் வன்மையாகத் தொடர்ந்து தாக்கினர்கள். பாசிஸத்துக்கு எதிராக அவற்றுடன் ஒன்றித்த கூட்டணி அமைத்துக் கொள்ளவோ, அவர்கள் முயலவே இல்லை.[1] கம்யூனிஸ்டு அகிலம், கி. திமீத்ரொவையும் வ. கொலாரவையும் தலைவர்களாகக் கொண்ட கட்சியின் போல்ஷிவிக் மையத்தை ஆதரித்தது. கட்சித் தலைமை மாற்றி அமைக்கப்பட்டது கட்சியின் போக்கைத் திருத்த உதவியது. பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி தனது அணிகளில் இருந்த பிரிவுவாதத்தை அகற்றுவதற்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கணிசமாக உதவியது. கட்சி வெகுஜனப் போராட்டத்தின் அகன்ற சாலையில் முன்னேறவும் ஒன்றித்த கூட்டணி, மக்கள் கூட்டணிக் கொள்கையைத் திறமையாகக் கடைப்பிடிக்கவும் அது ஒத்தாசை செய்தது.

காலத்துக்குப் பொருந்தாத தீர்மானங்களை மறு பரிசீலனை செய்யும் நிகழ்முறை ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் தொடங்கியது. இங்கே நிலைமை சிக்கலாய் இருந்தது. ஏனெனில் அதன் பிரபலத் தலைவரும் புரட்சி இயக்கத்துக்குப் பெருந் தொண்டு ஆற்றியவருமான பேலா கூன் ஓரளவு பிரிவுவாதப் போக்கைக் காட்டினர். ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிச் செயல்தந்திரம் பாசிஸ்டு எதிர்ப்புக் கொள்கைத் திட்டத்தை அல்ல, முதலாளித்துவ எதிர்ப்புக் கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று 1935ம் ஆண்டு வசந்தகாலத்தில் அவர் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.[2] ஆனல் அந்தக் காலத்திலேயே கட்சி ஹோர்த்தியின் பிற்போக்கு அரசாங்கத்துக்கு எதிரான நடைமுறைப் போராட்டத்தில் எல்லா பாசிஸ்டு விரோதிகளையும் ஒன்று திரட்டுவதற்கான கொள்கையையும் வடிவங்களையும் தேடத் தொடங்கியிருந்தது.

பாசிஸ்டு பயங்கர முறைகளுக்கு எதிராக நடந்த விரிவான சர்வதேசக் கிளர்ச்சி இயக்கம் பாசிஸ்டு விரோதிகளை நெருக்க

---

[1] பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு. மாஸ்கோ, 1960 பக்கம் 303.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ் 15, பக்கம் 13.

மாக இணைப்பதற்குப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவரான எ.தேல்மனையும் ஃபின்லாந்துப் பாட்டாளி வர்க்கத்தின் துணிவுள்ள போராட்ட வீரர் தோ. அந்திக்காய்னெனையும் பிற புரட்சி வீரர்களையும் காப்பதற்காகத் தொழிலாளி வர்க்கத்தினதும் முற்போக்கு அறிவுஜீவிகளதும் இயக்கம் பல நாடுகளில் விரிவாக நடந்தது. பாசிஸத்தின் கைதிகளுடன் ஒருமைப்பாட்டு இயக்கங்களின் போது பல்வேறு அரசியல் போக்குக்கள் கொண்ட பாசிஸ்டுவிரோதிகளின் ஒத்துழைப்பு சீராக அமைந்தது.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆக்கத்தன்மை கொண்ட முடிவுகளுடனும் பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் ஆழ்ந்த அனுபவத்துடனும் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசுக்கு வந்தன.

அதே சமயத்தில் காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளிலும் புதிய அரசியல் தீர்வுகளுக்கான தேட்டங்கள் நடந்தன. இந்த நாடுகளில் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும் சேர்ந்து செயல்படுவது சூழ்நிலை காரணமாக இன்றியமையாததாக இருந்தது.

அந்தக் காலப் பகுதியில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி கடினமான கட்டத்தில் இருந்தது. மீண்டும் கட்சித் தலைமைக்கு வந்துவிட்ட இடதுசாரிப் பிரிவுவாதிகள் லீ லீ-ஸான் தலைமையில் எதார்த்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் நாடு முழுவதிலும் நகரங்களை ஆயுத பலத்தால் கைப்பற்றுவது, குவோமிந்தான் அரசாங்கத்தின் இராணுவ பலத்தோடு நேரடியாகப் போரிடுவது என்ற போக்கை மீண்டும் கடைப்பிடித்தார்கள். சீனாவை அடிமைப்படுத்த முயன்றுகொண்டிருந்த ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒன்றித்த கூட்டணி அமைப்பதாகச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி பிரகடனம் செய்திருந்த கொள்கை ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிக்கப்படவில்லை. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்க முயன்றுகொண்டிருந்த தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் பகுதியினருடனே இராணுவ-அரசியல் குழுக்களுடனே ஒன்றித்த கூட்டணி ஏற்படுத்திக் கொள்ளும் சாத்தியக் கூற்றை இடதுசாரியினர் மறுத்தார்கள். குட்டி பூர்ஷ்வாக்களைக் கூடப் புரட்சி எதிரிகளாக அவர்கள் கருதினார்கள். துர்ச்சாகசப் போக்கு, ''இடதுசாரிப்'' பிறழ்வு, ஜப்பானியர்களுக்கு எதிராக அகில தேசியக் கூட்டணி அமைப்பதன் இன்றியமையாமையைப்

புரிந்துகொள்ளாதது, சமயோசிதமற்ற செயல்தந்திரம் ஆகியவை சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைக்குப் பெருங் கேடு விளைத்தன. சியாங் காய்ஷேக்கின் ஐந்தாவது படையெடுப்பை முறியடிக்க முடியாமைக்கும் புரட்சி அடித்தளங்களின் விரிவான பிரதேசங்கள் இழக்கப்பட்டதற்கும் இந்தத் தவறுகளும் ஒரு காரணம் ஆகும். கடும் போர்கள் நிகழ்த்திப் பெருத்த இழப்புக் களை அனுபவித்தவாறு சீனுவின் செஞ்சேனை, 1934—1935ல் வட மேற்குப் பகுதிக்கு ஊடுருவிச் சென்றது. அங்கே, சோவியத் யூனியனின் எல்லைகளுக்கு அருகாமையில் புரட்சி அடித்தளங்களின் புதிய பிரதேசம் உருவாக்கப்பட்டது.

1934ம் ஆண்டில் ஏற்பட்ட தோல்விகள் காரணமாக ''இடது சாரியினரின்'' துர்ச்சாகசக் கொள்கைப் போக்கைச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி கைவிடுவது அவசியம் ஆயிற்று. ஜப்பானிய ஆக்கிரமிப்பு விரிவடைந்ததனுல் ஜப்பானிய விரோத தேசபக்தச் சக்திகளை ஒன்று திரட்டுவதற்கு உடனே முயற்சி செய்வது கம்யூனிஸ்டுகளின் பணி ஆகி விட்டது. 1935, ஜூன் மாதம், புரட்சி அடித்தளங்களின் மத்திய அரசாங்கமும் புரட்சி-இராணுவ சபையும் வெளியிட்ட வேண்டுகோளில், ''ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கும் சியாங் காய்-ஷேக்குக்கும் எதிராகப் போராடுவோர் அனைவரதும் மக்கள் கூட்டணி''[1] அமைக்கும் கருத்து முன்வைக்கப்பட்டது.

புதிய கொள்கையைத் தயாரிப்பதில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பெருத்த உதவி புரிந்தது. செயற்குழுவின் செயலூக்கமுள்ள உதவியுடன் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி, தாற்காலிகத் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் ஆகியவற்றின் செய்தி (இது 1935, ஆகஸ்டு 1ந் தேதிப் பிரகடனம் என்ற பெயரால் பிரபலம் அடைந்தது) தயாரிக்கப்பட்டது. உள்நாட்டுப் போராட்டத்தை நிறுத்தும்படி இது யோசனை கூறிற்று. சியாங் காய்-ஷேக் படைகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்தவும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தவும் செஞ்சேனை தயாராய் இருப்பதாக இந்தச் செய்தி அறிவித்தது.[2]

---

[1] "Rundschau", 1935, N 34, S. 1690.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ்கள் 33-34, பக்கங்கள் 106-111.

சீனுவில் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை ஒன்றிணைக்கும் கொள்கையில் மிக முக்கியமான திருப்பு முனைகளில் ஒன்ருக இது விளங்கியது.

பல காலனிகளினதும் ஆதீன நாடுகளுடையவும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒத்துழைப்புடன் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக்காக முயற்சி செய்யும் கோஷத்தை அறிவித்தன. இந்தக் கருத்து கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது, நான்காவது காங்கிரசுகளின் தீர்மானங்களிலும் அதன் வேறு அனேக தஸ்தாவேஜுகளிலும் அடங்கி இருந்தது.

தொடக்கத்தில் கம்யூனிஸ்டு கட்சிகள் இத்தகைய கூட்டணி அமைக்க முயன்றன எனினும் இதைப் பற்றிய பிரிவுவாத எண்ணங்களைப் போக்கிக் கொள்ள அவற்ருல் இன்னும் முடியவில்லை. உதாரணமாக, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1934 டிசம்பரில் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிபற்றிய கோஷத்தை முன்வைத்தபோது இக்கூட்டணியில் தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் ஏகாதிபத்தியவிரோதக் குட்டி பூர்ஷ்வாக்களும் மட்டுமே இடம் பெற வேண்டும் என்று எண்ணியது. மற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு வட்டாரங்களைக் கூட்டணியில் சேர அது அழைக்கவில்லை. தொழிலாளர்-விவசாயிகளின் சோவியத் குடியரசை நிறுவுவதும் நிலப் பிரபுக்களின் நிலங்களையும் முதலாளிகளின் தொழிற்சாலைகளையும் பறிமுதல் செய்வதும் இந்தக் கூட்டணியின் குறிக்கோளாகத் தருணம் வருமுன்பே அறிவிக்கப்பட்டது.[1] இது புதிய கோஷத்தின் குறுகிய புரிவு. எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும் அடங்கிய விரிவான ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு இந்தப் புரிவு எதார்த்தத்தில் தடையாக இருந்தது. இத்தகைய கருத்துக்களைப் போக்கிக் கொள்வது பின்னரும் அவசியம் ஆயிற்று.

லத்தீன் அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கூட்டு மகாநாடு 1934, அக்டோபர் மாதம் மாண்டிவிடியோ நகரில் நடந்தது. நிலப் புரட்சிக்கும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய-விடுதலைப் போராட்டத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்ற முடிவுக்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வந்தன. எனவே, ''மக்களின் மிக விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியை அமைப்பது''[2] என்ற பணியை அவை முன்வைத்தன. மகாநாட்டில் கலந்து கொண்டவர்களால் தேசிய-சீர்திருத்தவாத, குட்டி

---

[1] மை. ஆ. கூ., 494/1/300/45, 50.
[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ் 9, பக்கம் 31.

பூர்ஷ்வாக் கட்சிகள்பால் முன்பு இருந்த பிரிவுவாதப் போக்கை முழுமையாகக் கைவிட முடியவில்லை என்றாலும், ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான பொதுப் போராட்டத்தின் பொருட்டு இந்த ஸ்தாபனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வழி தேடுவது அவசியம் என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இந்தக் கொள்கையின் அடிப்படையில் ஏகாதிபத்தியவிரோத ஸ்தாபனங்களையும் இயக்கங்களையும் ஒன்றிணைக்கும் பொருட்டு விரிவான போராட்டத்தை பிரேசில், சிலி, கியூபா ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொடங்கி வைத்தன.

காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக்கான போராட்டத்தின் பிரச்சினைகளைப் பற்றிக் ''கம்யூனிஸ்டு அகிலம்'' பத்திரிகை ஏழாவது காங்கிரசுக்கு முன் ஒரு பெரிய கட்டுரை வெளியிட்டது. தேசிய-விடுதலை இயக்கத்தில் கம்யூனிஸ்டுகள் புரிந்த சில பிரிவுவாதத் தவறுகள் இந்தக் கட்டுரையில் விமர்சிக்கப்பட்டிருந்தன. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் விரிவான ஒற்றுமைக்காகச் சில கம்யூனிஸ்டுக் கட்சிகள் செய்த முயற்சிகளின் அனுபவம் பகுத்து ஆராயப்பட்டிருந்தது. இவ்வாறு ஒருங்கு திரட்டுவதன் சாத்தியக்கூறு, தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் முக்கியத் திரளை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதன் சாத்தியக்கூறு உட்பட, ஆராயப்பட்டிருந்தது. பின்தங்கிய நாடுகளில் உருவாகியுள்ள நிலைமைகளில் சோவியத் ஆட்சியை நிறுவும் கோஷம் வெறும் பிரசார கோஷமாகவே முன்வைக்கப்படலாம் என்றும், இந்த கோஷத்தை நிலப்பிரபுக்களின் நிலங்களை ஈடு செலுத்தாமல் பறிமுதல் செய்யும் கோரிக்கை போன்றே குறித்த ஒடுக்கப்பட்ட நாட்டில் புரட்சியின் கட்டம், போராட்டத்தின் தனிப்பட்ட சிறப்பு இயல்புகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் முன்வைக்கக் கூடாது என்றும் கட்டுரை வலியுறுத்தியது. ''ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தேசிய பூர்ஷ்வா வர்க்கத்துடன் சேர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்வதில் ஏற்படக் கூடிய அபாயங்களைச் சாக்கிட்டு ஒன்றித்த தேசியக் கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கையாள மறுப்பது உண்மையில் தேசிய-விடுதலைப் புரட்சிகளுக்கு ஆயத்தம் செய்ய மறுப்பது ஆகும். இதன் விளைவாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் விரிவான மக்கள் இயக்கத்திலிருந்து கட்டாயமாகத் தனிப்பட்டுவிடும் அபாயம் உண்டாகும்''[1] என்று கட்டுரை கூறியது.

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', **1935**, இதழ் **20-21**, பக்கம் **109**.

பாசிஸத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் போராட்டங்களின் போது உருவான கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கை, சமூக-ஜன நாயகத் தொழிலாளர்கள் மீது பாதிப்பு விளைத்தது. இவர்களில் பலர், பாசிஸ்டு வன்முறைகளை எதிர்த்துக் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து ஊக்கத்துடன் போராடும்படி தங்கள் கட்சிகளிடம் கோரத் தொடங்கினர்கள்.

1934, அக்டோபர் 10ந் தேதி, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற் குழு சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் தலைவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. போராடும் ஸ்பானியப் பாட்டாளி வர்க்கத்துக்கு உதவுவதற்காக உடனே கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அது யோசனை கூறியது. இந்த விஷயம் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொருட்டுச் செயற்குழு மொ. தோரேசையும் மா. கஷேனையும் நியமித்தது. பேச்சுவார்த்தைகள் அக்டோபர் 15ந் தேதி பிரஸ்ஸெல்ஸ் நகரில் நடந்தன. கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனை உளமார்ந்தது என்பதைச் சந்தேகிக்க சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் தலைவர்களான எ. வாந்தர்வெல்டும் ஃபி. ஆட்லரும் பேச்சுவார்த்தைகளின் போது முயன்றார்கள். ஒரு மாதம் சென்ற பின்பே சோஷலிஸ்டுத் தொழி லாளர் அகிலத்தின் செயற்குழு கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற் குழுவின் வேண்டுகோளின் மீது அதிகார பூர்வமான தீர்மானம் நிறைவேற்றியது. ஸ்பானியத் தொழிலாளர்களுக்கு உதவும் பொ ருட்டுக் கூட்டுக் கிளர்ச்சி இயக்கம் நடத்தும் யோசனையை அது எதார்த்தத்தில் நிராகரித்துவிட்டது. இத்தகைய உதவிக்கு ஏற் கனவே நேரம் கடந்துவிட்டது என்று அது கூறியது. சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் செயற்குழுக் கூட்டத்தில் பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் சோஷலிஸ்டுக் கட்சிகளது பிரதிநிதிகளும் வேறு சிலரும் "சிறுபான்மையினர் அறிக்கை" வெளியிட்டார்கள். கம்யூனிஸ்டு அகிலத்துடன் தொ டர்பு கொள்ளும்படியும், "யுத்தத்துக்கு எதிராகவும் ஜனநாயக உரிமைகள் நிலவும் நாடுகளில் அவற்றைக் காப்பதற்காகவும் பாசிஸம் இந்த சுதந்திரத்தை அழித்துவிட்ட நாடுகளில் புரட்சிப் போராட்டம் நடத்துவதற்காகவும் சர்வதேச அளவில் செயல் ஒற்றுமை பெறுவதற்கான நிலைமைகளைத் தேடும் படியும்" இந்த அறிக்கை கோரியது.[1] ஒன்றித்த கூட்டணி பற்றிக் கம்யூனிஸ்டு களுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்குத் தன் பிரிவுகள் மீது

[1] „Rundschau", 1934, N 61, S. 2718.

விதிக்கப்பட்டிருந்த தடையை சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் செயற்குழு கீழ்ப்படிகளின் வற்புறுத்தல் காரணமாக நீக்க வேண்டியதாயிற்று. அந்தக் காலத்துக்குள் சில நாடுகளில் இந்தத் தடை ஏற்கனவே முறிக்கப்பட்டிருந்தது. ஆயினும் சோஷலிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைவர்கள் மட்டும் கம்யூனிஸ்டுகளுடன் ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்கு எதிராகத் தொடர்ந்து பேசி வந்தார்கள்.

எல்லா பாசிஸ்டு விரோதிகளும் ஒன்றித்துச் செயலாற்ற வேண்டும் என்ற, கம்யூனிஸ்டுகளால் அறிவிக்கப்பட்ட கருத்து முற்போக்கு அறிவுஜீவிகளின் உணர்விலும் பதியலாயிற்று. இரத்தக் கறை படிந்த பாசிஸ்டு பயங்கரமுறைகளிலும் இடைக்கால முற்போக்கு விரோத மனப்பான்மையிலும் இருந்து ஜனநாயகம், மனிதாபிமானம், படைப்பு சுதந்திரம், நாகரிகத்தின் செல்வங்கள் ஆகிய ஆதர்சங்களை உறுதியுடன் காப்பதற்கு வேளை வந்துவிட்டது என்று புரிந்துகொண்டு அறிவுஜீவிகளின் ஆயிரக் கணக்கான சிறந்த பிரதிநிதிகள் மக்கள் கூட்டணியின் இயக்கத்தில் சேர்ந்தார்கள். ம. கோர்க்கி, அ. பர்பியூஸ், ரோ. ரோலான், போ. லாஞ்செவேன், தா. மான், லெ. ஃபேஹ்த்வாங்கர், ம. அ.நேக்ஸே, ர.அல்பேர்ட்டி, ரவீந்திரநாத் தாகூர் முதலிய பல உலகப் பிரசித்தி பெற்ற கலைஞர்களும் விஞ்ஞானிகளும் பாசிஸ்டு விரோத ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ளுமாறு ஆர்வத்துடன் வேண்டுகோள் விடுத்தார்கள்.

பாசிஸ்டு விரோதிகளின் அணிகளில் முதலாவது சோஷலிஸ அரசின் மீது பற்றும் பரிவும் நாளுக்கு நாள் வளர்ந்தன. முன்னணி உழைப்பாளிகளும் அறிவுஜீவிகளின் சிறந்த பிரதிநிதிகளும் சோவியத் யூனியனையே நம்பி இருந்தார்கள். உலகத்தின்மீது கவிந்திருந்த பாசிஸ அடிமைத்தன அபாயத்தை அகற்றுவதற்கு ஆதாரமாக விளங்கக் கூடிய கோட்டையாக அவர்கள் சோவியத் யூனியனை மதித்தார்கள்.

புதிய கொள்கை விரிவான வெகுஜனங்களின் ஆதரவைப் பெற்றிருப்பதையும், இரத்தம் பெருக்கும் பாசிஸத்தின் வழியை அடைக்க அவர்கள் கொண்டுள்ள விருப்பத்துக்குப் பொருந்துவதையும் தனது ஏழாவது காங்கிரஸ் கூடும் தறுவாயில் கம்யூனிஸ்டு அகிலம் காண முடிந்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ்

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் 1935, ஜூலை 25ந் தேதி மாஸ்கோ தொழிற்சங்க மாளிகையில் கூடியது. ஏறக் குறைய ஒரு மாதம் காங்கிரஸ் நடவடிக்கைகள் தொடர்ந்தன. ஆகஸ்டு 21ந் தேதி நள்ளிரவில் காங்கிரஸ் நிறைவுற்றது. காங் கிரஸ் கூடிய தறுவாயில் கம்யூனிஸ்டு அகிலம் 76 கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் ஸ்தாபனங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டிருந் தது. இவற்றில் 19 ஸ்தாபனங்கள் அனுதாபமுள்ளவை என்ற காரணத்தால் உறுப்பினராக உரிமை பெற்றிருந்தன.

முந்திய காங்கிரசுக்குப் பின்னர் கழிந்த ஏழு ஆண்டுகளில் உலகில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை வளர்ந்து 3140 ஆயிரத் துக்கும் அதிகம் ஆகியிருந்தது. முதலாளித்துவ நாடுகளில் கம்யூ னிஸ்டுகளின் எண்ணிக்கை 4 லட்சத்து 45 ஆயிரத்து 300லிருந்து 7லட்சத்து 85 ஆயிரமாக அதிகரித்திருந்தது.[1] கம்யூனிஸ்டு இளை ஞர்களின் எண்ணிக்கையும் 1 லட்சத்து 27 ஆயிரத்து 230லிருந்து 2 லட்சத்து 21 ஆயிரத்து 100 ஆகியிருந்தது.[2] ஏகாதிபத்தியத் தாக்குதலின் கடினமான நிலைமைகளில் முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வேலை செய்ய வேண்டி இருந்தது. இவற் றில் 22 கட்சிகள் மட்டுமே 1935ல் சட்டபூர்வமாகவோ பாதிச்

---

[1] "Rundschau", 1935, N 43. S. 1974. 1934லும் 1935ன் முதல் பாதியிலும் நடந்த கடுமையான ஆயுதப் போராட்டத்தில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஏற்பட்ட இழப்புக்களை இந்தப் புள்ளி விவரங்கள் முழுமையாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்று தோன்றுகிறது. இந்தப் போராட்டத்தின் விளைவாகச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர் தொகை வெகுவாகக் குறைந் தது. இன்னும் பார்க்க: மை. ஆ. கூ., 494/1/400/3-4.

[2] மை. ஆ. கூ., 494/1/400/6.

சட்டபூர்வமாகவோ வேலை நடத்த முடிந்தது. ஐரோப்பாவில் இத்தகைய கட்சிகள் 11 இருந்தன. மற்றவை மறைமுகமாக இயங்கி வந்தன. கொடிய பயங்கர முறைகளுக்கு உள்ளாயின.[1]

ஏழாவது காங்கிரசின் நடவடிக்கைகளில் 513 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்கள் 65 கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் கம்யூனிஸ்டு அகிலத்தில் இணைந்திருந்த அனேக சர்வதேச ஸ்தாபனங்களையும் சேர்ந்தவர்கள். பிரதிநிதிகளில் சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கங்களின் பிரபலத் தலைவர்கள் இருந்தார்கள். இவர்களாவர்: ஹ. பக்தாஷ், ஐ. கோலான், ப. கன்ஸால்வெஷ், கி. கோட்வால்டு, ஹொ. தியாஸ், கி. திமீத்ரொவ், ழ. ழாக்மோத், அ. ஸப்பத்தோத்ஸ்கி, தா. இபரூரி, மா. கஷேன், வ. கொலாரவ், இ. கப்ளெனிக், பேலா கூன், ஓ. கூஸினென், யூ. லேன்ஸ்கி, த. மனுயீல்ஸ்கி, ஸ. நொஸாக்கா (ஒகானோ), வி. பிக், ஹா. போலிட், இ. பியாத்நித்ஸ்கி, வ. ரோஷே, இ. ஸ்தாலின், ப. தளியாத்தி, மொ. தோரேஸ், வா. ஊல்பிரிஹ்த், வி. ஃபோஸ்டர், ஹி. ஹக்பெர்க், ஹோ ஷி மின், ல. ஷார்க்கி, யா. ஷ்வேர்மா, ப. ஷ்மெரால் ஆகியோரும் பிறரும்.

காங்கிரசைத் திறந்து வைத்துப் பேசுகையில் வி. பிக் சோவியத் யூனியனின் உழைப்பாளிகளை உற்சாகமாக வாழ்த்தினர். அவர்கள் சோஷலிஸத்தை நிருமித்து, முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் உள்ளங்களில் புதிய ஆற்றலை நிறைத்து விட்டார்கள் என்றார் அவர். பூர்ஷ்வா அரசாங்கங்களின் சிறைகளிலும் நிலவறைகளிலும் கிடந்து வாடிக் கொண்டிருந்த கம்யூனிஸ்டுகளின் வீரத்தையும் தன்னலத் தியாகத்தையும் அவர் உரிய முறையில் பாராட்டினர். பாசிஸ்டுச் சிறையில் இருந்த ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகளின் தலைவர் எ. தேல்மனைக் காங்கிரஸ் கௌரவத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் நிகழ்ச்சிநிரலில் பின்வரும் விஷயங்கள் இடம் பெற்றிருந்தன: 1) கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை (அறிக்கையாளர் வி. பிக்); 2) சர்வதேசக் கண்காணிப்புக் கமிஷனின் வேலை பற்றிய விவர அறிக்கை (அறிக்கை

---

[1] வி. பிக். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் நடவடிக்கைகள் பற்றிய விவர அறிக்கை. மாஸ்கோ, 1935, பக்கம் 72.

யாளர் ஸ. அங்கரேத்திஸ்; 3) பாசிஸத்தின் தாக்குதலும் பாசிஸத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்கான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளும் (அறிக்கையாளர் கி. திமீத்ரொவ்); 4) ஏகாதிபத்திய யுத்த முஸ்தீப்புக்களும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகளும் (அறிக்கையாளர் ம. எர்க்கோலி—ப. தளியாத்தி); 5) சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்தின் பயன்கள் (அறிக்கையாளர் த. மனுயீல்ஸ்கி); 6) கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களின் தேர்தல்கள்.

ஆறுவது காங்கிரசுக்கும் ஏழாவது காங்கிரசுக்கும் இடைப்பட்ட காலத்தில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் கடந்து வந்துள்ள போராட்டப் பாதை பற்றிய மதிப்பீடு கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் நடவடிக்கைகள் பற்றி வி. பிக் சமர்ப்பித்த அறிக்கையில் தரப்பட்டிருந்தது. இது திருப்பம் நிகழ்ந்த காலப் பகுதி என்றும், கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் முன் இது மிகப் பல சிக்கலான பணிகளை வைத்தது என்றும் அறிக்கையாளர் கூறினார். உழைப்பாளிகளின் நலன்களுக்கான போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிலையுறுதிக்கும் வீரத்துக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தன. ''ஆனாலும், புயல் வேகத்தில் நிகழ்ந்த சிக்கலான அரசியல் வளர்ச்சியின் சூழ்நிலையில் அவை சில வேளைகளில் உரிய கோஷங்களை முன்வைப்பதில் காலம் தாழ்த்தன. வர்க்க சக்திகளின் ஒப்பு நிலையை அவை எப்போதும் சரியாக மதிப்பிடவில்லை. அண்மைக் காலம் வரை சரியாக இருந்தவையும் ஆனால் சூழ்நிலை மாறியதும் வழக்கொழிந்து விட்டவையுமான போராட்ட கோஷங்களையும் முறைகளையும் சில வேளைகளில் அவை விடாப்பிடியாக வற்புறுத்தின''[1] என்றார் அறிக்கையாளர். கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியமான செயற்களங்களும் இந்தக் காலப்பகுதியில் நடந்த வர்க்கப் போராட்டங்களில் அவற்றின் பாத்திரமும் அறிக்கையில் பகுத்து ஆராயப்பட்டிருந்தன. பாசிஸத்துடன் போராடுவதற்கான பணிகள் விளக்கப்பட்டிருந்தன.

கி. திமீத்ரொவின் அறிக்கை காங்கிரசின் மைய நிகழ்ச்சியாக விளங்கியது. முன்னேற்பாட்டுக் கமிஷன், கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்கள் ஆகியவற்றின் பல மாதக் கூட்டு உழைப்

[1] **வி. பிக்.** கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் நடவடிக்கை பற்றிய விவர அறிக்கை, பக்கம் 34.

பினதும் கி. திமீத்ரொவின் பெருத்த படைப்பு முயற்சிகளதும் விளைவு இந்த அறிக்கை. இதில் அடங்கியிருந்த சித்தாந்த வரையறுப்புக்களைத் தயாரிப்பதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சியின் மத்தியக் கமிட்டி ஊக்கத்துடன் பங்கெடுத்துக்கொண்டது. அறிக்கையின் அடிப்படைக் கருத்துக்கள் காங்கிரஸ் கூடுவதற்கு முன்பே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் போலிட்பியூரோவாலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிற பிரிவுகளின் பிரதிநிதிகளாலும் ஆமோதிக்கப்பட்டிருந்தன. பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியும் விரிவான மக்கள் கூட்டணியும் அமைக்கும் போராட்டம் பற்றி அறிக்கையில் எழுப்பப்பட்டிருந்த பிரச்சினைகள் மீது காங்கிரசில் நடந்த விவாதத்தில் 76 பிரதிநிதிகள், அதாவது அனேகமாக எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் புதிய அரசியல் போக்கை ஆதரித்து, தங்கள் நாடுகளின் நிலைமைகளுக்குப் பொருந்தும் வகையில் அதை ஸ்தூலப்படுத்த முயன்றார்கள்.

பாசிஸத்துடன் போராட்டம் பற்றி ஏழாவது காங்கிரஸ்

பாசிஸ அபாயத்தையும் பாசிஸ்டு சர்வாதிகாரத்தையும் விளக்குவதில் கி. திமீத்ரொவின் அறிக்கையிலும் பிரதிநிதிகளின் சொற்பொழிவுகளிலும் பெருத்த கவனம் செலுத்தப்பட்டிருந்தது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி முற்றி, உழைப்பாளி வெகுஜனங்கள் புரட்சி மனப்பான்மை கொண்டிருக்கும் சூழ்நிலையில், ''ஆளும் பூர்ஷ்வா வர்க்கம் உழைப்பாளிகளுக்கு எதிராக அசாதாரணமான கொள்ளைக்கார நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் நோக்கத்துடனும் வேட்டை விலங்குத் தன்மை கொண்ட ஏகாதிபத்திய யுத்தத்துக்கு முன்னேற்பாடு செய்யும் பொருட்டும்[1]'' புரட்சியைத் தவிர்க்கும் பொருட்டும் பாசிஸத்தில் காப்பிடம் தேடுகிறது என்று அறிக்கையில் கூறப்பட்டது. பாசிஸம் சர்வதேச அபாயமாக மாறி வருகிறது என்று காங்கிரஸ் பெருத்த கலவரத்

[1] கி. திமீத்ரொவ். பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி 1, பக்கம் 375.

துடன் குறிப்பிட்டது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கமும் ஜன நாயக இயக்கமும் இதுவரை சந்தித்துள்ள பகைவர்கள் யாவரி லும் மிகக் கொடிய பகைவன் பாசிஸம்; சோஷலிஸம், ஜனநாயகம், முன்னேற்றம் ஆகியவற்றின் சக்திகளை ஒழிக்கவும் ஏகாதிபத்தியப் பிற்போக்கின் பயங்கரவாத ஆதிக்கத்தை நிலையாக வைத்திருக்க வும் இது முயல்கிறது என்று காங்கிரஸ் கூறியது. பொதுவாக பாசிஸ இயக்கத்தின் மிக மிகப் பிற்போக்குள்ள மிக மிக விகிருத மான இயல்புகள் ஜெர்மானிய பாசிஸத்தில் பருவடிவு பெற்றிருக் கின்றன என்றும் அதன் பாத்திரம் சிறப்பாக அபாயகரமானது என்றும் காங்கிரஸ் வலியுறுத்தியது. ஜெர்மானிய பாசிஸம் சர்வ தேசப் புரட்சி எதிர்ப்பின் தாக்கும் முட்டியாகவும் உலக பாசிஸப் பிற்போக்கின் பிரதான சக்தியாகவும் புதிய ஏகாதிபத்திய யுத்த நெருப்பை மூட்டிவிடுவதாகவும் சோவியத் யூனியனின் ஜென்மப் பகைவனுகவும் பங்காற்றுகிறது என்றார் கி. திமீத்ரொவ்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாசிஸ அபாயத்தை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிடலாகாது என்று ஏழாவது காங்கிரஸ் அறிவுறுத் தியது. ''பாசிஸ்டு சர்வாதிகாரம் தானுகவே தகர்ந்து சிதறிவிடும் என்ற அபாயகரமான மருட்சியை'' அது கண்டனம் செய்தது. பாசிஸ்டு இயக்கத்தின் ஒவ்வோர் அடிவைப்பையும் விழிப்புடன் கவனத்தில் கொள்ளும்படி அது உழைப்பாளிகளைக் கேட்டுக் கொண்டது. பாசிஸத்தின் தாக்குதலை, நாடு சோஷலிஸப் புரட்சியை நெருங்கும் போதுதான் எதிர்பார்க்க வேண்டும் என்ற எண்ணம் சரியானதல்ல என்று நினைவூட்டினார் கி. திமீத்ரொவ். உண்மை யில், வெகுஜனங்கள் புரட்சிக்குத் திரும்பும் நிர்ணயகரமான கணத்துக்கு முன்பே தொழிலாளி வர்க்க ஸ்தாபனங்களைத் தாக்கி அழித்துவிட பாசிஸம் முயல்கிறது என்றார் அவர். பூர்ஷ்வா வர்க் கத்தில் அரசியல் அமைப்புக்கள் படிப்படியாக பாசிஸமயம் ஆக் கப்படுவதன் சாத்தியக் கூற்றையும் பாசிஸ்டுகளின் நேரடித் தாக் குதலின் சாத்தியப்பாட்டையும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பல பிரதிநிதிகள் கூறினார்கள்.

பாசிஸத்தின் வர்க்கத் தன்மையைச் சித்திரிக்கையில், கம்யூ னிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதின்மூன்ருவது முழுக் கூட்டத்தின் முடிவுகளை கி. திமீத்ரொவ் தமது அறிக்கையில் திருப்பிக் கூறினார்: ஆட்சியில் இருக்கும் பாசிஸம், நிதி மூலதனத்தின் கடைக்கோடிப் பிற்போக்கும் கடைக்கோடி இனவெறியும் கடைக் கோடி ஏகாதிபத்தியத் தன்மையும் கொண்ட பகுதிகளின் பகிரங்க

மான பயங்கரமுறை சர்வாதிகாரம். இந்தத் தன்மைச் சித்திரிப்பு பாசிஸத்தின் அடிப்படையான வர்க்கச் செய்கையை வெளிப் படுத்தியது. பாசிஸம் ஏகபோக மூலதனத்தின் கைக்கருவியாக விளங்குவதைக் காட்டியது. பாசிஸம் குட்டி பூர்ஷ்வா இயக்கம் என்ற சமூக-ஜனநாயகவாதக் கருத்துக்கள் எவ்வளவு பெருங் கேடு விளைப்பவை என்பதைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினுர்கள். இத்தகைய கருத்துக்கள் தொழிலாளர் இயக்கத்தில் குழப்பம் விளைத்தன, பாசிஸ அபாயத்தின் விஷயத்தில் எச் சரிப்பை மந்தப்படுத்தின. இதன் விளைவாக நிர்ணயகரமான கணத் தில் உழைப்பாளிகளின் கணிசமான பகுதியினர் ''பாசிஸம் பாவற் றிலும் இரத்த வேட்கை மிக்க ஏகாதிபத்திய வேட்டை விலங்கு என்பதையும் தங்களுடைய மிகக் கொடிய பகைவன் என்பதையும் காணத் தவறி விட்டார்கள்.''[1] பாசிஸம் ஏகபோக மூலதனத்தின் கடைக்கோடிப் பிற்போக்கு வட்டாரங்களின் கைக்கருவியாகச் செயல்படுகிறது என்பதைக் காங்கிரஸ் வலியுறுத்தியது. அதே சமயம், இந்தச் சூத்திரத்தைக் கிளிப்பிள்ளை போல ஒப்பிப்பது கூடாது என்று அது எச்சரித்தது. ''தனித் தனி நாடுகளிலும் வெவ்வேறு கட்டங்களிலும் பாசிஸத்தினது வளர்ச்சியின் தனித் தன்மையையும் பாசிஸ்டு சர்வாதிகாரத்தின் வெவ்வேறு வடிவங் களையும் ஸ்தூலமாக ஆராய்ந்து கணக்கில் எடுத்துக் கொள்வதன்''[2] இன்றியமையாமையை அது சுட்டிக்காட்டியது. ஸ்பெயின், இத்தாலி, போலந்து ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய பிரதிநிதிகள், தங்கள் நாடுகளில் நிலப்பிரபுத்துவப் பிற்போக்குடன் பாசிஸத்துக்கு உள்ள தொடர்பு தெளிவாகப் புலப்படுகிறது என்று கூறினுர்கள்.

பாசிஸம் ஆட்சிக்கு வருவது, ''ஒரு பூர்ஷ்வா அரசாங்கத்திற்குப் பதில் மற்ருென்று வரும் சாதாரணமான மறு நிகழ்ச்சி அல்ல, பூர்ஷ்வாக்களது வர்க்க ஆதிக்கத்தின் ஓர் அரசு வடிவமான பூர்ஷ்வா ஜனநாயகத்தின் இடத்தில் அதன் வேறு வடிவமான பகிரங்க பயங்கரவாத சர்வாதிகாரம் வரும் தன்மை மாற்றம் ஆகும்''[3] என்று காங்கிரஸ் முடிவு செய்தது. இந்த முடிவு கோட்

---

[1] இ. திமீத்ரொவ். பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி 1, பக்கம் 379.

[2] அதே நூல், பக்கம் 456.

[3] அதே நூல், பக்கம் 978.

பாட்டு ரீதியான முக்கியத்துவம் கொண்டிருந்தது. ஏனெனில் பூர்ஷ்வா வர்க்கத்தின் பல்வேறு நாடாளுமன்ற அரசாங்க அமைப்புக்களை பாசிஸத்துக்கு சமமாக மதிப்பதை இது நிராகரித்தது. பாசிஸத்துக்கும் பூர்ஷ்வா ஜனநாயகத்துக்கும் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டியது. இந்த முரண்பாடுகளைப் புரிந்து கொண்டு பயன்படுத்துவதற்கான விஞ்ஞான அடிப்படையை அளித்தது.

பூர்ஷ்வா வர்க்க ஆதிக்கத்தின் இரண்டு முறைகள் பற்றிய லெனினது கருத்து தற்போதைய நிலைமைக்கும் பொருந்துகிறது என்றும் பூர்ஷ்வா முகாம்பற்றிய மதிப்பீட்டில் மிகை எளிமையைக் கம்யூனிஸ்டுகள் கைவிட வேண்டும் என்றும் பாசிஸத்தையும் அதனுடன் முரண்படும் அரசியல் போக்குக்களையும் வேறுபடுத்தி அறிய வேண்டும் என்றும் முக்கியப் பகைவனைத் தாக்குதலுக்கு இலக்காக்க வேண்டும் என்றும் கி. திமீத்ரொவ், மொ. தோரேஸ், வ. கொலாரவ், ர. பாம் தத் ஆகியோரும் வேறு பல பிரதிநிதிகளும் அறிவுறுத்தினர்கள்.

பூர்ஷ்வா ஜனநாயகத்துடன் ஒப்பிடுகையில் பாசிஸம் பின்னேக்கிய மிகப் பெரிய அடிவைப்பு என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது.

''இப்போது பாசிஸ்டுப் புரட்சி எதிர்ப்பு பூர்ஷ்வா ஜனநாயகத்தைத் தாக்குகிறது. உழைப்பாளிகள் மீது யாவற்றிலும் அநாகரிகமான சுரண்டல் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் அவர்களை நசுக்கவும் அது முயல்கிறது. அனேக முதலாளித்துவ நாடுகளில் தற்போது உழைப்பாளி வெகுஜனங்கள் திண்ணமாக இன்றைய தினம் தெரிந்தெடுக்கவேண்டி இருப்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அல்லது பூர்ஷ்வா ஜனநாயகம், இரண்டில் ஒன்றை அல்ல, பூர்ஷ்வா ஜனநாயகம் அல்லது பாசிஸம், இரண்டில் ஒன்றைத்தான்''[1] என்று கூறினர் திமீத்ரொவ். முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த எல்லா உழைப்பாளிகளும் தற்போதையக் காலக் கட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய முக்கியப் பணிகள் பாசிஸ்டுவிரோத, சர்வஜனநாயகப் பணிகளே ஆகும் என்றும், மேற்கொண்டு முன்னேறுவதற்கான வழி இவற்றின் நிறைவேற்றத்தைக் கடந்தே செல்கிறது என்றும் காங்கிரஸ் தெளிவாக எடுத்துக் காட்டியது. பாசிஸத்துக்கு எதிர் நின்றவர்கள் சோவியத் யூனியனும் சோஷலிஸ ஆதரவாளர்களான புரட்சிகரத் தொழிலாளர்களும் மட்டும்

[1] அதே நூல், பக்கம் 468.

அல்ல, ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் சமுதாய முன்னேற்றத்தையும் ஆதரித்தவர்களும் விலங்குத்தரமான வன்முறையையும் யுத்தத்தையும் எதிர்த்தவர்களுமான அனைவருமே பாசிஸத்தின் எதிரிகளாய் இருந்தார்கள். இந்த நிலைமைகளில், அரைப் பாட்டாளி வெகுஜனங்களையும் நடுத்தர வட்டாரத்தினரையும் உறுப்பினர்களாகக் கொண்டவையும் பாசிஸ்டுவிரோத மனப்பான்மை உள்ளுக்குள் வளர்ந்து வருபவையுமான கட்சிகள் மீதும் ஸ்தாபனங்கள் மீதும் ''பாசிஸ்டு'' என்ற அடையாளச் சீட்டை ஒட்டும் எந்தச் செயலும் சிறப்பாகக் கேடு விளைப்பது ஆகும். வ. கொலாரவ் காங்கிரசில் ஆற்றிய சொற்பொழிவின் பெரும் பகுதியில், விவசாயிகள் ஸ்தாபனங்களுடன் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறவுகளை விளக்கினர். விவசாயிகளின் ஸ்தாபனங்கள் பாசிஸத்துக்குத் தவிர்க்க இயலாதவாறு ஈர்க்கப்படுகின்றன என்னும் கருத்தை அவர் நிராகரித்தார். நகர நடுத்தர வட்டாரத்தினரையும் பாசிஸ்டுகள் தங்கள் கண்காணிப்பில் எடுத்துக் கொள்ள விரும்பிய அவர்களுடைய ஸ்தாபனங்களையும் நெருங்கும் வழியை பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள் எவ்வாறு கண்டறிந்தார்கள் என்று மொ. தோரேஸ் காங்கிரசில் நிகழ்த்திய உரையில் விவரித்தார். புரட்சியின் எல்லாக் கட்டங்களிலும் இடைநிலை அரசியல் சக்திகளைத் தாக்குதலின் முதன்மையான இலக்கு ஆக்குவது இன்றியமையாதது என்ற, நெடுங்காலமாக வழக்கில் இருந்த கருத்தைக் காங்கிரஸ் களைந்து எறிந்து விட்டது, ஏனெனில் இந்த ''விதி'' முற்றிலும் ஆதாரம் அற்றது என்பது தெளிவாகி விட்டது. பாசிஸத்துக்கு எதிராகவும் ஜனநாயகத்தின் பொருட்டும் நடக்கும் போராட்டத்தில் இடைநிலைச் சக்திகளும் வட்டாரங்களும் மிகப் பெரிய சாதகமான பங்கு ஆற்றக் கூடும் என்று கம்யூனிஸ்டுகள் தெளிவாக அறிவித்தார்கள்.

எதிர்த் தரப்பு அரசியல் முகாம்கள் அமைப்பது, நடுத்தர வகுப்பாரை பாசிஸ எதிர்ப்புக் கொடிகளின் கீழ் ஒன்று திரட்டுவது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் வாய்க்குமா அல்லது அவற்றின் அறிவைக் கெடுத்துத் தனது பிற்போக்கு நோக்கங்களுக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது பாசிஸத்துக்கு இயலுமா என்பதைக் கணிசமான அளவு பொறுத்திருக்கிறது என்று காங்கிரஸ் வலியுறுத்தியது. சமுதாய, தேசியவாத மேடைப் பிரசங்க வாய்வீச்சுக்கள் வாயிலாக மக்களின் நடுத்தர வகுப்பாரிடையே தனக்கு விரிவான வெகுஜன அடித்தளம்

அமைத்துக் கொள்வதற்கு பாசிஸம் செய்துவந்த முயற்சிகளுக்கு எதிரான போராட்டம் இந்தக் காரணத்தால் பெருத்த முக்கியத்துவம் பெற்றிருந்தது. நடுத்தர வகுப்பார் மீது பாசிஸ்டுகளின் செல்வாக்குக்கு எதிராகப் போராடுவதும் பாசிஸ்டு மேடைப் பிரசங்க வாய்வீச்சுக்கும் பாசிஸ்டுக் கொள்கைவாதத்துக்கும் எதிராகப் போராடுவதும் பற்றிய பிரச்சினை காங்கிரசில் மிக வன்மையாக எழுப்பப்பட்டது.

பாசிஸ்டு மேடைப் பிரசங்க வாய்வீச்சின் பொய்மையையும் நன்மை வெறுப்பையும் கி. திமீத்ரொவ் அம்பலப்படுத்தினர். இந்த வாய்வீச்சு வெகுஜனங்களின் கீழ்த்தரமான தனியுடைமைக் காழ்ப்புக்களையும் தேசியவாத மூடநம்பிக்கைகளையும் மட்டும் சாதகமாகப் பயன்படுத்தவில்லை என்றார் அவர். வேட்டை விலங்குத் தன்மை கொண்ட பெரு மூலதனத்தின்மீது உழைப்பாளிகளுக்கு உள்ள வெறுப்பையும் அவர்களுடைய தீவிரக் கோரிக்கைகளையும் பாசிஸம் அடிக்கடி கருவி ஆக்கிக் கொள்கிறது என்று அவர் காட்டினர். வெகுஜனங்கள் பாசிஸ்டு வாய்வீச்சுக்களின் உண்மையைக் கண்டு கொள்ளும்படி செய்யவும், பாசிஸத்தின் நோக்கங்கள் மக்களின் நலன்களுக்கு எதிரானவை என்பதை பாசிஸத்தால் ஏமாற்றப்பட்டுள்ள லட்சோபலட்சம் குட்டிபூர்ஷ்வாக்களின் உணர்வில் பதியுமாறு செய்யவும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கும் என்று காங்கிரஸ் பிரதிநிதிகள் கூறினர்கள்.

பாசிஸக் கொள்கைவாதம்—நாட்டுவெறி, இனவெறி, மனித வெறுப்பு ஆகியவை நிறைந்த கொள்கைவாதம்—வெகுஜனங்களைத் தொற்றிக் கொள்ளும் அபாயத்தைக் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. பகட்டான வாய்வீச்சுக்களால் போர்த்து மறைக்கப்பட்ட பாசிஸக் கொள்கைவாதம் மிகக் கொடிய ஏகாதிபத்தியப் பிற்போக்கின் நஞ்சு தடவிய ஆயுதம் ஆகும் என்றும் அதற்கு எதிராக இடையருத, தக்க வாதங்கள் கொண்ட, தேசியத் தனித்தன்மைகளைக் கருத்தில் கொண்ட கொள்கைவாதப் போராட்டம் நடத்துவது இன்றியமையாதது எனவும் காங்கிரஸ் அறிவுறுத்தியது.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியையும் மக்கள் கூட்டணியையும் பற்றிய கொள்கையை ஏழாவது காங்கிரஸ் விரிவாக வகுப்பதற்கு பாசிஸத்தின் சர்வாம்சரீதியான ஆழ்ந்த பகுத்தாய்வு இன்றியமையாத நிபந்தனையாக விளங்கியது. தொழிலாளர்

இயக்கத்தின் ஒற்றுமைக் கொள்கையும், பாசிஸத்தையும் யுத்தத்தையும் எதிர்த்து வெற்றிகரமாகப் போராடும் பொருட்டு இந்த இயக்கத்தை மையமாகக் கொண்டு எல்லா ஜனநாயக சக்திகளையும் ஒன்று திரட்டும் கொள்கையும் கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் மூல மந்திரமாக விளங்கின.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கையின் வளர்ச்சி

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைக்கும் பணிக்குக் காங்கிரஸ் முதன்மை முக்கியத்துவம் அளித்தது. பாசிஸ விரோதிகளான பாட்டாளிகளை ஒன்று சேர்ப்பதன் ஜீவாதாரமான இன்றியமையாமை பாசிஸத்துடன் நடந்த முந்திய போராட்டத்திலிருந்து கிடைத்த முக்கியப் படிப்பினையாக இருந்தது.

''சமூக-ஜனநாயகத் தலைவர்கள் கடைப்பிடித்த, பூர்ஷ்வாக்களுடன் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையின் விளைவாகத் தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தின் தாக்குதலுக்குமுன் **பிளவுபட்டு அரசியல் ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் ஆயுதமற்றதாக இருந்ததே** பாசிஸம் ஆட்சிக்கு வர முடிந்ததற்கு **முதன்மையான** காரணம் ஆகும். சமூக-ஜனநாயகத்தைப் பொருட்படுத்தாமல் அதை எதிர்த்து நின்று, வெகுஜனங்களைத் தட்டி எழுப்பவும் பாசிஸத்துக்கு எதிராக நிர்ணயகரமான போராட்டத்துக்கு அவர்களை இட்டுச் செல்லவும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் **போதிய வலிமை பெற்றிருக்கவில்லை**''[1] என்றார் கி. திமீத்ரொவ்.

பாசிஸ்டுக் கொள்ளைக்காரர்கள் ஆட்சியைக் கைப்பற்றப் பாய்ந்த சமயத்தில் சமூக-ஜனநாயகக் கட்சிகளைப் பின்பற்றிய தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினர் செயலற்று இருந்ததற்கு வலதுசாரி சமூக-ஜனநாயகமே பொறுப்பாளி என்று அதன் வரலாற்று முக்கியத்துவமுள்ள குற்றத்தைக் காங்கிரஸ் எடுத்துக் காட்டியது. பாசிஸத்தின் சமரசப்படுத்த முடியாத எதிரிகளான கம்யூனிஸ்டுக் கட்சிகள், பாசிஸ விரோதிகளான எல்லாப் பாட்டாளிகளையும் ஒன்று சேர்க்கும் வகையில் எப்போதும் செயல்படவில்லை. இந்தத் தவறுகளையும் காங்கிரஸ் வன்மையாகக் கண்டனம் செய்தது.

---

[1] கி. திமீத்ரொவ். பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி 1, பக்கம் 384.

செயல் ஒற்றுமையில் தொழிலாளர்கள் கொண்டுள்ள ஆர்வம், பாசிஸ்டுக் கொள்ளைக் கும்பல்களின் தாக்குதலிலிருந்து தற் காத்துக்கொள்ளும் எதிர்வினை மட்டும் அல்ல, வருங்கால எதிர்த் தாக்கின் பொருட்டுத் தொழிலாளர்களின் போராட்ட ஒற்றுமை யின் முளையும் அதில் அடங்கியிருந்தது என்பதைக் கம்யூனிஸ்டு கள் கண்டார்கள். ''தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பாட்டாளி வர்க்கத்தின் செயல் ஒற்றுமை சக்தி மிகுந்த ஆயுதம் ஆகும். பாசிஸத்துக்கு எதிராக, வர்க்கப் பகைவனுக்கு எதிராக வெற்றிகரமான தற்காப்புக்கு மட்டுமின்றி வெற்றிகரமான எதிர்த்தாக்குக்கும் தொழிலாளி வர்க்கத்தை இது திறனுள்ளது ஆக்கும்'' என்று கி. திமீத்ரொவின் அறிக்கை கூறியது.[1]

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியின் பொருட்டு நடத்திய போராட்டத்தில் பிரெஞ்சு, ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சிகள தும் அனேகப் பிற கட்சிகளுடையவும் அனுபவத்தை மதிப்பிட்டு, இத்தகைய கூட்டணி பாசிஸ்டு விரோத, சர்வஜனநாயக கோஷங் களை மையமாகக் கொண்டு வெற்றிகரமாக அமைக்கப்பட முடியும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் தெளிவாக அறிவுறுத்தியது. வெவ்வேறு அரசியல் போக்குக்கள் கொண்ட ஸ்தாபனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் முதலாளித்துவத்தைக் கவிழ்ப்பதற்கான போராட்டத்துக்காக ஒன்று சேர்வது இன்னமும் இயலாதிருக்கலாம். ஆனால் பாசிஸத்துக்கு எதிராகவும் தங்கள் அணித்தான கோரிக்கைகளுக்காகவும் அவர்கள் சேர்ந்து போரிடக் கூடும். தொழிலாளி வர்க்கத்தின் உடனடியான பொரு ளாதார, அரசியல் நலன்களைப் பாதுகாப்பதும் பாசிஸத்திலிருந்து அதைக் காப்பதும் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் தொழி லாளர்களின் ஒன்றித்த கூட்டணியின் தொடக்கப் புள்ளியாகவும் முக்கிய உள்ளடக்கமாகவும் இருக்க வேண்டும் என்று காங்கிரசின் தீர்மானங்களில் கூறப்பட்டது.[2] சூழ்நிலை வாய்ப்பாக இருக்கும் நாடுகளில் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி சோஷலிஸப் புரட் சிக்கு முன்னேற்பாடுகள் செய்யும் பொருட்டுப் பயன்படுத்தப் படலாம் என்று அதே சமயம் காங்கிரஸ் குறித்தது. இவ்வாறு

---

[1] கி. திமீத்ரொவ். பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி *1*, பக்கம் *394*.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள். மாஸ்கோ, *1935*, பக்கங்கள் *15-16*.

தொழிலாளர்களின் செயல் ஒற்றுமை பற்றிய கொள்கையின் உள்ளடக்கமே மாறிவிட்டது. முன்பு, சோஷலிஸப் புரட்சிக்கு முன்னேற்பாடு செய்யும் பொருட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரை ஈர்க்கும் பணியுடன் அது முதன்மையாகத் தொடர்பு கொண்டிருந்தது என்ருல், இப்போது அதன் முதன்மையான உள்ளடக்கம் பாசிஸ எதிர்ப்புப் போராட்டமாக இருந்தது. இது வெகுஜனங்களை ஊக்கமுள்ள செயல்களில் ஈடுபடுத்தவும் பின்னர் வர்க்கப் போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்கு—சோஷலிஸப் புரட்சிக்கு—அவர்களை இட்டுச் செல்லவும் கூடியதாக இருந்தது. இவ்வாருக, ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கை பற்றிய லெனினது போதனை புதிய நிலைமைகளில் மேற்கொண்டு வளர்ச்சி அடைந்தது.

சர்வதேச அளவிலும் சரி, தனித் தனி நாடுகளிலும் சரி, ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அமைப்பது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் சமூக-ஜனநாயகக் கட்சிகளுக்கும் இருந்த பரஸ்பர உறவை முதன்மையாகச் சார்ந்திருந்தது. பூர்ஷ்வாக்களுடன் வர்க்க ஒத்துழைப்பு செய்யும் சமூக-ஜனநாயகக் கொள்கை தொழிலாளி வர்க்கத்தில் பிளவு ஏற்படுத்தி அதை ஆழமாக்கியது, அனேக நாடுகளில் உழைப்பாளிகளின் தோல்விக்கு முக்கியக் காரணங்களில் ஒன்ருய் இருந்தது. ஆனுல் பாசிஸத்தின் தாக்குதல் நடந்த நிலைமைகளில் சமூக-ஜனநாயகத்தின் நிலைகள் பல நாடுகளில் வெளிப்படையாக மாறத் தொடங்கின. சமூக-ஜனநாயக வெகுஜனங்களிடையே பாசிஸ்டு விரோத மனப்பான்மை வளரலாயிற்று.

சமூக-ஜனநாயக ஸ்தாபனங்கள் உட்படத் தொழிலாளர் ஸ்தாபனங்கள் தகர்க்கப்பட்டதும் அனேக நாடுகள் மீது பாசிஸ்டு ஆக்கிரமிப்பு அபாயம் ஆகியவற்றின் காரணமாக, சமூக-ஜனநாயகம் பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆதாரம் என்ற தனது முந்திய பாத்திரத்தை மேற்கொண்டு வகிப்பது முன்னிலும் கடினம் ஆயிற்று, சில நாடுகளில் முற்றிலும் இயலாதது ஆகிவிட்டது. சமூக-ஜனநாயகத்தின் இடதுசாரிக் குழுக்கள் அதிக வலுவடைந்தன. இவை புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் நிலைக்கு மாறத் தொடங்கின. சமூக-ஜனநாயகம் ஒன்றித்த பிற்போக்குத் திரள் என்னும் கருத்தைக் கம்யூனிஸ்டு அகிலம் நிராகரித்தது. சமூக-ஜனநாயகத்துடன் செயல் ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்வது சாத்தியம் என்பதையும் அதன் இடதுசாரிக் குழுக்களுடனும் போக்குகளுடனும் நெருங்கிய தொடர்பை நிலைநாட்டிக் கொள்வது சாத்தியம் என்

பதையும் அது காட்டியது. பாசிஸத்துக்கு எதிராக சமூக-ஜனநாயகத்துடன் எல்லா மட்டங்களிலும்—நகரத் தொழில் நிலையங்களிலும் தேசிய வரம்புகளுக்குள்ளும் அகிலத் தரத்திலும்—ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்கு விடாப்பிடியாக முயற்சி செய்யும்படிக் காங்கிரஸ் கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கேட்டுக்கொண்டது.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக் கொள்கையைக் கடைப்பிடிக்கையில் கம்யூனிஸ்டுகள் தங்கள் சுதந்திர வர்க்க நிலையையும் பூர்ஷ்வாக்களுடன் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கைவாதத்துக்கும் நடைமுறைக்கும் எதிராகப் போராடுவதன் இன்றியமையாமையையும் ஒரு கணமேனும் மறந்துவிடக் கூடாது என அதே சமயம் காங்கிரஸ் அறிவுறுத்தியது. ''பூர்ஷ்வாக்களுடன் வர்க்க ஒத்துழைப்பின் கொள்கைவாதம், நடைமுறை என்ற வகையில் சீர்திருத்தவாதத்தையும் சமூக-ஜனநாயகவாதத்தையும் ஆழ்ந்த ஆதாரங்களுடன் தாக்கி விமர்சிப்பதையும், கம்யூனிஸத்தின் கோட்பாடுகளையும் செயல்திட்டத்தையும் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுக்குப் பொறுமையுடன் விளக்குவதையும் சமூக-ஜனநாயகக் கட்சிகளுடனும் ஸ்தாபனங்களுடனும் சேர்ந்து மேற்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கைகள் விலக்காதது மட்டும் இன்றி, இன்னும் அதிக இன்றியமையாதவை ஆக்குகின்றன'' என்று தீர்மானம் கூறியது.[1]

தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமை ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியை அமைப்பதிலும் வலுப்படுத்துவதிலும் மிக முக்கியப் பகுதியாக இருந்தமையால் இந்த ஒற்றுமைக்காகப் போராடும் பிரச்சினை காங்கிரசில் புதிதாக முன்வைக்கப்பட்டது. சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களின் வலதுசாரித் தலைவர்களின் பிளவுபடுத்தும் கொள்கையைப் பிரதிநிதிகள் கண்டனம் செய்தார்கள்; இந்தக் கொள்கை, கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களுக்கும் சீர்திருத்தவாதத் தொழிலாளர்களுக்கும் இடையே சுவர் எழுப்பியது, வர்க்கப் பகைவனுக்குமுன் அவர்களைப் பலவீனப்படுத்தியது என்று பிரதிநிதிகள் கூறினார்கள். அதே சமயம், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தொழிற்சங்கக் கொள்கையில் இருந்த பிரிவுவாத-வரட்டுச் சூத்திரவாதத் தவறுகளையும் அவர்கள் விமர்சித்தார்கள். சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களை பூர்ஷ்வா அரசு உறுப்புக்களாகக்

---

[1] ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கங்கள் 17-18.

கருதியது, சுயேச்சையான கம்யூனிஸ்டுத் தொழிற்சங்கங்கள் அமைக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தது, சீர்திருத்தவாதிகளின் தலைமையில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளும் புரட்சிகரத் தொழிற்சங்கங்களும் குறைவாகப் பங்கு கொண்டது முதலியன இத்தகைய தவறுகள் என்று அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

தொழிற்சங்க ஒற்றுமையை மீண்டும் நிலைநாட்டுவதற்கு அனேக நாடுகளில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த முதல் நடவடிக்கைகளைப் பல கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் காங்கிரசில் பேசிய போது விரிவாகப் பகுத்து ஆராய்ந்தார்கள். பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளின் அனுபவத்தோடு கூடவே, ஃபின்லாந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிற்சங்கக் கொள்கையும் காங்கிரசின் பெருத்த கவனத்தை ஈர்த்தது. எல்லாக் கம்யூனிஸ்டுகளும் புரட்சிகரத் தொழிலாளர்களும், பாசிஸ்டு ஆட்சி மாற்றத்தின் போது சமூக-ஜனநாயகவாதிகளால் நிறுவப்பட்ட புதிய தொழிற்சங்கங்களில் சேர வேண்டும் என்று ஃபின்லாந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி 1933லேயே தீர்மானம் நிறைவேற்றியது என்று ஃபின்லாந்துப் பிரதிநிதி ஹ. மேக்கினென் கூறினார். தொழிற்சங்க இயக்கத்தில் இடதுசாரி வலுப்படுவதற்கு இது உதவியது என்றார் அவர்.[1]

தொழிற்சங்கங்களின் ஒற்றுமைக்கான போராட்டத்தில் பிரான்ஸ், ஃபின்லாந்து, வேறு சில நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய சாதகமான அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு, ஏழாவது காங்கிரஸ் இத்தகைய ஒற்றுமைக்கான நிபந்தனைகள் பற்றிய பிரச்சினையைத் துணிவுடன் கிளப்பியது. கம்யூனிஸ்டுகள் இரண்டு நிபந்தனைகளை மட்டுமே பிரேரித்தார்கள். அவையாவன: வர்க்கப் போராட்டத்தை நடத்துவதும் தொழிற்சங்கங்களுக்குள் ஜனநாயகத்தைக் கடைப்பிடிப்பதும். தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளைச் சாராதவை என்ற கோஷத்தை ஏற்றுக் கொள்ளக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இசைந்தன. வர்க்கப் போராட்டத்தில் தொழிற்சங்கங்களின் நடுநிலைமையை ஆதரிப்பவர்களாகக் கம்யூனிஸ்டுகள் மாறிவிடுத்தார்கள் என்று இந்த

---

[1] பார்க்க: பால்டிக் பிரதேசக் கம்யூனிஸ்டுக் கட்சி பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக ஒன்றித்த கூட்டணிக்கான போராட்டத்தில், மாஸ்கோ, 1935, பக்கம் 19.

கோஷம் குறிக்கவே இல்லை. தொழிற்சங்கங்கள் மிகமிகச் செயலூக்கம் உள்ள வர்க்க நிலையை மேற்கொள்ள வேண்டும் என்றும் பூர்ஷ்வா வர்க்கத்தை அவை எவ்வகையிலும் சார்ந்திருக்கக்கூடாது என்றும் கம்யூனிஸ்டுகள் முன்போலவே கூறிவந்தார்கள். ஆயினும் ஒன்றித்த தொழிற்சங்கங்களின் ஸ்தாபன ரீதியான சுதந்திரத்தை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். கி. திமீத்ரொவ் பின்வருமாறு கூறினர்: ''தொழிற்சங்க ஒற்றுமைக்குத் தேவை என்ருல் நாங்கள் தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டு உட்குழுக்கள் அமைப்பதைக் கைவிடக் கூடத் தயாராய் இருக்கிரேம். ஒன்று சேரும் தொழிற்சங்கங்கள் எல்லா அரசியல் கட்சிகளிலிருந்தும் சுயேச்சையாக இருப்பது பற்றி உடன்பாடு செய்து கொள்ள நாங்கள் ஆயத்தமாய் இருக்கிரேம். ஆனல் தொழிற்சங்கங்கள் பூர்ஷ்வா வர்க்கத்தை எவ்வகையிலும் சார்ந்திருப்பதை நாங்கள் உறுதியாக எதிர்க்கிரேம். பாட்டாளிகளுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் இடையே நடக்கும் வர்க்கப் போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் நடுநிலைமை வகிப்பது தகாது என்ற எங்கள் கோட்பாட்டு ரீதியான நோக்கு நிலையை நாங்கள் கைவிடமாட்டோம்.''[1]

புரட்சிகரத் தொழிற்சங்கங்கள் வெகுஜன ஸ்தாபனங்கள் ஆகாத இடங்களில் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களில் சேர்ந்துவிடும்படி காங்கிரஸ் யோசனை கூறியது. வெகுஜன ஸ்தாபனங்களாக இருந்த புரட்சிகரத் தொழிற்சங்கங்கள், வெகுஜனச் சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களுடன் இணைவதற்கு சமத்துவ அடிப்படையில் விடாப்பிடியாகவும் பொறுமையுடனும் முயல வேண்டும். இரு தொழிற்சங்க அகிலங்களும் ஒன்று சேர்ந்துவிடுவதையும் காங்கிரஸ் ஆதரித்தது. ''சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காக எல்லா அரசியல் பிரச்சினைகளையும் ஸ்தாபன விவரங்களையும் பற்றிக் கலந்து ஆலோசிப்பதற்கு'' ஒரே மேஜையைச் சுற்றி உட்கார நாங்கள் தயார் என்று தொழிற்சங்க அகிலத்தின் தலைவர் ஸெ. லஸோவ்ஸ்கி ஏழாவது காங்கிரசில் கூறினர்.[2]

தொழிற்சங்க ஒற்றுமையைக் கம்யூனிஸ்டு அகிலம் எவ்வளவு முக்கியமாக மதித்தது என்பது, ஏழாவது காங்கிரஸ் நிறைவுற்ற

---

[1] **கி. திமீத்ரொவ்.** பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி *1*, பக்கம் *483*.

[2] **ஸ. லஸோவ்ஸ்கி.** உலகத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்காக. மாஸ்கோ, *1935*, பக்கம் *29*.

இரண்டாவது நாளே கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சர்வ தேசத் தொழிற்சங்க மகாநாடு கூட்டியதிலிருந்து தெளிவாகிறது. தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டத்தை நடைமுறையில் எப்படி நடத்துவதாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எண்ணுகின்றன என்ற கேள்விக்கு விடை காண்பது இந்த மகாநாட்டின் நோக்கமாக இருந்தது.[1]

சமூக-ஜனநாயகத்துடனும், சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களுடனும் செயல் ஒற்றுமை ஏற்படுத்துவதற்குத் தொழிலாளர்களின் அரசியல் நோக்கங்களைச் சாராமல் அவர்களை உண்மையில் ஒன்றுபடுத்தக் கூடிய கோரிக்கைகளைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எங்கும் முன்வைப்பது அவசியம் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் அறிவுறுத்தியிருந்தது. ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியின் விளைவாக மட்டுமே இருக்கக் கூடிய ஒன்றை, கூட்டணி அமைப்பதற்கான நிபந்தனையாக வைக்கக் கூடாது. முதலாளித்துவத்தின் சுரண்டும் தன்மையை வெகுஜனங்களுக்குக் காட்டுவது அல்லது சீர்திருத்தவாதத் தலைவர்களை அம்பலப்படுத்துவது என்ற ஒரே நோக்கத்துடன், நிறைவேற்ற முடியாத கோரிக்கைகளை முன்வைக்கும் பழக்கம், வெற்றிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தடையாயிருந்த காரணத்தால் கண்டனத்துக்கு உள்ளாயிற்று. அன்றாடத் தேவைகளுக்காக, அம்சரீதியான கோரிக்கைகளுக்காக, வெற்றிகரமான போராட்டத்தை ஒழுங்கமைப்பது ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்கு எவ்வளவு முக்கியமானது, தொழிலாளர்களின் ஏதேனும் ஒரு குழுவுக்கு அக்கறைக்கு உரியதான ஒவ்வொரு பிரச்சினையையும் பயன்படுத்திக் கொள்ளக் கம்யூனிஸ்டுகள் திறமை பெற்றிருப்பது எவ்வளவு அவசியம் என்பது காங்கிரசில் ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இந்தக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் விரிவான வெகுஜனங்களை ஈடுபடுத்திய பின்னரே கம்யூனிஸ்டுக் கட்சிகள் போராட்டத்தின் புதிய, முன்னிலும்

---

[1] மை. ஆ. கூ., *495/18/1061* (a). மகாநாட்டில் ஸ. லஸோவ்ஸ்கி அறிக்கை சமர்ப்பித்துப் பேசினார். போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரியா, சீனா, ஃபின்லாந்து, பிரேசில், ஸ்பெயின், பல்கேரியா, சிலி, வேறு பல நாடுகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் விவாதங்களில் கலந்து கொண்டு பேசினார்கள்.

உயர்ந்த குறிக்கோள்களை முன்வைக்க முடியும் என்று பேச்சாளர்கள் கூறினார்கள்.

ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி கம்யூனிஸ்டுகளையும் சமூக-ஜனநாயகவாதிகளையும் மட்டும் ஒன்று சேர்ப்பதுடன் நிற்காமல் அராஜகவாதத் தொழிலாளர்களையும் கத்தோலிக்கத் தொழிலாளர்களையும் பாசிஸ்டுத் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களையும் தன் பக்கத்துக்கு ஈர்க்கவேண்டியிருந்தது. பாசிஸ்டு சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் வீரம் மட்டும் போதாது என்று பிரதிநிதிகள் தங்கள் அறிக்கைகளிலும் சொற்பொழிவுகளிலும் கூறினார்கள். பாசிஸ்டுத் தொழிற்சங்கங்களிலும் தொழிலாளர்கள் சேர்ந்துள்ள பிற வெகுஜன ஸ்தாபனங்களிலும் சள்ளைபிடித்த அன்றாட வேலை செய்வது அவசியம். இந்த ஸ்தாபனங்களில் உள்ள தொழிலாளர்களின் உடனடியான, மிக மிகச் சாதாரணமான கோரிக்கைகளைப் பாதுகாப்பதன் அடிப்படையில், அவர்களுடன் கருத்தொற்றுமை ஏற்படுத்திக் கொள்ளும் பணி கம்யூனிஸ்டுகளுக்கு விதிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகள் கூச்சப்படாமலும், இழிவு என்று கருதாமலும் பாசிஸ்டுகளின் வெகுஜன ஸ்தாபனங்களில் சேர்ந்து பாசிஸத்தைத் தகர்ப்பதற்கு அங்கே வேலை செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கேட்டுக் கொண்டது.

தொழிலாளர்களின் செயல் ஒற்றுமை ஏற்பட்டதும், தொழிலாளர்களின் போராட்ட ஒத்துழைப்பை உறுதிப்படுத்தும் இந்த இயக்கத்தின் திட்டவட்டமான ஸ்தாபனச் சட்டகங்கள் அமைக்கப்படுவதற்கு ஆதரவாகக் காங்கிரஸ் கருத்து தெரிவித்தது. தொழில் நிலையங்களிலும் வேலையற்றோரிடையிலும் தொழிலாளர் வட்டாரங்களிலும் குறைந்த உடைமைகள் கொண்ட நகர மக்களிடையிலும் கிராமங்களிலும் ஒன்றித்த கூட்டணியின் கட்சிச் சார்பற்ற வர்க்க உறுப்புக்களைப் பாடுபட்டு அமைப்பது இன்றியமையாதது என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. ஒன்றித்த கூட்டணியின் இத்தகைய உறுப்புக்கள், அதில் பங்கு கொள்ளும் ஸ்தாபனங்களின் இடத்தைப் பறித்துக் கொள்ளாமல், ஸ்தாபனங்கள் எவற்றிலும் சேராத பெருந்திரளான உழைப்பாளி மக்களை ஒன்று திரட்டக் கூடும்.[1]

---

[1] பார்க்க: ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கம் 18.

தொழிலாளர் கூட்டணி பற்றிய கொள்கையைக் காங்கிரஸ் விரிவுபடுத்தியது. அரசியல் ஒற்றுமையின் பொருட்டும், ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த வெகுஜன அரசியல் கட்சிகளை அமைக்கும் பொருட்டும் முயற்சி செய்வதற்குச் சாதகமான வாய்ப்புக்கள் உள்ளனவா என்ற கேள்வியைக் காங்கிரஸ் எழுப்பியது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கையில், பெரும்பாலான கம்யூனிஸ்டுக் கட்சிகள் வர்க்கப் போராட்டத்தில் பல்துறைப் பயிற்சி பெற்றுவிட்டன என்பதும், திரோத்ஸ்கிவாதம், வலது சாரி, ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதம் ஆகியவற்றை அகற்றி, மார்க்சிய-லெனினிய அடிப்படையில் தங்கள் அணிகளின் ஒற்றுமையை உறுதிப்படுத்திவிட்டன என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது. ஊழியர்களின் போதிய உறுதியுள்ள சட்டகமும், நிலையான மார்க்சிய-லெனினியத் தலைமையும் கட்சிகளில் உருவாகியிருந்தன. இடப்புறமாக வளர்ச்சி அடைந்து வந்த சமூக-ஜனநாயகக் கட்சிகளுடன் ஒன்று சேர்கையில், அதிக வலிமையும் அனுபவமும் உள்ள சீர்திருத்தவாத இயந்திரத்தால் விழுங்கப்படும் அச்சம் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்படவில்லை. சமூக-ஜனநாயகத்தின் இடது சாரி, கம்யூனிஸ்டுகளின் கொள்கைவாத நிலைகளுக்கு நெருங்கி வரத் தொடங்கி இருந்ததையும் காங்கிரஸ் கவனத்தில் கொண்டது.

தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றித்த கட்சியை அமைப்பதற்கு, பாசிஸத்துக்கும் மூலதனத்தின் தாக்குதலுக்கும் யுத்த அபாயத்துக்கும் எதிராக ஒன்று சேர்ந்து போராடுவது பற்றிக் கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் ஒப்பந்தம் செய்து கொள்வது போதவில்லை. அரசியல் ஒற்றுமை ஏற்படுத்துவது மார்க்சிய-லெனினிய அடிப்படையிலேயே சாத்தியமாய் இருந்தது. காங்கிரசின் தீர்மானங்கள் சுட்டிக் காட்டியதுபோல, இத்தகைய ஒற்றுமைக்குப் பின்வரும் நிபந்தனைகள் தேவைப்பட்டன: பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமூக-ஜனநாயகக் கூட்டணி தகர்க்கப்பட வேண்டும், பூர்ஷ்வா வர்க்கத்தை அறவே சாராமல் இருக்க வேண்டும், செயல் ஒற்றுமை பூர்வாங்கமாக ஏற்படுத்தப்பட வேண்டும், பூர்ஷ்வா ஆதிக்கத்தைப் புரட்சி மூலம் கவிழ்ப்பது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவது ஆகியவற்றின் இன்றியமையாமை ஒப்புக்கொள்ளப்பட வேண்டும், ஏகாதிபத்திய யுத்தத்தில் சொந்த பூர்ஷ்வா வர்க்கத்துக்கு ஆதரவு மறுக்கப்பட வேண்டும்,

ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையில் கட்சி அமைக்கப்பட வேண்டும்.[1] இந்த நிபந்தனைகள் வருங்கால ஒன்றித்த தொழிலாளர் கட்சிகளின் புரட்சி உருவத்தைத் தெளிவுபடுத்தின.

உழைப்பாளி இளைஞர்களின் பாசிஸ்டுவிரோத ஒற்றுமைக்காகப் போராடும் பிரச்சினை மீது காங்கிரஸ் பெருத்த கவனம் செலுத்தியது. இளமைப் பருவத்தில் அடி வைத்திருக்கும் தலைமுறையினரிடையே, சிறப்பாகக் கணிசமான இளைஞர் திரள்களை பாசிஸம் தன் அணிகளில் சேர்த்துக் கொள்ள முயலும் நாடுகளில் மிக மிக ஊக்கத்துடன் வேலை செய்வது அவசியம் என்று பிரதிநிதிகள் தங்கள் உரைகளில் குறிப்பிட்டார்கள். காங்கிரசின் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: ''வர்க்கப் போராட்டக் கொள்கைத்திட்டத்தின் அடிப்படையில் கம்யூனிஸ்டு இளைஞர் சங்கத்தையும் சோஷலிஸ்டு இளைஞர் சங்கத்தையும் சேர்த்து, பாசிஸ்டு விரோதச் சங்கமாக அமைக்கும் பணியை முன்வைப்பது இன்றியமையாதது.''[2]

மக்கள் கூட்டணிக்
கொள்கையின் முக்கியப்
பிரச்சினைகள் ஏழாவது
காங்கிரசால் விரிவாக
ஆராயப்படுகின்றன

பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமை பற்றிய கொள்கை எல்லா பாசிஸ எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்று சேர்க்கும் பணியுடன் பிரிக்க இயலாதவாறு இணைந்தது என்று காங்கிரஸ் கருதியது. பாசிஸத்தை வெற்றி கொள்வதற்கு, தொழிலாளி வர்க்கம் ஒன்றின் முயற்சிகள், அது ஒற்றுமைப்பட்டதாக இருந்தாலுங்கூட, போதியவையாக இல்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஆதரிப்பவையாக இல்லாவிட்டாலும் மரபுவழிவந்த ஜனநாயக சுதந்திரங்களைக் காப்பதிலும் பாசிஸ அடிமைத்தனத்துக்கு இடம் கொடுக்காதிருப்பதிலும் அக்கறை கொண்ட சமுதாயக் குழுக்கள் விஷயத்திலும் கூட்டணிக் கொள்கையைக் கடைப்பிடிப்பது தேவையாய் இருந்தது. மக்கள் கூட்டணிக் கொள்கையில் இந்தப் போக்கு பரு

---

[1] ஏழாவது உலகக் காங்கிரஸின் தீர்மானங்கள், பக்கங்கள் 30-31.

[2] அதே நூல், பக்கம் 27.

வடிவு பெற்றது. ஏழாவது காங்கிரஸ் இந்தக் கொள்கையை வகுப்பதில் பெருத்த கவனம் செலுத்தியது. ஜனநாயகத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் நடந்த போராட்டங்களின் பரஸ்பரத் தொடர்பைக் கம்யூனிஸ்டுகள் ஆழ்ந்த முறையில் புரிந்து கொண்டதை ஆதாரமாகக் கொண்டிருந்தது மக்கள் கூட்டணிக் கொள்கை. கம்யூனிஸ்டுகள் ஜனநாயகத்தின் ஆதரவாளர்கள் என்பதைக் காங்கிரஸ் வலியுறுத்தியது. பாட்டாளி வர்க்கம் ஏகபோகங்களின் பகிரங்கமான பயங்கரவாத சர்வாதிகாரத்தின் நிலைமைகளில் போராட வேண்டி இருக்குமா அல்லது பூர்ஷ்வா ஜனநாயகத்தின் நிலைமைகளிலா என்பது கம்யூனிஸ்டுகளுக்கு முக்கியம் அற்றது அல்ல என்று அது கூறியது. பூர்ஷ்வா ஜனநாயகத்தின் நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்துக்குத் தன்னை ஒழுங்கமைத்துக் கொள்ளவும் முன்னேறவும் அதிக வாய்ப்புக்கள் உண்டு. பூர்ஷ்வா ஜனநாயகத்தின் நிலைமைகள் பற்றி லெனின் பின்வருமாறு எழுதினார்: ''வர்க்கப் போராட்டத்தினதும் வர்க்க ஒடுக்கு முறையினதும் அதிக விரிவான, அதிக சுதந்திரமான, அதிக வெளிப்படையான **வடிவம்** வர்க்கங்களையே ஒழிப்பதற்கான போராட்டத்தைப் பாட்டாளி வர்க்கத்துக்கு மிக மிக எளிதாக்குகிறது''.[1] பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆதிக்கம் எந்த வடிவில் செயல்படுத்தப் படுகிறது என்பது பாட்டாளி வர்க்கத்துக்கு அசட்டைக்கு உரியதல்ல. ஆனால் கம்யூனிஸ்டுகள் பூர்ஷ்வா ஜனநாயகத்தைக் காத்துப் போராடியதற்குக் காரணம் அது பாசிஸத்தைக் காட்டிலும் ''குறைந்த தீமை'' என்பது மட்டும் அல்ல. பூர்ஷ்வா ஜனநாயகத்திலேயே எல்லாம் சம மதிப்பு உள்ளவை அல்ல. திரளான பொது மக்கள் பல ஆண்டுகள் போராடிப் பெற்றிருந்த சுதந்திரங்கள் கம்யூனிஸ்டுகளுக்கு பூர்ஷ்வா ஜனநாயகத்தில் முக்கியமானவையாக இருந்தன. இந்த சுதந்திரங்களைக் காப்பதும் விரிவாக்குவதும் பூர்ஷ்வா வர்க்கத்தின் கடைக்கோடிப் பிற்போக்குச் சக்திகளின் நிலையை வேரறுப்பதற்கும் தொழிலாளி வர்க்கத்தினதும் எல்லா உழைப்பாளிகளதும் போராட்டத்துக்குப் புது வாய்ப்புக்கள் ஏற்படுத்துவதற்குமான வழி என்று ஏழாவது காங்கிரஸ் கருதியது.

சர்வஜனநாயகக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் உழைப்பாளிகளின் விரிவான வட்டாரங்களை அணிதிரட்டவும் பாசிஸத்தைத் தோற்கடிக்கவும் மூலதனத்தின் ஆட்சி அதிகாரத்

[1] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 25, பக்கம் 454.

தைக் குறுக்கவும் சோஷலிஸத்துக்கான போராட்டம் தொடங்கு வதற்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தவும் முடியும் என்ற கருத்து மக்கள் கூட்டணிக் கொள்கையின் மிக மிகப் பயனுள்ள கருத்துக்களில் ஒன்ருக இருந்தது.

ஜனநாயகத்துக்கான போராட்டமும் சோஷலிஸத்துக்கான போராட்டமும் ஒன்ருேடு ஒன்று தொடர்பு உள்ளவை என்ற லெனினது போதனையை ஆதாரமாகக் கொண்டிருந்தது இந்தக் கருத்து. ''ஜனநாயகத்துக்கான போராட்டம் பாட்டாளி வர்க்கத்தின் கவனத்தை சோஷலிஸப் புரட்சியிலிருந்து திருப்பக் கூடும் அல்லது அதை மறைக்கவோ இருட்டடிக்கவோ முடியும் என்று என்னுவது அடிப்படையான தவறு ஆகும்'' என்று எழுதினர் வி.இ. லெனின். ''மாருக, முழுமையான ஜனநாயகத்தைச் செயல்படுத்தாமல் வெற்றிகரமான சோஷலிஸம் இருக்க முடியாது. அதேபோல, ஜனநாயகத்தின் பொருட்டு சர்வாம்சரீதியான, ஒத்திசைந்த, புரட்சிகரப் போராட்டம் நடத்தாமல் பாட்டாளி வர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தை வெற்றிகொள்வதற்குத் தயாராக முடியாது.''[1] ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கமும் அதன் கூட்டாளிகளும் ஒன்று சேர்வார்கள், பெருத்த பயிற்சி பெறுவார்கள், சோஷலிஸக் குறிக்கோள்களின் பொருட்டுப் போராடுவதன் இன்றியமையாமையை உணரும் தரத்துக்கு உயர்வார்கள். எனவே, ஜனநாயகத்துக்கான போராட்டம் பூர்ஷ்வா வர்க்கத்தை வெற்றி கொள்வதற்கு உழைப்பாளிகளை ஆயத்தப்படுத்த உதவும் என்று லெனின் பல முறை வலியுறுத்தினர். ஜனநாயகத்துக்கான போராட்டம் சோஷலிஸத்துக்கான போராட்டத்தின் வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் தொடக்கமாகப் பணியாற்றக் கூடும், ஏனெனில், ''பகுதிக்காகத் தொடங்கிய போராட்டம், முக்கிய நோக்கத்துக்கான போராட்டமாக மூண்டு எழலாம்''[2] என்ருர் அவர். ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம், பாட்டாளிகள் அல்லாதவர்கள் உள்ளிட்ட வெகுஜனங்களைத் தலைமையேற்று நடத்திச் செல்லும் கலையில் தேர்ச்சி பெறும், தன் அரசியல் ஆதிக்கத்தைச் செயல்படுத்தவும் தன்னுடைய சோஷலிஸக் குறிக்கோள்களை அடையவும் ஆயத்தமாகும் என்று லெனின் கருதினர்.

---

[1] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி ***22***, பக்கம் ***144***.

[2] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி ***35***, பக்கம் ***268***.

ஜனநாயகத்துக்கான போராட்டத்தை சோஷலிஸத்துக்கான போராட்டத்துடன் இணைப்பது பற்றியும் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகள் பற்றியும் லெனினது போதனையை ஆதாரமாகக் கொண்டு, ஒவ்வொரு நாட்டினுடையவும் மிகப் பெரும்பாலான மக்களின்—பாட்டாளிகள், விவசாயிகள், நகரக் குட்டி பூர்ஷ்வாக் கள், கைத்தொழிலாளர்கள், அறிவுஜீவிகள் ஆகியோரின்—பாசிஸ விரோத, சர்வஜனநாயகப் போராட்டத்தில் செயல் ஒற்றுமையின் இன்றியமையாமையையும் சாத்தியக் கூறுகளையும் பற்றிக் காங்கிரஸ் முக்கியமான சித்தாந்த முடிவுகள் செய்தது. பூர்ஷ்வா வர்க்கத்தின் பாசிஸ்டு விரோத மனப்பான்மை கொண்ட பகுதி யினரும் சில சந்தர்ப்பங்களில் மக்கள் கூட்டணியில் கலந்து கொள் வது சாத்தியம் என்ற அனுமானம் காங்கிரசில் வெளியிடப்பட்டது.

பாசிஸ்டு விரோதச் சக்திகளின் ஐக்கியத்தை ஏற்படுத்த முயல் கையில் ஒவ்வொரு நாட்டையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சி, மிக மிக விரிவான வெகுஜனங்களின் பொது அரசியல் விருப்பங்களை, முதன்மையாக பாசிஸத்தை எதிர்த்து முறியடிக்கவும் உழைப் பாளிகளின் ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் காக்க வும் சமாதானத்தைப் பாதுகாக்கவுமான கோரிக்கைகளைப் பிரதி பலிப்பதும், விவசாயிகள், நகர நடுத்தர வகுப்பினர், அறிவுஜீவி கள் ஆகியோருடையவும் எல்லா ஜனநாயகச் சக்திகளுடையவும் பொருளாதாரக் கோரிக்கைகளை உள்ளடக்கியதுமான மக்கள் கூட் டணியின் கொள்கைத் திட்டத்தை முன்வைக்க வேண்டி இருந்தது. மக்கள் கூட்டணியில் ஜனநாயக வட்டாரங்களை ஈர்ப்பது, இந்த வட்டாரங்களின் கோரிக்கைகளைக் காக்கும் பொருட்டு, பாட் டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு முரண்படாத எல்லாக் கோரிக் கைகளையும் காத்து ஊக்கத்துடன் போராடுவதன் மூலமே தொழி லாளி வர்க்கத்துக்கு இயலும் என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது. உழைக்கும் விவசாயி வெகுஜனங்களின் மிக அணித்தான தேவை களின் பொருட்டு, அவர்களுடைய மிக மிக உடனடியான பொரு ளாதார, அரசியல் கோரிக்கைகளின் பொருட்டுப் போராட்டத்தை ஒழுங்கமைக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் திறன் பெற்றிருப்பதும், கட்சிகள் நகர நடுத்தர வகுப்பாரை அணுகுவதற்குரிய சரியான வழிகளைக் கண்டறிவதும், மக்கள் கூட்டணி இந்த வகுப்பாரின் சீரழிவையும் இவர்கள் பாட்டாளிகளின் அணிகளுக்கோ அல்லது வர்க்கத் தன்மை இழந்த பாட்டாளிகளின் அணிகளுக்கோ இழிந்து விடுவதையும் தடுக்க முயல்கிறது என்பதை இவர்கள்

உள்ளங்களில் பதிய வைப்பதும் சிறப்பாக முக்கியமானவை என்று மொ. தோரேஸ், கி. கோட்வால்டு, வ. கெர்லாரவ், வ.ரோஷே, யூ. லேன்ஸ்கி ஆகியோர் தங்கள் சொற்பொழிவுகளில் வலியுறுத்தினுர்கள்.

மக்கள் கூட்டணி அமைப்பதில் வெற்றி அடைந்திருந்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அனுபவத்தை தோரேஸ் விளக்கினுர். அவர் கூறினுர்: ''உழைப்பாளி வெகுஜனங்களின் உடனடிக் கோரிக்கைகள் மீதும் அவர்களுடைய அன்ருட நலன்களைப் பாதுகாப்பதன் மீதும் எங்கள் கவனம் ஒருமுனைப்படுத்தப்பட்டது, பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றித்த மக்கள் கூட்டணி எங்கள் கட்சியால் விரிவாகத் தொடங்கி வைக்கப்படுவதற்கு ஆரம்பப் புள்ளியாக விளங்கியது''.[1] மொ. தோரேஸின் சொற்படி பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வெற்றிக்குக் காரணமாய் இருந்த இரண்டாவது அம்சம், மக்களின் ஜனநாயக உரிமைகளையும் அனைத்து நாட்டின நலன்களையும் காத்துக் கம்யூனிஸ்டுக் கட்சி ஒத்திசைந்த முறையில் போராடியது ஆகும். தங்கள் தாய் நாட்டுப் பற்றையும் மக்களின் எல்லாப் புரட்சி மரபுகளையும் ஜனநாயக மரபுகளையும் தாங்கள் ஆதரித்துப் போராடுவதையும் கம்யூனிஸ்டுகள் பின்னும் ஒரு முறை அறிவித்தார்கள். கம்யூனிஸ்டுகள் தங்கள் நாட்டின் விடுதலைக்காகவும் சுயாட்சிக்காகவும் உண்மையாக, ஒத்திசைந்த முறையில் போராடுபவர்கள், உண்மையான தேசபக்தர்கள் என்பதை இந்தக் கொள்கை வெகுஜனங்களின் உள்ளங்களில் பதிய வைத்தது.

கம்யூனிஸ்டுகள் தங்கள் மக்களின் அனைத்து நாட்டின நலன்களின்பால் அசட்டையான போக்கைக் கடைப்பிடிக்க முடியாது என்றும், கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் சர்வதேசிய நிலைகளை இடையருது காத்துவரும் அதே சமயத்தில், உண்மையான தேசிய அரசியல் சக்திகளாக மாற வேண்டும் என்றும் காங்கிரஸ் முழுமையான தெளிவுடன் அறிவித்தது. தொழிலாளி வர்க்கம் ''மக்களின் தேசிய விடுதலைக்காகவும் சுயாட்சிக்காகவும் உண்மையில் போராடும் ஒரே படைவீரனுக விளங்குகிறது'' என்று காங்கிரசின் தீர்மானம் குறித்தது. ''...பூர்ஷ்வா தேசியவாதத்தின் எல்லா வகை வேறுபாடுகளையும் கோட்பாட்டு ரீதியில் சமரசமின்றி

---

[1] **மொ. தோரேஸ்.** பிரான்சில் ஒன்றித்த, மக்கள் கூட்டணி. மாஸ்கோ, **1935**, பக்கம் **25**.

எதிர்த்துப் போராடுபவர்களான கம்யூனிஸ்டுகள் தேசிய மறுப்பு வாதத்தின் ஆதரவாளர்கள் அல்லவே அல்ல. தங்கள் சொந்த மக்களின் வாழ்வு பற்றிய அசட்டையான போக்கை அவர்கள் சற்றும் ஆதரிக்கவில்லை''[1] என்று அது கூறியது.

நடுத்தர வகுப்புக்களைச் சேர்ந்த விரிவான வெகுஜனங்களை மக்கள் கூட்டணியில் ஈர்க்கும் பொருட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்த வகுப்பினர் உறுப்பினராய் இருந்த எல்லா ஸ்தாபனங்களிலும் கட்சிகளிலும் வேலை செய்ய வேண்டும் என்றும் இந்த ஸ்தாபனங்களின் தலைமை பூர்ஷ்வா வர்க்கத்தின் கைகளிலோ முதலாளித்துவ ஆதரவாளர்களின் கைகளிலோ இருப்பதைப் பொருட்படுத்தக் கூடாது என்றும் காங்கிரஸ் யோசனை தெரிவித்தது. மக்கள் கூட்டணி கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் குட்டி பூர்ஷ்வா ஸ்தாபனங்களுடன் கோட்பாடு அற்ற ஐக்கியம் அமைப்பதற்கு இட்டுச் செல்லும் என்ற ''இடது சாரி'' சந்தர்ப்பவாதிகளின் கூற்றுக்களைக் காங்கிரஸ் உறுதியாக எதிர்த்தது. போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி யூ. லேன்ஸ்கி இத்தகைய கருத்துக்களைத் தாக்கினார். மக்கள் கூட்டணி சீர்திருத்தவாதச் சூழ்ச்சி அல்ல, வாழ்க்கையின் வற்புறுத்தல் நிறைந்த கோரிக்கை என்றார் அவர். ''பாசிஸ்டுத் தடைகளை முறித்து, மக்களை ஒடுக்குவோரின் பாசிஸ்டுக் குழுவை வீழ்த்த முன்வரும் லட்சோபலட்சம் வெகுஜனங்களின் போராட்டத்தை மக்கள் கூட்டணி கட்டவிழ்த்து விட வேண்டும்''[2] என்று அவர் கூறினார்.

சர்வஜன, பாசிஸ்டுவிரோதக் குறிக்கோள்களுக்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தலைமைப் பாத்திரம் வகிக்கவும் அரசியல் நிகழ்ச்சிகள் மீது மேலும் மேலும் அதிக அளவில் நிர்ணயகரமான செல்வாக்கு செலுத்தும் சக்தியாகச் செயல்படவும் வாய்ப்பு அளிக்கும் ஐக்கியத்தின் வடிவம் மக்கள் கூட்டணியில் கம்யூனிஸ்டு இயக்கத்துக்குக் கிடைத்தது. பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் பாத்திரம், சர்வஜனநாயகப் பணிகளினது நிறைவேற்றத்தின் வாயிலாக வெகுஜனங்களைப் போராட்டத்தின் புதிய, சோஷலிஸக் கட்டத்துக்கு இட்டுச் செல்ல வகை செய்தது.

---

[1] ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கங்கள் 24, 25.

[2] போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி—பாசிஸ்டுவிரோத மக்கள் கூட்டணிக்கு ஆதரவாக. மாஸ்கோ, 1935, பக்கங்கள் 40-41.

போராட்டத்தின் போது மக்கள் கூட்டணியில் ஒன்று சேர்ந்த விரிவான வெகுஜனங்கள் பிற்போக்கின் மீது தாக்குதலை வலுப்படுத்தி, நிலவும் பிற்போக்கு அரசாங்கங்களை அகற்றத் திறன் பெற்றுர்கள். அவ்வாறு நிகழ்ந்தால் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி அல்லது பாசிஸ்டுவிரோத மக்கள் கூட்டணியின் அரசாங்கத்தை அமைக்கும் பிரச்சினை எதிர்ப்படும். ஏழாவது காங்கிரஸ் மக்கள் கூட்டணி அரசாங்கம் என்னும் கோஷத்தை முன்வைக்கையில், கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது, நான்காவது காங்கிரசுகள் வி.இ. லெனினது உதவியுடன் செய்த முடிவுகளை, உதாரணமாக, ''தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம்'' என்னும் கோஷத்தை, ஆதாரமாகக் கொண்டது. அப்போது, ''நாம் இன்று எழுப்பும் பிரச்சினைக்கு சாராம்சத்தில் அனேகமாக ஒப்பான பிரச்சினை முன் நின்றது''[1] என்று ஏழாவது காங்கிரசில் கூறினுர் கி. திமீத்ரொவ்.

மக்கள் கூட்டணி அரசாங்கம் அமைப்பது சாத்தியம் ஆகக் கூடிய நிலைமைகளைக் காங்கிரஸ் பின்வருமாறு வரையறுத்தது: பூர்ஷ்வா அரசு இயந்திரம் கடுமையாகச் சிதைந்து, இத்தகைய அரசாங்கம் உரு ஆவதைத் தடுக்க முடியாததாக இருக்க வேண்டும்; உழைப்பாளி வெகுஜனங்களின் இயக்கம் ஏற்றத்தில் இருந்தாலும், வெகுஜனங்கள் சோஷலிஸப் புரட்சிக்கான போராட்டத்தை நடத்த இன்னும் ஆயத்தம் ஆகாதிருக்க வேண்டும்; மக்கள் கூட்டணியில் பங்கு கொள்ளும் கட்சிகள் பாசிஸ்டுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோரி, கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து இந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும்.

பாசிஸத்துக்கும் பிற்போக்குக்கும் எதிராக உறுதியான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதும் தொழிலாளி வர்க்கத்தினுடையவும் எல்லா உழைப்பாளி மக்களுடையவும் நிலைகளை வலுப்படுத்துவதும் எல்லா சந்தர்ப்பங்களிலும் மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் பணியாக இருந்தது. சில சந்தர்ப்பங்களில் ஸ்தூல நிலைமைகளுக்கு ஏற்ப, மக்கள் கூட்டணி அரசாங்கம் பூர்ஷ்வா அமைப்பு முறையின் அடிப்படைகளைத் தாக்காமல் பாசிஸத்தையும் பிற்போக்கையும் எதிர்த்து முறியடிப்பதற்கு ஏற்பாடு செய்

---

[1] **கி. திமீத்ரொவ்.** பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி 1, பக்கம் 432.

யும்; பிற சந்தர்ப்பங்களில், உதாரணமாக, பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகள் நடந்த நாடுகளில் அது தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகளதும் ஜனநாயக சர்வாதிகார அரசாங்கம் ஆகக் கூடும். ஏகபோகங்களின் ஒடுக்குமுறை ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான போராட்டத்தை மேலும் மேலும் உடனடி முக்கியத்துவம் உள்ள தாகச் செய்துவிட்ட ஏகாதிபத்திய நாடுகளிலும் மக்கள் கூட்டணி அரசாங்கம் பாட்டாளி வர்க்க ஆட்சிக்குப் பரிணமிப்பதற்கான தனிப்பட்ட வடிவமாக விளங்க முடியும். '' 'பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் **பரிணமிப்பதற்கான** அல்லது அதை **அணுகுவதற்கான** வடிவங்களைத் தேடிக் காண்பதில்' கவனம் முழுவதையும் ஈடு படுத்துமாறு லெனின் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நம்மைக் கேட்டுக் கொண்டார்'' என்றார் கி. திமீத்ரொவ். ''அநேக நாடுகளில் **ஒன்றித்த கூட்டணி அரசாங்கம்** முக்கியமான பரிணமிப்பு வடிவங்களில் ஒன்றாக இருப்பதும்''[1] பாட்டாளி வர்க்க சர் வாதிகாரத்துக்கு வழிவகுப்பதும் சாத்தியமே.

மக்கள் கூட்டணி அரசாங்கத்தை எல்லா வகையிலும் ஆதரிப் பது கம்யூனிஸ்டுகளின் கடமை என்று காங்கிரஸ் விதித்தது. பாசி ஸத்துக்கும் பிற்போக்குக்கும் எதிராகப் போராடும் இத்தகைய அரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்வது குறித்த நிலைமைகளில் சரியானது, விரும்பத்தக்கது என அது கருதியது. பாசிஸ்டுவிரோத நடவடிக்கைகளுக்கும் ஆழ்ந்த ஜனநாயக மாற் றங்களுக்கும் மக்கள் கூட்டணி அரசாங்கத்திலும் நாடாளு மன்றங்களிலும் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளத் தாங்கள் தயாராய் இருப்பதாகக் கம்யூனிஸ்டுகள் அறிவித்தார்கள்.

வெகுஜனங்கள் பூர்ஷ்வா நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வைத்திருப்பதால், வெகுஜனங்களுக்குப் போதிப்பதற்கும் பிற் போக்குள்ள பூர்ஷ்வாக் கொள்கையை அம்பலப்படுத்துவதற்கும் இந்தப் பேச்சுமேடையைப் பயன்படுத்துவது கம்யூனிஸ்டுகளின் கடமை என்று ''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'' என்ற தமது நூலில் ஒரு காலத்தில் லெனின் விளக்கினார். முப்பதுக்களில், அனேக முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கச் சக்திகளும் கம்யூனிஸ்டு இயக்கச் சக்தி களும் வளர்ச்சி அடைந்திருந்த காரணத்தால் போராட்டத்தின் நாடாளுமன்ற வடிவம் பாசிஸத்தையும் பிற்போக்கையும்

---

[1] **கி.திமீத்ரொவ்.** பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி *1*, பக்கம் *435*.

எதிர்த்துத் தாக்க ஏற்பாடுகள் செய்வதில் முன்பைவிடக் கணிச மாகப் பெருத்த பங்கு ஆற்ற முடிந்தது. ஏழாவது காங்கிரஸ் இந்த வாய்ப்புக்களைச் சுட்டிக் காட்டியது. கம்யூனிஸ்டுகளுடையவும் பிற பாசிஸ்டுவிரோதக் கட்சிகளுடையவும் நாடாளுமன்றப் போராட்டத்தின் வெற்றி நாடாளுமன்றத்துக்கு வெளியே வெகுஜனங்களின் விரிவான இயக்கத்தின் அடிப்படையிலேயே சாத்தியமாகும் என்று அது வலியுறுத்தியது. சர்வஜனநாயகப் போராட்டத்தின் நிலைமைகளில் நாடாளுமன்ற முறை பற்றிய கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கையை அது விரிவுபடுத்தியது.

மக்கள் கூட்டணிக் கொள்கையும், சிறப்பாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாத்தியமான பரிணமிப்பு வடிவம் என்ற முறையில் மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் பிரச்சினைகளும் ஆராய்ந்து முறைப்படுத்தப்பட்டது, சோஷலிஸப் புரட்சிக்கான வழிகளையும் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை சோஷலிஸத்துக்கான போராட்டத்துடன் இணைப்பதையும் உழைப்பாளி மக்களின் மற்ற வகுப்பாருடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தையும் பற்றிய லெனினது போதனையின் படைப்புத்தன்மை கொண்ட அடுத்த வளர்ச்சியாக விளங்கியது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கூட்டான படைப்பு முயற்சிகளின் பயனாக இந்தப் பிரச்சினைகள் குறித்த மிக முக்கியமான சித்தாந்த முடிவுகள் பெறப்பட்டன.

முதலாளித்துவ நாடுகளில் புரட்சி நிகழ்முறை தாமதமின்றியும் நேரடியாகவும் சோஷலிஸப் புரட்சியின் வாயிலாக முன்னேறாது, பாசிஸ்டு விரோத, சர்வஜனநாயகப் போராட்டக் கட்டத்தைக் கடந்தே அதை நெருங்கும் என்பதை, ஜனநாயகத்துக்கான போராட்டத்துக்கும் சோஷலிஸத்துக்கான போராட்டத்துக்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பு பற்றிய லெனினது போதனையை விரிவாக்கிய கருத்து கணக்கில் எடுத்துக்கொண்டது.

சோஷலிஸக் குறிக்கோள்கள் முன்னே நகர்ந்துவிடும் என்று இந்த வளர்ச்சிப் பாதை குறிக்கவே இல்லை. மாறாக, ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணி பாசிஸத்துக்கு எதிராகவும் புதிய ஜனநாயகத்தின் வெற்றிக்காகவும் போராட்டத்தில் மிக விரிவான வெகுஜனங்களை ஈடுபடுத்தி, சோஷலிஸப் புரட்சிக்கு இன்றியமையாத முதனிலைகளை அதன் மூலம் ஏற்படுத்தியது. மக்கள் கூட்டணிக் கொள்கையின் முதன்மையான பொருள் இதிலேயே அடங்கி இருந்தது. இவ்வாறு, புதிய செல்திசை சோஷலிஸப் புரட்சிக்கு முன்னேறும் புதிய வாய்ப்புக்களை முன்வைத்தது.

பாசிஸத்துடன் போராட்டத்துக்கான ஏற்பாடு, ''உலக சோஷலிஸப் புரட்சியின் வளர்ச்சியை விரைவுபடுத்துகிறது, மேலும் விரைவுபடுத்தும்''[1] என்று காங்கிரசின் தீர்மானங்களில் அழுத்திக் கூறப்பட்டது.

காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி பற்றிய பிரச்சினைகள்

தேசிய-விடுதலை இயக்கம் பற்றிய பிரச்சினைகள் குறித்து ஏழாவது காங்கிரஸ் செய்த முடிவுகள் பெருத்த முக்கியத்துவம் உள்ளவை. அந்தக் காலத்தில் ஜெர்மனியும் இத்தாலியும் ஜப்பானும் உலகை மறுபங்கிடுவது பற்றிப் போராட்டம் தொடங்கி இருந்தன. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் சீனவில் தங்கள் ஆக்கிரமிப்பை விரிவுபடுத்தி, அதன் பிரதேச முழுமையையும் சீன மக்களின் தேசிய வாழ்வையும் அபாயத்துக்கு உள்ளாக்கினர்கள். பாசிஸ்டு இத்தாலி எத்தியோப்பியாவைத் தாக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜெர்மனியும் இத்தாலியும் பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் தீவிரமாக உள்ளே புகுந்து கொண்டிருந்தன. மிகப் பெரிய காலனிகளை வைத்திருந்த ஏகாதிபத்திய அரசுகள்—பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம் முதலியன—அவற்றில் தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்த முயன்று வந்தன, அங்கே தங்கள் அடக்குமுறையைத் தீவிரம் ஆக்கின. இந்த எல்லாக் காரணங்களாலும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் ஆத்திரம் அதிகமாயிற்று. மேலும் லட்சக்கணக்கான மக்கள் தேசிய-விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப்பட்டார்கள். அதே சமயம், காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் ஏகாதிபத்தியங்களின் பரஸ்பர முரண்பாடுகள் தீவிரம் அடைந்ததால் தேசிய-விடுதலை இயக்கங்கள் இந்த முரண்பாடுகளை ஓரளவு பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பான சூழ்நிலை உருவாயிற்று.

காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் வளர்ச்சி அடைந்திருந்த அல்லது முதிர்ந்து கொண்டிருந்த புரட்சிகளின் தன்மை விளக்கம்

---

[1] ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கம் 29.

தேசிய-விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு மிக மிக முக்கியமாய் இருந்தது.

காலனிகளில் நடந்துவந்த புரட்சிகள் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகளே என்றும் அவை சோஷலிஸப் புரட்சிகளாக விரைவில் வளர்ச்சி அடையும் என்றும் கூறிய இடதுசாரிக் கருத்துக்களை ஏழாவது காங்கிரஸ் நிராகரித்து விட்டது. முன்னர் உருவாக்கப் பட்டிருந்த ''தொழிலாளர்-விவசாயிகள் புரட்சி,'' ''சோவியத் அரசாங்கம்'' முதலிய கோஷங்கள் பெரும்பாலான காலனிகளுக்கும் ஆதீன நாடுகளுக்கும் காலத்துக்கு முந்தியவை என்றும், பொது தேசிய, ஏகாதிபத்திய எதிர்ப்புப் பணிகள் முழுமையாக மதிப் பிடப்படாததைக் காட்டின என்றும் இந்த நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் காங்கிரசில் கூறினார்கள்.

ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்களுக்கு எதிரான தேசிய-விடுதலைப் போராட்டக் கட்டம் பெரும்பாலான காலனிகளுக்கும் அரைக்காலனிகளுக்கும் உண்மையான அனைத்து மக்கள் புரட்சி யின் முதல் படியாக விளங்குவது தவிர்க்க முடியாதது என்று காங்கிரசில் சுட்டிக் காட்டப்பட்டது. பாட்டாளி வர்க்கப் புரட்சி யின் அடிப்படையிலோ அல்லது ஆட்சித் தலைமை நாடுகளில் சோஷ லிஸப் புரட்சிகள் நடப்பதன் விளைவாகவோ மட்டுமே காலனிகள் விடுதலை அடைய முடியும் என்ற கருத்து நிராகரிக்கப்பட்டது. தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சியின் வெற்றிக்கு உரிய எல்லா நிலைமைகளும் பக்குவம் ஆகும்வரையில் தேசிய-விடுதலைப் போராட்டத்தை ஒத்திப் போடுவது கூடாது என்று காங்கிரஸ் கருதியது.

''அதிகரித்து வரும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு எதிராக வும் கொடுமையான அடிமைப்படுத்தலுக்கு எதிராகவும் ஏகாதி பத்தியவாதிகளை வெளியேற்றும் பொருட்டும் நாடுகளின் விடு தலைக்காகவும்''[1] போராடுவது காலனிகள், அரைக்காலனிகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளது முதன்மையான பணி என்று காங்கிரசின் தீர்மானங்கள் வரையறுத்தன.

காலனிகளிலும் அரைக்காலனிகளிலும் ஏகாதிபத்தியத்துக்கு வெவ்வேறு அளவுகளில் அடிப்பட்டிருக்கும் நாடுகளிலும் ஏகாதி பத்திய எதிர்ப்புப் போராட்டம் நிகழும் நிலைமைகளின் மிகப் பெரிய வேறுபாட்டைக் கணக்கில் எடுத்துக் கொள்வது அரசியல் பணிகளை நிர்ணயிப்பதற்கு இன்றியமையாதது என்பது வலியுறுத்துப்பட்டது.

[1] ஏழாவது உலகக் காங்கிரஸின் தீர்மானங்கள், பக்கம் 28.

பெரும்பாலான ஆதீன நாடுகளில் ஏகாதிபத்தியத்துக்கும் இந்த நாடுகளின் மிகப் பெரும்பாலான வெகுஜனங்களுக்கும் இடையே முரண்பாடுகள் கூர்மை அடைந்துவிட்ட காரணத்தால் நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான சர்வ ஜனநாயகப் புரட்சி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கும் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகளை வெற்றிகரமாக நடத்துப் பொருட்டு ஒடுக்கப்பட்ட நாடுகளில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைப்பதற்குக் கம்யூனிஸ்டுகள் முயற்சி செய்ய வேண்டும். ஒடுக்கப்பட்ட, ஆதீன நாடுகளின் மக்களுக்குக் காங்கிரஸ் முன்வைத்த முக்கியமான கோஷம் இதுவே. இத்தகைய கூட்டணி தேசிய விடுதலைச் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்ட வல்லதாக இருந்தது.

தேசிய-காலனிப் பிரச்சினை குறித்து லெனினது தலைமையில் உருவாக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கையினது ஒத்திசைந்த தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக விளங்கியது ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி பற்றிய கோஷம். ஒடுக்கப்பட்ட நாடுகளில் நடந்த விடுதலைப் போராட்டத்தின் பல்வகை அனுபவத்தால் வளம் பெற்ற கம்யூனிஸ்டுகள், ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி பற்றிய கோஷம் நாட்டின் எல்லா நல்ல சக்திகளையும் ஏகாதிபத்தியத்துடன் நிர்ணயகரமான போராட்டம் நடத்தும் பொருட்டு ஒன்று சேர்ப்பதற்குரிய வழி என்று புரிந்து கொண்டார்கள். காலனிகளில் தேசிய பூர்ஷ்வா வர்க்கம் முற்ற முழுக்க ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவானது என்று சித்திரிப்பதும் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகத் தாக்குதலைக் கூர்மைப் படுத்தும்படி கம்யூனிஸ்டுகளிடம் கோருவதுமான கருத்தைக் காங்கிரஸ் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக்கிற்று. தேசிய பூர்ஷ்வாக்களின் தலைமையில் நடந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களிலும் குட்டிபூர்ஷ்வா வெகுஜன இயக்கங்களிலும் கூடக் கம்யூனிஸ்டுகள் ஊக்கத்துடன் பங்கு கொள்வதற்கு இத்தகைய கருத்துக்கள் தடையாய் இருந்தன. காங்கிரசில் ஒரு சிலரின் பேச்சுக்களில் இந்தப் பழைய கருத்துக்களின் செல்வாக்கு இன்னும் புலப்பட்டது.

ஏகாதிபத்தியத்துடன் போராட்டத் திறன் கொண்ட எல்லோரையும், தேசிய பூர்ஷ்வா வர்க்கம் உட்பட, ஒன்றித்த கூட்டணியாக இணைக்கும் துணிவுள்ள கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு

காங்கிரஸ் கம்யூனிஸ்டுக் கட்சிகளைப் பணித்தது. ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இருந்த முரண்பாடுகள் தீராமலிருந்தோடு சில நாடுகளில் கடுமையாகத் தீவிரம் அடைந்திருந்தன. ஆயினும் ஒப்புநோக்கில் வலிமையுள்ள தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஏற்கனவே உருவாகியிருந்த நாடுகளில், ஏகாதிபத்தியத்துடனும் நிலப்பிரபுத்துவக் குழு ஆட்சியுடனும் சமரசம் செய்து கொள்ளும் அதன் போக்கு எவ்வளவு வலுவானது என்பதையும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறை வலுப்படுவதனுல் தேசிய பூர்ஷ்வா வர்க்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைகளுக்கு எவ்வளவு தூரம் தள்ளப்படுகிறது என்பதையும் ஆழ்ந்து சீர்தூக்கிப் பார்க்கும்படி காங்கிரஸ் கூறியது.

அடிமைப்பட்ட நாடுகளில் பெரும்பான்மை மக்களாக விளங்கிய விவசாயிகளுடன் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி நிறுவுவதற்குச் சிறப்பான முக்கியத்துவம் கொண்டிருந்தது. விவசாயிகளுடன் நிலையான ஐக்கியம் இல்லாமல் ஏகாதிபத்தியத்தை ஒழிப்பது ஒருபோதும் சாத்தியம் ஆகாது என்று ஒடுக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூறினுர்கள். இத்தகைய ஐக்கியம் நிறுவப்படுவதோ என்ருல், விடுதலைப் போராட்டத்தில் முன்னேக்கிய பிரமாண்டமான அடி வைப்பாக விளங்கும் என்ருர்கள் அவர்கள். ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியில் நகரங்களைச் சேர்ந்த விரிவான நடுத்தர வகுப்பாரையும் ஈடுபடுத்துவது அவசியமாய் இருந்தது. இவர்கள் ''பேரளவான ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளாக விளங்குகிருர்கள்''[1] என்று அரேபியப் பிரதிநிதி கூறினுர்.

ஏழாவது காங்கிரஸ் சீனுவில் நடந்த தேசிய-விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி குறித்த பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்தது. அன்னிய ஆக்கிரமிப்பாளர்களுடன் போராடுவதற்கு உளமார விரும்புபவர்கள் எல்லோருடனும் கம்யூனிஸ்டுகள் ஒப்பந்தம் செய்து கொள்வதன் இன்றியமையாமையைக் காங்கிரஸ் வலியுறுத்தியது. ''தேசிய-விடுதலைப் போராட்டக் கூட்டணியை விரிவுபடுத்துவதற்கும், ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுடையவும் பிற ஏகாதிபத்தியவாதிகளுடையவும் கொள்ளைக்காரத்தனமுள்ள ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தயாராயிருக்கும் எல்லா தேசிய சக்திகளையும் அதில் சேர்ப்பதற்கும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி

---

[1] மை. ஆ. கூ., *494/1/295/10.*

எல்லா வகையிலும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்''[1] என்று அதன் தீர்மானம் கூறியது.

அகில அரேபிய அளவில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைக்கும் படியும் எல்லா அரபு நாடுகளையும் சேர்ந்த தேசிய விடுதலைச் சக்திகளின் நெருங்கிய ஐக்கியத்தை ஏற்படுத்தும்படியும் அரேபியக் கிழக்கு நாடுகளுக்கு ஏழாவது காங்கிரஸ் பணிகளிட்டது. ''எல்லா அரபு நாடுகளினதும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை ஒன்றிணைப்பது இன்றியமையாதது. இது இன்றியமையாத நிபந்தனை, இது இல்லாமல் ஏகாதிபத்தியத்தின் மீது முடிவான வெற்றி பெறுவது இயலாது''[2] என்றார் சிரியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி.

திட்டவட்டமான ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயல்திட்டத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வகுப்பதில் காங்கிரஸ் ஆழ்ந்த கவனம் செலுத்தியது. ஒவ்வோர் ஒடுக்கப்பட்ட நாட்டின் தனித் தன்மைகளுக்கும் ஏற்ப இதை இசைவித்துக் கொள்ள வேண்டி இருந்தது. சீனுவுக்குச் சாத்தியமான ஏகாதிபத்திய விரோத, நிலப்பிரபுத்துவ விரோதச் செயல்திட்டம் இந்த நோக்கத்துடன் காங்கிரசில் விரிவாக விவாதிக்கப்பட்டது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைக்கு அந்தக் கட்டத்தில் துலக்கமான அனைத்து மக்கள், தேசியத் தன்மையை அளிக்கும் நோக்கத்துடன் கட்சியின் சில நடவடிக்கைகளை மறு பரிசீலனை செய்யும் படி யோசனை கூறப் பட்டது.[3]

பிரேசில் நாட்டின் தேசிய-விடுதலைக் கூட்டணியின் செயல்திட்டத்தைப் பல லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு எடுத்துக்காட்டான முன்மாதிரியாகக் காங்கிரஸ் கருதியது. நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஜனநாயகக் கோரிக்கைகளை, ஏகாதிபத்திய வன்முறைகள் அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடனும் ஏகாதிபத்திய விரோத, மக்கள்-புரட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடனும் ஒன்று சேர்த்திருந்தது இந்தச் செயல் திட்டம்.

அடிமைப்பட்ட நாடுகளின் மக்களது தேசிய-விடுதலை இயக்கங்களுக்கும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கும் ஐக்கியம்

---

1 ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கம் 42.

2 மை. ஆ. கூ., 494/1/295/14.

3 மை. ஆ. கூ., 494/1/265/57-58.

ஏற்படுத்தும் கருத்தைக் காங்கிரஸ் மிகத் தீவிரமாக வலியுறுத்தியது. பாசிஸமும் ஏகாதிபத்தியமும் முறியடிக்கப்படுவதிலும் உலக யுத்தம் மூளாது தடுப்பதிலும் இரு தரப்புக்களும் அக்கறை கொண்டிருந்தது, சர்வதேசத் தொழிலாளர் இயக்கமும் தேசிய-விடுதலைப் போராட்டமும் மிக நெருங்கிய ஒற்றுமை கொள்வதற்கு அடிப்படை ஏற்படுத்தியது. காலனிகளிலும் அரைக்காலனிகளிலும் புரட்சிச் சக்திகள் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியினதும் அதன் அடுத்து வந்த வரலாற்று முக்கியத்துவமுள்ள வெற்றிகளினதும் நேரடியான, மிகப் பெரிய செல்வாக்கு காரணமாக நாளுக்கு நாள் வளர்ந்து வருவதாகவும் இந்தச் சக்திகள் சோவியத் யூனியனதும் உலகப் பாட்டாளி வர்க்கம் அனைத்தினதும் ஆதரவைச் சார்ந்திருப்பதாகவும் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. உலகத்தில் உள்ள எல்லாப் புரட்சிச் சக்திகளையும் ஒன்று திரட்டுவதற்குக் காங்கிரஸ் மிகப் பெரிய முக்கியத்துவம் அளித்தது. ''காலனிகளையும் அரைக்காலனிகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய-விடுதலைப் போராட்டத்தையும் சிறப்பாகச் சீன சோவியத்துக்களின் செஞ்சேனையினது போராட்டத்தையும் ஊக்கத்துடன் ஆதரிக்கும்படி...''[1] காங்கிரஸ் கம்யூனிஸ்டுக் கட்சிகளைப் பணித்தது.

காலனிகளில் நடக்கும் விடுதலைப் புரட்சிகளைத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சி இயக்கத்துடன் நெருக்கமாக ஒன்றுபடுத்துவதற்கு ஆட்சித் தலைமை நாடுகளையும் காலனிகளையும் சேர்ந்த விரிவான வெகுஜனங்களுக்கு சர்வதேசிய உணர்வையும் நாட்டு வெறியின்பால் சமரசமற்ற போக்கையும் போதித்துப் புகட்டுவது இன்றியமையாதது என்று காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. பாசிஸமும் ஏகாதிபத்தியப் பிற்போக்கும் ஆட்சித் தலைமை நாடுகளில் மட்டும் இன்றிக் காலனிகளிலும் நாட்டு வெறியைப் பரப்புகின்றன என்று காங்கிரசில் சுட்டிக் காட்டப்பட்டது. ஏகாதிபத்திய ஒடுக்குமுறை அடிமைப்பட்ட மக்களிடையே ஒடுக்கும் நாட்டினத்தின்பால் வெறுப்புக்கு வித்திட்டிருக்கிறது என்றும் அங்கே, ஏகாதிபத்திய விரோத உள்ளடக்கம் கொண்ட தேசியவாதத்துடன் ஆட்சித் தலைமை நாடுகளின் மக்கள் மீதும் தொழிலாளி வர்க்கத்தின் மீதும் கூட வன்மமும் அவநம்பிக்கையும் கலந்துவிடுகின்றன என்றும் லெனின் தம் காலத்திலேயே எச்சரித்திருந்

---

[1] ஏழாவது உலகக் காங்கிரஸின் தீர்மானங்கள், பக்கம் 42.

தார்.[1] இந்த தேசியவாத உணர்வுகள் நெடுங்காலம் நிலைத்திருப்பவை. தேசிய-விடுதலை இயக்கத்தின் ஏதேனும் ஒரு பிரிவைப் பிளவு படுத்தும் நோக்கத்துடன் காலனி ஆட்சியாளர்கள் எவ்வாறு இனவெறியையும் நாட்டினப் பகைமையையும் மூட்டிவிட்டார்கள் என்பதைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் உதாரணங்கள் மூலம் காட்டினுர்கள்.

ஒடுக்கப்பட்ட நாட்டைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் தங்கள் நாட்டினரிடையே நாட்டுவெறியை எதிர்த்து உறுதியாகப் போராடவேண்டும், அதே சமயம், ஏகாதிபத்திய அடிமைத்தளையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் தாங்கள் செய்வதாக நடப்பில் காட்ட வேண்டும் என்ற லெனினது கருத்து அறிக்கையில் விரிவுபடுத்தப்பட்டது. ஆட்சித் தலைமை நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளோ தேசிய-விடுதலை இயக்கங்களுக்கு உதவுவதற்கு இயன்ற அளவு அதிகத்திலும் அதிகமாக முயற்சி செய்யக் கடமைப்பட்டவர்கள் என்று அறிக்கை கூறியது. தேசிய-விடுதலைப் புரட்சிகள், சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் ஆகியவற்றின் ஐக்கியம் உறுதியான சர்வதேசிய அடிப்படையில், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பொதுப் போராட்டக் கூட்டணியைப் பலவீனப்படுத்துவதும் அதில் கீறல்களும் பிளவுகளும் ஏற்படுத்துவதுமான நாட்டுவெறி இந்த ஐக்கியத்தில் புக முடியாத வகையில் அமைய வேண்டும் என்று அறிக்கை வலியுறுத்தியது.

யுத்த எதிர்ப்புப் போராட்டப் பிரச்சினைகள் பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கை விரிவடைதல்

சமாதானத்திற்காகவும் புதிய உலக யுத்த அபாயத்தையும் சோவியத் யூனியனுக்கு எதிரான தலையீட்டையும் எதிர்த்தும் போராட்டம் நடத்துவது சம்பந்தமான பிரச்சினைகள் கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் நடவடிக்கைகளில் மிக முக்கியமான இடம் பெற்றிருந்தன. ப. தளியாத்தி இந்தப் பிரச்சினை குறித்துத் தனி அறிக்கை சமர்ப்பித்தார். அறிக்கையின் அடிப்

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 41, பக்கம் 167.

படைச் சிக்கல்களை முறைப்படுத்துவதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சிப் பிரதிநிதிகளும் அதன் தலைவர்களும் மிக ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். உலக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகள் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் சோவியத் யூனியனுக்கு எதிரான புரட்சி எதிர்ப்புப் போருக்கும் நேரடியாக ஆயத்தம் செய்யத் தொடங்கி விட்டன என்று அறிக்கை குறிப்பிட்டது.

ஏழாவது காங்கிரஸ் யுத்தத்தின் பயங்கர அபாயத்தைச் சுட்டிக்காட்டி, ''சமாதானத்துக்கான போராட்டம்! என்பது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மையமான கோஷமாக இருக்க வேண்டும்''[1] என்று தீர்மானமாக வலியுறுத்தியது. சமாதானத்திற்கான, யுத்தம் மூளாது தவிர்ப்பதற்கான போராட்டம் புரட்சிச் சக்திகளை வலுப்படுத்துவதற்குரிய நிபந்தனை என்று கம்யூனிஸ்டுகளால் கருதப்பட்டது. ''நாம் சமாதானத்தைக் காத்துப் போராடுவதன் காரணம், நாம் ஊளைச்சதை போட்ட சொகுசுக்காரர்கள் என்பது அல்ல, புரட்சியின் வெற்றிக்கான நிலைமைகளை ஏற்படுத்த நாம் விரும்புவது தான்''[2] என்று ப. தளியாத்தி தம் அறிக்கையில் கூறினர். சமாதானப் போராட்டத்தின் முக்கியத்துவம் பற்றிய பிரச்சினையை அணுகுவதற்கான புதிய முறையாக இருந்தது இது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பதின்மூன்ருவது முழுக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட முடிவுகளை இது விரிவுபடுத்தியது.

சமாதானப் போராட்டத்தைக் குறைத்து மதிப்பிட்ட இடதுசாரி சந்தர்ப்பவாதிகளின் போக்கையும் யுத்தம் புரட்சிக்கு வழிகோலும் சாதனம் என்ற இடதுசாரி-திரோத்ஸ்கிவாதக் கருத்துக்களையும் காங்கிரஸ் எதிர்த்தது. ''கம்யூனிஸ்டுகள் யுத்தத்தை ஆதரிப்பதாகவும் அவர்கள் யுத்தத்தை நம்பி இருப்பதாகவும் புரட்சிக்காகவும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவும் போராடுவது யுத்தம் நடக்கும் போது சாத்தியமாகும் என்று அவர்கள் எண்ணுவதாகவும்'' அர்த்தப்பட்ட அவதூருன கூற்றுக்களை அறிக்கை நிராகரித்தது.[1]

---

[1] ஏழாவது உலகக் காங்கிரஸின் தீர்மானங்கள், பக்கம் 38.

[2] எர்க்கோலி. ஏகாதிபத்தியவாதிகள் புதிய உலக யுத்தத்துக்கு ஆயத்தம் செய்வதை ஒட்டிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகள். மாஸ்கோ, 1935, பக்கம் 53.

[3] அதே நூல், பக்கம் 54.

சமாதானப் போராட்டத்தை மையப் பணியாக ஏற்படுத்திய பின், யுத்தம் மூளாமல் தவிர்ப்பதற்கான வாய்ப்புக்கள் எவ்வளவு தூரம் எதார்த்தமானவை என்ற கேள்விக்குக் காங்கிரஸ் விடை அளிக்க வேண்டி இருந்தது. உருவாகியுள்ள நிலைமைகளில் சமாதானப் போராட்டத்தை வருங்கால வாய்ப்புக்கள் இல்லாத போராட்டமாக, நம்பிக்கைக்கு இடம் அற்ற, வெற்றிக்கான சாத்தியக் கூறுகள் இல்லாத போராட்டமாகக் கருதுவது கூடாது என்று ஏழாவது காங்கிரஸ் கூறியது. உலக அரங்கில் வர்க்கச் சக்திகளின் ஒப்புநிலை மாறி இருப்பதாலும் சோவியத் யூனியனின் அரசியல், பொருளாதார, இராணுவ விறல் அதிகரித்திருப்பதாலும் உலகப் புரட்சி இயக்கத்தின் பிற பிரிவுகள் வலுவடைந்திருப்பதாலும் சமாதானப் போராட்டத்துக்குப் புதிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது.

சமாதானப் போராட்டத்துக்கான புதிய வாய்ப்புக்கள் பற்றிய கருத்தை விளக்கி, கிஞேரின் பின்வருமாறு கூறிஞர்: ''...அக்டோபர்ப் புரட்சியின் வெற்றி, சோவியத் யூனியன் செயலூக்கத்துடன் சமாதானக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் விறல் மிக்க சோஷலிஸ அரசாக மாறி இருப்பது, இப்போது யுத்தத்தை விரும்பாத பல மக்களினங்களையும் அரசுகளையும் அது தன் வழியில் ஈர்த்திருப்பது ஆகியவை, யுத்தத்துக்கு ஏற்பாடு செய்பவர்கள் மீது செல்வாக்கு செலுத்துவதற்குப் பாட்டாளி வர்க்கத்துக்குப் புதிய வாய்ப்புக்களை அளித்துள்ளன. உழைப்பாளிகளின் பிரமாண்டமான வெகுஜன இயக்கச் சக்தியுடன் இந்தச் சக்தி சேர்ந்திருப்பதால் சமாதானப் போராட்டம் இதற்கு முன் எந்தக் காலத்திலும் இருந்ததைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவு அதிக வலிமை பெற வேண்டும்''.[1]

சமாதானம் நிலைபெறுவதும் யுத்தம் குறித்த காலத்துக்கு ஒத்திப்போடப்படுவதும் கூட, சோவியத் யூனியனில் சோஷலிஸம் மேற்கொண்டு வெற்றிகள் பெறவும் அதன் பொருளாதார, அரசியல் விறல் அதிகரிக்கவும் வகை செய்யும், உலகம் முழுவதிலும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் நிலையையும் எல்லா யுத்த எதிர்ப்புச் சக்திகளின் நிலையையும் வலுப்படுத்த உதவும் என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. பாசிஸ விரோதச் சக்திகளை மக்கள் கூட்டணியில் ஒன்றிணைக்கவும் பாட்டாளி வர்க்கத்தை மைய

[1] மை. ஆ. கூ., 494/1/357/58.

மாகக் கொண்டு அதன் கூட்டாளிகளையும் யுத்தம் மூளாது தடுப்பதில் அக்கறை கொண்டவர்கள் அனைவரையும் அணிதிரட்டவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு சமாதானப் போராட்டம் மிக விரிவான வாய்ப்பு அளிக்கும் என அது கூறியது.

யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவதில் எல்லா முதலாளித்துவ அரசுகளுக்கும் சமமான பொறுப்பு உண்டு என்ற நோக்கை ஏழாவது காங்கிரஸ் மேற்கொண்டது. ஆயினும், யுத்த நெருப்பை மூட்டிவிட முயன்று வந்த பாசிஸ்டு ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியவற்றை அது தன் தாக்குதலுக்கு இலக்கு ஆக்கியது. ஜெர்மானிய பாசிஸம் சமாதானத்தின் முதல் பகைவன் என்று சித்திரிக்கப்பட்டது.

பாசிஸ்டு ஆக்கிரமிப்பு சோவியத் யூனியனுக்கு மட்டும் இன்றி வேறு அநேக நாடுகளுக்கும் அபாயம் விளைத்துக் கொண்டிருக்கும் நிலைமைகளில் ஐரோப்பாவில் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக தேசிய-விடுதலைப் போர்கள் நடப்பது சாத்தியம் என்ற முக்கியமான முடிவைக் காங்கிரஸ் செய்தது. வி. பிக், செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளான கி. கோட்வால்டு, யா. ஷ்வேர்மா, ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதி அ. தே. லெவூவ் ஆகியோரும் பிறரும் இது பற்றிப் பேசினார்கள். ஐரோப்பாவில் தேசிய-விடுதலைப் போர்கள் நடக்கக் கூடும் என்று வி. இ. லெனின் முதல் உலக யுத்தக் காலத்தில் கூறியதை அ. தே லெவூவ் நினைவுபடுத்தினார். ஹிட்லர் குழுவினர் பல ஐரோப்பிய நாடுகளை அடிமைப்படுத்த முயன்றுவரும் நிலைமைகளில் லெனினுடைய இந்தச் சொற்கள் இரு மடங்கு முக்கியத்துவம் உள்ளவை ஆகின்றன என்றார் அவர்.[1]

ஏதேனும் ஒரு சிறு அரசு, அதன் தேசிய சுதந்திரத்தை அழிக்க முயலும் ஒரு அல்லது அனேக ஏகாதிபத்திய அரசுகளின் தாக்குதலுக்கு உள்ளானால், "அந்த நாட்டின் தேசிய பூர்ஷ்வா வர்க்கம் இந்தத் தாக்குதலை எதிர்த்து நடத்தும் போர் விடுதலைப் போரின் தன்மையை மேற்கொள்ளக் கூடும். அந்நாட்டின் தொழிலாளி வர்க்கமும் கம்யூனிஸ்டுகளும் தலையிடாமல் இருக்க முடியாது"[2]. ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் சிறு நாட்டின் பூர்ஷ்வா அரசாங்கத்

---

[1] மை. ஆ. கூ., *494/1/368/7-8*.

[2] ஏழாவது உலகக் காங்கிரஸின் தீர்மானங்கள், பக்கங்கள் **41-42**.

தைக் கம்யூனிஸ்டுகள் நிபந்தனை இன்றி ஆதரிப்பார்கள் என்று இதற்கு அர்த்தம் அல்ல. தேசிய-விடுதலைப் போராட்டத்தில் தாய்நாட்டைப் பாதுகாப்பதுடன் விரிவான உழைப்பாளி வெகு ஜனங்களின் வர்க்க விருப்பங்களைக் காப்பதைத் திறமையுடனும் சமயத்துக்குப் பொருத்தமான முறையிலும் இணைக்க வேண்டும், ஆட்சி அமைப்பை ஜனநாயகம் ஆக்கவும், சிறப்பாக இராணு வத்தை ஜனநாயகம் ஆக்கவும் முயலவேண்டும், பூர்ஷ்வா வர்க்கத் தின் சரணாகதி மனப்பான்மைக்கு இடம் கொடுக்காமல் தடுக்க வேண்டும் என்று ப. தளியாத்தி தமது முடிவுரையில் கூறினார். பூர்ஷ்வா அரசாங்கங்களின் தற்காப்பு நடவடிக்கைகள் விஷயத் தில் சமயோசிதமான கொள்கையைக் காங்கிரஸ் ஆதரித்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் ''தேசிய-விடுதலைப் போராட்ட வீரர் களின் முன் அணிகளில் நின்று விடுதலைப் போரை இறுதிவரை நடத்த வேண்டும். 'தங்கள்' பூர்ஷ்வாக்கள் சொந்த நாட்டின் நலன்களை விலையாகச் செலுத்தி ஆக்கிரமிக்கும் வல்லரசுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள அவை இடம் தரலாகாது''[1] என்று காங்கிரசின் தீர்மானங்களில் வலியுறுத்தப்பட்டது. கம்யூனிஸ்டு கள் உண்மையான தேசபக்தர்களாக, தங்கள் நாடுகளின் பொது தேசிய நலன்களின் உறுதியுள்ள காவலர்களாகத் தொண்டாற் றினார்கள்.

பாசிஸ்டு ஆக்கிரமிப்பு அபாயத்துக்கு உள்ளாகி இருந்த சிறு நாடுகள், உலகின் எல்லா சமாதானச் சக்திகளுக்கும் நம்பகமான அரணாக விளங்கிய சோவியத் யூனியனுடன் நெருங்கிய ஒத்துழைப்பு ஏற்படுத்திக் கொள்ள அப்போது உருவாகியிருந்த சூழ்நிலையில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தன. சமாதான ஆதரவாளர்களை சர்வதேச அரங்கில் ஒன்று திரட்டுவதற்குச் சாதகமான நிலைமை களை இந்த அக்கறை ஏற்படுத்தியது.

ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கிடையே நிலவிய தீவிர முரண் பாடுகள் காரணமாக, சிறப்பாக பாசிஸ்டு வல்லரசுகளின் தாக்கு தல் காரணமாக, அந்த சமயத்தில் சமாதானத்தைப் பாதுகாப் பதில் அக்கறை கொண்டிருந்த முதலாளித்துவ அரசுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே ஒத்துழைப்பு சாத்தியம் ஆகக் கூடிய நிலைமை உருவாகி இருந்தது என்று காங்கிரஸ் குறிப்பிட் டது. சோவியத் யூனியனின் சமாதானப் பற்றுள்ள கொள்கை

---

[1] ஏழாவது உலகக் காங்கிரஸின் தீர்மானங்கள், பக்கம் 42.

இத்தகைய ஒத்துழைப்பு ஏற்படுவதற்குத் துணை புரிந்தது. சோவியத் யூனியன் சர்வதேச சங்கத்தில் சேர்ந்ததும் (1934, செப்டெம்பர்) சோவியத் யூனியனுக்கும் பிரான்சுக்கும், சோவியத் யூனியனுக்கும் செக்கோஸ்லோவாக்கியாவுக்கும் இடையே பரஸ்பர உதவி ஒப்பந்தங்கள் 1935, மே மாதம் நிறைவேறியதும் ஐரோப்பாவில் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்துவதற்கும் ஹிட்லர் குழு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து முறியடிக்கும் நோக்கத்துடன் எல்லா சமாதானப் பற்றுள்ள அரசுகளும் ஒத்துழைப்பதற்கும் அடிக்கல் நாட்டின.

தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளிகளையும் ஜனநாயக வட்டாரங்களையும் மட்டுமின்றி பாசிஸ்டு ஆக்கிரமிப்பு அபாயத்துக்கு உள்ளாகி இருந்த எல்லா நாடுகளையும் உள்ளடக்கிய ஆக விரிவான சமாதானக் கூட்டணியை அமைக்கும் பிரச்சினையை ஏழாவது காங்கிரஸ் இவ்வாறு முன்வைத்தது. யுத்தத்துக்கு எதிராக உண்மையில் போராடத் தயாராய் இருந்த எல்லா சாத்துவிகவாதிகளையும் இந்தக் கூட்டணியில் சேரக் கம்யூனிஸ்டுகள் அழைத்தார்கள். இத்தகைய விரிவான சமாதானக் கூட்டணியை அமைப்பதும் அதன் எல்லாச் சக்திகளும் ஊக்கத்துடன் செயல் ஆற்றுவதும் நிலைமையை சமாதான ஆதரவாளர்களுக்குச் சாதகமாக மாற்றக் கூடும் என்று காங்கிரஸ் அழுத்திக் கூறியது.

ஏகாதிபத்திய யுத்தம் மூண்டுவிட்டால் ஏகாதிபத்திய யுத்தத்தை பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான உள்நாட்டுப் போராக மாற்றி சுரண்டுவோர் ஆட்சி அமைப்புக்களைக் கவிழ்த்தவும் சமாதானத்துக்கும் மக்கள் இனங்களின் விடுதலைக்கும் வழி கோலவும் கம்யூனிஸ்டுகள் முயல வேண்டும் என்று காங்கிரஸ் தீர்மானங்களில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

உலகின் எல்லா உழைப்பாளிகளின் பொருட்டும் சோஷலிஸத்தின் நலன்களையும் சமாதானத்தின் நலன்களையும் காத்துப் போராடும் நாடான சோவியத் யூனியனைப் பாதுகாப்பது சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிக முக்கியக் கடமை என்று காங்கிரஸ் ஒப்புக் கொண்டது. சோவியத் யூனியனுக்கு எதிராகப் புரட்சி எதிர்ப்புப் போர் மூண்டுவிடும் பட்சத்தில் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்கள் மீது செஞ்சேனையின் வெற்றிக்கு எல்லாச் சாதனங்களாலும் உதவும்படி உழைப்பாளிகளை அறைகூவி அழைக்கும்படி கம்யூனிஸ்டுகளுக்கு யோசனை கூறப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் முதல் சோஷலிஸ நாட்டைக் காப்பது என்ற தங்

களுடைய கோட்பாட்டுரீதியான நிலையைத் தொழிலாளர் இயக்கத்தின் சர்வதேசிய நலன்களுக்கும் தேசிய நலன்களுக்கும் பொருத்தமான, சமயத்துக்குத் தகுந்த செயல்தந்திரத்துடன் உரிய முறையில் இணைக்க வேண்டும் என்று காங்கிரஸ் வழி காட்டியது.

யுத்தம் மூண்டால் மிக மிக எதிர்பாரா நிகழ்ச்சிகள் நடக்கக் கூடும் என்று காங்கிரஸ் எச்சரித்தது. அதிகத்திலும் அதிகமான முன்முயற்சி எடுத்துக் கொள்வதற்கும் தனிப்பட்ட பொறுப்பு ஏற்பதற்கும் எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் அவற்றின் எல்லா ஊழியர்களையும் ஒவ்வொரு. கம்யூனிஸ்டையும் இன்றே பயிற்ற வேண்டும் என்று காங்கிரஸ் சுட்டிக் காட்டியது.

நெருங்கி வந்து கொண்டிருந்த உலக யுத்தத்தின் தொடர்பாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள் பற்றி ஏழாவது காங்கிரஸ் செய்த முடிவுகள் பாசிஸத்துடன் விரைவில் அவை நடத்தவிருந்த ஆயுதப் போருக்கு அவற்றை ஆயத்தப்படுத்தின.

**சோவியத் யூனியனில்
சோஷலிஸத்தினது
வெற்றியின் முக்கியத்துவம்
பற்றி ஏழாவது காங்கிரஸ்**

சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்தின் மொத்த விளைவுகள் பற்றியும் சோவியத் யூனியனில் நிகழ்ந்துள்ள உலக வரலாற்றுத் தன்மை வாய்ந்த அடிப்படை மாற்றங்கள் உலகப் புரட்சியின் வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பற்றியும் மனுயீல்ஸ்கி சமர்ப்பித்த அறிக்கையைக் காங்கிரஸ் கேட்டது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசுக்கு இந்த அறிக்கையைச் சமர்ப்பித்ததன் வாயிலாக, வெற்றி பெற்ற தொழிலாளி வர்க்கம் வரலாற்றில் முதன் முறையாக சோஷலிஸக் கோட்பாடுகளைச் செயல்படுத்தி இருக்கிறது என்பதை சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கும் உலகின் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் அறிவித்தது. சோஷலிஸ நாடு விறல் மிக்க இயந்திரத் தொழில் வல்லரசாகவும் உலக சோஷலிஸப் புரட்சியின் வெல்லரும் அரணாகவும் பாசிஸத்தினதும் யுத்தச் சக்திகளதும் தாக்குதலை எதிர்த்து நிற்கும் உறுதியான கோட்டையாகவும் மாறுவதற்குத் தான் அதுவரை செய்திருப்பது என்ன, மேற்கொண்டு செய்வது என்ன என்பதை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி காட்டி

யது. முதலாவது சோஷலிஸ நாடு தனது எல்லா வெற்றிகளின் வாயிலாகவும் உலகு அனைத்தினதும் உழைப்பாளிகளது நலன்களுக்குத் தொண்டாற்றுகிறது என்றும் அதன் சாதனைகள் ''நாட்டினங்கள், மானிட இனங்கள், மொழிகள், தோலின் நிறங்கள் ஆகிய வேறுபாடுகள் எவையும் இன்றி உலகு அனைத்தினதும் உழைப்பாளிகளுடைய செல்வமாக, சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் எதிர்த்துப் போராடுவோர் அனைவரதும் செல்வமாக விலங்குகின்றன''[1] என்றும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது.

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றியும் சோஷலிஸத் தொழில் பெருக்கமும் மனிதகுல வரலாற்றின் அடுத்துவந்த போக்கு அனைத்தின் மீதும் சோஷலிஸத்தின் மிக ஆழ்ந்த செல்வாக்கின் தலையூற்றாக விளங்கியது என்று காங்கிரஸ் பிரதிநிதிகள் குறிப்பிட்டார்கள். உலகம் முழுவதிலும் உள்ள உழைப்பாளிகள் சோவியத் யூனியனின் மாபெரும் சாதனைகளை ஆதாரமாகக் கொண்டு பாசிஸத்தினதும் ஏகாதிபத்தியப் பிற்போக்கினதும் யுத்தத்தினதும் தாக்குதலை எதிர்த்து அதிக நம்பிக்கையுடனும் வெற்றிகரமாகவும் போராட்டம் நடத்த முடிந்தது. சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றி ''உலக அளவில் வர்க்க சக்திகளின் ஒப்பு நிலையில் சோஷலிஸத்துக்குச் சாதகமாகவும் முதலாளித்துவத்துக்குப் பாதகமாகவும் புதிய பெருத்த முன்னேற்றம் நிகழ்ந்திருப்பதைக்''[2] குறிக்கிறது என்று காங்கிரசின் தீர்மானத்தில் பதிவு செய்யப்பட்டது. சோவியத் யூனியன் உலக அரசியல் மீது செல்வாக்கு செலுத்தும் மாபெரும் அரசு-அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சக்தி ஆகிவிட்டது என்றும், ஏகாதிபத்தியப் பிற்போக்கையும் பாசிஸத்தையும் யுத்தத்தையும் எதிர்த்துப் போராடும் எல்லாச் சக்திகளுடையவும் ஈர்ப்பு மையம் ஆகிவிட்டது என்றும் தீர்மானம் கூறியது. உலகில் புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சி சோவியத் யூனியன் வலுப்படுவதுடன் பிரிக்க முடியாதபடி இணைந்தது என்றும், சோவியத் யூனியனின் வெற்றிகள் உலகத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியத்துவத்தையும் அதன் முன்னணிப் படையான கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியத்

---

[1] த. மனுயீல்ஸ்கி. சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்தின் விளைவுகள். மாஸ்கோ, 1935, பக்கம் 59.

[2] ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கங்கள் 53-54.

துவத்தையும் சோஷலிஸக் கருத்தின் முக்கியத்துவத்தையும் அதிகப்படுத்துகின்றன என்றும் தீர்மானம் எடுத்துக் காட்டியது.

பாசிஸத்துடனும் ஏகாதிபத்தியப் பிற்போக்குடனும் வருங் கால மோதலில் பெரும் பகுதிச் சுமையை சோவியத் யூனியனே தாங்க நேரிடும் என்பதை முன்னுணர்ந்து, ''சோவியத் யூனியனை வலுப்படுத்த எல்லாச் சக்திகளாலும் சாதனங்களாலும் உதவு வதும் சோவியத் யூனியனின் பகைவர்களோடு போராடுவதும்''[1] சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தினதும் எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளதும் கடமை என்று காங்கிரஸ் சிறப்பாக வலியுறுத்தி யது.

**கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும்
கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை
உறுப்புக்களுக்கும் உள்ள பரஸ்பர
உறவு பற்றிய பிரச்சினை குறித்த
தீர்மானங்கள்**

கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களுக்கும் உள்ள பரஸ்பர உறவு பற்றிய பிரச்சினை குறித்து ஏழாவது காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்கள் மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தன. ஒவ்வொரு நாட்டினதும் ஸ்தூல நிலைமைகளையும் சிறப்பு இயல்புகளையும் கருத்தில் கொண்டு உலகத் தொழிலாளர் இயக்கத்தின் அடிப்படையான அரசியல், செயல்தந் திர ஆணைகளைத் தயாரிப்பதில் முதற்படியாகக் கவனம் செலுத்தும் படிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவுக்குக் காங்கிரஸ் யோசனை கூறியது. அதே சமயம், ''கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஸ்தா பனத்துக்கு உள் நிலவும் விவகாரங்களில் நேரடியாகத் தலையிடு வதை வழக்கமாகத் தவிர்க்கும்படி''[2] அது யோசனை தெரிவித் தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சுதந்திர முன்முயற்சியை வளர்ப் பதும், தங்கள் நாட்டில் வர்க்கப் போராட்டத்தின் வருங்காலத் துக்குரிய பெரிய பொறுப்பை அவை ஏற்றுக் கொள்ளுமாறு செய் வதும், ஒவ்வொரு தனி நாட்டின் சிறப்பான நிலைமைகளுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி தன்னை அதிக உபயோகமான முறையில் இசை

---

[1] ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கம் 54.
[2] அதே நூல், பக்கம் 5.

வித்துக் கொள்ளப் புரிவதும் இதன் நோக்கமாக இருந்தன. ஒரு சில நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய வேலையின் வடிவங்களையும் முறைகளையும் வேறு வகை நிலைமைகள் நிலவிய பிற நாடுகளில் அப்படியே, இயந்திர ரீதியில் புகுத்துவதை இந்தக் கொள்கைப் போக்கு நிராகரித்தது. சோதரக் கட்சிகளின் அனுபவத்தைப் படைப்புத் தன்மையுடன்,செயல் நோக்கில் அணுகுமாறு இது கம்யூனிஸ்டுகளுக்கு அறிவுறுத்தியது. பிற்காலத்தில், 1937 ஜூனில், கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகத்தினுடைய ஒரு கூட்டத்தில் கி. திமீத்ரொவ் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பெருத்த சுயநிர்வாகத்தையும் சுதந்திரத்தையும் பற்றிப் பேசினார். ''கம்யூனிஸ்டு அகிலத்தின் தரப்பில் கட்சிகள் தலைமை வகித்து நடத்தப்படும் இந்தத் துறையிலும் ஏழாவது காங்கிரஸ் திருப்பம் ஏற்படுத்தியது சரியே. கட்சிகள் மேலும் மேலும் தங்கள் சொந்த பலத்தைச் சார்ந்திருக்கவேண்டும். தங்கள் கொள்கையையும் செயல்தந்திரத்தையும் தீர்மானிக்கவும் எந்தக் கணத்திலும் செயல் தலைமையை நிர்ணயிக்கவும் கட்சிகள் திறம் பெற வேண்டும். நம்முடைய எல்லாப் பிரிவுகளும் நம்முடைய எல்லாக் கட்சிகளும் இந்தத் திறமையை முடிவாகப் பெற வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்''[1] என்றார் அவர். ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பெருத்த சுதந்திரத்தின் காரணமாக அவை தேசிய ஒதுக்க நிலைப் பாதைக்கு நழுவாமல் இருக்கவும் இயக்கத்தின் பொது சர்வதேசியப் பணிகளின்பால் விசுவாசம் கடைப்பிடிக்கவும் விசேஷ கவனத்துடன் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கைகளில் தேசியப் பணிகளுக்கும் சர்வதேசியப் பணிகளுக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தத்தை லெனினது உணர்வில் விளக்குவதற்கு ஏழாவது காங்கிரஸ் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டது. கம்யூனிஸ்டுகளின் வேலையில் தேசியவாத மறுப்புப் போக்கின் எல்லா வித வெளிப்பாடுகளையும் அது கடுமையாக விமர்சித்தது. ''பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம் சொந்த மண்ணில் ஆழமாக வேர் ஊன்றுவதற்கு ஒவ்வொரு நாட்டிலும் 'பருவ நிலைக்குப் பழக' வேண்டும்'' என்றார் கி. திமீத்ரொவ். ''தனித் தனி நாடுகளின் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தினதும் தொழிலாளர் இயக்கத்தினதும் தேசிய **வடிவங்கள்** பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்துக்கு முரண்படுவதில்லை. மாறாக, இந்த வடிவங்களிலேயே **பாட்டாளி வர்க்கத்தின்**

[1] மை. ஆ. கூ., 495/18/1206/101-102.

சர்வதேச நலன்களையும் வெற்றிகரமாகக் காத்துப் போராட முடியும்.''[1]

நாட்டினங்களின் உண்மையான நலன்களைக் கருதுவதும் காப்பதுமாக விளங்கும் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணியில் செல்பவர்களான கம்யூனிஸ்டுகள் சர்வதேசிய ஒற்றுமை ஏற்படுத்தவும் தங்கள் முயற்சிகளை ஒன்றிணைக்கவும் எப்போதும் பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று காங்கிரஸ் சிறப்பான வன்மையுடன் வலியுறுத்தியது. எனவே ஒவ்வொரு கட்சியும் சர்வதேசப் புரட்சி அனுபவத்திலிருந்து எல்லாச் சிறந்த அம்சங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும்: இதன் தொடர்பாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ''தனது அனுபவத்தையும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்வதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு உதவ வேண்டும்...''[2] என்று ஏழாவது காங்கிரஸின் தீர்மானம் விதித்தது. இவ்வாறு ஏழாவது காங்கிரஸ், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகளினுடைய பல்வகைப்பாட்டையும் சிக்கலையும், கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ந்துவரும் தரத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, கம்யூனிஸ்டுக் கட்சிகள் தாராளமாகவும் சுதந்திரமாகவும் இயங்குவதற்கு வகை செய்வதையும் அதே சமயம் அவற்றின் சர்வதேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு முக்கியமான நடவடிக்கை எடுத்துக் கொண்டது.

காங்கிரஸ் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களைத் தேர்ந்தெடுத்தது: 46 உறுப்பினர்களும் 33 வேட்பாளர்களும் அடங்கிய கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு; 20 உறுப்பினர்கள் கொண்ட சர்வதேசக் கண்காணிப்புக் கமிஷன். செயற்குழுவின் தலைமைக் குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்: கோட்வால்டு, திமீத்ரொவ், கஷேன், கொலாரவ், கப்ளௌனிக், கூஸினென், லேன்ஸ்கி, மனுயீல்ஸ்கி, மர்த்தி, மொஸ்க்வீன் (திரிலீஸெர்), வான் மின், ஒகானோ (நொஸாக்கா), பிக், போலிட், ஸ்தாலின், தோரேஸ், ஃபுளோரின், ஃபோஸ்டர், எர்க்கோலி (தளியாத்தி). செயற்குழுச் செயலக உறுப்பினர்களாக திமீத்ரொவ் (பொதுச் செயலாளர்), தளியாத்தி, மனுயீல்ஸ்கி, பிக், கூஸினென், மர்த்தி, கோட்வால்டு ஆகியோரும் வேட்பாளர்

[1] கி. திமீத்ரொவ். பொறுக்கி எடுத்த நூல்கள், தொகுதி 1, பக்கங்கள் 439-440.

[2] ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கம் 7.

களாக மொஸ்க்வீன், ஃபுளோரின், வான் மின் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின்னர், 1939ல் ஹொஸே தியாஸும் த. இபரூரியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுச் செயலக உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தினது
ஏழாவது காங்கிரசின்
வரலாற்று முக்கியத்துவம்

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்களில் லெனினுடைய கருத்துக்கள் இழையோடி இருந்தன. சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கங்களுக்கும் பாசிஸத்தையும் ஏகாதிபத்தியத்தையும் யுத்தத்தையும் எதிர்த்து எல்லாப் புரட்சிச் சக்திகளும் ஜனநாயகச் சக்திகளும் நடத்திய போராட்டத்தின் வளர்ச்சிக்கும் இந்தத் தீர்மானங்கள் வரலாற்றுத் தன்மை வாய்ந்த, திருப்பம் ஏற்படுத்தும் முக்கியத்துவம் கொண்டிருந்தன.

எதார்த்த நிலைமையை மார்க்சிய-லெனினிய நோக்கில் ஆழ்ந்து பகுத்தாராய்ந்து, வர்க்கப் போராட்டங்களின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய செல்திசையைக் காங்கிரஸ் திட்டம் செய்தது. பாசிஸ்டு விரோத, பொது ஜனநாயகப் பணிகளின் நிறைவேற்றத்துக்கான ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி, விரிவான மக்கள் கூட்டணி என்ற கொள்கை இது. புரட்சிப் போராட்டத்தின் சோஷலிஸக் கட்டத்துக்கு முன்னேறுவதற்கான புதிய வாய்ப்புக்களை இந்தக் கொள்கை ஏற்படுத்தியது. இது புதிய செயல்தந்திரம் மட்டும் இன்றிப் புதிய போர்த்தந்திரப் போக்காகவும் விளங்கியது. உலகில் வர்க்கச் சக்திகளின் அணி வகுப்பில் ஏற்பட்டிருந்த மாறுதல்களிலிருந்தும் ஏகபோக முதலாளித்துவத்தின் முரண்பாடுகளினது அதிகரிப்பிலிருந்தும் தோன்றியிருந்தது இது. ஏகபோக முதலாளித்துவமோ, மக்களின் விரிவான வட்டாரங்களுக்கு நாளுக்கு நாள் அதிகப் பகைமையுள்ளது ஆகிக் கொண்டு போயிற்று. எதார்த்தத்தில் முதிர்ந்து விட்டிருந்த வர்க்கப் போராட்டத்தின் தேவைகளுக்குக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முறையான விடையாக விளங்கின ஏழாவது காங்கிரசின் தீர்மானங்கள். காங்கிரஸ் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்துக்கு வளம் கூட்டியது, கம்யூனிஸ்டு இயக்கத்தைக் கொள்கைவாத நோக்கில் புதிய மட்டத்துக்கு உயர்த்தியது, பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தின் வாய்ப்புக்

கள் பற்றிய தெளிவான புரிவை அதற்கு அளித்தது. காங்கிரஸ் கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்களுக்குக் கொள்கைவாத-சித்தாந்தப் பயிற்சிக் கூடம் ஆயிற்று.

காங்கிரசின் தீர்மானங்கள் சமகாலத்தின் அவசரப் பிரச்சினைகளுக்குத் தெளிவான விடைகள் அளித்தன. பாசிஸத்தை வெற்றி கொள்வதற்கும் சமாதானத்தையும் சமுதாய முன்னேற்றத்தையும் அடைவதற்கும் உரிய மெய் வழிகளை உழைப்பாளிகளுக்கும் எல்லா ஜனநாயகவாதிகளுக்கும் எல்லா சமாதான ஆதரவாளர்களுக்கும் அவை காட்டின. மிகக் கொடிய ஏகாதிபத்தியப் பிற்போக்குக்கு எதிராக, மனித குலத்தின் ஒளிநிறைந்த வருங்காலத்தின் பொருட்டு நடக்கும் போராட்டத்தில் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தினதும் அதன் முன்னணிப் படையான சோவியத் யூனியனதும் வளர்ந்து வரும் பாத்திரத்தையும் அவை சுட்டிக் காட்டின.

வர்க்கப் போராட்டத்தின் அடிப்படைப் பிரச்சினைகளினது பகுத்தாராய்வின் ஆதாரத்தில், வருங்காலத்துக்கு வழி திறக்கும் கொள்கையை வகுக்கத் திறன் கொண்ட மார்க்சிய-லெனினியத்தின் படைப்பு ஆற்றலைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் தீர்மானங்கள் ஸ்தூலப்படுத்தின.

ஏழாவது காங்கிரசின் தீர்மானங்கள் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கங்களில் சந்தர்ப்பவாதத்துக்கும் வரட்டுச் சூத்திரவாதத்துக்கும் குறுகிய பிரிவுவாதத்துக்கும் மிகப் பலமான அடி கொடுத்தன. ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் மிக விரிவான முன்முயற்சி எடுத்துக்கொள்ளவும் படைப்புச் செயல் ஆற்றவும் அவை வழி வகுத்தன. குறுகிய பிரிவுவாதத் தவறுகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வெகுஜனக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு அந்தச் சமயத்தில் ஆகப் பெரிய தடையாக இருப்பதாகக் கூறிக் காங்கிரஸ் அவற்றைக் கண்டனம் செய்தது. அதே சமயம், புதிய கொள்கைப் போக்கு வலதுசாரி சந்தர்ப்பவாத நோக்கில் விளக்கப்படும் அபாயம் நிலவுவதாகவும், ''வலதுசாரி அபாயம் நாளுக்கு நாள் வளரும்''[1] என்ற சாத்தியப்பாட்டைக் கம்யூனிஸ்டுகள் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அது கூறியது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசிலிருந்து சர்வதேசக் கம்யூனிஸ்டு தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியில் புதிய அத்தியாயம் தொடங்கியது.

---

[1] ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள், பக்கம் 27.

புதிய போர்த்தந்திரம் நடப்பில்

கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களுக்கு வரவேற்பு

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசால் வகுக்கப்பட்ட புதிய அரசியல் கொள்கைப் போக்கு, பொது மக்களின் மிகப் பல் வேறுன வட்டாரங்களின் விரிவான வரவேற்பைப் பெற்றது. கம்யூனிஸ்டுகள் ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களைத் தங்கள் செயல் திட்டமாக ஏற்றுக் கொண்டார்கள். ''பிராவ்தா'' செய்தித்தாள் 1935, ஆகஸ்டு 29ந் தேதி இதழ் தலையங்கத்தில் பின் வருமாறு எழுதியது: ''ஏழாவது காங்கிரசால் குறிக்கப்பட்ட திருப்பத்தை நடைமுறையில் செயல்படுத்தும் பணி கம்யூனிஸ்டு அகிலத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் முன்பு முழு அளவில் எதிர்ப்பட்டுள்ளது. முன்கூட்டித் தயாரித்த அச்சுப் பிரதிகளுக்கும் கற்பனை செய்த திட்டவரைவுகளுக்கும் உயிரற்ற சூத்திரங்களுக்கும் இந்தத் திருப்பத்துக்கும் பொதுவான அம்சம் எதுவும் இல்லை. வெற்றியின் திறவுகோல் கம்யூனிஸ்டுகளின் கைகளிலேயே இருக்கிறது. இந்தத் திறவுகோலைச் சரியாகப் பயன்படுத்துவது தான் தேவை''. புதிய தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதில் அனேகக் கட்சிகளுக்கு ஓரளவு இடர்ப்பாடுகள் நேர்ந்தன. குறுகிய பிரிவுவாதக் கற்பனைகளைக் கணப்போதில் அகற்றிவிட முடியாததும் அவை தலை தூக்கியதுமே இதற்குக் காரணம். ஆயினும் ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களும் ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியின் பொருட்டு நடத்திய போராட்டத்தில் சில கம்யூனிஸ்டுக் கட்சிகள் பெற்றிருந்த அனுபவமும் மிகவும் நம்பிக்கையூட்டுபவையாக இருந்ததால் குறுகிய பிரிவுவாதமும் வரட்டுச் சூத்திரவாதமும் விரைவில் தங்கள் ஆதாரத்தை இழந்துவிட்டன. புதிய கொள்கைப் போக்கைக் கடைப்பிடித்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் வர்க்கப் போராட்டத்தில் செயலூக்கமுள்ள நிலைகளை உடனே மேற்கொண்டன. அவற்றின் அரசியல் பாத்திரம் கணிசமாக அதிகரித்தது. அந்தத் தருணத்தில்

வர்க்கப் போராட்டத்தில் அகநிலைக் காரணியின் பாத்திரம் சிறப்பான தெளிவுடன் வெளிப்பட்டது. வெகுஜனங்களின் உடனடித் தேவைகளுக்கும் அவர்களது உணர்வின் தரத்துக்கும் ஏற்ற கொள்கையைச் சிக்கலான நிலைமைகளில் வகுப்பதற்குக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு உள்ள திறமையின் முக்கியத்துவம் இவ்வாறு துலக்கமாகப் புலனாயிற்று. கம்யூனிஸ்டு அகிலம் முப்பதுக்களின் நடுவில் உழைப்பாளிகளுக்கு மிகச் சரியான கொள்கையை அளிக்க முடிந்தது, அவர்களது போராட்டத்தின் வளர்ச்சியில் உடனே பாதிப்பு நிகழ்த்தியது. 1934ம் ஆண்டு வரையிலும், சில நாடுகளில் அடுத்த ஆண்டின் தொடக்கம் வரையில் கூட, பாசிஸம் தனது தாக்குதலைத் தொடர்ந்தது என்றால், இந்தக் கணம் முதல் உழைப்பாளிகளின் பாசிஸ எதிர்ப்புப் போராட்டம் விரைவாக வளர்ந்து வலுவடையலாயிற்று. கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கை, பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகத் தொழிலாளி வர்க்கமும் பிற ஜனநாயக வட்டாரங்களும் நடத்திவந்த போராட்டத்தின் வளர்ச்சிக்கான விறல் மிக்க உந்து விசை ஆகி விட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைவாத, அரசியல் பாத்திரம் கணிசமான வளர்ச்சி பெற்றது.

சமூக-ஜனநாயகத் தொழிலாளி வெகுஜனங்களின் கணிசமான பகுதியினரும் சமூக-ஜனநாயகத்தின் இடதுசாரிக் குழுக்களும் ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்தார்கள். தொழிலாளி வர்க்கத்தின் எல்லாப் பிரிவுகளும் ஒன்றித்துச் செயல்படுவதற்குச் சாதகமான நிலைமைகளை ஏழாவது காங்கிரஸ் உருவாக்கி இருப்பதாக அவர்கள் நியாயமாகவே கருதினார்கள். பல நாடுகளில் சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தின் புதிய கொள்கைப் போக்கை வரவேற்றார்கள். கம்யூனிஸ்டுகள் மீது அவர்களுடைய நம்பிக்கை வளர்ந்தது. ஒன்றித்துச் செயல்புரிவதற்கான ஆர்வம் தீவிரம் ஆயிற்று. இத்தகைய போக்குக்கள் வளரும் என்ற அச்சத்தால் சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்கள் ஏழாவது காங்கிரசுக்கு எதிராகக் கிளர்ச்சி இயக்கம் தொடங்கினார்கள். சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தினது செயற்குழுவின் அக்டோபர் கூட்டத்துக்குமுன் அதன் தலைவர்களில் ஒருவரான ஃபி. ஆட்லர் செயற்குழுவின் எல்லா உறுப்பினர்களுக்கும் விரிவான கடிதம் ஒன்று அனுப்பினார். கம்யூனிஸ்டு அகிலத்தின் தீர்மானங்களை நம்பக் கூடாது என்று அதில் அவர் வேண்டிக் கொண்டார். அவை சூழ்ச்சி நடவடிக்கை என்றும் ''அதிக

சமயோசிதமான செயல்தந்திரத்துக்கு''[1] மாற்றம் மட்டுமே என்றும் வருணித்தார். ஒன்றித்த தொழிலாளர் கூட்டணிக்கான போராட்டத்தின் வளர்ச்சி வருங்காலத்திலும் இந்த அரசியல் சக்தியின் ஆழ்ந்த எதிர் நடவடிக்கைகளைச் சமாளிக்க நேரும் என்பதைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் தீர்மானங்கள் பற்றி வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் காட்டின.

தொழிலாளர் இயக்கத்திலும் ஜனநாயக ஸ்தாபனங்களிலும் இருந்த இடதுசாரியினரும் அரைத் திரோத்ஸ்கிவாதிகளும் கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களை ''இடப்புறமிருந்து'' விமர்சிக்க முயன்றார்கள். கம்யூனிஸ்டு அகிலம் வர்க்க நிலைகளைக் கைவிட்டு விட்டு, சீர்திருத்தவாத நிலையையும் குட்டி பூர்ஷ்வா சாத்துவிகவாத நிலையையும் மேற்கொண்டு விட்டதாக அவர்கள் பழி சாட்டினார்கள். ''இடப்புறமிருந்து'' செய்யப்பட்ட இவ்வித விமர்சனத்தின் நோக்கம் ஏழாவது காங்கிரஸ் மேற்கொண்ட கொள்கைப் போக்கு சரியானதா என்பது பற்றி சந்தேகங்களுக்கு வித்திடுவதற்கும் கம்யூனிஸ்டுகளின் அணிகளில் நிலவிய குறுகிய பிரிவுவாதக் காழ்ப்புக்களுக்கு ஆதரவளிப்பதற்கும் முயல்வதாகும்.

பிற்போக்கு பூர்ஷ்வாச் செய்தித்தாள்கள் ஏழாவது காங்கிரசின் தொடர்பாகக் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு எதிராக உக்கிரமான பிரசார இயக்கம் நடத்தின. ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக்கு எதிராக, எல்லாக் கம்யூனிஸ்டு விரோதிகளுடையவும் ஒன்றித்த கூட்டணியை அமைக்கும்படி அவை கோரின.

ஒவ்வோர் அரசியல் போக்கும் ஏழாவது காங்கிரசின் தீர்மானங்கள் பற்றித் தனது கருத்தை வெளியிட்டது. புதிய கம்யூனிஸ்டுக் கொள்கைப் போக்கு உலகில் வர்க்கப் போராட்டத்தின் மீது ஏற்படுத்தியிருந்த பெருத்த செல்வாக்குக்கு ஒரு வகையில் ஏற்பாக விளங்கியது இது.

செயற்குழு இயந்திரம் மாற்றி அமைக்கப்படுகிறது

புதிய கொள்கைப் போக்கு கம்யூனிஸ்டுக் கட்சிகளிடம் அதிக முன்முயற்சியையும் இயங்கு திறனையும் கோரியது. அதே சமயம்

[1] *Julias Braunthal*. Geschichte der Internationale. Bd. II. Hannover, 1963, S. 502.

கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமைக் குழு அடிப்படை அரசியல், செயல்தந்திரத் தீர்மானங்களைத் தயாரிப்பதில் கவனத்தை ஒருமுனைப் படுத்த வேண்டி இருந்தது. இந்தக் காரணங்களால் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு இயந்திரத்தின் வேலையையும் அமைப்பையுமே மாற்றுவது இன்றியமையாதது ஆயிற்று. 1935, செப்டெம்பர் மாதம் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகம் செயற்குழு இயந்திரத்தை மாற்றி அமைக்க முடிவு செய்தது. செயற்குழுத் தலைமைக் குழுவின் அக்டோபர் மாதக் கூட்டங்களில் இந்த முடிவு இறுதியாக உறுதிப்படுத்தப்பட்டது. கட்சிகளின் செயல் தலைமை நேரே கட்சிகளின் கைகளுக்கே மாற்றப்பட்டது. இந்தக் காரணத்தால், முன்பு செயல் தலைமையை ஓரளவு செயல்படுத்தி வந்த பிரதேசச் செயலகங்கள் (லெண்டெர்-செயலகங்கள்) கலைக்கப்பட்டன. கட்சிகளின் தலைமை ஊழியர்களுடைய தரம் உயர்ந்து விட்டபடியால் கட்சிகளில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் முழு அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நியமிக்கப்படுவது ரத்து செய்யப்பட்டது.[1] செயற்குழுவின்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் முழு அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மத்தியக் கமிட்டிகளோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு தங்கள் பணிகளை நிறைவேற்றி வந்தார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதிலும், திட்டவட்டமான அரசியல் தீர்மானங்களைத் தயாரிப்பதிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இவர்கள் பேருதவி புரிந்தார்கள். செயற்குழுவின் முழு அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பலர் தாங்கள் அனுப்பப்பட்டிருந்த நாடுகளின் கம்யூனிஸ்டுகளிடையே தகுதி காரணமாகப் பெருத்த செல்வாக்கு பெற்றிருந்தார்கள். சிலி நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் எ. லாஃபெர்த்தே, கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பிரதிநிதி மிகேல் கான்திரெராஸைப் பற்றி, கட்சி ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த பிரச்சினைகளை அவர் நன்கு அறிந்திருந்தார் என்றும் ''பலர் நினைப்பது போல மேற்பார்வையாளராக அவர் இருக்கவே இல்லை'' என்றும் எழுதினார். ''இல்லை, கம்யூனிஸ்டு அகிலம் அனுப்பியவர்கள் மேற்பார்வையாளர்கள் அல்ல, தோழர்கள், நண்பர்கள்.'' (பார்க்க: எலியாஸ் லாஃபெர்த்தே. கம்யூனிஸ்டின் வாழ்க்கை. மாஸ்கோ, 1961, பக்கம் 164.)

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் செயற்குழுப் பிரதிநிதியாக இருந்த எ. ஃபிரிட் (கிளெமான்), பழந் தலைமுறையைச் சேர்ந்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளால் மிகுந்த மரியாதையுடன் நினைவுகூரப்படுகிறார். இரண்டாவது உலக யுத்தத்தின் போது எ. ஃபிரிட் எதிர்ப்பு இயக்க வீரராக உயிர் துறந்தார்.

முந்திய பிரிவுகளின் இடத்தில் இரண்டு பிரிவுகள் மட்டுமே அமைக்கப்பட்டன: ஊழியர் பிரிவு, பிரசார, வெகுஜன ஸ்தாபனப் பிரிவு. செயற்குழுச் செயலகத்துக்குத் தலைமைக் குழு (பியூரோ)வும் விவகார நிர்வாகமும் தொடர்புப் பணிமனையும் இருந்தன. செயற்குழுவின் பொதுச் செயலாளரும் பிற செயலாளர்களும் செயற்குழுவில் இருந்த கட்சிகளின் பிரதிநிதிகளது ஒத்துழைப்புடன் தங்கள் அலுவல்களை நிறைவேற்றினார்கள். தங்கள் பிரிவுகள் சம்பந்தமான யோசனைகளையோ தீர்மானங்களையோ தயாரிப்பதில் இந்தப் பிரதிநிதிகள் முக்கியப் பங்கு ஆற்றினார்கள். செயற்குழுவின் ஒவ்வொரு காரியதரிசியும் குறித்த சில நாடுகளுக்குச் செயலகத்தின் முன்பும் தலைமைக் குழுவின் முன்பும் பொறுப்பு ஏற்றார். புனரமைப்பின் விளைவாக நிறுவப்பட்ட செயற்குழுவின் இயந்திரம் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முயற்சிகளை ஒருங்கிசைக்கும் பணியையும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்காக அரசியல் ஆணைகளைத் தகுதியுடன் தயாரிக்கும் பணியையும் நிறைவேற்ற வல்லதாய் இருந்தது. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் ஒவ்வொரு கட்சியினதும் முன்முயற்சியும் சுதந்திரமும் நாளுக்கு நாள் அதிக முக்கியத்துவம் பெறும் வகையில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் பரஸ்பர உறவுகளின் வளர்ச்சிக்கான புதிய கட்டத்துக்குப் பரிணமிப்பு தொடங்கியிருந்ததைக் குறிக்கும் முக்கியமான நடவடிக்கையாக விளங்கியது இந்தப் புனரமைப்பு.

எத்தியோப்பியாவில்
பாசிஸ்டு இத்தாலியின்
ஆக்கிரமிப்புக்கு எதிரான
போராட்டத்தில் கம்யூனிஸ்டு
அகிலமும் கம்யூனிஸ்டுக்
கட்சிகளும்

ஏழாவது காங்கிரசுக்குப் பிந்திய முதல் மாதங்களிலேயே எத்தியோப்பியாவில் பாசிஸ்டு இத்தாலியின் ஆக்கிரமிப்புக்கு எதிராக சர்வதேசப் பாட்டாளி வர்க்கச் சக்திகளை அணி திரட்டுவதற்குக் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் அவசர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது தேவைப்பட்டது. இத்தாலிய பாசிஸம் எத்தியோப்பியாவுக்கு எதிராகப் போருக்கு முஸ்தீப்பு செய்கிறது என்று இதற்கு வெகு காலத்துக்கு முன்பே கம்யூனிஸ்டுக் கட்சிகள் உழைப்பாளிகளை எச்சரித்திருந்தன.

1935ம் ஆண்டுக் கோடையில் எத்தியோப்பிய மக்கள் பாது காப்புக் கமிட்டிகள் பல நாடுகளில் அமைக்கப்பட்டன. இவற்றை நிறுவுவதில் கம்யூனிஸ்டுகள் மிக ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். பாசிஸ்டு இத்தாலியின் ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்கு எதிராக இந்தக் கமிட்டிகள் விரிவான கிளர்ச்சி இயக்கம் நடத்தின. எத்தியோப்பிய மக்களையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மகாநாடு இந்தக் கமிட்டிகளால் செப்டெம்பர் 3ந் தேதி பாரிஸ் நகரில் கூட்டப்பட்டது. சர்வதேச சங்கம் உறுதியான நடவடிக்கைகள் எடுத்து யுத்தத்தை மூளவிடாது தடுக்க வேண்டும் என்று முற்போக்கு அறிவுஜீவிகள், பாசிஸ்டு எதிர்ப்பு ஸ்தாபனங்கள், தொழிலாளர் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கோரினார்கள். ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எல்லா பாசிஸ்டு விரோதக் கட்சிகளும் ஸ்தாபனங்களும் ஒன்று சேர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். செயற்குழுவின் அடுத்த கூட்டத்தில் யுத்தத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிராகவும் எத்தியோப்பியாவுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்துக்கு எதிராகவும் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான நிபந்தனைகள் பற்றி ஆலோசிப்பதற்குத் தாங்கள் இசைவதாக சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் தலைவர்கள் இந்தச் சூழ்நிலையில் அறிவித்தார்கள். ஆயினும், 1935, செப்டெம்பர் 6ந் தேதி நடந்த சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம், ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலம் ஆகியவற்றின் செயற்குழுக்களது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சர்வதேச சங்கத்தையே எல்லாவற்றுக்கும் நம்பி இருப்பதாகத் தெரிவித்தது. இரண்டு சீர்திருத்தவாத அகிலங்களும் வெகுஜனங்களைச் செயலுக்கு அறைகூவி அழைக்கத் தயங்கின. ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் பொதுஜன அபிப்பிராயத்தைத திரட்டுவது இன்றியமையாதது என்று மட்டுமே அவை ஒப்புக்கொண்டன.[1]

பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, செக்கோஸ்லோவாக்கியா, வேறு அனேக நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள், யுத்தம் மூளாது தடுப்பதற்கு எல்லாத் தொழிலாளர் ஸ்தாபனங்களும் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டவட்டமான யோசனைகளை அந்த சமயத்தில் முன்வைத்தன யுத்த அபாயத்தின் தொடர்பாக சர்வதேசத் தொழிலாளி வர்க்

[1] „Rundschau", 1935, N 46, S. 2055.

கம் கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களைத் தெளிவுபடுத்தும்படி சில இடதுசாரி சமூக-ஜனநாயகவாதக் குழுக்களும் கட்சிகளும் அழைப்புக்கள் விடுத்தன. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு முக்கியமான முன்முயற்சி எடுத்துக்கொண்டு, எத்தியோப்பியாவில் நடக்கும் யுத்தத்துக்கு எதிராக ஒன்றித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் யோசனையை சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்துக்கு விடுப்பதற்காகத் தயாரித்தது. 1935, செப்டெம்பர் 24ந் தேதி நடந்த செயற்குழுச் செயலகத்தின் கூட்டத்தில், இரண்டாவது அகிலத்துக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது வேண்டுகோளின் வாசகம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த விஷயம் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதிக் குழு உறுப்பினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.[1] மா. கஷேன், மொ. தோரேஸ், ஹா. போலிட், யா. ஷ்வேர்மா ஆகியோர் பிரதிநிதிக் குழுவில் சேர்க்கப்பட்டார்கள். சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் செயலகத்துக்கு செப்டெம்பர் 25ந் தேதி அனுப்பப்பட்ட கடிதத்தில், இத்தாலிய, ஜெர்மானிய பாசிஸத்தின் இராணுவ நடவடிக்கைகள் ''உலக யுத்தத்துக்கு இட்டுச் செல்லக் கூடும்'' என்று சுட்டிக்காட்டப்பட்டது. புதிய ஏகாதிபத்திய யுத்தம் மூளும் அபாயத்தைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பின்வருமாறு கூறியது: ''இரண்டு அகிலங்களும் ஒன்றோடு ஒன்று கலந்துகொண்டு செயல்பட வேண்டும். யுத்த நெருப்பை மூட்ட விரும்பும் பாசிஸ்டுகளின் கைகளை அவை கூட்டு முயற்சியால் பின்னே இழுக்க வேண்டும்''. சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டிய உடனடி நடவடிக்கைகள் பற்றி இரு அகிலங்களின் பிரதிநிதிகளது ஒன்றித்த கூட்டத்தில் ஆலோசனை செய்யலாம் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு யோசனை தெரிவித்தது.[2]

கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதிக் குழுவுக்குச் செயற்குழுச் செயலகம் இட்ட ஆணைகளில் பின்வருமாறு வலியுறுத்தப்பட்டது: கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைகள், ''ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்களது அடிப்படையில் சர்வதேச அளவில் ஒன்றித்த

---

[1] மை. ஆ. கூ., 495/18/1017.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ்கள் 28-29, பக்கங்கள் 56-57.

கூட்டணியை வெற்றிகரமாக நிறுவுவதற்கான விவாதத்தின் தொடக்கப் புள்ளியாகக்'' கருதப்பட வேண்டும்.[1] யுத்தத்துக்கு எதிராக வெகுஜனக் கிளர்ச்சி இயக்கங்கள், இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் ஆயுதங்களும் போர்த் தளவாடங்களும் ஏற்றிச் செல்லப்படுவதை அனுமதியாமை, சர்வதேச சங்கத்தின் மூலம் தடைவிதிப்பு, பாசிஸ்டு இத்தாலிக்குச் சரக்குகள் ஏற்றிச் செல்வதற்கு சூயெஸ் கால்வாய் மூடப்படுவது, இத்தாலிய, ஜெர்மானிய பாசிஸத்துக்கு நிதி உதவி நிறுத்தப்படுவது முதலியவை பற்றி கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைகள் இந்த தஸ்தாவேஜில் சூத்திரவடிவில் தரப் பட்டிருந்தன. இந்த யோசனைகள் ''இறுதி எச்சரிக்கையின் தன்மையை மேற்கொள்ள மாட்டா'' என்று அதே சமயம் சுட்டிக் காட்டப்பட்டது. ''பிரதிநிதிக் குழு உடன்பாட்டுக்கு வர முயல வேண்டும். இந்த உடன்பாடு சில அம்சங்களில் குறுக்கப்பட்டிருந்தாலும் பரவாயில்லை.''[2]

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அவசரக் கடிதத்துக்கு அளித்த பதிலில் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் செயலகம், கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனையைச் செயற்குழுவின் ஆலோசனைக்கு வைப்பதாகவும், ''அது முடிவு எடுத்த உடனேயே'' அதன் முடிவைத் தெரிவிப்பதாகவும் உறுதி கூறியது.[3] இத்தகைய அவசரமற்ற போக்கு சமாதான எதிரிகளுக்குச் சாதகமாக இருந்தது. அக்டோபர் 3ந் தேதி பாசிஸ்டு இத்தாலியின் படைகள் எத்தியோப்பியா மீது படையெடுப்பு தொடங்கின.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ''யுத்தம் ஒழிக!'' என்னும் கோஷத்தை அக்டோபர் 7ந் தேதி முழக்கியது. எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய ஸ்தாபனங்களுக்கும் எல்லா யுத்த எதிர்ப்பாளர்களுக்கும் எல்லா நாடுகளின் மக்களுக்கும் இந்தத் தலைப்பில் ஒரு வேண்டுகோளை அது விடுத்தது. ''யுத்தத்தை மூட்ட விரும்பும் பாசிஸ்டுகளைத் தனிப்படுத்திக் கட்டுக்குள் வைக்கும் பொருட்டு எல்லா நாடுகளிலும் உள்ள எல்லாத் தொழிலாளர் ஸ்தாபனங்களுடையவும் சமாதானத்தின் எல்லா நண்பர்களுடையவும் செயல் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் இனி ஒரு கணம் கூடத் தாமதம் செய்வதுகூடாது''[4] என்று வேண்டுகோளில்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1018/24.

[2] அதே நூல், பக்கம் 26.

[3] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ்கள் 28-29, பக்கம் 57.

[4] அதே நூல், பக்கம் 59.

வலியுறுத்தப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் வேண்டுகோளில் திட்டவட்டமான நடவடிக்கைகளின் முழுச் செயல் திட்டம் அடங்கியிருந்தது. இவை செயல்படுத்தப் பட்டிருந்தால் இத்தாலிய பாசிஸ்டு ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட்டிருக்கும். அன்றே கி. திமீத்ரொவ் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் சார்பில் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்துக்கு இரண்டாவது கடிதத்தை அனுப்பினுர்.[1] கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைக்கு சாதகமான பதில் அளிப்பது அவசரமாக அவசியமானது என்று அவர் இன்னொரு தடவை சுட்டிக்காட்டினுர்.

சோஷலிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1935, அக்டோபர் 12ந் தேதி பிரஸ்ஸல்ஸ் நகரில் கூடி, கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனை மீது ஆலோசனை நடத்தியது. அந்த சமயத்தில், ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல சாதாரண சோஷலிஸ்டுகள் செயல் ஒற்றுமையைக் கோரினுர்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் யோசனைக்கு இம்முறை மறுப்பு தெரிவிக்கப்படாது என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டார்கள். அத்தகைய நிலைமைகளில் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பதினேழு கட்சிகளில் பன்னிரண்டு, பாசிஸ்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒன்றித்த நடவடிக்கைகளுக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்தன. ஆயினும், பிரிட்டன், ஹாலந்து, சுவீடன், டென்மார்க், செக்கோஸ்லோவாக்கியா ஆகிய ஐந்து நாடுகளைச் சேர்ந்த கட்சிகளின் பிரதிநிதிகள் கம்யூனிஸ்டுகளுடன் ஒன்றித்த நடவடிக்கைகள் மேற்கொள்ள மறுக்கும்படி விடாப்பிடியாக வற்புறுத்தினுர்கள்.[2]

இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலத்துடன் செயலொற்றுமை வலதுசாரி சோஷலிஸ்டுத் தலைவர்களால் குலைக்கப்பட்டதும் அவர்கள் சர்வதேச சங்கத்தின் நடவடிக்கைகளை மட்டுமே சார்ந்திருந்ததும் சமாதான ஆதரவாளர்களின் கூட்டணியை ஒன்றுபடுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் இடையூருக இருந்தன. சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம், சர்வதேச சங்கத்தால் விதிக்கப்பட்ட தடைகளை ஆதரிக்கும்படி கோரியதுடன் நின்றுவிட்டது. இவ்வாறு செய்ததன் மூலம், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் சுதந்திர நடவடிக்கைகளை அது மறுத்தது. தன் நடவடிக்கைகளைத் தன் பூர்ஷ்வா அரசாங்கங்

---

[1] அதே நூல், பக்கம் 58.

[2] "Internationale Information", 14. X. 1935, N 35.

களின் அயல் நாட்டுக் கொள்கைக்கு அடிப்படுத்தியது. இந்த நிலை, யுத்தத்துக்கும் யுத்த அபாயத்துக்கும் எதிராகப் பயன் விளைக்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படி சர்வதேச சங்கத்தை வற்புறுத்துவதற்குக் கூட உதவவில்லை.

யுத்தத்துக்கு எதிரான தொழிலாளர் இயக்கத்தில் பிளவு ஏற்படுத்தி, பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் பொருட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களையும் சமாதானப் போராட்டத்தின் நலன்களையும் பலி கொடுத்தவர்களைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு ஒரு தனி அறிக்கையில் கடுமையாக விளாசியது. ''ஒன்றித்த கூட்டணியின் எதிரிகளுடைய எதிர்ப்பைத் தகர்க்கும்படியும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தில் தங்கள் சக்திகள் சிதற அடிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும்படியும்''[1] செயற்குழு எல்லா பாசிஸ எதிர்ப்பாளர்களையும் மறுபடி அறைகூவி அழைத்தது.

பாசிஸ்டு இத்தாலியின் ஆக்கிரமிப்பையும் ஹிட்லர் ஜெர்மனியின் நாடு பிடிக்கும் முயற்சிகளையும் எதிர்த்துப் பல தீவிர நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் ஒழுங்கமைத்து நடத்தின. பிரிட்டன், பிரான்ஸ், கிரீஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிக்கோ ஆகியவற்றின் பெரிய துறைமுக நகரங்களிலும் வேறு அனேக நாடுகளிலும் யுத்த எதிர்ப்புப் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் அலை அலையாகப் பரவின. அனேகத் துறைமுகங்களின் தொழிலாளர்கள் பாசிஸ்டு இத்தாலியின் கப்பல்களில் சரக்கு ஏற்ற மறுத்து விட்டார்கள். சில கப்பல்களின் மாலுமிகள் ஆக்கிரமிப்பாளனுக்கு எவ்விதச் சரக்கையும் ஏற்றிச் செல்ல மறுத்து விட்டார்கள். சில நாடுகளில் இத்தாலிய தூதரகங்களும் வணிக தூதரகங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டன. எத்தியோப்பியாவில் பாசிஸ்டுகள் நடத்திவந்த நாடு கைப்பற்றும் யுத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மனுக்களில் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. யுத்தத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிரான சர்வதேசக் கமிட்டி உளப்பதிவு விளைக்கும் யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1935, நவம்பர் மாத முடிவில் யுத்தத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிராகப் பாரிஸ் நகரில் நடந்த சர்வதேச மகாநாடு இந்த நடவடிக்கைகளில் ஒன்று. சமாதான நிதி அமைக்கப்

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1935, இதழ்கள் 31-32. பக்கம் 58.

பட்டது. ஆக்கிரமிப்புக்கு ஆளானவர்களுக்கு உதவுவதற்காக நிதிவசதிகள் திரட்டுவது இதன்மூலம் தொடங்கி வைக்கப்பட்டது.

ஆயினும், பிளவு ஏற்படுத்த முயன்றுவந்த வலதுசாரி சோஷலிஸ்டுகளின் காரணமாக இந்த நடவடிக்கைகள் தேவையான அளவை எட்டவில்லை. ஆக்கிரமிப்பாளர்களை நிர்ப்பந்தப்படுத்த வல்ல விறல் மிக்க சர்வதேசக் கிளர்ச்சி இயக்கமாக அவை மாற வில்லை. தவிரவும், இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் எதிராக உறுதியான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது உலக யுத்தம் மூள்வதற்கே காரணம் ஆகும் என்றும் இந்த நாடுகளுடன் சமரச ஒப்பந்தம் செய்து கொள்ள முயல்வது மேலாய் இருக்கும் என்றும் வலதுசாரி சோஷலிஸ்டுகள் பல நாடுகளில் தீவிரமாகப் பிரசாரம் செய்யலாயினர். இத்தகைய பிரசாரம் பாசிஸ்டு ஆக்கிரமிப்பின் அபாயத்தைக் குறைத்துக் காட்டியது. சர்வதேச சங்கத்தின் நடவடிக்கைகள் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு முற்றிலும் போதுமானவை என்ற பொய்யான மயக்கத்தைத் தொழிலாளர் இயக்கத்தில் இது புகுத்தியது.

புதிய கொள்கையைத் துணிவுடன் செயல்படுத்துவதற்கு ஆதரவு

அந்த சமயத்தில் கம்யூனிஸ்டு . அகிலம் ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிபற்றிய கொள்கையைத் துணிவுடன் செயல் படுத்தும்படித் தனது பிரிவுகளுக்கு உத்தரவிட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழுவும் செயலகமும் தனித் தனிக் கட்சிகளின் பணிகள் பற்றிய தீர்மானங்களில், பாசிஸ எதிர்ப்பாளர்களை ஒன்றுசேர்க்கும் நோக்கத்துடன் இந்தக் கட்சிகள் சமயோசிதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதாக வலியுறுத்தின. கிரீஸ் நாட்டில் முடியரசு பாசிஸ்டுப் பிற்போக்கின் எல்லா எதிரிகளும் அடங்கிய மிக விரிவான கூட்டணி அமைக்கும் கருத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஆமோதித்தது. மிதவாதக் கட்சி உட்பட எல்லாக் குடியரசுவாதச் சக்திகளுடனும் ஒத்துழைப்பது என்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் யோசனையை அது ஆதரித்தது.[1] *1935*, நவம்பர் தொடக்கத்தில்

---

[1] மை. ஆ. கூ., *495/18/1024/1*.

ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அளித்த யோசனைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு மக்கள் கூட்டணி அமைப்பதற்கான முயற்சியைத் தீவிரப்படுத்தும்படி கேட்டுக்கொண்டது. இடதுசாரி சோஷலிஸ்டுகளின் தலைவர் லா. கபலெரோவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும், பாசிஸ்டுகள் ஆட்சியைப் பலவந்தமாகக் கைப்பற்றும் அபாயம் எதிர்ப்பட்டிருப்பதன் காரணமாக, ''கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோஷலிஸ்டுக் கட்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்பும் செயல் ஒற்றுமையும் ஏற்படுத்துவதன் இன்றியமையாமையை'' அவருக்கும் சோஷலிஸ்டுக் கட்சியின் பிற தலைவர்களுக்கும் எடுத்துரைக்கவும் மூாக் தியூக்ளோவை மாட்ரிட் நகருக்கு அனுப்ப அது முடிவு செய்தது.[1] இடதுசாரிக் குடியரசுவாதிகளுடனும் தொடர்பு கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு, கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிக்கும் பொருட்டு நவம்பர் 20ந் தேதி கூடியது. ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரத்தைக் கடைப்பிடிப்பதில் காணப்பட்ட குறைபாடுகள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. கூஸினென் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பித்தார். கம்யூனிஸ்டுக் கட்சிகளில் சில தற்போதைக்கு ஒன்றித்த கூட்டணி பற்றிப் பொதுப் பிரசாரம் நடத்திவருகின்றனவே தவிர, ஒற்றுமையின் பகைவர்களது எதிர்ப்பை முறிப்பதற்கு ஏற்ற அளவு ஊக்கமுள்ள வெகுஜன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவில்லை என்று அவர் கூறினார். இந்தச் செயலின்மை கைவிடப்பட வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

1935, டிசம்பர் 1ந் தேதி, கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக் குழுவின் கூட்டத்தில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நான்காவது மகாநாட்டின் முடிவுகள் ஆராயப்பட்டன. ஜெர்மனியின் ஸ்தூல நிலைமைகளில் மக்கள் கூட்டணியின் வரம்புகளை விரிவாக்குவது பற்றி இந்தக் கூட்டம் அனேக யோசனைகள் தெரிவித்தது. உதாரணமாக, ஜெர்மனியில் எஞ்சியிருக்கும் பூர்ஷ்வா வர்க்கக் கட்சிகள் இப்போது பாசிஸத்தை எதிர்த்துப் போராடும்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் முப்பது ஆண்டு நிறைவு. கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் முப்பது ஆண்டு நிறைவை ஒட்டி நடந்த சர்வதேச மகாநாடு. பிராக், 1966, பக்கம் 81.

நிலையை மேற்கொள்ளக் கூடும் என்றும் பாட்டாளி வர்க்கத்தின் இத்தகைய தாற்காலிகக் கூட்டாளிகளையும் மக்கள் கூட்டணி ஒன்றுசேர்க்கலாம் என்றும் கூட்டம் யோசனை கூறியது.[1]

புதிய அரசியல் கொள்கைப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கான முயற்சியில் ஓரளவு வலதுசாரி சந்தர்ப்பவாத அபாயங்களும் மறைந்திருந்ததைக் கம்யூனிஸ்டு அகிலம் கருத்தில் கொண்டது. சமூக-ஜனநாயக, குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளின் மேல் படியினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் மட்டுமீறிய கவனம் செலுத்தப்பட்டு வெகுஜனங்களை அணிதிரட்டும் வேலை பலவீனமடையும் சந்தர்ப்பங்களில் இத்தகைய அபாயங்கள் நேரக்கூடும் என்று அது அறிந்திருந்து. அந்த சமயத்தில் சில கம்யூனிஸ்டுக் கட்சிகள் இத்தகைய சில தவறுகளுக்கு இடம் கொடுத்தன. 1935ன் இறுதியிலும் 1936ன் தொடக்கத்திலும் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பணிகள் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகத்திலும் தலைமைக் குழுவிலும் ஆலோசனை நடந்தபோது, வலதுசாரித் தவறுகளின் அபாயம் குறித்த பிரச்சினையைச் செயற்குழு மிகக் கடுமையாக விவாதித்தது. செக்கோஸ்லோவாக்கியக் கட்சியில் வெகுஜனங்களைத் தீவிர நடவடிக்கைகளுக்கு அணிதிரட்டுவதற்குப் பதிலாக நாடாளுமன்ற உத்திகளில் கவனம் செலுத்தும் போக்கு தலைதூக்கிவிட்டது என்று கி. கோட்வால்டு சுட்டிக்காட்டினர். நாடாளுமன்றக் குழு சில தவறான நடவடிக்கைகளுக்கு இடமளித்து விட்டது என்றார் அவர்.[2] புதிய கொள்கையைச் செயல் படுத்துகையில் சில கட்சிகள் வலதுசாரி சந்தர்ப்பவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும் என்ற அச்சத்தால் தூண்டப் பட்டுக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு செக்கோஸ்லோவாக்கியப் பிரச்சினை மீது மிகக் கடுமையான விமர்சனம் அடங்கிய தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. ஆயினும், வலதுசாரித் தவறுகளைத் திருத்துவது, கட்சியைக் குறுகிய பிரிவுவாதத்தில் தள்ளிவிடக் கூடிய திருப்பத்தை ஏற்படுத்திவிடக் கூடாது என்று செயற்குழுவின் செயலகத்தினதும் தலைமைக் குழுவினதும் கூட்டத்திலும் அறிவுறுத்தப்பட்டது.[3]

---

[1] மை. ஆ. கூ., *495/2/203/66.*

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1936, இதழ் 2, பக்கங்கள் 20-32.

[3] மை. ஆ. கூ., *495/18/1040/154.*

ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணி பற்றிய துணிகர மான கொள்கை குறித்துக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் சில தலைவர் கள் வெளியிட்ட மிகையான அச்சத்தைக் கம்யூனிஸ்டு அகிலம் ஒப்புநோக்கில் விரைவாகப் போக்கிவிட்டது.

உதாரணமாக, பிரான்சில் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைப்புக் காங்கிரசுக்கு முன்னேற்பாடுகள் செய்யும் பிரச்சினைகள் மீது *1936*, பிப்ரவரி *21*ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு வின் செயலகத்தின் கூட்டத்தில் விவாதம் நடந்தபோது, பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிற்சங்கக் கொள்கை பற்றி லஸோவ்ஸ்கி வெளியிட்ட, பிரிவுவாதத் தன்மைகொண்ட ஐயப் பாடுகளைச் செயலகம் நிராகரித்து விட்டது. தொழிலாளர்களின் தொழிற்சங்க ஒற்றுமையை நோக்கமாகக் கொண்ட பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிற்சங்கக் கொள்கையை திமீத்ரொ வும் மனுயீல்ஸ்கியும் பிறரும் உயர்வாக மதித்தார்கள்.[1]

தனித் தனிக் கட்சிகள் எழுப்பிய பிரச்சினைகள் குறித்து யோசனைகள் தயாரிக்கையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு நிலவிய பிரிவுவாதக் காழ்ப்புகளை மேலும் மேலும் அதிக அளவில் தகர்த்து எறிந்தது. *1936*, மார்ச்சு-ஏப்ரல் மாதங்களில் நடந்த செயற்குழுத் தலைமைக் குழுவின் கூட்டம் இந்த நோக்கில் முக்கிய மான தொண்டு ஆற்றியது. ஒன்றித்த கூட்டணிச் செயல்தந்திரம் கடைப்பிடிக்கப்பட்டதன் முக்கிய விளைவுகளும் யுத்தத்துக்கு எதிரான போராட்டத்தின் முதன்மையான பணிகளும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. செயற்குழுத் தலைமைக் குழுவின் அனேகமாக எல்லா உறுப்பினர்களும் வேட்பாளர்களும் பெரும் பாலான கட்சிகளின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் வீற்றிருந்தார் கள்.

பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், போலந்து, ஜெர்மனி, செக்கோஸ்லோவாக்கியா, பிரிட்டன் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய நடவடிக்கைகளின் அனுபவத்தையும் சீனாவில் நடந்து வந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் குறித்த பிரச்சினைகளையும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலை மைக் குழு விவரமாக ஆராய்ந்தது. புதிய கொள்கை சரியானது என்பது ''இப்போதே கண்கூடாகத் தெரிகிறது, ஏற்கனவே நிலை நாட்டப்பட்டுவிட்டது, ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுவிட்டது''

---

[1] மை. ஆ. கூ., *495/18/1075/328*.

என்று கூறினர் திமீத்ரொவ். பிரான்சிலும் ஸ்பெயினிலும் வேறு சில நாடுகளிலும் ஒன்றித்த கூட்டணிக் கொள்கை சந்தேகத்துக்கு இடமற்ற வெற்றிகள் பெற்றிருப்பதை அவர் எடுத்துக்காட்டினர். மக்கள் கூட்டணியின் திட்டவட்டமான வடிவங்களை ஏற்படுத்துவதன் சாத்தியக்கூறுகள் பற்றி ஆலோசனை நடந்தது. பல நாடுகளில் புதிய கொள்கை இன்னும் போதிய அளவு திட்டவட்டமான வடிவம் பெறவில்லை, ''வெகுஜனங்களை அணிதிரட்ட யாவற்றிலும் அதிகமாக உதவும் கோஷங்கள் இன்னும் உருவாக்கப்படவில்லை''[1] என்று கூறப்பட்டது. யுத்த எதிர்ப்புப் போராட்டம் பற்றிய பிரச்சினைகளுக்கு இந்த விஷயம் சிறப்பாகப் பொருந்தியது. ''தற்போது யுத்தத்துக்கு எதிராக நடக்கும் குறித்த வகையான போராட்டத்துக்கு ஸ்தூலமான கொள்கைத் திட்டம்'' வகுக்க வேண்டும் என்றும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தில் சமூக-ஜனநாயகக் கட்சிகளின் முக்கியப் பகுதியுடன் ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் விருப்பங்கள் வெளியிடப்பட்டன.[2]

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக் குழுவின் மார்ச்-ஏப்ரல் கூட்டம் யுத்த எதிர்ப்புப் போராட்டம் பற்றிய பிரச்சினைகள் மீது முதன்மையாகக் கவனம் செலுத்தியது.

சில நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளிகளையும் அடிமைப்படுத்திய பின்னர் பாசிஸம் மற்ற நாடுகளின் மக்களுடைய உரிமைகளையும் சுதந்திரத்தையும் தாக்கத் தலைப்பட்டிருக்கிறது என்று கூட்டம் சுட்டிக் காட்டியது: ஹிட்லர் ஜெர்மனி, ஏகாதிபத்திய ஜப்பான் ஆகியவற்றின் ஆக்கிரமிப்புத் திட்டங்கள் வருங்கால நோக்கில் சோவியத் யூனியனுக்கு எதிராகவே வகுக்கப்பட்டிருக்கின்றன என அது குறித்தது. சோவியத் நாட்டுக்கு எதிரான யுத்தம் சர்வதேச பாசிஸத்தினதும் ஏகாதிபத்தியப் பிற்போக்கினதும் அயல் நாட்டுக் கொள்கையின் முதன்மையான நோக்கமாக இருக்கிறது. ஆயினும் தற்போது ஹிட்லரது தாக்குதலின் உடனடியான அபாயம் செக்கோஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா, பிரான்ஸ், போலந்து ஆகியவற்றுக்கே ஏற்பட்டிருக்கிறது என்றார் திமீத்ரொவ். ''வாய்ப்புக்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, கிழக்கு மீது, சோவியத் யூனியனுக்கு எதிரான தாக்குதல்

---

[1] மை. ஆ. கூ., *495/2/215/6-8*.

[2] மை. ஆ. கூ., *495/2/215/6*.

முதலில் தொடங்குவதற்கு ஹிட்லர் திட்டமிடவில்லை என்றே தோன்றுகிறது''[1] என்றார் அவர். இவ்வாறே கிழக்கிலும் ஜப்பான் முதலாவது தாக்குதலைச் சீன மக்களுக்கு எதிராக நடத்தும். அடுத்த நடவடிக்கையாக சோவியத் யூனியனைத் தாக்க ஏற்பாடு செய்யும் என அவர் கருத்து தெரிவித்தார். இந்தச் சூழ்நிலையில் ஹிட்லர் குழுவினரின் தாக்குதலை எதிர்த்து முறியடிப்பதற்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் மக்களை ஆயத்தப்படுத்த வேண்டி இருந்தது. இந்தக் காரணத்தால், பூர்ஷ்வா அரசாங்கங்களின் தற்காப்பு நடவடிக்கைகள், இராணுவ பட்ஜெட்டுகள், சர்வதேச சங்கத்தின் செயல்கள் முதலியவை குறித்துத் தங்கள் போக்கை விவரமாக வரையறுப்பது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இன்றியமையாததாக இருந்தது.

பாசிஸ்டுகளின் தாக்குதல் நேரும் அபாயத்துக்கு உள்ளாகி இருந்த நாடுகளின் பூர்ஷ்வா அரசாங்கங்களுடைய தற்காப்பு நடவடிக்கைகள் விஷயத்தில் மறுப்பு நிலையை மேற்கொள்வது சரியாகாது என்றும் சர்வதேசக் கொள்கை சம்பந்தமான பிரச்சினைகள் குறித்துக் கம்யூனிஸ்டு இயக்கம் தனது ஆக்கச் செயல்திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்றும் தலைமைக்குழு உறுப்பினர்கள் கூறினார்கள். சமாதானப்பற்றுள்ள எல்லாச் சக்திகளையும் ஒன்று திரட்ட வல்ல இத்தகைய செயல்திட்டத்தின் ஸ்தூலமான அம்சங்கள் விவாதிக்கப்பட்டன. உடனடியான பாசிஸ்டு ஆக்கிரமிப்பு அபாயத்துக்கு உள்ளாகி இருக்கும் நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெளியிலிருந்து நேரவிருக்கும் பாசிஸ அபாயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் விடக் கூடாது என்றும், இந்த நாடுகளின் தற்காப்புக்கான நடவடிக்கைகளில் ஊக்கத்துடன் பங்கு கொள்ள வேண்டும் என்றும், நாடாளுமன்றத்தின் பல்வேறு இராணுவக் கமிஷன்களில் உறுப்பு ஏற்க வேண்டும் என்றும், இராணுவத்தில் வேலை செய்வது பொதுவாகவே கட்சியினது கொள்கையின் முக்கியமான உள்ளார்ந்த பகுதியாக இருக்க வேண்டும் என்றும் தலைமைக் குழு அறிவுறுத்தியது.[2]

1936, ஏப்ரல் *1*ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு நிறைவேற்றிய தீர்மானங்களில் பின்வருமாறு வலியுறுத்தப்பட்டது: ''யுத்தத்தை மூட்டிவிட முயலும் பாசிஸ்டு

---

[1] மை. ஆ. கூ., *495/2/222/26*.

[2] மை. ஆ. கூ., *495/2/222/34-39*.

களைக் கட்டுக்குள் வைப்பதும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காகப் போராடுவதும் இன்று சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் அனைத்தினதும் முதன்மைப் பணி ஆகும்''.[1] உழைப்பாளி மக்களின் ஜனநாயக உரிமைகள் விரிவாக்கப்படுவது, இராணுவம் ஜனநாயகமயமாக்கப்படுவது, பாசிஸ்டுகளும் பிற்போக்காளர்களும் அதிலிருந்து அகற்றப்படுவது, தொழிலாளர்களுடையவும் விவசாயி வெகுஜனங்களுடையவும் மிக உடனடியான தேவைகள் நிறைவேற்றப்படுவது ஆகிய கோரிக்கைகளைத் தங்கள் நாடுகளின் தற்காப்பு சம்பந்தமான பிரச்சினைகளோடு மிக நெருக்கமாக இணைப்பதாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உறுதி செய்து கொண்டன. இந்த நடவடிக்கைகள் தயக்கமின்றி மேற்கொள்ளப்பட்டால்தான், சிறப்பாக இராணுவம் ஜனநாயகமயமாக்கப்பட்டால்தான் பாசிஸ்டுத் தாக்குதலுக்கு எதிராக மக்களின் தற்காப்புத் திறன் அதிகரிப்பது சாத்தியமாய் இருந்தது. பூர்ஷ்வா வர்க்கம் அரசு இயந்திரத்தையும் இராணுவத்தையும் உழைப்பாளி மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வந்ததால் பூர்ஷ்வா அரசாங்கங்களின் இராணுவக் கொள்கையையும் இராணுவ பட்ஜெட்டையும் மொத்தத்தில் ஆதரிப்பது கம்யூனிஸ்டுகளுக்கு இயலாதிருந்தது. ஆயினும், திட்டவட்டமான சந்தர்ப்பங்களில், யுத்தத்தின் பயங்கரங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் (விஷவாயுக் காப்பிடங்கள், காப்பு முகமூடிகள், மருத்துவ உதவி முதலியன) பாசிஸ்டு ஆக்கிரமிப்பு அபாயம் ஏற்பட்டிருக்கையில் மக்களின் தற்காப்புத் திறனை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகக் கம்யூனிஸ்டுகள் செயல்படுவதை இது தடுக்கவில்லை என்று தீர்மானங்களில் சுட்டிக் காட்டப்பட்டது.

சமாதானத்தைப் பாதுகாப்பதை உண்மையாகவே நோக்கமாகக் கொண்ட சர்வதேச சங்கத்தின் நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு ஆதரித்தது. ஆனால் இந்த நடவடிக்கைகள் ஒருங்கிசைந்த முறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதையும் இவை போதுமானவை அல்ல என்பதையும் விமர்சிப்பது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கடமை என்று அது விதித்தது. சர்வதேசப் பரஸ்பர உதவி உடன்படிக்கை ஏற்படுவதற்காகவும் அதில் சோவியத் யூனியனுக்கும் இடம் அளிப்பதற்காகவும் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்துடனும் ஆம்ஸ்டர்டாம்

---

[1] ''கம்யூனிஸ்டு'', **1969**, இதழ் **2**, பக்கம் **4**.

தொழிற்சங்க அகிலத்துடனும் சேர்ந்து போராட்டம் நடத்தத் தான் தயாராய் இருப்பதாகக் கம்யூனிஸ்டு அகிலம் மீண்டும் அறிவித்தது. ஒவ்வொரு நாட்டிலும் சர்வதேச அளவிலும் தொழிற்சங்க ஒற்றுமை சமாதானக் கூட்டணியைத் தீவிரமாக்கவும் உறுதிப்படுத்தவும் எவ்வளவு பெருத்த முக்கியத்துவம் உள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தீர்மானங்கள் சமாதானப் போராட்டம் பற்றி ஏழாவது காங்கிரஸ் நிறைவேற்றியிருந்த அனேகத் தீர்மானங்களுக்குத் திண்ணமான வடிவம் அளித்ததோடு அவற்றை விரிவாக்கி, பாசிஸ்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைத் தற்காக்கும் பிரச்சினைகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயலூக்கம் உள்ள கொள்கைக்குச் சித்தாந்த ஆதாரத்தையும் அளித்தன.

கம்யூனிஸ்டு அகிலமும் மக்கள் கூட்டணிக்காக பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போராட்டமும்

புதிய கொள்கைப் போக்கால் உரம் பெற்ற கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளும் வெகுஜனங்களை ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக்கு ஆதரவாக விரைவில் திருப்பும்படியான கொள்கையைச் செயல்படுத்தலாயின. கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஏழாவது காங்கிரசின் முடிவுகளைத் தங்கள் நாடுகளின் நிலைமைகளுக்கு ஏற்பக் கையாண்டு, வர்க்கப் போராட்டத்தின் மிகச் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கவும் வெகுஜனங்களை ஒன்றுபடுத்தவும் தாங்கள் வல்லவை என்பதைக் காட்டின. 1935 முதல் 1937 வரையுள்ள ஆண்டுகளில் சர்வதேசத் தொழிலாளர் இயக்கமும் பாசிஸ எதிர்ப்பு இயக்கமும் பல நாடுகளில் தீவிரம் அடைந்தன, ஏற்றம் பெற்றன. இதன் பயனாகப் பிற்போக்குக்கு பலத்த அடிகள் கொடுப்பதும் பல சந்தர்ப்பங்களில் அதைப் பின்வாங்கச் செய்வதும் சாத்தியம் ஆயின.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி பயன் விளைக்கும் கொள்கையை விரிவுபடுத்தியது. சோஷலிஸ்டுக் கட்சி, தீவிரவாதக் கட்சி ஆகியவற்றின் பெரும்பாலான உறுப்பினர்களை மக்கள் கூட்டணிச் செயல்திட்டத்தின் தரப்புக்குத் திருப்புவது அதற்கு இயன்றது.

மக்கள் கூட்டணியின் அடிப்படையான ஒன்றித்த தொழிலாளர் கூட்டணியும் வலுவடைந்தது. இரண்டு தொழிலாளர் சம்மேளனங்கள் (the Confédération Générale du Travail-யும்the Confédération Générale du Travail Unitaire-யும்) 1936ம் ஆண்டு வசந்தத்தில் இணைக்கப்பட்டதனுல் ஒன்றித்த அனைத்து பிரெஞ்சுத் தொழிலாளர் சம்மேளனம் உருவாயிற்று. கம்யூனிஸ்டுகளே அதன் தலைமையை ஏற்ருர்கள். சம்மேளனத்தின் உறுப்பினர் எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது. 1936ம் ஆண்டுத் தேர்தல்களில் மக்கள் கூட்டணி வெற்றி பெற்றது. இதனுல் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் சமூகம், நகர நடுத்தர வட்டாரங்கள் ஆகியவற்றின் அடுத்த போராட்டத்துக்கு விரிவான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. 1936ம் ஆண்டுக் கோடைகாலத்தில் நாட்டில் தீவிரமான வேலை நிறுத்தங்கள் நடந்தன. ஆழ்ந்த சமுதாய-பொருளாதார மாற்றங்களை இவை கோரின.

தேர்தல்களுக்குப் பிறகு அமைந்த லியோன் புளூம் அரசாங்கம் மக்கள் கூட்டணியைச் சார்ந்திருந்தது. தொழிலதிபர்களை வலுவான நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கிய உழைப்பாளிகளின் வெகுஜன இயக்கம் இந்த அரசாங்கத்தைச் சீர்திருத்தங்கள் செய்யும்படி தூண்டியது.

7 முதல் 15 சதவிகிதம் வரை சம்பள உயர்வு பெறவும் உத்தரவாதம் செய்யப்பட்ட குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்கவும் தொழிலாளர்களுக்கு இயன்றது. கூட்டு உடன்படிக்கைகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்குவதற்கான நிபந்தனைகள் இவற்றில் தெளிவுபடுத்தப்பட்டன. வரலாற்றில் முதன் முதலாக முதலாளித்துவ நாட்டின் சட்டம் நாடு முழுவதிலும் நாற்பது மணி நேர வேலை வாரத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது, சம்பளத்துடன் விடுமுறை வழங்குமாறு திட்டப்படுத்தியது. தொழில் நிலையங்களில் தொழிற்சங்கங்களுக்குக் கணிசமான உரிமைகள் கிடைத்தன.

விவசாயிகளுடையவும் நகர நடுத்தர வகுப்பாருடையவும் சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இவ்வாறு, கம்யூனிஸ்டுகளால் அறிவிக்கப்பட்ட மக்கள் கூட்டணிக் கொள்கை பிரான்சின் உழைப்பாளிகளுக்கு மிகப் பெரிய சமுதாய நலங்களை விளைத்தது.

நாட்டை பாசிஸக் காட்டு மிராண்டித்தனத்திலிருந்து காத்தது பிரான்சில் மக்கள் கூட்டணி ஆற்றிய மாபெரும் பணி ஆகும். தொழிலாளி வர்க்கம் தனது அணிகளை ஒற்றுமைப்படுத்தி நடுத்தர வகுப்

புக்களைச் சேர்ந்த விரிவான வெகுஜனங்களைத் தன்னைச் சுற்றி ஒன்று திரட்டி, பாசிஸ்டு சங்கங்களின் திட்டங்களையும் சூழ்ச்சிகளையும் குலைத்துவிட்டது. இந்த வெற்றிகள் மிகப் பெரிய சர்வதேச முக்கியத்துவம் கொண்டிருந்தன. அந்தக் காலப்பகுதியில் மேற்கு ஐரோப்பா முழுவதிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவது பாசிஸத்துக்கு முடியவில்லை.

மக்கள் கூட்டணிக் கொள்கையின் விளைவாக, பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்கம் பொது ஜனநாயகப் போராட்டத்தை நடத்திச்செல்லும் சக்தியாக, நாட்டின் செயலாற்றல் மிக்க இயக்கு சக்தியாக நிலை பெற்றுவிட்டது. மக்கள் கூட்டணிக் கொள்கை உண்மையான நாட்டுப்பற்று உள்ள கொள்கையாக இருந்தது. பிரான்சின் நலன்களைக் காட்டிக் கொடுத்த ஏகபோகத் தலைமைப் பீடத்துக்கு எதிராக நாட்டுமக்களை ஒன்று திரட்டுவது இதன் நோக்கமாக இருந்தது. மக்கள் கூட்டணிக் கொள்கை கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ச்சிக்கும் பெருத்த தொண்டு ஆற்றியது. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி வெகுஜனங்களிடையே தனது செல்வாக்கை அதிகப்படுத்தியது, உழைப்பாளிகளின் வெகுஜன ஸ்தாபனங்களுடன் தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டது. அதன் உறுப்பினர் எண்ணிக்கை 1935ம் ஆண்டு நடு முதல் 1937ம் ஆண்டு இறுதிவரை எட்டு மடங்கு அதிகரித்து 320 ஆயிரம் ஆகிவிட்டது.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டில் மக்கள் கூட்டணிக்கான போராட்டத்தில் முதன்மைச் சக்தியாக விளங்கியது. மக்கள் கூட்டணிச் செயல் திட்டத்தை நடப்புக்குக் கொண்டுவரும் பொருட்டு அது இடைவிடாமல் சமயோசிதமாகப் போராடியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைவாத-அரசியல் உதவி அதற்கு எப்போதும் கிடைத்து வந்தது. பிரான்சில் நடந்த தொழிலாளர் இயக்கத்தையும் பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தையும் பற்றிய முக்கியப் பிரச்சினைகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களில் முறையாக விவாதிக்கப்பட்டன. இந்த விவாதங்களில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரபல தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

மக்கள் கூட்டணிக் கட்சிகள் பிரெஞ்சு நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி அடைந்த பிறகு கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் மக்கள் கூட்டணி அரசாங்கத்தின்பால் கம்யூனிஸ்டுக் கட்சி கடைப்பிடிக்க வேண்டிய போக்கைப் பற்றிப் பல தடவைகள் விவாதித்தது. பிரான்சில் மக்கள் கூட்டணியின்

வெற்றி இன்னும் அமோகமாய் இருந்து இன்னும் அதிக வெகுஜனங்கள் ஒன்று திரட்டப்பட்டிருந்தால் கம்யூனிஸ்டு-சோஷலிஸ்டு அரசாங்கம் அமைப்பது சாத்தியமாகி இருக்கும் என்று சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் வெகுஜனங்கள் இந்த அளவுக்கு இன்னும் ஒன்று திரட்டப்படவில்லை. தீவிரவாதிகளையும் பிற குழுக்களையும் சேர்த்துக் கொள்ளாமல் இருக்க அரசாங்கத்தால் முடியவில்லை. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி அரசாங்கத்தில் பங்கு கொண்டிருந்தால் தீவிரவாதிகள் கலவரம் அடைந்திருப்பார்கள். பிற்போக்காளர்கள் மக்கள் கூட்டணி அரசாங்கத்தை நேர்முகமாகத் தாக்குவதற்கு இந்த நிகழ்ச்சி அறிகுறி ஆகி இருக்கும்.[1] எனவே, லியோன் புளூமின் அரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகள் கலந்து கொள்வதைக் கோட்பாட்டுப் பிரச்சினையாக அன்றி அரசியல் நோக்கப் பொருத்தம் குறித்த பிரச்சினையாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுச் செயலகம் ஆராய்ந்தது. வெகுஜனப் போராட்டம் மேற்கொண்டு ஏற்றம் பெற்றால் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி அரசாங்கத்தில் பங்கு கொள்வது சாத்தியம் ஆகலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மக்கள் கூட்டணிச் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசாங்கத்துடன் நேர்மையோடும் விசுவாசமாகவும் ஒத்துழைப்பது, இந்த அரசாங்கத்தை ஆதரிப்பது என்று பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் செய்த முடிவுக்கு 1936, ஜூன் மாதம் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு ஒப்புதல் தந்தது. இந்தச் சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தில் இடம் பெறுவது மக்கள் கூட்டணிக்குப் பயன் உள்ளதாகும் என்று கம்யூனிஸ்டுக் கட்சி எண்ணவில்லை என்று அறிவித்த முழுக் கூட்டத்தின் முடிவை செயற்குழு ஏற்றுக் கொண்டது. அரசாங்கத்தில் பங்கு கொள்வதில்லை என்று பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி முடிவுசெய்ததன் காரணங்களையும் நோக்கங்களையும் செயற்குழுவின் தலைமைக்குழு கவனமாகச் சீர்தூக்கிப் பார்த்தது. உருவாகியுள்ள நிலைமையில் மக்கள் கூட்டணிச் செயல்திட்டத்தைக் கடைப்பிடிப்பதே முதன்மையான பணி என்றும் மக்கள் கூட்டணியில் சேர்ந்துள்ள கட்சிகளும் ஸ்தாபனங்களும் ஒத்துழைப்பை மேற்கொண்டு விரிவுபடுத்துவதும் இந்தக் கூட்டணியை வெகுஜனங்கள் இடையிலும் வட்டாரங்களிலும் வலுவாக்குவதும்

---

[1] மை. ஆ. கூ., *495/18/1086/5.*

இதற்குத் தேவை என்றும் தலைமைக்குழு தனது தீர்மானத்தில் வலியுறுத்தியது.[1]

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போராட்ட நடைமுறையின் போது எழுந்த இந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்ததன் வாயிலாக, மக்கள் கூட்டணி அரசாங்கத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு கொள்ளும் வாய்ப்புபற்றி ஏழாவது காங்கிரஸ் செய்த முடிவைத் தெளிவுபடுத்துவதும் இவ்வாறு பங்கு கொள்வதற்கு வேண்டிய நிபந்தனைகளையும் முதனிலைகளையும் மேலும் ஆழ்ந்து ஆராய்வதும் கம்யூனிஸ்டு அகிலத்துக்குச் சாத்தியம் ஆயிற்று. பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியுடனும் தீவிரவாத-சோஷலிஸ்டுகளுடனும் தொடர்புகளை உறுதிப்படுத்துவதையும் அவர்களோடு கூட்டாகச் செயல்புரிவதையும் நோக்கமாகக் கொண்டு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்டு அகிலம் ஆதரித்தது. இயக்கத்தில் கத்தோலிக்க வெகுஜனங்களை விரிவாக ஈடுபடுத்தும் பிரச்சினையும் ஆழ்ந்து ஆராயப்பட்டது. கத்தோலிக்குகள்பால் ''நட்புக் கரம் நீட்டுவது'' என்ற, மொ. தோரேஸால் அறிவிக்கப்பட்ட கொள்கையையும் கம்யூனிஸ்டு அகிலம் ஆமோதித்தது.

லியோன் புளூம் அரசாங்கம் மக்கள் கூட்டணிச் செயல் திட்டத்தை நிறைவேற்றுவதில் தயக்கம் காட்டியபோது அரசாங்க நெருக்கடியை விரைவுபடுத்தாதிருக்க பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி செய்த முயற்சிகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஆதரவு அளித்தது. அப்போதிருந்த நிலைமைகளில் இந்த அரசாங்கம் பதவியிலிருந்து விலகுவது வலப்புற அரசியல் இயக்கத்தையே குறிக்கும் என்பதைச் செயற்குழு கருத்தில் கொண்டது.[2]

1937ம் ஆண்டின் நடுவில் லியோன் புளூம் அரசாங்கம் அகன்று தீவிரவாதி ஷோத்தானின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும், மக்கள் கூட்டணியை நிலையாக வைத்திருக்கவும் அதை உள்ளிருந்து பலவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எதிர்த்தும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்திய விடாப்பிடியான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அதற்கு உதவியது.

---

[1] மை. ஆ. கூ., 495/2/229/130.

[2] மை. ஆ. கூ., 495/18/1125/71-72.

கம்யூனிஸ்டு அகிலமும்
ஸ்பெயினில் தேசிய-புரட்சிப்
போர் குறித்த பிரச்சினைகளும்

ஸ்பானிய மக்களின் தேசிய-புரட்சிப் போர் முப்பதுக்களின் பிற்பாதியில் முதலாளித்துவ நாடுகளில் நடந்த தொழிலாளர், ஜனநாயக இயக்கங்களினது ஏற்றத்தின் உச்ச கட்டமாக விளங்கியது. கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையின் பயனாக ஸ்பெயினில் மக்கள் கூட்டணி அமைந்தது. 1936, பிப்ரவரியில் நடந்த நாடாளு மன்ற (கோர்ட்டஸ்) தேர்தல்களில் அது பிற்போக்குக் கட்சிகளுக்குப் பெரும் தோல்வி விளைத்தது. நாட்டில் ஜனநாயகப் புரட்சி வளர்ச்சி அடையலாயிற்று.

ஜனநாயக மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கான போராட்டத்தை நடத்தும்படி ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அந்த சமயத்தில் ஆணை இட்டது. பாசிஸத்துக்கு நாட்டில் கணிசமான ஆதரவு இருக்கிறது என்றும் "மக்கள் கூட்டணிச் செயல்திட்டத்தின் நிறைவேற்றத்தை இடைமுறிக்கும் பொருட்டு உள்நாட்டுப் போரை மூட்டிவிட அது முயற்சி செய்யும்"[1] என்றும் செயற்குழு தனது ஆணைக் குறிப்புக்களில் இடையறாது வலியுறுத்தி வந்தது. ஸ்பெயினின் உழைப்பாளிகளுடைய முதன்மையான பணி, பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோஷலிஸப் புரட்சிக்கு மாறுவதை உடனடியான நோக்கமாக இப்போதும் வைத்துக் கொள்ளாமல் ஜனநாயகக் குடியரசுக்காகப் போராடுவதே என்று செயற்குழுச் செயலகமும் ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையும் 1936, மே மாதம் தெளிவாகத் திட்டப்படுத்தின.[2] சமூக-ஜனநாயக, அராஜக-சிண்டிக்கலிஸ்டுத் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவும் கத்தோலிக்க வெகுஜனங்களை அணுகும் வழிகளைத் தேடவும் ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சி செய்த முயற்சிகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் ஆதரவு அளித்தது. பிற்போக்குள்ள முடியரசுவாதி, பாசிஸ்டு சதிகாரர்களை இராணுவத்திலிருந்து களைந்து அகற்றுவதும் தொழிலாளர்-விவசாயிகள் மிலீஷியாவை வலுப்படுத்துவதும் சிறப்பான முக்கியத்துவம் உள்ளவையாகக் கருதப்பட்டன. இடதுசாரிக் குடி

[1] மை. ஆ. கூ., 495/18/1075/85.

[2] மை. ஆ. கூ., 495/18/1092/6.

யரசுவாத அரசாங்கத்தை விசுவாசத்துடன் ஆதரிப்பது, அதே சமயம் அதன் ஒத்திசைவின்மையை விமர்சிப்பது, வருங்காலத்தில் மக்கள் கூட்டணி அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பை இலக்காகக் கொள்வது என்ற ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைக்குக் கம்யூனிஸ்டு அகிலம் ஒப்புதல் தந்தது.[1]

ஜனநாயகப் புரட்சியின் வளர்ச்சியால் அரண்டு போன பிற்போக்குச் சக்திகள் 1936, ஜூலை மாதம் ஸ்பெயினில் கலகம் தொடங்கின. பாசிஸ்டு வல்லரசுகளான ஜெர்மனியும் இத்தாலியும் வெளியிலிருந்து அதற்கு ஆதரவு அளித்தன. சர்வதேச அளவில் பாசிஸத்துக்கு எதிரான மிகப் பெரிய போர் ஸ்பெயினில் நடந்தது. ஜெர்மானிய-இத்தாலியத் தலையீட்டாளர்களின் ஆதரவு பெற்ற பாசிஸ்டுக் கலகக்காரர்களுக்கு எதிராக எல்லாக் குடியரசுவாதச் சக்திகளையும் ஒன்று திரட்டும் போராட்டம் ஆழ்ந்த சர்வஜனநாயக மாற்றங்களுக்கான போராட்டத்துடன் சேர்ந்து கொண்டது. நிலச் சீர்திருத்தம் அமுலாக்கப்பட்டது. பெரிய தொழில் நிலையங்கள் தேசிய உடைமை ஆக்கப்பட்டன. சமூக-அரசியல் வாழ்க்கை அனைத்திலும் ஜனநாயக முறை புகுத்தப்பட்டது. சோஷலிஸ்டு லா. கபலெரோவின் தலைமையில் அமைந்த அரசாங்கத்தில் சேர்ந்து கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சி, கலகக்காரர்கள்மீதும் தலையீட்டாளர்கள்மீதும் போரில் வெற்றி பெறும் பொருட்டும் ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்தும் பொருட்டும் எல்லா பாசிஸ்டு விரோதிகளையும் ஒன்றுதிரட்டும் கொள்கையை மிகுந்த பிடிவாதத்துடனும் பொறுமையுடனும் கடைப்பிடித்தது.

ஸ்பெயினில் நடந்த ஜனநாயகப் புரட்சி முன்னர் நடந்திருந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகளின் வரம்புகளைக் கடந்து வெகு தூரம் முன்னே சென்றது. அதன் தன்மையையும் பணிகளையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்கள் கவனத்துடன் ஆராய்ந்து வந்தன. ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதிநிதிகளும் பிற பிரிவுகளின் பிரதிநிதிகளும் இந்த ஆராய்ச்சியில் பங்கு கொண்டார்கள்.

1936, செப்டெம்பர் 18-19 தேதிகளில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் ஸ்பானிய நிலைமை பற்றி மனுயீல்ஸ்கி சமர்ப்பித்த அறிக்கைமீது ஆலோசனை நடத்தியது. அந்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1092/7-14.

நாட்டில் நடந்த புரட்சியின் தன்மை குறித்த பிரச்சினையை அப்போதே அது கிளப்பியது. விவாதத்தில் கலந்து கொண்ட திமீத்ரொவ், கொதொவீலியா, ஃபுளோரின், கூஸினென், பிக், கோட்வால்டு, போலிட் ஆகியோரும் பிறரும் ஏதாவது ஒரு விதத்தில் இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டார்கள். உலகில் தற்போது நிலவும் வர்க்கச் சக்திகளின் அணிவகுப்பையும் ஒரு புறம் சோஷலிஸ்டு சோவியத் யூனியனும் மறுபுறம் பல பெரிய அரசுகளில் பாசிஸ்டு சர்வாதிகாரமும் நிலவுவதையும் தற்கால வர்க்க உறவுகளையும் கருத்தில் கொள்ளும் போது, பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியையும் பூர்ஷ்வா-ஜனநாயக அரசையும் பற்றிய பிரச்சினை முன்போல இன்றி வேறு விதமாக ஆராயப்பட வேண்டும் என்றார் திமீத்ரொவ். எதன் வெற்றிக்காக மக்கள் போராடுகிறார்களோ அந்த ஸ்பானிய ஜனநாயகக் குடியரசு பழைய மாதிரியான ஜனநாயகக் குடியரசாக இருக்காது. அது ''உண்மையான மக்கள் ஜனநாயகம் கொண்ட தனிவகை அரசாக விளங்கும். அது இன்னும் சோவியத் அரசாக இருக்காது தான், ஆயினும் பாசிஸ்டு விரோத, இடதுசாரி அரசாக இருக்கும். பூர்ஷ்வா வர்க்கத்தின் உண்மையான இடதுசாரியினர் இதில் பங்கு கொள்வார்கள்''.[1]

அரசுகள் தங்கள் உள்ளடக்கத்தில் முதலாளித்துவ அரசுகளாகவோ சோஷலிஸ அரசுகளாகவோ எப்போதும் இருந்துவரும் என்ற பழைய கருத்துக்களை திமீத்ரொவ் மறுத்தார். தற்போது உதயமாகப் போகிற ஜனநாயக அரசில் ''மக்கள் கூட்டணி நிர்ணயகரமான செல்வாக்கு பெறும்'' என்றார் அவர். ''தனி முதலாளித்துவ உடைமையை அறவே ஒழிக்காமல் உற்பத்தியை ஒழுங்கமைக்கும் பிரச்சினை இங்கே நமக்கு எதிர்ப்படுகிறது; தொழிலாளி வர்க்கத்தினதும் அதனுடைய கூட்டாளிகளதும்... அதாவது குட்டி பூர்ஷ்வாக்களதும் விவசாயிகளதும் ஒத்துழைப்புடனும் கண்காணிப்பிலும் உற்பத்தியை ஒழுங்கமைப்பது ஆகும் இது. சித்தாந்த நோக்கில் இதைத் தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகளுடையவும் ஜனநாயக சர்வாதிகாரத்தின் தனிப்பட்ட வடிவம் என்று அழைப்பது ஒருவேளை சரியாய் இருக்கும்.''[2]

''ஸ்பானியப் புரட்சியின் தனித் தன்மைகள்'' என்னும் தமது கட்டுரையில் தளியாத்தி ஸ்பானியப் புரட்சியை மக்களின், தேசிய,

---

[1] மை. ஆ. கூ., *495/18/1135/7-8.*

[2] மை. ஆ. கூ., *495/18/1135/8.*

பாசிஸ்டுவிரோதப் புரட்சி என்று மதிப்பிட்டார். புதிய சர்வதேச நிலைமைகளில், பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரம் அதிகரித்து வருகையில் நடக்கும் புரட்சி இது என்றார் அவர். ''ஸ்பெயினில் நிலைநாட்டப் பெறும் ஜனநாயகக் குடியரசு''[1] ஜனநாயகக் குடியரசின் புது வகை, ''புதிய ஜனநாயகம்'' என்று அவர் முடிவு செய்தார்.

ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஹொரசே தியாஸ் இந்த சமயத்தில் ஒரு கருத்துக்குச் சூத்திர வடிவம் அளித்தார். போராட்டம் ''புது வகையான ஜனநாயகக் குடியரசுக்காக''[2] நடக்கிறது; அது சலுகை பெற்ற வர்க்கங்களின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டிருக்கும் அரசு, உழைப்பாளிகள் தங்கள் நிலைமையை மேம்படுத்திக் கொள்ள இதில் வாய்ப்பு உண்டு என்பது அந்தக் கருத்து.

புது வகையான புரட்சி, புதிய ஜனநாயக அரசு என்ற முடிவுகள் கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் சித்தாந்த வரையறுப்புக்கள், புரட்சி பற்றிய லெனினுடைய போதனை ஆகியவற்றின் படைப்புத் தன்மை கொண்ட அடுத்த வளர்ச்சியாக இருந்தன. புரட்சியின் பல்வகைப்பாடுகள் அனைத்தையும் பூர்ஷ்வாப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் உள்ள எதிர்நிலைகளாகக் குறுக்கி விடுவது கூடாது என்று அக்டோபர் புரட்சிக்கு முன்பே லெனின் கூறியிருந்தார்.[3] வாழ்க்கையில் ''தூய'' விதமான புரட்சி இருப்பதில்லை என்றும், புரட்சியின் வளர்ச்சி வடிவங்களும் வழிகளும் முன்கூட்டித் தயாரித்த திட்ட வரைவுகளுக்குப் பொருந்துவதில்லை என்றும், அவை எப்போதுமே திட்டவரைவுகளைக் காட்டிலும் சிக்கலானவை என்றும், தெளிவானதாகவும் நேரானதாகவும் யாவற்றிலும் எளியதாகவும் காணப்படும் பாதையைப் புரட்சிகள் மிக அடிக்கடி விட்டு விட்டு வேறு வழியில் செல்கின்றன என்றும் பின்னர் லெனின் பல முறை கூறினர். எனவேதான் ''பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் **பரிணமிப்பதற்கோ** அல்லது அதை **அணுகுவதற்கோ** உரிய வடிவங்

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1936, இதழ் 16, பக்கங்கள் 20-21.

[2] **ஹொரசே தியாஸ்.** மக்கள் கூட்டணிக் கொடியின் கீழ். சொற்பொழிவுகளும் கட்டுரைகளும். 1935-1937, பக்கம் 160.

[3] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 25, பக்கம் 416.

களைத் தேடிக்காண்பதில்''[1] சக்தி அனைத்தையும் முழு கவனத்தையும் ஈடுபடுத்துமாறு மேற்கு நாடுகளின் கம்யூனிஸ்டுகளை 1920ம் ஆண்டிலேயே லெனின் கேட்டுக் கொண்டார். புது வகையான ஜனநாயகப் புரட்சியின் மூலமும் ''புது ஜனநாயக'' அரசின் மூலமும் போராட்டத்தின் சோஷலிஸக் கட்டத்தை அணுகும் ஆழ்ந்த முறையைக் கம்யூனிஸ்டு இயக்கம் சித்தாந்த ரீதியில் கண்டு நடைமுறையில் கையாளத் தொடங்கி விட்டது. முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரத்துக்கு இவை எல்லாம் மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தன.

தேசிய-புரட்சி யுத்தத்தின் தன்மையையும் அதன் இயக்கு சக்திகளையும் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலமும் ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் செய்த ஆழ்ந்த பகுத்தாய்வு, ஸ்பானியக் கம்யூனிஸ்டுகளின் கொள்கைக்கு உறுதியான அடிப்படையை அளித்தது. மக்கள் கூட்டணியை எல்லா வகையிலும் வலுப்படுத்துவதையும் கலகக்காரர்கள் மீதும் தலையீட்டாளர்கள் மீதும் வெற்றி பெறும் பொருட்டு சோஷலிஸ்டுகளுடனும் அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டுகளுடனும் நெருங்கிய போராட்ட ஒத்துழைப்பு ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது இந்தக் கொள்கை. உடைமைகளை நாட்டுக்குச் சொந்தமாக்குவது குடியரசுத் தற்காப்பின் நலன்களுக்குச் சாதகமாய் இருக்க வேண்டும் என்றும், கலகத்தில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பங்கு கொண்டிருப்பவர்களுக்குச் சொந்தமான தொழில் நிலையங்கள் மட்டுமே தேசிய உடைமை ஆக்கப்பட வேண்டும் என்றும் கருதிய கட்சியின் கொள்கைப்போக்கு சரியானது என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு 1936, டிசம்பர் 28ந் தேதிக் கூட்டத்தில் மதிப்பிட்டது. பாசிஸ்டு உடைமையாளர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை விவசாயிகளுக்கு வழங்குவதையும் செயற்குழு ஆமோதித்தது. சிறு உடைமையாளர்கள், நடுத்தர உடைமையாளர்கள் ஆகியோரின் சொத்துரிமைக்குப் பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிப்பது, நகர, நாட்டுப்புற உழைப்பாளிகளின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதை நிறுத்துவது என்ற கொள்கைக்கும் அது ஒப்புதல் தந்தது. இடதுசாரிப் போக்கை, உதாரணமாக, விவசாயப் பண்ணைகளைக் கூட்டுப் பண்ணைகள் ஆக்கும் முயற்சியைச் செயற்குழு கண்டனம் செய்தது. அப்போது உருவாகி

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 31, பக்கம் 92.

இருந்த நிலைமைகளில் இந்தக் கொள்கை, பாசிஸ்டுக் கலகக்காரர்களுக்கு எதிரான போராட்டத்தில் மக்கள் கூட்டணியின் பொதுக் காரியத்தைக் கடினமாக்க மட்டுமே செய்யும் என்று செயற்குழு கருதியது.[1]

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி, சோவியத் அரசாங்கம் ஆகியவற்றின் கடிதம் ஸ்பெயினில் மக்கள் கூட்டணிக் கொள்கையை விரிவுபடுத்த உதவியது. லா. கபலெரோவுக்கு *1936*, டிசம்பர் *21*ந் தேதி எழுதப்பட்ட இந்தக் கடிதத்தில் இ. ஸ்தாலின், வ. மோலத்தவ், கி. வரஷீலவ் ஆகியோர் கையெழுத்துக்கள் இட்டிருந்தார்கள். ஸ்பானிய அரசாங்கத்தின் கவனத்துக்குப் பின்வரும் நட்பார்ந்த யோசனைகள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தன:

''*1)* ஸ்பெயின் போன்ற விவசாய நாட்டில் பெருத்த முக்கியத்துவம் உள்ளவர்களான விவசாயிகள் மீது கவனம் செலுத்துவது அவசியம் ஆகும். விவசாயிகளின் நலன்களுக்கு ஏற்ற, நிலச் சீர்திருத்த, வரிவிதிப்பு ஆணைகள் வெளியிடுவது நல்லது. விவசாயிகளை இராணுவத்தில் சேர்த்துக் கொள்வது அல்லது விவசாயிகளின் தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகளை பாசிஸ்டு சைனியத்தின் பின்புலத்தில் அமைப்பதும் நன்ருய் இருக்கும்.

''*2)* நகரக் குட்டி பூர்ஷ்வாக்களையும் நடுத்தர பூர்ஷ்வாக்களையும் அரசாங்கத்தின் தரப்புக்கு ஈர்ப்பது, அல்லது, அவர்களைச் சொத்துப் பறிமுதலிலிருந்து காத்தும் முடிந்தவரை வியாபார சுதந்திரத்துக்கு வகை செய்தும் அவர்கள் அரசாங்கத்துக்குச் சாதகமான நடுநிலைமை மேற்கொள்ள வாய்ப்பு அளிப்பது அவசியம். இவ்வாறு செய்யாவிட்டால் இந்த வட்டாரத்தினர் பாசிஸத்தின் ஆதரவாளர்கள் ஆகிவிடுவார்கள்.

''*3)* குடியரசுக் கட்சித் தலைவர்களை விலக்குவது சரி ஆகாது. மாருக, அவர்களைப் பொது அரசாங்கப் பணியில் ஈர்த்து நெருங்கச் செய்து ஈடுபடுத்துவது அவசியம்.''[2]

கலகக்காரர்களுக்கும் தலையீட்டாளர்களுக்கும் எதிராக எல்லாக் குடியரசுவாதச் சக்திகளையும் விரிவாக ஒன்றுபடுத்தும் கருத்து இந்த யோசனைகளில் குறிக்கப்பட்டிருந்தது.

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', *1937*, இதழ் *1*, பக்கம் *61*.

[2] ஸ்பெயினில் போரும் புரட்சியும். **1936—1939**. மாஸ்கோ, **1968**, பக்கங்கள் **419-420**.

ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களும் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைவர்களும் ஸ்பெயினில் மக்கள் கூட்டணியைப் பலவீனப்படுத்தும் எல்லாவித முயற்சிகளுக்கும் உடனுக்குடன் எதிர் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் விரிவான வெகுஜனங்களை ஒன்றுதிரட்டுவதற்கேற்ற நடவடிக்கைகளை அவர்கள் உருவாக்கினர்கள். அராஜக-சிண்டிக்கலிஸ்டுத் தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்குரிய சமயோசிதமான கொள்கையை வகுப்பதில் ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலம் துணை புரிந்தது. பாசிஸ்டுக் கலகக்காரர்களும் தலையீட்டாளர்களும் நாட்டின் மேலும் மேலும் புதிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டிருந்த சமயத்தில் ''கட்டற்ற கம்யூனிஸம்'' எனப்படுவதைத் தாமதமின்றி நிலைநாட்டிவிட முயன்றுவந்த அராஜகவாதிகளின் துர்ச்சாகசச் சோதனைகளை எதிர்த்துச் செயல் புரியவும் அது உதவியது. தாக்கி முன்னேறிவந்த தலையீட்டாளர்களை எதிர்த்து முறியடிக்கும் பொருட்டுக் குடியரசுவாதச் சக்திகளை மேலும் விரிவாக ஒற்றுமைப்படுத்த முயன்றுவந்த ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சி, ''ஸ்பானிய தேசபக்தர்கள் அனைவரதும் கூட்டணி'' என்ற கோஷத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் இசைவுடன் 1938ம் ஆண்டு முன்வைத்தது. சிறு, நடுத்தர உடைமைகளைப் பறிமுதல் செய்வதில் மிகையான தீவிரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும்படியும் சிறு, நடுத்தர உடைமையாளர்களின் சொத்துக்களை அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படியும், குடியரசுக்கு விசுவாசம் உள்ள எல்லாப் பிரஜைகளுக்கும் வழிபாட்டுச் சுதந்திரம் முதலியவற்றை உத்தரவாதப்படுத்தும்படியும் அது கோரியது.

தொழிலாளி வர்க்கத்தில் நிலவிய இரு போக்குகள்—கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும்—நெருங்கிவரும் நிகழ்முறை ஸ்பெயினில் இந்த ஆண்டுகளில் நெடுந்தூரம் முன்னேறி விட்டது. கம்யூனிஸ்டுகளதும் சோஷலிஸ்டுகளதும் செல்வாக்கின் கீழ் இருந்த தொழிற்சங்கங்கள் ஒன்று இணைந்தன. இரு கட்சிகளையும் சேர்ந்த இளைஞர் ஸ்தாபனங்கள் பின்னர் ஒன்றுயின. அதற்கு முன் சோஷலிஸ்டு இளைஞர்களின் தலைவராக இருந்த ஸ. கரீலியோ இவ்வாறு ஒன்றிணைந்த ஸ்தாபனத்தின் தலைவர் ஆனர். கத்தலோனியாவில் நான்கு தொழிலாளர் கட்சிகள் ஒன்று சேர்ந்ததன் விளைவாக உருவாயிற்று ஒன்றித்த சோஷலிஸ்டுக் கட்சி. 1937ல் ஸ்பானியக்

கம்யூனிஸ்டுக் கட்சியும் சோஷலிஸ்டுகளும் தேசியத் தொடர்புக் கமிட்டியை அமைத்து, கூட்டான போராட்டச் செயல்திட்டத்தை வகுத்தார்கள். ஒன்றித்த பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்க முயற்சி நடந்தது. கம்யூனிஸ்டு அகிலம் இந்த நிகழ்முறையைக் கூர்ந்து கவனித்தது. சோஷலிஸ்டுகளில் ஒரு பகுதியினர் இத்தகைய இணைவுக்கு இன்னும் தயாராய் இல்லை என்று தெரிந்ததும், கம்யூனிஸ்டுகள் ''சோஷலிஸ்டுக் கட்சியுடன் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ப்பதை விரைவுபடுத்தக் கூடாது'' என்றும், முக்கியமானது, ''அரசாங்கத்திலும் எல்லா அதிகார உறுப்புக்களிலும் தொழிற் சங்கங்களிலும் இராணுவத்திலும் தொழில் துறைத் தலைமையிலும் இரு கட்சிகளும் ஒன்றித்துச் செயல்படுவதும், நாடாளு மன்றத் தேர்தல்களிலும் நகராட்சி மன்றத் தேர்தல்களிலும் அவை கூட்டாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதுமே''[1] என்றும் கம்யூனிஸ்டுக் கட்சியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற் குழுவும் முடிவு செய்தன. கம்யூனிஸ்டுக் கட்சியில் உடனே சேர விரும்பிய சோஷலிஸ்டுகளுக்கு, அவர்கள் சோஷலிஸ்டுக் கட்சிக்குள் தொடர்ந்து வேலை செய்து, செயல் ஒற்றுமையை வலுப்படுத்தி, இரண்டு கட்சிகளும் ஒன்றுக இணைவதற்கு முன்னேற்பாடுகள் செய்வது அதிகப் பயனுள்ளதாக இருக்கும் என்று எடுத்துரைக்கும்படி யோசனை கூறப்பட்டது. போர் முனைகளில் குடியரசின் தோல்வியின் விளைவாகவும் சோஷலிஸ்டுக் கட்சிக்குள் இருந்த சரணுகதி ஆதரவாளர்கள் உற்சாகம் அடைந்ததன் விளைவாகவும் தொழிலாளர் கட்சிகளை ஒன்றிணைக்கும் நிகழ்முறை இடை முறிந்து விட்டது.

ஸ்பானியக் குடியரசின் அனுபவம் கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள முடிவுகள் சரியானவை என்பதை உறுதிப்படுத்தியதோடு சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தின் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் கணிசமான அளவில் வளப்படுத்தியது. ''பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தின்போது தொழிலாளர்கள், விவசாயிகள், குட்டி பூர்ஷ்வாக்கள், நடுத்தர பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் ஜனநாயக சர்வாதிகாரம் நிலைநாட்டப் பெற்ற முதல் நாடாக இருந்தது ஸ்பெயின்''[2] என்று கூறினுர் தாலரேஸ் இபரூரி. இந்த

[1] மை. ஆ. கூ., 495/2/257/77.

[2] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் முப்பதாண்டு நிறைவு, பக்கம் 207.

மக்கள் ஆட்சி வளர்ச்சி அடைந்து புதிய ஜனநாயகத்தை நாளுக்கு நாள் அதிகமாக உருவகப்படுத்தியவாறு, சோஷலிஸ மாற்றங்களை நேரடியாக அடைவதற்கான வழியையும் படிப்படியாகச் செப்பம் செய்தது. ஸ்பானியக் குடியரசு தோல்வி அடைந்த போதிலும் இந்த வளர்ச்சிப் போக்கு முழுமையான தெளிவுடன் வெளிப் பட்டது.

மக்கள் கூட்டணிக் கொள்கை, பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகத் தற்காத்துக் கொள்வதன் இன்றியமையாமை காரண மாக மேற்கொள்ளப்பட்ட புதிய செயல்தந்திரம் மட்டுமே என்று சில கம்யூனிஸ்டுகள் ஏழாவது காங்கிரசுக்குப் பிறகு கூட எண்ணி வந்தார்கள். ஸ்பானிய நிகழ்ச்சிகளின் போக்கு மிகப் பெருத்த முக்கியத்துவம் உள்ள ஓர் உண்மையை வெளிப்படுத்தியது. மக்கள் கூட்டணி, புது ஜனநாயகம், பாசிஸ எதிர்ப்புத் தற்காப்புப் போராட்டத்துக்கும் சோஷலிஸத்துக்கான போராட்டம் என்ற இறுதிக் குறிக்கோளுக்கும் இடையிலுள்ள இணைப்புக் கட்டம் என்பது அந்த உண்மை. புரட்சியின் சோஷலிஸக் கட்டத்துக்கு முன் னேறுவதற்கு உரிய வழிகளைப் புரிந்து கொள்வதற்கு ஸ்பானிய அனுபவம் எவ்வளவு முக்கியமானது என்பதைக் கம்யூனிஸ்டு அகிலம் ஆழ்ந்த முறையில் புரிந்து கொண்டது.

மக்கள் கூட்டணிக்காகப் பிற முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளது போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஒத்துழைப்பு

பாசிஸ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியையும் புது வகை ஜன நாயகத்தை நிலைநாட்டுவதையும் நோக்கமாகக் கொண்ட கொள் கைப் போக்கு இத்தாலியக் கம்யூனிஸ்டுகளதும் சோஷலிஸ்டுகள தும் செயல் ஒற்றுமையை வலுப்படுத்த உதவியது. 1937ல் அவர் களுக்கிடையே செயல் ஒற்றுமை பற்றிய புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் புதிய குடி யரசுக்காகக் கூட்டாகப் போராடினார்கள். இதன் வரம்புகளுக்குள் நிலம் பற்றிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும், ஏகபோகங் களின் அதிகாரம் ஒழிக்கப்படும், மக்களின் உரிமைகள் உறுதிப்

படுத்தப்படும் என்று அவர்கள் கூறினார்கள்.[1] இத்தாலியில் விரிவான பாசிஸ எதிர்ப்பு இயக்கம் இவ்வாறு உருவாயிற்று.

ஒன்றித்த தொழிலாளர், விரிவான மக்கள் கூட்டணி என்ற கோஷத்துடன் நடத்தப்பட்ட போராட்டம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உழைப்பாளிகளுக்கும் ஓரளவு பயன் விளைத்தது. தொழிற்சங்க இயக்கத்தில் இடதுசாரிச் சக்திகளின் செல்வாக்கு வலுப்பட்டது. 1938ல் புதிய தொழிற்சங்க மையம்—உற்பத்தித் தொழிற்சங்கங்களின் காங்கிரஸ்—தோன்றியது. அப்போது அது முற்போக்கு நிலைகளை ஆதரித்தது. சமுதாயச் சட்டங்கள் இயற்றும் துறையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உழைப்பாளிகளுக்கு அரசாங்கம் முக்கியமான அம்சங்களில் விட்டுக் கொடுத்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தின் பொதுக் கோட்பாடுகளின் உணர்வில் தனது கொள்கைப் போக்கை வகுத்து, தொழிலாளர்-பண்ணைக்காரர்கள் கட்சியை அமைக்கும் கோஷத்தை முன்வைத்தது. மக்கள் கூட்டணிக்கு ஆதரவளித்த வட்டாரங்களையும் குழுக்களையும் இந்தக் கட்சி ஸ்தாபனரீதியாக ஒன்று சேர்க்கும் என அது எண்ணியது. தொழிலாளர்-பண்ணைக்காரர்கள் கட்சி அனேக அரசியல் குழுக்களுக்கு இன்றும் ஏற்புடையதாக இல்லை. எனவே மக்கள் கூட்டணியை இந்தக் கட்சியின் வரம்புகளுக்குள் குறுக்காமல் இருப்பது அவசியம் என்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சி விரைவில் கண்டுகொண்டது. ஜனநாயகக் கட்சியின் இடதுசாரியினரையும் மக்கள் கூட்டணியில் சேர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுச் செயலகம் 1937, ஏப்ரலில் ஆதரவு அளித்தது. ஆயினும், செயலகத்தின் கூட்டங்களில் உ. ஃபோஸ்டர் எ. புரௌடரை (இவர் பின்னர் கொள்கைமாறி ஆகி விட்டார்) தாக்கி விமர்சித்தார். எ. புரௌடர் ரூஸ்வெல்டு அரசாங்கத்தின் கொள்கையை ஆதர்சமாக மதித்தார் என்றும் ''ரூஸ்வெல்டை ஆதரிக்கும் சக்திகள் மக்கள் கூட்டணியின் முக்கியக் காரணிகளிலும் பகுதிகளிலும் ஒன்ருகச் செயல்படும்''[2] என அவர் கருதியதாகவும் உ. ஃபோஸ்டர் கூறினார்.

---

[1] ப. தளியாத்தி. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி. மாஸ்கோ, 1959, பக்கம் 63.

[2] மை. ஆ. கூ., 495/18/1188/13.

1938, ஜனவரி மாதம், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுச் செயலகம் அமெரிக்கப் பிரச்சினையை ஆராய்ந்து, ''பாசிஸ அபாயத்துக்கு எதிராக ஜனநாயகக் கூட்டணி'' அமைக்கும் கட்சியின் துணிகரமான தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்தது. அதே சமயம் ''குட்டி பூர்ஷ்வா, முற்போக்கு, ஜனநாயகச் சக்திகளுடன் விரிவான கூட்டு இயக்கத்தில்''[1] சேர்வதற்கு ஓரளவு அச்சம் கட்சியில் தென்படுவதாக அது குறித்தது. ரூஸ்வெல்டு அரசாங்கத்தின் கொள்கை பற்றி புரௌடரின் மதிப்பீடு ஒருதலைச் சார்பானது என்பதையும் அதன் காரணமாகக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள வால் பிடிக்கும் அபாயத்தையும் இதே கையோடு செயற்குழுச் செயலகம் சுட்டிக்காட்டியது. ரூஸ்வெல்டு அரசாங்கத்தின் கொள்கை பற்றிய ஆழ்ந்த பகுத்தாய்வை அது அளித்தது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அமெரிக்கக் கமிஷனில் திமீத்ரொவ் பேசினார். ரூஸ்வெல்டு அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளைத் துணிவுடன் ஆதரிக்கும்படி அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கு யோசனை கூறினார். ஆனால், ''ரூஸ்வெல்டின் புகழ் பாடுவது கூடாது'' என்றும் பாசிஸ எதிர்ப்பு ஜனநாயகக் கூட்டணியின் கோரிக்கைகளுக்கு முரண்படும் அவருடைய நடவடிக்கைகளைத் தாக்கி விமர்சிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

செயற்குழுவின் ஒத்துழைப்பு அதிகப் பயன் விளைக்கும் நிலையை மேற்கொள்ள அமெரிக்கக் கம்யூனிஸ்டுகளுக்கு உதவியது. வெகுஜனங்களிடையே தங்களது செல்வாக்கை வலுப்படுத்திக் கொள்வதிலும் நாட்டில் தொழிலாளர், ஜனநாயக இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதிலும் அவர்கள் வெற்றி அடைந்தார்கள். அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது. 1939ல் 90 ஆயிரம் பெயர் கம்யூனிஸ்டுக் கட்சியின் அணிகளில் இருந்தார்கள்.

பிற்போக்குக்கு எதிராகவும் தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும் ஜனநாயகத்தின் பொருட்டும் சமாதானப்பற்றுள்ள அயல்நாட்டுக் கொள்கையின் பொருட்டும் பிரிட்டிஷ் உழைப்பாளிகளின் போராட்டத்திலும் கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கை முக்கியப் பங்கு ஆற்றியது. தொழிலாளர்களின் வெகுஜன இயக்கம் பிரிட்டிஷ் பாசிஸ்டு

---

[1] மை. ஆ. கூ., 495/18/1234/17.

களின் முன்னேற்றத்தை நிறுத்தியது. 1936ல் போராட்டம் தனது உச்ச கட்டத்தை அடைந்தது. ஆங்கில பாசிஸ்டு மாஸ்லியின் கொலைகாரக் கும்பலின் அணிநடையை லண்டன்வாசிகள் அப்போது தடுத்துவிட்டார்கள். சுயேச்சைத் தொழிலாளர் கட்சியுடனும் சோஷலிஸ்டு லீகுடனும் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி 1936ல் உடன்பாடு செய்துகொண்டது. தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமைக்காகவும் தொழிற் கட்சியின் கொள்கைப் போக்கை மாற்றுவதற்காகவும் இந்த மூன்று கட்சிகளும் கிளர்ச்சி இயக்கம் நடத்தின. இவற்றுக்குக் காரணமாக இருந்த ஒற்றுமைக் கொள்கையை வகுப்பதில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பங்கு கொண்டது. தொழிற் கட்சியில் கூட்டு உறுப்பினராகச் சேர்வதற்கு பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்திய இயக்கத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகம் 1937, இலையுதிர்காலத்தில் ஆமோதித்தது. தங்கள் கட்சி தொழிற்கட்சியின் விதிகளை ஏற்றுக் கொள்கிறது என்றும் தொழிற் கட்சியில் சேர்ந்துள்ள பிற ஸ்தாபனங்கள் ஏற்றுள்ள பொறுப்புக்களையே ஏற்கப் போவதாகவும் அவை பெற்றுள்ள உரிமைகளையே பெறப் போவதாகவும் கம்யூனிஸ்டுகள் தொழிலாளர்களுக்கு விளக்க வேண்டும் என்பதில் சிறப்பாகக் கவனம் செலுத்தப்பட்டது.[1] தொழிலாளர் இயக்கத்தில் ஒற்றுமை ஏற்படுத்துவதன் விளைவாகத் தொழிற் கட்சியிலும் பெருத்த முற்போக்குள்ள மாற்றங்கள் நிகழும் என்றும் இதனால் சேம்பர்லேன் அரசாங்கத்தின் பிற்போக்குள்ள உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை வெற்றிகரமாகத் தாக்குவது சாத்தியமாகும் என்றும் கம்யூனிஸ்டுகள் நம்பினார்கள்.

பாசிஸ்டு அல்லது அரை பாசிஸ்டு சர்வாதிகாரங்கள் ஆட்சி நடத்தி வந்த ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, போலந்து, கிரீஸ், பல்கேரியா, பிற நாடுகள் ஆகியவற்றில் பாசிஸ எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் ஒன்று இணைக்கும் கொள்கையைக் கம்யூனிஸ்டு அகிலம் தனது பிரிவுகளோடு சேர்ந்து கடைப்பிடித்து வந்தது. பாசிஸ எதிர்ப்பு ஜனநாயகக் குடியரசுகளை நிலைநாட்டும் முதன்மைக் குறிக்கோளைக் கம்யூனிஸ்டு அகிலமும் இந்நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தெளிவாக வரையறுத்தது பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. அதோடு ஜெர்மனியையும் ஆஸ்திரியாவையும் போன்ற வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடு

---

[1] மை. ஆ. கூ., 495/18/1223/8.

களுக்கும் இந்தக் குறிக்கோள் தக்க ஆதாரம் காட்டி நிறுவப்பட்டிருந்தது. சில தோழர்களும் சமூக-ஜனநாயகவாதஇடதுசாரியினரும் ''மிகத் தீவிரவாத மனப்பான்மை கொண்டிருந்து ஜனநாயகக் குடியரசுக்கான போராட்டம் என்னும் கோஷத்தை விரும்பாவிட்டால், மனிதர்கள் சர்வ சாதாரணமான விஷயங்களைப் புரிந்து கொள்வதில்லை என்றும் புரிந்து கொள்ள விரும்பவும் இல்லை என்றும் இது அர்த்தப்படும்''. ஜனநாயகக் குடியரசுக் கோரிக்கையை விடுப்பதன் மூலமாக மட்டுமே கம்யூனிஸ்டுகள் கூட்டாளிகளின் விரிவான வட்டாரத்தைத் தங்கள் தரப்புக்குக் கொண்டு வரவும் பாசிஸ விரோதிகளை ஒன்று சேர்க்கவும் முடியும்[1] என்று 1936, மே மாதம் இந்தப் பிரச்சினை முடிவு செய்யப்பட்ட போதே திமீத்ரொவ் கூறியிருந்தார். ஜனநாயகக் குடியரசு கோஷம் சாமர்த்தியமான தந்திரம் மட்டுமே என்று கருதியவர்களை மறுத்து, 1937, பிப்ரவரி 7ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகத்தின் கூட்டத்தில் ஊல்பிரிஹ்த் பின்வருமாறு கூறினர்: ''ஹிட்லரை ஆட்சியிலிருந்து அகற்றிய பின் நாம் முதலில் ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்த வேண்டும், போர்த்தந்திர முக்கியத்துவம் உள்ள இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதன் வாயிலாகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான போராட்டம் பற்றிய நமது கோரிக்கையை நிறைவேற்ற முன் செல்வது தவிர வேறு எந்த வழியும் இல்லை என்ற கருத்தை நான் கொண்டிருக்கிறேன்.''[2]

பாசிஸ்டு சர்வாதிகார நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள், பூர்ஷ்வா வட்டாரங்களின் பாசிஸ விரோத எதிர்த்தரப்பினர் உட்பட பாசிஸத்தின் எல்லா எதிரிகளையும் ஒன்று திரட்டும் ஒத்திசைந்த கொள்கைப் போக்கை அந்த சமயத்தில் கடைப்பிடித்து வந்தன. மிகக் கொடிய பயங்கர முறைகள், இடையருத துன்புறுத்தல்கள், சிறைகள், சித்திரவதைகள் ஆகியவற்றைப்பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்டுகள் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்திஞர்கள். வட்டார அளவிலும் தேசிய அளவிலும் கூட மக்கள் கூட்டணிக் கமிட்டிகளை நிறுவுவதில் இந்நாடுகள் பலவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெற்றி பெற்றன. உதாரணமாக, ஜெர்மனியையும் போலந்தையும் சேர்ந்த மக்கள்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1086/12.

[2] மை. ஆ. கூ., 495/18/1169/192.

கூட்டணிக் கமிட்டிகள் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றின.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பணிகளை ஆராய்ந்து, விரிவான ஜனநாயகக் கூட்டணி ஏற்படுத்த முயற்சி செய்யும்படி *1936*, டிசம்பர் *30*ந் தேதி நிறைவேற்றிய தீர்மானத்தில் போலிஷ் கம்யூனிஸ்டுகளைப் பணித்தது. ''ஹிட்லர் ஜெர்மனியுடன் கூட்டணியிலிருந்து போலந்தைப் பிரிக்கும் பொருட்டு நாட்டிலுள்ள எல்லா ஜனநாயகச் சக்திகளையும் அணிதிரட்டுவதில்'' பிரயாசைகளை முதன்மையாக ஈடுபடுத்தவேண்டும் என்று அது வலியுறுத்தியது. நாட்டை ஜனநாயகமயம் ஆக்கவும் சமாதானப் பற்றுள்ள அயல் நாட்டுக் கொள்கைக்கு வகை செய்யவும் தயாராய் இருக்கும் ஜனநாயக அரசாங்கத்தை ஆதரிப்பது என்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.[1]

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் பற்பல சிக்கலான பிரச்சினைகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களுடைய ஆலோசனைக்கு அனுப்பின. இந்த உறுப்புக்கள் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய நெருக்கமான ஒத்துழைப்புடன் நிலைமையைக் கவனமாக ஆராய்ந்த பின், பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்தில் இன்னும் ஆழ்ந்த கொள்கையைக் கடைப்பிடிக்கும்படி கம்யூனிஸ்டுகளுக்கு வழி காட்டும் தீர்மானங்களை வழக்கமாக உருவாக்கின.

யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சி *1936*, ஏப்ரல் மாத முழுக் கூட்டத்தில் சில பிரிவுவாதத் தவறுகளுக்கு இடம் கொடுத்துவிட்டது. இந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளக் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை அதற்கு உதவியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு *1936*, ஜூன் மாதம் மாஸ்கோவில் ஒரு மகாநாடு கூட்டியது. ''கீழிருந்து மட்டுமே'' ஒன்றித்த கூட்டணி என்ற குறுகிய பிரிவுவாதப் போக்கை நிராகரித்துப் புதிய யோசனையை இந்த மகாநாடு தயாரித்தது.[2] நாட்டினப் பிரச்சினை பற்றி யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கையை வகுப்பதிலும் செயற்குழு உதவியது. நாட்டினங்களின் சுயநிர்ணயம் என்ற கோஷத்

---

[1] மை. ஆ. கூ., *495/18/1133/6-7*.

[2] Pregled istorije Saveza kommunista Jugoslavije, T. I. Beograd, 1963 pp. 235-36.

துக்கு யூகோஸ்லாவியாவைத் துண்டுகளாகக் கூறுபோடுவது என்று அர்த்தம் அல்ல என்று அது அறிவுறுத்தியது. முன்பு ஒடுக்கப்பட்டிருந்த நாட்டினங்கள் அனைத்தும் உள்நாட்டுச் சுயாட்சி பெறும் ஜனநாயகக் கூட்டுக் குடியரசு என்ற கோஷத்தின் மூலம் ஜனநாயக மக்கள் சக்திகளை ஒன்று திரட்டக் கம்யூனிஸ்டுக் கட்சி ஊக்கத்துடன் முயற்சி செய்ய வேண்டும் என்று செயற்குழு கூறியது. ஸ்லோவேனியாவிலும் ஹோர்வாத்தியாவிலும் சுதந்திரமான கம்யூனிஸ்டுக் கட்சிகள் அமைக்கும் பிரச்சினை இதன் தொடர்பாக எழுந்தது. யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நேர்முகத் தலைமையை நாட்டுக்கு உள்ளே கொண்டுவரும் யோசனையைச் செயற்குழு ஆதரித்தது.[1] ஒவ்வொரு கட்சியினதும் முன்முயற்சியை வளர்ப்பது, ஒவ்வொரு நாட்டினதும் ஸ்தூலமான சிறப்பு இயல்புகளை அக்கறையுடன் கருத்தில் கொண்டுள்ள கொள்கையைக் கடைப்பிடிப்பது என்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் பொதுப் போக்குக்கு இது பொருத்தமாக இருந்தது.

பாசிஸ எதிர்ப்பு மக்கள் கூட்டணி பற்றிய பயனுள்ள கொள்கைக்குத் திரும்புவதில் வேறு பல கட்சிகளுக்கும், உதாரணமாக ஹங்கேரி, டென்மார்க், ஹாலந்து முதலியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் பெருத்த உதவி புரிந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுச் செயலகத்தின் ஹாலந்துக் கமிஷனில் ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரிவுவாதத் தவறுகள் பற்றி 1937, டிசம்பரில் ஆலோசனை நடந்தது. கட்சி அபாயகரமான நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த நோய் அதன் அணிகளில் ஆழமாகப் புகுந்திருக்கிறது என்றும் கமிஷன் கூட்டத்தில் கூறப்பட்டது. "பிரிவுவாதச் சுயதிருப்தி, சொந்த சக்திகள் பற்றிய மிகையான எண்ணம், சொந்த வாய்ப்புக்கள் பற்றிய மிகையான மதிப்பீடு, கஷ்டங்களையும் பகைவனின் வலிமையையும் குறைத்து மதிப்பிடுவது ஆகியவையே இந்த நோய்."[2] பிரிவுவாதத் தவறுகளைப் போக்கி, கட்சியின் வெகுஜன வேலையைச் சீர்படுத்தும் நோக்கத்துடன் அனேகத் திட்டவட்டமான யோசனைகளைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அளித்தது.

ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணியை அமைப்பதில் கம்யூனிஸ்டு அகிலமும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூ

---

[1] மை. ஆ. கூ., 495/18/1109/5.

[2] மை. ஆ. கூ., 495/18/1230/197.

னிஸ்டுக் கட்சிகளும் கடைப்பிடித்துவந்த ஒத்திசைந்த கொள்கைப் போக்கு, பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தின் வெற்றிகளுக்கும் உழைப் பாளிகள் போராடி அடைந்த நலன்களுக்கும் அடிப்படையாக விளங்கியது. பல நாடுகளில் பாசிஸத்துக்கு எதிராகப் பெருந்திர ளான உழைப்பாளிகள் அணிதிரட்டப்பட்டார்கள். பாசிஸம் பின் வாங்க வேண்டியதாயிற்று. நாடுகளின் வாழ்வில் தொழிலாளி வர்க்கத்தின் பங்கு அதிகரித்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தொழி லாளி வர்க்கத்தின் மற்ற ஸ்தாபனங்களும் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தில் மிகப் பெருத்த அனுபவம் பெற்றன. பல கம்யூ னிஸ்டுக் கட்சிகள் உழைப்பாளிகளுடைய போராட்டத்தின் மதிக்கப் பெற்ற வழிகாட்டிகள் ஆயின. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு உயர்ந்தது. 1936 முதல் 1938 வரையுள்ள காலப்பகுதியில் கம்யூ னிஸ்டுக் கட்சிகள் பல நாடுகளில் கணிசமான வளர்ச்சி அடைந் தன. 1939ல் முதலாளித்துவ உலகில் 1750 ஆயிரம் கம்யூனிஸ்டு கள், அதாவது, கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் நடந்த காலத்துடன் ஒப்பிடும் போது 2.2 மடங்கு அதிகக் கம்யூ னிஸ்டுகள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டது.[1]

கம்யூனிஸ்டு அகிலமும் காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கையும்

கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய போர்த்தந்திரம் காலனிகளை யும் அரைக் காலனிகளையும் சேர்ந்த மக்களின் போராட்டத்தி லும் கம்யூனிஸ்டுகள் செல்வாக்கு உள்ள அரசியல் சக்தி ஆவதற்கு உதவியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசுக்குப் பிந் திய ஆண்டுகளில் காலனிகள், அரைக் காலனிகளின் விரிந்த நிலப்பரப்புக்களில் வெகுஜனங்களின் விடுதலை இயக்கம் ஏற்றம் பெற்றது. அதே சமயம், ஆதிக்க மண்டலங்களையும் செல்வாக்கு மண்டலங்களையும் மறுபங்கிடுவதற்காக ஏகாதிபத்திய ஆக்கிரமிப் பாளர்களால் மூட்டிவிடப்பட்ட யுத்த நெருப்பு நாளுக்கு நாள்

---

[1] கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாபெரும் சாஸ னம். மாஸ்கோ, 1961, பக்கம் 268.

வளர்ந்துகொண்டு போயிற்று. அடிமைத்தனத்துக்கும் மிக ஆழ்ந்த தேசிய விபத்துக்கும் உள்ளாகும் அபாயம் சீனுவின் பல கோடி மக்கள் உள்படப் பல நாடுகளின் மக்களுக்கு நேர்ந்தது. இந்த நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தால் அறிவிக்கப்பட்ட விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக் கொள்கை ஒடுக்கப்பட்ட நாடுகளின் மிகப் பெரும்பாலான மக்களைக் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒன்று திரட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தியது.

சீனுவில் புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு இந்தக் கொள்கை சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களை வழிகாட்டியாகக் கொண்டு சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டில் உள்நாட்டுப் போரை நிறுத்தவும் ஜப்பானிய எதிர்ப்பு தேசியக் கூட்டணியை அமைக்கவும் முயற்சி செய்துவந்தது. கம்யூனிஸ்டு அகிலம் சீனுவின் விடுதலைப் போராட்டம் பற்றிய முக்கியப் பிரச்சினைகள் மீது முறையாக ஆலோசனை நடத்தி வந்தது. 1935, அக்டோபர் மாதம் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகத்தின் கூட்டத்தில் ஏகாதிபத்திய விரோத, ஜப்பானிய எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டுவதன் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது. பணக்கார விவசாயிகளையும் வர்த்தகர்களையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சில நடவடிக்கைகள் கண்டனம் செய்யப்பட்டன. சீனப் போராட்டத்தின் அந்தக் கட்டத்தில் இந்த நடவடிக்கைகள் விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைப்பதற்குத் தடையாகவே இருந்தன.[1]

1935ம் ஆண்டின் முடிவில், கம்யூனிஸ்டு அகிலத்தின் உதவியுடன் சீனுவில் ஜப்பானிய எதிர்ப்பு ஒன்றித்த தேசியக் கூட்டணிக் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டன. ஆனுல், 1935, டிசம்பர் 25ந் தேதி சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தலைமைக் குழு (போலிட்பியூரோ) புதிய கொள்கைப் போக்கை விளக்கி நிறைவேற்றிய தீர்மானத்தில் அனேக பெருத்த தவறுகளும் பழைய மதிப்பீடுகளும் இருந்தன. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் குவோமிந்தாஙுக்கு எதிராகவும் ஒரே சமயத்தில் போராடும்படி இவை கட்சியை எதார்த்தத்தில் ஏவின. இந்தத் தீர்மானத்தைப் பகுத்து

---

[1] மை. ஆ. கூ., *495/18/1014/276-278.*

ஆராய்ந்த கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு இந்த முடிவு தவறு னது என்று சுட்டிக் காட்டியது. எனெனில் சீன மக்களின் பிர தானப் பகையாக இருப்பது ஜப்பானிய ஏகாதிபத்தியம். இந்தக் கட்டத்தில் அதற்கு எதிரான போராட்டமே மற்ற எல்லாவற்றுக் கும் மேலான இடத்தை வகிக்க வேண்டும். தவிரவும், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் சியாங் காய்-ஷேக்கிற்கு எதிராகவும் ஒரே சமயத்தில் வெற்றிகரமாகப் போராட்டம் நடத்து வது இயலாது. குவோமிந்தான் முழுவதும், சியாங் காய்-ஷேக்கின் இராணுவம் அனைத்தும் ஜப்பானியர்களின் கூட்டாளிகள் என்று எண்ணுவதும் கூடாது. இவ்வாறு எடுத்துக் காட்டியது செயற்குழு. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தீர்மானங்களில் இருந்த அனேகத் தவறுகளைத் திருத்தவும் ஜப் பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எல்லா தேசிய சக்திகளை யும் ஒன்று திரட்டவும் செயற்குழுவின் இந்த விமரிசனம் உதவி யது. கம்யூனிஸ்டுக் கட்சி தேசிய பூர்ஷ்வாக்களையும் ஒன்றித்த கூட்டணியில் சேர்க்கவும் ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக நேர்மையுள்ள எல்லாத் தேசபக்தர்களையும் ஒன்று திரட்ட வும் தொடங்கியது. இந்த நோக்கத்துக்காக, ''தொழிலாளர்-விவசாயிகள் குடியரசு'' என்ற கோஷத்துக்குப் பதில் ''மக்கள் குடியரசு'' என்ற கோஷம் ஏற்கப்பட்டது. தேசியக் கூட்டணியில் சேர்ந்த எல்லா வகுப்பாருடைய பிரதிநிதிகளும் ஆட்சி உறுப்புக் களில் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். தேசிய பூர்ஷ்வாக் களின் தொழில் நிலையங்களைக் காக்கும் கொள்கை பிரகடனம் செய்யப்பட்டது.

1936, டிசம்பர் மாதம், ஸியான் நிகழ்ச்சிகள் என்று பெயர் பெற்ற இந்த நிகழ்ச்சிகளின்போது (கிளர்ச்சி செய்த படையின ரால் சியாங் காய்-ஷேக் அப்பொழுது கைது செய்யப்பட்டார்.) கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஒன்றித்த தேசிய ஏகாதி பத்திய எதிர்ப்புக் கூட்டணிக்கான போராட்டத்தில் சீனக் கம்யூ னிஸ்டுக் கட்சிக்கு ஆழ்ந்த உதவி அளித்தது. செயற்குழுவின் தலை யீட்டினுல் சீனுவில் புதிய உள்நாட்டுப் போர் மூளும் அபாயம் தவிர்க்கப்பட்டது. இத்தகைய போர் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர் களுக்கே சாதகமாய் இருந்திருக்கும்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைக்கு இணங்கச் சீனக் கம்யூ னிஸ்டுக் கட்சி உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான நிபந்தனை களைக் குவோமிந்தானுக்கு அறிவித்தது. மக்கள் குடியரசு என்னும்

கோஷத்துக்குப் பதில் ஜனநாயகக் குடியரசு என்ற கோஷத்தை ஏற்றுக் கொள்ளவும் நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்வதை நிறுத்தி வைக்கவும் அது இசைந்தது.

ஒன்றித்த தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைப்பதற்குச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முயற்சிபற்றிய பிரச்சினைகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை உறுப்புக்களது நிகழ்ச்சி நிரலில் முறையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. **1937,** ஆகஸ்டு மாதம் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுச் செயலகம் சீன நிலைமை பற்றித் தோழர் வான் மின் சமர்ப்பித்த அறிக்கையைக் கேட்டது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜப்பானிய எதிர்ப்புக் கூட்டணி அமைக்கும் பொருட்டுச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி குவோமிந்தானுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை அறிக்கையாளர் ஆதரித்தார். அதே சமயம், கட்சியின் சுதந்திரத்தை நிலையாக வைத்திருப்பதும், செஞ்சேனையின் தலைமை அதனிடம் இருக்குமாறு வைத்துக் கொள்வதும், கம்யூனிஸ்டுகளையும் இடதுசாரிச் சக்திகளையும் நொறுக்க முயன்றுகொண்டிருக்கும் சியாங் காய்-ஷேக்கை இடையறாது விழிப்புடன் கவனித்துக் கொண்டிருப்பதும் இன்றியமையாதவை என்று அவர் சுட்டிக் காட்டினார்.[1] இந்த அரசியல் கொள்கைப் போக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தப் போக்கு கடைப்பிடிக்கப்பட்டதன் விளைவாக சீனாவில் உள்நாட்டுப் போரை நிறுத்தவும் ஜப்பானிய எதிர்ப்பு ஒன்றித்த தேசியக் கூட்டணி அமைக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாறு சீனாவில் சக்திகளை ஒன்று திரட்டுவது செயல்படுத்தப்பட்டது. ஜப்பானிய ஏகாதிபத்தியத்துடன் வெற்றிகரமாகப் போராடுவதற்கு இது வகை செய்தது.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ச்சியில் முரண்பாடுள்ள போக்குக்கள் அந்தக் காலத்தில் காணப்பட்டன. ஒன்றித்த ஜப்பானிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியின் பொருட்டுச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போராட்டம் அதன் மதிப்பும் செல்வாக்கும் உயர உதவியது. விவசாயிகளிடையே சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலை தீவிரமாக்கப்பட்டது பயனுள்ளதாகவும் இன்றியமையாததாகவும் இருந்தது, ஏனெனில் நாட்டின் விவசாயி வெகுஜனங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியின் யாவற்றிலும் பெருத்த எண்ணிக்கை உள்ள சக்தியாக விளங்கினர்

---

[1] மை. ஆ. கூ., *495/2/263/23*.

கள். ஆனால், சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி தெற்குப் புரட்சித் தளங்களை இழந்தபின் தொலைதூர நாட்டுப்புற வட்டாரங்களுக்குப் போய்விட்டதாலும் தொழில் மையங்களிலிருந்து தொலைவில் இருந்ததாலும் தொழிலாளி வெகுஜனங்களுடன் கட்சியின் தொடர்புகள் ஓரளவு துணிக்கப்பட்டு விட்டன. கட்சி விவசாயித் தன்மை பெற்று விட்டது. 1926ல் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர்களில் 66 சதவிகிதம் தொழிலாளர்களாக இருந்தார்கள். முப்பதுக்களிலோ, விவசாயிகள் அதன் உறுப்பினர்களில் 90 சதவிகிதம் ஆகி விட்டார்கள். சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி விவசாயிகள் கட்சியாக மாறியதன் காரணமாக அதன் அணிகளில் குட்டி பூர்ஷ்வா, தேசியவாத மனப்பான்மை வளர்ந்தது. மா சே-துங், அவருடைய தரப்பாளர்கள் ஆகியோரின் நிலை கட்சியின் தலைமை உறுப்புக்களில் பலப்பட்டது. இவர்களுடைய கருத்துக்கள் இந்தப் போக்குக்களை ஓரளவு பிரதிபலித்தன.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ச்சியில் சில கேடான அம்சங்களைக் கண்டு அவற்றை அகற்றுவதில் அதற்கு உதவக் கம்யூனிஸ்டு அகிலம் முயன்றது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகமும் தலைமைக் குழுவும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து சீன நிகழ்ச்சிகளின் போக்கைக் கவனமாகப் பகுத்து ஆராய்ந்து, பொது தேசிய ஜப்பானிய எதிர்ப்புக் கூட்டணியில், சிறப்பாகப் பெரிய நகரங்களின் தொழிலாளி வர்க்கத்தினிடையே கட்சியின் பாத்திரத்தை உறுதிப்படுத்தும் பொருட்டும் ஆக்கிரமிப்பாளர்களை ஆயுதபலத்துடன் எதிர்ப்பதைத் தீவிரம் ஆக்கும் பொருட்டும் தக்க யோசனைகளைத் தயாரித்தன. 1938, ஜூன் 11ந் தேதி செயற்குழுவின் தலைமைக்குழு நிறைவேற்றிய தீர்மானத்தில், கட்சி சுயேச்சையான நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும், சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் உள்ள எட்டாவது சேனையினதும் புதிய நான்காவது சேனையினதும் போர்த் திறனை வலுப்படுத்த வேண்டும் என்றும், தனிப் பிரதேசத்தை ''அனைத்துச் சீனக் குடியரசின் யாவற்றிலும் ஜனநாயகத் தன்மை வாய்ந்த உறுப்புக்கு எடுத்துக்காட்டாக'' மாற்ற வேண்டும் என்றும் சிறப்பாக வலியுறுத்தப்பட்டது. குவோமிந்தான் பிரதேசங்களிலும் சீன நிலப்பரப்பு அனைத்திலும், சிறப்பாகப் பெரிய நகரங்களிலும் இராணுவத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் இடையிலும் இருப்புப் பாதைத் தொழிலாளர்கள் இடையிலும் கட்சி

ஸ்தாபனங்கள் அமைப்பதும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்களுக்கு மார்க்சிய-லெனினிய போதனையின் அடிப்படையில் பயிற்சி அளிப்பதும் மிகுந்த முக்கியத்துவம் உள்ளவை என்று செயற்குழு கருதியது.[1] கட்சியில் குட்டிபூர்ஷ்வா-தேசியவாதப் போக்குக்கள் வளர்ந்து வந்ததன் காரணமாகச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர்களுக்கு மார்க்சிய-லெனினிய போதனையால் உரமேற்றுவது சிறப்பாகத் தேவைப்பட்டது.

சீனுவில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி அமைக்கப்பட்ட உதாரணம் ஆசியா முழுவதிலும் தேசிய-விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி மீது பெருத்த செல்வாக்கு விளைத்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக் கொள்கை இந்தியாவில் தேசிய-விடுதலை இயக்கம் ஆழ்ந்து பரவுவதற்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தியது. 1936, பிப்ரவரி மாதம், கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் இந்தியப் பிரச்சினை பற்றிய பிரேரணையை ஏற்றுக் கொண்டது. தொழிலாளர்களுடையவும் விவசாயிகளுடையவும் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஸ்தாபனங்களை இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியில் சேர்க்கவும், ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேர்தல் கூட்டணி அமைக்கவும், ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கும் அதனுடன் சமரசம் செய்து கொள்ளும் போக்குக்கும் எதிராக மக்களின் எல்லாச் சக்திகளதும் நடவடிக்கைகளில் ஒற்றுமை ஏற்படுத்தவும் முயலுமாறு யோசனை கூறப்பட்டது.[2] கம்யூனிஸ்டுகள் இந்திய தேசியக் காங்கிரசில் சேர்ந்த பின்னர், தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் இந்தக் கட்சியில் வலுவான இடதுசாரி உருவாயிற்று. ஒன்று சேர்ந்த தொழிற்சங்கங்களையும் ஒன்றித்த தேசிய விவசாயி ஸ்தாபனத்தையும் சார்ந்திருந்த இந்த இடதுசாரி தேசிய-விடுதலை இயக்கத்தின் செயல்திட்டத்திலும் இயக்கத்தின் வளர்ச்சியிலும் கணிசமான செல்வாக்கு செலுத்தியது.

அரபு நாடுகளின் கம்யூனிஸ்டுகளும் புதிய கொள்கைக்குத் திரும்பினுர்கள். கம்யூனிஸ்டு அகிலம் அரபு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய பிரதிநிதிகளுடன் சேர்ந்து அரபு நாடுகளின் கம்யூனிஸ்டுகளின் வேலையை விமர்சன நோக்குடன் பகுத்து ஆராய்ந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம்

---

[1] மை. ஆ. கூ., *495/2/263/24-26.*

[2] மை. ஆ. கூ., *495/18/1073/403-404.*

அரேபியக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் துடியான ஒத்துழைப்புடன் அரேபிய மக்களது தேசிய-விடுதலை இயக்கத்தின் நிலைமை பற்றி விரிவாக ஆலோசனை செய்தது. இவ்வாறு பெருத்த முன்னேற்பாடுகள் செய்த பின்னர், 1936, பிப்ரவரி மாதம் அது ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அரேபியக் கம்யூனிஸ்டுகளின் பல தவறுகளும் பலவீனமும் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டன. தேசிய-சீர்திருத்தவாத ஸ்தாபனங்களை எதிர்த்துப் போராடுவது, சுயேச்சையான சிவப்புத் தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்குவது என்ற கொள்கையைத் தீர்மானம் தாக்கி விமர்சித்தது. அரபு நாடுகளில் மிக மிக விரிவான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி இன்றியமையாதது என்று அது கூறியது. ''அரபு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள், தங்கள் மக்களதும் தங்கள் நாட்டினதும் விதிக்குத் தாங்கள் பொறுப்பாளிகள் என்பதையும், தேசிய சுதந்திரத்துக்காகவும் சமுதாய விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டத்தின் வெற்றிகரமான அல்லது வெற்றியற்ற முடிவுக்கான பொறுப்பு தங்கள் மீதே சார்ந்திருக்கிறது என்பதையும், தங்கள் மக்களின் தலைசிறந்த தேசிய மரபுகளுக்கும் பண்பாட்டு மரபுகளுக்கும் தாங்கள் வாரிசுகள் என்பதையும் ஆழ்ந்த முறையில் உணர வேண்டும்'' என்று தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் ''தேசியப்-புரட்சியாளர்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வகை செய்ய வேண்டும், தேசிய-சீர்திருத்த ஸ்தாபனங்களுடன் ஒத்துழைப்பு ஏற்படுத்த முயல வேண்டும், ஏகாதிபத்தியத்தின் நிலைகளுக்கு எதிராக இந்த ஸ்தாபனங்களின் கோரிக்கைகளை ஆதரிக்க வேண்டும்''[1] என்றும் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொள்ளும் போக்கையும் நாட்டுவெறியையும் யூத தேசியவாதத்தையும் எதிர்த்துப் போராட்டம் நடத்த வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது. சில அரபு நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கு வெகுஜன தேசியப்-புரட்சி ஸ்தாபனங்களில் சேர்ந்து அவற்றுக்கு உள் ஊக்கத்துடன் பயனுள்ள வேலை செய்யும்படி சொல்லப்பட்டது. இந்த எல்லா முடிவுகளும் தேசிய-விடுதலை இயக்கத்தின் சிக்கலான பிரச்சினைகளின்பால் அரேபியக் கம்யூனிஸ்டுகளின் கவனத்தை ஈர்த்தன. புதிய முடிவுகளால் பலம் பெற்ற அரேபியக் கம்யூனிஸ்டுகள் தேசிய-விடுதலைப் போராட்டத்தில் அதிகத் துடியாகப் பங்காற்ற முற்பட்டார்கள். டியூனிசியா,

[1] மை. ஆ. கூ., 495/18/1079/21.

அல்ஜீரியா ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் சுதந்திரமான பிரிவுகளாகச் செயல்படத் தொடங்கின.

மக்கள் கூட்டணி, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி என்ற கோஷத்துடன் நடந்த தேசிய-விடுதலை, ஜனநாயகப் போராட்டம் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாசிஸத்துக்கு பலத்த அடி கொடுத்தது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை ஒத்துழைப்புடன் சிலியில் மக்கள் கூட்டணி 1936ம் ஆண்டு அமைக்கப்பட்டது. மக்களின் முற்போக்குள்ள வட்டாரங்கள் அனைத்தும் இதில் சேர்ந்திருந்தன. சமூக-அரசியல் வாழ்க்கை ஜனநாயகமயம் ஆக்கப்படுவதை ஆதரித்தும் அயல் நாட்டு மூலதனத்தை எதிர்த்தும் தேசிய சுதந்திரத்தை ஆதரித்தும் உழைப்பாளிகளின் பொருளாதாரக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு ஆதரவாகவும் போராடிவந்த வட்டாரங்கள் இவை. சக்திகளின் இந்த விரிவான ஐக்கியத்தை வட அமெரிக்க, ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக மட்டும் இன்றி, சிலி நாட்டு நிலப்பிரபுக்களுக்கும் சிலி நாட்டின் பெரும் பணக்காரர்களது குழு ஆட்சிக்கும் எதிராகத் திருப்பக் கம்யூனிஸ்டுகள் முயன்றார்கள். 1938ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் மக்கள் கூட்டணி வெற்றி பெற்ற பின்னர் சிலியில் மக்கள் கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட்டது. இந்த வெற்றியும் தொழிலாளர்களின் பேரளவான வேலைநிறுத்தப் போராட்டமும் சேர்ந்து சிலி நாட்டுப் பிற்போக்காளர்களின் நிலைகளையும் அயல்நாட்டு ஏகாதிபத்தியத்தின் நிலைகளையும் வன்மையாகத் தாக்கின. இராணுவ-பாசிஸ்டு சர்வாதிகாரத்தை நிலைநாட்டலாம் என்று பிற்போக்காளர்கள் போட்டிருந்த திட்டங்கள் வெகுஜனங்களால் அழிக்கப்பட்டுவிட்டன. சிலி நாட்டின் உழைப்பாளிகள் சில சமுதாய-பொருளாதார நன்மைகளைப் போராடிப் பெற்றார்கள்.

ஆயினும் சிலியின் தொழிலாளி வர்க்கம் மக்கள் கூட்டணியில் இன்னும் தலைமைப் பாத்திரம் வகிக்கவில்லை. இது கூட்டணியின் பலவீனமாக இருந்தது.

இடதுசாரிச் சக்திகளின் விரிவான கூட்டணி ஆர்ஜெண்டீனாவிலும் 1936ல் உருவாயிற்று. ஆனால் அது போதிய உறுதி உள்ளதாகவோ ஸ்தாபன ரீதியாக அமைக்கப்படவோ இல்லை. ஏகாதிபத்தியம், பிற்போக்கு, பாசிஸம் ஆகியவற்றுக்கு எதிராக ஜனநாயகக்

கூட்டணி அமைக்கும் பொருட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி போராட்டம் நடத்தியது. ஆர்ஜெண்டீனாவின் கம்யூனிஸ்டுக் கட்சி அனுப்பிய தஸ்தாவேஜுகளை 1937, ஜூலையில் கம்யூனிஸ்டு அகிலம் உறுதிப்படுத்தியது. ஜனநாயகக் கூட்டணியின் நோக்கம் ''ஆர்ஜெண்டீனாவில் நிலப்பிரபுத்துவத்தின் மீதமிச்சங்களை ஒழிப்பதும், தொழிலாளி வர்க்கமும் எல்லா உழைப்பாளிகளும் மக்கள் அனைவரும் தங்கள் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கவும் தங்கள் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தவும் வாய்ப்பு அளிக்கும் ஜனநாயக ஆட்சி அமைப்பை நிலைநாட்டுவதுமே''[1] என்பதை அது ஒப்புக் கொண்டது. அதே சமயம், நாட்டின் வளங்களையும் ஆர்ஜெண்டீனாவின் மக்களது உழைப்பின் பயன்களையும் கைவசப்படுத்திக் கொண்டிருக்கும் அன்னிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடுவது பற்றிய பிரச்சினைகளும் ஜனநாயகக் கூட்டணியின் கொள்கைத் திட்டத்தில் தெளிவாக்கப்படுவது பொருத்தமாய் இருக்கும் என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு எண்ணியது.

கியூபாவில் கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சியால் மக்கள் ஜனநாயகக் கூட்டணி 1937ம் ஆண்டு அமைக்கப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிற்சங்க ஸ்தாபனங்களும் விவசாயிகள் சங்கங்களும் அதில் சேர்ந்தன. இந்தக் கூட்டணி உழைப்பாளிகளுக்கு ஓரளவு விட்டுக் கொடுக்கும்படியும் கம்யூனிஸ்டுக் கட்சியும் புரட்சிகரத் தொழிற்சங்கங்களும் சட்டபூர்வமாக நிலவ அனுமதிக்கும்படியும் அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தி இணங்க வைத்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்புச் சீர்திருத்தங்கள் செய்யும் பொருட்டு மெக்சிக்கோவின் உழைப்பாளிகள் முப்பதுக்களின் முடிவில் நடத்திய போராட்டத்தில் மக்கள் கூட்டணிக் கொள்கை நிர்ணயகரமான பங்கு ஆற்றியது. தேசியப்-புரட்சிக் கட்சியின் இடதுசாரித் தலைவரான கார்தெனஸின் அரசாங்கம் வெகுஜன இயக்கம் வளர்ச்சி அடைந்ததைக் கண்டு நிலச் சீர்திருத்தம் செய்யவும் அன்னிய மூலதனத்துக்குச் சொந்தமாய் இருந்த இருப்புப் பாதைகளையும் பெட்ரோலியத் தொழிலையும் தேசிய உடைமை ஆக்கவும் முற்பட்டது. வெகுஜன ஸ்தாபனங்களை உள்ளடக்கியிருந்த கட்சியும் மெக்சிக்கோ புரட்சிக் கட்சி' என்று மாற்றி அமைக்கப்பட்டது.

கூட்டு உறுப்பாளியாக மெக்சிக்கோ புரட்சிக் கட்சியில் சேர

---

[1] மை.ஆ.கூ., 495/18/1210/9.

வும் தனது அரசியல் சுதந்திரத்தை நிலையாக வைத்துக்கொள்ள வும் விரும்புவதாகக் கம்யூனிஸ்டுக் கட்சி அறிவித்தது. இதனால் மெக்சிக்கோ புரட்சிக் கட்சி விரிவான தேசியக் கூட்டணி ஆகி இருக்கும். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கம்யூனிஸ்டுக் கட்சியின் இந்தச் செயல்தந்திரத்தை ஆதரித்தது. மெக்சிக்கோ வில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய பிரச்சினை எழவில்லை என்பதைக் கம்யூனிஸ்டுகள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் சர்வஜனநாயகப் போராட்டக் கட்டத்தைத் தாண்டிக் குதிக்க அவர்கள் முயற்சி செய்யக் கூடாது என்றும் இவ்வாறு செய்வது மக்கள் கூட்டணியைப் பிளவுபடுத்தத்தான் செய்யும் என்றும் அது அறிவுறுத்தியது. ஆனால் வால்பிடிக்கும் கொள்கைக் கும் கம்யூனிஸ்டுக் கட்சியைக் குட்டிபூர்ஷ்வாப் புரட்சிக்காரர் களுக்கு அடிப்படுத்துவதற்கும் இட்டுச் செல்லும் எல்லாப் போக் குக்களும் உறுதியாக எதிர்க்கப்பட வேண்டும் என்று அது மிக வன்மையாக அழுத்திக் கூறியது.[1]

லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாட்டாளி வர்க்கம், விவசாயி கள், குட்டி பூர்ஷ்வாக்கள், தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் தீவிர வாத வட்டாரங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பெருந்திரளான வெகுஜனங்களை மக்கள் கூட்டணிக் கொள்கை செயலுக்குத் தட்டி எழுப்பியது. பல லத்தீன் அமெரிக்க நாடுகளில் பாசிஸ்டுப் பிற் போக்காளர்களின் நெடுங்காலத் திட்டங்கள் வெகுஜனங்களின் இயக்கத்தால் முறிக்கப்பட்டன.

ஆனால் காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒற்றுமைக்கான போராட்டத்துக்குப் பல தடைகள் ஏற்பட்டன. காலனி ஆட்சியாளர்களும் ஏகாதிபத்திய மூலதன மும் தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியினரைப் பல்வேறு சூழ்ச்சிகளால் சமரசப் போக்கைப் பின்பற்ற வைத்தார்கள். அனேக ஆதீன நாடுகளைச் சேர்ந்த தேசிய பூர்ஷ்வா வர்க்கத்தின் சில குழுக்கள், ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையே நிலவிய முரண் பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றன. தங்களை ஒடுக்கிய ஏகாதிபத்தியவாதிகளின் போட்டியாளர்களான ஏகாதிபத்திய வாதிகளுடன் நெருங்கிய கூட்டு ஏற்படுத்திக்கொள்ள அவை வழி தேடின. இத்தகைய கூட்டு ஏற்படுத்திக் கொள்ளும் நம்பிக்கை வெகுஜன இயக்கத்தையும் பலவீனப்படுத்தியது. இவ்வாறு இருப்

[1] மை. ஆ. கூ., *495/2/264/187-189.*

பினும், காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிரான போராட்டம் மேலும் வலுவடைந்து முந்திய காலப் பகுதியுடன் ஒப்பிடும்போது அதிக விரிவாகி விட்டது. கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கை இந்த வளர்ச்சியில் முக்கியமான பங்கு ஆற்றியது.

யுத்த நெருப்பை மூட்ட முயன்ற பாசிஸ்டுகளுக்கு எதிராக விரிவான சமாதானக் கூட்டணி அமைப்பதற்கான போராட்டத்தின் தலைமையில் கம்யூனிஸ்டு அகிலம்

உலக யுத்த அபாயம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. முதலாளித்துவ வல்லரசுகள் படிப்படியாகப் புதிய உலக யுத்தப் படுகுழியில் சரிந்து கொண்டிருந்தன. இந்தக் காரணங்களால் கம்யூனிஸ்டு அகிலத்தின் மீதும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மீதும் தனிப்பட்ட பொறுப்புக்கள் சார்ந்தன. ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட பாசிஸ்டு அரசுகள் யுத்த ஏற்பாட்டுக்கான தங்கள் திட்டங்களையும் செயல்களையும் மேலும் மேலும் நெருக்கமாக ஒருங்கிசைத்தன. ஜெர்மனியும் இத்தாலியும் வெகு காலத்துக்கு முன்பே திட்டமிட்டிருந்த ஐக்கியத்தை 1936, அக்டோபரில் செயல்படுத்தி பெர்லின்-ரோம் அச்சை ஏற்படுத்திக் கொண்டன. பிறருடைய நிலப்பரப்புக்களைக் கைப்பற்றுவதற்கான கொள்ளைக்காரப் படையெடுப்புக்கு முன் ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் தொடக்க நிலைகள் பற்றி உடன்பாடுகள் செய்து கொண்டார்கள். ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் இடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்தில் ஜப்பான் 1936, நவம்பர் மாதம் சேர்ந்து கொண்டது. இவ்வாறு ''கம்யூனிஸ்டு அகில எதிர்ப்பு உடன்படிக்கை'' நிறைவேறியது. இந்த உடன்படிக்கை சோவியத் யூனியனையும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தையும் தேசிய-விடுதலை இயக்கத்தையும் தாக்குதலுக்குரிய இலக்குகளாகக் கொண்டிருந்தது. ஆனால், காலனிகளை மறுபங்கீடு செய்வதும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் முழு முழு நாடுகளையும் மக்கள் இனங்களையும் அடிமைப்படுத்துவதும் அதன் குறிக்கோளாக இருந்தது.

கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் சமாதான ஆதரவாளர்களை ஒன்று திரட்டுவதற்கான வாய்ப்புக்களை இரு

மடங்கு ஊக்கத்துடன் தேடின. எத்தியோப்பியாமீது இத்தாலியின் படையெடுப்புக்கு எதிராக ஒன்றித்த சர்வதேசப் பாட்டாளி வர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்வதில் ஏற்பட்ட ஓரளவு தோல்வியினுல் கம்யூனிஸ்டுகள் கலக்கம் அடையவில்லை. கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் யுத்தத்துக்கு எதிராகப் புதிய சர்வதேச நடவடிக்கைகள் மேற்கொள்வதில் முன் முயற்சி எடுத்துக் கொண்டன.

யுத்தத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிரான சர்வதேசப் போராட்டக் கமிட்டியின் நடவடிக்கைகளை எல்லாவிதத்திலும் தீவிரப் படுத்தும்படியும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான வெகுஜன இயக்கத்தின் மையமாக அதை மாற்றும்படியும் கமிட்டியின் கம்யூனிஸ்டுக் குழுவுக்குக் கம்யூனிஸ்டு அகிலம் உத்தரவிட்டது. இந்தக் கமிட்டியின் கட்சிகளுக்குப் புறம்பான தன்மையைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தவாறு கம்யூனிஸ்டுகள் ''எல்லா சமுதாய வட்டாரங்களிலும் இருந்த சமாதான நண்பர்கள் எல்லோரையும்'' சமாதான இயக்கத்தின் வரம்புகளுக்குள் ஒன்று திரட்ட முயன்ருர்கள். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் சர்வதேச சமாதானக் காங்கிரசுக்கு ஏற்பாடுகள் செய்வது பற்றி ஆலோசனை செய்து 1936, மார்ச்சு 17ந் தேதி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இந்தக் காங்கிரசில் கலந்து கொள்ளும் படி சமூக-ஜனநாயகக் கட்சியினதும் தொழிற்சங்கங்களதும் பிரதிநிதிகளும் இந்த ஸ்தாபனங்களின் அலுவலர்களும் முதன்மையாக அழைக்கப்பட வேண்டும் என்றும் விவசாயிகளின் ஸ்தாபனங்கள், நகர நடுத்தர வட்டாரங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அறிவுஜீவிகளும் பூர்ஷ்வா சாத்துவிகவாதிகளும் அழைக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.[1] சமாதான ஆதரவாளர்கள் அனைவரும் ஒன்றுசேரக் கூடிய பிரச்சினைகளைக் காங்கிரசில் எழுப்பும்படி யோசனை கூறப்பட்டது.

சர்வதேச சமாதானக் காங்கிரஸ் 1936, செப்டெம்பர் மாதம் பிரஸ்ஸல்ஸ் நகரில் கூடியது. காங்கிரசுக்கு முன்னர் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் கம்யூனிஸ்டுப் பிரதிநிதிகளுக்கு யோசனை விடுத்தது. ''சமாதானத்தை ஆதரிக்கும் மிக மிக வெவ்வேறு வகையான நபர்களையும் குழுக்களையும் ஸ்தாபனங்களையும், அவற்றின் அரசியல், மதப் போக்கு எதுவாயிருந்தாலும்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1082/62.

இயக்கத்தில் மெற்கொண்டும் எல்லா விதத்திலும் முயன்று ஈடுபடுத்துவது''[1] பிரதானமானது என்று அது பின்னொருமுறை வலியுறுத்தியது. கம்யூனிஸ்டுகள் இந்த நிலையை மேற்கொண்டதன் விளைவாக சமாதான ஆதரவாளர்களின் பல்வேறு ஸ்தாபனங்களுக்குக் காங்கிரசில் விரிவான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. 35 நாடுகளைச் சேர்ந்த, சமாதானத்துக்காகப் போராடிய 750 தேசிய ஸ்தாபனங்கள் 40 சர்வதேச ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் 4,500 பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்து கொண்டார்கள். சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலமும் ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலமும் காங்கிரசில் அதிகாரபூர்வமாகக் கலந்து கொள்ளவில்லை. ஆயினும் பெரும்பாலான தொழிற்சங்க ஸ்தாபனங்களும் அனேக சோஷலிஸ்டுக் கட்சிகளும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. இரண்டு சீர்திருத்தவாத அகிலங்களதும் பிரபல தலைவர்களும் இந்தப் பிரதிநிதிகளில் இருந்தார்கள். காங்கிரசின் நடவடிக்கைகளில் உழைப்பாளி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மட்டும் இன்றி, சாத்தியமான எல்லா வித பூர்ஷ்வா-ஜனநாயகக் குழுக்களுடையவும், சாத்துவிகவாத, மத, யுத்தவிரோத பூர்ஷ்வாக் குழுக்களுடையவும் பிரதிநிதிகளும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

கம்யூனிஸ்டுகள் தனிப்பட்ட கொள்கைத்திட்டத்தை முன்வைக்கவில்லை. நேர்மையுள்ள சமாதான ஆதரவாளர்கள் அனைவருக்கும் ஏற்புடைய குறிக்கோள்களின் பொருட்டுப் போராட வேண்டும் என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். அடிப்படைக் கொள்கைத் திட்டமாகக் காங்கிரஸ் நான்கு அம்சங்களைப் பிரகடனம் செய்தது: 1) உடன்படிக்கைகள் முறிக்கப்படக் கூடாது; 2) ஆயுதங்கள் குறைக்கவும் குறுக்கவும் பட வேண்டும்; 3) கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்தவும் சர்வதேச சங்கத்தை வலுப்படுத்தவும் வேண்டும்; 4) யுத்தத்தை மூட்டிவிடக் கூடிய சர்வதேசக் கெடுபிடி நிலைமையை அகற்ற வல்ல பயனுள்ள அமைப்பை சர்வதேச சங்கத்தின் வரம்புகளுக்குள் ஏற்படுத்த வேண்டும். சமாதானம் பற்றி சர்வதேசப் பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற யோசனை கூறப்பட்டது. ஏகாதிபத்தியவாத ஆக்கிரமிப்பு நாடுகளான ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியவற்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1102/27.

றை எதிர்த்து வந்த சக்திகளின் ஒற்றுமை மேலும் மேலும் வலுப்பட்டு வருவதைக் காங்கிரசின் முடிவுகள் காட்டின.[1]

அதே சமயத்தில் ஜெனீவாவில் நடந்த சர்வதேச இளைஞர் காங்கிரஸ், பல்வேறு அரசியல் போக்குக்கள் கொண்ட இளைஞர் ஸ்தாபனங்களை யுத்த அபாயத்துக்கு எதிராகத் தீவிரப் போராட்டம் நடத்தும்படி கேட்டுக் கொண்டது.

கம்யூனிஸ்டு அகிலம் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களின் சூழ்ச்சிகளை ஓய்வின்றி அம்பலப்படுத்தியது. யுத்தத்தின் இரண்டு தோற்றுவாய்களான பாசிஸ்டு ஜெர்மனியிலிருந்தும் ஏகாதிபத்தியவாத ஜப்பானிலிருந்தும் விளையக்கூடிய தனிப்பட்ட அபாயத்தை வெகு ஜனங்களுக்கு விளக்கியது. ஒவ்வொரு நாட்டிலும் சமாதானப் பற்றுள்ள சக்திகளை ஒன்று திரட்டவும் சர்வதேச சமாதனக் கூட்டணி அமைக்கவும் ஏற்ற கொள்கையை வகுக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அது உதவியது.

செக்கோஸ்லோவாக்கியாவையும் ஜெர்மனியை அடுத்துள்ள வேறு அனேக நாடுகளையும் ஹிட்லர் கைப்பற்றிக் கொள்ளும் அபாயத்தின்பால் ஐரோப்பிய உழைப்பாளிகளின் தனிப்பட்ட கவனத்தைக் கம்யூனிஸ்டு அகிலம் ஈர்த்தது. ஆஸ்திரியாவின் அரசு சுதந்திரம் பறிபோகும் அபாயம் நெருங்கி வருகிறது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1936, மே மாதம் ஆஸ்திரிய உழைப்பாளிகளை எச்சரித்தது. 1937, செப்டெம்பர் 3ந் தேதி செயற்குழுச் செயலகத்தின் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஆஸ்திரிய மக்களுக்குத் தற்போது எதிர்ப்பட்டிருக்கும் பேரபாயம் ஹிட்லர் ஜெர்மனியால் ஆஸ்திரியாவின் சுதந்திரம் அழிக்கப்படுவதே ஆகும்''.[2] ஆஸ்திரியாவிலும் செக்கோஸ்லோவாக்கியாவிலும் பிற நாடுகளிலும் இன்னும் துடுக்கான ஆக்கிரமிப்புச் செயல்களை எதிர்பார்க்க வேண்டும் என்று 1938ம் ஆண்டுத் தொடக்கத்தில் தன் தஸ்தாவேஜுகளிலும் வேண்டுகோள் அறிக்கைகளிலும் கம்யூனிஸ்டு அகிலம் மீண்டும் கூறியது.

இந்த அபாயத்துக்குப் பிரதியாக, பாசிஸ்டு ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்குத் தங்கள் நாடுகளின் தற்காப்புத் திறனை அதிகப்படுத்தும் பொருட்டு, உழைப்பாளிகளின் எல்லா ஸ்தாபனங்

---

[1] „Rundschau", 1936, N 41, S. 1714.

[2] மை. ஆ. கூ., 495/18/1222/79.

களுடையவும் சமாதானப் பற்றுள்ள எல்லாச் சக்திகளுடையவும் ஒன்றித்த செயல்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கை களைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எடுத்துக் கொண்டன.

செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஹிட்லர் பாசிஸத்திடமிருந்தும் நாட்டுக்கு உள்ளிருந்த அதன் கையாட்களிடமிருந்தும் மக்களைப் பாதுகாக்கும் கொள்கையை மேற்கொண்டு, சமூக-அரசியல் வாழ்க்கையிலும் இராணுவத்திலும் ஜனநாயக அமைப்பு முறையைப் புகுத்தும் பொருட்டும் உழைப்பாளிகளின் இன்றியமையாத நலன்களைப் பூர்த்தி செய்வதற்காகவும் தீவிரமான போராட்டத்தை 1936லேயே தொடங்கியது. செக்கோஸ்லோவாக்கியாவின் தற்காப்புத் திறனை அதிகப்படுத்துவதற்கும் சோவியத் யூனியனுடன் அதன் நட்பை வலுவாக்குவதற்கும் தேவையான திட்டவட்டமான நடவடிக்கைகளைத் தொழிலாளர் கட்சிகளுக்கும் ஜனநாயகக் கட்சிகளுக்கும் அரசாங்கத்துக்கும் அது பிரேரித்தது.

1938ம் ஆண்டு வசந்தத்தில் ஆஸ்திரியா ஹிட்லர் குழுவினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் செக்கோஸ்லோவாக்கியா ஜெர்மனியின் அரை முற்றுகைக்கு உள்ளாயிற்று. நாட்டின் மிகப் பிற்போக்கான பூர்ஷ்வா வட்டாரத்தினர் ஹிட்லருடன் சமரசம் செய்து கொள்ள விரும்பினார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுச் செயலகம், 1938, மே 25ந் தேதி செக்கோஸ்லோவாக்கியப் பிரச்சினை குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. குடியரசின் சுதந்திரத்தைக் காக்கும் கூட்டணி அமைப்பது என்ற செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கை இந்தத் தீர்மானம் முழுமையாக ஆதரித்தது. செக், ஸ்லோவாக்கிய மக்களின் விரிவான திரள்களை மட்டுமின்றி, செக்கோஸ்லோவாக்கியாவில் வாழ்ந்துவந்த ஜெர்மானியர், ஹங்கேரியர், உக்ரேனியர், போலிஷ் மக்கள் ஆகியோரையும் கூட்டணியில் சேர்த்துக் கொள்ளும்படி செயற்குழுச் செயலகம் யோசனை கூறியது. ''கட்சியின் முயற்சிகள் தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் நகரக் குட்டி பூர்ஷ்வாக்களையும் அறிவுஜீவிகளையும் மட்டுமின்றி பூர்ஷ்வா வர்க்கத்தின் சில வட்டாரங்களையும் ஒன்றுதிரட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த பூர்ஷ்வா வட்டாரங்களின் நலன்கள் குடியரசின் சுதந்திரம் பறிக்கப்பட்டால் அபாயத்துக்கு உள்ளாகக் கூடும், எனவே இவை நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க விரும்பும்'' என்று செயலகத்தின் தீர்மானத்தில் கூறப்பட்

டது.[1] நாட்டுப் பற்று உள்ள பூர்ஷ்வா வர்க்கப் பகுதி உள்படப் பல்வேறு சமுதாய வட்டாரங்கள் பங்கு கொள்ளும் கூட்டணியைக் குடியரசின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு அமைப்பது என்ற கோஷம், ஹிட்லரின் பாசிஸத்துக்கு எதிராக தேசியக் கூட்டணி அமைக்கும் கொள்கைக்குச் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி வந்து விட்டதைக் குறித்தது. பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தின் வருங்கால அடிக்கல் இவ்வாறு நாட்டப்பட்டது.

பெல்ஜியம், ஹாலந்து, ஸ்காண்டினேவிய நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஹிட்லரது தாக்குதலின் அபாயத்தை மக்களுக்குக் காட்டி, ஆக்கிரமிப்பை எதிர்த்து முறியடிக்க வகை செய்ய வல்ல பிற்போக்கு விரோதச் சக்திகள் யாவும் சேர்ந்த கூட்டணியை அமைக்க முயன்றன. ஐரோப்பிய, அல்லது உலக யுத்தம் மூண்டால் இந்த நாடுகள் மீது யுத்தம் இரக்கம் காட்டாது என்றும், பாசிஸ ஆக்கிரமிப்பின் வழியை இப்போதே அடைக்க வேண்டும் என்றும் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் உழைப்பாளி மக்களுக்கு விளக்கின. 1938ல் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு, பெல்ஜியம், ஹாலந்து ஸ்காண்டினேவிய நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் அவற்றின் பணிகள் பற்றிப் பல முறை ஆலோசனை நடத்தியது. பாசிஸத்துக்கும் ஹிட்லர் ஜெர்மனியின் படையெடுப்பு நடக்கும் அபாயத்துக்கும் எதிராக வெகுஜனங்களை அணிதிரட்டுவதற்கு முடிந்த எல்லா முயற்சிகளையும் செய்யும்படி அது அவற்றுக்கு யோசனை கூறியது. இதன் பொருட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தற்காப்புபற்றி ஆக்கபூர்வமான செயல்திட்டத்தைப் பிரேரிக்க வேண்டும் என்றும் அரசு இயந்திரத்திலும் இராணுவத்திலுமிருந்து பாசிஸ்டுகளை அகற்றும்படி அதே சமயம் கோர வேண்டும் என்றும் செயற்குழு கூறியது. ஸ்காண்டினேவிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் கடைப்பிடித்து வந்த நடுநிலைமைக் கொள்கையைக் கம்யூனிஸ்டுகள் கண்டனம் செய்தார்கள். ஏனெனில் நடப்பில் ஹிட்லர் அரசாங்கத்தின் கோரிக்கைகளுக்கும் இந்த நாடுகளுக்குள் அதனுடன் தொடர்பு கொண்டிருந்த பிற்போக்கு வட்டாரங்களின் கோரிக்கைகளுக்கும் பணிவதற்கே இந்தக் கொள்கை இட்டுச் சென்றது.

---

[1] மை. ஆ. கூ., *495/18/1245/14.*

ஹிட்லரின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை எதிர்த்துப் போராடுவது பால்கன் மக்களதும் உடனடியான முக்கியப் பணியாக இருந்தது. ஹிட்லர் ஜெர்மனி பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் இந்தப் பிரதேசத்தில் நுழைவதை எதிர்த்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோஷத்தை பால்கன் நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கம்யூனிஸ்டு அகிலத்துடன் சேர்ந்து முன்வைத்தன.

சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் சமாதானப் போராட்டத்தின் மிக ஒத்திசைந்த சக்தியாகச் செயல்பட்டது. பாசிஸ்டு வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் அவை மூட்டிவிட்ட வட்டாரப் போர்களையும் உலக யுத்தத்துக்கு நேரே இட்டுச் செல்லும் அடி வைப்புக்கள் என்று கம்யூனிஸ்டு அகிலம் சரியாக மதிப்பிட்டது. இந்த அபாயத்துக்கு எதிராக மிக மிக விரிவான வெகுஜனங்களை ஒன்று திரட்ட அது முயன்றது.

போராடும் ஸ்பானிய, சீன மக்களுடன் போராட்ட ஒருமைப்பாட்டுக்கு ஆதரவு

ஸ்பானியக் குடியரசுடன் ஒருமைப்பாட்டின் பொருட்டும் இத்தாலிய-ஜெர்மன் தலையீட்டுக்கு எதிராகவும் சர்வதேச பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தை ஒழுங்கமைத்து நடத்துவதற்குக் கம்யூனிஸ்டு அகிலம் செய்த முயற்சி கம்யூனிஸ்டு இயக்கத்தினது வரலாற்றின் ஒளிமிக்க ஏடாக, யுத்த சக்திகளுக்கு எதிரான அதன் நடவடிக்கைகளது சிறந்த பகுதியாக விளங்கியது. ஸ்பானியக் குடியரசைக் காக்கும் பொருட்டுத் தொழிலாளி வர்க்கமும் உலகின் எல்லா பாசிஸ எதிர்ப்பாளர்களும் ஒன்றித்துச் செயல்படுவதற்கு ஏற்ற விரிவான செயல் திட்டத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகமும் தலைமைக் குழுவும் 1936, செப்டெம்பர் மாதத்தில் முன்வைத்தன. ஸ்பானிய மக்களுக்குப் பின்வரும் திசைகளில் உதவுவதற்கு விரிவான இயக்கம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது: ஜெர்மனி, இத்தாலி, போர்த்துகல் ஆகியவற்றின் பாசிஸ்டு அரசாங்கங்கள் நடுநிலைமையை மீறின என்பதை அம்பலப்படுத்துவது; கலகக்காரர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட அனுமதிக்கக் கூடாது என்று போராட்டம் நடத்து

வது; ஸ்பானிய மக்களின் பாதுகாப்புக்காகக் கிளர்ச்சி இயக்கம் நடத்துவது; ஸ்பானியக் குடியரசுக்குப் பண்டங்கள் அனுப்பப்படுவதற்கு சுதந்திரத்தைக் கோருவது, "படைப் பயிற்சி பெற்ற சுயவிருப்பத் தொண்டர்களைப் பல்வேறு நாடுகளின் தொழிலாளர்களுக்கிடையே திரட்டி, அவர்களை ஸ்பெயினுக்கு அனுப்புவது".[1]

ஸ்பானியக் குடியரசுக்குக் கூட்டாக நடைமுறை உதவி அளிக்கும் பிரச்சினை பற்றி ஆலோசிக்கும் பொருட்டுத் தொழிலாளர் ஸ்தாபனங்களின் சர்வதேச மகாநாடு கூட்டுவதற்கு சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் இசைவைப் பெற முயல்வது இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு எண்ணியது. கலகக்காரர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தும்படியும் ஸ்பெயினின் சட்டபூர்வமான அரசாங்கத்துக்கு இன்றியமையாத தற்காப்புச் சாதனங்கள் கிடைக்க வகை செய்யும்படியும் அனேக நாடுகளின் அரசாங்கங்களையும் சர்வதேச சங்கத்தையும் உழைப்பாளிகள் வற்புறுத்தி இணங்கச் செய்யும் பொருட்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அது யோசனை கூறியது. ஸ்பானிய மக்களுக்கு நடைமுறையில் மானசிக ஆதரவும் பொருளுதவியும் அளிக்கும்படித் தொழிலாளர் ஸ்தாபனங்களையும் எல்லா ஜனநாயகவாதிகளையும் கம்யூனிஸ்டு அகிலம் கேட்டுக் கொண்டது.

கம்யூனிஸ்டுகளின் அழைப்பை ஏற்று, சுயவிருப்பத் தொண்டர்களின் பெருக்கு ஸ்பெயினை நோக்கிப் பாய்ந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருந்த ஸ்பானியத் தூதரகத்துக்கு, குடியரசுப் படையில் சுயவிருப்பத் தொண்டர்களாகப் பணியாற்ற அனுமதிக்கும்படி சுமார் மூன்று லட்சம் பெயர் 1936ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் விண்ணப்பித்துக்கொண்டார்கள்.[2] ஸ்பானியக் குடியரசின்பால் மக்களுக்கு இருந்த பரிவை இந்த நிகழ்ச்சி தெளிவாகப் புலப்படுத்துகிறது. ஆனால் அமெரிக்க அரசாங்கம் பெரும்பாலான தொண்டர்களை ஸ்பெயின் செல்ல அனுமதிக்கவில்லை.

பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, போலந்து, ஹங்கேரி, பல்கேரியா, பெல்ஜியம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், லத்தீன் அமெரிக்கா, பிற நாடுகள் ஆகியவற்றிலிருந்து ஸ்பெயினுக்கு வந்த பாசிஸ எதிர்ப்புத் தொண்டர்களைக் கொண்டு சர்வதேசப் படைப்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1135/2.

[2] "கம்யூனிஸ்டு அகிலம்", 1936, இதழ் 16, பக்கம் 84.

பிரிவுகள் அமைக்கப்பட்டன. இவற்றை அமைப்பதிலும் போர் நடவடிக்கைகளைத் தலைமை ஏற்று நடத்துவதிலும் கம்யூனிஸ்டுகள் முக்கியப் பங்கு ஆற்றினார்கள். தளியாத்தி, லோங்கோ, தி விட்டோரியோ, கொதொவீலியா, மாத்தே ஸால்கா, பைம்ளேர், ஸ்வெர்ச்சேவ்ஸ்கி முதலியோர் போன்ற பிரபலத் தலைவர்கள் இவர்களில் இருந்தார்கள். ஆனால் சர்வதேசப் படைப்பிரிவுகளில் எல்லா வித அரசியல் போக்குக்களையும் சேர்ந்த பாசிஸ எதிர்ப்பாளர்கள் இருந்தனர். சோஷலிஸ்டுகளும் கட்சிச்சார்பு அற்றவர்களும் அவர்களில் மிகப் பலர். சர்வதேசப் படைப்பிரிவுகள் ''ஸ்பெயினின் ஒன்றித்த மக்கள் சேனையின் உள்ளுறுப்புக்களாக விளங்குகின்றன. அவை ஸ்பானியக் குடியரசின் அரசாங்கத்துக்கும் இராணுவத் தலைமைக்கும் முற்றிலும் அடிப்பட்டவை''[1] என்று 1936, டிசம்பர் 28ந் தேதி செய்த தீர்மானத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு அழுத்திக் கூறியது. மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் குறிக்கோள்களிலிருந்து வேறுபட்ட சொந்தக் குறிக்கோள்கள் எவையும் அவற்றுக்குக் கிடையா என்று தீர்மானம் வலியுறுத்தியது. 54 நாடுகளைச் சேர்ந்த 35 ஆயிரம் சுயவிருப்பத் தொண்டர்கள் சர்வதேசப் படைப்பிரிவுகளில் போராடினார்கள். தலையீட்டாளர்களின் மூன்று லட்சம் இத்தாலிய-ஜெர்மானியப் படையினருக்கு அவர்கள் இராணுவ நோக்கில் ஒப்பானவர்கள் அல்ல தான். ஆனால் போராடும் ஸ்பானிய மக்களுடன் உலகின் உழைப்பாளி மக்கள் அனைவரதும் ஒருமைப்பாட்டு உணர்வின் பருவடிவாகத் திகழ்ந்தார்கள் அவர்கள். ஸ்பெயினின் போர்க் களங்களில் உண்மையாக உருவாயிற்று சர்வதேச பாசிஸ எதிர்ப்புக் கூட்டணி. போர்க்கலையும் அரசியலும் கற்பிக்கும் உண்மையான பயிற்சிப் பள்ளி அங்கே இருந்தது. பல கட்சிகளும் அரசியல் தலைவர்களும் அரசுத் தலைவர்களும் இந்தப் பள்ளியில் பயின்று தேறினார்கள்.

ஸ்பானிய உழைப்பாளிகளின் போராட்டத்தை சர்வதேச பாசிஸத்துக்குஎதிரான பொதுப்போராட்டத்தின் அங்கமாக மதித்த சோவியத் யூனியன் அவர்கள் தரப்பில் தீவிரமாகச் செயல் ஆற்றியது. சோவியத் யூனியன் ஸ்பானியக் குடியரசுக்குக் கணிசமாக உதவி அளித்தது. இந்த உதவி ஒருமைப்பாட்டுக்கான வெகுஜன இயக்கத்தின் வடிவிலும் ஸ்பானியக் குடியரசுக்கு நிதி திரட்டுவதன்

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1937, இதழ் 1, பக்க 62.

வடிவிலும் வெளிப்பட்டது. சோவியத் யூனியன் உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும் ஆயுத சாதனங்களும் நிறைந்த பல பத்து கப்பல்களைக் குடியரசுவாதிகளுக்கு அனுப்பியது. டாங்கிகளும் விமானங்களும் பீரங்கிகளும் ஸ்பெயினுக்கு சோவியத் யூனியனிடமிருந்து கிடைத்தன. சோவியத் இராணுவ நிபுணர்கள் ஸ்பானியப் போர்முனைகளில் போரிட்டார்கள். விமானிகள், டாங்கிப் படையினர், பீரங்கிப் படையினர், கடற்படையினர், பொறி யாளர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள் ஆகியோர் இவர்களில் இருந்தார்கள். அவர்கள் எண்ணிக்கையில் அவ்வளவு அதிகமாய் இல்லாவிட்டாலும் படைவீரர்கள் என்ற முறையிலும் ஸ்பானியக் குடியரசு இராணுவத் தலைமையகத் துணைவர்கள் என்ற வகையிலும் பெருந் தொண்டு ஆற்றினார்கள்.

த. இபரூரி எழுதினார்: ''பாசிஸ்டுக் கலகத்துக்கும் பாசிஸத்துடனும் சர்வதேசப் பிற்போக்குடனும் சேர்ந்துகொண்ட சக்திகளுக்கும் எதிராக ஸ்பானிய மக்கள் நடத்திய போராட்டத்தின் போது, ஸ்பானிய மக்களுடன் சோவியத் யூனியனின் மக்களது ஒருமைப்பாடும், குடியரசு அரசாங்கத்துக்கும் ஸ்பானியப் படையினருக்கும் அவர்கள் அளித்த பயனுள்ள உதவியும் அசாதாரண முக்கியத்துவம் உள்ள பங்கு ஆற்றின. ஸ்பானிய உழைப்பாளிகள் தங்கள் விடுதலைப் போராட்டத்தின்போது பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது என்ன என்று சொந்த அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்து கொண்டார்கள். சோவியத் யூனியன் நிலவுவது தொழிலாளி வர்க்கத்தினதும் எல்லா மக்கள் இனங்களுடையவும் விடுதலைப் போராட்டத்துக்கு எத்தகைய முக்கியத்துவம் உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்''.[1]

கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சியின் விளைவாகப் பல நாடுகளைச் சேர்ந்த பாசிஸ எதிர்ப்பாளர்கள் ஸ்பானியக் குடியரசிற்கு உதவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள். ஸ்பெயினுக்கு உதவியை ஒருங்கிணைப்பதற்கான சர்வதேசக் கமிட்டி அமைக்கப்பட்டது. ஸ்பானிய மாதருக்கும் குழந்தைகளுக்கும் உதவும் பொருட்டு சர்வதேச மகாநாடுகள் கூட்டப்பட்டன. எல்லா நாடுகளிலும் நிதிகள் திரட்டப்பட்டன. கணிசமான தொகை சேகரிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் உலகம் முழு

---

[1] அக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவம். மாஸ்கோ, 1957, பக்கம் 10.

பிரிவுகள் அமைக்கப்பட்டன. இவற்றை அமைப்பதிலும் போர் நடவடிக்கைகளைத் தலைமை ஏற்று நடத்துவதிலும் கம்யூனிஸ்டுகள் முக்கியப் பங்கு ஆற்றினார்கள். தளியாத்தி, லோங்கோ, தி விட்டோரியோ, கொதொவீலியா, மாத்தே ஸால்கா, பைம்ளேர், ஸ்வெர்ச்சேவ்ஸ்கி முதலியோர் போன்ற பிரபலத் தலைவர்கள் இவர்களில் இருந்தார்கள். ஆனால் சர்வதேசப் படைப்பிரிவுகளில் எல்லா வித அரசியல் போக்குக்களையும் சேர்ந்த பாசிஸ எதிர்ப்பாளர்கள் இருந்தனர். சோஷலிஸ்டுகளும் கட்சிச்சார்பு அற்றவர்களும் அவர்களில் மிகப் பலர். சர்வதேசப் படைப்பிரிவுகள் "ஸ்பெயினின் ஒன்றித்த மக்கள் சேனையின் உள்ளுறுப்புக்களாக விளங்குகின்றன. அவை ஸ்பானியக் குடியரசின் அரசாங்கத்துக்கும் இராணுவத் தலைமைக்கும் முற்றிலும் அடிப்பட்டவை"[1] என்று 1936, டிசம்பர் 28ந் தேதி செய்த தீர்மானத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு அழுத்திக் கூறியது. மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் குறிக்கோள்களிலிருந்து வேறுபட்ட சொந்தக் குறிக்கோள்கள் எவையும் அவற்றுக்குக் கிடையா என்று தீர்மானம் வலியுறுத்தியது. 54 நாடுகளைச் சேர்ந்த 35 ஆயிரம் சுயவிருப்பத் தொண்டர்கள் சர்வதேசப் படைப்பிரிவுகளில் போராடினார்கள். தலையீட்டாளர்களின் மூன்று லட்சம் இத்தாலிய-ஜெர்மானியப் படையினருக்கு அவர்கள் இராணுவ நோக்கில் ஒப்பானவர்கள் அல்ல தான். ஆனால் போராடும் ஸ்பானிய மக்களுடன் உலகின் உழைப்பாளி மக்கள் அனைவரதும் ஒருமைப்பாட்டு உணர்வின் பருவடிவாகத் திகழ்ந்தார்கள் அவர்கள். ஸ்பெயினின் போர்க் களங்களில் உண்மையாக உருவாயிற்று சர்வதேச பாசிஸ எதிர்ப்புக் கூட்டணி. போர்க்கலையும் அரசியலும் கற்பிக்கும் உண்மையான பயிற்சிப் பள்ளி அங்கே இருந்தது. பல கட்சிகளும் அரசியல் தலைவர்களும் அரசுத் தலைவர்களும் இந்தப் பள்ளியில் பயின்று தேறினார்கள்.

ஸ்பானிய உழைப்பாளிகளின் போராட்டத்தை சர்வதேச பாசிஸத்துக்கு எதிரான பொதுப்போராட்டத்தின் அங்கமாக மதித்த சோவியத் யூனியன் அவர்கள் தரப்பில் தீவிரமாகச் செயல் ஆற்றியது. சோவியத் யூனியன் ஸ்பானியக் குடியரசுக்குக் கணிசமாக உதவி அளித்தது. இந்த உதவி ஒருமைப்பாட்டுக்கான வெகுஜன இயக்கத்தின் வடிவிலும் ஸ்பானியக் குடியரசுக்கு நிதி திரட்டுவதன்

---

[1] "கம்யூனிஸ்டு அகிலம்", 1937, இதழ் 1, பக்க 62.

வடிவிலும் வெளிப்பட்டது. சோவியத் யூனியன் உணவுப் பொருள் களும் மருந்து வகைகளும் ஆயுத சாதனங்களும் நிறைந்த பல பத்து கப்பல்களைக் குடியரசுவாதிகளுக்கு அனுப்பியது. டாங்கி களும் விமானங்களும் பீரங்கிகளும் ஸ்பெயினுக்கு சோவியத் யூனி யனிடமிருந்து கிடைத்தன. சோவியத் இராணுவ நிபுணர்கள் ஸ்பானியப் போர்முனைகளில் போரிட்டார்கள். விமானிகள், டாங்கிப் படையினர், பீரங்கிப் படையினர், கடற்படையினர், பொறியாளர்கள், தொழில்நுட்ப ஊழியர்கள் ஆகியோர் இவர்களில் இருந்தார்கள். அவர்கள் எண்ணிக்கையில் அவ்வளவு அதிகமாய் இல்லாவிட்டாலும் படைவீரர்கள் என்ற முறையிலும் ஸ்பானியக் குடியரசு இராணுவத் தலைமையகத் துணைவர்கள் என்ற வகையிலும் பெருந் தொண்டு ஆற்றினார்கள்.

த. இபரூரி எழுதினார்: ''பாசிஸ்டுக் கலகத்துக்கும் பாசிஸத் துடனும் சர்வதேசப் பிற்போக்குடனும் சேர்ந்துகொண்ட சக்தி களுக்கும் எதிராக ஸ்பானிய மக்கள் நடத்திய போராட்டத்தின் போது, ஸ்பானிய மக்களுடன் சோவியத் யூனியனின் மக்களது ஒருமைப்பாடும், குடியரசு அரசாங்கத்துக்கும் ஸ்பானியப் படை யினருக்கும் அவர்கள் அளித்த பயனுள்ள உதவியும் அசாதாரண முக்கியத்துவம் உள்ள பங்கு ஆற்றின. ஸ்பானிய உழைப்பாளிகள் தங்கள் விடுதலைப் போராட்டத்தின்போது பாட்டாளி வர்க்க சர் வதேசியம் என்பது என்ன என்று சொந்த அனுபவத்தின் வாயி லாகத் தெரிந்து கொண்டார்கள். சோவியத் யூனியன் நிலவுவது தொழிலாளி வர்க்கத்தினதும் எல்லா மக்கள் இனங்களுடையவும் விடுதலைப் போராட்டத்துக்கு எத்தகைய முக்கியத்துவம் உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்''.[1]

கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சியின் விளைவாகப் பல நாடுகளைச் சேர்ந்த பாசிஸ எதிர்ப்பாளர்கள் ஸ்பானியக் குடியரசிற்கு உதவு வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள். ஸ்பெயினுக்கு உதவியை ஒருங்கிணைப்பதற்கான சர்வதேசக் கமிட்டி அமைக்கப்பட்டது. ஸ்பானிய மாதருக்கும் குழந்தை களுக்கும் உதவும் பொருட்டு சர்வதேச மகாநாடுகள் கூட்டப்பட் டன. எல்லா நாடுகளிலும் நிதிகள் திரட்டப்பட்டன. கணிசமான தொகை சேகரிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் உலகம் முழு

---

[1] அக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவம். மாஸ்கோ, 1957, பக்கம் 10.

வதிலும் பேராற்றல் கொண்ட அரசியல் கிளர்ச்சி இயக்கம் நடத்தின. பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. நாடாளுமன்றங்களிலும் நகராட்சி மன்றங்களிலும் உரைகள் நிகழ்த்தப்பட்டன. தொழிலாளர் நாளிதழ்களில் கட்டுரைகள் வெளியாயின. குடியரசுவாத ஸ்பெயினைக் காப்பதற்கான ஒன்றித்த கமிட்டிகளும் கண்காணிப்புக் கமிட்டிகளும் பல நாடுகளில் அமைக்கப்பட்டன. கண்காணிப்புக் கமிட்டிகள் கலகக்காரர்களுக்கும் தலையீட்டாளர்களுக்கும் போர்த் தளவாடங்கள் அனுப்பப்படாதவாறு விழிப்புடன் கண்காணித்தன. சமாதான நண்பர்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்றும் பாசிஸ்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கூட்டாகப் போராட வேண்டும் என்றும் கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி நேர்மையுள்ள ஜனநாயகவாதிகள் அனைவரும் ஆவேசத்துடன் அறைகூவல்கள் விடுத்தார்கள். ''ஸ்பானிய மக்களின் தோல்வி உலக சமாதானத்துக்கு அபாயத்தை அதிகமாக்கும். அவர்களுடைய வெற்றியோ, புதிய உலக யுத்தத்துக்கு ஏற்பாடு செய்பவர்களுடையவும் அதை மூட்டிவிட முயல்பவர்களுடையவும் சூழ்ச்சிகளைத் தாக்கும். பாசிஸத்தை முறியடிப்பதற்கு ஸ்பானிய மக்களுக்கு உதவ வேண்டும்....''[1] என்று சர்வதேச எழுத்தாளர் மகாநாடு பாசிஸ அநாகரிகத்துக்கு எதிராக ஸ்பானியப் பண்பாட்டைக் காக்கும் பொருட்டுப் பிரகடனம் செய்தது. இதுவே முற்போக்கு எழுத்தாளர்களின் கோஷமாக இருந்தது.

ஸ்பெயினுடன் ஒருமைப்பாட்டைக் காட்டும் நடவடிக்கைகளை ஒன்றுசேர்ந்து மேற்கொள்வதற்கான நடைமுறைச் செயல்களைப் பல நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சோஷலிஸ்டுகளுக்குப் பிரேரித்தன.

ஸ்பெயினில் கலகம் தொடங்கியதற்கு மூன்று மாதங்களுக்குப் பின், 1936, அக்டோபர் 14ந் தேதி, கஷேனும் தோரேஸும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் ஆணைப்படி சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் தலைவர்களைச் சந்தித்து, ஸ்பானிய மக்களுக்கு உடனடியாக உதவி அளிக்க ஒன்றித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று யோசனை கூறினார்கள். கம்யூனிஸ்டு அகிலம், இதே யோசனையை சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்துக்கும் ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலத்துக்கும்

---

[1] ''பிராவ்தா'', 1936, அக்டோபர் 9.

1936, அக்டோபர் 25, நவம்பர் 7, டிசம்பர் 28 தேதிகளில் மீண்டும் கூறியது.[1]

ஆனால் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் தலைவர்கள் ஸ்பானியக் குடியரசைக் காப்பதற்குக் கூட்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். ஸ்பானியக் குடியரசுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த சூழடைப்பை நீக்கச் செய்வதற்கு அவர்கள் உண்மையில் ஒன்றுமே செய்யவில்லை. சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம், ஆம்ஸ்டர்டாம் அகிலம் ஆகியவற்றின் மகாநாடு 1937, மார்ச்சு மாதம் லண்டனில் நடந்தபோது அவர்கள் ''உலகப் பொதுஜன அபிப்பிராயத்தைத் தட்டி எழுப்புவதாக''[2] வாக்களித்ததுடன் நின்றுகொண்டார்கள். ஸ்பானிய சோஷலிஸ்டுகளுக்குத் தேவையாய் இருந்தவையோ ஆயுதங்கள். ஸ்பானிய சோஷலிஸ்டுக் கட்சி, மகாநாட்டுத் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு அடையாளமாக அதிலிருந்து வெளிநடப்பு செய்தது.

ஒரு புறம் ஸ்பெயினுக்கு உதவ சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் கொண்டிருந்த உறுதியையும் மறு புறம் ஜெர்மானியத் தலையீடு மேற்கொண்டு அதிகரித்ததையும் (ஹிட்லரின் போர்க்கப்பல்களால் அல்மேரி தாக்கப்பட்டது) கருத்தில் கொண்டு, ஸ்பானியக் குடியரசைக் காப்பதற்காகக் கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் சேர்ந்து செயல் புரியலாம் என்ற யோசனையைக் கம்யூனிஸ்டு அகிலம் 1937ம் ஆண்டுக் கோடையில் பின்னும் ஒரு முறை வெளியிட்டது. உலகப் பொதுஜன அபிப்பிராயத்தின் வற்புறுத்தல் காரணமாக சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலத்தின் தலைவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் பிரதிநிதிகளைச் சந்திக்க இசைந்தார்கள். 1937, ஜூன், ஜூலை மாதங்களில் பிரான்சில் நடந்த இந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக அனேகக் கூட்டு நடவடிக்கைகள் பற்றி உடன்பாடு ஏற்பட்டது.[3] ஆனால் இந்த உடன்பாடு சீர்திருத்தவாதத் தலைவர்களைப் பொறுத்தவரை வெறும் காகிதமாகவே இருந்துவிட்டது. உடைகள், உணவுப் பண்டங்கள், மருந்துவகைகள் ஆகியவற்றுடன் அவர்கள் தங்கள் உதவியை நிறுத்திக் கொண்டார்கள். ஸ்பானியக் குடியரசுடன் ஒருமைப்பாடு கடைப்பிடிப்பதாகச் சொல்லளவில் உறுதி கூறிய

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1937, இதழ் 1, பக்கம் 62.

[2] "Bulletin des Internationalen Gewerkschaftsbundes", 1937, N 11, S 4.

[3] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1937, இதழ் 8, பக்கம் 87.

இந்தத் தலைவர்கள், அனேக நாடுகளின் அரசாங்கங்களில் உயர் பதவிகள் வகித்துவந்த போதிலும் குடியரசின் நலன்களைப் பாது காக்க மறுத்து விட்டார்கள். புளூம் அரசாங்கம் ''தலையிடாமைக் கொள்கையைக்'' கடைப்பிடித்தது. உண்மையிலோ, அது ஸ்பா னியக் குடியரசைச் சூழடைப்பு செய்தது, அதன் எல்லையை மூடி விட்டது. இதனால் குடியரசு சங்கட நிலைமைக்கு உள்ளாயிற்று. பெல்ஜிய அரசாங்கத் தலைவரும் சோஷலிஸ்டுமான ஸ்பாக் சர்வ தேசப் படைப்பிரிவுகளின் சுயவிருப்பத் தொண்டர்கள் தொல் லைப்படுத்தப்படுவதற்கு ஊக்கம் அளித்தார். சோஷலிஸ்டு அமைச் சர்கள் சர்வதேச சங்கத்தில் பேசுகையில், ஸ்பெயினில் ஆக்கிர மிப்பு நடத்திய பாசிஸ்டுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதை உண்மையில் எதிர்த்தார்கள். ஸ்பானியக் குடியரசுக்கு உதவுவதற்கான நடவடிக்கைகளை ஒற்றுமையாக மேற்கொள் வதை எதிர்த்ததன் வாயிலாக சமூக-ஜனநாயகத் தலைவர்கள் மக்கள் கூட்டணியின் பாசிஸ எதிர்ப்புக் கொள்கைக்குப் பெருந் தீங்கு இழைத்தார்கள்.

கம்யூனிஸ்டு அகிலமும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கமும் மட்டுமே பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட் டத்தில் சோதரப் பாங்குள்ள பரஸ்பர ஒத்துழைப்பு பற்றிய சர்வ தேசியக் கோட்பாடுகளை இறுதிவரை விசுவாசத்துடன் கடைப் பிடித்தன.

சீன மக்களது விடுதலைப் போராட்டத்தின் உதவிக்காக சர்வ தேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தை ஒழுங்கமைப்பதிலும் கம்யூனிஸ்டு அகிலம் பெருத்த வேலை செய்தது. கம்யூனிஸ்டு அகி லத்தின் செயற்குழு இந்தப் பிரச்சினை குறித்துப் பல முறை தீர்மா னங்கள் நிறைவேற்றியது. *1937*, அக்டோபர் *3*ந் தேதி ''ஸ்பானிய மக்களுக்கும் சீன மக்களுக்கும் உதவுவது பற்றிய'' ஆணைக் குறிப் புக்களில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகம் சீன மக்களுக்கு ஆதரவாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவான செயல்திட்டத்தை வகுத்தது.[1] ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகச் சீன மக்கள் நடத்தும் நியாயமான போராட்டத்தில் அவர்களுடன் ஒருமைப்பாடு கடைப்பிடிக்குமாறும் அவர்களுக்கு உதவுமாறும் சீர்திருத்தவாத அகிலங்களுக்கும் எல்லா யுத்த எதிர்ப்பு

---

[1] மை. ஆ. கூ., *495/18/1225/131-142.*

ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள் விடுப்பது என்று செயற்குழுச் செயலகம் 1937, அக்டோபர் 15ந் தேதி தீர்மானித்தது. 1937, டிசம்பர் மாதம் செயற்குழுச் செயலகம் சீன மக்களுக்கு உதவுவதற்கான இயக்கத்தின் போக்கு பற்றி மீண்டும் ஆலோசனை நடத்தியது. சீனவின் நண்பர்கள் கமிட்டியை அமைத்திருந்த அமெரிக்கா, பிரிட்டன், ஹாலந்து, பிற நாடுகள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகளது முன்முயற்சியை அது ஆமோதித்தது. சீன மக்களின் உதவி நிதிக்காகப் பணமும் சாதனங்களும் திரட்டுவதிலும் ஒருமைப்பாட்டு இயக்கத்தை ஒழுங்கமைப்பதிலும் ஜப்பானியச் சரக்குகளைப் பகிஷ்கரிப்பதிலும் இந்தக் கமிட்டி பெரிய பங்கு ஆற்றியது. சீன மக்களின் தேசிய-விடுதலைப் போராட்டத்திற்கு சோவியத் யூனியன் பேருதவி புரிந்தது.

சோவியத் மக்கள் இந்தப் போராட்டத்துக்கு மானசிக ஆதரவு மட்டும் அளிக்கவில்லை. 1937, ஆகஸ்டில் சோவியத் நாடு சீனக் குடியரசுடன் அனுக்கிரமிப்பு உடன்படிக்கை செய்து கொண்டது. ஏகாதிபத்தியவாதிகளுடன் போராட்டத்தில் வெற்றி பெறலாம் என்ற சீன மக்களின் நம்பிக்கையை இதன் மூலம் அது வலுப்படுத்தியது. சீனவில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி நிறுவப்படுவதற்கு இந்த உடன்படிக்கை உதவியது. அதே சமயம், சோவியத் யூனியன் சீன அரசாங்கத்துக்கு ஆயுதங்கள் வாங்கும் பொருட்டுப் பெருந் தொகையைக் கடனாக அளித்தது. சீனவின் பிரமாண்டமான போர் முனைகளில் சோவியத் இராணுவ ஆலோசனையாளர்களும் சோவியத் நாட்டைச் சேர்ந்த சில சுயவிருப்ப விமானப் படைப்பிரிவுகளும் செயலாற்றினர்கள். சீனவில் ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்ப்பதில் கம்யூனிஸ்டு அகிலமும் சோவியத் யூனியனும் பெரும் பங்கு ஆற்றின.

பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் சர்வதேசப் பிரிவுகள் அணிதிரட்டப்படுகின்றன

பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணி அமைப்பதற்கான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலம் தன்னுடன் இணைந்த சர்வதேச ஸ்தாபனங்களின் எல்லாச் சக்திகளையும் அணி திரட்டியது. தொழிற்சங்க அகிலம், கம்யூனிஸ்டு இளைஞர் அகிலம், விளையாட்டு அகிலம், சர்வதேசப்

புரட்சி வீரர் உதவி ஸ்தாபனம் முதலியன இத்தகைய ஸ்தாபனங்கள்.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களை ஒற்றுமைப்படுத்துவதையும், பிற்போக்குக்கும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகவும், தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளின் நிறைவேற்றத்துக்காகவும் தொழிலாளர்களுடைய உரிமைகளை விரிவுபடுத்துவதற்காகவும் போராடுவது என்ற கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் அவற்றை ஒன்று சேர்ப்பதையும் விட முக்கியமான பணி கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசுக்குப் பிறகு தொழிற்சங்கங்களின் சிவப்பு அகிலத்துக்கு இருக்கவில்லை. பிரான்சின் அனுபவம் காட்டியதுபோல, தொழிற்சங்கங்களின் இத்தகைய ஒற்றுமை பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட ஆற்றலை அதிகம் ஆக்கியது. அதனால்தான், தேசிய அளவிலும், சிறப்பாக சர்வதேசிய அளவிலும் தொழிற்சங்க ஒற்றுமைக்கான போராட்டத்தில் முயற்சிகளை ஈடுபடுத்துமாறு கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு தொழிற்சங்க அகிலத்துக்கு யோசனை கூறியது.

1936, ஜூன் மாதம் அனேக நாடுகளின் சிவப்புத் தொழிற்சங்கங்கள் சீர்திருத்தவாத சங்கங்களில் சேர்ந்து விட்டிருந்தன. பிற நாடுகளிலும் நிகழ்முறை இதே திசையில் விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில், சர்வதேச ஒற்றுமைக் கமிட்டி அமைப்பது தொழிற்சங்க அகிலத்தின் கடமை என்றும் இந்தக் கமிட்டி நிலவும் ஒன்றித்த தொழிற்சங்கங்களையும் ஒன்று சேர்ந்த தொழிற்சங்க மையங்களையும் ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் தீர்மானித்தது. ''சர்வதேசத் தொழிற்சங்க இயக்க ஒற்றுமைக் கமிட்டி அமைப்பதில் ஒத்துழைப்பதிலேயே தொழிற்சங்க அகிலத்தின் செயல் ஒருமுனைப்படுத்தப்பட வேண்டும்'' என்று தீர்மானத்தில் கூறப்பட்டது.[1]

சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தில் புரட்சிச் சக்திகளை ஒன்றிணைக்கும் பொருட்டுப் பெரும் தொண்டு ஆற்றிய சிவப்புத் தொழிற்சங்க அகிலம் *1937*ம் ஆண்டில் தன் நடவடிக்கைகளை அனேகமாக நிறுத்திக் கொண்டது. ஏனெனில் அதனுடைய மிகப் பெரும்பாலான பிரிவுகள் வெகுஜன சீர்திருத்தவாத சங்கங்

---

[1] மை. ஆ. கூ., *495/18/1095/66*.

களுடன் இணைந்து விட்டன, அல்லது அவற்றில் சேர்ந்துவிட்டன. தொழிற்சங்க அகிலத்தின் அலுவலகமும் 1937 டிசம்பரில் மூடப்பட்டது.[1] இவ்வாறு கம்யூனிஸ்டு அகிலமும் தொழிற்சங்க அகிலமும் உலகத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்கான வழியை எளிதாக்கும் உளமார்ந்த விருப்பம் காரணமாக ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலத்துக்குப் பெருமளவு விட்டுக்கொடுத்தன.

தொழிற்சங்க அகிலம் தனது நடவடிக்கைகளை நிறுத்திவிட்டதால் அதன் மிகப் பெரிய ஸ்தாபனமாக இருந்த சோவியத் தொழிற்சங்கங்கள் ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலத்தில் சேர்வது பற்றி ஆலோசித்தன. இந்த அகிலம் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக ஒத்திசைந்த போராட்டம் நடத்த வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை மட்டும் அவை விதித்தன. சீர்திருத்தவாதத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள், ஒற்றுமையில் நாட்டம் கொண்ட வெகுஜனங்களின் வற்புறுத்தல் காரணமாக, போக்கு காட்டத் தொடங்கினார்கள். சோவியத் தொழிற்சங்கங்கள் ஆம்ஸ்டர்டாம் அகிலத்தில் சேர்வது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொருட்டுத் தங்கள் பிரதிநிதிக் குழுவை 1937ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அவர்கள் மாஸ்கோவுக்கு அனுப்பினார்கள். இதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆயினும் சித்ரீன், ஸ்கெவெனேல்ஸ், பிற சீர்திருத்தவாதத் தொழிற்சங்கத் தலைவர்கள் ஆகியோர் இந்த ஒப்பந்தம் செயல்பட விடாமல் குலைத்து, சர்வதேசத் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமைக்கு முட்டுக்கட்டை போட்டார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசிற்குப் பிறகு இளைஞர் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆறுவது காங்கிரஸ் (1935, செப்டெம்பர், அக்டோபர்) ஒரு முக்கியமான முடிவு செய்தது. பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிரான போராட்டத்துக்கு இளைஞர் கம்யூனிஸ்டு சங்கங்களின் தன்மையை மாற்றுவது தேவை என்பது அந்த முடிவு. இவற்றை உழைப்பாளி இளைஞர்களின் வெகுஜன ஸ்தாபனங்களாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது. பற்றுறுதி கொண்ட ''தயாரான கம்யூனிஸ்டுகளை'' மட்டும் இன்றி, கம்யூனிஸத்தின்பால் பரிவு உள்ளவர்களும் அதை மேற்கொள்ள விரும்புபவர்களுமான எல்லோரையும் அவற்றின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. 1936, மார்ச்சு மாதம் நடந்த கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1230/89.

குழுச் செயலகத்தின் கூட்டத்தில் இந்தத் துறையில் இளைஞர் கம்யூனிஸ்டு அகிலத்தின் பணிகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டன: ''இளைஞர்களின் கம்யூனிஸ்டு ஸ்தாபனங்களை உழைப்பாளி இளைஞர்களின் விரிவான வெகுஜன ஸ்தாபனங்களாக, கட்சிச் சார்பற்றவையும் ஆனால் உண்மையில் புரட்சித் தன்மை கொண்டவையுமான ஸ்தாபனங்களாக மாற்ற வேண்டும்''.[1] இளைஞர்களின் பாசிஸ எதிர்ப்பு சங்கங்கள் எல்லாவற்றினதும் ஒன்றித்த கூட்டணி இத்தகைய மையக் கருவைச்சுற்றி விரைவில் உருவாவது சாத்தியமாய் இருந்தது. இளைஞர் கம்யூனிஸ்டு சங்கங்களில் சேர்வதற்கு விரிவாக இடம் அளிக்கும் வகையில் ஸ்தாபன ரீதியான மாற்றங்கள் செய்ததன் மூலம் இந்தப் பொதுக் கருத்து உறுதிப்படுத்தப்பட்டது. பாசிஸ எதிரிகளான உழைப்பாளி இளைஞர்களை ஒற்றுமைப் படுத்துவதற்கு அதிகச் சாதகமான நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்பெயினில் கம்யூனிஸ்டு இளைஞர் சங்கமும் சோஷலிஸ்டு இளைஞர் சங்கமும் ஒன்று சேர்ந்தன. ஒன்றித்த சோஷலிஸ்டு இளைஞர் சங்கம் அங்கே 1936, ஏப்ரலில் உருவாயிற்று. பிற்காலத்தில் இது முக்கியமான பாசிஸ எதிர்ப்புச் சக்தி ஆயிற்று. 1936, ஜூலையில் லாட்வியாவின் கம்யூனிஸ்டு இளைஞர் சங்கமும் சோஷலிஸ்டு இளைஞர் சங்கமும் ஒன்றிணைந்தன. பாசிஸ எதிர்ப்புப் போக்குள்ள இளைஞர் ஸ்தாபனங்களின் செயல் ஒற்றுமை பற்றிய ஒப்பந்தங்கள் பல நாடுகளில் (பிரான்ஸ், பெல்ஜியம், பல்கேரியா ஆகியவற்றிலும் வேறு சில நாடுகளிலும்) கையெழுத்தாயின. பல நாடுகளில் கம்யூனிஸ்டு இளைஞர் சங்கங்கள் தொழிலாளர், பண்ணைக்காரர் ஸ்தாபனங்களுடனும் கத்தோலிக்க இளைஞர் ஸ்தாபனங்களுடனும் தொடர்பும் ஒத்துழைப்பும் ஏற்படுத்திக்கொண்டு, பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக இளைஞர்களின் போராட்டத்தை விரிவாக நடத்துவதற்கு இந்தத் தொடர்புகளைப் பயன்படுத்தின. சர்வதேச அளவில் இளைஞர் கம்யூனிஸ்டு அகிலத்துடன் ஒன்றித்துச் செயல்பட இளைஞர் சோஷலிஸ்டு அகிலத்தின் தலைவர்கள் மறுத்துவிட்டார்கள் என்றாலும் இளைஞர் கம்யூனிஸ்டு அகிலத்தின் புதிய கொள்கை பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக மேலும் மேலும் அதிக அளவில் இளைஞர் திரள்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தியது.

---

[1] மை. ஆ. கூ., *495/18/1079/586.*

விளையாட்டு அகிலம், சர்வதேசப் புரட்சி வீரர் உதவி ஸ்தாபனம், சர்வதேசப் புரட்சிகர நாடக மன்ற ஸ்தாபனம், சோவியத் யூனியன் நண்பர் கழகம் முதலியவற்றின் கவனத்தை பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தில் விரிவான வெகுஜனங்களை ஈடுபடுத்தும் பணிகளின்பால் கம்யூனிஸ்டு அகிலம் ஈர்த்தது. வெகுஜனப் போராட்டத்தை விரிவாக நடத்துவதை எளிதாக்குவது, ஒவ்வொரு நாட்டிலும் இருந்த சிறந்த சக்திகள் அனைத்தையும் பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக அணிதிரட்ட உதவுவது என்ற ஒரே நோக்கத்துடன் இந்த ஸ்தாபனங்கள் மாற்றி அமைக்கப்பட்டன.

உலகப் புரட்சி நிகழ்முறையின் அரண் என்ற முறையில் சோவியத் யூனியனின் பங்கு அதிகரிக்கிறது

கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைக்கு சோவியத் யூனியனின் வடிவில் உறுதியான அரண் கிடைத்திருந்தது. ஏகாதிபத்தியப் பிற்போக்கும் பாசிஸமும் உலக யுத்தத்தை நோக்கி முழு வேகத்துடன் விரைந்து கொண்டிருந்தன. யுத்தத்துக்கும் பாசிஸத்துக்கும் எதிரான போராட்டமோ, அழிவு விளைக்கும் யுத்தம், பாசிஸத்துக்கு அடிமைப்படுவது என்ற இந்தப் பயங்கரமான அபாயத்தைத் தவிர்க்கும் அளவுக்கு இன்னும் வலுப்பெறவில்லை. இத்தகைய நிலைமைகளில் இந்த அரணின் பங்கு சிறப்பாக முக்கியமுள்ளது ஆயிற்று. உலகப் புரட்சி நிகழ்முறையின் விதி சோவியத் யூனியனை எல்லாத் துறைகளிலும் வலுப்படுத்துவதை முன்னைவிட அதிகமாகச் சார்ந்திருந்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் உழைப்பாளிகளும் வரலாற்று முக்கியத்துவம் உள்ள இந்தப் பெரும் பொறுப்பை உணர்ந்தார்கள். சோஷலிஸ சமூகத்தை நிறுவுவதற்கு அவர்கள் முழு மூச்சாக முயன்று பாடுபட்டார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1937ல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு முடிந்தது. தொழில் துறையிலும் விவசாயத்திலும் வர்த்தகத்திலும் சோஷலிஸ உற்பத்தி உறவுகள் முழுமையான ஆதிக்கம் வகிக்கலாயின. தொழில் வளர்ச்சியில் நாடு புதிய பெருத்த முன்னேற்றம் அடைந்தது. புதிதாக நிறுவப்பட்ட தொழில் கிளைகள், சிறப்பாகத் தற்காப்புக்கு முதன்மையான முக்கியத்துவம்

வாய்ந்த கிளைகள் விரைவாக விரிவடைந்தன. சோஷலிச நாட்டின் இராணுவ பொருளாதார விறல், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களால் உலகில் சோஷலிசக் குறிக்கோளை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தும் உத்தரவாதமாக விளங்கியது. லெனினது கட்சியும் சோவியத் மக்களும் சோவியத் யூனியனை சோஷலிசத்தினதும் சமாதானத்தினதும் விறல் மிக்க கோட்டையாக மாற்றியதன் மூலம் தங்கள் சர்வதேசியக் கடமையை நிறைவேற்றினார்கள்.

1936ம் ஆண்டின் முடிவில் அரசியல் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது சோவியத் யூனியனில் சோஷலிசத்தின் வெற்றியைப் பிரதிபலித்தது. சோவியத் உழைப்பாளிகள் முயன்று பெற்றிருந்த நலங்களையும் உரிமைகளையும் சட்ட வடிவில் இது நிலைப்படுத்தியது.

1938ம் ஆண்டு, சோவியத் மக்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார்கள். இதன் நிறைவேற்றம் சோவியத் யூனியனை உலகப் புரட்சி நிகழ்முறையின் அதிக ஆற்றல் வாய்ந்த பொருளாதாரச் சக்தி ஆக்கியது.

சோஷலிசம், சர்வதேசியம், மக்கள் இனங்களின் சோதரத்துவம் ஆகிய கருத்துக்களுக்கு விசுவாசம் கடைப்பிடிக்கும் உணர்வில் கம்யூனிஸ்டுக் கட்சியால் போதித்துப் பயிற்றப்பட்ட மனிதர்களின் புதிய தலைமுறை இந்த சமயத்துக்குள் சோவியத் யூனியனில் வளர்ந்திருந்தது. சோவியத் ஆட்சியால் விளைந்த நன்மைகளையும் உலக விடுதலை இயக்கம் அனைத்தினாலும் போராடிப் பெறப்பட்ட நன்மைகளையும் தன்னலமற்ற வீரத்துடன் காத்துப் போரிட இந்தத் தலைமுறை ஆயத்தமாய் இருந்தது.

சோவியத் யூனியனில் சோஷலிசம் நிலையாக்கப்பட்டது, நாட்டில் தொழில்பெருக்கம் செய்யப்பட்டது, அதன் இராணுவ விறல் அதிகமாக்கப்பட்டது, விவசாயம் கூட்டுப்பண்ணை முறையில் அமைக்கப்பட்டது, சோவியத் யூனியனின் உழைப்பாளிகளது ஒழுக்கநெறி-அரசியல் ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டது—அதாவது, உலகின் முதலாவது சோஷலிச நாடு உள்துறைகளில் வலுப்படுத்தப்பட்டது—இவை எல்லாம் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்திற்கும் உலகு அனைத்தின் புரட்சிச் சக்திகளதும் ஜனநாயகச் சக்திகளதும் வருங்கால வெற்றிக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் பெரும் தொண்டாகத் திகழ்ந்தன.

பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராகப் புரட்சிச் சக்திகளை

யும் ஜனநாயகச் சக்திகளையும் ஒன்றிணைக்கும் மிக முக்கியக் காரணியாக சர்வதேச அரங்கிலும் சோவியத் நாடு செயலாற்றியது. ஐரோப்பாவில் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்தவும் ஆக்கிரமிப்பாளர்களின் வழியில் உள்ள தடைகளில் ஒன்றாக சர்வதேச சங்கத்தை வலுப்படுத்தவும் சோவியத் யூனியன் முயன்றது.

பாசிஸத்துக்கும் போருக்கும் எதிராகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்டத்தில் இடர்ப்பாடுகள்

கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைக்குக் கணிசமான இடர்ப்பாடுகள் எதிர்ப்பட்டன. இரண்டு, மூன்று ஆண்டுகளாக அனேக நாடுகளில் தற்காப்பை மேற்கொள்ளுமாறும் பின்வாங்குமாறும் கட்டாயப்படுத்தப்பட்டிருந்த ஏகாதிபத்தியப் பிற்போக்கும் பாசிஸமும் யுத்தச் சக்திகளும் தொழிலாளர் இயக்கத்தையும் ஜனநாயக இயக்கத்தையும் மீண்டும் வெளிப்படையாக நெருக்கத் தொடங்கிவிட்டன என்பது 1938ம் ஆண்டு முதல் தெளிவாகப் புலப்படலாயிற்று. நெருங்கி வந்துகொண்டிருந்த உலக யுத்தத்தை ஒட்டி அதிக வாய்ப்பான நிலைகளைக் கைப்பற்றும் பொருட்டு இரு முகாம்களுக்கிடையே மிகக் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த உழைப்பாளிகளுக்கு இந்தப் போராட்டத்தில் பல காரணங்களால் பெருத்த இடர்ப்பாடுகள் நேர்ந்தன.

வலதுசாரி சமூக-ஜனநாயகம் பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒத்துழைப்பதைக் கைவிடுவது இயலாது என்று எண்ணியது. ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக் கொள்கையை அது நாளுக்கு நாள் அதிகக் கடுமையாகத் தாக்கியது. இந்த ஒற்றுமை ஏற்பட்டிருந்த இடங்களில் சமூக-ஜனநாயகம் இதைக் குலைத்தது. பிரான்சிலும் இவ்வாறே நேர்ந்தது. பெரும் பூர்ஷ்வா வர்க்கத்தால் செய்விக்கப்பட்ட பொருளாதார அழிவு வேலை, அதன் மூலதனங்கள் பேரளவில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டது, பிற்போக்கின் அரசியல் மிரட்டல் ஆகியவற்றின் தாக்குதல் காரணமாக, மக்கள் கூட்டணியின் வளர்ச்சி வாய்ப்புக்களால் ஏற்கனவே கிலி கொண்டிருந்த தீவிரவாதக் கட்சி தலைவர்களும் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்களும் ஏகபோக முதலாளிகளுக்குச் சரணகதி அடையும் கொள்கையை மேற்கொண்டார்கள். மக்கள் கூட்டணியின் செயல்

திட்டத்தை நிறைவேற்றுவதில் ''இடைக்கால ஓய்வை'' அடுத்து, அதற்குள் குழிபறிக்கும் செயல்கள் தொடங்கின. உள்ளிருந்து பிளவுபடுத்தவும் வெளியிலிருந்து பிற்போக்கு பூர்ஷ்வா வர்க்கத்தால் தாக்கவும் பட்ட பிரான்சின் மக்கள் கூட்டணி 1938ம் ஆண்டு தகர்ந்து சரிந்து விட்டது.

புதிய ஜனநாயகத்தின் பொருட்டுப் போராட சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்கள் எங்கும் மறுத்து விட்டார்கள். அவர்கள் பொருளாதார, சமூக வாழ்க்கையை அரசு வாயிலாகக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் தீட்டி, அவற்றின் உதவியால் உடனடிப் பிரச்சினைகளிலிருந்து விலகி விடலாம் என்றும் சமுதாய அதிர்ச்சிகளிலிருந்து தப்பிவிடலாம் என்றும் மனக்கோட்டை கட்டினார்கள்.

பாசிஸ எதிர்ப்பு, யுத்த எதிர்ப்புச் சக்திகளை ஒன்றுபடுத்துவதற்குப் பெருந்தடையாக இருந்தது சோவியத் யூனியனுக்கு எதிராக ஏகாதிபத்தியவாதிகள் செய்த சர்வதேசச் சதி. இதன் விளைவாக இந்தச் சக்திகளின் செயல்கள் ஓரளவு திண்மை அடைந்தன. பல நாடுகளின் ஏகாதிபத்திய பூர்ஷ்வா வட்டாரங்களில் பாசிஸ ஆதரவு மனப்பான்மையும் சோவியத் யூனியனை அழிப்பது பற்றி ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் விருப்பமும் அந்தக் காலத்தில் மேலோங்கி இருந்தன.

சோவியத் யூனியனின் விறலும் அனேக நாடுகளில் மக்கள் கூட்டணியின் சக்தியும் அதிகரித்ததையும் புரட்சி இயக்கத்தின் ஏற்றத்தையும் கண்டு பூர்ஷ்வா வர்க்கம் அஞ்சியது. ஸ்பெயினில் மக்கள் ஆட்சி வெற்றி பெறும் வாய்ப்பு அதற்குத் திகில் ஊட்டியது. இக்காரணங்களால் பூர்ஷ்வா வர்க்கம் ஹிட்லரை நண்பன் ஆக்கிக் கொண்டது. நெருங்கி வந்து கொண்டிருந்த உலக யுத்தம் காரணமாக ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கம் சோவியத் யூனியனுக்கு எதிராக, உலகப் புரட்சி இயக்கத்துக்கும் ஜனநாயக இயக்கத்துக்கும் எதிராக ஹிட்லர் குழுவினருடன் சேர்ந்திருக்க முயன்றது.

ஏகாதிபத்தியப் பிற்போக்கு, பாசிஸம் ஆகியவற்றின் புதிய தாக்குதல் பல நிகழ்ச்சிகளில் வெளிப்பட்டது: ஸ்பெயினில் இத்தாலிய-ஜெர்மன் தலையீடு அதிகரித்தது, பிரான்சிலும் பிற நாடுகளிலும் உழைப்பாளிகளின் அனேகப் போராட்டங்கள் தோல்வி அடைந்தது, அனேக சிறு நாடுகளின் அரசாங்க அமைப்புக்கள் மேற்கொண்டு பாசிஸமயம் ஆக்கப்பட்டது ஆகியவை இவற்றில் சில. உதாரணமாக, ருமேனியாவில் முடியரசு சர்வாதிகாரம்

1938ல் நிலைநாட்டப் பெற்றது. இது நாட்டை பாசிஸமயம் ஆக்கி அதை பாசிஸ்டு ஜெர்மனியின் துணைக்கோளாக மாற்றும் பாதையில் தீர்மானமான அடிவைப்பாக விளங்கியது.

சோவியத் விரோத ஏகாதிபத்தியச் சூழ்ச்சி மியூனிக் ஒப்பந்தத்தில் தனது உச்ச கட்டத்தை அடைந்தது. ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நான்கு வல்லரசுகளின் அரசாங்கங்களுக்கிடையே 1938, செப்டெம்பர் மாதம் நிறைவேறியது இந்த ஒப்பந்தம். செக்கோஸ்லோவாக்கியாவைத் துண்டுகளாகக் கூறுபோட இது ஜெர்மன் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு வசதி அளித்தது. சோவியத் யூனியனைத் தாக்குமாறு இது பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களைத் தூண்டியது. பத்து ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கூட்டாக விடுத்த செய்தியில் அப்போதே உலக மக்களுக்குப் பின்வருமாறு அறிவித்தன: ''மியூனிக் துரோகம் சமாதானத்தைக் காப்பாற்றவில்லை, அதை அபாயத்துக்கே உள்ளாக்கி இருக்கிறது. ஏனெனில் எல்லா நாடுகளிலும் சமாதான சக்திகளின் ஐக்கியத்திற்கு அது கேடு விளைத்திருக்கிறது. பாசிஸ்டுகளுக்கு அது உற்சாகம் ஊட்டி இருக்கிறது...''[1]

மியூனிக் ஒப்பந்தம் ஸ்பானியக் குடியரசைச் சங்கடமான நிலைமைக்கு உள்ளாக்கியது. ஸ்பானியக் குடியரசை அழிப்பதற்கு முழு சுதந்திரம் மட்டும் இன்றி, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் ஆளும் வட்டாரங்களின் ஆதரவும் இதன் மூலம் ஜெர்மன்-இத்தாலிய பாசிஸ்டுகளுக்குக் கிடைத்து விட்டது.

அனேக நாடுகளின் ஜனநாயக அரசாங்கங்கள் எனப்பட்டவையும் சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித் தலைவர்களும் ஸ்பானியக் குடியரசு மாய்க்கப்படுவதைச் செயலின்றிப் பார்த்துக் கொண்டிருப்பதை மேலாகக் கருதினர்கள்.

மியூனிக் ஒப்பந்தம் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துக்கும் சிறப்பாக யுத்த எதிர்ப்பு இயக்கத்துக்கும் பலத்த அடி கொடுத்தது. மியூனிக் ஒப்பந்தம் பாசிஸ்டு ஆக்கிரமிப்புக்கு வழி திறந்து விட்டதோடு, பாட்டாளி வர்க்கத்துக்கும் ஜனநாயகச் சக்திகளுக்கும் எதிராகப் பிற்போக்குச் சக்திகள் அனைத்தினதும் போராட்டத்தில் அவற்றுக்கு உற்சாகமூட்டியது.

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1938, இதழ் 10, பக்கம் 126.

பாசிஸத்துடன் நிர்ணயகரமான போர் நடக்க இருந்த தருணத்தில், தொழிலாளி வர்க்கத்துக்கும் எல்லா உழைப்பாளி களுக்கும் பாதகமானதும் இடர்ப்பாடு உள்ளதுமான சூழ்நிலை முதலாளித்துவ நாடுகளில் உருவாகி இருந்தது தெளிவாயிற்று.

சோவியத் யூனியனுக்கு எதிரான ஏகாதிபத்தியச் சூழ்ச்சியைக் கலவரம் நிறைந்த அந்தக் காலத்தில் கம்யூனிஸ்டு அகிலம் இடைவிடாது அம்பலப்படுத்தி வந்தது. பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கும் இயக்கத்தை விரிவாக நடத்தும்படி அது கம்யூனிஸ்டுக் கட்சிகளைப் பணித்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகம், 1939 ஜூன் 14ந் தேதி ''செக்கோஸ்லோவாக்கியாவில் புதிய நிலைமையும் கட்சியின் பணிகளும்'' என்ற தலைப்பில் ஆணைக்குறிப்புக்கள் வெளியிட்டது. கைப்பற்றப்பட்ட செக்கோஸ்லோவாக்கியாவில் ஹிட்லர் குழுவினர் திரளான மக்களைக் கொன்று குவிக்கிறார்கள் என்றும், இப்போது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கடமை ''மக்களின் எதிர்ப்பை ஒழுங்கமைப்பதே''[1] என்றும் இந்த ஆணைக்குறிப்புக்களில் கூறப்பட்டது. கம்யூனிஸ்டுகள் எதிர்ப்புக்கு மிகவும் ஏற்ற, நோக்கப் பொருத்தம் உள்ள வடிவங்களைத் தெரிந்தெடுத்து, தேசிய நோக்கத்தின் பொருட்டுப் போராடும் வீரர்களாகச் செயலாற்ற வேண்டும் என்று அவை கூறின. ஆணைக்குறிப்புக்கள் மேலும் கூறியதாவது: ஹிட்லர் பாசிஸத்தை எதிர்க்கும் பணியிலிருந்து ''மக்களது சக்திகளை ஒன்றித்த தேசியக் கூட்டணியாக மிக மிக விரிவான அளவில் ஒன்றிணைக்கும் கொள்கை பெறப்படுகிறது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டிபூர்ஷ்வா வட்டாரத்தினர் ஆகியோர்முதல், ஜெர்மானிய பலாத்காரத்தின் நசுக்கல் காரணமாகத் தங்கள் அடிவருடல் போக்கையும் நாட்டை ஜெர்மனியுடன் இணைக்கும் போக்கையும் கைவிட்டுவிட்டு, மக்களுடன் சேர்ந்து ஜெர்மன் பாசிஸ்டுக் கொடுங்கோலர்களை எதிர்த்து முறியடிக்கும் போக்கை மேற்கொள்ள இணங்கும் பூர்ஷ்வாக்கள் வரை அனைவரும் இந்தக் கூட்டணியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.''[2]

மத்திய ஐரோப்பா, பால்கன், ஸ்காண்டிநேவியா ஆகியவற்றின் அனேக நாடுகளுக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு

---

[1] மை. ஆ. கூ., *495/18/1282/99.*

[2] மை. ஆ. கூ., *495/18/1282/101-102.*

விடுத்த ஆணைக்குறிப்புக்களில் ஹிட்லர் பாசிஸத்தை எதிர்க்கும் பணிகள் விவரிக்கப்பட்டன.

ஏகாதிபத்திய வட்டாரங்களின் சூழ்ச்சி காரணமாக, **1939**ம் ஆண்டின் இறுதியில் சோவியத் யூனியன் பின்வரும் இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாயிற்று: மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் யுத்தம் தொடங்கும் அபாயத்தில் சோவியத் மக்களை ஆழ்த்தியிருந்த அனைத்து உலக ஏகாதிபத்தியக் கூட்டணிக்கு முன் நாட்டைத் தனிப்படுத்துவது, அல்லது அனுக்கிரமிப்பு உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு ஜெர்மன் அரசாங்கம் விடுத்த யோசனைக்கு இணங்குவதன் மூலம் தாற்காலிக இடை ஓய்வு பெறுவது. இந்த உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. சோவியத் யூனியனின் இந்த அயல்நாட்டுக் கொள்கை நடவடிக்கையை எல்லோரும் உடனே புரிந்து கொண்டு விடவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணிகளில்கூட இந்த உடன் படிக்கை முதலில் ஓரளவு விளங்காமையைத் தோற்றுவித்தது. அனேக சந்தர்ப்பங்களில் ஜெர்மன் பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் நிலைமை ஓரளவு சிக்கலாயிற்று. ஆயினும் இந்த உடன்படிக்கை கையொப்பமானதன் விளைவாக ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஒன்றித்த சோவியத் எதிர்ப்புக் கூட்டணி அமைவது தவிர்க்கப்பட்டது, சோவியத் யூனியன் மீது ஹிட்லரின் தாக்குதல் சிறிது காலத்துக்குத் தள்ளிப்போடப்பட்டது, நாட்டை மேற்கொண்டு வலுப்படுத்துவதற்கு இந்த இடை நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள சோவியத் மக்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அதே சமயம் இந்த உடன்படிக்கை கையெழுத்தானது மியூனிக் சதித்திட்டத்துக்கு மரண அடி கொடுத்தது. மிகப் பாதகமான நிகழ்ச்சிப்போக்கு — சோவியத் யூனியனுக்கு எதிராக எல்லா ஏகாதிபத்திய வல்லரசுகளதும் ஒன்று சேர்ந்த யுத்தம் — ஏற்படும் சாத்தியப்பாடு தவிர்க்கப்பட்டது.

கம்யூனிஸ்டு இயக்கத்திலேயே ஒரு சில இடர்ப்பாடுகள் நிலவின. **1936** முதல் **1939** வரை கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழுவும் செயலகமும் நிறைவேற்றிய பல தீர்மானங்களில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணிகளில் திரோத்ஸ்கிவாத அபாயத்தையும் பகைவர்களின் நடவடிக்கைகளையும் பற்றிய சரியான எச்சரிக்கைகளோடு கூடவே, கம்யூனிஸ்டுகள் அல்லாத சில அரசியல் சக்திகள் பற்றிய தவறான மதிப்பீடுகளும் அடங்கி இருந்தன. கம்யூனிஸ்டுக் கட்சிகள் முன்னர் ஒத்துழைத்துவந்த

சில ஸ்தாபனங்கள் பகைமை உள்ளவையாகக் குறிக்கப்பட்டிருந்தன. இதனுல் குறுகிய பிரிவுவாதப் போக்குகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலம் மிக உறுதியாகக் கடைப்பிடித்து வந்த விரிவான பாசிஸ எதிர்ப்பு ஐக்கியங்கள் பற்றிய கொள்கையைக் கைவிடவோ குறுக்கிக் கொள்ளவோ விருப்பத்தை இது தூண்டிவிட்டது. பல நாடுகளில் சமூக-ஜனநாயகத் தலைவர்கள் ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக் கொள்கையை முறிக்கும் பாதையில் நாளுக்கு நாள் அதிக வேகமாக முன்னேறியதால் விவகாரம் இன்னும் சிக்கலாயிற்று. இத்தகைய நிலை காரணமாக சமூக-ஜனநாயகத்தின் கொள்கை பற்றி முன்னிலும் கடுமையாக மதிப்பீடு செய்யாதிருக்கக் கம்யூனிஸ்டு அகிலத்தால் முடியவில்லை.

இந்தக் காலப்பகுதியில் ஸ்தாலினது தனிநபர் வழிபாடு காரணமாகவும் இதைத் தொடர்ந்து சோவியத் யூனியனுக்கு உள்ளேயும் கம்யூனிஸ்டு அகிலத்திலும் ஏற்பட்ட கெடுதலான நிகழ்ச்சிகள் காரணமாகவும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் அனேக இடர்ப்பாடுகள் நேர்ந்தன.

சோஷலிஸத்துக்காகவும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காகவும் நடந்த போராட்டத்தில் ஸ்தாலின் பெருத்த தொண்டுகள் ஆற்றினுர். ஆனுல் ஸ்தாலினது தனிநபர் வழிபாடு காரணமாகக் கூட்டுத் தலைமை பற்றிய லெனினுடைய கோட்பாடுகள் மீறப்பட்டது, சோஷலிஸச் சட்ட முறை மீறப்பட்டது, கட்சிக்கும் மக்களுக்கும் விசுவாசமுள்ள மனிதர்கள் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டது ஆகிய நிகழ்ச்சிகள் சோவியத் சமூகத்துக்குக் கேடு விளைத்தன. சர்வதேச ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளும் முதலாளித்துவச் சூழடைப்பு நிலைமையும் திரோத்ஸ்கிவாதிகளின் புரட்சி எதிர்ப்பு திடீர்த் தாக்குதல்களும் நாட்டில் ஏற்படுத்தியிருந்த கெடுபிடி நிலைமை காரணமாகக் கட்சியை மேலும் அதிகமாக ஒற்றுமைப்படுத்துவது தேவையாய் இருந்தது என்பது கண்கூடு. இத்தகைய நிலைமைகளில் கட்சியையும் நிர்வாகத்தையும் இராணுவத்தையும் சேர்ந்த நேர்மையுள்ள பல ஊழியர்கள் மீது அரசுக்கு எதிரான குற்றங்கள் இழைத்ததாக ஆதாரமின்றிக் குற்றம் சாட்டப்பட்டது.

ஸ்தாலினது தனிநபர் வழிபாட்டின் கெட்ட விளைவுகள் கம்யூனிஸ்டு அகிலத்தையும் அதன் ஊழியர்களையும் அதன் கொள்கையின் அனேக அம்சங்களையும் பாதித்தன. சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் சில பிரபல தலைவர்களும் அனேக நாடுகளின்

கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய தலைவர்களும் திரோத்ஸ்கிவாதிகள் என்றும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்குச் சாதகமாக ஒற்றாடலும் சதியாலோசனைகளும் செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு 1937—1938ல் அடக்குமுறைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

சோஷலிஸ சமூக அமைப்பையும் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் தாக்குவதற்கு இந்த எல்லாக் கெடு நிகழ்ச்சிகளையும் சோஷலிஸத்தின் பகைவர்கள் எல்லா நாடுகளிலும் பயன்படுத்திக் கொண்டார்கள். வலதுசாரி சோஷலிஸ்டுகள் தொழிலாளர் இயக்கத்தில் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளைத் தீவிரம் ஆக்கினார்கள்.

அந்த ஆண்டுகளில் நிலவிய சிக்கலான சூழ்நிலையில் போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி மீது அதன் தலைமை வர்க்கப் பகைவர்களின் கைகளில் இருப்பதாக ஆதாரம் அற்ற குற்றம் சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டை ஆதாரமாகக் கொண்டு போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியைக் கலைத்துவிடுவது என்று கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு 1938, ஆகஸ்டில் தீர்மானம் செய்தது.[1] தொழிலாளர், தேசிய-ஜனநாயக, குட்டி பூர்ஷ்வா ஸ்தாபனங்களில் பிற்போக்காளர்கள் பொய்யான பிளவுகளை ஏற்படுத்தியதாகவும், கம்யூனிஸ்டுக் கட்சிக்கு மாறி வந்துள்ள நபர்களின் வடிவில் தங்கள் கையாட்களை அதற்குள் புகுத்தியதாகவும் தீர்மானம் வலிந்துரைத்தது. பிற்போக்காளர்கள் தங்கள் கை

---

[1] சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, போலந்தின் ஒன்றித்த தொழிலாளர் கட்சி, இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி, பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி, ஃபின்லாந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவற்றின் மத்தியக் கமிட்டிகளுடைய கையொப்பங்களுடன் ஓர் அறிக்கை 1956, பிப்ரவரியில் வெளியிடப்பட்டது. போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி கலைக்கப்பட்டது ஆதாரமற்ற செயல் என்று அதில் விளக்கப்பட்டது. போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் புரட்சிகரமான கடந்த கால கௌரவத்தை இந்த அறிக்கை மீண்டும் நிலைநாட்டியது. உதாரணமாக, அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டது: ''போலந்துக் கம்யூனிஸ்டுகள், கம்யூனிஸ்டுக் கட்சி கலைக்கப்பட்ட பிறகும் போலந்து முதலாளிகளதும் நிலப்பிரபுக்களதும் பாசிஸ்டு சர்வாதிகாரத்துக்கு எதிராகவும் நெருங்கி வந்துகொண்டிருந்த ஹிட்லர் தாக்குதலின் அபாயத்துக்கு எதிராகவும், வெகுஜனத் தொழிலாளர், விவசாயிகள் இயக்கங்களின் நிலவிய ஸ்தாபன வடிவங்கள் அனைத்தையும் பயன்படுத்தித் தொடர்ந்து போராட்டம் நடத்தினார்கள்'' (''பிராவ்தா'', 1956, பிப்ரவரி 21).

யாட்களைப் புகுத்துவதற்கு இந்த வழியை அனேக நாடுகளில் உண்மையாகவே கையாண்டார்கள் என்பது தெரிந்ததே. ஆயினும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பல குழுக்களை உருமறைப்பு செய்து கொண்ட பகைவர்கள் என்று நினைக்கும் போக்கு கம்யூனிஸ்டுக் கொள்கையின் வாய்ப்புக்களைக் குறுக்கியது. போலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியைக் கலைத்த சிறிது காலத்திற்குள் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அதை மீட்டமைப்பதற்கான முதல் நடவடிக்கைக் குழுவையும் பின்னர் தாற்காலிகத் தலைமை மையத்தையும் அமைத்தது. எனினும் கட்சி கலைக்கப்பட்டது இந்த நாட்டில் தொழிலாளர் இயக்கத்துக்குப் பேரிடியாக இருந்தது. இதற்கு முன்பே லாட்வியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை அனேகமாகக் கலைக்கப்பட்டு விட்டது.

எனினும், இந்த ஆண்டுகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் வரலாற்றில் ஏற்பட்ட கெடுதலான நிகழ்ச்சிகள் இந்த ஸ்தாபனத்தின் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் உள்ள தொண்டை மாசுபடுத்த முடியாது. இந்த ஸ்தாபனம், பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக உழைப்பாளி வெகுஜனங்கள் நடத்திய போராட்டத்தின் மையமாக விளங்கியது, அவர்களை இந்தப் போராட்டத்துக்குத் தூண்டி ஊக்கியது. வெகுஜனங்களுக்கு அவர்களுடைய மிகக் கொடிய பகைவனை பாசிஸத்தைத் தாக்கி நொறுக்குவதற்குரிய வழியையும் சமுதாய முன்னேற்றம் அடையும் வழியையும் இது காட்டியது.

* * *

1934 முதல் *1939* வரையுள்ள காலப் பகுதியில் கம்யூனிஸ்டு அகிலத்தின் நடவடிக்கைகள் சிறப்பாக அதன் ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக் கொள்கையின் அனுபவம், அதனுடைய வரலாற்றின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும். இந்தக் காலப்பகுதியில் அதன் கொள்கை ஆற்றல்மிக்க வர்க்கப் போராட்டங்களிலும் சக்தியுள்ள பாசிஸ எதிர்ப்பு இயக்கத்திலும் பருவடிவு பெற்றது.

ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணி பாசிஸத்தை வன்மையாகத் தாக்கி, உலகப் புரட்சி இயக்கத்தின் எல்லாச் சக்திகளும் மேற்கொண்டு வலுவடைவதற்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்கியது.

ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணிக்காகக் கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் நடத்திய போராட்டம், கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசால் வகுக்கப்பட்ட போர்த்தந்திர-செயல்தந்திரக் கொள்கை சரியானது என உறுதிப்படுத்தியதோடு, ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் வழியாக சோஷலிஸத்தை அடைவதற்கான வாய்ப்பை முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த உழைப்பாளிகளுக்கு அளித்ததன்மூலம் இந்தக் கொள்கைக்கு வளம் கூட்டியது. இந்த வாய்ப்பு பற்றிய புரிவு முழு வரலாற்றுக் காலப்பகுதியில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்துக்கு உரம் ஊட்டியது.

1934 முதல் 1939 வரையுள்ள ஆண்டுகளில் ஒன்றித்த தொழிலாளர், மக்கள் கூட்டணியின் பொருட்டு நடந்த போராட்டம் சமூக-அரசியல் அரங்கில் தொழிலாளி வர்க்கத்தினதும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் பாத்திரத்தைப் பெருமளவு உயர்த்தியது. சர்வஜனநாயகக் கோரிக்கைகளுக்காகவும் தங்கள் மக்களின் பொது தேசிய நலன்களுக்காகவுமான போராட்டத்தில் வழிகாட்டி நடத்தும் சக்தியாகத் தொழிலாளி வர்க்கத்தை நிலைப்படுத்தியது. அநேக நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்தக் காலத்தில் தங்கள் நாடுகளின் வாழ்க்கையில் பெருத்த அரசியல் காரணி ஆகிவிட்டன. அவை வெகுஜனங்களின் விரிவான ஆதரவைப் பெற்றன. ஒரு சில விதிவிலக்குகள் தவிர கம்யூனிஸ்டுக் கட்சிகள் உலகம் முழுவதிலும் விரைவாக வலிமை திரட்டிவிட்டன.

லெனினாலும் கம்யூனிஸ்டு அகிலத்தாலும் வகுக்கப் பெற்று காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளால் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணிக் கொள்கை ஒடுக்கப்பட்ட நாட்டினங்களின் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்று திரட்டுவதற்கேற்ற சரியான ஒரே வழியாக இருந்தது. காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டக் கூட்டணியை விரிவாக்கவும் வலுப்படுத்தவும் இந்தக் கொள்கை உதவியது. தேசிய-விடுதலைப் புரட்சிகளின் வருங்கால வெற்றிக்கு மிக முக்கியமான அடிப்படையை இது நிறுவியது.

பாசிஸத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக எல்லாப் புரட்சி இயக்கங்களையும் ஜனநாயக இயக்கங்களையும் ஒன்றிணைப்பது என்ற, கம்யூனிஸ்டு அகிலத்தினதும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் கொள்கைப் போக்கு 1934 முதல் 1939 வரையுள்ள காலப்பகுதி

யில் நடந்த வர்க்கப் போராட்டங்களின் வருங்காலத்துக்கு மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. அதோடு கூட, பாசிஸத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் ஆயுதப் போர் நடத்துவதற்கு சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுக்கும் ஆழ்ந்த பயிற்சியாகவும் அது திகழ்ந்தது. வரலாற்று முக்கியத்துவம் உள்ள இந்தப் போரில் சோவியத் யூனியனுடன் மக்களினங்களின் ஒத்துழைப்புக்கு இந்தக் கொள்கைப் போக்கு பயிற்சி அளித்தது.

அத்தியாயம் ஆறு

கம்யூனிஸ்டுக் கட்சிகள் மக்களின் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமையில். கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்படுதல்

1939 செப்டெம்பர் 1ந் தேதியன்று போலந்து மீது ஹிட்லர் ஜெர்மனியின் படையெடுப்புடன் தொடங்கிய இரண்டாவது உலக யுத்தம், சர்வதேச நிலைமையில் மாறுதல் ஏற்படுத்திவிட்டது. உலகப் புரட்சி நிகழ்முறையின் நிலைமைகள் இதனால் மாறி விட்டன. மனிதகுல வரலாற்றில் மிக மிகக் கடினமான, சிக்கல் நிறைந்த காலப் பகுதி தொடங்கியது.

பாசிஸ்டு ஜெர்மனி ஐரோப்பாவின் பெரும்பாலான நாடுகளை அடிமைப்படுத்தி அவற்றில் தனது கொள்ளைக்காரத் தனமான "புதிய ஒழுங்கை" நிலைநாட்டியது. இந்த நாடுகளின் அடிமைப் பட்ட மக்களுக்கு தேசிய விடுதலைப் போராட்டம் நடத்தும் பணிகள் எதிர்ப்பட்டன. ஹிட்லர் ஜெர்மனி தனது ஆக்கிரமிப்பை விரிவுடுத்தி நம்பிக்கைத் துரோகம் செய்து சோவியத் யூனியனைத் தாக்கியது. உலக ஆதிக்கத்தை நிலைநாட்டும் பாதையில் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் பெரும் தடையாக இருந்ததும் சமாதானத் துக்கும் சோஷலிஸத்துக்கும் அரணாக விளங்கியதுமான சோவியத் யூனியனை அழித்துவிடும் நோக்கத்துடன் ஹிட்லர் ஜெர்மனி இந்த ஆக்கிரமிப்பை நடத்தியது.

மக்களின் புரட்சி, ஜனநாயக, முற்போக்கு நலங்கள் அனைத்திற் கும், அவர்களுடைய தேசிய சுதந்திரத்துக்கும் உயிருக்குமே மரண அபாயம் ஏற்பட்டிருந்த அந்த வேளையில், கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இயங்கிய சோவியத் யூனியன் ஹிட்லர் கூட்டணிக்கு எதிராக பாசிஸவிரோதச் சக்திகள் நடத்திய போரின் மையமாக விளங்கிய பிரதானச் சக்தியாக, பாசிஸ்டுக் கூட்டணி யை முறியடிக்க வகை செய்த சக்தியாகச் செயல்பட்டது. பாசிஸ்டு அடிமைத்தனத்திலிருந்து மக்கள் இனங்களை விடுவிப் பதில் சோவியத் யூனியன் நிர்ணயகரமான பங்கு ஆற்றியது. யுத்

தத்தில் அதன் வெற்றிகள் அனேக நாடுகளில் மக்கள் ஜனநாயகப் புரட்சிகளின் வெற்றிக்கும், உலக சோஷலிஸ நாடுகளின் அமைப்பு உரு ஆவதற்கும் ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் விடுதலை இயக்கம் ஏற்றம் பெறுவதற்கும் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தின. மிகக் குறுகிய காலத்திற்குள் சோவியத் நாட்டை சர்வதேசப் புரட்சி இயக்கத்தினதும் சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் சக்திகளுடையவும் தகர்க்க முடியாத கோட்டையாக மாற்றிவிட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் லெனினியக் கொள்கை வரலாற்று நோக்கில் சரியானது என்பதற்கு ஒளி மிக்க சான்றாக விளங்கியது இந்த நிகழ்முறை.

முற்போக்குள்ள அனைத்துமக்கள் இயக்கங்கள் எல்லாவற்றிலும் திரளான வெகுஜனங்களின் பங்கு நாளுக்கு நாள் அதிகமானதையும் தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் பாத்திரத்தையும் யுத்தக் காலத்தில் நடந்த பாசிஸ எதிர்ப்புப் போராட்டம் துலக்கமாக எடுத்துக் காட்டியது. சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமை வர்க்கமாக இருந்தது. பாசிஸவிரோத, ஜனநாயக, தேசபக்த நிலைகளை மேற்கொண்டிருந்த பல்வேறு வட்டாரங்களையும் குழுக்களையும் தன்னைச் சுற்றி அது ஒன்றிணைத்தது. ஜனநாயகத்துக்காகவும் சோஷலிஸத்தின் பொருட்டும் நடந்த முந்திய போராட்டத்தின் போக்கு அனைத்தும் தொழிலாளி வர்க்கத்தை இந்தப் பாத்திரத்துக்குத் தயார்படுத்தி இருந்தது. இந்தப் போராட்டத்தின் ஒழுங்கமைப்பாளர்களாகச் செயலாற்றினார்கள் கம்யூனிஸ்டுகள்.

விடுதலைப்பற்றுள்ள உலக மக்கள் யாவருக்கும் மிகமிகக் கடினமாய் இருந்த யுத்தக் காலப் பகுதியில், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் தான் மிகவும் ஒத்திசைந்த, மிகவும் உறுதியான பாசிஸ எதிர்ப்புச் சக்தி என்பதைக் காட்டியது. கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்ட இயக்கத்துக்குத் தலைமை தாங்கி நடத்தின. அவை இந்தப் போராட்டத்தின் ஒழுங்கமைப்பாளிகளாகவும் இதற்கு உற்சாகமூட்டுபவையாகவும் செயல் ஆற்றின. பாசிஸத்துடன் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் மக்கள் இனங்களின் உரிமைகளையும் விடுதலையையும் விசுவாசத்தோடு காப்பவர்களாக, மிகவும் உறுதியுள்ள தேசபக்தர்களாக, முற்போக்கின் பொருட்டு அஞ்சாமல் போராடும் வீரர்களாகப் பணி ஆற்றினார்கள். இதனால் விரிவான வெகுஜனங்

களிடையே அவர்களுடைய மதிப்பு பெருமளவு அதிகரித்தது. யுத்தம் முடியும் தறுவாயில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம் புதிய மட்டத்துக்கு உயர்ந்தது. உலக அரங்கில் அது மிக முக்கியமான அரசியல் காரணி ஆகிவிட்டது.

மக்களினங்களின் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தில் கம்யூனிஸ்டு இயக்கம் மாபெரும் பங்கு ஆற்ற முடிந்ததற்குக் காரணம், கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமையில் திரட்டிய அனுபவம் அனைத்தும் இதற்கு அதை ஆயத்தப்படுத்தியிருந்தது தான். நாற்பது லட்சம் கம்யூனிஸ்டுகள் அடங்கிய சைனியத்தின் முதன்மையான படைப் பிரிவாக இருந்தார்கள் சோவியத் கம்யூனிஸ்டுகள். இந்த சைனியம் தேர்ச்சியடைந்து, போர்த்திறன் பெற்ற நிலையில் யுத்தத்தில் கலந்து கொண்டது. ஒன்றித்த தொழிலாளர், பாசிஸ எதிர்ப்பு மக்கள் கூட்டணிக்கான போராட்டத்தில் பெற்ற வளமான அனுபவம் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு இருந்தது. சிக்கலான சில வேளைகளில் விரைவாக மாறிய யுத்த நிலைமைகளில், புறநிலை, அகநிலை இடர்ப்பாடுகளைக் கடந்தவாறு கம்யூனிஸ்டு இயக்கம் முன்னேறியது. யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் அது எல்லா பாசிஸ எதிர்ப்புச் சக்திகளுக்கும் தலைமை ஏற்கலாயிற்று.

கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் இரண்டாவது உலக யுத்தக் காலப் பகுதியில் (செப்டெம்பர் 1939-ஜூன் 1941)

யுத்தத்தின் தன்மையும் அதன்பால் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போக்கும்

இரண்டாவது உலக யுத்தம் மூண்டு பரவியதன் விளைவாக இந்த யுத்தத்தின் தன்மையையும் அதன்பால் தனது போக்கையும் வரையறுப்பது உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பணி ஆயிற்று. ''யுத்தத்தின் தன்மையைத் தெளிவுபடுத்துவது, அதன்பால் தனது போக்கை முடிவு செய்வதற்கு மார்க்சியவாதிக்குத் தேவையான முதனிலையாகும். இவ்வாறு தெளிவுபடுத்துவதற்குக் குறித்த யுத்தத்தின் புறநிலை நிபந்தனைகளும் ஸ்தூல நிலைமைகளும் எத்தகையவை என்று நிச்சயப்படுத்திக் கொள்வது முதன்மையாக இன்றியமையாதது. இந்த யுத்தத்தை அது நிகழும் வரலாற்றுச் சூழ்நிலையில் வைத்து ஆராய வேண்டும். அப்போதுதான் அதன்பால் தனது போக்கை நிர்ணயிக்க முடியும்''[1] என்றார் லெனின். யுத்தத்தின் தன்மையைத் தெளிவுபடுத்துவதற்கு, ''குறித்த அரசின், குறித்த அரசுகளது தொகுப்பின், குறித்த வர்க்கங்களின் முந்திய கொள்கையின் தொடர்பில்''[2] இதை வைத்து ஆராய்வதன் இன்றியமையாமையை லெனின் சிறப்பாக வலியுறுத்தினார். போரிடும் வல்லரசுகளின் இரண்டு குழுக்களின் கொள்கையையும் நீண்ட காலத்துக்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும், அப்போதுதான் தற்செயலான முடிவு இருக்காது, தனித் தனி உதாரணங்களைப் பற்றிக் கொள்ளாதிருக்க முடியும் என்று லெனின் கூறினார். யுத்தத்தின் தன்மையை நிர்ணயிப்பதில் விஷயங்களை எளிமைப்படுத்திக் கொள்ளும் அணுகு முறை சரியாகாது என்று அவர் எச்சரித்தார். ''யுத்தங்கள் அளவு கடந்து பல விதமானவை, வெவ்வேறு தன்

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 36, பக்கம் 297.
[2] அதே நூல், தொகுதி 24, பக்கம் 402.

மைகள் கொண்டவை, சிக்கலானவை. அவற்றின் விஷயத்தில் பொது மாதிரியில் அணுகுவது கூடாது'' என்று அவர் எழுதினர்.[1]

முதலாவது உலக யுத்தம் போன்றே இரண்டாவது உலக யுத்தம், ஏகாதிபத்திய அமைப்பில் முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சி ஒரே சீராய் இருப்பதில்லை என்ற விதியின் செயல்பாடு காரணமாகவே மூண்டது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையே முரண் பாடுகள் கடுமையாக முற்றிவிட்டதன் விளைவாகவும் விற்பனைச் சந்தைகளின் பொருட்டும் கச்சாப் பொருள் உற்பத்தித் தலங்களின் பொருட்டும் முதலீடு செய்வதற்குரிய மண்டலங்களின் பொருட் டும் நடந்த போராட்டத்தின் விளைவாகவும் மூண்டது அது. இந்த யுத்தம் மூண்டதற்குப் பொறுப்பாளிகள் மிகப் பெரிய முதலாளித் துவ வல்லரசுகளின் ஆளும் வர்க்கங்களே ஆகும்.

ஆயினும் முதலாவது உலக யுத்தமும் இரண்டாவது உலக யுத்தமும் மூண்டதற்கான பொதுக் காரணங்கள் இருப்பினும், கால் நூற்றுண்டுக்கு முன்பு இருந்ததற்கு அடிப்படையில் வேறான சூழ்நிலையில் இரண்டாவது உலக யுத்தம் மூண்டது. இரண்டாவது உலக யுத்தம் மூண்டபோது முதலாளித்துவம் எங்கும் பரவிய அமைப்பாக இருக்கவில்லை. உலகின் முதலாவது சோஷலிஸ அரசு—சோவியத் யூனியன்—நிலவி வலுப் பெற்றிருந்தது. ஒன்றுக்கு ஒன்று எதிரான இரண்டு சமூக அமைப்புக்களாக உலகம் பிளவு பட்டிருந்ததால் அந்தக் காலக்கட்டத்தின் புதிய, முக்கியமான, நிர்ணயகரமான முரண்பாடு—வளர்ந்து தழைத்துக்கொண்டிருந்த சோஷலிஸத்துக்கும் மடிந்து கொண்டிருந்த முதலாளித்துவத்துக் கும் இடையே முரண்பாடு—தோன்றியிருந்தது. ஏகாதிபத்தியங் களுக்கு இடையே முரண்பாடுகள் உலக அரசியலின் ஒரே காரணி யாக இப்போது இருக்கவில்லை. எதிரெதிரான இரு சமுதாய அமைப்புக்களின் ஆழ்ந்த முரண்பாட்டுடன் பரஸ்பரப் பாதிப்பில் இந்த முரண்பாடுகள் வளர்ந்தன. இந்த முரண்பாட்டின் காரண மாக பகைமை கொண்ட இரு முதலாளித்துவக் குழுக்களும் ஒன் ருேடு ஒன்று போராடுகையிலேயே சோவியத் யூனியனை அழிக்கவும் முதலாளித்துவ உலகின் பழைய முழுமையை மீண்டும் நிலைநிறுத்த வும் முயன்றன. சோவியத் யூனியன் நிலவியதும் அதன் வளர்ச்சி யும் அதன் விறல் அதிகரித்ததும் உலகனைத்திலும் இருந்த உழைப் பாளிகள் மீது அதன் உதாரணம் ஏற்படுத்திய பெருத்த பாதிப்பு

---

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 35, பக்கம் 273.

காரணமாக முதலாளித்துவ உலகின் ஆட்சியாளர்களுக்கு அச்சம் விளைத்தன. உலகின் முதலாவது சோஷலிஸ நாட்டை ஒழித்துக் கட்ட ஏகாதிபத்தியவாதிகள் கொண்டிருந்த விருப்பம் அவர்களை சோவியத் எதிர்ப்பின் அடிப்படையில் ஒன்றிணைத்தது. ஆயினும், இந்த விருப்பம் இருந்ததும் எதிரெதிரான இரண்டு அமைப்புக்களின் சமரசப்படுத்த முடியாத முரண்பாடு நிலவியதும் முதலாளித்துவ அமைப்புக்கு உள்ளிருந்த முரண்பாடுகளை அகற்றிவிடவில்லை.

இரண்டாவது உலக யுத்தத்தின் இன்னொரு தனித்தன்மை என்னவென்றால், 1914—1918ம் ஆண்டு யுத்தத்தில் போல உலகை மறு பங்கீடு செய்வது மட்டுமே இதன் நோக்கமாக இருக்கவில்லை என்பதாகும். ஹிட்லர் ஜெர்மனியின் தலைமையில் அமைந்த பாசிஸ நாடுகளின் குழு உலக ஆதிக்கம் பெறுவதையும் முழு முழு மக்களினங்களை அடிமைப்படுத்துவதையும் அழித்துவிடுவதையும் கூடத் தனது நோக்கமாகக் கொண்டிருந்தது. மனித குலத்தின் விதியையும் சமுதாய முன்னேற்றத்தின் விதியையும் பின்னேக்கித் திருப்ப பாசிஸ்டுகள் முயன்றூர்கள். முதலாளித்துவ அமைப்பு முழுவதிலும் பொது நெருக்கடி கூர்மை ஆகி இருந்ததற்கு அவர்களது இந்த முயற்சி சான்று பகர்ந்தது. கம்யூனிஸ்டு அகிலம் வெகுஜனங்களின் கவனத்தை இந்த அபாயத்தின் பால் இடையறுது திருப்பி வந்தது. ''தொழிலாளி வர்க்கத்துக்கும் அது போராடிப் பெற்றுள்ள எல்லா நன்மைகளுக்கும் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் அவர்களுடைய அடிப்படை உரிமைகளுக்கும் மக்களினங்களின் சமாதானத்துக்கும் விடுதலைக்கும்''[1] பாசிஸத்தால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அபாயத்தை ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களில் கம்யூனிஸ்டு அகிலம் சுட்டிக் காட்டியது.

உலக அரங்கில் அரசியல் சக்திகளின் தனிவகையான அணி வகுப்பு, பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களின் குறிக்கோள்களதும் பணிகளதும் தனித்தன்மை ஆகியவற்றின் காரணமாக, பாசிஸத்துக்கு எதிராக மக்களின் நியாயமான விடுதலைப் போருக்கு ஏற்ற புறநிலை வாய்ப்புக்கள் தொடக்கம் முதலே நிலவி வந்தன.

ஆனல் இந்தப் புறநிலைப் போக்குக்கு எதிர் நின்றது இன்னெரு போக்கு. மேற்கு வல்லரசுகளின் ஆளும் வட்டாரங்களது

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது உலகக் காங்கிரசின் தீர்மானங்கள். மாஸ்கோ, 1935, பக்கம் 15.

கொள்கையில் வெளிப்பட்டது இந்தப் போக்கு. ஏகாதிபத்தியங்களின் பரஸ்பர முரண்பாடுகளை சோவியத் யூனியனை ஒழிப்பதன் மூலம் தீர்த்துக் கொள்ள இந்த வட்டாரங்கள் முயன்றன. ஹிட்லர் ஜெர்மனிக்கு எதிராக அவை ஊக்கத்துடன் போராடவில்லை. ஹிட்லர் ஜெர்மனியை சோவியத் யூனியனுக்கு எதிராகத் தூண்டி விடுவதற்குத் தேவையானவை எல்லாவற்றையும் அவை செய்தன. ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஊக்கமளிக்கும் மியூனிக் கொள்கை இதற்குச் சான்றாக விளங்கியது. இந்தக் கொள்கைக்கு உத்வேகம் ஊட்டியவர்கள் பாசிஸத்துக்கு எதிராக மக்களின் போராட்டத்துக்கு இடையூறு விளைத்தார்கள். இவ்வாறு இரு போக்குக்கள் செயல்பட்டன. மூண்டு கொண்டிருந்த யுத்தத்தின் மீது இவை இரு வேறு விதங்களில் பாதிப்பு நிகழ்த்தின.

முதல் உலக யுத்தத்துக்கு மாறாக இரண்டாவது உலக யுத்தம் திடீரென்று மூளவில்லை, படிப்படியாகவே தொடங்கியது. முப்பதுக்களின் நடுவிலிருந்து தொடங்கி உலகம் மெதுவாக ஆனால் இடைவிடாமல் புதிய உலக யுத்தத்தை நோக்கி நகர்ந்தது. எத்தியோப்பியா மீது பாசிஸ்டு இத்தாலியின் படையெடுப்பு, ஸ்பெயினில் பாசிஸ்டு வல்லரசுகளின் தலையீடு, சீனா மீது ஜப்பானின் தாக்குதல், ஹிட்லர் ஜெர்மனி ஆஸ்திரியாவையும் பின்னர் செக்கோஸ்லோவாக்கியாவையும் கைப்பற்றிக் கொண்டது— இவ்வாறு ஒவ்வொரு கட்டமாகச் செயலாற்றினார்கள் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்கள். புதிய உலக யுத்த நெருப்பை இவ்வாறு மேலும் மேலும் விரிவாக மூண்டெரியச் செய்தார்கள் அவர்கள்.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் தேசிய-விடுதலைப் போராட்டம் நிகழ்த்தினார்கள். ஜெர்மானிய, இத்தாலிய பாசிஸத்துக்கும் ஜப்பானிய சைனியவாதத்துக்கும் எதிராக மக்களுடைய போராட்டம் தேசிய அடிமைத்தனத்துக்கு எதிராக தேசிய சுதந்திரத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் நடந்த நியாயமான யுத்தமாக இருந்தது.

போலந்தின் மீது ஹிட்லர் ஜெர்மனி நடத்திய தாக்குதல் இரண்டாவது உலக யுத்தத்தில் புகுவதற்கான நிகழ்முறையை நிறைவுபடுத்தியது. பாசிஸ்டு ஆக்கிரமிப்புக்கு இரையான போலந்துக்கு இந்த யுத்தம் தொடங்கிய நாள் முதலே நியாயமானதாக, விடுதலைப் போராட்டமாக, பாசிஸ எதிர்ப்பு யுத்தமாக இருந்தது. இந்த நிலைமையைச் சரியாக மதிப்பிட்டு, போலந்துக் கம்யூனிஸ்டுகள் ஹிட்லர் படையெடுப்பிலிருந்து தங்கள் தாய்நாட்டைக்

காப்பதில் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். பிரெஞ்சு, பிரிட்டிஷ் அரசாங்கங்கள், தங்கள் முந்திய வாக்குறுதிகளுக்கு இணங்கப் போலந்துக்கு உதவுவது இன்றியமையாதது என்ற காரணத்தால் ஜெர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தன. ஆனால் இந்த யுத்தத்தை பாசிஸ எதிர்ப்புப் போராக நடத்த இந்நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் விரும்பவே இல்லை. போலந்தை முறியடித்த பின் ஹிட்லர் மேற்கே அல்ல, கிழக்கே படையெடுத்துச் செல்வான் என்று அவர்கள் நம்பினார்கள். இரண்டாவது உலக யுத்தத்தை சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தமாகத் திருப்புவது பற்றி ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றின் ஆளும் வட்டாரங்கள் முயன்றன. ஆயினும் இந்தக் கொள்கை ஹிட்லர் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர் நடக்கிறது என்ற அரசாங்க அறிக்கைகளால் தந்திரமாக மூடி மறைக்கப்பட்டதால் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தினது கொள்கையின் உண்மையான தன்மை விரிவான வெகுஜனங்களுக்கு இன்னும் தெளிவாகப் புரியவில்லை.

பிரான்சையும் பிரிட்டனையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள், மூண்டிருந்த யுத்தத்தின் பால் தங்கள் போக்கைப் பின்வரும் அடிப்படையில் நிர்ணயித்தன: பல நாடுகளையும் மக்களையும் அடிமைப்படுத்தும் நோக்கத்துடன் இந்த யுத்தம் ஹிட்லர் ஜெர்மனியால் மூட்டிவிடப்பட்டிருக்கிறது, எனவே இதை பாசிஸவிரோத, தேசிய-விடுதலைப் போர் ஆக்குவதற்கு எல்லா வகையிலும் முயற்சி செய்வது அவசியம். கம்யூனிஸ்டுக் கட்சிகள் பொது மக்களை அணிதிரட்டப் பெரு முயற்சி செய்தன. தங்கள் நாடுகளின் ஆளும் வட்டாரங்களை வற்புறுத்தி, சொற்களில் அன்றிச் செயலில் பாசிஸ எதிர்ப்பு யுத்தம் நடத்துமாறு அவற்றைக் கட்டாயப்படுத்த அவை முயன்றன. திரளான பொது மக்களினது வற்புறுத்தலின் விளைவாகத் தங்கள் நாடுகளின் பிற்போக்கு அரசாங்கங்கள் அகற்றப் பட்டுவிடும், பாசிஸ எதிர்ப்பு, விடுதலைப் போக்குக்கள் யுத்தத்தில் மேலோங்கும் என்று பிரெஞ்சு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் நம்பினார்கள்.

நெருங்கி வந்து கொண்டிருந்த பாசிஸ்டு ஆக்கிரமிப்பின் விஷயத்தில் தனது நிலையை பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி யுத்தம் மூள்வதற்கு முன்பே, 1939, ஆகஸ்டு 25ந் தேதியன்றே தீர்மானித்திருந்தது. ''பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உண்மையான போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி முதல் வரிசை

களில் இருக்கும், தனது உரிமையைக் காக்கும்''[1] என்று கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக பிரெஞ்சு மக்களை ஒன்றுதிரட்டும்படி கட்சி அழைப்பு விடுத்தது. நாட்டின் பாதுகாப்புக்கு இன்றியமையாத எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி அரசாங்கத்தை அது வற்புறுத்தியது. மக்களை ஆதாரமாகக் கொண்டு உண்மையான ஹிட்லர்விரோத யுத்தம் நடத்தும்படி அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்த வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் கூறினார்கள். ''மக்களைக் கண்டு அஞ்சும் அரசாங்கம் தோல்வியே அடையும்.''[2]

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியும் இதே போன்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. யுத்தத்தை உண்மையில் பாசிஸத்துக்கு எதிரான யுத்தமாக மாற்றுவது அவசியம் என்றும் அதே சமயம் சேம்பர்லேனுடைய பிற்போக்குக் கொள்கைக்கு எதிரான போராட்டத்தையும் தளர்த்தக் கூடாது என்றும் அது கூறியது. ஜெர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்யப்பட்டது பற்றி 1939, செப்டெம்பர் தொடக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில் இரண்டு முனைகளில் போராட்டம் நடத்தும்படி பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி அறைகூவி அழைத்தது. ''அதாவது, பாசிஸ்டு ஜெர்மனிக்கு எதிராகவும் அதே சமயம் சேம்பர்லேனின் கொள்கைக்கு எதிராகவும் அவருடைய அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காகவும் போராட்டம் நடத்தும்படி'' அது கூறியது.[3]

யுத்தத்தின் தொடக்கத்தில் பிற கம்யூனிஸ்டுக் கட்சிகளும் இதே நிலையை மேற்கொண்டன. தங்கள் நாடுகளின் தேசிய விடுதலைக்கும் மனிதகுலம் அனைத்திற்கும் பாசிஸ்டு ஆக்கிரமிப்பு எவ்வளவு அபாயமானது என்பதை அவை புரிந்து கொண்டிருந்ததை இது காட்டியது. ஹிட்லர் ஜெர்மனிக்கு எதிராக உண்மையான யுத்தம் நடத்துவதற்கும் ஆக்கிரமிப்புக்கு இரையான போலந்துக்கு உதவி அளிப்பதற்கும் முயன்றதன் வாயிலாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் தேசிய, சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்றின.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் யுத்தத்தில் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆளும்

---

[1] „L'Humanité", 25. VIII. 1939.

[2] „La Vie Ouvriére", 21. IX. 1939.

[3] **ர. பாம் தத்.** அகிலம். கம்யூனிஸ்டு இயக்கத்தின் சுருக்க வரலாறு 1848—1963. மாஸ்கோ, 1966, பக்கம் 275.

வட்டாரங்களின் ஏகாதிபத்திய வேட்கையைச் சுட்டிக் காட்டின என்றாலும் யுத்தத்தை உண்மையில் பாசிஸ எதிர்ப்புத் தன்மை உள்ளது ஆக்க விரும்பாத பூர்ஷ்வா வர்க்கத்தின் பிற்போக்குக் குழுக்களது எதிர்ப்பின் சக்தியைச் சரியாக மதிப்பிடவில்லை.

பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆளும் வட்டாரங்கள் பாசிஸத்துக்கு எதிராக உண்மையான போர் நடத்த விரும்பவில்லை என்பதை மெய்விவரங்கள் மேலும் மேலும் தெளிவாகக் காட்டின. செப்டெம்பர் மாத முடிவுக்குள் இது கண்கூடாகத் தென்பட்டது.

பாசிஸ்டு ஜெர்மனி சோவியத் யூனியனுடன் செய்து கொண்டிருந்த அனுக்கிரமிப்பு உடன்படிக்கையை முறித்துவிட்டு சோஷலிஸ நாட்டுக்கு எதிராகப் பொதுக் கூட்டணி அமைப்பதை எதிர் பார்ப்பதாக மேற்கு வல்லரசுகளின் ஆளும் வட்டாரங்கள் ஹிட்லர் ஜெர்மனிக்குக் குறி அறிவித்தன. போலந்துக்கு உதவி அளிப்பது எதார்த்தத்தில் கைவிடப்பட்டது. ஹிட்லர் ஜெர்மனிக்கு எதிரான முனைமுகத்தில் போர் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட முழுமையாக நிறுத்தப்பட்டன (''விந்தையான யுத்தம்'').இவை ஒரு புறம். மறு புறம், மக்களுடைய உரிமைகள் மீது பிற்போக்கின் தாக்குதல் போரை உண்மையில் பாசிஸ எதிர்ப்பு யுத்தம் ஆக்கமுயன்ற ஜனநாயக சக்திகளுக்கு, முதன்மையாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எதிராக அடக்குமுறைகள் கையாளப்பட்டது—இவை எல்லாம், தாற்காலிகமாக மேலோங்கி இருந்த ஏகாதிபத்தியவாதப் போக்கைக் காட்டின. ஆயினும் நாளுக்கு நாள் வளர்ந்துவந்த நியாயமான பாசிஸ எதிர்ப்புப் போராட்ட அம்சங்களை அதனால் களைந்தெறிய முடியவில்லை. பாசிஸ்டு ஒடுக்குமுறைக்கு எதிராகப் போலந்து, செக்கோஸ்லோவாக்கிய மக்கள் நடத்திய தேசிய-விடுதலைப் போராட்டத்தின் வாயிலாக யுத்தத்தின் தொடக்கத்தில் இந்த அம்சங்கள் வெளிப்பட்டன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள், உருவாயிருந்த நிலைமையை மதிப்பிட்டு, 1939, அக்டோபர் மாத ஆரம்பத்தில் அறிக்கைகள் வெளியிட்டன. யுத்தம் இரு தரப்பிலும் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டது என்று அவை வரையறுத்தன. தங்கள் அரசாங்கங்களின் பிற்போக்குள்ள,சோவியத் விரோத அரசியலை அவை கண்டனம் செய்தன. அதே சமயம் பாசிஸ்டு ஆக்கிரமிப்பினால் மனிதகுலம் அனைத்துக்கும் எதிர்ப்பட்டிருந்த அபாயத்தை ஹிட்லர் ஜெர்மனியின் எதிராளிகளாயிருந்த அரசுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கவனத்தில் எடுத்துக் கொண்

டன. அதனால்தான் பிரெஞ்சு, பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சிகள் யுத்தத்தில் தங்கள் நாடுகளின் அரசாங்கங்கள் தோல்வி அடைய வேண்டும் என்ற கோஷத்தை எழுப்பவில்லை.

பாசிஸ்டு யுத்தத்துக்கு எதிராகவும், நாடுகளை பாசிஸக் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிப்பதற்காகவும் போராடுவது ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கடமையாக இருந்தது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகளின் போராட்டம், தங்கள் விடுதலையின் பொருட்டும் சுதந்திரத்திற்காகவும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் மக்கள் நடத்தி வந்த போராட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. *1939*, நவம்பர் 2ந் தேதியன்று ஜெர்மனி, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒரு கூட்டு அறிக்கை விடுத்தன. ''ஜெர்மன் தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்தை செக்குகள், ஸ்லோவாக்கியர்கள், ஆஸ்திரியர்கள், போலந்துவாசிகள் ஆகியோரின் தேசிய-விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிணைப்பதற்கும், ஜெர்மானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகத் தகர்க்கமுடியாத ஒன்றித்த கூட்டணியை அமைப்பதற்கும் கம்யூனிஸ்டுகள் தங்கள் சக்தி அனைத்தையும் ஈடுபடுத்துவார்கள்''[1] என்று இந்த அறிக்கையில் அழுத்திக் கூறப்பட்டது.

1939, நவம்பர் தொடக்கத்தில் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செய்தி வெளியிடப்பட்டது. சர்வதேச நிலைமை பற்றிய மதிப்பீடு அதில் தரப்பட்டிருந்தது, யுத்தத்தின் தொடர்பாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள் வரையறுக்கப்பட்டிருந்தன. யுத்தம் இரு தரப்புக்களிலும் ஏகாதிபத்தியத் தன்மை கொண்டது, நியாயம் அற்றது, பிற்போக்கானது என்று சித்திரிக்கப்பட்டிருந்தது. இதில் ''எல்லா முதலாளித்துவ நாடுகளும் முதன்மையாக, போரிடும் அரசுகளின் ஆளும் வர்க்கங்களும் குற்றவாளிகள்''[2] என்று கூறப்பட்டிருந்தது. முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வட்டாரங்களுடைய ஏகாதிபத்திய வேட்கைகளை இந்த வரையறுப்பு கோடிட்டுக் காட்டியது என்றாலும் இந்த யுத்தத்தில் செயல்பட்ட தேசிய-விடுதலைப் போக்கை இது கவனிக்காமல் விட்டுவிட்டது.

---

[1] **வா. ஊல்பிரிஹ்த்.** நவீனக் கால வரலாற்றுக்கு. மாஸ்கோ, *1957*, பக்கம் *319*.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', *1939*, இதழ் *8-9*, பக்கம் *4*.

இரண்டு முதலாளித்துவக் குழுக்களுக்கும் இடையே இருந்த வேறுபாடு யுத்தம் மூண்டுவிட்ட காரணத்தால் மறைந்து விட்டது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைவர்கள் எண்ணினார்கள். இந்த மதிப்பீட்டுக்கு முதன்மையான காரணம் பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆளும் வட்டாரங்களின் சோவியத் எதிர்ப்புக் கொள்கை ஆகும். ஹிட்லர் ஜெர்மனியை சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்பி விடும் பொருட்டு அதனுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள இந்த வட்டாரங்கள் முயன்றன.

சோவியத்-ஃபின்லாந்து யுத்தத்தின் போது இந்த முயற்சிகள் சிறப்பாகத் துலக்கமாக வெளிப்பட்டன. பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்கள் ஃபின்லாந்தின் பிற்போக்காளர்களை சோவியத் யூனியனுக்கு எதிராகப் போருக்குத் தூண்டி விட்டதுடன் அதற்கு ஆயுதங்களையும் தாராளமாக வழங்கின. இந்த நாடுகளின் இராணுவத் தலைமை அலுவலகங்கள் தங்கள் படைகளை ஃபின்லாந்துக்கு அனுப்ப ஆயத்தம் செய்தன. சோவியத் யூனியனைத் தெற்கிலிருந்து தாக்குவதற்கு இவை திட்டங்கள் வகுத்தன. செஞ்சேனையின் வெற்றிகளும் சோவியத் யூனியனின் சரியான அயல்நாட்டுக் கொள்கையும் சோவியத் யூனியனுக்கும் ஃபின்லாந்துக்கும் இடையே சமாதான உடன்படிக்கை நிறைவேறியதும் இந்தச் சூழ்ச்சித் திட்டங்களை முறித்து விட்டன.

1940ம் ஆண்டு வசந்தத்தில் டென்மார்க் மீதும் நார்வே மீதும் பின்னர் பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க் ஆகியவற்றின் மீதும் ஹிட்லர் ஜெர்மனியின் படையெடுப்பும் பிரான்சுக்கு அபாயம் வலுத்ததும் பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆளும் வட்டாரங்கள் கடைப்பிடித்துவந்த கொள்கை எவ்வளவு நாசகரமானது என்பதைக் காட்டின.

பாசிஸ்டு ஆக்கிரமிப்பு விரிவடைந்தது, மேற்கு ஐரோப்பாவின் அனேக நாடுகள் ஹிட்லர் ஜெர்மனியால் கைப்பற்றப்பட்டது, விலங்குத்தனமான பலாத்காரமும் கொள்ளையும் அங்கே நிலைநாட்டப்பட்டது ஆகியவை எல்லாம் மக்களின் ஆத்திரத்தை மூண்டெரியச் செய்தன. அடிமைப்படுத்தியவர்களுக்கு எதிராக உறுதியான ஈவிரக்கம் அற்ற போராட்டம் நடத்தும் ஆழ்ந்த விருப்பம் இவற்றின் விளைவாக எல்லா பாசிஸ எதிர்ப்பாளர்களுக்கும் உண்டாயிற்று. இந்த நிகழ்முறை ஆளும் வர்க்கங்களையும் பாதித்தது. ஹிட்லர் விரோதப் போக்குக்களுக்குச் சாதகமாக அவற்றினிடையே சக்திகள் மாற்றி அணிதிரட்டப்பட்டன. யுத்தத்தில்

விடுதலை நோக்கங்கள் நாளுக்கு நாள் வளர்ந்தன. யுத்தத்தின் தன்மையே மேலும் மேலும் மாறலாயிற்று.

''...ஏகாதிபத்தியக் காலக் கட்டத்தில் ஐரோப்பாவில் கூட தேசிய யுத்தங்கள் நடப்பது சாத்தியம் அல்ல என்று எண்ண முடியாது''[1] என்றும் யுத்தங்கள் எப்போதுமே அளவு கடந்து சிக்கலான நிகழ்ச்சி என்றும் ''தேசிய யுத்தம் ஏகாதிபத்திய யுத்த மாகவும் பின்னது முன்னதாகவும் மாறக் கூடும்''[2] என்றும் 1916ல் லெனின் அறிவுறுத்தினர்.

1940ம் ஆண்டு நிகழ்ச்சிகளும் பாசிஸ்டுகள் ஐரோப்பாவில் புதிய நாடுகளைக் கைப்பற்றியதும் அடிமைப்பட்ட நாடுகளில் தேசிய பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தைத் தோற்றுவித்தன. இந்தச் சூழ்நிலையில் உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசால் வகுக்கப்பட்ட, எல்லா பாசிஸ எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றிணைக்கும் கொள்கையைத் தொடர்ந்தது.

ஹிட்லர் ஜெர்மனியால் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளின் (ஹாலந்து, டென்மார்க், நார்வே) கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு விடுத்த ஆணைக் குறிப்புக்களில், தேசிய சுதந்திரத்தை மீட்கும் பொருட்டும் உழைப்பாளிகளின் ஜீவாதார நலன்களைக் காக்கும் பொருட்டும் போராட்டத்தைத் தலைமைதாங்கி நடத்தும்படி கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை அவற்றுக்கு யோசனை கூறியது. மாறிய நிலைமையைச் சித்திரிக்கையில், ஜெர்மானிய ஏகாதிபத்தியம் ''இத்தாலியுடன் சேர்ந்து பல ஐரோப்பிய நாடுகளின் மக்களை அடிமைப்படுத்தவும் அவற்றின் தேசிய சுதந்திரத்தைப் பறிக்கவும்''[3] திட்டமிட்டிருப்பதாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைமை 1940, ஜூன் மாத இறுதியில் குறிப்பிட்டது.

பிரான்ஸ் முறியடிக்கப்படும் அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு போன நிலையில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டின் சரியான தற்காப்பு ஏற்பாடுகள் செய்வதற்கான செயல் திட்டத்தை முன்வைத்தது. ஏகாதிபத்திய யுத்தத்தை தேசிய யுத்தமாகவும் தங்கள் சுதந்திரத்தின் பொருட்டு மக்களின் நியாயமான யுத்தமாகவும் மாற்றுவது செயல்திட்டத்தில் குறிக்கப்பட்டிருந்தது. மறைமுகமாகப் பிரசுரிக்கப்பட்டு வந்த ''யுமானித்தே''

---

[1] வி. இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 22, பக்கம் 311.

[2] அதே நூல், பக்கம் 309.

[3] மை. ஆ. கூ., 495/18/1322/5.

செய்தித்தாளில் வெளியான இந்தச் செயல்திட்டம், கம்யூனிஸ்டுக் கட்சிமீதும் தொழிற்சங்கங்கள் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடை அகற்றப்பட வேண்டும் என்று கோரியது. அரசு இயந்திரத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கும் பாசிஸத்தின் உளவாளிகளைத் தீங்கற்றவர்கள் ஆக்கவேண்டும் என்றும் ஹிட்லர் படையெடுப்பை நிறுத்துவதற்கு மக்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்ள வேண்டும் என்றும் அது கூறியது.[1] இந்தச் செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தேசிய நோக்கிலும் அரசியல் துறையிலும் அடிமைப்படுவதிலிருந்து பிரான்ஸ் தப்ப முடிந்திருக்கும்.

பிரான்சின் மீது ஹிட்லர் தாக்குதல் நடத்திய காரணத்தால் நிலைமை மேலும் மேலும் இறுக்கம் நிறைந்தது ஆயிற்று. ஜூன் மாதத் தொடக்கத்தில் பாரிஸ் நகரம் உடனடியான ஆபத்துக்கு உள்ளாயிற்று. 1940, ஜூன் 6ந் தேதி கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பெயரால் அரசாங்கத்துக்குப் பாரிசின் தற்காப்புக்கான யோசனைகள் விடுக்கப்பட்டன. ''பாரிஸ் நகரை பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்கள் வசம் ஒப்படைப்பது துரோகம் என்று கம்யூனிஸ்டுக் கட்சி கருதும். பாரிஸ் நகரின் தற்காப்புக்கு ஏற்பாடு செய்வது முதன்மையான தேசியக் கடமை என்று அது எண்ணுகிறது. இந்த ஏற்பாடு செய்வதற்குப் பின்வருவன இன்றியமையாதவை:

''1) யுத்தத்தின் தன்மையை மாற்றி, அதைத் தாய்நாட்டின் விடுதலைக்கும் சுயாட்சிக்குமான மக்கள் யுத்தமாக மாற்றுவது.

''2) சிறைப்பட்டவர்களும் காவலில் வைக்கப்பட்டவர்களுமான கம்யூனிஸ்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஊக்கமுள்ள ஊழியர்களும் பதினாயிரக் கணக்கான தொழிலாளர்களும் விடுவிக்கப்படுவது.

''3) நாடாளுமன்றத்திலும் அமைச்சகங்களிலும் இராணுவத் தலைமை அலுவலகத்திலும் கூட மொய்த்துக் கிடக்கும் பகைவர்களின் கையாட்களை உடனே கைது செய்து கடுமையான தண்டனை கொடுப்பது.

''4) இந்த முதல் நடவடிக்கைகளே மக்கள் அனைவருக்கும் உற்சாகமூட்டும், மக்கள் படை அமைக்க வழி வகுக்கும். இத்தகைய படை அமைப்பு உடனே அறிவிக்கப்பட வேண்டும்.

---

[1] Le Parti communiste français dans la Résistance. Paris, 1964, p. 48.

''5) மக்களை ஆயுதபாணிகள் ஆக்கிப் பாரிஸை அணுக முடியாத கோட்டையாக மாற்றுவது.''[1]

மக்களை ஆயுதபாணிகள் ஆக்கி அனைத்து மக்கள் படையை நிறுவுவதன் மூலமே விபத்தைத் தவிர்ப்பதும் பிரான்சைக் காப்பதும் சாத்தியமாய் இருந்தன. ஆனால் பிரெஞ்சு பூர்ஷ்வா வர்க்கம் மக்கள்பால் கொண்டிருந்த அச்சம் அதன் குறுகிய வர்க்க நலன்கள், அதன் கம்யூனிஸ எதிர்ப்பு ஆகியவை நாட்டின் நலன்களை விட அதற்கு மேலாகப் பட்டன. மக்களுக்கு ஆயுதங்கள் வழங்குவதைக் காட்டிலும் சரணாகதி அடைவதும் நாட்டை ஹிட்லர் குழுவினரின் கண்காணிப்பில் ஒப்படைப்பதும் மேல் என்று அரசாங்கம் முடிவு செய்தது.

பிரான்சின் தோல்விக்குப் பிறகு மக்களின் தேசபக்தச் சக்திகளை ஒன்றிணைப்பது கம்யூனிஸ்டுக் கட்சியின் முதற் பணி ஆயிற்று. 1940, ஜூன் 22ந் தேதி கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆணைக்குறிப்பில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இந்த யோசனை கூறப்பட்டது. ''பல்வேறு உதவிக் கமிட்டிகளின் வடிவில் மக்கள் சக்திகளை ஒன்று சேர்ப்பது இன்றியமையாதது...'' இங்கே குறிக்கப்பட்டவை, வேலையற்றோர், அகதிகள், காயமுற்றவர்கள், படையிலிருந்து விலகியவர்கள் முதலியோரின் உதவிக்கான பல்வேறு வடிவங்கள். மிகுந்த எச்சரிக்கையைக் கடைப்பிடித்தவாறு ஆக்கிரமிப்பாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை ஒழுங்கமைப்பது இன்றியமையாதது என்ற முக்கியமான கட்டளை ஆணைக்குறிப்பில் அடங்கியிருந்தது. ''ஒற்றர்களின் சூழ்ச்சிகளில் மாட்டிக் கொள்ளாமலும் தருணத்துக்கு முந்திய நடவடிக்கைகளைத் தவிர்த்தவாறும், மக்களுக்கு எதிராக ஆக்கிரமிப்பாளர்களின் வன்முறை நடவடிக்கைகள், சூறையாடல்கள், அத்து மீறிய செயல்கள் ஆகியவற்றுக்கு எதிராக வெகுஜனங்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பது இன்றியமையாதது.... எல்லா நிலைமைகளிலும் கம்யூனிஸ்டுகள் மக்களோடு இருக்க வேண்டும். அவர்களுடைய விடுதலைப் போராட்டத்தில் எப்போதும் முன்னணியில் செல்ல வேண்டும்.''[2]

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி பிரெஞ்சு மக்களுக்கு இதே கருத்துள்ள செய்தியைத் தயாரித்தது. மாஸ்

---

[1] மொரிஸ் தோரேஸ். மக்களின் மைந்தன், பக்கங்கள் 160-161.

[2] மை. ஆ. கூ., 495/18/1321/190-191.

கோவில் இருந்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைவர்களும் இதைத் தயாரிப்பதில் பங்கு கொண்டார்கள். ''பிரெஞ்சு மக்களுக்கு வேண்டுகோள்'' என்று தலைப்பிட்ட இந்தச் செய்தியில் மொரிஸ் தோரேஸ், ழாக் தியூக்ளோ, இருவரும் கையெழுத்துக்கள் இட்டிருந்தார்கள். இரகசியமாகப் பிரசுரிக்கப்பட்டு வந்த ''யுமானித்தே'' செய்தித்தாளில் 1940, ஜூலை 10ந் தேதி இந்தச் செய்தி வெளியிடப்பட்டது. பின்னர் இதன் லட்சக் கணக்கான பிரதிகள் பிரான்ஸ் முழுவதிலும் வினியோகிக்கப்பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சி மக்கள் அனைவரிடையிலும் ஒற்றுமை ஏற்படுத்தும் பணியை முன்வைத்தது. ஏனெனில் பிரான்சின் எல்லாத் தேசபக்த சக்திகளதும் ஒற்றுமை தேசிய சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்கு இன்றியமையாது தேவைப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் மட்டுமே இத்தகைய ஒற்றுமையின் மையக் கருவாக இருக்க முடிந்தது. ''தேசிய, சமுதாய விடுதலைக்கான பெருத்த நம்பிக்கை மக்களுடனேயே இணைந்திருக்கிறது'' என்று கூறியது வேண்டுகோள். ''வீராவேசம் நிறைந்ததும் பெருந்தன்மை உள்ளதும் நம்பிக்கையும் துணிவும் கொண்டதும்—ஏனெனில் வருங்காலம் அதற்கே உரியது—ஆன தொழிலாளி வர்க்கத்தை மையமாகக் கொண்டே, தூய மனச்சான்றும் கௌரவமும் வீரமும் வாய்ந்த கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இயங்கும் தொழிலாளி வர்க்கத்தை மையமாகக் கொண்டே பிரான்சின் விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் மறுமலர்ச்சிக்குமான கூட்டணி அமைக்கப்பட முடியும்.''[1]

இந்த வேண்டுகோள் பிரெஞ்சு தேசபக்தர்களின் சக்தியையும் உள்ளங்களையும் தூண்டி ஊக்கியது, போராட்டம் சாத்தியம் என்ற அவர்களது நம்பிக்கையை வலுப்படுத்தியது, தேசிய, சமுதாய விடுதலை பெறும் வழியைக் காட்டியது. இந்த வேண்டுகோள் ''நாட்டின் விடுதலைக்கான போராட்டத்தின் தெளிவான வருங்கால வாய்ப்பைக் காட்டியது. உலகு அனைத்திலும் உள்ள ஜனநாயக, பாசிஸ எதிர்ப்புச் சக்திகள் அனைத்துடனும் கூட்டு சேர்ந்த பிரெஞ்சு மக்களையே இந்த விடுதலை சார்ந்திருக்கிறது''.[2]

எதிர்ப்பு இயக்கத்தை ஒழுங்கமைப்பதில் பிரெஞ்சுக் கம்யூ

---

[1] **மொரிஸ் தோரேஸ்.** Oeuvres. Livre V. T. XIX. Paris, 1959 p. 58.

[2] Histoire du Parti communiste français (manuel). Paris, 1964, p. 389.

னிஸ்டுகளுடைய செயல்களின் முதல் பயன்கள் 1940, இலையுதிர் காலத்திலேயே புலப்படலாயின. பாசிஸ்டுகள் வசம் இருந்த பாரிஸ் நகரில் மாணவர்களின் முதலாவது வெகுஜன ஆர்ப்பாட்ட ஊர் வலம் 1940, நவம்பர் 11ந் தேதி நடந்தது. ''விசேஷப் போராட்ட ஸ்தாபனம்'' என்ற பெயரால் ஆயுதமேந்திய குழுக்களை அமைப்ப தில் கம்யூனிஸ்டுக் கட்சி வெற்றி அடைந்தது. ''இரகசியப் போராட்டம், பாசிஸ்டு பயங்கர முறைகள் ஆகியவற்றின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு அமைந்த இராணுவ ஸதாபனத்தின்''[1] முளைக்கருவாக விளங்கியது இந்த ஸ்தாபனம்.

அடிமைப்பட்ட பிற நாடுகளிலும் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர் களுக்கு எதிர்ப்பு வலுத்தது. பெல்ஜியத்தின் கம்யூனிஸ்டுக் கட்சி யினது அழைப்பை ஏற்று நாட்டின் தொழிலாளர்கள் ஆக்கிரமிப் பாளர்களுக்கு எதிராக வேலைநிறுத்தம் செய்தார்கள். 1940, ஜூனில் லியோழ் என்னும் இடத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத் தம் செய்தார்கள். செப்டெம்பர் மாதம் பரினுழ் என்னும் இடத் தில் பதினுயிரம் சுரங்கத் தொழிலாளர்கள் வேலைக்குப் போகவில்லை. நார்வே நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி 1940ம் ஆண்டு இலையுதில் காலத்தில் நாட்டின் அனேக நகரங்களில் பாசிஸ எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தியது. போலந்தில் கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமிப்பாளர்களுடன் போராடும் பொருட்டு பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனங்களை அமைக்கத் தொடங்கினுர்கள்.

கம்யூனிஸ்டுகளை முன்னணியில் கொண்ட மக்கள் பாசிஸ பயங் கரவாதப் ''புது அமைப்புடன்'' சமரசம் செய்துகொள்ள நினைக்க வில்லை, அதனுடன் ஓய்வற்ற போராட்டம் நடத்தப் போகிறுர்கள் என்பதை எதிர்ப்பு இயக்கம் காட்டியது. முழு முழு மக்கள் இனங்களைத் தங்கள் அடிமைகளாக மாற்ற முயன்ற பாசிஸ்டு முன் னேற்ற விரோதிகளின் கொள்ளைக்காரத் திட்டங்களுக்கு வெகு ஜனங்கள் அளித்த முறையான பதிலாக விளங்கியது அது. எதிர்ப்பு இயக்கம் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடந்த யுத்தத்தின் நியாயமான தன்மையைப் பிரதிபலித்தது.

யாவற்றிலும் ஒத்திசைந்த பாசிஸவிரோத தேசபக்த அரசியல் சக்தி என்ற முறையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எதிர்ப்பு இயக்கத் தில் தொடக்கம் முதலே பிரதானமான இடத்தைப் பெற்றுவிட் டன. பூர்ஷ்வா வட்டாரங்களின் ஒரு பகுதியினர் ஹிட்லர் ஆக்கிர

---

[1] மொரிஸ் தோரேஸ். மக்களின் மைந்தன், பக்கம் 168.

மிப்பாளர்களுடன் போரில் கோழைத்தனத்தையும் ஊசலாட்டத்தையும் காட்டிஞர்கள். மறு பகுதியினரோ, ஆக்கிரமிப்பாளர்களுக்கு வெட்கமின்றி அடிவருடிஞர்கள். இவர்களுக்கு நேர் எதிராகக் கம்யூனிஸ்டுகள் எல்லோரிலும் துணிவும் நாட்டின் விடுதலைக்காகத் தன்னையே வழங்க ஆயத்தமும் கொண்ட போராட்ட வீரர்களாகச் செயல்பட்டார்கள். சில அரசியல் குழுக்கள் மேற்கொள்ள முயன்ற காத்திருக்கும் செயல்தந்திரத்தை அவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

நாட்டுப்பற்றுள்ள வெகுஜனங்கள் அடிமைப்படுத்திய பாசிஸ்டுகளுக்கும் அவர்களுடைய இராணுவ ஆணைக் கோரிக்கைகளுக்கும் தண்டனை நடவடிக்கைகளுக்கும் எதிராகத் தாமாகவே போராட்டம் நடத்திஞர்கள், இராணுவத் தொழில் நிலையங்களில் மறைமுக அழிவு வேலை முதலியவற்றுக்கு ஏற்பாடுகள் செய்தார்கள். இந்த வெகுஜனங்களின் ஆதரவிலிருந்து கம்யூனிஸ்டுகள் பலம் திரட்டிஞர்கள். பாசிஸ எதிர்ப்பு தேசபக்தச் சக்திகளை ஒன்றிணைப்பதிலும் எதிர்ப் போராட்ட இயக்கத்தை ஒழுங்கமைப்பதிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிகப் பெருத்த வேலை செய்தன.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் புதிய பணிகளும் அவற்றின் ஸ்தாபனப் புனரமைப்பும்

விரிவாக நடந்து கொண்டிருந்த யுத்தத்தின் நிலைமைகளில் திரளான பொதுமக்களை ஒன்றிணைப்பதும் தேசிய, சமுதாய விடுதலையின் பொருட்டு பாசிஸத்துக்கு எதிராகப் போராடுவதற்கு அவர்களை நடத்திச் செல்வதும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள் ஆயின. இந்தப் பணியை நிறைவேற்றுவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் போராட்டத் திறமையையும் சமயோசித சாமர்த்தியத்தையும் காப்பாற்றிக் கொள்ளுவதும் அதிகப்படுத்துவதும் போராட்ட நிலைமைகளின் விரைந்த மாற்றத்துக்குத் தங்களை இலாகவமாக இசைவித்துக் கொள்வதும் அவசியமாய் இருந்தன. இந்த நோக்கத்துடன் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஸ்தாபனத்தை அடிப்படையில் மாற்றி அமைப்பது இன்றியமையாததாக இருந்தது.

போராட்ட நிலைமைகளுக்கு ஏற்ப கட்சி அமைப்பின் ஸ்தாபன வடிவங்களின் சமயத்துக்குத் தக்கவாறு மாறும் தன்மை பற்றியும்,

சட்டபூர்வமான முறைகளையும் சட்டப்புறம்பான முறைகளையும் சரியாக இணைப்பது பற்றியும் லெனினாலும் கம்யூனிஸ்டு அகிலத்தாலும் உருவாக்கப்பட்ட அடிப்படைக் கருத்துக்கள், மறைமுகமாக வேலை செய்துவந்த கம்யூனிஸ்டுகளின் கைகளில் விறல் மிக்க ஆயுதமாக இன்னும் ஒரு முறை பயன்பட்டன. இந்தக் கருத்துக்களின் அடிப்படையில், மாறிய நிலைமைகளுக்கு ஏற்ப, அதிகத்திலும் அதிகமான போராட்டத் திறனுக்கு வகை செய்ய வல்ல, நோக்கத்துக்கு அதிகப் பொருத்தமான வடிவங்களைத் தங்கள் ஸ்தாபனங்களுக்கு அளிக்கக் கம்யூனிஸ்டுகள் முயன்றார்கள்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் சட்டபூர்வமாக இயங்கிய நாடுகளில் அவற்றின் செயல்களை எந்த வகையிலாவது நிறுத்தும் பொருட்டுப் பிற்போக்காளர்கள் யுத்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார்கள். பாசிஸக் கூட்டணிகள் அமைந்திருந்த நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெகு காலமாகவே மறைமுகமாக இயங்கி வந்தன. அவற்றில் வேலை செய்வது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு முன்னிலும் கடினம் ஆயிற்று. ஹிட்லர் ஜெர்மனியின் வசம் இருந்த நாடுகளில் ஆக்கிரமிப்பாளர்களின் பயங்கர முறைகள் காரணமாக, வெகுஜனங்களின் போராட்டத்துக்குப் பயனுள்ள வகையில் தலைமைதாங்க ஏற்றதும் அதே சமயம் பாசிஸ்டு இராணுவ அதிகாரிகளின் தாக்குதல்களிலிருந்து அலுவலக இயந்திரத்தையும் ஊழியர்களையும் காக்க வல்லதுமான ஸ்தாபனத்தை நிறுவுவது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இன்றியமையாதது ஆயிற்று. பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கண்டிப்பான இரகசிய அடிப்படையில் மாற்றி அமைப்பதும் கட்சியின் தனி ஸ்தாபனங்களை மறைமுக நடவடிக்கைகளின் நோக்கங்களுக்கு ஏற்பப் பிரிப்பதும் இரகசியம் வெளிப்படுவதற்கான வாய்ப்புக்களை இயன்ற அளவு குறைப்பதும் சூழ்நிலை காரணமாகத் தேவைப்பட்டன.

மற்றவற்றுக்கு முன் செக்கோஸ்லோவாக்கியக் கட்சி தனது ஸ்தாபனத்தை மாற்றி அமைக்க வேண்டியதாயிற்று. ஸ்லோவாக்கியாவில் உருவான தனிப்பட்ட நிலைமைகள் காரணமாக 1939, மே மாதம் ஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி அமைக்கப்பட்டது, அதன் இரகசியத் தலைமை ஏற்படுத்தப்பட்டது. செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அரசியல் போக்கின் ஒருமையும் பொதுத் தலைமையும் அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டன. இரகசிய நிலையங்களின் [தொகுப்பை நிறுவுவதிலும்

கட்சி ஊழியர்களை மறு வினியோகம் செய்வதிலும் மிகப் பெரிய வேலை செய்யப்பட்டது.

யுத்தம் காரணமாக பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியும் புதிய கட்சி ஸ்தாபன அமைப்பு முறையை வகுத்தது. மூன்று பெயர் கொண்ட குழு முதற்படி ஸ்தாபனம் ஆயிற்று. அதன் தலைவன் மட்டுமே மற்ற இரு தோழர்களை அறிந்திருந்தான். அவனே அடுத்த கட்சிக் கணுவுடன் தொடர்பு கொண்டான். கட்சி அமைவின் அடிப்படையாக விளங்கியது இந்தக் கோட்பாடு. மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் கட்சி வேலை அனைத்தையும் தலைமை ஏற்று நடத்தினார்கள். நாடு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததால், வடக்கு (பகைவர் வசம் இருந்த) பகுதியில் இருந்த மத்தியக் கமிட்டி தெற்கு (பகைவர் வசம் இல்லாத) பகுதியில் தன் பிரதிநிதிக் குழுவை 1940, ஜூலையில் ஏற்படுத்தியது. கட்சியின் ஒற்றுமையைக் காப்பாற்றவும் இரகசியம் வெளிப்படும் அபாயத்தை மிக மிகக் குறுக்கவும் இந்த ஏற்பாடு உதவியது. அதே சமயம் விரிவான வெகுஜனங்களுடன் கம்யூனிஸ்டுகள் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஓரளவு இடர்ப்பாடுகள் நேர்ந்தன. இதைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டு அகிலம் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்கு விடுத்த யோசனைகளில், "அனுதாபம் உள்ள, உதவி செய்கிற வெகுஜனச் சூழலைக்" கட்சி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் "வெகுஜனங்களின் அன்றாடத் தேவைகளின் பொருட்டுப் போராடுவதன் அடிப்படையில் வெகுஜனங்களுக்கிடையே தனது செல்வாக்கை அரசியல் நோக்கிலும் ஸ்தாபனரீதியிலும் நிலைப்படுத்த வேண்டும்"[1] என்றும் வலியுறுத்தியது. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள் இரகசிய வேலையை நடவடிக்கைகளின் சட்டபூர்வமான வடிவங்களுடன் திறமையாக ஒன்றிணைக்க முயன்றார்கள். சட்டபூர்வமான ஸ்தாபனங்களில், உதாரணமாக, விஷி அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட தொழிற் சங்கங்களில் அவர்கள் பங்கு கொண்டார்கள். வட்டாரங்கள் அல்லது தொழிற்சாலைகளின் மக்கள் கமிட்டிகள், பிரெஞ்சு மாதர் சங்கம், கம்யூனிஸ்டு இளைஞர் சங்கம் போன்ற சட்டப் புறம்பான ஸ்தாபனங்களை வழிகாட்டி நடத்தினார்கள். தோல்வியில் முடியக் கூடிய துர்ச்சாகசச் செயல்களுக்குக் கம்யூனிஸ்டுகள் இடம் கொடுக்கவில்லை. அதே சமயம், ஆக்கிரமிப்பாளர்களை எதிர்ப்பதற்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1326.

கான சாத்துவிக வடிவங்களுக்கும் அவர்கள் எதிரிகளாய் இருந்தார்கள். வெகுஜனங்களுடன் தங்கள் தொடர்புகளை வலுவாக்கி விரிவுபடுத்தி, மக்களின் தேசிய-விடுதலைப் போராட்டத்தில் தங்கள் தலைமைப் பங்கை ஆற்றுவதற்குத் தேவையான முதனிலைகளைக் கம்யூனிஸ்டுகள் உருவாக்கினர்கள்.

இடையருது வேலை செய்யும் நிலையான கட்சித் தலைமை மையங்கள் அமைக்கப்படுவது அனேக நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலைக்குச் சிறப்பான முக்கியத்துவம் பெற்று விட்டது. ஜெர்மானிய, இத்தாலிய, ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இத்தகைய அமைப்பு முதன்மையாகத் தேவைப்பட்டது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தலைமைக் குழு (போலிட்பியூரோ) வால் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் துணையுடன் தயாரிக்கப்பட்டு அதன் ஒப்புதலைப் பெற்ற ''ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைத்திட்டத்தில்'', பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் எல்லாத் துறைகளிலும் கட்சி தலைமைப் பாத்திரம் வகிக்க ஏற்பாடு செய்வதன் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டது. இதன் தொடர்பாக, கட்சியின் செயல்முறைத் தலைமையை ஜெர்மானியப் பிரதேசத்திலேயே அமைப்பது என்றும் அது ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டிக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தப் பணியை நிறைவேற்றுவது மிக மிகக் கடினமாக இருந்தது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி தன் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளை—அனுபவம் முதிர்ந்த கட்சித் தலைவர்களை—ஜெர்மனிக்கு அனுப்பியது. தொழில்நிலையங்களிலும் வட்டாரங்களிலும் பிரதேசங்களிலும் நிலவும் கட்சி ஸ்தாபனங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதும் அவை இல்லாத இடங்களில் புதிய தலைமை உறுப்புக்களை நிறுவுவதும் இவ்வாறு, நாட்டில் கட்சியின் மையப்படுத்தப்பட்ட செயல் தலைமையை அமைப்பதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்வதும் இந்தப் பிரதிநிதிகளின் பொறுப்பாக இருந்தது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மறைமுக ஸ்தாபனங்களை ஒன்றிணைக்கக் கூடியதும் அவற்றின் செயல்களை ஒருங்கிசைக்க வல்லதுமான பெர்லின் மாவட்ட அலுவலகத்தை அமைப்பதில் அவர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்தினர்கள். பெர்லின் மாவட்டக் கமிட்டியை அடித்தளமாகக் கொண்டு ஜெர்மனி அனைத்திற்கும் செயல் தலைமை மையம் ஏற்படுத்துவது சாத்தியமாய் இருந்தது. பெர்லின் மறைமுகக்

கட்சி ஸ்தாபனங்களின் ஒன்றித்த தலைமை 1940ல் ராபெர்ட் உரீகின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. அது கணிசமான ஸ்தாபன வேலை செய்தது, மற்ற நகரங்களின் கம்யூனிஸ்டுக் குழுக்களுடன் தொடர்பு கொண்டது, நாட்டின் அனேக வட்டாரங்களின் கம்யூனிஸ்டுக் குழுக்களை வழிகாட்டி நடத்தத் தொடங்கியது. ஆயினும், இரகசிய வேலையின் மிகக் கடுமையான நிலைமைகள் காரணமாக ஜெர்மனியில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல் தலைமை 1943 நவம்பரில்தான் ஏற்படுத்தப்பட்டது.[1]

நாட்டில் தலைமை மையம் ஏற்படுத்தும் பிரச்சினை இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் இவ்வாறே கடுமையாக எதிர்ப்பட்டது. பாரிஸ் நகரில் 1939, ஆகஸ்டு மாதம் நடந்த இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி மகாநாட்டில் இதைப்பற்றித் தீர்மானம் செய்யப்பட்டது. யுத்தமும் 1939-1940ல் பிரான்சில் நடந்த நிகழ்ச்சிகளும் இந்தத் தீர்மானத்தைச் செயல்படுத்தத் தடையாய் இருந்தன. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அயல்நாட்டுத் தலைமைக் குழு அப்போது பிரான்சில் இருந்தது. இத்தாலியுடன் அதன் தொடர்புகள் இடைமுறிக்கப்பட்டன. அயல்நாட்டுத் தலைமைக் குழுவும் பிரெஞ்சு அதிகாரிகளின் அடக்குமுறைகளுக்கு உள்ளாயிற்று. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்த நிலைமையை ஆராய்ந்து, ப. தளியாத்தியின் தலைமையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தாற்காலிக அயல்நாட்டுத் தலைமை அலுவலகத்தை மாஸ்கோவில் 1940, ஆகஸ்டு மாதம் அமைத்தது. இத்தாலியில் வலிமையுள்ள மறைமுக ஸ்தாபனத்தையும் கட்சித் தலைமை மையத்தையும் அமைக்கும் வேலையை அது தொடங்கியது. உம்பேர்த்தோ மஸ்ஸோலா இத்தாலிக்கு அனுப்பப்பட்டார். 1941ம் ஆண்டுக் கோடையில் மிலான், தூரீன் நகரங்களில் இருந்த மறைமுகக் கட்சி ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொள்ள அவருக்கு வாய்த்தது. 1941 ஆகஸ்டு 1ந் தேதி, கட்சியின் உள்நாட்டுத் தலைமை மையம் மிலானில் மீண்டும் வேலை தொடங்கியது.[2]

ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் இவையே போன்ற பணிகள் எதிர்ப்பட்டன. யுத்தம் மூண்ட தறுவாயில் அரசியல்

[1] Geschichte der deutschen Arbeiterbewegung. Bd. 5. Berlin, 1966, S. 253, 256, 258, 280, 282, 398.

[2] இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முப்பது ஆண்டு வாழ்க்கையும் போராட்டமும், பக்கங்கள் 402, 656.

பயங்கர முறைகளின் விளைவாகக் கட்சி மிகவும் பலவீனம் அடைந்திருந்தது. தனித் தனிக் கம்யூனிஸ்டுக் குழுக்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாமல் வேலை செய்து வந்தன. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிலைமையைப் பற்றி ஆலோசனை செய்து, நாட்டில் கட்சித் தலைமையை ஏற்படுத்துவதும் கம்யூனிஸ்டுக் கட்சியை வலுப்படுத்துவதும் ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மையப் பணி என்று 1940, ஜனவரியில் சுட்டிக் காட்டியது. கட்சி வெகுஜனங்களுடன் இணைந்த உறுதியான ஸ்தாபனங்களின் தொகுப்பாக இருக்க வேண்டும் என்று அது கூறியது. வேறு சொற்களில் கூறினல், மையப் படுத்தப்பட்ட, ஒன்றித்த கட்சியை நிறுவுவது ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முக்கியப் பணி என்று செயற்குழுச் செயலகம் வலியுறுத்தியது. 1940, ஆகஸ்டில் செயற்குழுச் செயலகம் ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபனப் புனரமைப்பின் சில விளைவுகளைப் பரிசீலனை செய்து, கட்சியின் சில வெற்றிகளைக் குறித்தது. நாட்டில் கட்சித் தலைமை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனுல் அது அனேக வட்டாரங்களுடன் இன்னும் தொடர்பு கொள்ளவில்லை. நாட்டின் சில பகுதிகளில் பிரதேச, மாவட்டக் கட்சித் தலைமை மையங்கள் இயங்கின. கட்சியின் மையச் செய்தித்தாள் மீண்டும் பிரசுரமாகத் தொடங்கி இருந்தது. ஆயினும் புடாபெஸ்ட் நகரில் ஒன்றித்த கட்சி ஸ்தாபனம் இல்லாதது, ஹங்கேரியில் மையப் படுத்தப்பட்ட கட்சி இன்னும் இல்லை என்பதைக் காட்டியது எனச் செயற்குழு குறிப்பிட்டது.[1] 1940ம் ஆண்டு வசந்தத்திலும் கோடையிலும் கம்யூனிஸ்டுகள் பெருத்த எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டது கட்சியை விரிவுபடுத்தும் வேலையை மிகுந்த கடினம் ஆக்கிற்று. எனினும் இந்த இடர்களை எல்லாம் பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்டு ஸ்தாபனங்களின் தொகுப்பையும் மையத் தலைமையையும் நிறுவுவதற்கான வேலை தொடர்ந்து நடந்தது. 1941, ஜனவரியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி நாட்டிலேயே இயங்கத் தொடங்கியது. கட்சியின் பிரதேச, உற்பத்தி வகைப்பட்ட ஸ்தாபனங்களின் தொகுப்பு உருவாயிற்று. இவற்றில் புடாபெஸ்டுக் கட்சிக் கமிட்டியும் ஒன்று. கம்யூனிஸ்டு மையக் குழுக்களும் கமிட்டிகளும் சட்டபூர்வமான தொழிலாளர் ஸ்தாபனங்களுக்குள் உருவாயின. இதனுல் மையக் குழுக்களுக்குச்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1323.

சட்டபூர்வமான மறை காப்பு கிடைத்தது. மறைமுக வேலை நிலைமைகளுக்கு யாவற்றையும்விட ஏற்றதாக இருந்தது இது. மையப்படுத்தப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சியும் அதன் தலைமையும் நாட்டில் மீண்டும் அமைக்கப்பட்டதனுல் ஹங்கேரியக் கம்யூனிஸ்டுகளுக்கு வெகுஜனங்களுடன் தங்கள் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளவும் ஒன்றித்த பாசிஸ எதிர்ப்புக் கூட்டணியின் பொருட்டுப் போராடவும் வாய்ப்பு கிடைத்தது.

ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கியதனுல் அமெரிக்க ஐக்கிய நாடுகளினது கம்யூனிஸ்டுக் கட்சி செயலாற்றுவதற்கான நிலைமைகளும் முன்னைவிடக் கடினம் ஆயின. அதிகாரிகள் கம்யூனிஸ்டுக் கட்சியை முன்னிலும் அதிகமாகத் தொல்லைப்படுத்தினுர்கள். கட்சியின் சில பிரபல தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். **1940**ம் ஆண்டு அக்டோபர் மாதம் அமெரிக்கக் காங்கிரஸ் ஒரு சட்டம் நிறைவேற்றியது. இதன்படி சர்வதேச ஸ்தாபனத்தில் உறுப்பு வகிக்கும் உரிமை கம்யூனிஸ்டுக் கட்சியிடமிருந்து உண்மையில் பறிக்கப்பட்டது. உருவாகி இருந்த நிலைமையைப் பரிசீலனை செய்யும் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சியினது அசாதாரணக் காங்கிரஸ் நியூயார்க்கில் **1940**, நவம்பரில் கூடியது. காங்கிரஸ் பாட்டாளிவர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளின் பால் கட்சியின் திட விசுவாசத்தை உறுதிப்படுத்தியது. சட்டம் ரத்து செய்யப்படுவதற்காக ஓய்வின்றி உழைப்பது என்று அது முடிவு செய்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்துடன் தனது ஸ்தாபனத் தொடர்பைத் துணித்துக் கொள்வதாகக் காங்கிரசின் தீர்மானம் கூறியது. கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக்குழு ''அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சியினது அசாதாரணக் காங்கிரசின் தீர்மானம் அரசியல் நோக்கப் பொருத்தம் உள்ளது என்றும் சரியானது என்றும் கருதுவதாக'' **1940**, டிசம்பர் மாதம் அறிவித்தது. ''அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தொழிலாளர்களுடைய புரட்சிகர வர்க்கக் கட்சியை அழிக்கும் நோக்கத்துடன் அமெரிக்காவின் பிற்போக்கு பூர்ஷ்வா வர்க்கம் செய்யும் முயற்சிகளைப் பொருட்படுத்தாமல் அமெரிக்கக் கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வில் தங்கள் பிரசாரத்தையும் நடவடிக்கைகளையும் விரிவுபடுத்துவதில் வெற்றி அடைவார்கள்....''[1] என்ற நம்பிக்கையை அது வெளியிட்டது.

[1] மை. ஆ. கூ., 495/2/276/ 3-4.

அதே சமயம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி சர்வதேச ஸ்தாபனத்திலிருந்து வெளியேறியது சந்தர்ப்ப வாத, திரிபுவாதப் போக்குகளுக்குப் புதிய வாய்ப்பு அளித்தது. இவற்றை வெளியிட்டார் புரௌடர்.

யுத்த நிலைமைகள் காரணமாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் உதவியுடன் செய்யப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஸ்தாபனப் புனரமைப்பு அவற்றின் போராட்டத் திறனை உயர்த்தியது. மிக மிகச் சிக்கலான நிலைமைகளில் செயலாற்றியவாறு அவை தங்கள் ஸ்தாபன அமைப்பை வலுப்படுத்தின, தேசிய, சமுதாய விடுதலை யின் பொருட்டு மக்களின் போராட்டத்தில் தலைமை இடங்களைப் பெற்றன.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் உதவி

ஐரோப்பாவில் மும்முரமாக நடந்து கொண்டிருந்த யுத்தத் தின் நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் முக்கிய கவனம் ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல் மீது பதிந்திருந்தது, ஆயினும் ஆசிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி களுடைய வேலையை அது புறக்கணித்து விடவில்லை. முதன்மை யாகச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகளை அது கூர்ந்து கவனித்து வந்தது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி ஜப்பானிய ஆக்கிரமிப் பாளர்களுக்கு எதிராக மக்களின் போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்திவந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிர சின் முடிவுகளுக்கு இணங்க வகுக்கப்பட்ட புதிய செயல்தந்திரத் தைக் கடைப்பிடித்தவாறு நாட்டில் ஒன்றித்த ஜப்பானிய எதிர்ப்பு தேசியக் கூட்டணி அமைப்பதில் அது வெற்றி பெற்றிருந்தது.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகள் பற்றிய பிரச் சினை கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக்குழுவின் 1940, ஜனவரியிலும் மார்ச்சிலும் நடந்த கூட்டங்களில் ஆராயப் பட்டது.

ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத் திற்கு மக்கள் சக்திகளை அணி திரட்டுவதில் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி பெரிய வேலை செய்திருக்கிறது என்றும் ஒன்றித்த ஜப்பானிய-எதிர்ப்பு தேசியக் கூட்டணிச் செயல்தந்திரத்தை அது

விடாப்பிடியாகக் கடைப்பிடித்து வருகிறது என்றும் செயற்குழுத் தலைமைக்குழு தன் தீர்மானங்களில் குறிப்பிட்டது. ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு உண்மையான எதிர்ப்பை ஒழுங்கமைப்பதற்காகவும் தேசிய-விடுதலைப் போரில் மக்களின் வெற்றிக்காகவும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்திய போராட்டம் சீன மக்களின் விதிக்கு மட்டும் இன்றி, காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த எல்லா மக்களுக்கும் மிகப் பெரிய முக்கியத்துவம் உள்ளது என்று செயற்குழுத் தலைமைக்குழு அழுத்திக் கூறியது. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகச் சீன மக்களின் போராட்டத்தில் அவர்களுடன் ஒருமைப்பாடு தெரிவிக்கவும் அவர்களுக்கு உதவி அளிக்கவும் விரிவான இயக்கம் நடத்தும் படி தலைமைக்குழு எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் அறைகூவி அழைத்தது. அதே சமயம், ''ஜனநாயக மத்தியத்துவம் உட்கட்சி ஜனநாயகம் என்னும் போல்ஷிவிக் கோட்பாடுகள் ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிக்கப்படாதது குறித்து (சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி போராட்டம் நடத்திய அசாதாரணமாகக் கடினமான நிலைமைகள் இதற்குப் பெருமளவு காரணம் என்றாலும்)'' சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் கவனம் ஈர்க்கப்பட்டது. ''11 ஆண்டுக் காலத்தில் கட்சியின் காங்கிரஸ் நடக்கவில்லை. இந்தக் காலத்தில் பொதுக் கட்சி மகாநாடு ஒன்றுகூடக் கூட்டப்படவில்லை. இதன் விளைவாக மத்தியக் கமிட்டி உறுப்பினர்களிலும் வேட்பாளர்களிலும் 80 சதவிகிதத்தினர் தேர்தல் இன்றிச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கட்சியின் தலைமை உறுப்புக்களில் பாட்டாளி வர்க்க நபர்களை ஈடுபடுத்துவது குறித்த ஆறாவது காங்கிரசின் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை (சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தற்போதைய உறுப்பினர்களில் 11 சதவிகிதம் மட்டுமே தொழிலாளர்கள்)''[1] என்று தலைமைக் குழுவின் தீர்மானம் கூறியது.

அடுத்த காங்கிரசுக்காகச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியால் தயாரிக்கப்பட்டிருந்த அடிப்படையான அரசியல் தீர்மானங்களுக்குச் செயற்குழுத் தலைமைக்குழு ஒப்புதல் அளித்தது.[2]

---

[1] மை. ஆ. கூ., 495/2/275/15.

[2] சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஏழாவது காங்கிரஸ் 1945 ஏப்ரல்—ஜூனில் தான் நடந்தது.

இவை, தலைமைக் குழுவால் நியமிக்கப்பட்ட கமிட்டியுடன் சேர்ந்து சீனக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களால் தயாரிக்கப்பட்டன. குவோமிந்தானில் உள்ள பிற்போக்காளர்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்குமுன் சரணுகதி அடையும் அபாயத்தை நீக்குவதற்காகச் சீன மக்களை அணி திரட்டுவது மையப் பணியாக வைக்கப்பட்டது. ஒன்றித்த ஜப்பானிய எதிர்ப்பு தேசியக் கூட்டணிச் செயல்தந்திரத்துக்கும் இந்தக் கூட்டணியை நிலையாக வைத்திருக்கவும் வலுப்படுத்தவும் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆயத்தத்துக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சீன மக்களின் தேசிய-விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாகத் தலைமை தாங்கி நடத்துவதற்குக் கம்யூனிஸ்டுக் கட்சி அனைத்துச் சீனக் கட்சியாக மாறுவதும் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளில் உறுதியான செல்வாக்கு பெறுவதும் அவசியமாய் இருந்தன. இந்த நோக்கத்துடன் கம்யூனிஸ்டுக் கட்சி முதன்முதலாக "சீனுவின், சிறப்பாக ஜப்பானியர் வசம் இருந்த தொழில் பிரதேசங்களின் விரிவான தொழிலாளி வர்க்க வெகுஜனங்களோடு" தனது தொடர்பின்மைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், "ஜப்பானியர் வசமிருந்த பிரதேசங்களிலும் சீனுவின் எஞ்சிய நிலப்பரப்பிலும் தொழிலாளர்களிடையே விரிவாக வேலை செய்ய வேண்டும், தொழிலாளர்களைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அணிகளில் சேர்க்கும் பணியைத் தீவிரப்படுத்த வேண்டும், கட்சியின் தலைமை உறுப்புக்களில் பாட்டாளி வர்க்க ஊழியர்களின் விகிதத்தை அதிகமாக்க வேண்டும்"[1] என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அறிவுறுத்தியது.

இந்தத் தீர்மானங்கள் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அதன் நடவடிக்கைகளில் சரியான திசையைக் காட்டின.

பாசிஸ எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் ஒன்று சேர்க்கும் பொருட்டு

ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருந்த நாடுகளில் எல்லாத் தேசபக்த சக்திகளையும் பாசிஸ்டு அடிமைத்தனத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றுசேர்க்கும் பணிக்குக் கம்யூனிஸ்டுகள் பாசிஸ

[1] மை. ஆ. கூ., 495/2/275/13.

தங்கள் தாய்நாட்டின் வருங்காலத்தைப் பற்றிக் கவலை கொள் பவர்களுமான எல்லா இத்தாலியர்களையும் தங்கள் சக்திகளை ஒன்று திரட்டி, யுத்தத்தின் மிக விரைவான முடிவுக்காகவும் விடுதலைக் காகவும் இத்தாலிய மக்களின் நலவாழ்வுக்காகவும் சுதந்திரத்துக் காகவும் உறுதியாகப் போராடும்படி''[1] இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி 1941, மே மாதம் மறுபடி அறைகூவி அழைத்தது. 1941, அக்டோபர் மாதம் வெளிநாட்டில் (பிரான்சில்) ''இத்தாலிய மக்களை ஒன்றிணைப்பதற்கான போராட்டக் கமிட்டி'' அமைக் கப்பட்டது. கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டுக் கட்சிகள், ''நியாயமும் விடுதலையும்'' குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதன் உறுப்பினர் ஆனார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பாசிஸ எதிர்ப்புச் சக்திகளையும் ஸ்தாபனங்களையும் ஒன்றுசேர்க்கும் செயல்திட்டத்தைத் தயாரிப்பதில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடையறாத உதவி அளித்து வந்தது. மக்கள் கூட்டணிக்காகப் போராடுவதற் குரிய கொள்கைத் திட்டம் வகுக்கும்படி ருமேனியக் கம்யூ னிஸ்டுக் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் 1940, ஆகஸ்டில் யோசனை கூறியது. ''ருமேனியாவை யுத்தத்தில் இழுத்துவிடுவதற்கு எதிராகவும், நாட்டை ஜெர் மானிய ஏகாதிபத்தியத்தின் பின் இணைப்பாக மாற்றுவதற்கு எதிராகவும் சமாதானத்தின் பொருட்டும் சோவியத் யூனியனுடன் நெருங்கிய நட்பின் பொருட்டும்'' போராடுவது இதன் நோக்கம். முக்கியமான ஜனநாயகக் கோட்பாடுகள் அதில் பிரதிபலிக்க வேண்டும் என்று செயற்குழு அறிவுறுத்தியது. இந்தக் கோட்பாடு கள் ஆவன: அண்டை நாடுகளின் மக்களுடன் ஏற்படும் எல்லா விவாதங்களும் சமாதான முறையில் தீர்க்கப்படுவது, எல்லாவித நாட்டின ஒடுக்குமுறையையும் அகற்றுவது, பொதுக் குற்றமன்னிப் புக்காகவும் உழைப்பாளிகளின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் (கூட்டம் கூடும் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், ஸ்தாபன சுதந்திரம்) உழைப்பாளிகளின் நிலைமையைக் கணிசமாக மேம் படுத்துவதற்காகவும் போராடுவது. முடிவில் பின்வருமாறு எழு தும்படி செயலகம் யோசனை கூறியது: ''இந்தக் கோரிக்கைகளுக் காகப் போராடத் தயாராய் இருக்கும் எல்லா அரசியல் குழுக்

[1] இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முப்பது ஆண்டு வாழ்க் கையும் போராட்டமும், பக்கம் 485.

களுடனும் நபர்களுடனும் கம்யூனிஸ்டுக் கட்சி ஒத்துழைக்கும்.''[1] இந்த நகல் திட்டத்தின் அடிப்படையில் ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சி ''சமாதானத்துக்காகவும் ருமேனிய மக்களின் தேசிய சுதந்திரத்துக்காகவும்'' என்னும் தஸ்தாவேஜைத் தயாரித்து 1941, ஜனவரி மாதம் வெளியிட்டது. பாசிஸ எதிர்ப்புச் சக்திகளை ஒன்று திரட்டும் செயல்திட்டமாக விளங்கியது இது. மேலே குறித்த கோரிக்கைகள் இதில் விவரிக்கப்பட்டிருந்தன. ருமேனிய மக்களின் தேசிய சுதந்திரத்தைக் காப்பது என்னும் ஒரே நிபந்தனையின் பேரில் இவற்றில் எக்கோரிக்கையின் நிறைவேற்றத்துக்காகவும் எல்லா தேசபக்தர்களுடனும் ஒத்துழைக்கத் தயாராய் இருப்பதாகக் கம்யூனிஸ்டுக் கட்சி அறிவித்தது. பாசிஸ எதிர்ப்புச் சக்திகளை ஒன்றித்த கூட்டணியாக இணைப்பதற்கு அப்போது ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வாய்க்கவில்லை. இதற்கு முக்கியக் காரணம் வலதுசாரி சோஷலிஸ்டுத் தலைவர்களும் பூர்ஷ்வா-நிலப்பிரபுக் கட்சிகளின் தலைமையும் ஆற்றிய எதிர்ச் செயல்கள். ஆயினும் தனது முன்முயற்சியால் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டில் வருங்கால பாசிஸ எதிர்ப்புக் கூட்டணிக்கு அடிக்கல் நாட்டியது.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி யுத்தத்தின் முதல் காலப்பகுதியில் பாசிஸ எதிர்ப்புச் சக்திகளை ஒற்றுமைப்படுத்துவதில் பெருத்த வெற்றிகள் அடைந்தது. ''பிரான்சின் விடுதலை, சுதந்திரம், மறுமலர்ச்சி'' என்ற கோஷத்துடன் கட்சி பல்வேறு உதவிக் கமிட்டிகள் அமைப்பதில் ஒத்துழைத்தது. இவை பாசிஸ எதிர்ப்பாளர்களை ஒன்றிணைப்பதில் முக்கியப் பங்கு ஆற்றின. ''உழைப்பாளி சோஷலிஸ்டுக்குக் கடிதம்'' என்ற நிருபத்தின் ஒரு லட்சம் பிரதிகளைக் கம்யூனிஸ்டுக் கட்சி 1940, இலையுதிர் காலத்தில் வெளியிட்டது. தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையைச் செயல்படுத்த வேண்டும் என்றும் இந்த ஒற்றுமையே நாட்டினத்தைக் காப்பதற்குரிய நிர்ணயகரமான நிபந்தனையாகும் என்றும் கடிதத்தில் கூறப்பட்டது. உழைப்பாளி விவசாயிகளுடனும் அறிவுஜீவிகளுடனும் நகர நடுத்தர வகுப்பாருடனும் தொழிலாளி வர்க்கத்தின் நிலையான ஐக்கியத்தை ஏற்படுத்தும் பொருட்டுக் கட்சி பெரு முயற்சி செய்தது. 1940ம் ஆண்டின் இறுதியில் ''உழைப்பாளித் தீவிரவாதிக்குக் கடிதம்'' வெளியிடப்பட்டது. விவசாயிகளுக்கும் அறிவுஜீவிகளுக்கும் இவ்வாறே வேண்டுகோள்களைக் கட்சி பிரசுரித்தது.

---

[1] மை. ஆ. கூ., *495/18/1323.*

1941, மே 15ந் தேதி பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி மக்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தது. அதில் பின்வருமாறு கூறப்பட்டது: ''தேசிய சுதந்திரம் என்னும் புனிதக் குறிக்கோளுக் கான போராட்டத்தில் நாட்டினத்தின் ஒற்றுமையைச் செயல் படுத்தும் ஒரே நோக்கத்தால் தூண்டப்பட்டு, பிரெஞ்சுக் கம்யூ னிஸ்டுக் கட்சி முதன்மையாக நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஆழ்ந்த முறையில் பின்வருமாறு அறிவிக்கிறது: பிரான்ஸ் அனுபவித்துவரும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தொண்டு புரியும் துரோகிகளுக்கு எதிராகவும் பயனுள்ள போராட்டம் நடத்துவதை நோக்கமாகக் கொண்டு பாடுபடும் எந்த பிரெஞ்சு அரசாங்கத்துக்கும் எந்த ஸ்தாபனத்துக்கும் எந்த நபர்களுக்கும் விரிவான தேசிய சுதந்திரக் கூட்டணி அமைக்கும் பொருட்டு ஆதரவளிக்க அது தயாராய் இருக்கிறது''.[1]

இந்த அறிக்கை பிரெஞ்சு தேசபக்தர்களால் உற்சாகமாக வரவேற்கப்பட்டது. விரைவில் தேசியக் கூட்டணி அமைக்கப் பட்டது. தொழிலாளர்கள் விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், வியாபாரிகள், அறிவுஜீவிகள், பாதிரிகள் ஆகியோரின் பிரதிநிதி கள் இதில் சேர்ந்தார்கள். தேசியக் கூட்டணியின் தலைமைச் சக்தியாக இயங்கியது கம்யூனிஸ்டுக் கட்சி. நாளடைவில் தேசியக் கூட்டணி பிரான்சின் மிக விரிவான, மிக அதிகமாகச் செயல் ஆற்றும் பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனம் ஆகிவிட்டது.

நார்வே, பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், ஆகிய நாடு களின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்றித்த பாசிஸ எதிர்ப்புக் கூட்டணி அமைக்கும் கொள்கைப் போக்கைக் கடைப்பிடித்தன. மக்கள் இனங்களின் விடுதலைப் போராட்டத்தில் மாபெரும் பங்கு ஆற்றவிருந்த ஒற்றுமைக்கு இவை அடி கோலின.

பாசிஸ்டு ஆக்கிரமிப்பு தொடர்ந்து அதிகரித்த காரணத்தால் இத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்துவதும் போராட்டத்துக்கு மக்களை அணிதிரட்டுவதும் மிக மிக உடனடியாகத் தேவைப்பட் டன. மேற்கு ஐரோப்பாவின் அனேக நாடுகளைக் கைப்பற்றிய பின்னர் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்கள் பால்கன் நாடுகளைக் கைப் பற்றும் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்த முற்பட்டார்கள். பாசிஸ்டுகளின் அடிமைகள் ஆகும் அபாயம், பல்கான் அரசுகள்

[1] மொரிஸ் தோரேஸ். மக்களின் மைந்தன், பக்கம் 167-168.

ஜெர்மானிய-இத்தாலிய பாசிஸத்தை அண்டிப் பிழைப்பவை ஆகிவிடும் அபாயம் பல்கான் மக்களினங்களுக்கு எதிர்ப்பட்டது.

1940, அக்டோபர் மாதம் பாசிஸ்டு இத்தாலி கிரீஸ் நாட்டைத் தாக்கியது. பதிலாக கிரேக்க மக்கள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராட்டத்துக்கு எழுந்தார்கள். கிரீஸ் நாட்டின் கம்யூனிஸ்டுக் கட்சி ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துத் தாக்கும்படி மக்களை அறைகூவி அழைத்தது. ''முசோலினியின் பாசிஸம் கிரீஸ் நாட்டின் உறுதியைக் குலைத்து அதை அடிமைப்படுத்தும் பொருட்டு வெட்கக் கேடான முறையில் நம்பிக்கைத் துரோகம் செய்து, பதுங்கி இருந்து கிரீசைத் தாக்கி இருக்கிறது'' என்று கூறியது கிரீசின் கம்யூனிஸ்டுக் கட்சி விடுத்த செய்தி. ''இப்போது கிரேக்கர்களாகிய நாம் நம்முடைய விடுதலைக்காகவும் கௌரவத்துக்காகவும் சுதந்திரத்துக்காகவும் போரிடுகிறோம்.''[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் 1941, ஜனவரி மாதத் தொடக்கத்தில் நடந்த தனது கூட்டத்தில் கிரீஸ் நாட்டின் நிலைமை பற்றி ஆலோசித்தது. கிரீசின் மீது இத்தாலிய ஏகாதிபத்தியத்தினது படையெடுப்பின் நோக்கம் கிரேக்கப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதும் கிரேக்க மக்களை அயல் நாட்டினரின் ஆதிக்கத்துக்குக் கீழ்ப்படுத்துவதும் என்றும் நாட்டின் சுதந்திரம் மிகப் பெருத்த ஆபத்துக்கு உள்ளாகி இருக்கிறது என்றும் செயலகம் சுட்டிக்காட்டியது. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடுவதற்கு மக்களை ஒன்றுபடுத்துவதில் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்களைக் கம்யூனிஸ்டு அகிலம் ஆமோதித்தது.

ஜெர்மானிய பாசிஸ்டுப் படைகள் ருமேனியாவிலும் பல்கேரியாவிலும் புகுந்தது இந்த நாடுகளின் தேசிய அரசுரிமைக்கு அபாயம் விளைத்தது. பாசிஸ்டு ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கும் பொருட்டு இந்த நாடுகளைத் தொடக்க முனையாக மாற்ற எண்ணியிருப்பதை இந்த நிகழ்ச்சி காட்டியது. ஜெர்மானியப் படைகள் பல்கேரியாவுக்கு அனுப்பப்பட்டது பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகத்தால் 1941, ஜனவரி மாதம் விசேஷமாக ஆராயப்பட்டது. பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஜெர்மானியப் படைகள் பல்கேரியாவுக்கு அனுப்பப்படு

---

[1] கி.தி. கிரியாக்கிதிஸ். இரண்டாவது உலக யுத்தத்தில் கிரீஸ். மாஸ்கோ, 1967, பக்கம் 65.

வதை உறுதியாக எதிர்க்க வேண்டும் என்றும் ஏனெனில் இதன் விளைவாக பல்கேரிய மக்கள் யுத்தத்தில் இழுக்கப்படுவார்கள் என்றும் இந்தப் பிரச்சினை பற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டது. பல்கேரியப் பிரதேசம் போர்க் களமாக மாறும் அபாயம் இதனுல் விளையும் என்றும் பல்கேரியா சுதந்திர நாடாக நிலவுவதே ஆபத்துக்கு உள்ளாகலாம் என்றும் தீர்மானம் சுட்டிக்காட்டியது. நாட்டில் ஆக்கிரமிப்பாளர் ஆட்சி நிலைநாட்டப்படுவதற்கு எதிராகவும் அதன் பொருளாதார உணவுப்பண்ட வளங்கள் கைப்பற்றப்படுவதற்கு எதிராகவும் வெகுஜன இயக்கம் நடத்துமாறு கம்யூனிஸ்டுக் கட்சிக்கு யோசனை கூறப்பட்டது. 1941, ஜனவரி மாதம் நடந்த கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் நாடு போரில் இழுக்கப்படும் அபாயம் பற்றி ஆலோசித்து, இந்த அபாயத்துக்கு எதிராகவும் சோவியத் யூனியனுல் பிரேரிக்கப்பட்ட நட்பு, பரஸ்பர உதவி உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு ஆதரவாகவும் வெகுஜனப் போராட்டம் விரிவாக நடத்தத் தீர்மானித்தது.[1]

தேசிய சுதந்திரத்திற்காகப் போராடும் பணி ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் எதிர்ப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1941, ஏப்ரல் 20ந் தேதி ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அனுப்பிய கடிதத்தில் இந்தப் பணிகளின்பால் கவனத்தை ஈர்த்தது. ''அடிமைப்படுத்தியிருப்பவர்களின் ஏகாதிபத்திய நோக்கங்களுக்காக ருமேனியா தளமாகவும் ஆயுதமாகவும் பயன்படுத்தப்படுவதை எதிர்த்தும் பால்கன் போரில் ருமேனிய மக்கள் இழுக்கப்படுவதை எதிர்த்தும் மாபெரும் அண்டை நாடான சோவியத் யூனியனுடன் நட்புறவுகள் ஏற்படுத்திக் கொள்வதை ஆதரித்தும் வெகுஜன இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்துவதே'' தற்போது கட்சியின் முதன்மையான பணி என்று கடிதத்தில் கூறப்பட்டது. ''...கட்சியின் முதன்மையான முயற்சிகளும் வெகுஜன வேலையும் தற்போது இந்த முக்கியப் பணியை நிறைவேற்றுவதிலேயே ஒருமுனைப்படுத்தப் பட வேண்டும்.''[2]

தங்கள் நாடுகள் ஜெர்மானிய பாசிஸத்தின் வட்டத்துக்குள் இழுக்கப்படுவதற்கு எதிராக பால்கன் நாடுகளின் கம்யூனிஸ்டுக்

---

[1] பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு. மாஸ்கோ, 1960, பக்கங்கள் 352-353.

[2] மை. ஆ. கூ., 495/74/451/123.

கட்சிகள் ஒத்திசைந்த போராட்டம் நடத்தின. ஆயினும் தேசிய விபத்தைத் தவிர்க்க அவற்ருல் முடியவில்லை.

1941, வசந்தத்தில் ஐரோப்பாவின் பெரும் பகுதி பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களின் காலடியில் கிடந்தது. பாசிஸத்தின் காட்டு விலங்கு வடிவம் மேலும் மேலும் வெளிப்படை ஆயிற்று. மக்களினங்களை முழுமையாகக் கொன்று ஒழிக்கும் அரக்கச் சூழ்ச்சிகள் நாளுக்கு நாள் துலக்கமாகப் புரிந்தன. மனிதகுலத்தின் வாழ்வுக்கு பாசிஸம் எத்தகைய பேராபத்து என்பதைக் கண்டுகொண்ட மக்கள் இந்தப் பழுப்புக் கொள்ளை நோய் பரவாமல் தடுக்கும் முயற்சிகளைத் தீவிரமாக்கிஞர்கள். பாசிஸ்டுகள் வசமிருந்த எல்லா நாடுகளிலும் மக்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சமரசம் அற்ற போராட்டம் நடத்தக் கிளர்ந்து எழுந்தார்கள். யுத்தத்தின் எதார்த்தமான விதிமுறைகளுக்கு ஏற்ற, நியாயமான, பாசிஸ எதிர்ப்புப் போக்கு நாளுக்கு நாள் முன்னணிக்கு வந்தது. யுத்தம் தேசிய-விடுதலைத் தன்மையை மேலும் மேலும் அதிகமாக மேற்கொண்டது.

கிரீஸ் மீதும் யூகோஸ்லாவியா மீதும் பாசிஸ்டு ஜெர்மனியின் படையெடுப்பு ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து இந்த நாடுகளின் மக்களது போராட்டத்தைத் தூண்டி விட்டது. யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி நாடு முழுவதிலும் இராணுவக் கமிட்டிகள் அமைத்தது. ஆயுதங்கள் திரட்டிச் சேமிப்பதும் பாசிஸ எதிர்ப்பாளர்களின் மறைமுக அழிவு வேலைக் குழுக்களை நிறுவி அவற்றுக்குப் பயிற்சி அளிப்பதும் இவற்றின் பணியாக இருந்தது. இந்தக் குழுக்கள் நாளடைவில் தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகளாக மாறின. 1941, ஏப்ரல் 15ந் தேதி யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. தாய்நாட்டின் சுதந்திரத்தின் பொருட்டுப் போராடுவதற்காகத் தங்கள் அணிகளை ஒன்றுதிரட்டும்படி அது அறைகூவி அழைத்தது. ''கம்யூனிஸ்டுகளும் தொழிலாளி வர்க்கம் அனைத்தும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் முன் வரிசைகளில் இருப்பார்கள், இறுதி வெற்றி கிட்டும்வரை தொடர்ந்து போராடுவார்கள்''[1] என்று வேண்டுகோள் கூறியது.

---

[1] Zbornik dokumenta i podataka o narodnooslobodilačkom ratu jugoslovenskih naroda. T. U. kn. I, Beograd, 1952, str. 7.

கிரேக்கக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியும் 1941, மே 31ந் தேதி மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் பொதுக் கொள்கைப் போக்குக்கு இணங்க, கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி தேசிய விடுதலையின் பொருட்டு அனைத்து மக்கள் போராட்டத்தை விரிவாக நடத்தும்படி எல்லா கிரேக்க தேசபக்தர்களையும் முதன்மையாகக் கம்யூனிஸ்டுகளையும் அறை கூவி அழைத்தது. கிரேக்க தேசபக்தர்கள் மனோலிஸ் கிளேஸஸ், அப்போஸ்தலோஸ் ஸந்தாஸ் இருவரும் ஆற்றிய வீரச் செயல் விரிவான எதிர்ப்பு இயக்கம் தொடங்குவதற்கு அடையாளமாகப் பயன்பட்டது. 1941, மே 31ந் தேதி இரவு அவர்கள் அக்ரோப் போலிஸ் மேல் பறந்த பாசிஸ்டுக் கொடியை அகற்றி எறிந்தார்கள். இந்த அருஞ்செயல் பகைவர்களுடன் போராடுவதற்கு அறை கூவலாக மக்களால் புரிந்து கொள்ளப்பட்டது.

முன்னர் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளிலும் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்துவிரிவடைந்தது. பிரான்சில் விசேஷப் போராட்ட ஸ்தாபனத்தின் படைப் பிரிவுகள் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தின. 1941, மே மாத முடிவில் வடக்கு பிரான்சில் ஒரு லட்சம் சுரங்கத் தொழிலாளர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் வேலைநிறுத்தம் செய்தார்கள். 1941 பிப்ரவரி இறுதியில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஐரோப்பாவில் முதலாவது பொது வேலைநிறுத்தம் ஹாலந்து முழுவதிலும் அலையாகப் பரவியது. போலந்தில் ஹிட்லரின் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகச் சில தேசபக்த கொரில்லாப் படைப்பிரிவுகள் ஆயுதமேந்திய போராட்டம் நடத்தின. பெல்ஜியம் நாட்டில் வேலைநிறுத்தங்களின் அலை பரவியது. இவற்றில் கம்யூனிஸ்டுகளும் பங்கு கொண்டார்கள். 1941, மே மாதம் லியேழ் நகரில் நடந்த ஒரு லட்சம் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் இவற்றில் மிகப் பெரியது. நார்வே நாட்டின் தலைநகர் ஓஸ்லோவின் உழைப்பாளிகள் 1941, மே 1ந் தேதி கம்யூனிஸ்டுகளின் தலைமையில் பெருத்த பாசிஸ எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஆக்கிரமிப்பாளர்களின் ஒடுக்குமுறைக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் எதிராக உழைப்பாளிகளின் இந்தப் போராட்டங்கள் கம்யூனிஸ்டுகளுக்கு ஆழ்ந்த பாசிஸ எதிர்ப்புப் பயிற்சி அளித்தன. கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெகுஜன ஒழுங்கமைப்பாளிகள் என்ற முறையில் முன்னணிக்கு வந்தன, வெகுஜனங்களைத் தங்கள்பின்

நடத்திச்சென்றன, மக்களின் விரிவான தேசபக்த வட்டாரங்களுக்குத் தலைமை தாங்கும் விலை மதிப்பற்ற அனுபவம் பெற்றன. யுத்தத்தின் முதல் ஆண்டுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்களின் சில விளைவுகளைத் தொகுத்துரைத்து, ''கம்யூனிஸ்டு அகிலம்'' பத்திரிகை பின்வருமாறு எழுதியது: ''தங்கள் மக்களைக் காத்து, பூர்ஷ்வா வர்க்கத்தின் தன்னலங்களுக்கு எதிராக அவர்களுடைய நலன்களைப் பாதுகாத்துப் போராடி, அதே சமயம், தங்கள் மக்கள் அன்னிய ஏகாதிபத்தியத்துக்கு அடிமைகள் ஆக்கப்படுவதை எதிர்த்துப் போராட்டம் நடத்தி, மற்ற நாடுகளில் ஏகாதிபத்திய நாடுபிடிப்பையும் தங்கள் பூர்ஷ்வா வர்க்கத்தால் பிற நாடுகளின் மக்கள் அடிமைகள் ஆக்கப்படுவதையும் உறுதியாக எதிர்த்து, கம்யூனிஸ்டுகள் உண்மையான பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்குத் தொண்டு ஆற்றுகிறார்கள். ஏனெனில் இந்தச் செயல்களின் மூலம் அவர்கள் தங்கள் மக்களுக்கும் பிற நாடுகளின் உழைப்பாளிகளுக்கும் பயனுள்ள தொண்டு ஆற்றுகிறார்கள்''.[1]

பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துத் தாக்குவதை வலுப்படுத்தும் பொருட்டு வெகுஜனங்களை ஒன்றுதிரட்டுவதில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வெற்றிகள், ஏழாவது காங்கிரஸ் வகுத்த கொள்கைப் போக்கு—நாட்டினத்தின் நலம்வாய்ந்த சக்திகள் யாவற்றையும் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் பொருட்டுக் கூட்டணியாகச் சேர்க்கும் கொள்கைப் போக்கு—பாசிஸ்டு நுகத்திலிருந்து மக்களை விடுவிப்பதற்கான வழியைக் காட்டும் சரியான திசைகாட்டியாக விளங்கியது என்பதற்குச் சான்று பகர்ந்தன.

1941ம் ஆண்டு வசந்தத்துக்குள் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்திற்காக மக்களை ஒன்றுதிரட்டுவதற்கு முக்கியமான முதல் ஏற்பாடுகள் செய்து, அதன் வருங்கால வெற்றிகளுக்கு அடிப்படை அமைத்தன. ஆயினும், ஐரோப்பாவிலும் உலகம் முழுவதிலும் நிலவிய சிக்கலான நிலைமை, முதன்மையான முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வட்டாரங்களுடைய கொள்கையில் இருந்த போர்த்தன்மை கொண்ட கம்யூனிஸ விரோத, சோவியத் எதிர்ப்புப் போக்குகள் ஆகியவற்றின் காரணமாக, யுத்தத்தினது தன்மையின் எல்லா அம்சங்களையும் பாசிஸ எதிர்ப்புச் சக்திகளின் மிக மிக விரிவான கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்புக்களையும் முடிவாகத் தெளிவுபடுத்துவதற்குக் குறித்த அளவு இடர்கள் நேர்ந்தன.

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1941, இதழ் 4, பக்கம் 12.

சோவியத் யூனியன் மீது ஜெர்மனியின் தாக்குதலுக்குப் பிறகு கம்யூனிஸ்டு அகிலம், கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆகியவற்றின் நடவடிக்கைகள்

இரண்டாவது உலக யுத்தத்தின் புதிய கட்டத்தில் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அரசியல் கொள்கைப்போக்கு

சோவியத் யூனியன் மீது நாஜி ஜெர்மனியின் படையெடுப்பு இரண்டாவது உலக யுத்தத்தின் புதிய கட்டத்தைத் தொடங்கி வைத்தது. சோவியத் அரசை அழிப்பதையும் ஜெர்மானிய ''ஆளுவோர் இனத்துக்கு'' ''வாழ்விடம்'' ஏற்படுத்தும் பொருட்டு சோவியத் நிலப்பரப்பைக் கைப்பற்றி அதன் மக்களில் ஒரு பகுதியினரைக் கொன்று ஒழிப்பதையும் எஞ்சிய சோவியத் மக்களைத் தங்கள் அடிமைகள் ஆக்குவதையும் ஹிட்லர் குழுவினர் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிந்ததே. ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள் உலக ஆதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்கும் உலகின் எல்லா மக்களையும் அடிமைப்படுத்துவதற்குமான தங்கள் போராட்டத்தில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தை நிர்ணயகரமான கட்டமாகக் கருதினார்கள்.

1941ம் ஆண்டுக் கோடைக்குள் ஜெர்மனி பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றித் தனக்கு அடிப்படுத்திக் கொண்டது. ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, டென்மார்க், நார்வே, பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க், பிரான்ஸ், அல்பேனியா, யூகோஸ்லாவியா, கிரீஸ் ஆகிய நாடுகள் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களின் காலடியில் கிடந்தன. அவர்கள் இவற்றில் கொடிய பயங்கர ஆட்சிமுறையை நிறுவி இருந்தார்கள். ஆளும் பூர்ஷ்வா-நிலப்பிரபு வட்டாரத்தினரால் பாசிஸ்டு ஜெர்மனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கூட்டணியில் இழுக்கப்பட்ட ஃபின்லாந்து, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா ஆகிய அரசுகள் எதார்த்தத்தில் தங்கள் சுதந்திரத்தை இழந்து ஜெர்மனிக்கு வால் பிடிப்பவையாக மாறி விட்டன.

அனேகமாக ஐரோப்பா முழுவதும் அதன் மக்கட் செல்வமும் பொருள் வளங்களும் நாஜி ஜெர்மனியின் வசம் ஆகிவிட்டன. பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற வலிய முதலாளித் துவ நாடுகளின் சுதந்திரம் கூடச் சந்தேகத்துக்கு இடமாயிற்று.

சோவியத் மக்களின் மாபெரும் தேசபக்த யுத்தம் தொடங்கியதும் இரண்டாவது உலக யுத்தம் பாசிஸ்டு ஆக்கிரமிப்புக் கூட்டணிக்கு எதிர்நின்ற வல்லரசுகளின் தரப்பில் நியாயமுள்ள விடுதலைப் போராக மாறும் நிகழ்முறை நிறைவுபெற்றது. இரண்டாவது உலக யுத்தத்தின் தன்மை அடிப்படையில் மாறிவிட்டது. பாசிஸத்துக்கு எதிராக மக்களின் ஆயுதப் போராட்டத்தின் முன்னணிப் படை ஆயிற்று சோவியத் யூனியன். பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்து அழிப்பது, பாசிஸ அநாகரிகத்திலிருந்து மக்களை விடுவிப்பது என்ற தெளிவான செயல்திட்டத்தை முன் வைத்தது அது. சோவியத் யூனியனை மையமாகக் கொண்டு உலகின் எல்லா ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்தன. சோவியத் யூனியனின் கூட்டாளிகளாகச் சேர்ந்து போரிட்டன பிரிட்டனும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும். மிக மிக வெவ்வேறான அரசியல் சக்திகளால் அமைந்த சர்வதேசக் கூட்டணி வரலாற்றில் முதன் முதலாக உருவாயிற்று. அரசுகளினதும் மக்களினதும் ஹிட்லர் விரோதக் கூட்டணியில் சோவியத் யூனியனும் பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளின் மக்களும் மட்டும் இன்றி மிக வலிய முதலாளித்துவ அரசுகளான பிரிட்டனும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இருந்தன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார நாடு, அரசியல், இராணுவ நோக்கப்பொருத்தத்தின் அடிப்படையில் முதலாளித்துவ வல்லரசுகளின் ஏதேனும் ஒரு குழுவுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள முடியும் என்று உள்நாட்டுப் போர்க் காலத்திலும் அன்னியத் தலையீடு நடந்த ஆண்டுகளிலும் வி.இ. லெனின் அறிவுறுத்தியிருந்தார். ''...ஒரு ஏகாதிபத்தியக் கூட்டணியுடன் மற்றொன்றுக்கு எதிராக இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு, இந்த ஒப்பந்தம் சோவியத் ஆட்சியின் அடிப்படைகளுக்குக் கேடு செய்யாமல் அதன் நிலையை வலுப்படுத்தவும் அதன் மீது ஏதேனும் ஓர் ஏகாதிபத்திய வல்லரசின் தாக்குதலைப் பலவீனப்படுத்தவும் வல்லதாய் இருக்கும் சந்தர்ப்பங்களில்''[1] கம்யூனிஸ்டுகள் மறுக்கவே மாட்டார்கள்

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *27*, பக்கம் *361*.

என்று அவர் கூறினர். ஏகாதிபத்தியவாதிகளின் பரஸ்பர முரண்பாடுகளை உலக சோஷலிஸத்தை வலுப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் படி சோவியத் நாட்டின் கம்யூனிஸ்டுகளுக்கு லெனினது இந்தக் கருத்து வழிகாட்டியது. தவிரவும், நாஜி ஜெர்மனியுடையவும் அதன் கூட்டாளிகளுடையவும் நாடுபிடிக்கும் நோக்கங்கள் உலகம் முழுவதிலும் சோஷலிஸத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் மனிதகுலம் அனைத்தின் வருங்காலத்துக்கும் மிகப் பெரிய அபாயமாக இருந்ததால், பாசிஸ்டுக் கூட்டணிக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது இன்னும் இன்றியமையாததாக இருந்தது.

தங்கள் தேசிய நலன்களுக்கு ஏற்பட்ட அபாயம் காரணமாக அமெரிக்க ஐக்கிய நாடுகளதும் பிரிட்டனுடையவும் அரசாங்கங்கள் சோவியத் யூனியனுடன் ஒத்துழைக்கும் போக்கை வேறு வழியின்றி மேற்கொண்டன. ஆயினும் இந்த நாடுகளின் கடைக்கோடிப் பிற்போக்கு ஏகாதிபத்திய வட்டாரங்கள் சோவியத் எதிர்ப்பு நிலைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தன. ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்து கொள்வதை ஆதரித்தன. பாசிஸ எதிர்ப்புக் கூட்டணியில் பங்கு கொள்வதை எதிர்த்தன. யுத்தம் நடந்த காலம் முழுவதும் இவை வன்மம் நிறைந்த சோவியத் எதிர்ப்புப் பிரசாரம் நடத்தி வந்தன. பாசிஸ்டு ஆக்கிரமிப்புக் கூட்டணிக்கு எதிராகச் செய்யப்பட்ட போர் முயற்சிகளைக் குலைக்கவும் சோவியத் யூனியனைப் பலமிழந்து சோர்வடையச் செய்யவும் இவை முயன்றன. சோவியத் யூனியனும் பாசிஸ்டு ஜெர்மனியும் பலவீனம் அடைந்துவிடும் என்றும் யுத்தத்துக்குப் பின் தங்கள் ஆதிக்க நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் பிரிட்டனுடையவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடையவும் ஆளும் வட்டாரங்களின் கணிசமான பகுதி நம்பியது. பிரிட்டிஷ், அமெரிக்க அரசாங்கங்களின் கொள்கையில் இந்தப் போக்குக்கு மிகத் துலக்கமான எடுத்துக்காட்டு ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை திறப்பதில் செய்யப்பட்ட தாமதம் ஆகும்.

நாஜி ஜெர்மனிக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் எதிரான போரில் பிரிட்டனும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் செய்த இராணுவ முயற்சிகள் குறுகிய தன்மை கொண்டிருந்தாலும் ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணி அமைக்கப்பட்டது பெருத்த சர்வதேச முக்கியத்துவம் உள்ள நிகழ்ச்சியாக இருந்தது. வெவ்வேறு சமூக அமைப்புக்கள் கொண்ட அரசுகளுக்கு இடையே பொதுப் பகை

வனுக்கு எதிரான போராட்டத்தில் ஒத்துழைப்பு சாத்தியம் என்பதை இது காட்டியது.

நாஜி ஜெர்மனிக்கும் ஐரோப்பாவில் அதன் கூட்டாளிகளுக்கும் எதிரான யுத்தத்தின் முக்கியச் சுமையைத் தன்மீது ஏற்றுக் கொண்ட சோவியத் யூனியன் ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியின் தலைமைச் சக்தி ஆகிவிட்டது. சோவியத்-ஜெர்மன் போர்முனை இரண்டாவது உலக யுத்தத்தின் பிரதான முனைமுகமாக விளங்கியது. உலக மக்களது வரலாற்று வளர்ச்சியின் திசையையும் மனிதகுல நாகரிகத்தின் வருங்காலத்தையும் பற்றிய பிரச்சினைகள் இந்த முனையில் முடிவு செய்யப்பட்டன.

ஆக்கிரமிப்பு நாடுகளின் கூட்டணிக்கு எதிராக சோவியத் யூனியனின் விடுதலைப்போர் பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளில் எதிர்ப்பு இயக்கத்தின் வளர்ச்சி மீது மிகப் பெருத்த பாதிப்பு விளைத்தது. சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தம் தொடங்கியது முதல் எதிர்ப்பு இயக்கம் சோவியத்-ஜெர்மன் போர்முனையின் நிகழ்ச்சிப் போக்குடன் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது ஆயிற்று.

சோவியத் யூனியன்மீது ஜெர்மனியின் தாக்குதலுக்குப் பிறகு உருவான சிக்கல் நிறைந்த, கடினமான சூழ்நிலையில், மனிதகுலத்தின் மிகக் கொடிய பகைவனை பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தை வெகுவாகத் தீவிரப்படுத்தும் விரிவான பணி உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு எதிர்ப்பட்டது. மக்கள் இனங்களை அடிமைப் படுவதிலும் அழிக்கப்படுவதிலும் இருந்து காத்து அவற்றின் விடுதலையையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் பொருட்டு, எல்லா முற்போக்குச் சக்திகளையும் நாஜி ஜெர்மனியின் தலைமையில் அமைந்த பாசிஸ்டு அரசுகளின் கூட்டணிக்கு எதிராகப் போராடுவதற்கு ஒன்றிணைப்பது முதற்படியான ஜீவாதாரத் தேவை ஆகிவிட்டது. ஜனநாயக சக்திகளையும் தேசபக்தச் சக்திகளையும் ஒற்றுமைப்படுத்தும் பிரச்சினை யுத்தத்தின் புதிய கட்டத்தில் சிறப்பான முக்கியத்துவம் உள்ளது ஆயிற்று. கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் வகுக்கையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு அதன் ஏழாவது காங்கிரசினுடைய முடிவுகளை வழிகாட்டியாகக் கொண்டது.

ஜூன் 22ந் தேதி செயற்குழுச் செயலகத்தின் கூட்டம் நடந்தது.[1] சோவியத் யூனியன் மீது ஜெர்மனியினது தாக்குதலின்

[1] மை. ஆ. கூ., *495/18/1335/1-3.*

தொடர்பாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள் யாவை என்பது பற்றிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. செயற்குழு அலுவலகத்தின் வேலை அனைத்தையும் உடனடியாக மாற்றி அமைப்பதன் இன்றியமையாமை செயலகத்தின் தீர்மானங்களில் வலியுறுத்தப் பட்டது. திமீத்ரொவ், மனுயீல்ஸ்கி, தளியாத்தி ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. செயற்குழுவின் வேலை அனைத்தையும் நேரடியாக அன்றாடம் வழி காட்டி நடத்தும் பொறுப்பு இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சோவியத் யூனியன் மீது பாசிஸ்டுப் படையெடுப்பின் விளைவாக சர்வதேச அரங்கில் ஏற்பட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கடிதங்கள் அனுப்பியது. சோவியத் யூனியன் மீது ஜெர்மனியின் நம்பிக்கைத் துரோகம் நிறைந்த தாக்குதல் சோஷலிஸத் தாயகத்திற்கு மட்டும் இன்றி உலக மக்கள் அனைவரதும் விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் கொடுக்கப்பட்ட அடியாகும் என்று கடிதங்களில் குறிக்கப்பட்டிருந்தது. எனவே சோவியத் மக்களைக் காத்துப் போராடுவது ஹிட்லர் குழுவினரால் அடிமைகள் ஆக்கப்பட்டிருக்கும் மக்களினங்களையும் பாசிஸ அபாயத்துக்கு உள்ளாகக் கூடிய மற்ற எல்லா மக்கள் இனங்களையும் காத்துப் போராடுவதாகும் என்று அவை கூறின.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி, நாஜி ஜெர்மனிக்கு எதிரான போராட்டத்தில் சோவியத் யூனியனுடன் ஒத்துழைக்கும் கொள்கையைப் பின்பற்றும் பிற நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆகியவற்றுக்கு முன் உள்ள பணிகள் பின்வருவன என்று செயற்குழு குறித்தது: ஜெர்மன் பாசிஸத்திலிருந்து தங்கள் மக்களைக் காப்பது, சோவியத் மக்களின் நியாயமான போரில் வெளியிலிருந்து அவர்களுக்கு ஆதரவு அளிப்பது, பூர்ஷ்வா வர்க்கத்தின் ஹிட்லர் ஆதரவாளர்களை அம்பலப்படுத்துவது, சாத்துவிகவாதத்தின் பெயராலும் தனித்து ஒதுங்கி இருப்பதன் பெயராலும் ஜெர்மானிய பாசிஸத்துக்கு உதவுபவர்கள் அனைவருடனும் போராட்டம் நடத்துவது. ஹிட்லர் குழுவினருடன் பிற்போக்கு வட்டாரங்களின் எல்லாவிதமான சோவியத் எதிர்ப்புச் சதிச் சூழ்ச்சிகளையும் எதிர்த்துச் செயல் புரிவது இன்றியமையாததாக இருந்தது.

ஜெர்மானிய, இத்தாலிய பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக, பாசிஸத்தால் ஒடுக்கப்பட்டுள்ள எல்லா மக்கள் இனங்களையும் காப்பதற்காக,சோவியத் மக்களைக் காப்பதற்காக ஒன்றித்த

சர்வதேசப் போராட்டக் கூட்டணி அமைப்பது என்ற கோஷத்துடன் வெகுஜன இயக்கத்தை விரிவாக நடத்தும்படி பாசிஸத்துக்கு எதிராகப் போரிட்ட நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குச் செயற்குழு யோசனை கூறியது.

நாஜி ஜெர்மனிக்கு எதிராகப் போரிட்டு வந்த நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள், பாசிஸ்டு ஜெர்மனிக்கு எதிரான போராட்டத்தை நடத்த வகை செய்யும் தங்கள் அரசாங்கங்களின் எல்லா நடவடிக்கைகளையும் ஆதரிக்க வேண்டும் என்றும் ஏனெனில் இவ்வாறு செய்வது அவற்றின் மக்களுடைய தேசிய நலன்களுக்கு உகந்தது, சோவியத் யூனியனுக்குப் பயனுள்ள உதவியாக விளங்குவது என்றும் யோசனை கூறப்பட்டது. இத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்கையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அரசாங்கங்களுடன் உறவுகளில் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் இந்த ஆணைகள் சோஷலிஸத் தாய்நாட்டைக் காப்பது பற்றியும் ஏகாதிபத்தியக் காலகட்டத்தில் முற்போக்குள்ள போர்கள் சாத்தியம் என்பது பற்றியும் லெனினது போதனையை ஆதாரமாகக் கொண்டிருந்தன. ஏகாதிபத்திய யுத்தத்தில் பூர்ஷ்வாத் தாய்நாட்டைக் காப்பது என்ற கோஷத்தை லெனின் உறுதியாக எதிர்த்தார். எந்த நிலையிலுமே தாய்நாட்டைக் காப்பது கூடாது என்ற போக்கை போல்ஷிவிக்குகள் ஒருபோதும் மேற்கொள்ளவில்லை என்று அவர் அதே சமயம் சுட்டிக் காட்டினர். ''பொதுவாகத் 'தாய்நாட்டின் பாதுகாப்புக்கு' நாங்கள் எதிராக இருக்கவே இல்லை, பொதுவாகத் 'தற்காப்புப் போர்களுக்கு' எதிராக இருக்கவே இல்லை'' என்று எழுதினர் லெனின். ''எந்த ஒரு தீர்மானத்திலும் (எனது எந்தக் கட்டுரையிலும்) இந்த அபத்தத்தை ஒருபோதும் காண மாட்டீர்கள். 1914—1916 ஆண்டு ஏகாதிபத்திய யுத்தத்திலும் ஏகாதிபத்தியக் காலகட்டத்திற்கு இயல்பான மற்ற ஏகாதிபத்திய யுத்தங்களிலும் தாய்நாட்டின் பாதுகாப்புக்கும் தற்காப்புக்கும் நாங்கள் எதிராளிகள். ஆனல் ஏகாதிபத்தியக் காலகட்டத்திலும் 'நியாயமான', 'தற்காப்பு வகைப்பட்ட', புரட்சிப் போர்கள் இருக்கக் கூடும். அவையாவன: [(1) தேசியப் போர்கள்; (2) உள்நாட்டுப் போர்கள்: (3) சோஷலிஸப் போர்கள் போன்றவை'']. [1]

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு தொகுதி 35, பக்கம் 229.

தாய்நாட்டின் பாதுகாப்பு "...ஜனநாயக, புரட்சி யுத்தத்தில் பொய்யே அல்ல"[1] என்று அழுத்திக் கூறினார் லெனின்.

சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தம் ஹிட்லர் குழுவினரால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த மக்களின் விடுதலை இயக்கத்துடனும் பாசிஸத்துக்கு எதிராக எல்லா ஜனநாயக, பாசிஸவிரோதச் சக்திகளின் போராட்டத்துடனும் ஒன்று கலந்து விட்டது.

ஜெர்மன்-பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு வசப்பட்டிருந்த நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முக்கியப் பணி கைப்பற்றாளர்களுக்கு எதிராக விரிவான விடுதலைப் போராட்டம் நடத்துவதே என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சுட்டிக்காட்டியது. ஜனநாயகத்தையும் தேசிய சுதந்திரத்தையும் காப்பது என்ற பொதுக் கோஷத்தின் கீழ் பாசிஸவிரோதச் சக்திகள் அனைத்தையும், அவற்றின் அரசியல் நோக்கும் தன்மையும் எவ்வாறு இருப்பினும், பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஒன்றுசேர்க்க வல்ல விரிவான தேசியக் கூட்டணியை ஒவ்வொரு நாட்டிலும் அமைக்க முயலும்படிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு யோசனை கூறப்பட்டது. இத்தகைய கூட்டணிதான் ஹிட்லர் குழுவினரின் அடிமைகள் ஆவதற்கு எதிராக மக்களின் எல்லா வட்டாரங்களுடையவும் ஊக்கமுள்ள செயல்களை ஒழுங்கமைக்க வல்லது. பாசிஸ்டுகள் வசமிருந்த நாடுகளின் கம்யூனிஸ்டுகள் வெகுஜன அரசியல் போராட்டத்தை ஹிட்லர் படைகளின் பின்புலத்தில் ஒழுங்கைக் குலைக்கும் நேரடியான செயல்களுடன் இணைக்க வேண்டும். பாசிஸ்டு சைனியங்களுக்கு சப்ளைகள் கிடைக்காதவாறும் படையினரும் போர்த் தளவாடங்களும் ஏற்றிச் செல்லப்பட இயலாதவாறும் தடுப்பது இந்தச் செயல்களின் நோக்கமாய் இருக்க வேண்டும். தேசபக்த கொரில்லா இயக்கம் விரிவாக நடத்தப்பட வேண்டும்.

பாசிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நாஜி ஜெர்மனியும் அதன் கூட்டாளிகளும் தோல்வி அடைவதற்காகவும் பாசிஸ்டு அரசாங்கங்கள் கவிழ்க்கப்படுவதற்காகவும் போராட்டம் நடத்தின. இந்தப் போராட்டம் ஹிட்லர் விரோதக் கூட்டணி நாடுகளின் மக்களுடைய நலன்களுக்கு மட்டும் இன்றி ஜெர்மனியையும் பிற பாசிஸ்டுக் கூட்டணி நாடுகளையும் சேர்ந்த மக்களின் அடிப்படை நலன்களுக்கும் உகந்ததாய் இருந்தது. இந்த நாடுகளின் கம்யூ

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 30, பக்கம் 69.

னிஸ்டுக் கட்சிகளுக்கு எழுதிய கடிதங்களில், பாசிஸ்டு அரசாங்கங்களுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்தும்படி செயற்குழு யோசனை கூறியது:

பல்கேரியத் தொழிலாளர் கட்சிக்குக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு விடுத்த ஆணைக் குறிப்புக்களில், சோவியத் யூனியனைக் காப்பது பல்கேரிய மக்களையும் காப்பது ஆகும் என்றும், ஆளும் வர்க்கங்கள் பல்கேரிய மக்களை சோவியத் எதிர்ப்பு துர்ச்சாகசச் செயலில் இழுத்துவிட முயல்கின்றன என்றும் கூறப்பட்டிருந்தது. பல்கேரியப் பிற்போக்காளர்களின் சோவியத் விரோதத் திட்டங்களை எதிர்த்துச் செயலாற்றும்படியும், ஜெர்மன் பாசிஸத்துக்கு எதிரான ஒன்றித்த மக்கள் கூட்டணியை வலுவாக்கும் படியும், பால்கன் மக்களை அடிமைப்படுத்த விரும்பும் ஜெர்மானிய, இத்தாலிய பாசிஸ்டுக் கொள்ளைக்காரர்களுக்கு எதிராக மக்களினங்களின் ஒன்றித்த சர்வதேசப் போராட்டக் கூட்டணி அமைக்கும் பொருட்டு விரிவாக இயக்கம் நடத்தும்படியும் செயற்குழு பல்கேரியக் கம்யூனிஸ்டுகளுக்கு யோசனை கூறியது. பால்கன் மக்களின் சுதந்திரமும் வருங்காலமும் சோவியத் யூனியனது வெற்றியுடன் தொடர்பு கொண்டவை என்று செயற்குழு சுட்டிக்காட்டியது.

நடுநிலைமை நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு ஓரளவு வேறு விதமான முறையில் பணிகள் தரப்பட்டன. உதாரணமாக, சுவீடன் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு விடுத்த யோசனைகளில், சோவியத் யூனியனின் பாதுகாப்பு ஜெர்மனியால் கைப்பற்றப்பட்டுள்ள நாடுகளின் எல்லா மக்களினங்களதும் பாதுகாப்பு மட்டும் அல்ல, ஜெர்மானிய பாசிஸ்டுகளால் அடிமைகள் ஆக்கப்படும் அபாயத்துக்கு உள்ளாகி இருக்கும் சுவீடன் மக்களின் பாதுகாப்பும் ஆகும் என்று செயற்குழு குறிப்பிட்டது. சோவியத் யூனியனுக்கு எதிராக ஜெர்மனியின் யுத்தம் பற்றிய தனது அறிக்கையில் சுவீடன் நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி ''எல்லா அரசுகள் விஷயத்திலும் சுவீடனின் நடுநிலைமை'' என்ற தெளிவற்ற கோஷத்தை முன்வைத்திருந்தது. சுவீடன் கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் யூனியனின் தரப்பில் யுத்தத்தில் கலந்து கொள்ளும்படி தனது நாட்டை அறைகூவி அழைக்கக் கடமைப்பட்டது அல்ல என்றும் ஆனல் ''சுவீடனின் சுதந்திரம் பாசிஸ்டு ஜெர்மனியால் தாக்கப்படும் அபாயத்துக்கு உள்ளாகி இருக்கிறது என்பதையும் சுவீடன் உள்ளிட்ட சிறு நாடுகளின் மக்களுடைய விடுதலையையும் சுதந்திரத்தையும் காப்பாற்றுவது சோவியத் யூனியன் ஒன்றுதான்

என்பதையும்'' கம்யூனிஸ்டுக் கட்சி சுட்டிக் காட்ட வேண்டும் என்றும் செயற்குழு அறிவுறுத்தியது. ''சுவீடன் மக்களின் ஜீவாதார நலன்களின் பொருட்டு சுவீடன் சோவியத் மக்களின் வெற்றியில் அக்கறை கொண்டிருக்கிறது என்று காட்டுவது அவசியம்...''[1]

முதல் சோஷலிஸ நாட்டின் மீது பாசிஸ்டு ஜெர்மனியின் தாக்குதல், பாசிஸத்துடன் போராட்டத்தில் தங்கள் முயற்சிகளைப் பதின்மடங்கு ஆக்க வேண்டும் என்பதை உலகு அனைத்திலும் இருந்த கம்யூனிஸ்டுகளுக்கு உணர்த்தியது.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெளியிட்ட அறிக்கைகளில், சோவியத் யூனியன் மீது பாசிஸ்டு ஆக்கிரமிப்பை வன்மையாகத் தாக்கின. சோவியத் யூனியனுடன் ஒருமைப்பாடு ஏற்படுத்திக் கொள்ளும் படியும் பாசிஸ்டு வல்லரசுகளின் கூட்டணிக்கு எதிராக, தங்கள் விடுதலையின் பொருட்டும் சுதந்திரத்தின் பொருட்டும் ஊக்கத்துடன் போராடும்படியும் மக்களை ஒருமனதாக அறைகூவி அழைத்தன.

''சோவியத் யூனியனைக் காப்பதற்காக ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேண்டுகோள்'' 1941, ஜூன் 24ந் தேதி வெளியாயிற்று. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''சோவியத் நாட்டின் மேல் ஜெர்மன் சேனையின் கொள்ளைக்காரத் தனமுள்ள தாக்குதல் மிக இழிந்த நம்பிக்கைத் துரோகம் ஆகும். நமது மக்களின் சால்பு மிக்க உணர்ச்சிகளுக்கும் மரபுகளுக்கும் இது கறை ஏற்படுத்தி விட்டது. நம் நாட்டின் மக்களுடைய ஜீவாதார நலன்களுக்குக் கேடு விளைக்கும் பாதகமான அடி ஆகும் இது...

''நம்முடைய பகைவன் நம்முடைய நாட்டிலேயே இருக்கிறான். பாசிஸ்டு அடிமைச் சொந்தக்காரர்கள் தாம் நம் பகைவர்கள். செஞ்சேனையின் வெற்றியும் தங்கள் தேசிய சுதந்திரத்துக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றியும் ஜெர்மன் மக்களின் வெற்றியும் ஆகும்.''[2] ஹிட்லர் கும்பலை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காகவும் ஜெர்மானிய மக்களின் விடுதலைக்காகவும் இன்பமான வருங்காலத்துக்காகவும் போராடும்படி ஜெர்மன் உழைப்பாளிகளைக் கம்யூனிஸ்டுக் கட்சி அறைகூவி அழைத்தது.

ஹிட்லரின் பாசிஸம் கட்டாயமாகத் தகர்த்து நொறுக்கப்பட்டு

---

[1] மை. ஆ. கூ., 495/18/1335/14.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1941, இதழ் 6-7, பக்கங்கள் 123-124.

விடும் என்று பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி 1941, ஜூன் 22ந் தேதி விடுத்த தனது வேண்டுகோளில் கூறியது. ''பிரெஞ்சுக்காரன் என்று கூறப்படத் தகுதி வாய்ந்தவன் ஒவ்வொருவனும் இன்று முதல் தன்னை சோவியத் யூனியனின் கூட்டாளியாகக் கருதவேண்டும். சோவியத் யூனியன் மீது ஹிட்லரின் வெற்றி நமது தோல்வியாக இருந்திருக்கும். ஹிட்லர் மீது சோவியத் யூனியன் பெறும் ஒவ்வொரு வெற்றியும் நமது வெற்றியாகத் திகழும்.'' நாட்டில் ''பிரான்சின் சுதந்திரத்துக்கான போராட்டத்துக்காக தேசியக் கூட்டணி''[1] அமைக்கும்படி பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி அறை கூவி அழைத்தது.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி உழைப்பாளிகளுக்குப் பின்வரும் வேண்டுகோள் விடுத்தது: ''பாசிஸத்தின் மீது பொது வெற்றியின் பொருட்டு பிரிட்டிஷ், அமெரிக்க, சோவியத் மக்களின் சக்தியுள்ள ஒன்றித்த கூட்டணியை நிறுவுங்கள்.''[2]

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை 1941, ஜூன் 23ந் தேதி வெளியாயிற்று. பாசிஸத்தையும் ஒடுக்குமுறையையும் வெறுப்பவர்கள் அனைவரும், சமாதானத்தையும் விடுதலையையும் உயர்வாக மதிப்பவர்கள் அனைவரும் சோவியத் யூனியனதும் அதன் மக்களதும் குறிக்கோளை முன்னணியிலுள்ள முற்போக்கு மனித சமுதாயம் அனைத்தினதும் குறிக்கோளாகக் கருதுபவர்கள் அனைவரும் சோவியத் யூனியனின் மக்களுடன் செயல்முறை நட்பும் சோதர ஒருமைப்பாடும் கொள்ள விரைய வேண்டும் என்று அறிக்கை கூறியது. ''சோவியத் யூனியனுக்கு எதிராக ஜெர்மானிய பாசிஸத்தின் பாதக யுத்தம் ஒழிக! ஹிட்லரிசத்துக்கு எதிரான போராட்டத்தில் சோவியத் யூனியனுக்கு முழு ஆதரவு அளித்து அதனுடன் ஒத்துழைப்போம்! சோவியத் யூனியன் மீது ஹிட்லரின் தாக்குதலை ஆதரிக்க எந்த வடிவிலாயினும் முயலும் எல்லா விதமான பிற்போக்காளர்களையும் எதிர்ப்போம்!''[3]

---

[1] சமாதானத்துக்காகவும் தேசிய விடுதலைக்காகவும் பாசிஸ்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பாசிஸம் முழுமையாக அழிக்கப்படுவதற்குமான போராட்டத்தில் உழைப்பாளிகளின் சர்வதேச ஒருமைப்பாடு (1938-1945). மாஸ்கோ, 1962, பக்கங்கள் 283-284.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1941, இதழ் 6-7, பக்கம் 117.

[3] "Daily Worker", 23. VI. 1941. New York.

யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி, 1941, ஜூன் 22ந் தேதி வெளியிட்ட அறிக்கையில் பாசிஸ்டுக் கைப்பற்ருளர்களுக்கு எதிராக விரிவான ஆயுதப் போராட்டம் நடத்தும் படி நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டது. ''நிர்ணயகரமான வேளை வந்துவிட்டது. தொழிலாளி வர்க்கத்தின் மிகக் கொடிய பகைவர்களுக்கு எதிராக நிர்ணயகரமான போர் தொடங்கிவிட்டது. உலகு அனைத்தின் உழைப்பாளிகளது நம்பிக்கைக்கு ஆதாரமான சோவியத் யூனியன் மீது துரோகம் நிறைந்த தாக்குதல் தொடுத்ததன் மூலம் பாசிஸ்டுப் பாதகர்கள் தாமே மூட்டிவிட்டிருக்கும் போர் இது. வீர சோவியத் மக்களின் விலைமதிப்பற்ற குருதி சோஷலிஸ நாட்டின் பாதுகாப்புக்காக மட்டும் இன்றி, உழைக்கும் மனித குலம் அனைத்தினதும் முழுமையான சமுதாய, தேசிய விடுதலையின் பொருட்டுப் பெருகுகிறது. எனவே இது நமது போராட்டமும் ஆகும். நமது சக்தி அனைத்தையும் திரட்டி, நம் உயிர்களையும் கூட வழங்கி நாம் இந்தப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்''[1] என்று யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கை கூறியது.

கைப்பற்ருளர்களுக்கு எதிராக விரிவான கொரில்லாப் போராட்டம் நடத்தும் படி யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி தேசபக்தர்களை அறைகூவி அழைத்தது. திரளான பொது மக்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் அறைகூவலை உற்சாகத்துடன் ஏற்ருர்கள். 1941ம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் யூகோஸ்லாவிய மக்கள் விடுதலை கொரில்லாப் படைகளின் தலைமை அலுவலகம் நிறுவப்பட்டது. ஜூலை மாதம் 4ந் தேதி யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி ஆயுதமேந்திய கிளர்ச்சி நடத்த முடிவு செய்தது. இந்தக் கிளர்ச்சி விரைவில் நாட்டின் கணிசமான பகுதிகளுக்குப் பரவியது. யூகோஸ்லாவியாவில் மக்கள் விடுதலை இயக்கம் வெகுஜனத் தன்மையை மேற்கொள்ளலாயிற்று.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி 1941, ஜூன் 23ந் தேதி, ''உலகம் முழுவதிலும் ஒன்றித்த பாசிஸ எதிர்ப்புக் கூட்டணிக்கு ஆதரவாகத்'' தீர்மானம் நிறைவேற்றியது. சோவியத் யூனியன் மீது ஜெர்மனியின் தாக்குதல் ''சோவியத் யூனியனுக்கு

[1] Zbornik dokumenata i podataka o narodnooslobodilačkom ratu jugoslovenskih naroda. T. I, kn. I, Beograd, 1949, str. 16.

எதிராக மட்டும் அல்ல, உலகனைத்தின் ஜனநாயகத்துக்கும் விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் எதிராக நடத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு'' என்று தீர்மானம் கூறியது. ''பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான புனித யுத்தம் தங்கள் தாய்நாட்டைக் காக்கும் பொருட்டு சோவியத் மக்கள் நடத்தும் யுத்தம் மட்டும் அல்ல. அதோடு கூடவே, பாசிஸ்டு அடிமைத்தனத்துக்கு எதிராக எல்லா அரசுகளும் நாட்டினங்களும் நடத்தும் போரும் ஆகும் இது''[1] என்று தீர்மானம் சுட்டிக்காட்டியது.

லத்தீன் அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சோவியத் யூனியனுக்கு எதிராக ஹிட்லர் ஜெர்மனியின் யுத்தத்தினது குற்றத்தன்மையை அம்பலப்படுத்தின, சோவியத் மக்களுடன் ஒருமைப்பாடு கொள்ளும்படி மக்களை அழைத்தன. ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியதற்கு மறுநாள் ஆர்ஜெண்டீனாவின் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி சோவியத் யூனியன் கம்யூனிஸ்டு (போல்ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டிக்கு அனுப்பிய தந்தியில் சோவியத் மக்களின் போராட்டத்துடன் தனது முழு ஒருமைப்பாட்டை அறிவித்தது. ஆர்ஜெண்டீனாவின் மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் ஆர்ஜெண்டீனாவின் கம்யூனிஸ்டுக் கட்சி உழைப்பாளிகளையும் எல்லா ஜனநாயகவாதிகளையும் ஊக்கமுள்ள செயல்கள் வாயிலாக சோவியத் யூனியனுக்கு ஆதரவு அளிக்கும்படி கேட்டுக் கொண்டது. ''சோவியத் யூனியனை பாசிஸ்டு ஆக்கிரமிப்பிலிருந்து காப்பது தற்காலத்தின் ஆக உயர்ந்த விதி ஆகும்!..''[2]

எங்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சோவியத் யூனியனுடன் ஒருமைப்பாட்டு இயக்கத்தை ஒழுங்கமைத்து நடத்துவதில் பெருத்த வேலை தொடங்கின. சோவியத் யூனியனுடையவும் ஹிட்லர் விரோதக் கூட்டணியைச் சேர்ந்த பிற நாடுகளுடையவும் போர் முயற்சிகளில் அவை நடைமுறை உதவி அளித்தன. பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஆயுதமேந்திய போராட்டத்துக்கு வெகுஜனங்களை அணி திரட்டின. பாசிஸத்தின் பாதகக் குறிக்கோள்களை அம்பலப்படுத்தியும் சோவியத் மக்களின் மாபெரும் விடுதலைத் தொண்டை வெகுஜனங்களுக்கு விளக்கியும் ஊக்கத்துடன் கிளர்ச்சியும் பிரசாரமும் நடத்தின.

---

[1] சமாதானத்துக்கும் தேசிய விடுதலைக்குமான போராட்டத்தில் சர்வதேச ஒருமைப்பாடு, பக்கம் **305**.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', **1941**, இதழ் **6-7**, பக்கங்கள் **126-127**.

கம்யூனிஸ்டு அகிலமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் நாஜி ஜெர்மனிக்கு எதிராக எல்லா பாசிஸவிரோத சக்திகளதும் போராட்டத்தின் ஒழுங்கமைப்பாளிகள்

யுத்தச் சூழ்நிலையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள் சிக்கலாகி முன்னிலும் மிகப் பல்வகையானவை ஆகிவிட்டன. வெகுஜனங்களிடையே அவற்றினது வேலையின் வடிவங்களும் முறைகளும் அவ்வாறே பல்வகைப்பட்டவை ஆயின. கட்சிகள் தங்களுக்குள்ளும் கட்சிகளுக்கும் கம்யூனிஸ்டு அகிலத்துக்கும் இடையிலும் செயல் தொடர்பு வைத்துக் கொள்வது அசாதாரணமாகக் கடினம் ஆயிற்று, சில சந்தர்ப்பங்களில் அசாத்தியமாய் இருந்தது. ஆயினும் கம்யூனிஸ்டுகள் மிகக் கடினமான நிலைமைகளில், பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களால் சுட்டுக் கொல்லப்படும் அபாயத்துக்கு இடையறாது உள்ளாகிவந்த போதிலும் பாசிஸ்டு அடிமைத்தளையை எதிர்த்து, மக்களது விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் மிக ஒத்திசைந்த முறையில் ஊக்கத்துடன் போராடி வந்தார்கள், கம்யூனிஸ்டு அகிலத்தால் பயிற்றப்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அனுபவ முதிர்ச்சி கம்யூனிஸ்டுகளின் இந்தப் போராட்டத்தில் துலக்கமாக வெளிப்பட்டது. யுத்தம் கம்யூனிஸ்டுகளுக்கும் எல்லா முற்போக்கு, ஜனநாயகச் சக்திகளுக்கும் கடுமையான பரீட்சைப் பள்ளி ஆயிற்று. கம்யூனிஸ்டு அகிலத்தால் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வில் பயிற்றப்பட்ட கம்யூனிஸ்டுகள் தங்கள் மக்களின் விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான போராட்டத்தை உலகனைத்திலும் நடந்துவந்த பாசிஸ-எதிர்ப்பு விடுதலை இயக்கத்துடன் இணைக்கவல்ல உண்மையான தேசபக்தர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டார்கள். பாசிஸ்டு அநாகரிகத்துக்கு எதிராக, மனிதகுல நாகரிகத்தைக் காக்கும் பொருட்டு மக்கள் நடத்திய போராட்டத்தின் முன்னணிப் படையாக விளங்கினுர்கள் கம்யூனிஸ்டுகள்.

ஹிட்லருக்கு எதிரான கூட்டணியைச் சேர்ந்த நாடுகளின் (பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலியவற்றின்) கம்யூனிஸ்டுக் கட்சிகள் சோவியத் யூனியனுக்கு எதிராக ஜெர்மனி யுத்தம் தொடங்கிய நாட்கள் முதலே ஊக்கத்துடன் விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டன. மக்கள் இனங்களின் விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் சோவியத் யூனியனை ஆதரிப்பதற்காகவும்

பாசிஸத்துக்கு எதிரான போரில் ஊக்கத்துடன் பங்காற்றுவது என்ற கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தங்கள் மக்களின் விரிவான வட்டாரங்களை ஒன்றிணைப்பது இந்த நடவடிக்கைகளின் நோக்கமாக இருந்தது. ஜெர்மன் பாசிஸத்தை முறியடிப்பதைக் காட்டிலும் முக்கியமான குறிக்கோள் வேறு எதுவும் இல்லை என்று கம்யூனிஸ்டுகள் கருதினார்கள். இந்தக் காரணத்தால் பாசிஸ்டு ஜெர்மனிக்கு எதிரான போராட்டத்தின் பொருட்டுத் தங்கள் அரசாங்கங்கள் எடுத்துக் கொண்ட எல்லா நடவடிக்கைகளுக்கும் அவர்கள் ஆதரவு அளித்தார்கள். இந்த ஆதரவு சோவியத் யூனியனுக்கும் பாசிஸ்டு எதிர்ப்பு இயக்கத்துக்கும் உண்மையான உதவியாக இருந்தது. கம்யூனிஸ்டுகள் தங்கள் நாடுகளில் இருந்த ஹிட்லர் ஆதரவாளர்களைத் தாக்குக்கு இலக்கு ஆக்கினார்கள். ஜனநாயகத்தையும் தேசிய சுதந்திரத்தையும் காப்பது என்ற கோஷங்களின் கீழ் ஒன்றித்த தேசியக் கூட்டணி அமைப்பதற் காகப் போராடினார்கள்.

சோவியத்-ஜெர்மன் போர்முனையில் சோவியத் யூனியனின் விதி மட்டும் இன்றித் தங்கள் நாடுகளின் விதியும் முடிவு செய்யப் படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு பிரிட்டிஷ், அமெரிக்க உழைப்பாளிகள் சோவியத் யூனியனுக்கு எதிராக ஜெர்மனியின் யுத்தம் தொடங்கியது முதலே சோவியத் நாட்டுக்கு உதவி அளிக் கும் இயக்கத்தை விரிவாக நடத்தினார்கள். 1941ம் ஆண்டுக் கோடையில் பிரிட்டனையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் சேர்ந்த பல பெரிய நகரங்களில் வெகுஜன ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் மகாநாடுகளும் ஆலோசனைக் கூட்டங் களும் நடந்தன. சோவியத் யூனியனுக்கு உடனே உதவி அளிக்கு மாறு இவை தங்கள் அரசாங்கங்களிடம் கோரின. பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் உடனே கலந்து கொள்ள உழைப்பாளிகளின் ஆர்வத்தை இவை வெளிப் படுத்தின. லண்டனிலும் வாஷிங்டனிலும் இருந்த சோவியத் தூத ரகங்களுக்கு ஏராளமான கடிதங்கள் வந்தன. பாசிஸ்டு ஆக்கிரமிப் பாளர்களை முறியடிப்பதில் சேஞ்சேனைக்கு உதவும் பொருட்டு அதில் சேர விரும்புவதாக பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரஜைகள் இந்தக் கடிதங்களில் விருப்பம் தெரிவித்திருந்தார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் வி. ஃபோஸ்டர், 1941, ஜூன் மாத இறுதியில் நடந்த கட்சி மத் தியக் கமிட்டியின் அசாதாரண முழுக்கூட்டத்தில் பேசுகையில் பின்

வருமாறு கூறினர்: ''நம்முடைய நிர்ணயகரமான பணி, ஹிட்லரும் அவனுடைய நாஷனல்-சோஷலிஸக் காட்டுத்தனமும் அழிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு... சோவியத் யூனியனுக்கு எல்லா வகையான உதவியும் அளிப்பதாகும்... ஹிட்லரை எதிர்த்துப் போரிடும் சோவியத் மக்களுக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் எல்லா வகையிலும் எல்லா அளவிலும் உதவி செய்ய வேண்டும் என்பது நமது கட்சியின் மையக் கோரிக்கை ஆகும்''.[1]

சோவியத் யூனியனுக்கு உதவுவது பற்றி ரூஸ்வெல்ட் அரசாங்கம் விடுத்த அறிக்கையை ''அமெரிக்காவின் மிகப் பெரும்பான்மையான மக்களது'' விருப்பத்தின் வெளியீடு என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி வரவேற்றது. சோவியத் யூனியனுக்கு உதவுவதை எதிர்த்தும் ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்துகொள்வதை ஆதரித்தும் வந்த பிற்போக்கு வட்டாரங்களைக் கண்டனம் செய்யும் விரிவான கிளர்ச்சி இயக்கத்தை அது உடனே தொடங்கியது. சோவியத் யூனியனுக்கு உதவி அளிக்கும் வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றும் வழியில் ''பெருத்த ஆபத்து எதிர்ப்பட்டிருக்கிறது. இது அமெரிக்க பூர்ஷ்வா வர்க்கத்தின் பிற்போக்கு வட்டாரங்களுடைய மிகப் பெரிய செல்வாக்கும் நிர்ப்பந்தமும் ஆகும். அமெரிக்க மக்களின் மிக முக்கியமான தேசிய நலன்களைப் பலி கொடுத்து ஹிட்லருடன் உடன்பாடு செய்துகொள்ள இந்த வட்டாரங்கள் விரும்புகின்றன'' என்று கம்யூனிஸ்டுக் கட்சி சுட்டிக்காட்டியது.[2]

பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக எல்லாத் தேசிய சக்திகளையும் ஒன்றுபடுத்துவதன் பொருட்டுச் செயல்பட்டதோடு கூடவே அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி தன் வர்க்க நிலைகளையும் காப்பாற்றிக் கொண்டது. அமெரிக்க முதலாளித்துவம் சோவியத் யூனியனுடன் உளமார்ந்த, நிலையான ஒத்துழைப்பை ஆதரிப்பதாகக் கூறி அதற்குப் புகழ்மாலை பாடிய திரிபுவாதி நபர்களுடன் அது போராட்டம் நடத்தியது. அப்போது அமெரிக்க ஐக்கிய நாடுகளினது கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த எ. புரௌடர் இத்தகைய திரிபுவாத நிலைகளை மேற்கொண்டிருந்தார்.

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', **1941**, இதழ் **6-7**, பக்கம் **121**.

[2] அதே சஞ்சிகை, அதே இதழ், பக்கம் **120**.

பிரிட்டிஷ், அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சிகள், தங்கள் நாடுகளின் போர் முயற்சிகளைத் தீவிரம் ஆக்கும் பொருட்டு, தொழிற்பொருள் உற்பத்தியை, சிறப்பாகப் போர்க்கருவித் தொழிற்சாலைகளில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான போராட்டத்தைத் தொடங்கிவைத்தன. பிரிட்டிஷ், அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் ''உற்பத்தி அதிகரிப்புப் போராட்டத்தில்'' ஊக்கத்துடன் பங்கு கொண்டது. தனது உழைப்பினுல் அது யுத்த சாதனங்களின், முக்கியமாக சோவியத் யூனியனுக்கு அனுப்புவதற்கான டாங்கிகளின் உற்பத்தியைக் கணிசமாக உயர்த்த உதவியது. பாசிஸ்டுக் கூட்டணியை முறியடிப்பதில் இது ஓரளவு தொண்டு ஆற்றியது. ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியனுக்கு உதவும் பொருட்டு ஹிட்லர் விரோதக் கூட்டணி நாடுகளில் நிதி திரட்டப்பட்டது.

சோவியத் யூனியனுடன் அமெரிக்க, பிரிட்டிஷ் மக்களின் ஒருமைப்பாட்டுக்கான இயக்கம், பாசிஸ்டு ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தில் கூட்டு சேர்வது பற்றி பிரிட்டனுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே உடன்படிக்கையும் 1942ம் ஆண்டில் கையெழுத்தான சோவியத்-அமெரிக்க உடன்படிக்கையும் ஏற்படுவதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்ருக விளங்கியது.

ஹிட்லர்விரோதக் கூட்டணி நாடுகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி உணவுப்பண்டங்களும் ஆயுதங்களும் பலவகைப் போர்த்தளவாடங்களும் பிரிட்டனிலும் அமெரிக்காவிலுமிருந்து சோவியத் யூனியனுக்கு அனுப்பப்படலாயின. ஆயினும் ஆங்கில-ஸாக்ஸன் நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் ஐரோப்பாவில் போர் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் வாயிலாக சோவியத் யூனியனுக்கு அதிகப் பயனுள்ள உதவி அளிக்க அவசரப்படவில்லை.

பிரிட்டனையும் அமெரிக்காவையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகளும் பிற முற்போக்குச் சக்திகளும் இரண்டாவது போர்முனை திறக்குமாறு கோரி விரிவான இயக்கம் நடத்தினுர்கள். ஹிட்லரியத்துக்கு எதிராக சோவியத் மக்கள் நடத்திய போராட்டத்தின் கஷ்டங்களையும் பெருத்த முக்கியத்துவத்தையும் அவர்கள் வெகுஜனங்களுக்கு விளக்கி விவரித்தார்கள். 1942, மே மாதம் கம்யூனிஸ்டுக் கட்சி மகாநாட்டின் திறப்பு விழாவை ஒட்டி டிரஃபால்கர் சதுக்கத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வி. காலாஹர் கூறினுர்: ''நாம் ஐரோப்பியக் கண்டத்தின் மீது படையெடுக்க சந்தேகமின்றி வல்லவர்கள் ஆவோம். செயல் புரியும் வேளை இப்போது

வந்துவிட்டது''.[1] உடனே இரண்டாவது போர்முனை திறக்குமாறு கோரி பிரிட்டனிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் உழைப்பாளிகள் பெருத்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தினார்கள். இவற்றில் கம்யூனிஸ்டுகள் கலந்து கொண்டார்கள். சோவியத் யூனியனுடன் ஒத்துழைப்பும் கூட்டணியும் வலுவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்த இயக்கத்தின் பிரிக்க முடியாத அங்கமாக இருந்தது. அரசாங்கங்கள் தாங்கள் மேற்கொண்ட பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்று உழைப்பாளிகள் கோரினார்கள். தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் தங்கள் பிரதிநிதிகளை அமைச்சகங்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் காங்கிரசுக்கும் அனுப்பினார்கள். இரண்டாவது போர்முனை திறப்பதில் இழுத்தடிப்பு உழைப்பாளிகளுக்கு அதிருப்தி ஏற்படுத்தி இருக்கிறது என்பதைத் தொழிலாளர் பிரதிநிதிகள் இந்த ஆட்சி உறுப்புக்களுக்குத் தெரிவித்தார்கள். லண்டன் நகரின் 105 ஆயிரம் தொழிலாளர்களின் பிரதிநிதிக் குழு சர்ச்சில் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த ஒரு தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ஐரோப்பாவில் இரண்டு போர்முனைகளில் ஹிட்லரை இன்னும் விரைவாக நொறுக்க முடியும். இரண்டாவது போர்முனை திறப்பதற்குத் தேவையான எல்லாத் தியாகங்களையும் மேற்கொள்ள நாங்கள் தயாராய் இருக்கிறோம். சோவியத் யூனியன் தனியே தியாகங்களை மேற்கொள்ளும்படி விடுவது நமக்கு அடாது... செயல் புரியவேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்''.[2]

1942ம் ஆண்டு இலையுதிர் காலத்தில், ஸ்தாலின்கிராத் போர் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்த போது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பெரும்பாலான தொழிற்சங்கங்கள் ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை திறக்கும்படி அரசாங்கத்தைக் கோரித் தங்கள் தேசியக் காங்கிரசுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றின. அமெரிக்கத் தொழிற்சங்க சம்மேளனம், உற்பத்தித் தொழிற்சங்கங்களின் காங்கிரஸ் போன்ற, பழமைப் பற்றுள்ளவர்களைத் தலைவர்களாகக் கொண்ட ஸ்தாபனங்களின் தேசியக் காங்கிரசுகளில் கூட இத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1942, இதழ் 5, பக்கம் 80.

[2] ''பிராவ்தா'', 1942, ஆகஸ்டு 8.

பிரிட்டிஷ், அமெரிக்கக் கம்யூனிஸ்டுகள் ஜெர்மனிக்குச் சரணுகதி அடைவதன் ஆதரவாளர்களை அரசாங்கங்களிலிருந்து நீக்கும்படியும் தங்கள் நாடுகளின் எல்லா இராணுவ வளங்களையும் நாஜி ஜெர்மனியை முறியடிப்பதற்காக அதிகத்திலும் அதிகமாகப் பயன்படுத்தும்படியும் கோரி இயக்கங்கள் நடத்தினர்கள்.

சட்டப் புறம்பான நிலைமைகளில் வேலை செய்துவந்த கானடா நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டின் மக்களைப் போரில் பங்கு கொள்ள அணிதிரட்டுவதில் பெருத்த தொண்டு ஆற்றியது. யுத்தம் தொடங்கியது முதலே கம்யூனிஸ்டுக் கட்சி "வெற்றியின் பொருட்டுத் தேசியக் கூட்டணி" என்னும் கோஷத்தை எழுப்பியது. "இந்த யுத்தத்தில் வெற்றி பெறும் பொருட்டுத் தொழிலாளி வர்க்க ஒற்றுமையை ஏற்படுத்துவதில் தங்கள் சக்திகள் அனைத்தையும் கடைசித் துளிவரை ஈடுபடுத்தும்படி"[1] அது கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டது.

நாஜி ஜெர்மனியையும் அதன் கூட்டாளி நாடுகளையும் முறியடிக்க வகை செய்யும் அரசாங்கத்தின் போர் முயற்சிகளைக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரித்தது. சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வகை செய்யும் பொருட்டு, "போரில் வெற்றிக்கு ஆதரவான தீம் பாக் கமிட்டிகளின்" தொகுப்பைக் கம்யூனிஸ்டுகள் அமைத்தார்கள். பின்னர் இந்தக் கமிட்டிகள் தேசியக் காங்கிரசாகக் கூடி, சட்டபூர்வமான அரசியல் ஸ்தாபனத்தை நிறுவின. நீடித்த, விடாப்பிடியான போராட்டத்தின் விளைவாகக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் "தொழிலாளர் முன்னேற்றக் கட்சி" என்ற பெயரால் சட்டபூர்வம் ஆக்குவதற்கான முன்னேற்பாடுகள் 1943ம் ஆண்டுக் கோடையில் செய்யப்பட்டன. இது கானடா நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் பெருத்த வெற்றியாக விளங்கியது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி தனது சர்வதேசக் கடமையை ஊக்கத்துடன் நிறைவேற்றியது. இந்திய மக்களின் நலன்களுக்கும் சர்வதேச பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்துக்கும் உள்ள ஒற்றுமையை அது வலியுறுத்தியது. பாசிஸத்தை எதிர்ப்பது என்ற பொதுக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவின் ஒன்றித்த தேசியக் கூட்டணி அமைக்குமாறு அது அறைகூவி அழைத்தது.

---

[1] **தீம் பாக்.** கானடாவில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முப்பது ஆண்டுகள் (1922—1952). மாஸ்கோ, 1954, பக்கங்கள் 180-181.

யுத்தத்தின் நிலைமைகளில் பாசிஸ்டுவிரோதக் கூட்டணி நாடுகளின் தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்கள் பற்றி என்ன போக்கைக் கடைப்பிடிப்பது என்ற பிரச்சினை எழுந்தது. வேலைநிறுத்தங்கள் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யக் கூடுமே. ஜெர்மனிக்கும் அதன் கூட்டாளி நாடுகளுக்கும் எதிரான போரில் பங்கு கொண்டிருந்த பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிற முதலாளித்துவ தேசங்கள் ஆகியவற்றின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளர் பிணக்குகளைத் தொழிலதிபர்களுடன் தொழிலாளர்களின் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வதை ஆதரித்தன. விதிக்கப்பட்ட பொறுப்புக்களைத் தொழிலதிபர்கள் நிறைவேற்றும் பட்சத்தில் வேலைநிறுத்தங்களைத் தாற்காலிகமாகக் கைவிடும் படி தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டன. பாசிஸ்டு ஆக்கிரமிப்புக் கூட்டணிக்கு எதிரான போராட்டத்தின் தேவைகளுக்கு இந்த நிலை பொருத்தமாய் இருந்தது. பிரிட்டனிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் சோவியத் யூனியனின் பிற கூட்டாளி நாடுகளிலும் போரில் தேசிய முயற்சிகள் தீவிரமாக்கப்படுவதற்காக நடந்த இயக்கம் வர்க்கப் போராட்டம் நின்றுவிட்டதைக் குறிக்கவில்லை. தொழிற்சங்கங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களைத் தொழிலதிபர்கள் முரட்டுத்தனமாக மீறியபடியால் தொழிலாளர்கள் தற்காப்பை மேற்கொள்ளவும் வேலைநிறுத்தங்களும் செய்யவும் வேண்டியதாயிற்று. தொழிலாளர்களின் பிணக்குகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வதை ஆதரிக்கையில் கம்யூனிஸ்டுகள் பாசிஸ்டுவிரோதக் கூட்டணியின் சக்தியை மேலும் வலுப்படுத்துவதன் நலன்களை நோக்கமாகக் கொண்டார்கள். அதே சமயம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உழைப்பாளிகளின் வர்க்க நலன்களைக் காத்துத் தொடர்ந்து போராடின, ஏகபோகங்களின் வேட்டை விலங்குக் கொள்கையை வன்மையாகத் தாக்கி வந்தன.

பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளின் மக்களது விடுதலைப் போராட்டம் இரண்டாவது உலக யுத்தத்தின் மிக முக்கியமான நிகழ்ச்சியாக விளங்கியது. ஹிட்லர்விரோதக் கூட்டணி அரசுகளும் மக்களும் தங்கள் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடத்திய பொது யுத்தத்தின் உள்ளார்ந்த உறுப்பாகத் திகழ்ந்தது இந்தப் போராட்டம். கைப்பற்றப்பட்ட நாடுகளின் தேசபக்தர்கள் நாஜி

ஜெர்மனியையும் அதன் கூட்டாளி நாடுகளையும் முறியடிப்பதில் முக்கியப் பங்கு ஆற்றினர்கள்.

கைப்பற்றப்பட்ட நாடுகளின் உருவாகியிருந்த நிலைமை விரிவான பாசிஸ-எதிர்ப்புக் கூட்டணிகள் அமைப்பதற்கு ஏற்ற வாய்ப்புக்களை ஏற்படுத்தியது. மக்களுடைய பல்வேறு வட்டாரத்தினரின் பிரதிநிதிகள்—தொழிலாளர்கள், விவசாயிகள், நகர நடுத்தர வகுப்பினர், தேதிய பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒரு பகுதியினர் ஆகியோர்—விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டார்கள். பாசிஸத்துக்கு எதிரான இந்த அனைத்து மக்கள் போராட்டத்தில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் தலைமையில் இயங்கிய தொழிலாளி வர்க்கம் முன்னணிப் பாத்திரம் வகித்தது. நிதி மூலதன அதிபர்கள், நிலப்பிரபுக்கள், பிற தேசிய விரோத நபர்கள் ஆகியோர் அடங்கிய சிறு குழுவைத் தவிர எல்லா சமுதாய வட்டாரங்களும் பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களை வெளியேற்றுவதிலும் முறியடிப்பதிலும் அக்கறை கொண்டிருந்தன. கம்யூனிஸ்டுக் கட்சிகள் எல்லா பாசிஸவிரோதிகளையும் தேசபக்தர்களையும் ஒன்றுசேர்க்க முயன்று, கைப்பற்றப்பட்ட நாடுகளில் தேசியக் கூட்டணிகள் (யூகோஸ்லாவியாவில் ஒன்றித்த தேசியப் போராட்டக் கூட்டணி, பிரான்சில் தேசிய சுதந்திரப் போராட்டக் கூட்டணி, கிரீஸ் நாட்டில் தேசிய விடுதலைக் கூட்டணி முதலியன) அமைப்பதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றின.

கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசால் தயாரிக்கப்பட்ட போர்த்தந்திர, செயல்தந்திரத் தீர்மானங்களைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிக மிக விரிவான அளவுகளில் செயல்படுத்தலாயின. இவற்றை நடப்பில் கொண்டுவரும் பொருட்டுக் கம்யூனிஸ்டுகள் நடத்திய ஒத்திசைந்த போராட்டத்தின் விளைவாக வெகுஜனங்களின் ஒற்றுமை அதிகரித்தது, மிகப் பெரிய அளவில் நடந்த பாசிஸ்டு எதிர்ப்பு இயக்கம் ஏற்றம் பெற்றது, கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு விரிவாகப் பரவிற்று.

பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எதிர்ப்பு இயக்கத்தை விரிவாக நடத்தக் கம்யூனிஸ்டு அகிலம் இடையருது உதவிவந்தது. முக்கியமான கொள்கைப் போக்குக்களை வகுப்பது, ஊழியர்களையும் ரசாரப் பிரசுரங்களையும் பிறவகை உதவிகளையும் அளிப்பது ஆகியவை இதில் அடங்கி இருந்தன.

யூகோஸ்லாவியாவில் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தை

ஒழுங்கமைப்பதில் கம்யூனிஸ்டு அகிலம் பெருத்த கவனம் செலுத்தியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு 1941, ஜூன் 22ந் தேதி யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அனுப்பிய கடிதம் நாட்டில் ஒன்றித்த தேசியக் கூட்டணி ஏற்படுத்தும் படியும் கைப்பற்றுளர்களுக்கு எதிராக வெகுஜனப் போராட்டத்தை ஒழுங்கமைக்கும்படியும் அதைப் பணித்தது.

யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுகள் தேசபக்த கொரில்லாக் குழுக்களையும் படைப்பிரிவுகளையும் அமைத்தார்கள். பாசிஸ்டு ஜெர்மனிக்கும் அதன் துணையாளி நாடுகளுக்கும் எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் கலந்து கொண்டிருப்பது, பாசிஸத்தை வெற்றி கொள்வதற்கும் விடுதலையும் சுதந்திரமும் பெறுவதற்குமான வாய்ப்பை யூகோஸ்லாவிய மக்களுக்கு அளிக்கிறது என்று அவர்கள் வெகுஜனங்களுக்கு எடுத்துரைத்தார்கள். நாட்டில் ஏராளமான தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகள் உருவாயின. பின்னர் இவை கம்யூனிஸ்டுகளின் தலைமையில் யூகோஸ்லாவியாவின் முறையான மக்கள் விடுதலைச் சேனையாக மாற்றி அமைக்கப்பட்டன. 1942ம் ஆண்டு முடிவில் சேனையில் 150 ஆயிரம் படையினரும் அதிகாரிகளும் இருந்தார்கள்.

விடுதலைப் போராட்டத்தின் போது ஒன்றித்த மக்கள் விடுதலைக் கூட்டணி நிறுவப்பட்டது. தொழிலாளர்கள், விவசாயிகள், முற்போக்கு அறிவுஜீவிகள், நாட்டுப் பற்றுள்ள படை அதிகாரிகள் ஆகியோரும் பிற பாசிஸவிரோத, தேசபக்தச் சக்திகளும் இந்தக் கூட்டணியில் ஒன்றிணைக்கப்பட்டார்கள். தேசியக் கூட்டணியின் தலைமைச் சக்தியாகப் பணி ஆற்றியது யூகோஸ்லாவியாவின் கம்யூனிஸ்டுக் கட்சி.

ஸ்தல பாசிஸ்டுப் படைப்பிரிவுகள் மட்டும் இன்றி, வெளிநாட்டில் இருந்த முடியரசு அரசாங்கத்தின் ஆதரவாளர்களும் மக்கள் விடுதலைச் சக்திகளின் பால் பகைமை நிலையை மேற்கொண்டார்கள். அவர்கள் தங்கள் ஆயுதப் படைப் பிரிவுகளை அமைத்தார்கள். இவை தேசபக்த கொரில்லா இயக்கத்துக்கு எதிராக விரைவில் போராட்டம் தொடங்கின. யூகோஸ்லாவிய தேசபக்தர்களின் வெற்றிகரமான ஆயுதப் போராட்டத்தின் விளைவாக 1942ம் ஆண்டு முடிவுக்குள் நாட்டின் நிலப்பரப்பில் ஒரு பகுதி பகைவர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டு விட்டது. மக்கள் விடுதலைக் கமிட்டிகள் அங்கு புரட்சி ஆட்சியின் உறுப்புக்களாகச் செயல் ஆற்றின.

1942ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் யூகோஸ்லாவியக் கம்யூ

னிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி ''யூகோஸ்லாவிய விடுதலைக்கான மக்கள் கமிட்டி'' அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது. இது ''அரசாங்கம் போன்ற ஒன்று'' எனக் கருதப்பட்டது. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ''யூகோஸ்லாவிய விடுதலைக்கான மக்கள் கமிட்டி'' அமைக்கும் யோசனையை ''மிகவும் இன்றியமையாத, பெருத்த முக்கியத்துவம் உள்ள'' நடவடிக்கை என்று கருதி, கோட்பாட்டு நோக்கில் ஆமோதித்தது. இதோடு கூடவே, இந்தக் கமிட்டிக்குப் ''பொது தேசிய யூகோஸ்லாவியத் தன்மையும் பொதுக் கட்சித் தன்மையும் அதன் உறுப்பினர் அமைவிலும் செயல் திட்டத்திலும்'' அளிக்கப்பட வேண்டும் என்று 1942, நவம்பர் 20ந் தேதி அனுப்பிய தந்தியில் செயற்குழு பிரேரித்தது. இந்தக் கமிட்டியை மக்கள் விடுதலைப் போராட்டத்தின் அரசியல் உறுப்பாகக் கருதும்படியும், தருணத்துக்கு முன் குடியரசு கோஷத்தை முன்வைக்காமல் இருக்கும்படியும் யூகோஸ்லாவியாவில் நடக்கும் போராட்டத்தை தேசிய நோக்கு நிலையிலிருந்து மட்டும் இன்றி ஹிட்லர் குழுவினர் கூட்டணிக்கு எதிரான போராட்டத்தின் பொதுக் குறிக்கோள்களின் நிலையிலிருந்தும் அணுகும்படியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு யோசனை கூறியது. ''மக்கள் விடுதலைப் போராட்டத்தில் உங்கள் நிலைகளை எல்லா வகையிலும் வலுப்படுத்திக் கொண்டு, அதே சமயம் அரசியல் சமயோசித சாமர்த்தியத்தையும் சந்தர்ப்பப் பொருத்தமாகச் செயலாற்றும் திறமையையும் காட்டுங்கள்''[1] என்று செயற்குழு கூறியது.

செயற்குழுவின் யோசனைகள் யூகோஸ்லாவியாவில் பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களுக்கு எதிராக முடிந்த அளவு அதிக விரிவான கூட்டணி அமைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

1942, நவம்பர் இறுதியில், போஸ்னியாவின் விடுதலை பெற்ற பிஹாச் நகரில் பாசிஸவிரோத அரசியல் குழுக்களின் பிரதிநிதிகளது சட்ட அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அனைத்து யூகோஸ்லாவிய அரசியல் உறுப்பு—யூகோஸ்லாவிய மக்கள் விடுதலைக்கான பாசிஸவிரோத வெச்சே—இந்தக் கூட்டத்தில் நிறுவப்பட்டது. யூகோஸ்லாவிய மக்களின் முதலாவது புரட்சிகர நாடாளுமன்றம் இது. பாசிஸவிரோத வெச்சேயின் செயற்குழு கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளோடு கூடவே எல்லா

---

[1] மை. ஆ. கூ., தஸ்தாவேஜூத் தொகுப்பு, 1942.

பாசிஸவிரோதக் குழுக்களுடையவும் பிரபலப் பிரதிநிதிகள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பாசிஸ விரோத வெச்சேயின் செயற்குழு யூகோஸ்லாவிய மக்களின் விடுதலைப் போராட்டத்தினது அரசியல் தலைமையை வழிகாட்டி நடத்தும் உறுப்பு ஆயிற்று.

ஜெர்மன் பாசிஸ்டு, இத்தாலியக் கைப்பற்றுளர்களுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்துக்கு நாட்டுப்பற்றுள்ள சக்திகளை அணிதிரட்டுவதில் யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அனுபவத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு மிக உயர்வாக மதித்தது. பிற நாடுகளின் கம்யூனிஸ்டுப் பத்திரிகைகளில் இது பற்றி விரிவான பிரசாரம் நடந்தது.

போலந்து நாட்டின் கம்யூனிஸ்டுகளுக்கு, சிறப்பாக போலந்துத் தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினியக் கட்சியை அமைப்பதில், கம்யூனிஸ்டு அகிலம் பேருதவி புரிந்தது.

சோவியத் யூனியன் மீது ஜெர்மனி தாக்குதல் நடத்தியது முதல் போலந்துக் கம்யூனிஸ்டுகள் சிதறிக் கிடந்த தங்கள் குழுக்களை ஒன்றுதிரட்டுவதற்கும் பாசிஸவிரோதச் சக்திகளை ஒன்று இணைப்பதற்குமான போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார்கள். கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய சட்ட விரோத ஸ்தாபனங்களில் **1941**ம் ஆண்டு முடிவுக்குள் சுமார் **5-6** ஆயிரம் பெயர் இருந்தார்கள்.[1]

கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய மிக முக்கியமான பாசிஸவிரோத ஸ்தாபனமாக விளங்கியது விடுதலைப் போராட்டக் கழகம். இடதுசாரி சோஷலிஸ்டுகளும் கட்சிச் சார்பற்ற தொழிற் சங்கத் தீவிர ஊழியர்களும் இதன் உறுப்பினராய் இருந்தார்கள். பிற பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனங்களும் நாட்டில் இயங்கி வந்தன. புரட்சிகரத் தொழிலாளர்-விவசாயிகள் சபைகள், சோவியத் யூனியனின் நண்பர்கள் சங்கம், தொழிலாளர்-விவசாயிகள் ஸ்தாபனம், உங்கள் எங்கள் விடுதலைப் போராட்டக் கூட்டணி ஆகியன இவை.

1941, ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு சோவியத் யூனியன் நிலப்பரப்பில் இருந்த போலந்துக்

---

[1] யுத்த காலத்திலும் ஹிட்லர் கைப்பற்றல் ஆண்டுகளிலும் போலந்துத் தொழிலாளர் இயக்கம். **1939**, செப்டெம்பர்—**1945**, ஜனவரி. மாஸ்கோ, **1968**, பக்கம் **135**.

கம்யூனிஸ்டுகளைக் கொண்டு தொடக்க வேலைக் குழு ஒன்றை அமைத்தது. போலந்தில் மார்க்சிய-லெனினியக் கட்சியை மீட்டமைக்கும் முன்னேற்பாடுகள் செய்வதற்காக இந்தக் குழு போலந்துக்கு அனுப்பப்பட இருந்தது. தொடக்க வேலைக் குழு புதிய கட்சியின் செயல்திட்ட அறிக்கை மசோதாவைத் தயாரித்தது. ஹிட்லர் குழுவினருக்கு எதிராக விரிவான தேசியக் கூட்டணி அமைக்கும் பணியை அது முன்வைத்தது.

1941, டிசம்பர் மாத இறுதியிலும் 1942, ஜனவரி மாத ஆரம்பத்திலும் போலந்து வந்து சேர்ந்த தொடக்க வேலைக் குழு உறுப்பினர்கள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய சட்டவிரோதமான பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டார்கள்.[1] சட்ட விரோத ஸ்தாபனங்களை ஒன்று இணைத்ததன் அடிப்படையிலேயே போலந்து உழைப்பாளிகளின் மார்க்சிய-லெனினியக் கட்சியான போலந்துத் தொழிலாளர் கட்சி அமைக்கப்பட்டது.

போலந்துத் தொழிலாளர் கட்சியின் சட்ட அமைப்புக் கூட்டம் 1942, ஜனவரி மாத ஆரம்பத்தில் நடந்தது. கட்சியின் தாற்காலிகத் தலைமைக் குழு கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. நவோத்கோ செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

''தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் அறிவுஜீவிகளுக்கும். போலந்தின் தேசபக்தர்கள் அனைவருக்கும்'' வேண்டுகோள் 1942, ஜனவரி 10ந் தேதி வெளியிடப்பட்டது. போலந்துத் தொழிலாளர் கட்சி தோன்றியிருக்கும் தகவல் இந்த தஸ்தாவேஜில் தரப்பட்டது. கட்சியின் அடிப்படைக் கோட்பாடுகள் அறிவிக்கப்பட்டன. ஜெர்மன் பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களுக்கு எதிராக சமரசமற்ற போராட்டம் நடத்தும்படியும், துரோகிகளும் அடிவருடிகளும் நீங்கலாக மக்களின் எல்லா வட்டாரங்களையும் ஒன்று சேர்க்கும் ஒன்றித்த பாசிஸ எதிர்ப்பு தேசியக் கூட்டணி அமைக்கும் படியும் கட்சி போலந்து மக்கள் அனைவரையும் அறைகூவி அழைத்தது.

போலந்துத் தொழிலாளர் கட்சி உருவானது போலந்து மக்களின் விடுதலைப் போராட்டத்தில் புதிய கட்டத்தைத் தொடங்கி வைத்தது. கம்யூனிஸ்டுகள் கைப்பற்றுளர்களுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை உடனே விரிவாக நடத்த முற்பட்டார்கள்.

---

[1] யுத்த காலத்திலும் ஹிட்லர் கைப்பற்றல் ஆண்டுகளிலும் போலந்துத் தொழிலாளர் இயக்கம், பக்கம் 141.

போலந்துத் தொழிலாளர் கட்சியின் இராணுவ ஸ்தாபனம்—குவார்தியா லியுதோவா—விரைவில் நிறுவப்பட்டது. குவார்தியா லியுதோவாவின் முதல் படைப்பிரிவுகள் 1942, மே—ஜூன் மாதங்களில் செயல்படத் தொடங்கி, பகைவர்கள் மீது தாக்குதல்கள் நடத்தின. வலிமையுள்ள கொடிய பகைவர்களுக்கு—பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களுக்கும் போலந்திலேயே இருந்த பிற்போக்கு வட்டாரங்களுக்கும்—எதிரான கடும் போராட்டத்தின்போது போலந்துத் தொழிலாளர் கட்சி தன் அணிகளைப் படிப்படியாக வலுவாக்கி பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் செயலூக்கம் மிக்க சக்தி ஆகிவிட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டிருந்த எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள முயன்றது. எதிர்ப்பு இயக்கத்தை வலுவாக்கவும் விரிவுபடுத்தவும் அது உதவியது.

சோவியத் யூனியன் மீது ஜெர்மனியின் படையெடுப்புக்குப் பின் பிரான்சில் இந்த இயக்கம் மேலும் ஏற்றம் பெற்றது. ''ஜூன் 22ந் தேதி முதல் தேசபக்தர்கள் வேறு விதமாக எண்ணத் தலைப்பட்டார்கள்: 'நாம் தனியர்கள் அல்ல. சோவியத் மக்கள் போன்ற கூட்டாளிகள் நமக்கு இருக்கும்போது நாம் விடுதலை பெற முடியும், நாம் வெற்றி அடைய முடியும்'''[1] என்று கூறினார் மொரிஸ் தோரேஸ். 1941ம் ஆண்டுக் கோடைகாலம் முதல் தேசபக்தத் துப்பாக்கி வீரர்கள், கொரில்லா வீரர்கள் ஆகியோரின் படைப் பிரிவுகள் அமைக்கப்படலாயின. இவற்றின் ஒழுங்கமைப்பாளர்களாகத் தொண்டு ஆற்றினார்கள் கம்யூனிஸ்டுகள்.

கம்யூனிஸ்டுகள் தேசியக் கூட்டணியை வலுவாக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டார்கள். பெருந்தொகையான தொழிலாளர்கள், விவசாயிகள் ஸ்தாபனங்களும் பிரெஞ்சு மாதர் கழகமும் இளைஞர் கூட்டணியும் பிறவும் இதில் சேர்ந்தன.

ஜெர்மன்-பாசிஸ்டு அதிகாரிகளும் விஷி அரசாங்க அதிகாரிகளின் வடிவில் அவர்களுடைய கூட்டாளிகளும் பிரெஞ்சு தேசபக்தர்களுக்கு எதிராகக் கொடிய அடக்கு முறைகளைக் கையாண்டார்கள். பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மிக அதிக இழப்புகளுக்கு உள்ளாயிற்று. ''சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் கட்சி'' என்று அது

---

[1] **மொரிஸ் தோரேஸ்.** பொறுக்கி எடுத்த நூல்கள். தொகுதி 1, மாஸ்கோ 1959, பக்கங்கள் 573-574.

அழைக்கப்பட்டது தற்செயலாக அல்ல. 75 ஆயிரம் கம்யூனிஸ்டுகள் ஜெர்மன்-பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களுக்கு எதிரான போராட்டத்தில் நாட்டின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தங்கள் உயிர்களை வழங்கினார்கள். கொல்லப்பட்டவர்களில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் எட்டு உறுப்பினர்கள், பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிச் செயலாளரும் இருப்புப்பாதைத் தொழிலாளர் சங்கத் தலைவரும் ஆன பியெர் ஸெமார், ''யுமானித்தே'' செய்தித்தாளின் ஆசிரியர் கபிரியேல் பெரி ஆகியோரும் பிறரும் இருந்தார்கள். கம்யூனிஸ்டுகள் தாங்கள் எதிர்ப்பு இயக்கத்தின் உண்மையான வீரர்கள் என்பதைக் காட்டிக் கொண்டார்கள்.

சோவியத் யூனியன் மீது ஜெர்மனியின் படையெடுப்புக்குப் பிறகு செக்கோஸ்லோவாக்கியாவில் எதிர்ப்பு இயக்கம் மேலும் தீவிரம் அடைந்தது.

செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் முன்முயற்சியால் 1941, செப்டெம்பரில் செக்கோஸ்லோவாக்கியாவின் மைய தேசியப் புரட்சிக் கமிட்டி நிறுவப்பட்டது. எதிர்ப்பு இயக்கத்தின் முக்கியக் குழுக்களுடைய பிரதிநிதிகள் இதன் உறுப்பினர் ஆனார்கள். நகரங்களிலும் கிராமங்களிலும் வட்டார தேசியக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. கைப்பற்றுளர்களுக்கு எதிராக மக்களது போராட்டத்தின் உறுப்புக்களாக இவை விளங்கின.

ஹிட்லர் குழுவினர் செக் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்ட பின்னர் ஸ்லோவாக்கியா ஜெர்மனிக்கு முற்றிலும் கீழ்ப்பட்ட கைப்பாவை அரசாக மாற்றப்பட்டுவிட்டது. அங்கே கம்யூனிஸ்டுகள் சைனியத்தில் பெருத்த வேலை செய்தார்கள். படைப் பிரிவுகளிலும் துணைப் பிரிவுகளிலும் சட்டவிரோதமான கம்யூனிஸ்டு ஸ்தாபனங்களை அமைத்தார்கள். செஞ்சேனைக்கு எதிராகப் போரிடாமல் இருக்கும்படி படையினரை வேண்டிக் கொள்ளும் துண்டுப் பிரசுரங்களை வினியோகித்தார்கள். ஸ்லோவாக்கியாவின் பாசிஸ்டு அரசாங்கத்தால் சோவியத்-ஜெர்மன் முனைமுகத்துக்கு அனுப்பப்பட்ட முழு முழுத் துணைப் பிரிவுகள் புரட்சிப் பிரசாரத்தின் பாதிப்பினால் செஞ்சேனையின் தரப்புக்கும் சோவியத் தேசபக்த கொரில்லா வீரர்களின் தரப்புக்கும் வந்து விட்டன.

1941ம் ஆண்டுக் கடைசி முதல் ஸ்லோவாக்கியாவிலும் பின்பு செக்கிலும் மொராவியாவிலும் தேசபக்த கொரில்லாப் படைப்

பிரிவுகள் நிறுவப்படலாயின. கம்யூனிஸ்டுகள் தேசியக் கூட்டணி அமைப்பதற்காகப் பெரு முயற்சி செய்தார்கள்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சி மீது ஆழ்ந்த கவனம் செலுத்தியது. அதன் பணிகள் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் பல முறைகள் ஆலோசனை செய்தது. பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சியில் இருந்த ஸ்பெயின் அதிகார பூர்வமாக யுத்தத்தில் கலந்து கொள்ளாமலே நாஜி ஜெர்மனிக்கு வர வர அதிகரித்த அளவில் உதவி அளித்துவந்தது. போர்தந்திர முக்கியத்துவம் உள்ள மூலப் பொருள்கள் ஸ்பெயினிலிருந்து ஜெர்மனிக்கு ஏராளமாக அனுப்பப்பட்டன. பிராங்கோ ''நீல டிவிஷன்'' எனப்பட்ட ஸ்பானியப் படைப் பிரிவை சோவியத்-ஜெர்மன் போர்முனைக்கு அனுப்பினன். அது ஜெர்மானிய சைனியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பாசிஸ்டு ஸ்பெயினின் ஆளும் வட்டாரங்கள் நாட்டை நாஜி ஜெர்மனியின் தரப்பில் முழுமையாகப் போரில் ஈடுபடுத்தத் திட்டமிட்டன. இந்தக் கொள்கை ஸ்பானிய மக்களின் அடிப்படை நலன்களுக்கு ஆபத்து விளைத்தது.

ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சி பிராங்கோ அரசாங்கத்தின் கொள்கையில் இருந்த துர்ச்சாகசப் போக்கை அம்பலப்படுத்தியது. ''ஸ்பெயின் யுத்தத்தில் கலந்துகொள்வதைத் தடுப்பதற்காகவும் பாசிஸ்டு வல்லரசுகளுக்கு சர்வாதிகார அரசாங்கம் அளித்து வரும் உதவிக்கு எதிராகப் போராடுவதற்காகவும்''[1] ஒன்று சேரும்படி பாசிஸ எதிர்ப்பாளர்கள் அனைவரையும், தேசிய நலன்களை உயர்வாக மதிப்பவர்கள் எல்லோரையும் அது அறைகூவி அழைத்தது. இடதுசாரிச் சக்திகள் மட்டும் இன்றி, பழமைவிரும்பிகள், கத்தோலிக்கர்கள் வட்டாரங்களும் இராணுவ ஊழியர்களில் ஒரு பகுதியினரும் பிரிட்டிஷ்-அமெரிக்க மூலதனத்துடன் தொடர்புள்ள ஸ்பானிய முதலாளிகளின் கணிசமான குழுக்களும் உட்பட நாட்டின் பெரும்பாலான மக்கள் ஸ்பெயினின் நடுநிலைமையில் அக்கறை கொண்டிருந்தார்கள். ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சி கடைப்பிடித்துவந்த தேசிய ஒற்றுமைக் கொள்கை இந்த நிலைமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பிராங்கோ ஆட்சிக்கு எதிராக, ஸ்பெயினை யுத்தத்தில் இழுத்துவிடும் அதன் முயற்சிகளுக்கு எதிராகச் சொந்த நாட்டு மக்களைப்

---

[1] ஸ்பானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு, பக்கம் 217.

போராட்டத்துக்குத் தூண்டிய ஒரே கட்சியாக விளங்கியது கம்யூனிஸ்டுக் கட்சி.

1942, செப்டெம்பரில் வெளியிட்ட அறிக்கையில் கம்யூனிஸ்டுக் கட்சி தேசிய ஒற்றுமை அரசாங்கம் அமைக்கும் கோஷத்தை முன்வைத்தது. பாசிஸ்டு சர்வாதிகாரம் கவிழ்த்தப்பட்டு அரசியல் சுதந்திரங்கள் மீண்டும் அளிக்கப்பட்டதும், வருங்கால அரசு அமைப்பு பற்றிய பிரச்சினையை சுதந்திரமும் ஜனநாயகமும் உள்ள நிலைமைகளில் முடிவு செய்வதற்கு மக்களுக்கு வாய்ப்பு அளிக்கும் தேர்தல்களை இந்த அரசாங்கம் நடத்த வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை கூறியது.

ஜப்பானியக் கைப்பற்றாளர்களுக்கு எதிராகச் சீன மக்களின் ஆயுதப் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஊக்கத்துடன் பங்காற்றி வந்த சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனை கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் வேலையில் பெருத்த இடம் பெற்றிருந்தது.

ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதும் சோவியத் யூனியனுக்கு எதிரான போரில் ஜப்பான் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படாதவாறு அதன் மூலம் தடுப்பதும் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் நடந்த நிகழ்ச்சிகளின் போக்கு காரணமாகத் தேவைப் பட்டது. சோவியத் யூனியனின் நலன்களுக்கு மட்டும் இன்றி, விடுதலைப் பற்றுள்ள பிற மக்களின் நலன்களுக்கும் சிறப்பாகச் சீன மக்களின் நலன்களுக்கும் இது பொருத்தமாய் இருந்தது.

ஒன்றித்த தேசியக் கூட்டணி அமைக்கப்படுவது சீன மக்களது தேசிய-விடுதலைப் போரின் வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. ஆயினும் சியாங் காய்-ஷேக் குழுவின் பிற்போக்கான கொள்கை சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் பெருத்த இடர்கள் ஏற்படுத்தியது. சியாங் காய்-ஷேக் கும்பலின் ஆத்திரமூட்டல் காரணமாகக் குவோமிந்தான் படைகளுக்கும் மக்கள்விடுதலைச் சேனைகளுக்கும் இடையே மோதல்கள் பல முறை நிகழ்ந்தன.

ஜப்பானியக் கைப்பற்றாளர்களுக்கு எதிராகச் சீன மக்களின் பயனுள்ள நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் நோக்கத்துடன் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு தேசியக் கூட்டணியை வலுவாக்குவதற்கும் குவோமிந்தானுடன் உறவுகளை மேம்படுத்துவதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படிச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் பல தடவைகள் யோசனை கூறியது. உதாரணமாக, சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டிக்கு 1942, ஜூன்

16ந் தேதி எழுதிய கடிதத்தில் செயற்குழு பின்வருமாறு அறிவுறுத்தியது: ''சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி குவோமிந்தாஹுடன் தன் உறவுகளை முடிந்தவரை சீர்படுத்திக் கொள்ளவும் ஜப்பானியர்களுக்கு எதிரான போராட்டத்தில் சீன மக்களின் ஒன்றித்த கூட்டணியை வலுப்படுத்தவும் தன்னால் இயன்ற எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தற்போதைய நிலைமை வன்மையாகக் கோருகிறது''. கம்யூனிஸ்டுக் கட்சியின் மதிப்பைக் குலைக்கவும் திரளான பொது மக்களிடமிருந்து அதைத் தனிப்படுத்தவும் முயன்றுவந்த சியாங் காய்-ஷேக்கினதும் குவோமிந்தானின் பிற தலைவர்களதும் செயல்தந்திரத்தின் ஆத்திரமூட்டும் தன்மையைச் செயற்குழு குறிப்பிட்டது. ''நம்முடைய ஆட்கள் இத்தகைய ஆத்திரமூட்டல்களுக்கு அறிவுக்கூர்மையுடன் எதிர்ச் செயல்கள் புரிவதற்குப் பதில் அவற்றுக்கு ஆளாகிவிடுகிறார்கள் என்றால் நம் தரப்புக் கொள்கையைச் சரியானது என்று கருத'' முடியாது எனச் செயற்குழு அழுத்திக் கூறியது.

ஜப்பானியக் கைப்பற்றாளர்களின் பின்புலத்தில், சிறப்பாகச் சீனாவின் நாட்டுப்புற வட்டாரங்களில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் வெகுஜன கொரில்லாப் போரை விரிவாக நடத்துவதற்குப் பெருத்த வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் யூனியனின் எல்லைப் புறங்களில் பத்து லட்சம் படையினர் கொண்ட குவாந்துன் சேனையைக் குவித்து வைத்திருந்தார்கள். பின்னர் பசிபிக் மாகடல் பிரதேசத்தில் யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தார்கள். எனவே சீனாவில் போர் புரிவதற்குக் குறுகிய அளவிலேயே படைகளை அவர்கள் அனுப்ப முடிந்தது. இந்தக் காரணங்களால் சீன மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்குச் சாதகமான நிலைமைகள் நிலவின.

விடுதலை பெற்ற பிரதேசங்களை விரிவுபடுத்தவும் படைகளை வலுப்படுத்தவும் இந்த நிலைமைகளைச் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி பயன்படுத்திக் கொண்டது. ஆயினும் மா சே-துங்கைத் தலைவராகக் கொண்ட கட்சித் தலைமை கட்சி ஸ்தாபனங்களின் வேலை ''முறையை ஒழுங்குபடுத்தும்'' இயக்கத்தின் மீது கட்சிக்குள் முதன்மையாகக் கவனம் செலுத்தியது. 1941ம் ஆண்டுக் கோடையிலேயே தொடங்கிய இந்த இயக்கம் 1945ம் ஆண்டு வசந்தம்

[1] மை. ஆ. கூ., தஸ்தாவேஜுத் தொகுப்பு, 1942.

வரை இடையறுது தொடர்ந்தது. மா சே-துங் குழு, இந்த இயக்கத்தை மா சே-துங்கிற்கும் அவருடைய ஆதரவாளர்களுக்கும் வேண்டாத கட்சி ஊழியர்களுக்கு எதிரான தாக்கு நடவடிக்கையாக மாற்றிவிட்டது. இவர்களில் பலர் காரணமின்றித் துன்புறுத்தப்பட்டார்கள்.

''முறையை ஒழுங்குபடுத்தும்'' இயக்கம், மா சே-துங்கிற்குப் புகழ்மாலை சூட்டுவது, கட்சித் தலைமையில் அவரது குழுவின் நிலைகளை வலுவாக்குவது, மாவியத்தைப் பரப்புவது என்னும் பதாகையின் கீழ் நடத்தப்பட்டது. மாவியம் ''சீனாவின் தனிப்பட்ட நிலைமைகளுக்கு ஏற்ற மார்க்சியம்'' என்று போற்றப்பட்டது. உட்கட்சிப் போராட்டத்தின் போது, மா சே-துங்கின் சித்தாந்த முடிவுகளைக் கம்யூனிஸ்டுக் கட்சியில் ஆதிக்கம் வகிக்கும் கொள்கைவாதமாக மாற்றுவதற்கு வேண்டிய கொள்கைவாத, ஸ்தாபன முதனிலைகள் உருவாக்கப்பட்டன. ''தவறு செய்ய முடியாத தலைவர்'' என்ற பெருமை அவரது பெயருக்கு ஏற்படுத்தப்பட்டது.

சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ச்சியில் இந்தக் கேடான நிகழ்ச்சிகள் இருந்த போதிலும் திரளான வெகுஜனங்களின் விரிவான தேசபக்த இயக்கத்தின் செல்வாக்கினாலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் உதவியாலும், ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளின் அடிமைநுகத்திலிருந்து நாட்டை விடுவிக்கும் பொருட்டு உழைப்பாளிகளின் போராட்டத்தைப் பொது கோஷங்களுடன் கட்சி தலைமை வகித்து நடத்திவந்தது.

ஜப்பானிய ஏகாதிபத்தியக் கைப்பற்றுளர்களுக்கு எதிராக மக்களின் போராட்டம் மலாயா, ஃபிலிப்பைன், பர்மா, இந்தோ சீனம், இந்தோனீசியா, கொரியா ஆகிய நாடுகளில் தொடங்கியது. தென்-கிழக்கு ஆசிய நாடுகளைக் கைப்பற்றிக் கொள்கையில் ஜப்பானிய சைனியவாதிகள் ''ஆங்கில-சாக்ஸன் ஏகாதிபத்தியத்திலிருந்து'' மக்களை ''விடுவிப்பவர்கள்'' என்ற முகமூடியை அணிந்து கொண்டார்கள்.

வட்டார பூர்ஷ்வா வர்க்கம், நிலப்பிரபுக்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் கைக்கூலிக்கு ஏவல் செய்யும் பகுதியினரைக் கொண்டு கைப்பற்றப்பட்ட நாடுகளில் கைப்பாவை அரசாங்கங்களை ஜப்பானியக் காலனி ஆட்சியாளர்கள் அமைத்தார்கள். அவர்களுடைய வஞ்சகம் நிறைந்த கொள்கை காரணமாகவும், ஜப்பானின் உதவியால் சுதந்திரம் பெறலாம் என்று நம்பிய மக்

களின் ஒரு சாராரின் மருட்சி காரணமாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளை ஒன்றிணைப்பதற்குத் தடை ஏற்பட்டது. ஆயினும், கைப்பற்றப்பட்ட நாடுகள் ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளால் ஈவிரக்கமின்றிச் சூறையாடப்பட்டதாலும், காட்டு விலங்குத்தனமான பயங்கரமும் வன்முறைகளும் நிறைந்த ஆட்சிமுறை காரணமாகவும் புதிய காலனி ஆட்சியாளர்கள் பால் மக்கள் அனைவரதும் வெறுப்பு மூண்டெழுந்தது. இந்த வெறுப்பு எதிர்ப்பு இயக்கமாக வளரத் தொடங்கியது.

மலாயா மக்கள் ஜப்பானியக் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராக ஊக்கத்துடன் போராட்டம் நடத்தினார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் ஜப்பானிய எதிர்ப்புப் படை நிறுவப்பட்டது. இது கைப்பற்றாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியது.

ஜப்பானியக் கைப்பற்றாளர்கள் ஃபிலிப்பைனில் கடுமையான எதிர்ப்புக்கு உள்ளானார்கள். 1942ம் ஆண்டு வசந்தத்தில் ஃபிலிப்பைன் கம்யூனிஸ்டுக் கட்சியின் முயற்சியால் ஜப்பானிய எதிர்ப்பு ஒன்றித்த கூட்டணி அமைக்கப்பட்டது. தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள் ஆகியோரின் ஸ்தாபனங்களும் மத நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டணியில் சேர்ந்தார்கள். 1942ம் ஆண்டு வசந்தத்தில் கொரில்லாப் படைப்பிரிவுகள் ஒன்றித்த ஜப்பானிய எதிர்ப்பு மக்கள் சேனையாக அமைந்தன. திரளான பொதுமக்களின் ஆதரவுடன் இதன் ஆயுதப் படைப்பிரிவுகள் நாட்டின் மத்திய, தெற்கு மாநிலங்களின் சில பகுதிகளை விடுவித்தன.

பர்மாவில் கம்யூனிஸ்டுகள் எல்லா தேசபக்தச் சக்திகளையும் ஒன்றுபடுத்த முயன்றார்கள். அவர்கள் தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகளை அமைத்து, கைப்பற்றாளர்களுக்கு எதிராகவும் ஜப்பானியர்களுக்குத் தொண்டு புரிந்த வட்டார இராணுவ நிர்வாகத்துக்கு எதிராகவும் மற்ற தேசபக்தர்களுடன் சேர்ந்து போராட்டம் நடத்தினார்கள்.

வியத்நாமில் கம்யூனிஸ்டுக் கட்சியின் முயற்சியால் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடும் ஒன்றித்த கூட்டணி—வியத்-மின் (வியத்நாம் விடுதலைக் கழகம்)—1941லேயே அமைக்கப்பட்டது. தொழிலாளர்கள், விவசாயிகள், நகரக் குட்டி பூர்ஷ்வாக்கள், முற்போக்கு அறிவுஜீவிகள், நடுத்தர பூர்ஷ்வாக்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் இதில் ஒன்றிணைந்தார்கள். கழகத்தின் தலைவராக இருந்

தார் ஹோ ஷி மின். வியத்-மின் ஜப்பானியக் கைப்பற்ருளர்களுக்கு எதிரான போராட்டத்துக்குத் தலைமை தாங்கியது. பிற்காலத்தில் எல்லா விதக் காலனியாட்சி ஒடுக்குமுறையிலும் இருந்து நாட்டை விடுவிப்பதற்கான போராட்டத்தை அது தலைமை ஏற்று நடத்தியது.

இந்தோனீசியாவில் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தில் தொழிலாளர்கள் கலந்துகொண்டார்கள். தொழில் நிலையங்களிலும் இருப்புப்பாதைகளிலும் இவர்கள் மறைமுக அழிவு வேலைகள் செய்தார்கள். விவசாயிகளும் அறிவுஜீவிகளும் மாணவர்களும் இளைஞர்களும் ஜப்பானிய எதிர்ப்பு இயக்கத்தில் பங்காற்றினர்கள். அனேக இடங்களில் விவசாயிகள் கிளர்ச்சிகளும் படைவீரர்கள் கலகங்களும் வெடித்துக் கிளம்பின.

ஜப்பானியக் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிரான இயக்கம் கொரியாவில் விரிவடைந்தது. யுத்தத்துக்கு முந்திய ஆண்டுகளிலேயே அங்கே கம்யூனிஸ்டுகளின் தலைமையில் தாய்நாட்டு மறுமலர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டிருந்தது. மஞ்சூரியாவிலும் கொரியாவின் எல்லைப் பிரதேசங்களிலும் செயலாற்றி வந்த கொரியர்களின் தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகள் இந்தக் கழகத்தின் ஆதாரமாக விளங்கின.

தென்-கிழக்கு ஆசிய நாடுகளின் மக்களுடைய தேசபக்தச் சக்திகளை ஜப்பானியக் கைப்பற்ருளர்களுக்கு எதிராக ஒன்றுபடுத்துவதற்கான இயக்கத்திலும் கைப்பற்ருளர்களுடன் நடந்த ஆயுதப் போராட்டத்திலும் கம்யூனிஸ்டுகள் முன் வரிசைகளில் இருந்தார்கள். ஒன்றித்த ஜப்பானிய எதிர்ப்புக் கூட்டணியின் அமைப்பாளர்களாக அவர்கள் செயலாற்றினர்கள்.

பாசிஸ்டுக் கூட்டணி அரசுகளிலும்
கைப்பற்றப்பட்ட நாடுகளிலும்
வானொலிப் பிரசார ஏற்பாடு

வெகுஜனங்களைப் போராட்டத்துக்கு அணி திரட்டுவதற்கான சக்தியுள்ள ஆயுதமாக இருந்தது பாசிஸ எதிர்ப்புப் பிரசாரம். வானொலிப் பிரசாரமும் இதில் அடங்கியிருந்தது. யுத்த காலத்தில், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ஜெர்மன்-பாசிஸ்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டிருந்த நிலைமைகளில் பாசிஸ எதிர்ப்பு மறைமுக ஸ்தாபனங்களுடன் செயல் தொடர்பு முதன்மையாக

வானொலி வாயிலாகவே வைத்துக் கொள்ளப்பட்டு வந்தது. சோவியத் யூனியனிலிருந்து ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகளும் ஹிட்லர் படையினர் வசமிருந்த சில நிலப்பரப்புக்களில் ஒலிபரப்பப்பட்ட சட்டவிரோதமான வானொலி நிகழ்ச்சிகளும், சர்வதேச நிலைமை பற்றியும் போர்முனைகளில் இருந்த நிலைமை பற்றியும், அவ்வாறே பாசிஸ்டு நாடுகளிலும் பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்டிருந்த நாடுகளிலும் உள்ள நிலைமை பற்றியும் உண்மையான தகவல்களை அளித்த முக்கிய சாதனங்களில் ஒன்றாக இருந்தன. மாஸ்கோவிலிருந்து ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகளில் ஜெர்மன்-பாசிஸ்டுக் கைப்பற்றாளர்களின் கொள்கை அம்பலப்படுத்தப்பட்டது, பாசிஸ்டுப் பிரசாரத்தின் சூழ்ச்சிகள் வெளிப்படுத்தப்பட்டன, பாசிஸ்டு எதிர்ப்புப் போராட்டம் குறித்த திட்டமான பிரச்சினைகள் பற்றி யோசனைகள் தரப்பட்டன.

பாசிஸ்டுக் கைப்பற்றாளர்கள் மீது புனித வெறுப்பைத் தூண்டி வளர்க்கவும், பாசிஸ்டுக் கொள்ளைக்காரர்களின் தவிர்க்க முடியாத தோல்வியிலும் நியாயமான மக்கள் விடுதலை இயக்கத்தின் வெற்றியிலும் நம்பிக்கை ஏற்படுத்தவும் வல்ல முக்கியமான சாதனங்களில் ஒன்றாக இருந்தது வானொலிப் பிரசாரம்.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிகப் பிரபலத் தலைவர்களான கோட்வால்டு, இபரூரி, கொலாரவ், பிக், தளியாத்தி, தோரேஸ், ஊல்பிரிஹ்த் ஆகியோரும் இன்னும் பலரும் வானொலிப் பிரசாரத்தில் பங்கு கொண்டார்கள்.

பல்வேறு நாடுகளுக்கு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பும் பொருட்டு ஆசிரியக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்த நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய பொறுப்புள்ள ஊழியர்கள் ஆசிரியக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆனார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகத்தால் நியமிக்கப்பட்ட மைய ஆசிரியக் குழு பொது வழிகாட்டியாகப் பணி ஆற்றியது.

1943ம் ஆண்டில் தேசிய வானொலி நிகழ்ச்சிகள் அனேகமாக இரவும் பகலும் இடைவிடாமல் 18 வெவ்வேறு மொழிகளில் ஒலிபரப்பப்பட்டன. ஜெர்மன், போலிஷ், செக், ஸ்லோவாக், பல்கேரிய, செர்பிய, ஸ்லவேனிய, ஸ்பானிய, பிரெஞ்சு, இத்தாலிய, ஹங்கேரிய மொழிகளும் பிறவும் இவற்றில் அடங்கும். உண்மையான வானொலித் தகவல்கள் கைப்பற்றப்பட்ட நாடுகளின் மக்களுக்குக் கிடைத்தன, தங்கள் விடுதலைக்காகவும் சுதந்திரத்துக்காகவும் பாசிஸ்டுக் கைப்பற்றாளர்களை எதிர்த்துப் போராடுவதற்கு

அவர்களைத் தூண்டி ஊக்கின. பாசிஸ எதிர்ப்புப் பிரசாரம் ஹிட்லர் கூட்டணி நாடுகளில் இருந்த கம்யூனிஸ்டுகளையும் முன்னணித் தொழிலாளர்களையும் எட்டியது. அங்கே பாசிஸ எதிர்ப்புச் சக்திகள் வளர்ச்சி அடைவதற்கு இது உதவியது.

வானொலி நிகழ்ச்சிகளின் ஒலிபரப்பு எப்படி நடக்கிறது, பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கத்தை விரிவாக நடத்துவதில் அது ஆற்றும் பங்கு என்ன என்பது பற்றிய தகவல்களைக் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகம் பல முறை கேட்டு அறிந்தது. ''போராட்ட நடவடிக்கைகள் தொடங்குவதற்கு அதிக சாதகமான சூழ்நிலையை'' எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களும் செஞ்சேனையின் வெற்றியை மட்டுமே நம்பி இருப்பவர்களுமான பாசிஸ எதிர்ப்பாளர்களின் ஒரு பகுதியினரது செயலற்ற நடத்தை தேசிய ஒலிபரப்புக்களில் கண்டனம் செய்யப்படுவதில்லை என்பதை 1942, பிப்ரவரி 27ந் தேதி செய்த தன் தீர்மானங்களில் செயற்குழுச் செயலகம் சுட்டிக் காட்டியது. வானொலிப் பிரசாரத்தில் பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தின் வெற்றிகளை மிகைப் படுத்துவது கூடாது என்றும், தொடக்க பாசிஸ எதிர்ப்புக் குழுக்களின் போராட்ட நடவடிக்கைகளும் பகைவனுக்கு எதிராக விரிவான வெகுஜனங்களின் போராட்டங்களும் எல்லா வகையிலும் தூண்டி ஊக்கப்பட வேண்டும் என்றும் செயற்குழு கோரியது. பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களுக்கு எதிராகப் பெருத்த வெகுஜன நடவடிக்கைகளுக்கும் அதிக உறுதியான போராட்டச் செயல்களுக்கும் இன்னும் ஏற்ற தருணம் வரவில்லை என்ற கருத்துக்களைக் கைவிடும்படி செயற்குழு கேட்டுக் கொண்டது.

வானொலிப் பிரசாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டவட்டமான யோசனைகளைச் செயற்குழுச் செயலகம் தயாரித்தது. ''பகைவர்களை மேற்கொண்டும் ஓய்வின்றி அம்பலப்படுத்துவதைத் தொடர்கையில்... ஹிட்லர் ஏற்பாடுகள் செய்துவரும் வசந்த காலத் தாக்குதலை இடை முறிப்பதை தேசிய வானொலி நிகழ்ச்சிகள் இலக்காகக் கொள்வது அவசியம்'' என்று அதன் தீர்மானம் கூறியது. ஹிட்லர் குழுவினருக்கும் நாஜி ஜெர்மனியின் ஆளும் கும்பலின் கையாட்களாகத் தொண்டாற்றும் துரோகி அரசாங்கங்களுக்கும் எதிராகத் திரளான பொது மக்கள் உடனடியாகப் போராட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு எல்லா தேசிய ஒலிபரப்பு ஆசிரியக் குழுக்களும் பிரசாரத்தைத் தீவிரப்படுத்தி இருக்க வேண்டும் என்று தீர்மானம் சுட்டிக் காட்டியது. பல வகையான

மக்கள் கமிட்டிகளின் வடிவில் இயக்கத்தின் தேசிய ஆதார மையங்கள் தாமதமின்றி அமைக்கப்பட வேண்டும் என்று செயற்குழு மேலும் அறிவுறுத்தியது. இந்தக் கமிட்டிகளின் பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் பணிகளையும் அது விவரமாக விளக்கியது. யுத்தம் தாமதமின்றி நிறுத்தப்படுவதற்காகப் போராடுவதும், யுத்தத்தில் ஹிட்லரின் தோல்விக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பதும், மக்களுக்கு விடுதலையைக் கொண்டுவரும் செஞ்சேனைக்கு சர்வாம்ச ரீதியான உதவி அளிப்பதும், ஜெர்மனியில் ஹிட்லரையும் ஜெர்மனியின் கூட்டாளி நாடுகளில் தேசத்துரோக அரசாங்கங்களையும் கவிழ்த்துவதற்காகப் போராடுவதும், உண்மையான தேசிய அரசாங்கங்களை, சமாதானத்தையும் விடுதலையையும் மக்களின் நலவாழ்வையும் குறிக்கோளாகக் கொண்ட அரசாங்கங்களை நிலைநாட்டுவதற்காகப் போராடுவதும் இந்தக் கமிட்டிகளின் பொதுப் பணி ஆகும். ''இந்தப் பணிகள் அனைத்தையும் பற்றிய பிரசாரத்தில் ஒவ்வொரு நாட்டின் தேசிய நலன்களையும் அடிப்படையாகக் கொள்வது அவசியம்.''[1]

பாசிஸ எதிர்ப்பாளர்களுக்கு (சிறப்பாக ஜெர்மனியிலும் இத்தாலியிலும்) தங்கள் சட்டவிரோதமான ஸ்தாபனங்களை வலுப்படுத்தும்படியும், அவை இல்லாத இடங்களில் அவற்றை அமைக்கும்படியும், மேலிருந்து ஆணைக் குறிப்புக்களை எதிர்பார்த்திராமல் கீழிருந்து அதிகத்திலும் அதிகமான முன்முயற்சியைக் காட்டியவாறு இந்த ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளை எல்லா வகையிலும் துடியாக நடத்தும்படியும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகம் யோசனை கூறியது.

முக்கியமான போர்முனை நிகழ்ச்சிகளைச் செயற்குழுச் செயலகம் கூர்ந்து கவனித்துக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு உரிய யோசனைகள் அளித்துவந்தது. ஜெர்மன்-பாசிஸ்டுப் படைகள் 1942ம் ஆண்டுக் கோடையில் தாக்குதல்கள் தொடங்கியதும் செயற்குழு விசேஷத் தீர்மானம் நிறைவேற்றியது. ''பகைவனின் தாற்காலிக வெற்றிகள் குறித்து எதிரியின் பிரசாரத்துக்கு இன்னும் வன்மையாகவும் அறிவுக் கூர்மையுடனும் பதில் அளிப்பது'' இன்றியமையாதது என்று இந்தத் தீர்மானம் சுட்டிக் காட்டியது. தீர்மானம் மேலும் கூறியதாவது: ''ஹிட்லர் சேனையின் பெரும்பகுதிப்

---

[1] மை. ஆ. கூ., 495/18/1336/85-86.

படைகள் சோவியத்-ஜெர்மன் போர்முனையில் ஈடுபட்டிருப்பதால் இரண்டாவது போர்முனை பற்றிய பிரச்சினை உடனடி முக்கியத்துவம் உள்ளது ஆகி விட்டது என்றும் இரண்டாவது போர்முனை திறப்பது மேலும் சாத்தியமானது ஆகி விட்டது என்றும் விவரமாக விளக்க வேண்டும். இதனால் கைப்பற்றப்பட்ட நாடுகளின் மக்களது போராட்டத்துக்கும் முக்கியமாக தேசபக்த கொரில்லா இயக்கத்துக்கும் மேலும் சாதகமான நிலைமைகள் ஏற்படும்...''. அதே சமயம் இரண்டாவது போர்முனை திறக்கப்படுவதற்காகச் செயலின்றிக் காத்திருப்பதின் அபாயம் குறித்தும் செயற்குழு பாசிஸ எதிர்ப்பாளர்களை எச்சரித்தது. ''இரண்டாவது போர்முனை திறக்கப்படுவதற்காகக் காத்திருக்க வேண்டாம். கைப்பற்றுளர்களுக்கு எதிராகப் போராட்டத்தை இப்போதே எல்லா வகையிலும் விரிவாக நடத்த வேண்டும்''[1] என்று செயற்குழு அறிவுறுத்தியது.

இளைஞர்களுக்கிடையே பிரசாரம் பற்றிய பிரச்சினை மீதும் செயற்குழு ஆலோசனை நடத்தியது. ஹிட்லர் விரைவாகத் தோல்வி அடைவதில் இளைஞர்கள் முதன்மையாக அக்கறை கொண்டிருக்கிறுர்கள் என்றும் தற்போதைய நிலைமைகளில் விடுதலை பெறுவதற்கான ஒரே வழி ஆயுதப் போராட்டம்தான் என்றும் 1942, ஜூலை 28ந் தேதி நிறைவேற்றிய தீர்மானத்தில் செயற்குழுச் செயலகம் கூறியது. எனவே கைப்பற்றப்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் இளைஞர்கள் இந்த மக்கள் போராட்டத்தின் முன்னணிப் படையாக இருப்பதைத் தன் புனிதக் கடமையாகக் கருத வேண்டும். இளைஞர்களுக்கான வானொலி நிகழ்ச்சிகள் ''என் தாய்நாட்டின் இன்பம் எனக்கு என் உயிரைக் காட்டிலும் இனியது''[2] என்ற கோஷத்துடன் நடத்தப் பெற வேண்டும் என்று யோசனை கூறப்பட்டது. தேசிய ஒலிபரப்புக்களில் தேசபக்த கொரில்லா இயக்கப் பிரசாரத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு விடுத்த செய்திகளில், பொருத்தமான நிலைமைகள் நிலவும் எல்லா இடங்களிலும் தேசபக்த கொரில்லா இயக்கத்தை விரிவாக நடத்தும்படி கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு கேட்டுக் கொண்டது. 1942, செப்டெம்பர் இறுயில் செயற்குழுவின் செயலகம் ஒரு விசேஷத் தீர்மானத்தை நிறை

---

[1] மை. ஆ. கூ., 495/18/1338/6-7, 9-10.

[2] மை. ஆ. கூ., 495/18/1338/36-37.

வேற்றியது. ஒலிபரப்புக்களில் தேசபக்த கொரில்லா இயக்கப் பிரசாரத்தை நாள்தோறும் நடத்துவது தேசிய ஆசிரியக் குழுக்களின் கடமை என்றும், பாசிஸத்துக்கு எதிராக தேசபக்த கொரில்லாப் போராட்டமும் மறைமுக அழிவு வேலைகளும் நியாயமானவை என்ற அடிப்படையில் இந்தப் பிரசாரம் நடத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் வலியுறுத்தியது.

கம்யூனிஸ்டு அகிலமும் போர்க் கைதிகளிடையே அரசியல் வேலையும்

போர் நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலத்துக்கு முன்னின்ற முக்கியமான பிரச்சினைகளில் போர்க் கைதிகளிடையே அரசியல் வேலை செய்வது ஒன்றாக இருந்தது. பாசிஸ்டு நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் இனவெறி, நாட்டுவெறி, படைவெறி ஆகிய உணர்வுகளைப் படையினருக்கும் மக்களுக்கும் புகட்டும் கொள்கைவாத வேலையில் மிகப் பெருத்த கவனம் செலுத்தி வந்தன. மிகப் பெரும் பாலரான போர்க்கைதிகள் — ஜெர்மன்-பாசிஸ்டு சேனை, இத்தாலிய, ஹங்கேரிய, ருமேனியப் படைகள், பிற சைனியங்கள் ஆகியவற்றின் முன்னாள் படையினரும் அதிகாரிகளும்—கம்யூனிஸ விரோதப் பிரசாரத்தின் கடுமையான பாதிப்பில் இருந்தார்கள். இந்தக் காரணத்தால் போர்க் கைதிகளாய் இருந்த படையினருக்கும் அதிகாரிகளுக்கும் பாசிஸ விரோத உணர்வில் மறு போதனை அளித்து, தங்கள் நாடுகளில் ஜனநாயக சமூக அமைப்பின் பொருட்டு பாசிஸத்துக்கு எதிராகப் போராடும் ஊழியர்களாக அவர்களைப் பயிற்றும் மிகுந்த முக்கியத்துவம் உள்ள பணி எதிர்ப்பட்டது. இந்தப் பணியை நிறைவேற்றுவது எளிதாக இல்லை.

சோவியத் உறுப்புக்களின் இசைவுடன் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு போர்க் கைதிகளின் பாசறைகளுக்குத் தன் பிரதிநிதிகளை 1941ம் ஆண்டுக் கோடை காலத்திலேயே அனுப்பி வைத்தது. இவர்கள் போர்க்கைதிகளிடையே முறையாக வேலை செய்யத் தொடங்கினார்கள். சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பிரபலத் தலைவர்களும், பெயர் பெற்ற ஜெர்மன் எழுத்தாளர்களும் (பேஹெர், பிரேதெல், வாயினெர்த்) பற்பல ஜெர்மன் கம்யூனிஸ்டுகளும் இந்த வேலையில் பெரும் பங்கு ஆற்றினார்கள். அயல்நாட்டுக் கம்யூனிஸ்டுகளோடு கூடவே சோவியத் கம்யூனிஸ்டு

களும் போர்க்கைதிகளிடையே அரசியல் வேலை செய்வதில் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள்.

1941, ஆகஸ்டு 21ந் தேதி, ஜெர்மானிய, ருமேனியப் போர்க் கைதிகள் பற்றி ஊல்பிரிஹ்த், திரகானவ், ஷ்வேர்மா ஆகியோரின் அறிக்கைகளைக் கேட்டபின் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு வின் செயலகம், ஹிட்லர்விரோத மனப்பான்மை கொண்ட படையினருக்கும் அதிகாரிகளுக்கும் தனி வகுப்புக்கள் நடத்த ஏற்பாடு செய்யும்படி யோசனை கூறியது.

1941, அக்டோபர் மாதம், போர்க்கைதிகளின் ஒரு பாசறை யில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதிகளும் போர்க் கைதிகளாய் இருந்த ஜெர்மானியப் படையினரும் கலந்து கொண்ட முதல் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. ''ஜெர்மானிய மக்களுக்குச் செய்தி'' கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ''ஹிட்லரை ஆட்சியிலிருந்து அகற்றுவது ஜெர்மானிய மக்களின் கடைத்தேற் றம் ஆகும்!'' என்று இந்தச் செய்தி கூறியது. முதன்முதலாக ஜெர்மானியப் படையினரின் பெரிய குழு யுத்தத்தை நிறுத்தும் படியும் ஹிட்லரை ஆட்சியிலிருந்து அகற்றும் படியும் விடுதலை பெற்ற, சுதந்திர ஜெர்மனியை நிறுவ முற்படும்படியும் ஜெர் மன் மக்களைக் கேட்டுக்கொண்டது. இந்தச் செய்தி பெருத்த அரசியல் முக்கியத்துவம் கொண்டிருந்தது. சோவியத் யூனியனில் இருந்த போர்க்கைதிகள் பாசறைகளில் பாசிஸ எதிர்ப்பு இயக்கத் துக்கு இது வழி காட்டியது.[1]

கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு போர்க்கைதிகளுக்கிடை யே வேலை செய்வதற்கான வழியையும் அனுபவத்தையும் மேற் கொண்டும் முறையாக ஆராய்ந்து வந்தது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பிரபலத் தலைவர்கள் இதில் ஈடுபட்டார்கள். 1942, ஜனவரி மாதம் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழு போர்க் கைதிகளுக்கிடையே அரசியல் வேலை பற்றிய பிரச்சினை குறித்து ஆலோசித்தது. இது பற்றிய தீர்மானத்தில் பின்வருமாறு கூறப் பட்டது: ''போர்க்கைதிகளுக்கிடையே வருங்கால வேலை, ஜெர் மன் போர்க்கைதிகளின் முதல் மகாநாட்டின் செய்தியையும் மற்ற நாடுகளுக்காக ஏற்கப்பட்ட இது போன்ற செய்திகளையும் ஆதார மாகக் கொண்டிருக்க வேண்டும்...''.[2] போர்க்கைதிகளுக்கு

[1] Geschichte der deutschen Arbeiterbewegung. Bd. 5. Berlin, 1966, S. 317-318.

[2] மை. ஆ. கூ., 495/18/1336/22.

மூன்று மாதப் பயிற்சி அளிக்கும் பாசிஸவிரோதப் பள்ளி அமைக்கும் யோசனைக்குச் செயலகம் ஒப்புதல் அளித்தது. இந்தப் பள்ளியில் பயின்று தேறிய போர்க்கைதிகளைப் பாசறைகளில் அரசியல் வேலை செய்வதற்குப் பயன்படுத்தலாம் என்று யோசனை கூறப்பட்டது.

போர்க்கைதிகளுக்கிடையே அரசியல் வேலையை நிரந்தரமாக வழிகாட்டி நடத்தும் பொருட்டுக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு ஒரு கமிஷனை நியமித்தது. ஊல்பிரிஹ்த், கப்ளெனிக், ஸாந்தோ ஆகியோர் இதன் உறுப்பினர்கள் ஆனார்கள்.

1942ம் ஆண்டின் இறுதியிலும் 1943ம் ஆண்டின் தொடக்கத்திலும் சோவியத் சேனை பெற்ற வெற்றிகளின் காரணமாகவும் பாசிஸ்டு சேனைகளின் பெருந்தொகையான படையினரும் அதிகாரிகளும் கைதிகள் ஆனதாலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு போர்க்கைதிகளுக்கிடையே வெகுஜன பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தை விரிவாக நடத்துவது என்று முடிவு செய்தது. செயற்குழுச் செயலகம் பாசிஸ எதிர்ப்புப் பள்ளிகளை விரிவுபடுத்தும்படி யோசனை கூறியது. செயலூக்கமுள்ள ஊழியர்களைத் தயாரிக்கும் பொருட்டுக் குறுகிய காலப் பயிற்சி வகுப்புக்களையும் அது ஏற்படுத்தியது. போர்க்கைதிகளாய் இருந்த அதிகாரிகளுக்கிடையே கருத்தரங்குகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுச் செயலகத்தின் யோசனைப்படி ஜெர்மானிய, இத்தாலிய, ஹங்கேரிய, ருமேனியப் போர்க்கைதிகளின் பிரதிநிதிகளது மகாநாடுகள் கூட்டப்பட்டன. ஹிட்லருக்கும் அவனுடைய கூட்டாளிகளுக்கும் எதிரான போராட்டத்தில் போர்க்கைதிகளின் அரசியல் பணிகள் இவற்றில் விவாதிக்கப்பட்டன.

போர்க்கைதிகளிடையே செய்யப்பட்ட ஓய்வு ஒழிவு அற்ற அரசியல் வேலையின் விளைவாக ஜெர்மன்-பாசிஸ்டுப் படைகளையும் பிற பாசிஸ்டுக் கூட்டணி நாடுகளின் படைகளையும் சேர்ந்த பல வீரர்களும் அதிகாரிகளும் பாசிஸத்தை எதிர்த்து ஊக்கத்துடன் போராடுபவர்கள் ஆகி விட்டார்கள். ஹிட்லரின் எல்லா எதிரிகளதும் ஒன்றித்த கூட்டணி அமைப்பதற்கு ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி செய்துவந்த பெரு முயற்சியில் ''சுதந்திர ஜெர்மனியின்'' தேசியக் கமிட்டி 1943ம் ஆண்டு நிறுவப்பட்டது மிக முக்கிய நிகழ்ச்சியாக விளங்கியது. சாராம்சத்தில் ''சுதந்திர ஜெர்மனி'' இயக்கம் பாசிஸ எதிர்ப்பாளர்களின் போராட்டக் கூட்டணி

யாக இருந்தது. போர்க்கைதிகளின் ஒரு பகுதியினரின் வடிவில் சேனையின் தேசியச் சக்திகளும் இதில் சேர்ந்திருந்தன. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் இயக்கத்துக்கு மேலாண்மை வகித்தது. ''சுதந்திர ஜெர்மனி'' இயக்கம் ஊழியர்களைப் பயிற்ற உதவியது. பிற்காலத்தில் புதிய, ஜனநாயக ஜெர்மனியை நிறுவுவதில் இவர்கள் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்திலும் மாபெரும் தேசபக்தப் போரிலும் தொடங்கிய அடிப்படைத் திருப்பத்தின் நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலம்

பாசிஸ அடிமைத்தனத்துக்கு எதிராக எல்லா மக்களினங்களுடையவும் போராட்டத்தின் முடிவு முதன்மையாக சோவியத்-ஜெர்மானியப் போர் முனையில்—இரண்டாவது உலக யுத்தத்தின் தலைமைப் போர்முனையில்—நிர்ணயிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சோவியத் யூனியன் மீது ஜெர்மனியின் தாக்குதல் தொடங்கியது முதல் 1943ம் ஆண்டின் நடுவரை ஹிட்லர் கூட்டணி நாடுகளின் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான படைகள் சோவியத்-ஜெர்மன் போர் முனையில் குவிக்கப்பட்டிருந்தன.

மாபெரும் தேசபக்தப் போரின் தொடக்கக் காலப் பகுதியில் சோவியத் சேனைக்குச் சில கடுமையான தோல்விகள் ஏற்பட்டன. ஆயினும், பயங்கரமான போர்களில் குருதி பெருக்கி சோவியத் சேனை பகைவர்களின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்தது. பின்னர், யுத்தத்தில் அடிப்படையான திருப்பம் ஏற்படுத்துவதில் அது வெற்றி பெற்றது. 1942ம் ஆண்டின் பிற்பாதியிலும் 1943ம் ஆண்டின் தொடக்கத்திலும் வோல்கா, தோன் ஆறுகளின் நடுப் பிரதேசத்தில் நடைபெற்ற பெருஞ்சமர் பாசிஸ்டுப் படைகளின் படு தோல்வியில் முடிந்தது. இந்தத் தோல்வி ஹிட்லரின் யுத்த இயந்திரம் அனைத்தையும் உலுக்கி எடுத்து, யுத்தத்தின் போக்கை மாற்றிவிட்டது. சோவியத் நாட்டின் நிலப் பரப்பிலிருந்து பாசிஸ்டுக் கைப்பற்றுளர்கள் விரட்டியடிக்கப்படுவது தொடங்கியது.

ஸ்தாலின்கிராத் போரில் சோவியத் சேனையின் வெற்றி

ஹிட்லரின் அடிமைத்தனத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளின் மக்கள் விடுதலை பெறுவதற்கு மெய்யான வாய்ப்புக்களை அளித்தது. பாசிஸ்டு அடிமை நுகத்தில் அகப்பட்டுத் துன்பப்பட்டுக் கொண்டிருந்த பல கோடி மக்களின் உள்ளங்களில் விடுதலை பெறும் நேரம் நெருங்கிவிட்டது என்ற நம்பிக்கை உறுதிப்பட்டது. சோவியத் சேனையின் வெற்றியினது பாதிப்பால் பாசிஸ எதிர்ப்பு இயக்கம் நாளுக்கு நாள் அதிக விரிவாகப் பரவியது. கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இயங்கிய சோவியத் யூனியனின் மதிப்பும் செல்வாக்கும் உலகனைத்திலும் இருந்த கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கும் கணிசமாக அதிகரித்தன.

ஆனால் கடினமான போர் இன்னும் நடத்த வேண்டி இருந்தது. எல்லாப் போர் முனைகளிலும் யுத்தப் பிரதேசங்களிலும் எல்லா பாசிஸ எதிர்ப்புச் சக்திகளும் மிக மிக ஊக்கத்துடன் போர் நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாய் இருந்தது.

புதிய சூழ்நிலையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு பாசிஸ எதிர்ப்புப் பிரசாரத் துறையிலும் கிளர்ச்சித் துறையிலும் புதிய பணிகளை முன்வைத்தது. செயற்குழுச் செயலகத்தின் 1943, பிப்ரவரி 10ந் தேதியிட்ட தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: "யுத்தத்தின் போக்கில் தொடங்கியுள்ள நிர்ணயகரமான திருப்பம், ஹிட்லர் விரைவில் தோல்வி அடையும் வாய்ப்பு ஆகியவற்றின் காரணமாக நமது பிரசாரத்தில் முழுத் திருப்பம் அவசியம் ஆகிவிட்டது. இப்போது அது ஹிட்லரியத்துக்கு எதிரான போராட்டத்தின் புதிய நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். நமது பிரசாரம் சர்வாம்ச ரீதியாகத் தாக்குதலுக்கு மாற வேண்டும், அதிகத்திலும் அதிகப் போர்த்தன்மையும் உறுதியும் கொண்டிருக்க வேண்டும், நாம் யுத்தத்தின் நிர்ணயகரமான கட்டத்தில் பிரவேசித்து விட்டோம் என்பதை வெகுஜனங்களுக்கு விளக்க வேண்டும்".[1]

இரண்டாவது உலக யுத்தத்தில் அடிப்படைத் திருப்பம் தொடங்கியிருந்த காலப்பகுதியில், எல்லா பாசிஸ எதிர்ப்பாளர்களையும் தேசபக்தர்களையும் மேற்கொண்டு ஒன்றிணைப்பதையும் பாசிஸ்டு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மக்களினங்களின் போராட்டத்தைத் தீவிரம் ஆக்குவதையும் நோக்கமாகக் கொண்ட கொள்கைப் போக்கை செயற்குழு கடைப்பிடித்தது.

---

[1] மை. ஆ. கூ., *495/18/1340/47-48.*

சர்வதேசச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப பிரெஞ்சு, இத்தாலியக் கம்யூனிஸ்டுகளின் பணிகள் மீது செயற்குழுச் செயலகம் இந்த சமயத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்தியது.

பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அணித்தான பணிகள் பற்றிய யோசனைகள் தோரேஸ், மர்த்தி, தளியாத்தி ஆகியோரால் தயாரிக்கப்பட்டு, மனுயீல்ஸ்கியும் திமீத்ரொவும் பங்குகொண்ட செயற்குழுவின் கமிஷனால் 1942, டிசம்பர் 1ந் தேதி ஆமோதிக்கப்பட்டன. ஸ்தாலின்கிராத் அருகே சோவியத் படைகளின் தாக்குதலும் வட ஆப்பிரிக்காவில் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் இறக்கப்பட்டிருப்பதும் ஹிட்லர் படைகள் பிரான்சின் கைப்பற்றப்படாத நிலப்பரப்பை ஆக்கிரமித்திருப்பதும் இந்த நாட்டில் புதிய நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றன என்று இவை குறிப்பிட்டன. நாட்டின் விடுதலைக்கான போராட்டக் கூட்டணியின் அடித்தளத்தை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு இந்த நிலைமையில் அடங்கி இருந்தது. ஹிட்லருடன் உண்மையில் போராட விரும்பும் எல்லா பிரெஞ்சுக்காரர்களையும் முந்திய அரசியல் கருத்து வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் தேசியக் கூட்டணியில் சேர்த்துக்-கொள்வதன் மூலம் அதை வலுப்படுத்துவது முதன்மையாக இன்றியமையாதது என்று யோசனைகளில் வலியுறுத்தப்பட்டது. எல்லா தேசியச் சக்திகளையும் ஒன்றுபடுத்தும் பணி கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அளிக்கப்பட்டது.

பிரெஞ்சு நாட்டினத்தை ஒன்றுபடுத்தும் பொருட்டு, டி காலின் தலைமையில் நடந்த இயக்கத்துடனும் பிரான்சிலும் வட ஆப்பிரிக்காவிலும் இருந்த பிற தேசபக்தச் சக்திகளுடனும் ஒத்துழைப்பது இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டுகள் கருதினார்கள். இவை ஹிட்லருக்கு எதிரான போராட்டத்தில் உண்மையில் கலந்துகொண்டிருந்தன.

நேசநாட்டினருடன் சேர்ந்து போர் நடவடிக்கைகளை உடனே ஒழுங்கமைக்க வல்ல தலைமை வட ஆப்பிரிக்காவில் ஏற்பட வேண்டும் என்று கமிஷன் கோரிக்கை விடுத்தது. பிரான்சின் விடுதலை இயக்கத்துக்குத் தொண்டாற்றும் உண்மையான தேசிய பிரெஞ்சு சைனியத்தை அமைப்பதற்கு ஏற்ற தளமாக வட ஆப்பிரிக்காவைப் பயன்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரவு அளிக்க வேண்டும் என்று அது கூறியது.

வட ஆப்பிரிக்காவில் ஜனநாயக சுதந்திரங்கள் மீட்டமைக்கப்

பட வேண்டும், சிறைகளில் அடைபட்டிருக்கும் தேசபக்தர்களும் பாசிஸ-எதிர்ப்பாளர்களும் விடுவிக்கப்பட வேண்டும், சேனையிலும் போலீசிலும் நிர்வாக உறுப்புக்களிலும் எஞ்சியுள்ள ஐந்தாம் படையினர் (ஹிட்லர் உளவாளிகளும் ஆதரவாளர்களும்) அகற்றப் பட வேண்டும், ஐந்தாம் படையின் தலைவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் கமிஷனின் யோசனைகளில் முக்கிய இடம் பெற்றிருந்தன.

கம்யூனிஸ்டுகள் பிரான்சில் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கத்தை எல்லா வகையிலும் விரிவாக்கவும் கைப்பற்றுளர் களுக்கு எதிராக தேசபக்த கொரில்லா இயக்கத்தைச் சிறப்பாக விரிவாக நடத்தவும் முயல வேண்டும். இதன் பொருட்டுத் தேச பக்தத் துப்பாக்கி வீரர்கள், கொரில்லா வீரர்கள் ஸ்தாபனத்தை எல்லா வகையிலும் விரிவுபடுத்துவதும் வருங்காலத் தேசிய சைனியத்தின் மையக் கருவாக விளங்கும் புதிய படைப் பிரிவு களை அமைப்பதும் அவசியம். இந்தச் செயல்கள் யாவும் திரளான பொது மக்களின் போராட்டத் திறனை அதிகரிக்கும். பிரான்சின் விடுதலைக்காகக் கைப்பற்றுளர்களுக்கு எதிராக அனைத்து மக்கள் கிளர்ச்சிக்கான முன்னேற்பாடுகளை விரைவுபடுத்தும் என்று கமிஷ னின் யோசனைகளில் கூறப்பட்டிருந்தது.[1]

ஹிட்லர் கைப்பற்றுளர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஒத் துழைப்பது பற்றி டி காலுடன் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள் 1942ம் ஆண்டின் இறுதியில் உடன்பாடு செய்து கொண்டார்கள். பிரான் சின் தேசபக்தச் சக்திகளை ஒன்றுபடுத்துவதற்கு இந்த உடன்பாடு மிகுந்த முக்கியத்துவம் கொண்டிருந்தது.

தேசிய விடுதலை என்னும் கோஷத்துடன் பிரான்சின் கம்யூ னிஸ்டுகள் பாசிஸ எதிர்ப்பு இயக்கத்தின் முன்னணிகளில் வீரப் போராட்டம் நடத்தினார்கள்.

1943ம் ஆண்டு வசந்தத்துக்குள் நாட்டில் தேசபக்தத் துப் பாக்கி வீரர்கள், கொரில்லா வீரர்களின் புதிய படைப்பிரிவுகள் பெருத்த எண்ணிக்கையில் நிறுவப்பட்டன. பல படைப்பிரிவு களில் ஸ்பானிய, போலந்து, செக்கோஸ்லோவாக்கிய, ஜெர் மானிய, இத்தாலிய பாசிஸ எதிர்ப்பாளர்கள் பிரெஞ்சுத் தேசபக் தர்களின் தோளோடு தோள் சேர்த்துச் சமர் புரிந்தார்கள். ஜெர் மன் தண்டனை முகாம்களிலிருந்து தப்பி பிரான்சுக்கு ஓடிச் சென்ற

---

[1] மை. ஆ. கூ., 495/18/1338/160-162.

சோவியத் போர்க்கைதிகள் பிரெஞ்சு கொரில்லா வீரர்கள் படை களில் கணிசமான எண்ணிக்கைகளில் இருந்தார்கள்.

1943ம் ஆண்டு வசந்தத்தில் பாசிஸ எதிர்ப்புப் போராட்டத் தேசிய சபை பிரான்சில் அமைக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இருந்த தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகளும் பாசிஸ எதிர்ப்பு பூர்ஷ்வா ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இந்த சபை யின் உறுப்பினர் ஆனார்கள். நாட்டில் தேசபக்தச் சக்திகள் மேற் கொண்டும் ஒன்றுபடுவதற்கு இது அறிகுறியாக விளங்கியது. பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி யினதும் பிற இடதுசாரிச் சக்திகளதும் செல்வாக்கு அதிகரித்தது. கைப்பற்றுளர்களுக்கும் விஷியில் இருந்த கைக்கூலி அரசாங்கத் துக்கும் எதிராக ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கம்யூனிஸ்டுகளின் யோசனையை பாசிஸ எதிர்ப்புத் தேசிய சபை ஆதரித்தது. பிரெஞ்சு மக்களின் விடுதலைப் போராட்டத்தில் புதிய வாய்ப்புக்களுக்கு இது வழி வகுத்தது.

பிரெஞ்சுத் தொழிலாளர்களை ஜெர்மனியில் இருந்த போர்த் தளவாடத் தொழிற்சாலைகளுக்குக் கடத்திச்செல்வதை எதிர்த்துப் போராடுவது அந்தக் காலத்தில் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளின் முக்கியமான செயற்களங்களில் ஒன்ருக இருந்தது. பாசிஸ்டுகளின் ''பூரணப் படைதிரட்டலுக்குத்'' தப்பிப் பெருந்திரளான தொழி லாளர்களும் விவசாயிகளும் காட்டுக்கு ஓடி ஒளிந்து கொண்டார் கள். படைதிரட்டலுக்குத் தப்பி ஒளிந்து கொண்டிருந்த தொழி லாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கம்யூனிஸ்டுகள் படைப்பயிற்சி அளித்து கொரில்லாப் படைப்பிரிவுகளில் சேர்த்துக் கொண்டார் கள். ''பூரணப் படைதிரட்டலுக்கு'' எதிராக பிரான்சின் தேசபக்தச் சக்திகளது போராட்டம் மிகப் பெரிய அளவில் நடந்ததால் விஷி அரசாங்கம் தொழிலாளர்களை ஜெர்மனிக்குக் கடத்து வதாகத் தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்ற இயலாதது ஆகிவிட்டது.

சோவியத் போர்முனையிலும் வட ஆப்பிரிக்காவிலும் இத்தா லியப் படைகள் தோல்வி அடைந்ததன் விளைவாக இத்தாலியில் பாசிஸ்டு அரசாங்கத்தின் நிலைமை 1942ம் ஆண்டின் இறுதிக்குள் ஆட்டம் கண்டுவிட்டது.

இந்த நிலைமைகளில், பாசிஸ்டு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற் கும், இத்தாலியை யுத்தத்திலிருந்து விரைவிலும் விரைவாக வெளியேறச் செய்வதற்குமான போராட்டப் பணி உடனடி

முக்கியத்துவம் உள்ளது ஆயிற்று. இவ்விஷயம்பற்றி தளியாத்தி, தோரேஸ், மர்த்தி ஆகியோரால் தயாரிக்கப்பட்ட யோசனைகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவினது செயலகத்தின் கமிஷனால் 1942, டிசம்பர் 1ந் தேதி அங்கீகரிக்கப்பட்டன. முசோலினி அரசாங்கம் இத்தாலியை நாஜி ஜெர்மனியின் சார்பு நாடாகவும் ஐரோப்பாவின் தெற்கில் ஹிட்லரின் தற்காப்பு அரணாகவும் மாற்றி இருக்கிறது என்றும் இத்தாலி யுத்தத்திலிருந்து வெளியேறுவதற்குத் தடையாய் இருப்பது முசோலினி அரசாங்கமே என்றும் இந்த யோசனைகளில் கூறப்பட்டது. முசோலினி அரசாங்கத்தைக் கவிழ்ப்பது, பாசிஸ விரோதச் சக்திகளினதும் பாசிஸ்டுகளின் யுத்தக் கொள்கையை நிராகரிப்பவர்கள் அனைவரதும் திண்ணமான உடனடிப் பணி ஆகும். சமாதான அரசாங்கம் அமைப்பது என்ற கோஷத்தைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவும் இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியும் முன்வைத்தன. இந்த அரசாங்கம், நாட்டை விபத்திலிருந்து காக்கும் பொருட்டுப் போர் நடவடிக்கைகளை நிறுத்தவும் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளவும் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வல்லதாய் இருக்கும். விடுதலைக்காகவும் சமாதானத்துக்காகவும் பாசிஸ்டுக் கொடுங்கோன்மையை எதிர்த்து ஆயுதக் கிளர்ச்சி நடத்துவதன் மூலமாகவே முசோலினியின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதும் சமாதான அரசாங்கத்தை நிறுவுவதும் சாத்தியம் ஆகும்.[1]

1942ம் ஆண்டு இலையுதிர் காலம் முதல் நாட்டில் வேலைநிறுத்த அலை மேலும் மேலும் ஏற்றம் அடைந்தது. இந்த வேலைநிறுத்தங்கள் நாளுக்கு நாள் அதிக விடாப்பிடியான உறுதியுடன் நடந்தன. பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் எல்லா முற்போக்குச் சக்திகளையும் ஒன்றுபடுத்தும் இயக்கம் விரிவு பெற்றது. தூரீன் நகரிலும் பிற வட இத்தாலிய நகரங்களிலும் தேசியக் கூட்டணிக் கமிட்டிகள் உருவாயின. கம்யூனிஸ்டுகளோடும் சோஷலிஸ்டுகளோடும் சேர்ந்து கிறிஸ்தவ-ஜனநாயகக் கட்சி, குட்டி பூர்ஷ்வாப் போராட்டக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்தக் கமிட்டிகளில் பங்கு கொண்டார்கள். 1943ம் ஆண்டு வசந்தத்தில் வட இத்தாலியில் பிரமாண்டமான அளவில் வேலைநிறுத்தம் தொடங்கியது. நாட்டின் பெருத்த தொழில் மையங்கள் வேலைநிறுத்தத்துக்கு உள்ளாயின. வேலைநிறுத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்

[1] மை. ஆ. கூ., 495/18/1338/163-165.

கை மூன்று லட்சத்தை எட்டியது. பொருளாதாரக் காரணங்களால் தொடங்கிய வேலைநிறுத்தம் வெகுஜன அரசியல் போராட்டத்தின் தன்மையை மேற்கொண்டது. தொழிலாளர்கள் பாசிஸத்தைக் கண்டனம் செய்தார்கள், யுத்தத்தை நிறுத்தும்படியும் சமாதானத்தை நிலைநாட்டும்படியும் கோரினார்கள். வேலைநிறுத்தங்களோடு கூடவே பாசிஸ எதிர்ப்பு, யுத்த எதிர்ப்புக் கோஷங்களுடன் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் இத்தாலி முழுவதிலும் அலையாகப் பரவின. பாசிஸ ஆட்சிக் காலத்தில் முதன்முறையாக முசோலினி அரசாங்கம் தொழிலாளர்களுக்குச் சில அம்சங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

மார்ச்சு மாதப் போராட்டங்கள் இத்தாலியில் பாசிஸத்துக்குக் கடுமையான அடிகள் கொடுத்தன. நாட்டை யுத்த விபத்துப் படுகுழியில் தள்ளியிருந்த இத்தாலிய பாசிஸத்தின் இராணுவ-அரசியல் நெருக்கடி மிகத் துலக்கமாக வெளிப்பட்டது. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு விரைவாக வளர்ந்தது. இத்தாலியின் எல்லா முற்போக்குச் சக்திகளையும் ஒன்று திரட்டுவதற்கான இயக்கம் தீவிரம் அடைந்தது.

இத்தாலிய மக்களை ஒன்றுபடுத்துவதற்கான போராட்டக் கமிட்டியின் மகாநாடு கூட்டப்பட்டது. இத்தாலியைக் காக்கும் பொருட்டு கூட்டாகப் போராட்டம் நடத்துவதற்கும், ''அனைத்து மக்கள் எழுச்சி வாயிலாக பாசிஸ்டுகளின் அழிவுவிளைக்கும் யுத்தக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் முசோலினி அரசாங்கத்தைக் கவிழ்த்தவும் தனிப்பட்ட சமாதானம் செய்து கொள்ளவும்''[1] பொறுப்பு ஏற்பதாக மகாநாட்டில் கலந்துகொண்டவர்கள் செயல்திட்ட அறிக்கையில் அறிவித்தார்கள். இத்தாலிய அரசை ஜனநாயக முறையில் மீட்டமைப்பதற்கும் பாசிஸத்தோடு கூடவே அதை உருவாக்கக் காரணமாய் இருந்த பொருளாதார, அரசியல், சமுதாய சக்திகளையும் ஒழிப்பதற்கும் உழைப்பாளிகள் தலைமைப் பாத்திரம் வகிக்கும் ஜனநாயகத்தை நிறுவுவதற்கு வகை செய்வதற்கும் ஏற்ற உறுதியான கொள்கைப் போக்கைக் கடைப்பிடிக்கப் போராட்டக் கமிட்டி உறுப்பினர்கள் எண்ணம் கொண்டிருப்பதாக மேற்கொண்டு கூறப்பட்டது.

இத்தாலியில் தேசியப் போராட்டக் கூட்டணி அமைக்கும்

---

[1] இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முப்பதாண்டு வாழ்க்கையும் போராட்டமும், பக்கம் 489.

நிகழ்முறை நடந்தது. பாசிஸ எதிர்ப்புப் போராட்டம் நடக்கையில் மக்களின் மேலும் மேலும் புதிய வட்டாரங்கள் இதில் சேர்ந்து கொண்டன. இதன் மூலம் பாசிஸ எதிர்ப்பு இயக்கம் பெருத்த ஏற்றம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. இந்த இயக்கம் முசோலினியின் பாசிஸ்டு ஆட்சியை விரைவில் ஒழித்து விட்டது.

யூகோஸ்லாவியாவில் முறையான மக்கள் விடுதலைப் படை கைப்பற்றாளர்களை நாளுக்கு நாள் அதிகக் கடுமையாகத் தாக்கியது, மேலும் மேலும் புதிய பகுதிகளை விடுவித்தது. பாசிஸ்டுக் கைப்பற்றாளர்களுக்கும் பூர்ஷ்வா-நிலப்பிரபு வட்டாரங்களைச் சேர்ந்த அவர்களுடைய கையாட்களுக்கும் எதிராகத் தேசிய-விடுதலைப் போர் நாளுக்கு நாள் அதிக விரிவாக நடந்தது.

கிரீசில் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் தேசிய-விடுதலைக் கூட்டணி அமைக்கப்பட்டது. நாட்டின் எல்லாத் தேசபக்தச் சக்திகளும் இதில் சேர்ந்து கொண்டன. கிளர்ச்சிக்காரர்களின் பெருந் தொகையான படைப்பிரிவுகள் கிரேக்க மக்கள் விடுதலைச் சேனையாக ஒன்றிணைந்தன. பகைவர்களுடன் ஆயுதப் போராட்டம் நடத்தி இந்தச் சேனை கணிசமான பகுதிகளை, சிறப்பாக நாட்டின் வட பிரதேசத்தில், விடுவித்தது. மக்களது நலன்களின் பொருட்டுத் தங்கள் சுயநலமற்ற போராட்டம் காரணமாகக் கம்யூனிஸ்டுகள் வெகுஜனங்களிடையே நாளுக்கு நாள் அதிக விரிவான செல்வாக்கு பெற்றார்கள்.

1941ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அமைக்கப்பட்ட அல்பேனியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு நாளடைவில் அதிகரித்தது. கம்யூனிஸ்டுகளின் உதவியுடன் அல்பேனிய தேசிய-விடுதலைக் கூட்டணி அமைக்கப்பட்டது, தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. **1943**ம் ஆண்டு வசந்தத்தில் இவை மக்கள் விடுதலைச் சேனையாக ஒன்றிணைக்கப்பட்டன. **1943**ல் மக்கள் விடுதலைச் சேனையின் நடவடிக்கைகள் மேலும் மேலும் விரிவடைந்து நாட்டின் கணிசமான பகுதிகளுக்குப் பரவின.

போலந்தில் அரசியல் சக்திகளின் ஒப்புநிலையில் பெருத்த முன்னேற்றங்கள் ஏற்பட்டன. லண்டனிலும் வாஷிங்டனிலும் இருந்த நாடு கடந்த வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டிருந்த உள்நாட்டுப் பிற்போக்காளர்கள், பழமைப்பற்றுள்ளவர்களின் வட்டாரங்களது செல்வாக்கு கைப்பற்றாளர்களுக்கு எதிராக வெகுஜனப் போராட்டம் நடத்தப் பெரிய தடையாக இருந்தது. இத்

தகைய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கைப்பற்ருளர்களுக்கு எதிரான இயக்கத்தில் முற்றிலும் செயலற்ற முறையில் பங்கு கொண்டார்கள். ஆனால் போலந்துத் தொழிலாளர் கட்சியின் தலைமையில் இயங்கிய உண்மையான தேசபக்தச் சக்திகளுக்கு எதிராக மிகுந்த ஊக்கத்துடன் போராடினார்கள். ஆனால் இந்தக் கடினமான நிலைமைகளில் கூடப் போலந்துத் தொழிலாளர் கட்சியும் அதன் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த தேசபக்தச் சக்திகளும் பெருத்த உயிர்த் தியாகங்களையும் இழப்புக்களையும் பொருட்படுத்தாமல் பாசிஸ்டுக் கைப்பற்ருளர்கள் மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தின. 1943ம் ஆண்டு வசந்தத்துக்குள் போலந்துத் தொழிலாளர் கட்சியின் செல்வாக்கு விரிவடைந்தது. அதன் ஸ்தாபனங்களது தொகுப்பு அனேகமாக நாடு முழுவதிலும் பரவியது. போலந்துத் தொழிலாளர் கட்சியின் தேசபக்த கொரில்லாப் படைப்பிரிவுகள் பல பிரதேசங்களில் செயலாற்றின. சோவியத் யூனியனின் நிலப்பரப்பில் போலந்து தேசபக்தர்களின் கூட்டணியும் ததேவுஷ் கஸ்தியூஷ்கோ பெயரால் போலந்து டிவிஷனும் உருவாக்கப்பட்டது போலந்தில் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கத்தின் வளர்ச்சிக்கு முக்கியமான தூண்டுதலாக இருந்தது.

செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அரசியல் கொள்கைப் போக்கையும் அணித்தான பணிகளையும்பற்றிய யோசனைகளை கோட்வால்டு, ஷ்வேர்மா ஆகியோரின் துணையுடன் கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு தயாரித்தது. 1943, ஜனவரி 5ந் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்ட யோசனைகளில் பின்வருமாறு கூறப்பட்டது: ''ஹிட்லர் ஜெர்மனியுடன் நிர்ணயகரமான போர்கள் நெருங்கி வருவதன் தொடர்பாக நாட்டில் விடுதலைப் போராட்டத்தை விரிவாக நடத்துவதிலும் தீவிரப்படுத்துவதிலும் முக்கியமான கவனத்தைச் செலுத்துவது அவசியம்''.[1] செக் பிரதேசத்தில் ஜெர்மன் கைப்பற்ருளர்களை நாட்டிலிருந்து விரட்டுவோம் என்ற முக்கியக் கோஷத்துடனும் ஸ்லோவாக்கியாவில் ஹிட்லர் ஜெர்மனியின் தரப்பில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோஷத்துடனும் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று யோசனை கூறப்பட்டது.

நகரங்களில் ஆயுதமேந்திய படைக் குழுக்களையும் கிராமங்களில் தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகளையும் அமைப்

---

[1] மை. ஆ. கூ., *495/18/1340/9.*

பதும் நாடு முழுவதிலும் தேசபக்த கொரில்லா இயக்கத்தைப் பரப்புவதும் செக்கோஸ்லோவாக்கியாவில் தேசிய விடுதலை இயக்கத்தின் மிக முக்கியப் பணிகளாக முன்வைக்கப்பட்டன. தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் தேசியக் கமிட்டிகளை அமைக்கும்படியும் இந்தக் கமிட்டிகள் பாசிஸத்துடன் போராட்டத்தில் மக்களின் ஒற்றுமையை உருவகப்படுத்தும் என்றும் செயற்குழுவின் தீர்மானம் கூறியது. ஜெர்மானியக் கொடுங்கோலர்களுக்கு எதிராகத் தேசிய எழுச்சியை ஒழுங்கமைத்து நடத்தும்படி ஸ்லோவாக்கிய மக்களை அறைகூவி அழைப்பது இன்றியமையாதது என்று செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையும் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் செயலகமும் எண்ணின. ''ஸ்லோவாக்கியர்களதும் செக் மக்களதும் நெருக்கமான போராட்ட, வரலாற்றுத் தொடர்பை வலியுறுத்துவதும், இந்த இரு மக்களின் ஒன்றித்த போராட்டம் ஸ்லோவாக்கிய மக்களினது தேசிய விடுதலையின் முக்கிய நலன்களுக்கும் உகந்தது எனவும் செக் மக்களுக்கு விடுதலை இல்லாவிட்டால் ஸ்லோவாக்கிய மக்களுக்கும் விடுதலை இருக்க முடியாது எனவும் அவ்வாறே ஸ்லோவாக்கியர்கள் விடுதலை பெறாவிடில் செக் மக்கள் விடுதலை பெற முடியாது எனவும் குறிப்பிடுவதும் அவசியம்''[1] என்று தீர்மானம் கூறியது.

1943ம் ஆண்டு வசந்தத்துக்குள் செக்கோஸ்லோவாக்கியாவில் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கம் தீவிரம் அடைந்தது. பல்வேறு இடங்களில் தெசபக்த கொரில்லாப் படைப்பிரிவுகள் தோன்றின, மறைமுக அழிவு வேலை விரிவடைந்து வெகுஜனத் தன்மை பெற்றது. ''மெதுவாக வேலை செய்'' என்ற கோஷத்தைத் தொழிலாளர்கள் பிறழாமல் செயல்படுத்தினர்கள், உழைப்பின் உற்பத்தித் திறனை எல்லா வகையிலும் குறைத்தார்கள். சோவியத் யூனியனில் 1942ல் ஸ்வோபதாவின் தலைமையில் செக்கோஸ்லோவாக்கியப் படைப்பிரிவு அமைக்கப்பட்டது. நாட்டில் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கத்துக்கு இது ஓரளவு ஊக்கம் அளித்தது. மக்கள் விடுதலை இயக்கம் ஏற்றம் பெற்றிருந்த நிலைமைகளில் 1943ல் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி தேசபக்த கொரில்லா இயக்கத்தைத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கியப் பகுதி ஆக்கும் பணியை முன்வைத்தது.

---

[1] மை. ஆ. கூ., 495/18/1340/12.

திரளான பொது மக்களின் போராட்டத்தை ஒடுக்கும் பொருட்டுப் பகைவர்கள் செக்கோஸ்லோவாக்கிய தேசபக்தர்களை, சிறப்பாகக் கம்யூனிஸ்டுகளைக் கொடிய அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கினார்கள். 1943ம் ஆண்டு வசந்தத்துக்குள் செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி இரு முறையும் ஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி மூன்று முறையும் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகள் பாசிஸ்டுக் கொலையாளிகளால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள். பெரும் புகழ் பெற்ற தியாக வீரர் யூ. ஃபூச்சிக் இவ்வாறு வதை செய்யப்பட்டவர்களில் ஒருவர். ஆயினும் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கம் செக்கோஸ்லோவாக்கியாவில் மேலும் மேலும் விரிவாகப் பரவியது. அதில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகரித்தது.

1943ம் ஆண்டு வசந்தத்துக்குள் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கம் பெல்ஜியத்திலும் ஹாலந்திலும் டென்மார்க்கிலும் லக்ஸம்பர்கிலும் நார்வேயிலும் பரவியது. இந்த நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சியின் செல்வாக்கு வளர்ந்தது. பெல்ஜியத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்முயற்சியால் பல நகரங்களில் தேசபக்த மிலீஷியா (மக்கள் போலீசு) படைப்பிரிவுகள் அமைக்கப்பட்டன. இவை தேசபக்த கொரில்லா வீரர்களுக்கு உண்மையான உதவி புரிந்தன. ஹாலந்தில் 1943ம் ஆண்டு வசந்தத்தில் வேலைநிறுத்தங்களின் அலை பூரணப் படைதிரட்டலுக்கு எதிராக எழுந்து நாடு முழுவதிலும் பரவியது. நார்வேயில் குவிஸ்லிங்குகளால்[1] 1943, பிப்ரவரி மாதம் அறிவிக்கப்பட்ட ''தொழிலாளர்களின் பூரணப் படைதிரட்டலை'' உறுதியாக எதிர்க்கும்படி கம்யூனிஸ்டுகள் பொது மக்களை அறைகூவி அழைத்தார்கள். நார்வே மக்களது எதிர்ப்பின் விளைவாகப் ''பூரணப் படைதிரட்டல்'' திட்டம் படுதோல்வி அடைந்தது.

உலக யுத்தத்தின் போக்கில் தொடங்கிய அடிப்படைத் திருப்பம் பாசிஸ்டுக் கூட்டணி நாடுகளில் இராணுவ-அரசியல் நெருக்கடியை விளைத்தது. சோவியத் யூனியனை முறியடித்து அதன் நிலப்

---

1 தேசத்துரோகிகளைக் குறிக்கும் பொதுப் பெயர். குவிஸ்லிங்கு என்பவன் நார்வே நாட்டின் போர் அமைச்சனாக இருந்தவன். யுத்தத்துக்கு முந்திய ஆண்டுகளிலேயே ஹிட்லர் குழுவினருக்குத் தொண்டு புரியும் போக்கை மேற்கொண்டவன்.

பரப்பைக் கைப்பற்றலாம் என்று இந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் கட்டியிருந்த மனக்கோட்டைகள் தகர்ந்து சிதறிவிட்டன. பாசிஸ்டுக் கூட்டணி நாடுகள் மீது தோல்வி இருள் கவிந்தது.

ஜெர்மனியில், பெரும்பாலும் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் இயங்கிய சட்டவிரோதமான பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனங்கள் 1942—1944ல் தங்கள் நடவடிக்கைகளைக் கணிசமாக விரிவுபடுத்தின. பெர்லினில் உரீகின் பாசிஸ எதிர்ப்புக் குழு செயலாற்றி வந்தது. நாட்டின் பல நகரங்களில் இருந்த பாசிஸ எதிர்ப்பாளர்களுடன் இது தொடர்பு வைத்துக்கொண்டிருந்தது. ஸக்ஸோனியாவில் ஷீமானால் ஒழுங்கமைக்கப்பட்ட பாசிஸ எதிர்ப்புக் குழுவும் தியுரிங்கியாவில் நேபௌவரைத் தலைவராகக் கொண்ட ஸ்தாபனமும் வேலை செய்து வந்தன. 1942ல் பெர்லினிலும் நாட்டின் பிற நகரங்களிலும் செயலாற்றி வந்த செல்வாக்குள்ள பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனங்களில் ஒன்று, ஷூல்த்ஸே-போய்ஸன், ஹார்னுக் ஆகியோரின் ஸ்தாபனம் ஆகும். ஹாம்பர்க், லைப்ஸிக், தியுஸெல்டோர்ஃபு, மான்ஹைம் ஆகியவற்றிலும் பிற நகரங்களிலும் பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனங்கள் செயலாற்றி வந்தன. 1943—1944ல் இயங்கி வந்த கம்யூனிஸ்டுகளின் ஆகப் பெரிய இரகசிய ஸ்தாபனம், ஸெவ்கோவ், யக்கோபு, பெஸ்த்லேன் ஆகியோரைத் தலைமையில் கொண்ட ஸ்தாபனம் ஆகும். ஜெர்மனியின் பல்வேறு நகரங்களில் இருந்த பல பாசிஸ எதிர்ப்புக் குழுக்களுடன் இது தொடர்பு கொண்டிருந்தது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுகள் நாஜிஸத்தின் எல்லா எதிரிகளையும் ஒன்றித்த பாசிஸ எதிர்ப்புக் கூட்டணியாகச் சேர்க்கும் பொருட்டு ஹிட்லர் பாசிஸத்தை எதிர்த்து வீரத்துடன், தன்னலமின்றிப் போராடினார்கள். நாஜிகளின் துர்ச்சாகசக் கொள்கையை அவர்கள் அம்பலப்படுத்தினார்கள், ஹிட்லர் குழுவினர் நாட்டை நாசப் படுகுழியில் தள்ளுகிறார்கள் என்பதை ஜெர்மன் மக்களுக்கு விளக்கினார்கள். பாசிஸவிரோதப் போராட்ட வீரர்களின் எதிர்ப்பை நசுக்கும் பொருட்டு ஹிட்லர் குழுவினர் கொடிய பயங்கர முறைகளால் அவர்களைத் தாக்கினார்கள். 1933ல் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்த மூன்று லட்சம் கம்யூனிஸ்டுகளில் ஒன்றரை லட்சம் பெயர் கொடுந் துன்பங்களுக்கு ஆளானார்கள். அவர்கள் சிறைகளிலும் தண்டனை முகாம்களிலும் தள்ளப்பட்டார்கள். இவற்றில் பதினாயிரக் கணக்கான கம்யூனிஸ்டுகள் மடிந்தார்கள். சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல தலைவர் எர்ன்ஸ்த் தேல்மன் இவர்களில் ஒருவர்.

ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, ஃபின்லாந்து ஆகிய நாடுகளிலும் பாசிஸ எதிர்ப்புப் போராட்டமும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கும் அதிகரித்தன. நாஜி ஜெர்மனியுடன் தொடர்பைத் துணித்துக் கொள்வதற்காகவும் ஹிட்லர் குழுவின ருக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்துவதற்காகவும் தங்கள் நாடுகளில் இருந்த பாசிஸ்டு அரசாங்கங்களைக் கவிழ்த்து விட்டு ஜனநாயக அமைப்பு முறைகளை ஏற்படுத்துவதற்காகவும் போராடிவந்த சக்திகளின் தலைமையில் இருந்தன இந்நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள். ருமேனியாவில் 1943ம் ஆண்டின் தொடக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் முன்முயற்சியால் தேசபக்தக் கூட்டணி அமைக்கப்பட்டது. பாசிஸத்துக்கு எதிராக ஒன்றுசேர்ந்து போராடும் பொருட்டுப் பல்வேறு ஜனநாயக ஸ்தாபனங்களை இது ஒன்றிணைத்தது. ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சி, விவசாயிகளின் வெகுஜன ஸ்தாபனமாக இருந்த விவசாயிகள் கூட்டணி, தேசபக் தர்கள் சங்கம், டிரான்ஸில்வேனிய ஹங்கேரியர்களின் ஜனநாயக சங்கம் ஆகியவையும் பிற பாசிஸ எதிர்ப்பு ஸ்தாபனங்களும் தேச பக்தக் கூட்டணியில் சேர்ந்தன. கூட்டணியின் செயல்திட்டத்தில் பின்வரும் கோரிக்கைகள் இருந்தன: ருமேனியா ஹிட்லர் யுத்தத் திலிருந்து உடனே வெளியேறி, பாசிஸ எதிர்ப்புக் கூட்டணியில் சேர்ந்து கொள்ள வேண்டும்; ஜெர்மன் கைப்பற்றுளர்கள் ருமேனி யாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்; அந்தொனேஸ்கு அர சாங்கம் கவிழ்க்கப்பட வேண்டும்; உண்மையான தேசிய அரசாங் கம் அமைக்கப்பட வேண்டும்; ஜனநாயக சுதந்திரங்கள் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும். இந்தச் செயல் திட்டம் உழைப்பாளி மக்களின் ஆதரவை நாளுக்கு நாள் அதிக அளவில் பெற்றது.

சோவியத்-ஜெர்மன் போர்முனையில் ஹங்கேரிய சேனை முறி யடிக்கப்பட்டபின் ஹங்கேரியில் பாசிஸ எதிர்ப்பு இயக்கம் குறிப் பிடத்தக்க அளவு தீவிரம் அடைந்தது. பொது மக்களின் விரிவான பிரதிநிதி வட்டாரங்கள் யுத்தத்தை நிறுத்துமாறு கோரின. ஹங் கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி நாட்டை ஆக்கிரமிப்புக் கூட்டணி யிலிருந்து வெளியேற்றி ஹிட்லர்விரோதக் கூட்டணியில் சேர்ப் பதற்காகப் போராட்டம் நடத்தியது. நாட்டினது சுதந்திரத்தின் எல்லா ஆதரவாளர்களையும் தேசியக் கூட்டணியாக ஒன்றிணைக்கக் கம்யூனிஸ்டுகள் பெரு முயற்சி செய்தார்கள்.

பல்கேரியாவில் பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கம் நாளுக்கு நாள் வெகுஜனத் தன்மையும் ஒழுங்கமைப்பும் பெற்று

வந்தது. பல்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி 1941லேயே மைய இராணுவக் கமிஷனை உருவாக்கி இருந்தது. பின்னர் இது மக்கள் விடுதலைச் சக்திகளின் தலைமை இராணுவ அலுவலகம் ஆகி விட்டது.

பல்கேரியத் தொழிலாளர் கட்சி எல்லா பாசிஸ எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றித்த தாய்நாட்டுக் கூட்டணியாக இணைப்பதற் கான இயக்கத்தை ஒழுங்கமைத்து நடத்தியது. 1942ம் ஆண்டின் நடுவில் இந்தக் கூட்டணி உருவாயிற்று. கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகக் கட்சி, பல்கேரிய விவசாயிகள் கழகம், ''ஸ்வெனோ'' கட்சி, பிற ஸ்தாபனங்கள் ஆகியவையும் தாய்நாட்டுக் கூட்டணி யில் சேர்ந்தன. கூட்டணியின் தலைமைச் சக்தியாக விளங்கியது பல்கேரியத் தொழிலாளர் கட்சி (கம்யூனிஸ்டுகள்).

நாட்டில் தேசபக்த கொரில்லா இயக்கம் மேலும் மேலும் வளர்ந்தது. 1943ம் ஆண்டு மார்ச்சு-ஏப்ரலில் பல்கேரியத் தொழி லாளர் கட்சி மத்தியக் கமிட்டி, தேசபக்த கொரில்லாப் படைப் பிரிவுகளை ஒன்றித்த மக்கள் விடுதலைக் கிளர்ச்சி சேனையாக ஒன் றிணைத்தது. ஆயுதப் போராட்டம் நாளுக்கு நாள் அளவில் விரிந்து கொண்டு போயிற்று

ஃபின்லாந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி கடினமான நிலைமைகளில் போராட்டம் நடத்தியது. கொடிய பயங்கர முறைகளைப் பொருட் படுத்தாமல் கம்யூனிஸ்டுகள் யுத்தத்தின் தன்மையை மக்களுக்கு விளக்கினார்கள். ஃபின்லாந்தின் தரப்பில் யுத்தம், நாட்டின் பிற் போக்கு ஆட்சியாளர்கள் சித்திரிக்க முயன்றதுபோலத் தற்காப்புப் போர் அல்ல, சோவியத் யூனியனுக்கு எதிரான கொள்ளைக்கார யுத்தம் என்று அவர்கள் வெகுஜனங்களுக்கு விவரித்தார்கள். பாசிஸ்டு அரசாங்கத்தைக் கவிழ்க்கும்படியும் யுத்தத்தை நிறுத்தும் படியும் ஃபின்லாந்தை பாசிஸ்டு ஜெர்மனியின் அடிமை நுகத் திலிருந்து விடுவிக்கும் படியும் கம்யூனிஸ்டுகள் மக்களை அறைகூவி அழைத்தார்கள். ஸ்தாலின்கிராதின் அருகே ஜெர்மானிய சேனை யின் படு தோல்விக்குப் பிறகு நாட்டில் போருக்கு எதிரான அதிருப்தி செயல்முறை எதிர்ப்பாக வளரத் தொடங்கியது.

பாசிஸ்டுக் கூட்டணி நாடுகளில் பாசிஸ எதிர்ப்பு இயக்கம் அந்த நாடுகளின் மக்களது வருங்காலத்துக்கும் பெருத்த முக் கியத்துவம் கொண்டிருந்தது. ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சி யையும் பிற பாசிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் மைய மாகக் கொண்டு மக்களின் சிறந்த சக்திகள் ஒன்று திரண்டன.

ஜெர்மன்-பாசிஸ்டு துர்ச்சாகசக்காரர்களின் குற்றத்தன்மை கொண்ட கொள்கையை எதிர்த்தும் ஹிட்லர் குழுவினரின் போர்த் திட்டங்களைக் குலைப்பதற்காகவும் பாசிஸ்டு அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்காகவும் மேலான வருங்காலத்தின் பொருட்டும் இந்தச் சக்திகள் தன்னலம் இன்றிப் போராடின. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் ருமேனியாவிலும் ஹங்கேரியிலும் பல்கேரியாவிலும் ஃபின்லாந்திலும் நடந்த பாசிஸ எதிர்ப்பு இயக்கம் இரண்டாவது உலக யுத்த ஆண்டுகளில் பாசிஸத்துக்கு எதிராக மக்களினங்கள் நடத்திய போராட்டத்தின் இணையுறுப்பாக இருந்தது.

**கம்யூனிஸ்டு அகிலம்
கலைக்கப்படுகிறது**

எல்லா பாசிஸ விரோத, தேசபக்தச் சக்திகளையும் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்ட கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கை எவ்வளவு சரியானது என்பதை இரண்டாவது உலக யுத்த ஆண்டுகள் நிரூபித்தன. விடுதலைப் பற்றுள்ள எல்லா மக்களதும் மிகக் கொடிய பகைவனான பாசிஸத்துக்கு எதிராக நிர்ணயகரமான போராட்டத்துக்கு மிக விரிவான வெகுஜனங்களை அணிதிரட்ட இந்தக் கொள்கை வகை செய்தது. கம்யூனிஸ்டுகளது கொள்கையின் பயனாக பாசிஸத்துக்கு எதிராக சர்வதேசக் கூட்டணி அமைக்கப்பட்டது. இவ்வாறு, கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசில் வகுக்கப்பட்ட கொள்கைப் போக்கு, மக்கள் இனங்களை பாசிஸத்தின் மீது வெற்றிக்கு இட்டுச் சென்ற முக்கியமான போர்த்தந்திரப் போக்கு ஆயிற்று.

சோவியத் மக்கள் தங்கள் வீரப் போராட்டத்தினால் யுத்தத்தின் போக்கை பாசிஸ எதிர்ப்புக் கூட்டணி அரசுகள், மக்களுக்குச் சாதமாகத் திருப்பிவிட்டனர். சோவியத் யூனியனை அழிக்கவும் ஐரோப்பிய மக்களினங்களை அடிமைப்படுத்தவும் புரட்சிச் சக்திகளையும் ஜனநாயகச் சக்திகளையும் ஒழிக்கவும் பாசிஸ்டு ஜெர்மனியும் அதன் துணைநாடுகளும் செய்த முயற்சி வீணாகிவிட்டது என்பது நாளுக்கு நாள் அதிகத் தெளிவாகப் புலப்படலாயிற்று. அடிமைப்பட்ட நாடுகளில் பாசிஸ்டுக் கைப்பற்றாளர்களுக்கும் அவர்களுடைய கையாட்களுக்கும் எதிராக மக்களின் போராட்ட நெருப்பு மேலும் மேலும் பெருந் தழல் வீசி எரியலுற்றது. பாசிஸத்தின் வேர்களை அழித்துவிட வேண்டும், பாசிஸ அடிமைத்தனத்தின்

பயங்கரங்கள் மீண்டும் தலைதூக்க விடலாகாது என்ற மக்களின் உறுதியான முடிவு மாபெரும் போராட்டத்தில் உரம் பெற்றது. பாசிஸத்துடன் நடந்த போராட்டத்தில் முன் வரிசைகளில் இருந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் தன்னலமின்மையாலும் தங்கள் இரத்தத்தாலும் வெகுஜனங்களின் ஆழ்ந்த மரியாதையையும் அன்பையும் பெற்று விட்டன. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய ஏற்றத்திற்குத் தேவையான முதனிலைகள் உருவாயின.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வளர்ச்சி, பாசிஸ எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்த திண்ணமான பிரச்சினைகளை விரைவாகவும் உடனடியாகவும் தீர்ப்பதன் அவசியம், அனைத்து தேசிய நலன்களுக்கான போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பாத்திரம் உயர்ந்தது ஆகியவற்றின் காரணமாக அவை முன்னைவிட அதிகச் சுதந்திரமாகவும் முன்முயற்சியுடனும் செயலாற்றுவதும், ஒன்றித்த மையத் தலைமையின் எந்த வடிவங்கள் கட்சிகளின் வேலையைத் தீவிரப்படுத்தத் தடையாக இருந்தனவோ அவற்றைக் கைவிடுவதும் தேவைப்பட்டன.

கம்யூனிஸ்டு அகிலம் தோன்றிய போது அயல்நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன அமைப்பிலும் பலவீனமாக இருந்தன. அனுபவம் பெற்ற தலைமை ஊழியர்கள் அவற்றிடம் இல்லை. அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கையும் ஒப்புநோக்கில் குறைவாய் இருந்தது. இத்தகைய கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் கூட்டு மைய உறுப்பான கம்யூனிஸ்டு அகிலத்தின் வடிவில் எல்லாக் கட்சிகளுடையவும் ஒன்று சேர்ந்த முயற்சியின் மூலமே தங்கள் நாடுகளில் புரட்சி இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தும் பணிகளை நிறைவேற்றவும் வர்க்கப் போராட்டத்தின் போர்த் தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் வகுக்கவும் வல்லவையாக இருந்தன. கம்யூனிஸ்டு அகிலம் செயல் நடத்தி வந்த காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன அமைப்பிலும் வளர்ச்சி அடைந்து வர்க்கப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துவதில் பெருத்த அனுபவம் திரட்டி விட்டன. மார்க்சிய-லெனினிய உணர்வில் பயிற்றப்பட்ட, அனுபவம் வாய்ந்த தலைமை ஊழியர்கள் அவற்றில் உருவானார்கள். அயல் நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளது உறுப்பினர் எண்ணிக்கையில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பு முக்கியமான காரணியாக விளங்கியது. அவற்றில் சில தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனக் கட்சிகளாக மாறத் தொடங்கி இருந்தன.

இந்தக் கட்சிகளின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகப் பல்வகைப்பட்டவை ஆகிக்கொண்டு போயின. வாழ்க்கையின் பல் வேறு துறைகளில் அவை வியாபித்தன. ஸ்தூலமான தேசிய நிலைமைகளையும் மரபுகளையும் கவனமாகக் கருத்தில் கொள்வது இந்தக் காரணத்தால் அவசியம் ஆயிற்று.

உழைப்பாளி வெகுஜனங்களைத் தலைமை ஏற்று நடத்தும் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பாத்திரம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருவதைக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசே கவனத்தில் எடுத்துக் கொண்டு, செயல்முறைத் தலைமை அகிலத்தின் பிரிவுகளிடமே குவிந்திருக்கவேண்டும் என்று சுட்டிக் காட்டியது. இந்தக் காரணத்தால், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அடிப்படையான அரசியல், செயல்தந்திரத் தீர்மானங்களைத் தயாரிப்பதில் முதன்மையாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும், எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்கையில் ஒவ்வொரு நாட்டினுடையவும் ஸ்தூல நிலைமைகளையும் தனித்தன்மைகளையும் ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்றும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உள் ஸ்தாபன விவகாரங்களில் நேரடியான தலையீட்டை வழக்கமாகத் தவிர்க்க வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது. ''மிக முக்கியமான பிரிவுகளின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் அன்றாட வேலையில் அதிக ஊக்கத்துடன் பங்கு கொள்வதன் வாயிலாகக் கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரிவுகளுடன் அதன் தலைமை உறுப்புக்கள் அதிக நெருக்கமான தொடர்பு கொள்ள வகை செய்வது''[1] செயற்குழுவின் கடமைகளில் ஒன்று என ஏழாவது காங்கிரஸ் விதித்தது.

யுத்தத்தின் நிலைமைகளும் தனித் தனிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிலைகளில் மிகப் பெருத்த வேறுபாடுகளும், கம்யூனிஸ்டுகளுக்கு எதிர்ப்பட்டிருந்த திட்டவட்டமான பணிகளின் பல்வகைப்பாடும் காரணமாக, கம்யூனிஸ்டுக் கட்சிகள் செயல் சுதந்திரமும் அதிகத்திலும் அதிகமான சமயோசித சாமர்த்தியமும் பெற்றிருப்பது போருக்கு முன்பைவிட அதிக அவசியம் ஆகிவிட்டது. ''கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரசால் தெரிந்தெடுக்கப்பட்ட தொழிலாளர் ஒன்றிணைவின் ஸ்தாபன வடிவம், தொழி

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரஸின் தீர்மானங்கள், பக்கங்கள் 4-5.

லாளர் இயக்கத்தின் தொடக்கக் காலகட்டத்தின் தேவைகளுக்கு ஏற்றதாய் இருந்தது. ஆனல் இந்த இயக்கம் வளர்ந்த அளவுக்கும் தனித் தனி நாடுகளில் அதன் பணிகள் அதிகச் சிக்கலான அளவுக்கும் ஏற்ப இது மேலும் மேலும் காலத்துக்கு ஒவ்வாதது ஆகிக்கொண்டு போயிற்று, தேசியத் தொழிலாளர் கட்சிகளை மேற்கொண்டு வலுப்படுத்தத் தடையாகக் கூட மாறிவிட்டது''[1] என்பதை நிகழ்ச்சிகளின் போக்கு காட்டியது.

பாசிஸத்துக்கு எதிராக எல்லாத் தேசபக்தச் சக்திகளையும் அணிதிரட்டுவதற்கு அதிகச் சாதகமான நிலைமைகளை உருவாக்கும் பொருட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சுதந்திரமாக இயங்குவது சிறப்பாகத் தேவைப்பட்டது: பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தில் ஒத்துழைக்கத் தயாராய் இருந்த மக்களின் சில வட்டாரங்கள், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சர்வதேசக் கடமைகளையும் தொடர்புகளையும் எச்சரிக்கையுடன் நோக்கின. கம்யூனிஸ்டுகளுடன் செயல் ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ள இவை பெருத்த சந்தேகத்துடனேயே இசைந்தன. பாசிஸ எதிர்ப்புச் சக்திகளையும் தேசபக்தச் சக்திகளையும் ஒன்றுபடுத்தித் துடியாகச் செயலில் ஈடுபடுத்தும் வழியில் இருந்த எல்லாத் தடைகளையும் அகற்றுவது பாசிஸத்தின் மீது வெற்றி பெறுவதற்கு இன்றியமையாததாக இருந்தது.

''பகைவர்கள் மீது விரைவிலும் விரைவாக வெற்றி பெறும் பொருட்டு நாடு அனைத்திற்கும் உற்சாகமூட்டி வெகுஜனங்களை அணிதிரட்டும் பணி ஒவ்வொரு தனி நாட்டினதும் தொழிலாளர் இயக்கத்தின் முன்னணிப் படையால் தனது அரசின் வரம்புகளுக்குள் மிகச் சிறப்பாகவும் பயனுள்ள விதத்திலும் நிறைவேற்றப்பட முடியும்''[2] என்று வாழ்க்கை மேலும் மேலும் தெளிவாகக் காட்டியது.

யுத்தத்தின் நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலம் நிலவியது, சோவியத் யூனியன் மீதும் பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மீதும் அவதூறு பரப்புவதற்குப் பிற்போக்காளர்களால் பயன்படுத்தப்பட்டது. இந்த விஷயத்தில் சிறப்பாக மும்முரமான முயற்சி எடுத்துக் கொண்டது நாஜிப் பிரசாரம். பாசிஸ எதிர்ப்புக்

---

[1] கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுத் தலைமைக் குழுவின் தீர்மானங்கள். பார்க்க: ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1943, இதழ் 5-6, பக்கம் 8.

[2] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1943, இதழ் 5-6, பக்கம் 9.

கூட்டணியில் சேர்ந்திருந்த பூர்ஷ்வா அரசுகளின் வட்டாரங்களைக் ''கம்யூனிஸ அபாயத்தைக்'' காட்டி அச்சுறுத்தியது அது. ஹிட்லர் விரோதக் கூட்டணியில் பிளவு ஏற்படுத்தவும் கைப்பற்றப்பட்ட நாடுகளில் இருந்த பாசிஸ எதிர்ப்பு தேசியக் கூட்டணிகளைக் குலைக்கவும் நாஜிப் பிரசாரம் இவ்வாறு முயன்றது. ''பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட'' மாஸ்கோ திட்டமிடுவதாகவும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெளியிலிருந்து வரும் ஆணைகளின் படிச் செயல்படுவதாகவும் ''வேற்றருடைய நலன்களைப்'' பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அவை ''அன்னியர் கட்சிகள்'' என்றும் விடாப்பிடியாகக் கதைகள் பரப்பியது பிற்போக்குப் பிரசாரம். அவதூறு நிறைந்த கட்டுக் கதைகளின் உதவியால் கம்யூனிஸ விரோதிகள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கைக் குலைக்கவும் திரளான வெகுஜனங்களிடமிருந்து அவற்றைத் தனிப்படுத்தவும் முயன்றார்கள்.

இந்த எல்லாச் சூழ்நிலைமைகளையும் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தினது செயற்குழுவின் தலைமைக் குழு, கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைத்துவிடும் பிரச்சினையை 1943ம் ஆண்டு வசந்தத்தில் முன்வைத்தது.

1943, மே 13ந் தேதி செயற்குழுத் தலைமைக் குழுவின் கூட்டம் நடந்தது. அதில் பின்வருவோர் கலந்து கொண்டார்கள்: செயற்குழுத் தலைமைக் குழுவின் உறுப்பினர்கள்—திமீத்ரொவ், மனுயீல்ஸ்கி, பிக், தோரேஸ், மர்த்தி, கப்ளெனீக், கொலாரவ்; செயற்குழு உறுப்பினர்களும் வேட்பாளர்களும்—இபரூரி, ராக்கோஷி, ஊல்பிரிஹ்த், ஷ்வேர்மா, வோல்ஃப் (ஃபர்காஷ்); கட்சிப் பிரதிநிதிகள்—பௌக்கர் (ருமேனியக் கம்யூனிஸ்டுக் கட்சி), விளாஸவ் (விளஹோவிச்) (யூகோஸ்லாவியக் கம்யூனிஸ்டுக் கட்சி), லேஹ்தினென் (ஃபின்லாந்துக் கம்யூனிஸ்டுக் கட்சி).

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைத்துவிடுவது பற்றியும் இந்தப் பிரச்சினை குறித்த தீர்மான மசோதாவின் மீதும் ஆலோசனை நடத்தினார்கள். கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைப்பதுபற்றிய தீர்மான மசோதாவின் முக்கிய உள்ளடக்கத்தைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த திமீத்ரொவ் விவரமாக விளக்கினார். இந்த மசோதா பற்றிக் கருத்துகள் சுதந்திரமாகப் பரிமாறிக்கொள்ளப் பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தலைமை மையம் என்ற முறையில் கம்யூனிஸ்டு அகிலத்தைச் சடங்கு நோக்கில்

அல்ல, உண்மையாகவே கலைத்து விடுவதே தீர்மான மசோதா வின் சாரம் என்றார் அவர். பிரச்சினை மீது ஆழ்ந்த முறையில் எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆலோசனை நடத்தும்படியும், சாதக மானவையும் பாதகமானவையும் ஆகிய எல்லாக் கருத்துக்களையும் வாதங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும்படியும் இந்த நடவடிக்கை அரசியல் நோக்கப் பொருத்தம் உள்ளதா, சமயத்துக்கு ஏற்றதா என்பதை நிதானமாக மதிப்பிடும்படியும் திமீத்ரொவ் செயற்குழுத் தலைமைக் குழு உறுப்பினர்களைக் கேட்டுக்கொண் டார்.

அதன் பிறகு பேசிய மனுயீல்ஸ்கி பிரச்சினையைப் பின்வரும் நோக்குக்களில் விவாதிக்குமாறு யோசனை கூறினார்: அ) கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைப்பது அரசியல் நோக்கப் பொருத்தம் உள்ளதா; ஆ) இந்த நடவடிக்கையை மேற்கொள்ளச் சாதகமான தருணம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறதா; இ) கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைக்கும் யோசனை மசோதாவில் போதிய ஆதாரங்களுடன் நிலை நாட்டப்பட்டிருக்கிறதா; ஈ) மசோதாவில் எத்தகைய மாற்றங் களும் சேர்க்கைகளும் தேவைப்படுகின்றன.

கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைத்துவிடும் யோசனையை ஆத ரித்து தோரேஸ் பின்வருமாறு கூறினார்: ''தொழிலாளர்களது சர்வ தேச ஒன்றிப்பின் பழைய வடிவம் காலத்துக்கு ஒவ்வாதது ஆகி விட்டது. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி யுத்தத்துக்கு முன்பே மக்கள் கூட்டணிக் கொள்கையைக் கடைப்பிடித்ததன் விளைவாக வளர்ச்சி அடைந்தது. இப்போது, பிரான்ஸ் ஹிட்லர் படையின ரால் கைப்பற்றப்பட்ட பின், மிக விரிவான 'தேசியக் கூட்டணிக்கு' ஏற்ற அடித்தளம்அமைந்திருக்கிறது''. அகிலத்தைக் கலைப்பதற்குத் தக்க தருணம் சரியாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார். இந்தச் செயல் ''பிரான்சில் ஹிட்லர்விரோத தேசியக் கூட்டணியை விரிவுபடுத்த உதவும்''[1] என்றார் அவர்.

வி. பிக் கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைக்கும் யோசனைக்கு இசைவு தெரிவித்தார். அனுபவம் முதிர்ந்த சோவியத் நண்பர் களின் தரப்பில் ஜெர்மானியக் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கொள்கை வாத உதவி அளிக்கப்படுவதற்கு ஏற்ற ஏதேனும் ஒரு வடிவம் விரும்பத்தக்கது என்று அவர் கூறினார்.

கொலாரவ், இபரூரி, ஷ்வேர்மா ஆகியோரும் செயற்குழுத்

---

[1] மை. ஆ. கூ., *495/18/1340/78-82.*

தலைமைக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்ட மற்றவர்களும் கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்படுவது இன்றியமையாதது என்பதற்கு இசைவு தெரிவித்தார்கள்.

அரசியல் சூழ்நிலைமையையும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் இருந்த நிலைமையையும் எல்லாக் கோணங்களிலிருந்தும் பகுத்து ஆராய்ந்ததன் அடிப்படையில், கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழு (யுத்த நிலைமைகளில் கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசைக் கூட்டுவது இயலாதிருந்ததால்) கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைக்கும் யோசனையை 1943, மே 15ந் தேதி கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு விடுத்தது. உழைப்பாளிகளின் உயிர்ப் பகைவனை ஜெர்மானிய பாசிஸத்தையும் அதன் கூட்டாளிகளையும் துணை ஏவலர்களையும் மிக விரைவில் முறியடிக்கும் பொருட்டு ஹிட்லர்விரோதக் கூட்டணியைச் சேர்ந்த மக்கள் இனங்களும் அரசுகளும் நடத்தி வந்த விடுதலைப் போராட்டத்தில் எல்லா வகையிலும் உதவி அளிப்பதற்கும் தீவிரமாகப் பங்கு கொள்வதற்கும் தங்கள் சக்தியை ஈடுபடுத்தும்படிக் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆதரவாளர்கள் அனைவரையும் செயற்குழுத் தலைமைக் குழு கேட்டுக்கொண்டது.

செயற்குழுத் தலைமைக் குழுவின் யோசனைக்கு ஆதரவாக அகிலத்தின் 31 பிரிவுகள் கருத்து தெரிவித்தன. ஒரு கம்யூனிஸ்டுக் கட்சி கூட அதற்கு மறுப்பு கூறவில்லை. கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்படுவது உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுவான கொள்கைவாதத் தொடர்புகளும் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடும் பலவீனம் அடைந்ததைக் குறிக்கவில்லை என்பது மிகப் பெரும்பான்மையான கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அறிக்கைகளில் வலியுறுத்தப்பட்டது. சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அறிக்கையில் மட்டும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கைவாத-அரசியல் ஒருமைப்பாடு பற்றிய கருத்து அல்ல, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின்பால் உள்ள பொறுப்புக்களிலிருந்து சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி விடுதலை பெற்றுவிட்டது பற்றிய கருத்து முதன்மையாக வலியுறுத்தப்பட்டிருந்தது.[1]

கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்தவையும் தங்கள் முடிவைத் தெரிவிக்க வாய்ப்பு உள்ளவையுமான பிரிவுகள் கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைப்பது பற்றிய யோசனைக்கு ஒரு மனதாக ஒப்புதல் அளித்திருக்கின்றன என்று கம்யூனிஸ்டுக் கட்சிகளுடைய தீர்

[1] ''கம்யூனிஸ்டு அகிலம்'', 1943, இதழ் 5-6, பக்கம் 23.

மானங்களின் வாசகங்களைப் படித்து அறிந்தபின் செயற்குழுத் தலைமைக்குழு 1943, ஜூன் 8ந் தேதி அறிவித்தது. இதற்கு இணங்க, கம்யூனிஸ்டு அகிலத்தின் செயற்குழுவையும் செயற்குழுத் தலைமைக் குழுவையும் செயலகத்தையும் சர்வதேசக் கண்காணிப்புக் கமிஷனையும் ரத்து செய்துவிடுவது என்ற முடிவு 1943, ஜூன் 10ந் தேதி ஏற்கப்பட்டது.

இதோடு கூடவே, கம்யூனிஸ்டு இளைஞர் அகிலம், அதன் செயற்குழுவினது தீர்மானத்தின்படி தன் நடவடிக்கைகளை நிறுத்திவிட்டது.

கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைப்பது பற்றிய முடிவு எவ்வளவு சரியானது, தருணத்துக்கு ஏற்றது என்பதை அடுத்துவந்த நிகழ்ச்சிப் போக்கு உறுதிப்படுத்தியது.

கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்ட பின் உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் வீழ்ச்சி அடையத் தொடங்கும் என்று பிற்போக்காளர்கள் கட்டிய மனக்கோட்டைகள் மணல் கோட்டைகள் ஆகி விட்டன. மார்க்சிய-லெனினியத்தின் சர்வதேசிய போதனையின்பால் விசுவாசம் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகள், பாசிஸ எதிர்ப்புச் சக்திகளையும் நாட்டுப் பற்றுள்ள தேசியச் சக்திகளையும் ஒன்றிணைப்பதற்காகவும் பாசிஸத்தை முறியடிப்பதற்காகவும் முன்னிலும் அதிக ஊக்கத்துடனும் முன்னிலும் அதிக சமயோசித சாமர்த்தியத்துடனும் போராட்டம் நடத்தின. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்களும் மக்களின் நலன்களுக்காக அவை நடத்திய தன்னலம் அற்ற போராட்டமும் நாஜி ஜெர்மனியும் பாசிஸ்டுக் கூட்டணி அனைத்தும் முறியடிக்கப்படுவதை விரைவுபடுத்த உதவின.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கை மக்களின் ஏற்பை மேலும் மேலும் அதிக அளவில் பெற்று வந்தது. பாசிஸத்துக்கு எதிராகப் போராடிய சிறந்த வீரர்கள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணிகளில் விரைவாகச் சேர்ந்தார்கள். இரண்டாவது உலக யுத்தம் மூளவிருந்த தறுவாயில் உலகம் முழுவதிலும் 42 லட்சம் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள் என்றால் போரின் முடிவில் அவர்களுடைய எண்ணிக்கை இரண்டு கோடி ஆகி விட்டது.

பாசிஸ்டுக் கைப்பற்றுளர்கள் மீது சோவியத் மக்கள் பெற்ற, சர்வதேசச் சூழ்நிலை அனைத்தையும் ஆழ்ந்த முறையில் மாற்றி விட்ட, மாபெரும் வெற்றிகள், பாசிஸ எதிர்ப்புச் சக்திகளின் முன்னணியில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்டம், கம்யூனிஸ்டுகளது செல்வாக்கின் ஏற்றம், விரிவான வெகுஜனங்கள் கலந்து

கொண்ட பாசிஸ எதிர்ப்புப் போராட்ட இயக்கத்தின் வளர்ச்சி ஆகிய யாவும் தொழிலாளர், கம்யூனிஸ்டு இயக்கங்கள் புதிய ஏற்றம் பெறுவதற்கும், அனேக நாடுகளில் மக்கள்-ஜனநாயகப் புரட்சிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கும், சோஷலிஸம், சமாதானம், ஜனநாயகம் ஆகியவை மேலும் வலுவடைவதற்கும் தேவையான நிலைமைகளையும் முதனிலைகளையும் ஏற்படுத்தின.

கம்யூனிஸ்டு அகிலம் அனேகமாகக் கால் நூற்றாண்டுக் காலம் உலகு அனைத்திலும் உள்ள உழைப்பாளி வெகுஜனங்களது போராட்டத்தின் மையமாக விளங்கி வந்தது. இந்தப் போராட்டம் பாசிஸத்தின் மீது வெற்றியுடன் தொடங்கிய புதிய அத்தியாயத்தை மனிதகுல வரலாற்றில் தோற்றுவித்தது. மக்கள் ஜனநாயக நாடுகள் தோன்றுவதற்கும் சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உரு ஆவதற்கும் இந்தப் போராட்டம் காரணமாக இருந்தது. இந்தப் போராட்டத்தின் விளைவாக ஏகாதிபத்தியத்தின் காலனி அமைப்பு தகர்ந்து சிதறத் தொடங்கியது. முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கம் மேலும் வலுவாயிற்று.

அத்தியாயம் ஏழு

கம்யூனிஸ்டு அகிலத்தின் மரபும் தற்காலக் கம்யூனிஸ்டு இயக்கமும்

கம்யூனிஸ்டு அகிலத்தின் மரபு வழிச் செல்வமும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சியும்

உலகப் புரட்சி இயக்கமும் அதன் மார்க்சிய-லெனினிய முன்னணிப் படையும் அரை நூற்றாண்டுக் காலத்தில் சிக்கலான, புகழ் மிக்க, வெற்றிகள் நிறைந்த பாதையைக் கடந்து வந்துள்ளன; மிக மிக வெவ்வேறான நிலைமைகளில் போராட்டத்தின் பல்வகைப் பட்ட அனுபவத்தை அவை திரட்டி இருக்கின்றன.

வளர்ச்சி மிக்க, நடுத்தர வளர்ச்சி பெற்ற நாடுகளிலும், அரைக் காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும், ஓரளவு ஒழுங்கமைந்த பாட்டாளிவர்க்கம் ஒரு காலத்திலும் இராத காலனிகளிலும் வெகுஜனங்களின் புரட்சிப் போராட்டத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தலைமை வகித்து நடத்தின. முற்றுகை நிலை, அசாதாரணச் சட்டங்கள், பகிரங்கமான, கொடிய சர்வாதிகாரம் ஆகியவற்றின் நிலைமைகளில், சட்டப் புறம்பான போராட்டம் நடவடிக்கைகளின் மையம் ஆகிவிட்ட சமயத்திலும் சரி, பூர்ஷ்வா ஜனநாயக வாதத்தின் நிலைமைகளில், "சட்டபூர்வமான" வன்முறைகள் கொண்ட பூர்ஷ்வா அதிகார இயந்திரத்துடனும் ஆளும் வர்க்கங்களின் சமுதாய, அரசியல் வாய்வீச்சுடனும் போராடுவது இன்றியமையாததாக இருந்த சமயத்திலும் சரி, அவை தொடர்ந்து செயலாற்றி வந்தன. சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாக அவதூறுகளைப் பரப்புவதும் வேறு சந்தர்ப்பங்களில் மறைமுகமான அழிவு வேலைகள் செய்வதுமான கொடிய கம்யூனிஸ விரோதப் பிரசாரத்தின் தாக்குதலை அரை நூற்றாண்டுக் காலமாக அவை வெற்றிகரமாக எதிர்த்து வந்திருக்கின்றன. சமாதான வளர்ச்சியின் சூழ்நிலையிலும் ஏகாதிபத்திய யுத்தங்கள் முதல் உள்நாட்டுப் போர்வரை கொடும் யுத்தங்களின் நிலைமைகளிலும், பொருளாதார நெருக்கடிக் காலப் பகுதிகளிலும் ஒப்பு நோக்கில் நிலைப்பாடு ஏற்பட்ட காலப் பகுதியிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வீரத்துடன் செயல் புரிந்து வந்திருக்கின்றன.

சோஷலிஸ நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆட்சியில் இருக்கின்றன. சோஷலிஸக் கட்டுமானத்தைத் தலைமைதாங்கி

நடத்துவதன் வாயிலாக வரலாற்று வளர்ச்சியின் புதிய வழிகளை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டம், ஆக்க வேலைகள் ஆகியவற்றின் ஸ்தூல வரலாற்று உள் நிலைமைகளதும் சர்வதேச நிலைமைகளதும் வியப்பூட்டும் பல்வகைப்பாடும் இந்த நிலைமைகளின் விரைந்த மாற்றமும் காரணமாக கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைமைச் செயல் அசாதாரணமாக உயர்ந்த தரத்தில் இருப்பதும், சூழ்நிலையை யாவற்றிலும் முழுமையாகப் பிரதி பலிக்கும் அரசியல் கொள்கைப் போக்கை அவை வகுப்பதும், விரைவாக மாறிவரும் வரலாற்று நிலைமைகளின் தேவைகளுக்கு ஏற்ப அவை போர்த்தந்திரக் கருத்துக்களை வரையறுப்பதும், கோஷங்களை முன்வைப்பதும் போராட்டத்தின் செயல்தந்திரத்தை நிர்ணயிப்பதும் வேலையின் வடிவங்களையும் முறைகளையும் செவ்வைப் படுத்துவதும் பெரிதும் தேவைப்பட்டன, தேவைப்படுகின்றன. புரட்சி-அடிப்படை மாற்ற நிகழ்முறையைத் தலைமைதாங்கி நடத்துவது உயரிய அரசியல் கலை ஆகும். வர்க்கப் போராட்டத்தின் கண்டிப்பான விஞ்ஞானத் தன்மை உள்ள சட்டங்களுக்கும் திட்டவட்டமான விதிகளுக்கும் கோரிக்கைகளுக்கும் உட்பட்டது இந்தக் கலை.

அரசியல் தலைமையில் இந்தப் பல்வகைப்பட்ட கலையைக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கற்பிப்பதிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வர்க்கப் போராட்டத்தின் சிக்கலான விதிகளைப் பயின்று தேர்ச்சி அடையச் செய்வதிலும் இந்த விதிகளை நடைமுறையில் கையாளும் திறமையை அவற்றுக்கு ஏற்படுத்துவதிலும் கம்யூனிஸ்டு அகிலம் அசாதாரணமான தொண்டு ஆற்றியது. கம்யூனிஸ்டு அகிலத்தின் புகழ்வாய்ந்த லெனினிய மரபுகளும் மிக முக்கியமான கொள்கைவாதத் தீர்மானங்களும் அது கலைக்கப்பட்டதனால் மறைந்துவிடவில்லை. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சிமீது அவை தொடர்ந்து செல்வாக்கு செலுத்திவருகின்றன.

கம்யூனிஸ்டு அகிலத்தின் லெனினிய மரபுகளது உயிராற்றல்

புரட்சிக் கட்சியின் சித்தாந்த, அரசியல், ஸ்தாபன அடிப்படைகளும் திரளான பொது மக்களின் வர்க்கப் போராட்டத் தலைமையின் கோட்பாடுகளும் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்களில் நிறுவப்பட்டுள்ளன.

வி.இ. லெனினது தலைமையில் அமைக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலம் இந்த அடிப்படைகளையும் கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டு விரிவுபடுத்தி, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் புரட்சி மரபுகளுக்கு வளம் கூட்டியது. கம்யூனிஸ்டு இயக்கத்தைத் தற் காலத்தின் யாவற்றிலும் வெகுஜனத்தன்மை உள்ள, செல்வாக்கு மிக்க, ஒழுங்கமைந்த அரசியல் சக்தியாக மாற்றிய நிகழ்முறை களின் தோற்றுவாயாக விளங்கியது அது.

தொழிலாளர் இயக்கத் துறையில் செயல் ஆற்றிய சில அர சியல் தலைவர்களும் சித்தாந்த நிபுணர்களும் கம்யூனிஸ்டு அகிலம் சென்ற காலத்தில் புரிந்த தொண்டுகளை மதிக்கத் தயாராய் இருக் கிறார்கள். ஆனால், கம்யூனிஸ்டு அகிலத்தின் அனுபவம் உலகப் புரட்சி இயக்கத்தின் திருப்பப்பட்டுவிட்ட பக்கம் என்றும் அது வரலாற்றுக்கு மட்டுமே உரியது என்றும் கூறுகிறார்கள். சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஏற்பட்டு வரும் விரைந்த மாற்றங்களை வழக்கமாக மேற்கோள் காட்டி, வர்க்கப் போராட் டம்பற்றிய முற்றிலும் புதிய, சித்தாந்த, போர்த்தந்திரக் கருத்தோட்டங்கள் இவற்றுக்குத் தேவைப்படுவதாக இவர்கள் வாதிக்கிறார்கள்.

கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்ட பின்பு கழிந்துள்ள காலத் தில் மனிதகுல வாழ்க்கையில் மிகப் பெருத்த மாற்றங்கள் நிகழ்ந் துள்ளன என்பது விவாதத்துக்கு இடமற்றது. நவீன உலகம், கம்யூனிஸ்டு அகிலத்தின் பயனுள்ள செயல்கள் நிகழ்ந்த காலத் தில் இருந்ததற்கு மாறாகத் தோற்றம் அளிக்கிறது. வர்க்கப் போராட்டத்தின் புற, அக நிலைமைகள் சாராம்சத்தில் மாறி வரு கின்றன. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவாகி, தனது நிலைகளை வலுப்படுத்தி வருகிறது. மார்க்சிய-லெனினிய சோஷலிஸ ஆதர்சம் நிறைவேறியதோடு மட்டும் இன்றி, மனித சமுதாயத் தின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணியும் ஆகி வருகிறது. உலக சோஷலிஸம், முதலாளித்துவ உலகின் எல்லா சமுதாய, பொரு ளாதார, அரசியல், கொள்கைவாத நிகழ்முறைகள் மீதும் வர்க் கங்களது நடத்தை மீதும் கட்சிகளின் கொள்கை மீதும் செல்வாக்கு செலுத்தி வருகிறது. காலனிப் பேரரசுகள் தகர்ந்து சிதறி விட்டன. முன்பு ஒடுக்கப்பட்டிருந்த பதிற்றுக்கணக்கான நாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்று விட்டன. வளர்ச்சி பெற்றுவரும் இளம் அரசுகள் பெரும்பாலானவற்றின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்கு அதிகரித்து

வருகிறது. ஏகாதிபத்தியத்தின் நிலைகள் பலவீனம் அடைந்து வருகின்றன. சக்திகளின் ஒப்புநிலை ஜனநாயகத்துக்கும் சோஷலிஸத்துக்கும் சாதகமாக மாறிவருகிறது. முதலாளித்துவத்திலேயே பெருத்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பு முடிவாக உருவாகிவிட்டது. நாடுகளின் பெரும்பான்மையினருக்கு இது வேற்றான, பகைச் சக்தியாக எதிர்நிற்கிறது. தற்கால சமூகத்தின் புரட்சித் தொடக்கத்தைத் தோற்றுவித்த தொழிலாளர் வர்க்கமும் ஆழ்ந்த மாறுதல்கள் அடைந்திருக்கிறது. புரட்சி நிகழ்முறை உள்ளடக்கத்தில் அதிக ஆழமும் அளவில் அதிக விரிவும் இயக்கு சக்திகளில் அதிக வளமும் போராட்ட வடிவங்களில் அதிகப் பல்வகைப்பாடும் பெற்றுள்ளது.

ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பெருந்தொகையான தஸ்தாவேஜுகளில் வலியுறுத்தப்படிருப்பதுபோல, மக்களது வாழ்க்கையில் ஏற்படும் எவ்வித மாற்றங்களும் சமூக வளர்ச்சிக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் உரிய விதிகளை ரத்து செய்ய முடியாது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரால் கண்டு அறியப்பட்ட இந்த விதிகள் கம்யூனிஸ்டு அகிலத்தால் தன் செயல்களின் அடிப்படையாக வைத்துக் கொள்ளப்பட்டன. வர்க்கப் போராட்டத்தின் வளம் மிக்க வரலாற்று அனுபவத்தையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் அனுபவம் உட்பட உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அனுபவத்தையும் கருத்தில் கொண்டு, மார்க்சிய-லெனினியத்தால் கண்டு அறியப்பட்ட விதிகளைப் படைப்புத்தன்மையுடன் கையாள்வதன் வாயிலாகவே சமூக இயக்கப் போக்கைப் புரிந்து கொள்வதும் விளக்குவதும் கூடச் சாத்தியம் ஆகும். இந்த அனுபவம் மிகப் பெருத்த உலக முக்கியத்துவம் உள்ளது ஆகும், ஏனெனில், வி.இ. லெனினது தலைமையில் திரட்டப்பட்டவையும் அவருடைய கருத்துக்களுக்குப் பொருந்துபவையுமான கொள்கைவாத, அரசியல், போர்த்தந்திர, செயல்தந்திரச் செல்வங்களைக் கம்யூனிஸ்டு அகிலம் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு மரபுச் சொத்தாக விட்டுச் சென்றிருக்கிறது.

லெனினுடைய கருத்துக்களைப் படைப்புத்தன்மையுடன் கையாண்டதன் மூலம் கம்யூனிஸ்டு அகிலம் முன்னர் நிலவிய புரட்சி மரபுகளை விரிவும் வளமும் படுத்தி, அக்டோபர்ப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு உருவான உலகப் பாட்டாளி வர்க்கப் போராட்ட நிலைமைகளைப் பிரதிபலிக்கும் புதிய உள்ளடக்கத்தையும் புதிய தொனியையும் அவற்றுக்கு அளிப்பதில் வெற்றி பெற்றது. இந்தக்

காரணத்தால் கம்யூனிஸ்டு அகிலம் செய்த முக்கியமான புதிய முடிவுகள் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கு வளம் கூட்டி, அடிப்படை மாற்றங்கள் நிகழ்த்தும் அதன் ஆற்றலை அதிகப்படுத்தின. இந்த மரபுகளில் பல தற்போதையக் கம்யூனிஸ்டு இயக்கத்துக்கும் முக்கியத்துவம் கொண்டிருக்கின்றன. கம்யூனிஸ்டு அகிலத்தின் செயல்களில் குறித்த கட்டங்களில் நிகழ்ந்த தவறுகளும் படிந்த அகநிலைக் கசடுகளும் மக்களினங்களின் விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலம் ஆற்றிய மாபெரும் தொண்டை மறைத்து விட முடியாது. கம்யூனிஸ்டு இயக்கத்தால் தற்கால நிலைமைகளில் வளப்படுத்தவும் விரிவாக்கவும் பட்டுள்ள அதன் புகழ்வாய்ந்த மரபுகளின் முக்கியத்துவத்தை இவற்றால் குறைத்துவிட முடியாது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைவாத-அரசியல் கருத்துக்களையும் முடிவுகளையும் இயந்திர ரீதியாகப் பின்பற்றுவதும் கையாளுவதும் தற்போதைய வரலாற்று நிலைமைகளுக்குப் பொருந்த மாட்டா என்பது உண்மையே. ஆயினும், இப்போது கம்யூனிஸ்டு இயக்கம் தீர்வு கண்டுகொண்டிருக்கும் பெருந்தொகையான அடிப்படைப் பிரச்சினைகள் கம்யூனிஸ்டு அகிலத்தால் எழுப்பப்பட்டு, தன் கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு தீர்க்கப்பட்டன என்பதைக் குறிப்பிடுவது மிக அவசியம்.

கம்யூனிஸ்டு அகிலம், வி.இ. லெனினது தலைமையில், அவருடைய கருத்துக்களுக்கு இணங்க, எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடையவும் தன் காலத்துப் புரட்சி இயக்கம் அனைத்தினுடையவும் நடவடிக்கைகளின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, ஏகாதிபத்தியம் நிலவிய, பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் நிகழ்ந்து கொண்டிருந்த, சோஷலிஸம், முதலாளித்துவம் என்னும் இரு அமைப்புக்களின் பரஸ்பர மோதல் நடந்து கொண்டிருந்த காலப் பகுதியில் வர்க்கப் போராட்டத்தின் மிக முக்கியக் கோட்பாடுகளை வகுத்தது. புரட்சிப் போராட்டத்தின் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் கம்யூனிஸ்டு அகிலம் கணிசமாக வளப்படுத்தியது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அரசியல், போர்த்தந்திர, செயல்தந்திர அடிப்படைகளை நீண்ட வரலாற்றுக் காலப் பகுதிக்குப் பொருந்தும் வகையில் நிறுவியது.

—**கம்யூனிஸ்டு அகிலம்**, காலத்தில் உலகப் புரட்சி நிகழ்முறையில் இடையறாத் தன்மையையும், உலக அளவில் அதன் வெவ்வேறு பகுதிகளின் தொடர்பையும் தன் நடவடிக்கைகளில் உருவகப்படுத்திற்று. இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் எறிந்து

விட்ட மார்க்சியப் பதாகையை எடுத்து உயர்த்திப் பிடித்து, பெருமையுடன் முன்னே கொண்டு சென்று, மனிதகுலம் அனைத்திற்கும் அது வழி காட்டியது. வர்க்கப் போராட்டத்தின் சித்தாந்தத்தையும் நடைமுறையையும் அது கணிசமாக வளப்படுத்தியது, உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பதாகையைப் போராட்ட வீரர்களின் அடுத்து வந்த தலைமுறையிடம் ஒப்படைத்தது.

—**கம்யூனிஸ்டு அகிலம்** மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைக் காத்து விரிவுபடுத்தியது. புதிய நிலைமைகளில் மார்க்சிய-லெனினியத்தை சர்வதேச அளவில் தொழிலாளர் இயக்கத்துடன் ஒன்று சேர்ப்பதற்கு வகை செய்தது. விரைவாக மாறிவரும் எதார்த்த நிலைமைகளைப் படைப்புத்தன்மையுடன், மார்க்சிய-லெனினிய நோக்கில் பகுத்தாராய்வது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சரியான கொள்கைக்கு எத்தகைய பங்கு ஆற்றுகிறது, எவ்வளவு முக்கியமானது என்பது கம்யூனிஸ்டு அகிலத்தின் தீர்மானங்களில் காட்டப்பட்டிருக்கிறது. எல்லா சந்தர்ப்பவாதப் போக்குக்களுடையவும் மார்க்சிய-லெனினியத்தின் எல்லாத் திரிபுவாதப் புரட்டுக்களுடையவும் சமுதாய, கொள்கைவாதத் தோற்றுவாய்களைக் கம்யூனிஸ்டு அகிலம் அம்பலப்படுத்தியது. சித்தாந்தத் துறையில் எல்லா ஊசலாட்டங்களையும் தயக்கங்களையும் அது எதிர்த்தது. மார்க்சிய-லெனினியத்தை வர்க்கப் போராட்டத்தின் ஸ்தூல நிலைமைகளில் படைப்புத் தன்மையுடன் கையாளுமாறு அது கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கற்பித்தது.

—**கம்யூனிஸ்டு அகிலம்,** அக்டோபர்ப் புரட்சிக்குப் பிந்திய காலப்பகுதியில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போர்த்தந்திர, செயல் தந்திர அடிப்படைகளை வகுத்தது. வரலாற்றுச் சூழ்நிலை மாறியுள்ள அளவுக்கு ஏற்ப எழும் புரட்சி இயக்கத்தின் புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முறை இயல் அதன் தஸ்தாவேஜுகளில் தரப்பட்டிருக்கிறது. பல்வேறு கட்டங்களில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கையையும் செயல்தந்திரத்தையும் வகுப்பதற்கான அணுகுமுறையின் அடிப்படைக் கோட்பாடுகள் இவற்றில் தெளிவாக்கப்பட்டுள்ளன. சித்தாந்தம், நடைமுறை ஆகியவற்றின் ஒற்றுமை, குறித்த தருணத்தின் தேவைகளை யாவற்றிலும் முழுமையாகப் பிரதிபலிக்கும் பணிகளையும் கோஷங்களையும் முன்வைப்பது, புற நிலைமைகள் மாறும் அளவுக்கு ஏற்ப, கோஷங்களில் தருணத்துப் பொருத்தமான மாற்றம், செயல்தந்திரத்தில் சமயோசித சாமர்த்தியம், குறித்த வரலாற்று நிலைமை

களில், போராட்டத்தின் குறித்த கட்டத்தில், வர்க்கச் சக்திகளின் குறித்த ஒப்புநிலையில், யாவற்றிலும் அதிகப் பயன் விளைக்கும் போராட்ட வடிவங்களையும் முறைகளையும் தெரிந்தெடுக்கும் திறமை ஆகியவை இந்தக் கோட்பாடுகளில் அடங்கி இருந்தன.

—**கம்யூனிஸ்டு அகிலம்** பாட்டாளி வர்க்க சர்வதேசிய மரபுகளைத் தொடர்ந்து பின்பற்றி, மேலும் ஆழ்ந்தவை ஆக்கி, அவற்றில் புதிய உள்ளடக்கத்தை நிறைத்தது. சர்வதேசியத்தின் மிக முக்கியமான அறிகுறி, அப்போது சோவியத் யூனியனில் நிலவிய உண்மையான சோஷலிஸத்தை எல்லா வகையிலும் ஆதரிப்பதும் காப்பதுமே என்று அது காட்டியது. பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டின் கோட்பாடுகளுக்கு விசுவாசம் கடைப்பிடிப்பதன் ஜீவாதார முக்கியத்துவத்தையும், கட்சியின் சித்தாந்த, கொள்கைவாத, புரட்சிகர-நடைமுறைச் செயல்களிலும், அதன் உட்கட்சி வேலை முழுவதிலும் தேசிய, சர்வதேசிய அம்சங்களின் உள்ளார்ந்த ஒற்றுமைக்கு வகை செய்வதன் இன்றியமையாமையையும் அது காட்டியது. ஒத்திசைந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியம் சோஷலிஸத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான நிபந்தனை ஆகும் என்று கம்யூனிஸ்டு அகிலம் கண்கூடாகக் காட்டியது. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் தன் வரலாற்றுக் குறிக்கோள்களை அடைய உதவக்கூடிய தலைமை வகிக்கும் ஸ்தாபனங்கள் என்ற முறையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளைக் கொள்கைவாத-அரசியல் நோக்கிலும் ஸ்தாபன ரீதியாகவும் வலுப்படுத்துவதற்குக் கம்யூனிஸ்டு அகிலம் தனது செயல் காலம் அனைத்திலும் உதவி அளித்து வந்தது.

—**கம்யூனிஸ்டு அகிலம்** சமரசவாதத்துக்கும் குட்டி பூர்ஷ்வா துர்ச்சாகசத்துக்கும் எதிரான போராட்டத்தில், ஏகாதிபத்தியக் காலகட்டத்துக்கு, பாட்டாளி வர்க்கப் புரட்சிகளும் இரு சமுதாய அமைப்புக்களின் போராட்டமும் நிகழ்ந்து வந்த காலகட்டத்துக்கு ஏற்ற **புரட்சித்தன்மையின்** கோட்பாட்டை ஆதாரத்துடன் நிலைநாட்டியது. தொழிலாளி வர்க்கத்துக்கும் எல்லா உழைப்பாளி மக்களுக்கும் ஊசலாட்டமற்ற விசுவாசம், அவர்களுடைய நலன்களின் பாதுகாப்பு, சர்வாதிகாரம் பெற்ற ஏகபோகங்களுடன் சமரசமற்ற போராட்டம், ஏகபோகவாதிகளுடன் எல்லா விதமான சமரசப் போக்கையும் சோஷலிஸத்துக்குத் தீங்கு விளைக்கும் வகையில் அவர்களுடன் அரசியல் கூட்டுக்கள் ஏற்படுத்திக் கொள்வதையும் கடுமையாக நிந்தித்தல் ஆகியவை இந்தக் கோட்பாட்டில் அடங்கி இருந்தன. இறுதிக் குறிக்கோளை நோக்கி

இடையறாது முன்னேறியவாறே, பாட்டாளி வர்க்கத்தினுடையவும் உழைப்பாளி மக்கள் அனைவருடையவும் அணித்தான, உடனடி முக்கியத்துவம் உள்ள கோரிக்கைகளின் பொருட்டு ஒத்திசைந்த, விடாப்பிடியான போராட்டம் நடத்துவதற்குக் கம்யூனிஸ்டு அகிலம் கற்பித்தது. புரட்சித் தன்மையின் பிரதான உள்ளடக்கம், முதலாளித்துவ அமைப்பை அழிக்கவும் சோஷலிஸத்தைக் கட்டி அமைக்கவும் படிப்படியாகக் கம்யூனிஸத்துக்குப் பரிணமிக்கவும் எல்லாச் சக்திகளையும் சாதனங்களையும் திரட்டி ஈடுபடுத்துவதாகும்.

—**கம்யூனிஸ்டு அகிலம்** காலனி மக்களின் தேசிய-விடுதலைப் போராட்டத்தினுடைய உள்ளடக்கத்தையும் இயக்கு சக்திகளையும் வருங்கால வாய்ப்புக்களையும் தெளிவாக வரையறுத்தது. தேசியக் காலனிப் பிரச்சினையை உலகப் புரட்சிப் போர்த்தந்திரத்தின் மட்டத்துக்கு உயர்த்தியது. தேசிய-விடுதலை இயக்கம் உலகப் புரட்சி நிகழ்முறையின் உள்ளார்ந்த பகுதி என்றும் சோவியத் குடியரசுகளின் மக்கள் இனங்களும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களும் இந்த நிகழ்முறையின் இயக்கு சக்திகள் என்றும் அது காட்டியது. இந்தச் சக்திகளை, ''உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற கோஷத்தின்கீழ் ஒரே ஏகாதிபத்திய எதிர்ப்புப் பெருக்காக ஒருங்கு திரட்டக் கம்யூனிஸ்டு அகிலம் முயன்றது.

—**கம்யூனிஸ்டு அகிலம்,** சமாதானப் போராட்டத்துக்கும் உலகப் புரட்சி நிகழ்முறையின் வளர்ச்சிக்கும் உள்ள பிரிக்க முடியாத தொடர்பைத் தன் சித்தாந்த, நடைமுறைச் செயல்களில் நிரூபித்தது. சமாதானத்தின் பொருட்டும் மக்களினங்களின் பாதுகாப்பின் பொருட்டும், சைனிய வாதத்துக்கு எதிராகவும் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட ஏகாதிபத்திய யுத்தங்களுக்கு எதிராகவும் போராடும் புரட்சிகரப் பாட்டாளிவர்க்க இயக்கத்துக்கு இயல்பான மரபை அது புதிய மட்டத்துக்கு உயர்த்தியது.

வி.இ. லெனினது தலைமையில், அவருடைய கருத்துக்களுக்கு இணங்க, கம்யூனிஸ்டுகளின் தேசிய, உலகக் கொள்கையையும் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் பற்றிக் கம்யூனிஸ்டு அகிலத்தால் செய்யப்பட்ட முடிவுகளில் பின்வருவன அடங்கும். இவற்றைக் கடைப்பிடிப்பது பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு இன்றியமையாத நிபந்தனை ஆகும். இந்த முடிவுகளாவன:

முதலாளித்துவத்தின் அடிப்படைகளைத் தாக்குவதற்கு மிக

முக்கியமான முதனிலை என்ற வகையில் தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மையினரைப் புரட்சியின் தரப்புக்கு ஈர்ப்பது;

தொழிலாளர் இயக்கத்தின் பிளவுபாட்டை அகற்றி, குறித்த கட்டத்தில் குறித்த நாட்டின் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளுக்குப் பொருந்தக் கூடிய வடிவங்களில் அதன் ஒற்றுமையை ஏற்படுத்துவது (ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி, ஒன்றித்த தொழில்துறை, தேசிய, சர்வதேசத் தொழிற்சங்க ஸ்தாபனங்கள், பொதுவான அல்லது ஸ்தூலமான பிரச்சினைகள் விஷயத்தில் செயல் ஒற்றுமை முதலியன);

ஸ்தூல வரலாற்று நிலைமைகளுக்குப் பொருந்தும் [வடிவங்களில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் சமூகம், நடுத்தர வட்டாரங்கள், எல்லா ஜனநாயகச் சக்திகள் ஆகியவற்றின் கூட்டணிகளை (மக்கள் கூட்டணி, பாசிஸ எதிர்ப்புக் கூட்டணி, தேசியக் கூட்டணி, ஏகபோக எதிர்ப்புக் கூட்டணி முதலியன) ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் அமைத்தல்;

தேசிய-காலனிப் பிரச்சினையில் லெனினிய போதனையைச் செயல்படுத்துவது, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தேசபக்தச் சக்திகளின் வருங்கால வாய்ப்புக்களையும் பணிகளையும் திட்டப்படுத்துவது;

தேசிய சுதந்திரத்திற்காகவும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் போராடிவரும் நாடுகளில் எல்லாத் தேசபக்த, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளதும் ஒற்றுமைக்கு வகை செய்வது (ஏகாதிபத்திய விரோத ஒன்றித்த கூட்டணி);

உலகப் புரட்சியின் எல்லா உட்பகுதிகளுடையவும்—பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்றுள்ள நாடு, முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் புரட்சி இயக்கங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் விடுதலைப் போராட்டம் ஆகியவற்றின்—செயல் ஒற்றுமைக்கு வகை செய்வது; சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசிய-விடுதலை இயக்கத்தினதும் நெருங்கிய ஐக்கியம் உலகப் புரட்சியின் விதிக்கு முதன்மையான முக்கியத்துவம் உள்ளது என்பதை வி.இ. லெனினும் கம்யூனிஸ்டு அகிலமும் சிறப்பாக வலியுறுத்தினர்கள்;

ஜனநாயகத்தைக் காப்பதற்கும் அதை விரிவுபடுத்துவதற்குமான தீவிரப் போராட்டத்தையும் சோஷலிஸத்துக்கான போராட்டத்தையும் உள்ளார்ந்த முறையில் ஒருங்கிணைப்பது;

புரட்சிகர முன்னணிப் படைப்பிரிவைப் படைப்புத்தன்மை

யுள்ள மார்க்சிய-லெனினிய அடிப்படையில் கொள்கைவாத-அரசியல் நோக்கிலும் ஸ்தாபன ரீதியிலும் வலுப்படுத்துவது, கம்யூனிஸ்டு இயக்கத்தில் உள்ள எல்லா சந்தர்ப்பவாதப் போக்குக்களுக்கும்—வலதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கும் குட்டி பூர்ஷ்வா இடதுசாரி துர்ச்சாகசப் போக்குக்கும் குறுகிய பிரிவுவாதத்துக்கும்—எதிராக உறுதியுடன் போராடுவது, புரட்சி இயக்கத்திலும் சோஷலிஸத்தின் கட்டுமானத்திலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைமைப் பாத்திரத்திற்கும் தொழிலாளி வர்க்கத்தின் மற்ற அரசியல் சக்திகளுடன் அதன் பரஸ்பர உறவுகள் அனைத்திலும் அதன் சுதந்திரத்திற்கும் வகை செய்யக் கூடிய விதத்தில், கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமையை வரலாற்று நிலைமைகளால் நிர்ணயிக்கப்படும் தேசிய, சர்வதேச அளவுகளிலும் வடிவங்களிலும் ஏற்படுத்துவது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இந்த மரபுகளும் பிற மரபுகளும் அதன் மார்க்சிய-லெனினிய முடிவுகளும் வரையறுப்புக்களும் இன்றளவும் நிலவி வளர்ந்து வருகின்றன. அவையாவன:

சமாதானம், ஜனநாயகம், தேசிய சுதந்திரம், சோஷலிஸம் ஆகியவற்றுக்கான போராட்டம்;

உலகப் புரட்சி முன்னேற்றத்தின் மூன்று பெருக்குகளின் ஒற்றுமைக்கு வகை செய்வது;

தேசிய, சர்வதேச அளவுகளில் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை ஏற்படுத்துவது, புரட்சியின் தரப்புக்கு அதை ஈர்ப்பது;

ஜனநாயகத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் நடக்கும் போராட்டங்களுக்கு இடையேயும், ஜனநாயகக் கோரிக்கைகளையும் சோஷலிஸப் புரட்சியையும் செயல்படுத்துவதற்கு இடையேயும் சரியான பரஸ்பரத் தொடர்புக்கு வகை செய்வது;

வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் இடதுசாரிச் சக்திகளின் ஐக்கியத்தையும் ஏகபோக எதிர்ப்புக் கூட்டணியையும் நிறுவுவது;

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியை நிறுவுவது, கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமைக்கு வகை செய்வது, இடதுசாரி துர்ச்சாகசவாதச் சக்திகளுடனும், அவ்வாறே திரிபுவாதச் சக்திகளுடனும் நிகழும் உறுதியான போராட்டத்தில் இடையறாது திரட்டப்பட்டு வரும் அனுபவத்தைப் பொதுமைப்படுத்துவதன் அடிப்படையில் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் படைப்புத்தன்மையுள்ள வளர்ச்சிக்கு

வகை செய்வது ஆகிய பிரச்சினைகளும் பிற பிரச்சினைகளும் கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைவாத-சித்தாந்த, அரசியல் மரபுச் செல்வத்தைக் கருத்தில் கொண்டு கம்யூனிஸ்டுகளால் தீர்க்கப் படுகின்றன. முதலாளித்துவ உலகில் புரட்சி இயக்கத்தினதும் சோவியத் யூனியனில் சோஷலிஸ வளர்ச்சியினதும் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டு அனுபவத்தின் ஆழ்ந்த பொதுமைப்பாடு இந்த மரபுச் செல்வத்தில் அடங்கியுள்ளது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் அனுபவத்தையும் மரபுகளையும் தற்காலச் சூழ்நிலையில் இயந்திர ரீதியாகப் புகுத்த முடியாது என்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் வலியுறுத்துகின்றன. புரட்சி இயக்கத்தின் தற்கால நிலைமைகளுக்கு ஏற்ப அவற்றைப் படைப்புத் தன்மையுடன் கையாள்வதன்மூலமே அவற்றின் மாற்றியமைக்கும் உயிராற்றலை நிலையாக வைத்திருக்க முடியும்.

தற்காலக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சியில், கம்யூனிஸ்டுக் கட்சிகள் அப்போதுதான் முளைவிடத் தொடங்கியிருந்த, அவை நிலை பெற்றுக் கொள்கைவாத-அரசியல் திண்மையும் வலிமையும் அடையும் நிகழ்முறை நடந்து கொண்டிருந்த கட்டத்தைக் கம்யூனிஸ்டு அகிலம் நிறுவப்பட்டதும் அதன் செயல்களும் பிரதிபலித்தன. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலகட்டத்தில் உலகக் கம்யூனிஸத்தின் கொள்கையினதும் போர்த்தந்திரத்தினதும் அடிப்படைகள் இந்தக் காலப்பகுதியிலேயே உருவாக்கப்பட்டன. ஒன்றுசேர்ந்த, கூட்டான முயற்சிகள் வாயிலாகவே கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்தப் பணிகளை நிறைவேற்ற முடிந்தது. இதற்கேற்ற சிறந்த ஸ்தாபன வடிவமாக விளங்கியது ''கட்சிகளின் சர்வதேச ஐக்கியம்''[1]—வி.இ. லெனின் கம்யூனிஸ்டு அகிலத்தை இவ்வாறு அழைத்தார்.

சர்வதேசக் கம்யூனிஸ்டு ஸ்தாபனத்தின் பிரிவுகள் என்ற வகையிலேயே தங்கள் கட்சிகள் நிலவவும் வெற்றிகரமாகச் செயலாற்றவும் வேண்டும் என்று எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் எண்ணினார்கள். தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இருந்தவையும் கணிசமான சர்வதேசத் தொடர்புகள் கொண்டிருந்தவையுமான சீர்திருத்தவாத, இடைநிலைவாத, அராஜக-சிண்டிக்கலிஸ்டு ஆகிய போக்குக்களுடையவும் பிற சந்தர்ப்பவாதப் போக்குக்களுடைய

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 29, பக்கம் 307.

வும் எதிர்ப்பையும் தாக்குதலையும் வெற்றி கொண்டு விறல் மிக்க தேசியச் சக்தியாக வலுப்பெற்று வளர்ச்சி அடைவது இந்த சர்வ தேச ஸ்தாபனத்தின் வரம்புகளுக்கு உள்ளேயே சாத்தியமாய் இருந்தது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கூட்டாக ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகள் தேசிய, சர்வதேச மூலதனத்தின் தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்கவும் தாக்குதலுக்கு மாறுவதற்குரிய நிலைமைகளை ஏற்படுத்தவும் தேசியப் பரப்பிலும் சர்வதேச அரங்கிலும் இந்தத் தாக்குதலைச் செயல்படுத்தவும் சிறந்த வாய்ப்புக்களை உருவாக்கின. கம்யூனிஸ்டு அகிலத்தின் வரம்புகளுக்குள் உலகப் புரட்சி இயக்கத்தின் அனுபவத்தை ஆராய்ந்து பொதுமைப் படுத்தும் நிகழ்முறை யாவற்றிலும் வெற்றிகரமாக நடந்தது. மார்க்சிய-லெனினியத்தைப் புதிய நிலைமைகளில் படைப்புத்தன்மையுடன் விரிவுபடுத்தவும் அதே சமயம் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் இளம் ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்து உரமூட்டவும் இதனால் முடிந்தது.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் ஸ்தாபன அமைப்பு-அரசியல் அடிப்படை என்ற முறையில் கம்யூனிஸ்டு அகிலத்தில் செயல்பட்ட ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளும் சித்தாந்த வளர்ச்சியிலும் நடைமுறைச் செயல்களிலும் கூட்டுத்துவமும் போராட்டத்தின் ஒருங்கிணைப்பும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரம்புகளுக்குள் கட்சிகளின் ஒருங்கிசைவும் எந்த ஒரு கட்சியினுடையவும் உரிமைகளைக் குறுக்கவோ அதன் தேசியச் சிறப்பியல்புகளை நசுக்கவோ இல்லை. மாறாக, முடிவில் இவற்றின் விளைவாக தேசியச் சிறப்பியல்புகள் மலர்ச்சி அடைந்தன. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கைவாத-அரசியல் வளர்ச்சிக்கும் வலுப்பாட்டிற்கும் இவை உதவின. அவற்றின் முழு சுதந்திரத்திற்குரிய வருங்கால வாய்ப்புக்களைப் பெருக்கின. இந்த உண்மையை வரலாறு திட்டவட்டமாக உறுதிப்படுத்துகிறது.

புரட்சிப் போராட்டத்தின் பரப்பும் ஆழமும் அதிகரித்து, அதன் இயக்கு சக்திகள் பல்கி, அதன் வடிவங்களும் முறைகளும் அதிகப் பல்வகைப்பட்டவை ஆகி, புரட்சிகர, விடுதலை இயக்கத்தில் மேலும் மேலும் புதிய மக்கள் இனங்களும் மேலும் மேலும் லட்சோபலட்சம் உழைப்பாளிகளும் ஈர்க்கப்பட்டதன் விளைவாகப் போராட்டம் திண்ணமான தேசிய-தனிச் சிறப்பைப் பெற்று வெகுஜனங்களின் அன்புக்குரியதும் அவர்களுக்குப் புரியக்கூடியதும் ஆகி, சோஷலிஸக் கருத்துக்களின் உயிராற்றலும் ஈர்ப்புச் சக்தி

யும் அதிகரிப்பதற்கு ஏற்ப, கம்யூனிஸ்டு இயக்கம் மையப்படுத்தப்பட்ட தலைமையால் நடத்தப்படுவது அதன் வளர்ச்சியைத் தாமதப்படுத்தத்தான் முடியும் என்பது தெளிவாயிற்று.

இந்த வரலாற்று நிகழ்முறையின் இயக்கவியல் சாராம்சம் என்ன என்ருல், வெகுஜனங்களைத் துடியாகச் செயலில் ஈடுபடுத்துவதையும் மக்களின் பிரமாண்டமான திரள்களுக்கு விழிப்பு ஊட்டி அவற்றை அரசியலுக்கு இட்டுவருவதையும் நோக்கமாகக் கொண்ட தனது செயல்களால் கம்யூனிஸ்டு அகிலம் தான் மறைந்து விடுவதற்கான **புறநிலை** சமூக முதனிலைகள் உருவாவதை இடையருது விரைவுபடுத்தி உண்மையில் கணிசமாகத் துரிதப்படுத்திவிட்டது என்பதே.

மறு புறம், கம்யூனிஸ்டு அகிலத்தில் ஆழ்ந்த மார்க்சிய-லெனினியப் பயிற்சி பெற்று, பல்வகைப்பட்ட அரசியல், புரட்சி அனுபவத்தைக் கூட்டு முயற்சிகளால் திரட்டி, உரமும் வலிமையும் அடைந்து கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் நாடுகளில் வர்க்கப் போராட்டத்தை சுதந்திரமாகத் தலைமை ஏற்று நடத்துவதற்குரிய பக்குவத்தை அடைந்தன. இதஞல் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நாடு அனைத்திற்கும் பொதுவான நிர்ணயகரமான அரசியல் சக்திகளாக மாறுவதற்கேற்ற வாய்ப்புக்கள் கணிசமாக விரிவாயின. கம்யூனிஸ்டுக் கட்சிகள் சர்வதேசப் பாட்டாளி வர்க்க உறவுகளைப் புதிய வடிவங்களில் ஏற்படுத்துவதற்குரிய பக்குவத்தையும் பெற்று விட்டன. இது புரட்சித்தன்மையின் முக்கிய அடையாளம் என்பதோடு கூடவே, தேசிய வரம்புகளுக்குள் வெற்றிகளுக்குரிய இன்றியமையாத நிபந்தனையும் ஆகும். முடிவாக, வரலாற்று நிலைமையையும் வர்க்கச் சக்திகளின் ஒப்புநிலையையும் அவற்றின் அணி வகுப்பையும் போராட்டத்தின் போக்குக்களையும் மார்க்சிய-லெனினிய நோக்கில் சுதந்திரமாகப் பகுத்தாராய்ந்து புரட்சி வளர்ச்சிக்கான வழிகளையும் வாய்ப்புக்களையும் நிர்ணயிப்பதற்கும் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்துவதற்கும் ஏற்ற பக்குவமும் பெற்று விட்டன. இத்தகைய சூழ்நிலையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மையப்படுத்தப்பட்ட தலைமை தங்கள் நாடுகளில் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படைப் பிரச்சினைகளைத் திட்டப்படுத்துவதிலும் பகுத்தாராய்வதிலும் முடிவு செய்வதிலும் அவற்றின் முன்முயற்சிக்குத் தளை பூட்டக் கூடும், புரட்சிகரப் படைப்புத் தன்மையின் வீச்சைக் குறுக்கி, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைமைப் பாத்திரத்தைப் பலவீனப்படுத்தக் கூடும். இந்த

நிலைமையின் இயக்கஇயல் என்ன என்ருல், கம்யூனிஸ்டுக் கட்சிகளை வலுப்படுத்துவதையும் அவற்றின் உறுப்பினர்களுக்கு மார்க்சிய-லெனினியப் பயிற்சி அளிப்பதையும் ஊழியர்களுக்குக் கொள்கை வாத-அரசியல் உரமூட்டுவதையும் கட்சியின் ஸ்தாபனரீதியான போராட்டத் திறனை உயர்த்துவதையும் நோக்கங்களாகக் கொண்ட தன் செயல்களின் மூலம் கம்யூனிஸ்டு அகிலம் தனது மறைவுக்குரிய நிலைமைகளைத் தோற்றுவித்து அதற்கான நேரத்தையும் அருகே கொண்டுவந்தது என்பதாகும்.

எனவே, கம்யூனிஸ்டு அகிலத்தின் பகிரங்க, மறைமுகப் பகைவர்கள் என்ன சொன்னுலும், தற்கால சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கம்—இதன் மதிப்பும் செல்வாக்கும் சக்தியும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன—கம்யூனிஸ்டு அகிலத்திலிருந்தே தோன்றியது என்பது நிலையான உண்மை ஆகும்.

**தற்கால நிலைமைகளில்
கம்யூனிஸ்டு இயக்கத்தின்
வளர்ச்சி**

இரண்டாவது உலக யுத்தத்தில் ஹிட்லர் கூட்டணியும் ஜப்பானிய சைனியவாதிகளும் முறியடிக்கப்பட்டார்கள். உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தினதும் விடுதலைப் பற்றுள்ள எல்லா மக்களினதும் ஒத்துழைப்புடன் சோவியத் யூனியன் அவர்களை முறியடிப்பதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றியது. இந்த யுத்தத்தின் பின்பு, ஹிட்லர் கூட்டணியும் ஜப்பானியப் படைவெறியினரும் முறியடிக்கப்பட்டதன் விளைவாகவும், சோஷலிஸ வளர்ச்சியில் சோவியத் மக்களின் பிரமாண்டமான வெற்றிகளின் பாதிப்பினுலும், முதலாளித்துவத்துக்கு இயல்பான முரண்பாடுகள் ஆழ்ந்த முறையில் கூர்மை அடைந்ததன் பயனுகவும், பாசிஸ எதிர்ப்பு இயக்கத்திலும் பிற்போக்குக்கு எதிரான போராட்டத்திலும் திரட்டப்பட்ட வெகுஜனங்களின் பேரளவான அரசியல் அனுபவத்தின் அடிப்படையில், விறல் மிக்க புரட்சி, விடுதலை இயக்கம் விரிவாகத் தொடங்கியது. முதலாளித்துவ நாடுகளிலும் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் இந்த இயக்கம் பரவியது. பாசிஸ எதிர்ப்புப் போராட்ட மரபுகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தவாறு, பிற புரட்சி, ஜனநாயக ஸ்தாபனங்களுட

னும் குழுக்களுடனும் கூட்டு சேர்ந்து அல்லது அவற்றின் ஒத்துழைப்புடன் கம்யூனிஸ்டுகள் இந்த இயக்கத்தை முன்னின்று நடத்தினர்கள்.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய கட்டம் தொடங்கியது. இந்த கட்டத்தின் முக்கியச் சிறப்புக்கள் ஆவன: உலகில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தீவிர வளர்ச்சி; அனேக நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பிற ஜனநாயகச் சக்திகளுடன் கூட்டு சேர்ந்து ஆட்சிக்கு வந்தது; மொத்தத்தில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மதிப்பு வெகுவாக உயர்ந்தது; தங்கள் நாடுகளின் அரசியல் வாழ்க்கையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்ததும் கம்யூனிஸ்டுகள் அனைத்து நாட்டினச் செயலரங்கில் பிரவேசித்ததும்; கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர் எண்ணிக்கை விரைவாக வளர்ந்ததும் பல கம்யூனிஸ்டுக் கட்சிகள் வெகுஜனக் கட்சிகளாக மாறியதும்; நாடாளுமன்றங்கள், நகராட்சி உறுப்புக்கள், அரசாங்கங்கள், நிர்வாக அலுவலகங்கள் ஆகியவற்றின் செயலில் பல கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஊக்கத்துடன் பங்காற்றியதும் இந்தக் காரணத்தால் பூர்ஷ்வா-ஜனநாயக அரசு இயந்திர அமைப்பு அனைத்தின் மீதும் தொழிலாளி வர்க்கத்தின் செல்வாக்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டதும்; கட்சிகளின் ஸ்தாபன, அரசியல் சுதந்திரம் விரிவடைந்ததும் தேசியக் கொள்கை, போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றை வகுப்பதில் அவற்றின் சித்தாந்தச் செயலூக்கமும் சுயாதீனமும் அதிகரித்ததும். உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் தற்காலத்தின் நிர்ணயகரமான சக்தியாக மாறும் நெடுங்கால முக்கியத்துவம் உள்ள நிகழ்முறை விரிவாகத் தொடங்கியது.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கையையும் போர்த்தந்திரத்தையும் உருவாக்குவதில் வி.இ. லெனினது தலைமையிலும் அவருடைய கருத்துக்களுக்கு இணங்கவும் கம்யூனிஸ்டு அகிலம் முந்திய ஆண்டுகளில் செய்த பிரமாண்டமான வேலையின் முக்கியத்துவம் புதிய கட்டத்தில் வெகுவாக வெளிப்பட்டது.

முதலாளித்துவ நாடுகளின் தொகுப்பிலிருந்து பிற பகுதிகள் பிரிந்ததும், அனேக ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் நிலப்பிரபுத்துவ-முதலாளித்துவ அமைப்பு தகர்ந்து சிதறியதும், மக்கள் ஜனநாயக அமைப்பு இந்த நாடுகளில் நிறுவப்பட்டதும் கம்யூனிஸ்டு இயக்கத்தைப் புதிய மட்டத்துக்கு உயர்த்திய மிக முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளாக விளங்கின. பாசிஸம் முறியடிக்கப்படும் வரை எண்ணிக்கையில் குறைந்த உறுப்பினர்களைக் கொண்டிருந்த

வையும் சட்டப் புறம்பான அல்லது ஓரளவு சட்டப் புறம்பான நிலைமைகளில் வேலை செய்து வந்தவையுமான கம்யூனிஸ்டுக் கட்சிகள் மக்கள் ஜனநாயக அரசுகளில் தங்கள் கூட்டாளிகளுடன் ஆட்சிக்கு வந்தன, ஆளும் கட்சிகள் ஆகி விட்டன.

பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரத்தின் வடிவங்களது பல் வகைப்பாடு பற்றிய லெனினது கருத்தோட்டத்தையும், ஒன்றித்த தொழிலாளர் கூட்டணி, ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணி, தொழிலாளர்விவசாயிகள் அரசாங்கம் ஆகியவை குறித்த லெனினது வரையறுப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டது மக்கள் ஜனநாயகம் என்ற கருத்து. ஸ்பானிய உள்நாட்டுப் போர் அனுபவம் கம்யூனிஸ்டு அகிலத்தின் கூட்டு முயற்சிகளால் படைப்புத் தன்மையுடன், மார்க்சிய-லெனினிய நோக்கில் பொதுமைப் படுத்தப்பட்டதன் விளைவாக இது பொது வடிவத்தில் உருவாயிற்று.

அடுத்து வந்த ஆண்டுகளில், சிறப்பாக, ஜெர்மானிய பாசிஸ்டுக் கைப்பற்றுளர்களுடனும் ஜப்பானிய சைனியவாதிகளுடனும் வட்டார பாசிஸ்டுச் சக்திகளுடனும் பல்வேறு நாடுகளில் யுத்தம் நடந்த ஆண்டுகளில் மக்கள் ஜனநாயகக் கருத்து மேற்கொண்டு திட்டமான வடிவமும் வளமும் பெற்றது. தேசிய-விடுதலை, பாசிஸ எதிர்ப்புப் போராட்டம், ஜனநாயகப் புரட்சி, சோஷலிஸப் புரட்சியாக அதன் வளர்ச்சி ஆகியவற்றின் அரசியல் கருத்தோட்டம் என்ற தன்மையை அது மேற்கொண்டது. மக்கள் ஜனநாயகம் பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரத்தின் புதிய அரசு வடிவம் ஆயிற்று.

மக்கள் ஜனநாயக சித்தாந்தம், நடைமுறை ஆகியவற்றின் மிக முக்கியமான உள்ளார்ந்த அம்சங்களாக விளங்கியவை இவை: பெரும்பாலான வெகுஜனங்களை ஜனநாயகத்தினதும் புரட்சியினதும் தரப்புக்குக் கொண்டுவருவது பற்றிய லெனினது கருத்தைச் செயல்படுத்துவது; தொழிலாளி வர்க்கத்தின் பிளவை அகற்றி அதன் செயல்களை ஒன்றுபடுத்தி, பின்னர் மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் உறுதியான அரசியல், ஸ்தாபன ஒற்றுமையை ஏற்படுத்துவது; விரிவான பாசிஸ எதிர்ப்பு, தேசபக்த, தேசியக் கூட்டணிகள், அரசியல் கூட்டணிகள் ஆகியவற்றின் வடிவிலோ, அல்லது, மக்கள் கூட்டணி பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசின் கருத்துக்களின் அடுத்துவந்த வளர்ச்சியாகவும் ஸ்தூல உருவமாகவும் இருந்த இவை போன்ற பிற ஸ்தாபன வடிவங்களிலோ தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், மற்ற

உழைப்பாளி, தேசபக்த வட்டாரங்கள் ஆகியவற்றின் நிலையான ஐக்கியத்தை உருவாக்குவது.

விறல் மிக்க தேசபக்த, புரட்சி ஏற்றத்தின் போது, மக்களின் பாசிஸ எதிர்ப்பு, விடுதலைப் போராட்ட நெருப்பில் பிறந்தது மக்கள் ஜனநாயகம். சித்தாந்த நோக்கிலோ நடைமுறை நோக்கிலோ இது முன்கூட்டித் தயாரிக்கப் பெற்றதோ, முற்றுனதோ, ஒரே மாதிரியானதோ அல்ல. குறித்த நாட்டின் ஸ்தூல வரலாற்று நிலைமைகளில் அது செப்பம் அடைந்தது. ஆனுல் சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கான வடிவங்களின் பல்வகைப் பாடு பற்றிய லெனினுடைய கருத்துக்களை அது சந்தேகமின்றி ஒத்திருக்கிறது.

மக்கள் ஜனநாயக நாடுகள் அடைந்த வெற்றிகரமான சோஷலிஸ வளர்ச்சியின் விளைவாக சோவியத் யூனியனின் நட்புறவுடன் சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவாயிற்று. சோஷலிஸப் புரட்சியின் வருங்கால வளர்ச்சிக்கு விறல்மிக்க பொருளியல் அடித்தளமாக விளங்குகிறது இந்த அமைப்பு.

சோஷலிஸ அமைப்பைச் சேர்ந்த நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிக நீண்ட வளர்ச்சிப் பாதையைக் கடந்து வந்துள்ளன. கொள்கைவாத நோக்கிலும் அரசியல் நோக்கிலும் ஸ்தாபன நோக்கிலும் அவை வலுவடைந்துள்ளன. இந்தக் கட்சிகள் உறுப்பினர் எண்ணிக்கையில் வளர்ந்து, புது வாழ்வு சமைக்கும் நிலைமைகளில் வெகுஜனங்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்வதில் மிகப் பெருத்த அனுபவம் பெற்றுள்ளன. மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைப் படைப்புத்தன்மையுடன் கையாள்வதற்கும், தங்கள் நாடுகளின் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளில் சமூகத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பதற்குரிய சிக்கலான, பல்வகைப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் தாங்கள் பெரிதும் ஆயத்தமாய் இருப்பதை அவை காட்டி இருக்கின்றன. நிகழ்ச்சிகளின் வரலாற்று வளர்ச்சி காரணமாக சோஷலிஸ நாடுகளின் சமூக-அரசியல் வாழ்க்கை அனைத்திற்கும் தலைமை வகிக்கலாயின. அவை வழிகாட்டி நடத்திச் செல்லும் தேசியச் சக்தியின் தன்மையைப் பெற்று உலக அரங்கில் செல்வாக்கு மிக்கவை ஆகிவிட்டன.

சோஷலிஸப் பாதையில் முன்னேறி வரும் நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் முன்னணிப் படை என்ற தங்கள் பாத்திரத்தைப் புரிந்து

கொண்டு உலக ஏகாதிபத்திய எதிர்ப்புக் கூட்டணியின் விறலை அதிகரிக்க முயன்று வருகின்றன.

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவானதும் அதன் வெற்றிகளும், வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் முரண்பாடுகள் கூர்மை அடைந்தது, தொழிலாளர் இயக்கம் தீவிரமாகச் செயல்பட்டது ஆகியவை, முதலாளித்துவக் கோட்டைகளில் கம்யூனிஸ்டு இயக்கம் கணிசமாக வலுவடைவதற்கும் விரிவாகப் பரவுவதற்கும் உதவின.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் நிலவிச் செயல்பட்டு வருகின்றன. தேசிய நலன்களைக் காப்பதில், பாசிஸத்துக்கு எதிரான போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் தீவிரமாகப் பங்கு கொண்டு செயலாற்றியதன் விளைவாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மதிப்பும் செல்வாக்கும் கணிசமாக உயர்ந்தன. முதன்மையாக அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தது இதைக் காட்டியது. 1939ம் ஆண்டு முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளது உறுப்பினர் தொகை ஏறக்குறையப் பன்னிரண்டு லட்சமாக இருந்தது. இப்போது முதலாளித்துவ உலகில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை சுமார் நாற்பது லட்சம் ஆகும்.

மாறி வரும் வரலாற்றுச் சூழ்நிலையையும் போராட்டத்தின் ஸ்தூல நிலைமைகளையும் பகுத்தாராய்வதற்கு மார்க்சிய-லெனினியத்தைப் படைப்புத்தன்மையுடன் கையாள்வதன் அடிப்படையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் புதிய செயல்திட்டத் தீர்மானங்கள் தயாரித்திருப்பது, முதலாளித்துவ உலகைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஸ்தாபனரீதியாகவும் கொள்கைவாத நோக்கிலும் வலுவடைந்திருப்பதையும் அவற்றின் புரட்சி முதிர்ச்சி வளர்ந்திருப்பதையும் காட்டும் முக்கியமான சான்று ஆகும். கட்சிகளின் அணிகள் வலுவாக ஒன்றிணைக்கப்பட்டன, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிலையான தலைமை உருவாயிற்று, வெகுஜனங்களுடன் கட்சி ஸ்தாபனங்களின் உறவுகள் கணிசமாக உறுதி அடைந்தன.

அனேக முதலாளித்துவ நாடுகளில் தேர்தல்களில் பெற்றுள்ள வாக்குகளின் எண்ணிக்கைப்படி கம்யூனிஸ்டுகள் தலைமை இடம் பெற்றுள்ளன. போருக்குப் பிந்திய முதல் ஆண்டுகளில் கம்யூனிஸ்டுகள் பன்னிரண்டு நாடுகளில் அரசாங்க உறுப்பினர் ஆனார்கள், பல வட்டார சுயாட்சி உறுப்புக்களில் முக்கியமான நிலைகளைப் பெற்றார்கள். தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் தொழிற் சங்கங்களில் கம்யூனிஸ்டுகளின் நிலைமை கணிசமாக உறுதிப்பட்

டது. விறல்மிக்க தொழிற்சங்க சம்மேளனங்களும் தொழிற்சங்க மையங்களும் தோன்றின. இவற்றின் உறுப்பினர்கள் சமாதானத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளுடன் ஒருமைப்பாடு கொண்டிருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் தங்கள் வலுவடைந்த அரசியல் நிலைகளையும், அரசாங்கத்திலும் நகராட்சி மன்றங்களிலும் தாங்கள் பெற்ற இடங்களையும், தொழிற்சங்கங்களிலும் பிற வெகுஜன ஸ்தாபனங்களிலும் அடைந்த செல்வாக்கையும் உழைப்பாளிகளுடைய நலன்களைக் காப்பதற்கும் ஜனநாயகத்தை விரிவும் ஆழமும் ஆக்குவதற்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்கு எதிரான போராட்டத்தை ஒழுங்கமைப் பதற்கும் பயன்படுத்தினார்கள்.

இந்த ஆண்டுகளில்தான் பெருத்த சமுதாய நலங்களைப் போராடிப் பெறவும் அவற்றை அனேக சந்தர்ப்பங்களில் அரசியல் சட்டங்களிலும் நடைமுறைச் சட்டங்களிலும் நிலைப்படுத்தவும் கூட உழைப்பாளிகளுக்கு இயன்றது.

ஆனால், விரைவிலேயே சர்வதேச மூலதனம் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகவாதிகளது தலைமையில் ஒன்று சேர்ந்து முயன்று கம்யூனிஸ்டுக் கட்சிகள்மீது விரிவான தாக்குதல் தொடங்கியது. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகள் பல நாடுகளில் ஒன்று தடை செய்யப்பட்டன, இல்லாவிட்டால் குறுக்கப்பட்டன. கம்யூனிஸ்டுகள் அரசாங்கங்களிலிருந்து நீக்கப்பட்டார்கள். பிற்போக்காளர்கள் எல்லாச் சட்டங்களையும் வாக்குறுதிகளையும் மீறி, கம்யூனிஸ்டுகளுடையவும் ஜனநாயகவாதிகளுடையவும் அரசியல் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பறித்துவிட முயன்றார்கள். கம்யூனிஸ்டுகள் அனேக ஆண்டுகள் வரை ''பனிப் போர்'' நிலைமைகளிலும் கம்யூனிஸ எதிர்ப்பு வெறியின் கடினமான நிலைமைகளிலும் போராட்டம் நடத்த வேண்டியதாயிற்று.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் சமாதானத்தையும் தேசிய சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் காத்து ஒத்திசைந்த போராட்டம் நடத்தின, சோஷலிஸத்தின் பொருட்டுப் போராடின. வெகுஜனங்களைத் தங்கள் பக்கம் ஈர்ப்பது, தொழிலாளி வர்க்க ஒற்றுமையின் அடிப்படையில் எல்லாப் புரட்சிச் சக்திகளையும் ஜனநாயகச் சக்திகளையும் ஒன்று திரட்டுவது

52*

என்ற லெனினது கருத்தை அவை தங்கள் கொள்கைக்கு ஆதார மாகக் கொண்டன.

இந்தப் பாதையில் அனேகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிக முக்கியமான, நாடு அனைத்திற்கும் உரிய அரசியல் சக்தியாக மாறி விட்டன. பிற நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜன அரசியல் ஸ்தாபனங்களாக மாற்றுவதற் காகவும் உழைப்பாளிகளின் விரிவான வட்டாரங்களிடையே அவற்றின் நிலைகளை வலுப்படுத்துவதற்காகவும் போராட்டம் தீவிரமாக நடந்தது. எங்கும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் புரட்சி இயக்கத்தின் உற்சாகமுள்ள முன்னணிப் படைப்பிரிவாகவும், வருங்காலத்தைத் தனக்கு உரியதாகக் கொண்ட, மேல் நோக்கிச் செல்லும் அரசியல் சக்தியாகவும் விளங்கின.

வளர்ச்சி அடைந்துவந்த நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சிக்கலான அரசியல், கொள்கைவாத நிலைமைகளில் செயலாற்றி வந்தன. சோஷலிஸ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளை மையமாகக் கொண்ட உலகக் கம்யூனிஸ்டு இயக்கம், தேசிய சுதந்திரத்தின் பொருட்டுக் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றிகரமான போராட்டத்துக்குச் சாதகமான நிலை மைகளை ஏற்படுத்துவதில் நிர்ணயகரமான செல்வாக்கு செலுத் தியது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசிய-விடுதலைப் போராட்டம் ஆகியவற்றின் கூட் டணி குறித்து வி.இ. லெனினால் முன்வைக்கப்பட்டுக் கம்யூனிஸ்டு அகிலத்தால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கை, அடுத்துவந்த கட் டங்களில் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் உள்ள வெற்றி அளித்தது. சோஷலிஸ நாடுகளின் அமைப்பு விரைவாக வலு வடைந்தது, தொழிலாளர் இயக்கம் பெருத்த ஏற்றம் பெற்றது ஆகிய சூழ்நிலைகளில் கிளர்ந்து எழுந்த மக்கள் இனங்களின் தாக்கு தல்களால், நூற்றாண்டுகளாக நிலவிவந்த காலனிப் பேரரசுகள் தகர்ந்து நொறுங்கின. கம்யூனிஸ்டுக் கட்சிகள் மக்கள் இனங்களின் ஏகாதிபத்திய விரோத, தேசிய-விடுதலைப் போராட்டத்தின் முன் வரிசைகளில் இருந்தன. இந்தப் போராட்டத்தின் போது கம்யூனிஸ்டு இயக்கத்தின் நிலைகள் கணிசமாக வலுவடைந்தன, இருபதுக்கு மேல் புதிய கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றின.

தேசிய-விடுதலைப் போராட்டத்தின் தீவிர வளர்ச்சி காரண மாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரதேசத்தில் இருந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு முன் பற்பல புதிய பிரச்சினைகளும் கேள்விகளும்

எழுந்தன. இவற்றுக்கு சுதந்திரமாக, மார்க்சிய-லெனினிய நோக்கில் தீர்வு காண வேண்டி இருந்தது. காலனி அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு விட்ட நாடுகளின் முற்போக்குள்ள வளர்ச்சிக்கான வழிகளை விஞ்ஞான ஆதாரத்துடன் நிலைநாட்டுவதும், புரட்சிகர-ஜனநாயகச் சக்திகளுடனும் கட்சிகளுடனும் ஜனநாயக அரசாங்கங்களுடனும் தங்கள் உறவுகளைத் தீர்மானிப்பதும், வளர்ச்சி அடைந்துவந்த சமூகத்தின் புதிதாக உருவாகிக் கொண்டிருந்த சமுதாய, பொருளாதார, அரசியல் கட்டமைப்பில் தனது இடத்தையும் தனது பங்கையும் ஆதாரத்துடன் நிலைநாட்டுவதும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பணிகள் ஆயின. சில கட்சிகள் இந்தத் துறையில் பிரிவுவாதத் தவறுகளுக்கு இடம் கொடுத்தன. ஆயினும், பெரும்பாலான கம்யூனிஸ்டுக் கட்சிகளும் மொத்தத்தில் உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் முழுவதும் கோட்பாட்டு நோக்கில் சரியான நிலைகளை மேற்கொண்டன. வளர்ச்சி அடைந்தவையும் புதிய வரலாற்று நிலைமைகளில் கையாளத் தக்கவையுமான லெனினுடைய கருத்துக்களுக்கு இந்த நிலைகள் பொருந்தி இருந்தன. கம்யூனிஸ்டுக் கட்சிகள் எல்லா தேசபக்த, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றிணைக்கும் கொள்கையை ஒத்திசைந்த முறையில் கடைப்பிடித்து வந்தன. அனேக நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசியக் கூட்டணிகளும் தேசபக்தக் கழகங்களும் ஐக்கியங்களும் வெவ்வேறு வடிவில் தோன்றின. கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒன்று இவற்றில் சேர்ந்தன, இல்லாவிட்டால் அவற்றுக்கு ஊக்கமுள்ள ஆதரவு அளித்தன. இவ்வாறு, உண்மையான தேசிய விடுதலைக்கும் பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்குமான போராட்டம் மேலும் வளர்ச்சி அடையவும் ஆழமாகவும் அவை உதவின.

வளர்ச்சி அடைந்து வந்த நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்ததைக் கண்டு ஏகாதிபத்தியவாதிகளும் உள்நாட்டுப் பிற்போக்காளர்களும் ஆழ்ந்த கலவரம் அடைந்தார்கள். அனேக நாடுகளில், உதாரணமாக இந்தோனீசியாவில் கம்யூனிஸ்டுகள் மீது மிகக் கொடிய அடக்குமுறைகள் கையாளப்பட்டன. மக்களின் லட்சக் கணக்கான சிறந்த புதல்வர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆனால், இந்தத் தனித் தனித் தோல்விகள் எவ்வளவுதான் துன்பகரமானவை என்றாலும், பொதுவாகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உறுப்பினர் எண்ணிக்கையிலும் வலிமையிலும் மேலும் மேலும் வளர்ந்துவந்ததை இவற்றால் மாற்ற முடியாது.

கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்டபின் கம்யூனிஸ்டு இயக்கம்

புரட்சி மரபுகளுக்கும் மார்க்சிய-லெனினிய போதனைக்கும் சர்வதேசியக் கோட்பாடுகளுக்கும் விசுவாசம் கடைப்பிடித்தவாறு, மேலும் வலிமை பெற்று விரிவடைந்தது. கம்யூனிஸ்டுக் கப்பல் பல முறை புயலில் சிக்கிக் கொண்டது. பூர்ஷ்வாக்களும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளும் கம்யூனிஸத்தின் நெருக்கடி பற்றிப் பல தடவைகள் கூச்சலிட்டார்கள். ஆனால் ஒவ்வொரு சோதனையிலும் தேறிக் கம்யூனிஸ்டு இயக்கம் முன்னிலும் அதிக வலிமையும் உரமும் பெற்றது. கம்யூனிஸ்டுகளின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள வெற்றிகள் பல்கின, பல்கி வருகின்றன, அவற்றின் அணிகள் பெருகி வருகின்றன. 1971ல் கம்யூனிஸ்டுக் கட்சிகள் எண்பத்தொன்பது நாடுகளில் நிலவுகின்றன. கம்யூனிஸ்டுகளின் மொத்த எண்ணிக்கை சுமார் ஐந்து கோடி ஆகும். கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிலாளி வர்க்கத்தினுடையவும் மக்களின் எல்லா முற்போக்கு வட்டாரங்களுடையவும் நலன்களை நாளுக்கு நாள் அதிக ஆழ்ந்த முறையிலும் அதிக முழுமையாகவும் வெளியிடுகின்றன. எல்லா ஜனநாயக, தேசபக்த, ஏகாதிபத்திய விரோதச் சக்திகளுடனும் தங்கள் தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டு, வரலாற்று வளர்ச்சியின் தர்க்கத்தினாலேயே மக்கள் அனைவருக்கும் தலைமை ஏற்கும் தகுதியைப் பெற்றுள்ளன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் இருபதாவது காங்கிரசின் முடிவுகள் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சி மீது மிகப் பெரிய பாதிப்பு நிகழ்த்தின. ''சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியினது இருபதாவது காங்கிரசின் வரலாற்றுச் சிறப்புள்ள முடிவுகள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோவியத் யூனியனில் கம்யூனிஸக் கட்டுமானத்துக்கும் பெருத்த முக்கியத்துவம் உள்ளவை என்பதோடு கூடவே, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் புதிய கட்டத்தைத் தோற்றுவித்து மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் அதன் அடுத்துவரும் வளர்ச்சிக்கும் உதவின.''[1]

மிக முக்கியமான உள்நாட்டு, சர்வதேசக் கொள்கை பற்றி இருபதாவது காங்கிரஸ் செய்த முடிவுகள், தனிநபர் வழிபாடும் அதன் விளைவுகளும் நீக்கப்பட்டது, கட்சி வாழ்க்கையையும் கூட்

---

[1] சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றுக்கான போராட்டத்தின் செயல்திட்ட தஸ்தாவேஜுகள். மாஸ்கோ, 1961, பக்கங்கள் 84-85.

டுத் தலைமை முறைகளையும் பற்றிய லெனினது அளவுமானங்கள் மீண்டும் நிலைநாட்டப்பட்டது, உட்கட்சி, சோவியத் ஜனநாயகம் மேற்கொண்டு ஆழமாக்கவும் செப்பம் செய்யவும் பட்டது— இவை எல்லாம் சோஷலிஸக் கருத்துக்களின் மாற்றி அமைக்கும் சக்தியையும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மதிப்பையும் உயர்த்தின. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கான வடிவங்களின் பல்வகைப்பாடு பற்றியும், புரட்சியின் அமைதியுள்ள வழியையும் அமைதியற்ற வழியையும் ஒருங்கிசைப்பது பற்றியும், வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கொள்கை தற்கால நிலைமைகளில் கொண்டுள்ள சாராம்சம் பற்றியும் லெனினுடைய வரையறுப்புக்களைக் காங்கிரஸ் விரிவுபடுத்தியது. முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்துவது குறித்த பிரச்சினைகளையும், அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் நிலைமைகளில் வர்க்கப் போராட்டத்தின் சிறப்புத் தன்மைகளையும், ஏகபோக எதிர்ப்புச் சக்திகளை ஒன்றுபடுத்துவதற்கான வருங்கால வாய்ப்புக்களையும், நூற்றாண்டின் மிக முக்கிய சமுதாயப் பிரச்சினைகளின் தீர்வில் ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் மகத்துவத்தையும், தேசிய-விடுதலைப் புரட்சியின் பாதைகளையும் காங்கிரஸ் விவரித்து விளக்கியது.

தேசியப் புரட்சி இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்துவதிலும் புரட்சிப் போராட்டத்தின் அரசியல், போர்த்தந்திர, செயல்தந்திரக் கருத்தோட்டங்களை விவரித்து விளக்குவதிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல் தீவிரம் இருபதாவது காங்கிரசுக்குப் பின் இன்னும் அதிகரித்தது. மார்க்சிய-லெனினிய சித்தாந்தம், நடைமுறை ஆகியவற்றின் உலகக் கருவூலத்தில் அவற்றின் நிதியளிப்பு மிகுதி ஆயிற்று.

கம்யூனிஸ்டு அகிலத்தின் புரட்சி மரபும் தற்காலக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கும்

சர்வதேசத் தொடர்புகளின் புதிய வடிவங்கள் தோன்றுதல்

கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்ட பிறகு கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடையே சர்வதேச உறவுகள், சர்வதேச மூலதனத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டத்தின் ஒருங்கிசைவுக்கான வடிவங்கள் ஆகியவை குறித்த பிரச்சினை புதிய அம்சங்கள் பெற்று முன்னிலும் அதிக உடனடியானதும் ஜீவாதார முக்கியத்துவம் உள்ளதும் ஆகி விட்டது.

கம்யூனிஸ்டு இயக்கத்தில் வெளிப்பார்வைக்கு எதிரெதிரான, ஆனால் உண்மையில் உள்ளூற ஒன்றோடொன்று இணைந்த இரண்டு போக்குக்கள் செயல்படுகின்றன.

ஒரு புறம், புரட்சி இயக்கம் **சர்வதேசியமாவது** தீவிரம் அடைகிறது. எந்த ஒரு புரட்சி நடவடிக்கையும், அது எந்த நாட்டில் நிகழ்ந்தாலும் சரியே, ஒன்றித்த உலகப் புரட்சி நிகழ்முறையின் உட்பகுதியாக அமைகிறது, இந்த நிகழ்முறையின் பொது நிலைமையைச் சார்ந்திருக்கிறது. எந்த ஒரு தேசியப் புரட்சிப் படைப்பிரிவின் வெற்றியும் எல்லா மக்கள் இனங்களதும் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியாக விளங்குகிறது. மாறாக, உலகின் எந்த ஒரு பகுதியிலும் ஏற்படும் தோல்வி போராட்டத்தின் பொது முனைமுகத்தைப் பாதிக்கிறது. போராட்டத்தின் உள்நாட்டுச் சூழ்நிலைமைகளை மட்டும் இன்றி சர்வதேசச் சூழ்நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்வது இன்றியமையாதது என்பதைத் தேசியப் புரட்சிப் படைப்பிரிவுகள் மேலும் மேலும் அடிக்கடி உணர்ந்து வருகின்றன.

மறு புறம், புரட்சி இயக்கத்தின் புற, அக **நிலைமைகளினது** பெரிய **வகைப் பாகுபாடு** நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டு மக்களுடையவும் புரட்சிகர மாற்றி அமைப்புச் செயல்களின் தேசியச் சிறப்பியல்புகள், ஸ்தூலமான தனித்தன்மைகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

தற்போது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சித்தாந்த, நடைமுறைச் செயல்களின் ஒருங்கிசைவு, அதிகச் சிக்கலாகிவிட்ட சூழ்நிலையில் தொழிலாளி வர்க்கம் தனது உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள பங்கை சாராம்சத்தில் நிறைவேற்றுவது ஆகும். கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்ட பின், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகளின் சர்வதேசத் தொடர்புகளுக்கும் செயல்களின் ஒருங்கிசைவுக்கும் மேலும் மேலும் அதிகப் பயன்பாடுள்ள வடிவங்களின் தேட்டங்கள் கம்யூனிஸ்டு இயக்கத்தில் நடந்தன, நடந்து கொண்டிருக்கின்றன.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்ததும் தகவல் தலைமையகம் (பியூரோ) அமைக்கப்பட்டது. யூகோஸ்லாவிய, பல்கேரிய, ருமேனிய, ஹங்கேரியக் கம்யூனிஸ்டுக் கட்சிகள், போலந்துத் தொழிலாளர் கட்சி, சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி, செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்டுக் கட்சி, இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் தலைமையகத்தில் உறுப்பினராய் இருந்தார்கள். இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய மகாநாடு 1947ம் ஆண்டு வார்சாவில் நடந்தது. மகாநாட்டின் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது:

''மகாநாட்டில் பங்கு கொள்ளும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கிடையே தொடர்புகள் இல்லாதது தற்போதையச் சூழ்நிலையில் ஆழ்ந்த குறைபாடு என்று மகாநாடு திண்ணமாகக் கருதுகிறது. கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடையே இத்தகைய தொடர்பின்மை சரியல்ல, தீங்கானது என்பதை அனுபவம் காட்டி இருக்கிறது. போருக்குப் பின் சர்வதேசச் சூழ்நிலை மேலும் சிக்கலாகியுள்ள நிலைமைகளில், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பரஸ்பரத் தொடர்பின்மை தொழிலாளி வர்க்கத்துக்குக் கேடு விளைக்கக் கூடும். எனவே அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதும் தனித்தனிக் கட்சிகளின் செயல்களைச் சுய விருப்பத்துடன் ஒருங்கிசைப்பதும் சிறப்பாகத் தற்போது பெரிதும் தேவைப்படுகின்றன''.[1]

கம்யூனிஸ்டு இயக்கத்தின் அடுத்துவந்த வளர்ச்சியும் போராட்ட நிலைமைகளின் வகைப் பாகுபாடும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அரசியல், சித்தாந்த முதிர்ச்சியின் அதிகரிப்பும் தகவல்

---

[1] சில கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகளது தகவல் மகாநாடு. மாஸ்கோ, 1948, பக்கம் 11.

தலைமையகம் போன்ற தொடர்பின் வடிவத்தினது வரையறுத்த தன்மையைக் காட்டின. எனவே அது கலைக்கப்பட்டது.

இரு தரப்பு, பல் தரப்புத் தொடர்புகள், பிரதிநிதிக் குழுக் களின் பரிமாற்றம், பரஸ்பர அனுபவ ஆராய்ச்சி, கருத்துப் பரி மாற்றம் முதலிய தொடர்பு வடிவங்கள் பெருத்த முக்கியத்துவம் பெற்றன. அண்மைக் காலத்தில் பிரதேசக் கூட்டங்களும் மகா நாடுகளும் மேலும் மேலும் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. அர சியல் நடவடிக்கைகளையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத் தையும் பற்றிய, பெருந்தொகையான கட்சிகளுக்குப் பொதுவான பிரச்சினைகள் இவற்றில் விவாதிக்கப்படுகின்றன.

இந்த வடிவங்கள் எவ்வளவுதான் முக்கியமானவை, மதிப்புள் ளவை என்ருலும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் சர்வதேசத் தன் மையை இவை முழுமையாக வெளியிடவில்லை.

தற்போது உருவாகியுள்ள நிலைமைகளில் கம்யூனிஸ்டுக் கட்சி களின் சர்வதேசத் தொடர்புகளுக்கு அதிகப் பொருத்தமான புதிய வடிவங்களைக் கண்டுபிடிப்பது இன்றியமையாதது ஆயிற்று. கம்யூ னிஸ்டுப் படைப்பிரிவுகளது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கை யின் ஒற்றுமையை எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளதும் சுதந்திரத் துடனும் சமத்துவத்துடனும், மார்க்சிய-லெனினியத்தின் அடிப் படையில் போராட்டத்தின் அரசியல், சித்தாந்தக் கருத்துக்களை ஆதாரபூர்வமாக நிலைநாட்ட அவற்றுக்கு உள்ள சுதந்திரத்தை சர்வதேசப் புரட்சி சித்தாந்தத்தினதும் நடைமுறையினதும் அடிப் படைகளைக் கூட்டாகத் தயாரிப்பதுடனும் ஒருங்கிசைக்க இந்த வடிவங்கள் வல்லவையாக இருப்பது. அவசியமாய் இருந்தது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் உள்ளிருந்து தோன்றிய இத்தகைய வடிவமாக விளங்கின கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடுகள். சர்வதேச நிலைமையில் நவீன நிகழ்ச்சி களையும் மெய் விவரங்களையும் எல்லாக் கோணங்களிலுமிருந்து ஆராய்வதும், அவற்றுக்குச் சர்வசம்மதமான மார்க்சிய-லெனி னிய மதிப்பீடு தருவதும், பொதுக் குறிக்கோள்களையும் பணி களையும், போராட்டத்தினதும் பரஸ்பர உதவியினதும் வடிவங் களையும் முறைகளையும் நிர்ணயிப்பதும் இந்த மகாநாடுகளின் பொறுப்புக்கள் என்பதை அனுபவம் காட்டியது.

கம்யூனிஸ்டு அகிலம் கலைக்கப்பட்ட பிறகு கம்யூனிஸ்டுக் கட்சி களின் மூன்று சர்வதேச மகாநாடுகள் (1957ம் 1960ம் 1969 ஆண்டுகளிலும்) நடந்தன. மாஸ்கோவில் நடந்தேறிய இந்த

மகாநாடுகளில் முக்கியமான தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சிக்குக் கோட்பாட்டு ரீதியில் முக்கியத்துவம் உள்ளவை இவை. 1957ம் ஆண்டு நடந்த மகாநாட்டில், ''சோஷலிஸ்டு நாடுகளின் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளது மகாநாட்டின் பிரகடனம்'' தயாரிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. பின்னர் முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் இந்தப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டன. மகாநாட்டுப் பிரதிநிதிகள் எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நல்லெண்ணம் உள்ள எல்லா மனிதர்களுக்கும் ''சமாதானக் கொள்கை அறிக்கை'' விடுத்தார்கள். 1960ம் ஆண்டு நடந்த சர்வதேச மகாநாட்டில் 81 மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். ''கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய மகாநாட்டின் அறிக்கை'', ''உலகு அனைத்தின் மக்களுக்கும் வேண்டுகோள்'' என்ற இரு தஸ்தாவேஜுகள் மகாநாட்டுப் பிரதிநிதிகளால் கூட்டாகத் தயாரிக்கப் பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1957ம், 1960ம் ஆண்டுகளின் தஸ்தாவேஜுகளில் தற்கால வரலாற்று நிலைமைகளில் **உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கு** கூட்டாகத் தயாரிக்கப்பெற்று ஒருமனதாக ஏற்கப்பட்டது.

சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கு என்னும் கருதுகோள் கம்யூனிஸ்டு அகிலத்தின் காலப் பகுதியில் உருவாயிற்று. முதலாவது உலக யுத்தக் காலம் முதல்—அப்போது இந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்பட வில்லை என்றாலும்—வி.இ. லெனின் எழுதிய சித்தாந்த நூல்களில் இந்தக் கருதுகோள் எதார்த்தத்தில் ஆதாரபூர்வமாக நிலைநாட்டப்பட்டிருந்தது. ''...சர்வதேச அளவில் **ஒன்றித்த** செயலை நிறைவேற்றுவதற்கு அடிப்படையான கொள்கைவாதக் கண்ணோட்டங்களின் தெளிவு தேவைப்படுவது போலவே செயலின் ஒரு அல்லது மற்றொரு வகையான நடைமுறை உத்திகள் துல்லியமாக வரையறுக்கப்படுவதும் தேவைப்படுகிறது''[1] என்று வி.இ. லெனின் 1915ம் ஆண்டு எழுதினர்.

சர்வதேசப் போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைகள் உலகப் பொருளாதாரத்தையும் உலக அரசியலை

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 372.

யும் பற்றிய சர்வாம்ச ரீதியான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு தனிக் கட்சியினதும் செயல்தந்திரம், குறித்த நாட்டில் மட்டும் இன்றி சர்வதேச அளவில் நிலவும் வர்க்கச் சக்திகளின் ஒப்பு வலிமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு வகுக்கப்பட வேண்டும் என்றும் கம்யூனிஸ்டு அகிலத்தின் மரபுகள் காட்டுகின்றன. சர்வதேசப் பாங்கில் பின்னிப் பிணைந்துள்ள மூலதனத்துக்கு எதிராக அரசியல், பொருளாதார, கொள்கைவாதப் போராட்டத் துறைகள் அனைத்திலும் ஒருமைப்பாடும் உண்மையான சர்வதேசச் செயல் ஒற்றுமையும் நிறுவப்பட்டால் மட்டுமே வெற்றி பெறுவது சாத்தியம் என்பதைத் தொழிலாளி வர்க்கம் நாளுக்கு நாள் அதிகத் தெளிவாகப் புரிந்து கொண்டு வருகிறது.

புரட்சி சித்தாந்தம் ''உலகின் எல்லா நாடுகளுடையவும் புரட்சி அனுபவம், புரட்சிச் சிந்தனை ஆகியவற்றின் தொகுப்பிலிருந்து வளர்கிறது''[1] என்பதனுலும் போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைகள் கூட்டாகத் தயாரிக்கப்படுவது இன்றியமையாதது ஆகிறது. கம்யூனிஸ்டு அகிலம் ''...தனது செயல்தந்திரத்தை சர்வதேச நோக்கில் வகுக்க வேண்டும்...''[2] என்றார் லெனின். மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களது புறநிலை ஒருமை காரணமாகவும், விடுதலைப் போராட்டத்தின் உலக அனுபவம் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வதுதான் குறுகிய தேசிய மனப்பான்மைக்கும் ஒருதலைச்சார்புக்கும் அபாயகரமாகச் சரிந்து செல்லாமல் தடுக்கும் உத்தரவாதம் என்ற காரணத்தாலும் இவ்வாறு செய்வது இன்றியமையாதது ஆகிறது.

சர்வதேச மகாநாடுகள் சர்வதேசப் போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் தற்போதையக் காலப்பகுதிக்கு ஏற்றவாறு கூட்டாக வகுத்தன. 1957ம் 1960ம் 1969ம் ஆண்டுகளில் ஏற்கப்பட்ட தஸ்தாவேஜுகளின் சிறப்பியல்பு புரட்சி இயக்கத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்வதில் படைப்புத்தன்மையும் லெனினது அணுகு முறையும் ஆகும்.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் புதிய பொதுக் கொள்கைப் போக்கை வகுக்கையில் இயக்கத்திஞல் திரட்டப்பட்ட வரலாற்று

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 21, பக்கம் 354.
[2] அதே நூல், தொகுதி 31, பக்கம் 60.

அனுபவமும் ஒவ்வொரு சோதரக் கட்சியின் அனுபவமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. மகாநாட்டில் ஏற்கப்பட்ட தஸ்தாவேஜுகள் நவீனப் புரட்சி நடைமுறையின் மார்க்சிய-லெனினிய சித்தாந்தப் பொதுமைப்பாடாகவும், எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்களது அனுபவத் திரட்டாகவும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பது பற்றிய சித்தாந்தத்தினது வளர்ச்சியில் முன் அடிவைப்பாகவும் விளங்குகின்றன. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுவான செல்திசையை அவை திட்டப்படுத்தின.

சோஷலிஸக் கட்டுமானத்தின் விதிமுறைகள், உலகப் புரட்சி நிகழ்முறையின் சிறப்பான அம்சங்கள், வெகுஜனங்களுக்கான போராட்டம், உழைப்பாளிகளின் விரிவான வட்டாரங்களுடன் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டணியை அமைப்பதற்கான வாய்ப்புக்கள், சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றுக்கான போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும் ஆகியவை பற்றிய கருத்துக்கள் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தஸ்தாவேஜுகளில் விரிவுபடுத்தப்பட்டிருந்தன. வர்க்கப் போராட்டத்தின் புதிய கட்டத்தில், இரு உலக அமைப்புக்கள் நிலவுவது, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சுதந்திரச் செயல்பாடு ஆகிய நிலைமைகளில் புரட்சிப் போராட்டத்தின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தியதன் அடிப்படையில் இந்தக் கருத்துக்கள் மேற்கொண்டு வளர்ச்சி பெற்றன.

மகாநாடுகளின் தஸ்தாவேஜுகள் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் கூட்டுப் படைப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. புரட்சிப் போராட்டத்தின் கொள்கை, போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவை குறித்த அடிப்படைப் பிரச்சினைகள் கூட்டாக ஆராயப்படுவது வி. இ. லெனினது காலத்திலேயே கம்யூனிஸ்டு அகிலத்தின் வரம்புகளுக்குள் தொடங்கி இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தால் ஆராயப்பட்ட எல்லாப் பிரச்சினைகளும் எல்லாக் கோணங்களிலிருந்தும் விவாதிக்கப்படவேண்டும் என்றும் விஞ்ஞான ஆதாரமுள்ள எல்லாக் கருத்துரைகளும் கம்யூனிஸ்டுக் கட்சிகளினது அனுபவத்தின் எல்லாத் துணுக்குக்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வி.இ. லெனின் விடாப்பிடியாக வற்புறுத்தி வந்தார். 1957ம் 1960ம் 1969ம் ஆண்டுகளில் நடந்த மகாநாடுகளில் லெனினது இந்த மரபு கம்யூனிஸ்டு இயக்கத்தின் தற்கால நிலைமைகளுக்கு ஏற்ப மீண்டும் உறுதிப்படுத்தப் பெற்றது.

கடினமான சூழ்நிலையில் பிரிவுபாடுகளும கருத்து வேற்றுமை களும் தோன்றியது உள்படப் பெருத்த இடையூறுகளைக் கடந்து, கம்யூனிஸ்டுக் கட்சிகள் புரட்சி சித்தாந்தத்தை வளப்படுத்தும் கூட்டு வடிவங்களை வரிவுபடுத்தி வருகின்றன.

**தற்போதையக்
காலப்பகுதியினதும் புரட்சி
நிகழ்முறையினதும்
தன்மை விளக்கம்**

கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் தஸ்தாவேஜுகளில் தற்போதையக் காலப் பகுதியின் சர்வாம்சரீதியான தன்மை விளக்கமும் தரப்பட்டிருந்தது. போருக்குப் பிந்திய ஆண்டுகளில் உருவான புரட்சிப் போராட்டத்தின் வரலாற்று நிலைமைகள் ஆராயப் பட்டிருந்தன.

''நமது காலப்பகுதியின் அடிப்படையான உள்ளடக்கம், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பது ஆகும். இந்தப் பரிணமிப்பு ருஷ்யாவில் நடந்த மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியால் தொடங்கி வைக்கப்பட்டது''[1] என்று பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்து அறிக்கையில் மேலும் விரிவாக்கித் திண்ணமான வடிவில் தரப்பட்டிருக்கிறது. அறிக்கை கூறுவதாவது:

''சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் சமூகத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பதற்காகவும் போராடும் சக்திகளும் தற்போதையக் காலகட்டத்தில் மனித சமுதாயத்தினது வரலாற்று வளர்ச்சியின் முக்கிய உள்ளடக்கத்தையும் முக்கியச் செல்திசையையும் முக்கியச் சிறப்புக்களையும் நிர்ணயிக்கின்றன.''[2]

கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஏகாதிபத்தியம் பற்றிய லெனினுடைய கருத்துக்களை விரிவுபடுத்தி, அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் தற்கால நிலைமையை விஞ்ஞான பூர்வமாகப் பகுத்தாராய்ந்து, தற்கால முதலாளித்துவத்தின் கூர்மைப்பாட்டைக் காட்டின. இந்தக் கூர்மைப்பாடு பிரதான ஏகாதிபத்திய நாடான அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிக அதிக வன்மையுடன் வெளிப்பட்டிருந்தது.

---

[1] செயல்திட்ட தஸ்தாவேஜுகள், பக்கம் 4.

[2] அதே நூல், பக்கம் 40.

அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டாளி நாடுகளும் கடைப்பிடித்த பிற்போக்கான, ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட கொள்கையின் விளைவாகப் புதிய உலக யுத்தம் மூளும் உண்மையான அபாயம் ஏற்பட்டது. ராக்கெட்டு-அணுவாயுதங்களும் மக்களைப் பெருந்திரளாகக் கொன்று குவிக்கும் பிற சாதனங்களும் இதில் பயன்படுத்தப்பட்டிருக்கும். வெவ்வேறு சமூக அமைப்புக்கள் கொண்ட நாடுகளின் சமாதான சகவாழ்வு பற்றிய லெனினது கருத்தைத் தற்போதையக் காலப்பகுதிக்கு ஏற்ற வகையில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஸ்தூலப்படுத்தின.

சமுதாய முன்னேற்றத்துக்கான போராட்டத்தின் உள்ளார்ந்த பகுதி என்ற முறையில் சமாதானப் போராட்டத்தின் போர்த்தந்திரம் மகாநாடுகளில் வகுக்கப்பட்டது. 1960ம் ஆண்டு மகாநாடு முக்கியமான செயல்திட்டக் கருத்தைச் சூத்திரப்படுத்தியது: **''யுத்தம் தவிர்க்க முடியாதது அல்ல. யுத்தம் மூளாது தடுக்க முடியும். தமாதானத்தைக் காப்பாற்றவும் நிலைப்படுத்தவும் முடியும்''.**[1] கோட்பாட்டு ரீதியான இந்தக் கருத்தை ஆதாரமாகக் கொண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகள் சமாதானப் பற்றுள்ள எல்லாச் சக்திகளையும் ஒன்றுபடுத்தும் வேலையில் தீவிரமாக முனைந்தன. தொழிலாளர்களையும் விவசாயிகளையும் விஞ்ஞானிகளையும் கலைஞர்களையும் பள்ளி ஆசிரியர்களையும் அலுவலர்களையும் இளைஞர்களையும் கைத்தொழிலாளர்களையும் வியாபாரிகளையும் தொழிலதிபர்களையும் நல்லெண்ணமுள்ள எல்லா மனிதர்களையும் அவர்களது அரசியல், மத நம்பிக்கைகள் எவையாய் இருந்தாலும், சமாதானத்துக்காகவும் மக்கள் இனங்களின் பாதுகாப்புக்காகவும் ஆயுத ஒழிப்புக்காகவும் அணு ஆயுதங்களதும் நீர்வாயு ஆயுதங்களதும் சோதனைகளைத் தாமதமின்றி நிறுத்துவதற்காகவும் இந்த ஆயுதங்களின் உற்பத்தியையும் அவற்றைக் கையாள்வதையும் தடை செய்வதற்காகவும் போராட்டத்தைத் தீவிரப்படுத்துமாறு அவை கேட்டுக் கொண்டன.

பிற்போக்குச் சக்திகளுக்கும் முதலாளித்துவச் சக்திகளுக்கும் எதிராக ஜனநாயகச் சக்திகளதும் சோஷலிஸச் சக்திகளதும் போராட்டம் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்ட மூன்று புரட்சிப் பெருக்குக்களால் உருவாகிறது என்று வி.இ. லெனினது கருத்தை விரிவுபடுத்தி மகாநாடுகள் குறிப்பிட்டன. இவையாவன:

---

[1] அதே நூல், பக்கம் 89.

மனிதகுலத்தின் முற்போக்கு வளர்ச்சியின் முன்னணியில் செல்பவர்களான சோஷலிஸ நாடுகளின் மக்களுடைய புரட்சிகர-மாற்றியமைப்புச் செயல்கள்;

முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தினது புரட்சி இயக்கம்;

காலனியாதிக்கத்துக்கும் புதுக் காலனியாதிக்கத்துக்கும் எதிராக, காலனிகள், அரைக் காலனிகள், வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் ஆகியவற்றின் மக்களது தேசிய-விடுதலைப் போராட்டம்.

தற்காலத்தின் தலைமைப் புரட்சிச் சக்தியாகத் திகழ்கிறது சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு. பிற்போக்குக்கு எதிராக முன்னேற்றம் நடத்தும் போராட்டத்தின் போக்கு முழுவதன் மீதும், சர்வதேச அளவிலும் தேசிய அளவிலும் வர்க்கச் சக்திகளின் அணிவகுப்பு, ஒப்புநிலை ஆகியவற்றின் மீதும் இந்த அமைப்பு நாளுக்கு நாள் அதிகச் செல்வாக்கு செலுத்தி வருகிறது. சோஷலிஸ நாடுகளின் மக்களது மாற்றி அமைக்கும் ஆக்க வேலை அனைத்தும் உலகப் புரட்சி நிகழ்முறையின் உள்ளார்ந்த பகுதியாக இணைகிறது.

உலக வரலாற்று நோக்கில் சோஷலிஸ அமைப்பு முதலாளித்துவ சமூகத்துக்கு சமுதாய, பொருளாதார, அரசியல், கொள்கைவாத அறைகூவல் விடுக்கிறது. மனிதனை மனிதன் சுரண்டுவதையும் எல்லா வகையான ஒடுக்கு முறைகளையும் ஒழித்துவிட்ட சோஷலிஸம், பொருளாதார வளர்ச்சியின் திட்ட அமைப்பு, நெருக்கடி இன்மை, விரைந்த வேகம் ஆகியவற்றை நிலைநாட்டியுள்ள சோஷலிஸம், மார்க்சிய-லெனினியக் கொள்கைவாதத்தின் முற்போக்குள்ள மனிதாபிமான இயல்பைச் செயல்படுத்தியுள்ள சோஷலிஸம் அடிப்படையான மேம்பாடுகள் கொண்டிருக்கிறது. சோஷலிஸம் முதலாளித்துவத்தைக் காட்டிலும் வரலாற்று நோக்கில் மேலான சிறப்புகள் பெற்றிருக்கிறது என்பதையும் உலகின் வருங்காலம் சோஷலிஸத்துக்கே உரியது என்பதையும் இந்த மேம்பாடுகள் காட்டுகின்றன. இதனால் சோஷலிஸத்தின் ஈர்ப்புச்சக்தி அதிகரிக்கிறது, முதலாளித்துவ நாடுகளில் சோஷலிஸ்டு இயக்கம் தீவிரப்படுகிறது.

சோஷலிஸ அமைப்பின் வலிமை மேலும் மேலும் வளர்ந்து வருவது சக்திகளின் ஒப்புநிலையை நாளுக்கு நாள் அதற்குச் சாதகமாக மாற்றியும் முதலாளித்துவத்தின் நிலைகளைப் பலவீனப் படுத்தியும் குலைத்தும் வருகிறது.

சோவியத் யூனியனின் விறல் உலக சமாதானத்தின் மிக முக்கிய மான உத்தரவாதமாக விளங்குகிறது. சோஷலிஸ அமைப்பின் பொருளாதார, இராணுவ பலத்தின் வளர்ச்சி காரணமாகவும் அதன் ஈர்ப்புச் சக்தியின் அதிகரிப்பு காரணமாகவும் ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்தின் பிற்போக்குச் சூழ்ச்சிகளுக்கான களம் குறுகி வருகிறது, புரட்சி எதிர்ப்பை ஆயுதபலத்துடன் ஏற்றுமதி செய் வதற்கான வாய்ப்புக்கள் குறைந்து வருகின்றன, பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது ஏகாதிபத்தியவாதிகளுக்கு மேலும் மேலும் கடினம் ஆகி வருகிறது. இந்த நிலைமைகளில் மக்கள் இனங்களின் முற்போக்குள்ள வளர்ச்சிக்கும் காலனி ஆதிக்க வாதிகளையும் ஒடுக்குவோரையும் எதிர்த்துப் போராடுவதற்கும் அதிக விரிவான வாய்ப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

சோஷலிஸ நாடுகளின் பொருளாதார ஆற்றல் அதிகரித்து வருவதன் காரணமாக, உண்மையான தேசிய விடுதலையும் சமு தாய முன்னேற்றமும் பெறும் முயற்சிகளில் இளம் தேசிய அரசு களின் மக்களுக்கு இன்னும் விரிவான, பயனுள்ள உதவி அளிப்பது அவற்றுக்கு இயல்கிறது.

சோஷலிஸ நாடுகளின் அயல்நாட்டுக் கொள்கை நடவடிக்கை கள் உலக அரங்கில் வர்க்கப் போராட்டத்தின் முக்கியக் காரணி யாக விளங்குகின்றன. சோஷலிஸ நலங்களைக் காப்பது, ஏகாதி பத்திய அரசுகளின் பிற்போக்குச் செயல்களை அடக்குவது, சமாதா னம், ஜனநாயகம், சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றுக்காகப் போராடும் மக்களுக்கு ஆதரவு அளிப்பது இந்த நடவடிக்கைகளின் நோக்கம்.

தற்காலப் புரட்சி நிகழ்முறையில் முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தினது பாத்திரத்தையும் முக்கியத்துவத் தையும் மகாநாடுகள் வெளிப்படுத்தின. சோஷலிஸ சமூகத்தின் படைப்பாளி என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தின் உலக வர லாற்று முக்கியத்துவம் உள்ள பாத்திரத்தை ஆதாரத்துடன் நிலை நாட்டியிருப்பது மார்க்சியத்தின் முக்கியமான தொண்டு என்று வி.இ. லெனின் கூறியது தெரிந்ததே. மார்க்சிய-லெனினிய போ தனையை விசுவாசத்துடன் கடைப்பிடித்த கம்யூனிஸ்டு அகிலம் தொழிலாளி வர்க்கத்தை வரலாற்று நோக்கில் உயர்த்துவதிலும் அதற்கு அரசியல் பயிற்சி அளிப்பதிலும் ஸ்தாபன ரீதியில் அதை ஒன்றுபடுத்துவதிலும் தனது செயல்கள் அனைத்திலும் முக்கிய கவனம் செலுத்தியது. தனது வரலாற்றுப் பணியை ஆகக் குறைந்த

கெடுவுக்குள் நிறைவேற்றத் தொழிலாளி வர்க்கத்துக்கு உதவுவதே அதன் எல்லாச் செயல்களதும் நோக்கமாக இருந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிமூலம் மாற்றியமைக்கும் பாத்திரத்தை உயர்த்துவது பற்றிய சமுதாய-வரலாற்றுக் கருத்து கம்யூனிஸ்டு அகிலத்தினதும் அதன் பிரிவுகளுடையவும் தீர்மானங்களில் உருவாக்கப்பட்டிருந்தது. இந்தக் கருத்தின் ஜீவாதார முக்கியத்துவம் தற்கால நிலைமைகளிலும் அப்படியே இருந்துவருகிறது. வரலாற்றின் ஒவ்வொரு திடீர்த் திருப்பத்துக்குப் பின்னும் அது தனது வெளிப்பாட்டின் வடிவத்தை மாற்றிக் கொள்கிறது. அதோடு புதிய இயல்புகளையும் பெறுகிறது.

சமூக உறவுகளில் தொழிலாளி வர்க்கத்தின் இடம், அதன் வரலாற்றுரீதியான பங்கு, புரட்சி வாய்ப்புக்கள் ஆகியவை பற்றிய பிரச்சினை தற்காலத்தில் முன்னிலும் கடுமையான அரசியல், கொள்கைவாதப் போராட்டத்துக்கு உரிய விஷயம் ஆகிவிட்டது. பூர்ஷ்வாக் கொள்கைவாதிகளும் சீர்திருத்தவாதிகளும் திரிபுவாதிகளும் தொழிலாளி வர்க்கத்தின் சமுதாய-வரலாற்று வருங்கால வாய்ப்புக்களை மறுக்கிறார்கள். தொழிலாளி வர்க்கம் பாட்டாளித் தன்மையை இழந்துவிடும் என்ற கருத்தைப் பல விதங்களில் அவர்கள் பரப்புகிறார்கள். அதே சமயம், ஏகபோக பூர்ஷ்வா வர்க்கம் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் துணையை ஆதாரமாகக் கொண்டு, தொழிலாளி வர்க்கத்தைச் சிதைப்பதற்கான முறைகளை மேலும்மேலும் செப்பம் செய்தும், பகிரங்கமான, முரட்டுத்தனமான அடக்குமுறைகளைக் கையாண்டும் வருகிறது.

இவற்றோடு கூடவே, தொழிலாளி வெகுஜனங்களை அரசியலிலிருந்து திசை திருப்பும் பொருட்டு நவீனத் தொழில்நுட்பச் சாதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. அன்றாட வாழ்க்கையில் தொழில்நுட்பச் சாதனங்கள் தீவிரமாகப் புகுத்தப்படுவதும் போலிப் பண்பாடு விரிவாகப் பரப்பப்படுவதும் தொழிலாளர்களின் வாழ்க்கையில் கொள்கைவாத வெறுமையை ஏற்படுத்தும் ஆழ்ந்த நோக்கத்துடனேயே செய்யப்படுகின்றன.

சோஷலிஸ்டு அகிலத்தின் வலதுசாரித் தலைவர்களும் தொழிற்சங்கங்களின் பிற்போக்குத் தலைவர்களும் தொழிலாளி வர்க்கத்தின் பிளவை நிலைப்படுத்துவதையும் மேலும் ஆழமாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட தங்கள் செயல்களைத் தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் புரட்சி

உணர்வை இழந்துவிட்டது என்ற லெனினியவிரோதக் கருத்துக்கு, தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று கூறிக் கொள்ளும் சில தலைவர்களிடமிருந்தும் ஆதரவு கிடைத்திருக்கிறது. வளர்ச்சி மிக்க முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் புரட்சிப் பாதையிலிருந்து விலகிவிட்டது என்றும், குறுகிய வர்க்கத்தன்மை கொண்ட சமுதாய, பொருளாதாரப் பிரச்சினைகளில் ஆழ்ந்திருக்கிறது என்றும் முதலாளித்துவத்தைக் கவிழ்ப்பதற்கான போராட்டத்தை நடத்த அது திறனற்றது என்றும் இந்த மார்க்சிய விரோதிகள் சொல்லுகிறார்கள். இந்தப் பணியை நிறைவேற்றும் பொறுப்பைப் பிற வர்க்கங்கள், உதாரணமாக ''உலக கிராமத்தில்'' வாழ்பவர்கள், அதாவது விவசாயிகள் ஏற்றிருப்பதாக இவர்கள் கூறுகிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளில் நடக்கும் தொழிலாளர் இயக்கம் ஏகபோகங்களுக்கு எதிரான போராட்டத்துக்கு நிர்ணயகரமான, நாளுக்கு நாள் அதிகரிக்கும் முக்கியத்துவம் உள்ளது என்பது மகாநாடுகளின் தஸ்தாவேஜுகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தீர்மானங்களிலும் தெளிவாகக் காட்டப்பட்டது.

முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்காலத்து அரசியல் இயக்கங்களில் அதன் பாத்திரம் உயர்ந்து வருகிறது. தற்காலப் பாட்டாளி வர்க்கம் பல படிவுகள் கொண்ட வர்க்கம் என்றும் அது எண்ணிக்கையில் வளர்ந்தும் பண்பில் மாறியும் வருகிறது என்றும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் அழுத்திக் கூறுகின்றன. முதலாளித்துவ உலகின் சமூக வாழ்வு மீதும் வர்க்கப் போராட்டத்தின் மீதும் தொழிலாளி வர்க்கம் அதிகரித்துவரும் செல்வாக்கு செலுத்துகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சிகள் கம்யூனிஸ்டு அகிலத்தின் மரபுகளைத் தொடர்ந்து பின்பற்றி, விரிவுபடுத்தி ஆழமாக்கியவாறு தொழிலாளி வர்க்கத்தை ஒற்றுமைப்படுத்துவதற்கு ஓய்வற்ற போராட்டம் நடத்தி வருகின்றன. அதன் வர்க்க உணர்வு, தொழில்முறை, அரசியல், ஸ்தாபன அமைப்பு ஆகியவற்றின் தரத்தை உயர்த்துவதற்காக அவை பாடுபட்டுவருகின்றன.

தொழிலாளி வர்க்கம் ஏகபோக எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கியக் காரணியாகவும் மிகப் பெரிய சமுதாய முன்னேற்றங்களின் பிரதான இயக்கு சக்தியாகவும் விளங்குகிறது என்பதைப் போருக்குப் பிந்திய காலப்பகுதி அனைத்தினதும் வரலாறு காட்டு

கிறது. தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கச் செயலூக்கமும் அரசியல் முன்னேற்றத் திறனும் அண்மை ஆண்டுகளில் பெரிதும் வளர்ந்துள்ளன. தொழிலாளி வர்க்கத்துக்கும் ஏகபோகங்களுக்கும் இடையே போராட்டத்தின் இறுக்கம் குறையவில்லை, அதிகரித்துக் கொண்டு போகிறது. ஆட்சியில் இல்லாவிடினும் கூட, தொழிலாளி வர்க்கம் சில முடிவுகளை பூர்ஷ்வா வர்க்கம் ஏற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்தும் வாய்ப்பு பெற்றிருக்கிறது. இந்த முடிவுகள் தொழிலாளி வர்க்கத்தின் தற்போதைய நலன்களைப் பிரதிபலிப்பவை, வருங்காலக் குறிக்கோள்களை அடைய உதவக் கூடியவை. முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் வற்புறுத்தல் காரணமாக சமுதாய, அரசியல் துறைகளில் பூர்ஷ்வா வர்க்கம் பல சந்தர்ப்பங்களில் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று.

முதலாளித்துவ நாடுகளின் சமூக வாழ்வில் ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சி அதிகரித்துவரும் சமுதாய, அரசியல் காரணியாக விளங்குகிறது என்பதையும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன. அறிவுஜீவிகள், மாணவர்கள், விவசாயிகள், நடுத்தர வகுப்பார் ஆகிய மிக விரிவான உழைப்பாளி வட்டாரத்தினர் இந்த இயக்கத்தில் பங்கு கொள்கிறார்கள். கம்யூனிஸ்டுக் கட்சிகள் இந்தப் புதிய சூழ்நிலைகளைப் பகுத்தாய்ந்ததன் அடிப்படையில் லெனினுடைய கருத்துக்களையும் கம்யூனிஸ்டு அகிலத்தின் தீர்மானங்களையும் விரிவுபடுத்தி, பரந்த கூட்டணிகளையும் அவற்றினது அமைப்பின் வாய்ப்புக்களையும் வடிவங்களையும் பற்றித் தங்களது தீர்மானங்களைத் தயாரிக்கின்றன. புதிய நிலைமைகளில் விவசாயிகளுடனும் அறிவுஜீவிகளுடனும் மாணவர்களுடனும் நடுத்தர வகுப்பாருடனும் தொழிலாளி வர்க்கத்தின் நெருங்கிய கூட்டணியை ஏற்படுத்தக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் முயல்கின்றன. ஏகபோகங்களை அடக்கி வைக்கவும் புரட்சி நிகழ்முறையை மேலும் ஆழ்ந்தது ஆக்கவும் தேவைப்படும் முக்கியமான முதனிலை என்ற வகையில் விரிவான ஏகபோக எதிர்ப்புக் கூட்டணி அமைப்பதை அவை தங்கள் குறிக்கோளாகக் கொள்கின்றன.

தற்காலத்துப் புரட்சி நிகழ்முறைக்கு பின்வரும் தன்மைகள் இயல்பானவை:

அ) பெரும்பாலான மக்களுக்கும் ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் பெரிதும் கூர்மையடைந்திருக்கும் காரணத்தால் புரட்சியின் இயக்கு சக்திகள் மேலும்

விரிவு அடைவது. தற்காலத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் (ஜனநாயகம், சோஷலிஸம், தேசிய சுதந்திரம் முதலியன) குறித்து ஏகபோகத்துக்கு எதிரான போராட்டத்தில் மேலும் மேலும் புதிய சமுதாய சக்திகள் ஈடுபடுகின்றன.

ஆ) புரட்சி நிகழ்முறையின் வளர்ச்சி வடிவங்கள் விரிவடைகின்றன. புரட்சிச் செயலின் அமைதியான வடிவங்களும் அமைதியற்ற வடிவங்களும் அதிகப் பல்வகைப்பட்டவை ஆகின்றன.

இ) வெகுஜனங்களைப் புரட்சிக்கு இட்டுவருவதற்கான முறைகளும் வழிகளும் மேலும் மேலும் பல்வகையாகின்றன. இந்தத் துறையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் ஏழாவது காங்கிரசின் தீர்மானங்களுக்கு அடிப்படையாக விளங்கும் லெனினுடைய கருத்துக்கள் சரியானவை என்பதை இது காட்டுகிறது. புரட்சி பற்றிய திரிபுவாதிகளின் புரிவும் அதற்கு ஆயத்தம் செய்வதற்கான இடது சாரிப் பிரிவுவாதிகளின் துர்ச்சாகசத் தன்மை கொண்ட வழிகளும் எவ்வளவு ஆதாரமற்றவை என்பதும் இதிலிருந்து தெரிகிறது. வெகுஜனங்கள் தங்கள் நடைமுறை அனுபவம் காரணமாகவும், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சரியான அரசியல் கோஷங்கள், அவற்றின் சமயோசிதமான, பயன்விளைக்கும் கொள்கை ஆகியவற்றின் விளைவாகவும் புரட்சிக்கு இட்டுவரப்படுகிறார்கள் என்று மகாநாடுகளின் விவரக்குறிப்புக்களிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தஸ்தாவேஜுகளிலும் அழுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

வரலாற்று நோக்கில் முன்னேறும் திறன், சமயோசித சாமர்த்தியம், இயக்க முறை மாற்றத் திறமை, முன்முயற்சி எடுத்துக் கொள்ளும் திறன் ஆகியவை கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செயல்தந்திரத்துக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றன என்பது இதிலிருந்து பெறப்படுகிறது.

ஜனநாயகப் போராட்டத்துக்கும் இயக்கத்தின் சோஷலிஸக் குறிக்கோள்களுக்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தஸ்தாவேஜுகளில் ஆழ்ந்த ஆதாரத்துடன் விளக்கப்பட்டிருக்கிறது. செயல்திட்ட தஸ்தாவேஜுகளில் தற்காலத்தின் போர்த்தந்திரப் பணிகள் என்ற முறையில் ஜனநாயகக் குறிக்கோள்களுக்கு முதல் இடம் தரப்பட்டிருக்கிறது. இவையாவன: ஏகபோகங்களின் சர்வாதிகாரத்துக்கு எதிரான போராட்டம், ஜனநாயகத்தைக் காப்பதும் ஆழப்படுத்துவதும், சமாதானத்தைப் பாதுகாப்பது, சமுதாய, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத்

துறைகளில் உழைப்பாளிகளின் உடனடி நலன்களை நிறைவேற்றுவது.

இந்த ஆணைக் குறிப்புக்கு முற்றிலும் இணங்க, கம்யூனிஸ்டு அகிலத்தினது ஏழாவது காங்கிரசின் விவரக் குறிப்புக்களிலேயே முன்வைக்கப்பட்ட மக்கள் கூட்டணிக் கருத்தை விரிவுபடுத்தி முதலாளித்துவ நாடுகளில் ஏகபோகவிரோத ஜனநாயக அரசாங்கங்கள் அமைக்கப்படுவதற்காகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் முதன்மையாகப் பாடுபடுகின்றன.

ஏகபோகவிரோத, ஜனநாயக அரசாங்கத்துக்கான போராட்டத்தின் போதும் அந்த அரசாங்கம் செயல்படும் காலத்திலும் ஆழ்ந்த புரட்சிகரமான ஜனநாயக மாற்றங்கள் நிகழ்கின்றன. அவை சோஷலிஸ மாற்றங்கள் அல்ல, ஆயினும் அவை சோஷலிஸ மாற்றங்களுக்கு வெகு அருகே இட்டு வருகின்றன என்று மகாநாடுகளின் தஸ்தாவேஜுகளிலும் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தீர்மானங்களிலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் இயக்கத்தில் உள்ள பிளவை அகற்றுவதன் இன்றியமையாமையையும் அதற்கான வாய்ப்புக்களையும் பற்றிய கம்யூனிஸ்டு அகிலத்தின் கருத்துக்களை மகாநாடுகள் விரிவுபடுத்தின.

பாட்டாளி வர்க்கத்தினது அணிகளின் பிளவு, அது தன் குறிக்கோள்களை அடைவதற்கான வழியில் முன்போலவே முக்கியத் தடையாக இருந்து வருகிறது; பூர்ஷ்வா வர்க்கமும் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளும் தொழிற்சங்கங்களின் பிற்போக்குத் தலைவர்களும் இந்தப் பிளவை நிலையாக வைத்திருப்பதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று 1960ம் ஆண்டு மகாநாட்டின் அறிக்கை கூறுகிறது.

சில வலதுசாரி சமூக-ஜனநாயகத் தலைவர்கள் ஏகபோகங்களின் நிலைகளுக்கு பகிரங்கமாக மாறினார்கள். அனேக நாடுகளில் வலதுசாரித் தலைமை, தன் செயல்திட்டங்களை சமூக-ஜனநாயகக் கட்சிகள் ஏற்கும்படி செய்ய முயன்று வெற்றி பெற்றன. இந்தச் செயல்திட்டங்களில் வலதுசாரித் தலைமை மார்க்சியத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் விஞ்ஞான சோஷலிஸ கோஷங்களையும் வெளிப்படையாகக் கைவிட்டு விட்டது. ஆயினும், வலதுசாரித் தலைவர்களின் இந்தக் கொள்கைக்கு எதிர்ப்பு சமூக-ஜனநாயகக் கட்சிகளில் அதிகரிக்கலாயிற்று. சமாதானம், ஜனநாயகம், சமுதாய

முன்னேற்றம் ஆகியவற்றுக்கான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கமும் பிற உழைப்பாளிகளும் ஒன்றித்துச் செயல்படுவதை ஆதரித்த சக்திகள் வளரலுற்றன. சோஷலிஸத்துக்கான போராட்டத்திலும் சமூகஜனநாயகவாதிகளுடன் ஒத்துழைப்பது சாத்தியம் என்று கம்யூனிஸ்டுகள் எண்ணினர்கள்.

தொழிலாளர் இயக்கத்தின் பிளவை அகற்றக் கம்யூனிஸ்டுகள் மும்முரமாகப் பாடுபடுகிருர்கள் என்று 1960ம் ஆண்டு மகாநாட்டின் அறிக்கையில் சிறப்பாக வலியுறுத்தப்பட்டது. உழைப்பாளி சமூக-ஜனநாயகவாதிகளை அவர்கள் தங்கள் வர்க்க சோதரர்களாகக் கருதுகிருர்கள் என்றும் பொதுக் குறிக்கோள்களை அடையும் பொருட்டு அவர்களுடனும் எல்லாத் தொழிற்சங்கங்களுடையவும் உறுப்பினர்களுடனும் ஸ்தாபன அமைப்பு இல்லாத தொழிலாளர்களுடனும் சேர்ந்து விடாப்பிடியாகப் போராடுகிருர்கள் என்றும் அறிக்கை கூறியது. சமூக-ஜனநாயகக் கொள்கைவாதத்தையும் சந்தர்ப்பவாத நடைமுறைகளையும் தாக்கி விமர்சிப்பதைக் கம்யூனிஸ்டுகள் கைவிடவில்லை, ஆனுலும் கொள்கைவாதப் பிரச்சினைகள் பற்றிக் கட்சிகளுக்கு இடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் கருத்துப் பரிமாற்றத்துக்கும் தோழமையுள்ள விவாதங்களுக்கும், மிக முக்கியக் கோரிக்கைகளை ஆதரித்தும் முதன்மையாக யுத்த அபாயத்தை எதிர்த்தும் ஒன்றுசேர்ந்து போராடுவதற்கும் தடையாக இருக்கக் கூடாது என்று அவர்கள் நினைக்கிருர்கள் என்று அறிக்கை மேலும் கூறியது.

முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கம் பிளவை அகற்றிவிட்டால், புதிய யுத்தத்துக்கு ஏற்பாடு செய்வதை நிறுத்தும்படி ஆளும் வட்டாரத்தினரைக் கட்டாயப்படுத்தவும் ஏகபோக மூலதனத்தின் தாக்குதலைப் பின்னுக்குத் தள்ளவும் உடனடியான ஜீவாதாரக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வகைசெய்யவும் ஜனநாயகத்தைக் காக்கவும் மேம்படுத்தவும் அதனுல் முடியும் என்று அறிக்கை சுட்டிக் காட்டியது.

தேசிய-விடுதலை இயக்கத்தின் சித்தாந்தத்தைச் செப்பம் செய்வதில் மகாநாடுகள் புதிய பங்களிப்பு நிகழ்த்தின. 1960ம் ஆண்டு மகாநாட்டின் தஸ்தாவேஜுகளில் காலனி ஆட்சி முறை தவிர்க்க முடியாதவாறு தகர்ந்து சிதறிவிடும் என்பது காட்டப்பட்டது, தேசிய-விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்கான வழிகள் வெளிப்படுத்தப்பட்டன. உண்மையான தேசிய சுதந்திரத்துக்கும் சமுதாய முன்னேற்றத்துக்குமான போராட்டத்தின் போர்த்தந்திரமும்

செயல்தந்திரமும் வரையறுக்கப்பட்டன. 1960ம் ஆண்டு மகாநாடு எல்லாத் தேசபக்தச் சக்திகளதும் ஒன்றித்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைக்கும் கருத்தை முன்வைத்து, அதன் சாத்தியமான உறுப்பினர்கள் யார், இயக்கு சக்திகள் யாவை என்பதைத் தெளிவுபடுத்தியது.

மகாநாட்டுக்குப் பின்னர் கழிந்துள்ள காலத்தில் தேசிய-விடுதலை இயக்கம் பெருத்த வெற்றிகள் அடைந்தது. அரசியல் துறையில் தேசிய விடுதலைக்கான போராட்டம் பெரும்பாலும் நிறைவு பெற்றுவிட்டது. அடிப்படையான சமுதாயப் பிரச்சினைகள் இப்போது முதலிடத்துக்கு வந்துவிட்டன. அநேக நாடுகள் குறித்த அளவு பொருளாதார வெற்றிகள் பெற்றுள்ளன. அவை சோஷலிஸத்தின் திசையில் சமுதாய முன்னேற்றப் பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளன.

தேசிய-விடுதலைச் சக்திகள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் இயல்பாகப் பங்காற்றுபவை என்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் கருதுகின்றன, புரட்சிகர-ஜனநாயகக் கட்சிகளுடனும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுடனும் ஒத்துழைப்பை மேற்கொண்டு எல்லா வகையிலும் விரிவுபடுத்துவதை அவை ஆதரிக்கின்றன.

மகாநாடுகள் கூட்டாகத் தயாரித்து ஒன்று சேர்ந்து ஏற்றுக்கொண்ட தீர்மானங்கள் ஒத்திசைந்த புரட்சிக் கொள்கை, போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைகளால் கம்யூனிஸ்டுக் கட்சிகளை வலுப்படுத்தியுள்ளன. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் போராட்டத் திறனை உயர்த்த அவை உதவுகின்றன.

சோஷலிஸ அமைப்பின்
வளர்ச்சி விதிமுறை
பற்றிக் கட்சிகளின் பகுத்தாய்வு.
உலகக் கம்யூனிஸ்டு
இயக்கத்தில் சோவியத்
யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கான விதிமுறைகளைப் பகுத்து ஆராய்வதில் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மகாநாடுகள் பெருத்த பங்களிப்பு நிகழ்த்தின.

இந்த விதிமுறைகள் வி.இ. லெனினால் சூத்திர வடிவில் அமைக்

கப்பட்டன, சோவியத் யூனியனில் சோஷலிஸ சமூகம் நிலைபெற்று வளர்ச்சி அடைந்த அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தாலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியாலும் விரிவுபடுத்தப் பெற்றன. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் பல நாடுகள் சோஷலிஸ வழியை மேற்கொண்டன. இவை சமுதாய-பொருளாதார வளர்ச்சியில் மிக மிக வெவ்வேறு மட்டங்களில் இருந்தன, பெருத்த தேசியத் தனித் தன்மைகளும் சிறப்பான வரலாற்று, அரசியல் மரபுகளும் கொண்டிருந்தன. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பது பற்றிய சித்தாந்தமும் நடைமுறையும் இந்தக் காரணங்களால் கணிசமாக வளம் பெற்றன.

மகாநாடுகளில் கலந்துகொண்டவர்கள் மிகமிக வெவ்வேறான நிலைமைகளில் சோஷலிஸ வளர்ச்சியின் திரண்ட அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, புதிய, சமூக அமைப்பு நிறுவப்படுவது அனேக முக்கிய விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது என்றும் இவை சோஷலிஸ வழியை மேற்கொள்ளும் எல்லா நாடுகளுக்கும் இயல்பானவை என்றும் கூட்டாக முடிவுக்கு வந்தார்கள். இத்தகைய பொது விதிமுறைகள் ஆவன:

மார்க்சிய-லெனினியக் கட்சியை மையக் கருவாகக் கொண்ட தொழிலாளி வர்க்கம் உழைப்பாளி வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்குவதும் ஏதாவது ஒரு வடிவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைபெறுவதும்;

பெரும்பாலான விவசாயி வெகுஜனங்களுடனும் அறிவுஜீவிகளுடனும் நகர, நாட்டுப்புற உழைப்பாளிகள் அனைவருடனும் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம்;

அடிப்படையான உற்பத்திச் சாதனங்களின் மீது முதலாளித்துவச் சொத்துரிமையை ஒழிப்பதும் சமூகச் சொத்துரிமையை நிலைநாட்டுவதும்;

சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் கட்டி அமைப்பது, உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட திட்டமிட்ட தேசியப் பொருளாதார வளர்ச்சி;

விவசாயத்தைப் படிப்படியாக சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பது;

கொள்கைவாதம், பண்பாடு ஆகிய துறைகளில் சோஷலிஸப் புரட்சியைச் செயல்படுத்துவது, சோஷலிஸக் குறிக்கோளுக்கு

விசுவாசம் உள்ள பெருந்தொகையான அறிவுஜீவிகளை உருவாக்குவது;

தேசிய ஒடுக்குமுறையை ஒழிப்பது, மக்கள் இனங்களுக்கிடையே சமத்துவத்தையும் சோதர நட்பையும் நிலைநாட்டுவது;

வெளி, உள் பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து சோஷலிஸத்தின் நலங்களைக் காப்பது;

ஒத்திசைந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியம், அதாவது, பிற நாடுகளின் தொழிலாளி வர்க்கத்துடனும் எல்லாப் புரட்சிச் சக்திகளுடனும் குறித்த நாட்டைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் ஒருமைப்பாடு.

இந்த விதிமுறைகள் ஆதாரத்துடன் நிலைநாட்டப்பட்டது மார்க்சிய-லெனினியக் கூட்டுச் சிந்தனையின் சாதனையாகவும் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தில் முக்கியமான பங்களிப்பாகவும் திகழ்ந்தது.

அதே சமயம் சோஷலிஸத்துக்கு வளர்ச்சி நிகழும்பொது விதிமுறைகளைப் படைப்புத் தன்மையுடன் கையாள்வதன் இன்றியமையாமையை மகாநாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தினார்கள். மற்ற நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அனுபவத்தை இயந்திர ரீதியாகக் காப்பி அடிப்பதை அவர்கள் எதிர்த்தார்கள். தேசியச் சிறப்புத் தன்மைகளை மிகைப்படுத்துவது, தேசியத் தனித் தன்மைகளைக் கருத்தில் கொள்ளும் சாக்கில் பொது விதிமுறைகளைப் புறக்கணிப்பது ஆகியவற்றின் அபாயத்தை அவர்கள் அதே சமயம் சுட்டிக் காட்டினார்கள். இவ்வாறு செய்வதால் தேசியச் சுய ஒதுக்கமும் சோஷலிஸக் கோட்பாடுகள் பலவீனம் அடைவதும் நேரும் ஆபத்து ஏற்படலாம் என்று அவர்கள் கூறினார்கள்.

சோஷலிஸ நாடுகளின் அடுத்துவந்த வளர்ச்சி வரலாறு அனைத்தும் சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கான விதிமுறைகள் பற்றிய கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முடிவுகள் சரியானவை என்பதை உறுதிப்படுத்தியது. இந்த விதிமுறைகள் மீறப்படுவதால் துன்பகரமான நிகழ்ச்சிகளும் சோஷலிஸக் குறிக்கோளுக்குக் கேடுகளுமே விளைகின்றன என்று அனுபவம் காட்டி இருக்கிறது.

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு நிலைபெறுவதற்கும் வளர்ச்சி அடைவதற்கும் உரிய விதிமுறைகள் மகாநாடுகளின் விவரக்குறிப்புக்களிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, பிற கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆகியவற்றின் செயல்திட்ட தஸ்தாவேஜுகளிலும் ஆதாரங்களுடன் நிலைநாட்டப்பட்டது மார்க்சிய-

லெனினிய சித்தாந்தத்தின் வளர்ச்சியில் முக்கியமான பங்களிப்பாக விளங்குகிறது.

பிரகடனத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

''சோஷலிஸ நாடுகள் தங்கள் பரஸ்பர உறவுகளை முழுமையான சமத்துவம், பிரதேச முழுமைக்கும் அரசு சுதந்திரத்துக்கும் இறைமைக்கும் மதிப்பு, ஒன்றின் உள் விவகாரங்களில் மற்றது தலையிடாமை ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஏற்படுத்திக் கொள்கின்றன. இவை முக்கியமான கோட்பாடுகள், ஆனால் சோஷலிஸ நாடுகளுக்கு இடையே நிலவும் உறவுகளின் தன்மை முழுவதும் இவற்றில் அடங்கிவிடவில்லை. இந்த நாடுகளின் உறவுகளது பிரிக்க முடியாத அம்சமாக விளங்குகிறது சோதரப் பாங்குள்ள பரஸ்பர உதவி. சோஷலிஸ சர்வதேசியக் கோட்பாட்டின் பயன் விளைக்கும் வெளிப்பாடாகத் திகழ்கிறது இந்தப் பரஸ்பர உதவி.''[1]

சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கான வழிகள் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்துக்கள் நடைமுறைச் செயல்களில் படைப்புத் தன்மையுடன் பயன்படுத்தப்படுவதும் சேஷலிஸ சர்வதேசியக் கோட்பாடுகளுக்கு விசுவாசம் கடைப்பிடிப்பதும் தனித்தனியே ஒவ்வொரு சோஷலிஸ நாட்டினுடையவும் மொத்தத்தில் உலக சோஷலிஸ அமைப்பினுடையவும் அடுத்துவரும் வெற்றிகளுக்கு உத்தரவாதமாகும்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இயங்கும் சோவியத் யூனியன், உலக சோஷலிஸ அமைப்பின் விறல் மிக்க சக்தியாகவும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்திலும் ஊக்கத்துடன் பங்கு ஆற்றுவதாகவும் திகழ்கிறது.

சோஷலிஸச் சக்திகள், முதலாளித்துவச் சக்திகள் ஆகியவற்றின் போராட்டத்தில் சோவியத் யூனியன் எதார்த்தத்தில் பெற்றுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடம், எல்லா மக்கள் இனங்களுடையவும் சோஷலிஸ நலங்களைக் காக்கும் கேடயமாக விளங்கும் அதன் இராணுவ-பொருளாதார வலிமை, கம்யூனிஸத்துக்குப் பாதை அமைப்பதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி முன்னணிப் படையாக வகிக்கும் பாத்திரம்—இவை எல்லாம் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அசாதாரணமாகப் பெரிய சர்வதேசப் பொறுப்பை அளித்திருக்கின்றன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி இந்தப் பொறுப்பைப்

[1] செயல்திட்ட தஸ்தாவேஜுகள், பக்கம் 10.

புரிந்துகொண்டிருக்கிறது. எனவே, எல்லாவற்றுக்கும் முன் சோவியத் யூனியனின் ஆற்றலை அதிகப்படுத்துவது தனது முதன்மையான சர்வதேசப் பணி என்று அது கருதுகிறது. சோஷலிஸத்தை நிறுவியதன் வாயிலாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி எல்லா மக்கள் இனங்களும் முற்போக்கான வளர்ச்சி பெறுவதற்குரிய வழியை அமைத்தது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு நிகழும் பரிணமிப்பு உலகு அனைத்திலும் ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் நிலைகளை வலுப்படுத்துகிறது. மனிதகுலம் அனைத்தினதும் ஒளிமிக்க வருங்காலத்திற்கான போராட்டத்தின் வாய்ப்புக்களை விரிவுபடுத்துகிறது. சோவியத் யூனியனில் நடந்து வரும் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றமும் விண்வெளியை வெற்றி கொள்வதில் செய்யப்பட்டுள்ள சாதனைகளும் சோஷலிஸத்தின் மேம்பாட்டைத் துலக்கமாகக் காட்டுகின்றன, அதன் ஈர்ப்புச் சக்தியை அதிகப்படுத்துகின்றன.

உலக முதலாளித்துவ அமைப்புடன் போட்டியில் அதிகப்படிச் சக்திகளை இடையறுது, ஓய்வின்றித் திரட்டுவதற்காகவும் சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் ஆதரவாளர்களது நிலைகளை விரிவுபடுத்துவதற்காகவும் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் சோஷலிஸ நாடுகளையும் முற்போக்கு உள்ள, ஏகாதிபத்திய விரோத சமுதாய வட்டாரங்களையும் ஒன்றிணைப்பதன் பொருட்டு சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி ஒத்திசைந்த முறையில் போராடி வருகிறது.

கம்யூனிஸ்டு நட்பு மண்டலத்தின் சமத்துவம் உள்ள உறுப்பாளிக்கு உள்ள உரிமைகளின் அடிப்படையில், உலகக் கம்யூனிஸத்தின் சிக்கல்கள் மீதும் புரட்சிப் போராட்டத்தினுடையவும் சோஷலிஸ வளர்ச்சியுடையவும் பிரச்சினைகள் மீதும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி தனது காங்கிரசுகளிலும் முழுக் கூட்டங்களிலும் மேலும் மேலும் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் இருபத்திரண்டாவது காங்கிரசில் ஏற்கப்பட்ட கட்சிச் செயல்திட்டம், தலைசிறந்த மார்க்சிய-லெனினிய தஸ்தாவேஜாக விளங்குகிறது. மனிதகுலத்தின் ஆர்வத்துக்கு உரிய பிரச்சினைகள் இதில் ஆராயப்பட்டிருக்கின்றன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி தன் செயல்திட்டத்தில் மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தை விரிவும் வளமும் படுத்தி,

இடையறுது மாறிவரும் வரலாற்று நிலைமையைப் படைப்புத் தன்மையுடன் ஆராயும் லெனினது மரபைப் பின்பற்றியவாறு அனேக முக்கியமான அடிப்படைக் கருத்துக்களை முன்வைத்தது. இவை தேசிய நோக்கில் மட்டும் இன்றி, சர்வதேசிய நோக்கிலும் முக்கியத்துவம் உள்ளவை.

சோஷலிஸப் பாதையில் அடிவைத்திருக்கும் எல்லா நாடுகளுக்கும் இயல்பான பிரதான விதிமுறைகள் செயல்திட்டத்தில் பகுத்து ஆராயப்பட்டுள்ளன. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு, நாடுகளுக்கிடையே பொருளாதார, அரசியல் உறவுகளின் புது வகையாக, சர்வதேச உழைப்புப் பிரிவினையின் புது வகையாக விளங்குகிறது என்பது காட்டப்பட்டிருக்கிறது.

முதலாளித்துவத்தினது பொது நெருக்கடியின் தற்கால கட்டத்தைப் பகுத்தாராய்ந்து, அதன் அடிப்படையில் சமாதானத்தின் பொருட்டும் ஜனநாயகத்தின் பொருட்டும் சோஷலிஸத்தின் பொருட்டும் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதற்கு உரிய போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் வகுப்பதில் செயல்திட்டம் தனது பங்கை ஆற்றியிருக்கிறது. பொது ஜனநாயகப் போராட்டத்துக்கும் சோஷலிஸப் புரட்சிக்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பு பற்றிய லெனினது கருத்து அதில் விரிவாக்கப்பட்டிருக்கிறது. தற்கால நிலைமைகளில் விரிவான கூட்டணி பற்றிய கொள்கைக்கும், ஏகபோகங்களுக்கு எதிரான ஒரே பெரும் பெருக்காக இணைந்த வெவ்வேறு முற்போக்குள்ள கட்சிகள், உழைப்பாளி வர்க்கங்கள் ஆகியவற்றுக்கு இடையே ஒப்பந்தங்களும் ஒத்துழைப்பும் ஏற்படுவதற்கான ஸ்தாபன வரம்புகளுடைய பல்வகைகளுக்கும் விஞ்ஞான ஆதாரம் தரப்பட்டிருக்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான போராட்டத்தில் இடைக்காலக் கட்டங்களும் அமைதியானவை, அமைதியற்றவை ஆகிய இரு வகையான எல்லாப் போராட்ட வடிவங்களிலும் தேர்ச்சியும் இன்றியமையாதவை என்பது காட்டப்பட்டிருக்கிறது.

தேசிய-விடுதலைப் போராட்டத்தின் கருத்தில் செயல்திட்டம் புதிய அம்சங்களைப் புகுத்தி இருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்த லெனினது கருத்துக்களையும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொது வரையறுப்புக்களையும் அது வளப்படுத்தி இருக்கிறது. இதில் அனேக முக்கிய முடிவுகள் சூத்திர வடிவில் தரப்பட்டுள்ளன: **சோஷலிஸம் தோன்றியிருப்பது ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைச் சகாப்தம் தொடங்கி இருப்பதைக் குறிக்கிறது;** ஒடுக்கப்பட்ட

நாட்டினங்களின் தேசியவாதத்தில் பொது ஜனநாயக உள்ளடக்கம் இருக்கிறது; கம்யூனிஸ்டுகள் இது குறித்த கட்டத்தில் வரலாற்று நோக்கில் நியாயமானது என்று கருதி இதை ஆதரிக்கிறார்கள்; இளம் தேசிய அரசுகள் புறநிலை நோக்கில் முற்போக்குள்ள, ஏகாதிபத்திய விரோதச் சக்தி ஆகும்; யுத்த அபாயத்துக்கு எதிரான போராட்டத்தில் இந்த அரசுகளுடன் சோஷலிஸ நாடுகளின் ஐக்கியம் வலுப்படுவது உலக சமாதானத்தின் மிகப் பெரிய காரணி ஆகும். கம்யூனிஸ்டுகளின் குறிக்கோள்கள் ஒவ்வொரு நாட்டினத்தினதும் தலைசிறந்த நலன்களுக்கு ஏற்றவை என்று செயல் திட்டம் அழுத்திக் கூறுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்திட்டம் வரலாற்று நன்னம்பிக்கையாலும் உலகம் முழுவதிலும் கம்யூனிஸம் வெற்றி பெறும் என்ற ஆழ்ந்த உறுதியாலும் நிறைந்திருக்கிறது.

''எல்லா வகையான சமுதாய சமத்துவமின்மையிலிருந்தும், ஒடுக்குமுறை, சுரண்டல் ஆகியவற்றின் எல்லா வடிவங்களிலுமிருந்தும் யுத்தத்தின் கோரங்களிலிருந்தும் எல்லா மனிதர்களையும் விடுவிக்கும் வரலாற்று லட்சியத்தைக் கம்யூனிஸம் நிறைவேற்றி வருகிறது. எல்லா மக்கள் இனங்களதும் சமாதானம், உழைப்பு, விடுதலை, சமத்துவம், சோதரத்துவம், இன்பம் ஆகியவற்றை அது உலகில் நிலைநாட்டும்''[1] என்று செயல்திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பால் தனது விசுவாசத்தைச் செயல்திட்டத்தில் இன்னொரு முறை வலியுறுத்தியது. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''சோவியத் யூனியனில் கம்யூனிஸக் கட்டுமானம் சோவியத் மக்களின் மாபெரும் சர்வதேசப் பணி என்றும் உலக சோஷலிஸ அமைப்பு அனைத்தினுடையவும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினுடையவும் மனிதகுலம் முழுவதனுடையவும் நலன்களுக்கு ஏற்றது என்றும் கட்சி கருதுகிறது''.[2]

கார்ல் மார்க்ஸ், ஃபிரிட்ரிஹ் எங்கெல்ஸ், வி.இ. லெனின் ஆகியோரின் நூல்களை வெளியிடுவதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்

---

[1] சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயல்திட்டம், பக்கம் 6.

[2] அதே நூல், அதே பக்கம்.

டுக் கட்சி ஆற்றியுள்ள தொண்டு கம்யூனிஸ்டு இயக்கம் அனைத்தினுடையவும் கொள்கைவாத-சித்தாந்தத் தரத்தை உயர்த்துவதில் அதன் முக்கியமான பங்களிப்பாக விளங்குகிறது. மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவருடையவும் முன்பு பிரபலம் அடையாதிருந்த பெருந்தொகையான படைப்புக்களை அரும்பாடு பட்டுத் திரட்டி, மார்க்சிய ஸ்தாபகர்களின் ஒப்பிட முடியாத அளவு அதிக முழுமையான நூல்திரட்டின் இரண்டாவது பதிப்பை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வெளியிட்டிருக்கிறது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, செக்கோஸ்லோவாக்கியா, பல்கேரியா, போலந்து, ஹங்கேரி, ருமேனியா, ஜப்பான் ஆகியவை இந்தப் பதிப்பை ஆதாரமாகக் கொண்டு மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்திரட்டை வெளியிட்டிருக்கின்றன.

வி.இ. லெனினுடைய நூல்களின் ஐந்தாவது, முழுமையான திரட்டு வெளியிடப்பட்டது மனிதகுலம் அனைத்தினதும் கொள்கைவாத வாழ்வில் மிகப் பெரிய நிகழ்ச்சி ஆகும். வி.இ.லெனினது முழு நூல் திரட்டு அனேகமாக எல்லா சோஷலிஸ நாடுகளிலும் பல முதலாளித்துவ நாடுகளிலும் வெளியிடப்படுகிறது. மொழி பெயர்ப்புக்களின் எண்ணிக்கையில் வி.இ. லெனினுடைய நூல்கள் உலகில் முதல் இடம் பெற்றுள்ளன. மார்க்சியத்தின் தற்கால நிலைமைகளுக்கு ஏற்ற தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் வள நிறைவாகவும் விளங்கும் லெனினது மாபெரும் போதனை உண்மையான சர்வதேசியத் தன்மை வாய்ந்தது. சமுதாயப் புத்தமைப்புக்கு உரிய சிக்கலான பெரும் பணிகளை நிறைவேற்றவும் சோஷலிஸத்துக்காகவும் கம்யூனிஸத்துக்காகவும் போராடவும் அது உலக மக்களுக்குத் துணை புரிகிறது.

யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமைக்கான போராட்டத்தில் முன்னிலும் அதிக ஊக்கத்துடன் பங்காற்றி வருகிறது. பல நாடுகளின் சோஷலிஸ்டு, சமூக-ஜனநாயகக் கட்சிகளின் தலைவர்களுடன் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களின் சந்திப்புக்களும் தொழிலாளர் இயக்கத்தின் அடிப் படைப் பிரச்சினைகள் பற்றி இந்தச் சந்திப்புக்களின் போது நடந்த கோட்பாட்டு ரீதியான விவாதங்களும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் அனேகப் பிரச்சினைகள் குறித்து கம்யூனிஸ்டுகளுடையவும் சமூக-ஜனநாயகவாதிகளுடையவும் நோக்குநிலைகளைத்

தெளிவுபடுத்தவும் ஒன்றுக் கொன்று அருகே கொண்டுவரவும் உதவின.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி எல்லா மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து வகுத்த உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கின் பால் அசைக்க முடியாத விசுவாசம் கடைப்பிடித்து வருகிறது. கம்யூனிஸ்டு இயக்கத்தில் தற்போது நிலவும் பிளவை அகற்றும் பொருட்டும் கட்சிகளுக்கு இடையே பரஸ்பர உறவுகள் பற்றிய மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின் முழு வெற்றியின் பொருட்டும் அது சளைக்காமல் போராடிவருகிறது.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் நிலைகளை வலுவாக்கி விரிவுபடுத்துவதிலும் அதன் ஒற்றுமையை உறுதிப்படுத்துவதிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் இருபத்து மூன்றாவது காங்கிரஸ் பெருத்த தொண்டு ஆற்றியது. கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் தனது செயல்களைக் காங்கிரசுக்கு சமர்ப்பித்த விவர அறிக்கையில் தொகுத்துரைக்கையில் பின்வருமாறு அழுத்திக் கூறியது: ''சமூக வளர்ச்சி பற்றிய விஞ்ஞான சித்தாந்தத்தைப் பெற்றிருக்கும் காரணத்தால் மனிதகுலத்தின் வரலாற்று ரீதியான வருங்கால வாய்ப்புக்களைத் தெளிவாகக் காணும் ஒரே உலக அரசியல் இயக்கம் கம்யூனிஸம். 1957ம் 1960ம் 1969ம் ஆண்டு மகாநாடுகளில் சோதரக் கட்சிகளால் கூட்டாகத் தயாரிக்கப்பட்ட கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கு, சமாதானமும் ஜனநாயகமும் தேசிய சுதந்திரமும் சோஷலிஸமும் வெற்றி பெற வழி வகுக்கும் போக்கு ஆகும், மனிதகுலம் அனைத்தின் நலன்களுக்கும் அது ஏற்றது. அதன் அடிப்படையில் அண்மை ஆண்டுகளில் பெரும்பாலான கம்யூனிஸ்டுக் கட்சிகள் தேசிய நலன்களையும் பணிகளையும், அவ்வாறே சர்வதேசிய நலன்களையும் பணிகளையும் கருத்தில் கொண்டு புதிய செயல்திட்ட தஸ்தாவேஜுகளை ஏற்றன.

''இந்த ஆண்டுகளில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வதேச நடவடிக்கை, மற்றக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுடனும் ஒற்றுமையையும் சோதர ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்துவதையும், சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கைச் செயல்படுத்துவதற்காக

அவற்றோடு சேர்ந்து போராடுவதையும் நோக்கமாகக் கொண்ட மாறா விருப்பத்தால் நிறைந்திருந்தது.''[1]

கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுடன் சோதர ஒருமைப் பாட்டை வலுப்படுத்தவும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கைச் செயல்படுத்துவதற்காக அவற்றோடு சேர்ந்து போராடவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி கொண்டிருந்த மாறுதலற்ற விருப்பம் காங்கிரசின் தீர்மானங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் மேலாண்மை முறையைக் காங்கிரஸ் எதிர்த்தது. பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லாக் கட்சிகளுக்கும் இடையே உண்மையான சம உரிமையும் சோதர உறவுகளும் ஏற்படுவதை அது ஆதரித்தது. வலதுசாரி, ''இடதுசாரித்'' திரிபுவாதத்துக்கு எதிராகவும் தேசியவாதத்துக்கு எதிராகவும் ஒத்திசைந்த போராட்டம் நடத்துவதும் மார்க்சிய-லெனினியத்திலிருந்து எல்லா வகையான பிறழ்ச்சிகளையும் அகற்றுவதன் அடிப்படையில் கம்யூனிஸ்டு அணிகளை ஒற்றுமைப்படுத்த முயல்வதும் ஜீவாதார முக்கியத்துவம் உள்ளவை என்பதை அது பின்னும் ஒரு முறை உறுதிப்படுத்தியது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி உலகின் அனேகமாக எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. அவற்றின் பிரதிநிதிக் குழுக்களை வரவேற்கிறது, தன் பிரதிநிதிக் குழுக்களை அனுப்புகிறது. அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறது. புரட்சிப் போராட்டம், உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் ஆகியவற்றின் மிக முக்கியப் பிரச்சினைகளை நட்பார்ந்த, தோழமை நிறைந்த சூழ்நிலையில் சோதரக் கட்சிகளுடன் விவாதிக்கிறது. ஏகாதிபத்தியத்துக்கும் அதன் அரசியல், கொள்கைவாத அழிவு வேலைகளுக்கும் எதிராகப் பிற கம்யூனிஸ்டுக் கட்சிகளுடன் சேர்ந்து போராடுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்றில் கம்யூனிஸ்டு அகிலத்தின் பாத்திரத்தை உயர்வாக மதித்தது, மதித்து வருகிறது. மற்றக் கட்சிகளுடன் சேர்ந்து சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி கம்யூனிஸ்டு

[1] லெ. இ. பிரேழ்னிவ். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 23வது காங்கிரசுக்கு சோ. யூ.க. கட்சி மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கை. 1966, மார்ச்சு 29. மாஸ்கோ, 1966, பக்கம் 17.

அகிலத்தை நிறுவியது. எல்லாக் கட்டங்களிலும் கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலையில் அது மிகச் செயல் ஊக்கத்துடன் பங்கு கொண்டது. தற்போது அது கம்யூனிஸ்டு அகிலத்தின் மார்க்சிய-லெனினிய முடிவுகளுக்கும் மரபுகளுக்கும் விசுவாசம் கடைப் பிடித்து வருகிறது.

''விளாதீமிர் இலியீச் லெனினது நூறுவது பிறந்தநாள் விழாவுக்கு ஏற்பாடுகள்'' பற்றிய சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப் பட்டது: ''புரட்சிச் சக்திகளை ஒற்றுமைப்படுத்துவதில் லெனினது முன்முயற்சியால் அமைக்கப்பட்ட கம்யூனிஸ்டு அகிலம் முக்கியப் பங்கு ஆற்றியது. தமக்கு இயல்பான புரட்சிஆவேசத்துடன் லெனின் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்தையும் துர்ச்சாகசப் போக்கையும் தேசியவாதத்தையும் எதிர்த்துப் போராடி வந்தார். இவற்றுல் புரட்சியினதும் சோஷலிஸத் தினதும் வருங்காலத்துக்கு நேரக்கூடிய அபாயத்தைக் குறித்துக் கம்யூனிஸ்டுக் கட்சிகளை எச்சரித்தார்''.[1]

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் பொன் விழா உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பெரிய நிகழ்ச்சியாகவும் அதனுடைய போராட்டத்தின் வெற்றியாகவும் திகழ்ந்தது. அக்டோபர்ப் புரட்சியின் பொன் விழா முற்போக்குள்ள மனித சமுதாயம் அனைத்தினுடையவும் விழா என்று உலகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் அறிக்கைகளில் கூறின. அக்டோபர்ப் புரட்சியின் வெற்றிக்குப்பின் கழிந்த ஆண்டுகள் சோவியத் மக்களின் வாழ்க்கையில் அடிப்படையான மாறுதல்கள் நிகழ்த்தியதோடு உலக வரலாறு முழுவதிலும் திருப்பம் ஏற்படுத்தின. இந்த ஆண்டுகளின் போது, மனிதகுலம் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்த எல்லா மிக முக்கியப் பிரச்சினைகளுக்கும் சித்தாந்த, நடைமுறை விடைகள் அளிக்கப்பட்டன. சகாப்தத்தின் அடிப்படையான முரண்பாடுகளின் வெற்றிகரமான தீர்வுக்கு உதாரணம் காட்டப்பட்டது.

இந்த ஆண்டுகளில் சோவியத் யூனியனிலும் பின்னர் பிற சோஷலிஸ நாடுகளிலும் கம்யூனிஸ நாகரிகத்தின் அடிப்படைகள் அமைக்கப்பட்டன. வருங்காலம் இந்த நாகரிகத்துக்கே உரியது ஆகும்.

---

[1] விளாதீமிர் இலியீச் லெனினது நூறுவது பிறந்தநாள் விழாவுக்கு ஏற்பாடுகள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் தீர்மானம். மாஸ்கோ, 1968, பக்கம் 17.

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மரபுகளும் கம்யூனிஸ்டு அணிகளின் ஒற்றுமைக்கான போராட்டமும்

பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் வளர்ச்சி

சுரண்டுவோருக்கு எதிராகப் போராட்டத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு, தொழிலாளர் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிக முக்கியமான புரட்சி மரபுகளில் ஒன்றாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ருஷ்யாவின் உழைப்பாளி மக்களால் நிறைவேற்றப்பட்ட அக்டோபர்ப் புரட்சி தொழிலாளி வர்க்கத்தின் சர்வதேசியத் தன்மையின் மாட்சி மிக்க வெளிப்பாடாகத் திகழ்ந்தது.

அக்டோபர்ப் புரட்சி, தற்காலக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் உதயம், உலக சோஷலிஸப் புரட்சி மேலும் விரிவாகப் பரவியது ஆகியவை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கொள்கைவாதத்தையும் நடைமுறையையும் புதிய மட்டத்துக்கு உயர்த்தின, அதன் உள்ளடக்கத்தை வளப்படுத்தின, அதன் உண்மையான அரசியல் பாத்திரத்தைக் கணிசமாக உயர்த்தின. சர்வதேச ஒருமைப்பாடு அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தில் அதன் விறல் மிக்க ஆயுதம் ஆயிற்று.

உலகின் முதலாவது சோவியத் அரசு தோன்றியதும் புதிய சோஷலிஸ அரசுகள் தோன்றும் வாய்ப்பும் முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் இயக்கத்துக்கும் சோவியத் யூனியனும் வருங்கால சோஷலிஸ அரசுகளும் வளர்ச்சி அடைந்து வலுப்படுவதற்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பு குறித்த பிரச்சினையை எழுப்பின. ஒரு புறம், சோவியத் குடியரசின் வடிவில் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கு அதன் புரட்சிகர அடிப்படை மாற்றச் செயலில் பொருளியல் ஆதாரம் கிடைத்தது. மறு புறம், சோவியத் குடியரசும் பிற சோஷலிஸ நாடுகளுமே (அவை உருவாகும் அளவுக்கு ஏற்ப) சர்வதேசப் பிற்போக்கினது புதிய தாக்குதலின் இலக்காக விளங்குகின்றன. இந்த விவரத்தைக் கருத்தில் கொண்டு கம்யூ

னிஸ்டு அகிலம் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முக்கியமான புதிய அம்சத்தைச் சூத்திரப்படுத்தியது. புரட்சி எதிர்ப்புச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் எந்த சோஷலிஸ அரசுக்கும் தன்னலம் அற்ற ஆதரவு அளிப்பது ஒவ்வொரு கட்சியினதும் ஒவ்வொரு கம்யூனிஸ்டினதும் கடமை என்பது அது. வர்க்கப் போராட்டம் மேலும் தீவிரம் அடைந்ததற்கும் உலக சோஷலிஸப் புரட்சி மேலும் வளர்ச்சி பெற்றதற்கும் ஏற்ப இந்த அம்சம் மேலும் அதிக முக்கியத்துவம் உள்ளது ஆயிற்று. இந்தக் கோட்பாடு செயல்பட்டது உலக அரங்கில் சோஷலிஸத்தின் நிலைகள் விரிவாகி உறுதிப்படுவதற்குப் பெரிதும் காரணமாய் இருந்தது.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் வலுவடைந்து வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தின் புரட்சித் தாக்குதல் அதிகரித்ததன் விளைவாக, போராடும் பாட்டாளி வர்க்கத்தின் பல்வேறு தேசியப் படைப்பிரிவுகளின் பரஸ்பரத் தொடர்பு குறித்த பிரச்சினை புது வகையில் எழுந்தது. புதிய நிலைமைகளில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தேசியப் படைப்பிரிவுகளது புரட்சி முன்முயற்சியும் இந்த முன்முயற்சிக்குப் பிற நாடுகளின் தொழிலாளர்கள் எல்லா வகையிலும் ஆதரவு அளிப்பதும் அடங்கும் என்று வி.இ. லெனினும் அவருடைய கருத்துக்களுக்கு இணங்கக் கம்யூனிஸ்டு அகிலமும் வலியுறுத்தி வந்தார்கள். பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்குப் பின்வருவன தேவைப்படுவதாக வி. இ. லெனின் சுட்டிக்காட்டினார்: "...முதலாவதாக, ஒரு நாட்டில் நடக்கும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்கள் உலக அளவில் நடக்கும் இந்தப் போராட்டத்தின் நலன்களுக்குக் கீழ்ப்பட வேண்டும்; இரண்டாவதாக, பூர்ஷ்வா வர்க்கத்தை வெற்றி கொள்ளும் நாட்டினம் சர்வதேச மூலதனத்தைக் கவிழ்த்தும் பொருட்டு மிகப் பெருத்த தேசியத் தியாகம் செய்யத் திறமையும் இசைவும் கொண்டிருக்க வேண்டும்".[1]

காலனிகளையும் அரைக் காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த கோடானுகோடி வெகுஜனங்களின் வடிவில் உழைப்பாளி மக்களின் புதிய படைப்பிரிவு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சி இயக்கத்தில் சேர்ந்திருப்பது முதலாளித்துவத்தின் பொது

---

[1] **வி. இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி *31*, பக்கம் ***148*.**

நெருக்கடிக் காலக் கட்டத்தில் வரலாற்று வளர்ச்சியின் முக்கியச் சிறப்பு இயல்பாகும். விடுதலைப் போராட்டத்தின் புதிய, விரிவான முனை திறக்கப்பட்டிருக்கிறது. ஆட்சித்தலைமை நாடுகளில் நடக்கும் தொழிலாளர் இயக்கம், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் தேசிய-விடுதலைப் போராட்டம் ஆகியவற்றின் ஐக்கியமும் பரஸ்பர உதவியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் தீர்மானங்களில் விஞ்ஞான-சித்தாந்த நோக்கிலும் அரசியல் நோக்கிலும் ஆதாரபூர்வமாக நிலை நாட்டப்படுள்ளன. கம்யூனிஸ்டு அகிலத்தைச் சேர்ந்திருக்க விரும்பும் ஒவ்வொரு கட்சியும் காலனி நாடுகளின் விடுதலை இயக்கத்தைச் சொல்லில் இன்றிச் செயலில் ஆதரிப்பதும் தங்கள் நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் இந்தக் காலனிகளிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று கோருவதும் இன்றியமையாதது என்று கம்யூனிஸ்டு அகிலத்தின் தீர்மானங்களில் சிறப்பாக வலியுறுத்தப்பட்டது.

புரட்சி இயக்கத்தின் வளர்ச்சியும் கம்யூனிஸ்டு அகிலத்தின் சித்தாந்த, அரசியல் நடவடிக்கைகளும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கையில் தேசிய அம்சங்களுக்கும் சர்வதேசிய அம்சங்களுக்கும், பாட்டாளி வர்க்க விடுதலைப் போராட்டத்தில் நாட்டுப் பற்று அம்சங்களுக்கும் வர்க்க அம்சங்களுக்கும் உள்ள பரஸ்பரத் தொடர்பின் இயக்க இயலையும் வளப்படுத்தின. சோஷல்-ஷோவினிஸ்டுகள் தேசபக்தர்களாகப் போலி நடிப்பு நடித்தவாறு பாட்டாளி வர்க்கத்தின் தேசிய நலன்களுக்கும் வர்க்க நலன்களுக்கும் துரோகம் செய்தார்கள் என்பது தெரிந்ததே. இந்த அதிகாரபூர்வமான போலி தேசபக்தியின் எதிர்விளைவாக கம்யூனிஸ்டு இயக்கத்தின் சில தலைவர்கள் தேசபக்தியின் பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் அறவே மறுத்தார்கள். தொழிலாளி வர்க்கம் எல்லா ஒடுக்கப்படுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் மையத்தில் இருக்கும்போது, தேசிய, சமுதாய, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளின் முற்போக்குள்ள தீர்வுக்காகச் சலிக்காமல் போராடும்போது, வர்க்கக் கடமையும்,அவ்வாறே தேசிய-நாட்டுப் பற்றுக்கு உரிய பணிகளையும் நிறைவேற்றுகிறது என்று வி. இ. லெனினும் அவருடைய தலைமையில் கம்யூனிஸ்டு அகிலமும் விடாப்பிடியாக விளக்கி வந்தார்கள். நாட்டின் முற்போக்குள்ள மரபுகளுக்கும் அதன் பண்பாட்டுச் செல்வத்துக்கும் சிறந்த, மிக நம்பகமான உரிமையாளியாகவும் காப்பாளியாகவும் அவற்றைத் தொடர்ந்து வளப்படுத்துவதாகவும் விளங்குகிறது தொழிலாளி

வர்க்கம். நாட்டுக்கு உள் வர்க்க எதிர்நிலைகளின் ஊற்றுக்கண்களாக இருக்கும் சுரண்டுவோரின் தனி உடைமையையும் அரசியல் அதிகாரத்தையும் ஒழிப்பதன் வாயிலாக தேசிய வளர்ச்சிக்குப் பண்பு வகையில் புதிய நிலைமைகளை உருவாக்குவது அதன் மாட்சிமிக்க தேசபக்தக் குறிக்கோள் ஆகும்.

சர்வதேசியவாதிகள் சிறந்த தேசபக்தர்கள் என்பது இந்தப் பிரச்சினை குறித்துக் கம்யூனிஸ்டு அகிலத்தின் கோட்பாட்டு நிலையாக இருந்தது. கம்யூனிஸ்டு அகிலத்தினது நடவடிக்கைகளின் பயனாக, சர்வதேசியம், ஒத்திசைந்த தேசபக்தி ஆகியவற்றின் பிரிக்க முடியாத சேர்க்கையும் தேசிய, சர்வதேசியப் பணிகளின் சரியான ஒப்புநிலையும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாத நிபந்தனைகளாக விளங்குகின்றன, சோஷலிஸ இயக்கத்தின் பொருட்டுப் புதிய, பிரமாண்டமான அரசியல், ஒழுக்கநெறிச் சேமிப்புக்களைத் தட்டி எழுப்புகின்றன, அணிதிரட்டுகின்றன, தொழிலாளி வர்க்கத்தின் தரப்புக்குப் புதிய கூட்டாளிகளை ஈர்க்கின்றன என்ற புரிவு கம்யூனிஸ்டுகளிடையே உறுதிப்பட்டுவிட்டது.

இடையறாது வளர்ந்தும் ஆழ்ந்தும் வரும் சர்வதேசியப் பதாகையின் கீழ் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கொள்கைவாத-சித்தாந்த, அரசியல் தரம் உயர்ந்து வருகிறது; உலக விடுதலைப் போராட்டத்தின் வெவ்வேறு பெருக்குகளும் தேசியப் படைப்பிரிவுகளும் ஒன்று சேர்ந்துள்ளன; சர்வதேச மூலதனத்தின் மீது தாக்குதல் விரிவாக நடந்து வருகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியப் பதாகையின் கீழ் சோவியத் யூனியனில் சோஷலிஸம் நிறுவப்பட்டது, பாசிஸத்தின் மீது மாபெரும் வெற்றி பெறப்பட்டது, ஏகாதிபத்தியச் சங்கிலியில் மேலும் முறிவுகள் ஏற்படுத்தப்பட்டன, சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவாகி மூன்று கண்டங்களில் பரவி உள்ளது. ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்துடன் உலக சோஷலிஸத்தினதும் புரட்சி இயக்கத்தின் எல்லாப் போக்குகளதும் மாபெரும் போராட்டம் பாட்டாளி வர்க்க சர்வதேசியப் பதாகையின் கீழ் தற்போது நடந்து வருகிறது.

தற்போதைய உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டின் மாட்சிமிக்க மரபுகளுக்கு வாரிசாகவும் அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதாகவும் செயலாற்றுகிறது. இந்த மரபுகள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் நூல்களில் விஞ்ஞான ஆதாரத்துடன் நிலைநாட்டப்பட்டுள்ளன.

முதலாவது அகிலத்தின் செயல்கள் இவற்றைச் சேமித்து வைத்தன. தனது சிறந்த காலப்பகுதியில் இரண்டாவது அகிலம் தன் செயல் களில் இவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்தது. கம்யூனிஸ்டு அகிலத்தின் சித்தாந்தமும் நடைமுறையும் இவற்றைப் புதிய மட்டத்துக்கு உயர்த்தின. இந்தக் காலப் பகுதிகள் அனைத்திலும் ஆட்சியிலிருந்த பூர்ஷ்வா வர்க்கமும் தொழிலாளி வர்க்கத்தின் சந்தர்ப்பவாத உட்குழுக்களும் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கொள்கைவாதத்தை மிகக் கடுமையாகத் தாக்கி வந்தன. சர்வ தேசியக் கோட்பாடுகள் தற்கால நிலைமைகளில் கடும் சோதனை களுக்கு உள்ளாகி வருகின்றன. சீர்திருத்தவாதிகளின் தரப்பிலும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் உள்ள திரிபுவாத, தேசியவாதச் சக்தி களின் தரப்பிலுமிருந்து கடுமையான நெருக்குதலுக்கு இவை உள் ளாகி வருகின்றன. ஆனால் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு புரட்சி எதிரிகளின் இந்தத் தாக்குதலையும் உறுதியுடன் சமாளித்து வரு கிறது, கம்யூனிஸ்டுகளின் அணிகளில் பிளவு ஏற்படுத்துவதற் கான அழிவு வேலைகளை வெற்றிகரமாக எதிர்த்து நிற்கிறது.

தற்கால நிலைமைகளில் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் மிக முக்கியமான அம்சங்களில் அதன் பின்வரும் கோட்பாடுகளும் சேர்ந்தவை என்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் தங்கள் கூட்டுத் தீர் மானங்களிலும் செயல்திட்ட தஸ்தாவேஜுகளிலும் குறித்துள் ளன:

—சர்வதேச மூலதனத்துக்கு எதிராகவும், எல்லாப் பிற் போக்குச் சக்திகளுக்கும் எதிராகவும், சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் பொருட்டும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் எல்லாத் தேசியப் படைப்பிரிவுகளதும் ஒருமைப்பாடும் பரஸ்பர உதவியும்.

—புதிய சமூக அமைப்பின் நிலைகளை வலுப்படுத்துவதற்காகவும் உலக அரங்கில் சோஷலிஸத்தின் செல்வாக்கை உயர்த்துவதற்காக வும் அதன் மதிப்பையும் ஈர்ப்புச் சக்தியையும் அதிகமாக்குவதற் காகவும் ஒவ்வொரு சோஷலிஸ நாட்டிலும் அதிகத்திலும் அதிகமான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுவது.

—தங்கள் நாட்டின் உள்ளே புரட்சிச் சக்திகளுடையவும் எல்லா ஜனநாயகச் சக்திகளுடையவும் நிலைகளை வலுப்படுத்தி, ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்தின் தேசிய, சர்வதேச நிலைகளை ஆட்டி அசைத்து பலவீனப்படுத்தும் பொருட்டும், அதன் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட பிற்போக்கு நடவடிக்கைகளை அடக்கும்

பொருட்டும், ஏகாதிபத்தியத்தின் சங்கிலியில் புதிய முறிவுகளை ஏற்படுத்தும் பொருட்டும் தொழிலாளர், ஜனநாயக இயக்கத்தின் வளர்ந்துவரும் ஆற்றலைப் பயன்படுத்துவதற்கு முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு படைப் பிரிவும் அதிகத்திலும் அதிகமான முயற்சி எடுத்துக் கொள்வது.

—உலகப் புரட்சி நிகழ்முறையின் நிர்ணயகரமான காரணி என்ற முறையில் சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பை வலுப் படுத்த உதவக் கூடியதும் சோஷலிஸ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை விரைவில் அகற்றவும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் உலக சோஷலிஸம் அனைத்தினதும் செயல் ஒற்றுமையை நிலைநாட்டவும் ஒத்தாசை செய்யக் கூடியதுமான தேசிய, சர்வதேசக் கொள்கை எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளாலும் கடைப்பிடிக்கப்படுவது.

—புரட்சி இயக்கத்தின் உலகப் பெருக்குகளான சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு, சர்வதேசத் தொழிலாளி வர்க்கம், தேசிய-விடுதலை இயக்கங்கள் ஆகியவை, பொதுவான ஏகாதிபத் திய எதிர்ப்பு, ஏகபோக எதிர்ப்பு, சோஷலிஸக் குறிக்கோள்களை அடைவதில் சர்வாம்ச ரீதியான பரஸ்பர உதவிக்கு மிகப் பல்வேறு வடிவங்களில் வகை செய்வது; இந்தப் பரஸ்பர உதவியின் ஒளி மிக்க வெளிப்பாடுகளில் ஒன்று, வியத்நாமில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் உலகத் தொழிலாளர், ஜனநாயக இயக்கங்களும் நடத்திய போராட்டம்; இது உண்மையிலேயே சர்வப்பொதுவான சர்வ தேசத் தன்மை கொண்டிருந்தது.

—தேசிய வரம்புகளிலும் அவ்வாறே சர்வதேச அரங்கிலும் பொருத்தமான நடவடிக்கைகளின் வாயிலாக சமாதான இயக்கத் துக்கு ஒருமைப்பாடும் செயலூக்கமும் கொண்ட பாதுகாப்பு அளிப்பது.

—கட்சி உறுப்பினர்களையும் தொழிலாளி வர்க்கத்தையும் எல்லா உழைப்பாளிகளையும் மக்கள் இனங்களின் நட்பு, நாட் டினங்களதும் மானிட இனங்களதும் சமத்துவம், ஆகியவற்றின் உணர்விலும் எல்லா வகையான நாட்டு வெறியினதும் பிற மக்கள் இனங்கள் பால் இகழ்ச்சியின் எந்த அம்சத்தினதும் வெளிப்பாட் டைப் பொறுத்துக் கொள்ளாதிருக்கும் உணர்விலும் பயிற்றுவது, எல்லா வகையான மேலாண்மைவாத, பெருவல்லரசுப் போக்குக் களுக்கும், தொழிலாளர், ஜனநாயக இயக்கத்தைப் பிளவுபடுத்து

வதும் உலக ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு முன் செயல் ஒற்றுமை என்ற அதன் பிரதான சக்தியைப் பறிப்பதுமான பிற்போக்குத் தேசியவாதத்துக்கும் எதிராக உறுதியான போராட்டம்.

—சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தை ஒத்திசைந்த முறையில் காப்பதும் வலுவாக்குவதும், பிளவுகளையும் கருத்து வேறுபாடுகளையும் அகற்றுவதையும், உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்திலும் மாபெரும் சோஷலிஸ ஆதர்சங்களை அடைவதிலும் எல்லாத் தேசிய மார்க்சிய-லெனினியப் படைப் பிரிவுகளதும் செயல் ஒற்றுமையை ஏற்படுத்துவதையும் அதே சமயம் எல்லாச் சோதரக் கட்சிகளுடையவும் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதையும் நோக்கமாகக் கொண்ட செயலூக்கமுள்ள கொள்கை.

—மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் முழுமையையும் தூய்மையையும் காப்பதும் தற்கால நிலைமைகளில் உலகப் புரட்சி நிகழ்முறையின் பொதுப் போக்குகளையும், ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர-மாற்றியமைப்புச் செயலின் ஸ்தூல வரலாற்றுத் தனித்தன்மைகளையும் மேலும் ஆழ்ந்து பகுத்தாய்வதன் பொருட்டு எல்லாக் கட்சிகளதும் கூட்டு முயற்சிகளால் அதைப் படைப்புத்தன்மையுடன் விரிவுபடுத்துவதும்.

—உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் கூட்டாகத் தயாரிக்கப் பட்ட பொதுக் கொள்கைப் போக்கின்பால் விசுவாசம், இந்தப் போக்கிலிருந்து வலதுசாரித் திரிபுவாத சித்தாந்தம், நடைமுறை ஆகியவற்றின் திசையிலும் சரி, இடதுசாரிக் கடைக்கோடிப் போக்கு, பிரிவுவாதம், துர்ச்சாகசச் செயல்தந்திரம் ஆகியவற்றின் திசையிலும் சரி, எல்லா விதமான பிறழ்ச்சிகளையும் ஒழிப்பதற்கு விடாப்பிடியான, பொறுமையுள்ள வேலை.

பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகள் ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிக்கப்படுவது கம்யூனிஸ்டு இயக்கத்துக்குப் புதிய வரலாற்று வாய்ப்புக்களை அளிக்கிறது, அதன் ஒற்றுமையை வலுப்படுத்துகிறது, அதன் வளர்ந்துவரும் விறலுக்கும் மாற்றி அமைக்கும் சக்திக்கும் தோற்றுவாயாகத் திகழ்கிறது, உலகு அனைத்திலும் சோஷலிஸ ஆதர்சங்கள் வெற்றி பெற வழி வகுக்கிறது.

கம்யூனிஸ்டு அணிகளின் ஒற்றுமைக்கான போராட்டம்

எல்லா வகையான சந்தர்ப்பவாத உட்குழுக்களுடனும் போக்குகளுடனும் குழுக்களுடனும் திசைத்திருப்பங்களுடனும் மும்முரமான போராட்டத்தில் கம்யூனிஸ்டு அகிலமும் அதன் பிரிவுகளும் அமைக்கப்பட்டு வளர்ச்சி அடைந்தன. மார்க்சிய-லெனினியவாதிகள் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையையும் புரட்சித் தன்மையையும் அதன் விஞ்ஞான அடிப்படைகளின் தூய்மையையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கோட்பாடுகளின்பால் விசுவாசத்தையும் காத்தார்கள். சீர்திருத்தவாதிகள், இடைநிலைவாதிகள், அராஜகவாத-சிண்டிக்கலிஸ்டுகள், திரோத்ஸ்கிவாதிகள், திரிபுவாதிகள், வலதுசாரி சந்தர்ப்பவாதிகள், குட்டிபூர்ஷ்வாப் புரட்சிவாதத்தினுடையவும் இடதுசாரி துர்ச்சாகசங்களுடையவும் ஆதரவாளர்கள், குறுகிய பிரிவுவாதிகள் ஆகியோரதும் நிலையுறுதியற்றவர்களும் ஊசலாடுபவர்களுமான பிற வகை நபர்களுடையவும் தாக்குதல்களை மார்க்சிய-லெனினியவாதிகள் எதிர்த்துப் போராடி வந்தார்கள்.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையையும் ஒன்றிணைப்பையும், மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் தூய்மையையும் படைப்புத் தன்மை கொண்ட வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகளையும் முறைகளையும் பற்றிய பிரச்சினை தற்போதையக் காலக் கட்டத்தில் முன்னிலும் அதிக அவசரத் தேவையும் அரசியல் முக்கியத்துவமும் உள்ளது ஆகிவிட்டது.

ஒரு புறம், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சித்தாந்த, நடைமுறைச் செயல்கள் மீது மையப்படுத்தப்பட்ட தலைமை, செல்வாக்கு ஆகியவற்றின் எல்லா வித வடிவங்களும் பழங்கதை ஆகிவிட்டன. போர்த்தந்திரத்தையும் செயல்தந்திரத்தையும் தீர்மானிப்பதிலும் கொள்கையைக் கடைப்பிடிப்பதிலும் கட்சிகளின் சுதந்திரம் பற்றிய கோட்பாடு கம்யூனிஸ்டு இயக்கத்தில் நிலைபெற்று, ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மறு புறம், கம்யூனிஸ்டு இயக்கம் விரிவாகத் தீவிர வளர்ச்சி அடைந்தது, முன்பு ஒடுக்கப்பட்டிருந்த நாடுகளின் பெருந்திரளான வெகுஜனங்கள் புரட்சிப் போராட்டத்தில் கலந்துகொண்டது, உழைப்பாளிகளின் பாட்டாளிகள் அல்லாத வட்டாரங்கள் அதிகரித்ததால் சமுதாய முன்னேற்றத்தின் இயக்கு சக்திகள்

விரிவடைந்தது, பெருந்திரளான அறிவுஜீவிகள் பாட்டாளி வர்க்க அணிகளில் சேர்ந்தது ஆகியவை சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் நிகழ்முறையின் வெற்றி தவிர்க்க இயலாதது என்பதைக் காட்டும் அதே சமயத்தில் இருண்ட பகுதிகளையும் உள்ளடக்கி இருக்கின்றன.

கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தில் அதற்கு அயலான பண்புகள்—பாட்டாளிவர்க்கத் தன்மை அற்ற கொள்கைவாதத்தின் அம்சங்கள், கொள்கைவாத-அரசியல் உறுதியின்மை, திரிபுவாத ஊசலாட்டங்கள், பொறுமை அற்ற புரட்சி ஆவேசம், சர்வதேச சுயகட்டுப்பாட்டின்பால் பகைமை, சர்வதேசியக் கடமையின்பால் இகழ்ச்சி, பல வகையான தேசியவாத மனப்பான்மைகள் ஆகியவை—புகுத்தப்பட்டு வருகின்றன.

வி.இ. லெனின் எழுதினர்: ''தங்கள் வளர்ச்சியில் பின்தங்கி விட்ட அல்லது பின்தங்கி வரும் பொருளாதார உறவுகள் தொழிலாளர் இயக்கத்தின் ஒரு வகை ஆதரவாளர்கள் தோன்றுவதற்கு இடையருது காரணம் ஆகின்றன. பொதுவாக பூர்ஷ்வா உலகக் கண்ணேட்டத்தின் எல்லா மரபுகளையும், சிறப்பாக பூர்ஷ்வா-ஜனநாயக உலகக் கண்ணேட்டத்தை அறவே கைவிடும் நிலையில் இல்லாமையால் இவர்கள் மார்க்சியத்தின் சில அம்சங்களை மட்டும், புதிய உலகக் கண்ணேட்டத்தின் தனித்தனிப் பகுதிகளை, அல்லது தனித்தனி கோஷங்களையும் கோரிக்கைகளையும் மட்டும் கற்றுக் கொள்கிறார்கள்''.[1]

உண்மையாகவே கம்யூனிஸ்டு இயக்கம் பாட்டாளிகள் அல்லாத உழைப்பாளி வட்டாரங்களின் கொள்கைவாதம், அரசியல் ஆகியவற்றின் மிகப் பெரிய நெருக்குதலுக்கு உள்ளாகி வருகிறது. நாட்டுவெறியாக மாறும் போக்குள்ள, சுயதிருப்தி கொண்ட பிற்போக்கு தேசியவாதம், மார்க்சிய-லெனினியத்துக்குப் புறம்பான கொள்கைவாதம், அரசியல் ஆகியவற்றின் யாவற்றிலும் திட்பமான வெளியீடாக விளங்குகிறது.

விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியோடு கூடவே தேசிய உணர்வும் அதிகரிக்கிறது. இது தனது ஏகாதிபத்திய எதிர்ப்பு அம்சத்தில் முற்போக்குள்ள பங்கு ஆற்றுகிறது. ஆனல் கம்யூனிஸ்டு இயக்கத்திலும் சோஷலிஸ உலகிலும் புகுத்தப்பட்டு, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு எதிராக வைக்கப்படும்

---

[1] **வி.இ. லெனின்.** முழு நூல் திரட்டு, தொகுதி 16, பக்கம் 348.

போது தேசியவாதம் தீங்கு விளைக்கிறது. நாட்டினத்துக்கும் மொத்தத்தில் சோஷலிஸத்தின் பொதுக் குறிக்கோளுக்கும் அது கேடு செய்கிறது. விடுதலைச் சக்திகளையும் மாற்றி அமைக்கும் சக்திகளையும் பலவீனப்படுத்துகிறது. சமுதாய முன்னேற்றத்தைத் தடைப்படுத்துகிறது.

''...தேசியவாதத்தின் நோக்கு நிலையை மேற்கொள்பவன், தனது தேசியவாதத்தை, தனது தேசியத் தொழிலாளர் இயக்கத்தைச் சுற்றிச் சீனச் சுவர் எழுப்ப விரும்பும் அளவுக்கு இயல்பாகவே சென்றுவிடுவான். ஒவ்வொரு நகரத்திலும் சிற்றூரிலும், கிராமத்திலும் சுவர்கள் எழுப்ப வேண்டி வரும் என்பது கூட அவனுக்குக் கலக்கம் உண்டாக்காது. எல்லா நாட்டினங்களையும், எல்லா மானிட இனங்களையும் எல்லா மொழிகளையும் சேர்ந்த பாட்டாளிகளை அருகே கொணர்ந்து ஒன்றுபடுத்தும் மாபெரும் அறிவுரையை, தனிப்படுத்துவதும் கூறுபோடுவதுமான தனது செயல்தந்திரத்தால் **ஒன்றும் அற்றது ஆக்குவது** கூட அவனுக்குக் கலக்கம் ஏற்படுத்தாது''[1] என்று எழுதினார் வி. இ. லெனின்.

முடிவாக ஒரு விஷயத்தை அழுத்திக் கூறிவிடுவது அவசியம். தேசிய ஒதுக்க நிலையும் கம்யூனிஸ்டு இயக்கத்தில் கருத்து வேறுபாடுகளும் உலக சோஷலிஸத்துடன் உலக முதலாளித்துவத்தின் அசாதாரண இறுக்கம் நிறைந்த போராட்டம் நடந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில் சிறப்பான அபாயம் உள்ளவை ஆகி விடுகின்றன. ஏகாதிபத்தியப் பிற்போக்கு, வரலாற்று வளர்ச்சியின் போக்கைத் தனக்குச் சாதகமாகத் திருப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. கம்யூனிஸ்டு இயக்கத்தில் தேசியவாத நோக்குகளும் பிளவும், சோஷலிஸ நாடுகளுக்கு இடையே உறவுகளில் முரண்பாடுகளும் இடர்களும் இருப்பது, ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிர்த்தாக்குத் துர்ச்சாகசங்களில் ஈடுபடுவதற்குத் தூண்டுதல் ஆகிறது. எனவே, தேசியவாதத்துக்கு எதிராகவும், திரிபுவாதத்துக்கும் குட்டி பூர்ஷ்வாப் புரட்சிவாதத்துக்கும் இடதுசாரி அதிதீவிரவாதத்துக்கும் எதிராக, மார்க்சிய-லெனினியத்துக்கு விசுவாசம் கடைப்பிடிப்பதன் பொருட்டும், பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளை, செயல்திட்ட தஸ்தாவேஜுகளில் கூறியிருப்

---

[1] வி.இ. லெனின். முழு நூல் திரட்டு, தொகுதி 6, பக்கங்கள் 520-21.

பது போன்று, ஒத்திசைந்த முறையில் செயல்படுத்துவதன் பொருட்டும் போராடுவது ஒவ்வொரு மார்க்சிய-லெனினியக் கட்சியினதும் ஒவ்வொரு புரட்சிக்கார-சர்வதேசியவாதியினதும் மிக முக்கியப் பணி ஆகும்.

கடந்த கால் நூற்றுண்டுக் காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் திரிபுவாத அபாயத்தைப் பல முறை எதிர்ப்பட்டன. திரிபுவாதிகள் மார்க்சிய-லெனினியத்தின் சர்வதேசியத் தன்மையை எதார்த்தத்தில் மறுக்கிறுர்கள். புரட்சி சித்தாந்தத்தைப் படைப்புத் தன்மையுடன் விரிவுபடுத்துவதாகவும் புதிய நிகழ்ச்சிகளேயும் மெய் விவரங்களேயும் பொதுமைப்படுத்துவதாகவும் பறைசாற்றியவாறு, நிலவும்இடர்ப்பாடுகளேயும்அகநிலேத் தவறுகளேயும் பயன்படுத்திக் கொண்டு, புரட்சியின் வளர்ச்சியையும் சோஷலிஸக் கட்டுமானத்தையும் சோஷலிஸ வாழ்வின் ஒழுங்கமைப்பையும் பற்றிய பொது விதிமுறைகள் குறித்த போதனையைக் குழி தோண்டிப் புதைத்து விட இவர்கள் முயல்கிறுர்கள். திரிபுவாதிகள் தேசியச் சிறப்புத் தன்மைகளே மிகைப்படுத்துகிறுர்கள். அவை சார்பற்ற முழுமையானவை என்கிறுர்கள். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பது பற்றிய பொதுக் கருத்துக்கு எதிராக இவற்றை வைக்கிறுர்கள். இந்தக் காரணத்திஞலேயே ''தேசிய சோஷலிஸம்'' பற்றிய பல்வேறு கருத்துக்கள் தோன்றுகின்றன, சோஷலிஸத்தின் புதிய ''மாதிரிகள்'' பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. இவை திரட்டப்பட்ட அனுபவத்தையும் மார்க்சிய-லெனினிய போதனையையும் புறக்கணிக்கின்றன. ஆனுல், சோஷலிஸ சமுதாயத்தின் தன்மை பற்றிய மார்க்சிய-லெனினியப் புரிவிலிருந்து விலகுவதற்கான எந்த முயற்சியும் கட்டாயமாக அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் தோல்விகள் அடையும், பூர்ஷ்வா நசுக்குதல் தீவிரம் ஆவதற்கு விரிவான வாய்ப்பு அளிக்கும் என்பதைக் கடுமையான நடைமுறை அனுபவம் மறுபடி மறுபடி காட்டி இருக்கிறது.

லெனினியவிரோத நிலேகளுக்கு இழிந்துவிட்டதும், இடதுசாரி-துர்ச்சாகச, பெருவல்லரசு-நாட்டுவெறிக் கொள்கையை சர்வதேச அரங்கிலும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்திலும் கடைப்பிடித்துவருவதும் ஆன மா சே-துங் குழு, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமைக்குப் பெருத்த அடி கொடுத்துவிட்டது.

மா சே-துங்கும் அவருடைய குழுவினரும் கொண்டிருந்த தவறுன அரசியல், சித்தாந்தக் கருத்துக்களுடன் ஒரு காலத்தில்

கம்யூனிஸ்டு அகிலம் போராடிவந்தது. அவர்களுடைய சந்தர்ப்பவாதச் சீர்கேடு அந்தக் கருத்துக்களின் தர்க்க ரீதியான வளர்ச்சியாகவும் நிறைவாகவும் விளங்குகிறது.

சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கு குறித்த பிரச்சினைகள் மீது மா சே-துங்கும் அவருடைய குழுவினரும் கொண்டிருக்கும் நோக்குநிலை, **பிரகடனத்திலும் அறிக்கையிலும்** விவரிக்கப்பட்டுள்ள, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் கொள்கை, போர்த்தந்திரம், செயல்தந்திரம் ஆகியவற்றின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்துக்களின் திரிபு ஆகும்.

மா சே-துங் குழுவினர் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தைப் பிளவுபடுத்தும் நோக்கத்துடன் வெறிகொண்ட பிரசாரக் கிளர்ச்சியை விரிவாக நடத்தினார்கள். தங்கள் நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்காக எந்தச்சாதனத்தையும் கையாள அவர்கள் தயங்கவில்லை. மற்றக் கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் தங்கள் ஆணைக்குக் கீழ்ப் படுத்தவோ அல்லது அவற்றைப் பிளவுபடுத்தவோ அவர்கள் முயன்றார்கள். பல்வகையான கொள்கைமாறிகளையும் பதவி வேட்டைக்காரர்களையும் கட்சிகளிலிருந்து ஒரு காலத்தில் விலக்கப் பட்ட நபர்களையும் திரட்டிச் சேர்க்கத் தலைப்பட்டார்கள். சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவில் ''மார்க்சிய-லெனினியக் கட்சிகள் அல்லது குழுக்கள்'' எனப்படுபவை அமைக்கப்பட்டன. இவை பெருத்த நிதி உதவி பெற்றன, மா சே-துங் நூல்களை ஊக்கத்துடன் பதிப்பித்துத் தீவிரமாகப் பரப்பின. மா சே-துங் குழுவினர் முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த, மிகப் பெரியவையும் வலியவையும் ஆன கம்யூனிஸ்டுக் கட்சிகளைப் பலவீனப்படுத்த முதன்மையாக முயன்றார்கள்.

உழைப்பாளிகளின் வெகுஜன சர்வதேச ஸ்தாபனங்களான தொழிற்சங்கங்கள், இளைஞர், மாணவர், மாதர், எழுத்தாளர் ஸ்தாபனங்கள் முதலியவற்றிலும் மா சே-துங் குழுவினர் தங்கள் பிளவுபடுத்தும் வேலையை இவ்வாறே தீவிரமாக நடத்தினார்கள்.

''உலக நகரத்தின்'' மீது ''உலகக் கிராமத்தின்'' படையெடுப்பு என்ற கருத்தைப் புரட்சி சித்தாந்தத்தின் புதிய கண்டு பிடிப்பாக முன்வைத்து, தேசிய-விடுதலை இயக்கத்தை சோஷலிஸ நாடுகளிடமிருந்தும் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்திடமிருந்தும் துணிக்க முயல்கிறார் மா சே-துங். தேசிய-விடுதலை இயக்கத்தைத் தனக்கு அடிப்படுத்துவதும் தன் பெருவல்லரசு,

மேலாண்மை நோக்கங்களுக்கு அதைப் பயன்படுத்துவதும் அவருடைய நோக்கம்.

மா சே-துங்கின் நாசகரமான, துர்ச்சாகசக் கொள்கை அவருக்குக் கீழ்ப்படியும் குழுக்கள் மீது திணிக்கப்பட்டு அனேக தோல்விகளை ஏற்கனவே விளைத்துள்ளது.

மா சே-துங் குழுவினர் கம்யூனிஸ்டு இயக்கத்தையும் உலக சோஷலிஸ அமைப்பையும் பிளவுபடுத்தும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் வாயிலாக உண்மையில் ஏகாதிபத்திய வாதிகளுக்கே உதவுகிறார்கள், அவர்களுடைய போர்த் துர்ச்சாக சங்களுக்கு ஊக்கம் அளிக்கிறார்கள் (உதாரணமாக வியத்நாமில் அவர்களது கொள்ளைக்கார யுத்தத்துக்கு மா சே-துங் குழுவினர் முன்பு ஊக்கம் அளித்துவந்தார்கள்).

மா சே-துங் கடைப்பிடித்துவரும் பிளவுபடுத்தும் கொள்கை கம்யூனிஸ்டு இயக்கத்தைப் பலவீனப்படுத்துகிறது. எனவே, கம்யூனிஸ்டு இயக்கத்தை ஒன்றுபடுத்துவதற்காகவும் ஒற்றுமையின் பொருட்டும் சர்வதேச ஒருமைப்பாட்டின் பொருட்டும் போராடுவது எல்லாக் கம்யூனிஸ்டுகளுடையவும் மிக முக்கியமான முதல் பணி ஆகும்.

கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் அறிக்கையில் சிறப்பாகப் பின்வருமாறு அழுத்திக் கூறப்பட்டிருக்கிறது: ''மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளதும் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளதும் அடிப்படையில் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையை உறுதியுடன் காப்பதும், இந்த ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய எந்தச் செயலுக்கும் இடம் கொடாதிருப்பதும் தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் ஆகியவற்றுக்காகவும் சோஷலிஸப் புரட்சி, சோஷலிஸ, கம்யூனிஸக் கட்டுமானம் ஆகிய பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காகவும் நடக்கும் போராட்டத்தில் வெற்றி பெறுவதற்குக் கட்டாயமான நிபந்தனையாக விளங்குகின்றன''.[1]

உலக வளர்ச்சியின் அடுத்த போக்கு, சர்வதேச அரங்கில் சோஷலிஸத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையே நடக்கும் போராட்டத்தின் அணித்தான வருங்கால வாய்ப்புக்களும் தனித் தனி வாய்ப்புக்களும் கூட, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையையும் எல்லாப் புரட்சிச் சக்திகளதும் சர்வதேச ஒரு

[1] செயல்திட்ட தஸ்தாவேஜுகள், பக்கம் 82.

மைப்பாட்டை ஏற்படுத்துவதையுமே முதன்மையாகச் சார்ந்திருக்கின்றன.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் நிர்ணயகரமான போக்காக விளங்குவது, ஒன்றிணைவதற்கும் ஒற்றுமைக்குமான போக்கு, பாட்டாளி வர்க்க சர்வதேசியப் போக்கு என்று அதன் வளமான நீண்டகால அனுபவம் காட்டுகிறது.

இந்தப் போக்கு நேராகவோ தானகவோ ஏற்படுவதில்லை. பாட்டாளிகள் அல்லாத சூழலின் செல்வாக்கினல் கம்யூனிஸ்டு இயக்கத்தில் அவ்வப்போது தோன்றும் பல்வேறு வகையான பிளவுபடுத்தும் சந்தர்ப்பவாதக் குழுக்களும் போக்குக்களும் எவ்வளவுதான் உயிராற்றல் உள்ளவை ஆயினும், முடிவில் பார்க்கும் போது தாற்காலிகமான, இடைக்காலத் தன்மையே கொண்டிருக்கின்றன. ஒற்றுமையின் திசையிலும் ஒன்றிணைவின் திசையிலும் செயல்படும் புறநிலையான ஆழ்ந்த காரணிகளின் பாத்திரம் போராட்டத்தின் ஒவ்வொரு புதிய கட்டத்திலும் அதிகரிக்கிறது. ஒத்திசைந்த புரட்சிச் சக்திகள், மார்க்சிய-லெனினியச் சக்திகள் ஆகியவற்றின் துடியான செயல்களின் வாயிலாகப் புறநிலை வாய்ப்புக்கள் எதார்த்தம் ஆகின்றன.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமை புறநிலையாக இன்றியமையாதது, சமூகத்தைப் புரட்சி மூலம் மாற்றியமைப்பதற்குரிய விறல்மிக்க வரலாற்றுச் சக்தி. சமுதாய முன்னேற்றத்தைத் தீவிரமாக விரைவுபடுத்துவது இது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் அனைத்தினுடையவும் வெற்றிக்கும், சமாதானத்தைக் காப்பதற்கும், வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் சமுதாய முன்னேற்றத்தையும் பொருளாதார மலர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்கும், உலக அளவில் சோஷலிஸத்தின் வெற்றிக்கும் நிர்ணயகரமான நிபந்தனை ஆகும் இது. சமூகத்தின் எல்லா முற்போக்கு வட்டாரங்களும், எல்லா ஜனநாயகக் கட்சிகளும் ஸ்தாபனங்களும், யுத்த அபாயத்தையும் பாசிஸத்தையும் பிற்போக்கின் பிற வடிவங்களையும் எதிர்த்துப் போராடுவோர் அனைவரும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்துவதில் எதார்த்தமான அக்கறை கொண்டிருக்கிருர்கள்.

1960ம் ஆண்டு நடந்த கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மகாநாட்டினது பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டது போல, சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையை இடையருது வலுப்படுத்துவதில் அக்கறை எடுத்துக் கொள்வது ஒவ்வொரு

மார்க்சிய-லெனினியக் கட்சியினதும் தலையாய கடமை ஆகும். ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும், அது பெரியதோ சிறியதோ, ஆட்சியில் இருப்பதோ இல்லையோ, உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புக்களுக்கும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமைக்கும் பெருத்த வரலாற்றுப் பொறுப்பு ஏற்றிருக்கிறது.

கம்யூனிஸ்டு அணிகளை ஒன்றுபடுத்துவதற்கான போராட்டத்தின்போது, கட்சிகளின் பரஸ்பர உறவுகள் பற்றிய கோட்பாடுகள் வகுக்கவும் மேற்கொண்டு செப்பம் செய்யவும் படுகின்றன. கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சுதந்திரமும் தேசியப் பாத்திரமும் வளர்வதையும் அவற்றின் சர்வதேசியப் பொறுப்பு அதிகரிப்பதையும் இந்தக் கோட்பாடுகள் பொருத்தமாக இணைத்துள்ளன.

இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையான அம்சம், **கம்யூனிஸ்டு இயக்கத்தின் சர்வதேசத் தன்மைக்கும் ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியினதும் செயலின் தேசியச் சிறப்பியல்புக்கும் இடையில் உள்ள** இயக்க இயல் **பரஸ்பரத் தொடர்பு ஆகும்.** இந்த இயக்க இயல் அனேக வரையறுப்புக்களில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றில் மிக முக்கியமானவை இவை:

பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளுக்கு ஒத்திசைந்த விசுவாசம், எல்லாச் செயல்களிலும் தேசிய அம்சங்களையும் சர்வதேசிய அம்சங்களையும் உள்ளார்ந்த முறையில் பொருந்த இணைப்பது;

தேசிய நிலைமைகளுக்கும், சோஷலிஸக் குறிக்கோளுக்கும் சர்வதேசியக் கடமைகளுக்கும் ஏற்ற, கோட்பாட்டு அடிப்படையில் அமைந்த கொள்கையை வகுக்கும் திறன்;

ஒவ்வொரு கட்சிக்கும், அது ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பெரியது ஆனாலும் சரி, சிறியது ஆனாலும் சரி, சட்டபூர்வமாக இயங்கினாலும் சரி, சட்டப் புறம்பாக இயங்கினாலும் சரி, தனது கொள்கையை வரையறுக்கும் சுதந்திரம்;

ஒரு கம்யூனிஸ்டுக் கட்சியின் உள் விவகாரங்களில் மற்றொரு கம்யூனிஸ்டுக் கட்சி தலையிடாமை;

சமூக-அரசியல் செயல்களின் எல்லாத் துறைகளிலும் ஒவ்வொரு கட்சியினதும் சமத்துவம்; புரட்சி முன்முயற்சியையும் உலகப் புரட்சி இயக்கத்தின் வருங்காலத்திற்கான புரட்சிப் பொறுப்பையும் காட்டுவதற்கு ஒரே மாதிரியான வாய்ப்புக்கள் அடங்கியது இந்த சமத்துவம்;

புரட்சிப் பணிகளின் நிறைவேற்றத்தில் அரசியல், ஸ்தாபன, சித்தாந்த ரீதியான பரஸ்பர உதவி; சர்வாம்சமான, உளமார்ந்த அனுபவப் பரிமாற்றத்தின் அடிப்படையில் ஒன்றையொன்று வளப் படுத்துவது; ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் அதன் ஆக்கிர மிப்புக் கொள்கைக்கு எதிராகவும் சமூக விரோதச் சக்திகளுக்கு எதிராகவும் போராட்டத்தில் பரஸ்பர உதவி;

உலக அரசியலின் எல்லா அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் முடிவுகளைக் கூட்டு முயற்சியால் தயாரிப்பது; ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் எல்லாப் பிரச்சினைகளினதும் தீர்வு களில் கூட்டுத்துவமும் இவ்வாறு கூட்டாக ஏற்கப்பட்ட முடிவு களைச் செயல்படுத்துவதற்குச் சுயவிருப்பத்தின்பேரில் பொறுப்பு ஏற்படும்;

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வருங்காலத்துக்கும், உலகப் புரட்சி நிகழ்முறையின் வெற்றிக்கும், சர்வதேசிய சுயகட்டுப்பாட் டிற்கும் வரலாற்றுத் தன்மைவாய்ந்த பொறுப்பை ஒவ்வொரு மார்க்சிய-லெனினியக் கட்சியினதும் தேசிய இறைமையுடன் பொருத்தமாக இணைப்பது;

சர்வதேச ஒருமைப்பாடும், தன் ஒதுக்கநிலையினுடையவும் தனி மையினுடையவும் எந்த வடிவங்களுக்கும் இடம் கொடுக்காத, எல்லாவிதமான பிற்போக்கு-தேசியவாதக் கண்ணோட்டங்களுட னும் உறுதியாகப் போராடுவதை உள்ளடக்கியதுமான ஒத்திசைந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியமும்.

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமை பற்றிய மாபெரும் அக்கறை இந்தக் கோட்பாடுகளில் வெளியிடப்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடை மலை. இவற்றின் கூர்முனை பிளவுபடுத்தும் செயல்களுக்கும் அரசியல் ஒதுக்கநிலைக்கும் எதிராகத் திருப்பப் பட்டுள்ளது. தேசியச் சிறப்புத் தன்மைகளை வெளியிட முழுமை யான இடமும் தேசிய சுயவெளியீட்டுக்கு விரிவான வாய்ப்புகளும் அளிக்கும் அதே சமயத்தில் அவை பாட்டாளி வர்க்க சர்வதேசி யத்தின் உணர்வால் நிறைந்துள்ளன.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தம் இயல்பிலேயே சர்வதேசியமான வை. எனவே, அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வது, செயல்களை ஒருங்கிணைப்பது ஆகியவற்றின் ஜீவாதாரத் தேவையை அவை எப்போதும் உணர்ந்து வந்தன, உணர்ந்து வருகின்றன. தேசியப் புரட்சிப் படைப்பிரிவுகளின் சர்வதேச ஒருமைப்பாட்டை வலுப் படுத்துவதிலும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தை ஒற்றுமைப்

படுத்துவதிலும் சோதரக் கட்சிகளின் செயல்களை ஒருங்கிணைப்பதிலும் பல்தரப்புப் பிரதேசச் சந்திப்புக்கள் பெரும் பங்கு ஆற்றின.

கார்லோவி வாரி (செக்கோஸ்லோவாக்கியா) என்னும் இடத்தில் 1967ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த ஐரோப்பியக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மகாநாடு கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்றில் முக்கியமான மைல்கல்லாக விளங்கிற்று.

மகாநாட்டில் கலந்து கொண்ட ஐரோப்பியக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகள், வெவ்வேறு சமூக அமைப்புக்கள் உள்ள அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்தும் செயல்திட்டத்தை ஒன்று சேர்ந்து தயாரித்துப் பொதுஜன அபிப்பிராயத்தின் ஆராய்ச்சிக்காக முன்வைத்தன. இந்தச் செயல்திட்டத்தில் பின்வருவன அடங்கியுள்ளன: ஐரோப்பாவில் நிலவும் எல்லைகளின் மீறப்படாமைக்கு ஒப்புதல் அளிப்பது; ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு என்னும், இறைமையும் சம உரிமைகளும் பெற்ற இரண்டு ஜெர்மானிய அரசுகளுக்கு ஒப்புதல் அளிப்பது; ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு அணுக்கரு ஆயுதங்களை எந்த வடிவிலும் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாதவாறு செய்வது; மியூனிக் உடன்படிக்கை கையெழுத்தான கணம் முதலே செல்லுபடி ஆகாது என்று ஒப்புக்கொள்வது; ஐரோப்பாவின் எல்லா அரசுகளும் பரஸ்பர உறவுகளில் பலப்பிரயோகத்தையும் உள் விவகாரங்களில் தலையிடுவதையும் கைவிடுவதாகவும், விவாதத்துக்குரிய எல்லாப் பிரச்சினைகளையும் அமைதியான முறைகளால் மட்டுமே தீர்த்துக்கொள்வதாகவும் உடன்படிக்கை தயாரித்துக் கையொப்பங்கள் இடுவது; ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் ஜனநாயகத்தைப் பாதுகாத்து வளர்ப்பதன் வரலாற்று ரீதியான இன்றியமையாமை; ஐரோப்பாவில் சோஷலிஸ நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையே பொருளாதார உறவுகளில் செயற்கையாக எழுப்பப்பட்டுள்ள தடைவேலிகளை ஒழிப்பது; ஆயுத ஒழிப்புக்கான அனேக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது, ஐரோப்பாவை இராணுவக் கூட்டணிகள் அற்ற பிரதேசம் ஆக்குவது. ஐரோப்பாவில் பாதுகாப்பையும் சமாதான ஒத்துழைப்பையும் குறித்த பிரச்சினைகளை ஆலோசிப்பதற்காக எல்லா ஐரோப்பிய அரசுகளதும் மகாநாடு கூட்டப்பட வேண்டும் என்றும் எல்லா ஐரோப்பிய நாடாளுமன்றங்களுடையவும் பிரதிநிதிகளின் மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்

டும் என்றும் கூறிய யோசனையை மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஆதரித்தார்கள்.

சமாதானம், சோஷலிஸம் ஆகியவற்றின் வருங்காலத்துக்கு ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் வரலாற்று நோக்கில் பொறுப்பு உள்ளது என்னும் கருத்து மகாநாட்டுத் தீர்மானங்களில் கூட்டாகச் சூத்திர வடிவில் தரப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவது அவசியம்.

மகாநாட்டின் தஸ்தாவேஜில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் அது போராட வேண்டியிருக்கும் தனி வகையான நிலைமைகளில் தனது நாட்டின் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளிகளுக்கும் தன் மக்களுக்கும் முன் தனது கொள்கைக்குப் பொறுப்பு ஏற்கிறது. அதே சமயம் சமாதானத்தைப் பாதுகாக்கவும் நமது காலக் கட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ற புதிய உறவுகளை மக்கள் இனங்களுக்கிடையே உருவாக்கவும் தனது சர்வதேசப் பொறுப்பை ஒவ்வொரு கட்சியும் உணர்கிறது.

''இந்தப் பொறுப்பு உணர்வு காரணமாக ஐரோப்பியக் கம்யூனிஸ்டுக் கட்சிகளான நாம், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு நம் சக்திகளை ஒன்றிணைப்பது இன்றியமையாதது ஆகிறது. ஐரோப்பாவிலும் உலகம் முழுவதிலும் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் எந்த அளவுக்கு அதிக உறுதியாய் இருக்குமோ அந்த அளவுக்கு நமது போராட்டம் அதிகப் பயன் உள்ளதாக இருக்கும்.''[1]

கம்யூனிஸ்டு இயக்கத்தை ஒற்றுமைப்படுத்துவதற்கான போராட்டம் அண்மைக் காலத்தில் கணிசமாகத் தீவிரம் அடைந்திருக்கிறது. தற்போது ஏகாதிபத்தியம் கம்யூனிஸத்துக்கு எதிரான கொள்கைவாதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியும், சோஷலிஸ நாடுகளையும் கம்யூனிஸ்டுக் கட்சிகளையும் பிரிக்கும் முயற்சிகளை அதிகப்படுத்தியும் வருகிறது என்பது தெரிந்ததே. பல்வேறு வகையான தேசியவாத சக்திகளை அது தனது நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறது. இந்த நிலைமைகளில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடுவோர் அனைவரதும் ஒற்றுமை, முதன்மை

---

[1] ஐரோப்பாவில் பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றிய ஐரோப்பியக் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மகாநாடு. மாஸ்கோ, 1967, பக்கம் 278.

யாகக் கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமை பற்றிய பிரச்சினை ஜீவாதார முக்கியத்துவம் உள்ளது ஆகிறது. கம்யூனிஸ்டு இயக்கத்தில் பிளவு ஏற்படுத்தக் கூடிய,அதன் அணிகளைப் பிரிக்கக்கூடிய எல்லா விதமான செயல்களும் பிற்போக்குக்குப் பெரு நிதி கிடைத்ததற்கு ஒப்பாகின்றன.

மார்க்சிய-லெனினியத்திலிருந்து பல விதங்களில் பிறழ்வதனாலும்—திரிபுவாதம், இடதுசாரி அதிதீவிரவாதம், தேசியவாதம் ஆகியவற்றின் வெளிப்பாடுகளாலும்—கம்யூனிஸ்டு அணிகளின் ஒற்றுமையும் அவற்றின் போராட்டத் திறனும் பலவீனம் அடைகின்றன. ஒத்திசைந்த மார்க்சிய-லெனினியவாதிகள் இந்த எல்லாப் பிறழ்ச்சிகளையும் எதிர்த்துச் சமரசமற்ற போராட்டம் நடத்துகிறார்கள். கம்யூனிஸ்டு இயக்கத்தின் பொதுச் செல்திசையையும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சோதித்துச் சரிபார்க்கப்பட்ட போதனையாக விளங்கும் மார்க்சிய-லெனினியத்தின் தூய்மையையும் உறுதியுடன் காக்கிறார்கள். எல்லோருக்கும் பொதுவான, ஏகாதிபத்திய எதிர்ப்பின் அடிப்படையில் கம்யூனிஸ்டுகளின் அணிகளை ஒற்றுமைப்படுத்தும் ஆர்வம் மார்க்சிய-லெனினியவாதிகளிடையே அண்மை ஆண்டுகளில் இன்னும் அதிகமாக வளர்ந்திருக்கிறது.

இந்த நோக்கத்துடன் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் புதிய சர்வதேச மகாநாட்டிற்கு ஏற்பாடுகள் செய்வதில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மிகப் பெரிய வேலை செய்தன. இந்த மகாநாடு **1969**ம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்றது.

சமூக வளர்ச்சியின் தற்காலக் கட்டத்தில் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் அரசியல் கொள்கைப் போக்கையும் அடிப்படைப் பணிகளையும் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் கூட்டு முயற்சிகளால் திட்டப்படுத்தினார்கள். **1969**ம் ஆண்டு மகாநாட்டின் மிக முக்கியமான வரலாற்றுச் சாதனை இது. தற்காலத்தில் புரட்சி இயக்கம், ஜனநாயக இயக்கம் அனைத்தினதும் முதற்படியான, மையமான, நிர்ணயகரமான பணியாக இருப்பது ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஊக்கத்துடன், விரிவான தாக்குப் போராட்டம் நடத்துவதே என்று மகாநாட்டின் நிகழ்ச்சி விவரங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தின் செயல்திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. உலகில் தற்போது நிலவும் சமூக-அரசியல் சூழ்நிலை ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தைப் புதிய மட்டத்துக்கு உயர்த்தவும், ஏகாதிபத்தியத்தின் மீது தாக்குதலைத்

தீவிரப்படுத்தவும்,அதன்மீது நிர்ணயகரமான மேம்பாடு பெறவும், அதன் ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கையைத் தோற்கடிக்கவும் சாதகமாய் இருக்கிறது என்று மகாநாட்டின் தஸ்தாவேஜுகளில் கூறப்பட்டிருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத் தின் வெற்றிக்கு நிர்ணயகரமான நிபந்தனையாக விளங்குவது எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளதும் ஒற்றுமை, முதன் மையாக, கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் ஒற்றுமை என்று மகாநாடு தெளிவுபடுத்தியது. ''தற்காலக் கட்டத்தில் ஏகாதிபத் தியத்துக்கு எதிரான போராட்டத்தின் பணிகளும், கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளதும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தி களுடையவும் செயல் ஒற்றுமையும்'' என்ற முக்கிய தஸ்தாவேஜும் ''விளாதீமிர் இலியீச் லெனினது பிறந்தநாள் நூற்றாண்டு விழா'' பற்றிய செய்தியும் ''வியத்நாமுக்கு சுதந்திரமும் விடுதலையும் சமாதானமும்!'' என்ற அறைகூவலும் ''சமாதானத்தைப் பாது காக்கும் வேண்டுகோளும்'' பிறவும் மகாநாட்டில் ஏற்கப்பட்டன.

மார்க்சிய-லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட் பாடுகளுக்கு இணங்க உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமை யை வலுப்படுத்துவதில் மகாநாடு முன்னேக்கிப் பெருத்த அடி வைத்தது. உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஒற்றுமையினது பல்வகை வடிவங்களும் அதன் உள்ளடக்கம் இடையறாது அதிக வளம் பெற்று வருவதும் மகாநாட்டு நிகழ்ச்சி விவரங்களில் காட் டப்பட்டுள்ளன. கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமையை வரலாறு கோரு கிறது. தொழிலாளி வர்க்கத்தின் நலன்களும் மனித குலம் அனைத் தினதும் நலன்களும் கம்யூனிஸ்டுகளின் ஒற்றுமையைக் கோருகின் றன. எல்லா மக்களினங்களுக்கும் ஒளிமிக்க வருங்காலத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒற்றுமை இன்றியமையாதது.

மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படையில் கம்யூ னிஸ்டு அணிகளின் ஒற்றுமை என்னும் உயிரூட்டும் பெருங் கருத்து, கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் கூட்டு முயற்சிகளால் இடையூறுகளைக் கடந்து முன்னேறி வருகிறது.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, Nallathambi Chetty Street, Madras-2

ஷோ-ரூம்

6/30, Mount Road, Madras-600002

கிளைகள்

80, West Tower St., Madurai-1
87/89, Oppanakara St., Coimbatore-1
Singarathope, Tiruchirapalli-8
Cherry Road, Salem-1